...தி XIV]   July, 1921 :: ஆனிமீ   [பகுதி

5135

முருகக் கடவுள் வள்ளிநாயகியை நாடியது.

விவேகபோதினி

“எப்பொருள் எத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.”—திருவள்ளுவர்.

தொகுதி XIV | துன்மதி௵ ஆனிமீ :: 1921-ம்௵ ஜூலைமீ | பகுதி 1

முருகன் வழிபாடு
WORSHIP OF LORD MURUGA

கொடிய மறலியு மவனது கடகமு
மடிய வொருதின மிருபதம் வழிபடு
குதலை யடியவ னினதருள் கொடுபொரு
—மமர்காண

குறவர் மகள்புணர் புயகிரி சமுகமு
மறுமு கமும்வெகு நயனமும் ரவியுமிழ்
கொடியு மகிலமும் வெளிபட இருதிசை
—யிருகாலும்;

படியு நெடியன எழுபுண ரியுமுது
திகிரி கிரியும் வருகென வருதகு
பவுரி வருமொரு மரகத துரகத
—மிசையேறிப்

பழைய அடியவ ருடனிமை யவர்கண
மிருபு டையுமிகு தமிழ்கொடு மறைகொடு
பரவ வருமதி லருணையி லொருவிசை
—வரவேணும்;

சடில தரவிட தரபணி தரதர
பரசு தரசசி தரசுசி தரவித
தமரு கமிருக தரவனி தரசிர
—தரபாரத்

தரணி தரதனு தரவெகு முககுல
தடினி தரசிவ சுதகுண தரபணி
சயில விதரண தருபுர சசிதரு
—மயில் வாழ்வே!

நெடிய வடவுரு இருளெழ நிலநெழ
எயிறு சுழல்விழி தழலெழ எழுகிரி
நெரிய அதிர்குரல் புகையெழ இடியெழ
—நெடுமோடும்

நிலனும் வெருவர வருநிசி சரர்தள
நிகில சகலமு மடியவொர் படைதொடு
நிருப குருபர சுரபதி பரவிய
—பெருமாளே!

தவத்துக்குப் பெருமையை யுண்டுபண்ணுவதற்காகவே தவவேடம்பூண்டு சடாமுடியைத் தரித்தவரும், திருப்பாற்கடலைக் கடைந்தகாலத்தில் அதினின்றும் எழுந்து சகல வுலகங்களையும் அழிக்கத் தொடங்கிய ஆலகாலவிடத்தைத் தமது வாயிற்போட்டுக் கொண்டு பார்வதிதேவியாரது வேண்டுகோளுக்கிணங்கி அதைத் தமது கண்டத்தில் நிறுத்தி உலகங்களை இரக்ஷித்தருளியவரும், மழுப்படையைக் கரத்திற்றாங்கியவரும், தக்ஷனது சாபத்துக்குப் பயந்து தம்மைச் சரணமடைந்த ஒருகலைச் சந்திரனைத் தமது சடாமுடியி லிருத்திக் காப்பாற்றி யருளியவரும், தூய்மையுள்ளவரும், பிக்ஷாடன மூர்த்தியாகத் தாம் சென்றபோது தாருகவனத்து முனிவர்கள் தம்மிடத்துச் சினங்கொண்டு தம்மைக் கொல்லுவதற்காக ஓமஞ்செய்து ஓமத்தீயினின்று வருவித்துத் தம்மீது செலுத்திய வஸ்துக்களான பலவிதமா யொலிக்கும் டமருகம், மான், அக்கினி, வெண்டலை இவைகளின் வலியை யடக்கி கரங்களிலும் தலையிலும் அணிந்துகொண்டு அவர்களுக்கு ஞானத்தைப் போதித்தவரும், பாரமான பூமிக்கு ஆதாரமாய் நின்று தாங்குபவரும், கரத்தில் வில்லை யேந்தியவரும், பல கிளைகளையுடைய குலநதியாம் கங்கையை பகீரதன் தனது பிதர்க்களுய்யும்பொருட்டு இப்பூமிக்கு வருவிக்கையில், அவன் தவஞ்செய்து வேண்டிக்கொண்டபடி, அதிவேகத்துடன் ஆகாயத்தினின்று விழும் கங்கையைத் தமது சடையிற்றாங்கி அதற்குள் அடக்கிக்கொண்டு மெல்ல மெல்லப் பூமியிற் சேரும்படி செய்தருளியவருமான சிவபெருமானது சற்புத்திரா! அனந்தமான கலியாண குணங்கள் பொருந்தியவனே! நாகமலையில் வீற்றருளியிருக்கும் அழகா! கற்பகவிருக்ஷம் வளரும் அமராவதியின் இறைவியான இந்திராணியின் திருமகளான தெய்வயானை யம்மையாருக்கு வாழ்வளித்த மணவாளா! தங்கள் பெரிய கரிய தேகங்களினின்றும் எழுகின்ற இருள் எங்குட் பரவவும், நெறுநெறெனக் கடிக்கும் பலவரிசைகளினின்றும் ஒளி பாவி எங்கும் நிலவு வீசச்செய்யவும், சஞ்சல குணத்தினால் அலையும் விழிகளினின்றும் தீயெழும்பி எரிக்கவும், பேரிடி முழக்கத்தையொத்த குரலினால் சப்தகுல பர்வதங்களும்

(இதன் தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.)

விவேக போதினி

தொ. 14] துன்மதி௵ :: ஆனி௴ [ப. 1

கந்த புராணம்

SKANDA PURANAM

மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணை போற்றி
யேவருந் துதிக்கநின்ற
வீராறு தோள்போற்றி
காஞ்சி மாவடி வைகுஞ்செவ்வேள்
மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி !

முன்னொரு காலத்தில் மூவுலகங்களிலும் தோன்றிய ஆன்மகோடிகள் செய்த தீவினைப் பயனால் முடிவில்லாத வேதங்களனைத்தும் முதலு முடிவுங் கவறி யழிய, தேவர்களும், முனிவர்களும், பெரிய நிலவுலகத்தில் வாழும் மனிதர்களும் மனத்திற் சிறிதும ஞானமில்லாதவர்களாய் வேதமார்க்கத்தை யொழித்து, பல தீய சமய நெறிகளை மேற்படுத்தி வேதவிரோதமாகச் சில நூல்களைச் செய்து கொண்டு, தருமங்களனைத்தையும் அரிய தீவினையென்றொழித்து பாபவழிகளை தருமமென்று கருதி அவ்வழிகளில் நின்றொழுகியதைக் கண்ட திருமாலும் பிரமனும், நிமலனாகிய சிவபெருமானைப்போலவே அவர் திருவாக்காகிய வேதங்களும் அநாதியாதலின், அவைகளைத் திருப்பவும் ஆன்மகோடிகளுக்குத் தெளிவாக வுணர்த்தியருளுவது சிவபெருமானொருவருக்கே சாத்தியமென்பதையுணர்ந்து, தேவர்களனைவரும் தம்மைச் சூழ்ந்துவர திருக்கயிலாய மலையில் எம்பெருமான் வீற்றிருந்தருளும் திருக்கோயிலை யடைந்து, திருநந்தி தேவர் மூலமாக எந்தையின் திருமுன் செல்ல அனுமதிபெற்று, எம்பெருமானைத் தரிசித்து நமஸ்கரித்து பேரன்பாகிய கடலுண் மூழ்கி வாயாரத் துதித்துநின்றனர்.

அப்போது சிவபெருமான் திருவருள்புரிந்து திருமால் முதலிய தேவர்களை நோக்கி, "உமது அரசாட்சி சிறிதுங் குறைவுறாது இனிது நடந்தனவோ?" என்று வினவியருள, திருமால் வணங்கிப் பின்வருமாறு கூறினார்: "எமதாண்டவரே! சிருட்டி, திதி, சங்காரம் என்ற முத்தொழில்களும் மற்றும் தேவர்கள் செய்யுந் தொழில்முறைகளும் தேவாதி தேவரான தேவரீரது திருவருளினால் இனிது நடந்து வந்தன. ஆயினும் எமக்குத் தேவரீர் இன்னுங் கிருபை செய்தருளவேண்டுவதாகிய ஒரு குறையுளது. அஃது யாதெனின், பெரிய நிலவுலகத்திலுள்ளவர்களனைவரும் மாயா சம்பந்தத்தினால் தேவரீரைப் பரம்பொருளென்று சிறிதும் உணர்கின்றிலர். தேவரீருக்குரிய பதியிலக்கணங்களை யெடுத்துக்கூறி அடியேனையும் பிரமனையும் மேலான பதிப்பொருளாகச் சிலர் நினைக்கின்றார்கள். இதுவல்லாமலும், சாமானியராகிய அநேக தேவர்களையும் தேவரீரோடு ஒன்றாகச் சிலர் கருதுகிறார்கள்."

"சிலர் காலத்தையும் கருமத்தையுங் கடந்த மூலமாகிய ஒரு பொருளுண்டோவென்றும், சிலர் மந்திரத்தினாலுண்டாகிய உணர்ச்சியே கடவுள் என்றும், சிலர் காமத்துடன் சந்தோஷத்தையும் மயக்கத்தையுந் தருதலால் வாம சமயமே மேலான சமயமென்றும், சிலர் யசனயசனாதி க்ரியைகளும் ஆவகனீயாதி மூவகை அக்னிக் கிரியைகளும் அவைகளைக்கொண்டு செய்யும் வேள்விகளுமே இன்பந் தரத்தக்க மெய்ப்பொருள்களென்றும், சிலர் சொல், இசை முதலியவற்றாலுண்டாகும் ஒலிகளைத் துமே பிரமமென்றும், சிலர் அருமையான விரதங்களினாலடையும் சித்திகளே மெய்ப்பொருளன்றி வேறில்லை யென்றும், சிலர் மகா சங்கராந்த சாந்திராயணம் கிருஸ்ராயணம் முதலிய விரதங்களும், அக்கினிப் பிரவேசம், பிரயாகை கட்டத்தில் வீழ்தல் முதலியவைகளினால் தேகத்தை யொழித்து உயிர் நீங்குதலுமே முத்தியென்றும், சிலர் உயிர்கள்தோறும் அவ்வவ்வுருவத்தைப் பெற்றுப் பிறந்து அவ்வவற்றின் குணங்களை யறிந்தறிந்து

பின்னர் இறந்து, அச்சனனங்கள் தோறுங் கொண்டிருந்த உணர்வோடு தோன்றி விரதமுடையவனாய்த் துறவுபூண்டு கொல்லப்பட்டவைகளைத் தின்று பஞ்ச புல நுகர்ச்சியுமொழிந்து இறத்தலே முத்தியென்றும், சிலர் நல்ல அழகினையுடைய மாதர்களையடைந்து அனுபவிக்கும் இன்பமே நினைத்தற்கரிய முத்தியென்றும் சிந்தித்திருக்கிறார்கள்."

"இவ்வகையாகிய மார்க்கங்கள் தோறும் அடைந்து, உலகத்தவர்களனைவரும் நினைக்க மனம் நடுங்கும் பிறவித் துன்பத்தை விட்டு நீங்காதிருக்கிறார்கள். உலகத்தில் வரம்புகள் அழிந்துவிட்டன. எவர்களும் வேத சாஸ்திரங்களை மறந்துவிட்டார்கள். பாவ வழிகள் நாள் தோறும் உலகத்தில் நிறைந்து சிறப்புறுகின்றன. அவையனைத்தும் உயிர்கள் செய்த ஊழ்வினையை யறிந்த கருணாநிதியாகிய தேவரீரால் அமைக்கப்பட்டனவே யாயினும், அவ்வுயிர்களெல்லாம் மெய்ஞ்ஞானத்தை யடைந்து அஞ்ஞானத்தை யொழித்து மனச்சந்தேகமும் நீங்கித் தேவரீரது திருவடித் தாமரைகளையடையுமாறு அடியேங்கள் பொருட்டுச் சற்றுத் திருவருள்புரியவேண்டும்."

இங்ஙனம் திருமால் எம்பெருமானிடம் விண்ணப்பஞ் செய்துகொள்ள, முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் மகாவிஷ்ணுவை நோக்கி, "குற்றமற்ற திருமாலே! நீ திதி கர்த்தாவாகலின், உலகின் மாறுதலைக் குறித்துச் சிந்திக்கின்றனை. உன் துயரம் அகலுவதற்கு இனிமையாகிய ஒரு மார்க்கத்தைச் சொல்லுகின்றும், கேள். நீ உனது கலைத் தொகுதிகளுள் ஓர் கலையுடன் கடல் சூழ்ந்த நிலவுலகத்தில் வியாசனென்று கூறும் ஞான முனிவனாகத் தோன்றி வசிக்கக் கடவாய்! அப்போது வேதங்களைச் சிந்திப்பையாயின் அவை தாமே உன்னிடம் வந்து பொருந்தும். அவ்வேதங்களை நான்கு வகையாகப் பகுத்து, அவற்றை யோதவேண்டிய முறைமையினையும் போதித்து, மானிடர்களது மயக்கத்தை யொழிக்கக் கடவாய்! அங்ஙனம் வேதங்களை யுணர்ந்தும் சந்தேகம் நீங்காதவர்களது மனத்தைத் தெளிவிக்கவல்லது ஒன்றுண்டு. அஃது யாதெனில், இனிமையாக ஓதி யுணர்ந்தவர்களது பிறவித் துன்பங்களை யொழிக்கின்ற பழைய புராணம் என்பதாம். அது பதினெண் வகைப்பட்டது. அப்பதினெண் புராணங்களை நமதன்பனாகிய நந்திக்கு முன்பு தெரியும்படி கூறியுள்ளோம். திருமைபினாலே அந்நந்தி அவைகளைச் சனற்குமார முனிவருக்கு உபதேசித்தனன். அவைகளை நீ முறைமையோடு அச் சனற்குமார முனிவரிடத்தில் நிலவுலகத்திற் கேட்கக் கடவாய்!" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

அவ்வாறு சிவபெருமானிட்ட கட்டளைப்படி மகாவிஷ்ணுவானவர் இந்நிலவுலகத்தில் கங்கை நதிக்கரையில் பராசரனென்னும் மகா முனிவருக்கும் மச்சகந்தியென்ற யோசனகந்திக்கும் புதல்வராய் அவதரித்து, வாதராயணன் என்னும் திருநாமம் பெற்று, பரமேசுவரனருளினால் எல்லையற்ற வேதங்களனைத்தையும் ஓதாதுணர்ந்து, அவைகளிலடங்கிய உண்மைப்பொருளை அறிந்து பெற்றுய்யும் பொருட்டுத் தூய்மையாகிய மார்க்கமமைந்த நான்கு வகுப்புகளாக ஆயற்றியருளி, அதுகாரணத்தினால் வியாசர் என்னுமொரு பெயர் பெற்று, பிறகு தமது ஆசாரியராகிய சனற்குமார முனிவரிடத்தில் பதினெண் புராணங்களையும் முறைமைப்படி கேட்டு அப்புராணங்களைத் தம் மனத்தில் அமைத்துத் தெளிந்த பின்பு, அவைகள் முழுமையையும் சூத முனிவருக்கு உபதேசித்தருளினார்.

அப்பதினெண் புராணங்களில், சைவம், பவிஷ்யம், மார்க்கண்டம், இலிங்கம், காந்தம், வராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிரமாண்டம் என்னும் இப்பத்துஞ் சிவபுராணங்களாம்; பிரமம், பதுமம் என்னுமிரண்டும் பிரம புராணங்களாம்; காருடம், நாரதம், விஷ்ணு, பாகவதம் என்னும் நான்கும் விஷ்ணு புராணங்களாம்; ஆக்கினேயம் அக்கினி புராணமாம்; பிரமகைவர்த்தம் சூரிய புராணமாம். அவைகளில் சிவபெருமானுக்குரிய பத்துப் புராணங்களினுள், வலிய வேற்படையேந்திய குமாரக்கடவுளது காந்தபுராணத்தில் அவ்வெம் பெருமானுடைய சரித்திரத்தை சூதமுனிவர் நைமிசாரணிய முனிவர்களுக்கு உண்மையாகச் சுருக்கிக் கூறினார். அதிலடங்கிய மெய்ப்பொருளை வடமொழியறியாத தமிழர்களறிந்து உய்யும்பொருட்டு ஸ்ரீசிவசுப்பிரமணிய பக்தசிகாமணியாகிய ஸ்ரீகச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் தெவிட்டாத இன்சுவை

பொருந்திய வெண்பாக்களினால் எடுத்துக்கூறினார்.

அவ்வரிய புராணத்திற் கூறப்பட்டுள்ள அற்புத விஷயங்களை இங்கு சுருக்கமாய் நிகழ்ந்த முறையில் எடுத்துரைக்கிறோம். ஞானதேசிகனை குகப்பெருமானிடத்துக் கொண்ட அன்பே இத்துணிகரமான செய்கைக்குக் காரணமாதலால், ஆஸ்திக சிகாமணிகளை வரும் இதிற் காணப்படும் பிழைகளைப் பொறுத்தருள வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்.

தக்ஷகாண்டம்

பிரமதேவரது புத்திரர்களுள் புத்தியிற் சிறந்த மூத்தகுமாரனை தக்ஷன் என்பவன் தன் பிதாவை நோக்கி, "தந்தாய்! தேவர்களுள் முதல்வராகியும், ஞானத்தில் தலைவராகியும், மும்மூர்த்திகளில் உயர்ந்தோராகியும், அழிவில்லாதவராகியும், உயிர்க்குயிராகியுமுள்ள முழுமுதற் கடவுள் இன்னார் என்பதை அடியேன் அறியும்படி சொல்லியருளும்" என வேண்டிக்கொண்டான். பிரமதேவர் தமது மைந்தன் வேண்டுகோளுக்குகந்து, "பிள்ளாய்! முன்னொருக்கால் விஷ்ணுவும் யானும் 'நாமே பரம்பொருள்' என்று மருண்டு தருக்குற்று ஒருவரோடொருவர் போர் செய்தபொழுது சோதி சொரூபமா யெழுந்து வானுலகத்தில் உயர்ந்த சிவபெருமான் ஒருவரே எல்லார்க்கும் மேலாய கடவுள். இதனை நீ தெளிவாக உணர்தி!" என்றுரைத்தார்.

அதுகேட்ட தக்ஷன் ஆச்சரியத்துடன், "தந்தாய்! முத்தொழில்களிலும் முதல் இரு தொழில்களாகிய சிருட்டி திதிகளைச் செய்யும் நீவிர் இருவரும் பரம்பொருளல்லராக, இறுதியதாகிய சங்காரத்தொழிலைச் செய்யும் சிவன் உங்களுக்கிறைவராயிருக்குங் காரணமென்னவென்று அடியேனுக்குத் தெளிவாய்ச் சொல்லியருளவேண்டும்" என்று வினவினான்.

பிரமதேவர் தமது குமாரனது அறிவின்மையைக்கண்டு வருந்தி, "அப்பா! நீ வேதங்களைக் கசடறக்கற்று மெய்ப்பொருள் உணர்ந்துகொண்டது இவ்வளவேயோ? சிவபெருமான் இறுதித்தொழிலாகிய சங்காரத்தைச் செய்பவராகலின் பரம்பொருளாகக் கருதத்தக்கவரல்லவென மதித்தாயன்றோ? மற்றை உயிர்களைச் சங்கரிப்பதுபோலவே பிரமவிஷ்ணுக்களையும் ஏனைய தேவர்களையும் ஈற்றிற் சங்கரிப்பவர் அச்சிவபெருமானே யன்றோ? சங்கார காலத்தில் ஒருவராய் நின்று, சீவராசிகளை முன்பு தம்மிடமிருந்து தோன்றியவாறே தமக்குள் அடங்கச்செய்து, தாம் அவிகாரியாயிருந்து, மீட்டும் அன்னையும் அத்தனுமாய் அவ்வுயிர்களுக்கேற்ற காயங்களையும் கரணங்களையும் கொடுத்துச் சிருட்டித்துக் காப்பவர் அப்பரமசிவனே யன்றோ?"

"விஷ்ணுவையும் என்னையும் படைத்து, திதி சிருட்டியாகிய தொழில்களையும் எமக்குத் தந்து, எம்முயிர்க் குயிராய் நின்று எமது தொழில்களையும் தாமே செய்தருளுகிறார். நாங்கள் அவரை யறியாமல் மயங்கும்பொழுதும் எம்மிடத்து வந்தருள்செய்வார். தாமும் ஓர் செயலைச் செய்கின்றவர்போல எம்மோடு ஒருவராக எண்ணப்படுவார். மணியும் நாதமும் போலவும், பூவும் மணமும் போலவும், இரத்தினமும் ஒளியும்போலவும் உலகமெங்கும் உள்ளும் புறமுமாய் வியாபித்து நிற்பார். வேதாகம முதலிய மேலாகிய கலைகளையெல்லாம் முன்னாளில் அருளிச்செய்தவர் அந்தச் சிவபெருமானே. அவர் அவைகளை எங்களுக்கு உபதேசிக்க நாங்கள் உணர்ந்தோம்" என்று மெய்ப்பொருளை எடுத்துரைத்தார்.

தக்ஷன் அதனைக் கேட்டு, "தந்தாய்! அப்படியாயின், சிவபெருமான் அருளிச்செய்த வேதங்கள் பஞ்சபூதங்களையும் உயிர்களையும் மற்றைத் தேவர்கள் யாவரையும் பிரமம் என்று சொல்லுவதற்குக் காரணமென்னவென அடியேனுக்குத் தெளிவாகச் சொல்லியருளவேண்டும்" என்று கேட்டுக்கொண்டான்.

அப்போது பிரமதேவர் எல்லோராலும் அறியமுடியாத இரகசியத்தைத் தமது மைந்தனுக்குப் பின்வருமாறு போதித்தருளினார்: "வேதங்கள் அழியாத முதல்வராகிய சிவபெருமானைக் குறித்துக் கூறியவைகள் மாத்திரம் உண்மை; ஒழிந்தன தோத்திரமாகக் கூறியவைகள். சிவபெருமானை யொழிந்த மற்றைத் தேவர்களுக்கும் உயிர்களுக்கும் பஞ்ச பூதங்களுக்கும் வேதங்கள் முதன்மை கூறுதல முகமனும். யாதொருபொருளை யாவர் வணங்கினாலும் அவ்வணக்கமெல்லாம் அச்சிவபெருமானைப் போயடையும். அதுபோல, வேதங்கள் மற்றைத் தேவர்கள் முதலாயினார்க்குச் சொல்லுகின்ற புகழ்களெல்லாம் எல்லா நதிகளும் சமுத்திரத்தைச் சென்றடையுமாறுபோலச் சிவபெருமானைச் சேர்வனவாம். எல்லாப் பொருள்களையும் படைத்துக் காத்தழித்து மீண்டும் படைப்பவனும், ஆன்மாக்களுக்குத் திருவருள் பாலித்து அவைகளை ஆண்டருளும் தலைவனும், ஆதியந்தமில்லாதோனும் சிவனேயென்றும்; செகத் பிதாவும், சுத்த சாட்குண்ணியனும், அருவும் உருவுமாகும் சுத்தனும், அறியவொண்ணாச் சாதியும், எங்கும் வியாபித்திருக்கும் ஞான சொரூபியும், ஆன்மாக்களுக்குள் நீங்காதிருக்கின்ற பரமானந்தத் தாண்டவனும் சிவனேயென்றும்; பரனும், தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத கடவுளும், ஏகனும், அளவிடப்படாத குணத்தையுடையவனும், அன்பர் யாவருக்கும் வேண்டியவற்றை வேண்டியாங்கு ஈபவனும் சிவனேயென்றும்; பிரமா முதலாகநின்ற பசுவர்க்கங்கட்கெல்லாம் பதியாக நின்றருள் செய்யும் பசுபதியும், உடம்பெடுத்துப் பிறக்கு மெவரையும் தன்னுடைய குணத்தொளொடுக்கி அவர்க்குத் தானே புகலிடமாகி நின்று, அவர்களுடைய குணங்களில் தான் புகுதலில்லாதோனும் சிவனேயென்றும் வேதங்கள் கூறுகின்றன. 'சீவராசிகள் பரமசிவனை யுணர்தலின்றிப் பிறவித்துயரை நீங்கி மோக்ஷத்தை யடைவேமென்று சொல்லுதலானது உருவமில்லாத ஆகாயத்தின் தோலை உரித்துடுப்பதற்கு நிகராகும்' என்று சுவேதாசுவதர உபநிடதமே சொல்லுகிறபோது, அச்சிவபெருமானே பரம்பொருள் என்பதற்கு வேறு சாக்ஷியும் வேண்டுமோ? யானும் விஷ்ணுவும் படைத்தல் காத்தல்களாகிய அரசியலைச் செய்யும்படி சிவபெருமானுடைய திருவடிகளைப் பூசித்துத் துதித்த ஆலயங்கள் பலவற்றையும் காண்பாய். அந்தச் சிவபெருமானுடைய திருவருளைப் பெறாது முத்தியடைந்தவர்களில்லை. அவருடைய அருளின்றி வாழ்கின்ற தேவர்களும் பிறருமில்லை. அவருடைய திருவருளைப்பெறாறல் அடைதற்கரிய அரும்பொருள்கள் ஒன்றுமில்லை. அவரன்றிப் பதிப்பொருளுமில்லை. இது சத்தியம்! ஆதலால் அக்கடவுளையே சரணென்றடைகுதி!" இவ்வாறு பிரமதேவர் தமது புதல்வனும் தக்ஷனுக்கு மெய்ப்பொருளை உபதேசித்தருளினார்.

புண்ணிய ஸ்தலங்கள்

INDIAN PLACES OF PILGRIMAGE

ஸ்ரீரங்கம்

தென்னிந்தியாவில் திருச்சிறாப்பள்ளி ஜில்லாவிலுள்ள புண்ணிய க்ஷேத்திரங்களுள் ஸ்ரீரங்கமென்னும் நகரம் ஒன்று. ஸ்ரீரங்கமெனும் பதத்துக்கு பரிசுத்தமான இன்பம் அல்லது ஆனந்தம் எனும் அர்த்தம் பொருந்தும். ஆதலின் இந்நகரம், விஷய ஆனந்தத்தில் விரக்தி வந்து, நித்திய ஆனந்தத்தை நாடி நிர்மல அகத்தைத் தேடும் மானிடர்களுக்கு முக்தியைத் தரத்தக்க விடமென்று பெரியோர்கள் கருதுகின்றனர். இந்நகரம் காவிரி, கொள்ளிடம் என்னும் இரு நதிகளால் உண்டாக்கப்பட்டிருக்கும் ஓர் தீவு. இது சுமார் 97 ஏகரா விஸ்தீர்ணமுள்ளதாயும், இருபத்திராயிரம் ஜனத்தொகையுள்ளதாயுமுள்ள நகரம். இங்கு தென்னிந்தியாவில் மிகப் பெரிதெனக் கூறக்கூடிய ஓர் விஷ்ணுவின் ஆலயம் உளது. ஆங்குள்ள எல்லாக் கட்டிடங்களும் ஏழுப் பிராகாரங்களுக்குள் அடக்கப்பட்டிருக்கின்றன. வெளிப் பிராகாரத்தின் சுவர்களில் ஒன்று 3,072 அடி நீளமும், மற்றொன்று 2,521 அடி நீளமும் உள்ளது. மத்தியில் அரங்கநாத சுவாமியின் கோவில் அமைக்கப்பெற்றிருக்கிறது. இக்கோவிலின் உள்பிராகாரத்தின் சுவர்களுள் ஒன்று 241 அடி நீளமுள்ளது; மற்றொன்று 181 அடி நீளமுள்ளதாய் இருக்கின்றது. இரண்டாவது பிராகாரத்தின் சுவர்களுள் ஒன்று 426 அடி நீளமுள்ளதாயும், மற்றொன்று 295 அடி நீளமுள்ளதாயும் இருக்க, மூன்றாவது பிராகாரத்தின் சுவர்கள் 767 அடி நீளமும் 503 அடி நீளமும் உள்ளவைகளாக விருக்கின்றன. நான்காவது பிராகாரத்திலுள்தான் இவ்வாலயத்தின் ஆயிரக்கால் மண்டபம் அமைக்கப் பெற்றுளது. ப்ரதிவருஷமும் வைகுண்ட ஏகாதசியன்று பெருமாளது உத்ஸவ விக்கிரகம் இம்மண்டபத்திற்குக் கொண்டுவரப்பட்டு பூஜை முதலியன செய்யப் பெறுகின்றது. இப்பிராகாரம் நீளத்தில் 1,23 அடியும், அகலத்தில் 849 அடியும் உள்ளதாக விருக்கிறது. ஆயிரக்கால் மண்டபமோவெனில், 450 அடி

நீளமும் 130 அடி அகலமும் உள்ளதாகவிருக்கிறது. இதைத் தாங்கி நிற்கும் கல் தம்பங்கள், வரிசைக்குப் பதினாறு தம்பங்களுள்ள அறுபது வரிசைகளாக அமைக்கப் பெற்றிருக்கின்றன. ஆதலின் ஓர் தம்பத்துக்கும் மற்றொன்றுக்கும் இடையிலுள்ள தூரம் சுமார் பத்தடிக்கு மேற்பட்டிருக்கவில்லை. நான்காவது பிராகாரத்தின் வாயில்களின் மேல்தான், கோவிலின் மூன்று பெரிய கோபுரங்களும் கட்டப்பட்டிருக்கின்றன. இவைகளுள் கீழ்கோபுரமே அதிகநேர்மை



ஸ்ரீரங்க நகர்க் காட்சி

வாய்ந்துள்ளது. அது வெள்ளை கோபுரமெனப் பெயர்வாய்ந்து நூற்று நாற்பத்தாறடி ஆறங்குலம் உயரமுள்ளதாகவிருக்கிறது. தவிர, வெளியில் பூர்த்தி பெறாத ஓர் பெரிய கோபுரமும் உளது. அது மாத்திரம் பூர்த்தி செய்யப் பெற்றால் சுமார் 300 அடி உயரக்கூடும். மொத்தத்தில் இங்கு பதினைந்து கோபுரங்கள் இருக்கின்றன. இவைகளில் வெளிப் பிராகாரச் சுவர்கள் மூன்றில் ஒவ்வொன்றிலும் நான்கு நான்கு கோபுரங்கள் இருக்கின்றன. அடுத்த பிராகாரத்தின் சுவர்களில் மூன்று கோபுரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்பிராகாரத்தின் மேற்குச் சுவரில் வாசற்படியாவது கோபுரமாவது இல்லை. ஆனால் ஒருசமயம் அதில் வாயிற்படி இருந்ததாகவும், ஆனால் அந்தப் பக்கத்தில் இருந்த ஜனங்கள் அப்பொழுது ஒருதரம் அதன் வழியாகக் கோவிலில் புகுந்து கொள்ளையிட்டதன் நிமித்தம் அது அடைக்கப்பட்டதாகவும் கூறுகின்றனர். வெள்ளை கோபுர வாசல், ஆயிரக்கால் மண்டபத்துக்குத் தெற்கிலுள்ள திறந்த முற்றம் போன்ற ஓரிடத்தில் கொண்டுபோய்விடும். அங்குதான் கோவிலில் யாவற்றினும் மிக்க அழகுவாய்ந்த கருங்கல் சிற்பசாஸ்திரத் திறமை காணப்படும். பிரதிவருஷமும் உத்ஸவ காலங்களில் சுமார் 3,000 ரூ. வரைக்கும் செலவழித்து இங்கு பந்தல் போடுவது வழக்கம்.

நான்காவது பிராகாரத்தைச் சுற்றிலும் வீடுகளும் கடைகளும் அடங்கிய வீதியிருக்கின்றது. ஐந்தாவது பிராகாரத்தின் சுவர்கள் 1,653 அடி நீளமும், 1,170 அடி நீளமும் உள்ளவைகளாகவிருக்கின்றன. இதற்கு வெளியில் இன்னொரு வீதியும் அதைச்சுற்றி ஓர் பிராகாரமும் இருக்கக்காணலாம். இந்தப் பிராகாரத்தின் சுவர்கள் 2,108 அடி நீளமும், 1,846 அடி நீளமும் உள்ளவைகளாகவிருக்கின்றன. இதைச்சுற்றி மூன்றாவது வீதி ஒன்றும் அதற்கப்பால் கடைசியான ஏழாவது பிராகாரச் சுவரும் உண்டு. இச்சுவர் இருபது அடி எட்டங்குலம் உயரமும், உச்சியில் ஆறடி அகலமுள்ளதாயுமிருக்கிறது. தவிர, இங்கு ஓர் சித்திரகோபுரமும் இருக்கிறது. அதில் மஹா விஷ்ணுவின் வராக அவதாரம் முதலியவைகளைக் குறிக்கும் சித்திரங்கள் வரையப்பெற்றிருக்கின்றன. இன்னொரு மண்டபத்தில் கோவில் நகைகள் முதலியன வைக்கப்பட்டிருக்கின்றன. அந்நகைகளிற் சில, மிக்க நேர்மையான வேலைப்பாடுள்ளனவெனக் கூறுகின்றனர். கோவில் நகைகளிற் பெரும்பான்மையும் மதுரை விஜயரங்க சொக்கநாத நாயக்கரால் கொடுக்கப்பட்டவைக

ளெனக் கூறுவர். கோவிலைச் சேர்ந்த நகைகள், சுமார் 15 லக்ஷம் ரூபாய் மதிப்பிடக் கூடியவைகளாம்.

வைஷ்ணவ மதத்தை ஸ்தாபித்த இராமானுஜாசாரியர் பதினோராம் நூற்றாண்டில் இங்குதான் காலஞ்சென்றது. இவ்வூருக்கு, ஒன்றேகால் மைல் தூரத்தில் ஜம்புகேசுவரம் என்னும் இடத்தில் பிரசித்திபெற்ற சிவன் கோவில் ஒன்றிருக்கிறது. இக்கோயில் ஸ்ரீரங்கத்துக் கோவிலைப்போல் அவ்வளவு பெரிதாக இல்லாவிட்டாலும், கட்டப்பட்ட நேர்மையிற் அதைவிடச் சிறந்ததே எனக் கூறுகின்றனர். பிரதி வருஷமும் டிசம்பர் மாதத்தில் கொண்டாடப்படும் உத்ஸவத்துக்கு இந்தியாவில் வெகு இடங்களிலிருந்தும் ஜனங்கள் இங்கு வந்து கூடுகின்றனர்.

ஸ்ரீரங்கமெனும் இப்புண்ணிய நகரம் 'சீரங்கத்துக் காகமானாலும் கோவிந்தம் பாடுமா' என்னும் பழமொழிக்குக் காரணமாயிற்று. இப்பழமொழியின் கருத்து, இந்நகரம் மகா புண்ணிய க்ஷேத்திரமெனினும், அங்குள்ளவர்களிலும் நல்லவர்களும் கெட்டவர்களும் உளர் என்பதே. ஏனெனில், துர்க்குணம் மாறுவது மானிடர்களுள் கடினமான விஷயமன்றோ?

1751-வது வருஷம் முதல், 1755-ம் வருஷம் வரையில் இங்கிலீஷ்காரர்களும், பிரெஞ்சுக்காரர்களும் இத்தீவையும் இதிலுள்ள கோவிலையும்பற்றி அநேக முறை சண்டை செய்திருக்கும் விஷயம் சரித்திர ஆராய்ச்சியிலிருந்து விளங்குகிறது.

ஸ்ரீரங்கத்தின் மகிமைக்குக் காரணம் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது. நாரத மகா முனி ஒருதரம் பரமசிவனைப் பார்த்துவிட்டு வரச்சென்றவர் ஸ்ரீரங்கநாதரது சரிதையைத் தமது ஜன்மம் ஸாபல்யமாகும் நிமித்தம் கூறியருளும்படி பிரார்த்தித்துக்கேட்க சிவபெருமான் அருளியதை லோகானுக்கிரக நோக்கத்துடன் பின்வருமாறு வெளியிட்டனராம்.

ஒருக்கால் கைதனன் என்னும் ஓர் அரக்கன் வேதங்களைப் பிரமாவினிடமிருந்து அபகரித்துச் செல்ல, அவர் மகாவிஷ்ணுவின் நாபிக்கமலத்து நின்றவாறு புலம்புகையில் அவ்விஷ்ணுவும் அவரைத் தேற்றி தாம் ஒரு பெரிய மீன் உருவெடுத்துச் சென்று, சமுத்திரத்தின் அடியிலுள்ள தனது இராஜ்யத்துக்கு ஓடிப்போன கைதனனென்ற அரக்கனையும் அவனது பரிவாரங்களையும் வென்று கொன்று, அபகரித்துப் போகப்பட்டிருந்த வேதங்களுடன் திரும்பிவந்து பிரமாவைச் சந்தோஷிக்கச் செய்தனராம். அத்தகைய அற்புதச் செய்கையைச் செய்த மகாவிஷ்ணுவைப் பூசிக்கத் தெரிந்தெடுக்கப்பட்ட நகரமே ஸ்ரீரங்கமென்றும், அங்குள்ள கோவில் சோழராஜாவினால் கட்டப்பட்டதென்றும் கூறுகின்றனர்.

இக்கோவிலின் மகிமைக்குப் புராண சம்பந்தமான விவரம் அடியில் வருமாறு கூறப்பட்டுளது.

பிரளயகாலத்தில், இப்புவியிலுள்ள யாவும் சர்வ வியாபியான மகா விஷ்ணுவினிடம் அடங்கியபின், அவர் திருப்பாற் கடலில் ஆதிசேடன் எனும் பாம்பின்மீது பள்ளிகொண்டிருந்தனர். அச்சமயம் பிரமதேவர் தமது யோக நித்திரையினின்றும் எழுந்து பார்க்கத் தாம் ஓர் தாமரை மலரிலிருக்கவும் எங்கும் ஒரே பிரவாகமாகவிருக்கவும் கண்டதிசயித்து, தமது ஆசனமான தாமரை மலரின் தண்டு எங்கு உற்பத்தியானதென்றறிய அதைப்பற்றிக் கீழே வெகு தூரம் சென்று பார்த்தும், அதற்கு யாதொரு முடிவும் ஏற்படாதது கண்டதிசயித்துத் திரும்பவும் மலருக்கே வந்தனர். பிறகு யாது செய்வதென்பது தெரியாமல் அவர் தியங்கிக்கொண்டிருக்கையில், மகாவிஷ்ணு ஓர் ஹம்ஸப் பறவையின் மீதேறி வந்து அவரைத் தேற்றினர்.

இன்னொரு சமயத்தில் ஓர் ஆமை உருவெடுத்து வந்து பிரமதேவரை மகாவிஷ்ணு தைரியப்படுத்தினர் என்ற இன்னொரு புராணக் கதையும் உளது.

இம்மூன்று கதைகளும், சீடர்களது அஞ்ஞானத்தைப் போக்கக் கூடிய குருவினது மூன்றுவித சக்திகளைக் குறிக்கும் நோக்கமுள்ளனவேயன்றி வேறில்லை. ஆமை, தான் முட்டையிட்டதும் அதைப்பற்றி யாதொரு கவலையும் கவனமும் இல்லாமலிருந்து, முட்டைகள் வெடிக்கவேண்டிய சமயத்தில், அவைகளைப் பற்றி நினைக்க, அவைகள் வெடித்துக் குஞ்சுகள் வெளிவருகின்றன எனக் கூறுவார்கள்.

மீன் தானிட்ட முட்டைகள் பொரிக்கவேண்டிய சமயத்தில் அவைகளைப் பார்த்தவுடன்

அவைகள் வெடித்துக் குஞ்சுகள் வெளியேறுகின்றன என்பது பலர் அபிப்பிராயம்.

ஓர்பறவை தானிட்ட முட்டையின் மீதுட்கார்ந்து அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும் விஷயம் எல்லோருக்குமே தெரியுமன்றோ!

ஓர் குருவும் தமது சீடர்களது அந்தகாரத்தை நீக்க, அவர்களது பரிபாகத்திற்கேற்றவாறு ஆமை, மீன், பறவைபோலத் தமது அகங் கருதி, நோக்கித் தடவி சந்நிதியிருத்தி உபதேசித்தருளுவர் எனச் சான்றோர் நவின்றிருக்கின்றனர். குரு தமது மனத்தின்கண் தமது சீடனது அஞ்ஞானமாகிய இருள் நீங்கவேண்டுமென்று நினைத்த மாத்திரத்திலேயே சூரியனைக்கண்ட பனிபோல் அது நீங்கி ஞானோதயமாகிவிடுமென்றும், அப்படிக்கின்றி சீடனது நிலைமையை அறிந்து அவனைப் பார்த்த மாத்திரத்திலேயாகிலும், அல்லது தம் முன்னர் இருத்திப் போதித்த மாத்திரத்திலேயேயாகிலும் அவனுக்கு ஞானோதயம் ஆகுமென்றும் கொள்ளவேண்டும்.

மகாவிஷ்ணு பிரமாவுக்கு, மீன் பறவை ஆமை முதலிய மூன்று உருவங்களெடுத்து உபதேசம் செய்திருத்தலாலும், அம்மகாவிஷ்ணுவின் திவ்விய க்ஷேத்திரம் ஸ்ரீரங்கம் என்பதாலும், எல்லாவிதமான சீடர்களும் இங்கு அப் பரமாத்மாவைப் பூசித்தால், அஞ்ஞானத்தை அகற்றி ஞானம் பெறக்கூடுமென்பது பெரியோர்களது அபிப்பிராயம்

மகாவிஷ்ணு ஸ்ரீரங்கநாதராகக் கோடானுகோடி தேவர்களுடனும், முனிவர்களுடனும், இருடிகளுடனும், ஓர் திவ்விய விமானத்தில் ஏறிவந்து இங்கு தங்கி இத்தலத்தை மகா புண்ணிய பூமியாகச் செய்த விஷயம் பின்னர் கூறப்போகும் புராணக் கதையினின்றும் நன்கு விளங்கும்.

இயற்கை அற்புதங்கள்.—மழைக்கால்கள், எரிமலைகள், பூகம்பம், வெந்நீர் ஊற்றுகள், வால் நக்ஷத்திரங்கள், வானவில், எரி நக்ஷத்திரங்கள் முதலியவைகளைப்பற்றிய விவரங்கள் இதில் மிகவும் எளிய நடையில் தெளிவாய் எழுதப்பட்டிருக்கின்றன. காலஞ்சென்ற ஸ்கூல் இன்ஸ்பெக்டர் எல். வி. வில்லியம்ஸ் பிள்ளை அவர்களின் சிறந்த முகவுரையுடன் கூடியது. அநேகம் சித்திரப்படங்களும் கொண்டது. துரைத்தனத்தார் அங்கீகரித்தது. யாவரும் வாசிக்கவேண்டுவது. புதிய பதிப்பு அணா. 10.

கூட்டுறவின் அவசியம்

THE NECESSITY OF CO-OPERATION

இக்கேள்வியை வருவித்துக்கொண்டோம். இது ஒரு கஷ்டமான கேள்விதான். இப்படித்தான்போலும், மனிதர்கள் தாங்களே சில விவகாரங்களில் முதற்கண் சுலபமாகத் தலையிட்டுக்கொண்டு அதிலிருந்து மீட்சிபெற, பின்னர் எண்ணிலா இடர்பட்டுழல்கிறார்கள். பலர் 'எது எப்படியாயினும் நமக்கென்ன' என்று வாளா விருந்துவிடுகிறார்கள். வேறு சிலர், ஒன்றில் பிரவேசிப்பதனால் பிறருடைய ஏசுகைக்கும் நகைப்புக்கும் இலக்காக நேரிடுமென்பதை யுணர்ந்தும் பொதுநலங்கருதிப் பிரவேசிக்கிறார்கள். நமது நண்பரொருவர் நன்னூலில் கடை மாணாக்கனைப் பன்னாடை (நெய்யரி)க்கு ஒப்பிட்டுக் கூறியதினுடைய கருத்தைப் புதிய வழக்கில் எமக்கு எடுத்துக் கூறினார். அது பின்வருமாறு:— ஒரு வகுப்பில் உபாத்தியாயருக்கு ஏற்படும் சிரமமெல்லாம் கடை மாணாக்கனுக்குப் போதித்து வைப்பதிலேயேயாகும். தலை, இடை மாணாக்கர்களுக்குப் போதிக்க உபாத்தியாயர் அவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டுவதில்லை. அளவில்லாச் சிரமங்கொண்டு கடை மாணாக்கனுக்குப் போதிக்குங்காலையில், அவனுக்கு அவனுடைய இயற்கைக்குணம்பற்றி அவ்வுபதேசங்கள் ஏறாவிட்டாலும், அவ்வுபதேசங்களை அடுத்துள்ள தலை இடை மாணாக்கர்கள், பன்முறையும் கேட்கவும், அப்படிக் கேட்க நேரிடும் ஒவ்வொரு முறையும், அவர்கள் உள்ளத்தில் புதுக் கருத்துகள் உதிக்கவும் சந்தர்ப்பம் வாய்க்கிறது. நல்ல விஷயங்கள், அருமையான கருத்துகள் முதலியன கடை மாணாக்கனுக்குப் போதிக்கும் வழியதாக அவனையடுத்துள்ள தலை, இடை மாணாக்கர்களுக்குப் போய்ச் சேருவதனாலும், அவன் மாத்திரம் அதைக் கொள்ளாது விடுவதினாலுமே சாரமாகிய இரசத்தை வெளியே போக்கித் தன்னிடம் சாரமற்றத் திப்பி முதலிய மாசுகளை உடையனவாகக் கொள்ளும் நெய்யரிக்கு—பன்னாடைக்கு—அம்மாணாக்கனை ஒப்பிட்டனர்.

அதுபோலவே, ஒருவர் முன்போந்து யாதாமொரு விஷயத்தைப்பற்றிப் போதிக்கவருவா

ரேயானால், அப்படிச் செய்யவருவது தன்னினும் அறியாமையை யுடையவர்களுக்கேயாகும். அப்படிச் செய்யும்படியான உபதேசங்கள் அத்தகையோருக்கு உபயோகமுடையதாக வமைதலோடு முன்னதாகவே அவற்றை அறிந்துள்ளோர்களுக்கும் ஞாபகமூட்டச் சாதகமா யமைகின்றன. இக்காரணங்கொண்டே, பலர், பிறருடைய தூஷணை முதலிய சாத்துக்கவிகளைப் பொருட்படுத்தாமல் தம்மாலியன்றவரை பிறருக்குப்போதிக்க முன்வருகிறார்கள்.

இக்காரணங்களை யெல்லாம் முன்னிட்டு, நமக்கு இப்பொழுது வேண்டுவது என்ன? என்னும் விஷயத்தை ஒரு சிறிது உரையாடுவாம். நமக்கு இப்பொழுது வேண்டுவது கூட்டுழைப்பு. இதற்கு ஒற்றுமை வேண்டும். "எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்" என்பது வினாவும் விடையுமாக நமது நாட்டில் பன்னெடுங் காலமாக வழங்கிவரும் பொன்மொழி. ஒற்றுமையினால் நாம் எத்தனையோ நலங்களை யடையலாகும். ஒருவராயிருந்து ஒரு சிறிய காரியத்தைத் தான் நடத்துவதைப் பார்க்கிலும், நால்வர் ஒன்றுகூடி நடத்தினால் திறமையுடனும் அதிக சிரமமின்றியும் நடைபெறக்கூடும். ஆகையினால் நமக்குள் ஒற்றுமையும், அதன் வழியாயேற்படும் கூட்டுழைப்பும் வேண்டும். வெளி தேசங்களில் நடைபெறும் எல்லாத் தொழில்களும் தொழிற்சாலைகளும் கூட்டுறவுச் சங்கங்களினாலேயே நடைபெறுகின்றன என்னும் உண்மையை அறிந்திருக்கும் நாம், அந்த வழியை இன்னும் அனுட்டான முறையில் கொண்டு வாராமல் இருப்பது என்ன பேதமை?

இதுவரையில் கடன்கொள்ளல் கொடுத்தல் முறையை மாத்திரங்கொண்ட பல கூட்டுறவுச் சங்கங்கள் நமது நாடெங்கும் ஸ்தாபிதமாகி நடைபெற்றுவருவதைக் காண்கின்றோமேயொழிய நமக்கு அவசியமாயுள்ள உணவுப் பொருள்களையும் உடைகளையும் மற்ற வீட்டுச் சாமான்களையும் தயார்செய்யக்கூடிய தொழிற்சாலைகளை ஏற்படுத்த எவ்விதப் பிரயத்தனமும் செய்யவில்லை. எடுத்த மாத்திரத்தில் நம்முடைய நாடு மான்செஸ்டர், லிவர்பூல், ஷெபீல்டுபோன்ற பட்டினங்கள் ஆகவேண்டுமென்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. நால்வர், பதின்மர் ஆக ஒன்றுகூடி ஒவ்வொரு சிறிய தொழிலை, சொற்பமுதல் வைத்து நமது நாட்டுக்கு அவசியமாயுள்ள பொருள்களைச் சேகரித்து உதவுவதற்கான வழிமுறைகளைத் தேடி நடத்துவார்களேயானால் இன்னும் பத்து வருஷங்களுக்குள் நாமும் மனித சமூகத்தினர் என்று பிறர் கூறி, நம்மோடு கைலாகு கொடுப்பதற்கான நிலையை நாம் அடையக்கூடும். கூட்டுழைப்பின்றி எந்த நாடும் இதுவரையில் உயர்வடைந்ததாகத் தெரியவில்லை. ஒரு குடும்பத்தை யெடுத்துக் கொண்டாலும் அதிலுள்ள தாயாதியரனைவரும் உறவுகொண்டாடி நடந்தாலல்லது அக்குடும்பம் பிறருடைய ஏளனத்துக்குப் பாத்திரமாகி நிலைகுலைந்து போய்விடும். எவ்வித நன்மையும் அக்குடும்பத்தினருக்கு ஏற்படாது. அதற்கு முற்றிலும் மாறாக சதாகாலமும் சச்சரவும், மனக்கவலையும், ஏக்கமும், இன்னும் பலவிதமான துன்பங்களுமே நேரிடும். ஒரு குடும்பத்தைப் போலவே ஒரு ஜனசமூகம், ஒரு ஜனாங்கம், ஒரு நாட்டினர். தமிழர்களாகிய நம்மில் பலரும் ஒன்றுகூடி, கூட்டுறவுத் தொழிற்சாலைகளை யமைத்து ஒற்றுமையுடன் நடத்திவந்தால் எவ்வளவு நன்மை யடைய முடியும்! இவ்விஷயத்தை ஒவ்வொருவரும் ஒரு நிமிஷ நேரமாகிலும் சிந்தனை செய்ய வேண்டும். அப்படிச் செய்யும் பலருடைய நோக்கமும் ஒன்றுகூடும், ஏகமயமாகும், வலுவடையும், உருவங்கொள்ளும், உயிர்பெறும், அவருக்கும் பிறருக்கும் பிரயோசனமளிக்கும். நமக்கு இப்பொழுது வேண்டுவது கூட்டுறவே. ஆகையினால் இன்றே நீங்கள் ஒவ்வொருவரும் எழுமின்; பலரும் ஒன்றுகூடி ஒரு காரியத்தைச் செய்வதென்றால் பொருள் இரண்டாம் பட்சமாகும். நால்வர் கூடினால் பலதுளி பெரு வெள்ளமாவதுபோல் பொருள் மலியும். இன்று உங்களால் இக்காரியம் சுலபமாகச் செய்துமுடிக்கக்கூடியதாகையினால், இன்றே எழுந்திருங்கள்! அவரவர்களுடைய மனவாற்றலுக்கும், தொழில் அனுபவத்துக்கும், செய்வல்லமைக்கும் ஏற்ற வண்ணமாக இக்கூட்டுறவுத் தொழில் ஆரம்பஞ் செய்யப்படட்டும். அதன் பயனை நாம் இன்றே எதிர்பார்க்கவேண்டாம். நாளடைவில் பயன் தானாகவே நிச்சயம் ஏற்படும்.

இந்திய மன்னர்கள்

INDIAN EMPIRE BUILDERS

அசோக மௌர்யன்

அசோகருடைய சரித்திரத்தை நாம் கூறுவதற்கு உதவியாகும் நூல்கள் ஸம்ஸ்கிருதத்திலுள்ள "அசோகாவதானம்" "அவதான சதகம்" "திவ்யாவதானம்" என்பவைகளாம். ஆயினும், அவைகளை முற்றும் நம்புவதற்கில்லை. அசோகரைப்பற்றியும், அவரது வம்சத்தினரைப்பற்றியும் பல கதைகள் கூறப்பட்டிருப்பதால் அவைகள் எல்லாவற்றையும் ஆராய்ந்து உண்மைச் சரித்திரத்தைக் கண்டறியவேண்டியிருக்கிறது. ஆனால் தற்கால ஆராய்ச்சிமுறைப்படி நமக்கு மிகவும் பிரயோசனப்படுபவை அசோகர் காலத்தில் அவரது கட்டளையிற்படி செதுக்கப்பட்ட சிலா சாஸனங்களே. இச்சாஸனங்கள் ஹிமயமலைப் பிரதேசங்களிலிருந்து மைஸூர் வரைக்கும் பரவியிருக்கின்றன. அவை அசோகரது உத்தரவுகளையும் விளம்பரங்களையும் தெரியப்படுத்துவதால், அவரது குணாதிசயங்களை நன்கு தெரிவிக்கின்றன. அசோகருடைய உத்தரவின்படி நாட்டப்பட்ட கற்றூண்களும், அவ்வாறே செய்கின்றன.

பாடலிபுரமென அழைக்கப்பட்டுவந்த நகரம், தற்கால பாட்னு நகரத்தருகே மண்மூடப்பட்டிருக்கின்றது என சரித்திர ஆசிரியர்கள் எண்ணங் கொண்டிருந்தனர். அவ்விடத்தில் பூமியை வெட்டிப்பார்க்க, புதிதாகத் தோன்றிய பலமான கட்டடங்கள் முதலியவற்றினால் மேற்படி எண்ணம் சரியானதே என்பது வெளிப்படையாயிற்று. மௌர்ய ராஜ்யத்தின் தலைநகரைப்பற்றிப் பல புது விஷயங்களும் வெளிவந்தன.

சரித்திர ஆராய்ச்சி சிரமமானது; ஆதலின் அதை ஓர் ஜீவ்ய கார்யமாகச் செய்தால்தான் ஒரு சரித்திர விஷயத்தைப் பற்றின உண்மை வெளிப்படும். அசோகரைப்போன்ற புருஷோத்தமர்களைப்பற்றி நாம் கூறும்போது, அபிப்பிராயபேத முண்டாவதற்கு இடமுண்டு. ஆயினும், நாம் அவ்விதபேதத்திற்குக்காரணங்களை நீக்கி, கூடியமட்டில் எல்லா ஆசிரியர்களும் உண்மையானவை என்றுரைப்பவைகளைத் தழுவி எழுதுகின்றோம். இராஜ்யம் எவ்வாறு ஆளப்பட்டு வந்ததென்பதைப்பற்றியும் துரைத்தனத்தின் பிரிவுகளைப்பற்றியும் சந்திரகுப்த மௌர்யனுடைய சரித்திரத்தில் கூறினதைத்தவிர மௌர்ய அரசர்களுடைய ராஜ்யத்தைப்பற்றி நாம் கூறவேண்டியது புதிதாக ஒன்றுமில்லை.

சந்திரகுப்தருக்குப் பிறகு பிந்துஸாரர் ஸிம்ஹாஸன மேறினார். இவரைப்பற்றி அதிகமாகத்தெரியாவிட்டாலும், "அமிதகாதன்" "பகைவரை எரிப்போன்" என்னும் பட்டப் பெயர் அவருக்கிருந்தமையால் அதனிலிருந்தே அவரது பராக்கிரமம் தெரியவருகின்றது. அவர் 28 வருஷங்கள் ஆண்டார். சண்டைசச்சரவுகள் இல்லாமையினாலேயே அவரைப்பற்றி நமக்கொன்றும் தெரியவில்லைபோலும்! தெற்கே சில நாடுகளை அவர் வென்றாரென்றும், ராஜ்யம் கொஞ்சமும் குறைவுபடாது, தம் மகனுக்கு விட்டுச்சென்றாரென்பதே அவர் ஆட்சியின் நலத்தை விளக்குகின்றது. ஸிரியா தேசத்து அரசருடன் நட்புரிமை கொண்டாடினதினால் அவ்வரசர், மெகஸ்தனிஸுக்குப் பதிலாக டைமாகோஸ் என்பவனைத் தன் தூதனாகப் பிந்துஸாரனுடைய சபைக்கு அனுப்பினான். ஸெலுகஸ் என்னும் யவனதேசத்தரசன் கி.மு. 280 வருஷத்தில் மரணமடைய, அவன் மகன் அண்டியோகஸ் ஸோடர் பட்டந்தரித்தான். இவனும் பிந்துஸாரனுடன் நட்புகொண்டான். கி. மு. 222-223 வருஷத்தில் பிந்துஸாரன் உயிர் நீக்க, அசோகர் அரசரானார்.

அசோகர் பிந்துஸாரருக்கும் ஸுபத்ஸங்கி என்னும் பிராமணச் சிறுமிக்கும் பிறந்ததாகப் பழங்கதை கூறும். அவர் பால்யத்தில் மிகவும் கொடியவராகவிருந்தனர் என்றும், அவருடைய கொடுமைக்கு அனைவரும் அஞ்சினரென்றும் பௌத்த நூல்கள் கூறினபோதிலும், அவைகள் எல்லாம் பொய்க்கதைகள் என்றும், பிறகாலத்தில், பௌத்த மதத்தைத் தழுவின பிறகே நல்லவரானார் என்று கூறுவதற்கு ஏற்பட்ட கட்டுக்கதைகள் என்றும் சில நூலாசிரியர்கள் கூறுகின்றனர். ஆயினும் இவர்களை நாம் முழுவதும் ஒப்புக்கொள்வதற்கில்லை. "அள்ளாது குறையாது, சொல்லாது பிறவாது" என்னும் பழமொழிப்படி கொஞ்சமாவது உண்மையைத் தழுவி ஏற்பட்டிருக்கும் என்று நாம் கூறலாம்.

"தக்ஷசீலை"* என்பது அக்காலத்தில் மிகப் பெரியத் தலைநகராய் இருந்தது. மத்திய ஆசிய வியாபாரிகள் இவ்விடம் வந்து தம் தொழிலை நடத்தினர். ஸம்ஸ்கிருத இலக்கணம் இயற்றிய பாணினியும் இந்நகரில்தான் தம் சிஷ்யர்களுக்குப் போதித்துவந்தனர் கிறிஸ்து பிறந்த முதல் நூற்றாண்டில் இந்நகரம் பௌத்த புண்ய ஸ்தலங்களில் முக்கியமானவைகளில் ஒன்றாயிருந்தது. பிறகே அதன் பொலிவு அழிந்துபோயிற்று. சில வருஷங்களுக்கு முன்னர், இந்திய துரைத்தனத்தார் "தக்ஷசிலை" முன்னிருந்த இடத்தைத் தோண்டிப்பார்க்க அங்கு பல கட்டடங்கள் முதலியவைகள் இருந்ததால் அதன் பெருமை விளங்கியது. ஸர்வகலா ஸங்கம் (யூநிவர்ஸிடி) ஒன்று அவ்விடம் இருந்ததுவென சரித்திர நூல்கள் கூறுகின்றன. இவ்வளவு சிறப்புள்ள இந்நகர் பிந்துஸாரருடைய ஆட்சிக்குட்பட்டிருந்தது ஆனால் அவ்வூரில் கலகமேற்பட ஜனங்கள் நகராதிபதிக்கு அடங்கி நடக்கவில்லை. இது பிந்துஸாரர் காதிற்பட்டது. அவர் யுக்தவயதடைந்த அசோகரைத் தம் பிரதிநிதியாகத் தக்ஷசிலைக்கு அனுப்பினார். அசோகர் கலகத்தை அடக்கி, அப்பிரதேசத்தை ஆண்டுவந்தார். அங்கே சில காலம் இருந்தபிறகு உஜ்ஜயினி நகரத்தின் தலைவராக அசோகர் அனுப்பப்பட்டார். உஜ்ஜியினி நகரம் அக்காலத்தில் செல்வம் நிறைந்த பட்டணமாயிருந்தது.

சிறிது காலத்திற்குப் பிறகு பிந்துஸாரன் காலமானான். அதற்குப் பிறகு அசோகர் கி. மு. 272 அல்லது 273-ம் வருஷத்தில் சிங்காதன மேறினார். ஆனால் அவர் எந்த வருஷத்தில் அரசாள ஆரம்பித்தா ரென்று சரித்திராசிரியர்களுக்குள் நிச்சயமாகவில்லை. அசோகருக்குப் பட்டாபிஷேகம் நடந்தது கி. மு. 263 (ஹூ) அல்லது 265 (ஹூ). ஆனால் அது, (ரிஸ்டேவிஸ்) 267 கி. மு. (ஸேனார்ட்) 269 கி. மு. (மனமோகன சக்கரவர்த்தி) 271 கி. மு. (பாலிக் கிரந்தங்கள்) 272 கி. மு. ஆண்டில் என்று பலவாறாக பல ஆசிரியர் கூறுகின்றனர். ஆயினும் அவர் பட்டாபிஷேகம் நடப்பதற்கு நான்கு வருஷங்களுக்கு முன்னமேயே இராஜ்யமாள ஆரம்பித்தாரென்று சொல்லப்படுவதனால் அவர் இராஜ்யத்திற்கு வந்தது 272-ம் 273-ம் கி. மு. இருக்கவேண்டுமென்று ஒருவிதமாகச் சொல்லக்கூடும்.

அசோகர் பிந்துஸாரன் இறந்ததும் யாதொரு கஷ்டமுமின்றி ஸிம்ஹாசனம் ஏறினானென்று சிலர் கூறுகின்றனர். வேறு சிலர் தமது சகோதரர்களையும் உறவினர்களையும் கொலைசெய்து சிம்மாசன மேறினரென்று கூறுகின்றார்கள். இதுவே பௌத்த நூல்களிலும் சொல்லப்படுகிறது. சிங்காதனமேறினவுடனே பட்டாபிஷேகமாகாமல் நான்கு வருஷங்களுக்குப் பிறகே பட்டாபிஷேகச் சடங்கு நடந்ததென்பதும் இதையே வற்புறுத்தும்.

ஆனால் சிலர் அதை மறுப்பதேன்? என்ற ஒரு கேள்வி பிறக்கலாம். அதற்குச் சமாதானமாகப் பின்வருமாறு முதற்கட்சியார் கூறுகின்றனர்:— அசோகர் எழுதிவைத்த சிலாசாஸனங்களில் தன்னுடைய சகோதரி சகோதரர்களைப்பற்றியும் உறவினர்களைப்பற்றியும் பலவிடங்களில் கூறியிருக்கின்றனர். தம்முடைய உறவினரைக் கொன்றிருப்பின் அசோகர் இவ்விதமாகச் சிலாசாஸனங்களில் எழுத இடமில்லையே. ஆகவே, அசோகர் தம் உறவினர்களைக் கொலைசெய்யவில்லை.

அசோகர் சிங்காதனமேறிய 13 - வருஷங்கள் வரைக்கும் என்ன செய்தாரென்று நமக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. பௌத்த நூல்களில் அசோகர் சிங்காதனமேறியதும் மிகவும் கடூரமாக ஆண்டுவந்தனரென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இவைகளுக்கு உதாரணம் கூறி மேற்செல்லுவோம்:— அந்தப்புரத்து ஸ்திரீகள் (500 ஸ்திரீகள்) தம்முடைய விகாரரூபத்தை இகழ்ந்து கூற அவர்களை தீக்குழியிலிட்டனராம். இம்மாதிரியான கதைகள் பல இருப்பினும் அவைகளைப்பற்றி சரித்திரவாசிரியர்கள் எல்லோரும் ஒரே அபிப்பிராயங் கொண்டவர்களல்ல. பொதுவாக, அசோகர் ஓர் அரசனுடைய வாழ்க்கையினின்றுண்டாகும் சுகதுக்கங்களை அனுபவித்துவந்தா ரென்று சொல்லலாம்.

இராஜ்யசுகம் என்னாள் நிற்கும்? இவ்வுலகிலுண்டானவை அனைத்தும் அநித்தியமானவை; துக்கத்திற்குக் காரணமானவை; நம்

*பாஞ்சாலத்திலுள்ள "ராவல்பிண்டி" என்னும் ஓர் தாலுக்காவைச் சேர்ந்த "ஷாதரி" என்னும் கிராமத்தில "தக்ஷசிலை"யின் நத்தங்கள் இருக்கின்றன.

பத் தகாதவை; என்ற எண்ணம் மானிடரெவர்க்கும் அவரவர் வாழ்க்கையில் எப்பொழுதாவது ஒருமுறை தோன்றுகிறது. அவ்வெண்ணம் ஒருவனிடம் உறுதிப்படுமாகில் அவன் ஒரு புது மனிதனாகிறான். இவ்வெண்ணத்தினால் வாழ்க்கையைப்பற்றி அதுவரைக்கும் உண்டான எண்ணங்களெல்லாம் மாறுபடுகின்றன. சந்நியாஸமும் விரக்தியும் இவ்வெண்ணம் முதிர்வதாலேயே உண்டாகின்றன.

பராக்கிரமம் மிகுந்த அசோகர் தம் இராஜ்யத்தைப் பெரிதாக்க எண்ணினார். கலிங்கராஜ்யத்தைக் கைப்பற்றவேண்டுமென்ற அவா அவருக்கு உண்டாயிற்று. அக்காலத்தில் அது ஓர் தனி ராஜ்யம்; அந்நாட்டினரும் வீரத் தன்மையர். ஆகவே கலிங்கநாட்டைக் கைப்பற்றுவது அசோகருக்கு மிகவும் கஷ்டங் கொடுத்தது. கலிங்கசேனைக்கும் மாகதருக்கும் நடந்த போரில், லக்ஷத்தைம்பதினாயிரம் பேர் சிறையாளர்களாகப் பிடிக்கப்பட்டனர். லக்ஷம் ஜனங்கள் மாண்டனர். மற்றும் பல்லாயிரம் பெயர்கள் பலவிதங்களில் நாசமடைந்தனர்.

ஓர் மனிதனை மற்றொருவன் கொலைசெய்தால், கொலையாளியைத் தூக்கிடுகிறார்களன்றோ? ஆயின் போரில் பல்லாயிரம் பெயர்களைக் கொலை செய்வதற்குமுன் யோசனையுடன் உத்தரவளிக்கும் அரசனையும் தளகர்த்தனையும் என்ன செய்யவேண்டும்? அயலாரை வதம்செய்வது, நம்மை வதைப்பதுபோலவே யாகும் என்பதை ஒருவன் மனதில் நினைப்பானாயின், அவன், சண்டையிடத் துணிவானா? இதைப்போன்ற பல எண்ணங்களே அசோகரது மனத்தில் தோன்றியிருக்கும். தம்மால் பல்லாயிரம் ஜனங்கள் மடிந்ததையும், அநேகமாயிரம் பேர்கள் வீடின்றி, உணவின்றி அலைவதையும் கண்ட அசோகர் மனம் புண்ணாகியது. என்னதான் பராக்கிரமம் பொருந்தியவரா யிருந்தபோதிலும், அவரும் நம்மவரைப் போன்றவரே யன்றோ?

இவ்வித எண்ணங்களை மனதிற்கொண்ட அசோகர், இனித் தம்மால் மனிதர்களுக்கும் துன்பம் கூடாதெனத் தீர்மானித்தார். அஹிம்ஸா பரமோ தர்மம: என்பதைத் தன் மேற்கோளாகக்கொண்டு நடக்க ஆரம்பித்தார். இக்கலிங்கப் போருக்குப் பிறகே அசோகர் பௌத்தமதக் கொள்கைகளைப் பரப்புவதற்கு வேண்டிய வழிகளைத் தேடினான்.

அசோகர் பௌத்தமதத்தைத் தழுவினது அவருடைய வாழ்க்கையை மாத்திரம் மாற்றவில்லை. அவர் நாட்டிலுள்ளவர்களும் 'யதா ராஜா ததாபிரஜா' என்னும் கொள்கைப்படி அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றினார்கள். அயல் நாட்டிலுள்ள மன்னரும் பௌத்தமதக் கொள்கைகளைப்பற்றி அறியவும் அவைகளைக் கைக்கொள்ளவும் இடமாயிற்று. இதைப்பற்றி விரித்துக் கூறுவோம்.

பௌத்த மதத்தைத் தழுவின அசோகர், அதைத் தம் நாட்டில் ஸ்தாபித்ததோடு, அயல் நாடுகளிலும் பரவச் செய்தார் எனச் சற்றுமுன் கூறினோம். இனி அசோகர், பௌத்த தர்மம் பரவுவதற்கு என்ன செய்தார் என்பதைச் சற்று நோக்குவோம். மௌர்ய ராஜ்யம் அரசாளப்பட்டு வந்ததைப் பற்றி, சந்திரகுப்த மௌர்யனது ஆட்சியைப் பற்றிக் கூறும்போது விவரித்தோம். அவ்விதமே, அசோகமௌர்யனது காலத்திலும் ராஜ்யம் ஆளப்பட்டுவந்தது எனக் கூறல்வேண்டும். பௌத்த தர்மத்தை தம் ஜனங்கள் அறியும்படி பௌத்த தர்மத்தை சாஸனங்களாகப் பிறப்பித்து அவைகளைத் தம் நாட்டின் பல இடங்களிலும் கருங்கற் பாறைகளின்மீது செதுக்கிவித்தார். இச் சிலாசாஸனங்களில் நமக்குத் தெரிந்தவரை புராதனமானவை மத்தியமாகாணத்தில் ரூபநாத் என்னுமிடத்திலும், ராஜபுதனத்தில் வைகாட்டிலும், மைஸூரில் சித்கல் துருக்கம் ஜில்லாவில் மூன்றிடங்களிலு மிருக்கின்றன. இரண்டாம் சாஸனத்தின் நகல்கள் மூன்று, மைஸூரிலிருக்கின்றன. ஆனால், அந்த சிலாசாஸனத்திற்கும் மற்றவைகளுக்கும் வித்யாஸமிருப்பதால், ஸுவர்ணகிரியில் அரசனுடைய பிரதிநிதியாயிருந்த இளவரசரின் கட்டளையால் அது பிரசுரிக்கப்பட்டதென்று யூகிக்கப்படுகிறது.

சிலாசாஸனங்களைப் படிக்கும்போது, அசோகருடைய மதம், மேற்கே ஸிரியா, மாஸிடோனியா, எபைரஸ் முதலிய இடங்களிலும், வட ஆபிரிக்காவிலும் முக்கியமாக, எகிப்து லிபியா முதலிய இடங்களிலும், இந்தியாவில் கன்யாகுமரி வரையிலும், லங்கைத் தீவிலும், பௌத்த பிக்ஷுக்கள் அனுப்பப்பட்டார்களென அறிகிறோம். சிலாசாஸனங்களில் கூறப்பட்ட அந்நிய நாட்டு ராஜர்கள் கி. மு. 258 வரையில் ஜீவித்திருந்தனர் என்று நாம் அந்யதேச சரித்ரங்களால் அறிந்திருக்கிறபடியால், அசோகர், தம் சிலாசாஸனங்களை கி. மு. 258-க்கு முன்னரே பதிப்பித்திருக்கவேண்டும் என நாம் கூறலாம்.

லங்கைக்குச் சென்ற பௌத்த ஸங்கத்தின் விவரங்கள் சிலாசாஸனங்கள் மூலமாய்த் தெரியாவிடினும், பௌத்த நூல்களினின்று நாம் அறிகிறோம். மஹேந்திரன் என்னும் பௌத்த பிக்ஷு, தன் ஸகோதரியும் பிக்ஷுணியுமான ஸங்கமித்ரையுடன் லங்கைக்குச் சென்று, பௌத்த தர்மத்தையும் ஸங்கத்தையும் பரவச் செய்தனர். மஹேந்திரரையும், ஸங்கமித்ரையையும், அசோகருடைய புத்ர புத்ரிகளென்று பௌத்தநூல்களில் கூறப்படுகின்றது. மகேந்திரருடன் பௌத்த பிக்ஷுக்களும் சென்றனர். அவர்கள் பீடகங்கள் என்னும் பௌத்த நூல்களையும் தம்முடன் கொண்டுபோயினர். இந்நூல்கள் பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருந்த போதிலும், மஹேந்திரன், ஸிம்ஹள பாஷையில் மொழிபெயர்த்தான். திஸ்ஸன் என்னும் அரசன் லங்கையை ஆளும்போது, பௌத்தர்கள் இந்தியாவிலிருந்து லங்கைக்குச் சென்றதாகவும், அவ்வரசன் கி. மு. 258-முதல் கி-மு- 230 வரையில் அரசாண்டதாகவும் நமக்குத் தெரியவருவதால், சாஸனங்கள் எழுத உத்தரவளித்தபிறகே பௌத்த சந்நியாஸிகளை லங்கைக்கு அசோகர் அனுப்பினார் என்று எண்ணவேண்டியிருக்கிறது.

அசோகரது புத்திரியான ஸங்கமித்ரை தம் ஸஹோதரருடன் லங்கைக்குப் போகும்பொழுது, போதிவிருக்ஷத்தின் ஓர் கிளையைக் கொண்டுபோனதாகவும், அதை திஸ்ஸ அரசன் வாங்கித் தன் கையினாலேயே, தலைநகராகிய அநுராதபுரத்தில் நட்டதாகவும் சரித்திரம் கூறும். அப்போதிமரம், இப்பொழுது அநுராதபுரத்தின் இடிந்த கட்டடங்களின் நடுவில் நிற்கின்றது. அம்மரத்தின் ஜீவ்யகாலம் இதுவரைக்கும் 2,400 வருஷங்களுக்கு மேலாகிறது. அநுராதபுரத்தில் திஸ்ஸனது காலத்தில் கட்டப்பட்ட பௌத்த கோயில்களும், கட்டடங்களும், பௌத்த மதத்தின் பெருமையை விளக்குகின்றன. மஹேந்திருடன் கூடவந்த பௌத்த பிக்ஷுக்களுக்கு ஓர் விஹாரமும், அநுராபுரத்திலிருந்து எட்டு மைல் தூரத்தில் ஓர் மலைப் பாறையில் குகையையும் செதுக்கி வைக்க மஹேந்திரன் தம் வாழ்நாளை அங்கேயே கழித்தனர்.

பௌத்த தர்மத்தை இவ்வாறு நாடெங்கும் பரவவைத்த அசோகர் புத்தரது திவ்ய அவதாரத்தோடு சம்பந்தப்பட்ட இடங்களையெல்லாம் கி.மு. 249-இல் ஸ்தலயாத்திரை செய்து வந்தான். லும்பி னிவனம், கொன்காமன ஸ்தூபம் நிற்குமிடம், கபிலவஸ்து, புத்தகயை, ஜகநாதம், குசிநகரம், ஸ்ரீவஷ்டியிலுள்ள பௌத்த ஆச்ரமம் முதலியவைகள் அசோகர் சென்ற இடங்களில் முக்கியமானவைகளாம்.

பௌத்த தர்மத்தை அறிந்து, அதைக் கடைப்பிடித்து, தம் பிரஜைகள் அனைவரும் அறியும்படி சாஸனங்களாக ஏற்படுத்தின அசோகர் இதனுடன் நிற்கவில்லை. தம் ஜனங்கள் தர்மத்தைக் கைக்கொண்டு ஒழுகுகிறார்களா என்பதை அறிய அவர் விரும்பினார். அதற்காகத் தம் உத்யோகஸ்தர்கள் எல்லாரையும், தர்மத்தையும் ராஜகாரியங்களில் ஒன்றாகப் போதிக்கும்படி உத்தரவிட்டார். இம்மாதிரி செய்வித்தால் ஜனங்களுக்குத் தர்மத்தின்மீது சிரத்தை ஏற்படுமென்பது, அசோகர் எண்ணம்போலும். இதனோடு நிற்காமல், தர்மம் ஸரியாக நடைபெற்றுவருகிறதா என்பதை அறிய **தர்ம மஹாபாத்ரர்கள்** என்பவர்களை கி.மு. 256 வருஷத்தில் நியமித்தார். **தர்மயுக்தர்கள்** என்னும் உத்யோகஸ்தர்கள், மகாபாத்ரர்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள். நாட்டிலுள்ள ஜனங்களின் ஒழுக்கத்தைக் கவனிப்பதில் பெரியவர்கள் சிறியவர்கள், உற்றார் உறவினர் என்னும் வித்தியாஸம் கொஞ்சமேனுமில்லை. நாட்டின் எல்லைப் புறங்களிலுள்ள ஜனங்கள் முதற்கொண்டு, ராஜனுடைய அரண்மனையிலுள்ளவர்களும், அரசனது ஸஹோதரிகளும் ஸஹோதரர்களும் மற்ற உறவினர்களும், மஹாபாத்ர உத்யோகஸ்தர்களின் கட்டுக்குட்பட்டவர்கள்.

ஆரியமத உபாக்கியானம்:—அருமையான நீதிகளடங்கிய சிறந்த நூல் இரண்டு பாகங்களும் ரூ. **1—2—0.** துரைத்தனத்தார் அங்கீகரித்தது.

உழவு மாடுகள்

THE PLOUGH CATTLE

தற்காலத்தில் இந்தியர்கள் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயங்களில் முதன்மை பெற்று நிற்பது மாடுகளின் விஷயமே, நமது தேசம் விவசாயத்தையே பிழைப்புக்குப் பிரதான மார்க்கமாகக் கொண்டது. நமது விவசாயம் முற்றிலும் மாடுகளின் உதவியைக் கொண்டே நடைபெறவேண்டியிருக்க— நமது விவசாயத்துக்கு மாடுகள் பிராணுதாரமாகவிருக்க, — மாடுகள் வரவர எண்ணிக்கையிலும் குணத்திலும் குன்றிவருகின்றன. உலகத்திலுள்ள மற்ற விவசாய தேசங்களையும் நமது தேசத்தையும் மாடுகள் விஷயமாக ஒத்துப்பார்க்குமிடத்து, நமது தேசத்தில் விவசாயத்துக்குப் போதுமானவளவு மாடுகளில்லையென்பது தெளிவாய் விளங்கும்.

நூறு ஜனங்களுக்கு இந்தியாவில் 61 மாடுகள்தாமிருக்கின்றன. டென்மார்க்கு தேசத்தில் 74 கால்நடைகளும், அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் 79-ம், கானடாவில் 80-ம், கேப் காலனியில் 120-ம், நியூஸிலண்டில் 150-ம், ஆஸ்திரேலியாவில் 259-ம், அர்ஜென்டைன் குடியரசு தாணியில் 323-ம், உருகுவேயில் 500-ம் இருக்கின்றன. இனி சாகுபடியாகும் நிலத்தின் விஸ்தீரணத்தையும் சாகுபடிக்கு உபயோகிப்பதற்குள்ள மாடுகளின் எண்ணிக்கையையும் கவனிப்போம். பிரிட்டிஷ் இந்தியாவில் சாகுபடியாகும் நிலத்தின் விஸ்தீர்ணம் 22 கோடி 80 லக்ஷம் ஏகராக்களென்றும், காளைமாடுகளின் தொகை சற்றேறக்குறைய 4 கோடி 90 லக்ஷம் என்றும் இந்தியா கவர்ன்மெண்டார் ரிப்போர்ட்டிலிருந்து தெரியவருகிறது. பொலி காளைகளாகவும், வண்டிக்காளைகளாகவும், மற்றும் பலவிதமாகவும் உபயோகப்படுத்தப்படும் காளைகள் மொத்தத்தொகையில் கால்வாசியிருக்கும். மூப்பு, தள்ளாமை, நோவு, இளம்பருவம் இவைகளினால் சாகுபடிக்கு உபயோகமில்லாதவை மொத்தத்தொகையில் கால்வாசியிருக்கும். அவைகளையெல்லாம் நீக்கி, சாகுபடிக்கு உபயோகமான காளைகளைக் கணக்கிட்டால், 2 கோடி 40 லக்ஷந்தாம் மிஞ்சும். அதாவது, 22 கோடி 80 லக்ஷம் ஏகராக்களை உழுவதற்கு நமக்கிருப்பவை, 2 கோடி 40 லக்ஷம் மாடுகள்தாம். கணக்கிட்டால், 19 ஏகராக்களை ஒரு போகத்துக்கு உழுவதற்கு நமக்கு ஒரு ஜோடி மாடுகள்தாமிருக்கின்றன. ஆனால் இவ்விஷயத்தை நன்றாய் ஆராய்ந்து பார்த்த அறிஞர்கள், நமது இந்தியக் காளைமாடுகள் ஒரு ஜோடி ஒரு போகத்துக்குச் சற்றேறக்குறைய 5 ஏகராக்கள்தாம் உழமுடியுமென்று அபிப்பிராயப் படுகிறார்கள். அதன்படி நமது தேசத்தில் இப்போதுள்ள காளைத்தொகையைப்போல் நான்கு மடங்கு காளைகளிருந்தால்தான் நமது தேசத்தில் சாகுபடிக்குத் தகுதியாயுள்ள நில விஸ்தீரண முழுவதையும் சரிவர சாகுபடிசெய்யமுடியும்.

இவ்வாறு உழவு மாடுகள் குறைவாயிருக்கிறதின் பலனாக, நிலங்களின் மகசூல் கண்டுமுதலும் குறைவாகவே யிருக்கிறது. இந்தியாவின் கோதுமைக் கண்டுமுதல் தாரணையானது டென்மார்க்கு, இங்கிலாந்து, ஜப்பான், எகிப்து இத்தேசங்களின் தாரணைகளின் மூன்றிலொரு பாகமாகவும், நார்வே, ஸ்வீடன், கானடா இந்நாடுகளின் தாரணையில் பாதியாகவும், ஸ்பெயின், பிரான்சு, இத்தாலி, அமெரிக்கா ஐக்கிய மாகாணங்கள் இவைகளின் தாரணையில் மூன்றில் இரண்டு பாகமாகவும் இருக்கிறதெனத் தெரியவருகிறது.

உழவு மாடுகள் உழவுக்குப் போதாமலிருப்பதாலும், நாளுக்குநாள் பலங்குன்றி வருவதாலும், காளைகளின் விலையும் தானியங்களின் விலையும் மிதமிஞ்சி அதிகரித்துவருகின்றன. தானியங்களின் விலை ஒன்றுக்கு மூன்றாய் அதிகரித்துவிட்டது. என்ன விலை கொடுத்தாலும் நல்ல காளைகள் அகப்படுவது அரிதாய்ப் போய்விட்டது. மாடுகள் இவ்விதக்ஷீணதசையை யடைந்ததன் காரணங்களை ஆராய்ந்து பார்த்தால், நான்கு காரணங்கள் முக்கியமாகப் புலப்படும். அவையாவன :—

(1) மேய்ச்சற்றரை போதாமையும் தீவனக் குறைவும்.

(2) உயர்தரமான பொலிகாளைகள் இல்லாமை ; நல்ல காளைகளை காரை யறைத்தல் முதலிய கடினமான வேலைகளுக்கு உபயோகித்தல்; தனிகர்களுக்குத் தற்காலம் காளைகள் விஷயத்தில் உண்டாயிருக்கும் அலக்ஷியம்.

(3) காளைகளைக் கட்டுப்பாடின்றிக் கொல்லுதலும், பிறநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்தலும்.

(4) காளைகள் சௌக்கியமா யிருக்கும்போதும் நோயுற்றபோதும் அவைகளைச் சரிவர வளர்க்க அறியாமை.

இந்நான்கு காரணங்களையும் சற்று ஆராய்ந்து பார்ப்போம். தொன்றுதொட்டு நமது தேசத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் அதன் மொத்த விஸ்தீரணத்தில் பத்திலொரு பங்கை மேய்ச்சல் தரையாக வைப்பது வழக்கமாக விருந்தது. போதாத காலத்தினால் ஜமீன்தாரர்களும் பெரிய குடித்தனக்காரர்களும் இந்த அத்தியாவசியமான பொது பூமியை ஆக்கிரமித்துக் கட்டிக்கொண்டுவிட்டார்கள். சிலகிராமங்களில் மேய்ச்சல்தரை என்று ஒருகுழி பூமிகூட இல்லாமற் போய்விட்டது. மனிதர் உணவுக்குரிய தானியங்களும் மற்ற சாமான்களும் போதாமற் போனபடியால் அம்மேய்ச்சற் றரைகள், சாகுபடி நிலங்களாக மாற்றப்பட்டன வென்றும், அவ்வாறு மாற்றப்பட்டதனால் அவைகள் முன்னினும் பன்மடங்கு அதிகப் பிரயோஜன முள்ளவைகளாயிருக்கின்றன வென்றும், ஆகையினால் அதைக் கண்டித்துப் பேசுவது நியாயமல்லவென்றும் சிலர் வாதிக்கிறார்கள்.

இவ்வாறு வாதிப்பது முதன் முதலில் சரியானதாகத் தோன்றுமே யாயினும், ஊன்றிப் பார்த்தால் தவறான கக்ஷியென்று நன்கு விளங்கும். மேய்ச்சற்றரையின்மையானது மாடுகளின் தேகவலிமையை யழித்து விடுவது மன்றி, அவைகளின் ஜாதிகளின் குணத்தையும் குறைத்துவிடுகிறது. ஏற்கனவே யுள்ள சாகுபடி பூமிகளை யுழுவதற்கே போதுமான மாடுகளில்லாம லிருக்கையில், சாகுபடிக்கு இன்றியமையாத மாடுகளின் தொகையும் பலமுங் குன்றுமாறு மேய்ச்சற்றரைகளை யழித்துச் சாகுபடி நிலங்களாக்குவதனால், எங்ஙனம் மகசூல் கண்டுமுதல் அதிகரிக்கும்? மேய்ச்சற் றரைகளை சாகுபடி நிலங்களாக மாற்றுவதானது நூல் நூற்பவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுமென்று ஓர் சட்டத்தை ஏற்படுத்திவிட்டு, நெசவு தரிகளை அதிகரிப்பது போன்ற பைத்தியச் செய்கையாகும். முற்காலத்தில் மேய்ச்சல் தரைகளாயிருந்த பூமிகளை, கவர்ன்மெண்டார், அவைகளை யபகரித்துக் கொண்டுள்ளவர்களிடமிருந்து பிடுங்கி, இனி அவைகள் அக்கதியடையா வண்ணம் காப்பதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

கால்நடைகளின் தீவனப் பயிர்களைச் சாகுபடி செய்வோருக்கு இனாமாகவோ, அல்லது குறைந்த விலைக்கோ தீவனப் பயிர் விதைகளைக் கொடுத்தும், அப்பயிர்களைச் சாகுபடி செய்யும் நிலங்களுக்குள்ள தீர்வையைக் குறைத்தும் சௌகரியங்கள் செய்து கொடுத்து கவர்ன்மெண்டார் அவ்விதப் பயிர் செய்தலை அதிகரித்தாலன்றி, நமது தேசத்தில் தீவனப் பயிர் அதிகரித்து மாடுகளின் கஷ்டம் நீங்குவதற்கு வேறு வழியைக் காணோம்.

முற்காலத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் கோவிலுக்குப் பல காளைகள் விடப்பட்டு வந்தன. அக்கோவிற் காளைகள் கட்டுப்பாடின்றி எங்கும் சென்று மேய்ந்து திரிந்துவிட்டு, யாதொரு வேலையும் செய்யாமலிருந்ததால், உயர்தரமான பொலிகாளைகளாக உபயோகப்பட்டு வந்தன. நாகரிகம் முற்றி ஈசுவர பக்தி குறைவதனாலும், நியாயசபையார், கோவிற்காளைகள் யாவரும் உபயோகிக்கத்தக்க பொது சொத்துக்கள் என்று தீர்மானங்கள் செய்ததனாலும், தற்காலம் கோவில் காளைகள் அற்றுப் போய்விட்டன. தனிகர்களும் குதிரைவண்டிகளையும் மோட்டார் வண்டிகளையுமே விசேஷ ஆசையுடன் உபயோகித்து, மாடுகளை இகழ்ந்து அலக்ஷியஞ் செய்துவருகிறார்கள். ஆகையால் நல்ல ஜாதி மாடுகளை அபிவிருத்தி செய்வதற்கு உயர்தரமான பொலிகாளைகள் இல்லாமற்போயின. கவர்ன்மெண்டாரும், முனிசிபாலிடியார்களும், ஜில்லாபோர்டு, தாலுகாபோர்டு, கிராம பஞ்சாயத்தார்களும், நல்ல காளைகளை வளர்த்து நல்ல ஜாதிகளைப் பெருக்குவதுமன்றி அவ்வாறு செய்யும் முறையையும் ஜனங்களுக்குக் கற்பிக்கவேண்டும்.

நமது தேசத்தில், காளைகளை நமது தேசத்திலேயே உண்ணுவதற்காகவும், உலர்த்திய இறைச்சியாகப் பிறநாடுகளுக்கு அனுப்புவதற்காகவும், தோல் வியாபாரத்துக்காகவும் யாதொரு கட்டுப்பாடுமின்றி கொல்லப்படுகின்றன. கொல்லுவதற்குக் கொண்டுபோகப்படும் கால்நடைகளின்மீது முனிசிபாலிடியாருக்குச் செலுத்தப்படும் வரி சென்ற பத்து வருஷகாலத்தில் நூற்றுக்கு எழுபது அதிகரித்துவிட்டது. தோல்ஏற்றுமதியோ சென்ற

50 வருஷங்களுக்குள் இருபது மடங்கு அதிகரித்துவிட்டது. நமது தேசத்திலேயே உண்ணுவதற்கு ஒரு கோடி மாடுகளும், உலர்ந்த இறைச்சி ஏற்றுமதிக்காக 10 லக்ஷம் மாடுகளும் வருஷந்தோறும் நமது தேசத்தில் கொல்லப்படுவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இவ்வாறு நமது ஜீவனத்துக்கு இன்றியமையாத மாடுகளைக் கொல்லுவதை கவர்ன்மெண்டார் கண்டிப்பான சட்டதிட்டங்களினால் சீக்கிரம் தடுக்காவிடில், நமது தேசத்தில் விளைச்சல் இன்னும் குறைந்து, கொடிய பஞ்சம் ஏற்படுமென்பதற் கையமில்லை.

நமது தேசத்திலுள்ள நல்ல ஜாதி மாடுகளை வேற்று நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதையும் கவர்ன்மெண்டார் முற்றிலும் தடுத்துவிடவேண்டும். ஓங்கோல் ஜில்லாவிலுள்ள உயர்ந்த ஜாதி மாடுகளைச் சில வருஷங்களாக ஜாவா என்னும் தீவுக்கு ஏராளமாய் ஏற்றுமதி செய்துவருகிறார்கள். நல்ல ஜாதி மாடுகளை அபிவிருத்தி செய்வதற்கென்று ஏற்படுத்தப்பட்ட பண்ணைகளிருக்குமாயின், இவ்வாறு ஏராளமாய் ஏற்றுமதிசெய்வதனால் நமது நாட்டுக்குச் சிறிதும் நஷ்டமின்றி, மாடுகளின் தொகை மேன்மேலும் பெருகி, நாட்டவரும் செல்வமடைவார்கள். அப்படிப்பட்ட பண்ணைகளில்லாமையாலும், நல்லஜாதி மாடுகளை அபிவிருத்திசெய்ய ஏழைக்குடிகளுக்குப் போதுமான ஊக்கமும், தனமும், சௌகரியங்களுமின்மையாலும், இப்பொழுதே நமது நாட்டுப் பூமிகளைச் சாகுபடிசெய்யப் போதுமான மாடுகளில்லாமையாலும் இத்தகைய ஏற்றுமதியை முற்றிலும் நிறுத்திவிட வேண்டுவது அத்தியாவசியமாகிறது.

அதர்வ வேதத்தின் காலமுதல் நமது நாட்டில் சிறப்புற்றிருந்த மாட்டு வைத்திய முறை ஆதரிப்பாரற்று அழிந்துபோயிற்று. இப்போது சர்க்கார் ஏற்படுத்தியுள்ள மாட்டுவைத்தியக் கல்லூரிகளிலிருந்து தேர்ச்சிபெற்று வரும் வைத்தியர்கள் மிகவும் கொஞ்சம் பேர்களேயாதலால், நமது நாடெங்கும் சென்று மாடுகளின் பிணிகளைத் தீர்க்கப் போதாதவர்களாயிருக்கிறார்கள். நமது ஏழைக் குடிகளும் அவர்களை யணுகக் கூசுகிறார்கள். நமது பழையமுறை சொற்பச் செலவில் பிணிகளைத் தீர்த்துவந்தது. அதற்குரிய மருந்துச் சரக்குகள் நமது நாட்டிலுள்ள விவசாயிகள் எளிதில் தெரிந்துகொண்டு சுலபமாய்ச் சம்பாதிக்கக்கூடியவை. நமது தேச மாடுகளின் தேகத்துக்குப் பொருத்தமானவை. ஆங்கிலம் படிக்காதவரும் அம்முறையை எளிதில் கற்றுக்கொள்ளக்கூடும். ஆகையால் அப்பழைய முறையடங்கிய சாஸ்திரப்புத்தகங்களை யாவருக்கும் விளங்கும்படி அரும்பதவுரையுடனும் உதாரணங்களுடனும் அச்சிட்டு சொற்பவிலைக்கு விவசாயிகளுக்கு விற்று, கவர்ன்மெண்டார் பேருதவி செய்து அவர்களது என்றும் மாறாநன்றியைப் பெறுதல்வேண்டும்.

(முதல் பக்கத் தொடர்ச்சி.)

ஒன்றோடொன்று மோதி நெரியவும், தாம் வரும் வேகத்தினால் எங்கும் புகையெழவும் பேரிடிமுழக்கம் கேட்கவும் அகன்ற தேவலோகமும் பூவுலகமும் நடுங்கவும் போருக்குவரும் அசுரர்களது சேனைகள் முழுவதும் மடிந்துபோகுமாறு ஒப்பற்ற வேலாயுதத்தைக் கையிலெடுத்தருளிய இறைவனே ! பரம்பொருளை யடையும் மார்க்கத்தைப் போதிக்கவல்ல குருவே ! தேவரீர் திருவருளினால் மீண்டும் வாழ்வடைந்த தேவேந்திரன் வணங்கும் பெருமானே ! நினது பாதாரவிந்தங்களையே கதியெனக் கருதி வணங்கிவரும் நின் சிறு குழந்தையாகிய அடியேன் ஒருநாள், மானிடரை வதைக்கும் கொடியனாகிய யமனும் அவனது கிங்கரர்களும் மடியுமாறு நினது அருளையே ஆயுதமாகக்கொண்டு செய்யும் போரைக் காணுவதற்காக, வேடர் மகளாகிய வள்ளிநாயகியார் காதலுடன் புணர்வனவும், மலைபோல் வளர்ந்து பராகிரமம் பொருந்தியனவுமான பன்னிரு தோள்களும், ஆறு திருமுகத் தாமரைகளும், கருணை பொழியும் பன்னிரு கண் மலர்களும், காலையில் சூரியனை வாயிலிருந்து கக்கி உதிக்கச் செய்வதுபோற் கூவும் கோழிபொருந்திய கொடியும், மற்றும் யாவையும் அடியேன் கண்களின் முன்னே தோன்றவும், எண்டிசைகள் பொருந்திய விரிந்த பூமியையும் விசாலமாய்ப் பரவி நிற்கும் சப்தசமுத்திரங்களையும், மேருமலையையும், மற்றைக் குல பர்வதங்களையும் நொடிப்பொழுதில் சுற்றிவர வேண்டுமென்ற பணியைப் பெற்றால் அவ்வாறே சுற்றிவரத்தக்க வலிமை பொருந்தியதும், நடித்து நடக்கும் இயல்புடையதுமான ஒப்பற்ற பச்சை மயில்வாகனத்தின்மீதேறி, பழைய மெய்யடியார்களும் தேவர் கூட்டமும் இருபுறங்களிலும் முறையே மேன்மைவாய்ந்த தமிழினாலும் வேதங்களினாலும் தேவரீரைத் தோத்திரஞ் செய்துவரவும் திருவருணையில் ஒருமுறை வந்து தரிசனம் தந்தருளவேண்டும்.

சாணக்யன்

CHANAKYA

தர்மார்த்த காம மோக்ஷங்களென்ற நான்குவித புருஷார்த்தங்களுக்குள் தற்காலம் ஜீவர்களின் முக்கிய லக்ஷ்யமாயிருக்கிற இரண்டாவது புருஷார்த்தத்தைப் போதிப்பதற்குரிய நீதிசாஸ்திரங்களை இயற்றின பூர்வாசிரியர்களின் இடையில் சாணக்யர் என்பவர் பிரதானமானவர். இவருக்கே கௌடில்யர் என்றும் விஷ்ணுதுப்தர் என்றும் மாற்றுப் பெயர்கள் உண்டு. இவரா லியற்றப்பட்ட அர்த்த சாஸ்திரத்தை யனுசரித்தே காமந்தக நீதி, நீதிவாக்யாமிருதம், பஞ்சதந்திரம் முதலிய நீதி நூல்கள் பிரவர்த்தித்திருக்கின்றன. மேலும் பல நூற்றாண்டுகளாய் அறிஞர்கள் இவரை நீதி சாஸ்திர குருவாய் மதித்துவருவது சகஜமாகிவிட்டது. கௌடில்யர் தாம் விதித்த நீதிமுறைகளைத் தாமே அனுஷ்டித்துக் காண்பித்தார் என்பது அவருடைய சரித்திரத்தைக் கேட்போருக்கு நன்கு விளங்கும். இவர் புத்திவலிமை ஒன்றையே உதவியாய்க்கொண்டு தம்மை அவமதித்த நந்தர்களை வேருடன் களைந்து தம்மை ஆச்ரயித்த சந்திரகுப்தனை மகத ராஜ்யத்தில் ஸ்தாபனஞ் செய்தார். இந்த விருத்தாந்தம் விஷ்ணுபுராணம், பிருஹத்கதை, காமந்தகநீதி, முத்ராராக்ஷஸம் முதலிய கிரந்தங்களில வருணிக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பிரமாணங்களை யனுசரித்து அடியிற் கூறப்பட்டுள்ள இம்மஹாத்மாவின் சரித்திர ஸாரத்தைக் கேட்க நீங்கள் ருசியுள்ளவர்களா யிருப்பீர்களென்று நான் நம்புகிறேன்.

கிறிஸ்துவுக்கு சுமார் 400 வருடங்களுக்கு முன், பாடலீபுரத்தில் நந்த வம்சத்தைச் சேர்ந்த க்ஷத்ரிய மன்னர்கள் அரசாண்டுவந்தனர். அவர்களுக்குள் மகா பராக்கிரமசாலியாயும் கோடிக்கணக்கான ஜனங்களுக்கு அதிபதியாகவும் இருந்த ஸர்வார்த்தஸித்தி என்பவன் வெகுகாலம் வக்ரநாஸன் ராக்ஷஸன் முதலிய நீதிசூரர்களை மந்திரிகளாய்க்கொண்டு செங்கோல் செலுத்திவந்தான். ஸர்வார்த்தஸித்திக்கு ஓர் முனிவரின் அனுக்கிரகத்தால் பட்டமஹிஷியினிடத்தில் நவநந்தர்களென்ற ஒன்பது குமாரர்களும், முரை யென்னும் சூத்ரஸ்திரீயினிடத்தில் மௌர்யனென்று ஒரு புத்திரனும் ஜனித்தார்கள். புத்திரர்களுக்கு வயது வந்தவுடன், அவ்வரசன் நவநந்தர்களுக்குத் தன் இராஜ்யத்தைப் பாகம் செய்து கொடுத்து, மௌர்யனையும் சேனாதிபதியாய் நியமித்துவிட்டுத் தான் வைராக்கிய சம்பன்னனாயிருந்தான்.

இப்படியிருக்கையில், ஜனங்களுக்கு அபிமதனாயும் சந்திரகுப்தன் முதலிய பராக்ரமசாலிகளான பல புத்திரர்களுடைய சகாயமுடையவனாயும் புத்திமானாயுமிருந்த மௌர்யனிடத்தில் பயத்தினாலும் அஸூயையினாலும் குரூரத் தன்மையை யடைந்து, நந்தகுமாரர்கள், ஒரு சமயம் கபடமாய் அவனைக் குடும்பத்துடன் ஒரு பிலக்கிருகத்திற்குள் போகச்செய்து வெளியேறமுடியாமல் அடைத்துவிட்டனர். சில நாட்களுக்குப் பின் அந்தக் குகையைத் திறந்துபார்த்தபோது சந்திரகுப்தன் மட்டுமே குற்றுயிரும் குறைவாணுமாகக் காணப்பட்டான். நந்தர்கள் அவனிடம் தயவுபுரிந்து அவனைக் கொஞ்சகாலம் இரக்ஷித்துவந்து பிறகு தங்களால் ஏற்படுத்தப்பட்ட அன்ன சத்திரத்தில் அவனுக்கு ஓர் அதிகாரத்தையும் கொடுத்தார்கள். சந்திரகுப்தனும் புத்திமானாகையால் நந்தர்களிடத்தில் தனக்கிருந்த வைரத்தை வெளிக்காட்டாமல் நற்காலத்தை எதிர்பார்த்துக்கொண்டு அமைதியா யிருந்தான்.

ஒரு சமயம் நந்தர்கள் சிராத்தத்தின் பொருட்டுத் தகுந்த பிராமணனை நிமந்த்ரணம் செய்யும்படி சந்திரகுப்தனை ஆஞ்ஞாபித்தார்கள். அப்படியே சந்திரகுப்தன் பிராமணனைத் தேடிக்கொண்டு வரும்போது, ஓர் தேஜஸுள்ள பிராமணன், தன் காலில் கிழித்த தர்ப்பமொன்றை வேருடன் பறித்தெடுத்துத் துணுக்குகளாக்கித் தண்ணீரில் கலந்து குடித்ததைக்கண்டு, 'ஒரு புல்லின் அபராதத்தைப் பொறுக்காத இவருக்கு நந்தர்களிடத்தில் கோபம் பிறக்குமேயானால், அவர்களைப் பஸ்மமாகச் செய்துவிடுவார். இந்த மகா ஸாகஸியை நான் அண்டினால் எனக்கோர் வழி பிறக்கும்' என்று ஆலோசித்து அவரை யணுகி வந்தனஞ்செய்து விநயத்துடன் நந்தர்களின் நிமந்த்ரணத்தை ஏற்றுக்கொள்ளும்படி பிரார்த்தித்தார்.

இவர்தாம் எல்லாத் தர்மங்களையும் அறிந்தவரும் பால்யம் முதற்கொண்டே தண்ட நீதியிலும் ஜோதிஷத்திலும் வல்லவருமான சாணக்யரென்று படிப்பவர்களுக்கு இதுகாறும் விளங்கியிருக்கும்.

சாணக்யர் அதை அங்கீகரித்துக்கொண்டு போஜனசாலையில் பிரவேசித்து அக்கிராசனத்தில் அமர்ந்தார். திமிருள்ள நந்தர்கள் அவரை அக்கிராஸனத்திற்குத் தகுந்தவரல்லரென்று அவமதித்து பலாத்காரமாய் வெளியில் தள்ளிவிட்டார்கள்.

அப்போது கோபத்தினால் அக்கினிபோல் ஜ்வலித்துக்கொண்டு அம்மகாத்மா "செல்வச் செருக்கால் அறிவிழந்த மூடர்களே! உங்களை வேருடன் அழிக்காமல் என் சிகையை நான் கட்டுவதில்லை" என்று தீவிர சபதத்துடன் தலைமயிரை அவிழ்த்துவிட்டுக்கொண்டு விரைந்து வெளியே சென்றார். வழியில் சந்திரகுப்தன் இவரைச் சரணமடைந்து நந்தர்களால் தனக்கேற்பட்ட கஷ்டங்களைச் சொல்லிக் கொண்டான். அவனுடைய குணங்களுக்குக் கட்டுப்பட்டுச் சாணக்யர் நந்தராஜ்யத்தில் அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்துவைப்பதாய் வாக்குக்கொடுத்தார்.

அதன்பின் சாணக்யர் தன் பிரதிஞ்ஞையை நிறைவேற்றுவதற்குரிய கபடமான நீதிமுறைகளைப் பிரயோகிக்கலானார். முதலில் தம் தோழனான இந்துசர்மா, ஜீவஸித்தி என்ற பெயருடன் சமணர் வேஷம்பூண்டு நந்தமந்திரியான ராக்ஷஸனுக்கும் பரம ஆப்தனாகும்படி ஏற்பாடுசெய்தார். பிறகு சந்திரகுப்தனுடன் பர்வதேசன் என்னும் மிலேச்ச ராஜனையணுகி அவனுக்கு நந்தராஜ்யத்தில்பாதி கொடுப்பதாய் வாக்குதத்தம் பண்ணி அவனுடைய உதவியினால குஸுமபுரத்தை முற்றுகைபோட்டார். இதனிடையில ஜீவஸித்தி நந்தசேனாதிபதிகளிடம் தனித்தனியேசென்று மந்தர சக்தியினால அந்த யுத்தத்தில் அவனவனுக்கு மரணம் ஸம்பவிக்கும் என்று தான் அறிந்துகொண்டிருப்பதாக இரகசியமாய்ப் போதித்திருந்தான். ஆகையால அவர்கள் மரண பயத்தினால் யுத்தஸன்னாஹத்துடன் வெளிக்கிளம்பாமல் பதுங்கிவிட்டனர். நந்தர்கள் மட்டும் தைரியமாய் வெளியே வந்து போர்புரிந்தார்கள். ஆனால அவர்கள் சகாயக் குறைவினால் யுத்தகளத்தில் உயிரையிழக்கும்படி நேரிட்டது. குஸுமபுரமும் சந்திரகுப்தர் வசமாகிவிட்டது.

இதனால் ராக்ஷஸன் சோகமுற்று இனி புத்தி வலிமையைக்கொண்டே சந்திரகுப்தனை ஜயிக்கவேண்டுமென்று தீர்மானித்து அவனுடன் ஸமாதானம் கொண்டாடுபவன் போல் ஜீவஸித்தியினால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு விஷகன்னிகையை சந்திரகுப்தனுக்குப் போக்யவஸ்துவாய் அனுப்பினான். அதனுடைய இரகசியத்தையறிந்த கௌடில்யர், பாதி இராஜ்யத்திற்குக் காத்திருந்த பர்வதேசனை அவளிடத்தில் இரமிக்கும்படிசெய்து விண்ணுலகுக் கனுப்பினார். இந்த விருத்தாந்தத்தை பாகுராயணன் மூலமாய் பர்வதேசன் மகன் மலயகேதுவுக்கு அறிவித்து பயமுறுத்தி சொல்லிக்கொள்ளாமல் அவனை ஓடிப்போகும்படியும் செய்துவிட்டார். பர்வதேசன் சகோதரன் வைரோசகனை மட்டும் பின்பு ஒரு சமயம் பலிகொடுப்பதற்காக, பர்வதேசனை ராக்ஷஸன் விஷகன்யாப்பிரயோகம் செய்து கொன்றுவிட்டதாயும், அவனுக்கே அந்த அர்த்த ராஜ்யத்தைக் கொடுப்பதாயும் சொல்லி நிறுத்திவைத்துக்கொண்டார்.

தன்னுடைய பிரயோகங்கள் சத்துருவுக்கே அனுகூலமாய்ப் பலிப்பதுகண்ட ராக்ஷஸன் விசனமுற்று ஸர்வார்த்தஸித்தியைச் சுரங்கத்தின்வழியாய் காட்டிற்குப் போகும்படிசெய்து சகடதாஸன் என்ற தன் குமாஸ்தாவை சந்திரகுப்தனை வதைக்கச் சில சூழ்ச்சிகளைப் பிரயோகிப்பதற்காக நியமித்துவிட்டுத் தான் இனி குஸுமபுரத்திற்குள்ளிருப்பது தகுதியல்லவென்று தன் குடும்பத்தையும் சந்தனதாஸனென்ற மித்திரனிடத்தில் ஒப்புவித்துவிட்டு யாருமறியாமல் நகரத்தை விட்டகன்றான்.

ராக்ஷஸனுடைய தந்திரங்களில் ஒவ்வொன்றையும் சாணக்யர் தம் புத்திவலிமையினால் ஊகித்துச் சந்திரகுப்தனது உயிரைத் தப்புவித்தார். முதலில பட்டணப்பிரவேசம் நடக்கும்போது வைரோசகனை சந்திரகுப்தனைப்போல் அலங்கரித்து முன்னால் போகச்செய்து ராக்ஷஸனால் நிருமிக்கப்பட்டதாயும் அசைத்தமாத்திரத்தில் விழக்கூடியதாயுமுள்ள யந்திர மண்டபத்திற்கு அவனையே இரையாக்கினார். சந்திரகுப்தனுக்காக வைக்கப்பட்டிருந்த

நெருஞ்சிமுள் தைத்தாலும் குனிந்தலலவா பிடுங்கவேண்டும் ?

விஷ மருந்தைப் பரீக்ஷித்தறிந்துகொண்டு வைத்தியனையே அதை உட்கொள்ளும்படி செய்தார். அரசனின் படுக்கையறைச் சுவரில் எறும்புகள் ஆகாரத் துணுக்குகளை எடுத்துக்கொண்டு சாரிசாரியாய் ஊர்ந்துவருவதைக் கண்டு சுவருக்குள் மனிதர்கள் பதுங்கியிருக்கிறார்கள் என்று நிச்சயித்து அந்த அறையில் தீ வைத்துவிட்டார். இம்மாதிரியாய் கௌடில்யர் கண்கொட்டாமல் சந்திரகுப்தனது சரீரத்தைப் பாதுகாத்துவந்ததால் ராக்ஷஸனது பிரயத்தனங்கள் வீணாயின.

இருந்தாலும் நந்தர்களிடத்தில் நன்றிமிகுதியால் விடாமுயற்சியுடன் ராக்ஷஸன் மலயகேதுவினிடம் சென்று பர்வதேசனைக்கொன்றவன் சாணக்யனென்றும், நந்தராஜ்யம் முழுவதையும் அவனுக்குத்தான் பிடுங்கிக் கொடுப்பதாகவும் கூறி அவனை உத்ஸாகப்படுத்தி, சித்ரவர்மன்முதலான மற்றும் ஐந்து அரசர்களையும் சிநேகம் செய்துகொண்டு குஸுமபுரத்தை எதிர்க்கத்தகுந்த பெரிய சேனையைத் தயார் செய்தான்.

இதையறிந்தவுடன் நுட்பமான நீதியறிவுள்ள சாணக்யருக்கு மலயகேதுவையும் ராக்ஷஸனையும் பிரித்துவிடுவதே தனக்கனுகூலமான தற்போதைய நீதிமுறையென்று நன்கு விளங்கிற்று. தவிரவும், ராக்ஷஸனைச் சந்திரகுப்தனுக்கு மந்திரியாக ஸ்தாபிக்காதவரையில் சந்திரகுப்தனுக்கு இராஜ்யம் ஸ்திரமில்லை என்பது அவர் உறுதி. ஆகையினாலேதான் சர்வார்த்தஸித்தி உயிருடனிருந்தால் ராக்ஷஸன் அனுகூலப்படமாட்டானென்று காட்டில் தபஸ்வியாயிருந்த அவனையும் சாணக்யர் வதைசெய்துவிட்டார்.

பிறகு ராக்ஷஸனை கிரகிப்பதற்குரிய நீதிவலையை விரிக்கத் தொடங்கினார். அதைக் கூடியமட்டும் தெளிவாய் இங்கு எடுத்துரைக்க யத்தனிப்போம். முதலில் பர்வதேசனைக் கொல்ல ராக்ஷஸனுக்கு உதவியாயிருந்த குற்றத்துக்காக ஜீவஸித்தியைப் பட்டணத்தைவிட்டு பஹிஷ்காரம செய்வதாக விளம்பரப்படுத்தி முன்போல் ராக்ஷஸனுக்கு அந்தரங்கமாயிருக்கும்படி போதித்து அனுப்பினார். பாகுராயணன், பத்ரபடன் முதலிய ராஜ புருஷர்களை யழைத்துக்கொண்டு (சாணக்யருடைய இரகசிய போதனைப்படி) சந்திரகுப்தனிடம் த்வேஷம் பாராட்டுபவன்போல் மலயகேதுவை ஆசிரயித்தான். ராக்ஷஸனது குடும்பத்தைக் காட்டிக்கொடுக்காததற்காக சந்தனதாஸன் ஜெயிலி லடைக்கப்பட்டான். ராக்ஷஸ மித்திரனான சகடதாஸன் இராஜத்துரோகத்திற்காக கழுவிலேற்றப்படும் சமயத்தில் சாணக்யன் கட்டளைப்படி ஸித்தார்த்தன் அவனைத் தப்புவித்து ராக்ஷஸனிடம்கொண்டு போய்ச் சேர்த்தான். அப்போது அளவுகடந்த சந்தோஷத்துடன் ராக்ஷஸன் தனக்கு மலயகேதுவால் அனுப்பப்பட்ட ஆபரணங்களைக் கழற்றி ஸித்தார்த்தனுக்கு வெகுமதியாய்க் கொடுத்தான். அவைகளைப் பெற்றுக் கொண்டு அவனும் ராக்ஷஸனிடத்திலேயே ஆப்தசேவகனாய் இருந்துகொண்டு வந்தான். இதற்கிடையில் பர்வதேசன் தரித்திருந்த ஆபரணங்களை சந்திரகுப்தனிடமிருந்து தானமாகப் பெற்றுக்கொண்டு சாணக்யனால் போதிக்கப் பட்ட மூன்று அந்தணர்கள் ராக்ஷஸனிடம் அவைகளை விற்றார்கள். அவனும் அப்போது நிராபரணனாயிருந்ததால் அவைகளை யணிந்துகொண்டான்.

பிறகு சந்திரகுப்தனிடம் சங்கேதம் செய்துகொண்டு அவனால் ஆக்ஞாபிக்கப்பட்ட கௌமுதி மஹோத்ஸவத்தை சாணக்யர் தடைசெய்தார். இதன் மூலமாக அரசனுக்கும் மந்திரிக்கும் கலகம் உண்டாயிற்று. சந்திரகுப்தன், மலயகேது ராக்ஷஸன் இவ்விரண்டு சத்ருக்களும் பாகுராயணன் முதலிய இராஜத்துரோகிகளும் நகரத்தைவிட்டுப் போகும்போது உபேக்ஷையா யிருந்ததற்காக சாணக்யனைக் கண்டித்தான். தனக்கு இராஜ்யம் கிடைத்தது தெய்வானுகூலத்தினாலென்றும் சாணக்யனாலல்ல வென்றும் கர்வத்துடனுரைத்தான். ராக்ஷஸனுடைய சாமர்த்தியத்தையும் ஸ்வாமி பக்தியையும் புகழ்ந்துபேசினான். சாணக்யனுடைய நிபந்தனைகளால் ராஜ்யமே தனக்கு துக்ககரமா யிருப்பதாய் அலுத்துக்கொண்டான். இதைக் கேட்ட சாணக்யர் மகா கோபங்கொண்டு, "ராக்ஷஸனையே அழைத்துக்கொள். இன்று முதல் நான் உனக்கு மந்திரியல்ல" என்று கூறிவிட்டு விரைந்து வெளியே சென்றார். உடனே சந்திரகுப்தனும், சாணக்யனை நீக்கிவிட்டுத் தான் தனியே இராஜ்ய பரிபாலனம் செய்யப்

நெருப்பினும் பொல்லாது கரிப்பின் வாதை.

போவதாக ஜனங்களுக்குப் பறையறைந்தறிவித்தான். மேற்கண்ட சந்தர்ப்பங்களைக் கல்பித்த இந்த இராஜ்யதந்திரியின் அர்தரங்கம் என்னவென்று நீங்கள் அறிய விரும்பலாம். சாணக்யரின் உத்தேசம் ராக்ஷஸனை சந்திரகுப்தனுக்கு அனுகூலமாகச் செய்யவேண்டுமென்பதே. மலயகேதுவினிடமிருந்து ராக்ஷஸனைப் பிரிக்காவிட்டால் எப்படி அது ஸாத்தியமாகும்? ஆகையால் காரியார்த்தமாய் ஒருமனப்பட்டிருக்கும் இவ்விருவரையும் பிரிப்பதெப்படி என்று சாணக்யர் ஆலோசித்துக்கொண்டிருக்கும்போது, நிபுணகன் என்னும் இவருடைய சாரன் சந்தனதாசன் தன் வீட்டில், தான் தற்செயலாய்க் கண்டெடுத்த ராக்ஷஸனுடைய முத்திரைமோதிரத்தைக் கொண்டுவந்து கொடுத்தான். இந்த தெய்வானுகூலத்தைக் கைப்பற்றிக்கொண்டு அவர் காரியசித்திக்காகத் தாம் செய்யவேண்டிய விதிகளை உடனே தீர்மானஞ்செய்துவிட்டார். அப்போது சாணக்யர் ஓர் கடிதத்தைக் கல்பித்தார். அதை ஸித்தார்த்தன் மூலமாய் சகடதாஸனைக்கொண்டு எழுதச் செய்தார். ராக்ஷஸனது மோதிரத்தால் அதற்குமுத்திரை யிட்டார். பிறகு ஸித்தார்த்தனை ராக்ஷஸனிடம் கபடசேவை செய்ய அனுப்பும்போது அக் கடிதத்தையும் அம் மோதிரத்தையும் அவனிடம் ஒப்புவித்தார். மோதிரத்தை ஸித்தார்த்தன் ராக்ஷஸனிடம் கொடுத்துவிட்டான். கடிதத்தை அவன் உபயோகப்படுத்தின விதம் பின்னால் வெளிப்படும். இக்கடிதத்தை ராக்ஷஸன் சந்திரகுப்தனுக்கு எழுதியிருந்ததாக ருஜுவாகிறதற்கு வேண்டிய பல சந்தர்ப்பங்களையும் பல சாக்ஷிகளையும் கல்பித்து வைப்பதற்காகவே இதுகாறும்நாம் வருணித்து வந்த காரியங்களை சாணக்யர் செய்துவந்தார். இனி அவருடைய நீதிவிதை பலிக்கும் காலமாகிவிட்டது. அதைச் சற்று கவனிப்போம்.

சாணக்யனைச் சந்திரகுப்தன் எதிர்த்துக்கொண்ட விபரம் காதல் விழுந்தவுடன் ராக்ஷஸன் ஜயத்தில் நம்பிக்கையுள்ளவனாய் ஸகல சைன்னியங்களுடனும் குஸுமபுரத்தை நோக்கிப் பிரயாணமாயினான். நகரத்துக்கு அருகாமையில் சைன்யங்கள் வந்துகொண்டிருக்கும்போது சத்துருவின் சாரர்கள் தன் கூடாரத்தில் பிரவேசிப்பார்களென்று சந்தேகித்து ராக்ஷஸன், தன் முத்திரையுள்ள சீட்டைப் பெற்றுக்கொள்ளாமல் எவரும் வெளியில் போசவாவது உள்ளே பிரவேசிக்கவாவது கூடாதென்று விதித்தான். முத்திரைச் சீட்டுகள் கொடுக்க பாகுராயணன் நியமிக்கப்பட்டான்.

இப்படியிருக்கையில் ஜீவஸித்தி ஒருநாள் வெளியில்போக முத்திரை கேட்டான். "இந்த நெருக்கடியான சமயத்தில் உன் மித்திரன் ராக்ஷஸனை நீ ஏன் விட்டுவிட்டுப்போகிறாய்" யென்று பாகுராயணன் வினவ அவன் சொன்னதாவது:—"முன் விஷகன்யாப் பிரயோகத்தால் ராக்ஷஸன் பர்வதேசனைக் கொன்றான். அதற்காக நான் ஊரைவிட்டுத் துரத்தப்பட்டேன். இப்போதும் ஒரு கொடிய காரியத்தை இவன் ஆரம்பித்திருக்கிறான். இதன் பலனாக எனக்கு என்ன ஆபத்துவிளையுமோ தெரியவில்லை. ஆதலால் நான் சீக்கிரம் இவ்விடத்தை விட்டுச் செல்லவேண்டும்" என்றான். இதை மறைவாய்க் கேட்டுக் கொண்டிருந்த மலயகேதுவுக்குத் தன் தகப்பனைக் கொன்றவன் ராக்ஷஸனென்று வெளிப்படவே, அவனிடத்தில் துவேஷம் ஜனித்தது.

இது நிற்க, முத்திரையில்லாமல் திருட்டுத்தனமாய் வெளியே செல்ல யத்தனித்த ஸித்தார்த்தன் ரக்ஷகர்களால் கண்டுபிடிக்கப்பட்டு பாகுராயணன்முன் கொண்டுவரப்பட்டான். விசாரிக்குங்கால் அவன் சொன்னதாவது:—"நான்ராக்ஷஸனது ஸேவகன். அவசியமான காரியத்தில் அவரால் ஏவப்பட்டிருக்கிறேன்" என்றான். அவனைப் பரிசோதித்தபோது ஒரு கடிதமும் ஆபரணங்களடங்கிய ஒரு பெட்டியும் அகப்பட்டன. இரண்டிலும் ராக்ஷஸனுடைய முத்திரை யிருந்தது. அந்தக் கடிதத்தை மலயகேதுவின் உத்தரவின்மேல் பாகுராயணன் உடைத்து வாசித்தான். அதில்,

"க்ஷேமம். ஏதோ ஓரிடத்திலிருந்து எவனோ எவனுக்கோ தெரியப்படுத்துக் கொள்வது. என்னுடைய எதிராளியைப் பரிகரித்ததால் உங்கள் வாக்கை நீங்கள் உண்மைப்படுத்திவிட்டீர்கள். இப்போதுருக்கும் பக்ஷத்தை விட்டு, நம் பக்ஷம் சேருவதாய் வாக்குக் கொடுத்திருக்கும் மித்திரர்களுக்கும் அவரவர்களுக்கு இஷ்டமானதைக் கொடுத்துப் பிரீதியுண்டாக்க வேண்டுமென்று நான் அதிகமாய் உங்களுக்குச் சொல்லவேண்டுவதில்லை. நீங்கள் அனுப்பிய மூன்று ஆபரணங்களையும் பெற்றுக்கொண்டேன். நான் அனுப்புகிறதையும் நீங்கள் பெற்றுக்கொள்ளவேண்டும். மற்ற விஷயம் ஸித்தார்த்தனை நேரில் கேட்டுக் கொள்ளலாம்" என்று கண்டிருந்தது.

ஸித்தார்த்தன் கையிலிருந்த ஆபரணங்கள் மலயகேது ராக்ஷஸனுக்கு முன் அனுப்பியவைகளாயிருந்தன. அடித்துக் கேட்டபோது தான் ராக்ஷஸனால் சந்திரகுப்தனிடம் இரகசியமாய் அனுப்பப்பட்டதாய் ஒப்புக்கொண்டான்.

கடிதத்தில் குறிக்கப்பட்ட "மித்திரர்கள்" இப்போது மலயகேதுவின் பக்ஷமாயிருக்கிற சித்ரவர்மா முதலிய ஐந்து அரசர்களென்றும், ஸித்தார்த்தன் மூலமாய் வெளிப்பட்டது. அப்போது ராக்ஷஸனுக்குச் சாணக்யனிடத்தில்தான் வைரம் என்றும் அவனை நிராகரித்ததால் சந்திரகுப்தன் அவனுக்கு மித்திரனாகிவிட்டானென்றும் பாகுராயணன் ஊகித்தான்.

உடனே மலயகேது அடங்காக் கோபாவேசத்துடன் ராக்ஷஸனை வரவழைத்தான். அச்சமயம் ராக்ஷஸன் தான் பிராமணர்களிடமிருந்து வாங்கின ஆபரணங்களை அணிந்துகொண்டிருந்தான். மலயகேது அவைகளைக் கண்டவுடன் கடிதத்தில் எழுதியபடி சந்திரகுப்தன் ராக்ஷஸனுக்கு அனுப்பிய ஆபரணங்கள் இவைகள்தாம் என்று நிச்சயித்துவிட்டான். ராக்ஷஸன், கடிதம் சத்துருக்களின் பிரயோகமாயிருக்கலாமென்றும், தன்னால் எழுதப்படவில்லை என்றும் சொன்னான். ஆனால் அது தன்னுடைய குமாஸ்தா சகடதாஸனால் எழுதப்பட்டுத் தன் முத்திரை பொருந்தியதாயும் ருஜுக்கப்பட்டபோது அவனுக்குப் பேச வழியில்லை. கடிதத்தில் கண்டபடி பெற்றுக்கொள்ளப்பட்ட ஆபரணங்களும், அனுப்பப்பட்ட ஆபரணங்களும் ருஜுவாயின. ராக்ஷஸன் சாணக்ய நீதி வலையில் சிக்கிக்கொண்டு, திக்குப் புரியாமல் பிரமித்தான். அப்போது மலயகேது அவனைப் பார்த்து, "நீ என் தகப்பனைக் கொன்றதுபோல் என்னையும் ஆபத்துக்குள்ளாக்க நினைத்த துரோகி என்று வெளியாகிவிட்டது. இனி இங்கு நில்லாதே. உன்னையும் சாணக்யனையும் சந்திரகுப்தனையும் சேர்த்து நாசம் செய்கிறேன்" என்று கர்ஜித்தான். சித்ரவர்மன் முதலிய ஐந்து அரசர்களையும் உடனே கொலைசெய்யும்படி உத்தரவுசெய்தான். ராக்ஷஸன் தனக்கு விரோதமாக ருஜுவான சாக்ஷிகளெல்லாம் பொய்யென்று அறிந்திருந்தும் அந்தச் சமயத்தில் உண்மை ஒருவர் காதிலும் ஏறாதென்று நிச்சயித்துக்கொண்டு வருத்தத்துடன் வெளியே சென்றான்.

இப்படி மதிமயக்கத்தால் தனக்கு உதவிபுரிய வந்த அரசர்களை வதைத்து ராக்ஷஸனையும் விலக்கிவிட்டு, பாகுராயணன் பத்ரபடன் முதலிய போலி மித்திரர்களைமட்டும் நம்பியிருந்த மலயகேதுவின் கதி என்னவாயிற்றென்று உங்களுக்குச் சொல்லாமலே விளங்கும். சிறிது நேரத்துக்குள் அவன் கைதியாய்ச் சந்திரகுப்தன் முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டான். கடைசியாகச் சந்திரகுப்தனது தயவால் விடுதலையடைந்து தன் ராஜ்யத்திற்குச் சென்றான்.

இது நிற்க, நிராச்ரயனாய்ச் செய்யப்பட்ட ராக்ஷஸன் தன் தேஜஸை யிழந்தவனாய் மேல் செய்வதின்னதென்று தோன்றாமல், வியாகுலத்துடன் குஸுமபுரத்திற் கருகாமையிலுள்ள ஒரு வனத்தில் தங்கிச் சிந்தையிலாழ்ந்திருந்தான். அப்போது சாணக்யருடைய பிரேரபணையால் அங்குவந்த புருஷன் ஒருவன் தன்னைத் தூக்கிட்டுக்கொள்ள யத்தனித்தான். ராக்ஷஸன் அவனுடைய நோக்கத்தின் காரணத்தை யறிய விரும்பினான். அதற்கு அந்தப் புருஷன் ராக்ஷஸனுடைய குடும்பத்தை அரசனிடம் ஸமர்ப்பிக்க மறுத்ததால் சந்தனதாசன் கொலைக்களத்துக்குக் கொண்டுபோகப்படுவதாயும், அவனுடைய பிரிவை சகிக்காமல் தன் மித்திரன் ஒருவன் பிராணனை விட்டுவிட்டதாயும், அதனால் தனக்கும் இனி ஜீவிப்பதில் விருப்பமில்லையென்றும் தெரிவித்தான். அவனுடைய மித்திரவாஞ்சையைக் கண்டு ஆச்சரியமுற்று ராக்ஷஸன் தன் பொருட்டுப் பிராணனை விடத்துணிந்த மித்திரமணியை எப்படியாவது இரக்ஷிக்காவிட்டால் தான் கிருதக்னனாக வேண்டுமென்று நினைத்து, ஓட்ரமூச்சாய்க்கொலைக்களத்துக் கோடிவந்து, கொலையாளிகளை மறித்தான். இதற்காகவே இவ்வளவு பிரயாசை எடுத்துக்கொண்ட சாணக்யர் உடனே அவ்விடம்வந்து இராக்ஷஸனை வணங்கிவிட்டுச்

"சந்தனதாஸனை விடுவிக்கவேண்டுமானால், நீர் மந்திரிபதவியை ஏற்றுக்கொள்ளவேண்டும்" என்று கண்டிப்பாய் உரைத்துவிட்டார். ராக்ஷஸனும் ஒப்புக்கொள்ள வேண்டியதாயிற்று. இனி சந்திரகுப்தன், இராஜ்யம் ஸ்திரப்பட்டுவிட்டதென்று சந்தோஷித்துக்கொண்டு தம் பிரதிக்ஞைகளைக் கடந்த சாணக்யர் தபோவனஞ் சென்றார்.

என்ன ஆச்சரியம்! சாணக்யநீதியின் வலிமையைச் சற்று ஆலோசித்துப் பாருங்கள். பெரிய ஸேனாமுஸ்தீப்புடன் குஸுமபுரத்தை முற்றுகை போடவந்த சத்துருக்களை, படைச் சேதமும் பணச்சேதமுமில்லாமல் ஒரு சிறு கடிதத்தால் சின்னாபின்னமாகச் செய்துவிட்டார். சந்திரகுப்தனைத் தொலைக்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருந்த ராக்ஷஸனை, அவனுடைய மர்மங்களை நன்கறிந்துகொண்டு, மதயானையை யடக்குவதுபோல் அடக்கி, அந்தச் சந்திரகுப்தனுக்கே மந்திரி யாகும்படியும் செய்தார். இந்த ஆழங்காண முடியாச் சாணக்ய நீதி ஸாகரத்தின் ஆழத்தை அதில் முழுகி முழுகித் தத்தளித்த ராக்ஷஸன் ஒருவனேயல்லாமல் மற்றவர்கள் அறிந்துகொள்வதரிது.

நமது சிறு கதை

OUR SHORT STORY

செங்கோட கௌண்டன்

அல்லது

ஓராத கோபி

"மனமெனுந் தோணிபற்றி
 மதியெனுங் கோலை யூன்றிச்
சினமெனுஞ் சரக்கையேற்றிச்
 செறிகடலோடும் போது
மதனெனும் பாறைதாக்கி
 மறியும் போதறியவொண்ணா
துனையுனு முணர்வை நல்கா
 யொற்றியூருடைய கோவே!"

முதல் அத்தியாயம்

காதலர்கள்

ஆப்பிரிக்காக் கண்டத்தில் நமது இந்தியர் பலர் சென்று குடியேறியிருக்கும் பிரிட்டிஷ் கீழாப்பிரிக்கா வென்னும் நாட்டிலுள்ள விக்டோரியா நியான்ஸா வென்னும் ஏரியைச் சுற்றுமுள்ள காட்டின் எல்லையில், பல வருஷங்களுக்குமுன் வேடர்வாழ்க்கையில் விழைவுற்ற இந்தியர் பலர் தனியாகவும் பெண்டோடும் சிறு சிறு குடிசைகளில் வசித்துவந்தனர். அவர்கள் தாம் வேட்டையாடும் மிருகங்களின் தோல்களையும், அந்நாட்டு வேடரிடம் சரசவிலைக்குவாங்கும் தோல்களையும் மொம்பாஸா வென்னும் துறைமுகப் பட்டணத்துக்கு வரிக்கழுதைகளின் முதுகின்மீது பெரிய மூட்டைகளாகக் கட்டிச் சுமத்தி யனுப்பி, அவைகளை வாங்குவதற்கென்றே கப்பல்களோடு அத்துறைமுகத்துக்கு வந்து காத்திருக்கும் வியாபாரிகளிடம் உயர்ந்த விலைக்கு விற்றுப் பொருளீட்டி ஜீவித்துவந்தனர்.

பல வருஷங்களுக்குமுன் கோடைகாலத்தில், ஒருநாள் சாயங்காலம் சூரியன் தனது பொன்னிறமான கிரணங்களினால் தொட்ட வஸ்துக்களனைத்தையும் பொன்னாக்கிக் காண்போர் மனத்திற் களிப்பையூட்டி, காலையில் விட்டகன்ற தனது இல்லத்திற் புகவுன்னுங்கால், புதிதா யமைக்கப்பட்டதாய்த் தோன்றிய ஓர் சிறு குடிசையினருகே ஓங்கியுயர்ந்து வளர்ந்துள்ள மரங்களினூடே ஓர் யௌவன புருஷனும் இளம்பிராயமுள்ள ஓர் காரிகையும் உலவிக்கொண்டிருந்தனர்.

அப்புருஷன் ஆஜானுபாகுவாய் திடகாத்திரமுள்ளவனாய் வீரலக்ஷ்மி களித்துறையும் முகவிலாசத்துடன் விளங்கினான். அவனுக்கு வயது சுமார் முப்பதிருக்கலாம். அவனுடன் கை கோத்து, அன்பு பெருகும் கண்களுடன் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தவண்ணம் உலாவிக்கொண்டிருந்த பெண்மணி சிறந்த வனப்புவாய்ந்தவளா யிருந்தாள். பவள மன்ன உதடுகளும், முல்லையரும்பை வென்று நிலவு வீசும் பல் வரிசைகளும், மாசற்றதால் சந்திரனைப் பழிக்கும் முக மண்டலமும், மெல்லிய

மலர்களன்ன இரு சிறு காதுகளும், மன்மதனது கரும்புவில்லையொத்த இருபுருவங்களும், விரகத் தீயை யெழுப்பி அமுதம் பொழிந்து அதை அவிக்கும் வலிமையுள்ள பார்வையையுடைய இரு கண்மலர்களும், வழுவற்ற இலக்ஷணம்வாய்ந்த சிறந்த உருவமும், அவள் தேவகன்னிகையோவெனப் பார்ப்போர் மயக்குறச் செய்தன. அப்பெண்மணியும் அப்புருஷனைப் போலவே உயரமானவளாய், மிகுந்த பலமுள்ள தேகம் வாய்க்கப்பெற்றிருந்தாள். அவளுக்கு வயது சுமார் இருபத்தைந்திருக்கலாம். அவர்களிருவரும் உல்லாசமாய் ஏதோ வார்த்தையாடிக்கொண்டிருந்தனர்.

புருஷன்.— கண்மணீ! நமது நாட்டிலுள்ள காடுகளுக்கும் இக்காட்டுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கவனித்தாயா? நமது நாட்டுக் காடுகளில் இவ்வளவு உயரமான மரங்கள் சாதாரணமாய்க் காணப்படா. இங்கோ, எல்லா மரங்களும் ஆகாயத்தை யளாவி வளர்ந்திருக்கின்றன. அன்றியும், இதைப்போல உண்மையில் நிர்மானுஷ்யமான காடு நமது தேசத்திற் கிடையாது.

ஸ்திரீ.— நாதா! பிறவிமுதல் காடுகளில் உலவிக் களிப்புற்ற தங்களுக்குத்தான் அவ் வித்தியாசங்களெல்லாம் புலப்படும். என் கண்ணுக்கு எல்லாக் காடுகளும் ஒரே மாதிரியாகத்தான் தோன்றுகின்றன. இரண்டொருமுறை நமது நாட்டுக் காடுகளில் தங்களுடன்கூட நான் வந்தபொழுது துஷ்டமிருகங்கள் கண்ணிற் படவில்லை. இங்கோ நண்பகலிலும் புலிகளும் சிங்கங்களும் தாராளமாய் உலவுகின்றன. தாங்கள் என் பக்கத்திலேயே யிராவிடில், கிலியினால் என் பிராணன் போய்விடும்.

புருஷன்.— கண்ணே! தேவஸேனா! நீ பேசுவதைப் பார்த்தால் நமது நாட்டைவிட்டு என்னுடன் கூட வந்ததைக் குறித்து வருந்துகிறாய்போல் தோன்றுகிறதே! என்னைக் கணவனாகப் பெறாது நமது நாட்டிலிருப்பதைவிட இக்காட்டில் என் மனையாளாக இருப்பதே மேலான வாழ்க்கையென நீ கருதுயதாகச் சொன்னாயே! அதனாலன்றோ உன்னை நான் இத் துன்ப வாழ்க்கைக்கு ஆளாக்கத் துணிந்தேன்! இப்போதுதான் என்ன முழுகப்போய்விட்டது! நமது நாட்டுக்கே திரும்பிச் செல்வோமா?

தேவஸேனா.— இனி நமது நாட்டுக்குத் திரும்பிச் செல்ல என்றால் முடியாது. நம்மைக் கண்டு பழிப்பவர் முகத்தில் எங்ஙனம் விழிப்பது? ஓரிடத்தில் உயர்ந்த பதவியிலிருந்தபின், அவ் விடத்திலேயே வறுமையான ஸ்திதியில் இருப்பதெப்படி? அந்த யோசனையே இனிக்கிடையாது. அது போகட்டும், கொடிய மிருகங்களைப் பார்க்கையில் பயமா யிருப்பதாகச் சொன்னேன்? தானே அந்தப் பயம் நாலு நாளில் நீங்கிப்போகிறது. எல்லாவற்றிற்கும் பழக்கந்தானே பெரிது? அதுவுமன்றி, துப்பாக்கியை எடுத்துச் சுடுவதற்குத்தான் கற்றுக்கொடுத்துவிட்டீர்களே! இனிமேல் பயப்படமாட்டேன். எனதாருயிரே! தங்களுடன் சேர்ந்திருப்பதற்கு இதைவிடப் பன்மடங்கு அதிகமான துன்பத்தையும் அனுபவிக்கச் சித்தமா யிருக்கின்றேன்.

புருஷன்.— தேவஸேனா! என் செல்வமே! ஓர் கணநேரம் உன் தைரியத்தை நீ இழந்தாய்; என் மனம் என்னைக் கொடிய நரகத்தில் வீழ்த்திற்று. நிகரற்ற காதலும் அளவற்ற தைரியமும் உன்னிடம் பொருந்தியிருப்பதை நான் அறிந்திராவிடில், உன்னை இங்கு அழைத்துவரத் துணிந்திருக்க மாட்டேன். கிழவன் இறக்கும்வரை பொறுத்திருந்து, பிறகு உன்னை மணந்துகொண்டிருப்பேன். ஹா ஹா! தாதா! சூத்திரத்தினால் ஆட்டிவைக்கத்தக்க பொம்மை யென்றோ என்னை எண்ணினாய்? காசைக் கணக்குப்பண்ணிச் சேர்த்த உனக்கு காதலின் சிறப்பு எவ்வாறு தெரியும்? கண்மணீ! பார்த்தாயா அவன் நெஞ்சத்தின் வன்மையை? தன் மகள் பெற்ற குழந்தையே என்றெண்ணி அனுவளவேனும் இரங்கவில்லையே அவன் என்னிடம்!

தேவஸேனா.— எனதாருயிர்க் காதலே! அக்கொடியன் பேச்சு இச்சுகமான வேளையில் எதற்கு? அவனைப்போலவே கௌண்ட ஜாதியிற் பிறந்தும், வேறு வகுப்பைச் சேர்ந்தவளாகையால், தாங்கள் மணக்கக்கூடாத இழிகுலத்தவளாக எண்ணினானே என்னை! பணக்கொழுப்பினாலன்றோ அவ்வாறு எண்ணினான்? அன்பைவிடப் பணமா பெரிது? போகும்போது அப்பணத்தை அவன் தலையிற்கட்டிக் கொண்டு போகட்டும்!

புருஷன்.— கண்மணி! நீ சொல்வதுபோல் நமது வயிற்றெரிச்சலைக் கிளப்பும் அக்கொடியன் பேச்சு இவ்வினிய அந்திப்பொழுதில் வேண்டாம். நாம் இனிக் காலந்தள்ள வேண்டிய வழியைக்குறித்து நான் தீர்மானித்திருப்பதைச் சொல்லுகிறேன், கேள்! விடிய நாலு நாழிகைக்கு எழுந்துசென்று, பட்சிகளையும், சிறு மிருகங்களையும் பொறிகள் வைத்துப் பிடித்தும் சிறுரவைத் துப்பாக்கியினாற்சுட்டும் ஆகாரத்துக்கு வேண்டியவளவு கொண்டுவந்து உன்னிடம் தந்துவிட்டு, திரும்பவும் காட்டுக்குட்சென்று உயர்ந்த விலைபெறுமான தோலுள்ள மிருகங்களைச் சுட்டுக் கொண்டுவருகிறேன். பிறகு நாள்முழுவதும் நாம் பிரியாமலிருக்கலாம். நான் வெளியே போயிருக்குந்தருணத்தில், நமது நாய் இருளன் உனக்குத் துணையாக விருக்கட்டும்.

தேவஸேனை.— இருளனா எனக்குத் துணை? காட்டுப்புலியைவிட இருளன்தான் எனக்கு அதிக பயங்கரமாகவிருக்கிறது. அதை நீங்கள் அழைத்துக்கொண்டு போய்விடுங்கள். கதவைத் தாளிட்டுக்கொண்டு உள்ளேயே இருக்கிறேன். அவசியமானால் துப்பாக்கியை உபயோகிக்கிறேன். இருளன் எனக்குத் துணையாயிருக்கவேண்டாம். எப்போது என்னைக் கண்டாலும் கர்ச்சிப்பதுபோல் உறுமுகிறது.

புருஷன் இதைக்கேட்டுப் புன்முறுவல் கொண்டு, "கண்ணே! இருளன் உன்மீது பொறாமைகொண் டிருக்கிறது. உன்னைக் காணுமுன் இருளனே எனது உயிர்நிலையாயிருந்தது. உன்னை நான் கண்டு பேரின்பமடைந்தபின், அது அந்நிலைமையை யிழந்தது. அதனாற்றான் அது உன்னைக் காணும்போது உறுமுகிறது. உனக்கிஷ்டமில்லாமற்போனால், நான் அதை யழைத்துக்கொண்டுபோகிறேன். அதற்கிணையான துணை வேறெங்கும் கிடைப்பதரிது" என்றான்.

பிறகு இருவரும் சிறிதுநேரம் அவ்வனத்தின் வனப்பைக் கவனித்துக்கொண்டே மௌனமாய் நடந்தனர். அப்பால் சமீபத்தில் ஓர் சிங்கம் உறுமுவதைக் கேட்டு, தன் கையில் ஆயுதமொன்று மில்லாததையுன்னி, அப்புருஷன் அப்பெண்மணியை அழைத்துக் கொண்டு வெகு விரைவாய்த் தனது குடிசையை நோக்கிச் சென்றான்.

இரண்டாவது அத்தியாயம்

விதிசெய்த வஞ்சகம்

முந்திய அத்தியாயத்திற் கூறிய சம்பவம் நடந்து சற்றேறக்குறைய மூன்று வருஷங்களாயின. தேவஸேனையும் செங்கோட கௌண்டரும் அன்றிற்பறவைகளைப் போல் மனமொத்துச் சுகித்து வாழ்ந்துவந்தனர். மெய்க்காதலையே பெரிதாக மதித்து பல சுகங்களையும் துறந்து, நாகரிகமற்ற ஜனங்கள் வசிக்கும் வேறொரு தேசத்துக்குச் சென்று, ஜனசமூகத்தில் வாழ மனமொவ்வாது, கொடிய கானகத்தையே தமக்குகந்த உறைவிடமாகக்கொண்ட அவ்விரு காதலர்களும் தமது உலகத்தை முற்றிலும் மறந்து அவ்வுலகத்தால் இறந்தவராக மதித்து மறக்கப்பட்டு, ஜனசமூகத்தில் அகற்றவொணாது நேரும் இடைஞ்சல்களற்று மனவமைதியுடன் வாழ்ந்துவந்தனர்.

செங்கோட கௌண்டர் தினந்தோறும் கானகத்துக்குட் சென்று. உணவுதேடி யடைந்தபின், பல மிருகங்களை வேட்டையாடிக் கொன்று, அவைகளின் தோல்களைக் குடிசைக்குக் கொண்டுவந்து, சொற்பமாகப் பதனிட்டு வைத்திருந்து, ஒருமாதத்துக் கொருமுறை தம்மைப்போன்ற மற்ற வேடர்கள் தங்கள் சரக்குகளை யனுப்புங்கால் தமது சரக்குகளையும் மொம்பாஸா என்னும் துறைமுகப் பட்டணத்துக்கு அனுப்புவார். சரக்குகளைத் திரட்டிக்கொண்டு போகும் வியாபாரி அவைகளை அவ்வாறு கொண்டுபோய்ச் சில நாட்களுக் கெல்லாம் அவைகளின் விலைக்குச் சமானமான பொருமானமுள்ளனவாய் வேடர்கள் தங்களுக்கு வேண்டுமென்று சொல்லியுள்ள பொருள்களை அப்பட்டணத்திலிருந்தே வாங்கிக் கொண்டு வந்து கொடுப்பான்.

அவ்வாறு அவன் செய்ததனால், வேடர்கள் தங்க ளிருப்பிடத்தைவிட்டுப் பட்டணத்துக்குப் போகவேண்டிய அவசியமே யில்லாமற் போயிற்று. அதுகாரணத்தினால் அவர்கள் தங்கள் நாடாகிய இந்தியாவிலிருந்து வரும் வியாபாரக் கப்பல்களில் வருபவர்கள் மூலம் தங்கள் நாட்டுச் சமாசாரங்களை யறிந்துகொள்ள இடமில்லாமற் போயிற்று. அக்கப்பல்களில அவ்வேடர்களுக்கு எவரானும் கடிதமனுப்பினால், அக்கடிதத்தைக் கப்பற்காரர்கள் அவ் வியாபாரியிடத்திற் கொடுத்துவிடுவார்கள். வேடர்கள் அக்காட்டைவிட்டு நீங்குவது தனக்கு நஷ்டத்தை விளைவிக்கத்தக்க தாகையினாலும், தங்கள் உறவினர்களிடமிருந்து வரும் கடிதங்களைப் படித்தால் வேடர்கள் தங்கள் கஷ்ட வாழ்க்கையைவிட்டு தங்கள் நாட்டுக்குத் திரும்பிச் செல்லக் கூடுமாகையினாலும், அவ்வியாபாரி அக்கடிதங்களை அவைசேரவேண்டியவர்களிடம் கொடுக்காமல், கிழித்தெறிந்து விடுவான். ஆதலால் அவர்கள் தங்கள் உலகத்துக்கு இறந்தவர்களானார்கள்.

ஒருநாள் செங்கோட கௌண்டர் தமக்கு ஒரு நல்ல துப்பாக்கி தேவையாயிருந்ததால், தாமே மொம்பாஸா என்னும் பட்டணத்துக்குச்சென்று நல்லதாகப் பொறுக்கி வாங்கி வரவேண்டுமென்று நிச்சயித்து, தாம் அங்கு போய்த் திரும்பிவர ஒருவாரமாகு மாகையால், தேவஸேனைக்கு ஒரு வாரத்துக்கு வேண்டிய உணவைத் தேடிக்கொண்டுவந்து கொடுத்து, குடிசையின் கதவை மூடித் தாளிட்டுக்கொண்டு பத்திரமாயிருக்கும்படி அவளிடம் சொல்லிவிட்டு, தமது நாயையும் அழைத்துக்கொண்டு காட்டைவிட்டகன்று விக்டோரியா நியான்ஸா என்னும் ஏரியின் வடகரையிலுள்ள போர்ட் பிளாரன்ஸ் என்னும் பட்டணத்தை நோக்கி நடந்தார். ஏனெனில், மொம்பாஸாவிலிருந்து யுகாண்டா நாட்டுக்குப் போடப்பட்டிருந்த இருப்புப்பாதையில் அக்காட்டிலுள்ளவர்களுக்கு மிகவும் சமீபமான ரெயில்வே ஸ்டேஷன் அப்பட்டணந்தான்.

செங்கோட கௌண்டர் மொம்பாஸா என்னும் துறைமுகப்பட்டணத்தை யடைந்ததும், துறைமுகத்திலிருந்து தமது நாட்டுக் கப்பலொன்று இரண்டுமணி சாவகாசத்துக் கெல்லாம் புறப்படுமென்று கேள்விப்பட்டு, தமது நாட்டவர் முகத்தைப் பன்னாளாகக் காணாதினால் கப்பலில் வந்துள்ளவர்களைக் கண்ணுற்றுக் கண்டு களிக்க வேண்டுமென்ற அவாக்கொண்டு, துறைமுகத்துக்குச் சென்று, ஒரு படகு அமர்த்திக்கொண்டு, அதிலேறிச் சென்று, கப்பலின் மீதேறினார். அவர் கப்பலின் மேல்தட்டில் ஏறின சந்தர்ப்பத்தில் அவருக்குத் தெரிந்த சேலத்தான் ஒருவன், அக்கப்பலில் மாலுமியாக அமர்ந்திருந்தவன், தற்செயலாய் அவ்வழியே போய்க்கொண்டிருந்தான். அவன் செங்கோட கௌண்டரைக் கண்ணுற்றதும், மிகுந்த சந்தோஷத்துடன் "செங்கோட கௌண்டர் தாமோ இங்கே நிற்பது? அல்லது சொற்பனமோ? கௌண்டரே! நீங்கள் இறந்துபோய்விட்டதாகப் பேசிக்கொண்டார்களே!" என்று சொன்னான்.

செங்கோட கௌண்டரும் தமது ஊரானொருவனைக் காணும்படி நேர்ந்ததைக் குறித்துக் களிப்புற்று, "சிவசாமி படையாச்சியா? என்ன அப்பா! சௌக்கியமாய் இருக்கிறாயா? உங்கள் அய்யா சௌக்கியமாய் இருக்கிறாரா? ஊரில் எல்லாரும் சௌக்கியந்தானே அப்பா? எங்கள் தாதா சுகமாயிருக்கிறாரா?" என்று வாயோயாமல் தொடர்ச்சியாய்க் கேட்டார். சிவசாமி படையாச்சி கொல்லென நகைத்து, "என்ன கௌண்டரே! எல்லாக் கேள்விகளையும் ஓரே மூச்சிற் கேட்டுவிட்டீர்களே! பேஷ்! முதலில் முக்கியமான விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன், கேளுங்கள். தங்கள் பாட்டனார் சிவலோகத்துக்கு ஒரு வருஷத்துக்கு முன்னரே சென்று அங்கே சௌக்கியமா யிருக்கிறார். யாரோ அனந்தரவார்சுக்காரனும் - திருப்பத்தூர்க் காரனும் - அவன் வந்து தாங்கள் இறந்துபோய்விட்டதாக இந்நாட்டிலிருந்து தெரிந்ததாகச்சொல்லிவிட்டு சொத்தைக் கைப்பற்றிக்கொண்டு மிட்டாதாராக இருக்கிறான். தாங்கள் என்னசெய்வதாக உத்தேசம்? கப்பல் புறப்படபோகிறது. தாங்கள் இக்கப்பலிலேயே வந்து அவ்வஞ்சகசிகாமணியான அற்பனை ஓட்டிவிட்டு தாங்கள் மிட்டாதாராக வந்தால், சுற்றுவட்டாரத்திலுள்ளவருக்கெல்லாம் திருப்தியா யிருக்கும். கப்பற்றலைவனிடம் சொல்லி தாங்கள் இக்கப்பலில் வருவதற்கு அவர் அனுமதி வாங்கி வரட்டுமா? சீக்கிரம் சொல்லுங்கள்!" என்று அன்புடன் கேட்டான்.

செங்கோட கௌண்டர் ஒன்றுமே தோன்றாது மயங்கிநின்றார். தமது மாதாமகர் இறந்தாரென்றதைக் கேட்டதும், அவர் மனத்தில் அதுகாறும் கோபத்தினால் இறுத்தி அமிழ்த்தப்பட்டிருந்த இயற்கையன்பு மீண்டும் தலையெடுத்து, தமது தாயின் அருமைத் தந்தையை வயதுசென்ற காலத்தில் இரக்ஷிக்காமல் தனியேவிட்டுச் சென்றதற்காக ஆருத்துயரமுற்று

மகுடி தப்புவார்க்கு அறிவிப்பது வீண்.

கோரா கோன்பு சீர் ஆகாது.

வருந்தினார். சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் தமக்குக் கிடைக்கவேண்டிய சொத்தை மற்றொருவன், எட்டிய அனந்தரவார்சு பாத்தியம் பாராட்டிக்கொண்டும் தாம் இறந்ததாகச் சங்கதி கிடைத்ததாக வெளியிட்டுக்கொண்டும் கைப்பற்றிக் கொண்டதாகச் செவியுற்றதும் அவருக்குண்டான கோபம் கரைகடந்து போயிற்று. தமது அன்பையடைவதற்காக உலகத்தில் சுகவாழ்க்கையைத் துறந்து தம்முடன் காட்டுக்குவந்து வருந்தும் தமது நாயகியின் பாதங்களில் ஏராளமான பொருளைத் திடீரெனச்சொரிந்து, அத்தருணத்தில் அவள் முகத்தில் விளங்கும் ஆனந்தத்தைக் கண்ணுறவேண்டுமென மிகுந்த ஆவல்கொண்டார். தமது நாயகியைச் சிலகாலம் தனியே விட்டிருக்கவேண்டுமென்ற எண்ணமொன்றே அவர் மனத்தைக் கலக்கிற்று.

அவ்வாறு பல வெண்ணங்களினால் தியங்கி நின்ற செங்கோட கௌண்டரை அங்கேயே நிறுத்திவைத்துவிட்டு சிவசாமி படையாச்சி கப்பற்றலைவனிடம் விரைவிற்சென்று, செங்கோட கௌண்டரது விருத்தாந்தத்தை இரண்டு வார்த்தைகளினால் அவருக்குச் சுருக்கமாய்த் தெரியப்படுத்தி, கௌண்டர் அக்கப்பலிலேயே இந்தியாவுக்குச் செல்லுவதற்கு அனுமதிபெற்றுக்கொண்டு, திரும்பவும் செங்கோட கௌண்டர் நிற்குமிடத்துக்கு ஓடினான். அதற்குள் ஓர்மணி கலகலவெனக் கம்பீரமாய் ஒலித்தது. கப்பல் துறைமுகத்தைவிட்டுப் புறப்பட்டுவிட்டது. மயங்கிநின்ற செங்கோட கௌண்டர் அவ்விஷயத்தை யறிந்துகொண்டதும், தமது நாயகியைத் தனியே விட்டுச்செல்லும் துயரத்தால் முன்னிலும் அதிக மயக்கமுற்றுத் தள்ளாடிக் கீழேவீழ்ந்தார்.

சிவசாமி படையாச்சி செங்கோட கௌண்டர் நின்றுகொண்டிருந்த விடத்தை நோக்கி ஓடிக்கொண்டிருக்கையில், கப்பலதிகாரிகளில் ஒருவர் அவனை யழைத்து ஏதோ அவசரவேலையிடவே, அவன் அதைச் செய்வதற்கு மற்றோரிடத்துக்கு ஓடிப்போனான். கப்பல் புறப்பட்ட குழப்பத்தில் மூர்ச்சையுற்றுக் கீழேவிழுந்த செங்கோட கௌண்டரை யாரும் கவனிக்கவில்லை. அரைநாழிகைக்கெல்லாம் அவர் மூர்ச்சை தெளிந்து சுற்றிப்பார்த்தார். முதன் முதலில் ஒன்றும் விளங்காது பிரமித்தா. கணநேரத்துக்கெல்லாம், தாம் கப்பலிலேறியதும், கப்பல் திடீரெனப் புறப்பட்டுவிட்டதும், தமது ஆருயிர்க்காதலியைத் தனியேவிட்டுச் செல்வதைநினைத்து ஆறாத்துயரமுற்றுத் தாம் மயங்கி வீழ்ந்ததும், தமது ஆவி விக்டோரியா நியான்ஸாவெனும் ஏரியைச் சுற்றியிருக்கும் காட்டிலுள்ள ஓர் குடிசையிலிருக்க, தமது உடலத்தைத் தமது இஷ்டமின்றிக் கப்பல் அதிவேகமாய்த் தூக்கிச்சென்று அக்குடிசைக்கும் தமக்கு முள்ள தூரத்தை அதிகரித்துக்கொண்டேயிருப்பதும் அவருடைய புத்திக்கு நன்கு புலப்பட்டன.

உடனே கப்பற்றலைவனது அறையை நோக்கி அதிவேகமாய் ஓடி, அவ்வறையை யடைந்ததும், அங்கு ஓர் சாய்வு நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்திருந்த கப்பற்றலைவனை நோக்கி, "ஐயா! தயவுசெய்து கப்பலை நிறுத்தும்படி உத்தரவு கொடுங்கள். ஆப்பிரிக்காவை விட்டுவருவதாக எனக்கு உத்தேசமில்லை. நமது நாட்டவரைக் கண்டுபேசுவதற்காகக் கப்பலிலேறினேன். கப்பல் புறப்பட்டுவிட்டது. என் மனைவியைத் தனியே காட்டில் விட்டுச் சென்றால் அவள் கதி யென்ன வாகுமென்று நினைத்தேன். துயரந்தாளாது மூர்ச்சித்தேன். இப்போதுதான் மூர்ச்சை தெளிந்தேன். நிர்மானுஷ்யமான காட்டில் கொடிய மிருகங்கள் கூட்டங் கூட்டமாய்ச் சஞ்சரிக்கும் காட்டில் அற்பமான ஓர் குடிசையில் என் மனைவி இருக்கிறாள். ஐபா! தங்களுக்குத் தருமமுண்டு; தயவுசெய்து கப்பலை நிறுத்தி ஓர் படகில் என்னைத் திரும்பவும் கரைக்கு அனுப்பி யுதவவேண்டும்" என்று தழுதழுத்த குரலுடன் கேட்டுக்கொண்டான்.

கப்பற்றலைவன் மடமடவென்று சிரித்து, "என்ன ஓய்! கப்பல் அலையில் ஆடுவதனால் இதற்குள் உமக்குப் பித்தம் தலைக்கேறிவிட்டதோ? கப்பல் புறப்படும்போது எனது ஆட்களில் ஒருவன் ஓடிவந்து, நீர் கப்பலில் வருவதற்கு அனுமதிதரவேண்டுமென்றானே! கணத்துக்குக் கணம் உமது புத்தி மாறிக்கொண்டிருந்தால் அதற்கேற்றபடி யெல்லாம் நான் ஆடுவேனென்று எண்ணினீரோ? கப்பல் கரையை விட்டு மூன்றுமைல் வந்துவிட்டது; இனிக் கப்பலை நிறுத்திவைத்து, உம்

மைப் படகிலேற்றி அனுப்பி, அப்படகு திரும்பும் வரையில் நான் கப்பலைக் காக்க வைக்கிறதோ? வெகு அழகாயிருக்கிறது நீர் சொல்வது! முதலைகளும் சுறாமீன்களும் கூட்டங் கூட்டமாய் உலவும் இச்சமுத்திரத்தில் எந்த மாலுமி படகுவிடத் துணிவான்? அதெல்லாம் நடக்காத காரியம்! நாம் போகும்போது எதிரே யாதாயினு மொரு கப்பல் வந்தால், அதில் உம்மை யேற்றித் திரும்பவும் ஆப்பிரிக்காவுக்கு அனுப்புகிறேன்—பிட்டாவைப் பிறர் கையில் கொடுத்துவிட்டுக் கஷ்ட வாழ்க்கை வாழ உமக்கு ஆசையிருந்தால்" என்றான்.

செங்கோட கௌண்டர் கப்பற்றலைவன் கூறிய மொழிகளை மனத்திலிருத்திச் சிந்தித்தார். அவைகளனைத்தும் உண்மையென அறிந்துகொண்டார். தமது வேண்டுகோளைப் பூர்த்திசெய்வது அவனுக்குச் சாத்தியமன்றென வுணர்ந்தார். எதிரே கப்பல் வந்தாலல்லது விதியின் வலையினின்றும் தப்புவ தரிதெனத் தேர்ந்தார். வேறு வார்த்தை பேசாது கப்பற்றலைவனிடம் விடைபெற்றுக்கொண்டு மனமொடிந்து அவ்வறையை விட்டகன்றார்.

கெட்டகாலத்தின் செயலாக, ஆப்பிரிக்காவுக்குச் செல்லும் ஒரு கப்பலாயினும் எதிர்ப்படவில்லை. ஆகையினால் செங்கோடகௌண்டர் கொச்சி துறைமுகத்தை யடைந்தார். அங்கிருந்து ஆப்பிரிக்காவுக்குக் கப்பல் ஒன்றும் சமீபத்தில் புறப்படாதென்று விசாரித்துத் தெரிந்துகொண்டார். ஆகையினால் காத்திருக்கும் வேளையில் சொத்தையாவது வசமாக்கிக் கொள்ளலாமென்று தமது ஊருக்குச்சென்று தமது வரவைப் பந்துக்க ளெல்லோருக்கும் தெரிவித்தார். யாவரும் வந்து அவரை க்ஷேமம் விசாரித்து, பிறகு கோர்ட்டுக்குப் போனாலல்லது அனந்தர வார்சுக்காரன் சொத்தை விடமாட்டானென்று தெரிவித்தார்கள். தமது சொத்தைப் பிறர் கட்டிக்கொண்டு தரமாட்டேன் என்றால் யார்தாம் சினங்கொள்ளாதிருப்பர்? தமது மனமுழுவதையும் தமது சொத்தை மீட்பதிலேயே செலுத்தினார். சொத்தை மீட்டுக் கொண்டபின் தனது நாயகியை அழைத்துவந்து அவளை மிகுந்த சுகத்தி லிருத்துவேனென்று சொல்லி அவளைத் தனியே விட்டிருப்பதனால் வருந்தும் தம் மனத்தைத் தேற்றிக்கொண்டார். நாட்களும் பறந்து சிலமாதங்களும் கழிந்தன. ஆகா! என்னே இவ்வுலகம்! பொன்னாசைக்கு மெய்யன்பைப் பலிகொடுக்கிறதே!

மூன்றாவது அத்தியாயம்

ஆராயாத கோபம்

முந்திய அத்தியாயத்திற் கூறிய சம்பவம் நடந்து சுமார் எட்டு மாதகாலம் கழிந்தபின், ஒரு நாள் சாயங்காலம் கண்ணுக்கிருட்டுந் தருவாயில் கீழ் ஆப்பிரிக்காவில் விக்டோரியா நியானஸா வென்னும் ஏரியைச் சுற்றியுள்ள காட்டுக்குச் சுமார் இரண்டுமைல் தூரத்தில் குதிரைமீது சவாரி செய்துகொண்டிருந்த ஒரு கம்பீரபுருஷன் குதிரையை விரட்டிக்கொண்டு அதிவேகமாய்ச்சென்றான். அதுவரை அவ்வழியே சென்றறியாததுபோல குதிரை வெருண்டு வெருண்டு சென்றது. குதிரைக்குப் பத்தடி முன்னால், ஓர் பெரிய வேட்டை நாய், தரையை மோப்பம் பிடித்த வண்ணம் தலை நிமிராது ஓடிக்கொண்டிருந்தது. அப்புருஷன் அடிக்கடி அவன் மனம் பிளவு பட்டதுபோல பெருமூச்செறிந்துகொண்டும், "ஆ! என் கண்ணே! உன் கதி யென்னவாயிற்று?" என்று வாய்க்குள் புலம்பிக்கொண்டு மிருந்தான். காட்டின் எல்லையை அவன் நெருங்கும்போது நன்றாய் இருட்டிவிட்டது. தூரத்தில் ஓர் சிறு வெளிச்சம் அந்நிர்மானுஷ்யமான காட்டிலும் மனிதர் வசித்து வந்தார்களென உணர்த்திற்று. நாய் ஒரு முறை சந்தோஷமாய்க் குரைத்தது. குதிரை சளீரென்று இரண்டு சவுக்கடி பெற்றுக்கொண்டு வாயுவேகமாய்ப் பறந்தது. கணநேரத்தில் விளக் கெரிந்துகொண்டிருந்த குடிசையை யடைந்தது. "கண்ணே தேவஸேனா!" என்று ஓர் குரல் ஒரு முறை உரக்கக் கூவிற்று. அக்குடிசையின் கதவுகள் குண்டினாற் பிளவுபட்டது போல் திடீரென்று திறந்தன. ஒரு ஸ்திரீ "நாதா!" என்று கூவிக்கொண்டு வெளியே பாய்ந்தோடி வந்தாள். குதிரை மீதிருந்தவன் குதித்து அவளை நோக்கிப் பாய்ந்தான். நொடிப் பொழுதில் இருவரும் ஒருவரையொருவர் இறுகவணைத்துக் கொண்டனர். சற்று நேரம் தேம்பித் தேம்பி யழும் சத்தத்தைத் தவிர, வேறொரு சத்தமும் கேட்கவில்லை.

பிறகு அப்புருஷன், “கண்ணே! விதிவசத்தினால் உனக்கு நானிழைத்த தீங்கை என்றேனும் மறத்தல் கூடுமோ? ஆ! ஏழைப் பேதாய்! உன்னைக் கொடிய துன்பத்துக்கு ஆளாக்கிவிட்டேன். எனதாருயிரே! நீ அனுபவித்த துயரத்துக்கு ஈடு செய்யவல்ல சுகம் உலகிலில்லையே யெனினும், விதியின் வலியினால் நான் உன்னை விட்டுப் பிரிந்திருக்க வேண்டி வந்த காலத்தில் அளவற்ற பொருள் என் கைக்குக் கிட்டிற்று. தாதா இறந்து போய்விட்டார். அவருடைய மிட்டாவும் நமக்குச் சித்தித்துவிட்டது. இனி உன் ஆயுள் முழுவதும் துன்பம் உன்னை அணுகாமல் பார்த்துக்கொள்ளுகிறேன். நீ என்னை மன்னிப்பாயோ? என்று அன்புடன் மொழிந்தான்.

அதற்கு அந்த ஸ்திரீ, “நாதா! விதிவசத்தினாலன்றித் தாங்கள் என்னைப் பிரிந்திருக்க மாட்டீர்களென்றபூரணநம்பிக்கையினால்தான் இதுவரை உயிர்பிழைத்திருந்தேன். தங்கள் அன்பே அடியேன் பெரிதாக மதிக்கும் பொருட் குவியலாகையால், மிட்டா கிடைத்ததனால் எனக்குப் பெருத்த சந்தோஷமுண்டாகவில்லை. ஆயினும் தங்களுக்குச் சந்தோஷத்தைத் தருவனவெல்லாம் எனக்குப் பேரானந்தத்தையே விளைவிக்கும். அடியாள் தங்களை மன்னிப்பது சாத்தியமன்று; ஏனெனில், தாங்கள் பிழை புரிந்ததாகக் கனவிலும் நான் நினைக்கமாட்டேன். வாருங்கள், உள்ளே போகலாம்” என்றுரைத்து, தன்னாயகனது கரத்தைப்பிடித்து அன்புடன் உள்ளே அழைத்துச் சென்றாள்.

உள்ளே சென்றதும், தேவஸேனா தனது நாயகனை உட்காரவைத்துப் பலவித ஆகாரங்களை அவன் முன்னே வைத்து, உண்ணும்படி வேண்டினாள். செங்கோட கௌண்டர் அவைகளைக் கண்டு மிகுந்த ஆச்சரியத்துடன் “தேவஸேனா! இவைகளெல்லாம் உனக்கு எங்ஙனம் கிடைத்தன? நீயே வேட்டையாடச் செல்லுகிறாயா என்ன?” என்று கேட்டார். தேவஸேனா புன்னகையுடன், “நாதா! நான் முன்மாதிரி பயப்படுவதில்லை. குடிசைக்குச் சமீபத்திலேயே வேட்டையாடுவதுண்டு. அன்றியும், தாங்கள் சென்ற ஒரு வாரத்துக்கெல்லாம் எனக்கு ஓர் சகோதரன் கிடைத்தான். அவனது அபரிமித அன்பே இதுவரை என் தேகத்தைப் போஷித்து என் மனத்தையும் திடப்படுத்தி வந்தது. இவ்வுணவுகளெல்லாம் அவன் தேடியவை” என்றாள்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் செங்கோட கௌண்டர் மனத்தில் அடங்காத கோபம் எழுந்தது. ஆனால் அவர் தந்திரமாய் அதை அடக்கிவெளிப்படாமற்செய்து, “தேவஸேனா! அகதிக்குத் தெய்வம் துணை என்னும் முதுமொழி உன்பால் மெய்யாயிற்று. உன்னை உயிருடன் திரும்பவும் பார்ப்பேன் என்று நான் சிறிதும் எண்ணவே யில்லை. பரம கருணாநிதியான அர்த்தநாரீசர் கிருபையால் ஓர்சகோதரன் கிடைத்ததனாலன்றோ இதுகாறும் ஜீவித்திருக்கிறாய்? என்ன அதிசயம்! உம்! அவன் எங்கே இப்போது? வேட்டைக்குப் போயிருக்கிறானோ? வருவதற்கு வெகு நேரமாகுமோ?” என்று தேனனைய இன்சொற்களை மொழிந்து தேவஸேனையின் கபடமற்ற மனத்தை முற்றிலும் தம் வயப்படுத்திக்கொண்டார்.

தேவஸேனை தனக்கு உதவிபுரிந்தவன்பால் தன்னாயகன் கொண்ட பேரன்பைக் கண்டு மகிழ்ந்து, “ஆம்! வேட்டைக்குத்தான் போயிருக்கிறான். வெகுதூரம் காட்டுக்குட் சென்றிருக்கிறானாகையால் நாளையதினம் சாயங்காலம் தான் வருவான். மெய்யாகவே உடன் பிறந்தவன் கூட அவ்வளவு பிரியமாயிருக்கமாட்டான். குமாரசாமி மிகுந்த நற்குணமுடையவன், அன்பின் அவதாரம், கருணையின் உருவம், நல்லொழுக்கத்தின் ஆலயம். இத்தனைக்கும் பால்யந்தான். அவனுக்கு இன்னும் வயது இருபத்தைந்து பூராவாக ஆகவில்லை. தாங்கள் அவனைக்கண்டு அவனுடன் இரண்டு நாழிகை பழகினால் அவன் குணங்களைக்கண்டு மிகுந்த மகிழ்ச்சியடைவீர்கள் என்பது திண்ணம்” என்று சிறிதும் கபடமின்றி குமாரசாமியைப் புகழ்ந்து தன் நாயகன் மனத்தில் ஜ்வலித்துக்கொண்டிருக்கும் தழலில் நெய்யாகுதி செய்தாள்.

பிறகு தேவஸேனை தான் காலந்தள்ளிக் கொண்டு வந்தவிதத்தையும், தன்னாயகன் வரவை ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்ததையும் தான் எட்டுமாதம் கர்ப்பவதியா யிருந்ததையும், தன் புருஷனுக்கு வித்தாரமாய் எடுத்துரைத்தாள். முதலில்

நொண்டி நொண்டி நடப்பானேன் கண்டதெற்கெல்லாம் படைப்பானேன் ?

விகற்பமாய் எண்ணத்தொடங்கிய செங்கோட கௌண்டரது மனம் தேவஸேனை சொன்ன ஒவ்வொரு வார்த்தையிலும் தான் கொண்ட சந்தேகத்துக்கு ஓர் ஆதாரத்தைக் கண்டு மகிழ்ந்தது. இருவரும் இரவில் வெகுநேரம் வரையில் பேசிக்கொண்டே படுத்திருந்தார்கள். பிறகு இருவரும் அயர்ந்து தூங்கிவிட்டார்கள்.

பயங்கரமான சிக்ஷை

அவர்கள் எழுந்திருக்கும்பொழுது விடிந்து இரண்டு நாழிகையாகிவிட்டது. படுப்பதற்குமுன் குடிசைக்குள் தாம் கொண்டு வந்து கட்டின குதிரைக்கு செங்கோட கௌண்டர் கடிவாளத்தைப் போட்டார். அதுகண்ட தேவஸேனை, “நாதா! வெளியே எங்கேயாயினும் போவதாக உத்தேசமா?” என்று கேட்டாள். அதற்கு அவர், “இல்லையில்லை; பத்தடிதூரம் சவாரிசெய்துவிட்டுத் திரும்பிவந்துவிடுகிறேன்” என்று சொல்லி, குதிரையை வெளியே கொண்டுபோய் அதன்மீதேறிச் சென்றார்.

கால்நாழிகைக்கெல்லாம் செங்கோட கௌண்டர் கால்நடையாய்வீட்டுக்குத்திரும்பி வந்து, அன்புபெருகும் குரலுடன், “தேவஸேனா! காட்டில் நாமிருவரும் உலவி நெடுநாட்களாயின. சூரியனது சிவந்த கிரணங்களில் காடெங்கும் பொன்மயமாய்த் தோன்றுகிறது. வெளியே வா! சிறிதுநேரம் உலவிவிட்டு வரலாம்” என்று சொல்லி அழைத்தார். தேவஸேனை உடனே புறப்பட்டாள். இருவரும் கைகோத்துக்கொண்டு மிகுந்த நேசத்துடன் குடிசையைவிட்டுப் புறப்பட்டனர். சிறிது தூரம் சென்றதும், செங்கோட கௌண்டர் திடீரென்று கோபாவேசத்துடன் தேவஸேனையை நோக்கி, “அடீ துரோகி! பாபுருஷனை யிச்சித்த கள்ளீ! இதோ பார்! உன்னைச் சித்திரவதை செய்கிறேன்” என்று கூவி, ஒன்றுந் தோன்றாது மயங்கித் தியங்கும் தேவஸேனையைப் பிடித்து, பக்கத்தில் நின்ற ஓர் பெரியமரத்தில் பெரிய கயிற்றினால் அவளை இறுக்கிக்கட்டிவிட்டு, இருளன் என்னும் தமது வேட்டை நாயை அழைத்து, அவளைக் கடிக்கும்படி அதைத் தூண்டினார்.

தேவஸேனையினிடத்தில் என்றும் விரோதம்பாராட்டிவந்த அந்நாய் தேவஸேனையின்மேற் பாய்ந்து பிடுங்கிற்று. இக்கோரக் காட்சியை வருணிக்க எமக்குச் சிறிதும் மனமில்லையே யெனினும், உண்மையை நடந்தவாறு உரைக்கவேண்டுவது எமது கடமையாதலின் இவ்வளவு தூரம் அதைக் குறித்து வித்தரிக்கிறோம். தேவஸேனைக்கு அப்போதுதான் தன்புருஷன் தன்மீது கெட்ட அபிப்பிராயங் கொண்டது தெரியவந்தது. நெடுநாட் பழகியும் தனது கற்பைக் குறித்துச் சந்தேகித்து இக்கொடிய தண்டனைக்கு உட்படுத்திய அவர் மீது வெறுப்பும் சினமும் கொண்டாள். “அடே பாவி! வலிமையற்ற பெண்பிள்ளையை ஏமாற்றி யழைத்துவந்து இவ்வாறு வதைக்கும் பாதகா! என் சகோதரன் வருமுன் ஓடிப்போ! இல்லாவிடில், இதனினும் பதின்மடங்கு கொடுமையான தண்டனை உனக்குக் கிடைக்கும்” என்று வெருட்டினாள். எட்டு

நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு.

மாத கர்ப்பவதியானதனால், இறுகிய கட்டுகளினாலும் நாயின் கடிகளினின்றும் பெருகும் உதிர வெள்ளத்தினாலும் தேவஸேனை மூர்ச்சை யடைந்தாள்.

செங்கோட கௌண்டர், அருகே ஒரு புதரின் மறைவிற்சென்று, தம் துப்பாக்கி கத்தி முதலியவைகளை யெடுத்துத்தரித்துக்கொண்டு அங்கேநின்ற தமது குதிரைமீதேறி, திரும்பவும் தேவஸேனை கட்டுண்டிருந்த மரத்தினருகே சென்று, அவளுடைய பரிதாபநிலைமையைக்கண்டு சற்றும் மனமிரங்காது, "கொண்ட புருஷனுக்குத் துரோகம்செய்யும் பெண்டிருக்கு இதுவே தக்க தண்டனை!" என்று சொல்லிவிட்டு, தமது நாயை அழைத்துக் கொண்டு அவ்விடத்தை விட்டகன்றார்.

செங்கோட கௌண்டர் இன்று ஆராயாது செய்த பயங்கரமான அநியாயத்தின் பயனைத் தவறாமல் இச்சன்மத்திலேயே அனுபவிக்க வேண்டும். இல்லாவிடில், மனிதருக்குத் தெய்வத்தினிடமுள்ள நம்பிக்கை அற்றுப் போகும். அவ்வித அவகேடு மனிதருக்கு நேராவண்ணம் கடவுள் காப்பாராக! ததாஸ்து !!

What the Educational Officers say.

K. Natesa Ayyar Esq., Inspector of Schools.— I shall be glad to recommend purchase of copies of your Journal "Viveka Bodhini" which is ***very well suited for the needs of Elementary*** & ***Secondary grade teachers,*** to the Chairmen of Municipal Councils & Presidents of Taluk and District Boards. The articles are ***of varied interest*** and ***so well calculated to widen the sympathies and expand the interests of teachers. It is written in simple unpedantic style.***

* * * * *

M. Ramaswami Ayyangar Esq., Inspector of Schools (Retired.)—* The Viveka Bodhini is a very useful booklet to Elementary School Teachers, It teaches on a variety of topics which are calculated to increase the stock of knowledge of the Elementary School Masters. It is very essential that a copy of the Journal ought to be in the hands of teachers. I therefore recommend that it may be subscribed for by the Taluk Boards for circulation among the teachers of all the Schools under its control.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

வால்மீகி சரிதம்

முன் ஒருகாலத்தில் ஓர் அந்தணன் தன் ஜாதிக்கேற்ற கல்வியையும் ஆசாரத்தையுமுடையவனாய், ஏதோ பூர்வஜன்ம பாபத்தால் வேடர்களுடன் சேர்ந்து அவர்களுடைய ஒழுக்கத்தையே பின்பற்றி தன் ஆசாரங்களை விட்டு, காடுகளில் வசித்துக்கொண்டிருந்தான். தன் மனத்திற்கிசைந்த ஓர் கீழ்ஜாதி ஸ்திரீயை மணஞ்செய்து, பல குழந்தைகளையும் பெற்றான். அவர்களைக் காப்பாற்றுவதற்காகத் திருடர்களுடன் சேர்ந்து காட்டுப் பாதைகளில் பதுங்கிநின்று அங்கு வருகிறவர்களை வழிமறித்து அடித்து அவர்களிடத்திலுள்ள பொருள்களைப் பறித்துக் கொடிய பாபங்களைச் செய்துவந்தான்.

இவனுடைய பிறப்பையும் கருமகதியையும் ஞானக்கண்ணால் சப்தரிஷிகள் கண்டறிந்து, முன்செய்த பாபங்களின் பயனாய் இவனுக்கு நேர்ந்த இழிவான சேர்க்கையும் கொடிய தொழிலும் முடியும் தருணம் வந்ததை யறிந்து அந்தக்காட்டு மார்க்கமாய் அவனிருக்குமிடத்தை நோக்கிச் சென்றார்கள். அதைக்கண்டு அவ்வேடன் 'இன்று நமக்கு நல்ல கொள்ளை கிடைக்கு'மென்று மகிழ்ந்து அவர்களை மறித்து, "உங்களிடத்திலுள்ள தண்டு கமண்டலம் மான்தோல் மரவுரி முதலியவற்றை வைத்துப் போங்கள். இல்லாவிட்டால் பொருளையும் உயிரையும் இழப்பீர்கள்" என்றான். அவர்கள், "அப்பா! இதோ நீ கேட்டதைக் கொடுத்துவிட்டோம். ஆனால் ஒரு உபகாரம் செய்யவேண்டும். நீ இவைகளை உன் மனைவி மக்களிடத்தில் கொண்டுபோய்க் கொடுத்து, இப்படிப் பிறரை உபத்திரவித்து உங்களைக் காப்பாற்றுவதால் வரும் பாபத்திலும் உங்களுக்குப் பாகமுண்டல்லவா வென்று கேட்டுவா; நாங்கள் இவ்விடத்திலேயே இருக்கிறோம்" என்றார்கள்.

அதுவரையில் அவனை அப்படி ஒரு பிராணியும் கேட்காததால், அவன் ஆச்சரியமடைந்து தன் வீட்டிற்குச்சென்று மனைவிமக்களைப் பார்த்து, "நான் சம்பாதிக்கும் பொருள்களில் உங்களுக்குப் பாகம் ஏற்பட்டிருப்பதுபோல் நான் செய்யும் பாபத்திலும் உங்களுக்குப் பங்குண்டல்லவா?" என்றான். அவர்கள் கைகொட்டிச் சிரித்து, "உனக்கென்ன பைத்தியம் பிடித்ததா? எங்களைக் காப்பாற்றுவது உன் கடமை. அதற்கு நீ என்ன செய்கிறாயென்று நாங்கள் ஏன் விசாரிக்கவேண்டும்? உன் பாபமும் புண்ணியமும் உன்னுடையதே. எங்களுக்கு அதில் கொஞ்சமேனும் சம்பந்தமில்லை" என்றார்கள். அவனுக்குப் பாப கருமத்தின் பயன் முடிந்து, முன்செய்த அளவற்ற புண்ணியத்தின் பயன் ஆரம்பிக்கவேண்டிய காலத்துக்கு இதே அறிகுறியாதலால் அக்ஞானம் நீங்கி உலகவாழ்க்கையில் வெறுப்படைந்து தன் பிறப்பையும் வளர்ப்பையும் தான் அதிலிருந்து நழுவினதையும், செய்த பாபங்களையும் நினைத்து எல்லையற்ற வருத்தமடைந்து, மனங்கசிந்து கண்ணீர் பெருக, மறுபடியும் அத்திரி பிருகு வசிஷ்டர் முதலிய மகரிஷிகள் இருக்குமிடத்திற்கு வந்து, அவர்களுடைய பாதங்களில் விழுந்து, "மகரிஷிகளே! என்னிடத்தில் அளவற்ற கருணைகொண்டு என்னைத் தேடிவந்து இவ்விதமாய் ஹிதத்தை உபதேசித்து நற்கதியடையச் செய்த உங்களுக்கு நான் என்ன பதிலுபகாரம் செய்யப்போகிறேன்? என் பிறப்பையும் ஆசாரத்தையும் மறந்து அதற்கு விரோதமான காரியங்களைச் செய்து, பாபத்தை மலையாகக் குவித்த எனக்கு ஒரு வழிகாட்டவேண்டும்" என்று கேட்போர் மனமுருகும்படி பிரார்த்தித்தான்.

அப்பொழுது அந்த மகா புருஷர்கள் அவனுக்கு ஸ்ரீராம மந்திரத்தை யுபதேசித்துச் சென்றார்கள். அவன் அதையே விதிப்படி ஜபித்துக்கொண்டு பலகாலம் சமாதியில் இருந்தான். சகல பாபங்களும் நீங்கி, நிகரற்ற தேஜஸுடன் கோடிசூரியனைப்போல் விளங்கும் அந்தப் புண்ணியவானைச்சுற்றி கறையான் புற்றும் செடி கொடிகளும் வளர்ந்து அவரை மறைத்தன. பின்பு வெகுகாலங் கழித்து, வருணன் கடும் மழையைப் பெய்து அதைக் கரைக்க அதிலிருந்து அவர் வெளியில் வந்தார். அதனால் அவருக்கு வால்மீகி யென்ற பெயருண்டாயிற்று. (வல்மீகம்=புற்று). அவரே பிற்காலத்தில் பிரமதேவனுடைய அருளால் ஸ்ரீராமபிரானுடைய திவ்விய சரித்திரத்தைப் பாடும் மகா பாக்கியத்தைப் பெற்றவர்.

சியவன உபாக்கியானம்

இக்ஷ்வாகு சக்கரவர்த்தியின் புத்திரர்களில் ஒருவனான சரியாதி யென்ற அரசனுக்கு சுகன்னியை யென்ற ஓர் பெண்ணுண்டு. அவள் அழகிலும் புத்தியிலும் நற்குணங்களிலும் நிகரற்று வளர்ந்துவருகையில் ஒருநாள் அவ்வரசன் அவளுடன் சியவன மகரிஷியின் ஆசிரமத்திற்குச் சென்றான். அங்கே தோட்டங்களையும் ஓடைகளையும் தன் தோழிகளுடன் சுற்றிப் பார்த்துக்கொண்டுவந்த சுகன்னியை, ஓர் பெரிய புற்றையும், அதன் வழியாய் மின்மினிப் பூச்சிகளைப்போல் இரண்டு ஒளிகள் வீசுவதையும் கண்டாள். தன் இஷ்டத்தை யொருவரும் தடுத்தறியாதவளாகையால் ராஜகுமாரி ஆலோசனை செய்யாமல் அந்த வெளிச்சம் வந்த துவாரத்தின் வழியாய் ஒரு முள்ளினால் குத்தி அதைப் பெரிதாகச் செய்தாள். உடனே அவைகளிலிருந்து இரத்தம் பெருகிற்று. அதே நிமிஷத்தில் அங்கிருந்த எல்லோருக்கும் மலமும் மூத்திரமும் கட்டுப்பட்டுத் திணறி, மிகுந்த துன்பத்தை யடைந்தார்கள். அதைக் கண்ட அரசன் கவலைகொண்டு 'ஓகோ! நம்மைச் சேர்ந்தவர்களில் யாரோ? இங்குள்ள பெரியவர்களுக்கு அபராதம் செய்திருக்கவேண்டும்' என்று முடிவுசெய்து அவர்களை விசாரித்தான். அப்பொழுது சுகன்னியை "அப்பா! ஓர் புற்றிலிருந்து வெளிப்பட்ட இரண்டு ஒளிகளைக்கண்டு அவை இன்னதென் றறியவிரும்பி முள்ளினால் குத்தினேன். அவைகளிலிருந்து இரத்தம் பெருகிற்று" என்றாள். சரியாதி அதைக்கேட்டு நடுநடுங்கி அந்தப் புற்றினருகிற்சென்று அதில் வெகுகாலமாய்த் தவஞ்செய்யும் சியவன மகரிஷியை யடிபணிந்து கைகூப்பி, "ஸ்வாமி! ஒன்றுமறியாத என்குழந்தை யோசனையில்லாமல் செய்த இக்குற்றத்தை மன்னிக்கவேண்டும். இதற்குப் பரிகாரமாயும், இவளுக்கு நல்லொழுக்கம் பழகும்படிக்கும் இவளைத் தங்களுக்குக் காணிக்கையாய் சமர்ப்பிக்கிறேன். அங்கீகரித் தருளவேண்டும்" என்று சுகன்னியையை அவருக்குக் கன்யாதானஞ்செய்துவிட்டுத் தன் நகரம் சென்றான்.

வெளிக்குக் கடுங் கோபியைப்போல் நடக்கும் சியவனரை, சுகன்னியை தன் விநயத்தாலும் பக்தியாலும் பணிவிடையாலும் மகிழ்வித்து அவருடைய பிரீதிக்குப் பாத்திரமாயிருந்தாள். ஒருநாள் அசுவினீ தேவர்கள் அங்கேவந்து சியவனரை வணங்கி "ஸ்வாமி! எங்களுக்கு இதுவரையில் யாகத்தில் சோமபானம் செய்யும் அதிகாரமில்லை. இந்திராதி தேவதைகளைப்போல் எங்களுக்கும் அந்த மகிமையைக் கொடுக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். அதற்குச் சியவனர் எனக்கு இந்தக் கிழத்தனத்தைப் போக்கி என்றுமழியாத யௌவனத்தை நீங்கள் கொடுத்தால் உங்களுடைய குறையைத் தீர்க்கிறேன்" என்றார். (நிகரற்ற தபோ மகிமையுடைய அவருக்கு யௌவனத்தை வருவித்துக் கொள்வது ஒரு பொருட்டல்ல. ஆயினும் வேறு சில காரியங்களை உத்தேசித்து அப்படிச் செய்தார்). அப்பொழுது அசுவினீகள் "சித்தர்களால் அமைக்கப்பட்ட இந்த மடுவில் எங்களுடன் ஸ்நாநஞ் செய்யும்" என்றார்கள். அப்படிச் செய்தவுடன் அதிலிருந்து மூன்று புருஷர்கள் ரூபத்திலும் யௌவனத்திலும் காந்தியிலும் ஆடையாபரணங்களிலும் கொஞ்சமேனும் பேதமில்லாதவர்களாய் சூரியர்களைப் போல் விளங்கிக்கொண்டு வெளியில் வந்தார்கள். "எங்களில் உன் கணவன் யாரென்று நீயே தெரிந்துகொள்ளக்கடவாய்" என, சுகன்னியை மதிமயங்கி ஒன்றுந் தோன்றாமல் முடிவில் தன் கணவனுடைய பாதங்களை மனத்தால் நமஸ்கரித்து, "ஸ்வாமி! நான் தங்களிடத்தில் எல்லையற்ற அன்பும் பக்தியும் வைத்திருப்பதும் தங்களையே குருவென்றும் தெய்வமென்றும் நம்பியிருப்பதும் உண்மையானால் இம்மூவரில் ஒவ்வொருவரும் சுயரூபத்துடன் விளங்கக்கடவர்" என்று வேண்டினாள். அவளுடைய பதிவிரதா மகிமையால் அசுவினீ தேவர்கள் மகிழ்ந்து தங்களுடைய நிஜ ரூபங்களை யெடுத்துக்கொண்டார்கள். உடனே சுகன்னியை சியவனருடைய பாதங்களில் நமஸ்கரித்து நின்றாள்.

பிறகு சரியாதி மகாராஜன் யாகஞ்செய்ய விரும்பி, அதற்குச் சியவனரை அத்வர்யுவாய் இருக்கும்படி வேண்டுவதற்கு அவருடைய ஆசிரமத்திற்குச் சென்றார். அங்கே தன் பெண்ணுடன் யாரோ ஒரு மகாபுருஷன் கோடிமன்மதனைப்போல் அழகுடன் விளங்குவதைக்கண்டு கடுங்கோபங் கொண்டு, "அடீ, மகாபாபி! தெய்வத்தைப்போன்ற மகரிஷியை மாயஞ்செய்து கொன்றுவிட்டு, யாரோ ஒரு சோரபுருஷனைக் கைப்பற்றினையோ? உன்னால் என் குலமும் தர்மமும் அழிந்தனவே. இப்படிக் கொடியபாபத்தைச் செய்து எல்லோரையும் நரகத்தில் தள்ளும் உன்னை இந்த க்ஷணமே கொல்வது தர்மம்" என்று கத்தியை ஓங்க, அவள் அவனுடைய பாதங்களில் பணிந்து "ஸ்வாமி! இவர் என் கணவரே. அசுவினிகளுடைய வரத்தால் என்றுமழியாத யௌவனம் கிடைத்திருக்கிறது. அவரையே கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்" என்றாள். சரியாதி அப்படிச் செய்து உண்மையையறிந்து, அவருடைய மகிமையைக் கொண்டாடித் தன் யாகத்தை நடப்பிக்க அழைத்துப்போனார். அதில் சியவனர் இந்திராதி தேவதைகளுக்கு சோமபானத்தில் பாகம் கொடுக்கும்பொழுது அசுவினீகளுக்கும் பாகத்தைக் கொடுத்தார். வைத்தியத் தொழிலை நடத்தின அவர்கள் அசுத்தர்களென்று தள்ளிவைத்திருந்த அவர்களைத் தங்களுடன் சேர்த்ததற்காக இந்திரன் கோபங்கொண்டு தன் வஜ்ராயுதத்தை சியவனர்மேல் பிரயோகித்தான். அத்தபோநிதி அவனுடைய கையை அசைவற்றுத் தொங்கும்படி தம் யோகமகிமையால் செய்துவிட்டார். பிறகு அவரைப் பிரார்த்தித்து மன்னிக்கும்படி வேண்டினதினால் அவனை அத்துயரத்திலிருந்து காப்பாற்றினார். அன்றுமுதல் அசுவினிகளுக்கு யாகத்தில் பாகம் கிடைத்தது.

முரளீதரன்.—மிகவும் ஆனந்தத்துடன் எல்லோரும் கருதக்கூடிய மாசற்ற இளம்பருவத்தின் இன்பமும், நம்மதத்திற்குரிய சிறந்த விவாக விமர்சைகளும், அவ்விவாக காலத்தில் ஏற்படும் கோலாகலங்களின் அழகும், ஜகத் ரக்ஷகியாய், ஸகலஜீவ தயாபரியாய் ஜகன்மாதாவாய் விளங்கும் ஈசுவரியின் சிறப்பும், அவளது பக்தியி லீடுபட்டு நிற்கும் பக்தகோடிகளின் உயர்வும், கடற்கரைக் காட்சியும், உண்மை நட்பின் பெருமையும், ஊராருடன் வீண்வம்பு பேசுவதனால் வரும் தீங்கும், அன்புள்ள காதலர்களின் மனோநிலையும், பொறுமையின் சிறப்பும், எளிய நடையில் சிறுமியர் உத்ஸாகத்துடன் வாசிக்கும் வண்ணம் எழுதியிருக்கிறது. படங்களுடன் அணா **10.**

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

கௌஸல்யை

அயோத்திக்கு அதிபதியான தசரத சக்கிரவர்த்திக்கு கௌஸல்யை சுமித்திரை கைகேயி யென்ற மூன்று மகிஷிகளும் இன்னும் நூற்றுக்கணக்கான பாரியைகளும் உண்டு. அவர்களில் கௌசல்யை மூத்தவள்; பட்டமகிஷி. இக்ஷ்வாகு சக்கரவர்த்தியால் ஆதிகாலத்தில் நிர்மாணஞ் செய்யப்பட்ட அயோத்தி யென்ற நகரத்தை இராஜதானியாயுடைய கோசலமென்று ஓர் தேசமுண்டு. அது அக்காலத்திலேயே உத்தரகோசலம் தக்ஷிணகோசலமென்று இரண்டு இராஜ்யங்களாயிருந்தது. உத்தரகோசலத்தில் இக்ஷ்வாகுவின் சந்ததியாரான சூரிய வமிசத்தரசர்கள் அரசுபுரிந்தார்கள். தக்ஷிணகோசலத்தில் ஆண்டுவந்த இராஜ வம்சத்தைப்பற்றி நமக்கு யாதொன்றும் தெரியவில்லை. அஜ மகாராஜாவின் புத்திரனான தசரதன், உத்தர கோசத்தில் ஆண்டுகொண்டிருந்தபொழுது தக்ஷிண கோசலத்தில் செங்கோல் செலுத்திவந்த மன்னனுக்கு கோசலனென்றே பெயர் வழங்கிற்று. அவனுக்குப் புத்திர பாக்கிய மில்லாமல் ஓரே பெண் குழந்தை பிறந்தது. அதன் இயற்கையான பெயர் இன்னதென்றும் தெரியவில்லை. கோசல தேசத் தரசனுடைய குமாரியாகையால் கௌஸல்யை யென்று இராமாயணம் முதலிய நூல்களில் பெயரிடப்பட்டிருக்கிறது.

இவளை உத்தர கோசலாதிபதியான தசரதனுக்கு மணஞ் செய்விப்பதாய் முடித்து, கோசலன் மந்திரி பரிவாரங்களை அயோத்திக்கனுப்பி தசரதனை அழைத்துவரச் சொன்னான். அப்பொழுது அவர் சரயூநதியில் தன் பந்துக்களோடும் மந்திரிகளோடும் ஆனந்தமாய் ஜலக்கிரீடை செய்துகொண்டிருந்தார்.

அக் காலத்தில் இலங்கைத் தீவில், விசிரவஸுவின் புத்திரனான ராவணன் ராக்ஷசர்களுக்கு அரசனாய் விளங்கிக்கொண்டிருந்தான். அவன் பிரமாவிடத்திலிருந்து கடுந்தவத்தின் மகிமையால் பெற்ற அபூர்வமான வரங்களால் நிகரற்ற பலத்தையும் பராக்கிரமத்தையும் வீரியத்தையும் யோகசித்திகளையும் பெற்று மூவுலகையும் ஜயித்து தேவதைகளையும், அவர்களுக்குப் பிராணாதாரமாயிருக்கும் யாகயக்ஞங்களையும், அவைகளுக்கு அவசியமாய் வேண்டிய பால் தயிர் நெய் வெண்ணெய் முதலியவைகளைக் கொடுக்கும் பசுக்களையும் அந்த வைதிகக் கிரியைகளை நடத்தும் அந்தணர்களையும் தேடித் தேடிக் கண்டவிடங்களிலெல்லாம் அழித்து வந்தான்.

ஒரு நாள் தன் சபையில் அந்தப் பிரதாப லங்கேசுவரன் கொலு வீற்றிருக்கையில், சர்வலோக பிதாமகரான பிரமா அங்கே வந்தார். தசக்கிரீவன் அவருடைய திருவடிகளில் பத்துமுடிகளும் படும்படி நமஸ்கரித்து, இருபது கைகளையும் கூப்பி, பத்து வாய்களினாலும் தோத்திரஞ் செய்தான். அவர் அதை அங்கீகரித்து அவனால் கொடுக்கப்பட்ட உத்தமமான ஆசனத்தில் வீற்றிருந்து அவனை ஆசீர்வதித்தார். சற்று நேரங் கழித்து தசானனன் காலகதியால் தூண்டப்பட்டு வாணீபதியைப் பார்த்து "சுவாமி! தங்களிடத்திலிருந்து நிகரற்ற வரங்களைப் பெற்று எவ்விதத்திலும் எனக்கு அழிவில்லாமல் செய்துகொண்டிருக்கிறேன். ஆயினும் இந்தப் பிரபஞ்சத்தில் எந்த வஸ்துவும் நித்தியமல்லவென்று தாங்களே எனக்கு உபதேசித்திருக்கிறீர்களல்லவா? ஆகையால் எனக்கும் ஓர் முடிவு ஏற்பட்டிருக்கவேண்டும். அது யாரால் நேருமென்று தங்களுடைய ஞானக்கண்ணால் பார்த்துச் சொல்லவேண்டும்" என்று பிரார்த்தித்தான். சதுரானனன் அதைக் கேட்டுப் புன்சிரிப்புடன், "குழந்தாய்! அயோத்தியாதிபதியான தசரதருக்கும்; கோசல மன்னனுடைய மகளான கௌசல்யைக்கும் இன்றைக்கு ஐந்தாவது நாளில் திருமணம் நடக்கப்போகிறது. அந்தத் தம்பதிகளுக்குப் பிறக்கும் நான்கு குமாரர்களில் மூத்தவனான ஸ்ரீராமச்சந்திரனுடைய கையால் உனக்கு மரணம் நேரும். மஹா விஷ்ணுவே அந்த நால்வராய் அவதரிப்பார்; அதனால் நீ பெற்ற வரங்களும் பொய்யாகாது. பகவானுடைய சங்கல்பத்தின்படியே எதுவும் நடக்கும்" என்றார்.

அதைக்கேட்டத் தசகண்டன் கைகொட்டிச் சிரித்து, "என்ன வேடிக்கை! பகவானுடைய சங்கல்பத்தையும் தங்களுடைய உறுதிமொழியையும் மாற்றமுடியாவிட்டால்நான் இவ்வளவு வரங்களைப் பெற்றும் பயனென்ன? இதுவரை

நடந்தவைகளை மாற்றமுடியாதே யொழிய இனி நடக்கப்போகும் சம்பவங்கள் அனைத்தையும் எவ்வுலகத்திலிருந்தாலும் தடுக்கமுடியும். தங்களுடைய ஞானதிருஷ்டியும் அருள்வாக்கும் வீணுகுமே யென்று வருந்துகிறேன்" என்ருன். பிறகு தன் மந்திரி பரிவாரங்களுடன் புஷ்பக விமானத்தில் ஏறி அயோத்திக்குச் சென்று ஓடத்திலிருந்த தசரதரை யுத்தத்துக் கழைத்து வெகு எளிதாய் ஜயித்து, அந்த ஓடத்தைப் பொடிப்பொடியாக்கி அதிலிருந்தவர்களை ஜலத்தில் அமிழ்த்திவிட்டு கோசல நகரத்திற்குச் சென்று கோசல ராஜனைக் குற்றுயிரோடு விட்டு, கௌசல்யையைப் பலவந்தமாய் எடுத்துக்கொண்டு இலங்கைக்குச் சென்ருன். போகும்வழியில் ஓர் பெரிய திமிங்கிலம் சமுத்திரத்தில் விளையாடிக்கொண்டிருந்ததைக் கண்டு "எனக்கு நித்திய சத்துருக்களான தேவர்கள் எனக்குக் கெடுதிசெய்ய சமயத்தைத் தேடிக்கொண்டிருக்கிருர்கள். நானில்லாத வேளையில் இலங்கையில் புகுந்து இவளை யபகரிப்பார்கள். ஒருவருமறியாமல் ஜாக்கிரதையாய் இவளை வைக்குமிடம் இதைத்தவிர வேறில்லை" என்று கௌசல்யையை ஓர் பெட்டியில் வைத்து அதைத் திமிங்கலத்தினிடத்தில் ஒப்புவித்து "நான் கேட்கும்போது இதைத் திருப்பிக் கொடு" என்று கட்டளையிட்டுப் போனுன்.

அந்தத் திமிங்கலம் கடலில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும்பொழுது வேறென்றுல் சண்டைக் கழைக்கப்பட்டுத் தன் வாயிலிருந்த பெட்டியை அங்குள்ள ஓர் தீவில் வைத்து விட்டுத் தன் சத்துருவுடன் யுத்தஞ் செய்தது. இதற்குள் தெய்வகதியால் சரயூநதியில் மூழ்கின தசரதரும், சாரதியான சுமந்திரரும் உயிர்தப்பி வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகப்பட்டுக் கடலில்வந்து விழுந்தார்கள். ஓர் பெருங்காற்றுக் கிளம்பி அவர்கள் பற்றியிருந்த பலகைகளை அடித்துக்கொண்டுபோய் முன்சொன்ன பெட்டி வைக்கப்பட்டிருந்த தீவில் கரைதட்டச் செய்தது. இருவரும் அங்கே சுற்றிப்பார்க்கையில் ஓர் பெரிய பேழையைக் கண்டு இந்த நிர்மானுஷ்யமான தீவில் இது வரக் காரணமென்னவென்று வியந்து, அதைத் திறந்துபார்க்கையில் கோசல ராஜ புத்திரி படுத்திருப்பதைக் கண்டார்கள். அம்மூவரும் அந்தப் பெட்டியில் புகுந்து முன்போல் அதை மூடிவிட்டார்கள். பிறகு அம்மூவரும் ஒருவரை யொருவர் கண்டறிந்து க்ஷேமம் விசாரித்து, பகவானுடைய சங்கல்பத்தின் மகிமையையும் கர்மகதியையும் நினைத்து, நினைத்து மட்டில்லாத ஆச்சரியமடைந்தார்கள். தங்களுடைய வரலாற்றை ஒருவர்க்கொருவர் தெரிவிக்க அந்தத் தினம் முன்பே தங்களுடைய விவாகத்துக்கு முகூர்த்தம் நிச்சயிக்கப்பட்ட நாளாயிருக்கக்கண்டு, கடவுளுடைய திருவுள்ளத்தை மாற்ற மனிதனும் அரக்கனும் முடியுமோவென்று அவருடைய எல்லாம் வல்ல சக்தியைப் போற்றி சுமந்திரரைச் சாக்ஷியாய் வைத்துக்கொண்டு தசரதரும் கௌசல்யையும் காந்தர்வ விவாகம் செய்துகொண்டார்கள். திமிங்கிலம் தன் பகைவனைக் கொன்றுவிட்டு அங்கே வந்து, அந்தப் பெட்டியை முன்போல் வாயில் அடக்கிக்கொண்டு போயிற்று. அக்காலத்தில் இலங்கையில்இராவணனுடைய சபையில் பிரமதேவர் திடீரென்று எழுந்து கைகளைக் கூப்பிக்கொண்டு "ஓம்! ஸர்வ சக்தனை மஹா விஷ்ணுவுக்கு நமஸ்கரிக்கிறேன். படைக்கவும் காக்கவும் அழிக்கவும் வல்லமையுள்ள சர்வேசுவரனுக்கு நமஸ்கரிக்கிறேன். சென்றது நடப்பது வருவதென்ற முக்காலமும் யாருக்கு ஒரே ரூபமாயிருக்குமோ அந்த ஆதிதேவனை அடிபணிகிறேன். இது புண்ணிய முகூர்த்தம்" என்ருர். அருகிலிருந்த லங்காநாதன் அவரைப் பரிகாசஞ் செய்து பகவானுடைய சங்கல்பமும் உமது ஞானதிருஷ்டியும் வீணுயின. நீர் சொன்ன விவாகம் நடக்காமல் ஏற்பாடுசெய்துவிட்டேன்" என்ருன். பிரமா, "என் வார்த்தை ஒருநாளும் பொய்யாகாது. விவாகம் நடந்துவிட்டது. உன் முயற்சியே பலிக்காமற்போயிற்று" என்ருர். உடனே இராவணன் அங்கிருந்து புறப்பட்டு சமுத்திரத்துக்கு வந்து திமிங்கிலத்தினிடத்திலிருந்து பெட்டியை வாங்கிக்கொண்டு இலங்கைக்கு வந்து அதை பிரமாவின் முன்னிலையில் வைத்து "விவாகத்துக்கு முக்கியமாய் வேண்டிய மணப்பெண்ணை முன்னமே நான் எடுத்துவந்து ஒருவர்க்கும் தெரியாதபடி இந்தப் பெட்டியில்வைத்து சமுத்திரத்தில் ஒளித்திருந்தேன். தசரதனையும் அவனுடைய பரிவாரங்களையும் நாசஞ்செய்து நீரில் அமிழ்த்திவிட்டேன். இனி விவாகம் நடப்பதெப்படி?" என்ருன். பிரமா, "அதிருக்கட்டும்; இந்தப் பெட்டியைத் திறந்துபார்ப்போம்" என்ருர். இராவணன் இறுமாப்புடன் அதைத் திறந்தவுடன் அதிலிருந்து தசரதரும் கௌசல்யையும் கைகோத்துக்கொண்டு மணக்கோலத்துடன் வெளியில் வந்தார்கள். சுமந்திரர் அவ்விவாகத்துக்குச் சாக்ஷியாய் அருகில் நின்ருர். அதைக்கண்டு இராவணன் ஒன்றும் தோன்ருமல் திகைத்துநின்று பிறகு கடுங்கோபங்கொண்டு அவர்களை வெட்டப் போனுன். பிரமா அவனைத் தடுத்து, "மூடா! முதலில் நீ இந்தப் பெட்டியில் வைத்தது கௌசல்யையை யல்லவா? இப்பொழுது மூவரிருக்கிருர்கள். கடவுளின் திருவுள்ளப்படி அவசியமிருந்தால் கோடி கோடியாய்ப் பெருகுவார்கள். ஆகையால் மகாவிஷ்ணு இவர்களுக்குப் புத்திரனுய் அவதரிப்பார்; அவரால் உனக்கு மரணம் நேரும்; உன்னுல் இவர்களுக்கு மரணமில்லை. இனி வரும் விதியை இப்பொழுதே ஏன் தேடிக்கொள்ளுகிருய்? இவர்களை அயோத்திக்கு அனுப்பிவிட்டு இன்னும் சிலகாலம் சுகமாய் வாழ்ந்துகொண்டிரு. என் வார்த்தை பொய்யாகுமா? பகவானுடைய சங்கல்பம் வீணுகுமா? கர்மகதியைத் தடுப்பவருண்டோ?" என்ருர். அதைக்கேட்டு இலங்கேசன் மிகப் பயந்து அவர்களை அயோத்தியில் கொண்டுபோய்விடும்படி தூதர்களுக்குக் கட்டளையிட்டான். பிறகு அவ் விருவர்களுக்கும் விதிப்படி விவாகம் நடந்தது. கோசல ராஜன் பிள்ளையில்லாததால் தன் ராஜ்யத்தை தசரதருக்குக் கொடுத்தான்.

குண்டலகேசி.—தமிழ் மொழியிலே "பஞ்ச காவியங்கள்" என்று கற்ருரால் பெரிதும் பாராட்டப்படும் நூல்கள் சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம், வளையாபதி, குண்டலகேசி என்பனவாம். இவற்றுள் ஒன்ருன **குண்டலகேசி** என்னும் நூல் இக்காலத்தில இல்லை. பண்டைக் காலத்திலேயே அஃது இறந்தொழிந்தது போலும்? ஆனுல், இந்நூல் எதைப்பற்றிக் கூறுவதன்பது, இப்போது காணப்படும் சில செய்யுட்களைக் கொண்டும், பிற சாதனங்களைக் கொண்டும் ஒருவாறு அறியக்கிடக்கிறது. அவைகளை ஆதாரமாகக்கொண்டு நாகை ஸ்ரீ கோபாலகிருஷ்ண பிள்ளை இந்நாவலை மிக உயர்ந்த செந்தமிழ் நடையில் எழுதியுள்ளார். விலை அணு. 5.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

கோயில்களும் பாடசாலைகளும்

முற்காலத்தில் கோவில்களின் வரும்படியிற் பெரும்பான்மையும் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கே உபயோகிக்கப்பட்டுவந்ததென்றும், கோயில்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கல்வி பயின்றுவந்த மாணவர்களுக்கு அவ்வரும்படிகளைக் கொண்டே தருமபோஜனம் அளிக்கப்பட்டு வந்ததென்றும் சிலாசாசனங்களினுல் தெரியவருகிறது. சீனுர்கள் தமது தேசத்திலுள்ள பலவிதக் கோயில்களையும் பள்ளிக்கூடங்களாகவும் கல்லூரிகளாகவும் மாற்றி வருகிருர்களெனக் கேட்கும்போதும், ஏனைய தேசங்கள் கல்வி அபிவிருத்தியைப் பிரதானமாகக் கருதி அதற்கு அனுகூலமாகவிருக்கத்தக்க வழிகள் பலவற்றை நூதனமாகக் கண்டுபிடித்து அனுஷ்டித்துவருகையிலும்,நமது நாட்டவர்கள் மட்டும் நமது முன்னேர்கள் என்றென்றைக்கும் நற்பயனையே தரத்தக்கனவாக ஏற்படுத்திய கல்வி அபிவிருத்திக் குரிய வழிகளை மறந்து, உற்சவ ஆடம்பரங்களில் பொருளை வீண்செலவு செய்து, தேசம் நெடுநாளும் உயர்பதவியிலிருப்பதற்கு, இன்றியமையாச் சாதனமான கல்வி அபிவிருத்தியை அலக்ஷியஞ்செய்துவருவது நாட்டின் நன்மையைக்கோரும் அனைவர்மனத்திலும் துக்கத்தை விளைவிக்கிறது. நமது நாட்டிலுள்ள மடாதிபதிகளும், கோவில் தர்மகர்த்தர்களும் துயிலெழுவார்களோ?

*
* *

இந்தியாவில் விலைகள் ஏறியது ஏன்?

1. சென்ற ஐரோப்பியப் போரினுல் கைத்தொழில்கள் நிலைகுலைந்து,பொருள்களைச் செய்வது மிகவும் குறைந்து,செய்துசேகரித்திருந்த பொருள்கள் சீக்கிரத்தில் செலவழிந்து போய்விட்டன. அதுவுமன்றி, பொருள்கள் செயலானது அவசியமான விளைபொருள்களின் விலையற்றத்தினுலும் குறைவுபட்டது.

2. பொருள்கள் செய்யப்பட்ட அளவைவிட உபயோகிப்போருக்கு அவசியமான அளவு பன்மடங்கு அதிகரித்துவிட்டதனுல், வியாபாரிகளுக்குள் குறைந்தவிலைக்கு விற்கும்போட்டி ஏற்படுவதற்கு ஏதுவில்லாமற்போயிற்று.

3. ஒரு நாட்டிலுள்ள பொருளின் அளவே சாமான்களின் விலையை நிஷ்கரிஷை செய்யும் கர்த்தாவாதலால், போர் நடந்தகாலத்தில் வெளிநாடுகளுக்குச் செலுத்துவதற்காக நாட்டைவிட்டு, பொன் வெளியே அனுப்பப்பட்டதுடன் காகித நாணயமும் மிகவும் அதிகரித்துவிட்டதின் நிமித்தம், நாட்டிலுள்ள பொருள் வெளித் தோற்றத்துக்குப் பெருகி, சாமான்களின் விலையை உயர்த்திவிட்டது.

4. விளை பொருள்கள் இந்தியா கவர்ன்மெண்டாரால் ஐரோப்பிய நாடுகளுக்கும் நமது இந்திய பட்டாளங்களிருந்த மெஸொபொடேமியாவுக்கும் ஏராளமாய் அனுப்பப்பட்டு, நமது நாட்டின் உபயோகத்துக்கு வேண்டுமான அளவு இல்லாமற் போயின.

5. ரயில் வண்டிகள் குறைவினாலும் நிலக்கரிக் குறைவினாலும் சரக்குகள் நாட்டுக்குள் சுலபமாய்ப் பரவுவதற்கு வழியற்று, வியாபாரிகள் கட்டிப் போட்டுவைத்துத் தங்களிஷ்டப்பட்ட விலைக்கு விற்பதற்கு இடமுண்டாயிற்று.

6. கடைசியாக, வெளி நாட்டு நாணயங்களுக்கும் நமது நாணயங்களுக்குமுள்ள மாற்றுத் தாரணை நமக்கு நஷ்டகரமாயிற்று. இவைகள் தாம் நமது நாட்டில் பொருள்களின் விலைகள் ஏறியிருப்பதற்கு முக்கியக் காரணங்களாகும்.

*
* *

டாக்டர் கவருடைய ஒப்பந்த விவாக மசோதா

ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் ஒரு ஸ்திரீயும் ஒரு புருஷனும் நெருங்கிய இரத்த சம்பந்தமுள்ளவராகமட்டு மில்லாமலிருந்தால், யாதொரு மதசம்பந்தமான கட்டுப்பாடுமின்றி ஒருவரையொருவர் மணந்து கொள்ளலாம்; ஏனெனில், அந்நாடுகளில் விவாகமானது இவ்வுலக சம்பந்தமான ஒப்பந்தமாகக் கருதப்படுகிறது. ஆனால் அவ்வாறு கருதப்படுவதனால், விவாகம் யாதொரு மதாசாரச் சடங்குகளுமின்றி நடத்தப்படுவதாக எண்ணக்கூடாது. ஒரு ஸ்திரீயும் ஒரு புருஷனும் ஒரு ரிஜிஸ்ட்ரார் முன்னிலையில் விவாக ஒப்பந்தம் செய்துகொண்டு, அது பதியப்பட்டபின், தங்கள் மதக்கொள்கைக்குத்தக்க கோவிலுக்குச்சென்று விவாகத்துக்கு மதநூல்களில் விதிக்கப்பட்ட சடங்குகளைச் செய்வது வழக்கமாயிருக்கிறது. நமது தேசத்திலும் மகம்மதியர், கிறிஸ்தவர், பாரசீகர், சமணர், பௌத்தர், ப்ரமோக்கள், மற்றும் சில ஹிந்து வகுப்பினர்கள், இவர்கள் விவாகத்தை இவ்வுலக சம்பந்தமான ஒப்பந்தமாகவே கருதுகிறார்கள். ஆனால் அவர்கள் தங்களிச்சைப்படி ஜாதிக்கட்டுப்பாடின்றி மணந்து கொள்வதற்குச் சட்டம் இடங் கொடுக்காததினால், ஈசுவரனால் அளிக்கப்பட்ட சுதந்தரத்தை, இராஜாங்கத்தின் சட்டக் கட்டுப்பாட்டினால் இழந்துவிடுகிறார்கள். ஒரு கிறிஸ்தவன் ஒரு மகம்மதிய ஸ்திரீயினிடத்தில் மெய்க்காதல்கொண்டு அவளை மணந்துகொள்ள விரும்பினால், அவ்விவாகத்தை கிறிஸ்தவ குருக்களும் நடத்திவைக்கமாட்டார், மகம்மதிய காஜியும் நடத்திவைக்கமாட்டார். அவ்வாறு அவர்கள் கொண்ட மெய்க்காதலுக்கு இடைஞ்சல் செய்வது நியாயமன்று. அப்படிப்பட்டவர்கள் தங்கள் இச்சையைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு அனுகூலமாக ஓர் சட்டம் நிருபித்தல் அத்தியாவசியம்.

இவ்விதமாக வாதித்து, டாக்டர் கவர் இந்திய சட்ட நிரூபண சபையில் ஒப்பந்த விவாக மசோதாவொன்று கொண்டுவந்திருக்கிறார்.

அவர் நிருபிக்கச்செய்ய முயலும் சட்டம் ஒருவரையும் இன்ன வழியிற்றான் செல்லவேண்டுமென்று கட்டுப்படுத்தாமல் இஷ்டமுள்ளவர்களுக்கு மாத்திரம் சௌகரியம் ஏற்படுத்துகிறதேயெனினும், தொன்றுதொட்டு நமது நாட்டில் வழங்கிவரும் மதாசாரங்களுக்கு நேர் விரோதமானதா யிருப்பதால், நமது தேச ஆசாரங்களின் மூலகாரணங்களையும் அவைகளினாலுண்டாகும் நன்மைகளையும் ஆராய்ந்தறியாது மேனாட்டு நாகரிக வழக்கங்களே உயர்ந்தவையென மதித்து அவைகளின்படி ஒழுகும் நம் நாட்டு வாலிபர்கள் அச்சட்டத்தினால் ஏற்படும் சௌகரியத்தைத் தமக்கு உபயோகப்படுத்திக்கொண்டு நாளடைவில் நமது மதாசாரங்களை முற்றிலும் அழித்துவிடுவார்களாதலால் ஆசாரப்பற்றுள்ளவர்கள் அம் மசோதாவை ஆதரிப்பதற்கு இடமில்லை. ஆஸ்திகர் பலர் நிறைந்த அச்சபையாரால் அத்தகைய சட்டம் நிருபிக்கப்படாதென நம்புகிறோம்.

"விவேக போதினி" அநுபந்தம்.



Supplement to the "Viveka Bodhini"

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XIV } துன்மதிஸு ஆடிமீ :: 1921-ம்ஸு ஆகஸ்ட்மீ { பகுதி 2

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

வாடையில் மதனைய ழைத்துற்று
 வால்வளை கலகலெ னக்கற்றை
  வார்குழல் சரியமு டித்திட்டு   துகிலாரும்
மால்கொள நெகிழவு டுத்திட்டு
 நூபுர மிணையடி யைப்பற்றி
  வாய்விட நுதல்மிசை பொட்டிட்டு   வருமாய
நாடக மகளிர் நடிப்புற்ற
 தோதக வலையில கப்பட்டு
  ஞாலமு முழுதுமி கப்பித்த   னெனுமாறு
நாணமு மரபுமொ ழுக்கற்று
 நீதியு மறிவும றக்கெட்டு
  நாயடி மையுமடி மைப்பட்டு   விடலாமோ ?
ஆடிய மயிலினை யொப்புற்று
 பீலியு மிலையுமு டுத்திட்டு
  ஆரினு மழகுமி கப்பெற்று   யவளும்
ஆகிய விதண்மிசை யுற்றிட்டு
 மானின மருளவி ழித்திட்டு
  ஆயுத கவணொரு கைச்சுற்றி   விளையாடும்
வேடுவர் சிறுமியொ ருத்திக்கு
 யான்வழி யடிமையெ னச்செப்பி
  வீறுள அடியிணை யைப்பற்றி   பலகாலும்
வேதமு மமரரு மெய்ச்சக்ர
 வாளமு மறியவி லைப்பட்டு
  மேருவில் மிகவுமெ ழுத்திட்ட   பெருமாளே !

தோகையை விரித்து ஆடும் மயிலேபோன்றவளாய், மயில் பீலிகளினாலும் அழகிய இலைகளினாலுமாகிய ஆடையை யணிந்து, சகல அண்டங்களிலுமுள்ள எல்லோரையும்விட மிக்க அழகுவாய்ந்த யௌவனமுடையவளாய், தினைப்புனத்தில் போடப்பட்ட பரண்மீது நின்று, அருகே கூட்டங் கூட்டமாய் ஓடும் மான்கள் அவள் கண்களின் நோக்கத்தைக்கண்டு அவளும் தமதினத்தைச் சேர்ந்தவளோவென்று மயங்குமாறு சஞ்சல சுபாவமுள்ள அகன்ற கண்களை யுடையவளாய், தினைப்புனத்திலுள்ள பயிரை யழிக்கவரும் பறவைகளைத் துரத்துவதற்குரிய ஆயுதமாகிய கவணை ஓர் கையிற் சுற்றிக் கற்களை யெறிந்து விளையாடும் வேடர்குலச் சிறுமியாகிய வள்ளிநாயகிக்கு, உன் தந்தை மலையரசன் புதல்வியான பார்வதிதேவியாருக்கு அடிமையாகி உங்கள் குலத்துக்கு ஏற்படுத்திய தருமத்துக்கேற்ப, நீயும் அடிமையானதாகச் சொல்லி, அக்குறமகளது பெருமை பொருந்திய பாதங்களிரண்டையும் நினது கரங்களினாற் பிடித்து, என்றும் அழிவற்ற வேதங்களும் தேவர்களும் பூமியைச் சூழ்ந்துள்ள சக்ரவாள பர்வதமும் அறிய அத்தேவியாரது ஆராத காதலான ஒப்புயர்வற்ற பொருளைப் பெற்றுக்கொண்டு விலையடிமைப்பட்டு, அவ்வாறு நீ அடிமைப்பட்டதற்குச் சாக்ஷியமாக மேருமலையில் கல்லில் வெட்டிச் சிலாசாசனம் எழுதுவித்த பெரியோனே ! மந்தமாருதம் வீசும் மாலைப்பொழுதில் விரகதாபமுற்று, கலகலென வொலிக்கும் வெண்சங்க வளைகளை யணிந்துகொண்டும், அடர்ந்து நீண்டு வளர்ந்துள்ள கூந்தலைத் தளரவிட்டு முடிந்துகொண்டும், யாவரும் கண்டு மயல்கொள்ளுமாறு சீலையைத் தளர வுடுத்திக்கொண்டும், கலீர் கலீரெனச் சத்திக்கும் சிலம்புகளை இரு கால்களிலும் அழகாய் அணிந்துகொண்டும், சந்திரமண்டலம்போன்ற முக விலாசத்தினொளியை எடுத்துக்காட்டுமாறு கரிய சாந்துப் பொட்டை நெற்றியி லிட்டுக்கொண்டும் வருகின்றவரும், மாயவுலக வாழ்க்கையாகிய நாடகத்துக்கின்றியமையாதவருமான பெண்கள் மெய்யன்புள்ளவர்போல நடிக்கும் அன்பு வலையில்—மேலான தாயும் என்றுமழியாததாயுமுள்ள பேரின்பத்தை நாடுவதிற் செல்லவொட்டாது மனத்தை வஞ்சித்து இழுக்கும் வலையில் அகப்பட்டு, உலகமுழுவதும் என்னைப் பித்தனென்று இகழுமாறு, வெட்கத்தைவிட்டு, குலத்தினொழுக்கந்தவறி, உலக நீதியை மறந்து, அறிவையிழந்து, என் நிலையினின்றும் இழிந்து, அப்பெண்களுக்கு அடிமையாகும்படி நினது அடிமையாகிய நாயேனைக் கைவிட்டுவிடுதல் தருமமோ ?

நோயாளிக்குத் தெரியும் நோயின் வருத்தம்.

விவேக போதினி

தொ. 14] துன்மதி௵ : : ஆடி௴ [ப. 2

கந்த புராணம்

SKANDA PURANAM

மேற்கூறியவாறு தன் தந்தை பிரமதேவர் தனக்குச் செய்தருளிய மெய்ப்பொருளுபதேசத்தைக் கேட்ட தக்ஷன் முந்தைத் தீவினைப் பயனால் தூண்டப்பட்டு ஆசைவலையிற் சிக்கி தன் தந்தையை நோக்கி, "தந்தாய்! தாங்கள் ஆதிமுதல்வனென வுரைக்கும் சிவபெருமானே பரம்பொருளென அறிந்துகொண்டேன். அப்பெருமானை நோக்கி அருந்தவம் செய்து அவரிடத்தில் வரங்களைப் பெற விருப்பமுற்றேன். ஆதலால் கிருபைகூர்ந்து நான் மிகவும் சிறந்த தவத்தினைப் புரிவதற்குத் தக்க ஓர் இடத்தை அமைத்துத்தரவேண்டும்" என்று சொல்லி வேண்டினான். உடனே பிரமதேவர் தமது மனத்தில் முன்னாளிலுண்டான மானஸ வாவியெனப் பெயர்பெற்ற சலனமற்ற நிர்மலமான அழகிய தடாகத்துக்குச் செல்லும்படி சொல்லி அவனுக்கு விடைகொடுத் தனுப்பினார்.

அவ்வாறே தக்ஷன் அங்கு சென்று, அத்தடாகத்தின் ஓர் சாரலில் அமர்ந்து, காற்று, மழை, வெயில், பனி முதலியவைகளை இலக்ஷியஞ் செய்யாது, ஒருமை மனத்துடன் சிவபெருமானுக்கு மானஸிக அபிஷேகம், அருச்சனை முதலியன செய்து, ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை விதிப்படி ஜபித்து, உடல்மெலிய பாசங்களை நீக்க முயலும் மெய்ஞ்ஞானிகளைப்போல ஆயிரம் வருஷம் அருந்தவம் இயற்றினான். அவன் அங்ஙனம் செய்த சிறந்த தவத்துக்குகந்து சிவபெருமான் உமாதேவியாரோடு வெள்ளிமலைபோன்ற இடபத்தின்மீது எழுந்தருளி அவன் முன்னே தோன்றினார். அதை யுணர்ந்த தக்ஷன் உடனே தனது ஆசனத்தை விட் டெழுந்துசென்று அவரது திருவடிகளை வணங்கி, சிறந்த ஆயிரம் தோத்திரங்களை யுரைத்துப் புகழ்ந்து நின்றான். அப்போது சிவபெருமான், "தக்ஷனே! நினது தவத்தைக்கண்டு மிகவும் மகிழ்ந்தோம். உனக்கு வேண்டியவைகளைச் சீக்கிரம் உரைப்பாயாக!" என்று திருவாய்மலர்ந் தருளினார்.

அப்போது தக்ஷன் செய்தற்கரிய தவத்தைச் செய்திருந்தும் விதிவழியே செல்லும் மதியுடன் எம்பெருமானை நோக்கி,

"நீணிலப் பெருவைப்பு நிகரிலா
வீணை வல்லவ ரேனையர் மேவிய
சேணு மாலயனாருந் திசையுமென்
னாணை செல்ல வளித்தருள் செய்தியால்;
உன்னைவந்து வழுத்துமுயி ரெலா
மென்னைவந்து வழுத்தவும் யானினி
நின்னையன்றி நெஞ்சாலும் பிறர்தமைப்
பின்னை வந்தியாப் பெற்றியு மீதியால்;"—

"அகன்ற பூமியின் கண்ணும், நிகரற்ற வீணை வல்லவர்களான கந்தருவர் முதலாயினோர் உறையும் வானுலகத்திலும், பிரம விஷ்ணுக்களின் உலகங்களாகிய சத்திய லோகத்திலும் வைகுண்டத்திலும் எண்திசைகளிலும் எனது ஆணை செல்லுமாறு வரந்தந்தருள வேண்டும். மற்றும் உன்னை வந்துவணங்கும் உயிர்களனைத்தும் என்னை யடைந்து வணங்கவும், இனி நான் நின்னையன்றி வேறெந்தத் தேவர்களையும் மனத்தினாலும் வணங்காமலிருக்கவும் வரந்தந்தருளவேண்டும்" எனப் பிரார்த்தித்தான்.

பின்னும், "அத்தேவர்களும் அவுணர்களும் யான் கட்டளையிடும் வண்ணம் நடந்து கொள்ளவும், எனக்கு அநேக புதல்வர்களும் புதல்விகளும் உண்டாகவும், உலக மாதாவான பராபரையானவள் எனக்குப் புத்திரியாக வந்து அவதரிக்கவும், தேவரீர் வேதியருருவந் தாங்கி வந்து அத்தேவியைக் காதலித்து மணம்புரிந்து கொள்ளவும் வரந்தந்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தான். அதுகேட்டு பரமேசுவரன், "தக்ஷனே! நல்லது. அவ்வரங்களை உனக்களித்தோம். நீ நன்னெறியில் நின்று ஒழுகும்

வரையில், அச்சீரனைத்தும் நிலைத்திருக்கும்" என்றுரைத்து மறைந்தருளினார்.

பிறகு தக்ஷன் தன் தந்தையாகிய பிரமதேவரை யழைத்து, "தந்தாய்! நிகரில்லாத ஓர் நகரத்தை இவ்விடத்தில் சடுதியில் இயற்றுவீராக!" எனப் பணித்தான். தாம் தமது புதல்வன் முத்தியடைந்துய்யுமாறு திரிபுராந்தகரான சிவபெருமானது நிலைமையின் உண்மையை எடுத்துரைத்தும், அவன் அருந்தவஞ் செய்து முத்தியை வேண்டாது உலகவாழ்க்கையை வேண்டிப் பெற்று, மேன்மேலும் மயக்கம் பெருகும் கெட்ட மனத்துடன் அவ்வாறு கட்டளையிட்டதைக் கேட்ட பிரமதேவர் வருந்தி, பிறகு விதியை விலக்கவல்லவர் யாருமில்லையென தம் மனத்தைத் தாமே தேற்றிக்கொண்டு, தக்ஷமாபுரி என்னும் ஓர் ஒப்பற்ற நகரத்தைச் சிருட்டித்தருளினார். அந்நகரத்தில் தக்ஷன் தனது மாளிகையில் சிங்காதனத்திலேறி வீற்றிருந்தான். தக்ஷனது வரலாற்றைத் தங்கள் குருவான வியாழ பகவானிடத்திலிருந்து தெரிந்துகொண்ட இந்திராதி தேவர்கள் அந்நகருக்குச் சென்று தக்ஷனை வணங்கினார்கள். தேவர்களுக்கு அஞ்சி மேருமலையின் ஒரு புறத்தில் ஒளிந்து வசித்துவந்த அசுராதிபனும் அச்சங்கதியைத் தனது குலகுருவான சுக்கிராசாரியாரினிடமிருந்து தெரிந்துகொண்டு, இந்திரனுக்கும் தலைவனொருவன் ஏற்பட்டதைக் குறித்து மகிழ்ந்து, தனது பயத்தை விடுத்து, தன் சுற்றத்தவர்களுடன் தக்ஷமாபுரிக்குச் சென்று தக்ஷன் பாதங்களை வணங்கினான். பிரமதேவர் முதலிய சகல தேவர்களும் ஏனையோரும் தினமும் தன்னைச் சூழ்ந்து துதிக்க, தக்ஷன் மெய்ப்பொருளை யறியாமல் சகல வுலகங்களிலும் தன் ஆணை செல்ல ஆநந்தமாய் அரசு புரிந்துவந்தான்.

அவ்வாறு அரசுபுரிந்துவருங் காலையில், தக்ஷன் பிரமதேவருடைய பொற்பாதங்களிலிருந்து பிறந்தவளும் அருந்ததியினுங் கற்பிற் சிறந்தவளுமான வேதவல்லி யென்பவளை மணந்து, ஆதிசேடன் ஆயிரம் மணிகளை ஈன்றாற்போல ஆயிரம் புதல்வரைப் பெற்றான். அவர்களுக்கு உபநயனம் செய்து வேதங்களை ஓதுவித்த பின்னர், தக்ஷன் அவர்களை யழைத்து, "எனதருமைப் புதல்வர்காள்! நீங்கள் மானஸவாவிக்குச் சென்று, சிவபெருமானைக் குறித்து அருந்தவம்செய்து, பல உயிர்களையும் படைக்கும் சக்தியை அப்பெருமானிடமிருந்து பெற்றுவாருங்கள்!" என்று சொல்லி அவர்களைத் தவஞ்செய்ய அனுப்பினான். அவர்கள் மானஸவாவிக்குச் சென்று அதன் நீரில் மூழ்கிச் சிவபெருமானை நோக்கிப் பெருந்தவஞ் செய்தனர். அவ்வாறு அவர்கள் நெடுநாள் தவம்புரிந்தபின், நாரதமுனிவர் அவ்விடத்தை யடைந்து, அவ்வாறு வருந்தித் தவம்புரிந்தது யாதுகாரணம்பற்றி யென்று அவர்களை வினவ, அவர்கள் தமது தந்தை தமக்கிட்ட பணி இதுவென உரைத்தார்.

அவர்களது கோரிக்கையைக் கேட்டதும் நாரதர் கைகொட்டி நகைத்து, "சிவபெருமானை நினைந்து வணங்கித் துதித்து அரிய தவத்தினைச் செய்து மூவகைப் பாசங்களும் அகலும் வழியைத் தேடாமல், குற்றத்தையுடைய படைப்புத் தொழிலுக்கா இச்சைகொண்டீர்கள்? அதனால் நீங்கள் பெறக்கூடியவை பிறப்பும் இறப்பும் துன்பங்களுமே. சிருட்டித் தொழிலினையுடைய பிரமதேவர் தமது தலைகளிலொன்று சிவபெருமானால் கொய்யப்பெற்றதும், தாமே பரம்பொருள் என்று அவர் மயங்கி மகாவிஷ்ணுவோடு போர்புரிந்து, அப்போது வானத்திற் றோன்றிய சோதியின் முடியைத் தேடும்பொருட்டு அன்ன வடிவம் பூண்டதும் உங்களுக்குத் தெரியாதா? அனைத்துயிர்களையும் படைக்கும் சக்தியினால் ஒருவர் அடைவது பெருமையன்றி வேறு பயன் யாது? நன்றாயிருக்கிறதென ஒரு பொன் விலங்கினைக் காலிலணிதல் தகுதியோ? எவ்வளவுக் கெவ்வளவு ஒருவர் இன்பத்தினை விரும்புகின்றார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அவருக்குத் துன்பம் வந்துசேரும். இது சத்தியம்! நீங்கள் படைக்குந் தொழிலைச் செய்வீராயின், துன்பக்கடலில் வீழ்வீர்களென்பது திண்ணம். ஆதலால் படைப்புச் சக்தி பெறும் நோக்கத்தைவிட்டு, முத்திவீட்டையும் நோக்கங்கொண்டு முயன்று அதை அடைவீராக!" என்று கூறி அவர்களுக்கு நற்புத்தி புகட்டினார்.

தக்ஷன் புதல்வர்கள் அவரது நற்போதனையைக் கேட்டு, தமது தந்தை தமக்கு விதித்த கட்டளையினும் அம்மகாமுனிவர் கூறிய

நெறியே மேலானதெனத் தேர்ந்து, நாரதரது பாதங்களை வணங்கித் துதித்தார்கள். நாரதர் மிக மகிழ்ச்சிகொண்டு, அவர்களுக்குப் பரமேசுவரனது பெருமையை எடுத்துரைத்து, மோக்ஷ சாம்பிராச்சியத்தை யடையவிரும்பும் தபோதனர்களது நிலைமை யின்னதெனத் தெளிவா யுரைத்து, அந்நெறிக்குரிய மந்திரங்களையும் அனுஷ்டானங்களையும் போதித்து, அவர்களது பழைய நோக்கத்தை யகற்றி, புதிதாக நன்னோக்க மொன்றை அவர்களுக்கு உதவியருளினர். தக்ஷன் புதல்வர்கள் அந்நெறியைக் கடைப்பிடித்தொழுகி, சிவபெருமான் அருள்பெற்று முத்திவீ டேறினர்.

தவஞ்செய்யச் சென்ற தனது புதல்வர்கள் நெடுங்காலம் திரும்பி வாராததைக் கண்டு, தக்ஷன் ஞானதிருஷ்டியினால் பார்த்து, அவர்களுக்கு நேர்ந்தவைகளை யுணர்ந்துகொண்டு, பிள்ளைகளனைவரையும் ஒருங்கே இழந்ததனால் துயருற்று வருந்தி, பின்னும் ஆயிரம் புதல்வர்களைப் பெற்றான். அவர்களுக்கும் உபநயனம் செய்து வேதங்களை ஓதுவித்து, பிறகு அவர்களை அழைத்து, “நீங்கள் மானஸவாவிக்குச் சென்று முக்கணெந்தையாகிய சிவபெருமானை நோக்கித் தவம்புரிந்து சிருஷ்டிக்கும் சக்தியைப் பெற்று வருவீர்களாக!”என்று கட்டளையிட்டான். அவர்களும் தங்கள் சகோதரர்களைப் போலவே மானஸவாவிக்குச் சென்று அருந்தவ மியற்றினர். அவர்கள்பாலும் நாரத மகா முனிவர் தண்ணளிபூண்டு, மானஸவாவியை யடைந்து, அவர்கள்கொண்ட நோக்கத்தின் தீமையை அவர்களுக்கு நன்கு விளக்கிக் காட்டி, முத்திவீ டொன்றே அழியாத தென்றும், யாவரும் அதைப் பெறுவதற்கே பெருமுயற்சி செய்யவேண்டுமென்றும் அவர்களுக்கு ஐயமறப் போதித்து, தக்ஷன் முன்பெற்ற ஆயிரம் புதல்வர்களும் தமது நற்போதகத்தைக் கேட்டு, தங்கள் தந்தை தங்களுக்குக் காட்டிய அஞ்ஞான நெறியை விட்டகன்று, முத்திநெறியிற் பிரவேசித்து முத்தியடைந்ததை அவர்களுக்குத் தெரிவித்தார். அப்புதல்வர்களும் நாரத மகாமுனிவர் உரைத்த வசனங்களைக் கேட்டு, தாம் கொண்ட நோக்கம் தவறென வுணர்ந்து, நாரதரது பாதங்களை வணங்கி, முத்திநெறி யிதுவெனத் தங்களுக்குப் போதித்தருள வேண்டுமெனப் பிரார்த்தித்தார்கள். நாரதரும் சிந்தை மகிழ்ந்து, “சிறுவர்காள்! சிவபெருமானது திருவடிகளை வழிபடும் பாக்கியத்தை அவரது அருளினால் பெற்றவர்கள் அனுஷ்டிக்கும் நெறிகளும் நான்கு, அடையும் பலன்களும் நான்கு. அவைகளுள் ஞானமார்க்கத்திற் செல்லும் பெரியோர் அடைவதுவே மிகவும் உயர்ந்த கதியாம். அக்கதியே முத்தியென்று கூறப்படும். என்றும் அழிவில்லாதவனாய் விளங்கும் சிவபெருமானிடத்து அன்புபூண்டு, நல்வினை தீவினை யென்ற வித்தியாசம் பாராட்டாமல் யாவும் சிவன் செயலேயென்று கருதி தம் செயலழிந்து மெய்ச்சிந்தனை பெற்ற பெரியோர்களுக்கு அம்முத்தியின் பெருமை விளங்குமே யன்றி, தேவர்களாலும் அதன் தன்மையை அறிந்துகொள்ள முடியாது. அந்த ஞான நெறியில் நின்று, மெய்வீடாகிய சிவபெருமானது திருவடி மலர்களை யடைந்த பெரியோர்கள் பின்னர் துன்பத்துக்கு உறைவிடமான பெரிய பிறவிக்கடலில் விழாமல், சொல்லுதற்கரிய நலமாகிய சிவஞானத்தைப் பெற்று அழிவில்லாப் பேரின்பமுற்று அதை எந்நாளும் அனுபவித்துக் கொண்டிருப்பார்கள். ஆதலினால் நீங்களும் அந்த ஞானநெறியில் நின்றொழுகி மேன்மை மிக்க சிவயோகத்தினால் முத்தி வீட்டை அடைவீர்களாக!” என்று சிவாகமங்களுரைக்கும் உண்மைகளனைத்தையும் அன்பு மேலீட்டினால் அவர்களுக்கு உபதேசித்தருளி, பிறகு அவ்விடம் விட்டகன்றார். தக்ஷனது ஆயிரம் புதல்வர்களும் அவருரைத்த உண்மைகளைச் சிந்தையிலிருத்தி, அவர் போதித்தருளிய நெறியில் நின்று, அஞ்ஞான மயக்கத்தைத் தொலைத்தருளும் சிவபெருமானது பேரருளினால் முத்தியாகிய மெய்வீட்டை யடைந்தனர்.

தவஞ் செய்யச் சென்ற தனது புதல்வர்கள் நெடுங்காலம் திரும்பிவாராததைக் கண்டு சிந்தையுற்ற தக்ஷன் அவர்கள் கதி என்ன வாயிற்றென்று ஞானதிருஷ்டியால் நோக்க, அவர்களும் தான் முன் பெற்ற ஆயிரம் புதல்வர்களைப் போலவே நாரத மகாமுனிவரால் ஞானநெறியில் திருப்பப்பட்டு முத்தி யடைந்தார்களென்று கண்டு, புத்திரசோகமடைந்து, மனம் வெதும்பி அம்முனிவரிடத்தில் பெருஞ்சினங்கொண்டு, “பரமசிவனிடத்து வரம் பெறவேண்டித் தவஞ்செய்த என் புதல்வர்களை எனக்கு இல்லாமற்செய்த நாரதன் இனி நாள்தோறும் எண்ணம் மிகுத்து உலகமெங்கும் உழன்று திரியக்கடவான்!” என்று சாபமிட்டு, இனித் தவம்புரிவதற்குப் புதல்வர்களைப் பெறுவதில்லை யென்று நிச்சயித்து, பெண்மக்களையே பெறுவேன் என்று உறுதி செய்துகொண்டு, சுபுத்தி, புத்தி, சுரசை, திருதி, துட்டை, கிரியை, கீர்த்தி, சிரத்தை, இலச்சை, மேதா, கத்தி, சாந்தை,வபு, கியாதி, சம்பூதி,நாரிசன்னதி, மிருதி பிருதி, ஊற்சை, அனசூயை,சுவா,கமை,சுவதை என்னும் இருபத்து மூன்று புத்திரிகளைப் பெற்று, முதற் பதின்மூன்று பெண்களையும் தருமருக்கும், அடுத்த பத்துப் பெண்களையும் முறையே பிருகு,மரீசி,புலத்தியர்,அங்கிரா, புலகர், வசிட்டர், அத்திரி, அக்கினி, கிரது, பிதரா என்னும் பதின்மருக்கும் விவாகஞ் செய்துகொடுத்தான்.

அவருள், பிருகு, விதாதா தாதா என்னும் இரண்டு புத்திரர்களையும், இலக்குமியையும் பெற்று, இலக்குமியை மகாவிஷ்ணுவுக்கு மணஞ்செய்து கொடுத்தார். பிதரா, மேனை பூமி என்னும் இரு பெண்களைப் பெற்றார். அந்த மேனையை இமயமலையரசன் மணஞ்செய்துகொண்டான். பூமியை மேருமலை மணஞ்செய்து மந்தரகிரியைப் பெற்றது. அம்மந்தரம் தவஞ்செய்து சிவபெருமான் தன்னிடத்தில் என்றும் எழுந்தருளியிருக்கப் பெற்றது. மேருமலை பின்னர் வேலை யென்பவளைப் பெற்று சமுத்திர ராஜனுக்கு மணஞ்செய்து கொடுக்க, அவன் சரவணியென்னும் பெண்ணைப் பெற்று, பிராசினன் என்பானுக்கு மணஞ்செய்து கொடுத்தாள்.

மற்றவர்களும் பல மக்களைப் பெற்று தக்ஷனது வம்சம் தழைத்தோங்கச் செய்தனர்.

ஆரியமத உபாக்கியானம்.—இரண்டு பாகங்களும் ரூ. 1-2-0. ஒவ்வொரு பாகத்திலும் நமது புராணங்களிலிருந்து எடுத்தெழுதப்பட்ட 54 சிறந்த நீதிக்கதைகள் அடங்கி யிருக்கின்றன. ஒவ்வொரு பாகத்துக்கும் அநேகம் அழகிய ஆப்டோன் படங்கள் உண்டு. இவை ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்கவேண்டியவை.

கிராம ஐக்கியம்

RURAL CO-OPERATION

இந்த சமாசாரத்தைப்பற்றி யாம் எழுதத் துணிந்ததற்குச் சில முக்கிய காரணங்களுண்டு. அவை யாவையெனில், பின்வருவனவேயாம். “திரும்பவும் நிலத்தினிடம் வேலை செய்யுங்கள். பண்டகசாலைகளிலும், இயந்திர சாலைகளிலும் உழைத்தது போதும்” என்று ஐரோப்பாவில் சொல்லத் தொடங்கியிருக்கிறார்கள். மேலும், நகரத்தையும் நகரக் கைத்தொழில்களையும், நகரச் செல்வத்தையும் விருத்திசெய்யும் யத்தனங்களில், கிராமத்திற்கு துன்பங்களை விளைவிக்கும் வழிகளைத் தேடுகிறோம். ஐரோப்பியர்களே நிலத்துக்குத் திரும்புங்கள் என்று சொல்லுகையில், நாம் கிராமங்களைக் காடாக்கி, நகரத்தை நாடுகின்றோம். அது சரியா, சரியல்லவா என்பதையே நாம் இங்கு பரிசோதிக்கப்போகிறோம். மேலும், கிராமத்தின்கண் தோன்றும் சில குறைகளை எவ்வாறு நிவர்த்திக்கலாம் என்பதையும் பார்ப்போம். முதல் முதலில் கிராமத்தைச் சீர்படுத்தி, அதன் வாழ்வை நீடிக்கச் செய்ய வேண்டியதன் காரணத்தை அறிவோம். வீடு வாசல்களையும், உற்றார் உறவினரையும் விட்டு, ஜீவனம் எவ்வளவு கஷ்டமாயிருந்த போதிலும் பட்டணங்களில் வசிக்க ஜனங்கள் போவது உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற விஷயமே. மேற்குத் தேசங்களில், நகரம் நிறைவதும், கிராமம் பாழடைவதும் சகஜமாய்ப் போயிற்று. கிராமத்தின் சக்தி முழுவதும், நகரத்தின் சக்தியையும், செல்வத்தையும் அதிகரிப்பதற்காக உபயோகப்படுத்தப்படுகிறது. கிராமத்திற்குள்ள சுபாவமும், பழக்க வொழுக்கமும் மாறுவதோடு, ஒவ்வொரு கிராமமும் நகரத்தின் சிறிய நகங்கள்போல் காணப்படுகின்றன. இப்படிச் செய்வது பிசகாகும். மேல் நாட்டிலேயே இதன் இழுக்கை அறிந்துகொண்டார்களாயின், நம்மவர்கள் மேனாட்டு வழக்கங்களை அனுசரிப்பதும், மேனாட்டாரைப்போல் கிராமத்தை அழித்து நகரத்தை விருத்திசெய்வதும், எவ்வளவு பிசகென்று யோசித்துப்பாருங்கள். எப்பாடுபட்டாவது கிராமம் க்ஷீணித்துப்போகாவண்ணம் செய்யவேண்டுவது நம் கடமை. பூர்வ

கால முதல், இந்தியாவில் கிராமமே அபிவிருத்தியின் மூலஸ்தானமா யிருந்திருக்கிறது. ஆதலால் கிராமம் சீர்பெறுதல் அத்தியாவசியமானது.

இது நிற்க, இந்தியாவில் விவசாயமே முக்கியமான தொழில். சுமார் நூற்றுக்கு எழுபது பேர்கள் பூமியிலிருந்து உண்டாகும் ஐசுவரியத்தைக்கொண்டே ஜீவனம் செய்கிறார்கள். இப்பூலோகத்தில் காணப்படும் விவசாயிகளுக்குள் இந்தியக் குடியானவர்களே மிகவும் உழைப்பாளிகள். ஏதுவரினும், எந்தக் கஷ்டம் நேரிட்டாலும், எத்துன்பம் விளைந்தாலும் தொன்றுதொட்டு அனுசரித்துவந்த தொழிலை விடமாட்டார்கள். நிரம்பவும் சாமர்த்தியமும், பொறுமையுமுடையவர்கள். ஆனால் தங்கள் நிலத்தைச் சீர்திருத்தவாவது, புது வழிகளினால் உரப்படுத்தவாவது சக்தியும் தைரியமும் அற்றவர்களா யிருக்கிறார்கள். உண்ணப் போதுமான உணவின்றி, படுக்கப் பாயின்றி, உடுக்க ஆடையின்றி, தரித்திரத்தினால் பீடிக்கப்பட்டு, தங்கள் “வேலையை” குறைந்த கூலிக்கு விற்றுவிடுகிறார்கள். எந்நேரமும் வறுமையென்னும் பிணியால் பீடிக்கப்பட்ட இந்தியர்களின் ஸ்திதியை எவ்வாறு நிவர்த்திக்கலாம் என்று பார்ப்போம்.

இங்கிலாந்து முதலிய மேல் நாடுகளில், வேலையாட்களுக்கும், தனிகர்களான யந்திரசாலை அதிகாரிகளுக்கும், சதா மனஸ்தாபம் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது யாவரும் அறிந்த விஷயமே. இப்பேர்ப்பட்ட சண்டைகள் இதுவரையில் இந்தியாவில் காணப்படாமலிருந்தன. கொஞ்சகாலமாய் மனஸ்தாப முண்டாய்க் கொண்டிருக்கிறது. இதில் ஐசுவரியத்தைத் தவிர, மதம், ஆசாரம், ஒழுக்கம் முதலியன சம்பந்தப்பட்டிருப்பதனால் யாம் இங்கு அதைப்பற்றி அதிகமாய் விவரிக்கப் போகிறதில்லை. மேலும் சண்டையைப் பற்றிப் பேசுவதும் எழுதுவதும் நமக்கு இன்ப மளிக்கவில்லை. இங்கிலாந்தில் வெகு காலமாகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த வேலையாட்கள் கடைசியில் ஒரு உபாயம் கண்டுபிடித்தார்கள். ஓரேகாலத்தில் ஆயிரக்கணக்கான வேலையாட்கள் தத்தம் வேலைகளிலிருந்து நின்றுவிடுகிறதென்றும், குறைகளை நீக்கும் வரையில் வேலைக்குப் போவதில்லையென்றும் கங்கணங் கட்டிக்கொண்டார்கள். இவ்வாறு செய்து, தங்கள் ஸ்திதியைக் கொஞ்சம் சீர்படுத்திக்கொண்டார்கள். ஆயினும் இப்படி அடிக்கடி செய்வது உசிதமல்ல. இதைச் சென்ற நூற்றாண்டின் கடைசியில் அநேகர் அறிந்துகொண்டார்கள். சண்டை செய்து ஜயிப்பதினும் ஐக்கியமாய் ஒத்துவாழ்தலே வேலையாட்களுக்கும், வேலை வாங்குபவர்களுக்கும் நலத்தைக் கொடுக்குமென்பதை எல்லோருக்கும் எடுத்துரைத்தார்கள். புத்தக மூலமாகவும் பிரசங்க மூலமாகவும், இந்த உண்மையைப் பிரசுரப்படுத்தினார்கள். சண்டையிடுவது மேல்நாட்டவர்களுக்கே அரோசிகமா யிருப்பின், நமக்கெவ்வா றிருக்க வேண்டும்? நம் நடை உடை பாவனைகளிலிருந்தும், வழக்கங்களிலிருந்தும் நாம் அறிய வேண்டிய நீதி ஒன்றே. அஃதாவது, ஐக்கியம். நம்முடன் கூடப்பிறந்த குணம் இது. புத்தகங்களைப் படிக்காமலே நாம் அறிந்துகொள்ள வேண்டிய விஷயமிது. இப்பொழுது கவர்ன்மெண்டார் ஏற்படுத்திய ஐக்கிய சங்கங்கள் உண்மையில் வளர்ந்தோங்க வேண்டுமானால், முக்கியமாக உண்மை, பரஸ்பர நம்பிக்கை, யோக்கியதை முதலிய குணங்கள் வேண்டும். அவைகள் இந்தியாவில் ஏராளமாகக் காணப்படுகின்றன. இந்தியத் தபால்முறையே இதற்கு ஒரு ருஜுவாகும். நம் தேசத்துத் தபால் ஒழுங்கு உலகத்திற்குள் நிரம்பவும் மலிவும், இலகுவும், நம்பத்தக்கதுமானது. இதற்குக் காரணம் இந்திய தபாற்காரனது குணாதிசயமே. இங்கிலாந்திலோ தாபாற்காரனிடம் பணத்தை ஒப்புவிக்கப் பயப்படுகிறார்கள். ஒப்புவித்தால் அடுத்த கள்ளுக்கடையில் அதிசீக்கிரம் அதைச் செலவழித்துவிடுவா னென்ற பயத்தினாலேயே வி. பி. முறை அங்கு ஏற்பாடுசெய்யப்படவில்லை. நான்கு பேர்கள்கூடி ஒரு காரியத்தைச் செய்வதென்ற ஏற்பாடு நம்முள் பதிக்கப்பட்டிருக்கிறது. மேல்நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட “சுயநல அபேக்ஷை” நம்மைக் கெடுத்து, நம்முடைய குடும்பங்களை வேரோடு களையாமல் இதுவரைக்கும் பாதுகாத்தவை நம்முடைய கோட்பாடுகளே. நம்மையும், நம் நாகரிகத்தையும் காத்த கொள்கையைக் கைவிடுவது நன்றன்று. அதுவே நமக்கு வருங்காலத்தில் சுகத்தையும் சந்தோஷத்தையும் தரப்போகிறது. ஆங்கிலேயர் எடுத்துரைத்துத்தான் நாம் தெரிந்துகொள்ளவேண்டிய நூதனக் கோட்பாடல்ல இந்த ‘ஐக்கியம்’. மேலும் ஹென்ரி உல்ப் ஐக்கியத்தைப்பற்றிப் பின்வருமாறு எழுதியிருக்கிறார். “இந்த ஐக்கியமென்னும் கொள்கை இந்தியாவிலூன்றிச் சகல துன்பங்களையும் அறுத்தெறியும். அது அந்நாட்டோடு பிறந்தது. அதைக் கொண்டுபோய் அவர்களுக்கு ஊட்டவேண்டிய அவசியமில்லை.”

இந்தப் புதிய உபாயத்தை நாம் அனுசரிக்க யோக்கிதையுள்ளவர்களா வென்று இதுகாறும் பரிசோதித்தோம். இனி இந்தப் புதிய உபாயத்தை எவ்வாறு அனுசரிப்பதென்பதையும், யார்யாருக்கு அது சுகத்தைக் கொடுக்கும் என்பதையும் யோசிப்போம்.

இக்கொள்கை விவசாயிகளுக்கே முதல் முதலில் உபயோகமானது. ஏனெனில், இந்தியாவில் எங்கே பார்த்தாலும் பெரும்பான்மையர் ஐந்து ஏகருக்கு உட்பட்ட சொத்துடையவர்களா யிருக்கிறார்கள். கோடானுகோடி சிறு துண்டு நிலங்கள் காணப்படுகின்றன. இத்துண்டுகளில் ஒன்றைக்கொண்டு ஜீவிக்கும் விவசாயினுடைய ஸ்திதியை நோக்குவோம். தரித்திரத்தினால் பீடிக்கப்பட்டு, பசியின் கொடுமை பொறுக்காது, சதா சர்வகாலமும் கஷ்டப்படுகிறான். தன் நிலத்தைச் சீர்திருத்தும் யோக்கியதையும், சக்தியுமற்றவனாகத் தவிக்கிறான். நூதன முறைகள் எதுவும் செய்யத் திறமற்றவனாய், சான்றோர்கள் சென்றவழியே செல்லுகிறான். ஆயிரம் வருஷங்களுக்கு முன்னர் உபயோகித்த உரத்தையும், கருவிகளையுமே இன்னும் உபயோகிக்கிறான். அபிவிருத்திக்குச் சாதகமான பரீக்ஷைகள் ஒன்றும் செய்து பார்க்கத் தைரியமற்றவனாக இருக்கிறான். இது நிற்க, தேசத்தின் புராதன மதமும், வழக்க ஒழுக்கங்களும், அடிக்கடி அவனைப் பையை அவிழ்த்துப் பணத்தைக் கொட்டச் செய்கின்றன. இரண்டு பெண்களுக்குக் கலியாணம் செய்து, மாப்பிள்ளையைத் தீபாவளிக்கு வரவழைத்தாலோ உடனே திவாலாகிவிடுகிறான். போதாக்குறைக்கு நியாயஸ்தலத்துப் போகிற செலவும் சேர்ந்துகொண்டுவிட்டால், கேட்கவே வேண்டாம் அவன் துன்பத்தை. இவைகளையெல்லாம் சமாளிப்பதற்காக வேண்டி, நாட்டுக்கோட்டையார், சாவகார் முதலியவர்கள் கையில் அகப்பட்டுவிட்டாலோ, அவன் கதி அதோகதிதான்.

உலகமுழுவதும் வறுமை சகஜமாயிருக்க, ஏன் இவ்வளவுதூரம் இந்தியாவைப்பற்றி மட்டும் விவரிக்கவேண்டும் என்ற கேள்வி பிறப்பின், நாம் விடையளிப்பது இதுவே. “இந்தியாவில் காணப்படும் வறுமையே வறுமை.” வர்த்தகத்திலும், நாகரிகத்திலும் வெகுதூரம் முன்னுக்குச்சென்றுவிட்டதாகப் பெருமைபாராட்டும் இங்கிலாந்திலும் வறுமையின் கொடுமை மிகுதியாகக் காணப்படுவது வாஸ்தவமே. ஆயினும், அது இந்தியாவில் காணப்படும் வறுமைக் கீடாகாது. அத்தகைய வறுமை 17-வது, 18-வது நூற்றாண்டுகளில் அயர்லாந்து தேசத்துக் குடியானவர்களால் மாத்திரம் அனுபவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது அவர்கள் ஸ்திதி எவ்வளவோ மாறிப்போய்விட்டது. நாம் மட்டுமே பின்தங்கியிருக்கிறோம். ஈவு, இரக்கம், பச்சாத்தாபமற்ற கன்னெஞ்சுடைய சத்துருக்களின் கையிலகப்பட்டு, இந்தியக் குடியானவன், சொத்து, மானம், சுதந்தரம் மூன்றையும் இழந்து வருகிறான். கரையேற மார்க்கமின்றி இன்சால்வென்ஸி என்கிற மடுவில் மூழ்கிக்கொண்டேயிருக்கிறான். இப்பேர்ப்பட்ட குடியானவனுக்குத் தேறுதலையும் சீர்திருந்த வழியும் உண்டோ என்று விசாரிப்பின், ரப்பேய்ஸன் பின்வருமாறு விடையளிக்கிறார். “பரஸ்பர ஒத்தாசையே இதற்கு மருந்து. இந்த மருந்து தத்கால உபசாந்தியல்ல ; உள்ளே குடி கொண்டிருக்கும் வியாதிகளை வேரோடு களைந்தெறிய வல்லது ; ஐக்கிய நாணயச் சங்கங்களே கைகண்ட ஔஷதங்களாகும்.”

இந்த ஐக்கிய நாணயம் யாதென்று விசாரிப்போம். ஒரு விவசாயியை அல்லது ஒற்றைக் குடியானவனை அநேகர் நம்பமாட்டார்கள். சாதாரணமாக அவனுக்கு நாணயம் கிடையாது. அவனுக்கு இலகுவில் ஒருவரும் கடன் கொடுக்கமாட்டார்கள். அவனுக்கு வாங்கிய கடனைத் திருப்பியடைப்பதற்கு வேண்டிய சக்தியும், சாமர்த்தியமும், தைரியமுமிருக்கலாம். இருந்தும் அநேகர் அவனை நம்பமாட்டார்கள். மோட்டார் வண்டியும், இரட்டைக் குதிரை சார்ட்டும் வைத்துக்கொண்டு எல்லோரையும்

மயக்கிக் கண்ணில் மண்ணைப்போடும் பெரும் போக்கிரிகளையும், டம்பாச்சாரிகளையும் நம்புவார்கள். உண்மையில் யோக்கியனாக விருக்கும் எளிய உழைப்பாளியை நம்பமாட்டார்கள். இது உலக வழக்கமாய்ப் போயிற்று. நாட்டுக்கோட்டையாரும், மார்வாடிகளும் மாத்திரமே இந்த எளியவர்களுக்குக் கடன்கொடுக்கச் சம்மதிக்கிறார்கள். ஏனெனில், இவர்களிடமிருந்து எப்படியும் பணத்தை வாங்கிவிடலாமென்ற தைரியம் அவர்களுக்கு உண்டு. மேலும் முதல் வருஷத்திய வட்டியைப் பிடித்துக்கொண்டுதான் பாக்கியைக் கடனாகக் கொடுக்கிறார்கள். உதாரணமாக, நூறு ரூபாய் கடன் வாங்கினால், நூற்றில் முதல்வருஷ வட்டி முப்பத்தாறு போக, பாக்கி 64 ரூபாய்தான் கைக்கு வரும். குறிப்பிட்ட காலாவதி ஆவதற்கு முன், சுமார் 100 தடவை கடன்வாங்கினவனைக் காணும்போதெல்லாம் ஞாபகப்படுத்துவார்கள். காலதேச வர்த்தமானத்தைப் பேசியாவது வட்டியும் முதலுமாகத் திருப்பி வாங்கும் உபாயங்களால், நக்ஷத்திரய்யனையும் நல்லவனாக்கி விடுவார்கள். தப்பித் தவறி அவஸ்தை பொறுக்காது, விஷம்போல் ஏறும் வட்டி கொடுக்கச் சக்தியில்லாது, இன்ஸால்வெண்ட் மனு போட்டுவிட்டால், இராப்பகலாக குலம் நசிக்கச் சபித்துவிடுவார்கள். இந்த யூதர்களை அண்டுபவர்களின் கதியிதுவாகும். பணமில்லாமல் ஒரு வேலையும் செய்யமுடியாது. பணக் குறைவினால் மார்வாடியினிடம் போனாலோ இக்கதி வாய்க்கிறது. ஆனால் பத்து மனிதர்கள் சேர்ந்து ஒருவர்க்கொருவர் ஜாமீனாக நிற்பின், நல்ல சிந்தனையுள்ள தனவான் எவனும் கடன்கொடுக்கத் தாமதிக்கமாட்டான். இவ்விஷயங்களில் முக்கியமாக வேண்டுவது "நாணயமே." எளிய குடியானவன் ஒருவனுக்குச் சுயமாக "நாணயம்" இல்லாவிட்டாலும், பத்துப் பேர்கள் அவனுடன் கூடி அவன் யோக்கியதைக்கு ஜவாப்தாரிகளாக நிற்பின், அவனிடம் உடனே "நாணயம்" பிறந்துவிடும். இப்படிக் கிராமத்தார் சேர்ந்து வாழ்வதே, "ஐக்கிய நாணயச் சங்கத்தின்" காரணமாகும். ஒரு கிராமத்தில் பாங்கியில்லாமற்போனாலும், பாங்கியிருந்து விவசாயிகளுக்கும், மற்றுமுள்ள குடிகளுக்கும் தக்க உதவி புரியாமற்போனாலும், உடனே ஓர் ஐக்கிய நாணயச் சங்கம் ஏற்படுத்தவேண்டும். கிராமத்தில் ஏற்படுத்தப்படும் சங்கத்தில், "பூர்த்தி ஜவாப்பு" ஆதாரமாக இருக்கவேண்டும். இதை ஆங்கிலேய பாஷையில் "அன்லிமிடெட் லயபிலிடி பேஸிஸ்" என்பார்கள். அஃது யாதெனில், அந்தச் சங்கத்தின் மெம்பர்கள் ஒவ்வொருவரும், தத்தம் சொத்துக்களைப் பூராவாக ஜாமீன் காட்டுகிறார்கள். சங்கத்திற்கு நஷ்டமேற்பட்டால், சங்கத்தினின்று பணம் வரவேண்டிய வெளிக்கடன்காரர்கள், ஒவ்வொரு மெம்பரின் ஐவேஜியின் பேரிலும் கோர்ட்டில் தாவா செய்யலாம். அச்சங்கத்தில் உண்டாகும் லாபநஷ்டம் எல்லா மெம்பர்களையும் சேர்ந்தது. இந்த மாதிரி "பூர்த்தி ஜவாப்பின்" பேரில் ஏற்படுத்தப்படும் சங்கங்களின் பிரயோசனத்திற்கு அளவில்லை. அனைவரும் சேர்ந்து கொடுக்கும் ஜாமீனுக்கு எப்படிப்பட்ட கோடீசுவரனுடைய ஜாமீனும் ஈடாகாது. கடன் வாங்கவேண்டியவன் மார்வாடிவீட்டிற் புகாமலே, குறைந்த வட்டிக்குச் சங்கத்திலிருந்து வாங்கலாம். அந்தந்த கிராமங்களிலுள்ளவர்கள் மாத்திரமே மெம்பர்களாயிருக்க அருகதையுள்ளவர்களானபடியால், ஒவ்வொரு மெம்பரின் யோக்கியதையும் அனைவருக்கும் தெரியும். மேலும், நல்லவழியிற் செலவழிப்பதற்கன்றி துர்க்கிருத்தியங்களுக்காவது டம்பச்செலவுக்காவது கடன்கொடுப்பதில்லை. ஆதலால், பணத்தின்மேல் கருத்தை உண்டுபண்ணுகிறது; உதாரகுணத்தைக் கண்டித்து அடக்குகிறது. ஒவ்வொரு மெம்பரின் பிரவேச விண்ணப்பமும், கடன் கேட்கும் விண்ணப்பமும் இரண்டு மெம்பர்களால் கையொப்பமிடப்படவேண்டுமாகையால், அயோக்கியர் உள்ளே பிரவேசிப்பதும், வீண் செலவுக்குக் கடன் வாங்குவதும் மட்டுப்படுகிறது. எளியவர்களின் சிறு முதல்களிலிருந்து, பெரிய முதல் திரட்டலாம். ஏழைகள் கஷ்டப்படுங்காலத்துகுறைந்த வட்டிக்குக் கடன்கொடுத்து சமயத்தில் உதவி புரியலாம். யூதர்களின் கொடுமையால் பாதிக்கப்படும் கைத்தொழிலாளியைத் தப்புவிக்கலாம். பண்டையகாலம் முதல் வழங்கிவந்து இப்பொழுது க்ஷீணதசையடைந்திருக்கும் குடிசைக் கைத்தொழில்களை உயிர்ப்பிக்கலாம். கையில் கால்காசு இல்லாமல் பிறர் பணத்தைக்கொண்டு லேவாதேவிசெய்து ஆயிரக்கணக்கான குடும்பங்களை அழிக்கும் ஆர்பத்னட் போன்றவர்களை ஆதரிக்கவேண்டிய அவசியமில்லை. மற்ற நிதிகளில் நடக்கும் மோசங்களைத் தவிர்க்கலாம். மெம்பர்கள் தத்தம் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ளுவதில் மிகவும் ஜாக்கிரதையாக விருக்கிறார்கள். கடன்கொடுக்கிறவர்களே கடன் வாங்குபவர்களா யிருப்பதனால், பணத்தை சர்வஜாக்கிரதையாய்ச் செலவழிக்கிறார்கள். ஒவ்வொரு மெம்பரின் ஐவேஜியும் கடன்களும், ஒரு புத்தகத்தில் பதிவுசெய்யப்படுகின்றன. ஆதலால் இலகுவில் ஏமாற்றமுடியாது. இச்சங்கத்தில் ஒரு காரியமும் இரகசியத்தில் செய்யப்படுகிறதில்லை. நஷ்டத்தை விளைவிக்கும் உபாயங்கள் எதுவும் ஆதரிக்கப்படமாட்டா. சமயத்துக்கு வேண்டிய கனத்த கையிருப்புப்போக பாக்கியை கொஞ்சகாலத்தில் திருப்பிக் கொடுக்கக்கூடிய மெம்பர்களுக்குக் கொடுக்கிறார்கள். எட்டு வருஷம், பத்து வருஷம் பொறுத்துத்திருப்பிக்கொடுக்கும்படியான நீடித்த கடன் கொடுக்கிறதில்லை. இப்பேர்ப்பட்ட சங்கங்களின் நன்மை நன்றாகப் புலப்படுகிறது. ஐக்கிய நாணயச் சங்கம் ஏற்பட்ட கொஞ்சகாலத்திற்குள்ளேயே வட்டி குறைந்துவிட்டது. இந்த மாதிரி சங்கங்கள் ஏற்படுவதற்கு முன்னர், இந்திய ராஜதானிகளிலெல்லாம் பின்வரும் வட்டித்தாரணை வழங்கி வந்தது.

பம்பாய், மதராஸ்	15%
மைசூர்	$12\frac{1}{2}$%
மத்திய மாகாணங்கள்	20%
வங்காளம்	24%
அஸ்ஸாம்	38%
பஞ்சாப்	25%
ஐக்கிய மாகாணங்கள்	35%

நாட்டுக்கோட்டையாரும் குஜராத்தியாரும் நூற்றுக்கு 36 முதல் 43 வரையில் வட்டி வாங்கி வந்தார்கள். இப்பொழுது எங்குபார்த்தாலும் அநேகமாக நூற்றுக்கு 12-க்கு மேலில்லை. ஒருகால் ஒரு கிராமம் நிரம்பவும் சிறியதாயிருந்தாலும், பாங்கி யேற்படுத்தச் சாதனங்க ளில்லாவிட்டாலும், "கோவில்நிதி" ஏற்படுத்தலாம். இதைப் பின்னர் விவரிப்போம்.

ஸர் மானியர் வில்லியம்ஸ்

SIR MONIER WILLIAMS

ஐரோப்பிய ஸம்ஸ்கிருத வித்துவான்களில் மிகவும் புகழ்பெற்றவரான ஸர் மானியர் வில்லியம்ஸ் என்பவர் பம்பாயில் 1819-ம் வருஷத்திற் பிறந்தார். அவர் இங்கிலாந்தில் படித்துக்கொண்டிருக்கையில், 1839-ம் வருஷத்தில் இந்தியா கம்பெனி ஸிவில் சர்வீஸில் குமாஸ்தாவாக நியமிக்கப்பட்டு, ஹேய்லிபெரி என்னும் பட்டணத்தில் அவ்வேலைக்காக 1840-ம் வருஷத்தில் படித்துக்கொண்டிருந்தார். அப்போது இந்தியாவுக்குக் குமாஸ்தாவாகச் செல்லும் எண்ணத்தை விடுத்து, ஆக்ஸ்போர்டு நகரத்தில் யூனிவர்ஸிடி காலேஜில் படிப்பதற்காகச் சேர்ந்தார். அங்கு ஸம்ஸ்கிருத பாஷை பயின்று, 1846-ம் வருஷத்தில் பாடென் ஸ்காலர் என்னும் பொருளுதவி பெறும் சிறந்த மாணாக்கராகி அப்பாஷையில் மிகுந்த தேர்ச்சியடைந்தார். 1844-ம் வருஷம் முதல் 1858-ம் வருஷம் வரையில் அவர் ஹேய்லிபெரியில் ஸம்ஸ்கிருதம், பர்ஷியன், ஹிந்துஸ்தானி இவைகளைப் போதிக்கும் ப்ரொபெஸராக விருந்து, 1860-ம் வருஷத்தில் ஆக்ஸ்போர்டு கல்லூரியில் ஸம்ஸ்கிருதம் போதிக்கும் பாடென் ப்ரொபெஸர் என்னும் சிறந்த போதகராக வானார். 1883-ம் வருஷத்தில் ஆக்ஸ்போர்டு நகரத்தில் இந்தியன் இன்ஸ்டிடியூட் என்னும் இந்திய விஷய ஆராய்ச்சிக் கல்லூரியை ஸ்தாபிப்பதில் அவர் மிகுந்த உதவிபுரிந்தார். அவர் 1882-ம் வருஷம் முதல் 1888-ம் வருஷம் வரையில் பால்லியல் காலேஜ் ஸகாவாகவும், 1892-ம் வருஷத்தில் ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடி காலேஜ் கௌரவ ஸகாவாகவுமிருந்து, வித்துவான்களால் சிறந்த மரியாதை பெற்றார். 1875-ம் வருஷத்தில் ஆக்ஸ்போர்டு ஸர்வகலா சங்கத்தாரால் டி. ஸி. எல். என்னும் உயர்ந்த பட்டம் அவருக்கு அளிக்கப்பட்டது. 1886-ம் வருஷத்தில் நைட் என்னும் உயர் பதவியும், 1887-ம் வருஷத்தில் கே. ஸி. ஐ. இ. என்னும் பட்டமும் அவருக்கு அளிக்கப்பட்டன. 1899-ம் வருஷத்தில் அவர் இவ்வுலகத்தை விட்டு அகன்றார்.

அவர் பல உயர்ந்த நூல்களை யியற்றி உலகத்

துக்கு, அதிலும் நமது தேசத்துக்கு விசேஷமாகவும், பேருதவி புரிந்திருக்கிறார். அவர் ஸம்ஸ்கிருத பதங்களுக்கு ஆங்கிலத்தில் அருத்த மெழுதியுள்ள அகராதி நெடுநாள் பொறுமையுடன் விரிவான ஆராய்ச்சிசெய்ததின் பலனாக உதித்து அழிவற்ற புகழ் பெற்றிருக்கும் சிறந்த நூலாக விருக்கிறது. அதன் முகவுரையில் அவர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

"அதுவுமன்றி, சில விஷயங்களில், அதிலும் விசேஷமாக இயற்கை, இல்லற அன்பு இவைகளின் காவிய வருணனைகளில், இந்திய நூல்களை (முற்காலத்தில் நாகரிகத்தில் சிறப்புற்று விளங்கிய) ரோம், கிரீஸ் என்னும் நாடுகளின் நூல்களில் மிகவும் சிறந்தவைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்திய நூல்கள் அவைகளுக்கு ஒரு சிறிதும் தாழ்ந்தவைகளாகக் காணப்படவில்லை. அது மாத்திரமன்று; கல்வியில் தேர்ந்த ஹிந்துக்கள் இலக்கண விஷயத்தில் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டவாறு ஒப்பற்ற தேர்ச்சியடைந்திருந்ததுமன்றி, வானசாஸ்திரம், ஆல்ஜிப்ரா என்ற ஓர்வகைக் கணிதசாஸ்திரம், கணிதசாஸ்திரம், மரஞ் செடிகொடிகளைப்பற்றிய சாஸ்திரம், வைத்தியசாஸ்திரம் இவைகளிலும், ஐரோப்பாவில் பண்டையகாலத்தில் முதன் முதல் மிகுந்த நாகரிகம் பெற்ற தேசத்தவர்கள் அச்சாஸ்திரங்களைப் பயிலத் தொடங்கு முன்னமேயே, தேர்ச்சி யடைந்திருந்தார்களென நம்புவதற்கு இடமிருக்கிறது."

ஆங்கிலேய பதங்களுக்கு ஏற்ற ஸம்ஸ்கிருத பதங்களைப் போட்டு அவர் இயற்றியிருக்கும் மற்றொரு அகராதியும் மேற்கூறிய அகராதியைப் போலவே மிகவும் உபயோகமுள்ளது.

அவர் பௌத்த மதத்தைப்பற்றி எழுதியிருக்கும் நூல் மிகவும் உபயோக முள்ளதாயிருப்பதுடன், அவரது விரிவான ஆராய்ச்சியையும் மிக்க கல்வித்திறத்தையும் விளக்குகின்றது. புத்தரைப்பற்றி அவர் பின்வருமாறு கூறுகிறார்:—

"புத்தர் தாம்பெற்ற அநுபூதி தமக்குள்ளே தோன்றிய ஓர் ஞானவொளியைத் தவிர வேறொன்று மில்லை யென்றும், தமது ஆராயுந் திறமையினாலும், அதற்குமுன் எல்லாவித உருவங்களையும் தாங்கி எண்ணிறந்த ஜன்மங்களெடுத்து அந்தப் பிறவிகளில் நரக தண்டனைகளை யொத்த சிக்ஷைகள் பெற்ற நீண்ட பழக்கத்தினாலும் உதவிபெற்ற தமது இயற்கையுணர்வினாலேயே அந்த ஞானவொளி உற்பத்தியாயிற்றென்றும் எப்போதும் வற்புறுத்திக் கூறிக்கொண்டேயிருந்தார்."

இந்நூலில் ஸர் மானியர் வில்லியம்ஸ் புத்தருடைய வாழ்க்கையைப் பற்றியும், புத்தர் தம்மைத் தாமே அறிந்துகொள்ள முயன்று சித்தி யடைந்ததைப்பற்றியும் வித்தரித்துக் கூறியிருக்கிறார். கருமம், பக்தி, ஞானம் என்னும் மூவகை நெறிகளைப்பற்றி ஹிந்துக்களுக்குள்ள கொள்கையை அறிவினால் முத்தி பெறலாமென்னும் பௌத்தக்கொள்கையுடன் ஒப்பிட்டு, அவைக ளிரண்டுக்குமுள்ள வேறுபாடுகளை நன்கு விளக்கியுள்ளாரே யாயினும், பௌத்தமத வேதாந்தத்தைப் போலவே ஹிந்துமத வேதாந்தமும் துக்கத்தை நீக்குவதற்கு வழி தேடுவதிலேயே முயலுவதாகவும், முத்தி பெறுவது சற்றேறக்குறைய அசாத்தியமென்றே கூறுவதாகவும் தவறான அபிப்பிராயங்கொள்ளுகிறார். உபநிஷதங்களும், இந்து மதத்துக்குரிய பல்வகைப்பட்ட வேதாந்த சித்தாந்தங்களும் உண்மையை அறிவதைத் தமது பிரதான நோக்கமாகக் கருதாமல், பன்முறை உலகத்திற் சனித்து அச்சனனங்களில் நல்வினை தீவினைகளைச் செய்வதனால் விளையும் துன்பத்தை யகற்றுவதற்கே வழிதேடுகின்றன வென்று அவர் உரைப்பதானது அவர் ஹிந்துமதத்தைப்பற்றிக் கொண்ட தவறான அபிப்பிராயத்தை நன்கு விளக்குகிறது.

ஸர் மானியர் வில்லியம்ஸ் தாம் நீண்டகாலம் இந்தியர்களுடைய நூல்களைப் படித்ததிலிருந்தும் இந்தியாவுக்கு வந்து நேரில் ஆராய்ச்சி செய்ததிலிருந்தும் கற்றுக் கொண்டதை ஆதாரமாகக்கொண்டு இந்தியர்களுடைய மதக்கொள்கைகளைப்பற்றி "**இந்திய மதக் கொள்கைகள்**" என்னும் சிறந்த நூலொன்று இயற்றி மிக்க புகழ்பெற்றிருக்கிறார். ஆனால் மற்ற மேனாட்டு அறிஞர்களைப்போலவே இருவரும் வேதத்திற் கூறியுள்ள மதத்தை அறிவதற்குரிய அநுதாப வுணர்ச்சியற்றவரே யென்பதை இந்நூல் தெளிவாகக்

காட்டுகின்றது. வேதத்திலடங்கிய மதமானது இயற்கையில் தோன்றும் சக்திகளான பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களில் மறைந்துநின்று அவைகளுக்குக் காரணபூதனா யிருக்கும் எல்லையற்ற பரம்பொருளை உணரும் நெறியையே போதிக்கின்றன வென்பதை யுணரும் சக்தியற்று, ஸர் மானியர் வில்லியம்ஸ் உள்பட மேனாட்டு அறிஞர்களிற்பலர் வேதத்திலடங்கிய மதம் இயற்கையில் தோன்றும் சக்திகளைத் தெய்வங்களாகக் கொண்டாடுவதாக தவறான அபிப்பிராயங் கொள்ளுகிறார்கள்.

ஆயினும், அவர் இந்நூலில் இந்தியர்களுடைய இராமாயணம், மகாபாரதம் முதலிய காவியங்களையும், மிருச்சகடிகை முதலிய பிற்காலத்திய ஸம்ஸ்கிருத நாடகங்களையும், நீதி சாஸ்திரங்களையும்பற்றிப் பெரிதும் புகழ்ந்து பேசுகிறார். இராமாயணத்தையும் மகாபாரதத்தையும்பற்றி அவர் பின் வருமாறு வியந்து எழுதியிருக்கிறார்.

"ஆயினும், இல்லற வாழ்க்கையையும் நடையுடை பாவனைகளையும் வருணிப்பதில் கிரீஸ், ரோம் தேசங்களின் காவியங்களை விட (ஹிந்து) ஸம்ஸ்கிருத காவியங்கள் உண்மையை யுரைப்பவைகளாயும் நம்பத்தக்க விஷயங்களை யுரைப்பவைகளாயு மிருக்கின்றன. ஸ்திரீகளை வருணிக்கும் போது ஹிந்துகவிகள் சிறிதும் மிகுதியுரைத்து அழகுபடுத்தாமல், இயற்கையிலுள்ளபடி வருணிக்கிறார்கள்;— கைகேயி, கௌஸல்யை, மண்டோதரி (இராவணன் காதலித்த தேவி), கூனியான மந்தரை, யாவரும் இயற்கையிலுள்ளவாறு வருணிக்கப்பட்டிருக்கிறார்கள். (கிரீஸ் தேசத்திய காவியங்களில் வருணிக்கப்பட்டிருக்கும்) ஹெலன், பெனிலோப் இவர்களிடத்தில் உண்டாவதைவிட, சீதை, திரௌபதி, தமயந்தி இவர்களிடத்தில் நமக்கு மிக்க அன்புண்டாகி, அவர்கள் சரித்திரத்தைத் தெரிந்துகொள்ள நமக்கு அதிகத் துறையுண்டாகிறது. பொதுவாகவே ஹிந்து மனைவிகள் கற்பின் வழுவற்ற அவதாரங்களாயிருக்கிறார்கள். இவ்வாறு பதிவிரதையைப்பற்றிக் கூறியிருக்கும் இனிமைமிக்க வருணனைகள் முற்காலத்திய ஹிந்துக்களின் இல்லற வாழ்க்கையின் தூய்மையையும் ஆடம்பரமின்மையையும் உண்மையாக எடுத்துக்காட்டுகின்றன வென்பதைப்பற்றிச் சந்தேகமுறச் சிறிதும் இடமுண்டோ?

இல்லறவாழ்க்கையிலுள்ள அன்பை விளக்கும் காட்சிகளை வருணிப்பதிலும், எல்லாத்தேசங்களிலும் எல்லாக் காலங்களிலும் மானிடவியற்கைக்குரியவைகளான உணர்ச்சிகளையும், மனக்கிளர்ச்சிகளையும் எடுத்துரைப்பதிலும், கிரீஸ் தேசத்திய காவியங்கள் ஸம்ஸ்கிருத காவியங்களுக்கு நிகராகமாட்டா வென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. * * இந்திய காவியங்களில் இப்படிப்பட்ட பாகங்கள் ஏராளமாய் நிறைந்துள; அவைகள் பூர்வ இந்தியாவில் இல்லற வாழ்க்கையில் பொருந்தி யிருந்த தூய்மையைப்பற்றியும் சந்தோஷத்தைப்பற்றியும் உயர்ந்த அபிப்பிராயங் கொள்ளுமாறு செய்வதுமன்றி, ஹிந்து ஸ்திரீகள் தாங்கள் ஜனசமூகத்திற் செய்யவேண்டிய மிகுந்த தூய்மை வாய்ந்தவைகளும் மிகவும் முக்கியமானவைகளுமான கடமைகளைச் செய்யும் திறமைவாய்ந்திருந்தார்களென்பதையும் எடுத்துக் காட்டுகின்றன.

* * * * *

"கணவன், புத்திரன், சகோதரன் இவர்களின் வழுவற்ற உருவமாயிருக்கிறார் இராமபிரான். சீதை தனது கணவன்பாற் காட்டிய உயர்ந்த பக்தியையும் விசுவாசத்தையும், கொடிய துன்பத்துக் காளாகியும் நன்னெறி வழுவத்தூண்டும் பல காரியங்கள் நேர்ந்தும் எதனாலும் அழிவுறாத பொறுமையுடன் யாவற்றையும் சகித்துவந்த தீரத்தையும் உன்னுங்கால், குணவிஷயத்தில் சீதாப்பிராட்டியானவள் (கிரீஸ் காவியங்களின் உயர்ந்த கதாநாயகிகளான) ஹெலன் என்பவளுக்கும் பெனிலோப் என்பவளுக்கும் மிகவும் உயர்ந்தவளென்று கருதவேண்டி யிருக்கிறது. பரதரும், இலக்ஷ்மணரும் 'சகோதரர் கடமை' என்பதன் உருவங்களாயிருக்கிறார்கள். கௌஸல்யை தாயின் ஆதரவின் அவதாரமாகவும், தசரதர் தந்தையின் அன்பின் அவதாரமாகவும் இருக்கிறார்கள்."

இந்நூலிலேயே ஸர் மானியர் வில்லியம்ஸ்

மிருச்சகடி யென்னும் சிறந்த நாடகத்தைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:—

“(அதில்) சரித்திரத்தின் விஷயத்தை அமைத்திருக்கும் சாதுரியமும், சம்பவங்களை ஒன்றோடொன்று பிணைத்திருக்கும் தந்திரமும் நாடகபாத்திரங்களை வருணித்து அவர்களின் குணவேறுபாடுகளை விளக்கிக் காட்டியிருக்கும் திறமையும், சொற்களின் கம்பீரமும் பொருத்தமும் நமது (ஆங்கிலேய) நாடகாசிரியர்பால் காணப்பட்டாலும் அவர்கள் பெருமைக்குப் பொருத்தமானவைகளாகவேயிருக்கும்.”

இந்நூலில் நீதிசாஸ்திரத்தைப்பற்றி அவர் பின் வருமாறு எழுதுகிறார்:—

“உயர்ந்த ஹிந்து நூல்களைப் படிப்போரெல்லோரும் அவைகளில் எங்கும் பரவியிருக்கும் நீதிபோதகங்களைக்கண்டு அதிசயிக்காம லிருக்கமுடியாது. இந்திய நூலாசிரியர்கள் சென்ற தலைமுறைகளின் சரித்திரத்தைக் குறித்து அதிகமாகத் தொல்லைப்படுவதில்லையே யாயினும், தங்கள் காலத்தில் மானிட வாழ்க்கையின் தன்மையானது முற்பிறப்புகளிற் செய்த வினைகளின் பயனென்று அடிக்கடி கூறுகிறார்கள். ஆகையினால், இனி வரப்போகிற பிறப்புகளிலுண்டாகக்கூடிய சந்தோஷத்தை யுத்தேசித்து இப்பிறப்பில் நீதி நெறியில் நடப்பது மிகவும் அவசியமான காரியமாகிறது. ஆதலால், நீதி நெறியை அறிந்துகொள்ளவேண்டு மென்ற இடைவிடாத ஆசையைப் பூர்த்தி செய்வதற்காக, ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ள நூல்களனைத்தும்—பிராம்மணங்கள், உபநிஷதங்கள், சட்ட நூல்கள், காவியங்கள், புராணங்கள், யாவும்—நீதிகளைப் போதிக்குந் தன்மையுடையனவாக நீதிகளைக் காட்டுவதிலும் தத்துவத்தை ஆராய்வதிலுமே மிகுந்த ஆசையுடன், முதுமொழிகளும் அறிவாளர் அனுஷ்டிக்கவேண்டிய விதிகளும் நிரம்பப்பெற்றிருக்கின்றன.”

ஸர் மானியர் வில்லியம்ஸ் ஹிந்துமதத்தைப் பற்றி ஓர் நூல் இயற்றியிருக்கிறார். அதில், “ஹிந்து மதமானது வேதத்திலிருந்து உற்பவித்து, எல்லா மதங்களிலிருந்தும் சில விஷயங்களைக் கிரகித்துக்கொண்டு எண்ணிலா மனோ வேறுபாடுகளுள்ள மானிடர்கள் யாவருக்கும் இசைவாயிருக்கும் போதனைகளையுடையதாகவிருக்கிறது” என்று எழுதுகிறார்.

பின்னும், அவர் நளோபாக்கியானம் என்னும் அரிய ஸம்ஸ்கிருத கிரந்தத்தை அரும்பதவுரை, இலக்கணக்குறிப்பு, முகவுரை இவைகளுடன் பதிப்பித்திருக்கிறார். அவர் காளிதாஸ மகாகவி எழுதிய “சாகுந்தலா” என்னும் நாடகத்தை முதநூலின் இனிமைக்குக் குறையாத வண்ணம் மொழிபெயர்த்திருக்கிறார்.

நவீன இந்தியாவைப்பற்றியும் அவர் ஒரு நூல் இயற்றியுள்ளார். அதில் அவர்,

“இத்தகைய படிப்பானது ஒன்றுமே படிப்பில்லாததைவிடச் சிறந்ததேயெனினும்; சிறுவர்களுடைய மனத்தில் செருக்கை விளைவித்து, அவர்களுக்கு வேறு மத மொன்றையும் காட்டாமல் அவர்களுக்குத் தங்கள் மதத்திலுள்ள நம்பிக்கையைக் குலைத்து, தங்கள் மூதாதையர் செய்துவந்த தொழில்களை அவர்கள் இகழும்படி செய்து, எல்லோருக்கும் கிடைப்பது அசாத்தியமான ஸர்க்கார் உத்தியோகங்களையடைவதற்குப்படியாக மட்டும் அறிவைக் கருதச்செய்கிறது.”

“நமது இந்திய கல்லூரிகளிலும் பாடசாலைகளிலும் கல்வி புகட்டுவதில் பாஷாஞானத்தையும் நூற்பயிற்சியையும் விசேஷமாகக் கவனித்து, வாழ்க்கைக்கு உபயோகமாயிருக்கத் தக்கவைகளும் சாஸ்திர சம்பந்தமானவைகளுமாயிருக்கிற விஷயங்களைச் சிறிதும் கவனியாம லிருக்கிறோம்.* * * அத்தேசபாஷைகளை நாம் (ஆங்கிலேயர்) போதுமான வளவு ஆதரிப்பதில்லை.”

இவ்வாறு ஸர் மானியர் வில்லியம்ஸ் நமது இந்திய விஷயங்களைத் தம்மாலியன்றவளவு ஆராய்ச்சிசெய்து பல நூல்களையியற்றி நமது பெருமையை உலகெலாம் அறியுமாறு செய்த நன்றி என்றும் மறத்தற்பாலதன்று!

குறிப்பு:— ‘இண்டியன்’ ரிவ்யூ’ பத்திரிகையில் ஸப்ஜட்ஜ் ஸ்ரீமான் K. S. ராமசாமி சாஸ்திரியார் ஆங்கிலத்தில் எழுதிய வியாசத்திலிருந்து எடுத்து மொழிபெயர்க்கப்பட்டது.

பங்காளி வீடு வேகிறது, சுங்கான் கொண்டு தண்ணீர் விடு.

பொதுஜன ஆரோக்கிய சாதனங்கள்

PUBLIC SANITARY MEASURES

பொதுஜன ஆரோக்கியத்துக்குத் தீங்கு நேரிடாமல் பாதுகாப்பதற்குரிய சாதனங்களிற் சிலவற்றை அவசரமாய்க் கவனிக்கவேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. அச்சாதனங்களை ஏற்படுத்திக்கொள்வது அதிகச் செலவை யுண்டாக்காதாகையால், அவைகளை நாம் உடனே தேடிக்கொள்ளவேண்டும்.

நமது நாட்டில் தற்காலத்தில் மலேரியா ஜ்வரத்தினால் ஏற்படும் மரணங்களே அதிகமாயிருக்கின்றன. அந்த ஜ்வரம் ஒருவருக்கு வர ஆரம்பித்துவிட்டால், ஓயாது நெடுங்காலம் வந்துகொண்டேயிருந்து, வயிற்றில் ஜ்வரக் கட்டியை யுண்டாக்கி, கடைசியில் பிராணனையே கொள்ளைகொண்டுபோகிறது. இக்கொடிய ஜ்வரமானது உஷ்ணம் மிக்க தேசங்களிலேயே அதிகமாய்ப்பரவும் இயல்புடையதாயும், மிகுந்த கொடுமையிழைக்கும் சக்தியுடையதாயு மிருக்கிறது. அப்படிப்பட்ட தேசங்களிலும் சிற்சில பாகங்களில்தான் அது விசேஷமாய்ப் பரவுகிறது. நமது தேசத்தில் அது வங்காளத்திலும், பம்பாயிலும் பரவுமளவு சென்னையிற் பரவுவதில்லை. அதுவுமன்றி, பெண்பாலர்களை அவ்வியாதி அதிகமாகப் பீடிப்பதில்லை. அதற்குக் காரணம் ஒரு வேளை பெண்பாலர்கள் ஜனசமூகத்தில் அதிகமாய் இயங்காததாக விருக்கலாம். அவ்வியாதி வயதை இலக்ஷியஞ் செய்வதில்லையே யெனினும், சிறு குழந்தைகளையும் தொண்டு கிழவர்களையும் அதிகமாகப் பீடிப்பதில்லை. மலேரியா ஜ்வரத்துக்கும் சீதோஷ்ண நிலைமைக்கும் உள்ள சம்பந்தத்தைக் கவனிக்கும்போது, அது கோடைகாலத்திலும் மாரிகாலத்திலும் கொஞ்சம் குறைவாகவும், வசந்தகாலத்திலும் இலையுதிர்காலத்திலும் கொஞ்சம் அதிகமாகவும் பரவுவதாகத் தெரியவருகிறது. கடுமையான கோடைகாலத்துக்குப் பிறகு அந்த ஜ்வரம் அதிகமாய்ப் பரவிக் கடுமையாய் வருத்துகிறதென்றும் தெரியவருகிறது. இவ்விஷயங்களை உற்றுநோக்கும்போது, இந்தஜ்வரம் தேசத்தின் அத்யுஷ்ண நிலைமையினால்தான் பரவும் சக்தியை யடைவதாக ஊகிக்கவேண்டி வருகிறது.

இந்தக் கொடிய மலேரியா ஜ்வரம் நாட்டில் பரவுவதற்குக் காரணமென்னவென்று பல அறிவாளர்கள் ஆராய்ந்து பார்த்ததில், அது பலவிதக் கொசுக்களினாற் பரவுகிறதென்றும், அவைகள் மலேரியா ஜ்வரத்தினாற் பீடிக்கப்பட்டு வருந்துபவரைக் கடித்து, மலேரியாப் பூச்சிகள் நிறைந்த அவரது இரத்தத்தைக் குடித்துவிட்டு, எங்கும் உலாவிப் பலரைக் கடித்து, தாம் அவ்விரத்தத்தின் மூலமாக உட்கொண்ட மலேரியாப் பூச்சிகளை அவர்களது இரத்தத்தில் பரவச்செய்து, மலேரியா ஜ்வரத்தைப் பரவச்செய்கிறதென்றும், அக்கொசுக்கள் உட்கொண்ட பூச்சிகள் வளர்வதற்கு கொசுக்கள் வளர்ந்து பரவுவதற்குச் சௌகரியமான சீதோஷ்ணநிலைமை அவசியமென்றும் தெரிந்துகொண்டார்கள்.

ஆழமுள்ள நீர்நிலைகளிலுள்ள மீன்கள் அவைகளிலுண்டாகும் கொசுப்புழுக்களை விழுங்கிவிடுகின்றன. ஆழமில்லாத குளம், குட்டை, குண்டு, குழி இவைகளில் தேங்கும் தண்ணீர் சீக்கிரம் வற்றிப்போய்விடுவதால், அப்படிப்பட்ட புழுக்களை அழித்துவிடக்கூடிய மீன்களும் நீர் மிருகங்களும் அவைகளிற் கிடையா. மழைகாலத்துக்குப் பிறகு, அவைகளிலுள்ள தண்ணீர் வற்றியதும், அவைகளில் புற்பூண்டுகளும் செடிகொடிகளும் செழித்து வளர்கின்றன. வசந்த காலத்தில் ஒரு மழை பெய்தவுடன் அவைகளில் கொசுப்புழுக்கள் உற்பவித்துப் பெருகுகின்றன.

ஆகையினால், முதன் முதலில் நாம் தேடிக்கொள்ளவேண்டிய சாதனமென்ன வெனில், வருஷ முழுவதும் நீர்வற்றாம லிராத சிறு குளம் குண்டுகளை மண்ணையோ, மணலையோ கொட்டித் தூர்த்துவிடுவதே யாகும். அல்லது அவைகளிலுள்ள நீர்வடிந்து ஓர் நதியிற்போய்ச் சேருமாறு சிறு சிறு கால்வாய்களை வெட்டி விடலாம்.

ஆழமான நீர்நிலைகளில் சிலர் கற்றாழை, தென்னம்பாளை, புளிச்சிக்கீரைச்செடி முதலியவைகளை நார் எடுப்பதற்காக நீர்மட்டத்துக்குக் கீழே அழுத்திவைத்து அவைகள் அழுக ஆரம்பிக்கும்வரையில் அவைகளையெடுக்காம லிருக்கிறார்கள். கொசுக்களை விருத்தி செய்வதற்கு இதுவே மிகவும் சிறந்த வழியாதலால், இவ் வழக்கத்தை உடனே

பங்காளியும் பனங்காயும் பதம்பார்த்து வெட்டவேண்டும்.

தடுக்க வேண்டும். இப்படிப்பட்ட நீர்நிலைகளிலும் கிணறுகளிலும் அக்கொசுப் புழுக்களை அழிக்கவல்ல மீன்களைக் கொண்டுவந்து போட்டு, அவைகளை விருத்திசெய்யவேண்டும்.

ஊரைச்சுற்றித் தோட்டங்களிருப்பதனால் காற்றிலுள்ள கரியமலவாயு விசேஷமாய்க்குறைந்து நல்ல காற்று ஊரில் வீசி நன்மை புரியுமேயெனினும், ஊர்க்குடியிருப்புக்கு மிகவும் சமீபத்தில் மிகவும் அடர்ந்த சோலைகளிருந்தால், சூரிய வெளிச்சம் அச்சோலைகளில் குறைவாயிருப்பதனால், கொசுக்களும், மற்றும் தொத்துவியாதிகளைப் பரவச் செய்யும் ஜந்துக்களும் அவைகளில் விசேஷமாய் உற்பத்தியாகிப் பெருகும். ஆகையினால் சோலைகளிலுள்ள மரங்கள் சிலவற்றை வெட்டி, உள்ள மரங்கள் கலக்க நிற்கும்படியாகச் செய்யவேண்டும். அப்படிச் செய்வதனால் நிற்கும் மரங்களின் வேர் ஓடுவதற்கு அதிக பூமிப்பரப்பும் அதிக வெளிச்சமும் உண்டாகிறபடியால், அவைகள் முன்னிலும் செழித்தோங்கி அச்சோலைகளின் சொந்தக்காரருக்கு லாபத்தையே யுண்டுபண்ணும்.

பெரியநகரங்களில் குடிக்கூலிக்கு விடுவதற்கென்றே வீடுகளைக் கட்டுபவர்கள் அவ்வீடுகளில் காற்றும் வெளிச்சமும் போதுமானவளவு இருக்கும்படியாகவும், சாக்கடை ஜலம் தேங்காமல் ஓடிப்போகும்படியாகவும் கட்டிடங்களை அமைப்பதில்லை. கக்கூஸையும் சமையலறைகளுக்குப் பக்கத்தில் அலக்ஷியமாய் அமைத்துவிடுகிறார்கள். அவர்களுடைய இத்தகைய செய்கைகளினால் நகரத்தில் வசிப்பதற்குத் தக்கவாறு அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களில் வசிப்பவர்கள்கூட கோரமான நோய்களுக்கு ஆளாகவேண்டிவருகிறது. நகரவாசிகளிற் பெரும்பான்மையோர் தாம் வேலைசெய்யுமிடங்களுக்குச் சமீபத்தில் குடியிருக்கவேண்டுமென்ற ஆசையுடையவர்களாயிருப்பதால், வீடுகளிலுள்ள குறைகளைக் குறித்து அதிகமாய்ச் சிந்திப்பதில்லை. அன்றியும், அவர்கள் அக்குறைகளைக் குறிப்பிட்டு அவைகளை நீக்கும்படி வீடுகளின் சொந்தக்காரர்களை வேண்டிக்கொண்டாலும், எப்போதும் பலர் எப்படிப்பட்ட இடமாவது குடியிருப்பதற்கு அகப்பட்டால் போதும் என்று அலைந்துகொண்டேயிருப்பதனால், வீட்டுக்காரர்கள் குடித்தனக்காரர்களின் வேண்டுகோள்களை இலக்ஷியஞ் செய்வதில்லை. போதுமான வளவு காற்றும் வெளிச்சமும் இருக்குமாறு கட்டிடங்களைக் கட்டவேண்டுமென்று திட்டஞ்செய்து அதற்கவசியமான சட்டங்களை முனிசிபாலிடியார்கள் நிருமிக்கவேண்டும். புதியகட்டிடங்களேயன்றி பழைய கட்டிடங்களும் அவ்வாறு தகுந்த நிலைமைக்கு வருவதற்குத் தகுந்த நிபந்தனைகள் அச்சட்டங்களில் சேர்க்கப்படவேண்டும்.

மற்றுமொரு முக்கியமான சாதனமென்னவெனில், புகைபிடித்தலை முற்றிலும் ஒழித்துவிடாவிட்டாலும், பொது ஜனங்களுக்கு அதனால் தீங்குண்டாகாமலிருப்பதற்குரிய வழிகளைத் தேடவேண்டும். ஜனங்கள் நெருக்கமாய்க்கூடும் இடங்களாகிய ரயில்வண்டி, நாடகக் கொட்டகை, சினிமாக் கொட்டகை, மார்க்கெட் முதலிய விடங்களில் புகை பிடிப்பதைத் தடுத்து ஓர் சட்டம் நிருமிக்கப்படவேண்டும். ஏனெனில், ஏற்கனவே பலர் ஒருங்கே கூடுவதனால் கெட்டுப் போயிருக்கும் காற்றில், புகைபிடிப்பவர் உட்கொண்டு தமது மூச்சுப்பைக்குள் சிறிதுநேரம் நிறுத்திப் பிறகு வெளியே விடும் புகையானது கரியமலவாயு நிறைந்தும் புகைபிடிப்பவரைப் பீடித்திருக்கக்கூடிய வியாதிகளின் பூச்சிகள் நிறைந்தும் வந்து சேரும்பொழுது, காற்று சுவாசத்துக்கு ஏற்றதல்லாததாகி, அதை யுட்கொள்ளுபவருடைய ஆரோக்கியத்தை அழித்துவிடும்.

பொதுஜன ஆரோக்கியத்துக்கு இன்றியமையாத மேற்கூறிய சாதனங்களை நமது நாட்டவர் சீக்கிரத்தில் தேடிக்கொள்ளமுயற்சி செய்வார்களென நம்புகிறோம்.

குண்டலகேசி.—தமிழ் மொழியிலே "பஞ்ச காவியங்கள்" என்று கற்றோரால் பெரிதும் பாராட்டப்படும் நூல்கள் சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம், வளையாபதி, குண்டலகேசி என்பனவாம். இவற்றுள் ஒன்றான **குண்டலகேசி** என்னும் நூல் இக்காலத்தில் இல்லை. பண்டைக் காலத்திலேயே அஃது இறந்தொழிந்தது போலும்? ஆனால், இந்நூல் எதைப்பற்றிக் கூறுவதன்பது, இப்போது காணப்படும் சில செய்யுட்களைக் கொண்டும், பிற சாதனங்களைக் கொண்டும் ஒருவாறு அறியக்கிடக்கிறது. அவைகளை ஆதாரமாகக்கொண்டு நாகை ஸ்ரீ கோபாலகிருஷ்ண பிள்ளை இந்நாவலை மிக உயர்ந்த செந்தமிழ் நடையில் எழுதியுள்ளார். விலை **அணா. 5.**

பங்குனி மாதம் பகல் வழி நடந்தவன் பெரும் பாவி.

அமெரிக்க பள்ளிக்கூடப் பத்திரிகை பிரசுரஞ் செய்யும் விதம்

HOW AN AMERICAN SCHOOL MAGAZINE IS PUBLISHED?

அச்சிடுந் தொழிலும் பத்திரிகை பிரசுரஞ் செய்யுந் தொழிலும் பொருள் தேடுவதற்குச் சிறந்த மார்க்கங்களா யிருக்கின்றன. பள்ளிக்கூடங்களிலேயே பிள்ளைகளுக்குப் பொருளீட்டுந் தொழிலொன்றைக் கற்பிக்க வேண்டுமென்று தற்காலத்தில் யாவராலும் ஒப்புக்கொள்ளப் படுகின்றமையால், அச்சிடுந் தொழிலையும் பத்திரிகை பிரசுரஞ்செய்யுந் தொழிலையும் ஏன் நமது பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடங்களிலேயே கற்பிக்நக்கூடாது? அத்தொழில்களை அமெரிக்கா தேசத்துப் பள்ளிக்கூட மொன்றில் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் விதத்தைப் பின்வருமாறு "தேகப்பயிற்சிப் பத்திரிகை"யில் விவரித்துக் கூறப்பட்டிருக்கிறது.

"ஓர் பள்ளிக்கூடப் பத்திரிகை பள்ளிக்கூடத்துக்கு மிகுந்த நன்மை பயக்கத்தக்கதென்றும், பள்ளிக்கூடத்தில் நடக்கவேண்டிய மற்றக் காரியங்களுக்கு இடைஞ்சலின்றி அதை யச்சிடக்கூடுமென்றும் நான் பூரணமாய் நம்புகிறேன். சரியானபடி எழுத்துக்கூட்டவும், பதம் பிரிக்கவும், பிழையற்ற ஆங்கிலபாஷை யெழுதவும், அமெரிக்கா தேசத்தில் நல்ல குடித்தனக்காரனாக விருப்பதற்குரிய காரிய நிர்வாகத் திறமையை யுண்டுபண்ணவும் உயர்ந்த சாதனமாகிறது. பல வகுப்புகளிலுமாகச் சேர்ந்து சுமார் இருநூறு பிள்ளைகளுள்ளதாய் மேற்படிப்புக்குத் தயார்செய்வதற்காக குடிகளி லொருவரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் 'சிக்காகோ லாடின் ஸ்கூல்' என்னும் பள்ளிக்கூடத்தில் நாங்கள் பத்திரிகை அச்சிடும் விதம் பின்வருவாறு:—

எட்டாவது வகுப்பிலுள்ள இருபத்தைந்து அல்லது முப்பதுபிள்ளைகளை—அச்சிடும் அனுபோகம் சிறிதுமில்லாத பிள்ளைகளை—அழைத்துத் தேகப்பயிற்சி இலாகாவின் மேற்பார்வைக்கும் அவர்கள் வகுப்பு உபாத்தியாயரின் மேற்பார்வைக்கும் அடங்கி பத்திரிகையை நடத்தும்படி சொல்லி, பத்திரிகையை முற்றிலும் அவர்கள்வசம் ஒப்புவித்துவிடுகிறோம். முதல் வாரத்தில் அப்பிள்ளைகளை இரண்டு கூட்டங்களாக யந்திரசாலைக்குள் அழைத்துச் சென்று, அவர்களுக்குச் சுமார் ஒருமணி சாவகாசம் அச்சுக் கோப்பது செய்து காட்டி விளக்கப்படுகிறது. சென்ற வருஷத்திய பத்திரிகைகள் பரிசீலனை செய்யப்பட்டு, அவைகளிலுள்ள குணங்களும் குற்றங்களும் எடுத்துக் காட்டப்படுகின்றன. ஒவ்வொரு பையனும் ஒவ்வொரு அச்சுக்கோக்கும் பலகையைக் கையிலெடுத்துக்கொண்டு, ஒரு வியாசத்தின் ஆரம்பத்திலுள்ள சில வார்த்தைகளைக் கோக்க ஆரம்பிக்கிறான். சந்தேக நிவர்த்தி செய்துகொள்ளுவதற்கு வேண்டிய புத்தகங்கள் கைக்கெளிதாய் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பார்த்து தாங்களே தங்கள் சந்தேகங்களை நிவர்த்தித்துக் கொள்ளும் வழியும் அவர்களுக்குப் போதிக்கப்படுகிறது. இவ்வாறு வேலையைச் செய்துகாட்டி விளக்கியபின், முழு வகுப்பையும் ஒன்றாக வைத்து அவர்களது அறையிலேயே அரைமணி சாவகாசம் தொழில் நிர்வாக விஷயங்களை அவர்களுக்குப் போதிக்கிறோம். பிறகு பிரதான பத்திராதிபர், பிரதான உதவிப் பத்திராதிபர், தொழில் நிர்வாக மானேஜர், பிரபஞ்ச வர்த்தமானங்களைத் தெரிவிக்கும் ரிப்போர்ட்டர்கள் நாலு முதல் ஆறுபேர்கள் இவர்களை அவர்கள் தங்களிலிருந்தே தெரிந்தெடுத்துக்கொள்ளுகிறார்கள்.

எங்கள் பத்திரிகை ஒவ்வொரு மாதமும் முதல் செவ்வாய்க்கிழமை யன்றும், மூன்றாம் செவ்வாய்க்கிழமை யன்றும் பகல் 12-30 மணிக்குத் தவறாமல் வெளிவருகிறது. இதுவரை ஓரேவொரு முறைதான் அது வெளிவரத் தாமதப்பட்டது. அப்போதும் அச்சியந்திரம் சீர்கெட்டுப் போனதனால் இரண்டு மணி நேரந்தான் தாமதப்பட்டது.

பிரபஞ்ச வர்த்தமானங்களைப் பையன்கள் எழுதித் தங்கள் தங்கள் வகுப்பு உபாத்தியாயரின் மூலம் பிரதான பத்திராதிபருக்கு அனுப்புவார்கள். அவர் அவைகளைத் திருத்தி அந்தந்த வகுப்பு உபாத்தியாயர்களுக்கு ஆமோதிப்புக்காக அனுப்புவார். அவர்கள் அவைகளைப் பார்வையிட்டு யந்திரசாலைக்கு அனுப்பிவிடுவார்கள்.

அச்சுக் கோப்பதற்காக ஒவ்வொரு பைய

பசி ஏப்பக்காரனும் புளி ஏப்பக்காரனும் கூட்டுப் பயிரிட்டதுபோல.

ளுக்கும் வாரத்துக்கு அரைமணி சாவகாசம் கொடுக்கப்படுகிறது. இஷ்டமிருந்தால், பையன்கள் தங்கள் வேலைமுடிந்தபின்னே, பள்ளிக்கூடம் மூடியபின்னே வந்து அதிகமாய் அச்சுக் கோக்கலாம். எங்கள் பத்திரிகைக்கு பக்கத்துக்கு நூற்றைம்பது வரிகள் வேண்டும். ஆகையினால் ஒவ்வொரு பையனும் வாரத்துக்கு ஆறுவரிகள் கோக்கவேண்டும். ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஒவ்வொரு பக்கம் அச்சிடப்படுகிறது.

பிரபஞ்ச வர்த்தமானம் முற்றிலும் பிரதானப் பத்திராதிபரது இலாகாவைச் சேர்ந்தது. அவைகள் சரியாயிருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டுவது அவர் கடமை. அச்சுப்பிழைதிருத்தல், அச்சிடுதல், பத்திரிகையைச் சீராக மடித்தல் இவைகள் உதவிப் பத்திராதிபரது பொறுப்பு. தொழில் நிர்வாக மானேஜர் ஓர் பாங்கியின் மூலம் பணங்களையெல்லாம் ஒப்புக்கொண்டு, செக்குகள் எழுதிக் கொடுப்பது, கணக்குகள் வைத்துக் கொள்வது முதலிய வேலைகளைப் பார்த்துக் கொள்ளுகிறார். அவருக்கு உதவியாயிருக்கும் உத்தியோகஸ்தன் சந்தாவசூலையும் பத்திரிகை விற்பனையையும் பார்த்துக் கொள்ளுகிறான். ரிப்போர்ட்டர்கள் பிரபஞ்ச வர்த்தமானங்களைத் தெரிவிக்கிறார்கள். பத்திரிகையிலுள்ள வியாசங்களை பையன்களே சில சமயங்களில் எழுதுகிறார்கள்.

எங்கள் பத்திரிகைச் செலவுகளுக்கு எங்கள் பத்திரிகை வரும்படியே போதுமானது. எங்கள் வருஷச்சந்தா ஐம்பது சென்டு; பத்திரிகைப்பிரதி யொன்றின் விலை ஐந்து சென்டு. எங்கள் பத்திரிகைக்கு இருநூறு சந்தாதார்களிருக்கிறார்கள், சாதாரணமாய் அறுபது முதல் எழுபத்திரண்டு பிரதிகள் வரையில் பள்ளிக்கூடத்திலேயே அதிகமாக விற்பதுமுண்டு.

எங்களுக்கு இப்பத்திரிகையினால் எண்ணிறந்த நன்மைகளுண்டாகின்றனவாதலால், வருஷத்துக்கு வருஷம் முன்னிலும் அதிகமேன்மை பெறுமாறு நடத்தவேண்டுமென்று உத்தேசித்திருக்கிறோம்.”

நமது பள்ளிக் கூடங்களிலும் ஏன் இவ்வாறு பத்திரிகை பிரசுரம் செய்யக்கூடாது?

புண்ணிய ஸ்தலங்கள்

INDIAN PLACES OF PILGRIMAGE

ஸ்ரீரங்கம்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு சமயம் முப்பத்து முக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும் இன்னும் மற்ற யக்ஷ, கந்தர்வ, கின்னரர்கள் முதலிய விண்ணோர்களும் அடங்கியிருந்த விமானத்தை மஹாவிஷ்ணுவானவர் பிரமாவினிடம் ஒப்புவித்திருந்தார். பிரமாவும் அந்தவிமானத்திற்கு விஷ்ணுவின் ஆஞ்ஞைப்படி பூஜை முதலியன செய்து பாதுகாத்துவந்தார். பிறகு அவர் ஜகத்தைச் சிருஷ்டிக்கவேண்டி வந்தபோது, அவ்விமானத்தைச் சூரியனிடம் ஒப்புவித்து விஷ்ணு கூறியிருந்தவாறு அதை எவ்வாறு பூஜித்துக் காப்பதென்று சொல்லிச் சென்றார். சூரியன் கொஞ்சநாளைக்கெல்லாம் அதைத்தன் வமிசத்தில் உதித்தவனாகிய இக்ஷ்வாகுவமிசத்திய முதல் அரசனிடம் ஒப்புவித்தார். கடைசியாக மஹாவிஷ்ணு அயோத்தி மன்னராகிய தசரது புத்திரராக அவதரித்த பொழுது அவர் மூலமாய் விபீஷணருக்கு ஒப்புவிக்கப்பட்டு அது எவ்வாறு சந்திரபுஷ்கரணி என்னும் பெயர் வாய்ந்த ஸ்ரீரங்கத்திலேயே நிலைபெற்றதென்பது பின்வருமாறு கூறப்பட்டுளது.

சூரியனால் தன்னிடம் புஷ்பகவிமானம் ஒப்புவிக்கப்பட்ட பிறகு, இக்ஷ்வாகு மன்னன் விஷ்ணுவைக்குறித்துக் கடுந்தவம் புரிந்தனன். அவனது நோக்கம் அயோத்தியின் க்ஷேமமாக விருந்தபோதிலும், இந்திரன் பயந்து அவனது தவத்தைக் கலைக்க முயன்றனன். அது பயன்படாமல், விஷ்ணு அவனுக்குப் பிரத்தியக்ஷமாகி அவனது இராச்சியத்தில் தான் நான்கு யுகம் வசிப்பதாக வாக்களித்தருளினார்.

விஷ்ணு மேற்சொன்னபடி வாக்களித்து மறைந்ததும் இக்ஷ்வாகு மன்னன், அயோத்தியின் வடக்கில், விரஜா, ஸரயூ என்னும் நதிகளுக்கிடையில் ஓர் கோவிலை அமைத்து, அதில் அந்த விமானத்தை ஸ்தாபித்து வைத்துப் பூஜை முதலியன நடத்திவந்தார். விஷ்ணுவின் கிருபையால் அவருக்கு யாதொரு குறைவும் ஏற்படாதிருந்தபோதிலும், புத்திரப்பேறில்லாத குறைவினால் மனக்கவலைகொண்டு புத்திரகாமேஷ்டி என்னும் யாகத்தை நடத்திப் புத்திரனை யடைய முயல்வதெனக் கடைசியில் தீர்மானித்தார். அதற்காக வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு எல்லா தேசத்திய மன்னர்களும் அழைக்கப்பட்டார்கள்.

யாகம் பார்க்கவந்திருந்த சோழதேசத்தரசனாகிய தர்மப்பிரும்மனென்பான் அங்குள்ள அரிய விமானத்தைப் பார்த்து அதன் வரலாற்றைக் கேட்டதும், அதை எப்படியாகிலும் தனது நாட்டிற்குக் கொண்டு செல்லவேண்டுமென்ற அவாக்கொண்டான். யாகம் முடிந்து தனது நாடு வந்துசேர்ந்ததும், விஷ்ணுவைக் குறித்துக் கடுந்தவம் புரிந்தான். அநேகம் ரிஷி சிரேஷ்டர்கள் அவனிடம் வந்து அயோத்தியிலிருந்த விமானம், இராவண ஸம்ஹாரமான பிறகு அவனது தம்பி விபீஷணனால் கொண்டுவரப்பட்டு அவனது இராச்சியத்தில் ஸ்தாபிக்கப்படுமென்று கூறிச் சென்றார்கள். அவர்கள் கூறிச் சென்றவாறே எல்லாம் நடந்தேறிற்று. இராவணனை ஸம்ஹாரம் செய்த பிறகு, ஸ்ரீராமர் விபீஷணனுக்கு இலங்கையை முடிசூட்டிய பிறகுதான் அயோத்திக்குத் திரும்பிவந்தார். அவருடன் கூடவே வந்த விபீஷணரிடம் ஸ்ரீராமர் அந்த விமானத்தைக் கொடுக்க அது பின் கூறப்பட்டவாறு ஸ்ரீரங்கத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.

தனது இராச்சியமாகிய லங்கையை நோக்கி வந்துகொண்டிருந்த விபீஷணர் ஸ்ரீரங்கத்தில் தங்கும்படி நேர்ந்தது. அப்பொழுது சோழதேசத்திய மன்னன் தர்மப்பிருமன். அவனது உதவியைக்கொண்டு விபீஷணன் அங்குள்ள இரு புண்ணிய நதிகளில் தீர்த்தமாடி, அந்த விமானத்திற்கு ஒன்பது நாள் மிக்க ஆடம்பரத்துடன் பூஜை நடத்திவந்தான். பிறகு தனது இராச்சியத்திற்குப் போக ஆயத்தமாகி விமானத்தைக் கொண்டு செல்ல யத்தனிக்க, அது அசைக்க முடியாததாகவிருந்தது. மரம் பூமியில் வேர் ஊன்றி நிற்பதுபோல் அந்த விமானம் பூமியில் பதிந்து அசைக்க முடியாம லிருந்ததைக் கண்ட விபீஷணன் மனங்கசிந்து புலம்பிக் கண்ணீர் விட, கருணாநிதியான அரங்கநாதப்பெருமாள் அவனைத் தேற்றிப் பின்வருமாறு கூறினார்.

கேளாய் விபீஷணா! இந்த தர்மப்பிரும்மன் ஓர் புண்யாத்மா. ஆதலால் அவன் தனது இராச்சியத்தில் அந்த விமானத்தை வைத்துக் கொள்ளும் யோக்கியதை வாய்ந்தவன். தவிர எனது ஆணையின்மேல், கோடாநுகோடி தேவர்களும், ரிஷிகள் முதலானோர்களும் இங்கு வந்து கூடியிருக்கிறார்கள். அவர்களை விட்டுவர எனக்கு மனமில்லை. மற்றும், காவிரி நதி ஓர் புண்ணிய நதி. அதன் கரையிலிருக்க எனக்கு விருப்புளது. இக்காரணங்கள்பற்றி, நீ உனது இராச்சியமாகிய இலங்கைக்குத் திரும்பிச் சென்று, அரசு புரிந்துகொண்டிருந்து இறுதியில் என்னிடம் வந்துசேர்வாய். நான் இங்கிருந்தவாறு உனது இராச்சியத்தைப் பார்த்துக்கொண்டிருப்பேனாதலால் உனக்கும் உனது இராச்சியத்திற்கும் யாதொரு குறையும் உண்டாகமாட்டாது.

இவ்வார்த்தைகளைக் கேட்ட விபீஷணனும் ஒருவாறு தேறுதலை யடைந்தவனாய் எல்லாரிடமும் அனுமதிபெற்றுச் சென்றனன். அது முதல் மஹாவிஷ்ணுவானவர் சகலமான தேவர்களுடனும் ரிஷிகளுடனும் ஸ்ரீரங்கத்திலேயே வசித்துவருகிறார் என்பது பல்லோரது கொள்கை. அதுபற்றியே அந்த ஸ்தலத்திற்கு விசேஷமான மகிமை ஏற்பட்டுளது.

பண்டைக்காலத்தில் மானிடர்களில் விண்ணோர்களது சக்திவாய்ந்திருந்த ரிஷி சிரேஷ்டர்கள், தங்களது நெற்றிக் கண்கள், ஞான திருஷ்டி முதலியவைகளால், மும்மூர்த்திகள், இந்திரன், குபேரன் முதலிய விண்ணோர் முதலானவர்களது இருப்பிடம், கிரியை முதலியவைகளை அறிந்து பாமர மானிடர்களுக்குத் தெரிவித்துவந்தனர். அவர்களது கிருபையால் புண்ணிய க்ஷேத்திரங்களை யறிந்து, அவ்விடங்களுக்கு யாத்திரைசெய்த மானிடர்கள் கிருதார்த்தர்களாயினர். இக்காலத்தில், அத்தகைய மஹான்கள் மானிடர்கள் அவர்களது தாழ்ந்த நிலைமையால், உபதேசத்திற்கும், தங்களது சிரமத்திற்கும் அருகதையுள்ளவர்கள் அல்லர் எனக் கருதி, மலை முதலானவிடங்களில், ஆச்சிரமங்களில் தவம் புரிந்துகொண்டிருக்கின்றனர். மானிடர்களிற் சிலராகிலும் அவர்களது கிருபைக்கு யோக்கியர்களாகத் தங்களது பரிசுத்தமான கிரியைகளாலும், இச்சைகளாலும் எண்ணங்களாலும் செய்துகொண்டால் ஸதா காத்துக்கொண்டிருக்கும்

ரிஷிசிரேஷ்டர்கள், விண்ணோர்களிற் சிறந்தோர்களது சக்திவீசும் பூலோகத்தின் பாகங்களின்னவென்று அவர்களுக்கும், அவர்களால் மற்றோர்களுக்கும் கூறியருளுவார்கள். அப்பொழுது இப்புவியின்கண் வாஸ்தவமான புண்ணிய பூமிகள் எவையென்பது நன்கு விளங்கும். அதுவரையில் முன் காலத்தில் சக்தி வாய்ந்திருந்த க்ஷேத்திரங்கள் இப்பொழுது அவ்வளவு சக்தியுடன் இல்லாமலிருந்தாலும் மற்றவிடங்களை விட விருத்தியடைய ஸாதகமான விடங்களாதலால் யாத்திரைக்குத் தகுந்த ஸ்தலங்களேயெனக் கொள்ளல்வேண்டும்.

இந்திய மன்னர்கள்

THE EMPIRE BUILDERS

அசோக மௌர்யன்

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விதம் ஜனங்களின் நல்லொழுக்கத்திற்காக உழைத்த அசோகர் ஜீவஹிம்ஸையையும் தடுக்கத் தம்மாலான காரியங்களைச் செய்தார். மனிதனுடைய கர்மத்தினால், அவன் ஒரு ஜன்மத்தில் நரஜந்துவாகவும், வேறொரு ஜன்மத்தில் வேறொரு பிராணியாகவும் ஜன்மம் எடுக்கிறான். ஆகையால், இப்பொழுது நாம் உணவுக்காகக் கொல்லும் ஜந்துக்கள், போன ஜன்மத்தில் நரர்களாயிருந்திருக்கக்கூடும். நாமும் வேறொரு ஜன்மத்தில் ஓர் பிராணியின் உருவங்கொள்ள நேரிடும். மற்றும், அஹிம்ஸை என்னும் விரதத்தை அசோகன் மற்றவர்களுக்காக மாத்திரம் ஏற்படுத்தவில்லை. தன் செயல்களாலேயே, மற்றவர்களுக்கு ஓர் உதாரணங் காட்டினான். பின்வரும் சாஸனத்தில் கண்டபடி, அரண்மனை யாகசாலையில் ஏராளமான ஜீவன்களை உணவுக்காகக் கொல்லப்பட்டது குறைக்கப்பட்டு, பிறகு இரண்டு மயில்களும் ஓர் மானும் உபயோகிக்கப்பட்டன. ஆனால் இச்சாஸனம் வெளிவந்தபிறகு, அவைகளும் நிறுத்தப்பட்டன. அதாவது, பட்டாபிஷேகமான 13-ம் வருஷத்திலிருந்து, அசோகன் சாகபக்ஷணியானான். யாகத்திற்காகவும் மிருகங்கள் கொலை செய்யப்படாதென அசோகன் ஏற்படுத்தினான். இவைகளைப்பற்றிய விவரங்கள் சிலாசாஸனங்களில் விவரமாகக் காணப்படும். மற்றும் ஜனங்களுடைய சௌகர்யத்திற்காக அசோகன் செய்த காரியங்கள் சாஸனத்தை வாசிப்பதால் தெரியவரும்.

I

தேவர்களின் பிரியனும் ராஜனுமான பிரியதர்சி இந்த தருமத்தைப்பற்றின பத்திரத்தை வெளியிட்டிருக்கிறார்:-இங்கே எந்த மிருகமும் கொல்லப்பட்டு யக்ஞத்திற்குப் பலியாக இடக்கூடாது. ஸமாஜங்களில் பல கெடுதிகளுண்டென்று தேவர்களின் பிரியனும் ராஜனுமான பிரியதர்சி அறிகிறதால் ஸமாஜங்கள் கூடக்கூடாது. தேவர்களின் பிரியனும் ராஜனுமான பிரியதர்சியால் நன்குமதிக்கப்பட்ட யுத்தஞ்செய்யாத * ஸமாஜங்களு மிருக்கின்றன.

தேவர்களின் பிரியனும் ராஜனுமான பிரியதர்சியின் போஜனசாலையில் போஜனத்திற்காக மிருகங்கள் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் முன்னம் கொல்லப்பட்டுவந்தன. இந்த தருமபத்திரம் எழுதப்படும்போது (அந்த விஷயத்தில்) மூன்று மிருகங்களே—இரண்டு மயில்கள், ஒருமான்-போஜனத்திற்காகக்கொல்லப்படுகின்றன—மானும் வழக்கமாகக் கொல்லப்படுவதில்லை. இனிமேல், இம்மூன்று மிருகங்கள்கூட கொல்லப்படலாகாது.

II

தேவர்களின் பிரியனும் ராஜனுமான பிரியதர்சியின் ராஜ்யத்தில் எல்லா இடங்களிலும், எல்லைப்பிரதேசங்களிலும் உதாரணமாகசோழ பாண்டிய,ஸத்ய புத்ர,கேரளபுத்ர முதலியோர் தேசங்களிலும், இலங்கை வரைக்கும், அந்தியோக என்பவனுக்கருகில் வசிக்கும் அரசர்களின் ராஜ்யங்களிலும், எல்லாவிடங்களிலும், தேவர்களின் பிரியனும் ராஜனுமான பிரியதர்சியின் இரண்டுவிதமானவைத்தியசாலைகளை மனிதர்களுக்குச் சிகிச்சை செய்யவும் மிருகங்களுக்குச் சிகிச்சை செய்யவும் ஏற்படுத்தியிருக்கிறார். மற்றும் அவ்வவ்விடங்கள் மனிதர்களுக்குப் பிரயோசனமானவைகளும், மிருகங்களுக்குப் பிரயோசனமானவைகளுமான மூலிகைச் செடிகளை * கொண்டுவந்து நடப்பட்டிருக்கின்றன. எல்லாவிடங்களிலும்வைத்தியத்திற்கு வேண்டிய வேர்களும் கனிகளும் கொண்டுவரப்பட்டு, எங்கெங்கே அவைகள் கிடைப்பது அரிதோ, அங்கு பயிர்செய்யப்பட்டிருக்கின்றன.

ராஜபாதைகளில் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் உபயோகமாகும்படி கிணறுகள் வெட்டி, மரங்கள் நடப்பட்டிருக்கின்றன.

III

தேவனும் பிரியனும் ராஜனுமான பிரியதர்சி பின்வருமாறு கூறுகிறார்:—நான் முடிதரித்துப் பன்னிரண்டு வருஷங்களானபிறகு, என் ராஜ்யம் முற்றிலும் என் உத்தியோகஸ்தர்கள்-ராஜுகர்களும் பிரதேசிகர்களும்,—ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை சுற்றுப்பிரயாணம் போகவேண்டும். அவர்களுடைய மற்றைய காரியங்களோடு தர்மத்தைப்பற்றிப் பின்வருமாறு வற்புறுத்துவதும் அவர்களுடைய முக்கிய காரியமாகும்.

"தாயாருக்கும் தகப்பனுருக்கும் அடங்கி நடத்தல் மிகச் சிறந்தது. சிநேகிதர்களுக்கும், அறிமுகமானவர்களுக்கும், உறவினர்களுக்கும், பிராமணர்களுக்கும், ச்ரமணர்களுக்கும் தானஞ்செய்வது மிகச் சிறந்தது; ஜீவப்ராணிகளைக் கொல்லாமலிருப்பது நேர்மையானது; மிதமாக செலவழித்தலும் மிதமாகச் சேர்த்து வைத்தலும் மிகச் சிறந்தன."

பரிஷத்தும் (மந்திரிகளின்ஸபையும்) இவைகளைப்பற்றிய உத்தியோகஸ்தர்களும் உட்பொருளையும் பொது எண்ணத்தையும் தெரிவிப்பார்கள்.

IV

பூர்வீகத்தில், மிருகங்களைக் கொலைசெய்வதும், பிராணிகளை ஹிம்ஸிப்பதும், உறவினர்களிடமும், பிராமணர்களிடமும் ச்ரமணர்களிடமும் மரியாதையில்லாமல் நடப்பதும் அதிகரித்துக்கொண்டே வந்தன. அவ்விஷயத்தில் தேவனும் பிரியனும், ராஜனுமான பிரியதர்சியின் தர்மசாஸனத்தினால், ஜனங்கள் தர்மத்தைப்பற்றி முரசறைவதினால் அறிந்தவர்களானதால் - ஆகாயக் கப்பல் வேடிக்கைகளும், யானைக்காட்சிகளும், தீப வேடிக்கைகளும், மற்ற பிரகாசமான காட்சிகளாலும், பூர்வீகத்தில் அறியப்படாத விதமாய்,தேவர்களின் பிரியனும், ராஜனுமான பிரியதர்சியின் போதனையினால், ஜீவன்களைக் கொல்வதும் ஹிம்ஸை செய்வதும் நிற்பதோடு, உறவினர்கள், பிராமணர்கள் சிரமணர்கள் முதலியவர்களுக்கு மரியாதை செய்வதும் பெற்றோருக்கும் மூத்தோருக்கும் அடங்கி நடப்பதும் விருத்தியடைகின்றன.

தர்மத்தைப் பரவச்செய்வது பல வழிகளில் ஓங்குகிறது. தேவர்களுக்குப் பிரியனும் ராஜனுமான பிரியதர்சி அது செழித்தோங்கும்படி செய்வார். தேவர்களுக்குப் பிரியனும், ராஜனுமான பிரியதர்சியினுடைய புத்திரர்களும், பௌத்திரர்களும், அவர்கள் புத்திரர்களும், ஸம்வர்த்த கல்பம்வரையில் தர்மம் பரவுவதன் செழிப்பை விருத்தியாக்குவார்கள். தர்மத்திலும் அதை அனுஷ்டிப்பதிலும் நிலைநின்று, தர்மத்தைப்பற்றி பிரஸங்கம் செய்வார். ஏனெனில்; தர்மத்தைப் பிரசாரஞ்செய்வது மிகச் சிறந்த காரியமானபோதிலும், தர்மத்தைத் தானே அனுஷ்டிக்காத ஒருவனால் தர்மம் பரவச்செய்வது முடியாத கார்யம். ஆகவே, இவ்விஷயத்தில் கிரமமாக வளருவதே சரியானது ; முடியாதென்று சொல்லாமலிருப்பதும் சரியானது. இதற்காகவே பின்வருபவை எல்லாம் சொல்லப்பட்டன. நம் எண்ணம் வளர்ந்தோங்க முயற்சிசெய்து அது நாசமடையவிடாதே.

இது தேவப்பிரியனும் ராஜனுமான பிரியதர்சியால், அவர் சிங்காதனமேறிய பன்னிரண்டாம் வருஷம் கூறப்பட்டது.

V

தேவப்பிரியனும் ராஜனுமான பிரியதர்சி இம்மாதிரி கூறுகிறார்:—

நன்மை (செய்வது) கஷ்டமானது. நல்ல (காரியத்தை) ஆரம்பிக்கிறவன் கஷ்டமான காரியமொன்றைச் செய்கிறான். அம்மாதிரியான நல்லவை பல என்னால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. எனக்குப் பின் வரும் கல்ப முடிவாகும் வரைக்கும் இம்மாதிரி செய்

---

* யுத்தப் பயிற்சிசெய்யும் ஸமாஜங்கள் அசோகனது காலத்திலிருந்தனவென்றும், அவைகளில் பயிற்சிபெற்றவர்களில் கோபமடைந்தவர், ஒருவரோடொருவர் யுத்தஞ்செய்து கொண்டனரென்றும் இதனால் தெரியவருகிறது.

* எங்கு அவைகள் அகப்படுவதில்லையோ அவ்விடத்தில்.

யும் என் புத்திரர்களும் பௌத்திரர்களும் சந்ததியார்களும் புண்ணியகாரியங்களைச் செய்தவர்க ளாவார்கள். ஆனால் நான் இப்பொழுது செய்வதை அவமதிப்பவன் பாபம் செய்தவனாகிறான். பாபஞ்செய்வது சுலபமே.

பூர்வீகத்தில் தர்ம மஹாமாத்ரர்க ளென்று ஒருவரும் இருந்ததில்லை. எனக்குப் பட்டாபிஷேகமாகிப் பதின்மூன்று வருஷங்களுகுப் பிறகு நான் இந்த தர்ம மஹாமாத்ரர்களை ஏற்படுத்தினேன்.

பாஷாண்டர்கள் மீதெல்லாம் அவர்களுக்கு அதிகாரமுண்டு.

அவ்வவ்விடங்களிலுள்ள சமயாதிகாரிகளின்மீது அதிகாரமும், தர்மப் பிரசாரணத்திலும் ஹிருதய ஸந்துஷ்டியிலும், கிரேக்கர், காம்போஜர், காந்தாரர் முதலியோர்களிடமிருக்கும் சமயாசாரிகளிடமும், ராஷ்டிரிகர், பீதேனிகர், அபாக்தர்களிடமும் அவர்களுக்கு அதிகாரமுண்டு.

அநாதைகளுக்கும் கீர்த்தி அனைத்தையும் இழந்தவர்களுக்கும், தாய் தந்தையர்களற்ற அநாதைகளுக்கும், வயோதிகர்களுக்கும், மதாசாரியர்களின் மிகவும் அதிகமான வேலையில்லாமலிருக்கும்படியும் பார்க்கவேண்டும்.

மன்னிக்கவும், சிறைச்சாலைத் தண்டனையிலும், தண்டனையிலும் கைதிகளை மன்னிப்பதிலும், கடுமையான வேலையிலும், கைதியை நம்பி குழந்தைக ளிருக்கும்போதாவது, மற்றொருவனுடைய போதனையினாலாவது கைதி மிகவும் வயதுமுதிர்ந்தவனா யிருந்தபோதாவது கைதியைச் சிறையிலிருந்து நீக்கவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு.

பாடலீபுரத்திலும் மற்றுமுள்ள ராஜாங்க முக்கியப் பட்டணங்களிலுமுள்ள எனது சஹோதரர்கள், சஹோதரிகள் உறவினர்கள் முதலியவர்களுடைய அரண்மனைகளிலும் அவர்களுக்கு அதிகாரமுண்டு.

தர்மப்பிரசாரகன், ஸமயாச்சார்யன், அல்லது மானியம் பெற்றவன் ஆகிய இவர்களில் எந்த ஸமயாதிகாரியின்மீதும் தர்ம மஹாமாத்ரர்களுக்கு அதிகாரமுண்டு.

இதன்பொருட்டே தர்மத்தை விளம்பரம் செய்யும் பத்திரம் பிறப்பிக்கப்பட்டது. அது நெடுநாள் நின்று, என் சந்ததியார் அதைப் பின்பற்றக்கடவர்.

நமது சிறு கதை

OUR SHORT STORY

நான்காம் அத்தியாயம்

துக்கக்கடலில் சூரியோதயம்

துன்ப சாகரமான இந்நில வுலகத்தில், துக்க சுகங்கள், ஆசைகள் முதலிய பலவகைப்பட்ட புயற் காற்றுகளில் அகப்பட்டுக் கவிழ்ந்துபோகாமல் தன்னை மிதக்கும் நிலைமையிலேயே நிலைத்துக்கொள்ளும் வன்மையற்ற அற்பத் தோணியான மனத்தையே துணையாகக்கொண்டு, அத்தோணியை அச்சாகரத்திற் செலுத்துவதற்கு, பெரியோர் போதகம், நீதி சாஸ்திரங்கள் முதலிய ஊன்றுகோல்களை ஒறுத்துத்தள்ளி தன் சுயபுத்தியான ஊன்றுகோலையே சிறந்ததாகக் கருதி உபயோகித்து, விஷயங்களை ஆராய்ந்தறிந்து அமைதி யடையவொட்டாது தடுக்கும் கோபமென்னும் சரக்கை தன்னை யணுகுபவருக்கு விற்பதற்காக அத்தோணியி லேற்றி, நீர் மட்டத்துக்கீழ் மறைந்துள்ள வஞ்சகப் பாறைகள் நிறைந்துள்ள அப்பவசாகரத்தைக் கடக்க ஒருவன் முயலுவானேயாகில், மன்மதனால் நிருமிக்கப்பட்ட காமம் என்ற பாறையில் அப்படகு மோதி உடைந்து பொடியாகி, அவன் நீரில் முழுகி இறந்துவிடுவா னென்பது திண்ணம்.

"மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்"
"ஒறுத்தார்க்கு ஒருநாளை யின்பம் பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்".—

என்னும் நீதிமொழிகளைக் கற்று முணராத செங்கோட கௌண்டர், பெற்றார் சுற்றத்தார், செல்வம், நாடு முதலியவைகளைத் தமது அன்பை யடைவதற்காகத் துறந்து, நாகரிகமற்ற பிறநாட்டில் நிர்மானுஷ்யமான காட்டில் வந்து வசிக்கத் துணிந்த தமது நாயகியின் பேரன்பின் அளவை யறியும் திறனற்று, தாம் அவளிடத்துக்கொண்ட காதலுக்கு அவளது வனப்பையே ஆதாரமாகக் கொண்ட தம்மைப்போலவே தமது நாயகியும் தம்மிடம் ஆசைகொண்டாளென மதித்துவிட்டார். எட்டுமாதக் காலம் அவளை நிர்மானுஷ்யமான காட்டில் நிர்க்கதியாய் விட்டுச் சென்ற தம்மீது சிறிதும் சினமடைய வொட்

டாத அவளது அன்பின் சிறப்பை யறியும் சக்தியற்றவரா யிருந்ததால் அவளது கற்பைக் குறித்துச் சந்தேகித்தார். தனக்குக் கிடைத்த சகோதரனை அவள் சிறிதும் கபடமின்றிப் புகழ்ந்ததைக் கேட்டு மகிழும் பெருங்குணமற்றவ ராதலால், தூய்மையான அன்பைக் காமவெறியென வெண்ணி மருண்டார். ஐயோ! காமமே! உன்னால் உலகில் விளையும் துக்கத்துக்கு எல்லையைக் காணோமே! ஹா! இரதி தேவி! உனது நாயகனால் உலகத்தவர் படும் கொடிய துன்பங்கள் அளவற்றிருப்பதை நீ அறிந்திருந்தால், முக்கணெணந்தையால் எரிக்கப்பட்ட நினது நாயகனை உயிர்ப்பிக்கவேண்டுமென்று அக்கருணைக் கடலை நீ பிரார்த்தித்திருக்க மாட்டாய்! நீ அதை யறியாதது உலகோர் செய்த தீவினைகளின் பயனேபோலும்!

முந்திய அத்தியாயத்திற் கூறியவாறு செங்கோட கௌண்டர் பூர்ண கர்ப்பிணியான தமது நாயகியைக் கோரமான தண்டனைக்காளாக்கி, அவள் பரிதாப நிலைமையைக்கண்டு சற்றும் மனமிரங்காது அக்காட்டை விட்டகன்றார். சிலகாலமாய் உடன்பிறந்தவனைக்காட்டிலும் மிக்க ஆதரவுடன் தேவஸேனையைப் போஷித்துக் காப்பாற்றிவந்த குமாரசாமி கௌண்டர், அன்று மாலை திரும்பிவருவதாகச் சென்றவர், சீக்கிரம் வேட்டை முடிந்துபோனதால் அன்று காலை பத்து நாழிகைக்கே குடிசைக்குத் திரும்பிவிட்டார். குடிசையின் கதவு திறந்துகிடந்ததையும். குதிரைக்குளம்புகளின் சுவடுகள் குடிசையினருகே காணப்பட்டதையும் கண்டு சிறிது ஆச்சரியத்துடன் குடிசைக்குள் நுழைந்து, "அக்கா! அக்கா!" என்று தேவஸேனையைக் கூப்பிட்டார். மறுமொழி யொன்றும் கிடைக்காததால், பெருங் கவலையுடன் குடிசை முழுவதையும் நொடிப்பொழுதில் சுற்றிப்பார்த்து, தாம் ஸ்வீகரித்துக்கொண்டு ஆதரவுடன் காப்பாற்றிவந்த தமக்கையைக் காணாது, மனங்கலங்கி பெருங் கவலையுடன் குடிசையைவிட்டு வெளியே ஓடினார்.

மரங்கள் அடர்ந்து வளரப்பெற்றதும் புதர்கள் நிறையப்பெற்றதுமான வித்தாரமான காட்டில் தம் தமக்கையை எங்கு தேடுவதென்று சிறிது நேரம் திகைத்து, தமது கால்களில் பலமுள்ளவரையில் ஓடித் தேடவேண்டுமெனத் தீர்மானித்து, ஓடவாரம்பித்தார். அதற்குள் அவரது வேட்டை நாயானது சந்தோஷக் குறிகளுடன் பூமியை மோப்பம் பிடித்துக்கொண்டு வெகுவிரைவாய் ஓடி நூறு கஜத்துக்கப்பால் போய் நின்று ஏதோ வொரு பொருளை யுற்றுநோக்கிக்கொண்டே உரக்க அழுவதைக் கவனித்து, மனத்தைப் பிளக்கும் துயரத்துடன் நாய் நின்ற விடத்தை நோக்கியோடி, நாயின் மனத்தில் துக்கத்தை விளைவித்த பொருள் என்னவென்று பார்த்தார். தமது அருமைச்சகோதரி மரத்தோடுமரமாய்ப் பிணைத்துக் கட்டப்பட்டு, தேகத்திற் பலவிடங்களிலிருந்து இரத்த வெள்ளம் பெருக, மூர்ச்சை யடைந்திருந்ததைக்கண்டு, அங்கமெல்லாம் பதற, "ஹா! என்ன கொடுமை! என்ன கொடுமை! அக்கா! நீ இறந்தாயோ?" என்று வாய்விட்டலறிக்கொண்டே, தமது உடைவாளை உறையினின்று உருவிக்கொண்டு ஓரே பாய்ச்சலில் அம்மரத்தண்டையிற் போய்ச் சேர்ந்து, தம் தமக்கையின் கட்டுகளை யறுத்துவிட்டு, அவளைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்கு விரைந்தோடி, குளிர்ந்த நீரை அவள் முகத்தில் தெளித்து, மூர்ச்சை தெளிவிக்க முயன்றார். அவர் எவ்வளவு முயன்றும், வெகுநேரம் வரையில் அவளுக்கு மூர்ச்சை தெளியவில்லை.

அவள் கர்ப்பவதியாயிருந்ததால், எந்த சமயத்தில் யாது சம்பவிக்குமோ வென்று பயந்து, குமாரசுவாமி கௌண்டர் இரண்டு மைல் தூரத்துக்கப்பாலுள்ள ஆப்பிரிக்க வேடர் வளைவுக்குச் சென்று, அங்கிருந்து ஓர் வேடனையும் ஓர் வேடுவச்சியையும் தமது குடிசைக்கு அழைத்துவந்து, அவ்வேடுவச்சியைத் தமது தமக்கையினிடம் காவலாக வைத்தார். அன்றுபகல் முழுவதும் தேவஸேனை கண்ணை விழிக்கவேயில்லை. அஸ்தமித்து நான்கு நாழிகைக்கு வேடுவச்சியானவள் குடிசைக்கு வெளியே கவலையுடன் மௌனமாய் உட்கார்ந்திருந்த குமாரசுவாமி கௌண்டரை யணுகி, தேவஸேனைக்குப் பிள்ளை பிறந்ததாகவும், அவள் மூர்ச்சை தெளிந்து அவரைக் கூப்பிடும்படி சொன்னதாகவும் உரைத்தாள்.

குமாரசுவாமி கௌண்டர் சிறிது கவலை நீங்கி விரைவாய்க் குடிசைக்குட் சென்று, "அக்கா! பிழைத்திருக்கிறாயா? எவருக்கும் தீங்கு நினையாத உனக்கு இப்படிப்பட்ட

கொடிய தீங்கிழைத்த கொடும்பாவி யார்? என் ஆவியை இழக்க வேண்டுமானாலும் அவன் மீது பழிதீர்க்காமல் விடுவதில்லை. அவன் யாரென்று உனக்குத் தெரியுமா?” என்று துடிக்கும் நெஞ்சத்துடன் கேட்டார். தேவஸேனை ஈனக்குரலுடன், “தம்பி! பாவியேன் மாய்ந்து போகாமல் புவிக்குச் சுமையாய்ப் பிழைத்துவிட்டேன். நேற்று இத்தருவாய் வரையில் என் அளவில்லா அன்புக்குப் பாத்திரனாய் உலகில் நிகரற்றவனாக என்னாற் கருதப்பட்ட என் புருஷன் வஞ்சனையாக என்னையழைத்துப்போய் என்னைச் சித்ரவதை செய்தான். ‘என் தம்பி வந்தால் உன்னைத் தொலைத்துவிடுவான், உயிர் பிழைக்கவேண்டுமானால் ஓடிப்போ’ என்று வெருட்டினேன். உடனே மூர்ச்சையடைந்தேன். மூர்ச்சை தெளிந்து விழித்துப் பார்க்கையில், இதோ கிடக்கும் சிசுவைக் கண்டேன். அக்கொடிய பாதகனை முற்றிலும் ஒத்திருக்கிறது. இதன் குணமும் அவனுடையதைப் போலவே கொடியதாயிருக்கு மென்பதிற் சந்தேகமில்லை. இது உயிருடனிருந்தால் இதுவும் ஒரு ஸ்திரீயை இவ்வாறே கொடிய துன்பத்துக் காளாக்கும். அக்கொடியன் வம்சம் அற்றுப் போகவேண்டுமாதலால், இச்சிசுவைக் கொடிய மிருகங்களுக்கு இரையாக்கி விடு. இது என் கண்முன் இராமல் அப்பால் உடனே எடுத்துக்கொண்டு போ!” என்று கடுங்கோபத்துடன் மொழிந்தாள்.

இக்கொடிய வார்த்தைகளைக் கேட்ட குமாரசுவாமி கௌண்டர் மிகவும் மனம் வருந்தி, “அக்கா! நீ இவ்வாறு பேசுவது தருமமன்று. கோபத்துக்கு இடங்கொடுக்காதே! யாதொரு பாபமுமறியாத இச்சிசுவை, ஈசன் உன் கையில் வளர்ப்பதற்காகக் கொடுத்திருக்கிறார். அதையழிப்பதற்கு உனக்குச் சிறிதும் பாத்தியமில்லை. இது நீ பெற்ற குழந்தையல்லவா? அதோ அது பரமாத்மாவைக்கண்டு ஆனந்திக்கிறது, பார்! அதன் இளநகை கன்னெஞ்சமுள்ள அயலாரையும் அன்புபாராட்டச் செய்யுமே. உன் மனத்தில் அது இரக்கத்தையுண்டுபண்ணவில்லையா? தாயே! உன் குழந்தையை எடுத்துக்கொண்டு ஆதரி!” என்று தழுதழுத்த குரலுடன் உரைத்தார்.

அம்மொழிகளைக் கேட்டதும், தேவஸேனையின் தன்மை முழுவதும் மாறிற்று. தன் கொடிய எண்ணத்தை நினைத்து மெய்ந்நடுங்கினாள். கண்களினின்றும் துக்க அருவி பெருகிற்று. “ஹா! என் கண்ணே! எனதாருயிரே! இத்துக்கக் கடலில் எனக்குத் துணையாக வந்த செல்வமே! உன்னைக் கொல்ல நினைந்தேனே பாவியேன்!” என்று தன் குழந்தையை அன்புடன் எடுத்து மார்போடணைத்து முத்தமிட்டாள். இன்னும் மாயையின் திரையினால் முழுவதும் மறைக்கப்படாத பரமாத்மசொரூபம் அதன் கண்களின் முன் அச்சமயத்தில் தோன்ற, அது வாய்பிளந்து நகைத்தது. தேவஸேனைக்குத் துக்கம் மேலிட்டுக் கதறினாள். “தம்பி! நான்கொண்ட பாபவெண்ணத்துக்குக் கடவுள் என்னை மன்னித்தருளுவாரோ, சொல்” என்று குமாரசுவாமி கௌண்டரைக் கேட்டாள். அவர், “அக்கா! சினத்தையொறுத்தவரே மனிதர் என்னும் பெயரை வகிக்கத் தக்கவர்.

“இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.”

என்றவாறு, கோபத்தில் வரம்பு கடந்து நிற்பவர் முத்திக்கவசியமான ஞானத்தைப் பெறாராகலின், இறந்தவருக்குச் சமானமாவர்; சினத்தைத் துறந்தவர் இறப்பையொழித்த பெரியோருக்கு இணையாவார். ஆனால் அச்சினத்தை முற்றிலும் அகற்றுவது இறைவனருள் பெற்றார்க்கல்லது மற்றவருக்குச் சாத்தியமன்று. ஆகையினால் நீ இறைவனைத் துதி! அவர் உன்னை மன்னிப்பார்!” என்று சொல்லி அவள் மனத்தைத் தேற்றினார். தேவஸேனை மீண்டும் களைப்புற்று உறங்கலானாள். குமாரசுவாமி கௌண்டர் துக்கம் குடிகொண்ட மனத்துடன் குடிசையைச் சுற்றியுள்ள அடைப்பில்படுத்து ஏதேதோ சிந்திக்கலானார்.

ஐந்தாம் அத்தியாயம்

அற்புதப் பிறப்பு

முந்திய அத்தியாயத்திற் கூறியவாறு தேவஸேனைக்குப் பிறந்த மகனுக்கு ஐந்து ஆண்டு நிறைந்த பின்னர், ஒரு நாட்காலையில் தேவஸேனை வீட்டுக்குள் ஏதோ வேலையாயிருந்ததில், தன் மகன் முருகையனைச் சிறிது நேரம் கவனியாம லிருந்துவிட்டாள். சிறிது நேரம் பொறுத்துப்பார்க்கையில் குழந்தை வீட்டுக்குள் இல்லாததைக்கண்டு, வீட்டின் பின்புறத்திலுள்ள தோட்டத்தில் குமாரசுவாமி கௌண்டர்வேலைசெய்துகொண்டிருந்த விடத்துக்குச் சென்றிருக்கலா மென்றெண்ணி, அங்குசென்று, “தம்பி! முருகையனை உள்ளே காணோமே; இங்கு வந்தானோ?” என்று கேட்டாள். குமாரசுவாமி கௌண்டர் திடுக்கிட்டு, “உள்ளே காணோமா? இங்கே வரவில்லையே. உள்ளே நன்றாய்ப் பார்த்தாயா? உள்ளே வா, நன்றாய்த் தேடிப் பார்ப்போம்” என்றார்.

பதைக்கும் மனத்துடன் இருவரும் உள்ளே சென்று தேடிப் பார்த்தனர். எங்கும் குழந்தையைக்காணோம். வெளியே சென்று பார்த்ததில், வீட்டைச் சுற்றியுள்ள அடைப்பின் கதவு திறந்திருந்தது. அப்போதுதான் குமாரசுவாமி கௌண்டருக்கு தாம் வெளியேயிருந்து வந்தபோது திரும்பவும் உடனே வெளியே போகவேண்டுமென்ற எண்ணத்தினால் கதவைத் தாளிடாதது ஞாபகத்துக்கு வந்தது. “அக்கா! என் புத்தியீனத்தினால் ஆபத்து வந்துவிட்டது. நீ குழந்தையைப் பார்த்து எவ்வளவு நேரமாயிற்று?” என்று குமாரசுவாமி கௌண்டர் கேட்டார். “அரை நாழிகைதானாயிற்று அப்பா!” என்றாள் தேவஸேனை. “அரைநாழிகைபோதாதா அவனுக்கு? சிங்கத்தின் குகையிலிருக்கிறானோ புலியின் புதரிலிருக்கிறானோ! கடவுள்தான் அவனை இரக்ஷிக்கவேணும்” என்று சொல்லி உள்ளே பாய்ந்து, கத்தியும் துப்பாக்கியும் எடுத்துக்கொண்டு வெளியே வந்து, “அக்கா! குழந்தை சிங்கத்தின்வாயிலிருந்தாலும் மீட்டுக்கொண்டு வருகிறேன். பயப்படாமல் இங்கேயேயிரு!” என்றார். தேவஸேனை, “தம்பி! காத்திருக்க என்னாலாகாது. நானும் கூடவருகிறேன்!” என்று சொல்லி, உள்ளேயிருந்து துப்பாக்கியும் உடைவாளும் எடுத்துக்கொண்டு வந்து அவருடன் புறப்பட்டாள்.

மேற்கூறிய விஷயங்களனைத்தும் கணநேரத்தில் முடிந்துவிட்டன. இருவரும் புலியைக் கண்டு வெருண்டோடும் மான்களைப்போல் மனோவேகமாய்ப் பாய்ந்து ஓடினர். “முருகையா! முருகையா!” என்று கூவிக்கொண்டே ஓடினார்கள். வீட்டுக்குச் சுமார் ஒரு மைல் தூரத்துக்கப்பால் ஒரு சிறு குன்றிலுள்ள ஓர் குகையையணுகியதும் இருவரும் ஓட்டத்தை நிறுத்தி மெதுவாய்ச் சத்தமின்றி நடந்து சென்றனர். குமாரசுவாமி கௌண்டர், “அக்கா! குகையில் ஆண் சிங்கத்தின் கர்ச்சனை கேட்கிறது. முருகையன் கதி என்னவாயிற்றோ! துப்பாக்கியைத் தயாராக வைத்துக்கொள்!” என்று தேவஸேனையினிடம் தாழ்ந்த குரலிற் சொல்லிவிட்டு, தம் துப்பாக்கியையும் கத்தியையும் உபயோகத்துக்குத் தயாராக வைத்துக்கொண்டு, “முருகையா!” என்று ஒருமுறை உரக்கக் கூவினார். குகைவாயின் அருகேயுள்ள புதரில் ஏதோவொரு ஜந்து அசைந்தது. ஓர் குழந்தையின் மெல்லியகுரல் கேட்டது. குமாரசுவாமி கௌண்டரும் தேவஸேனையும் துடிக்கும் நெஞ்சத்துடன் மௌனமாய் நின்றனர். கணநேரத்துக்கெல்லாம் ஐந்துவயது நிரம்பாத குழந்தை முருகையன் தனது வலது கையில் ஒரு சிறு சிங்கக்குட்டியைக் கழுத்தைப் பிடித்துத் தூக்கிக்கொண்டு, பூமியை மோப்பம் பிடித்துக்கொண்டு, நாற்புறமும் சுற்றிக் கவனித்துக்கொண்டு, சப்தம் செய்யாது பூமியோடு பூமியாய் நகர்ந்துகொண்டு வந்து, அவர்களிருவரும் நிற்குமிடத்தையடைந்து எழுந்து, மிகுந்த சந்தோஷத்துடன் அச்சிங்கக் குட்டியைத் தேவஸேனையின் கையிற்கொடுத்து, ‘குட்டி நன்றாயிருக்கிறதா?’ வென்று ஜாடையினாற் கேட்டான். தேவஸேனை தன் குழந்தையின் அபூர்வ சக்தியைக் கண்டு ஒருபுறம் மகிழ்ச்சியடைந்தும், அக்குழந்தை அடிக்கடி இப்படிப்பட்ட அபாயகரமான செய்கையைச் செய்வதையுன்னி ஒருபுறம் கிலியும் துயரமு முற்றும், இனிக்காணுவதரிது என்றெண்ணிய குழந்தையைக் கண்டதுமுண்டான பேரானந்தத்தினால் தன்னருமை மகனைத் தூக்கி மார்போடணைத்து முத்தமிட்டுக்கொண்டு கண்களினின்றும் ஆனந்த பாஷ்பம் ஆராய்ப்பெருக, குமாரசுவாமி கௌண்டரை நோக்கி, “தம்பி! முருகையன் தீரத்தைப் பார்த்தாயா? கத்தி, துப்பாக்கியின்றி கொடிய மிருகங்களை அணுகத் துணியும் இச்சிறு வேடனன்றோ உண்மையான வேடன்!” என்று தன் குழந்தையின் பெருமையைத் தன் தம்பியினிட முரைத்து மகிழ்ந்தாள். பிறகு அச்சிங்கக்குட்டியை அக்குகைவாயினண்டையிற் போட்டுவிட்டு, குழந்தையைத் தூக்கிக்கொண்டு, சந்தடி செய்யாது அவ்வபாயகரமான இடத்தைவிட்டகன்றனர்.

இக்கதையைப் படிக்கும் நமது அன்பர்களிற் பலர் மேற்கூறிய சம்பவத்தைக் கட்டுக்கதையின் ஓர் அங்கமாகக் கருதிப் புன்னகைகொள்வார்களென்பதற் கையமில்லை. ஆதலின் மேனாடுகளில் சாஸ்திர ஆராய்ச்சி செய்துள்ள அறிஞர்கள் பலர், தங்கள் அனுபவத்தில் ஏற்பட்டதாகக் கூறியுள்ள இத்தகைய அதிசயப் பிறப்புகளிற் சிலவற்றை இங்கு எடுத்துரைப்போம்.

எட்டுமாதக் கர்ப்பிணியான ஒரு ஸ்திரீயை, ஒரு குதிரை வயிற்றிலுதைத்துக் காயப்படுத்திற்று. அவளுக்குப் பிறந்த குழந்தை குதிரை போற் கனைத்தது; நிற்கும்போது குதிரை தன் பின் கால்களிலொன்றை மற்றொன்றின் மேல் தாங்கி வைத்துக்கொள்வது போலவே அதுவும் ஒரு காலை மற்றொரு காலின் குதிகாலின்மீது வைத்துக்கொண்டு நின்றது; ஏதாயினுமொரு பொருளை யுற்று நோக்குங்கால் குதிரையைப் போலவே தலையைச் சாய்த்துக்கொண்டு நோக்கிற்று.

ஏழுமாத கர்ப்பிணியான ஒரு ஸ்திரீயிருந்த அறைக்குள் பீபிள்ஸ் பார்க்கிலிருந்து தப்பியோடி வந்த காட்டு மனிதனென்று சொல்லப்படும் குரங்கொன்று திடீரென நுழைந்தது. அதைக் கண்ணுற்றதும் அவள் கிலியுற்று மூர்ச்சையடைந்தாள். குரங்கு அவளை யொன்றுஞ் செய்யாமல் அவ்வறையைவிட் டகன்றது. ஆயினும் அவளுக்குப் பிறந்த குழந்தை அக்குரங்கைப்போல கரிய மயிர் மூடிய தேகமுடையதாயும், அக்குரங்கின் நடை, பாவனை, குணம் முதலியன வுடையதாயும் இருந்தது.

இத்தகைய அதிசயப் பிறப்புகள் பலவுளவென்று சாஸ்திர ஆராய்ச்சி செய்த அறிஞர்கள் கூறுகின்றனர். நமது குழந்தை முருகையனும் அவ்விதப் பிறப்புகளிற் சேர்ந்தவன். பூர்ண கர்ப்பிணியாயிருக்கும்போது வேட்டை நாயினாற் கடிக்கப்பட்ட தேவஸேனை, வேட்டை நாயின் தீரமும் மோப்ப சக்தியும் பொருந்திய அற்புத மகனைப் பெற்றாள். ஈசனருளினால் தீயசெயல்களும் நன்மைகளாகவே முடியும் என்பதற்கு இது ஓர் அத்தாட்சி போலும்! பிறந்ததுமுதல் முருகையன் வேட்டை நாயின் குணங்கள் தன்னிடம் பொருந்தியிருப்பதை வெளியிட ஆரம்பித்தான். வீட்டின் பக்கத்தில் இரவில் சஞ்சரிக்கும் கொடிய மிருகங்களின் அடியோசையைக் கேட்டதும் அவன் காதுகள் விடைக்கும், உடல் துடிக்கும், கண்கள் ஜ்வலிக்கும், அத்திசையில் நகர முயலுவான். கொஞ்சம் நடக்கத் தெரிந்தவுடன், வெளிக் கதவு தற்செயலாய்த் திறந்திருந்தால் வெளியேறி கொடிய மிருகங்களின் உறைவிடங்களை மோப்பத்தினாலறிந்து அங்கு சென்று, திருட்டுத்தனமாய் அவைகளின் குட்டிகளைத் தூக்கிக்கொண்டு வர ஆரம்பித்தான். அவனுடைய சாவதானத்துக்கு நிகரேயில்லை. ஒருமுறையாவது மிருகங்களினிடம் அகப்பட்டுக்கொண்டதே யில்லை. ஆயினும் அவன் சிறு பாலகனா யிருந்ததால், தேவஸேனையும் குமாரசுவாமி கௌண்டரும் மிகவும் கவலையுற் றிருந்தார்கள்.

ஆறாம் அத்தியாயம்

கோரமான சபதம்

முருகையனுக்கு வயதாகவாக அவன் சக்தி அதிகரித்தது. பதினாறு வயதாயிற்று. தனக்கு நிகரான வேடனே அக்காட்டிலில்லையெனப் பெயர்பெற்றான். கொடிய மிருகங்களை அவன் உபயோகமற்ற நாய்களாக மதித்தான். அவன் மனத்தில் ஒரு கணமேனும் அச்சமென்பது உண்டானதே யில்லை. ஆயுதங்களை உபயோகிப்பதிலும் இணையற்றவனாயினான். அவன் வைத்த குறி தவறாது சுடும் திறமை யடைந்தான்.

இவ்வாறு எவ்விதத்திலும் தனக்கு நிகரில்லாதவனா யிருந்த தனதருமை மகனைக் கண்டு அடங்கா மகிழ்ச்சிகொண்ட தேவஸேனையின் மனத்தில் ஒரு நாள் ஒரு நூதன எண்ணமுண்டாகி அவள் சுபாவத்தை முற்றிலும் மாற்றிவிட்டது. அதுவரையில் தன் சகோதரனுக்குத் தெரியாத இரகசியமில்லாதவள், அவ்வெண்ணத்தை அவனுக்குத் தெரிவிக்கக் கூடாதென நிச்சயித்தாள். அவ்வெண்ணம் அவள் மனத்தில் தோன்றியதற்கு மறுநாள், குமாரசுவாமி கௌண்டரும் முருகையனும் வேட்டைக்குப் புறப்படுகையில், தேவஸேனை குமாரசுவாமி கௌண்டரை நோக்கி, "தம்பி! இன்று ஏதோ எனக்கு உடம்பு சரியாகவில்லை. முருகையன் மட்டும் வீட்டிலேயே யிருந்தால் சௌகரியமா யிருக்கும்" என்று தன் தம்பியினிடம் முதல் பொய்யை உரைத்தாள். குமாரசுவாமி கௌண்டர் தாமும் வீட்டிலேயே யிருப்பது அவசியமானால் வீட்டிலேயே யிருந்துவிடுவதாகச் சொன்னதற்கு, அவர் இருக்கவேண்டுவது அவசியமில்லை யென்று விட்டாள். அவரும் தம் தமக்கையின் தேக அசௌக்கியம் என்னவோ என்று எண்ணிக்கொண்டு வேட்டைக்குச் சென்றார்.

அவர் வீட்டை விட்ட அரை நாழிகைக்கெல்லாம் தேவஸேனை தன்மகனை யழைத்துத் தன் முன் நிற்கும்படி செய்து, கோபம் ஜ்வலிக்கும் கண்களுடன், "முருகையா! நீ என்னிடம் நிஜமான அன்புடைய பிள்ளையானால், நான் இப்போது உனக்குக் கட்டளை யிடப்போவதை நிச்சயம் செய்துமுடிப்பதாக சத்தியஞ்செய்!" என்று கம்மிய குரலுடன் உரைத்தாள். தன் தாய் சினமடைந்ததை ஒருபோதும் பார்த்திராத முருகையன் மிகுந்த ஆச்சரியத்துடன், "அம்மா! நீ இட்ட கட்டளையைச் செய்யாத நாளுண்டோ? கோபமற்ற உன் மனத்தில் கோபமூட்டியது யாதென்று சொல்! உன் கட்டளையைச் சத்தியமாய்ச் செய்து முடிக்கிறேன்" என்றான். உடனே தேவஸேனை, "அப்பா! 'தாயிற் சிறந்த கோவிலுமில்லை" யாதலால், நீ கோவிலில் சத்தியஞ் செய்திருக்கிறாய்; ஆகையினால் தவறாதே! உன்னை யீன்ற தகப்பன் - கொடிய பாதகன் - யாதொரு பாபமுஞ் செய்யாத பேதையேனை - அவனுக்குத் துரோகம் என்பதைக் கனவிலுமெண்ணாத ஏழையேனை வஞ்சித்து அழைத்துப்போய் அதோ தெரியும் மரத்தில் இறுக்கிக் கட்டி, நான் பூர்ண கர்ப்பவதியா யிருந்ததைக் கண்டும் மனமிரங்காது, தனது வேட்டை நாயை என்மீது தூண்டிவிட்டான். அது என் தேகத்தைப் பலபக்கங்களிற் பிடுங்கியதனால்தான் உனக்கு வேட்டை நாயின் குணங்கள் ஏற்பட் டிருக்கின்றன. என்னைக் கட்டுண்ட ஸ்திதியிலேயே விட்டுவிட்டு, தன் ஊராகிய சேலத்துக்குப் போய்விட்டான். நீ அவன் எங்கிருந்தாலும் தேடிப்பிடித்து அவன் பிராணனை மாய்க்கவேண்டும். தகப்பன் என்று இரக்கங்கொள்ளக் கூடாது. அவன் என்னிடத்தில் இரங்கவில்லை. அதை மறக்காதே. நீ அவ்வாறு செய்வதாக என் கையிலறைந்து இன்னொரு முறை சத்தியஞ் செய்!" என்று படபடப்புடன் மொழிந்தாள்.

அக்கொடிய சரித்திரத்தைக் கேட்டதும், முருகையன் அங்கமும் நெஞ்சமும் பதறின. தன் அளவற்ற அன்புக்குப் பாத்திரமான தாயை ஒருவன்—அவன் தந்தையா யிருந்தா லென்ன, தெய்வமாய்த்தான் இருந்தா லென்ன?—அப்படிப்பட்ட கொடிய துன்பத்துக்கு ஆளாக்கினான் என்று கேட்டதும் அவன் சினம் கரைகடந்துபோயிற்று. நாகரிகமுள்ள நாடுகளில் வசிப்பவர்களே சினத்தையகற்றச் சக்தியற்றவர்களா யிருக்கும்போது; பிறந்த நிமிஷமுதல் வேடர்களுடன் பழகி வந்த படிப்பிலா வேடன் சினத்துக்கிடங் கொடுப்பது ஆச்சரியப்படத்தக்கதன்று. தன் தாய் நீட்டிய கையில் தன் கையினால் ஓங்கி யறைந்து, "அக்கொடியவன் என் தந்தையல்ல. அவனைத் தொலைத்து விடுகிறேன். அவன் உடை ஏதேனும் இங்குளதோ, சொல்! அதை மோந்து பார்த்துவிட்டு உடனே புறப்படுகிறேன்" என்று வேட்டை நாயினுடலைப்போல் துடிக்கும் தேகத்துடன் சொன்னான். தேவஸேனை ஒரு பழைய சட்டையைக் கொண்டு வந்து கொடுத்து, "அப்பா! இதுவே அவன் பல நாளணிந்த சட்டை! தெய்வச்செயலாய் அதை இதுகாறும் பத்திரப்படுத்தி வைத்திருந்தேன். நீ பழிதீர்ப்பது தர்மம். ஆகையினால் உனக்குக் கடவுள் துணையாயிருப்பார். அப்பாதகன் மங்கலஹல்லி ஜமீன்தார். மங்கலஹல்லி இந்தியாவில் சேலம் ஜில்லாவில் உள்ளது. நீ சென்று அவனைத் தொலைத்துவிட்டுவா. உன் மாமன் வந்தால் தடுப்பான். ஆகையினால் அவன் வருமுன் நீ போய்விடு"—என்று சொல்லி, சவரன் நிறைந்த ஓர் பையை அவன் கையிற் கொடுத்தாள். முருகையன் சட்டையையும் பணப்பையையும் பெற்றுக்கொண்டு, தன் ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு, தாயை வணங்கி, தாயின் சொற்படி தந்தையை மாய்க்கும் தருமச்செயலைச் செய்யும் நோக்கத்துடன், கடவுளை வேண்டிக்கொண்டு, வீட்டைவிட் டகன்றான். கொலைஞனும் தன் காரியம் சித்தியாக வேண்டுமென கடவுளைப் பிரார்த்திக்கிறானே! இதென்ன அதிசயம்? இதுவே ஜடவுலகமென்பது போலும்!

ஏழாம் அத்தியாயம்

பழிதீர்த்தல்

இனிய வசந்த காலத்தில் ஓர் நாட்காலையில் மங்கலஹல்லி கிராமத்தில் மங்கலஹல்லி

ஜமீன்தாரின் பங்களாவின் வெளிவாசற்படியண்டையிலுள்ள சிறு கட்டிடத்தில் அறுபது வயது சென்ற கிழவன் உட்கார்ந்துகொண்டு, மூப்பின் தன்மைக்கேற்றபடி தானாக பின்வருமாறு பேசிக்கொண்டிருந்தான். "வேலாயுதனே! சாமி! பங்களாவெல்லாம் பாழடைந்து போகிறதே! எஜமான் மனசைத் திருப்ப ஒரு வழி பண்ணமாட்டாயா? வம்சம் அற்றுப் போகிறதே! அந்தப் பாழும் ஊர் மொம்பாஸாவுக்குப் போகும்போது, எவ்வளவோ சந்தோஷமாய்ப் போன எஜமான், வரும்போது ஏனோ துக்கத்தில் மூழ்கிவந்தாரே! அன்று முதல் இன்றுவரை அவர் முகத்தில் சிரிப்பு வரக் காணோமே! முருகையா!" என்று பேசிக்கொண்டிருந்தான். அப்போது பங்களாவுக்கு எதிரிலிருந்த புதரின் மறைவிலிருந்து ஓர் வாலிபன் அக்கிழவனிடம் ஓடிவந்து, "பெரியவரே! என்னை எதற்காகக் கூப்பிட்டீர்கள்?" என்றான். கிழவன் ஆச்சரியத்துடன், "உன்னை யாரப்பா கூப்பிட்டது? நான் கூப்பிடவில்லையே" என்றான். வாலிபன், "என்ன, பெரியவரே! நீர்தாம் இப்போது 'முருகையா!' என்று என்னை அழைத்தீரே" என்றான். கிழவன் நகைத்து, "முருகையா என்று சுவாமியைக் கூப்பிட்டேன் அப்பா, உன்னையல்ல. அது போகட்டும். நீ யார்? இவ்வூருக்குப் புதியவன்போலிருக்கிறதே" என்றான். "ஆம்; நான் கோயம்புத்தூரான். இங்கு என் உறமுறையாரைப் பார்க்க வந்தேன். பெரியவரே! இந்த பங்களா யாருடையது? உள்ளே ஜனப்புழக்கத்தையே காணோமே!" என்றான்.

கிழவன் துக்கத்துடன், "அதைக்குறித்துத்தான் இப்போது வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இது இந்த ஊர் மிட்டாதார் வீடு. அவர் முக்கால்வாசி நாளைக்கும் இங்கு தங்காமல் எங்கேயோ போய்விடுகிறார். அவருக்குக் கல்யாணமாகவில்லை. உறமுறையாரையும் நெருங்கவிடுவதில்லை. ஆகையால் அவர் ஊரிலிருந்தாலும் பங்களாவில் சந்தடியேயிராது" என்றான். வாலிபன் மிகுந்த ஆச்சரியத்துடன், "அப்படியா! மங்கலஹல்லி ஜமீன்தார் மிகுந்த திறமுள்ள வேடரென்றும், எப்போதும் பல ஜனங்களோடு கூடி வாழ்வதில் மிகுந்த இஷ்டமுள்ளவரென்றும் கேள்விப்பட்டேனே! அது பொய்யா?" என்றான்.

கிழவன் அவ்வாலிபனை ஏற இறங்கப்பார்த்து, "தம்பி! உனக்கு யார் அப்படிச் சொன்னது? எஜமான் அப்படிச் சந்தோஷமாயிருந்து பதினாறு வருஷமாயிற்றே" என்று சொல்லி பெருமூச்செறிந்தான். வாலிபன் சிறிதுநேரம் மௌனமாயிருந்து, பிறகு, "பதினாறு வருஷமாகவா துக்கத்தில் மூழ்கியிருக்கிறார்? ஐயோ பாவம்! பெரியதுக்கம் சம்பவித்ததுபோலும்" என்றான். வாலிபனது அநுதாபத்தைக் கண்டு மனங்கசிந்த கிழவன், "ஏதோ பெரிய துக்கமாகத்தான் இருக்கவேண்டும் அப்பா! தமது பெண்சாதியை அழைத்துக்கொண்டு வருவதற்காக மொம்பாஸாவுக்குப் போனார். போனவர் துக்கம்நிறைந்தவராகத் தனியே வந்தார். அன்றுமுதல் எவரோடும் நெருங்கிப்பழகாமலும் முக்கால்வாசி வேளையும் தூரத்திலுள்ள காடுகளில் சஞ்சரித்தும் தமது துக்கத்தையே துணையாகக் கொண்டிருக்கிறார். இப்போது அவர் எந்தக் காட்டிலோ இருக்கிறார். வீட்டைவிட்டுப்போய் மூன்றுமாதமாயிற்று" என்றான்.

அந்தச்சமயத்தில் ஒருதந்திச் சேவகன் ஓர் தந்தியைக் கொண்டுவந்து கிழவன் கையிற் கொடுத்தான். கிழவன் அத்தந்தியைப் பிரித்து அச்சேவகன் கையிலேயேகொடுத்து, அதற்கு அருத்தம் சொல்லும்படி வேண்டினான். அச்சேவகன் அதைப் படித்துப்பார்த்து, "ஐயா! மைசூர்க்காட்டில் பல அரசர்கள் வந்து புலி வேட்டையாடுகிறார்களாம். அவ்வேட்டைக்கு நமது ஜமீன்தாரும் வரவேண்டுமென்று மைசூர்திவான்எழுதியிருக்கிறார்" என்றுசொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டகன்றான். கிழவன், "வேட்டைப் பைத்தியம் மாத்திரம் விடவில்லை எஜமானுக்கு. வேட்டை என்றால் போதும், தயாராக அங்கே போய்விடுவார்" என்று வாலிபனிடம் சொன்னான். பின்னும் சிறிதுநேரம் வார்த்தையாடிக்கொண்டிருந்துவிட்டு, வாலிபனும் அவ்விடத்தைவிட்டகன்றான்.

மைசூர் இராஜ்யத்தைச்சேர்ந்த ஓர் அடர்ந்த காட்டில் ஒருநாட்காலையில் பல மன்னர்களும் வேடர்களும் வந்துகூடினார்கள். நாய்ப்பட்டாளம் ஒன்று நின்றுகொண்டிருந்தது. மன்னர்களுக்காக சவாரி யானைகளும் குதிரைகளும் வந்திருந்தன. யாவரும் கூடியபின்னர், வேடர்கள் கொம்பு தப்பட்டையுடன் முன்னே புறப்

பச்சைச் சிரிப்புப் பல்லுக்குக் கேடு, தாவு பருக்கை வயிற்றுக்குக் கேடு.

பட்டார்கள். சிறிதுநேரம் பொறுத்து, மன்னர்களும் பிரபுக்களும்யானைகளின்மீதும் குதிரைகளின்மீதும் ஏறிக்கொண்டு புறப்பட்டனர். முன்சென்ற வேடர்கள் கொட்டுமுழக்குடன் காடெங்கும்சென்று காட்டுமிருகங்களை அவைகள் மறைந்து வசித்துவந்த புதர்களினின்றும் கலைத்துத் துரத்தவே, கொடிய மிருகங்களும் அவைகளுக்கிரையாகும் சாது மிருகங்களும் கூட்டங்கூட்டமாய் ஜீவஹிம்சையைக் களிப்பைத்தரும் விநோதமாய்க்கருதிய மன்னர்களுக்கு முன்னே ஓடின.

வேட்டை மும்முரமாய் ஆரம்பித்தது. அன்று அங்கு வந்தவர்கள் புலிவேட்டையை நாடிவந்தவர்களாதலால், மற்ற மிருகங்களைக் கவனியாது புலிகளின் மீதே குறியாயிருந்தார்கள். ஒரு ரஜபுத்ர அரசர் தமது துப்பாக்கியினால் பதினாறடி வேங்கையொன்றின்மீது குறிவைத்துச்சுட்டார். அவர் துப்பாக்கியிலிருந்து கிளம்பியகுண்டு அதன்மீது படுமுன், வேறு யாரோ சுட்ட குண்டு அதன்மீது பாய்ந்து அதைப் புண்படுத்திற்று. வலிபொறுக்கமுடியாது அவ்வேங்கை அக்காடெங்கும் எதிரொலியிடும்படி கர்ச்சித்து அக்குண்டு வந்ததிசையை நோக்கிப் பாய்ந்தது. பலவேடர்களும் அநேக வேட்டைநாய்களும் அவ்வேங்கையைப் பின்தொடர்ந்து ஓடினார்கள். அவ்வாறு ஒரு மைல் தூரம் துரத்திச்சென்றபின், அவர்களுக்கு முன்னே ஒரு பெரிய ஏரி தோன்றிற்று. கரையில் புலியைக் காணோம். யாவரும் புலி எங்கு மறைந்திருக்கக்கூடுமென்று நினைத்து நின்றனர். அச்சமயத்தில் வேடர்களின் கூட்டத்திலிருந்த பதினாறுவயது சென்ற ஒருவாலிபன் ஒரு சிறுரிவால்வர். துப்பாக்கியை வாயிற் கௌவிக்கொண்டு ஏரியிலிறங்கி அக்கரையை நோக்கி நீந்த ஆரம்பித்தான். அதைக்கண்ட வேடர்கள், "புலி நீரிலிறங்கி அக்கரைக்கு நீந்திப்போய்விட்டதாம். அதைப் பிடிப்பதற்காக அவர் போகிறார்" என்று சொல்லி நகைத்து அவ்விடம்விட்டகன்றனர்.

அக்கரைக்குப் போகப் புறப்பட்ட வாலிபன் நேராகச் செல்லாமல், அக்கரையில் தோன்றிய அடர்ந்த புதரை நோக்கிச்சென்று, அக்கரையை யடைந்ததும் அப்புதருக்குள் நுழைந்து மறைந்தான்.

கண்ணுக்கிருட்டும் சமயத்தில் அவ்வாலிபன் நாற்புறங்களிலும் குன்றுகள் சூழப்பெற்ற ஓர் பள்ளத்தாக்கை யடைந்தான். அங்கு அவன் கண்ட காட்சி அவன்மனத்தில் மிகுந்த கோபத்தை விளைவித்தது. ஓர் கம்பீர வடிவமுள்ள ஓர் வேடன் ஒரு பதினாறடி வேங்கையின் தோலை யுரித்துக்கொண்டிருந்தான். அப்பதினாறடி வேங்கையைக் காலையில் சுட்டுக் காயப்படுத்தியது அவ்வாலிபன்தான். வேடர் தருமப்படி அதன் தோல் அவ்வாலிபனுக்கே உரியது. ஆகையினால் அவ்வாலிபன் கடுஞ்சினங்கொண்டு அப்புருஷன் நின்றவிடத்துக்கு ஓடி, "ஓய்! நான் சுட்ட புலியின் தோலை நீர் அபகரித்துக் கொள்ள யத்தனித்தீர். ஆண்பிள்ளையானால் என்னோடு சண்டைசெய்து என்னைக் கொல்லும். மற்றுமொரு கொடுமையும் வஞ்சகமாகச் செய்திருக்கிறீர். அதற்காக உம்மைக் கொல்லுவதாகச் சபதஞ் செய்திருக்கிறேன். துப்பாக்கியை எடுத்துக்கொள்ளும் தாமதமில்லாமல்!" என்றான்.

எவருக்கும் தெரியாத இடமெனத் தாம் எண்ணியிருந்த விடத்திற்கு தம்மைத் துரத்தி வந்து, தம்மைப் போருக் கழைத்த வாலிபனது துணிவைக்கண்டு ஆச்சரியப்பட்ட அவ்வேடர் புன்னகையுடன், "அப்பா! நான் ஆண்பிள்ளை யென்று ஏற்கனவே உலகமறியுமாதலால் உன்னுடன் போர்செய்து அதை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. இவ்வேங்கையை நீ சுட்டது எனக்குத் தெரியாது. அது என்மேற் பாய்ந்தது. ஆகையினால் அதைக் குத்தினேன். வேட்டைக்கு வந்திருக்கும் வேடர்களை எனக்குத் தெரியுமாதலாலும், அவர்களைச் சந்திக்க எனக்கு மனமில்லையாதலாலும், புலியைத் தூக்கிக்கொண்டு இந்த இரகசிய இடத்துக்கு வந்துவிட்டேன். புலித்தோலை நீயே எடுத்துக்கொள்ளலாம். அதற்காகச் சண்டை போடவேண்டாம்" என்றார். வாலிபன், "இவ்வளவுதானா உமது சௌரியம்! அப்படியானால் நீர் சண்டைக்கு வரமாட்டீர் போலும். அப்படியாயின் கொடிய மிருகங்களைச் சுடுவதுபோல் உம்மைச்சுட்டு எனது சபதத்தை நிறைவேற்றுகிறேன்" என்று சொல்லி, தன் துப்பாக்கியைத் தூக்கி அவரைச் சுடத் தயாரானான்.

அதைக்கண்ட அவ்வேடர் கடுஞ்சினங்கொண்டு "அடேபயலே! என்ன சொன்னாய்?

பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் ஒட்டுமா?

கொடிய மிருகங்களைச் சுடுவது போலவா என்னைச் சுடுவேன் என்றாய் ? இதோ பார் ! மானைச் சுடுவதுபோல் உன்னைச் சுடுகிறேன்” என்று அட்டகாசம் செய்து, தமது துப்பாக்கியைத் தூக்கிச் சுட்டு அவ்வாலிபனது துப்பாக்கியானது அவன் கையைவிட்டுப் பெயர்ந்து இருபது கஜத்துக்கு அப்பால் போய் விழும்படி செய்தார். உடனே வாலிபன் ஓடிப் போய் தன் துப்பாக்கியை எடுத்துவந்து, “எப்போதும் வஞ்சகந்தானா ? சுடத் தயாரா யில்லாதவர்போலப் பாசாங்குசெய்து சுட்டீரே ! இது தருமமா ? நியாயமாகச் சண்டை

“அப்பா ! என் சபதத்தை என்னால் நிறைவேற்ற முடியாது”. என்றான் முருகையன்.

போடும்” என்று சொல்லி, தன் துப்பாக்கியைத் தூக்கினான்.

இப்பொழுது அவ்வாலிபன் அவருக்கு வெகு சமீபத்தில் நின்றதனால், அவன் முகத்தை அவ்வேடர் நன்றாய்க் கவனித்தார். அவர் முகம் திடீரென்று ஒளிவீசி கணநேரத்தில் வாடிற்று. உடனே அவ்வேடர் அவ்வாலிபனை நோக்கி, “அப்பா! நீ யாருடைய மகன் என்று சீக்கிரம் சொல்!” என்று கூவினார். வாலிபன் மெய் சிலிர்த்தது ; அவன் நாவு குழறிற்று; கண்களில் நீர் ததும்பிற்று. “அப்பா ! நான் உம்முடைய குமாரன். தாயின் கட்டளைப்படி உம்மைக் கொன்று பழி தீர்க்க வந்தேன்” என்றான் வாலிபன். அவ்வேடர்—செங்கோட கௌண்டர்— தமது பிரதிபிம்பமாய் நிற்கும் புதல்வனை நோக்கி, “என் கண்ணே! தேவஸேனை பிழைத்திருக்கிறாளா? அவளால் கட்டளையிடப்பட்டு நீ என்னைக்கொன்றுவிடுவதைவிட எனக்குத் தக்க தண்டனை கிடையாது. துக்கக்கடலில் பதினாறு வருஷ காலமாய அழுந்தித் தவிக்கும் பாவியேனைச் சீக்கிரம் கரையேற்று ! அப்பா! ஒரு வேண்டுகோள்! உலகில் எனக்கு இனி வேறு ஆசை கிடையாததலால் இதைத் தயவுசெய்து மறுக்காதே. எனதாருயிரே ! கொலை பாதகனாகிய நான் ஒரு முறை உன்னை இறுகவணைந்து கொள்ளலாமோ ?” என்று துயரம் நிறைந்த குரலுடன் கேட்டார்.

அதைக்கேட்ட வாலிபன் (முருகையன்) “ஹா ! தெய்வமே ! இதுவோ என் விதி ? அப்பா ! என்னுடைய ஆசையும் அதுவே !” என்று கூறி, அவரது விரித்த கைகளிற் பாய்ந்து அவரை யிறுகக் கட்டிக்கொண்டான். இருவரும் சில நிமிஷ நேரம் அன்புக் கட

லில் ஆழ்ந்திருந்தனர். இருவர் கண்களினின்றும் கண்ணீர் ஆறாய்ப்பெருகிற்று. பிறகு செங்கோட கௌண்டர் தமது புதல்வனை முத்தமிட்டு, “ கண்ணே ! இனி நீ உன் சபதத்தை நிறைவேற்று ” என்று சொல்லி, அவனைவிட்டுப் பிரிந்து சற்றுதூரத்தில் நின்றார். முருகையன், ‘ இதுவோ என்விதி ? ஹா ! எவ்வளவு கோரமான சபதத்தைச் செய்தேன் !” என்று கதறிக்கொண்டு, தன் துப்பாக்கியை எடுத்துத்தூக்கி தன் தந்தையைச் சுடக் குறிபார்த்தான். செங்கோட கௌண்டர், “ எனதன்பே ! ஏன் தயங்குகிறாய் ? நீ வேடன் வயிற்றிற் பிறந்த சிங்கமல்லவா ? இதோ ! என் மார்பைத் திறந்துகொள்ளுகிறேன். இப்பாதகனை - பேதையைச் சித்ரவதை செய்த கொடியனை - சிறிதும் இரக்கமின்றிச் சுடு ! ” என்றார்.

முருகையன் கையிலிருந்த துப்பாக்கி நழுவிற்று. “ஹா தெய்வமே! இக்கொடிய கொலையைப் புரியவோ என்னை இவ்வுலகில் பிறப்பித்தாய்? கல்லிலிருக்கும் உனது மனம் கல்லாய்த்தானே யிருக்கும். அப்பா ! என் சபதத்தை என்னால் நிறைவேற்ற முடியாது. அதை நினைக்கும்போது என் தலை சுழலுகிறது. ஹா ! என் உயிர் போகிறது ! பிழைத்தேன்! அப்பா! அருகே வாருங்கள்!” என்று சொல்லி மூர்ச்சித்துச் சாய்ந்தான். செங்கோட கௌண்டர் தாவியோடி தமதருமைப் புதல்வனைப் பிடித்து, தமது மடிமீது போட்டுக்கொண்டு, அவன் மூர்ச்சைதெளிய வழிதேடவும் தோன்றாது, அவனது சுந்தரத்தையும் கம்பீரத்தையும் கண்டு ஆனந்தித்துக்கொண்டிருந்தார்.

முரளீதரன்.—மிகவும் ஆனந்தத்துடன் எல்லோரும் கருதக்கூடிய மாசற்ற இளம்பருவத்தின் இன்பமும், நம் மதத்திற்குரிய சிறந்த விவாக விமர்சைகளும், அவ்விவாக காலத்தில் ஏற்படும் கோலாகலங்களின் அழகும், ஜகத் ரக்ஷகியாய், ஸகலஜீவ தயாபரியாய் ஜகன்மாதாவாய் விளங்கும் ஈசுவரியின் சிறப்பும், அவளது பக்தியி லீடுபட்டு நிற்கும் பக்த கோடிகளின் உயர்வும், கடற்கரைக் காட்சியும், உண்மை நட்பின் பெருமையும், ஊராருடன் வீண்வம்பு பேசுவதனால் வரும் தீங்கும், அன்புள்ள காதலர்களின் மனோநிலையும், பொறுமையின் சிறப்பும், எளிய நடையில் சிறுமியர் உத்ஸாகத்துடன் வாசிக்கும் வண்ணம் எழுதியிருக்கிறது. படங்களுடன் அணா 10.

ராஜஸிம்ஹன்

RAJASIMHAN

[எம். ஏ., பட்டம்பெற்ற ஒருவர் எழுதியது.]

(XIII-ம் தொகுதி ? 328-ம் பக்கத் தொடர்ச்சி.)

[நிர்மலை ஜேப உன்னீஸாவினிடத்தில் கடிதத்தைக் கொடுத்த பின்னர், யோதபுரி பேகத்தினிடம் சென்று நடந்தவற்றையெல்லாம் சொன்னாள். யோதபுரி பேகம், நிர்மலை அதன்பின் ரங்கமகலில் தங்குவது அபாயகரமானதென்று சொல்லி, தனது வேலைக்காரி பனுவியை யழைத்து நிர்மலையை மகலுக்கு வெளியே அழைத்துக்கொண்டுபோய் விட்டு வரும்படி உத்தரவுசெய்தாள். அவ்வாறே பனுவியும் நிர்மலையும் புறப்பட்டு மகலின் வாசற்படியையடைந்ததும், அங்கு அவுரங்கசீபு நிற்பதைக் கண்டு, பனுவி, “ ஆபத்து வந்துவிட்டது. ஓடிப்போ ! ஓடிப்போ !” என்று நிர்மலையினிடம் சொல்லிவிட்டு ஓடிப்போய்விட்டாள். அவுரங்கசீபு நிர்மலையை வெளியே செல்லவொட்டாது தடுத்து, அவள் யாரிடம் எதற்காக வந்தாளெனக் கேட்டதற்கு, அவள் மகாராணாவின் ராஜமகிஷியின் கடிதத்தை உதயபுரி பேகத்தினிடம் கொடுக்கவந்ததாகச் சொன்னாள். ரங்கமகலுக்குள் எப்படி வந்தாயென்று அவுரங்கசீபு கேட்டதற்கு, அவள் அக்கேள்விக்குப் பதிற் சொல்லமுடியாதென்றாள். “பிரபஞ்சத்துக்குப் பாதுஷாவான நான் கேட்கும்போது நீ பதில் சொல்லாமலிருக்கிறதா வென்று அவுரங்கசீபு கருவினான்.]

ஐந்தாம் அத்தியாயம்

பாதுஷாவின் கோபம்

நிர்மலை.—(கையைக் கூப்பிக்கொண்டு) பிரபஞ்சம் ஹொஜூரைச் சேர்ந்ததுதான். ஆனால் என் நாக்கு என்னைச்சேர்ந்தது. நான் சொல்லாமலிருந்தால் பாதுஷா சொல்லும்படி செய்ய முடியாது.

அவுரங்கசீபு.—நான் சொல்லும்படி செய்ய முடியாது என்று சொல்லுகிற நாக்கை தார்த்தாரி வேலைக்காரியைவிட்டு கத்தரித்து நாய்க்குப் போடும்படி செய்வேன்.

நிர்மலை.—டில்லீசுவரன் இஷ்டம்! ஆனால் அப்படிச் செய்துவிட்டால் தாங்கள் கேட்கிற சமாசாரம் என்றும் வெளிப்படாமற் போய் விடுமே.

அவுரங்கசீபு.—அதற்காக நாக்கை விட்டு விடுகிறேன். உன் தேகத்தி லெல்லாம் எண்ணெய்த் துணியைச் சுற்றி பாகம் பாகமாய்க்

கொளுத்திவிடும்படி உத்தரவு செய்கிறேன். நான் நல்ல வார்த்தையாய்க் கேட்கும்போது பதில் சொல்லாதவள் நெருப்புச் சுடும்போது சொல்லுவாய்.

நிர்மலை.—(நகைத்துக்கொண்டு) ஹிந்து ஸ்திரீகள் அக்கினியில் விழுந்து சாவதற்குப் பயப்படுவதில்லை. ஹிந்து சுமங்கிலிகள் சந்தோஷமாய்ப் போய்த் தங்கள் பதியுடன் சிதையிலேறி ஜ்வலிக்கின்ற அக்கினியில்விழுந்து தேகத்தை விடுகிறார்களென்று டில்லி பாதுஷா கேட்டதில்லையா என்ன? நீங்கள் எவ்விதமான மரண பயம் எனக்கு விதிக்கிறீர்களோ அவ்விதமாக என் தாய், தாயின் தாய், இப்படித் தலைமுறை தலைமுறையாய் அக்கினியில் இந்த சரீரத்தை விட்டிருக்கிறார்கள்—நானும் ஈசுவரன் கிருபையால் என் எஜமானுடன் ஸாக்ஷாத் ஜ்வலிக்கின்ற அக்கினிதேவனுடைய தேகத்தில் விழுந்து பஸ்மமாக வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருக்கிறேன்.

பாதுஷா மனத்தில் ஸபாஷ் ஸபாஷ் என்று ஆச்சரியப்பட்டு, பிரகாசமாய், "அதைப் பின்னேயோசித்துக்கொள்வோம். இப்போது இந்த மகலில் ஒரு அறையில் உன்னை அடைக்கச் சொல்லுகிறேன். பிராணன் போகிற சமயத்தில் கதவைத் திறந்து என்னிடம் உன்னைக் கொண்டுவரும்படி வேலைக்காரனுக்குச் சொல்லபோகிறேன். அப்போது சமாசாரமெல்லாம் சொன்னால் ஆகாரம் கிடைக்கும்.

நிர்மலை.—ஷாஹான் ஷா! (ராஜாதிராஜ!) ஹிந்து ஸ்திரீகள் விரதங்கள் அனுஷ்டிக்கிறதுண்டு என்று தாங்கள் கேட்டதில்லையா? விரதத்துக்காக ஒரு நாள் இரண்டுநாள் மூன்று நாள் நாலுநாள் நிர்ஜல உபவாஸம் செய்கிறார்களென்று கேட்டதில்லையா? ஜாஸ்தி உபவாஸமிருந்து மனப் பூர்வமாய்ப் பிராணனைக்கூட விட்டுவிடுகிறார்களென்றும் கேட்டிருக்கலாமே இந்தத் தங்கள் தாஸியாகிய நானும் அதெல்லாம் செய்யமுடியும். தங்களுக்கு இஷ்டமிருந்தால் மரணபரியந்தம் பரீக்ஷை செய்துபார்க்கலாம்.

அவுரங்கசீபு இந்த ஸ்திரீக்குப் பயம் காண்பித்துப் பிரயோஜனமில்லை என்று தெரிந்துகொண்டு, அவளை என்ன தொந்தரவு செய்தாலும் ஒன்றும் வெளிப்படாது என்று நிச்சயித்து, ஏதாவது ஆசை காண்பிப்போமென்று நினைத்து. "நல்லது உன்னை நான் ஒருவிதமாகவும் தொந்தரவு செய்யவில்லை. தனம், அதிகாரம் முதலானது கொடுத்து அனுப்புகிறேன். நீ இந்த விருத்தாந்தத்தை யெல்லாம் விஸ்தாரமாய்ச் சொல்லிவிடு" என்றான்.

நிர்மலை.—ரஜபுத்திர ஸ்திரீ மரணத்தை எப்படி திருணமாக எண்ணுகிறாளோ அப்படியே பணம் முதலானவைகளையும் மிகவும் ஹீனமாக எண்ணுவாள். நான் சாமானிய ஸ்திரீ. தாங்கள் தயவுசெய்து உத்தரவு கொடுத்தனுப்பவேண்டும்.

அவுரங்கசீபு.—டில்லி பாதுஷா கொடுக்க முடியாதது ஒன்றுமில்லை. அப்படிப்பட்டவனிடமிருந்து கேட்கக்கூடியது உனக்கு ஒன்றுமில்லையா?

நிர்மலை.—இருக்கிறது. ஒருவிதமான தடையுமில்லாமல் புறப்பட்டுப் போகவிடுவதுதான்.

அவுரங்கசீபு.—அது போதாது. அது தவிர ஜகத்தில் நீ விரும்பக்கூடியது ஒன்றுமில்லையா?

நிர்மலை.—பிரார்த்திக்கிறதற்கு இருக்கிறது. ஆனால் டில்லி பாதுஷாவின் அரண்மனையில் அப்பேர்ப்பட்ட இரத்தினமொன்றுமில்லை.

அவுரங்கசீபு.—அது எப்படிப்பட்ட பதார்த்தம்?

நிர்மலை.—நான் ஹிந்து. இந்த ஜகத்தில் எங்களுக்கு வேண்டுவது தருமம். நாங்கள் தருமத்துக்குப் பயந்தவர்கள். டில்லி பாதுஷா ஐசுவரியசாலி. ஆனால் எங்களுக்குப் பிரீதியான இந்தத் தருமத்தை அவர் கொடுக்கவும் முடியாது, எடுத்துக்கொள்ளவும் முடியாது.

டில்லி பாதுஷா நிர்மலையின் தைரியஸாமர்த்தியத்தைக்கண்டு கோபத்தைவிட்டு ஆச்சரியமடைந்தான். இருந்தாலும் அவள் தூஷணைகளால் கோபங்கொண்டு, "பெண்ணே! ஒன்று மறந்துபோயிற்று" என்றுசொல்லி, ஒரு தார்த்தாரி வேலைக்காரனைக் கூப்பிட்டுச் சாலைக்குப் போய் கொஞ்சம் மாம்ஸம் கொண்டுவந்து இரண்டு மூன்று பேர் பிடித்துக்கொண்டு இவள் வாயில் அதைச் செலுத்தி விடுங்களென்றான்.

நிர்மலை அதற்குப் பயப்படவில்லை. அவள், "தங்களுக்கு இந்த வித்தையுண்டென்று தெரியும். இந்த வித்தையால்தான் ஹிந்துஸ்தானத்தைக் கைப்பற்றிக்கொண்டது. மாம்ஸத்தை எதிரில் வைத்துக்கொண்டு இந்துக்களுடன் யுத்தம் செய்து முஸல்மானர் தோற்கடித்தார்கள் என்று தெரியும். இல்லாவிட்டால் ரஜபுத்திரருக்கு முன்னே மோகலாயர் எவ்வளவுமட்டும்? ஆனால் தங்களுக்கு இன்னொரு வார்த்தை சொல்லவேண்டியதா யிருக்கிறது."

"ரஜபுத்திர ஸ்திரீகள், விஷத்தைக் கையிலெடுத்துக்கொள்ளாமல் ஒரு அடிகூட வெளியிற் புறப்படுகிறதில்லை யென்று தங்களுக்குத் தெரியாதோ? என்னிடத்திலிருக்கிற விஷம் வெகு தீவிரமானது. தங்கள் சேவகர் மாம்ஸம் கொண்டுவந்து இங்கே கால் வைக்கிறபோது விஷத்தை வாயில் போட்டுக்கொண்டால் போதும். நான் உயிரோடிருக்கும்பொழுது அந்த மாம்ஸத்தைத் தொடமாட்டேன். தங்கள் அண்ணன் தாருசகோ என்கிறவனைக் கொன்று அவன் பெண்ஜாதிகள் இரண்டு பேரையும் அழைத்துவரப் பார்த்தானே? காரியம் முடிந்ததோ? அவர்களில் கிறிஸ்தவ ஜாதியைச் சேர்ந்த ஒரு ஸ்திரீ மாத்திரம் வந்தாளே யொழிய, ரஜபுத்திர ஸ்திரீ வந்தாளோ? ரஜபுத்திர ஸ்திரீ டில்லி பாதுஷாவுக்குமுன் ஒரு நிமிஷத்தில் செத்துப்போய் ஸ்வர்க்கம் சேரவில்லையா? நானும் தங்களுக்கு எதிரில் ஒரே நிமிஷத்தில் பிராணனை விடமுடியும்" என்றாள்.

பாதுஷா ஒன்றும் பேசமுடியவில்லை. பிரமித்துப் போய்விட்டான். பூலோகம் முழுவதும் கீர்த்தியடைந்த பாதுஷா இன்று அனாதையான அபலையிடம் அவமானத்தை யடைந்தான். அவுரங்கசீபு தான் தோற்றுவிட்டதை மனத்தில் ஒப்புக்கொண்டு, இவள் விலையற்ற இரத்தினம்; இவளை இழந்துவிடக்கூடாது. இவளை நம்முடைய வசமாக்கிக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்து வெகு பிரீதியுடன் உன்னுடைய பெயரென்ன என்றான்.

நிர்மலை.-(சிரித்துக்கொண்டு, "மகராஜ்! அது எதற்காக? இன்னும் ரஜபுத்திர மகிஷிகள் வேண்டுமென்று ஆசையோ? அந்த ஆசையை விட்டுவிடவேண்டும். எனக்கு விவாகமாயிற்று. என் கணவன் ஜீவித்திருக்கிறார்" என்றாள்.

அவுரங்கசீபு.—அந்த வார்த்தை யப்படியிருக்கட்டும். நீ கொஞ்சநாள் இந்த ரங்கமகலில் வாசஞ் செய்யவேண்டும். இதற்கு நீ ஒன்றும் தடைசெய்யக்கூடாது.

நிர்மலை.—ஏன்?—தடைசெய்தால்—

அவுரங்கசீபு.—நீ உன் ஊருக்கு இப்போது போனால் என்னை நிந்திப்பாய். என்னை நீ புகழும்படி இங்கே வைத்துக்கொண்டிருந்து பிற்பாடு அனுப்புகிறேன்.

நிர்மலை.—தாங்கள் அனுப்பாம லிருந்தால் நான் போகமுடியாது. ஆகையினால் சில விஷயங்களுக்குத் தாங்கள் ஒப்புக்கொண்டால் கொஞ்ச நாள் இங்கே யிருக்கிறேன்.

அவுரங்கசீபு.—என்னென்ன?

நிர்மலை.—ஹிந்துக்கள்செய்த ஆகாரத்தைத் தவிர வேறு ஒன்றையும் நான் தொடமாட்டேன்.

அவுரங்கசீபு.—அப்படியே ஆகட்டும்.

நிர்மலை.—ரஜபுத்திர பேகம் இருந்தால், நான் அவருட னிருக்கவேண்டும்.

அவுரங்கசீபு.—அதுவுமாகட்டும். உன்னை யோதபுரி பேகமிடத்தில் ஒப்புவிக்கிறேன்.

நிர்மலகுமாரியின் விஷயத்தில் ஒப்புக்கொண்ட பிரகாரம் பாதுஷா ஏற்பாடுகள் செய்வித்தான்.

ஆரும் அத்தியாம்

போலி சாவகாரி

மறுநாள் அவுரங்கசீபு ஜேப உன்னீஸாவையும் நிர்மலையையும் அழைத்து ரங்கமகலில் நிர்மலையை உள்ளே அழைத்துவந்தவர் யார் என்று விசாரித்தான். அந்தப்புரத்திலிருந்த வேலைக்காரிகள் தார்த்தாரியர்கள் எல்லோரையும் கேட்டாயிற்று. அவள் உள்ளே வந்ததைப் பார்த்தவர்கள்கூட இது ஏதோ கெட்டகாரியமென்று தெரிந்துகொண்டு தப்பை ஒப்புக்கொள்ளாமல் சும்மாவிருந்துவிட்டார்கள். அவுரங்கசீபாகட்டும் ஜேப உன்னீஸாவாகட்டும் ஒன்றும் வெளிப்படுத்த முடியவில்லை.

அவுரங்கசீபு பின்பு ஜேப உன்னீஸாவுடன், "நிர்மலையை உள்ளேவிட்டது அவ்வளவு தப்பல்ல; ஆனால் அவளை மகலிலிருந்து வெளியேவிட்டால் எல்லோருக்கும் சிக்ஷையுண்டாகும்" என்று ஆக்ஞாபித்து, நிர்மலைக்குத் தொந்தரவில்லாத பிரகாரம் கௌரவமாய் நடத்த வேண்டுமென்றும், பேகமுக்குப்போல் மரியாதைசெய்யவேண்டுமென்றும், யோதபுரிபேகம் ஸாகேபவர்களின் தாஸிகள் அவளுக்கு வேண்டிய உபசாரங்கள் செய்ய வேண்டிய

தென்றும், முஸல்மானர் ஒருவரும் அவளைத் தொடக்கூடாதென்றும் உத்தரவுசெய்தான்.

அப்பொழுது நிர்மலைக்கு எல்லாரும் ஸலாம் செய்தார்கள். ஜேப உன்னீஸா அவளை யழைத்துக்கொண்டுபோய்த் தன்னறையில் வைத்துக்கொண்டு அவளுடன் அநேகவிதமாய்ப் பேசுவாள். ஆனால் நிர்மலையினிடமிருந்து உள் சங்கதி ஒன்றும் வெளிப்படுத்த முடியாமற் போயிற்று.

அன்றையதினம் மத்தியானம் ஒரு தார்த்தாரி சேவகன் வந்து யோதபுரி பேகமினிடத்தில், "ஒரு ஸாவகார் கல்சாமான்கள் விற்பதற்குக் கொண்டுவந்திருக்கிறான். சில சாமான்கள் முன்னமே அனுப்பியிருந்தான். நன்றாயில்லை. மற்ற பேகமவர்கள் யாரும் வாங்கவில்லை. தங்களுக்கு வேண்டுமோ என்று கேட்கிறான்" என்றான்.

மாணிக்கலாலன் வேண்டுமென்றே ஒருவரும் வாங்கக்கூடாத கெட்ட சாமான்களைக் கொண்டுவந்திருந்தான். சேவகன் சொல்லும்போது நிர்மலகுமாரி யோதபுரியின் பக்கத்திலிருந்தாள். யோபுதரிக்குக் கண்ணைக் காட்டினதும் அவள் அந்த சாமான்களை வாங்கிக்கொள்ளுகிறேனென்றாள். முதல்நாள் இராத்திரி தனக்கும் பாதுஷாவுக்கும் நடந்த சங்கதிகளை நிர்மலை யோதபுரிக்குச் சொல்லியிருந்தாள். கேட்டு யோதபுரி நிர்மலையை மெச்சிக்கொண்டு அவளுக்கு க்ஷேமமுண்டாக வேண்டுமென்று ஆசீர்வாதம் செய்திருந்தாள். இப்பொழுது அவள் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு, ஸாவகார் உள்ளேவரும்படி உத்தரவுசெய்தாள்.

சேவகன் வெளியே போனவுடன், நிர்மலை யோதபுரி பேகமுக்கு மாணிக்கலாலன் ஸம்ஞைகளை யெல்லாம் சுருக்கமாய் அறிவித்தாள். யோதபுரி நிர்மலையை நோக்கி, "அப்படியானால் உன் கணவனுக்கு ஒரு காகிதம் எழுது. நான் சாமான்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். இந்த சமயம் உன்னுடைய சமாசாரம் அவனுக்குத் தெரியட்டும்" என்றாள். இதற்குள் கல் விற்பவன் வந்துவிட்டான்.

நிர்மலை பார்க்கவும் சாமான்களெல்லாம் குறிப்பிட்ட அடையாளத்துடனிருந்தன. பார்த்துவிட்டு நிர்மலை காகிதமெழுத வாரம்பித்தாள். காகிதம் பூர்த்தியாகிறவரையில் யோதபுரி, சாமான்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். சாமான்களுக்குள் வெள்ளைக்கல்லினால் செய்யப்பட்டு இரத்தினங்களிழைக்கப்பெற்ற ஒரு சிறு பெட்டி இருந்தது. அதற்குப் பூட்டுகிறதற்குத் தங்கச்சாவி சிறியதாய் ஒன்று இருந்தது. நிர்மலை கடிதமெழுதிமுடிந்தவுடன் யோதபுரி அந்தக் கடிதத்தை அப்பெட்டிக்குள் வைத்துப் பூட்டி, மீத சாமான்களையெல்லாம் எடுத்துக்கொண்டு அதைமாத்திரம் அவனிடம் கொடுத்துவிட்டாள். வேண்டுமென்றே சாவியை அவனிடம் கொடுக்காமலிருந்துவிட்டாள்.

கபடவேஷதாரியான ஸாவகார் மாணிக்கலாலன் சாவி வராததுகண்டு கொஞ்சம் காத்திருந்தான். பின்னும் கொடுக்காமலிருந்ததினால், விற்ற சாமான்களுக்குத் தக்க பணம் பெற்றுக்கொண்டு திரும்பிப் புறப்பட்டுக் கடைக்குப் போய் தனியாய் உட்கார்ந்துகொண்டு பெட்டியைத் திறந்து பார்க்கவும் நிர்மலையின் காகிதம் கிடைத்தது.

காகிதத்தில் எழுதியிருந்ததெல்லாம் இக்கதை வாசிக்கிறவர்களுக்குத் இப்போது தெரிய வேண்டிய அவசியமில்லை. முக்கிய சங்கதிகள் தெரிந்ததுதான். வேறு சங்கதிகள் பின்னை சொல்லுவோம். காகிதத்தைப்பார்த்துமாணிக்கலாலன் நிர்மலையைப்பற்றிக் கவலைப்படவேண்டாமென்று தீர்மானித்துத் திரும்பவும் ஊருக்குப் போக ஏற்பாடுகள் செய்யவாரம்பித்தான். அன்றுதினமே கடையை எடுத்துவிட்டால் யாருக்காவது சந்தேகமுண்டாகுமோ என்று நினைத்து கொஞ்சநாள் காலதாமதம் செய்ய வேண்டுமென்று நிச்சயித்தான்.

பஞ்சரத்தினம்.—மரகதவல்லி என்றும் உயர்தர நாவலின் ஆசிரியரான ப. சி. கோவிந்தசாமி ராஜா இயற்றியது. மணாளனைத் தவிர மற்றொருவரை மனதிலும் நாடாத ருக்குமணி, நமனிடமிருந்து நாயகன் உயிரை மீட்டுவந்த சாவித்திரி, காகர் கையிற் சிக்கி கஷ்டப்பட்ட காலத்தும் கற்பைக்காத்து வந்த சீதை, தந்தை வீட்டில் எல்லாச் சம்பத்திருந்தும் காதலன் பிரிந்தகாலத்து தரை படுக்கையாகவும், கந்தையே ஆடையாகவும் எண்ணிக் காலங்கழித்து வந்த தமயந்தி, கள்ளமென்பதை எள்ளளவும் உணராத தன்னைக் கூடிப்பிரிந்து ஆண்டுகளாயுங்கணவன் வருமளவும் காதிருப்பேதே கடனெனக் கொண்ட சகுந்தலை முதலிய ஐந்து புண்ணியவதிகள் சரிதங்கள் கொண்டது. துரைத்தனத்தார் அங்கீகரித்தது. 5 அழகிய ஆப்டோன் படங்களுடன் அணா 12.

படிக்கிறது திருவாய்மொழி, இடிக்கிறது பெருமாள்கோவில்

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

பிடிவாதம்

இந்தியாவின் வடமேற்குக் கோடியிலுள்ள கேகய ராஜ்யத்தில் அசுவபதியென்ற அரசன் வெகு காலத்திற்குமுன் அரசுபுரிந்தான். அவனுடைய பெண்ணான கைகேயியைத் தசரதர் விவாகஞ்செய்தார். அவ்வரசனுடைய மனைவி வெகு பொல்லாதவள். எல்லையற்ற பிடிவாதமுள்ளவள், ஒன்றிற்கும் அஞ்சாதவள். ஒருநாள் அவர்கள் படுத்திருக்கும்பொழுது சுவற்றில் எறும்புகள் சாரியாய்ப் போய்க்கொண்டிருந்தன. அவைகளில் ஒன்று மற்றொன்றைப் பார்த்து "இந்தப் பெரிய ராஜ்யத்தையும் அதிலுள்ள கோடானுகோடி பிரஜைகளையும் ஆளும் பொறுப்புவாய்ந்த இவ்வரசன் தன்மனைவியின் இயற்கையை அறியாமல் அவள் சகல நற்குணங்களும் வாய்ந்தவளென்று எண்ணி அவளைத் தன்னுயிருக்குயிராய்ப் போற்றுகிறானே! பிறருடைய மனப்போக்கை இவன் அறிவதெப்படி? இவனுடைய குடிகள் என்ன சுகத்தை யடைவார்களோ" வென்றது. அதைக்கேட்ட அரசன் தன் மனைவியின் மனப்பாங்கை அப்பொழுதும் அறியாமல் இந்த ஜந்துக்கள் ஏதோ பிதற்றுகின்றன வென்ற எண்ணத்தால் தன்னையறியாமல் கலகல வென்று சிரித்தான். அருகில் படுத்திருந்த அவன் மனவி அதைக்கேட்டு "பாதிராத்திரியில் இப்படி யாதொருகாரணமின்றி நீர் சிரித்ததென்ன" வென்றாள். அப்பொழுது அவ்வரசனுக்குப் பெருங் கஷ்டம் நேர்ந்தது. ஏனென்றால் தனக்கு நண்பனான ஒரு வித்த புருஷன் முன்னொருகாலத்தில் இவனிடத்தில் கிருபைகூர்ந்து மிருகங்கள் பக்ஷிகள் முதலிய சகல பிராணிகளின் பாஷைகளை யறியும் வித்தையை உபதேசித்திருந்தான். ஆனால் அப்படி இவன் அறிந்தவிஷயங்களை வேறொருவர்க்குச் சொன்னால் இவனுடைய தலை வெடித்துச் சாவானென்ற கடுமையான நிபந்தனையையும் ஏற்படுத்தினான். ஆகையால் இந்த மன்னனுக்கு இன்னது செய்வதென்று தெரியவில்லை. நடந்த விஷயத்தைச் சொன்னால், தன் மனைவிக்குக் கடுங்கோபமுண்டாகும். மேலும் தன் உயிரும் போம். சொல்லாவிட்டால் தன்னுயிர்க்குயிரான காதலியின் மனதைப் புண்படுத்தின ஆறாத்துயரம் நேரும். ஆகையால் இன்னது செய்வதென்று தோன்றாமல் மௌனமாயிருந்தான். அதைக்கண்ட அவன் மனைவி "ஏதோ என்னைப் பார்த்து நீர் பரிகாசமாய்ச் சிரித்தீரென்பதில் தடையில்லை. அதை இப்பொழுது சொல்லவேண்டும். இல்லாவிட்டால் எனக்குக் கடுங்கோபம்வரும்" என்றாள். அரசன் "பெண்ணே! அது உன்னைப்பற்றின விஷயமே. ஆயினும் உன்னை நான் பரிகாசம் செய்ய எண்ணிச் சிரித்ததல்ல. அதோ போகும் எறும்புகளில் ஒன்று உன்னைப்பற்றிச் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு என்னை யறியாமல் சிரித்துவிட்டேன்" என்றான். அப்பொழுது அந்த ராஜகன்னியை "அப்படியானால் அதை எனக்குச் சொல்லாமல் தீராது. என்னைப் பற்றினதென்றே ஒப்புக்கொள்ளுகிறீர். பரிகாசமல்லவென்பதை நம்பமாட்டேன். அந்த வார்த்தைகளை யுள்ளபடி சொல்லாவிட்டால் நீர் என்னைக் கேலிசெய்தது நிஜமே. அந்த அவமானத்தைப் பொறுக்கமாட்டேன். நான் உமக்குப் பிரியமானவளென்பதற்கு அடையாளம் இதுதானோ. இவ்வளவென்ன? இப்பொழுதே அதைச் சொல்லாவிட்டால் என்னுயிரை மாய்த்துக்கொள்வே"னென்று கோபகிரகத்தில் போய்ப் படுத்துக்கொண்டாள். அரசன் தன்னால் கூடியவரையில் அவளை சமாதானம் செய்தும் பலிக்கவில்லை. முடிவில் அந்த ரகஸ்யத்தைச் சொன்னால், தான் தலைவெடித்துச் சாகவேண்டுமென்ற நிபந்தனையையும் தெரிவித்து மன்றாடிக் கேட்டுக்கொண்டான். "இதுவும் ஒரு சாக்குப்போக்கு. உமக்கு என்மேல் அன்பில்லையென்று தெரிந்தபிறகும் பிழைத்திருப்பேனோ" வென்று கதவைத் தாளிட்டுக்கொண்டாள்.

அரசன் புத்தி சிதறி அந்த வித்த புருஷனிடத்திற் சென்று இந்த சங்கடத்தில் என்ன செய்வதென்று கேட்டான். அவன் கைகொட்டிச்சிரித்து "மூடசிகாமணியே! நீ இவ்வளவு பேதையென்றுதெரிந்திருந்தால் உனக்கு இந்த வித்தையை உபதேசித்திருக்கமாட்டேனே. வீண் பிடிவாதம்பிடிக்கும் ஒரு துஷ்டஸ்திரீயின் மனதைத் திருப்தி செய்விப்பதற்காக உன் உயிரைக் கொடுக்கலாமாவென்று ஆலோ

படிக்கிற பிள்ளை பாக்குப் போட்டால் நாக்கு தடிப்பாய்ப் போம்.

சிக்கும் நீ, மிருகங்களிலும் தாழ்ந்தவன். இப்பொழுது ஓரே உபாயத்தைச்சொல்லுகிறேன். அதைக் கேட்டால் உனக்கும் அபாயமில்லை. அவளுக்கும் திருப்தியாகும். இங்கிருந்து போய் 'பெண்ணே! நீ கேட்டபடி சொல்லுகிறேன்' என்று கதவைத் திறக்கச்செய்து அறையில்போய் உன் கை சலிக்கும்வரையில், அவள் வேண்டாம் வேண்டாமென்று சொல்லும்வரையில், தயை தாக்ஷிணியமின்றி குதிரைச் சவுக்கால் அவளையடி. உன் ராஜ்யத்தை விட்டுத் துரத்திவிடு. அவளிருக்கும்வரையில் உனக்கும் உன் ராஜ்யத்திற்கும் வேறு யமன் வேண்டியதில்லை" யென்றான். கேகயராஜனான அசுவபதி நன்றாய் ஆலோசித்து வேறு வழியில்லாமல் அப்படியேசெய்து அந்தத் துஷ்டையைத் தேசத்தைவிட்டுத் துரத்தினான்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

கௌஸல்யை

(தொடர்ச்சி.)

தசரதர் 60,000 வருஷம் இராஜ்யபாரம் தாங்கிவந்ததாகச் சொல்லப்படுகிறது. கௌஸல்யை பட்டமகிஷியானதால் அவருடைய பாலியத்திலேயே விவாகம் நடந்திருக்கவேண்டும். அவருக்குப்பிறகு வெகு காலம் பிழைத்திருந்ததாயும் ஸ்ரீராமன் தன்னடிச் சோதிக்கு எழுந்தருளுவதற்குச் சிறிது காலம் முன்பு தான் பரகதி யடைந்ததாயும் உத்தரகாண்டத்தில் சொல்லப்படுகிறது. அநேக ஆயிர வருஷங்கள் வரையில் புத்திரபாக்கிய மில்லாமல் வயது சென்றுவிட்டது. அதைக்கண்டு தசரதர் மகததேசத்து அரசனுடைய புத்திரியான சுமித்திரையை விவாகம் செய்துகொண்டார். அவளாலும் சந்தானம் கிடைக்காததால் பிறகு அசுவபதியென்ற கேகயராஜனுடைய புத்திரியான கைகேயியை மணஞ்செய்தார். அவள் பால்யத்தாலும் ரூபலாவண்யத்தாலும் தசரதருடையமனத்தைக்கவர்ந்து அவரைமுற்றிலும் தன் வசப்படுத்திக்கொண்டாள். சுமித்திரையோ பரம சாது; கடவுளிடத்தில் மெய்யான பக்தியுள்ளவள்; இகபர விஷயங்களை நன்றாய் மதித்தவள்; அவளுக்குகௌஸல்யை யிடத்தில் எந்நாளும் மாறாத அன்பும் பக்தியுமுள்ளவள்; இராமனுடைய நிஜசொரூபத்தையும் அவதார இரகசியத்தையும் அறிந்தவளென்று அவன் கௌஸல்யையைத் தேற்றினபொழுது சொன்னவார்த்தைகளால் தெரிகிறது. (அயோ. 44)

ஆனால் கைகேயி எப்பொழுதும் தன் தாயைப் போல் கெட்ட சுபாவமுள்ளவளாகையால் வந்ததுமுதல் தன் பாலியத்தாலும் அழகாலும் கர்வமடைந்து கௌஸல்யையைப்பலவிதமாய் அவமதித்து அலக்ஷியஞ் செய்து மனதைப் புண்படுத்தினதாய்த் தெரிகிறது. தசரதரும் அவளுடைய வலையில் சிக்கி கௌசல்யைக்குச் செய்யவேண்டிய மரியாதையைச் செய்யாமலும், அவளை வைக்கவேண்டிய அந்தஸ்தில் வைக்காமலும், அவளுடைய பிறப்புக்கும் நிலைமைக்கும் தகுந்த ஐசுவரியம் ஆடையாபரணங்கள் பரிவாரம் அதிகாரம் முதலியவையில்லாமலும், கஷ்டப்படுத்தினதாய்த் தெரிகிறது. அவளைத் திரும்பிப்பார்ப்பதுமில்லை. என் பர்த்தாவின் முன் நிற்காதே போ. மலடிக்கு உத்சவங்களும் சந்தோஷமும் வேண்டுமோ" வென்பாள். எப்பொழுதாவது இராமனைப்பார்ப்பதற்கு அரசன் கௌசல்யையின் அந்தப்புறத்துக்குச் சென்றால் அதைக்கேட்டு கைகேயீ ஓடோடியும் வந்து அசூயையால் கண்களில் நெருப்புப் பறக்க மூத்தவளை நினைத்துக்கொண்டாயோ, நான் வேம்பாய் விட்டேனோ? இங்கே உனக்கென்ன காரியம்? என் அந்தப்புறத்திற்குப் போவோம் வா" வென்று இழுப்பாள். கைகேயீ நடக்கும் விதத்தைப் பார்த்து அவளுடைய வேலைக்காரிகளும் கௌஸல்யையையும் அவளைச்சேர்ந்தவர்களையும் அவமதித்தார்கள். அவளுடைய கோபத்திற்கு ஆளாய் எந்த அனர்த்தம் நேருமோவென்று பயந்து ஒருவரும் கௌஸல்யை யிடத்தில் அன்புகாட்டுவதில்லை. வெளிப்படையாய் அவளை ஆதரித்து உபசரிப்பதில்லை.

இப்படியெல்லாம் வெகுகாலம் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்து, இனி நமக்கு நல்ல காலம் வருவதேது? இப்படியே இந்த ஜன்மம் தொலைய வேண்டியதுதான்' என்று கைவிட்டிருக்கும்பொழுது லோகநாதனான இராமசந்திரன் அவளுடைய வயிற்றில் அவதரித்தான். அக்காரணத்தால் தசரதர் கௌஸல்யையிடத்தில் மறுபடியும் போகவர வாரம்பித்தார். இராமன் சீதையை விவாகஞ் செய்து 12-வருஷங்கள் வரையில் அயோத்தியில் வசித்துக் கொண்டிருந்தும் கௌஸல்யையின் நிலைமை வெகுகேவல மாயிருந்ததாய்த் தெரிகிறது. கூனியான மந்தரை அயோத்தியில் நடக்கும் கொண்டாட்டங்களைப் பார்த்து சமீபத்தில் நின்ற ஒரு தாதியை யழைத்து 'அடீ! கௌஸல்யை எப்பொழுதும் தரித்திரத்தையே ஆபரணமாய்ப் பூண்டவளன்றோ? தனத்தைச் சேர்ப்பதிலேயே விசேஷ பிரியமுள்ளவளல்லவா? இப்பொழுது எதை யுத்தேசித்து ஜனங்களுக்குத் தனத்தைக் கொடுக்கிறாள்" ளென்று சொன்னதே இதற்குப் பிரமாணமாகும். ஆயினும் தன் கேவலமான நிலைமையையும் கஷ்டத்தையும் துக்கத்தையும் பாராட்டாமல் மிகுந்த பொறுமையுடன் தன் கௌரவத்தைக் காப்பாற்றி வந்தாள். அவளுடைய அந்தப்புரத்தின் வாசலிலுள்ள காவற்காரர்களுக்குத் தலைவர் ஒருவர் வயதில் முதிர்ந்தவராய்க் கையில் பிரம்புடன் உட்கார்ந்திருப்பார். இரண்டாவது கட்டில் மகாராஜாவால் வெகுமானிக்கப்பட்டு வேதங்களில் கரைகண்ட பிராமணர்கள் வீற்றிருப்பார்கள். மூன்றாவது கட்டில் வயதுசென்ற ஸ்திரீகளும் கன்னிகைகளும் காவலிருப்பார்கள்.

அவள் விசேஷ தெய்வ பக்தியுள்ளவள்; எப்பொழுதும் விரதங்களையும் நியமங்களையும் உபவாஸங்களையும் அனுஷ்டித்துக் கொண்டிருப்பவள். அதனால் தேகம் இளைத்த போதிலும் தேவதைகளுடைய காந்தியைப் போல் அவளுடைய தேஜஸ் விளங்கிற்று. பிராமணர்களிடத்தில் எல்லையற்ற பக்தியும் விசுவாசமுமுள்ளவள்.

இராமமூர்த்தி பிறந்தவுடன் தனக்கு அதுவரையில் நேர்ந்த சகல குறைகளும் துக்கங்களும் கஷ்டங்களும் நீங்குமென்றும் அவனுக்குப் பட்டாபிஷேகமானால் தனக்குரிய செல்வமும் பதவியும் கௌரவமும் கிடைக்குமென்றும், அக்காரணத்தாலேயே தசரதருடைய பிரியமும் உண்டாகுமென்றும் பூர்ணமாய் நம்பியிருந்தாள். கைகேயியின் சொல்லால் இராமன்காட்டிற்குப் போக நிச்சயித்ததைக்கேட்டு ஆறாத்துயரம் அடைந்தாள். இராமன் அவளைத்தேற்றிப்புத்திரர்கள் பிதாவின் ஆணைக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்பதையும் பாரியைகளுக்குக் கணவனே தெய்வம்; அவனுள்ளவரையில் அவனுக்குக் கைங்கரியம் செய்வதே நற்கதியடைவதற்கு உபாயமென்றும், தான் 14-வருஷங்களையும் நொடிப் பொழுதாய்க் கழித்துவந்து மறுபடியும் பாதங்களில் நமஸ்கரிக்கிறேனென்றும்; பரதன் தர்மாத்மா, தன்னைக்காட்டிலும் பதின்மடங்கு பெற்றோரிடத்தில் பக்தியுடன் நடந்துகொள்வானென்றும் பலவிதமாய் எடுத்துச்சொன்ன பிறகே அவருடைய நிச்சயத்தை மாற்றமுடியாதென்றறிந்து அவரை ஆசீர்வதித்து க்ஷேமமாய்ப் போய்வருவதற்கு வேண்டிய ரக்ஷைகளைச் செய்தாள். சீதை வனம் போவதற்குத் தன்னை உத்தரவு கேட்கவந்தபொழுது கௌஸல்யை அவளுக்குப் பாரியைகளின் தர்மத்தைப் பற்றிச்செய்த இதோபதேசம் வெகு அருமையானது. (அயோ. 39)

மகாத்மாவான இராமனுக்கும், தான் இல்லாத சமயத்தில் கௌசல்யை என்ன கஷ்டத்தை யனுபவிப்பாளோ, தசரதரும் பரதனும் அவளை சரியாய் நடத்தவேண்டுமே என்று சந்தேகமிருந்ததாய்த் தெரிகிறது. "மகாராஜா! இதோ விருக்கும்என்தாய்மகாதேஜஸ்வி; மிகவும் வயசு சென்றவள்; உத்தமமான நடத்தையுள்ளவள்; அவளுடைய அபாரமான வருத்தத்தைக் காட்டிக்கொள்ளவுமில்லை; உம்மிடத்தில் கோபிக்கவுமில்லை; உம்மை நிந்திக்கவுமில்லை. ஒருநாளும் இல்லையென்று சொல்லாத தங்களை நானும் ஒருவரம் கேட்கிறேன். என்மாதா என்னைப்பிரிந்த துக்கத்தைப் பொறுக்கமாட்டாள். இதுவரையில் இவ்விதமான கஷ்டத்தை யனுபவித்ததில்லை. பட்டமகிஷியென்று இதுவரையிலுமே அதிக மரியாதையோடும் ஆதரவோடும் நடத்திவருகிறீர்கள், நான் பிரார்த்திப்பதற்காக இனிமேல் அதிக மரியாதையுடனும் ஆதரவுடனும் அவளை நடத்தவேண்டும். என்னை நினைத்து நினைத்து உன்னை விட்டுப் பிரிந்த துக்கத்தால் மரணமடையாமல் அவளைப் பாதுகாக்கவேண்டுமென்று தங்களை யாசிக்கிறேன். அவள் ஒன்று

மறியாதவள்; இனிமேல் அவளுக்கு உங்களைத் தவிற வேறு கதியில்லை; அவளுடைய சத்துருக்களின் கையில் அவளைக் காட்டிக்கொடுக்கக் கூடாது. தங்களுடைய பிரியத்தாலும் மரியாதையாலுமே அவள் நான் திரும்பிவரும் வரையில் உயிரை வைத்துக்கொண்டிருக்க முடியும். இன்னு மொருதரம் பிரார்த்திக்கிறேன். நான் வனத்திலிருந்து திரும்பிவந்து என் மாதாவை யமனுடைய பட்டணத்தில் போய்த் தேடும்படி வைக்காமலிருப்பது தங்களுடைய பொறுப்பு" என்றார். பரதன் கேகய தேசத்திலிருந்துவந்து கைகேயியைக் கடுமையாய்க் கண்டித்து இராமனுக்குத் தன்னால் நேர்ந்த கெடுதிக்காகத் தான் கௌஸல்யை யிடத்தில் தன் துக்கத்தையும் பச்சாத்தாபத்தையும் தெரிவிக்க விரும்பி வருகையில் அவள் ஸ்திரீகளின் சுபாவத்தை முன்னிட்டு இவனும் கைகேயியுடன் சேர்ந்தே இதைச் செய்திருப்பா னென்று வெகு குரூரமான வார்த்தைகளால் அவனுடைய மனதைப் புண்படுத்தினாள். அதைக் கேட்டுப் பரதன் நடுங்கித் தான் குற்றவாளியல்ல வென்று கோரமான பிரமாணம் செய்தபிறகே கோபந் தணிந்து அவனிடத்தில் முன்போல் அன்பு கொண்டாள். இப்படியே தசரதர் அந்திகாலத்தில் தன்னிடத்தில் வந்திருந்தபொழுது புத்திர சோகம் தாங்காமல் குரூரமான சொற்களால் அவருடைய மனதைத் துளைக்க, அவர் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு 'என்னை மன்னிக்கக்கடவாய். உன்னை வணங்குகிறேன்' என்றார். உடனே கௌஸல்யை புத்தி மயக்கம் நீங்கி "நாதா! கெட்டேன். தாங்கள் இந்த வார்த்தை சொல்லும்படியாய் அறிவீனத்தாலும் துக்கத்தாலும் புத்தி பிசகிநடந்துகொண்டேனே. இந்தப் பாபத்தைப் போக்கியருள வேண்டு"மென்று அவருடைய பாதங்களில் விழுந்தாள். இராமனைப் பரமாத்மாவென்று அறியாமல் கேவலம் லௌகிகமான குழந்தையென்றே எண்ணின இவள், முடிவு வரையிலும் லோகத்து ஸ்திரீகளின் சுபாவத்தையே நன்குவிளக்கினாள்.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

எரிமலை பொங்குகிறது.

ஸிஸிலித் தீவையடுத்த லிபாரித்தீவிலுள்ள ஸத்ராம்பொலி என்ற எரிமலை ஜூன்மாதம் 27-ம் தேதிமுதல் பிரமாதமாகப் பொங்க ஆரம்பித்திருக்கிறது. எரிமலை தீக் குழம்புகளையும் தீக் கற்களையும் கக்க, அவை ஆறு போலப் பாய்ந்து கொண்டிருப்பதால் மலைப் பகுதிகளில் தீவிபத்துகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. சாம்பற் புகைகள் வானத்தை மூடிக்கொண்டிருக்கின்றன. ஜனங்கள் மூச்சு விடமுடியாமல் அங்குமிங்கும் ஓடித் தவிக்கிறார்கள். அநேகர் கடற்கரைக்கு ஓடினார்கள். வேறு பலர், படகுகளில் அடைக்கலம் புகுந்தார்கள். பலர் முழுகிப் போனார்கள். இத்துடன் மையிருளும் சேர்ந்துகொண்டது. அதிகாரிகள் டார்ப்பிடோ படகுகளை உதவிக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

*
* *

மதுபான விலக்கு.

மிஸ்டர் ஏ. டி. ஹொபார்ட் பின்வருமாறு இந்தியன் விட்னெஸ் என்னும் பத்திரிகையில் எழுதியிருக்கிறார்:

மதுபானஞ் செய்யும் வழக்கத்தை ஒழித்து விடுவதாயின், அதிலிருந்து கவர்ன்மெண்டிற்குக் கிடைத்துவரும் வருமானத்திற்கு ஈடு செய்ய வேறு வழிகளைக் காட்டல் வேண்டுமென்று சிலர் அடிக்கடி கூறிவருகின்றனர். அமெரிக்காவின் நிலைமைக்கும் இந்தியாவின் நிலைமைக்கும் வித்தியாசமுண்டு. அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டம் செய்யப்பட்டபோது அங்கு வரிகள் கன கடுமையாயிருந்தன. அங்ஙனமிருந்தும் வருஷம் ஒன்றுக்கு முப்பது கோடி டாலர் வருமானம் கிடைத்து வந்த இனத்தை அங்கு கைவிட்டுவிட்டனர். மதுவிலக்குப் பிரசாரம் செய்யும்பொழுதெல்லாம், மதுபானத்தில் பிரியமுள்ளவர்கள் இந்த இனத்தில் கிடைக்கும் வருமானம் போய்விட்டால் கவர்ன்மெண்டில் செல்வநிலைமை சீர்குலைந்து விடுமென்று பயங்காட்டிவந்தனர் ஆயினும் அந்தச் சட்டம் நிறைவேறியதற்குப் பிறகு கவர்ன்மெண்டார் திண்டாடுவதாக நான் கேள்விப்படவேயில்லை.

மரகதவல்லி.—புதிய பதிப்பு, இரண்டு ஆப்டோன் படங்களுடன் விலை அணா 12. துரைத்தனத்தார் அங்கீகரித்தது.

படைமுகத்திலும் அற்முகம் வேண்டும்.

FEB 1922 MADRAS

தாருகவனத்து முனிவர்களுக்குப் பரமசிவன் அருள்புரிதல்.

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

8 - FEB 1922

தொகுதி XIV } துன்மதிஞு ஆவணிமீ :: 1921-ம்ஞு செப்டம்பர்மீ { பகுதி-5

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

பகிர நினைவொரு தினையள விலுமிலி
கருணை யிலியுன தருணையொ டுதணியல்
பழநி மலைகுரு மலைபணி மலைபல மலைபாடிப்

பரவு மிடறலி படிறுகொ டிடறு சொல்
பழகி யழகிலி குலமிலி நலமிலி
பதிமை யிலிபவு ஷதமிலி மகிமையி லிகுலாலன்;

கிகிரி வருமொரு செலவினி லெழுபது
செலவு வருமன பவுரிகொ டலமரு
திருக னுருகுத லழுகுதல் தொழுகுதல்
நினையாத

திமிர னியல்பிலி யருளிலி பொருளிலி
திருடன் மதியிலி கதியிலி விதியிலி
செயலி லுணர்விலி சிவபத மடைவது
மொருநாளே?

மகர சலநிதி முறையிட நிசிசரன்
மகுட மொருபது மிருபது திரள்புய
வரையு மறவொரு கணைதெரி புயல்குரு
நிருபனுதன்

மடுவில் மதகரி முதலென வுதவிய
வரத னிருதிறல் மருதொடு பொருதவன்
மதலை குதலையின் மறைமொழி யிகழிர
ணியனுகம்

உகிரி னுதிகொடு வகிருமொ ரடலரி
திகிரி தரமர கதகிரி யெரியுமிழ்
உரக சுடிகையில் நடநவி லரிதிரு மருகோனே!

உருகு மடியவ ரிருவினை யிருள்பொரு
முதய தினகர இமகரன் வலம் வரும்
உலக முழுதொரு நொடியினில் வலம்வரு
பெருமாளே!

மீனங்களின் உறைவிடமான சமுத்திரத்துக்கு அரசனாயிருப்பவன் தர்ப்பசயனத்தி லிருந்த தம்மிடம் வந்து பணியும்படியும், அரக்கர் குலத்துக்கு அதிபதியான இராவணனது பத்துமகுடமுடிகளும் திரண்டு குன்றுகளையொத்த இருபது புயங்களும் அற்றுக் கீழேவிழும்படியும், ஒரே கணை தொடுப்பதினுற் செய்யவல்ல நீலமேனியனும், குருவம்சத்தி லுதித்த அரசர்களாகிய பாண்டவர்களுக்காக துரியோதன மகாராஜனிடம் தூதுசென்ற கண்ணனும், விஷ்ணுபக்தியிற் சிறந்த இந்த்ரத்யும்னன் என்னுமரசன் அகத்தியமாமுனிவர் சாபத்தினுல் யானை வடிவமுற்று கஜேந்திரனுகி, பல பெண் யானைகளுடன் ஒரு தடாகத்தில் ஜலக்கிரீடை செய்து கொண்டிருக்கையில், சாபத்தினுல் முதலை வடிவமுற்று அங்கு வசித்துவந்த ஊகூ வென்னும் கந்தர்வன்அந்த யானையின் காலைக்கௌவிக்கொண்டிழுக்க, அவைகளிரண்டும் நெடுங்காலம் போர்புரியவே, மிகவும் திறங்குன்றிய கஜேந்திரன் "ஆதிமூலமே!" என்று கூவியழைக்க, அத்தருணத்தில் ஓடோடியுஞ் சென்று அம்முதலையைச் சங்கரித்து, கஜேந்திரனை விடுவித்து இருவருக்கும் முத்திதந்தருளிய வரதராஜனும், நாரதமாமுனிவரால்சபிக்கப்பட்ட குபேர புத்திரர்களிருவரும் பெரிய மருதமரங்களாய் நந்தகோகுலத்தில் வளர்ந்து நிற்க, யசோதை தம்மைக் கட்டினஉரலையும் இழுத்துக்கொண்டு தவழ்ந்து அவ்விருமரங்களுக் கிடையே சென்று,உரலை அவைகளில் மாட்டி அவைகளை வீழ்த்தி குபேர புத்திரர்கள் சாபத்தை நீக்கியருளிய பாலகிருஷ்ணனும், குதலைச் சொல் மாறுத தனது சிறு பாலகன் மொழிந்த வேதவாக்கியத்தை யிகழ்ந்த இரணியனது மார்பைத் தமது நகத்தினுற் பீறிச் சங்கரித்த இணையற்ற திறமுடைய நரசிம்மமூர்த்தியும்,சக்கராயுதம்தரித்தமரகதக்குன்றும், அக்கினியைக் கக்கும் காளிந்தி யென்னும் பாம்பின் படத்தின்மீதேறி நடித்து அதனை மாய்த்த மாயவனுமாகிய மகாவிஷ்ணுவின் சிறந்த மருகோனே! பசிப்பிணியினுல் வருந்துபவருக்குப் பகிர்ந்து கொடுக்கவேண்டுமென்ற எண்ணம் சிறிதுமில்லாதவன் யான்; கருணையற்றவன்; நீ எழுந்தருளியிருக்கும் க்ஷேத்திரங்களாகிய திருவருணை, திருத்தணிகை, பழநி, சுவாமிமலை, நாசமலை (திருச்

(இதன் தொடர்ச்சி 77-ம் பக்கம் பார்க்க.)

பலநாளைத் திருடன் ஒருநாளைக் ககப்படுவான்.

விவேக போதினி

தொ. 14] துன்மதிஸு :: ஆவணிமீ [ப. 3

கந்த புராணம்

SKANDA PURANAM

மேற்கூறியவாறு பல கிளைகளின்வழி தன் வம்சம் தழைத்தோங்கப்பெற்ற தக்ஷன் பின்னர் அசுவினி முதலிய இருபத்தேழு நக்ஷத்திரங்களான புதல்விகளைப் பெற்று, அவர்களை நிகரில்லா அழகுவாய்ந்த சந்திரனுக்கு விவாகஞ் செய்துகொடுத்து, சந்திரனை நோக்கி, "இவர்களனைவரிடத்தும் நீ சமமான அன்பு பாராட்ட வேண்டும். சிலரிடத்தில் மிக்க ஆர்வங்கொண்டும், சிலரை இகழ்ந்து கோபித்தும் பக்ஷபாத முடையவனாக நடந்துகொள்ளாதே" என்று கூறி, தனது புதல்வியருடன் சந்திரன் தன்னிருப்பிடம் செல்ல விடைகொடுத்து அனுப்பினான்.

அங்ஙனம் விடைபெற்றுச் சென்ற சந்திரன் தன் மனைவியருடன் வானத்திலுள்ள தனது நெறியை யடைந்து, அவர்களனைவரிடத்திலும் ஒரே அளவான அன்பைக் காட்ட வேண்டுமென்ற நோக்கத்துடன் ஒரு நிலைத்துக் கொருத்தியுடன் கூடி இன்பமனுபவித்து வந்தான். அவ்வாறிருக்கும் நாளில், அவர்களில் மிக்க அழகுவாய்ந்தவர்களான கார்த்திகை உரோகிணி இவர்கள்பால் தன்னை யறியாமலே மிகுந்த ஆர்வங்கொண்டு அவர்களுடனேயே தன் காலத்தைக்கழித்து, ஏனைய மனைவியரை நிராகரிக்கத் தொடங்கினான். அது கண்டு அக்கன்னியர்கள் கோபங்கொண்டு தமது தந்தையான தக்ஷன்பாற் சென்று, சந்திரனது நடத்தையைத் தெரிவித்தனர். அது கேட்ட தக்ஷன் மனம்வெதும்பி, உக்கிரமான கோபங்கொண்டு, "அச் சந்திரனது கலைகளெல்லாம் தேய்ந்து அற்றுப்போவதாக!" எனக் கொடிய சாபமிட்டான்.

உரைத்தற்கரிய செல்வம் பெற்று அண்டங்களுக்கெல்லாம் தலைவனைப்போல் விளங்கிய தக்ஷன் இட்ட கொடிய சாபத்தின் பயனாக சந்திரனது கலைகள் நாளுக்கு ஒரு கலையாகத் தேய்ந்து, பதினைந்து கலைகள் அழிந்து போயின. பின்னர் ஒரு கலையே எஞ்சியுள்ள சந்திரன், உடல் மெலிந்து மனத்திற் பேரச்சங்கொண்டு தேவர்க்கரசனான இந்திரனிடஞ் சென்று, "மகாப்ரபு! தக்ஷனிட்ட சாபத்தால் பதினைந்து கலைகள் அழிந்துபோயின. எஞ்சிய கலையொன்றும் இன்று அழிந்துபோகும். அவ்வாறு அழியுமாயின், என் பெரிய பெயரும் புகழும் தொலைந்து, பலர் இகழ்ச்சிக்கு ஆளாவேன். அக்கதி சேராவண்ணம் நான் செய்யவேண்டுவ தென்னவென அறிகிலேன். ஆதலால், தாங்கள் எனக்கு ஒரு உபாயம் உரைத்தருளவேண்டும்" என வேண்டினான்.

தேவேந்திரன் சந்திரனது துயரத்தைக் கண்ணுற்று மனம் வருந்தி, அவனை யணைத்துக்கொண்டு, "என் ஒப்பற்ற தோழனே! நீ பயப்படாதே. நான் சொல்லுவதைக் கேட்பாயாக! முன்னொருகாலும் நீ இவ்வாறே அழிந்து போவதற்கிருந்தாய். அது எவ்வாறெனில் ;—திருக்கைலாயத்தில் விநாயகப் பெருமானது கடலை முதலியன நிறைந்த பெருவயிற்றையும் அவரது கரத்திலுள்ள மோதகத்தையும் கண்டு நகைத்தாய். அப்பெருமான் வெகுண்டு, 'யாரும் உன்னைக் கண்ணெடுத்துப் பாராமல் இகழ, நீ நீசனாகுக!' என்று சபித்தார். அதன் பயனாக உன்னை யாவரும் நிந்திக்கத் தொடங்கினர். நீ வெட்கி, வானத்திற் செல்லாது ஒடுங்கிக் கிடந்தாய். அப்போது பிரமதேவர் முதலியோர் திருக்கைலாயத்திலுள்ள விநாயகப்பெருமானிடஞ்சென்று, அவரது பாதங்களைப் பணிந்து, 'எந்தாய்! தங்களுடைய மேன்மையையுணராது தங்களையிகழ்ந்த சந்திரன் தாங்களிட்ட சாபத்தினால் தன் ஒளியிழந்து நீசனாகி ஒடுங்கிக் கிடக்கிறான். இருசுடர்களில் ஒருவனான அவன் இவ்வுலகத்துக்கு இன்றியமையாதவனாதலால், அவனுக்கு இட்ட சாபம் வருஷத்துக் கொருநாள் மட்டும் அவனைப்பீடிக்கும்படி அருள்புரியவேண்டும்" என

வேண்டினார்கள். கருணையங்கடலாகிய விநாயக மூர்த்தியும் அதற்கிசைந்து அப்படியே யாகுக வென்றார். அதுமுதல் வருஷந் தோறும் ஆவணிமாதத்துச் சுக்கிலபக்ஷத்துச் சதுர்த்தியன்றுமட்டும் உலகோர் உன்னை நோக்காத மரபு நிலைபெற, மற்றைய நாட்களில் முன்போல் ஒளிவீசி வந்தாய். உலகத்துக்கு நீ இன்றியமையாதவனாதலால் இப்பொழுதும் உன் தேஜஸ் முழுவதும் அழியாமலிருக்க பிரமதேவர் தகுந்த வழிதேடுவார். ஆதலின், அவரிடம் விரைவிற் செல்லுதி" என்று தைரியஞ்சொல்லி, சந்திரனைப் பிரமதேவரிடம் அனுப்பினான்.

சந்திரன் அவ்விடம்விட் டகன்று சத்திய லோகத்தை யடைந்து, பிரமதேவரை வணங்கி தன் மாமன் தனக்கிட்ட கொடுஞ்சாபத்தைக் கூறி, "ஐயனே! தங்கள் புதல்வனுடைய கோபத்தை யாற்றி, என் கவலையை யொழித்து, இச்சாபத்தை நீக்கியருளவேண்டும்" என்று வேண்டினான். அப்போது பிரமதேவர் சந்திரனை நோக்கி, "அப்பா! தக்ஷன் முன்னிருந்த தக்ஷனல்ல. அவன் தன் மனம் போன போக்கிலேயே செல்லுகிறானே யன்றி யார் மொழியையும் ஏற்றுக்கொள்வதில்லை. என் வார்த்தையைச் சிறிதும் அங்கீகரிக்கமாட்டான். எம்பெருமான் விடமுண்டகண்டனது அநந்தகல்யாண குணங்களை முன்பு என்னிடமிருந்து தெரிந்து கொண்டு, நெடுங்காலம் தவம்புரிந்து, அவரது அருளையும் அவரது அருளினால் இந்த எல்லையற்ற செல்வத்தையும் பெற்ற தக்ஷன் கணப்பொழுதும் இறைவனை நினைப்பதில்லை. அது மாத்திரமன்று. தானே பரம்பொருளென்று மருட்சி யுற்றிருக்கிறான். ஆதலின், நான் அவனிடத்துச் செல்லமாட்டேன். இப்போது நிகரற்ற செல்வமும் எல்லையற்ற சக்தியும் வாய்க்கப்பெற்றுள்ள தக்ஷனிடம் சென்று அவனுக்குப் புத்திமொழி கூற எவரும் துணியமாட்டார். எவருக்கு எக்குறை நேரிடினும் அதைத் தீர்த்துக்கொள்ள அவருக்கு இப்போது ஒரேவழிதானிருக்கிறது. அது யாதெனில்;—செவ்வானம்போல் படர்ந்த சடையையும் செந்தழல்மேனியையுமுடைய முக்கணெந்தையின் திருமுன் சென்று பிரார்த்தித்தலே யாகும். அவரே பரம்பொருள் எனத் தெளிந்த மனத்துடன் அவரது பாதமலர்களை யடையும் தொண்டர்களது துன்பத்தை யகற்றுவதற்கே யன்றோ எம்பெருமான் திருக்கைலாய மலையில் எழுந்தருளியிருக்கிறார்? துன்புற்ற ஒருவர் அவரது அடியிணைகளே அடைக்கலமென்று அடைவார்களேயானால், அப்பெருமான் அவரது துன்பத்தையுமகற்றி அவர் பழைய வினைகளையும் தொலைத்தருளுவார். தமது திருவடிகளைச் சிந்தித்துத் தம்மை யணைந்துநின்ற சிறுவன் மார்க்கண்டேயன் மீது பாசத்தை யெறியத் துணிந்த இயமனை உதைத்து அச்சிறுவனைக் காப்பாற்றியும், திருப்பாற்கடலைக் கடைந்த காலத்தில் தோன்றிய விஷமானது எங்கும் பரவி அண்டங்களை யெரிக்கத் தொடங்குகையில், அதை வாரித் தமது திருவாயிற் போட்டுக்கொண்டு சகல சராசரங்களையும் காப்பாற்றியும், உமாதேவியின் மலர்க்கரத்திலிருந்து உதித்த கங்கை ஆரவாரித்தெழுந்து இவ்வுலக முழுவதையும் போர்த்திய காலத்தில் நாம் பயந்து சென்று போற்ற, அக் கங்கையைத் தமது சடையி லடக்கி நம்மெல்லோரையும் காப்பாற்றியுமருளிய சிவபெருமானது கருணையின் பெருமையை நீ அறியாதவனன்றே! ஆதலால், நீ விரைவில் திருக்கைலாயத்துக்கு ஏகுதி!" என மொழிந்தார்.

உடனே சந்திரன் திருக்கைலாயத்துக்கு ஏகி, எந்தை திருமுன்னர் சென்று, வேதங்களிலடங்கிய சத்திய வசனங்களால் அவரைப் போற்றி நிற்க, உயிர்கள்தோறும் உறைந்து நின்று முந்தைவினைக்கேற்ப அவைகள் நடக்குமாறு ஆட்டுவிக்கும் அநாதியான சிவபெருமான் யாதும் அறியாதவர்போல நடித்து, வந்த காரியமென்னவென்று சந்திரனைக் கேட்டார். சந்திரன் தனக்குத் தக்ஷன் சாபத்தினாலுற்ற துன்பங்களை யுரைத்து, "எம்பெருமானே! எஞ்சியுள்ள ஒரு கலை அழியாது நிற்கவும், மற்றைக் கலைகளனைத்தும் திரும்பவும் உண்டாகவும் அருள்புரிய வேண்டும். நின்னையன்றி வேறு தஞ்சம் எனக்கில்லை" என்று சொன்னான். அதுகேட்டுக் கருணையங் கடலாகிய எம்பெருமான், "அமுதமன்ன குளிர்ந்த கிரணங்களை வீசும் சந்திரனே! அஞ்சேல்!" என்றுகூறி அபயமளித்து, அவனிட மெஞ்சிய ஓர் கலையைத் தமது திருகரத்தாலெடுத்து தொங்கிவிளங்கும் தமது சடையில் தரித்துக்

கொண்டு, தம்மை யடைந்தார்க்கு அருள்புரியும் தமது பெருங்குணத்தை விளக்கிக் காட்டினார். தக்ஷன் சாபம் அங்கு செல்லும் திறனற்று நிற்க, சந்திரனது ஓர் கலையானது அழகாய்ப் பிரகாசித்து நின்றது. அப்பால் சிவபெருமான் சந்திரனை நோக்கி, "நீ எதைக் குறித்தும் இனிக் கவலைப்பட வேண்டாம். நினது இந்தக் கலை எமது சடையில் நிலைபெற்றிருக்கும். அதனால் நின் மற்றக் கலைகளைத்தும் நாளுக்கொன்றாய் மீண்டும் வளர்ந்து பதினைந்து தினங்களில் நிரம்பி, பின்னர் அவ்வண்ணமே குறைந்துவரும். இக்கலை மட்டும் என்றும் அழியாது நிற்கும்" என்று திருவாய் மலர்ந்தருளினார். சந்திரன் அவரது கமல பாதங்களை வணங்கி விடைபெற்றுச் சென்று தன்னுலக மடைந்தான்.

அந்திப் பொழுதில் சிவந்த வானத்தின் கண் சந்திரன் ஒளி வீசத் தோன்றி உலவுவதைத் தனது ஞான திருஷ்டியினா லறிந்த தக்ஷன் கடுஞ்சினங் கொண்டு, "நான் என் மருகனுக்கிட்ட சாபத்தை, எந்தை பிரமதேவராவது அவர் தந்தை திருமாலாவது நீக்கவுமில்லை, நீக்குமாறு என்முன் வந்து வேண்டவுமில்லை. அவர்கள் எனது ஆற்றலை யுன்னி அச்சமுற்றிருந்தனர். அப்படியிருக்க தாயும் தந்தையுமில்லாத சிவனோ என் சாபத்தைத் தடுக்கவல்லவன்? நன்று நன்று! 'நாமே பரம்பொருள். நாமே பிரமன் முதலிய எல்லாவுயிர்களையும் சங்கரித்து, சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம் (மயக்குதல்), அனுக்கிரகம் என்னும் பஞ்ச கிருத்தியங்களையும் புரிகின்றோம். நாமே ஸர்வவியாபியா யிருக்கிறோம்' என்று தன் மனத்தில் அகங்கார முற்றானோ ஈசன்? அல்லது, 'உலகத்தில் இணையிலியான தக்ஷன் புரிந்த தவத்துக்குகந்து இப்பெருஞ் செல்வத்தை யளித்தது நாமேயன்றோ' என்றுன்னி எனது ஆணையை யிகழ்ந்து இவ்வாறு நான் கொடுத்த சாபத்தை நீக்கினானோ? அல்லது, 'ஒப்பற்ற பரம்பொருள் நாமே யெனத் தெளிந்தும், தனது செல்வமெல்லாம் நம்மிடத்திலேயே பெற்றும், நமது பாதங்களை அவன் தன் கைகளினால் தொழவில்லை' என முனிந்து, நானிட்ட சாபத்தை விலக்கினானோ சிவன்?" எனப் புகன்றான்.

அப்போது புலகன் என்னும் முனிவர் தக்ஷனை நோக்கி, "ஒப்பற்ற கண்ணுதற் கடவுளை இகழாதே! இகழ்வாயேல், நின்னை யாவரும் இகழ்வர். நின் செல்வமும் குன்றும்" என்று நற்புத்தி யுரைத்தான். தக்ஷன் அது கேட்டு, "நான் செய்த பெருந் தவத்தினால் என்னிடத்தில் நிலைபெற்றிருக்கும் இச்செல்வம் ஒருக்காலும் நீங்காது. திருமால் முதலியோர் நானிட்ட கட்டளைகளை மறுக்கவில்லை. என்னை இகழ்வாரு முண்டோ இவ்வுலகில்? நினது புத்தி மிகச் சிறந்ததுவே!" என்று கூறி நகைத்தான்.

அங்ஙனம் நகைத்த தக்ஷனை புலகன் என்னும் முனிவர் நோக்கி, "நீ கூறும் வண்ணமே நின்னை எவரும் இகழமாட்டாரே யாயினும், நின் பெருஞ்செல்வம் குறைவுபடாதே யாயினும், யாவையும் நினைக்கருளிய இறைவனைப் பழித்தல் தகுதி யாகுமோ?" என்று கேட்டார். அப்போது நல்லோர் ஒறுக்குந் தீயநெறியைச் சார்ந்த தக்ஷன் தனது அளவற்ற வல்லமையும் பெருஞ்செல்வமும் அழியுமாறு, அம்முனிவரை நோக்கி, "யான் தவமியற்றிப் பெற்ற இச்செல்வத்தை நான் அனுபவிக்கும் காலவரைக்கு முன் அதை மாற்றும் வல்லமை அச்சிவனுக்குக் கிடையாது. ஒருவன் கன்மத்துக் கேற்ற விதிப்படியன்றி அதிகமாக ஒன்றும் செய்ய வல்லவனல்லன் அச்சிவன். ஆகையினால் அச்சிவன் தனது வல்லமையினால் என்னை என்ன செய்யமுடியும்?" என்று இறுமாப்புடன் மொழிந்தான். [எம்பெருமான் அவனுக்கு வரமளித்த காலையில், "அவ்வரங்களை உனக்களித்தோம். நீ நன்னெறியில் நின்றொழுகும் வரையில் அச்சீரனைத்தும் நிலைத்திருக்கும்" என்று திருவாய்மலர்ந் தருளியதை தக்ஷன் மறந்தான்போலும்!]

தக்ஷன் அவ்வாறு கூறியதும், புலகர் என்னும் முனிவர் அவனை நோக்கி, "நீ சொன்னவை யெல்லாம் உண்மை யென வைத்துக் கொண்டாலும், சிவபெருமானை இகழ்ந்தவர்கள் உய்யமாட்டார்களென வேதங்களெல்லாம் முறையிடுகின்றன வாதலால், நீ சிவபெருமானைச் சிறிதும் இகழாமல், மெய்யன்புடன் அவரது பாதமலர்களை வணங்குவாயாக! தமது சரணங்களைத் தஞ்சமென அடைவோர்களது துன்பத்தை யொழித்து, தக்க பொருள்கள் அவர்கள் யாவை வேண்டினும் அவைகளைக்

பட்டணத்தாள் பெற்ற குட்டி பணம்பறிக்க வல்ல குட்டி.

கொடுத்தருளுவது அவரது இயற்கை யென நன்கு தெரிந்துகொண்ட சந்திரன் அவரது பாதங்களைத் தஞ்சமென வடைந்தான். அப்பெருமானும் தமது இயற்கைக்கேற்ப, நீ அவனுக்கிட்ட சாபத்தை அகற்றினார். அங்ஙனம் அச்சாபத்தை நீக்கியதிலும், நீ கோபத்தினாலுரைத்த சாபமொழி பொய்யாகாம லிருக்குமாறு, அச்சந்திரன் பூரணமாய்ப் பதினாறு கலைகளையும் அடைந்த பின்னர், அக்கலைகள் நாளுக்குநாள் குறைந்துவரும்படி கட்டளையிட்டு, அச்சாபத்தை நிலைநிறுத்தினார். அப்படியிருக்க, நீ கோபிக்க வேண்டுவதேன்? அன்றியும், அச்சந்திரன நினது மக்களை மணந்துகொண்ட மருகனன்றோ? அச் சிவபெருமானும் பின்னாள் நின் மருகனாகப் போகிறாரன்றோ? ஆகையினால் கோபம் தவிர்தி!" என மொழிந்து தக்ஷனைச் சாந்தப்படுத்தினான்.

தக்ஷனும் கோபம் நீங்கி, பிரமன் முதலாயினோர் புகழ, பன்னெடுங்காலம் அரசு புரிந்து வந்தான்.

(73-ம் பக்கத் தொடர்ச்சி.)

செங்கோடு) முதலிய பல மலைகளின் மகிமைகளையும் பாடித் தலை வணங்காதவன்; 'வஞ்சகத்துடன் பிறருக்கு இடைஞ்சல் செய்யும் வார்த்தைகளையே பேசும் வழக்கமுடையவன்; அழகில்லாதவன்; உயர்ந்த குலத்திற் பிறக்கும் பாக்கியம் பெறாதவன்; நற்செய்கை புரியாதவன்; தெய்வபக்தி யற்றவன்; பெருவாழ்வும் இல்லாதவன்; விசேஷ குணமொன்றும் வாய்க்கப்பெறாதவன்; குயவனது சக்கரம் ஒருமுறை சுழன்றுவரும் காலத்துக்குள் எழுபது முறை சுழலும் மனமானது நடிக்கும் விசித்திரக் கூத்தினாற் கலங்கும் வஞ்சகன்; உன் பாத மலர்களைப் பாடி உள்ளம் நெக்குருகி அழுதழுது நின் சரணங்களில்வீழ்ந்து பணிய நினையாத இறுமாப்புடையோன்; மனிதனுக்குரியதான இறைவனை வணங்கும் இயல்பு இல்லாதவன்; முத்திக் கவசியமான நினது அருளைப் பெறாதபாவி; இப்புவிக்கவசியமான ஐசுவரியமு மில்லாத தரித்திரன்; யாவரையும் வஞ்சிக்க நினைக்கும் திருடன்; மதியற்றவன்; நின்னை மறந்ததனால் ஆதரிப்பா ரற்றவன்; தலையில் நல்லெழுத்து எழுதப் பெறாதவன்; என் செயலனைத்தும் சிவன்செயலே யென்று உணராதவன்; கணநேரமேனும் செயலற்று சுத்தஸத்தாயிருந்து அறியாதவன்; இப்படிப்பட்ட கடையேன் சிவபதமாகிய முத்திவீட்டை யடையும் நாளு முண்டோ? நினது அருள் சுரக்காவிடில் அது அசாத்தியந்தான்.

ஜியாப்ரே சாஸர்

GEOFFREY CHAUCER

‘இங்கிலீஷ் கவித்துவத்திற்குத் தந்தை’ யென்னும் சாஸர் கவிஞர் இற்றைக்கு சுமார் 517 வருஷங்களுக்கு முன்னிருந்தவர். அவருடைய இளமைப் பருவத்தைப்பற்றி அதிகமாய் ஒன்றும் தெரியவில்லை. சுமார் 1338-ம் வருஷத்தில் லண்டன் நகரில் பிறந்தவரென்று எண்ணப்படுகின்றது. அவருடைய தகப்பனார் சாராயக்கடை வைத்திருந்தா ரென்றும், கஷ்டப்பட்டு வேலைசெய்கிறவரென்றும், யோக்கியரென்றும் சொல்லுகிறார்கள். சாஸர் கவி, தம் இளம்பருவத்தில் கஷ்டப்பட்டுத் தம் பாடங்களைப் படித்து புத்திசாலியாய் விருத்தியடைந்திருக்கவேண்டுமென்று தோன்றுகின்றது. இல்லாவிட்டால் பிற்காலத்தில் அத்தனை பிரபலத்துக்கு வந்திருக்க முடியாது. சாஸருடைய இளமைப்பருவம் லண்டன் நகரத்திலேயே கழிக்கப்பட்டது. தீர்க்காலோசனையும், புத்திகூர்மையும், சமயோசித புத்தியும் கூடியிருந்ததுபற்றி தம்மைச் சுற்றிலும் நிகழும் காரியங்களை நன்றாய்க் கவனித்துவந்தார். தெருவில் நடக்கும்போதே ஆடவர்களும் பெண்டிரும் என்ன செய்கின்றனர் என்று சாவதானமாய்ப் பார்த்துச் செல்வார். பெரிய தெருக்களில் ஏதாவது ஊர்வலங்கள் போவதானால் சாஸர் கவியை அவ்விடத்தில் தப்பாமல் பார்க்கலாம். பிரத்தியக்ஷமாய்ப் பார்த்த அனுபவத்தைக்கொண்டு ஜனங்களைப்பற்றிப் பலவிதமாய் சிரிக்கக்கூடிய கவிகளை எழுதி அனைவரையும் நகைக்கச் செய்வார்.

இவ்விளம்பிள்ளை எங்கே படித்தாரென்றும் எவ்வளவு தூரம் கல்வி யபிவிருத்தி செய்து கொண்டாரென்றும் தெரியவில்லை. சிலர் சாஸரை ஆக்ஸ்போர்ட் ஸர்வகலாசங்கத்தைச் சேர்ந்தவ ரென்கின்றனர். சிலர் அவரைக் கேம்பிரிட்ஜைச் சேர்ந்தவ ரென்கின்றனர். சிலர், அவர் அவ்விரண்டு ஸர்வகலாசாலைகளிலும் படித்தவ ரென்கின்றனர். எப்படியிருக்கினும், 16-வயதுக்குள் அவருடைய பள்ளிக்கூடப் படிப்பெல்லாம் முடிந்துவிட்டது போலும். ஏனெனில், அக்காலத்து வழக்கப்படி சாஸர் தமது 16-வது வயதில் இராஜகுமாரனை க்ளாரன்ஸ் பிரபுவினிடத்தில் குற்றேவல் செய்

பட்டணத்து வாசலைப் படலாலே மூடுகிறதோ?

கிறவராய் அமர்ந்தார். அவ்வேலையும் கஷ்டமான வேலையாயிருந்திராது. சிறு பிள்ளைகள் அங்ஙனம் வேலைக்கு அமர்ந்தபொழுது பிரபுக்களுடனும், சீமாட்டிகளுடனும் அவர்கள் போகுமிடத்துக்கெல்லாம் போகவேண்டியிருக்கும். அவர்கள் சாதாரணமாய்ப் பல இடங்களுக்குப் போவது வழக்கமாயிருந்தபடியால், சாஸர் தம் தேசம் மட்டுமன்றி, பல தேசங்களையும் காண்பதற்குச் சௌகரியம் ஏற்பட்டது. பிற்காலத்தில் இந்த அநுபவமெல்லாம் அவர் கவித்துவம் செய்வதற்கு உபயோகமாயின.

14-வது நூற்றாண்டில் இங்கிலாந்துக்கும் ப்ரான்ஸ் தேசத்துக்கும் அடிக்கடி போர் நிகழ்ந்தது. ஆகையால் 19-வது வயதிலேயே சாஸர் இராணுவ வீரராய்ச் சண்டைக்குச் சென்றார். சண்டையில் அதிருஷ்டவந்தராய்க் கீர்த்திபெறாமல் சிறையில் அடைபட்டார். ஒரு வருஷத்துக்குமேல் ப்ரான்ஸ் தேசத்தில் சிறையிலடைபட்டு, பின்பு அரசன் பணங்கொடுத்து மீட்கவே, மறுபடி இங்கிலாந்துக்குத் திரும்பிவந்து இராஜசேவையில் சேர்ந்தார்.

இங்கிலாந்துக்கு வந்தவுடன் அரண்மனையில் இராணியின் தோழிகளுள் ஒருத்தியைக் கலியாணம் செய்துகொண்டார். தம் மனைவியினிடம் அதிக அன்பு பாராட்டியதாகத் தெரியவருகிறது. ஏனெனில், அப்பெண்மணியைக் குறித்துப் பாட்டுகள் பாடியிருக்கிறார். இரண்டு குழந்தைகள் பிறந்ததாகவும் தெரியவருகிறது. ஒருவன் லூயி யென்பவன். அவனிடத்தில் சாஸருக்கு மிக்க அன்புண்டு. அவனுக்கு 10-வயதாயிருக்கும்போது அவனுக்கு ஒரு நிருபம் எழுதியிருக்கிறார்.

இதே சமயத்தில்தான் சாஸர், கவித்துவம் செய்ய யத்தனித்தார். முதலில் அவர் பெரிய கதைகளை எழுதவில்லை. இனிமையான சிறு பாட்டுகளைச் செய்து அவற்றைத் தாமே இராஜசபையில் சீமான்கள் முன்னிலையிலும் சீமாட்டிகள் முன்னிலையிலும் பாடினார். அவர்களெல்லாரும் சாஸருடைய அற்புத புத்தியைப்பார்த்து ஆச்சரியமடைந்து, அவரைப்புகழ்ந்து, உற்சாகத்துடன் முயற்சி செய்யும்படி தூண்டியதுமன்றி, அவர் எழுதும் ஒவ்வொரு பாட்டையும் அவரையே பாடும்படி வற்புறுத்தினர்.

சாஸர் கவிராயராயிருந்ததினாலேயே மற்றக் காரியங்களில் பிரவேசிக்கவில்லையென்று எண்ணக்கூடாது. இராஜாங்க வேலைகளில் எப்பொழுதும் ஊக்கத்தோடு பயின்றுவந்தார். ஆங்கிலேய அரசன் அவரை ஒருமுறை இராஜகாரியமாய் ப்ரான்ஸுக்கும், ஒரு முறை இதாலி தேசத்துக்கும் அனுப்பினான். அச்சமயங்களிலெல்லாம் அவருக்கு அதிகமாய்ப்பொருளுதவி செய்தான் அரசன். திரும்பி இங்கிலாந்துக்கு வந்ததும் அரசன் அவரை வெகுவாய் மரியாதை செய்ததுமன்றி தன் அரண்மனையிலிருந்தே ஒரு சொம்பு சாராயம் பிரதி தினமும் கவிராயருக்கு அனுப்பவேண்டுமென்று உத்தரவுசெய்தான். சாஸரும் அரசனுக்கும், இராஜபுத்திரருக்கும், இராஜவம்சத்தாருக்கும், பக்தியுடன் பணிவிடை செய்துவந்தார். பரஸ்பரம் அன்பு மிகுந்திருந்ததுபற்றி சாஸர் வெகு செல்வாக்குடன் காலங் கழித்துவந்தார்.

1382-ம் வருஷத்தில் சாஸர் அரசனுடைய சுங்கவரிகளைப் பரிசோதனைசெய்யும் அதிகாரியாக நியமிக்கப்பெற்றார். அது முக்கியமான உத்தியோகமானபடியால் கஷ்டப்பட்டு வெகுகாலம் வேலைசெய்யவேண்டியிருந்தது. தேசத்துக்குள் இறக்குமதியாகும் வஸ்துக்கள் ஒவ்வொன்றையும் கவனிக்க வேண்டியிருந்தது. எத்தனையோ குமாஸ்தாக்கள் சாஸரிடத்தில் வேலை செய்துகொண்டு அவரிட்ட பணியைச் செய்யக் காத்துக்கொண்டிருந்திருக்கலாம். ஆனாலும் எல்லா வேலைகளையும் குமாஸ்தாக்களே செய்யவேண்டுமென்று விடவில்லை. தமக்கென்று சில பாகங்களை வைத்துக்கொண்டு அவற்றிற்கு சம்பந்தப்பட்ட எழுத்துவேலைகளையெல்லாம் தாமே தம் கைப்படப் புஸ்தகங்களில் எழுதியிருக்கிறார். இத்தகைய காரியங்களே சாஸருக்கு இராஜ காரியங்களிலுள்ள சிரத்தையைக் காட்டவல்ல சாக்ஷிகளாய் நிற்கின்றன.

சில வருஷங்களுக்குப்பின்னர்(1386)பார்லிமெண்ட் மஹாசபையில் அங்கத்தினராயினர். அவ்வருஷத்திலிருந்து இரண்டு மூன்று வருஷகாலம் சாஸருடைய செல்வாக்குக் குறைந்துபோயிற்று. கவிராயரை ஆதரித்த அரசனும் அரசனுடைய முதற்குமாரனும் இறந்துவிட்டனர். பட்டத்துக்குவந்த அரசனுக்கு வயது பதினொன்று. அப்பொழுது அரசன்

பட்டடை வாய்த்தால் பணி வாய்க்கும்.

ஸ்தானத்தில் ஆண்டுவந்த பிரபுக்கள் ஜனங்களைச் சரியாய்ப் பரிபாலனம் செய்யவில்லையாகையால், ஜனங்கள் கோபமூண்டு அப்பிரபுக்களைத் தேசத்திலிருந்து ஓட்டிவிட்டனர். சாஸரும் அந்தப் பிரபுக்களுடன் சம்பந்தப்பட்டவராயிருந்தபடியால் வேலையைவிட்டுப் போகவேண்டியதாயிற்று. உத்தியோகத்தை விட்டதும், பதவியில் தாழ்ந்து, தரித்திர தசையை அடைந்து, கவி கஷ்டப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகின்றது.

சீக்கிரத்தில் அநுகூலமான காலம் சம்பவிக்கவே, சாஸருடைய சிநேகிதர்களே மறுபடி இராஜாங்கத்தில் பலவான்களாகி, அரசாக்ஷியை வகித்தனர். உடனே அவர்கள் தங்களுடைய பழைய சிநேகிதரான கவிராயரை மறந்துவிடாமல் அவருக்குத் தக்க உத்தியோகங்கள் கொடுத்து உதவிசெய்தார்கள். பிற்காலங்களில் அரசன் பெயராலும், இராஜ்ய ரக்ஷகர் பெயராலும் பல உபகாரச் சம்பளங்கள் கொடுக்கப்பட்டனவென்று தெரியவருகின்றது. இவ்விதமாய்த் தம் தேசத்தாராலும், இராஜாங்கத்தாராலும் மரியாதையாயும், அன்பாயும், ஆதரவாயும் நடத்தப்பெற்று 1400-ம் வருஷத்தில் வானுலகடைந்தார். அவருடைய தேகத்தை வெஸ்ட்மின்ஸ்டர் ஆபியில் அடக்கம் செய்தனர். அவருடைய ஞாபகச்சின்னமாக ஒரு கட்டிடம் பிற்பாடு கட்டியிருக்கிறார்கள்.

இதுகாறும் ஒருவாறு சாஸரைப்பற்றி— அவர் எங்ஙனம் இருந்தாரென்றும், எவ்விதம் தம் வாழ்நாட்களைக் கழித்தாரென்றும்— சொல்லிமுடித்தோம். இனி அவர் எழுதிய கதைகளைப்பற்றிச் சற்று விவரிப்போம். அவருடைய கிரந்தங்களுக்குள் முக்கியமானவை "காண்டர்பெரிக் கதைகள்."

காண்டர்பெரி யென்னுமிடம், கெண்ட் மாகாணத்தில் ஒரு சிறு பட்டணம். அப்பட்டணத்தில் விசாலமான அழகிய கிறிஸ்தவ கோவிலொன்றிருக்கின்றது. அக்கோவிலில் தாமஸ் எ பெக்கெட் என்பவருடைய தேகத்தை அடக்கம் செய்திருக்கிறார்கள். பெக்கெட் என்பவர் இரண்டாவது ஹென்றி அரசனாயிருந்தகாலத்தில் பிரதான குருவாயிருந்தார். அரசனுக்கும் ஆசாரிய சிகாமணியான பெக்கெட்டுக்கும் மனஸ்தாபம் வரவே, ஹென்றியின் பிரபுக்கள் பெக்கெட் குருவைக் கொன்றுவிட்டனர். அதிமேதாவியும், தெய்வபக்தருமான பெக்கெட்டைப் புதைத்த விடம், அப்பொழுது முதல், யாத்திரை ஸ்தலமாகிவிட்டது.

இங்கிலாந்தின் பல விடங்களிலுமிருந்து ஜனங்கள் ஆயிரக்கணக்காய் காண்டர்பெரிக்கு வந்து, பெக்கெட் மஹாமுனியின் ஸமாதியின் முன்னே பிரார்த்தனை செலுத்தத் தொடங்கினர்.

அச்சமாதியில் அத்யத்புதமான செயல்கள் நடந்தனவென்று சொல்லுகின்றனர். அக்கோவிலுக்குக் கொண்டுவரப்பட்ட நொண்டிகள் கால் நன்றாயாகி நடக்கச் சக்தியுடையவர்களானார்களாம்; வியாதிஸ்தர்கள், வைத்தியர்களால் கைவிடப்பட்ட பின்பு, காண்டர்பெரிக்குப் போய், ஸமாதியின்முன்னே மண்டியிட்டு, மனதாரக் கடவுளைப்பிரார்த்தித்தபின், முழுவதும் சௌக்கியமாகி தம்மிருப்பிடத்திற்குத் திரும்பிப் போயிருக்கிறார்களாம்.

இவ்வாறு அங்கஹீனரும் வியாதியஸ்தரும் மாத்திரமே காண்டர்பெரிக் கோயிலுக்கு யாத்திரை போயினர் என்று எண்ண இடமில்லை. அநேகர் காண்டர்பெரியைப்பார்க்கவும், கோவிலின் சிறப்பைக்கண்டு களிக்கவும், அற்புத ஸமாதியைத் தொழவும், அங்கே குருக்கள்மார் பண்டைக்காலந்தொட்டு சேர்த்துவைத்திருக்கும் புராதனப் பொருள்களைத் தரிசிக்கவும், திரண்டுவந்தனர். அரசர்கள், பிரபுக்கள் மாத்திரமன்றி, ஏழை உழைப்பாளிகளும், சேவகர்களுங்கூட யாத்திரை வருவதுண்டு.

லண்டன் நகரிலிருந்து காண்டர்பெரிக்குச் செல்ல நான்கு நாட்களாகும். சாஸர் காலத்தில் புகை வண்டிகளும், கோச் வண்டிகளும், மோட்டார் வண்டிகளும் கிடையா. வேண்டுமானால் குதிரை சவாரி செய்துகொண்டு போகலாம். இல்லையேல், நடந்து தீரவேண்டுவதுதான்.

வழியில் திருட்டுப்பயமில்லாமலிருக்கும் பொருட்டு பிரயாணிகள் கூட்டங்கூட்டமாய்ச் சேர்ந்துபோவார்கள். குதிரையின் கழுத்தில் கட்டிய மணிகள் 'கிணு, கிணு' என்று அடிக்கவும், சிலர் பாடவும், சிலர் ஊதவும், மெய்ம்மறந்து 'தமாஷாய்'ப் பிரயாணம் செய்வார்கள்.

பட்டால் அறிவான் சண்டாளன், மழை பெய்தால் அறிவான் வெள்ளாளன்.

இம்மாதிரி காண்டர்பெரிக்குப் புறப்பட்ட யாத்திரைக்காரரைத்தான் சாஸர் தமது நூலில் வருணிக்கின்றார். வசந்தகாலத்தில் ஒருநாட் காலையில் இரமியமான சூரிய வெளிச்சத்தில் யாத்திரைக்காரர்கள் குதிரையேறிப் புறப்பட்டனர். அவர்கள் இருபத்தொன்பது பேர்கள். போகும் வழியில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதையைச் சொல்லி வழி நடக்கலாமென்று தீர்மானித்துக்கொண்டனர். இவற்றையெல்லாம் சாஸர் தம்முடைய இன்பமான நவரசம் சொட்டும் நடையில், நமது கண்களுக்கெதிரே நடப்பதுபோல் வருணித்திருக்கிறார். பக்ஷிகள் பாடுவதும், வேலிகளில் இருபுறமும் புஷ்ப மொட்டுகள் மலர்வதும், மலர்ந்த புஷ்பங்களிலிருந்து வாசனை வீசுவதும், தானிய விதையிலிருந்து முளை கிளம்பி நிலத்தின்மேல் தலை தூக்கி நிற்பதும், சூரியன் தங்கத்தை உருக்கி ஓடவிட்டதுபோல் அடிவானத்தைச் சிவப்பாக்கி உதயமாவதும், இவையெல்லாம் ஆனந்தமாய் மனத்தைக் கவரும் பாடல்களில் வருணிக்கப்பட்டுள்ளன. பிறகு பிரயாணிகளையே வருணிக்கின்றார். அதிலிருந்து அக்காலத்து நடை, உடை, பாவனை இவையெல்லாம் தெரியவருகின்றன.

பிரயாணிகளுள் ஒருவன் யுத்தவீரன்; அவனை அடுத்து அவனுடைய மகன்; அவர்களுக்குப் பின்னால் அவர்களுடைய சேவகன். பிறகு மூன்று குருக்கள்மார்களும், ஒரு சந்நியாசினியும்: ரொட்டி மாவரைக்கும் யந்திரக்காரன் ஒருவன்: ஆக்ஸ்போர்ட் சர்வகலாசங்கங்களில் படித்த வித்துவான்: ஒரு வக்கீல்: ஒரு குடியானவன். இவ்வாறாக ஒவ்வொருவரையும் சாஸர் வருணிக்கின்றார்.

இந்தப் பிரயாணிகள் சொல்லுவதுபோல எழுதிய கதைகளே காண்டர்பெரிக் கதைகள். சாஸர் எழுதியதே 24 கதைகள்தாம். அவற்றிலும் சில கதைகள் முடிவுபெறவில்லை. முதலில் சாஸர் ஒவ்வொரு பிரயாணியும் போகும்பொழுது ஒரு கதையும் வரும்போது ஒரு கதையுமாய்ச் சொல்லவேண்டுமென்கிறார். அவர் எடுத்துக்கொண்ட ஏற்பாட்டுப்படி 58 கதைகள் ஆகவேண்டியிருக்கின்றது. அப்படிச் செய்ய சௌகரியப்படாமல் விட்டுவிட்டனர் போலும். இவற்றுள் நாம் தமிழில் மொழிபெயர்த்திருப்பது ஆறு கதைகளே. (1) கான்ஸ்டன்ஸ் என்னும் இராஜகுமாரியின் கதை: (2) சத்த தொனியன் என்னும் கோழியின் கதை: (3) "பெண்கள் சிறப்பாய் விரும்புவதெது?" என்பது: (4) கிரிஸெல்டா அல்லது பொறுமைக்கரசியின் கதை: (5) காமெலின் சரித்திரம்: (6) யமனைக் கொல்லப்போனவர்கள் அல்லது மூன்று வெறியாட்டகாரர்களின் கதை. இவ்வாறாக ஆறு கதைகளை மட்டும் எடுத்து எழுதியிருக்கிறோம்.

கம்பியில்லா மின்சாரமும், அதன் அபூர்வச் செயல்களும்

WIRELESS ELECTRICITY AND ITS WONDERFUL EFFECTS

உலக வாழ்க்கை நாளுக்குநாள் முன்னேற்றமடைந்து வருகிறது. பல வருஷங்களாய்ப் பல பெரியோர்கள் அவதரித்து ஜனங்களின் சௌகரியங்களைக் குறித்து பாடுபட்டிருக்கிறார்கள். மதம், கல்வி, இராஜரீகம் முதலிய விஷயங்களைச் சீர்ப்படுத்தப் பலமூதறிவாளர்களும், அவ்வாறே விஞ்ஞான சாஸ்திரமும் பெருமையடையும் வண்ணம் நுண்ணிய அறிவும் இயற்கையாகவே தோன்றும் ஆற்றலும் கூடிய பல சீரியர்களும் தோன்றியுள்ளார். நீராவியின் வல்லமையைக் கண்டுபிடித்த ஜேம்ஸ் வாட்டும், சப்தத்தின் சலனம் முதலிய உண்மைகளைக் கண்டுபிடித்த எடிஸனும், இன்னும் நியூடன், பாரடே முதலியோரும் இக்கூட்டத்தைச் சேர்ந்தவராவர். இந்நிபுணர் கூட்டத்தில் தற்போது கடைசியாயுதித்தவர்களும் பல அரிய சக்திகளையும் விஷயங்களையும் கண்டுபிடித்திருக்கின்றனர். அவைகளில் பிரதானமானது கம்பியில்லா மின்சாரம். அதனால் விளையக்கூடிய நன்மைகள் பல.

இந்தக் கம்பியில்லா மின்சாரத்தின் இரகசியத்தை முதலில் அறிந்தவர் மூவர். அவர், நமது நாட்டு விஞ்ஞான சாஸ்திர நிபுணரான ஸர் ஜகதீச சந்திர வஸுவும், மார்க்கோனி என்பவரும், மற்றொரு அமெரிக்க சாஸ்திரக்ஞருமாவர். அவர்களில் நமது ஜகதீச சந்திரர் தாம் அம்மின்சாரத்தை அறிந்த வரையில் விட்டுவிட்டு, மேமேலே பரீக்ஷிக்காதிருந்

தார். மார்க்கோனி என்பவரே பல பரீக்ஷைகள் செய்து, அதை அநேகவிதமாய் அபிவிருத்திசெய்து, அதனால் பயன்பெறுமாறு பல அற்புதமான கருவிகளையும் நிருமித்தார்.

விஞ்ஞான சாஸ்திரம், பூதபௌதிக சாஸ்திரம் இவைகளில் இந்தியா இன்னும் பின்னடைந்திருக்கிறது. மேனாட்டிலும், அமெரிக்கா முதலிய இடங்களிலும் இந்த சாஸ்திரங்களின் பயிற்சிக்காகப் பலர் செய்துவரும் வேலையும், தம் உயிரையும் திரணமாக மதித்து அச்சாஸ்திரங்களின் உண்மைப் பொருள்களையறிய முயலும் ஆற்றலும் இங்கு வேரூன்றவில்லை. தற்காலம் வாலிப தசையிலிருப்பவர்களே—பிற்காலத்தில் தேசத் தொண்டுபுரியக் கங்கணங் கட்டியவர்களே—இத்துறைகளில் சிரத்தையெடுத்தல்வேண்டும்.

கம்பியில்லா மின்சாரத்தின் குணம் வெகு நுட்பமானது. வாயுவின் சலனத்தினால் மின்சார அலைகள் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு யாத்திரை செய்கின்றன. அந்த மின்சாரத்தினால் செய்யக்கூடிய காரியங்கள் கணக்கிலடங்கா. அதனால் அநேக மைல் பரந்துள்ள சமுத்திரங்களைத் தாண்டி செய்திகள் அனுப்பலாம். பல மைல்கள் தூரத்திலுள்ள விளக்குகளை ஏற்றலாம்; பல இருப்புப்பாதை வண்டிகளை நினைத்தவிடத்தில் நிறுத்தலாம்; மனிதர் செல்லக்கூடாத கானகத்தில் பல படங்களைப் பிடிக்கச் செய்யலாம்; இன்னும் மனத்தினால் நினைக்க முடியாத பல அரிய காரியங்களையும் முடிக்கலாம்.

அமெரிக்காவில் ரயில் வண்டித்தொடர் மிகுந்த வேகத்துடன் போய்க் கொண்டிருக்கும்போதே அவைகளுக்குள்ளிருந்து ஓர் மனிதனும் வெளியேயுள்ள ஏதாவதொரு ஸ்டேஷனிலிருந்து மற்றொருவனும் பேச வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த ஏற்பாட்டில் தண்டவாளக் கம்பிகளே மின்சார அலைகளைக் கொண்டுசெல்ல உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. இந்தஏற்பாட்டினால், அவசரத்தில் ஒருவன் வண்டியில் ஏறிவிட்டபோதிலும், மற்றொரு ஸ்டேஷன் போகும் வரை காக்காமல் உடனேயே தன் சிநேகிதனுடன் சம்பாஷிக்கலாம். புரொபஸர் விர்த் என்பவர், நூரன்பரோ என்னுமிடத்தில் பல மைல் தூரத்திற்கப்பால் செல்லும் ரயில் வண்டிகளை நினைத்தமாத்திரத்தில் கம்பியில்லா மின்சாரத்தால் நிறுத்தும் மர்மத்தைக் கண்டுபிடித்தார். இந்த ஏற்பாட்டில், ஓர் ஸ்டேஷனில் உள்ள விசைகளை முடுக்க, கம்பியில்லா மின்சார அலைகள்பரவி வண்டிகளின்மேலுள்ள மற்றொரு மின்சார இயந்திரத்தைத் தாக்க, அவ்வண்டிகள் மின்சார 'பிரேக்கு'களினால் உடனே நிறுத்தப்படுகின்றன. வெகு நுட்பமான இயந்திரங்கள் அமைக்கப்பட்டிருத்தலால் வெகு எளிதில் காரியம் சித்திபெறக்கூடியதாயிருக்கிறது. இம்முறை இனி மற்றவிடங்களிலும் அனுஷ்டானத்திற்கு வருமென்பதில் தடையில்லை.

இவ்விதமாகவே மேற்கூறிய புரொபஸர் விர்த் என்பவரும் மற்றும் சிலரும் சமுத்திரத்தில் நினைத்த திசையில் படகுகளைச் செலுத்த முயற்சித்தனர். இதனால் வெடிமருந்துகள் முதலியவை ஏற்றப்பட்டுள்ள படகுகளை பகைவர் கப்பல்களுக்கு நடுவில் செலுத்தி அந்தக் கப்பல்களைச் சேதம் செய்வதற்கு சுலபவழியுண்டாயிற்று. இவ்விதப் படகுகளில் மனிதனொருவனும் இருக்கவேண்டுவதில்லை. படகின் பாய்மரங்களுக்குமேல் மின்சார இயந்திரம் வைக்கப்பட்டிருக்கிறது. கரையின் மீதுள்ள மனிதன் சில கருவிகளைக்கொண்டு, மின்சார அலைகள் பாய்மரத்தின் மீதுள்ள இயந்திரத்தைத் தாக்கத்தக்க ஏற்பாடு செய்கிறான். தான் நினைத்த திசையில் படகைச் செலுத்துகிறான்.

மற்றும், நாட்டிலுள்ள விளக்குகளையெல்லாம் ஓரேசமயத்தில் பிரகாசிக்கச் செய்யவும் தகுந்த கருவிகள் செய்யலாமென்று அமெரிக்க நிபுணரான நிகோலா டெஸ்லா என்பவர் கூறுகிறார். ஆனால் இதற்கு மின்சாரம் சேகரிக்கும் கருவி மிகுந்த வன்மையுடையதாய் நிர்மாணிக்கப்பட வேண்டுமாம். இந்த மாதிரி நிஜமாகவே மார்க்கோனி சுமார் 6-மைல் தூரத்திற் கப்பாலுள்ள விளக்கொன்றை எரியச் செய்தாராம்.

இச்சந்தர்ப்பத்தில், கம்பியில்லா மின்சாரம் அபூர்வமான சில வாயுக்களின்மேல் உண்டாக்கும் செயல்களைக் கூறுவது இன்றியமையாதது. மிகவும் அரிதாய்க் கிடைக்கும் நியான் ஹெலியம் இவைகளில் ஒரு சிறிதை, வேறு காற்று உட்புகமுடியாத கண்ணாடி 'பல்பு'

களிற் செலுத்தி மின்சாரத்தைப் பிரயோகித்தால், இந்த வாயுக்கள் மிகுந்த பிரகாசத்துடன் ஒளிர்கின்றன. நியானின் வெளிச்சம் சிவந்ததாயும், ஹெலியத்தின் ஒளி மஞ்சளாகவும் இருக்கின்றன. இந்தக் கண்ணாடி 'பல்பு'கள் வெகு திறமையுடன் செய்யப்பட்டால்தான் பலன் தரும்.

கொஞ்சகாலத்திற்கு முன், பாரிஸ் நகரிலுள்ள பெயர்பெற்ற ஐபல் கோபுரத்தின் மீதுள்ள கம்பியில்லாத்தந்தி இலாகா ஆபீஸர்கள், சுமார் 200 மைல்களுக் கப்பாலுள்ள ப்ருஸ்ஸல்ஸ் நகர் கம்பியில்லா மின்சார சாலையில் பாடப்பட்ட பாடல்களைக் கேட்டனர். இப்பாட்டுகள் வாயுமண்டலத்தில் மின்சார அலைகள் மூலமாகச் சென்றன. சாதாரண டெலிபோனைப் போன்று முதலில் வார்த்தைகள் மின்சார அலைகளாக மாறி பின்பு மறுபடியும் கேட்குமிடத்தில் தம் ஸ்வய நிலைமையை யடைகின்றன. பாடுகிறவன் மைக்ரோபோன் என்னும் கருவியின் அருகில் நின்று பாடுகிறான். இந்தக் கருவி மிகவும் நுண்ணியதாய் தொனிக்கேற்றபடி மின்சார அலைகளின் வேகத்தைப் பெருக்கவும் குறைக்கவும் கூடியதாய் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. ஐபல் கோபுரத்திலுள்ள கருவி இதே ஏற்பாட்டின்மேல் அமைக்கப்பட்டிருப்பதால் ப்ருஸ்ஸல்ஸிலிருந்து அனுப்பப்பட்ட அலைகளை மாத்திரம் பொறுக்கிக்கொண்டு மற்றவைகளை விலக்கிவிடுகின்றன. பொறுக்கப்பட்டவை தகுந்த கருவிகளால் தமது முன் ரூபமாகிய வார்த்தைகளாக மாறுகின்றன. கிராமபோன் இயந்திரத்தில், 'ரிகார்டர்' என்னும் தட்டு உதவுகிறதைப் போல் வாயுமண்டலத்திலுள்ள 'ஈதர்' என்பது உபயோகப்படுகிறது. ரிகார்டரின்மேல் கீறப்படுவதுபோல் ஈதர் என்பதும் பல சலனங்களை யடைகிறது.

இன்னும், ஆகாய விமானங்களில் ஆகாய மண்டலத்தி லிருந்துகொண்டு அங்கிருந்து பூமியிலுள்ளோர்களுடன் பேசவும் முயற்சித்திருக்கிறார்கள். இன்னும், சமீபத்தில் நடந்த மஹாயுத்தத்தில் பகைவரது அரண்களையும், கோட்டைகளையும் படங்களெடுக்கும் சாதனத்தைக் கைக்கொண்டார்கள். இன்னும் மனிதர் செல்லவொண்ணாக் கடுங்கானகத்திலும் அவ்விடமுள்ள நிலையைச் சித்திர ரூபமாய் அறியும் சாதனங்களைக் கண்டு பிடித்துள்ளனர். என்னே மனிதனின் வன்மை! என்னே அவன் அறிவின் விசாலம்!

இவ்வகைத்தாய பல அரிய பெரிய கிரியைகளைச் செய்யும் ஆற்றலை பகவான் அளித்திருக்கிறார். அவ்வாற்றலை நல்வழியிற் செலுத்தி உலகமுள்ளவரையில் உமது பெயரை நிலைநிறுத்த எவ்வளவு சாதனங்களுள்ளன. ஈசுவர பக்தியுடன் தேச க்ஷேமத்தை நாடி உழைக்க முன் வாருங்கள்! கீர்த்தி உமதே! ஆற்றலும் உமதே! எழுமின்!!

இந்திய மன்னர்கள்

THE EMPIRE BUILDERS

அசோக மௌர்யன்

(56-ம் பக்கத் தொடர்ச்சி)

VI

தேவப்பிரியனும் ராஜனுமான பிரியதர்சி இம்மாதிரி கூறுகிறார் :—

பூர்வத்தில், எல்லா வேளைகளிலும் ப்ரஜைகளினுடைய காரியமானது நடத்தப்படவில்லை; அதைப்பற்றியும்தெரிவிக்கப்படவில்லை. அதை இம்மாதிரியாக நான் வழக்கத்திற்குக்கொண்டு வந்திருக்கிறேன். எவ்வேளையிலும் நான் போஜனம் செய்தாலும், அரண்மனையிலாவது அந்தப்புரத்திலாவது இருந்தபோதிலும், தேகப்பயிற்சி, இராணுவப்பயிற்சி முதலியவைகளில் நான் அமர்ந்திருந்தாலும், உத்யானவனத்தில் இருந்தாலும், அவ்விடங்களி லெல்லாம் உத்தியோகஸ்தர்களிருந்து ப்ரஜைகளினுடைய காரியங்களைத் தெரிவிக்கவேண்டும். அவ்விடங்களிலெல்லாம் இராஜ்ய விஷயங்களை நான் கவனிப்பேன். மற்றும் நான் ஏதாவது வாய் வார்த்தையாக என்னஉத்தரவிட்டபோதிலும், உத்தரவாவது, தானமாவது, பிரஸங்கமாவது இவைகள் இராஜ்ய மந்திரிகளால் யோசிக்கப்பட்டு, முக்கியமான காரியமாவது, அபிப்பிராய பேதமாவது, தள்ளவேண்டுமென்றாவது ஏற்படும்பக்ஷத்தில், அதைப்பற்றி நான் எங்கிருந்தாலும் சரி, விஷயம் எதுவாயிருந்தாலும் சரி, தாமதமின்றி என்னிடம் அதைத் தெரிவிக்க வேண்டும். இம்மாதிரி நடக்கவேண்டுமென்று நான் உத்தரவிட்டிருக்கிறேன்.

பட்டுக்கோட்டைக்கு வழி எது என்றால், கொட்டைப்பாக்கு விலை நூற்றைம்பது என்கிறான்.

ஜனங்களின் காரியத்தைக் கவனித்து, என்னாலானவரைக்கும் முயன்று முடிப்பதில், எனக்கு எப்பொழுதும் திருப்தியுண்டாவதில்லை. ஜன ஸமூகத்துக்குச் சுகத்தை யுண்டாக்குவதே என் கடமையென்று நினைத்திருக்கிறேன். இராஜ்ய காரியங்களை ஊக்கத்துடன் செய்து முடிப்பதிலேயே அதன் (ஜனங்களின் சுகத்தின்) இரகசியம் இருக்கிறது. பொது ஜன சுகத்தை நாடுவதைவிட மேலான காரியம் ஒன்றுமில்லை.

இவ்வளவு கஷ்டம் நான் ஏன் எடுத்துக் கொள்கிறேன்? பிரபஞ்சத்திலுள்ளவைகளுக்கு நான் செய்யவேண்டிய கடனைத்தீர்க்கவே; அவர்களில் சிலரை இவ்வுலகில் நான் சுகமாக வைக்கலாம்; மறு ஜன்மத்தில் அவர்கள் ஸ்வர்க்கமடைய முயற்சிக்கலாம். என்னுடைய புத்திரர்களும் பௌத்திரர்களும், ப்ரபௌத்திரர்களும், மிகவும் அதிகமான கஷ்டமின்றிக் கிடைக்க முடியாத பிரஜைகளின்சுகத்தை நாடவேண்டுமென்பதும், இந்தத் தர்ம விளம்பரம் கூறப்பட்டதின் நோக்கம்.

VII

தேவப்பிரியனும் ராஜனுமான பிரியதர்சி எல்லாவிதப் பாஷாண்டர்களும் எல்லாவிடங்களிலும் வசிக்கலாமென்று கஷ்டப்படுகிறார். அவர்கள் எல்லோருக்கும் நம் இந்திரியங்களை அடக்குவதிலும், நடத்தையைச் சீர்படுத்துவதிலுமே லக்ஷியம். ஜனமோ, பல்வேறு லக்ஷியங்களும், பல்வேறு ஆசைகளுமுடையது. அவர்களுள் ஒவ்வொருவரும் போதிக்கப்பட்டவைகளை முற்றிலுமாவது அல்லது கொஞ்சமாவது பின்பற்றி நடப்பார்கள். தானஞ்செய்து வழக்க மில்லாதவர்களிடம் கூட, நற்குணங்களும், செய்ந்நன்றி யறிதலும், தனித்துநிற்கும் ஸகோதரத்வமும் எப்பொழுதும் நல்லது.

VIII

முற்காலங்களில் அரசர்கள் விளையாட்டின் பொருட்டு வெளியே சென்றார்கள். வேட்டையாடுவதும், அதைப்போன்ற மற்ற விளையாட்டுகளும் இவ்வுலகில் அவர்களுக்கு வேடிக்கைகளாக இருந்தன. தேவர்களின் பிரியனும், அரசனாகிய பிரியதர்சியென்னும் நான் என் பட்டாபிஷேகத்திற்குப் பத்து வருஷங்களுக்குப் பிறகு உண்மை ஞானம் அடைந்தேன். பின்வருபவைகளே என் பொழுதுபோக்கிற்கானவை:—பிராமணர்களுக்கும் சிராமணர்களுக்கும் தானம் கொடுப்பதும், அவர்களைப் போய்ப் பார்ப்பதும் வயோதிகர்களைப் பார்ப்பதும், பணத்தைத் தானஞ்செய்தலும், இராஜ்யத்திலுள்ள பிரஜைகளைப் பார்ப்பதும், அவர்களுக்கு மதபோதனை செய்தலும், மதவிஷயங்களைப்பற்றி ஆலோசித்தலுமே. தேவர்களின் பிரியனும், பிரியதர்சியுமான இராஜன் இவ்விதமாகவே தன் புண்ணிய காரியங்களின் பலனை அனுபவிக்கிறான்.

IX

தேவர்களின் பிரியனும், பிரியதர்சியுமான இராஜன் பின்வருமாறு கூறுகிறார்:—ஜனங்கள் நோயுடனிருக்கும்போதும், புத்திரன் அல்லது புத்திரியின் விவாகத்தின்போதும், மகப்பேறு பெறும்போதும், பிரயாணஞ் செய்யும்போதும் பல விரதங்களை அனுஷ்டிக்கிறார்கள். இவைகளிலும், இதைப்போன்ற காலங்களிலும், ஜனங்கள் பலவிதமாக நடக்கிறார்கள். ஆனால் இம்மாதிரியான பல்வேறு உத்ஸவங்கள் பிரயோஜன மில்லாதவை. ஆனால் இம்மாதிரி உத்ஸவங்களைக் கொண்டாடுவதனால் யாதொரு பிரயோஜனமுமில்லாதபோதிலும், அவைகளைக் கொண்டாடுவது வழக்கம். ஆனால் தர்மத்தைக் கைப்பற்றி நடப்பதோ ஸர்வோத்கிருஷ்டமானது. அடிமைகளிடமும், சேவகர்களிடமும் அனுதாபமும், உறவினர்களிடமும், ஆசிரியர்களிடமும் மரியாதையும் சர்வோத்கிருஷ்டமானவை. ஜீவஜந்துக்களினிடம் கருணையும், பிராமணர்களுக்கும் சிராமணர்களுக்கும் தானஞ் செய்தலும் ஸர்வோத்கிருஷ்டமானவை. இவைகளையும், இவைபோன்ற செயல்களையுமே நான் தர்மானுஷ்டானம் என்று கூறுகிறேன். தகப்பனாவது, புத்திரனாவது, ஸகோதரனாவது உபாத்தியாயராவது சொல்லவேண்டியது என்னவெனில்:—இதுவே உத்தமமானது, இதுவே முக்தியடையும் வரையில் அனுஷ்டிக்கவேண்டிய விதி. பிச்சை யளிப்பது உத்தமமானது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பட்டுக்கு அழுவார் பணிக்கு அழுவார் வையகத்தில பாகுக்கு அழுத பாரதத்தைக் கண்டதில்லை.

X

தேவர்களின் பிரியனான பிரியதர்சிராஜன் தன் தர்மத்தைக் கைக்கொண்டு, அதன்படி அவன் பிரஜைகள் இப்பொழுதும் பிற்காலத்திலும் நடப்பதைத் தவிர மேலான கீர்த்தியும், பெருமையும் இல்லையென நினைக்கிறான். தேவர்களுக்குப் பிரியனான பிரியதர்சிராஜன் தேடும் கீர்த்தியும், புகழும் இதுவே. இனி வரும் ஜன்மத்தில் கிடைக்கும் பலன்களை உத்தேசித்தும், நிலையற்ற ஜன்மத்தினின்றும் நீங்கும்படிக்குமே தேவர்களுக்குப் பிரியனான பிரியதர்சிராஜனின் காரியங்களெல்லாம் நடத்தப்படுகின்றன. ஏனென்றால், நாசமுள்ள இவ்வாழ்வு தீமை நிறைந்தது. எல்லா வஸ்துக்களினின்றும் பாசத்தை நீக்க, முயற்சி செய்தாலொழிய இது பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் மிகவும் கஷ்டமான காரியம். இதைச் செய்வது முக்கியமாக உயர்ந்த ஸ்திதியிலுள்ளவர்களுக்கு மிகவும் கஷ்டமான காரியம்.

XI

தேவர்களுக்குப் பிரியனான பிரியதர்சி ராஜன் பின்வருமாறு கூறுகிறார்.

மததானத்தைப் போலவும், தர்மத்தினுடன் அந்நியோந்நியத்தைப்போலவும், மததர்மத்தைப் போலவும், மதத்தின் உறவைப் போலவுமுள்ள தானம் வேறு கிடையாது. பின் வருவது எல்லாராலும் கைக்கொள்ளப்படவேண்டும். அடிமைகளிடமும் வேலைக்காரர்களிடமும் அனுதாபமும், தகப்பனுருக்கும் தாயாருக்கும் கீழ்ப்படிதலும், நண்பர்கள் தோழர்கள் உறவினர்கள் சிராமணர்கள் பிராமணர்கள் முதலியவர்களுக்குத் தானமும், ஜீவஜந்துக்களின் உயிருக்குக் கருணையும், தகப்பனார், அல்லது புத்திரன், அல்லது சகோதரன், நண்பன், தோழன், அல்லது அயல் வீட்டுக்காரன் இவர்கள்—இதுவே (முற்கூறியதே) புண்ணியமானது, இதையே செய்யவேண்டும் என்று சொல்லவேண்டும். இதைச்செய்ய முயற்சிசெய்வதில், இவ்வுலகத்திலும், அடுத்த ஜன்மத்திலும் புண்ணியத்தின் பலனடைகிறான். மதத்தின் (பௌத்த தர்ம) தாரணத்தினால் அளவற்ற புண்ணியம் உண்டாகின்றது.

XII

தேவர்களின் பிரியனான பிரியதர்சி ராஜன், ஸன்யாஸிகளாயினும் ஸரி, க்ருஹஸ்தர்களாயினும் ஸரி, எந்த மதத்தினராயிருந்தாலும் மரியாதை செய்கிறார். அவர்களுக்குத் தர்மம் செய்வதாலும், வேறுவிதமான தானங்கள் செய்வதாலும் அவன் பிரீதிசெய்கிறான். ஆனால் தேவப்பிரியன், அவர்களின் நற்குணங்களை விருத்திசெய்ய முயற்சிசெய்வதே மேற்கூறிய தானதருமங்களைவிட மேலானதென்று நினைக்கிறான். வெவ்வேறுமதங்களைக் கைக்கொள்பவர்களிடம் நற்குணங்களும் மாறுபடுகின்றன வென்பது உண்மையே. ஆனால் அவைகளுக்கெல்லாம் பொதுவானவை உண்டு.—அவை பேச்சில் சாந்தமும், ஸரி நிலையுமாகும். உதாரணமாக, ஒருவன் தன் மதத்தினரையே புகழ்ந்து, மற்றவர்களை இகழலாகாது; காரணமின்றி மற்றொரு மதத்தினரை இகழ்ந்து பேசாமல், அவரவர்களுக்குத் தகுந்த மரியாதையை சமயம் வாய்த்தபோது செய்யவேண்டும். இம்மாதிரி செய்ய முயற்சிப்பதால், மற்றவர்களுக்கு நன்மை செய்யும்போது, தன் மதத்தின் க்ஷேமத்தை விருத்திசெய்கிறான். இதற்கு வேறாக முயற்சி செய்வதனால், ஒருவன் தன் வகுப்பினருக்கு நன்மை செய்யாததோடு, பிறருக்கும் தீமையே செய்கிறான். எவனொருவன் தன் வகுப்பின்மீது அபிமானமுள்ளவனாய், அதை விருத்திசெய்யும் பொருட்டு, தன் வகுப்பைப் புகழ்ந்து, பிற வகுப்புகளை இகழ்கிறானோ அவன் தன் வகுப்பைக் கெடுக்க முரட்டுத்தனமாய் வேலைசெய்கிறான். ஆகையால் ஒவ்வொருவருடைய கொள்கைகளையும் நம்பி, அலக்ஷியஞ் செய்யாது ஒத்து நடப்பதே புண்ணியமெனப்படும். தேவர்களின் பிரியனின் ஆசையென்னவெனில், எல்லா மதத்தினரும் தருமத்தை அறியவேண்டுமென்றும், சுத்தமான கொள்கைகளைக் கைக்கொள்ளவேண்டு மென்பதே. தானங்களையும், வெளி ஆசாரங்களையும்விட நற்போதனைகளையும், எல்லா மதவகுப்பினருக்கும் பரஸ்பர விசுவாசம் உண்டாகவேண்டுமென்ற ஆசையையுமே தேவர்களின் பிரியன் முக்கியமாகக் கருதுகிறார் என்று ஜனங்கள் எம்மதத்தினராயினும் சொல்லவேண்டுமென்றெண்ணுகிறார். இந்த நோக்கத்துடன்தான், தர்மபரிபாலகர்களும், ஸ்திரீகள் மேற்பார்வைக்காரரும், பரிசோதகர்களும், மற்ற உத்தியோகஸ்தர்களும் உழைப்பது. என் மதத்தின் அபிவிருத்தியும், அந்த மதத்தினாலுண்டான நன்மைகளால் அதன் உயர்வுமே அதன் பலன்.

பட்டுப் புடவை இரவல் கொடுத்து மணை எடுத்துக்கொண்டு திரிவதுபோல.

XIII

தேவர்களின் பிரியனான பிரியதர்சியால் ஜயிக்கப்பட்ட கலிங்க இராஜ்யம் மிகப் பெரிது. ஆயிரக்கணக்கான ஜனங்கள் அடிமையாக்கப்பட்டனர். ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். தேவர்களின் பிரியனான பிரியதர்சி, கலிங்கத்தை ஜயித்த பிறகு, தர்மத்தின் பற்று வைத்துக்கொண்டு, தர்மத்தின்மீது பக்தி கொண்டார். தர்மத்தின்மீது மிகுந்த ஆவல் கொண்டார். தர்மம் பரவும் விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொண்டார். கலிங்கத்தை ஜயித்ததால் தேவர்களின் பிரியனுக்கு இவ்வித வருத்தம் உண்டாயிற்று. எனக்குக் கீழிராத தேசத்தை, தேவர்களின் பிரியனான நான் ஜயித்ததால், அத்தேசத்து ஜனங்களின் கொலைகளுக்கும், அவமானங்களுக்கும், அடிமையாக்கினதற்கும் மிகவும் வருத்தப்படுகிறேன். ஆனால், தேவர்களின் பிரியன், அறிந்து மிகவும் வருத்தப்பட்டது கீழேகூறப்பட்டதற்கே. பிராமணர்கள் அல்லது சிராமணர்கள், ஸந்நியாசிகள் அல்லது கிருஹஸ்தர்கள் எங்கும் வசிக்கிறார்கள். அதிகாரிகளுக்கு மரியாதையும் தகப்பனுருக்கும் தாயாருக்கும் கீழ்ப்படிதலும், சிநேகிதர்களிடமும், தோழர்களிடமும், உறவினர்களிடமும் அன்பும், ஸேவகர்களிடம் அபிமானமும், அன்பினால் ஓரே நிலைமையும் அவர்களிடம் காணப்படுகின்றன. இவ்விதமான ஜனங்கள், முரட்டுத்தனத்திற்கும், கொலைக்கும் இலக்காயிருப்பதோடு, அவர்களுக்கு மிகவும் வேண்டியவனைவிட்டுப் பிரிக்கப்படுவதற்கான நிலைமையிலிருக்கிறார்கள். அவர்களைத் தனியாக இரக்ஷிப்பதனால், அபாயத்தினின்று அவர்கள் தப்பினபோதிலும், அவர்களுடைய சிநேகிதர்களும் அறிமுகமானவர்களும், தோழர்களும், உறவினர்களும் நாசமடைகிறார்கள். இந்த விதமாகவும் அவர்கள் கஷ்டபபட வேண்டியதா யிருக்கிறது. தேவர்களின் பிரியனான நான் இவ்விதமான அநீதியான மூர்க்கச் செயல்களையெல்லாம் கண்டு மிகவும் வருத்தப்படுகிறேன். பிராமணர்கள் சிராமணர்கள் ஆகிய இவர்களைப்போன்ற மனிதர்களை அறியாத தேசமில்லை. ஏதாவது ஒருவிதமான மதத்தை (தர்மத்தை)க் கைக்கொள்ள இடம் தேசத்திலெங்குமில்லை. கலிங்கத்தில் பலர் மூழ்கி இறந்தும், நிலைகுலைந்தும், கொலைசெய்யப்பட்டும், அடிமைகளாக்கப்பட்டும் போனதினாலேயே தேவர்களின் பிரியன், இதைப்பற்றி இப்பொழுது மிகவும் அதிகமாக வருத்தப்படுகிறார். * * * * * * *

ஜீவன்களுக்கு க்ஷேமமும், உயிருக்கு மதிப்பும், நடத்தையில் சாந்தமும் அன்புடைமையும் வேண்டுமென்று தேவர்களின் பிரியன் இச்சிக்கிறார். இதையே தருமத்தின் (மதத்தின்) வெற்றி என்று தேவர்களின் பிரியன் நினைக்கிறார். தன்னுடைய இராஜ்யத்திலும், அநேக யோசனைக்குள் ளடங்கியிருக்கும் இராஜ்ய எல்லைகளிலும் இவ்வித மதவெற்றிகளிலேயே தேவர்களின் பிரியன் சந்தோஷிக்கிறார். யவனராஜனான ஆண்டியோகஸ், அன்டியோகஸிற்கு அப்பாலுள்ள நான்கு அரசர்கள், டாலமி, ஆன்டிகோனஸ், மாகாஸ், அலெக்ஸாண்டர் ஆகிய இவர்களுக்குள்ளும், தெற்கே சோழர்கள், தாம்பிரபரணி வரையில் பாண்டியர்கள், மற்றும் ஹேமராஜ விஸ்மவஸி ஆகிய இவர்களுக்குள்ளும், கிரேக்கர்கள், காம்போஜர்கள், நிபாசர்கள், நாகபந்திகள், போஜர்கள், பிதேனிகர்கள், ஆந்திரர்கள், புலிந்தர்கள் ஆகிய இவர்களுக்குள்ளும், எங்கும் தேவர்களின் பிரியனுடைய தர்மபோதனையை அனுஸரித்து நடக்கிறார்கள். தேவர்களின் பிரியனின் தூதர்கள் எங்கே அனுப்பப்பட்டார்களோ, அங்கே தேவப்பிரியனின் ஏவலால் போதிக்கப்பட்ட மதக்கடமைகளை அறிந்து, அந்த தர்மத்தின் படியும், அதன் போதனைகளின்படியும் நடப்பதோடு இனிமேலும் நடப்பார்கள். * * * இவ்விதமாக, வெற்றி நாலாபக்கங்களிலும் பரவப்படுகிறது. நான் அளவிலா ஆநந்த மனுபவித்தேன்—தருமத்தின் வெற்றி இம்மாதிரியான ஆனந்தத்தைத் தருகின்றது. உண்மையைக் கூறுமிடத்து, இவ்வாநந்தம் இரண்டாவது விஷயமே; வரும் ஜன்மத்தில்கிடைக்கும்பலன்களிடத்துத்தான் தேவர்களின் பிரியன் மிகுந்த மதிப்பு வைக்கிறார். இந்த எண்ணத்துடனும், நமதுபுத்திரர்களும் பௌத்திரர்களும், புதிதாக இன்னுமொரு வெற்றி அவசியமென்று நினைக்காதிருக்கும்படி இந்தத் தர்மசாஸனம் வெட்டப்பட்டிருக்கிறது; (இது வெட்டப்பட்டது ஏனெனில) அவர்கள் (என்புத்திரர்கள், பௌத்திரர்கள்) வாளினால் (போரில்) கிடைக்கும் வெற்றி, வெற்றியென்னும் பேருக்கு அருக

பட்டும் பட்டாவளியும் பெட்டியில் இருக்கும், காற்காசுக் கந்தை ஓடி உலாவும்.

மில்லை என்று நினைக்கும்பொருட்டே; அதில், நாசமும், முரட்டுத்தனமுமின்றி வேறொன்றுமில்லை என்றறியும் பொருட்டே; தர்ம ஜயத்தைத் தவிர வேறொன்றையும் ஜயமென்று நினைக்காம லிருக்கும்படிக்கே; இவ்விதமான வெற்றிகள் இவ்வுலகிலும், அடுத்த லோகத்திலும் மதிப்புள்ளவை; தர்மத்திற்கு இவ்வுலகிலும், அடுத்த லோகத்திலும் மதிப்பிருக்கின்றமையால், அவர்கள் தர்மத்திலேயே சந்தோஷமனுபவிக்கட்டும். XIV.

தேவர்களின் பிரியரான பிரியதர்சி ராஜரால், இச்சாஸனம் வெட்டப்பட்டது. இது கொஞ்சம் சுருக்கமாயும், கொஞ்சம் சாதாரணமாயும் கொஞ்சம் விவரிக்கப்பட்டுமுள்ளது. நமது இராஜ்யம் மிகவும் விஸ்தாரமாயிருப்பதாலும், அதிகமாக வெட்டச் செய்திருப்பதாலும், இன்னமும் செய்யப்போவதாலும், எல்லாம் (ஒன்றோடொன்று) சேர்க்கப்படவில்லை. சில குறிப்புகளை (நீதிகளை) ஜனங்களால் அனுசரிக்கப்பட வேண்டுமென்று நான் முக்கியமாகக் கருதுவதால், அவைகள் அடிக்கடி திருப்பிக் கூறப்பட்டிருக்கின்றன. நகல்களில் பிழைகளிருக்கலாம்—கொஞ்சம் குறைக்கப்பட்டிருக்கலாம், அல்லது தப்பான அர்த்தம் கொள்ளப்பட்டிருக்கலாம். இதெல்லாம் வெட்டுபவனால் வெட்டப்பட்டன.

கிராம ஐக்கியம்

RURAL CO-OPERATION

(45-ம் பக்கத் தொடர்ச்சி)

நாம் எவ்வளவு படித்திருந்தபோதிலும், கிராமத்தார்கள் அனைவரும் இந்த ஐக்கியத்தின் பெருமையைப் புத்தகத்தின் மூலமாய் அறியும்படி செய்வது கஷ்டமான காரியம். புராதன வழிகளில் சென்றுகொண்டிருக்கும் குடியானவர்களையும் நாட்டுப்புறத்தார்களையும் திடீரென்று புது வழிகளில் பரீக்ஷை செய்யும்படி தூண்டுவது அசாத்தியம். ஆனால் மதத்தின் மூலமாகவாவது, தெய்வ பக்தியின் மூலமாகவாவது அவர்களை அணுகினால், நாம் சொல்வதை அவர் அங்கீகரிப்பாரென்பது திண்ணம். இந்தியாவில் தெய்வபக்தி ஒவ்வொரு மனிதனுடைய செய்கைகளையும் எவ்வளவுதூரம் தூண்டுகிறதென்று எல்லாருக்கும் தெரியும். ஆனதுபற்றி நம் புது அபிப்பிராயங்களை இந்த மார்க்கமாகத்தான் அவர்கள் மனத்துட் செலுத்தவேண்டும். கிராமவாசிகள் "ஐக்கியத்தின்" குணத்தை அறிந்தாலன்றி, கிராமம் முன்னுக்கு வரமாட்டாது. கிராமத்திலிருந்தே சீர்திருத்தங்கள் நாடு முழுதும் பரவவேண்டியதாகையால், கிராமங்களைச் சீர்திருத்தாவிடின், நம் தேசம் முன்னுக்கு வருவது அசாத்தியம். ஆகவே, கிராம தேவதையின் வர சக்தியிலும், தயாள குணத்திலும் நம்பிக்கையுள்ளவர்களை சக்திக்கேற்ற சந்தா கொடுக்கச் செய்யவேண்டும். சுமார் ஒரு ஏகருக்கு ஒருபடி வீதம் கொடுத்தாற்போதும். பலதுளி பெருவெள்ளம். இந்தச் சிறு சந்தாக்களைக்கொண்டே ஒரு களஞ்சியம் முழுவதும் தானியம் நிரப்பிவிடலாம். இந்த முதலைக்கொண்டு கோவிலில் பழுதுபார்ப்பதற்காகவும், சீர்திருத்தங்கள் செய்வதற்காகவும் செலவழிப்பதாகச் சொல்லி, சேகரிக்க ஆரம்பம் செய்யவேண்டும். இக்களஞ்சியத்தினின்றும், விதைக்கு அவஸ்தைப்படும் ஏழைக் குடிகளுக்கு உதவிசெய்யலாம். வட்டி வாங்குவதற்குப் பதிலாக, ஒருபடி கடன் வாங்கினால் ஒன்றரைப்படியாக திருப்பிக்கொடுக்கவேண்டுமென்ற ஏற்பாட்டின்பேரில், கடன் கொடுத்தால், குடிகளுக்குப் பாரமாய்த் தோன்றாது. கோவிலுக்குக் கொடுத்துக் குறைந்து போகாதென்ற நம்பிக்கை அவர்களுக்குப் பூரணமாயிருக்கின்றது. மிகுதியாயிருக்கும் தானியத்தைப் பூஞ்சக்காளம் பூத்துப்போகாமல் விற்றுப் பணமாக மாற்றிக்கொண்டால் அதிலிருந்து கோவில்நிதியென்று ஒன்று ஏற்படுத்தலாம். பணத்திற்காகக் கஷ்டப்படும் உழைப்பாளிகளுக்கும், விவசாயிகளுக்கும், சொல்ப வட்டிக்கு இதைக் கடன்கொடுத்து உதவிபுரியலாம். இந்த ஆலயநிதியைக் கொண்டே பொது விஷயத்திற்கு அவசியமாக வேண்டிய சாதனங்கள் செய்யலாம். உதாரணமாக, குளங் குட்டைகள் வெட்டவும், வாய்க்கால்களில் தண்ணீர் கொண்டுவந்து நிலங்களுக்குத் தண்ணீர்

பணக்காரன்பின்னும் பத்துப் பேர், பயித்தியக்காரன்பின்னும் பத்துப் பேர்.

பாய்ச்சவும், இரஸ்தாக்களை ஏற்படுத்தவும், இந்த கோயில்நிதியை உபயோகப்படுத்தலாம். இவைகளினால் பிரயோஜனமடையும் மிராசுதார்களையும், குடிகளையும் ஏதாவது அதிக உதவிபுரியும்படி கேட்டுக்கொள்ளலாம்.

இந்தக் கிராமவாஸிகளைப் போன்ற அனுபோகஸ்தர்கள் கிடையாது. "ஐக்கியம்" கணக்கிடமுடியாத நன்மை விளைவிக்கும் என்பதை மட்டும் ஐயமறத் தெரிந்துகொண்டால், அதை ஒருபோதும் கைவிடமாட்டார்கள். இலாபத்தில் கண்ணும் கருத்துமுண்டு. வேதாந்தம் பேசுவது ஒருபக்கமிருந்தாலும், காசில் கருத்தும், இச்சையும் உண்டு. கையைக் கடிக்கும் வேலையை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அநுபோகத்தில் எது நன்மை விளைவிக்கிறதோ அதைக் கெட்டியாய்க் கைக்கொள்வார்கள். இந்தப் புதிய மார்க்கம் விருத்திக்கு வரவேண்டிய சாதனங்களை யாதொரு தடையுமின்றிச் செய்வார்கள்.

இது நிற்க, இந்த ஐக்கியமென்னும் அபிப்பிராயத்தை இன்னும் எத்தனை விஷயங்களில் உபயோகப்படுத்தி, ஜயமும் நன்மையும் அடையலாம்! சாதாரணமாகப் போக்குவரவுக்குரிய சாதனங்கள் இந்தியாவில் போதாது. பெரிய பெரிய இருப்புப்பாதைகளிருந்தும், அந்தப் பாதைகளின் மீதிருக்கும் ஸ்டேஷன்களுக்கும், சுற்றுப்புறக் கிராமங்களுக்கும் சரியான ரஸ்தாக்கள் கிடையாது. ஏதோ வயல்களில் குறுக்கே அப்போதைக்கப்போது கோடையில் பாதை செய்துகொள்ளுகிறார்கள். மழைகாலம் வந்தால் அதுவும் அசாத்தியமாகிவிடுகிறது. மாரிகாலத்தில், உளையில் அகப்பட்டுத் தத்தளிக்கும் மாடுகளும், வண்டிகளும் சாதாரணக் காட்சியாகிவிட்டது. இந்த விஷயத்தில் கிராமத்தார் என்ன செய்யவேண்டுமென்று யோசிப்போம். அவர்கள் லோகல்பண்டு இஞ்சினியர் அல்லது டிஸ்டிரிக்ட் போர்ட் அக்கிராஸனாதிபதிக்கு எழுதலாம். இவ்வாறு மனுக் கொடுத்தால், காரியம் உடனே சித்தி பெறுகிறதில்லை. இரண்டு மூன்று மாதகாலம் விண்ணப்பம் கவனிக்கப்படாமலே குமாஸ்தாவின் அறையில் தூங்கலாம். அப்படிக்கல்லாது உடனே பைசல் பண்ண எடுக்கப்பட்டபோதிலும், தற்சமயம் பணத்தட்டாயிருக்கிறதென்ற சாக்கு வெகு எளிதில், அதிகாரிகள் வாயில் வந்துவிடும். தாமதத்தைப் பூர்த்திசெய்யச் சில வேளைகளில் நிரம்பக் காலமும், ரூபாயும் செலவழிய, அந்த ஸ்தா அத்தியாவசியமா என்று ஆராய, ஒரு அதிகாரியை அனுப்பிவிடுவார்கள். இந்தமாதிரி யெல்லாம் காலதாமதம் ஆகாதிருக்க ஒரு உபாயமுண்டு. அஃதாவது, கிராம மிராசுதார்களும், குடிகளும் சக்திக்கேற்ப, சந்தாக் கொடுத்து, ஜில்லா போர்டாரின் செலவில் பாதி ஒத்துக்கொள்ளுவதாகத் தெரிவிப்பின், கவர்ன்மெண்டார் உடனே நம் வேண்டுகோளுக்கிணங்குவார்கள். பணமாகக் கொடுக்கச் சக்தியில்லாவிட்டால் அந்த ரஸ்தாவைப் போட எத்தனை கூலியாட்கள் வேண்டுமோ அத்தனை பேர்களோ, அல்லது அதில் பாதி ஆட்களோ, கூலியின்றி வேலைசெய்து தருவதாகக் கூறின், அதுவும் தகுந்த தூண்டுதலாகும். மேலும் கிராமத்தின் தேகசௌகரியத்திற்காக வேண்டிய ஸாதனங்களும், கிராம வித்தியாபிவிருத்திக்கு வேண்டிய ஏற்பாடுகளும் ஆலய நிதியைக்கொண்டு செய்யலாம்.

நகரங்களில் சரீர சௌகரியங்கள் எவ்வளவு தூரம் கவனிக்கப்படுகிறதென்பதும், எவ்வளவு நல்ல காற்றும், நல்ல ஜலமும், நல்ல பண்டங்களும் கிடைக்கிறதென்பதும் எல்லோரும் அறிந்த விஷயமே. எங்கு பார்த்தாலும் சாக்கடையும் குப்பையும், சந்தும் பொந்துமாயிருக்கின்றன. ஒவ்வொரு அடி நிலத்தையும் வியாபாரிகள் கடைவைக்க வாங்கிவிடுகிறார்கள். நல்ல காற்றும், சுத்த ஜலமும் கிடையாது. ஏதாவது நூதனமான வியாதிகள் புதிது புதிதாய் விளைந்துகொண்டேயிருக்கின்றன. "டாக்டர்களும்" சதா அவைகட்கேற்ற மருந்து கண்டுபிடித்துக்கொண்டே வருகிறார்கள். "புலி பாதி, கிலி பாதி" ஆக்கிவிடுகிறார்கள். ஜனங்கள் நிர்ப்பயமாய் நடக்க வொட்டாமல், முழ உயரம் புழுதியைக் கிளப்பிக்கொண்டு மோடார் வண்டிகளும் ஜட்கா வண்டிகளும், மாட்டுவண்டிகளும் குறுக்கேயும் நெடுக்கேயும் ஓடிக்கொண்டேயிருக்கின்றன. இரவு பகல் வித்தியாசமின்றி, இயந்திர சாலைகள் ஏராளமான புகையை வெளிவிட்டு நல்ல காற்றை அசுத்தம் செய்கின்றன. தெருவிலிருக்கும் சந்தடியும், கூச்சலும் மனத்திற்கு அரை நாழிகையேனும் அமைதியில்லாமலடித்துவிடுகின்றன.

பணத்துக்கு ஒரு அம்புகொண்டு பாழில் எய்கிறதுபோல்.

மேலும் பண்டங்களோ அநியாய விலைக்கு விற்கப்படுகின்றன. கால்படி பாலில் அரைப்படி ஜலம் வார்த்து, ரூபாய்க்கு இரண்டு படி வீதம் விற்றுவருகிறார்கள் புண்ணியவான்களான இடையர்கள். சந்தோஷமாய், சுசிருசியாய் நீராட அருவிகளும் குட்டைகளும் கிடையா. இவைகளெல்லாம் இந்திய பட்டணங்களோடு நில்லாமல், கிராமங்களையும் பீடிக்க ஆரம்பிக்கின்றன. ஈசுவர கிருபையால் இவைகள் அதிகமாக நம் கிராமங்களைப் பாதிக்கவில்லை. இன்னும் நம் கிராமத்தார், சரீர சௌக்கிய சாஸ்திரத்தை நன்கு பயின்று ஏதோ கொஞ்சமுள்ள குறைகளையும் நீக்கவேண்டும்.

நம் ஸ்திரீகள் இதுவரையில் சுகாதாரத்தை அறியாதிருந்தது போதும். நம் இந்தியா முன்னுக்கு வரவேண்டுமானால், நம் ஸ்திரீகள் இனி இந்தச் சாஸ்திரத்தை நன்கு கற்று, புத்திரர்களை நல்ல வழியில் வளர்க்கவேண்டும். ஆலயத்தில் செவ்வாய்க்கிழமைகளிலும் வெள்ளிக்கிழமைகளிலும், சுகாதார சாஸ்திரத்தில் அவர்கட்குப் பாடம் கற்பிக்க ஏற்பாடு செய்யலாம். எழுதவும் படிக்கவும், தம் தம் கணக்குகளைச் சரிவரப் பார்த்துக்கொள்ளவும் கற்பிக்கவேண்டும். தேசச் சரித்திரத்தைச் சரியான வழியில் போதித்து மதாபிமானத்தையும் தேசாபிமானத்தையும் உண்டுபண்ணவேண்டும். ஒவ்வொரு வருணத்தாருக்கும் ஒவ்வொரு பள்ளிக்கூடம் வைத்தால் மிகவும் நலமாயிருக்கும். பகலில் வேலை செய்பவர்களுக்கு உபகாரமாக இரவுப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தவேண்டும். கிராமத்தில் நசித்துக்கொண்டுவரும் கைத்தொழில்கள் திரும்பப் பிழைத்து வளருமாறு, அந்தக் கைத்தொழில்களைக் கற்பிக்க ஏற்பாடு செய்யவேண்டும். இயந்திரம் வந்துவிட்டதனால் கைத்தொழில்கள் நசிக்கவேண்டுமென்பது அவசியமல்ல. உதாரணமாக, பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்விட்ஜர்லாண்ட் முதலிய தேசங்களிலும் ஜப்பானிலும், சிறிய கைத்தொழில்கள் விருத்தியாய்க்கொண்டே வருகின்றன. இவைகளால் எத்தனையோ ஜனங்களுக்கு ஜீவனத்திற்கு வழியேற்படும். ஆகவே, அத்தொழில்களில் பிரியமுள்ளவர்களைத் தயார் செய்யவேண்டும். இவைகளெல்லாம், ஐக்கியமின்றிக் கிராமத்தில் ஆகமாட்டா.

கிராமத்தில் இன்னும் சில விஷயங்களிலும் ஐக்கியத்தைக் கொண்டு சீர்திருத்தங்கள் செய்யலாம். தற்காலத்தில் கிராமத்தில் ஒழுங்கு கொஞ்சம் தவறியே நடந்துவருகிறது. இவை மேல்நாட்டின் கொள்கைகளை முழுமையும் சற்றேனும் யோசனையின்றி அனுசரிக்க யத்தனிக்கும் அவசரத்தின் பலனாகும். இப்பொழுது கிராமங்களில் கட்டுப்பாடுகள் குறைந்துவருகின்றன. தந்தலையாட்டம் தலைக்கு மேலாகவிருக்கிறது. பத்துப்பேர்கள் சேர்ந்து வாழ்வதும், பெரியோர்கள் சொற்படி சிறியோர்கள் நடப்பதும் குறைந்துவருகின்றன. இதற்கு இங்கிலீஷ் படித்த வாலிபர்களே முக்கால் பங்கு காரணமாவர். ஊருக்கு விடுமுறை காலங்களில் போனால், கிராமத்தை எவ்வாறு சீர்திருத்துவது என்ற எண்ணங்களில் புத்தியையும், யோசனையையும் செலவழிக்காது, காலையில் காப்பி குடித்துவிட்டு, கால்மேற் கால்போட்டுக்கொண்டு, காரியத்துக்கு உதவாத இங்கிலீஷ் நாவல்களை வாசித்துக்கொண்டும் அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்களை "அன் எஜுகேடட் பீபில்" என்று ஏளனம் செய்துகொண்டும், வீண்காலங் கழிக்கிறார்கள். இவ்வாறு செய்வதைவிட, அவரவர்கள் கற்ற வித்தையையும், சுயபுத்தியையும், கிராமத்தை முன்னுக்குக் கொண்டுவரவோ, படியாதவர்க்குக் கற்பிக்கவோ, ஏழைகளின் துன்பங்களை நிவர்த்திக்கவோ உபயோகித்தால், எவ்வளவு நலமாயிருக்கும். இப்பொழுது கிராமவாசிகளின் வாழ்வை உற்றுப்பார்த்தால் சோம்பேறிகள்போலக் காணப்படுகிறார்கள். காலையில் வயலைச் சுற்றிவருவதும், பகலில் பூஜை முடித்து உண்பதும் உறங்குவதும், அரட்டை யடிப்பதும், மாலையில் மாட்டைக் குளிப்பாட்டித் தீனி போடுவதுமாகக் காலங்கழிக்கிறார்கள். எந்த வழியில் என்ன சீர்திருத்தங்கள் செய்யலாம் என்று புத்தியையும், யோசனையையும் செலவழிப்பவர் மிகச்சிலர். அப்படியோசித்த வழியை அனுபோகத்துக்குக் கொண்டுவருபவர் நூற்றில் ஒருவர். போதாக்குறைக்கு அற்பச் சண்டைகளைப் ப்ரிவி கௌன்ஸில் வரையும் கொண்டுபோய் விடுகிறார்கள். கிராமத்தில் கக்ஷிப் பிரதிகக்ஷி உண்டுபண்ணி, கிராமத்தை இரண்டாகவும் பிரித்துவிடுகிறார்கள். கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களை உபசரிப்பதிலும், அவர்களுக்கு "சப்ளை" செய்வதிலும்

அவர்களின் பிரியத்தைச் சம்பாதிப்பதிலும், போட்டி போடுவதோடு நிற்காமல், தங்கள் கௌரவத்தையும் குறைத்துக் கொள்ளுகிறார்கள். பண்டையகாலம்முதல் விளங்கிவந்த ஆலமரத்தடிப் பஞ்சாயத்தை அலட்சியம் செய்துவிட்டு, உப்புப் பெறாத காரணங்களுக்காகச் சண்டையிட்டுக்கொண்டு தாசில்தாரிடமும், ரெவினியூ உத்தியோகஸ்தர்களிடமும் நியாயத்திற்காக ஓடுவானேன் ?

குறைகளை எடுத்துக் கொஞ்சம் பகிரங்கமாகக் கூறியதற்காக, வியாசத்தைப் படிப்போர்கள் கோபிக்கக் கூடாதெனக் கேட்டுக்கொள்ளுகிறோம். "அழ அழச் சொல்லுவார் தமர், சிரிக்கச் சிரிக்கச் சொல்லுவார் பிறர். புண்ணை மூடிமூடி வைப்பதினால் அது ஆறிவிடுமோ? அதை வெளிப்படையாக்கி ஒரு நல்ல கத்தியினால் அதைக் கீறி, விஷத்தை வெளியெடுத்து ஆற்றினால்தான் நலமாகும். இக்குறைகளை எவ்வழி சீர்திருத்தலாமெனப் பார்ப்போம்.

இந்த ஐக்கிய அபிப்பிராயத்தைப் பூராவாகவும் நம்பி, கூட்டுத்தொழில் செய்வதைக் கைப்பிடித்துக் கொண்டால், ஒவ்வொரு காரியத்திலும் நமக்கு ஜயம் சம்பவிக்குமென்பதற்கு எள்ளளவும் ஐயம் வேண்டுவதில்லை. உயர்ந்த ஜாதி விதைகள் வாங்குவதற்கும், நூதனமாகக் கண்டுபிடிக்கப்பட்ட எருக்களைக் கம்பெனிகளிலிருந்து வாங்குவதற்கும், புதிய கருவிகளையும் இயந்திரங்களையும் உபயோகிப்பதற்கும், நில அபிவிருத்தியின்பொருட்டு விவசாய நிபுணர்களால் குறிப்பிடப்பட்ட பரீக்ஷைகள் செய்துபார்ப்பதற்கும், இந்த ஐக்கியமே தகுந்த உபாயம். விவசாயிகளின் மேம்பாட்டுக் கவசியமான துணைக் கைத்தொழில்களும் ஏற்பாடு செய்யமுடியும். பாய் முடைதல், பால்சாலை ஏற்படுத்தல், நெல்குத்தல், மாவரைத்தல், துணி நெய்தல், எண்ணெய் இறக்கல் முதலிய அலுவல்களினால் அநேக ஜனங்களின் ஜீவனத்திற்கு ஏற்பாடு செய்யலாம். இவைகளுக்கு மூலமாயுள்ள விவசாயத்தையும், இலாபத்தைக் கொடுக்கக்கூடிய தக்க வழிகளில் நடத்திவரலாம். பூமியில் நீடித்து நிறகக்கூடிய சீர்திருத்தங்கள் செய்வதையும், அழியாப் பிரயோகம் செய்வதையும், குளங்குட்டை வெட்டுவதையும் ஒருங்குசேர்த்தால் எவ்வளவோ விமரிசையாய்ச் செய்யலாம். ஜப்பான், பெல்ஜியம், டென்மார்க் முதலிய தேசங்களிலுள்ளோர் சாஸ்திரீயமாக உழவுசெய்வதின் பிரயோசனத்தை நன்கறிந்திருக்கிறார்கள். ஜப்பானில் ஒரு அங்குலம் பூமியைக்கூட வீணாக்குவதில்லை. பாறையின் மீதுகூட ஒரு முழ உயரம் மண்ணைப் பரப்பி விதை தெளித்துப் பயிர்செய்கிறார்கள்.

தோட்டத்தை எவ்வளவு கவலையுடன் பார்த்துக் கொள்ளுவார்களோ அதைவிட அதிக சிரத்தையோடு பார்க்கிறார்கள். நிலத்தில் விவசாய சாஸ்திர நிபுணர்கள் என்னென்ன வழிகள் யூகித்துப் பிரசித்தம் செய்கிறார்களோ அவைகளை உடனுக்குடனே அனுபோகத்துக்குக் கொண்டுவந்துவிடுகிறார்கள். அப்படிச் செய்வதில் "ஐக்கியத்தையே" முக்கிய மார்க்கமாகக் கொள்ளுகிறார்கள். இந்தியாவில் அம்மாதிரி செய்வது அசாத்தியமன்று. மேலும், பொதுநன்மைக்காகச் சண்டை சச்சரவின்றி ஒத்து வேலை செய்வதால் நம்முள்ளிருக்கும் கோர்ட்டு விவகாரம் குறையும். பரஸ்பரம் நல்ல உறவு உண்டாகும். இயந்திரங்களுக்கு மின்சாரம் எவ்வளவு சக்தி ஊட்டக்கூடுமோ அவ்வளவு சக்தியை குடிகளுக்குக் கொடுக்கக்கூடியவை இந்த ஐக்கிய நாணயமும், ஐக்கிய அலுவல்களும். ஐக்கியமென்னும் மாத்திரைக் கோலால் குடியானவர்களின் சகல உபாதிகளையும் நீக்கலாம்.

இதுகாறும் கிராமத்தில் ஐக்கியத்தை எவ்வாறு நாணயத்திற்காகவும், விவசாயத்திற்காகவும் உபயோகிக்கலாமென்று பார்த்தோம். எப்படி இதே அபிப்பிராயத்தை வியாபாரஞ் செய்வதில் உபயோகப்படுத்தலாமென்பதையும் சற்று ஆலோசிப்போம். வியாபாரத்தின் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட ஐக்கிய சங்கங்களுக்கு ஆங்கிலேய பாஷையில் "டிஸ்ட்ரிப்யூடிவ் ஸ்டோர்ஸ்" என்று பெயர். ஜனங்களுக்கு தினசரித் தேவையான பண்டங்களைச் சேகரிப்பதும், நல்ல பொருளாய்ப் பார்த்து வாங்குவதும், கூடியவரையில் குறைந்த விலைக்கு விற்பதும் இச் சங்கத்தின் முக்கியக் கருத்தாகும். கடைவீதியில் நல்ல பண்டங்கள் அகப்படுவது குதிரைக்கொம் பாகிவிட்டது. இப்பீடை கிராமத்தையும் அணுக ஆரம்பித்துக்கொண் டிருக்கிறது. வித்தியாசம் தெரியாதபடிக்கு நல்லதும் கெட்டதும் கலந்து விற்

கப்படுகின்றன. நல்ல நெய்க்குப் பதிலாக, குஸுமா எண்ணெயையும் மலைப் பாம்பின் கொழுப்பையும் கலந்த நெய்யை விற்பனை செய்கிறார்கள் அனதுபற்றி. நல்ல பண்டங்களை நயமான விலைக்குக் கொடுப்பதே, நம் ஐக்கிய சங்கத்தின் உத்தேசமாகும் இவர்கள், கேவலம் இலாபத்திற்காக ஆசைப்பட்டு, சமயத்திற் கேற்றபடி, செட்டி, கோமுட்டிகள் போல் விலையைக் குறைக்கவும் மாட்டார்கள், ஏற்றவுமாட்டார்கள். வாங்கின விலைக்கே கொடுத்து ஜனங்களின் சுகமொன்றையே இலாபமாகக் கருதுவார்கள். மெம்பர்களே வாங்குகிறவர்களானதுபற்றி மேற்பட்ட விலையைச் சொல்லுவாவது • சமயோசிதம்போல் இலாபமடிக்கவாவது இவர்கட்கு அவசியம் எழவில்லை. ஆனால் ஒரேவொரு நிர்ப்பந்தம் மாத்திரம் உண்டு. அஃதாவது பணம் ரொக்கம் கொடுத்தாலொழிய, கடையினின்றும் சாமான்கள் வெளிக்கிளம்ப மாட்டா. இந்தச் சட்டத்தைச் சில சங்கங்களில் அனுசரிப்பதில்லையெனக் கேள்விப்படுகிறோம். அது பிசகென்று தெரிந்தும் அவ்வாறு செய்பவர்களை நாம் மன்னிக்க மாட்டோம். கையிற் காசு கொடுத்து வாங்கினுற்றான், காசின் வருத்தம் தெரியும்; வெகு செட்டாகக் குடித்தனம் செய்ய அது ஹேதுவாகும். முதன்முதலில் இம்மாதிரிச் சங்கம் சென்னைப்பட்டணத்தில் பச்சையப்பன் காலேஜ் ப்ரொபெஸர் ஸ்ரீமான் ராமநாதய்யர், ஸ்ரீமான் T. S. சுப்பிரமணிய ஐயர், ஸ்ரீமான் T. K. ஹநுமந்தராவ் முதலியவர்களால் திருவல்லிக்கேணியில் “ அர்பன் கோஆபரேடிவ் ஸ்டோர்ஸ்” என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்டது. இதை ஆரம்பிக்கும்போது, இச்சங்கம் நன்கு நடைபெறும் விஷயமாக பலத்த சந்தேகம் சிலருக்கிருந்தது. “ஐயா உமக்கு உலக அனுபோகம் ஏதாவது உண்டா? கையில் காசு கொடுத்து இந்தப் பட்டணத்தில் எவனால் குடித்தனம் செய்யமுடியும்?” என்று கேள்வி கேட்டார்கள். கேள்வி கேட்டவர்களே கொஞ்சகாலங்கழித்து இந்த ஐக்கியமெனும் இயக்கத்தைப் பலவிதமாகக் கொண்டாடிப் பிரசங்கம் செய்தார்கள். படித்தவர்கள் இப்படிக் கையில் காசு கொடுத்து வாங்குவதின் பிரயோசனத்தை ஆக்ஷேபனை செய்யாமல் எளிதில் அங்கீகரிப்பார்கள். இதற்குச் சாக்ஷியமாக அநேக நகரங்களில் இந்த “வியாபாரச் சங்கங்கள்” ஏற்பட்டிருக்கின்றன. அவைகள் ஒவ்வொரு கிராமத்திற்கும் பரவவேண்டும். அதுவே நமது கோரிக்கை. கிராமத்துச் சங்கத்தில் உபயோகமற்ற பண்டங்களையும், இலகுவில் ஒவ்வொரு வீட்டிற் கிடைக்கக்கூடிய பண்டங்களையும் விற்பதிற் பிரயோஜனமில்லை. கிரிஸ்டி கம்பெனியார் செய்யும் குல்லாயும், பையானோக்களும் கிராமத்திற்கு வேண்டாம். வியாபாரச்சங்கத்தில் நெல் விற்பது, கொல்லத் தெருவில் ஆணிவிற்கப்போன கதையாகும்.

மேலும் இந்த இயக்கம் சுயராஜ்யத்திலும் நமக்குப் பாடம் கற்பிக்கும். ப்ரொபெஸர் லீ. ஸ்மித் இந்த ஐக்கிய இயக்கமே நமது கதிமோக்ஷத்திற்குக் காரணமாகுமெனப் பலதடவை கூறியிருக்கிறார். இந்த இயக்கம் முன்னுக்கு வரவேண்டுமானால் வாயால் பேசுவதோடு நில்லாமல் தெய்வத்திற்கொப்ப பிரேமையோடு உழைத்துச் சகலருக்கும் இதன் பிரயோசனத்தை அறிவிக்கவேண்டும். தெய்வத்தினிடம் உண்மையாகப் பக்தி வைப்பதுபோல் இந்த அபிப்பிராயத்தின்மீதும் ஆசைவைத்து உழைக்கவேண்டும். படிப்பாளிகளான மிராசுதார்கள் தங்கள் வாணாளைப் பட்டணங்களில் ஆடம்பரமாய்க் கழிப்பதிலும், உத்தியோகங்களில் அமர்ந்து பொருளீட்டி உயர்பதவி அடைவதிலும் ஆசைகொள்ளாமல், தங்கள் குடிகளுக்கும் தங்களைப்போன்ற மிராசுதார்களில் படிப்பில்லாதவர்களுக்கும் தங்கள் வித்தையினாலும் புத்தியினாலும் அனுபவத்தினாலும் தங்களாலியன்றவளவு உதவுவதையே தங்களுடைய பிரதானக் கடமையாகக் கருதவேண்டும். ஒத்துவாழ்வதின் நன்மையைத் தினந்தோறும் சமயம் நேர்ந்தபோதெல்லாம் எடுத்துரைக்கவேண்டும். இவ்வாறு செய்தாலன்றி கிராமங்கள் முன்னுக்கு வருவது அசாத்தியம். நம்முடைய தேசம் அபிவிருத்தியடைவதும் துர்லபம். ஏனெனில், ஐக்கிய சங்கங்களின் உபயோகங்களில் சுயராஜ்யநெறியில் பழக்கிவைப்பது ஒன்றாகும். லீ ஸ்மித் கூறியவாறு, இந்த ஐக்கிய இயக்கமே நம்முடைய கதி மோக்ஷத்திற்குக் காரணமாகும். ஜாக்கிரதையாகப் பணம் செலவழிக்கவும், வரவுக்குத் தகுந்த செலவு செய்யவும்

நமக்குத் தினந்தோறும் பாடம் கற்பித்துக்கொண்டே யிருக்கிறது. சேர்ந்து வேலைசெய்து ஒருங்கே கஷ்ட சுகங்களை அனுபவிப்பதினால், வர்ணாச்சிரம வைரம் குறைந்து நல்லுறவு உண்டாகின்றது. தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளுவதின் பெருமையும் நன்கு விளங்குகிறது. இப்பேர்ப்பட்ட எண்ணத்தைக் கைவிடாது முயற்சியுடன் விருத்தி செய்வதற்கு வேண்டுமான சக்தியையும், புத்தியையும் நமக்கு ஈசனளிக்க வேண்டும். இவ்விஷயத்தில் நாமே நமக்கு உதவிசெய்துகொள்ளவேண்டுமே யன்றி, கவர்ன்மெண்டாது உதவியையாவது அந்நியர் உதவியையாவது எதிர்பார்ப்பது தகுதியன்று. நாமே மீத சாதனங்களைச் செய்துகொள்ள வேண்டும். பசியால் துடிக்கின்றவன் தன் கையால் உணவெடுத்துச் சாப்பிடவேண்டுமே யல்லாது, சோறு பிசைந்து வாயில் ஊட்டுவார்களென்று காத்திருந்தால் பட்டினியாய்க் கிடக்கவேண்டுவதுதான். நம் தேசத்தின்கண் உள்ள குறைகளைத் தீர்க்க சுயமுயற்சிகளே தேவை. யார் தாமாக வேண்டும் பிரயத்தனங்களைச் செய்கிறார்களோ, அவர்களுக்குத்தான் தெய்வம் ஒத்தாசை செய்யும். சோற்றுக்கு இல்லாமற் பறந்த இதாலியக் குடியானவர்களையும், மிராசுதார்கள் உபத்திரவம் சகியாது வீடு வாசல் விட்டோடிய ஐரிஷ் விவசாயிகளையும் இந்த இயக்கம் கரையேற்றிற்றென்றால், நமக்கு இதனால் ஜயமும், சுகமும் உண்டாவதற்குத் தடையுண்டோ? இந்த ஐக்கிய இயக்கம் எவ்வித சுகத்தையும், சாதனத்தையும் அளிக்கத் தவறினால், அது நமது குற்றமேயாம். அந்த அபிப்பிராயத்தின் இயற்கைக் குற்றமன்று. “கடவுளை நம்பிக் கடமை நேர்பிடி” என்பதையே நம் வேத வாக்கியமாகக்கொண்டு, நம்மாலான மட்டும், இந்த அபிப்பிராயத்திற்காக உழைக்கவேண்டும்.

ஆரியமத உபாக்யானம்.—இரண்டு பாகங்களும் ரூ. 1-2-0. ஒவ்வொரு பாகத்திலும் நமது புராணங்களிலிருந்து எடுத்தெழுதப்பட்ட 54 சிறந்த நீதிக்கதைகள் அடங்கி யிருக்கின்றன. ஒவ்வொரு பாகத்துக்கும் அநேகம் அழகிய ஆப்டோன் படங்கள் உண்டு. இவை ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்கவேண்டியவை. எளிய நடையில் எழுதப்பட்டது. துரைத்தனத்தார் அங்கீகரித்தது.

நமது பாகவதர்

OUR BAGAVATAR

கிராமவாசிகளுக்கு நமது பாகவதரை நன்றாய்த் தெரியும். தற்காலத்தில் பாகவதரென்று சொன்னால் முன்னதாகவே ஸன்மானத் தொகையைப் பேசிக்கொண்டு, சரியாய் மூன்று மணி நேரம் ஸங்கீத ஸபைகளில் லௌகிக காலக்ஷேபங்கள் செய்யும் பாகவதர்களையே நம் மனம் நினைக்கத் தொடங்குகிறது. ஆனால், ஆராயுமிடத்தில் ஈசுவர கதாப்பிரஸங்கத்தை ஒரு லாபகரமான தொழிலாகக் கொண்டவர்களுக்கு இந்தப் பெயர் புராதனமாய் வழங்கப்பட்டுவரவில்லை. பாகவதன் என்ற பதத்திற்கு பகவத்பக்தன் என்று பொருள். ஓர் உண்மையான பாகவதர், ஈசுவர பஜனத்திலீடுபட்டவராய் வேறு புருஷார்த்தங்களை நாடுவதில்லை. ஜடவுலகப் பலன்களுக்காகப் பற்பல வேஷம்பூண்டு ஆயுள்ளுளளவும் பந்தயக் குதிரைபோல் ஓடி ஓடிச் சாகும் மானிடக் கும்பலில் இவர் ஒருவரல்ல. இவர் கானலைக் கண்டு தெளிந்த தண்ணீரென்று பிரமிக்கமாட்டார். பணத்தாசையையும் உலகப்பற்றையும் ஒழித்தவர். ஆனாலும் சன்னியாசியல்ல. அவர் ஓர் குடும்பி. அநேகமாய் அவருக்கு சம்சாரம் அதிகமாகவேயிருக்கும். வறுமையும் அவரிடம் குடிகொண்டிருக்கும். உலகத்தில் இது ஸகஜமலலவா? கடவுள், பரீக்ஷிப்பதுபோல் ஏழைகளையே பெரிய குடும்பிகளாய் வைப்பதை நாம் பார்த்திருக்கிறோம். நமது பாகவதருக்குக் குடும்ப பாரம் பெரிதாயும், ஏழ்மை கடுமையாயும் இருந்துகொண்டிருப்பதால் அவருடைய ஈசுவர பக்தி மேலுக்குமேல் பலப்படுகிறது. அவர் பரமாத்மாவிடத்தில் தம்குடும்ப பாரத்தை ஒப்புவித்துவிட்டுச் சிந்தை விடுத்திருக்கிறார். தன்னையே ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்துகொண்டுவிட்டார். தமக்கோர் குழந்தையுண்டானால் கடவுளுக்குத் தம்மால் ஓர் அடிமை கூடினானென்று மகிழ்வார். அவர் தம் குழந்தைகளின் க்ஷேமத்தைக் கோருவதுபோல் ஊராரின் க்ஷேமத்தையும் வேற்றுமையின்றிக் கோருவார். “லோகாஸ்ஸமஸ்தாஸ் ஸுகினோ பவந்து” என்பதுதான் அவருடைய தினசரி பிரார்த்தனை. அவருக்குச் சத்துருக்கள் உண்

டானதில்லை. அவர் பிள்ளைப்பூச்சிபோல் ஒரு ஸாதுவான ஆத்மா. அவரால் யாருக்கும் உபத்திரவம் கிடையாது. யாரையும் அவர் கொடு என்று கேட்பதில்லை. தாம் ஈசுவர பஜனை செய்துகொண்டு வரும்போது யாராவது கூப்பிட்டுக் கொடுத்ததை நன்றியுடன் பெற்றுக்கொள்வார். நமது பாகவதர் மனுவினால் விதிக்கப்பட்ட பிராமண தர்மத்தைத் தவறாமல் அனுஷ்டிப்பவர். பிறரை வருத்தாமல் கிடைத்த பதார்த்தங்களைக்கொண்டு இவர் திருப்தியாய்க் காலக்ஷேபம் செய்கிறார். வருங்காலத்திற்கு உதவும்படி இவர் சேர்த்துவைப்பதில்லை. இவர் தாமரையிலையில் விழுந்த நீர்த்துளிபோல் பற்றற்று உலகவாழ்க்கையில் இருந்துவருகிறார். இவர் வசிக்கும் கிராமமே இவரால் புனிதமாகிறது. பக்தி புகட்டும் திவ்விய கீர்த்தனங்களை இவர் மனமுருகிப் பாடிக்கொண்டு வீதிகளில் வருங்கால் பாமரஜனங்கள்கூடச் சற்று மெய்ம்மறந்து ஈசனை ஸ்மரிக்காம லிருக்கமுடியாது.

நமது பாகவதருக்குச் சுமார் ஐம்பது வயதிருக்கும். அவர் சரீரத்தைச் சலுகையுடன் வளர்க்காதவரானதால் மிகுந்த திடத்தன்மையுள்ளவர். அவர் வைதீக யாசகத்திற்குப் போவதில்லை. ஒருவாறு அவரை வித்வானென்றே சொல்லலாம். மனத்தைச் சன்மார்க்கத்தில் பிரவர்த்திக்கச் செய்ய சாதகமான பாண்டித்தியம் அவருக்கு உண்டு. அதற்கு மேற்பட்ட படிப்பை அவர் விரும்பவுமில்லை. புராணங்களில் அவருக்குப் பரிசயம் அதிகம். கீதையையும் அடிக்கடி பாராயணஞ்செய்வதால் முகஸ்தமாயிருக்கும். தவிரவும், அவர் மிகுந்த ரஸிகர். ஸங்கீதத்தில் நல்ல நிபுணர். அஷ்டபதி பாடுவதில் இவருக்குச் சமானமானவர் கிடையாது. நமது பாகவதர் எப்போதும் சந்தோஷமான முகக்குறிப்புடன் காணப்படுவார். ஸ்ரீகிருஷ்ணனிடத்தில் நாடியிருக்கும் அவர் மனத்தில் துக்கம் என்பது எட்டிப் பார்க்கவும் அஞ்சுமல்லவா?

காலை எட்டுமணிக்குள் தம்முடைய அனுஷ்டான பாராயணங்களை முடித்துக்கொண்டு நமது பாகவதர் உஞ்சவிருத்திக்குப் புறப்படுவார். எவ்வளவு வெயில் காலமாயிருந்தாலும், குடை ஜோடுடன் இவர் வருவதில்லை. ஆனால் தலையில் ஒரு தலைப்பாகை சுற்றப்பட்டு முழங்கால் வரையில் விரிந்து தொங்கும் பட்டுவஸ்திரம் ஒன்றை இவர் தரித்துக்கொண்டிருப்பார். இவரது வலது தோளிலிருந்து ஒரு பித்தளைச் சொம்பு தொங்கிக்கொண்டிருக்கும். இதில்தான் இவர் அக்ஷதையைப் பெற்றுக்கொள்வது. நெற்றியிலும் மார்பிலும் புஜங்களிலும் கட்டுக்கட்டாய் அணிந்து கொள்ளப்பட்ட விபூதியுடனும், கண்டப் பிரதேசத்தில் விளங்கும் பெருத்த ருத்ராக்ஷ மாலையுடனும் நமது பாகவதர் அப்போதே உதயமான சூரியனைப் போல் பிரகாசிப்பார். அவர் ஆத்மானுபவத்துடன் ரஸபரிதமான ஜயதேவஸ்வாமியின் கிருதிகளை, கம்பீரமாயும் இனிப்பாயும் கேட்போர் ஆனந்திக்கும்படி பாடிக்கொண்டு வருவார். லயத்திற் கனுகுணமாய் அவருடைய கையில் "கலீர் கலீர்" என்று சப்தித்துக்கொண்டிருக்கும் ஜாலர் அவர் வரவை முன்னதாகவே தெருவிலுள்ளோருக்குப் அறிவித்துவிடும். இந்தச் சத்தத்தைக் கேட்டவுடன் சிறு பெண்கள் தத்தம் தாய்மார்களால் எடுத்துக்கொடுக்கப்பட்ட அக்ஷதையைப் படியில் ஏந்திக்கொண்டு குதூகலத்துடன் தெருவில்வந்து நிற்பார்கள். நமது பாகவதர் புன்னகையுடன் அவர்களுக்குச் சீக்கிரம் விவாக மாகவேண்டுமென்று ஆசீர்வதிப்பார். அந்தச் சமயத்தில் அச்சிறுமிகள் "தாத்தா பொல்லாத்தனத்தைப் பார்!" என்று முகத்தைச் சுளித்துக்கொண்டு முறுமுறுத்தாலும் மறுநாளும் தவறாமல் தாங்களே அக்ஷதையும் கையுமாய்க் காத்திருப்பார்கள். விருத்தைகளாயிருந்தால் நமது பாகவதரைப் பிரதக்ஷணஞ்செய்து நமஸ்கரித்து பக்தியுடன் அவருக்கு கறிகாய் முதலிய உபகரணங்களையும் கொடுப்பதுண்டு. இப்படி வீதியைச் சுற்றி வரும்போது இவர் சில சமயம் தம்மை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் கிரஹஸ்தர்களிடம் தர்மசாஸ்திரம், பொது நன்மை முதலிய விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டோ அல்லது ஸங்கடமடைந்தவர்களை அனுமோதனம் செய்துகொண்டோ, துக்கிகளைத் தேற்றிக்கொண்டோ சற்று நின்றுவிடுவார். அத்தருணம் பார்த்திருந்து குறும்புள்ள சிறுவர்கள், இவரால் கையிலிருந்து தற்செயலாய்க் கீழே வைக்கப்பட்ட ஜாலர்களை எடுத்துக் காது செவிடாகும்படி கொட்டிக்கொண்டு கூத்தாடுவார்கள். நமது பாகவதருக்குச்

பணம் குலம் ஆகும், பசி கறி ஆகும்.

சுபாவமாய்க் கோபமென்பதே கிடையாது. அதிலும் சிறு பிள்ளைகளின் விநோதச்செயல்களைக் கண்டு அவர் களிப்புறுவாரேயொழிய வெறுப்படைய மாட்டார்.

நமது பாகவதர் சமயோசித புத்தியுள்ளவர். பெரிய விருத்தர்களையும் வித்துவான்களையும் கண்டால் நடுவில் சொஞ்சம் கீதாப்பிரசங்கஞ் செய்துகொண்டு வைராக்கியத்தைப் புகழ்வார். ஸங்கீத ரஸிகர்கள் சற்று ராகாலாபனம் செய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தால் அதையும் மறுக்கமாட்டார். இவர் யதுகுலகாம்போதியில் "பிரதம ஸமாகம லஜ்ஜிதயா" என்ற பதத்தை எடுத்துப் பாடும்போது யுவ புருஷர்கள் அதுமுடியும்வரையில் அக்ஷதைபோடுவதைத் தாமதப்படுத்திக்கொண்டு வெகுரசமாய்க் கேட்டுக்கொண்டிருப்பார்கள். நமது பாகவதரைக் கீர்த்தனம் பாடச்சொன்னால் தீக்ஷிதர் கிருதிகளில் ஒன்றை எடுத்து வெகு சவுக்கமாய்ப் பாடத் தொடங்கிவிடுவார். அவருக்குக் கர்னாடகத்தைத் தவிர நவீனமே ஒன்றும் தெரியாது. இவ்விதமாகக் கேட்போரை யனுசரித்து அவர் பாடினாலும், சாதாரணமாய் அஷ்டபதிதான் பாடுவது வழக்கம்.

நமது பாகவதர் தயாளகுணமும் சாந்தகுணமும் நிரம்பியவர். இவரிடத்தில் கிராமவாசிகளுக்கு தேவதா விசுவாஸம்; இவரில்லாமல் ஒரு கிரகத்திலும் விசேஷக் கொண்டாட்டங்கள் நடத்தப்படமாட்டா. இவரும் அன்பு பெருகும் தம் உள்ளத்தில் அக்கிராமமனைத்தையும் தம் குடும்பமாகப் பாவிக்கிறார். ஒரு நாளைக்கு அவரைக் காணாவிட்டாலும் ஊர் வெறிச்சென்றாகிவிடும். சில சமயம் கிராமவாசிகள் இவரிடத்தில் புராண சிரவணம் செய்வதுமுண்டு. அப்போது இவர் பக்திசாகரத்திலாழ்ந்துவிடுவார். விசேஷமாய் குசேலோபாக்யானம் சொல்வதில் இவருக்குப் பிரவிருத்தியுண்டு. உண்மையில குசேலரைப்போல் இவரும் ஏழ்மையும் பக்தியும் வைராக்யமும் பொருந்தியவராதலால் அச்சரித்திரத்தில் இவருக்கு அசாதாரணமான மன உருக்கமும் அனுபவமும் இருக்கக்கூடும். மேலும் அடிக்கடி நமது பாகவதர் ஸ்ரீராமநவமி, கோகுலாஷ்டமி, ராதா கல்யாணம முதலிய உத்ஸவங்களை நடத்தி பஜனைமார்க்கத்தைப் பிரசாரம்செய்துகொண்டிருப்பதால் அவரிருக்குமிடத்திலேயே ஈசுவரபக்தி யில்லாதவன் கிடையாது. இவ்வளவு சாந்தஆத்மாவான நமது பாகவதரே ஜன்மமெடுத்தவர்களுக்குள் பரம தன்யர். மோக்ஷ ஸாதனங்களுக்குள் கலியுகத்திற்கு விதிக்கப்பட்ட பக்திமார்க்கத்தை இவர் அனுஷ்டித்து வருகிறார். லோகத்தினுடைய முகோல்லாஸத்தையும் ஸன்மானத்தையும் எதிர்பார்க்காமல் கடவுள் ஒருவரையே இவர் தமக்கு ஸேவ்யராகவும் ரக்ஷகராகவும் அங்கீகரிக்கிறார். அதனாலேதான் இவர் ஸர்வஜனங்களுக்கும் பூஜ்யராகிறார். பொருளீட்டுவதில் ஆசையுள்ளவர்கள் தங்களுடைய அஸூயை, அஹங்காரம், ஆவல் முதலிய மனோவிகாரங்களினால் பிறரை விலக்கிவிட்டுத் தம் காரியமே தமக்குப் பெரிதென்று தலையில் சுமந்துகொண்டு திரிகிறபடியால், அவர்கள் விஷயத்தில் உலகத்தார் அகாரணமாய் இரங்குவதில்லை. ஆகாரத்தின் பொருட்டுப் பிறருடன் போட்டிக்கு வாராமல், அவாவை யொழித்துத் திருப்திசாகரமாய் விளங்கும் நம் பாகவதரிடத்தில் சகஜமாய் ஜனங்களுக்குப் பிரீதி உண்டாகிறது. வேற்றுமை உணர்ச்சிக்கும் நிந்திக்கத்தக்க மனோபாவங்களுக்கும் மூலகாரணமான லோபம் என்ற பிசாசை அணுகவிடாத நமது பாகவதருக்கும் ஸர்வப் பிராணிகளிடத்திலும் கருணையால் பந்துபாவனை நிலைத்திருக்கிறது. நிர்மலமான இவர் மனத்தில் கவலை சிறிதும் உதித்ததில்லை. பணத்தைச் சம்பாதிப்பதிலும் சேர்ப்பதிலும் ஆத்திரமுள்ளவர்களுக்கல்லவா கவலைகள் ஹிருதயத்தைத் துளைக்கின்றன. அஹறங்ய ஹரிகாலக்ஷேபத்துடன் திருப்தி யடைந்து, ஒரு நாள் முன்னதாகச் சேர்த்துவைப்பதிலும் கூட உதாஸீனமாயிருக்கும் நமது பாகவதருக்குக் கவலை எங்கிருந்து வரும்? இவ்வளவு நிவிர்த்தரா யிருந்தால குடும்ப சம்ரக்ஷணம் எப்படி நடக்குமென்று நீங்கள் கேட்கலாம். ஸ்ரீ கிருஷ்ண பகவான், கீதையில் "என்னிடத்தில் பக்தி மிகுதியால் ஆத்மார்ப்பணஞ்செய்துவிட்டவர்களின் யோகக்ஷேமத்தை நான் வஹிக்கிறேன்" என்று உலகமறியப் பிரதிக்ஞை செய்திருக்கிறார். அந்த வாக்கியத்தை நமது பாகவதர் முற்றிலும் நம்பினவர். அவர் விஷயத்தில் அந்த நம்பிக்கை இதுவரையில் வீண்போகவில்லை.

பணம் பந்தியிலே, குலம் குப்பையிலே.

ராஜஸிம்ஹன்

RAJASIMHAN

[எம். ஏ. பட்டம்பெற்ற ஒருவர் எழுதியது.]

(68-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஏழாம் அத்தியாயம்

மபாரகன் மரணம்

இப்பொழுது நிர்மலகுமாரியைவிட்டு மொகலாய வீரனான மபாரகன் வர்த்தமானத்தை எடுத்துக்கொள்வோம். ரூபநகரத்தி லிருந்து திரும்பிவந்தவர்களில் சிலரை வேலையிலிருந்து தள்ளியும், சிலரை மரணதண்டனைக் குள்ளாகும்படியும் பாதுஷா உத்தரவிட்டாரென்று முன்னமே சொல்லியிருக்கிறோ மல்லவா? ஆனால் மபாரகன் அவர்களில் சேரவில்லை. அவுரங்கசீப் எல்லாரிடத்திலும் மபாரகன் சௌரிய வீரியத்தைக் கேட்டு, வேலையிலிருந்து தள்ளவில்லை.

ஜேப உன்னீஸா இந்தக் கியாதியையெல்லாம் கேட்டு மனத்தில் மபாரகன் தானே மரியாதையாய்வந்து, சங்கதிகளை யெல்லாம் அறிவிப்பானென்று நினைத்துக் கொண்டிருந்தாள். ஆனால் மபாரகன் வரவில்லை.

மபாரகன் தரியாவை தன் சொந்தவீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய் அவளுக்குத் தகுந்த தாசிமார்களை நியமித்து சரியான ஸ்திதியில் வைத்துக்கொண்டிருந்தான். மபாரகன் பதிவிரதையான தன் தருமபத்தினியுடன் கூடிவாழ்ந்துவந்தான்.

ஜேப உன்னீஸா மபாரகன் தானாக வராதது கண்டு தனக்கு நம்பிக்கையுள்ள கோஜா அலீருத்தீன் என்பவனை, மபாரகனை அழைத்து வரும்படி உத்திரவு செய்தனுப்பினாள். ஆனால் மபாரகன் வரவில்லை. ஜேப உன்னீஸாவுக்குக் கோபம் வந்தது. 'வெகு கர்வம்! ஷஹஜாதையை அவமதிக்கிறான். ஞாபகப்படுத்தியும் வரவில்லை. என்ன தைரியம்! எவ்வளவு கர்வம்!' என்று கொஞ்ச நாள் ஜேப உன்னீஸா கோபத்துடன் இருந்தாள். மனத்தில் "இவனென்ன? அவ்வளவுமட்டிலேயே யிருக்கிறான். எனக்கு எல்லோரும் ஒன்றே. அவனில்லாவிட்டால் இன்னொருவன் இருக்கிறான்" என்றுகொண்டாள். ஆனால் ஜேப உன்னீஸா அப்படிச் சொன்னபோதிலும் அது தப்பென் றறியவில்லை. தானும் பிறரும் ஒன்றே என்று அறியவில்லை. கடவுள் பாதுஷாவின் பெண்ணையும் புல் விற்கிற ஸ்திரீயையும் ஒரே அச்சிலிட்டு சிருஷ்டித்திருக்கிறாரென் றறியவில்லை.

அவளுக்கு எல்லோரும் ஸமானமாகவில்லை. சில நாள் கோபத்தோடே யிருந்து பிறகு மபாரகனிடம் கொஞ்சம் பிரீதியுள்ளவளானாள். கர்வத்தை யடக்கிக்கொண்டு மறுபடியும் மபாரகனை யழைத்துவருவதற்கு ஒரு தூதியை அனுப்பினாள். மபாரகன் "ஷஹஜாதைக்கு அநேக வந்தனங்கள் சொல்லவேண்டும். பிரபஞ்சத்தில் ஷஹஜாதையைக் காட்டிலும் அதிகமானது எனக்கு வேறொன்றுமில்லை. ஆனால் ஒன்று இருக்கிறது. தேவரிருக்கிறார். தருமம் உண்டு. இனிமேல் பாபகாரியம் என்னாலாகாது. நான் இனி மகலில் பிரவேசிக்கமாட்டேன். நான் தரியாவை யழைத்துவந்து தருமப்பிரகாரம் அவளுடன் காலக்ஷேபம் செய்கிறேனென்று சொல்லவேண்டும்" என்று சொல்லியனுப்பினான்.

பதிலைக்கேட்டு ஜேப உன்னீஸா கோபத்தினால் சீறி மபாரகனையும் தரியாவையும் கொன்றுவிடத் தீர்மானித்தாள்.

மகலில் நிர்மலகுமாரியிருந்ததால் ஜேபஉன்னீஸாவின் இந்தத் தீர்மானம் நிறைவேறுவதற்குக் கொஞ்சம் அநுகூலமாயிற்று. நிர்மலை அவுரங்கசீபின் ஆதரவுக்கு நாளுக்குநாள் அதிகமாய்ப் பாத்திரமானாள். அவுரங்கசீபு சமயம் வாய்த்தபொழுது ரூபநகரத்து சுந்தரியுடன் சம்பாஷிக்க வருவதுண்டு. பிரஸ்தாபமெல்லாம் ராஜஸிம்ஹன் இராஜ்யபாரம் செய்கிற கிரமங்களைப்பற்றி இருக்கும். சதுரசிகாமணியான அவுரங்கசீபு ராஜஸிம்ஹன் யுத்தகாலங்களில் எந்தெந்த விதமான ஏற்பாடுகள் செய்கிற வழக்கம் என்று தெரிந்துகொள்வதற்காக வேண்டிய கேள்விகள் கேட்பான். சாதுரியத்தில் அவனுக்கு மேற்பட்ட நிர்மலை, அவன் அபிப்பிராயத்தை யறிந்துகொண்டு வேண்டுமளவு பொய் சொல்லுவாள்.

அதனால் அவள் பதிலினால் அவுரங்கசீபு பூரண சந்தோஷமடைவதுவல்ல. அவன் மனத்தில் தானே சொல்லிக்கொண்டதென்னவென்றால்:—"மீவார் தேசத்தை என் சைனியத்தால் மூழ்கடித்துவிடுவேன். அதற்குச் சந்தேகமில்லை. ராஜஸிம்ஹன் இராஜ்யம் தப்பாது. ஆனால் அதனால் மாத்திரம் என் மானத்தைக்

பண்டாரம் பிண்டத்துக்கு அழுகிறான், லிங்கம் பாலு சோற்றுக்கு அழுகிறது.

காப்பற்ற முடியாது. அவன் ரூபநகரத்து ராணியைக் கொண்டுவராவிட்டால் என்னை விட்டு அவமானம் போகாது. ஆனால் அவன் ராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொள்ளலாமென்கிற நிச்சயமிருந்தாலும், அவன் மகிஷியைக் கைப்பற்றலாமென்கிற நம்பிக்கை மாத்திரம் எனக்கு உண்டாகவில்லை. ரஜபுத்திர ஸ்திரீகள் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே சிதையில் ஏறிப் பிராணனை விட்டுவிடுகிறார்கள். பேச்சுக்குப் பதில்பேச்சுக் கொடுத்துக்கொண்டே விஷபானம் செய்துவிடுகிறார்கள். கையில் விழுகிறதற்கு முன்னேயே பிசாசுகள் பிராணனைவிட்டுவிடுகின்றன. ஆனால் இந்தத் தாஸி, கையில் அகப்பட்டால்—வசமானால் — எப்படியாவது அவளைக்கொண்டு அழைத்து வந்துவிடலாம். ஆனால் இந்தத் தாஸியை வசம்பண்ணுதல் சாத்தியமோ? நான் டில்லி பாதுஷாவாயிருந்து ஒரு பாங்கியை வசம்பண்ணிக்கொள்ள முடியாதா? முடியாமற்போனால் என் கௌரவம் எம்மாத்திரம்?" இப்படியெல்லாம் நினைத்துக்கொண்டிருந்தான் பாதுஷா.

பாதுஷாவின் இங்கிதமறிந்து, ஜேப உன்னீஸா நிர்மலையை இரத்தினங்களாலலங்கரிப்பித்தாள். அவள் உடுப்புகள் பேகங்களுக்கிருந்தமாதிரி யிருந்தன. நிர்மலை என்ன சொன்னாலும் அந்தப்படி தயார். மகலுக்கு வெளியே மாத்திரம் போகக்கூடாது.

இந்த சமாசாரங்களை யெல்லாம் யோதபுரியினிடம் சொல்லுவாள். அவளுடன் ஆலோசிப்பாள். ஒருநாள் நிர்மலை "இந்த நவரத்தினங்களாலென்ன பிரயோஜனம்? தங்கக் கூட்டிலிட்ட பக்ஷிபோ லிருக்கிறேன். எல்லாம் சுவர்ணமயமாய்த்தா னிருக்கிறது" என்றாள்.

யோதபுரி.—அப்படியானால் எதற்காக இதையெல்லாம் வாங்கிக்கொண்டாய்?

நிர்மலை.-உதயபுரம்போய் பாதுஷாவை ஏமாற்றி வாங்கிவந்தேனென்று சொல்வதற்காக.

ஜேப உன்னீஸா அவுரங்கசீபுக்கு வலது கையாயிருந்தாள். ஒருநாள் பாதுஷா சொல்லியிருந்தபடி நிர்மலையை அழைத்துப் பேசிக்கொண்டிருந்தாள். தர்பாரின் முக்கியக்காரியங்களெல்லாம் அவள் கையிலிருந்தது. பாதுஷா நிர்மலையுடன் சம்பாஷணைசெய்கிற பாரத்தை தானே வகித்துக்கொண்டான். அவளுடன் விநோதமாய்ப் பேசுவான். சம்பாஷணையில் பாதுஷா என்கிற மானமிருக்கும். ஆனால் நிர்மலை கோபித்துக் கொள்வதில்லை. பதில் தகுந்தபடி சொல்வாள்.

நிர்மலை ஜேப உன்னீஸாவுடன் சொல்ல அபேக்ஷயில்லாத சமாசாரங்களைப்பற்றிப் பேசுவதுண்டு. வேறு பிரஸ்தாபத்தோடு ரூபநகரத்து யுத்தம் நடந்தசெப்படி என்ற பிரஸ்தாபமும் வந்தது. நிர்மலை யுத்தத்தைத் தான் நேரிற் பார்க்காதிருந்தாலும், சஞ்சலகுமாரி வாயிலிருந்து கேட்டிருந்தாள். தான் கேட்டபிரகாரம் ஜேப உன்னீஸாவுக்குத் தெரிவித்தாள். மபாரகன் சஞ்சலகுமாரியின்முன் மொகலாய சைனியம் தோல்வியடைந்ததாக ஒப்புக்கொண்டு இரணகளத்தை விட்டுவிட்டு வந்தானென்றும், சஞ்சலகுமாரி ரஜபுத்திரரின் இரக்ஷணைக்காக தான் டில்லிக்கு வருவதாக ஒப்புக்கொண்டதாகவும், வழியில் விஷபானம் செய்வதாகச் சொன்னதாகவும், ஆகையினால் மபாரகன் சஞ்சலையை யழைத்துவருவதற்கு இஷ்டப்படவில்லை என்றும் சொன்னாள்.

ஜேபஉன்னீஸா மனத்தில் 'மபாரக ஸாகேபாரே! இந்த அஸ்திரத்தால் உம்முடைய தலை கீழேவிழும்படி செய்கிறேன்" என்று நினைத்துக்கொண்டாள். சரியான சமயம் வாய்த்தபோது, ரூபநகரத்திய யுத்தத்தைப்பற்றின சமாசாரமெல்லாம் அவுரங்கசீபுக்கு அறிவித்தாள். அவுரங்கசீபு "அந்த மனிதன் இந்தமாதிரியாய் நம்பிக்கைத் துரோகம் செய்திருந்தால், உடனே நரகத்துக்குப்போய்ச் சேருவான்" என்றான். அவுரங்கசீபு நடந்தவிருத்தாந்தத்தை யறியாமலில்லை. ஜேப உன்னீஸாவின் கெட்ட நடத்தையைப்பற்றி முன்னமே கேள்விப்பட்டிருந்தான். மபாரகனுக்கும் ஜேபஉன்னீஸாவுக்கும் பிரீதி வசனங்கள் உண்டென்று சந்தேகமுள்ளவனா யிருந்தான். ஆனால் இது வரைக்கும் தீர்மானமாய் அவனுக்குத் தெரியாது. இப்பொழுது தன் மகள் சொன்னதையெல்லாம் கேட்டு ஒருவர்க்கொருவர் ஏதோ கலகமுண்டாயிற்றென்றும், அதற்காகத்தான் அவன் மரணத்தை வேண்டி இப்படிச் சொல்லுகிறாளென்றும் தெரிந்துகொண்டான். ஆகையினால் அவள் சொல்வது நிஜமா என்று தெரிந்து கொள்வதற்காக நிர்மலையை வரவழைத்தான். உள்ளந்தரங்கம் தெரியாத நிர்மலை சகல விருத்தாந்தங்களையும் சரியாய்ச் சொல்லிவிட்

பண்ணப் பண்ணப் பலவிதம் ஆகும்.

டாள். அவுரங்கசீபு சர்க்கார்போலீஸாரைக் கூப்பிட்டு மபாரகன் விஷயமாய் ஆக்ஞாபித்தான். ஏழு எட்டுஆட்களால் மபாரகன் கொலைக்களத்திற்குக் கொண்டுவரப்பட்டான். மபாரகன் வந்து பார்க்கவும், இரண்டு இரும்புக்கூடுகளில் விஷ ஸர்ப்பங்களிருந்தன. இப்போது மரண தண்டனை விதிக்கவேண்டுமானால், வேறு உபாயமில்லாமல் தூக்குப் போடுகிறார்கள். மொகலாய இராஜ்யத்தில்அநேகவிதமான உபாயங்களிருந்தன. கழுத்தை வெட்டுவது,சூலத்தில் ஏற்றுவது; யானையின் காலாலிடறுவது, ஸர்ப்பங்கள் கடிக்கும்படி செய்வது, விஷங்கொடுப்பது - இப்படி விதவிதமான உபாயங்களிருந்தன.

மபாரகன் சந்தோஷமாய் வந்துநின்று "நான் போகவேண்டுமோ?" என்றான். கொலையாளி விசனத்துடன் "பாதுஷாவின் உத்தரவு அவ்விதமாயிருக்கிறதே" என்றான்.

மபாரகன்.—என்ன காரணத்தால் இப்படி உத்தரவாயிற்று. தெரியுமோ?

கொலையாளி.—தெரியாதா - தங்களுக்குத் தெரியாதா?

மபாரகன்.—ஒருவிதம் ஊகிக்கிறேன்.

அப்போது மபாரகன் காலிலிருந்து ஜோட்டை கழற்றி, ஒருகாலை இரும்புக்கூட்டின்மேல் வைத்தான். உள்ளேயிருந்த ஸர்ப்பம் வந்து கடித்தது.

அந்த விஷத்தின் உக்கிரத்தால் முகங்கறுத்து மபாரகன், "மபாரகன் எதற்காகக் கொலை செய்யப்பட்டான் என்று யாராவது கேட்டால் ஷஹஜாதி ஜேப உன்னீஸா ஸாஹேபவர்களுக்கு அப்படி இஷ்டமிருந்ததென்று சொல்லவேண்டும்" என்றான்.

கூட இருந்தவன், "சும்மாயிருங்கள்! அப்படிச் சொல்லவேண்டாம்" என்றான்.

ஒரு சர்ப்பத்தின் விஷத்தால் சாகாமல்போனால், இன்னொரு ஸர்ப்பத்தைக் கடிக்க விடுகிற ஸம்பிரதாயமிருந்தது. மபாரகனுக்கு அது தெரியும். இன்னொரு காலை இன்னொரு கூட்டிலிட்டான். அதிலிருந்த கொடிய ஸர்ப்பமும் கடித்தது.

மபாரகன் விஷ ஜ்வாலையினால் மயங்கிச் சரீரமெல்லாம் நீலமாகி நிலத்தின்மேல் முழங்காலிட்டுக் கைகூப்பிக்கொண்டு. "அல்லாஹோ அக்பர்! நான் எப்பொழுதாவது உம்முடைய தயவுக்குட் பாத்திரமான காரியம் ஏதாவது செய்திருந்தால், என்மேல் கிருபைசெய்யவேண்டும்" என்று தியானம் செய்துகொண்டு பிராணனை விட்டான்.

எட்டாம் அத்தியாயம்

ஜேப உன்னீஸா மபாரகனை உயிர்ப்பிக்க வழிதேடுதல்.

ரங்கமகலுக்கு எல்லா சமாசாரங்களும் வருவதுண்டு. ஜேப உன்னீஸா சமாசாரங்களெல்லாம் தெரிந்துகொள்வாள். மபாரகன் கொலை செய்யப்பட்ட சமாசாரமும் வந்து சேர்ந்தது.

ஜேப் உன்னீஸா இந்தச் சமாசாரத்தினால் சுகமுண்டாகுமென நினைத்திருந்தாள். ஆனால் சமாசாரம் கேட்டவுடன் அவள் நினைத்திருந்ததற்கு விபரீதமாயிற்று. சமாசாரம் காதில் விழுந்தவுடன் கண்ணீர் ததும்பிற்று. அவள் சுகமான கண்களில் இதுவரையில் நீர் வந்ததேயில்லை. இப்போது பார்க்கும்பொழுது கன்னங்களிலெல்லாம் தாரைதாரையாய் கண்ணீர் சொரிந்தது. கண்ணீரை அடக்கமுடியவில்லை. கடைசியில் உரக்க அழவேண்டும்போலிருந்தது. கதவைச் சாற்றிக்கொண்டுயானைத்தந்தத்தினால்செய்த இரத்தினமிழைக்கப்பெற்ற மஞ்சத்தின்மேல் சயனித்துக்கொண்டு அழுவதற்கு ஆரம்பித்தாள்.

யானைத்தந்தத்தினால் செய்யப்பட்டு ரத்தினமிழைக்கப்பெற்ற மஞ்சத்தில் படுத்துக்கொண்டபோதிலும் கண்ணீர் நிற்கவில்லை. ஷஹஜாதே! டில்லிநகரம் விட்டு கிராமங்களுக்குப்போய் அற்பமான குடிசைகளுக் குள்ளே போய்ப்பார்த்தால், கந்தைப்பாய்மேல்படுத்துக் கொண்டிருப்பவர்கள் எத்தனையோ ஜனங்கள் சந்தோஷமாய் வாழ்ந்துகொண்டிருப்பார்கள். உன்னைப்போல் அழுகிறவர்கள் யாருமில்லை.

முதலில் ஜேப உன்னீஸா மனத்தில் தன் சுகத்தைத் தானே கெடுத்துக்கொண்டதாக நினைத்தாள். கொஞ்சங் கொஞ்சமாய் பாதுஷாவின் பெண்கூட பிரீதிக்கு வசப்படுகிறாளென்று தெரியவந்தது. ஜேப உன்னீஸா தனக்குள்தானே "ஐயோ? இத்தனை நாளாக அவனிடத்தில் இவ்வளவு பிரீதியிருக்கிறது ஏன் எனக்கு தெரியாமற் போயிற்று?" என்று வருத்தப்பட்டாள். ஆனால் அவளுக்கு "நீ ஐசுவரிய மதத்தினால் அறிந்துகொள்ளவில்லை.

ரூபஸௌந்தரியத்தினால் கொழுப்படைந்திருந்தாய். உன் சுகத்தையே பெரிதாய் நினைத்திருந்தாய்" என்று சொல்லக்கூடியவர்கள் பக்கத்தில் ஒருவருமில்லை. எப்படியும், கொஞ்சங்கொஞ்சமாய் தருமாதருமம் என்கிற ஞானம் பிறக்கவாரம்பித்தது. தருமமென்பதுண்டானால், தான் அதுவரையில்செய்துவந்ததெல்லாம் அதருமமென்றுதெரியவந்தது. பிற்பாடு மனத்தில் பயமுண்டாயிற்று. தருமாதருமத்துக்குத் தக்க வெகுமான தண்டனைகளைக்கொடுக்கத்தக்க ஈசுவரன் ஒருவனுண்டானால், அவன் பாதுஷாவின் பெண்ணென்று தன் பாபங்களை மன்னிப்பானோ? இப்படிப்பட்ட பயமும் உண்டாயிற்று.

துக்கத்தினாலும் பயத்தினாலும் கலங்கி தன்னறைக்கதவைத்திறந்து தனக்கு வெகு நம்பிக்கையுள்ள கோஜா அலிருத்தீனைக் கூப்பிட்டு, சர்ப்பத்தின் விஷத்தால் மனிதன் செத்துப் போய்விட்டால் அதற்கேதாவது சொஸ்தப்படுத்த முடியுமா என்று கேட்டாள்.

அலிருத்தீன்.—செத்துப் போய்விட்டால், பிற்பாடு எப்படி சொஸ்தமாக்குகிறது?

ஜேப உன்னீஸா.—ஒன்றும் கேள்விப்பட்டதில்லையா?

அலிருத்தீன். — ஹாதிமாலன் இப்படிப்பட்ட விஷங்களுக்கு நல்ல வைத்தியனென்று கேள்விப்பட்டிருக்கிறேன். செத்துப்போனவர்களைக்கூட பிழைப்பிப்பானும். ஆனால் நான் பார்த்ததில்லை.

ஜேப உன்னீஸா பெருமூச்சுவிட்டு ஹாதிமாலனை உனக்குத் தெரியுமா என்று கேட்டாள்.

அலிருத்தீன்.—தெரியும்.

ஜேபஉன்.—அவன் எங்கேயிருக்கிறான்?

அலிருத்தீன்.— டில்லியிலேயே இருக்கிறான்.

ஜேபஉன்.— அவன் வீடுதெரியுமா?

அலிருத்தீன்.— தெரியும்.

ஜேபஉன்.—இப்போது அங்கே போக முடியுமா?

அலிருத்தீன்.-உத்தரவானால் போகிறேன்.

ஜேபஉன்.—இன்றைக்கு மபாரக அலிஸாஹேபர் (ஸ்வரம் குழறிப்போயிற்று) ஸர்ப்பத்தினால் கடிக்கப்பட்டு இறந்து போனது தெரியுமா?

அலிருத்தீன்—தெரியும்.

ஜேபஉன்.—அவனை எங்கே கோரி செய்திருக்கிறார்கள் தெரியுமா?

அலிருத்தீன்.— தெரியாது. சுடுகாட்டில் கோரி செய்திருப்பார்கள். போய்ப் புதுக் கோரி பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

ஜேபஉன்னீஸா.—உனக்கு இருநூறு மோகரா கொடுக்கிறேன். ஒருநூறுமோகரா ஹாதிமாலனுக்குக் கொடு. இன்னொரு நூறு நீ எடுத்துக்கொள். மபாரகன் கோரியைத் திறந்து அவன் சவத்தை சொஸ்தம்செய்து அவனுக்கு உயிருண்டாக்கவேண்டும். பிழைத்துக்கொண்டால் அவனை என்னிடம் அழைத்துவரவேண்டும். இப்போதே போ மோகராவை வாங்கிக்கொண்டு.

அலிருத்தீன் உடனே புறப்பட்டுப்போனான்.

ஒன்பதாம் அத்தியாயம்

மபாரகன் மீட்சி

இன்னொருதரம் கல்லினால் செய்யப்பட்ட சாமான்களை ரங்கமகலுக்குள் கொண்டுபோய் விற்று மாணிக்கலாலன் நிர்மல குமாரியிடமிருந்து சமாசாரம் தெரிந்துகொண்டான். மறுபடியும் அந்தக் கல்லினால் செய்யப்பட்ட பெட்டியைப் பூட்டிக்கொண்டுவந்திருந்தான். நிர்மல குமாரி திறந்துபார்க்கவும் பெட்டியில் தூது செல்லக்கூடிய புறு அதற்குள் இருந்தது. அவள் அதை எடுத்துக்கொண்டு காகிதமூலமாய் முன்போலவே தன்னைப்பற்றி கவலைப்படவேண்டாமென்றும், எல்லாம் சரியாயிற்றென்றும், இப்போது மாணிக்கலாலன் புறப்பட்டுப் போகலாமென்றும் தான் பாதுஷாவுடன்கூட வருவதாயும் எழுதியனுப்பினாள்.

மாணிக்கலாலனது கல் சாமான் கடை மூடப்பட்டது. அவன் உதயபுரத்துக்குப் புறப்பட்டான். பொழுது விடிவதற்கு முந்தியே புறப்பட்டான். டில்லிக்குக் கோட்டைவாசல்கள் அநேகமுண்டு. யாராவது சந்தேகப்படுவார்களென்று நினைத்து அஜ்மீர் வாசல்வழியாய்ப் போகாமல் வேறுவாசல் வழியாய்ப் புறப்பட்டான். மார்க்கத்தில் ஒரு ச்மசானம் உண்டு. அங்கே இரண்டுபேர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் மாணிக்கலாலனையும் அவனுடன் வந்தவரையும் பார்த்துவிட்டுஓடிப் போனார்கள். இதுகண்டு மாணிக்கலாலன் குதிரையைவிட்டு இறங்கிக்கிட்டப்போய்ப் பார்

க்கவும், ஒரு கோரியின் பக்கத்தில் ஒரு சவம் திறந்தெடுக்கப்பட் டிருந்தது. அப்பொழுது தான் கொஞ்சங் கொஞ்சம் வெளிச்சமுண்டாகியதால் சவத்தை நன்றாய் வெகுநேரம் உற்றுப்பார்த்தான். ஏதோ தெரிந்துகொண்டு சவத்தைத் தன்குதிரைமேலேற்றிக்கட்டி ஒரு துணியினால்அதை மூடிவிட்டுத் தான் காலால் நடந்துகொண்டு குதிரையை ஓட்டிக்கொண்டு போனான். கொஞ்சதூரம் போனபிறகு சூரியோதயமாயிற்று. மாணிக்கலாலன் சவத்தைக் குதிரையிலிருந்திறக்கி பக்கத்திலிருந்த ஒரு காட்டிற்கொண்டுபோய் அங்கே ஒரு மரத்தடியில் கீழே வைத்தான். பெட்டியிலிருந்து ஏதோ ஒரு மாத்திரையை எடுத்து அதை ஒரு பானத்தில் சேர்த்து அரைத்தான். பிறகு சவத்தின் சரீரத்தில் தன் கத்தியினால் இங்குமங்கும் சிறுசிறு காயம் செய்து அதற்குள் அந்த மருந்தைப்போட்டு நாக்கிலும் கண்ணிலும் கொஞ்சம் திணித்தான். சிலநிமிஷங்களானவுடன் மறுபடியும்அப்படியேசெய்தான். இவ்விதமாய் மூன்றுதரம் மருந்தைப் பிரயோகித்தபிறகு, சவத்திலிருந்து மூச்சுக் கிளம்பவாரம்பித்தது. சற்று நேரமானவுடன் கண்கள் திறந்து பிரக்ஞை வந்தது. கடைசியில் மபாரகன் எழுந்து உட்கார்ந்து கொண்டு பேசினான்.

மாணிக்கலாலன் கொஞ்சம் பால் கொண்டு வந்திருந்தான். அதை மபாரகனுக்குக்கொடுத்துக் குடிக்கச் சொன்னான். மபாரகன் பாலைக் குடித்தபின் கொஞ்சங் கொஞ்சமாய் மயக்கந் தெளிந்து எல்லாம் ஞாபகத்துக்கு வந்தது. பிறகு மாணிக்கலாலனைப் பார்த்து, "யார் என்னைக் காப்பாற்றினது. தாங்களோ?"என்றான்.

மாணிக்க.—ஆமாம்.

மபாரகன்.—எதற்காகப் பிழைப்பு மூட்டினீர்? உங்களை எனக்குத் தெரியும். தங்களுடன் நான் ரூபநகரத்துக் குன்றுகளில் யுத்தம் செய்யவில்லையா? தாங்கள் ஜயித்தீர்கள்.

மாணிக்க.—எனக்கும் உங்களைத் தெரியும். தாங்களே மகாராணாவைத் தோற்டித்தீர்கள். இந்தக் கஷ்டம் தங்களுக்கு எப்படி நேர்ந்தது?

மபாரகன்.—இப்போது சொல்லமுடியாது. பிற்பாடு சொல்லுகிறேன். தாங்கள் எங்கே போகிறீர்கள்? உதயபுரத்திற்கோ?

மாணிக்க.—ஆமாம்.

மபாரகன்—என்னையும் கூட அழைத்துக் கொண்டுபோக முடியுமா? நான் இனிமேல் டில்லிக்குப் போகக்கூடாது என்று தங்களுக்குத் தெரிந்திருக்கலாம். நான் பாதுஷாவின் ஆக்கினையால் தண்டிக்கப்பட்டேன்.

மாணிக்க.—கூட அழைத்துக்கொண்டுபோகிறேன். ஆனால் இப்போது தாங்கள் துர்ப்பலராயிருக்கிறீர்கள்.

மபாரகன். — சாயங்காலத்திற்குள் பலம் வந்துவிடும். அதுவரையில் தாங்கள் தாமதிக்க முடியுமா?

மாணிக்க.—முடியும்.

மபாரகன் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பால் குடித்தான். மாணிக்கலாலன் அடுத்த கிராமத்திலிருந்து ஒரு பல்லக்குத் தருவிக்க, உதயபுரத்திற்கு இரண்டுபேர்களும் புறப்பட்டுப் போனார்கள்.

போகும்பொழுது மார்க்கத்தில் மபாரகன் ஜேப உன்னீஸாவின் விருத்தாந்தத்தையெல்லாம் மாணிக்கலாலனுக்குச் சொன்னான். மாணிக்கலாலன் கேட்டு ஜேப உன்னீஸாவின் கோபாக்கினியில் மபாரகன் சாம்பலானானென்றறிந்துகொண்டான்.

இது இப்படியிருக்க, அலிருத்தீன் வந்து ஜேப உன்னீஸாவினிடம் மபாரகன் என்ன செய்தும் பிழைக்கவில்லையென்று சொல்லிவிட்டான். ஜேப உன்னீஸா அத்தரில் நனைத்த கைவஸ்திரத்தால் கண்ணை மூடிக்கொண்டிருந்தவள் இப்போது அலிருத்தீன் சொன்னதைக் கேட்டுப் பூமியில் விழுந்து கூலிக்கார ஸ்திரீயைப்போல் தலையைக் கல்லில் மோதிக்கொள்ளவாரம்பித்தாள்.

ஒருவருக்கும் சொல்லக்கூடாத துக்கமாயிருந்தது. ஆனால் பொறுக்க முடியவில்லை. பாதுஷாவின் மகளுக்கும் அப்பேர்ப்பட்ட துக்கமுண்டாயிற்று. ஜேபஉன்னீஸா தான் சாமானியமான ஏழைக் கூலிக்காரியாய்ப் பிறக்கவில்லையே என்று வருத்தப்பட்டாள். இந்த சமயத்தில் வாயிலுக்கு வெளியில் சத்தம் ஏதோ உண்டாயிற்று. யாரோ உள்ளே வருவதற்குப் பிரயத்தனப்படுவதை வேலைக்காரன் தடுத்துக்கொண்டிருந்தான். ஜேபஉன்னீஸாவுக்குத் தரியாவின் குரல் கேட்டது. வேலைக்காரன் அவளைத் தடுக்க முடியவில்லை. அவள் கையில் கத்தியிருந்தது. அவள் ஜேப

உன்னீஸாவை வெட்டிவிடுவதற்காக கத்தியைக் கொண்டுவந்திருந்தாள். ஆனால் ஜேப உன்னீஸாவைப் பார்த்து, கத்தியைத் தூக்கிக் கொண்டு, "ரொம்ப நல்லதாயிற்று. கண்ணில் நீரோவந்திருக்கிறது?"என்றுசொல்லி உரக்கச் சிரிக்கவாரம்பித்தாள். ஜேப உன்னீஸா சேவகனைக்கூப்பிட்டு அவளைப் பிடித்துக்கொள்ளச் சொன்னாள். ஆனால் பிடிக்கமுடியவில்லை. அவள் ஓடிப்போய்விட்டாள். சேவகன் ஓடி அவள் வஸ்திரத்தைப் பிடித்துகொண்டான். தரியா வஸ்திரத்தை கிழித்தெறிந்துவிட்டு ஓடிப்போனாள். அப்போது அவளுக்கு ஜாஸ்தியான பைத்தியம் பிடித்திருந்தது. மபாரகனுடைய மரணசமாசாரத்தைக் கேட்டிருந்தாள்.

எட்டாம் பாகம்

முதல் அத்தியாயம்

உதயபுர முற்றுகை

ராஜஸிம்ஹன் இராஜ்யத்தை நாசஞ்செய்வதற்கு அவுரங்கசீபு புறப்படத் தாமதமானதற்குக் காரணமென்ன வென்றால்:—அவன் யுத்தத்திற்காகச் செய்துகொண்டிருந்த ஸந்நாஹம் அதி பயங்கரமாயிருந்தது. துரியோதனன், யுதிஷ்டிரர் இவர்களைப்போல் அவன் பிரமபுத்திராநதி முதல் பாலிக பர்வதம்வரைக்கும் காஷ்மீர தேசம் முதல் கேரள பாண்டிய தேசம் வரையிலும் எங்கெங்கே எவ்வளவெவ்வளவு சேனைகளிருந்ததோ அவைகளை யெல்லாம்ஒன்றாய்க்கூட்டிச்சேர்த்தான். தக்ஷிணத்திலிருந்த மகா சைனியத்தையும் கோலகொண்டா, விஜயபுரம், மஹாராஷ்டிரம் முதலான பிரதேசங்களிலிருந்த சைனியங்களையும் கூட்டிக்கொண்டு பாதுஷாவின் மூத்த மகனான மகாசூரன் ஷஹாலம் என்பவன் தெற்கேயிருந்து உதயபுரத்தை சைனியப்பிரவாகத்தில் முழுகவடிப்பவன்போல் வந்தான். மற்றொரு மகனான ஆஜம்ஷா என்பவன் வங்காளத்தில் இராஜப்பிரதிநிதியாயிருந்தவன் கீழ்த் தேசங்களிலிருந்துசேனைகளைக் கொண்டுவந்து மீவார் தேசத்தின் பர்வத வாயிலில் நிறுத்தினான். மேற்கேயுள்ள மூல்தானிலிருந்து பஞ்சாப், காபூல், காஷ்மீரம் முதலான தேசத்திய மகாவீர சைனியத்துடன் இன்னொரு மகன் அக்பர் வந்து மற்ற சைனியங்களுடன் கலந்துகொண்டான். வடக்கேயிருந்து ஷஹான்ஷா பாதுஷாவே டில்லியிலிருந்து மூலபலத்தை நடத்திக் கொண்டு வந்து உதயபுரமென்ற பெயரே பூமியில் ஞாபகமிராமல் செய்வதற்காக மீவாரில் வந்து தரிசனம் கொடுத்தான். சமுத்திரத்தின் மத்தியில் பர்வதக்குன்று தோன்றுவது போல் இந்தச் சேனாஸமுத்திரத்தின் மத்தியில் உதயபுரம் விளங்கிக்கொண்டிருந்தது.

கணக்கில்லாத ஸர்ப்பக் கூட்டத்தினால்சூழப்பட்டிருக்கிற கருடன் எவ்வளவு பயப்படுமோ அவ்வளவு மட்டுமே ராஜஸிம்ஹன் இந்த சமுத்திரத்துக் கொப்பான மொகலாய சைனியத்தைக் கண்டு பயந்தான். பாரத வருஷத்தில் குருக்ஷேத்திர யுத்தத்திற்குப்பிற்பாடு இப்பேர்ப்பட்ட சைனியம் ஒருநாளும் சேர்ந்ததில்லை. இவ்வளவு சேனை பாரஸீகம், சீனா - ருஷியா முதலிய தேசங்களை ஜயிப்பதற்குக்கூட வேண்டுவதில்லை. ஆனால் சிறு அற்பதேசமான உதயபுரத்தை ஜெயிப்பதற்குப் பாதுஷா அவுரங்கசீபு அப்பேர்ப்பட்ட சைனியத்தைச் சேர்த்து வந்திருந்தான். உலகத்தில் இந்தப்பிரகாரம்ஒரு தடவைமாத்திரந்தான்நடந்திருந்தது. பாரஸீக தேசம் மகா பெரிய இராஜ்யமாயிருக்கும்பொழுது, அதற்கு அதிபதியான ஸர்க்ஸீஸ் என்பவன் ஐம்பதுலக்ஷம் யுத்தவீரர்களைக்கொண்டு க்ரீஸ் என்கிற அற்பமான தேசத்தை ஜயிக்கிறதற்காகப் போயிருந்தான். தர்மாபிலி என்ற விடத்தில் லியோனிடாஸ் என்பவனும், ஸலாமிஸில் தெமிஸ்டானீஸ் என்பனும், ப்ளாடியா பாஸானியாஸ் என்றவிடத்தில் பாஸானியாஸ் என்றவனும் ஸர்க்ஸீஸின் கர்வத்தைப் பங்கஞ்செய்து விட்டார்கள். அப்படி பூலோகத்தில் முன்னே நடந்தது. இப்போது மறுபடி இரண்டாந்தரமாயிற்று. அநேக லக்ஷம் சிப்பாய்களுடன் பாரத சக்கரவர்த்தியான அவுரங்கசீபு, ஸர்க்ஸீஸைக் காட்டிலும் சூரனான ராஜன், ராஜஸ்தானத்தில் ஒரு அற்ப இராஜ்யத்தை ஜயிப்பதற்காகப் போயிருந்தான். ராஜஸிம்ஹன் அதற்கென்ன செய்தானென்பதைப் பற்றி இப்போது சொல்வோம்.

நம் புராண இதிகாஸங்களில் பிராமணருக்கு யுத்தவித்தை தெரியாமலிருந்ததாலோ, அல்லது பூர்வகாலத்தில் இந்த யுத்தவித்தையே இத்தேசத்தில் இல்லாமலிருந்ததாலோ இராமச்சந்திரன் அர்ஜுனன் முதலானோர் ஸேனாபதித்துவத் தேர்ச்சியைப்பற்றி நமக்கு ஒன்றுமறியமுடியவில்லை. அசோகன், சந்திரகுப்தன்,

விக்கிரமாதித்தியன், சிலாதித்தியன் முதலான மகா வீரர்களின் ஸேனாபதித்திறமை எங்கும் அவ்வளவு விவரமாய் வருணிக்கப்படவில்லை. இந்தியாவை ஜயித்த மகமத் காஸினி, ஜனயி மகமத், ஷஹாபுதீன், அல்லாவுடீன், பேபர், தைமர், நாதர்ஷா முதலானவர்களின் வீரத் திறமையைப்பற்றியும்எங்கும்வருணிக்கப்படவில்லை. முஸல்மானரால் எழுதப்பட்ட சரித்திரங்களிலும் காணோம். அக்பர் காலம் முதற்கொண்டு இந்த சாஸ்திர வித்தையைப்பற்றிக் கொஞ்சங் கொஞ்சம் தெரியவருகிறது. அக்பர், ஸிவாஜி, ஹைதரலி, ஹரிஸிம்மன் முதலானவர்களின் யுத்த சாஸ்திர பரிச்சயமும், இராஜ்ய தர்ம முறைமையும் நன்றாய்த் தெரியவருகிறது. இந்துதேசச் சரித்திரத்தில் எந்த மகாவீரர்களின் யுத்த சாஸ்திர பாண்டித்தியத்தைப்பற்றி வாசித்தாலும், அதற்கு ராஜஸிம்ஹன் திறமை குறைந்திருக்கவில்லை.

அந்த அபூர்வமான ஸேனாபதித்திறமையை வருணிக்கிறதற்கு இது இடமில்லையாதலால் கொஞ்சம் மட்டும் சுருகமாய்ச் சொல்லுவோம்.

நான்கு பாகமாக வகுக்கப்பட்ட அவுரங்கசீபின் மகா சைனியம் வந்து சூழ்ந்துகொண்டவுடன், அவர்களை எதிர்க்க வேண்டியதற்குச் செய்யவேண்டியதையெல்லாம் ராஜஸிம்ஹன் செய்தான். பர்வதங்களுக்கு வெளியே சமதலமான விடங்களை விட்டுவிட்டு பர்வதங்களின் மேல் சைனியத்தை நிறுத்தினான். தன் சைனியத்தை மூன்றுபாகங்களாகப் பிரித்தான். ஒரு பாகத்தைத் தன் ஜேஷ்டகுமாரனை ஜயஸிம்ஹன் வசம் பர்வதத்தின் மேலே நிறுத்தினான். இரண்டாவது பாகத்தை இரண்டாவது புத்திரனை பீமஸிம்ஹன் வசம் மேற்குத் திக்கில் இருக்கும்படி செய்தான். அந்த மேற்குத் திக்கிலுள்ள மார்க்கத்தைத் திறந்துவிட்டிருந்தான். அந்த மார்க்கமாய் ரஜபுத்திரர் சகாயத்திற்கு வருகிறதற்குத் தடையாகக் கூடாதென்றே வேண்டுமென்று அப்படிச் செய்திருந்தான். மூன்றாவது பாகத்தைத் தானே வகித்துக் கொண்டு கிழக்குத்திக்கில் நயனமென்கிற அதி கடினமான பர்வதப்பிரதேசத்தில் நின்று கொண்டான்.

ஆஜம்ஷான் சைனியத்துடனிருந்த ஸ்தலத்தில் அவன் பர்வதங்கள் முன்னே வராதபடி தடுத்துக்கொண்டு நின்றன. குன்றுகளின் மேல் ஏறவாகாது. பிரவேசிக்க முடியவில்லை.

அக்பர் அஜ்மீரில் அவுரங்கசீபுடன் சேர்ந்து கொண்டான். தகப்பனும் மகனும் சேனைகளை ஒருங்கு சேர்த்துக் கூட்டிக்கொண்டு பர்வதங்களின் மத்தியில் காவலில்லாமல் விட்டிருந்த மூன்றும் மார்க்கத்தைப் பிடித்துக்கொண்டு வந்தார்கள். அந்த மார்க்கமும் பாறைகள் நிறைந்ததா யிருந்தது. ஒரு மார்க்கத்தின் பெயர் தோவாரி. மற்றொரு கணவாயின் பெயர் தயல்வார். இன்னொன்றின் பெயர் முன்னே சொல்லிய நயன மென்ற கணவாய். தோவார் வந்து சேர்ந்தவுடன் அவுரங்கசீபு அக்பரை ஐம்பதினாயிரம்சிப்பாய்களுடன் முன்னே போகும்படி செய்து தான் உதய சாகரமென்ற புகழ்பெற்ற ஏறிக்கரையில் த ள மி ற க் கி க் கொஞ்சம் களைப்பாறுவதற்கு யத்தனித்தான்.

ஷஹஜாதா அக்பர் பர்வதமார்க்கமாய் உதயபுரம் போகப் புறப்பட்டான். ஒரு நரப்பிராணியாவது அவனைத் தடுக்கவில்லை. அரண்மனைகளும் தோட்டங்களும் கண்களில் புலப்பட்டன. ஆனால் மனிதன் ஒருவனாவது எங்கும் காணோம். எல்லாம் நிசப்தமா யிருந்தது. அவன் அங்கே தன் சைனியத்தை இறக்கி, தான் வருகிற ஆரவாரத்தைக்கண்டு பயந்து தேசத்தாரெல்லாம் ஓடிப்போய் விட்டார்களென்று நினைத்துக்கொண்டான். மொகலாய சைனியத்தில் ஆநந்தமும் ஆடலும் கூத்தும் ஆரம்பித்தன. சிலர் சாப்பாட்டிலும், சிலர் விளையாட்டிலும், சிலர் பாட்டிலும் இருந்தார்கள். இப்படியிருக்கிற சமயத்தில் தூங்கிக் கொண்டிருக்கிற வழிப்போக்கன் மேல் திடீரென்று புலி பாய்வதுபோல் குமார ஜயஸிம்ஹன் ஷஹஜாதா அக்பரின் சைனியத்தின் மேல் திடீரென்று வந்து பாய்ந்தான். புலி எல்லோரையும் வாயில் போட்டுக்கொண்டது. அநேமகாய் ஒருவரும் மிஞ்சவில்லை. ஐம்பதினாயிரம் ஜனங்களில் வெகு கொஞ்சம் பேர்கள் தாம் திரும்பினார்கள். ஷஹஜாதா அக்பர் கூர்ஜ்ஜரதேசத்தினண்டை ஓடிப்போனான்.

ஷஹாலம் தக்ஷிணத்திலிருந்து சைனியங்களைக் கொண்டுவந்து அகமதபாத்தைச் சுற்றிக் கொண்டு பர்வதங்களுக்கு மேற்குப்பக்கத்தில் வந்து நின்றிருந்தான். அங்கே பர்வதத்திலிருந்த கணவாய்க்கு கோணராவென்று பெயர்.

அவன் அந்த மார்க்கமா யிறங்கிவந்துகாங்கரலி என்ற ஸ்தலத்திலுள்ள ஏரி அரண்மனைகளின் ஸமீபம் வந்து பார்க்க, முன்னே மார்க்கம் காணவில்லை. சாமான் ஸரபரா வருவதற்கு மார்க்கம் காணப்படவில்லை. ரஜபுத்திரர் அவன் வந்த மார்க்கத்தைக்கட்டிமறைத்துவிடுகிறதாய்த் தெரியவந்தது. ஸரபரா வருகிறதற்கு மார்க்கமில்லை. அன்னஆகாரமில்லாமல் சாகவேண்டியதா யிருந்தது. வயிற்றுக்கில்லாமல் யுத்தஞ் செய்யமுடியாது என்று ஸேனாதிபதிக்கு தெரியும். ஷஹாலம் நல்ல யுத்தவீரன். ஆனால் ஸரபரா நின்று போவதைக் கண்டு முன்னே போகவில்லை.

ராஜஸிம்ஹனின் ஸேனாபதித்திறமையால் வங்காளத்திலிருந்து வந்த சேனையும் தக்ஷிணத்திலிருந்து வந்த சேனையும் மழைகாலத்தில் குரங்குச் சேனையைப்போல் ஒன்றும் செய்யமுடியாமல் நின்றன. மூல்தானிலிருந்து வந்த சேனை சின்னபின்னமாகி, போனவிடம் தெரியாமல் ஓடிப்போயிற்று. [illegible] பாதுஷா மாத்திரம்—பிரபஞ்சத்துக்கெல்லாம் கியாதிபெற்ற பாதுஷா [illegible]ங்கீர்.

165087

நமது சிறு கதை

OUR SHORT STORY

(65-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏழாம் அத்தியாயம்
தந்தையும் மகனும்

மூந்திய அத்தியாத்திற் கூறியவாறு மூர்ச்சையடைந்த தமது மகனைத் தமது மடிமீது போட்டுக்கொண்ட செங்கோட கௌண்டர் அவனது முகத்தை உற்றுநோக்கின வண்ணம் ஆனந்தபரவசராய் வெகுநேரம் வரையில் உட்கார்ந்திருந்தார். பிறகுதான் தம் மகனது மூர்ச்சையைத் தெளிவிக்க வேண்டுமென்ற ஞாபகம் அவருக்கு வந்தது. உடனே அவர் தமது பாகையை யெடுத்துக் கீழேவைத்து அதன் மீது தம் மகன் தலையை அன்புடன் மெல்ல வைத்துவிட்டு எழுந்து அருகாமையில் தமது பொருள்களை வைத்திருந்த கூடாரத்துக்குச் சென்று, தண்ணீர் சீசாவை யெடுத்துக் கொண்டு மீண்டுவந்து, தமது மகன் முகத்தில் தண்ணீரை நிரம்பத் தெளித்துக் கண்களைக் கழுவினார். அவன் தனது கண்களை மெல்லத் திறந்து சற்றுத் தியங்கிப் பிறகு, “அப்பா! நான் செய்துகொண்ட கோரமான சபதத்தை நினைக்கும்போது என் உள்ளம் நடுங்குகிறது; என் ஆவி துடிக்கிறது. என் தாயார் தன்னைத் தாங்கள் கோரமான தண்டனைக்குட்படுத்தியதாக என்னிடம் சொன்ன பொழுதும் இவ்வாறே என் உள்ளம் நடுங்கி என் ஆவி துடித்தது. ஹா ஹா! என்ன கொடுமை! தந்தாய்! அன்பின் அவதாரமான என் தாயாருக்கு அவ்வளவு கொடிய தண்டனை விதித்ததேன்?” என்று கேட்டான்.

செங்கோட கௌண்டர் [illegible] மிகுந்த துயரத்துடன், “என் [illegible]த் துக்க சாகரத்தை எங்ஙனம் உனக்கு எடுத்துரைப்பதென என் மனம் தியங்குகிறது. அச்சாகரத்தில் பதினாறு வருஷங்களுக்கு முன் வீழ்ந்து முழுகித் தத்தளித்த நான் இன்னும் அதைக் கடந்துகரையேறினபாடில்லை. ஆயினும், இதுவரை ஒருவரிடமும் அதைக் குறித்துப் பேசினதேயில்லை. தெய்வத்தினிடம் முறையிட்டுக்கொள்ளவும் இடமில்லாமற் செய்துகொண்டேன் பாவியேன்! எனதன்பையே பெரிதாக மதித்து, உற்றார் பெற்றார், செல்வம், நாடு முதலிய யாவற்றையுந்துறந்து, நாகரிகமற்ற கிராதகர் வசிக்கும் பிறதேசத்துக் காட்டில் வந்து வசிக்க இசைந்த தேவஸேனையின் அன்பினளவை அறியமாட்டாத புல்லறிவாளனேன் அவள் அடங்காக் காமத்தினால் அவைகளனைத்தையும் துறந்து என்னைத் தொடர்ந்துவந்ததாகக் கருதி, எனது சௌந்தரியத்தைக் குறித்துச் செருக்குற்றுக் களித்தேன். எட்டுமாத காலம் அவளை அநாதையாய்க் காட்டில் விட்டிருந்து, பிறகு நான் சென்றபோது, அவள் என்னை எதிர்கொண்டழைத்து என்னைச் சற்றும் கடிந்து பேசாமல், மிக்க அன்புடன் என் மனத்தைக் களிப்பிக்க முயன்றாள். அவள் இறந்திருப்பாளென்றே யெண்ணி மனந்துடித்துச் சென்ற நான் அவள் தேகம் சிறிது மெலிந்திருப்பினும் அதைக் கண்டு எல்லையில்லாத்

துயரமடைந்திருப்பேனே யெனினும், அவள் சௌக்கியமாய், நான் அவளைவிட்டுப் பிரிந்தவன்று அவளிருந்ததுபோல், இருந்ததைக் கண்டு ஏனோ; காரண மென்பது ஒன்றுமில்லாமல், சிறிது சினங்கொண்டேன். நான் அவளைக் காப்பாற்றவேண்டியவனா யிருக்க, நான் எனது அக்கடமையைச் செய்யாதொழிந்தபொழுதும், அவளைப் பிறர் காப்பாற்றுவது தகுதியன்றென புத்தியீனத்தினால் நிச்சயித்து, அவள்மீதும், உணவின்மையினால் ஏற்படும் கொடிய மரணத்தினின்றும் அவளை தப்புவித்த குமாரசுவாமி கௌண்டர்மீதும் பெருங் கோபம் கொண்டேன். அதற்குப் பிறகு என் மதியை முற்றிலும் அழித்து என்னைக் கொடிய மிருகமாக்குவது மிகவும் எளிதான காரியமா யிருந்தது. உன் தாயார் தான் எட்டுமாதம் கர்ப்பமாயிருந்ததாகச் சொன்னாள். உடனே சிறிதும் ஆராயாது, அவள் எனக்குத் துரோகம் செய்தவளென்று தீர்மானித்து, அவளைத் தொலைத்துவிடவேண்டுமென்று நிச்சயித்தேன். பிறகு என் அறிவே எனக்கு இல்லை. கொடிய மிருகமானேன். கல்லைபோன்ற மனத்துடன் என் கொடிய எண்ணத்தை நிறைவேற்றினேன். இந்நாட்டுக்குத் திரும்பக் கப்பலேறினேன். கப்பலேறியதுமே என் சுயபுத்தி திரும்பி வந்துவிட்டது. நடந்த சம்பவங்களை யெல்லாம் ஆராய்ந்து பார்த்தேன். நான் செய்தது முழுவதும் தவறென்றும் மகா பாபமென்றும் உணர்ந்தேன். தேவஸேனை இறந்திருப்பாளென்று நிச்சயமாய்எண்ணினேனாகையால், அக்காட்டுக்குத் திரும்பிச் செல்லும் யோசனையற்று, உலக சுகங்களை யொறுத்துக் காட்டிலேயே வசிக்க வேண்டுமெனத் தீர்மானித்தேன். அத்தீர்மானத்தை இந்நிமிஷம் வரையில் நிறைவேற்றிக்கொண்டு வந்திருக்கிறேன். இதுதான் என் துக்கசாகரம், அப்பா! இனியென் செய்வதென்று சொல்!" என்றார்.

முருகையன் வெகுநேரம்வரையில் ஒன்றும் பேசாது மௌனமாய் ஏதோ யோசனையிலாழ்ந்திருந்தான். செங்கோட கௌண்டர், "முருகையா! என்ன யோசனை செய்கிறாய்?" என்று கேட்டார். உடனே முருகையன் ஆச்சரியத்துடன், "என் பெயர் எப்படித் தங்களுக்குத் தெரிந்தது?" என்று வினவினான். செங்கோட கௌண்டர், "நான் மந்திரவாதியல்ல; சோதிடமும் தெரியாது. இதோ உனது பாகையின் குஞ்சத்தில், பட்டு நூலினால் 'முருகையன்' என்ற பெயர் போடப்பட்டிருக்கிறது. இது தேவஸேனையின் வேலையென்று அதைப் பார்த்தவுடனே தெரிந்துகொண்டேன். அதனால்அதுவே உன் பெயரெனத் தெளிந்தேன்" என்றார்.

பிறகு முருகையன், "அப்பா! நான் மொம்பாஸாவிலிருந்துஇங்கு வரப் புறப்படுகையில், நாங்கள் கொடிய கானகத்தில் கஷ்டப்பட்டுக் காலந்தள்ளிக்கொண்டிருக்கையில், தாங்கள் எங்களை மறந்துவிட்டு வேறொரு ஸ்திரீயை விவாகஞ்செய்துகொண்டு, அவளது குழந்தைகளிடத்தில் மிகுந்த அன்பு பாராட்டிக்கொண்டு, ஜமீன்தாருக்குரிய செல்வாக்குடன் சகல சுகங்களையும் தங்கள் மாளிகையில் அனுபவித்துக்கொண்டிருப்பீர்களென்று எண்ணியிருந்தேன். ஏனெனில், அன்று என் தாய் என்னை அக்கோரமான சபதத்தைச் செய்யும்படி சொல்லும்வரையில், எப்போது நான் 'என் தகப்பனார் யார்?' என்று கேட்டாலும், என் தாயும் என் மாமனும் 'அக்கொடியன் பேச்சை யெடுக்காதே. அவன்தான் உன்னை மறந்து ஜமீன்தாருக்குரிய பெருவாழ்வு வாழ்கிறானே!' என்று சொல்லி, அந்தப் பேச்சை நிறுத்திவிடுவார்கள். ஆதலால் தாங்கள் உலக வாழ்க்கையாகிய ஆனந்த சாகரத்தில் மூழ்கியிருப்பீர்களென்றே எண்ணிவந்தேன். தங்களை அந்த ஸ்திதியில் நான் கண்டிருந்தால், தங்களிடம் எனக்கு அன்பும் இரக்கமும் உண்டாயிரா. சகல சுகங்களையும் அனுபவிக்கக்கூடிய ஸ்திதியிலிருந்தும், அவைகளில் ஆசையற்றுத் தனிமையில் காட்டுக்குச் சென்று காலங்கழித்துவந்த தங்களைக் கண்டதும், தாங்கள் எங்களை மறக்கவில்லை யென்றும், எங்களை நினைந்தே துயரத்தில் மூழ்கியிருக்கிறீர்களென்றும் உணர்ந்தேன். தந்தையின் துயரத்தைக் கண்டு என் மனம் அனுதாப முற்றது. என் மனத்தில் அன்புபெருகிற்று. தங்களைத் தொலைக்க வேண்டுமென்ற கொடிய எண்ணம் அகன்றுநின்றது. அப்போதுதான் அவ்வெண்ணத்தின் கொடுமை என் புத்திக்குப் புலப்பட்டது. தந்தையைக் கொலவதாகச் சபதம் செய்ய எவனுக்கும் அருகதையில்லையாதலின்,

பத்திலே விழுந்த பாம்பும் சாவாது.

நான் அச்சபதத்தை நிறைவேற்றாது விடுதல் பாபமன்று என்று நிச்சயித்தேன். இனி என் தாயை எப்படிச் சந்திப்பது என்றே யோசித்துக்கொண்டிருக்கிறேன். ஜீவப்பிராணிகளில் ஒன்றுக்கும் சிறிதும் தீங்கு நினையாதவளான என் தாய் தனதன்பின் ஆலயமாய் ஒருகாலத்தில் கருதிய தங்கள்பால் மட்டும் கொடிய எண்ணங் கொண்டதுதான் என் மனத்தில் அத்தியாச்சரியத்தை விளைவிக்கிறது" என்றான்.

செங்கோட கௌண்டர், "அப்பா! அது சிறிதும் ஆச்சரியப்படத் தக்கதன்று. அது தான் மாநிடர் இயல்பு. ஒருநாளும் தமது அன்புக்குப் பாத்திரரா யிருந்திராத அயலாரிடத்தில் மிகுந்த விரோதம் உண்டாவதற்கு இடமேது? நாம் ஒருவரிடம் மிகுந்த அன்பு பாராட்டி வருகையில், அவர் நம்மிடத்து அதே அளவு அன்பு காட்டாமல், நமக்குத் துரோகமும் செய்யப் புகுவார்களே யாகில், அவரிடத்து நாம் கொண்ட அன்பு அதே அளவு விரோதமாக மாறுகிறது. உன் தாய்க்கு நான் செய்த துரோகம் மிகவும் பெரிது. நீ சிறிது நேரத்துக்கு முன் சொன்னவாறே அவளை வஞ்சித்து அழைத்துப்போய்ச் சித்ரவதை செய்தேன். அவள் என்பால் எவ்வளவு க்ஷாத்திரம் பாராட்டினாலும் ஆச்சரியப்படத் தக்கதன்று" என்றார்.

சிறிதுநேரம் இருவரும் மௌனமாயிருந்தனர். பிறகு முருகையன், "அப்பா! என் தாயின் இயல்பு கொடியதல்ல வாதலால், அவள் எனக்கிட்ட கட்டளையைக் குறித்து இதற்குள்ளேயே மிகவும் வருந்திக்கொண்டிருப்பாளென்று எண்ணுகிறேன். எவரிடத்தும் வெகுநேரம் விரோதம் பாராட்டுவது அவளுக்கு அசாத்தியமான காரியம். சீக்கிரம் அங்கு செல்ல வேண்டுவதே நமது கடமையென நினைக்கிறேன். தங்கள் அபிப்பிராயமென்ன?" என்றான்.

செங்கோட கௌண்டர், "கண்மணி! அவள் கொடிய சிந்தையுள்ளவளல்ல வாகையால், அவள் தானிட்ட கட்டளையைக் குறித்து பச்சாதாபப்பட்டு வருந்திக் கொண்டிருப்பாளென்றே நானும் நம்புகிறேன். அவளது நிகரற்ற கற்பைச் சந்தேகித்து அவளுக்கு உரைக்கவொணாக் கொடுமை யிழைத்தபின், அவளைச் சந்திப்பதென்றால் பாவியேன் மனமும் கூசுகிறது. ஆனால் அவளைச் சந்தித்து, நான் அவளுக்கிழைத்த பெருந் துன்பத்தை மன்னிக்கும்படி என்னாலானவரையில் மன்றாடிக் கேட்டுக்கொள்ள வேண்டுவது எனது கடமையாதலால், வெட்கத்தை யொதுக்கி வைத்துவிட்டு வருகிறேன். இன்றிரவு அதோ தெரியும் கூடாரத்தில் படுத் துறங்கிவிட்டு, நாளைக் காலையிற் புறப்படுவோம். நேரமாயிற்று; கூடாரத்துக்குப் போவோம் வா!" என்றார்.

இருவரும் அவ்விடத்தைவிட் டகன்று, அருகிலிருந்த கூடாரத்துக்குச் சென்று, சில தின்பண்டங்களையும் கனிகளையும் தின்றுவிட்டுப் படுத்துக்கொண்டு, பகல் முழுவதும் சுற்றியலைந்த அயர்வினால் நித்திராதேவி வீசிய மாய வலையை நீக்க வலியற்றவராய் எளிதில் அதிற் கட்டுண்டார்கள்.

எட்டாம் அத்தியாயம்

தேவஸேனையின் மனோநிலைமை

விக்டோரியா நியான்ஸாவைச் சுற்றியுள்ள காட்டில் வசித்துவந்த தேவஸேனையின் நிலைமையைச் சற்றுக் கவனிப்போம். தேவஸேனை சிறு வயதில் தாய் தந்தையரிடத்தில் மிகுந்த அன்புடையவளாயும் பணிவுள்ளவளாயும் இருந்து, பிறகு செங்கோட கௌண்டரிடம் எல்லையற்ற ஆர்வங்கொண்டு, அதுமுதல் அவரது அன்பைத்தவிர வேறு யாதொன்றையும் பெறவேண்டுமென்ற இச்சையற்றிருந்தாள். தன்னை அவர் மணந்துகொள்ள அவர் பாட்டனார் தடை செய்ததை யறிந்து, அக்கிழவர் இறக்கும் வரையில் தான் காதலித்த நாயகனைப் பிரிந்திருத்தல் அசாத்தியமெனத் தேர்ந்து, அவருடன் அந்நிய தேசத்துக்குப் போக இசைந்தாள். செங்கோட கௌண்டர் உண்மையிலேயே குற்றமற்ற குணக்குன்றல்லவேயெனினும், அவள் கண்ணுக்கு அவரிடத்தில் யாதொரு குற்றமும் இருந்ததாகத் தோன்றவே யில்லை. அவரது கம்பீரமும், தீரமும், இடம்பமின்மையும், இயற்கையறிவுமே அவள் மனத்தில் அவரிடத்துக் காதலையுண்டாக்கின. அவர் மனத்துக்கு மிகுந்த இன்பத்தைத் தந்த வனவேடர் வாழ்க்கையே அவளுடைய மனத்துக்கும் உகந்ததா யிருந்தது. புருஷன் என்னும் பெயரானது, சிறிதும் பயமின்றி வனத்

பத்தினியைத் தொட்டதும், துரியோதனன் பட்டதும்.

துட் சென்று, கொடிய மிருகங்களை எளிதி லழித்து நாட்டுக்கு நன்மை புரிந்த செங்கோட கௌண்டர் ஒருவருக்கே தகுமென்பது அவளது அபிப்பிராயம். தனது உடலையும் ஆவியையும் அவருக்கே அர்ப்பணஞ் செய்துவிட்டாள். அவரை விட்டுப் பிரிந்திருந்த காலத்தை அவள் அநியாயமாய் அவமாக்கியபொழுதாகக் கருதினாள். உலகத்திலுள்ள பொருள்களனைத்தும் அவருடைய மனத்துக்கு இன்பத்தைத் தருமளவில்தான் அவளுடைய விருப்பத்துக்குப் பாத்திரமாயின. அவள் அவரைத் தெய்வமாகப் பாவித்தாள்.

தனது நாயகனிடத்தில் இப்படிப்பட்ட அளவற்ற அன்பு பூண்டிருந்த தேவஸேனை, தன்னை அவர் தனியே காட்டில் விட்டுச் செல்லும்படி நேர்ந்தபோதும், அவரிடத்திற் சிறிதும் சினங்கொள்ளாது, விதி வசத்தினால் அவர் அவ்வாறு செய்திருக்கவேண்டுமே யொழிய, இஷ்டத்துடன் அவர் செய்திருக்கவே மாட்டார் என்று நிச்சயமாய் எண்ணங்கொண்டாள். தனது நாயகனைத் தவிர பிற புருஷரை விகார புத்தியுடன் கண்ணெடுத்துப் பார்த்தறியாத தேவஸேனை சிறிதும் கபடமற்ற மனத்துடன் குமாரசுவாமி கௌண்டருடன் தன்னுடன்பிறந்த தம்பியினிடம் பழகுவதுபோல் தாராளமாய்ப் பழகிக்கொண்டு, சதாகாலமும் தனது நாயகனது பெருங்குணங்களைப் பற்றியே அவரிடம் பேசிக் காலங்கழித்து வந்தாள். அந்த எட்டுமாதம் கழித்து செங்கோட கௌண்டர் திரும்பிவந்தபோது, களங்கமற்ற மனத்துடன் குமாரசுவாமி கௌண்டருடைய சற்குணங்களைப்பற்றித் தனது நாயகனிடம் வெகுவாய்ப் புகழ்ந்து பேசினாள்.

மறுநாட்காலையில் தனது நாயகன் தன்னை வஞ்சித்து வெளியே யழைத்துச் சென்று, தன்னடத்தையை எள்ளளவும் ஆராய்ந்துபாராமல், தன்மீது அபாண்டமான பெருங்குற்றம் சாட்டிச் சித்ரவதைசெய்து, தனது நிலைமையைக் கண்டு சிறிதும் இரங்காமல் கட்டுண்ட ஸ்திதியிலேயே விட்டுச் சென்றதை அவள் மனம் உணர்ந்ததும்தான் அவள் தான் அதுவரை குற்றமற்ற குணக்குன்றாய், இணையிலியாய், வீரம், அன்பு, பொறுமை இவைகளின் ஆலயமாய் மதித்துவந்த புருஷன், அன்பினளவை யறியும் திறனற்று, பொறுமையுடன் ஆராயுங்குணமென்பது சிறிது மின்றி, சினங்கொண்டக்கால் கருணை, தருமம் என்பவைகளை யொறுத்து, கொடிய மிருகங்களினுங்கொடிய குணமுற்று ஜீவஹிம்சை செய்து இப்பாவ உலகில் உழலும் புல்லறிவுடைய மாநிடற்களிற் கடையனென்று அறிந்தாள். தான் அதுவரை அன்புடன் அநுதினம் ஆராதித்து வந்த பொருள் பரம்பொருளல்ல, கொடுங்குணமுள்ள எல்லைப் பிடாரியென வுணரும் மனிதன் மனத்தில் அப்பொருளின்பாலுண்டாகும் அருவருப்பையே யொத்திருந்தது தேவஸேனைக்கு அவள்புருஷனிடத்தில் அப்போது உண்டான வெறுப்பு. தனது இதயத்தில் அவனை அதுவரை பக்தியுடனிருத்திவைத்திருந்த சிங்காரக் கோவிலை இடித்துத் தள்ளி, வெட்டவெளி யாக்கினாள். அவனுடைய ஞாபகத்தைத் தன் மனத்திலிருந்து அகற்ற முயன்றாள்.

கற்புடைய மாதரில் தலைமை பெற்றவளாகிய தேவஸேனை தனதுகணவனை அங்ஙனம் தனது அகத்தினின்று அகற்றுதல் நீதியோவென்ற ஐயமுண்டாகலாம். நாம் இங்கு வருணித்துள்ள தேவஸேனை கட்டுக்கதைகளிலுள்ள குற்றமற்ற ஸ்திரீயல்ல. உலகத்தில் உண்மையாகவே வசிக்கும் நற்குணம் வாய்ந்த பெண்டிரில் அவளொருத்தி. தன்னைச் சித்ரவதை செய்யும் கணவனையும் தெய்வமாய்க் கொண்டாடவேண்டுமென்பது மாதர் நீதிசாஸ்திரத்தின் முக்கியமான கொள்கையாகவிருக்கலாம். ஆயின், அது மாநிடர் இயல்புக்கு விரோதமானது. இகழத்தக்க குணமுடைய ஒரு பொருளைப் பரம்பொருளாகக் கருதுவது எவருக்கும் சாத்தியமன்று. அன்பு என்னும் பொருள் அன்பைத்தவிர வேறு எப்பொருளை எவ்வளவு கொடுத்தாலும் கிடைக்காது. நாம் இவ்விடத்தில் மெய்யன்பைக் குறித்துப் பேசுகிறோம் என்றுசொல்லுவது மிகையாகும். ஒருவர் இதயத்திலிருந்து கிளம்பிச்செல்லும் அன்பு என்னும்கார்மேகம் தண்ணன்பினாற் குளிர்ந்துள்ளவிடத்தில் மாரியைச் சொரிந்து, தன்னயம் பாராட்டல், வஞ்சகம், கோபம் முதலிய கொடிய குணங்களுள்ளவிடத்தையணுகிய மாத்திரத்திலேயே அவைகளின் வெப்பந் தாக்கப்பெற்று, அவ்விடத்தைவிட்டுச் சடுதியி லகலும். ஆகையினால் தேவஸேனை தனது நாயகன் உருவத்தை

மனத்தினின்றும் அகற்றியதானது அவளது நற்குணத்துக்கும் கற்புக்கும் ஓர் இழுக்காகமாட்டாது.

அவ்வாறு தேவஸேனை தனது கணவனிடத்தில் வைத்திருந்த அன்பையழித்தாளேயன்றி, அவனிடத்தில் விரோதம் பாராட்டவேயில்லை. தன்னருமை மகன் வளர வளர, அவன் தீரம் பெருகுவதைக் காணும்போதெல்லாம் அவன் தந்தையின் ஞாபகம் அவள் மனத்துக்கு வரும். அப்போது சற்றுத் துயரமுற்று, பிறகு அவனை மறந்துவிடுவாள். இப்படியிருக்கையில், மாநிடரைத் தீயநெறியிற் செல்லத்தூண்டும் முந்தைவினைப்பயன் ஒருநாள் தன் அதிகாரத்தைச் செலுத்திற்று. தன்மகன் திறத்தைக்கண்டதும் அவள் மனத்தில் ஒருநாள் ஒரு கெட்ட எண்ணம் உதித்து, அவள் குணமுழுவதையும் கெடுத்தது. குமாரசுவாமி கௌண்டரிடம் தனது எண்ணத்தைத் தெரிவித்தால், அவர் தன்னைத் தடுத்துவிடுவாரென் றுணர்ந்து, அவருக்கு அதைத் தெரிவிக்காமல் மறைத்தாள். தன் மகனைத் தனியே அழைத்து, அவன் மனத்தில் கோபத்தீயை மூட்டி, அவன் தந்தையைக் கொல்லும்படி அவனுக்குக் கட்டளையிட்டாள். பையன் உடனே புறப்பட்டுப்போய் விட்டான்.

குமாரசுவாமி கௌண்டர் வேட்டையிலிருந்து திரும்பிவருவதற்கு மூன்றுநான்கு நாட்களாயின. அவர் திரும்பிவந்ததும், முருகையனைக்காணாது அவன் எங்கேயென்று கேட்டார். முருகையன் அதற்குள் கப்பலேறியிருப்பானென்ற தைரியத்தினால், தேவஸேனை தான் முருகையனை அனுப்பிய காரியத்தை குமாரசுவாமி கௌண்டரிடம் சொன்னாள். அக்கொடிய காரியத்தைக் கேட்டதும், குமாரசுவாமி கௌண்டரது தேகம் கோபத்தினாற் குலுங்கிற்று. "அடீ சண்டாளி! கொண்ட புருஷனைக் கொல்லத்துணிந்த துரோகி! தன் தந்தையைக் கொல்லும்படி பிள்ளையை ஏவிய பாதகி! உன் முகத்தில் விழித்தாலும் பாபமுண்டு. இதுகாறும் நீ நற்குணமுடையவளென்று எண்ணி, மோசமன்றோ போனேன்! உன் கொடிய சிந்தையை இவ்வளவு காலம் எப்படியோ மறைத்து வைத்துக்கொண்டாயே வஞ்சகி! ஆகா! என் துர்ப்பாக்கியமே துர்ப்பாக்கியம்! நான் மகாமூடன்! ஒருமுறை ஒரு ஸ்திரீயினால் வஞ்சிக்கப்பட்ட பின்னும் ஓர் ஸ்திரீயை நம்பினேன்; தகுந்த பலன் கிடைத்தது. உன்னைக் கொடிய மரணத்தினின்றும் விடுவித்து உன்னை உடன் பிறந்தவளாகப் பாவித்துக் காப்பாற்றி வந்தேனே, அதற்குப் பிரதி யுபகாரமோ இக்கொடிய செய்கையைச் செய்யத் துணிந்தது? இக்காட்டில் நீ அநாதையாய் இருப்பதால், உனக்கு வேண்டிய உணவுப்பொருளை மட்டும் யாரிடமாவது அனுப்புகிறேன். இனி உன் முகத்தில் விழிப்பதில்லை!" என்று கடுங்கோபத்துடன் கூறிவிட்டு, குமாரசுவாமி கௌண்டர் குடிசையைவிட் டகன்றார்.

தேவஸேனைக்கு அப்போதுதான் தான் செய்த பாதகத்தின் தன்மை நன்றாய் விளங்கிற்று. யாதும் பேச நாவெழாது மயங்கிநின்றாள். தன் மகன் அவன் தந்தையைக் கொல்லுவது போல் அவள் அகக்கண்ணுக்கு முன்னே தோன்றிற்று. அக்காட்சியைக்கண்டு அவள் ஆவி நடுங்கிற்று. தான் செய்த பாதகத்தையும், அப்பாதகத்தினால் தன் தம்பியையுமிழந்து தான் நிர்க்கதியாய் நிற்பதையும் நினைத்து அடங்காத் துயரமுற்று கோவென் றலறினாள். பட்டமரம் போற் சாய்ந்து மெய்ம்மறந்தாள். ஹா! தேவஸேனா! ஆராயாத கோபத்தினாலன்றோ நீ இக்கதி எய்தினாய்! ஓராத கோபிகளனைவரின் கதியும் இதுவே!

ஒன்பதாம் அத்தியாயம்

துக்கத்தின் முடிவு

வசந்தகாலத்தில் ஒரு நாட்காலையில் விக்டோரியா நியான்ஸாவைச் சுற்றியுள்ள காடானது தன்னிடத்தே வளர்ந்தோங்கிய மரங்களின் பைந்தளிர்களினாலும், இனிய கானஞ் செய்யும் பன்னிறமுள்ள பறவைக் கூட்டங்களினாலும், பைம்புல்லை மேய்ந்துகொண்டு களித்துநிற்கும் மான் கூட்டங்களினாலும், சூரியனது செவ்விய கிரணங்களினாலும் யாவர் மனத்தினும் களிப்பூட்டுமாறு பொலிவுபெற்றிருந்தது. அவ்வானந்தக் கடலில் துன்புற்றிருந்தது ஓரேவொரு ஜீவப்பிராணிதான். அது வேறொருவருமல்ல, நமது பேதை தேவஸேனைதான்.

குமாரசுவாமி கௌண்டர் தன்னை விட்டு நீங்கியதுமுதல், அவள் ஆகாரம் நித்திரையின்றித் துயர்க்கடலில் ஆழ்ந்திருந்தாள். "சர்

வேசுவரா! உன்னைத் துதிக்கும் தகைமையற்ற மகாபாவியாயினும், ஒரு விண்ணப்பமுண்டு. என்னவென்றால், என் மகன் — இதுவரை பாபம் செய்தறியாதவன் — என்னால் மகாபாதகத்தைச் செய்யத் தூண்டப்பட்டிருக்கிறான். அவன் அவ்வாறு செய்யாது தடுக்கும்படி உன் கருணையை வேண்டிக் கொள்ளுகிறேன்" என்பாள். இவ்வார்த்தைகளையே அடிக்கடி சொல்லி ஜபித்துவந்தாள்.

"என் தெய்வமே! பாவியேன் பிழையை மன்னித்தருளவேண்டும்" என்றாள் தேவஸேனை.

அவ்வழகிய காலையில் அங்குள்ள ஜீவகோடிகளனைத்தும் களித்திருப்பதைக் கண்ட தேவஸேனை — அதுவரை குடிசைக்குள்ளிருந்து வெளிக் கிளம்பாமலிருந்தவள் — குடிசையைச் சுற்றியுள்ள அடைப்புக்குள் உலவ ஆரம்பித்தாள். அவள் மனத்தில் அகாரணமாய் ஏதோ களிப்புண்டாயிற்று. தனக்குப் பித்தம் அதிகரித்து அதனால் புத்தி மயங்குகிறது என்று எண்ணினாள். ஜீவராசிகள் யாவையும் களித்திருக்கையில் தான்மட்டும் துயருற்றிருக்கும்படி ஈசன் செய்யமாட்டானென்று துணிந்து, தனது துன்பத்துக்கும் அன்று முடிவு ஏற்படுமென்று நிச்சயித்தாள். அவ்வாறு அவள் யோசித்துக்கொண்டிருக்கையில், சமீபத்தில் குதிரைகள் கனைத்த சத்தமும் மாநிடர் குரல்களும் கேட்டன. அவள் மனத்தில் பற்பல எண்ணங்கள் சண்டமாருத விசையுடன் பாய்ந்து வெளியே சென்றன.

"எனக்கு அவ்வளவு பெரிய பாக்கியம் கிட்டுமோ?" என்று சொல்லிக்கொண்டே, அடைப்பின் கதவைத்திறந்துபார்த்தாள். ஆ! இதென்ன விந்தை? தனது பிரார்த்தனையைக் கடவுள் அருளிவிட்டாரே! அதோ நிற்பவர் மாநிடர்தாமோ? அல்லது உருவெளித்தோற்றங்களோ? அல்லது கனவில் தோன்றும் கற்பனைகளோ? இவ்விதமான எண்ணிறந்த எண்ணங்கள் கணநேரத்துக்குள் பாய்ந்துசென்றன. அடுத்தக்ஷணத்தில் தேவஸேனை மனோவேகத்தினும் அதிக வேகத்துடன் வெளியே பாய்ந்தோடி, தன் குடிசையை நோக்கி வந்துகொண்டிருந்த தன் கணவன், மகன் இவர்களை எதிர்கொண்டு சென்று, தன் கணவனைப் பணிந்து அவருக்கு எதிரே மண்டிபோட்டு உட்கார்ந்து கைகளைச் சிரமேற் குவித்து, "என் தெய்வமே! பாவியேன் பிழையை மன்னித்தருள வேண்டும்!" என்று நாக்குழற உரைத்தாள்.

அவள் குழிந்த கண்களும், சடைபோல் பிரிபிரியாயிருந்த கூந்தலும், அவள் மெலிந்த தேகமும், சமீபத்திலுள்ளவர் காதிலும் படாத ஈனக்குரலும் அவள் அநுபவித்த துயரத்தின் அளவைச் சிறிது உணர்த்தின. சுந்தர மிகுந்த மங்கையர்க்கரசியான தமது நாயகியின் பரிதாப நிலைமையைக் கண்ணுற்ற செங்கோட கௌண்டர் தலை சுழன்றது. கால்கள் தடுமாறின. தேகம் சற்றுச் சாய்ந்தது. தனக்கு உயிரையும் உடலையும் அளித்த இருவரும் படும் துயரத்தைக் கண்டு மனம்பதைத்துப் பக்கத்

தில் நின்றுகொண்டிருந்த முருகையன் தன் தந்தை விழாமல் பிடித்துக்கொண்டான்.

"முருகையா! பாவியேன் இட்ட கட்டளையை நல்ல வேளையாய் மறந்தாய். கோபவெறியில் ஆராயாமல் உன்னைக் கொடிய சபதஞ்செய்யச் சொன்னேன். என்னை மன்னிக்கும்படி உன் தந்தையை நீயும் வேண்டிக்கொள்" என்றாள் தேவஸேனை. அதற்கு முருகையன் விடையளிக்குமுன், செங்கோட கௌண்டர் தழுதழுத்த குரலுடன், "தேவஸேனா! உன்னைத் துரோகியென எண்ணிச் சிட்சைசெய்து சென்ற நாள் முதல், எவ்வளவு முயன்றும் உன்னைக் கணநேரமும் மறக்க முடியவில்லை. உனக்கு நான் இழைத்த கொடுமையை மன்னிப்பது சாத்தியமன்று. ஆயினும்; இதோ நிற்கும் நமது குமாரனுக்காக, அவனது வாழ்க்கையில் சந்தோஷத்தை யூட்டுவதற்காக, நான் பாதகனாயினும் பண்டு நான் உன்னிடத்திற் கொண்ட மெய்யன்புக்காகவும், ஒப்பற்ற வாழ்க்கையைத் தானே பாழ்க்கடித்துக்கொண்ட பாவியேன் மீதவாணாளில் சிறிது சுகம் பெறுவதற்காகவும், நான் செய்த பாதகத்தை நீ மறந்துவிடவேண்டும். உன்மீது யாதொரு பிழையுமில்லை. எல்லாத் துக்கங்களுக்கும் பாவியேனே காரணம். எனதருமைக் காதலி! நீ என்னை மன்னிப்பாயோ?" என்றார். "நமது நிகரற்ற காதலுக்கும் பங்கமுண்டாக்கியது வினைப்பயனன்றோ? எனதாருயிரே! இத்தேகம் தங்களுடையதன்றோ? தாங்களோ என்னை வேண்டுவது?" என்றுரைத்துக்கொண்டே எழுந்து தாவி அவரை யிறுக வணைத்துக் கொண்டாள் தேவஸேனை.

அருகே நின்ற முருகையன் கண்களினின்றும் ஆநந்தவருவி பெருகிற்று. "மெய்க்காதலுக்கு இடையூறுகள் பல நேரிடினும், கடைசியில் அது அவைகளையெல்லாம் அகற்றிவிட்டு விளங்கும் என்பதற்கு இதைவிட வேறு சாக்ஷியும் வேண்டுமோ? மற்றொரு உண்மையும் வெளியாகிறது. அதென்னவெனில், சினமுடையார்க்குச் சுகமில்லை, அன்பை அநியாயமாய் அழித்துவிடுவார் என்பதே!" என்றான்.

தாய் தந்தையரிருவரும் அவனது சாந்தத்தையும் பொறுமையையும் கண்டுமகிழ்ந்தனர். ஆகையினால் இறைவனருளினால் யாவரும் சினத்தை நிந்திப்பாராக! (முற்றும்.)

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

விஜயநகர இராஜ்யம்

முன் சஞ்சிகைகளில் இராஜராஜ சோழர், குலோத்துங்க சோழர் இவர்களைப் பற்றிச் சொன்னோம். சோழஅரசர்களில் கியாதி அடைந்தவர்கள் இவர்களே. சற்றேறக்குறைய தென்னிந்தியா முழுவதையும் ஆண்டுவந்தனர். தங்கள் இராஜ்யத்தைப் பலப்படுத்திச் சீர்திருத்தினர். இவர் காலம் கி. பி. 11, 12-வது நூற்றாண்டு என்று சொல்லலாம். இவர்களுக்குப்பின் பட்டத்திற்கு வந்த சோழ அரசர்கள் இவர்களைப் போன்ற சாமர்த்தியசாலிகள் அல்லர். தஞ்சாவூரிலிருந்து ஆளாமல், திருச்சிராப்பள்ளிக்குச் சமீபத்திலிருக்கும் உறையூரிலிருந்து ஆண்டுவந்தனர். இவர் காலத்தில் மகம்மதியர் படையெடுத்து வந்தனர். அவர்களைத் தோற்கடிக்க முடியாமல் சோழ அரசர் தோல்வியுற்றனர். ஆகையால் சோழராஜ்யம் க்ஷீணதசை அடைய ஆரம்பித்தது ஆச்சரியமல்ல. சுமார் ஐம்பது வருஷகாலம் வரையில் மகம்மதிய அதிகாரம் தென்னிந்தியாவைவிட்டு அகலவில்லை. இந்த சமயத்தில்தான் துங்கபத்திரை நதிக்கரையில் **விஜயநகர இராஜ்யம்** என்ற ஒரு சிறு இந்து இராஜ்யம் உண்டாகி, நாளடைவில் பிரபலமடைந்து, தென்னிந்தியாவில் மகம்மதியர்கள் படையெடுக்காதபடி தடுப்பதற்குத் தென்னிந்தியாவிலுள்ள மற்ற இந்து இராஜ்யங்களை ஒன்றுசேர்த்து, அவைகளுக்குத் தலைமைவகித்து, அவைகளால் 'பாதுகாக்கும் இராஜ்யம்' என்று கொண்டாடப்பட்டு, 14 வது நூற்றாண்டின் இறுதியில் தென்னிந்தியாவினின்றும் மகம்மதியர்களை அடியோடு துரத்தி, தன்னுடைய அதிகாரத்தைத் தென்னிந்தியா முழுவதிலும் நிலைநிறுத்திற்று. 'விஜயநகரம்' என்ற பதத்திற்கு 'ஜயத்தைக் கொடுக்கும் நகரம்' என்று பொருள். ஒரு பொதுச் சத்துருவின் நிமித்தம் தென்னிந்தியாவிலுள்ள இந்து இராஜ்யங்களை ஐக்கியப்படுத்தி அவைகளுக்குத் தலைமை பூண்டு, அபாய சமயத்தில் அவைகளைக் காத்தபடியால் இதன் சரித்திரம் நாம் படித்துப் பாராட்டத்தக்கது.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

மந்தோதரி

ஒருநாள் இராவணனுடைய தாயான கைகசி தன் மகனைப் பார்த்து, "குழந்தாய்! நான் இதுவரையில் பூஜை செய்துவந்த லிங்கம் ஆதிசேஷனுடைய மூச்சுக்காற்றால் பாதாளலோகத்திற்குப் போய்விட்டது. நீ கைலாயத்திற்குச் சென்று மஹா தேவரிடத்திலிருந்து ஒரு ஆத்ம லிங்கத்தைக் கேட்டு வாங்கிக் கொண்டுவா" வென்றாள். தசகண்டன் அப்படியே கைலயங் கிரிக்குச் சென்று கங்காதரனை யடிபணிந்து ஸாமகானத்தால் துதித்து, "ஈசனே! என்தாய் இதுவரையில் ஆராதித்துவந்த தங்களுடைய லிங்கம் ஆதிசேஷனுடைய மூச்சுக்காற்றால் பாதாளத்தில் அழுந்திவிட்டது. அதற்குப் பதிலாய் வேறொரு லிங்கத்தை யருளவேண்டும்" என்றான். சந்திரசூடனும் ஒருலிங்கத்தை யெடுத்து ஆசீர்வதித்து இராவணனுடைய கையில் கொடுத்தார். அவனும் அதைப் பெற்றுக்கொண்டு, "ஸ்வாமி! எனக்கு எவ்விதத்திலும் தகுந்த பாரியை இதுவரையில் நானும்மூவுலகிலும்தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை. தங்களுடைய பக்கத்திலிருக்கும் பார்வதி தேவியைப் போன்ற அழகும் லாவண்யமும் பொருந்தி யிருந்தாலல்லது நான் ஒருத்தியையும் வேண்டேன். தாங்களே அவ்விதமான ஒரு பெண்ணைத் தேடிக் கண்டுபிடித்து எனக்கு மணஞ்செய்விக்கவேண்டும்" என்றான். தன் அந்தரங்க பக்தனான தசக்கிரீவனுடைய வேண்டுகோளை மறுக்க மனமில்லாதவராய், மேல் நடக்கப்போகும் காரியத்தையும் நன்றாய் அறிந்தவராய், சங்கரன் சிரித்து, "குழந்தாய்! பார்வதியைப் போன்றவள் பார்வதியே. இந்த லக்ஷணங்கள் பொருந்தின ஒருத்தியை நீ மணம்புரியவேண்டுமென்றிருந்தால் உன் ஆயுட்காலம் முடியும் வரையில் பிரமசாரியாகவே யிருக்கவேண்டும். நீ கேட்ட வரத்தையும் கொடுக்காமலிருப்பது எனக்கிஷ்டமில்லை. இந்தத் தர்ம சங்கடத்தில் செய்யுமுபாயமறியேன்" என்றார். உடனே இராவணன் முன்பின் யோசிக்காமல் ஆத்திரம் மேலிட்டு "அப்படியானால் இந்தப் பார்வதியையே எனக்கு மனைவியாய்க் கொடுத்தாலாகாதோ" என்றான். உமாபதி கௌரியைக் கடைக்கண்ணால் பார்த்து ஜாடைசெய்து, "உன்னைப்போன்ற பரம பக்தனுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதைக் காட்டிலும் எனக்கு வேறொன்றும் பெரிதல்ல. இந்த ருத்ராணி என்னிடத்தில் இவ்வளவு காலமிருந்தது போதும். நீ இவளை யெடுத்துக்கொண்டுபோ" வென்றார்.

இராவணன் அடங்கா மகிழ்ச்சிகொண்டு கிரீசனைப் போற்றி விடைபெற்றுக்கொண்டு, லிங்கத்தைக் கையிலும், பார்வதியைத் தோளிலும் வைத்துக்கொண்டு இலங்கைக்குத் திரும்பிச் சென்றான். அப்பொழுது கௌரி, "மஹேசுவரர், தாம் செய்த பிரதிக்ஞைக்குக் கட்டுப்பட்டு என்னை இந்த ராக்ஷஸனுக்குக் கொடுத்துவிட்டார். இந்தச் சங்கடத்திலிருந்து என்னைத் தப்புவிப்பதற்கு என்னுடன் பிறந்தவரான மாயனைத்தவிர வேறொருவருக்குந் திறமையில்லை. ஆபத்பாந்தவர், அனாதரக்ஷகர், தீனபந்து, தயாமூர்த்தி, மஹா மாயாவி. அவரே எனக்குச்சரணமென்று மனத்தைத் தேற்றிக்கொண்டு வேண்டினாள். திருமால் அதையறிந்து இராவணன் போகும் வழியில் குறுக்கிட்டு, "தசானனா! இதென்ன புதிய வேஷமாயிருக்கிறது. கையில் லிங்கமும் தோளில் நங்கையுமாய் இப்படித் தரிசனங் கொடுப்பதேன்?" என்றார். இராவணன் தன் சாமர்த்தியத்தைச் சொல்லியாற்ற அதுவரையில் ஒருவரும் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்ததினால், மகாவிஷ்ணு அப்படிக் கேட்டவுடன், அகமுக மலர்ச்சிகொண்டு "கேட்டீரா சங்கதியை?" யென்று முழுவதையும் ஆதியோடந்தமாய் நடந்த வரலாறு தெரிவித்து, தான் சிவனை ஏமாற்றின தன் புத்தி சாதுரியத்தைத் தானே மெச்சிக்கொண்டான். விஷ்ணு அதைக்கேட்டுச் சற்று ஆழ்ந்து ஆலோசிப்பவரைப்போல் அபிநயித்து "இராவணா! நல்ல வேலை செய்தாய். ஆனால் உன் தோளிலிருப்பவள் உண்மையாய்ப் பார்வதிதானா வென்று எனக்குச் சந்தேக முண்டாகிறது. முதலாவது, ஒருவன் தன்மனைவியைக் கொடுத்துவிடென்று கேட்கும் வழியில்போகிறவனுக்கெல்லாம் கொடுத்துக்கொண்டிருப்பானா? இரண்டாவது, அவன் அப்படிச் செய்தாலும், அவள் ஆக்ஷேபிக்காமலிருப்பாளா? மூன்றாவது, தம்முடைய அங்கத்தில் பாதியாய்த் தம்மோடு கலந்து தம்மை விட்டுப் பிரியமுடியாத உமையை அவர் எப்படிக் கொடுக்கமுடியும்? சற்றுப் பொறு. இவளை நான் கவனித்துப் பார்த்துவிட்டேன். பார்வதிக்கும் இவளுக்கும் வெகு நுட்பமான பேதங்கள் காணப்படுகின்றன. அவள் என் தங்கை யாகையால் எனக்கும், அவளுடன் எப்பொழுதும் கூடியிருக்கும் மஹா தேவனுக்குமே அதைக் கண்டுபிடிப்பது சாத்தியம். இவள்பார்வதியல்லவென்று நிச்சயமாய்ச் சொல்லுவேன். நீ பரம சாது; உனக்கு வெளுத்த தெல்லாம் பால்; யார் சொன்னதையும் நம்பிவிடுவாய்; கள்ளங் கபடந் தெரியாதவனென்று நன்றாயறிந்து அவரையே நம்பியிருந்த உன்னை அந்தச் சடையாண்டி ஏமாற்றிவிட்டாரே. நீ இப்படிக் கேட்பா யென்பது முன்னமே யறிந்து பார்வதியை நீ பார்க்கமுடியாமல் மறைத்து ஓரிடத்தில் ஒளித்துவிட்டு இந்தச் சூதுச்சரக்கைக் கொடுத்து உன்னைத் திருப்திசெய்து அனுப்பியிருக்கிறார். நீயும் அதை சந்தேகப்படாமல் வாங்கிக்கொண்டு வந்துவிட்டாயே. நீ ஒருநாளும் நினைக்காத விடத்தில் பார்வதியை அவர் ஒளித்துவைத்திருக்கிறார். அது எனக்கல்லவா தெரியும். இப்பொழுதே இந்த மோசடியான பெண்ணைத் திருப்பிக் கொடுத்துவிடு. இவ்வளவுதூரம் அவளைச் சுமந்துவந்ததற்கு உனக்குக் கூலிகூடக் கிடைக்கவில்லை. பிறகு பார்வதி யிருக்குமிடத்தை உனக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

தசக்கிரீவன் அதைக் கேட்டுச் சற்று ஆலோசித்து, மாயன் சொன்ன காரணங்கள் நியாயமாகத் தோன்றினதால் அதை நம்பி, பரமசிவனிடத்தில் கடுங்கோபங் கொண்டு, "இதோ ஒரு நொடியில் இந்தப் பீடையை அவன் முகத்தில் எறிந்துவிட்டு வருகிறேன். அதுவரையில் தயவுசெய்து இங்கே இருக்கவேண்டும்" என்று கடுவேகமாய்க் கைலைக்குத் திரும்பிவந்தான். இதைப் பரமசிவன் அறியாதவரா? தாம் மாத்திரம் ஒண்டியாய்ப் பிரமத கணங்களுடன் வீற்றிருந்தார். இராவணன் வெகு பரபரப்புடன் அவரிடத்திற்குச்சென்று தோளிலிருந்த பார்வதியைத் திடீரென்று பூமியில் இறக்கிப் போட்டு, "ஓய்! நல்ல வேலை செய்தீர். நீரே கதியென்று திரிகரண சுத்தியாய் நம்பி ஆராதித்துவந்த எனக்கு நல்ல கிருபைசெய்தீர்! உமக்குக் கொடுக்க இஷ்டமில்லாவிட்டால் உண்மையைச் சொல்லலாகாதோ? பொய்யையும் சொல்லி என்னை ஏமாற்றவும் வேண்டுமோ? உண்மையான பார்வதிக்கும் இந்த மோசச் சரக்கிற்கும் எனக்கு பேதந்தெரியாதென் றெண்ணினீரோ? அப்பொழுதே உம்மை வெளிப்படுத்தியிருப்பேன். உம்மிடத்திலுள்ள பக்தியாலும் உமக்குப் பச்சாத்தாபமுண்டாய் நீரே குற்றத்தை யொப்புக் கொள்வீரென்ற நம்பிக்கையாலும் இதுவரையில் பொறுத்திருந்தேன். லோக கண்டகனான என்னை முழுமடையனென்று முடிவு செய்துவிட்டீரோ? இவ்விதமான பெண்கள் எனக்கு வேண்டியமட்டில் கிடைக்கும். ஆனால் நீர் பார்வதியை யொளித்துவைத்திருக்குமிடம் எனக்குத் தெரியாதென்றெண்ணவேண்டாம். அவளைக் கண்டுபிடித்து மணஞ்செய்து பிறகு உம்மைப் பார்க்கிறேன். உண்மையான பார்வதி இவளேயென்று எனக்கு நீர் சொன்ன பொய் உமக்கே பலிக்கட்டும். இந்த மாயப் பெண்ணை நீர் எந்நாளும் கட்டிக்கொண்டு அழவேண்டியதுதான். என்னைப்போன்ற பரமார்த்தியான சாதுவை ஏமாற்றினது வீண்போகுமா? தன்வினை தன்னைச்சுடும். எனக்கென்ன குறை? இருப்புத்தூணைச் செல்லரிக்குமா? இதை லோகமெங்கும்பறையறைவித்துஒருவனாவது உம்மை நம்பி மோசம் போகாதவண்ணம் செய்யாவிட்டால் என் பெயர் இராவணனல்ல" என்று மார்தட்டி வீரவாதஞ்செய்து அங்கிருந்து சண்டமாருதம்போல் புறப்பட்டு வந்தான்.

இதற்குள் மகாவிஷ்ணு மேல்நடக்கவேண்டிய காரியங்களை ஆலோசித்துத் தம் திருமார்பிலிருந்த சந்தனத்தைத் திரட்டி ஓர் பெண்ணைச் சிருஷ்டித்தார். அவள் மகாலக்ஷ்மி எப்பொழுதும் விளங்கும் திருமார்பின் சம்பந்தம் பெற்ற திவ்வியசந்தனத்திலிருந்து உண்டானவளாகையால் திருமாமகளின் உருவத்தையும் அழகையும் உடையவள். அவ்விருவர்க்குமுள்ள பேதத்தைக் கண்டுபிடிப்பது அசாத்தியம். திருமால் அவளை மயனென்ற அசுர சிற்பியின் வீட்டில் கொண்டுபோய் வைத்து அவனிடத்தில் ஒப்புவித்து, "நீ இவளை உன் பெண்ணாகப் பாவிக்கக் கடவாய். இராவணன் இன்னும் சற்று நேரத்திற்குள் இங்கே வருவான்.

இவளைத் தனக்கு மனைவியாகக் கொடுக்கும்படி கேட்பான். நீ இவளை உன் பெண்ணாகவே அவனுக்கு விவாகம் செய்துகொடு" என்று இன்னும் சில விஷயங்களை அவனுக்குச் சொல்லி முன்போல் இராவணன் வரும் வழியில் காத்திருந்தார்.

தசானனன் வெகு தூரத்திலேயே அவர் இருப்பதைக்கண்டு, 'இவர் சொன்ன சொல் தவறாதவர்; நமது நண்பர்; பரமசிவனைப் போல் மோசக்காரரல்ல. இவருடைய வார்த்தையை நம்புவதில் கெடுதியில்லை' யென்று முடிவுசெய்தான். சமீபத்தில் வந்து "நீர் சொன்னபடி அந்த மூதேவியைக் கொண்டு போய் அவரிடத்தில் எறிந்துவிட்டு, அவர் செய்த மோசத்தையும் தெரிவித்து வந்துவிட்டேன். வெட்கத்தால் அவர் தலைகுனிந்து ஒன்றும் சொல்லமுடியாமல் திகைத்திருந்தார். இனி உண்மையான பார்வதி யிருக்குமிடத்தைக் கண்டுபிடிக்கவேண்டும். போவோமா?" என்றான். விஷ்ணு, "அப்படியே செய்வோம். ஆனால் அவளை யொளித்து வைத்திருக்குமிடம் எங்கேயென்று சொல், பார்ப்போம்" என்றார். இராவணன் சுவர்க்க மத்திய பாதாள மென்ற மூவுலகிலும் பிறர்க்குத் தெரியாததும் நெருங்க முடியாததுமான பல விடங்களைச் சொன்னான். திருமால், "இராவணா! உன் புத்தி சற்று மலினம் அடைந்திருக்கிறதென் றெண்ணுகிறேன். இப்பொழுது நீ சொன்ன விடங்கள் யாவும் உனக்குத் தெரிந்தவையே யல்லவா. அங்கே உமையைப் பரமசிவன் ஒளிப்பாரா? நீ ஒருநாளும் மனத்தால் நினைக்காததும் சந்தேகப்படாததுமான ஓரிடத்தில் வைத்திருக்கிறார். அதை நீ எவ்வளவு யுகங்கள் வரையில் முயன்றாலும் அறிவதரிது" என்றார். இராவணன் எவ்வளவு ஆலோசித்தும் தோன்றாமல் திகைத்திருந்தான். பிறகு மதுசூதனன் "உன்னை வீணாய் அலைக்கழிப்பதில் பிரயோஜனமில்லை; சொல்லிவிடுகிறேன். நீ ஒருநாளும் தேடநினைக்காத விடம் எது? உன் ராஜதானியே. எப்பொழுதும் உன்பார்வையிலிருக்குமிடத்தில் அவளைக் கொண்டுபோய் வைக்கமாட்டா னென்பது உனக்கு உறுதி. இதை நம்பியே பரமசிவன் அவளை இலங்கையில் ஓரிடத்தில் ஒளித்து வைத்திருக்கிறான்" என்றான். இராவணன் "இலங்கையிலா? என் ஊரிலா? ஒருநாளு மிருக்காது! அடுத்த நிமிஷத்தில் எனக்குச் சமாசாரம் எட்டியிருக்காதா?" என்றான். ஸ்ரீகாந்தன் "என் வார்த்தையில் உனக்கு நம்பிக்கை வராது. கையும் மெய்யுமாய்ப் பிடித்துத் தருகிறேன், வா" என்று அவ்விருவரும் இலங்கையில் மயனுடைய அரண்மனைக்குச் சென்றார்கள். அங்கே அந்த அசுரத்தச்சன் அவர்களை மிகுந்த மரியாதையுடன் வரவேற்றுப் பூஜித்து, "என்னை பொருட்டா யெண்ணி லோகநாதனான தாங்களும் லோககண்டகனான தாங்களும் இங்கே வந்த காரணத்தையறிய விரும்புகிறேன்" என்றான். அப்பொழுது அதற்குப் பதில் சொல்ல யத்தனித்த இராவணனைத் தடுத்துக் கேசவன், "மயனே! வேறொன்றுமில்லை. நமது பிரதாப லங்கேசுவரனுக்கு எவ்விதத்திலும் தகுந்த ஓர் பாரியையைக் கண்டு பிடித்து மணஞ்செய்வதற்காக வெகு காலமாய்த் தேடிக்கொண் டிருக்கிறேன். என் மனதிற்குப் பிடித்த பெண்ணாக ஒருத்தியும் மூன்று லோகங்களிலும் காணப்படவில்லை. முடிவில் உன் பெண்ணின் ஞாபகம் வந்தது. முதலிலேயே இதைப்பற்றி நினைக்காமற் போனேனே யென்று வருத்தப்படுகிறேன். இவ்வளவு அலைச்சலும் ஆயாஸமும் நேர்ந்திராது. இவ்விருவரும் எவ்விதத்திலும் ஒருவர்க்கொருவர் ஏற்றவர்களென்று தெய்வமே நிர்ணயித்திருக்கிறது. ஆகையால் இராவணேசுவரனைக் கணவனாய் அடையும் பாக்கியத்தை உன் மகளும் அவனை மருமகனாயடையும் அதிருஷ்டத்தை நீயும் பெறக்கடவீர்கள். அப்படியே தசானனன் மந்தோதரியைப்போன்ற பட்டமகிஷி தனக்கு எக்காலத்திலும் எவ்வுலகத்திலும் கிடைக்காதென்று ஒப்புக்கொள்ளுவான்" என்றார்.

'மரகதவல்லி' எனும் கற்பனைக் கதை செவ்விய தமிழ்நடையில் படிப்போர்க்கு இனிமைதரும் வழியில் எழுதப்பட்டிருப்பதல்லாமல் படிப்போரின் மனதையும் தன்வழி ஈர்த்து செல்லக்கூடியதா யிருக்கிறது. இந்நூல், நல்லவருடைய கூட்டுறவு துன்மார்க்கரைத் திருத்தவல்லது என்பதை ருஜுப்பித்துக் காட்டுகிறது. இந்நூலில் கூறப்பட்டிருக்கும் வருணனைகளும் உள்ளபடியே மிக அற்புதமா யிருக்கின்றன. நீதிகளும் வியந்து பாராட்டத் தக்கனவாயிருக்கின்றன. நவசக்தி. படங்களுடன், விலை அணா 12.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

விளையாட்டின் அவசியம்.

குழந்தைகள், வாலிபர்கள் இவர்களுடைய தேகம், புத்தி, குணம் இவைகள் நன்றாய் அபிவிருத்தியடைவதற்கு விளையாட்டு எவ்வளவு அவசியமென்பதை நமது நாட்டவர் நன்றாய் அறிந்துகொள்ளவில்லை. விளையாட்டுத்தலம் என்னும் அமெரிக்கப் பத்திரிகையிலிருந்து சில விஷயங்களை இங்கு எழுதுவோம்.

"வேலைசெய்யும் காலங்களில் தீயநெறியிற் பிரவேசிக்க இச்சைப்படுபவர் மிகவும் சிலர். அவ்விச்சை வேலைசெய்யாமலிருக்கும் காலங்களிலும், விளையாடும் காலங்களிலுந்தான் உதிக்கிறது. ஞாயிற்றுக்கிழமையன்று நாம் கடற்கரைக்குச் செல்லும்பொழுதுதான் நாம் கோவிலுக்குப் போகாமல் நின்றுவிட இடமுண்டு. சிறு பிராயமுள்ளவர்கள் தீயநெறியிற் பிரவேசிக்க இச்சைகொள்வது எப்பொழுதெனில், வேலை செய்யாமலாவது பள்ளிக்கூடத்துக்குப் போகாமலாவது ஜனசமூகத்திற் பழகும்பொழுதுதான்.

இவ்விஷயத்தில் இதுவரை யாதொரு விதமான சட்டமும் நிரூபிக்கப்படவில்லையென்றே சொல்லலாம். குலத்தின் நன்மையைக் கோருபவருக்கு இதுவே ஒப்பற்ற தனம்—அறிவாளர் பயிலத்தக்கதும், மனத்துக்கும் சௌக்கியத்தை யளிக்கத்தக்கதும், கல்விப் பயிற்சிக்கு சாதகமானதுமான விளையாட்டை ஏற்படுத்துவதற்கு இதுவே தகுந்த தருணம்—தேசத்தவருக்கு ஒழிவுவேளைகளில் களிப்பைத் தரத்தக்க பொழுதுபோக்கு வழியும் நற்போதகமளிக்கும் நெறியும் ஒருங்கே அமையப்பெற்ற மார்க்கத்தை ஏற்படுத்த இதுவே நல்ல தருணம்."

***

விஷகடிகளுக்கு நூதன வைத்தியம்

பூரானைப்போன்ற ஜலமண்டலி என்னும் விஷ ஜந்து, ஒருவரைக் கடித்துவிடுமேயாகில் அவர் உடனே மயக்கமடைவார்; அவர் தேகத்திலிருந்து வியர்வை ஆறாய்ப் பெருகும். அது கடித்த சிறிது நேரத்துக்குள், முற்றிய தேங்காய்களைத் துருவி ஒரு ஆழாக்குப் பால் பிழிந்து அதில் கொஞ்சம் வெள்ளைச் சர்க்கரை சேர்த்து, சிறிதுநேரத்துக்கொருமுறை ஒரு தேயிலைக் கரண்டி யளவாக மூன்றுமணி சாவகாசத்துக்குள் ஆழாக்குப் பாலையும் விஷந் தீண்டப்பெற்றவர் குடிக்கும்படி செய்தால், வியர்வை வரவரக் குறைந்து, அவர் பிழைத்துக்கொள்வார். ஜலமண்டலி கடித்து மூன்று மணி சாவகாசம் வரையில் யாதொரு மருந்தும் கொடுக்காம லிருந்து விட்டால், தீண்டப்பெற்றவர் மூன்று மணி சாவகாசத்தில் இறந்துபோனாலும் போய்விடுவார்.

பாம்புகடித்து விஷந்தீண்டப் பெற்றவருக்கு ஒன்று அல்லது இரண்டு வாழை மரங்களின் தண்டுகளை யுரித்துப் பிழிந்து அவைகளின் இரசத்தைக் கொடுத்து அவர் அதைக் குடிக்கும்படி செய்தால் அவர் விஷம் நீங்கிப் பிழைப்பது நிச்சயம்.

கஞ்சா குடிக்கும் குழாயின் அடிப்பாகத்தில் திரண்டு சேர்ந்திருக்கும் இறுகிக் கறுத்த அடைபோன்ற வஸ்துவை எடுத்து, குளிர்ந்த நீர் விட்டுக் கல்லில் உரைத்து, கல்லில் தோன்றும் கரிய குழம்பை, ஒருவருக்குப் பாம்பு கடித்த இடத்துக்கு மேலே, எங்கு விஷம் கலந்து கறுக்காத நல்ல சிவந்த இரத்தம் காணப்படுகிறதோ அங்கு ஒரு கத்தியினால் சிறிது கீறி, அக்காயத்தில் விட்டுத் தேய்த்து அக் குழம்பு நல்ல இரத்தத்துடன் கலக்கும்படி செய்தால், அவர் பிழைப்பது நிச்சயம். நல்ல இரத்தமுள்ளவிடத்தைக் கண்டுபிடிக்க நாலைந்து இடங்களிற் கீறும்படி நேர்ந்தாலும் நேரலாம். ஒருமுறைஒருஸ்திரீயைப்பாம்புகடித்து, அவள் தேகமுழுவதும் விஷம் பரவி நல்ல இரத்தமே காணாமற் போனபின் மேற்கூறிய கருங்குழம்பை அவளது கண்ணிமையில் வைத்துத் தேய்த்ததில், இரண்டு மணி நேரத்துக்கெல்லாம் அவள் மூர்ச்சைதெளிந்து பிழைத்துக்கொண்டதாகக் கேள்விப்படுகிறோம்.

***

ஐக்கியக் கடை நிலைபெற வேண்டுவன யாவை?

வங்காளம் பேகார் ஒரிஸ்ஸா ஐக்கியப்பத்திரிகையில் மிஸ்டர் ஜே. டி. டானவன், ஐ. ஸி. எஸ்., என்பவர் பின்வருமாறு எழுதுகிறார்.—

"ஓர் ஐக்கியக்கடை விஷயத்தில் ஜயம் பெறவேண்டுமானால், முதன்முதலில் ஒற்றுமைப்பில் பூரண நம்பிக்கை யிருக்கவேண்டு

வது அத்தியாவசியம். அந் நம்பிக்கையைக் குறையாமல் காப்பாற்றுவதற்கு யாவும் நன்கு நடைபெறும் என்னும் நம்பிக்கை அவசியமானது. தருமசிந்தனையும் சகோதர வாஞ்சையும் (அங்கத்தினர்களிடத்தில்) காணப்படாவிட்டால், பிற்கூறிய நம்பிக்கை வீணான எண்ணமாகும். *** ஐக்கியக்கடையினிடத்திலுள்ள விசுவாசமே இந்த நம்பிக்கையுள்ளதை நன்கு விளக்கிக்காட்டக்கூடிய அறிகுறியாயிருக்கிறது. வங்காளத்தில் இதுவரை உலைவீனமாகியும் உலைவீனமாகிக்கொண்டுமுள்ள ஐக்கியக் கடைகளில் எந்தக் குணம் இல்லாமலிருந்தது யாவரும் கவனிக்கத்தக்கதாயிருந்ததெனில் அங்கத்தினர்களின் விசுவாசமே. பக்கத்திலுள்ள கடைக்காரனொருவன் ஒரு பண்டத்தைக் கொஞ்சம் குறைந்த விலைக்கு விற்பானேயாகில், அதே பண்டத்தை ஐக்கியக் கடையில் கொஞ்சம் அதிக விலைக்கு வாங்க உங்களில் எவருக்கு இஷ்டமிருந்திருக்கிறது? வங்காளத்தில் உங்களுக்குத் தெரிந்து எத்தனை பேர்களுக்கு இஷ்டமிருந்திருக்கிறது?

இந்தக் கேள்வியைக் கேட்டால், நீங்கள், ‘ஐக்கியக் கடையானது வியாபாரியைவிடக் குறைந்த விலைக்குப் பண்டங்களை எங்களுக்கு விற்கவேண்டும். அப்படிக்கிருக்க, ஐக்கியக் கடையில் பண்டங்களுக்கு நாங்கள் அதிக விலை கொடுப்போமென்று எதிர்பார்ப்பது தகுதியோ? எப்பொழுதாயினும் ஐக்கியக் கடையில் விற்கும் பண்டங்களுக்கு நாங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியிருக்கும் பக்ஷத்தில், அக்கடையினால் நாங்கள் அடையும் நன்மையென்ன?” என்று கேட்கலாம். கேள்வி சரியான கேள்விதான்; அதற்குப் பதில் சொல்லியே தீரவேண்டும்.

ஐக்கியக் கடையில் சரக்குகளுடன் மட்டச் சரக்குகளைக் கலக்கமுடியாது. * * ஐக்கியக் கடையின் தன்மையே மட்டச்சரக்குக் கலப்புக்கு விரோதமானது. * * ஐக்கியக் கடையானது கல்கத்தாவில் ஓர் மண்டி வியாபாரியினிடமிருந்து ஓர் பண்டத்தைக் காலக்கிரயப்படி வாங்குவதாகவும், ஐக்கியக்கடைக்குப் பக்கத்துக்கடை வியாபாரியும் அதே பண்டத்தை அதே வியாபாரியினிடம் அதே விலைக்கு வாங்குவதாகவும் உங்களுக்குத் தெரிந்திருக்கையில், அந்த வியாபாரி அப்பண்டத்தை ஐக்கியக் கடையைவிடக் குறைந்த விலைக்கு விற்பானேயாகில், அவன் அப்பண்டத்தில் மட்டச் சரக்கைக் கலந்திருக்கவேண்டும், அல்லது நஷ்டப்பட்டுக்கொண்டு விற்கிறான் என்று நிச்சயமாய் அறிந்துகொள்ளலாம். உலகத்துக்கு நன்மை புரியவேண்டுமென்பதே அவனது பிரதான நோக்கமல்லவாகையாலும், அவன் வியாபாரத்திலேயே குறியுள்ளவனாகையாலும், அவன் ஏதோவொரு காரணமில்லாமல், நஷ்டப்பட்டுக்கொண்டு விற்கமாட்டான்.

முதலில், மட்டச்சரக்குக் கலப்பதைப்பற்றிக் கவனிப்போம். அவன் மட்டச்சரக்கைக் கலப்பதாகவிருந்தால், ஐக்கியக் கடையில் நிச்சயமாய் கலப்பின்றிச் சுத்தமான பண்டங்கள் அகப்படுமென நம்பி, ஐக்கியக்கடையை ஆதரிக்கவேண்டாமா? * * ஐக்கியக்கடையின் பிரதான நோக்கங்களிலொன்று சுத்தமான பண்டங்களை உதவுவதேயாதலால், அந்நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்கு அதிகவிலைகொடுக்கவேண்டி வரலாம். வேறு வழியில்லை” **

பிறகு மிஸ்டர் டானவன், வியாபாரிவேண்டுமென்று நஷ்டப்பட்டுக்கொண்டு விற்பதைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்.

“சுயநலங் கருதும் ஒருவர், ‘எனக்கு வேண்டிய சாமான்களைக் குறைந்தவிலைக்கு வாங்கச் சமயம் வாய்த்தால், ஏன் நான் இலாபமடையக்கூடாது?’ என்று கேட்கலாம். சுயநலங்கருதுபவரில் பெரும்பான்மையோரைப்போல அவரும் நீடித்தயோசனையில்லாதவர். அவ்வியாபாரியினிடம் செல்வதனால், அந்தச் சமயத்துக்கு நாலு காசோ இரண்டு ரூபாயோ அவனுக்கு லாபமாகுமேயெனினும், கடைசி முடிவில் அதைப்போல் பத்து மடங்கு தொகையை இழப்பானென்பது நிச்சயம். ஏனெனில், வியாபாரிகள் தங்கள் எதிரிகளைவிடக் குறைந்தவிலைக்கு விற்பதற்குக் காரணமென்ன? அவர்கள் வியாபாத்தை அழித்து, தனிக்காட்டு இராஜாவாக தாங்களிஷ்டப்பட்ட விலை வைத்து விற்பதற்கு இடம் செய்துகொள்ளத்தான். * * * தான் வேணுமென்று குறைந்த விலைக்கு விற்றும் ஐக்கியக் கடையிலிருந்து ஒரு வாடிக்கைக்காரராவது தன்னிடம் வராமலிருந்தால், அவ்வியாபாரி தன் தந்திரத்தை மாற்றி, தருமமாய்ப் போட்டிபோட ஆரம்பித்து விடுவான்.

பல பாபம் தீர, ஒரு புண்ணியமாகிலும் பண்ணவேண்டும்.

[" விவேக போதினி" அநுபந்தம்.

Supplement to the "Viveka Bodhini."]



தாக்ஷாயணி திருமணம்.

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XIV } துன்மதிஸு புரட்டாசிமீ :: 1921-ம்ஸு அக்டோபர்மீ } பகுதி 4

8- FEB 1922
MADRAS.

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

கருகியழி வகலவுயிர் விட்டுக்கிக் கிளைஞர்
கதறியழ விரவுபறை முட்டக்கொட் டியிட
கனகமணி சிவிகையில மர்த்திக்கட் டையினி
லிடைபோடாக்

கரமலர்கொ டரிசியினை யிட்டுச்சித் ரமிகு
கலையையுரி செய்துமறைகள் பற்றப்பற் றுகனல்
கணகனென எரியவுடல் சுட்டுக்க கூழியவர்
வழியேபோய்

மருவுபுனல் முழுகிமனை புக்குத்துக் கமற
மனிதர்தமை யுறவுநிலை சுட்டிச்சுட் டியுற [ன்
மகிழ்வுசெய்து அமுதுபட வைத்தத்துட் டன்மத
மலராலே

மயல்விளைய அரிவையர்கள் கைப்பட்டெய்த் துமிக
மனமழியு மமைடியைமி னைத்துச்சொர்க்கப் பதி
வழியையிது வழியெனவுரைத்துப்பொற்கழல்கள்
தருவாயே!

பொருவின்மலை யரையனருள் பச்சைச்சித்ர மயில்
புரமெரிய இரணியத னுக்கைப்பற் றியியல்
புதியமுடு கரியதவம் உற்றுக்கச் சியினி
லுறமேவும்

புகழ்வனிதை தருபுதல்வ பத்துக்கொத் துமுடி
புயமிருப தறவுமெய்த சக்ரக்கைக் கடவுள்
பொறியரவின் மிசைதுயிலுசுத்தப்பச் சைமுகில்
மருகோனே!

அரியமர கதமயிலி லுற்றுக்கத் துகட
லதுசுவற அசுரர்கிளை கெட்டுக்கட் டையற
அமரர்பதி யினியகுடி வைத்தற்குற் றமிகு
மிளையோனே!

அருணமணி வெயில்பரவு பத்துத்திக்கு மிகு
மழகுபொதி மதர்மகுட தத்தித்தத் திவளர்
அணியகய லுகளும்வயல் அத்திப்பட் டியுறை
பெருமாளே.

குற்றமற்றதாயும் இணையற்றதாயுமுள்ள இமய மலையின் அரசன் உலகங்கள் நன்மை பெறும்படி பெற்றெடுத்த பச்சை நிறமுள்ள அழகிய மங்கையும், திரிபுர தகனஞ் செய்யப்போகும் காலத்தில் சிவ பெருமானது வாமபாகத்திலிருந்துகொண்டு பொன் மயமான மேருபர்வதத்தை வில்லாகப் பிடித்தரு ளியவளும், எவராலும் இயற்றுவதற்கு அரிதான சிறந்த தவத்தைச் செய்துகொண்டு காஞ்சிமாநகரில் எழுந்தருளி யிருந்தவளும், யாவராலும் துதிக்கப் படுபவளுமான உமாதேவியார் உலகோர்க்குத் தந் தருளிய குமாரா! இராவணனது மகுடந்தரித்த முடிகள் பத்தும் புஜங்கள் இருபதும் அற்று வீழும் படி கணை தொடுத்தவரும், சக்கராயுதத்தைக் கையி லேந்தியவரும், படமுள்ள ஸர்ப்பதின்மீது சய னித்துக் கண்வளர்பவருமான சுத்த மரகதம் போன்ற மகாவிஷ்ணுவின் மருகோனே! அழகிய பச்சை மயிலின்மீதேறிச் சென்று கோஷிக்கும் கடல் வற்றித் துகளெழும்படியாகவும், அசுரர் வம் சம் வேரோடு அழிந்து போகும்படியாகவும், பொன் னுலகத்தில் தேவர்கள் முன்போல் குடியேறிச் சுக மாய் வாழும்படியாகவும் செய்வதற்காகவே அவ தரித்த சிறு பாலகனே! உதயகாலத்துச் சூரியனது அழகிய சிவந்த ஒளியைப் பரப்புவதும், பத்துத் திக்குகளிலுமுள்ள யாவற்றினும் அதிக அழகு வாய்ந்ததுமான கிரீடத்தை யணிந்து கயல்மீன்கள் கூட்டங்கூட்டமாய்க் குதித்து விளையாடும் வயல் களையுடையதாய் நீர்வள மிகுந்து சிறப்புற்றிருக் கும் அத்திப்பட்டில் வீற்றிருந்தருளும் பெருமானே! மாநிடருள் ஒருவர் இவ்வுலகத்தை விட்டுப் போகி றேமேயென மனம் வெதும்பிப் பிரக்ஞையிழந்து யமதூதர் கைப்பட்டு மரிப்பாரேயாகில், அவரது சுற் றத்தவர்கள் இனி நாம் எப்படிக்காலந்தள்ளுவதெனப் பயந்து, கோவென்றலறித் துயருறுவார்கள்; பறை, முரசு, துடி முதலியவைகள் ஆகாய கபாலத்தைப் பிளக்குமாறு முழங்கும்; சுற்றத்தவர்கள் அவரை இரத்தினங்க ளிழைக்கப்பெற்ற பொற் பல்லக்கில் வைத்து மயானத்துக்குக் கொண்டுபோய், கட்டை

(இதன் தொடர்ச்சி 119-ம் பக்கம் பார்க்க.)

பல மரம் கண்ட தச்சன், ஒரு மரம் வெட்டமாட்டான்.

விவேக போதினி

தோ.14] துன்மதிஞூ :: புரட்டாசிமீ [ப. 4

கந்த புராணம்

SKANDA PURANAM

பிரமதேவரும் மகாவிஷ்ணுவும் மாயையின் வலையிற் சிக்கி, அகங்காரங்கொண்டு தாமே பரம்பொருளென மருட்சியுற்ற காலத்தில் அவர்களறிவுக்கு எட்டாமல்நின்ற நிர்மல சொரூபத்தைத் தம்மிடத்து மெய்யன்புபூண்ட அடியார்கள் கண்டு பேரின்ப வாரிதியில் மூழ்குமாறு திருக்கைலாய மலையில் சிவபெருமான் வீற்றிருக்கையில், உலகமாதாவான சங்கரி அவரது பாதமலர்களைத் தன் கைகளினால் தொழுது, அவரது கருணையைத் துதித்து, "மகாப்ரபு! தங்களுடைய இணையற்ற உண்மை நிலைமையை அடியேனுக்குத் தெரிவித்தருளவேண்டும்" எனப் பிரார்த்தித்தாள். அப்போது எம்பெருமான் தேவியார்மீது மிக்க அன்புபாராட்டி ஆதியில் தாம் உருவம் குணம், செயல் இவை யொன்றுமில்லாமல், நிர்மலமாய் எங்கும் நிறைந்து நின்றதையும், பிறகு தாம் வியாபித்துள்ள ஜீவகோடிகளின் பந்தங்களை ஒப்பற்ற தமது ஏகசக்தியினால் ஒழிக்கவேண்டுமென தாம் நினைந்ததையும், அதற்காக ஐந்து இயற்கைச் சக்திகளாகிய பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்ற பஞ்சபூதங்களைத் தனித்தனியே உபயோகித்து பஞ்ச லிங்கங்கள் உண்டாக்கியதையும், உருவமற்ற தாம் ஓர் உருவெடுத்துக்கொண்டு, அவ்வுருவத்தின் வாயிலாகத் தம்மைத் தியானித்து, பச்சிலை, நாண்மலர் இவைகளைக் கொண்டு அருச்சித்து ஆன்மகோடிகள் யாவரும் ஈடேறச் செய்யவேண்டுமென வுன்னி, ஈசானம், தற்புருஷம், வாமம், அகோரம், ஸத்யோஜாதம் ஆகிய ஐந்து திருமுகங்களையும், மூவிலைச் சூலம், மழு, தண்டம், வாள், அபயம், நாகம், பாசம், அங்குசம், தமருகம், வரதம் இவைகள் தோன்றும் பத்துத் திருக்கரங்களையும், ஒரு தேகத்தையும், இரண்டு திருவடிகளையுமுடைய அநுக்கிரக மூர்த்தியான சதாசிவமூர்த்தியின் உருவத்தைப் பூண்டதையும், பிறகு தாம் லிங்கம், சுகாசனம், உமேசம், கலியாணசுந்தரம், அர்த்தநாரீசுவரம், சோமாஸ்கந்தம், சக்கிரப்பிரதானம், திரிமூர்த்தம், கேசவார்த்தம், தக்ஷிணமூர்த்தம், பிக்ஷாடனம், கங்காளம், காமசம்ஹாரம், காலாரி, ஜலந்தராரி, திரிபுர சம்ஹாரம், சரபம், நீலகண்டம், திரிபாதம், ஏகபாதம், வைரவம், ரிஷபாரூடம், சந்திரசேகரம், நடராஜம், கங்காதரம் எனப்படும் இருபத்தைந்து மூர்த்தங்களானதையும், பிறகு தம்முடன் கலந்துள்ள பிரணவத்தை வெளியாக்கி, அதன்பின் அருள்புரியும் பலமூர்த்திகளாகிய விதத்தையும், எல்லாவற்றிற்கும் முன் தோன்றிய மாயையின் மூலமாகவே அழிவற்ற முப்பத்தாறு தத்துவங்களை யுண்டாக்கியதையும், பிறகு தாம் கருணையினால் பஞ்ச கிருத்தியங்களையும் நடத்துவதையும், மூவகைப்பட்ட உயிர்களும் கிளம்பும் தத்துவக் கணங்களில் உள்ளவர்கள் உதித்தவாறே ஒடுங்கச்செய்து, தாம் ஆதியந்தமற்று ஓரே தன்மையுடையவராய் எங்கும் வியாபித்து நிற்பதையும் தேவிக்கு விரிவாய் எடுத்துரைத் தருளினார்.

சங்கரிதேவி அதுகேட்டு, "சுவாமி! தங்களுக்கு உருவமே கிடையாதென முதலில் கூறி, பிறகு தாம் ஐந்து உருவங்களையும் மற்றும் பல வுருவங்களையும் அடைந்ததாகவும் உரைத்தருளினீர்கள். அதெங்ஙனம்?" எனக் கேட்க, எம்பெருமான், "நாம் அரூபியே. மேற்கூறிய உருவங்களனைத்தும் நமது அருளின் உருவங்களாகும்" எனத் திருவாய்மலர்ந்தருளினார். அதுகேட்ட மகாதேவி மனமகிழ்ச்சியுடன், "சுவாமி! அவ் வடிவங்களெல்லாம் தேவரீரது அருளின் வடிவங்களாதலாலும், தேவரீரது திருவருள் அடியேனே என்று உரைப்பதாலும், அவ்வுருவங்கள் அடியேனுடைய உருவங்களாகும்" என்று தன்னைத்தானே புகழ்ந்து பேசினாள்.

அப்போது சிவபெருமான் சங்கரியை நோக்கி, "அஞ்ஞானத்தினால் சூழப்பட்டுள்ள ஜீவன்கள்தோறும் நாம் இருந்து, அவைகள் ஞானம் பெறுமாறு செய்கின்றோம். நாம் அவ்வாறு செய்வதை நிறுத்துவோமேயாகில், மாயையிற் சிக்கிய ஜடமாக ஆகி அழியும். உன்னிடத்திலும் யாம் உறைத்திராவிடில், நினது உயிரும் உணர்ச்சியுறாது. இவ்வுண்மையை உனக்கு விளக்கிக் காட்டுகிறேன், கவனித்துப் பார்ப்பாயாக!" என்றுரைத்து, பிரமன் முதலாயுள்ள சகல உயிர்களையும் நடத்தும்செய்கையை ஒழித்துநின் றருளினார்.

தேவர்களுக்கெல்லாம் தலைவரான சிவபெருமான் அவ்வாறு செயலற்று சுத்த ஸாத்விக மூர்த்தியாய் நின்றதும், பூமியாதியாயுள்ள சகல புவனங்களிலுமுள்ள சகல ஜீவராசிகளும் உணர்ச்சியற்று, சூத்திரக்காரனால் ஆட்டுவிக்கப்படாத பதுமைகளைப்போல் கிடந்தனர். ஆட்டுவிப்பவன் அத்தொழிலைப்புரிவதை நிறுத்தியதும் பதுமைகள் பொத்தெனக் கீழே வீழ்வதுபோல, உலகவாழ்வெனும் நாடகத்தை பல்லுயிர்களையும் நாடக பாத்திரங்களாகக் கொண்டு நடத்தும் சூத்திரக்காரனான பரமசிவன் தமது அருளை அவ்வண்ணம் செலுத்தாதொழிந்ததனால், ஜீவராசிகளனைத்தும் மாய்ந்தன.

அங்ஙனம் உயிர்த்தொகை யாவும் மாய்ந்ததைக் கண்ணுற்ற சங்கரி அஞ்சி மனந்தளர்ந்து, சிவபெருமான் திருவடிகளை வணங்கி, "எந்தாய்! தேவரீர் உலகங்களிலுள்ள அனைத்துமாகி, அவைகளெல்லாவற்றிலும் மறைந்து நின்று, சகல வுயிர்களின் செயலகளனைத்தையும் இயற்றுவதை அறியுஞ் சக்தியற்று நின்றேன் அடியேன். அவ்வுண்மையை எனக்கு விளக்கிக் காட்டும்பொருட்டு, தாம் தமது செயலைச் செய்யாதொழிந்தீர். அதன் பயனாக ஜீவகோடிகளெல்லாம் பிரளய காலத்திற் போல அந்தகாரத்தில் மூழ்கியிருக்கின்றன. இங்ஙனம் செயலற்று நின்றது தேவரீருக்குக் கணப்பொழுதேயாயினும், அவ்வுயிர்களுக்குப் பல யுகங்கள் கழிந்திருக்கும். இது என் பிழையினாலேற்பட்ட துன்பமாகும். ஆதலால் தேவரீர் திருவுளம்பற்றி, அனைத்துயிர்களும் முன்போலவே உயிர்பெற்றெழுந்து பெருகுமாறு அருள்புரியவேண்டும்" என்று வேண்டி, பன்முறை அவரது பாதமலர்களில் வீழ்ந்து வணங்கினாள்.

அப்போது சிவபெருமான் கருணைகூர்ந்து, ஜீவராசிகள் முன்போலவே தமது வினைப்பயன்களை யனுபவிக்கும்படி செய்யத் திருவுளம்பற்றி, முதன்முதலில் தமது திருவருள் பெற்றவரான ஏகாதச ருத்திரர்கள் உணர்வு பெறும்படி செய்தார். உணர்ச்சி மீண்டும் பெற்றெழுந்த ஏகாதச ருத்திரர்கள் சிவபெருமானைச் சிந்தித்து, பிரளயகாலத்திற்போல உயிர்கள் உணர்ச்சியற்று அந்தகாரத்திற் பட்டதற்குக் காரணமென்னவென்று தம் மனத்தில் ஆலோசித்தனர். அங்ஙனம் ஆராய்ந்து பார்த்ததில், நான்முகனும் திருமாலும் தேடியுங் காணவொண்ணாத நின்மல மூர்த்தியான சிவபெருமானது செய்கை இதுவெனத் தேர்ந்து, இறந்து கிடந்த உயிர்களை யெல்லாம் எழுப்பவேண்டுமென்ற அவாக்கொண்டு, தங்கள் ஆசையைப் பூர்த்திசெய்து கொள்ளுவதற்கு சர்வேசுவரனாகிய சிவபெருமானது கழலிணைகளை யருச்சிப்பதே வழியென வுணர்ந்து, வானுலகத்தில் பகவானது பழையஜோதி காணப்படாமையால், பூமியில் திருவிடைமருதூருக்குச் சென்றனர். ஆங்கு விதிப்படி சிவபெருமானது உருவமொன்றை நிருமித்துப் பிரதிஷ்டைசெய்து, பஞ்சாக்ஷரத்தை ஜபித்து, விபூதியும் உருத்திராக்ஷமாலையும் தரித்துக்கொண்டு, வில்வம், தாமரையிதழ், நந்தியாவட்டை முதலிய நறுமண மிக்க பச்சிலைகளினாலும் மலர்களினாலும் அருச்சித்து, தூபதீப நைவேத்தியங்கள் செய்து, எம்பெருமானது அருளைத் துதித்து நின்றனர். அப்போது கருணைக்கடலான எம்பெருமான் அவர்களுக்கெதிரே தோன்றி, அவ்வேகாதச ருத்திரர்களுடைய பிரார்த்தனைக் கிசைந்து, உயிர்த்தொகை யனைத்தையும் பண்டுபோல் ஆட்டுவிக்க நினைத்தார். உடனே பிரமன், இந்திரன் முதலிய வானவரும், முனிவர்களும், மற்றுமுள்ள ஜீவகோடிகளனைத்தும் உயிர்பெற்றெழுந்தன, புவனங்களைச் சூழ்ந்திருந்த இருளும் அகன்றது. இரவில் அயர்ந்து செயலற்று உறங்கினவர் உணர்ச்சி மீண்டதும் மெல்லத் தமது கண்களை விழித்துப் பார்ப்பதுபோல, உலகிலுள்ள பிராணிகளெல்லாம் உயிர்த்தெழுந்தன.

இவ்வதிசயத்தைக் கண்ணுற்ற பிரமன் முதலானோர் இது ஈசன் செயலே யாகுமெனத் தேர்ந்தனர். ஏகாதச ருத்திரர்களும் களிப்புற்று, திரிபுரங்களை யெரித்தருளிய எந்தையின் பாதமலர்களில் வீழ்ந்து நமஸ்கரித்துத் துதித்துநின்றார்கள் அப்போது சிவபெருமான் அவர்களை நோக்கி, "நீங்கள் எம்மை இங்கு அருச்சித்ததனால் உயிர்களையெல்லாம் நாம் உயிர்ப்பித்தோம். உங்களுக்கு வேண்டியதைக் கேளுங்கள்" என வுரைத்தருள, ஈசனிடத்து எல்லையற்ற மெய்யன்பு பூண்டவராகிய அவர்கள், "எம்பெருமானே! எவரேனும் எம்மைப்போல அன்புடனே தேவரீரது பாதாரவிந்தங்களை நாள்தோறும் இரவில் பூஜிப்பவர்களுக்கு மகாசிவராத்திரியன்று அப்பதுமங்களைப் பூஜித்த பலனைக் கொடுத்தருள வேண்டும்" என வேண்டிக்கொண்டார்கள். சிவபெருமான், "உம்மைப்போல் புவியில் பூஜை செய்வோ ரனைவருக்கும் முத்திதந் தருளுவோம்" என்று திருவாய்மலர்ந்தருளி மறைந்தார்.

பிறகு பிரமன் முதலிய வானோர்களனைவரும் கூடித் திருக்கைலாயமலைக்குச்சென்று, சிவபெருமானை வணங்கி, "உயிர்களுக்கெல்லாம் உயிர்க்குயிராய் வியாபித்து நிற்கும் வள்ளலே! நாங்கள் தேவரீரது அருளைப் பெருமையால் உணர்ச்சியற்றுச் சடமாகி பன்னெடுங்காலம் எமதிறைவனை உமது பாதாரவிந்தங்களை நினைந்து வணங்காது சும்மாகிடந்தோம். அதுகாரணத்தினால் பவசாகரத்தில் மூழ்கித் தவிக்கிறோம். அப்பாவத்தை அகற்றிக் கொள்ளுவதற்கு எங்களுக்கு ஓர் வழியுரைத்தருளவேண்டும்" எனப் பிரார்த்தித்தனர்.

அப்போது சிவபெருமான், "தேவர்களே! உணர்ச்சி யழிந்துகிடந்த காலத்தில் நீங்கள் வேதத்திற்கூறிய முறைப்படி நடந்துகொள்ளாததினால் உங்களுக்கு ஏற்படும் பாபமெல்லாம் உமாதேவியைச் சாரும். இன்று முதல் உங்கள் கடன்களை வழுவாது செய்வீராக!" என மொழிந்தருளினார். தேவர்கள் கவலை நீங்கி அவரது பாதங்களைப் பணிந்து கைலையைவிட்டகன்றார்.

• அதுகேட்ட உமாதேவி வெருவி இறைவன் பாதமலர்களை வணங்கி, "எம்பெருமானே! உயிர்த்தொகைகளுக்கு உற்றவினை என்னிடத்து வரவேண்டுவதேனென்று கூறியருள வேண்டும்" எனப் பிரார்த்தித்தாள். அப்போது தக்ஷனுக்களித்த வரத்தினை முற்றுவிக்கக்கருதிய சிவபெருமான், "உமையே! நீ உன்னைப் புகழ்ந்து பேசினாய். அதுகேட்டுச் சினமுற்று, நாம் உனக்குப் புத்தி புகட்டுவதற்காகவே உயிர்களின் உணர்ச்சியை நீக்கினோம். ஆதலினால் உயிர்த்தொகைள் அடைந்த பெரும் பாவம் யாவையும் உன்னையே வந்தடையும். அன்றியும், அப் பெரும் பாவத்தினைச் சுமப்பது உயிர்த்தொகைகளனைத்தையும் ஈன்றருளிய உனக்கல்லது அச்சிற்றுயிர்களுக்குச் சாத்தியமோ?" எனப் புகன்றருளினார்.

அம்மொழிகளைக் கேட்டதும் உமாதேவி உளநடுங்கி, "சுவாமி! பேதையேன் செய்த பிழையின் கொடுமையைக் குறைத்து, என்னிடத்தில் மிகுதியாய் நிற்கும் குற்றத்தினை அகற்றிக்கொள்ள ஓர் வழியைத் தெரிவிக்க வேண்டும்" என வேண்ட, கருணை வாரிதியான எம்பெருமான், "சங்கரி! நீ பூமிக்குச் சென்று, அங்கு காளிந்தி நதியில் பிரணவாக்ஷரத்தைப் போன்ற உருவமுடைய ஓர் முதிய வலம்புரிச் சங்கத்தின் வடிவத்துடன் உறைந்து உலகம் நன்மை யடையவேண்டுமென்னும் நோக்கத்துடன் தவம்புரிவாயாக! அவ்வாறு பலநாட்கள் கழிந்தபின்னர், பிரமபுத்திரனாகிய தக்ஷன் அங்குவந்து உன்னைக் கண்டு கையிலெடுப்பான். உடனே நீ குழந்தை வடிவமடைவாய். அவன் மனைவியினால் வளர்க்கப்பெற்று சிறு பெண்ணாய் வளர்வாய். உனக்கு ஐந்து வயது நிரம்பியவுடனே, நீ மனத்திலாசையோடு எம்மை நோக்கி அருந்தவம் புரிவாயாக! அத்தவத்தினுக்குகந்து யாம் வந்து நின்னை மணந்து, இவ்வுயர்ந்த மலைக்கு மீண்டும் அழைத்துவருவோம்" என்று தைரியங் கூறியருளினார்.

உமாதேவியாரும் இறைவன் கழலிணைகளை வணங்கி,மனங்கலங்கினவளாய் உலகம் செய்த தவத்தினால் கைலையைவிட்டகன்று, இறைவன் பணித்தவாறே காளிந்திநதிக்குச்சென்று, பிரணவத்தைப் போன்ற ஓர் வெண்சங்கமாகி, குற்றமற்ற ஓர் தாமரை மலரின்மீது எழுந்தருளி, பஞ்சாக்ஷரத்தைச் சிந்தனை செய்துகொண்டு நெடுங்காலம் தவம்புரிந் திருந்தாள்.

பழகப் பழகப் பாலும் புளிக்கும்.

அவ்வாறிருக்கும் நாளில், உலகிலுள்ளோர் மாசிமாதத்தில் மகத்தினன்று நீராடுவதற்காகக் காளிந்தி நதிக்குச் சென்றார்கள். தன் தவத்தினாற் கிடைத்த உண்மைப் பயனை யடையும் வேளை அணுகியதனால் விதியினால் தூண்டப்பட்டு, தக்ஷனும் தேவர்குழாம் சூழப் புறப்பட்டுக் காளிந்தி நதியை யடைந்து,அங்கு ஓர் தாமரை மலரின்மீது தெய்வத்தன்மை பொருந்தியதாய் விளங்கிய வெண்சங்கத்தை யெடுத்தான். உடனே அது சுந்தரம் மிக்க ஓர் பெண் குழந்தையாக மாறிற்று. தக்ஷன் அது கண்டு அடங்கா மகிழ்ச்சிகொண்டு, நீண்ட சடை தொங்கப்பெற்ற இறைவனது வரத்தினால் கௌரியே தனக்குப் புதல்வியானதை ஞானதிருஷ்டியினா லறிந்து, தனக்கு முன்னமேயே சென்று காளிந்தி நதியில் நீராடிப் பிறகு இந்திராணி முதலிய தேவமாதர்கள்சூழ, நதியின் கரையில் வேதகானம் கேட்டுக்கொண்டிருந்த தன் தேவி வேதவல்லியின்பால் அக்குழந்தையை யெடுத்துச் சென்று, உலகமாதாவை அவள் கரத்தினில் அளித்தான். வேதவல்லி அக்குழவியை அன்புடன் தன் மார்போடணைத்துக்கொண்டு,தன் தனபாரங்களினின்று பெருகும் பாலினை யூட்டி, பிறகு விரைவில் தனது அரண்மனையை யடைந்து, மிகுந்த ஆர்வத்துடன் வளர்த்து வந்தாள்.

ஜீவகோடிகளனைத்தையும் ஈன்ற தாயான உமாதேவியார் தாக்ஷாயணி யென்னுந் திருநாமம் பெற்றுச் சிறப்பாய் வளர்ந்து, ஐந்து வயது நிரம்பி ஆறுவது வயதடைந்தாள். உடனே தாக்ஷாயணி தனது ஓர் பாதியான எம்பெருமானை யடையவேண்டுமென்ற நோக்கத்துடன் தவம் புரியவேண்டுமென நிச்சயித்து, தன் தாய் தந்தையர்களை நோக்கி, "என்னை யீன்றவர்களே! நான் கங்கையுறையும் செஞ்சடாதரரான பரமேசுவரனுக்கே உரியவளாகும் பெரும் பாக்கியத்தைப் பெற்றவள். அவரை மணம்புரிவதற்காக நான் தவம்புரிய வேண்டும். அதற்கு அநுகூலமாக தனியே ஓர் கன்னிமாடம் நிருமித்து என்னை அதில் விட்டுவையுங்கள்" என்று கேட்டுக்கொண்டாள்.

அது கேட்ட தக்ஷனும் வேதவல்லியும் மகிழ்வினோடு ஓர் கன்னிமாடத்தை அழகுபெற அமைப்பித்து, மூன்று உலகங்களையும் படைத்தருளுகின்ற முதல்வியைத் தமது மகளென ஆர்வத்துடன் போற்றி, பன்முறை உச்சி மோந்து, தேவியைப் பிரிவதை யுன்னி மனம் வருந்தி, "அம்மா! உன் இஷ்டப்படி நோன்பு இயற்றுவாயாக!" என்றுரைத்து, பல பெண்களுடன் அத் தவமாளிகைக் கனுப்புவித்தார். அம்மாளிகையை யடைந்தது முதல் தாக்ஷாயணி கங்கையைச் சடையில் வைத்த எம்பெருமானது திருநாமத்தை மனத்தினுள் நிறுத்தி, நல்ல நியமத்துடன் தினந்தோறும் நோன்பியற்றிவந்தாள்.

அப்போது வைராக்கியத்துடன் தவஞ்செய்வார்க்கு வேண்டிய வேண்டியவாங்கு அளிக்கும் இயல்புடையவரான சிவபெருமான் உமாதேவியார் செய்த தவத்தைக்கண்டு, அத்தேவியாரை ஆட்கொள்ளக் கருதி, கைலாயகிரியை விட்டு, முப்புரிநூல் பூண்டு, கோவணமும் தருப்பையும் கட்டிய தண்டத்தைத் திருக்கரத்தில் ஏந்திக்கொண்டு, பிராமண பிரமசாரி வடிவங்கொண்டு வந்து, பூமியில் தக்கமாபுரியை யடைந்து, சங்கரி நோன்பியற்றும் மாளிகையினுட் புகுந்தருளினார். உடனே அங்கு காவலாயிருந்த பெண்கள் வந்து அவரது திருவடிகளைப் பணிய, அவர் அவர்களை நோக்கி, "எனது வருகையை நுமது தலைவிக்கு உரைப்பீராக!" எனத் திருவாய்மலர்ந் தருளினார்.

உடனே சில பெண்கள் தாக்ஷாயணியினிடம் சென்று, அவள் திருவடிகளை வணங்கி, நல்ல தவத்தினைச் செய்த மறையவரொருவர் வந்து தமது வருகையை அவளுக்குத் தெரிவிக்கும்படி பணித்ததாகச் சொல்ல, தாக்ஷாயணி அவரைச் சடுதியில் உள்ளே அழைத்துவரும்படி கட்டளையிட்டாள். அப்பெண்கள் விரைந்துசென்று அவ்வேதியரைத் தேவியினிருப்பிடத்துக்கு அழைத்துவந்தனர். தேவதேவரான சிவபெருமான் ஓர் பிராமண வடிவத்துடன் அங்கு போய்ச் சேர்ந்ததும், அம்பிகை எதிர்கொண்டு வந்து, தனது நாயகனிடத்து அவர் அன்பு வாய்ந்தவரெனக் கருதி, அவரது மலரடிகளை வணங்கி, வேண்டிய பூசைகளைச் செய்தாள். அப்போது சிவபெருமான் தேவியை நோக்கி, "நீல நிறமான ஒளிவீசும் மேனியையும், புன்னகை பொருந்தியதாய்ச் சந்திரனைப் போல் தண்ணொளி வீசும் முகத்தினையு

பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல்.

முடைய மாதரசே! நாம் இங்கு வந்தது ஒன்றைப் பெறும் விருப்பத்துடன்; நீ அதை விரைந்தளிப்பாயாகில், அதனைச் சொல்லுவோம்" என்று கூறி யருளினார்.

அதற்குத் தேவி, "நான் தரத்தக்க பொருளொன்றைச் சொல்லுவீரே யாகில், அது உமக்கு இன்றே கிடைக்கும். தாங்கள் கருதுவதென்ன வென்று சொல்வீராக!" என மறுமொழி புகன்றாள். அப்போது சிவபெருமான் "உன்னை மணந்து கொள்ளுவதற்காகவே வந்தோம். அதுவே உன்னை நாம் வேண்டிக் கொள்வது. அதைத் தடுத்து எதிர் மொழி கூறும விருப்பாயாக!" என மொழிந்தார். அவ்வார்த்தைகள் செவியிற்பட்டதும், தாக்ஷாயணி தனது காதுகளைக் கரங்களால் மூடிக்கொண்டு, கடுங்கோபத்துடன், என்னையாளுகின்ற நித்தன் வந்து என்னை மணம்புரியுமாறு நான் நெடுங்காலமாகத் தவமியற்றி வருகிறேன். அப்படியிருக்க, நீர் இவ்வாறு பேசத் துணிந்த தெங்ஙனம்?" எனப் புகன்றாள். அப்போது சிவபெருமான் தம் தேவியின் காதலின் அளவை யறியும் நோக்கமுடையவராய், "பெண்ணே! இன்ன தன்மையனென்று எவராலும் அரியவொணாத ஆதி முதல்வன் வந்து நின்னை மணம்புரிவதென்பது சாத்தியமன்று. ஆகையினால், சிறந்த தவங்களைச்செய்துவீணே வருந்தாதே" என புத்திமதி கூறினார். அப்போது தாக்ஷாயணி எம்பெருமானது திருவருளில் தனக்குள்ள நம்பிக்கையை வெளியிட்டு, "பரமனே விரும்பிவந்து இவ்வுலகத்தில் என்னை மணஞ்செய்து கொள்ளவேண்டுமென்று அரிய சிறந்த தவங்களைச் செய்வேன். அவர் அவ்வண்ணம் வராமலிருப்பாரேயாகில், எனது ஆவியைத் துறப்பேன். இது சத்தியம்! அது நிற்க, நீர் குற்றமான மொழிகளை யுரைத்துக்கொண்டு நிற்பதேன்? உமக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதோ? இங்கே நிற்காதேயும், போம!" எனக் கோபத்துடன் கூறி, வேறொரு பக்கம் சென்றாள்.

அப்போது சிவபெருமான் திருவுளமகிழ்ந்து, "மாதே! நினது அன்பும் மனவுறுதியும் வியக்கததக்கவை" என்று கூறி, மற்றவர்கள் கண்களுக்குப் புலப்படாதவாறு உமா தேவியாருக்குமட்டும் தமது அழகுவாய்ந்த திருமேனியைக் காட்டியருளினார். அமலையாகிய தேவி அத்திருவுருவத்தைத் தரிசித்துப் பேரானந்தமடைந்து, அவரது திருவடிகளைப் பணிந்து, "சுவாமி! பேதையேனாதலால் எம்பிரான் வேற்றுருவந் தாங்கி வந்ததை யறிந்து கொள்ளும் திறனற்று, அயலாரென மருண்டு எம்பெருமானை இகழ்ந்தேன். அடியேன் பிழை பொறுத்தருளவேண்டும்" எனப் பிரார்த்தித்தனள். எம்பெருமான், "உமையே! அதைக்குறித்து வருந்தாதே! என்றருள, தாக்ஷாயணி பின்னும் இறைவனை யிறைஞ்சி, தன்னைச் சூழ்ந்துநின்ற மாதர்களைக் கண்ணெடுத்தும் பாராமலும், வேறொன்றையும் மனத்தினால் ஸ்மரிக்காமலும், எந்தையின் பழைய புகழ்களை யெடுத்துக்கூறி அவரைத் துதித்து, கண்களினின்றும் ஆனந்தவருவிபாய நின்றாள்.

அவ்வாறு தேவி மற்றெவரையும் நோக்காமல் அவ்வேதியரையே உற்றுநோக்கினவளாய் மெய்ம்மறந்து துதித்து நிற்பதைக்கண்ட பாங்கியர் மனத்திற் சிறிது ஐயங்கொள்ள, அவர்களிற் சிலர் விரைவில் தக்ஷன்பாற் சென்று, நடந்தவற்றை யெல்லாம் தெரிவித்தனர். அதுகேட்ட தக்ஷன் தனது ஞானதிருஷ்டியினால் நோக்கி, கன்னிமாடத்துக்கு வந்த அந்தணன் ஆதியந்தமற்ற இறைவனேயெனவுணர்ந்து, மகிழ்ச்சி பெற்றெழுந்து துள்ளி, "நான் பெற்றமகளை எனதிறைவனுக்கு விவாகஞ்செய்து கொடுப்பேன்!" என்று கூறினான்.

ஆராய்ந்து பார்க்கையில், அத்தினமே சகல நலங்களும் கூடிய சுபமுகூர்த்ததினமாகவிருக்கக்கண்டு, தக்ஷன் அடங்கா மகிழ்ச்சிகொண்டு, "இன்றே என் மகளை இறைவனுக்கு மணம் புரிவிப்பேன்!" என்று ஆர்வத்துடன் நிச்சயித்து, தேவர்களனைவரையும் சடுதியில் அழைத்துவருமாறு தூதர்களை அனுப்பிவிட்டு, தன் நகரத்தை அழகுபெற அலங்கரிப்பித்துப் பிறகு தன் மாளிகையை சுவர்க்கலோகமும் நாணுமாறு அலங்கரிப்பித்தான். பிறகு தாக்ஷாயணி தவம்புரிந்துவந்த கன்னிமாடத்தை யடைந்து, அங்கு எழுந்தருளியிருந்த கடவுளை வணங்கி, "அண்ணலே! நீர்வந்து தன்னை மணஞ்செய்து கொள்ளவேண்டு மென்னும் விருப்பத்துடன் என் மகள் தவம் செய்தாள். ஆகையினால் அடியேனுடைய நகரத்துக்கு எழுந்தருளி அவளை மணம்புரிந்துகொண்டருளவேண்டும்" எனப் பிராத்தித்தான்.

சிவபெருமான் நல்லதென்று எழுந்து, ஒலிக்கின்ற சிலம்புகளை யணிந்த திருவடிகள் சிவக்க நடந்து, தேன்பெருகு மலர்கள் சூட்டப்பெற்ற கூந்தலையுடைய தாக்ஷாயணியுடன் மருள் நிறைந்த மனத்தினனாகிய தக்ஷனுடைய அரண்மனைக்குச் சென்று, பெண்கள் அஷ்டமங்கலங்களுடன் எதிர்கொண்டழைக்க அவன் மாளிகையினுட் புகுந்து, ஓர் அழகிய பொற்பீடத்தின்மேல் சிறப்பாய் எழுந்தருளியிருந்தார். அப்போது வேதவல்லி தனதருமைப் புதல்வியை யழைத்துப்போய் மங்களஸ்நானம் செய்வித்து, மலர்மாலைகளைச் சூட்டி, அழகிய ஆடையுடுத்தி பலவித ஆபரணங்களினால் அலங்கரித்து எம்பெருமான் பக்கத்தில் விடுத்தனள். உயிர்த்தொகை யனைத்தையும் ஈன்ற தாயான தாக்ஷாயணி திருமணக்கோலத்துடன் தனது நாயகனது ஓர்புறத்தில் அமர்ந்தவுடன், அங்குள்ள யாவரும் துதித்தனர். பல்வகை வாத்தியங்களும் முழங்கின. தூதுவர் மூலமாக திருமணச் சங்கதி அறிந்து விரைவில் அங்கு வந்துசேர்ந்த சிவபெருமானை யடைந்து அடிபணிந்தார்கள். கந்தருவர்கள் மங்கள கீதங்களைப் பாடினார்கள். தேவமாதர்கள் தாக்ஷாயணியி னருகிற்சென்று நறுமணமிக்க மலர்களால் அவள் திருவடிகளை அருச்சித்து அவளை வாழ்த்திநின்றனர்.

முகூர்த்தகாலம் நெருங்கியதும் தக்ஷன்வேத வசனங்களை யுரைத்து, தன் மனைவி முறைப்படி பொற் கெண்டிகையினால் வார்த்த சுத்த நீரினால் எம்பெருமான் திருவடிகளை மெல்லென விளக்கினான். பிறகு எண்ணிறந்த சிறந்த பரிசுகளைக் கொணர்ந்து தேவாதிதேவனுக்கு அளித்து, அவரைப்பூஜித்து, தாக்ஷாயணியின் திருக்கரங்களை ஞானசொரூபியான எம்பெருமானது திருக்கரங்களுக்குள் வைத்து, "எந்தாய்! நினக்கிவளை நானளித்தேன்" எனக்கூறி, பொற்கெண்டிகையிலிருந்து தாரையாகவிழும் பரிசுத்தமான நீருடன் கன்னிகாதானஞ் செய்தான். அச்சுபமுகூர்த்த காலத்தில் தேவரனைவரும் ஆதிமுதல்வனும் உலகெலாமீந்த அன்னையும் கொண்ட சிறந்த திருமணக் கோலத்தைக் கண்ணாரக் கண்டு, கைகளைச் சிரமேற் குவித்துத் தொழுது, பூரணகலைகளை யுடைய சந்திரனைக் கண்ட சமுத்திரத்தைப்போல ஆரவாரித்து வாழ்த்திநின்றனர். பிரமதேவர் திருமணத்துக்கு வேண்டிய கலப்பை முதலிய சகலபொருள்களையும் கொணர்ந்து, சாஸ்திரங்களிற் கூறிய விதிப்படி சடங்குகளனைத்தையும் பூர்த்தியாய் நடத்தியருளினார். அக்காலத்தில் திருமால் முதலிய புருஷர்கள் அமலன் கூறியுள்ள மெய்வசனங்களடங்கிய வேதவாக்கியங்களை யோதி நின்றார்கள். அச்சமயத்தில் உருவமுடையவராயும், உருவமற்றவராயும், உயிர்த்தொகைகளின் உயிராயும் உணர்வாயுமிருந்து அவைகளுக்கு நன்மையே புரிந்து வருபவராயுமுள்ள சிவபெருமான், தன் தவமகிமையினாலேயே தனக்குச் செல்வம் சித்தித்ததாகவும் அதைத் தான் அனுபவிப்பதைக் குறைக்கும் சக்தி சிவபெருமானுக்கு மில்லையென்றும் எண்ணி மருட்சியுற்றிருந்த தக்ஷனது மனத்தில் ஞானத்தை யூட்டவேண்டுமென்ற அருணோக்கத்துடன், தாம் கொண்ட உருவத்தை மறைத்தருளினார்.

(113-ம் பக்கத் தொடர்ச்சி.)

களை யடுக்கி அவைகளினிடையே அவரைப் போட்டு, தங்கள் கையினால் அரிசியை அவர் வாயிற்போட்டு, அவர் அணிந்துள்ள அழகிய ஆடையை உரிந்து கொண்டு, வேதமந்திரங்களை ஜபித்துக்கொண்டு அக்கினி சுவாலையுற்று எரியும்படி செய்து, அவருடலைச் சுட்டு, பிறகு தங்கள் காரியத்தின்மேல் கண்ணாய்ச் சுடலையை விட்டகன்று, நீராடித் தங்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்று துக்கமற்று இறந்தவரை மறந்துவிடுவது மாநிடர் இயல்பு; அத்தகைய மாநிடரைச் சுட்டிக்காட்டி, அவர்களுக்கும் எனக்குமுள்ள தாய், தந்தை, உடன்பிறந்தார், மனைவி, மக்கள் என்னும் பலவகைப்பட்ட உறவு முறைமைகளைக் கூறி நான் மகிழ்ச்சியுறும்படியும், அவர்கள் என்னிடத்தில் அன்பு பாராட்டாத காலத்திலும் அச்சுற்றத்தவர் துன்புறும் காலத்திலும் நான் துயரமுற்று வருந்தி அத்துயரத்தினாலேயே மாய்ந்து போகும்படியும் செய்த துஷ்டனாகிய மன்மதன் என்மீது எய்த புஷ்ப பாணங்களினால் காமவலையிற் சிக்கி மருட்சியுற்று அழகிய பெண்கள் கைகளிற் சிக்கி மெலிந்து மனம் வருந்தி, புத்தியை அவமாக்கும் அடிமை யேன்மீது கிருபை வைத்து, முத்தி நெறி யீதென்றுணர்த்தி, அவ்வாறு தேவரீர் உணர்த்தியபோதிலும் அந்நெறியைக்கடைப்பிடித்தொழுகுவது அக்ஞானம் மாயை என்னும் விலங்குகளை இருகால்களிலும் பூட்டப்பெற்ற அடியேனுக்கு அசாத்திய மாதலால், தமது கழலிணைகளை வலிதில் என் முடிமீது சூட்டியருளவேண்டும்.

விவசாயமும் கால்நடைகளின் க்ஷேமமும்

AGRICULTURE AND THE WELFARE OF CATTLE

இந்தியாவில் வியவசாயத்துக்குக் கால்நடைகள் மிகவும் அவசியமாயிருக்கின்றனவென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். கால்நடைகளின்றிக் குடியானவன் விவசாயம் தொடங்குவது வீணாகும். எவ்விதத்திலும் குடியானவனுடைய முக்கியமான கைமுதல் கால்நடைகளே. அவனுக்கு வேண்டிய வேறு சாமான்களுக்கு அவன் அவ்வளவு செலவு செய்யவேண்டிய அவசியம் இருப்பதில்லை. ஆகையால் கால்நடைகளை விருத்திசெய்து, சரியாய்ப் போஷித்துத் தக்கநிலைமையில் வைத்திருக்கும் குடியானவன் நாளடைவில் மிக்க லாபத்தை யடைகின்றான். கால்நடைகளை அசட்டை செய்பவன் வரவரத் தன் நிலைமை குன்றப்பெற்று லாபமின்றித் தரித்திரத்தில் மூழ்கிவிடுகிறான்.

பணமில்லாக் குறைவாலும் தக்க படிப்பில்லாக் குறைவாலும் நமது குடியானவர்கள் தங்கள் கால்நடைகளைப் பாங்காய் கவனிப்பதில்லை. கால்நடைகளுக்கு நோய்வந்த காலங்களில் எங்ஙனம் அவற்றை கவனிப்பதென்று தெரியாமல் குடியானவர்கள் தமது மாடுகன்றுகளை நூற்றுக்கணக்காய் மாண்டுபோக விடுகின்றார்கள். மழையின்றி, புல் முளையாமல், பஞ்சம் பரவிய காலங்களில் உணவின்றிக் கால்நடைகள் எலும்பும் தோலுமாய் உயிர்விடுவதை நாம் கிராமாந்திரங்களில் வெகுவாய்க் காண்கின்றோம். இவ்வாறு பலகாரணங்களால் மாடுகளுக்கு ஆபத்து வரும்போதெல்லாம் வியவசாயம் நிச்சயமாய்த் தளர்ச்சியடைகின்றது. ப்ரிடன், ஜர்மனி இத்தேசங்களில் வியவசாயத்தை மிகத்திறமாயும் செட்டாயும் நடத்துகிறார்கள். இதற்கு அவ்விடத்திய குடியானவர்களின் படிப்பும் தேகவலிமையும் ஒருவாறு காரணமாகின்றன. தவிர அத்தேசத்தார் கால்நடைகளை மிகச் சிறந்த நிலைமையில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். கால்நடைகளுக்கு விசேஷ சிரமம் கொடுக்காமல் காலத்தை அநுசரித்து அக்குடியானவர்கள் உழவு, அறுப்பு, தானியமடித்தல் முதலான எல்லாக்கடினமான தொழில்களுக்கும் குதிரைகளையும் மோட்டார் யந்திரங்களையும் தாராளமாய் உபயோகிக்கின்றனர்.”*

இந்தியாவிலோ அவ்வாறில்லை. வியவசாயத்தைச் சார்ந்த ஒவ்வொரு தொழிலையும் மனிதனோ அல்லது அவனது கால்நடைகளோ செய்தே தீரவேண்டியிருக்கின்றது. மேல்நாடுகளைப் போல் இந்தியாவிலும் சிறிய மோட்டார் யந்திரங்களையும் நீராவியந்திரங்களையும் உபயோகித்து வியவசாயத்துக்குரிய காரியங்களைச் சீராய் நடத்தி, குடியானவனுக்கும் அவனுடைய மாடுகளுக்கும் இளைப்பாற இடங்கொடுக்க வழியுண்டு.

இப்போது நமது பிரதேசங்களில் கிணறு, குளம், வாய்க்கால், ஏரி இவற்றிலிருந்து ஜலம் இறைக்கவும், உழவு, பரம்படித்தல் முதலான வேலைகளை வயல்களிற் செய்யவும், எண்ணெய் இறக்குதல், கரும்பு பிழிதல் முதலான கைத்தொழில்களுக்கும், கணக்கில்லாத கால்நடைகளை உபயோகிக்கின்றோம். இவ்வேலைகளுக்கெல்லாம் யந்திரங்களை உபயோகிக்குமிடத்துக் கால்நடைகளுக்கு விசேஷமான அநுகூலமுண்டு. மேலும் வேலை சுளுவாயும் விரைவாயும் முடிதல்பற்றி குடியானவனுக்குக் காலம் வீணாகச் செலவழிகிறதில்லை. காலம் வீண்போகாமல் லாபமாகும்போது, குடியானவனுக்கு அக்காலத்தைத்தனது வித்தியாபிவிருத்திக்குச் செலவழிக்கவும், குடும்ப விஷயங்களைச் சீராய்க் கவனிக்கவும், சமூகத்தாருடன்கூடிப் பொது நன்மைக்கு உழைக்கவும் அவகாசம் ஏற்படும். கடினமான வேலைகளுக்கு இடைவிடாமல் கால்நடைகளை உபயோகித்து, அவற்றை வருத்தி, விரைவில் அவற்றின் ஆயுளைக் குறைத்து, கைமுதல் நஷ்டமாய்ப் பரிதவிப்பதைவிட, முதலில், கைமுதல் சற்று அதிகமாகச் செலவு பண்ணி, சிறிய மோட்டார்களை உபயோகித்து, அநுகூலமாய் வேலைநடத்துவது நாளடைவில் மிகவும் லாபகரமென்பதற்கு ஆக்ஷேபனையில்லை.

ஏழைக் குடியானவன் முதலில் யந்திரங்கள் வாங்கக்கூடிய அளவு பணக்காரனா என்பதைக் கவனிக்கவேண்டும். ஏழ்மைத்தனம் இந்திய வியவசாயிகளிடத்திலேயே குடிகொண்டிருக்கிற தென்பதை மறந்து யந்திரங்களை உபயோகிப்பதனால் குடியானவர்கள்

* Indian Industrial Commission Report, Chap. V.

அடையக்கூடிய நன்மைகளைமட்டும் எடுத்துப் பாடுவதில் பயனில்லை. ஒருவாறு யந்திரங்களை வாங்கத் துணிந்தாலும் குடியானவனுடைய நிலவிஸ்தீரணம் மிகக் குறைவாயிருத்தல் பற்றியும் அவனது நிலம் வேறுவே றிடங்களில் பிரிந்திருப்பதாலும் அவ்வியந்திரங்களைத் தக்கபடி உபயோகிக்கவும் அவற்றிற்கு வேண்டிய அளவு வேலை கொடுக்கவும், வழியின்றி யந்திரம் சும்மாவிருக்க வேண்டியிருக்கின்றது. வேலைகொடாமல் யந்திரம் வீணே நின்றிருப்பதைப்போல் நஷ்டமுண்டாக்கும் காரியம் வேறொன்றுமில்லை. இவற்றையெல்லாம் போக்க, குடியானவர்கள் தங்களுக்குள் ஐக்கியமாய்க் கூடியுழைக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். கூட்டுறவுச் சங்கம் ஒரு கிராமத்தில் இருப்பதானால் அச்சங்கத்தார் தாமாகவோ அல்லது பெரிய பாங்கியில் கடன்வாங்கியோ சங்கத்துக்குப் பொதுவாய் யந்திரங்களை வாங்கிக்கொள்ளலாம். குடியானவர்கள் சேர்ந்துழைக்கும்போது எல்லா நிலங்களுக்கும் யந்திரங்கள் உபயோகமாகும். ஆதலால் அவைகளுக்குப்போதுமான வேலையும் கிடைக்கும். இவ்விஷயத்தை விரிப்பிற் பெருகும்.

இது சம்பந்தமாய் ‘நியர் ஈஸ்டு’ என்னும் பத்திரிகையில் ஒரு நிபுணர் பின்வருமாறு எழுதுகின்றார்:— கீழ்நாடுகளில் கால்நடைகளின் அபிவிருத்தி குன்றிவருவதை உத்தேசித்து, இந்தியாவில் மோட்டார் ஏர்களுக்கு அவசியம் ஏற்படுமென்பதற்குச் சந்தேகமில்லை. குடியானவர்களின் படிப்புக் குறைவை முன்னிட்டு, அவ்வித ஏர்கள் கூடியமட்டில் மடையனும் கஷ்டமின்றி உபயோகப்படுத்தக்கூடியவைகளாயும், ஆறு அல்லது ஏழு அங்குல ஆழம் சாதாரணமாய் உழக்கூடியவைகளாயும் இருக்கவேண்டும். இவ்வகை உழவுக் கருவிகளே கீழ் நாடுகளுக்கு மிகவும் ஏற்றவையென்று இப்பத்திரிகையில் பலமுறை முறையிடப்பட்டிருக்கின்றது. பருவ மழையின்றி, ஆயிரக்கணக்கான ஏகரா நிலங்கள் தருசாய்க்கிடந்து, ‘பசும்புற்றரை காண்பதும் அரிதாய்’ இருக்கும் காலத்தில், மாடுகளை உயிருடன் வைத்து வளர்ப்பதே கஷ்டமாயிருக்கின்றது. அடுத்த வருஷத்தில் சரியான பட்டத்தில் உழவுதொடங்கு முன்னமே, பாதிக்குமேல் கால்நடைகள் இறந்துபோகின்றன. பிழைத்திருப்பவை ஏர்களை இழுக்க மாளாது கஷ்டப்படும். அப்படியிருக்கும் மாடுகளை வைத்துக்கொண்டு குடியானவன் நிலத்தைச் சற்றே கீறுகிறான். இவ்வாறு கீறுவதே அவன் செய்யக்கூடிய உழவாகின்றது. ஆகையால் சிறிய யந்திரங்களை உபயோகப் படுத்தியே இனி வெகுவாய் விவசாயம் நடத்தவேண்டியிருக்கும். கீழ்நாடுகளிலுள்ள இந்நிலைமையை உத்தேசித்து, இங்கிலாந்தில் யந்திரம் செய்து விற்கும் வர்த்தகர்கள் இத்தேசங்களுக்கேற்ற யந்திரங்களைச் செய்து விற்பது லாபகரமாயிருக்கும். இதை ஆங்கில வர்த்தகர்கள் உடனே கவனித்தல்வேண்டும். இல்லையேல், அமெரிக்கா ஐக்கிய மாகாணத்தாரும், ஜப்பான் தேசத்தவரும் இவ்வியாபாரத்தைக் கைப்பற்றிக்கொண்டு போட்டிபோடுவாரில்லாத இச்சமயத்திலேயே முற்றிலும் ஆக்கிரமித்துக்கொண்டுவிடுவார்கள். *

உண்மையாகவே இவ்வாங்கிலேய நிபுணர் தமது தேசத்தாரின் வியாபாரம் அபிவிருத்தியடையவேண்டும் என்னும் நோக்கத்துடன் மேற்கண்ட வியாஸம் எழுதியிருக்கிறாரேயன்றி, இந்தியாவின் க்ஷேமத்தை வெகுவாய்க் கோரி அநுதாபத்துடன் எழுதியதன்று. ஆங்கிலேய வர்த்தகருக்கு லாபமுண்டாகும்போது ஏதோ தற்செயலாய் இந்தியாவுக்கும் க்ஷேமமுண்டாகக் கூடுமானால் நமது நிபுணருக்கு விரோதம் ஒன்றுமில்லை! அவரது நோக்கம் எப்படியிருப்பினும், அவர் இந்திய வியவசாயத்தைப்பற்றியும், நமது கால்நடைகளைப்பற்றியும் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் உண்மையே யல்லவா ?

கடினமான வேலைகளுக்குக் கால்நடைகளை உபயோகிப்பதனால் நோய்க்குடியானவனுக்கு நஷ்டமும், மாடுகளுக்குக் கஷ்டமும் விளைவதோடு, இதர ஜனங்களுக்கும் விசேஷத் தொந்தரவுண்டு. கிராமங்களிலும், கிராமங்களைச் சார்ந்த பட்டணங்களிலும் உழவுகாலத்திலும், அறுப்புக் காலத்திலும், பால், நெய், மோர் முதலிய உணவுப்பொருள்கள் கிடைக்காமல் ஜனங்கள் வருந்துவது சர்வ சாதாரணமேயல்லவா? உழவில் அடிபடும் மாடுகளும் எருமைகளும் பால் கறப்பதில்லை. நெய், பால், தயிர் குறைவதால், விலை யேறி அளவில்லாக் கஷ்டம் உண்

* Near East: March 27, 1919.

டாகிறது. நல்ல வஸ்துக்களுடன் வேறு வஸ்துக்களைக் கலந்து விற்பதற்கும் இடமுண்டாகின்றது. கொழுப்பு முதலான வஸ்துக்கள் கலந்த நெய்யும், அசுத்தமான நீர் கலந்த பாலும் தயிரும் நோய்க்கு இடங்கொடுக்கின்றன. பொதுஜனங்களின் க்ஷேமத்தை நாடும் வைத்திய இலாகா ஆபீஸர்களும், முனிஸிபாலிடி, தாலூகா போர்டு இவற்றின் அங்கத்தினரும் இவ்விஷயத்தைச் சற்று கவனிக்கவேண்டும்.

இவற்றையெல்லாம்விட முக்கியமான இன்னொரு விஷயமும் நாம் கவனிக்கத்தக்கது. சாஸ்திர முறைகளை அநுசரித்து ஒவ்வொரு ஜீவராசியும், வளர்ச்சியின் மேன்மையில் குறைவுபடாமலும், பலத்தில் தளராமலும் இருக்குமட்டும், அந்த ஜீவராசிக்கு அபிவிருத்தி யுண்டு. இதை மறந்துவிடாமல் மேல்நாட்டுக் குடியானவர்கள் தங்களுக்கு உபயோகப்படும் எல்லா மிருகங்களையும் பக்ஷிகளையும் வளர்ப்பதில் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொள்ளுகின்றனர். மாடுகள், குதிரைகள், ஆடுகள், கோழிகள், இவை வளர்ச்சியில் குறைவுபடுமாயின், அதற்குக்காரணத்தைக்கவனித்து, முன்னிலும் அதிக வலிமையுள்ள உருப்படிகள் விருத்தியடைய வழிதேடுகின்றனர். எந்த ஜாதி மாடுகளும் குதிரைகளும் தங்கள் தேசத்தில் விருத்தி யடையுமென்றும், வேறு தேசத்து மாடுகள் தங்கள் தேசத்துக்கு ஏற்றவை தானுவென்றும் விடாமுயற்சியோடு பரீக்ஷைசெய்கின்றனர். ஆகவே, சுமைவண்டி யிழுக்கும் குதிரை ஜாதிகள் வேறும், சவாரிக் குதிரைகள் வேறும், பந்தயக் குதிரைகள் வேறும், கறவை மாடுகள் வேறும், வேலைசெய்யும் மாடுகள் வேறுமாக வளர்த்துவருகின்றனர். நமது நாட்டிலோ அவ்வாறில்லை. தளர்ந்த உருப்படிகளைக் கொண்டே மேன்மேலும் இனம் அபிவிருத்தியாவதுபற்றி தாய்மாடுகளை விடக் கன்றுகள் படிப்படியாய் வளர்ச்சியிலும்பலத்திலும்தாழ்ந்துபோய்க்கொண்டேயிருக்கின்றன.

ஆகையால் கால்நடைகளின் க்ஷேமத்தை முன்னிட்டு, அவற்றை மேன்மேலும் அபிவிருத்தி யடையும்படி செய்ய நாம் மேற்கொள்ளவேண்டிய முயற்சி என்ன ? முதலாவது, எந்த எந்த வேலைகளுக்குக் கால்நடைகளை உபயோகிக்காமல், செட்டாய்ச் சிறிய யந்திரங்களை உபயோகிக்கலாமோ அந்தந்த வேலைகளுக்குப் பரிபக்குவமாய் ஆராய்ந்து பார்த்து லாபகரமாய் யந்திரங்களையே உபயோகிக்க வேண்டும். யந்திரங்களைப் படிப்படியாய்க் கையாளுவதற்கு நமது குடியானவர்களின் படிப்புக்குறைவே தற்காலத்தில் இடையூறாக நிற்பதால், ஒவ்வொரு ஜில்லாவிலும் தாலூகாவிலும் கோ ரக்ஷண சபைகளும், விவசாய சபைகளும் ஏற்படுத்தி, அச்சபைகள் மூலமாய்க் குடியானவர்களுக்கு யந்திரங்களை உபயோகிப்பதால் கிடைக்கக்கூடிய அநுகூலங்களையும், கால்நடைகளை விருத்திசெய்து அவற்றிற்கு அதிகமாய்ச் சிரமம் கொடாமலிருப்பதால் உண்டாகும் நலத்தையும், வற்புறுத்தி எடுத்துக் காட்டவேண்டும். இரண்டாவது, சிறந்த பொலி மாடுகளைக்கொண்டு தற்காலத்திலிருக்கும் ஜாதிகளைப் படிப்படியாய் மேன்மைக்குக் கொண்டுவருவதோடு, திடமான அந்நிய தேசத்து மாட்டு ஜாதிகளையும் புதிதாய் நமது தேசத்தில் வளர்க்க முயற்சி செய்யவேண்டும்.

இவ்விதமாய்க் கால்நடைகளை விருத்தி செய்வது விவசாய சங்கத்தார் மூலமாகவும் கோ ரக்ஷண சங்கத்தார் மூலமாகவும் நடந்தேறுவதுதான் சிறந்த வழியென்பதைப் பின்னுமொருமுறை வற்புறுத்திக்கூறுவோம்' ஏனெனில், இந்தியாவில் குடியானவன் தானாகவே இவ்விஷயங்களைப்பற்றி யோசனை செய்யச் சக்தியற்றவனு யிருக்கின்றான்.

இத்துடன் கவர்ன்மெண்டாரும் ஜனங்களுடன் கூடியுழைத்துத் தேசத்துக்கு நன்மையை நாடவேண்டும். வியவசாய இலாகா உத்தியோகஸ்தரும், தொழிலபிவிருத்தி இலாகா உத்தியோகஸ்தரும் குடியானவனுடைய தேவைகளைக் கவனித்து அவன் குறைகளைத் தீர்க்க, நேரான வழிகளை அடிக்கடி பரீக்ஷை செய்யவேண்டும். குடியானவன் உபயோகிக்கும் யந்திரங்களிலுள்ள ஊழல்களைக் கண்டுபிடித்து அவற்றை யந்திரம் செய்வோர்களுக்குத் தெரியப்படுத்தி, படிப்படியாய் வேலைக்கு மிகவும் தகுதியான சிறந்த யந்திரங்களை ஏற்றுமதி செய்ய வழிதேடவேண்டும். இந்தியாவில் விவசாயத்துக்கு யந்திரங்களை உபயோகிக்க வேண்டுமாயின், அம்முயற்சி கைகூடுவது முக்கியமாய் விவசாய இலாகா உத்தியோகஸ்தரின் உற்சாகத்தையும், உழைப்பையும், விடாமுயற்சியையும் பொறுத்ததா யிருக்கின்றது.

இந்தியாவில் ஜனங்களுள் முக்கால்பாகம் விவசாயத்தைக் கைப்பற்றியே ஜீவனம் பண்ணுவதா யிருப்பதால், அதன் அபிவிருத்தியைக் கவனிப்பது நமது முதற்கடமை. இதுகாறும் அபிவிருத்தி மிகக் குறைவா யிருந்ததைப்பற்றிச் சிந்திப்பதிற் பயனில்லை. இனி இந்திய மந்திரிகள் இந்தியாவின் அரசாளுகையை மேற்கொண்டவ ராதலாலும், விவசாய இலாகா அவர்கள் கையில் இருப்பதாலும், அவர்கள் இக்குறைகளைக் கவனித்து மிக உற்சாகத்துடன் பொது நன்மைக்குப் பாடுபட்டு தேசத்தின் நன்மையை நாடுவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

மாயையின் மகிமை

THE POWER OF MAYA

வியாஸ மகரிஷியைப்பார்த்து நாரதமகரிஷி சொல்லுகிறார்: ஓ முனிசிரேஷ்டரே ! மாயையின் பலத்தை யோகீசுவரர்களாலும் அறிய முடியாது. பிரமா முதல் துரும்புவரையிலுள்ள தாவரஜங்கம ஸ்வரூபமான பிரபஞ்சம் முழுவதும் மாயையினால் மயக்கப்பட்டிருக்கின்றது. மாயையை ஜயிக்க மூவரால் முடியாதெனின், பிறகு யாவரால் முடியும்? இவ்விஷயத்தில் எனது கதையொன்றைச் சொல்லுகிறேன் கேழ்ப்பீராக !

யான் ஒருசமயம் சத்தியலோகத்திலிருந்து பகவானை (மகாவிஷ்ணுவைத்) தரிசிப்பதற்காக கையில் வீணையேந்தி அதில் காயத்திரம் முதலிய ஸாமங்களைக் கானம் செய்துகொண்டு சுவேதத்வீபம் போய்ச் சேர்ந்தேன். அவ்விடத்தில் சங்கசக்கரதாரியாய் மார்பில் கௌஸ்துப மணிந்தவராய் பீதாம்பரம் உடுத்து மகாலக்ஷ்மியுடன் உல்லாஸமாய் விளையாடிக்கொண் டிருக்கும் பகவானைத் தரிசித்தேன். என்னைப் பார்த்தவுடன் மகாலக்ஷ்மியானவள் அவ்விடத்தைவிட் டகன்று மறைந்து விட்டாள். அவ்விதம் என்னைப் பார்த்ததும் அவள் மறைந்துபோன விஷயத்தைப் பற்றி நான் பகவானைப் பார்த்து "பிரபுவே! நான் தங்கள் சமீபத்தில் வந்ததும் மகாலக்ஷ்மி அம்மையானவள் ஏன் அவ்விடத்தைவிட்டுப் போய்விட்டாள் ? நானென்ன விட புருஷனு ? அல்லது போக்கிரியா ? நான் கோபம், இந்திரியம், மாயை இவைகளை ஜயித்து கேவலம் தவம் செய்யும் ஓர் முனிவனல்லவா ?" என்று கேட்டேன்.

இவ்விதம் கொஞ்சம் கர்வத்தோடு கூடிய என் வார்த்தைகளைச் செவியுறற பகவான் புன்சிரிப்புடன் என்னைப்பார்த்து மதுரமாய்ச் சொன்னதாவது:—"நாரதரே! ஒரு ஸ்திரீயானவள் தன் புருஷனைத் தவிர்த்து வேறு எந்தப் புருஷனுடைய சமீபத்திலும் எதிரிலும் ஒருபொழுதும் எக்காரணத்தை முன்னிட்டாவது நிற்கவே கூடாது. மகா யோகிகளானாலும் சரி, மகா தபஸ்விகளானாலும் சரி, இந்திரியங்களை ஜயித்த மகான்களானாலும் சரி, தேவர்களோ, முனிவர்களோ, யாவரானாலும் இம்மாயையை மாத்திரம் ஜயிக்கமுடியாது. நான் மாயையை ஜயித்துவிட்டேன் என்று ஒருபோதும் ஒருவரும் சொல்லக்கூடாது. நான், பரமசிவன், பிரமா, ஸநகாதி மகா முனிவர்கள் இவர்களால்கூட மாயையைஜயிக்க முடியவில்லையென்றால், அம் மா யை யி ன் மகிமையை உள்ளபடி யுரைக்க யாராலாகும்? மூடனானாலும் சரி, பண்டிதனானாலும் சரி, எல்லாம் தெரிந்தவனானாலும் சரி, எதுவரையில் தேக சம்பந்தமுண்டோ, எதுவரை முக்குணங்களின் சேர்க்கையுண்டோ அதுவரையில் அவன் மாயையில் அகப்பட்டவன்தான்."

இவ்விதம் பகவான் சொன்னதும், "சுவாமி! லக்ஷ்மீபதியே! அப்படிப்பட்ட மாயையின் ஸ்வரூபம் யாது ? அதன் பலன் யாது ? அதன் இருப்பிடம் எங்கே ? அதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். என்பேரில் கிருபைகூர்ந்து எனக்கு அதைக் காண்பிக்கவேண்டும்" என்று நான் பகவானை வேண்டிக்கொண்டேன். உடனே பகவான் "நாரதரே! அது முக்குணமுடையது. எங்குமுள்ளது. எப்பொழுதுமுள்ளது. உலகிலுள்ள எல்லா வஸ்துக்களையும் அது வியாபித்துக்கொண் டிருக்கிறது அதை ஒருவராலும் ஜயிக்கமுடியாது. அதற்கு அநேக ஸ்வரூபங்களுண்டு. உமக்கு அதை நேராகப் பார்க்கவேண்டு மென்கிற

எண்ணமிருந்தால் வாரும், என்னுடன் கருடன்மேல் ஏறும். வேறொரு இடத்திற்குப் போவோம். அங்கே மாயையின் ஸ்வரூபத்தை உமக்குக் காண்பிக்கிறேன். அது ஒருவராலும் ஜயிக்கமுடியாதது என்பதையும் நிரூபிக்கிறேன். அதைக் கண்டுவிட்டு மாத்திரம் பிறகு வருத்தமடையாதேயும்" என்று சொல்லி உடனே கருடனை நினைத்தார். நினைத்த மாத்திரத்தில் அவர் பகவான் எதிரில் வந்து தயாராயிற்கவே, அவர்பேரில் பகவான் என்னுடன் ஏறிக்கொண்டார். உடனே கருடபகவான் வாயுவேகமாய்ச் சென்று கன்யாகுப்ஜ தேசத்திற்குச் சமீபத்தில் ஓரிடத்திலிறங்கினார். இறங்கியதும் அங்கே ஓரழகிய தடாகத்தைப் பார்த்தோம். அப்போது பகவான், "நாரதரே! இந்தத் தடாகம் எவ்வளவு அழகாய் இருக்கிறது, பார்த்தீரா? தாமரை முதலிய ஜல புஷ்பங்கள் எவ்வளவு அழகாய்ப் புஷ்பித்து வாசனையைத் தருகின்றன? ஹம்ஸம் முதலிய நீர்ப் பறவைகள் தாமரைக்கிழங்குகளைத் தின்றுகொண்டு எத்துணை உல்லாஸமாய் விளையாடிக்கொண்டிருக்கின்றன. பெரியோருடைய மனம்போல் ஜலம் எவ்வளவு தெளிவாயிருக்கிறது. வாரும் இதில் ஸ்நாநம் செய்வோம். பிறகு கன்யாகுப்ஜம் என்கிற பட்டணத்திற்குப் போவோம்" என்று சொல்லி, முதலில் என்னைக் கருடனைவிட்டிறக்கி, பிறகு தானும் இறங்கினார்.

இறங்கியதும் என் கைவிரலைப் பிடித்துக்கொண்டு என்னைக் குளக்கரைக்கழைத்துப் போய் அங்கு தாழ்ந்து அடர்ந்திருக்கும் மரங்களினிழலில் சற்றே இளைப்பாறியதும் "இந்த சரோவரத்தின் அழகை என்னென்று சொல்வது! எவ்வளவு நிர்மலமான ஜலம், என்ன தாமரைப் புஷ்பங்களின் வாஸனை? இவ்வளவு பரிசுத்தமான தீர்த்தத்தில் பிராமணோத்தமரான நீர் முதலில் ஸ்நாநம் செய்யும். பிறகு நான் நீராடுகிறேன்" என்று பகவான் உரைத்தார்.

இதைக்கேட்டு நானும் எழுந்திருந்து என் வீணையையும் மான் தோலையும் கரையில் வைத்துவிட்டு ஜலத்திலிறங்கி கால்கைகளைச் சுத்திசெய்துகொண்டு தலைமுடிந்து ஆசமனம் செய்து அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தேன். ஸ்நானம் செய்த மாத்திரத்தில் ஸ்ரீ பகவான் பார்த்துக்கொண்டிருக்கும்போதே என்னுடைய புருஷரூபம் போய் ஓர் அழகு வாய்ந்த யுவதியின் ரூபம் வந்தது. உடனே பகவான் என்னுடைய வீணையையும் கிருஷ்ணாஜினத்தையும் எடுத்துக்கொண்டு கருடன் மேலேறி வைகுண்டம் போய்ச் சேர்ந்தார்.

நான் எப்பொழுது அனேகம் ஆபரணங்களணிந்த ஓரழகிய ஸ்திரீரூபத்தை யடைந்தேனோ, அதே நிமிஷத்தில் முன் தேகத்தைப் பற்றிய விஷயங்கள் யாவும் மறந்துபோயின. என்னுடன் வந்த பகவானையும் மறந்துவிட்டேன். என் வீணையையும் மறந்தேன். கேவலம் ஒரு ஸ்திரீரூபதாரியாய் வெளியேறிக் கரையில் வந்து வெகு ஆச்சரியத்துடன் சுற்றிப்பார்த்துக்கொண்டிருக்கும்போது கஜதுரகபதாதிகளினால் சூழப்பட்ட ஓர் அரசன் ரதாரூடனாய் எனக்கெதிரில் தென்பட்டான். மன்மதனையொத்த அழகுவாய்ந்தவனாயும் யுவனாயுமிருந்த அவ்வரசன், திவ்வியாபரணங்கள் பூண்டு சந்திரன் போன்ற முகத்தவளாய்ப் பிரகாசிக்கும் என்னைக் கண்ணுற்றதும் அளவிலா ஆச்சரியமடைந்து "பெண்ணே! நீ யார்? உன் பெற்றோர் எவர்? நீ மனுஷ்ய ஸ்திரீயோ? அல்லது தேவஸ்திரீயோ? நாக கன்னிகையோ, கந்தர்வ குமரியோ? ஏனிந்த வனத்தின்கண் துணையற்றவளாய் தனித்து நிற்கிறாய்? உனக்கு விவாகம் ஆயிற்றா? இல்லையா? இல்லையேல், உனக்கிஷ்டமிருந்தால் என்னை விவாகம் செய்து கொண்டு உன்னிஷ்டப்போல் இவ்வுலகிலுள்ள சகலமான போகங்களையும் குறைவின்றி அனுபவிக்கலாம். உனக்கு இபபோதென்ன செய்யவேண்டும்?" எனறு வினவினான்.

இவ்விதம் அவ்வரசன் மொழிந்த தேன் மொழிகளைக் கேட்டுச் சற்று நேரம் தீரயோசித்து நான் சொன்னதாவது:—"ஓ ராஜசிரேஷ்டரே! நான் யார்? யாருடைய பெண்? எதற்காக இங்கு வந்தேன்? யாரால் இங்குவிடப்பட்டேன்? இப்போது எனக்கென்ன செய்ய வேண்டும்? நான் எங்கு போகவேண்டும்? என்கிற விஷயங்கள் ஒன்றுமே எனக்குப் புலப்படவில்லை. நான் ஆதரவற்றவளாயிருக்கிறேன். இச்சமயம் தெய்வந்தான் எனக்குத் துணை. மனுஷ்யாள் யாருமில்லை. தாங்கள்

தர்மத்தை நன்றாய் அறிவீர்கள். நான் தங்களாதீனமாயிருக்கிறேன். ஆகையால் தங்களுக்கு எது தோன்றுகிறதோ, அதைச் செய்ய யாதொரு தடையுமில்லை" என்றேன்.

இங்ஙனம் நான் செப்பியதைச் செவியுற்ற அரசன் மோகித்து மதிமயங்கி என்னை ஒருதரம் ஆசையுடன் கண்ணாரப்பார்த்து தன் சேவகர்களை நோக்கி, "ஓ சேவகர்காள்! உடனே சீக்கிரம்போய் தங்கத்தினால் செய்யப்பட்டும், முத்து நவரத்தினங்களிழைக்கப் பெற்றும், உள்ளே மிருதுவான பட்டு விரிக்கப் பெற்றும், மேலே விலையிலாப் பட்டினால் மூடப்பட்டுமுள்ள ஓர் பல்லக்கைக் கொண்டு வாருங்கள்" என ஆக்ஞாபித்தான். இதைக் கேட்டவுடன், வேலைக்காரர்கள் ஓடோடியும் போய் அரசன் சொல்லியபடி குணங்கள் பொருந்திய ஓர் அழகிய பல்லக்கைக் கொண்டுவந்தார்கள். நான் அதில் ஏறிக்கொண்டேன். அரசன் மிக்கசந்தோஷத்துடன் என்னைத் தனது அரண்மனைக்கு அழைத்துப்போகச் சொல்லி நல்ல தினத்தில் சுபமுகூர்த்தத்தில் நல்ல லக்னத்தில் அக்கினிசாக்ஷிகமாய் என்னைப் பாணிக்ரஹணம் செய்துகொண்டான். எனக்கு சௌபாக்கிய சுந்தரியென நாமமு மிட்டான். அரசனுக்கு என்னிடத்தில் மற்ற ஸ்திரீகளிடத்தில் விட அன்பு மிகுதியாகவே யிருந்தது. அவன் என்னுடன்கூடி சகலவித போகங்களையும் அனுபவித்தான். இராஜ்ய காரியங்களைக் கொஞ்சமேனும் கவனிப்பதேகிடையாது. தோப்புகளிலும், துறவுகளிலும், வீடுகளிலும், மாடிகளிலும், மலைகளிலும், அழகிய வாவிகளிலும் என்னோடு கிரீடை செய்துகொண்டிருப்பான். இவ்விதம் சகல லௌகிக காரியங்களையும் விட்டுவிட்டு, என்னுடன் எப்போதும் விளையாடிக்கொண்டு எனக்கே அடிமையாய் விட்டான்.

ஓ வியாஸரே! கவனமாய்க் கேளும். நானும் அவ்வரசனுடன்கூடி இவ்விதம் சுகத்தை யனுபவித்துக் கொண்டு கேவலம் சிற்றின்ப சுகத்தில் மூழ்கினவளாய் என்னுடைய பூர்வஜன்மத்தையும் புருஷ ஸ்வரூபத்தையும் நான் ரிஷியாயிருந்ததையும் அடியோடு மறந்து, 'நாம் ஒரு அழகுவாய்ந்த ஸ்திரீ, நமக்கு இவர்தான் நாயகன், எல்லா ஸ்திரீகளிடத்திலும்விட நம்மிடத்தில் நம்ம புருஷனுக்கு அதிகப்பிரியம். நாம் பட்ட மகிஷி. ஆகா! இப்பொழுதுதான் நம்முடைய ஜன்மம் ஸபலமாயிற்று' என்று இவ்வாறெல்லாம் எண்ணியெண்ணிச் சந்தோஷப்பட்டுக்கொண்டு அந்தச் சிற்றின்பத்தையே பெரிதாய் நினைத்து இரவும் பகலும் அதே ஞாபகமாய் காலங் கழித்துவந்தேன். நான் கற்றறிந்த வேதங்கள், சாஸ்திரங்கள், கலைகள் யாவையும் மறந்துபோனேன். எந்நாளும் அழியாத பிரமஞானமும் மறந்துபோயிற்று. தர்ம சாஸ்திரங்கள் பறந்தோடின.

இவ்விதம் சிற்றின்பசுகத்தில் மூழ்கிக் கிடக்கையில் பன்னிரண்டு வருஷங்கள் ஓரே நிமிஷம்போல் ஓடி ஒழிந்தன. ஓய் முனிவரே! கேளும். பிறகு நான் கர்ப்பம் தரித்தேன். மாதங்கள் ஒன்பது நிறைந்ததும் பத்தாவது மாதத்தில் ஒரு பிள்ளையைப் பெற்றேன். அச்சிசுவுக்கு வீரவர்மன் என்று பெயரிட்டு அன்புடன் வளர்த்து வந்தான் அரசன். இவ்விதம் 12 பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களைத் தாலாட்டுவதிலும் அன்ன பானாதிகளினால் அவர்களை இரக்ஷிப்பதிலும் மிக்க ஆசையுள்ளவளாய்க் காலங் கழித்துவந்தேன். பிறகு எட்டுப்பிள்ளைகள் பிறந்தார்கள். அவரவர்களுக்குச் சரியான வயதுவந்தவுடன், உபநயநம், விவாகம் முதலியவைகள் சிறப்பாய்ச் செய்யப்பட்டன. அவர்களுக்கும் சரியான காலங்களில் புத்திரர் உண்டானார்கள். அப்போது பிள்ளைகள், நாட்டுப் பெண்கள், பேரர்கள், பேத்திகள், இவர்களினால் வீடு நிறைந்தது. அவர்கள் கொஞ்சகாலம் சுகமாயிருக்கும்போது அதைப் பார்க்க எனக்குச் சந்தோஷமாயிருந்தது. உடனே அவர்களிடம் சிலருக்கு ஜ்வரம், சிலருக்குத் தலைவலி, பலருக்குக் கால்வலி, ஜன்னி, பித்தம், பைத்தியம், இவைகள் முதலிய அநேக வியாதிகள் கிளம்பின. வீட்டில் ஒருவருக்கொருவர் சண்டையாடத் தலைப்பட்டனர், இவை யெல்லாவற்றையும் பார்க்க எனக்குண்டான துக்கத்திற்கு அளவே யில்லை.

இவ்விதம் அவர்களுக்கும் எனக்கும் ஒரு பொய்யான ஸம்பந்தத்தை மனத்தினால் கல்பித்துக்கொண்டு என்னுடைய பூர்வஞானம், வேத சாஸ்திரஞானம் இவைகளெல்லாவற்றையும் மறந்து நான் கஷ்டப்பட்டதை, வியாஸரே! என்னவென்று சொலலுவேன்?

நம் பிள்ளைகள் மிக்க பலவான்கள், சூரர்கள், யுத்தத்தில் நல்ல தேர்ச்சியுள்ளவர்கள். நம்முடைய பேரன் பேத்திமார்கள், வீட்டில் உல்லாஸமாய் விளையாடிக் களிக்கிறார்கள். நம் நாட்டுப்பெண்களோ நம் பேச்சை ஒருபோதும் தட்டுவதே யில்லை. ஆகா என்ன பாக்கியம்! நம்மைப்போல் ஸகல பாக்கியங்களும் பொருந்தியவர்கள் உலகில் யாரிருப்பார்கள் என்று சில சமயம் சந்தோஷப்பட்டேன். நாம் நாரத மகரிஷி, நம்மை பகவான் தம் மாயையினால் மோகிக்கச் செய்து இவ்விதம் பதுமைபோல் ஆட்டிவைக்கிறார் என்று எனக்கு ஒரு போதும் ஞாபகத்துக்கு வரவேயில்லை.

இவ்விதம் காலங்கழித்துக் கொண்டிருக்கையில், ஒருநாள் ஒரு சத்துரு அரசன் பட்டணத்தை வளைத்துக்கொண்டு யுத்தம் செய்ய வந்தான். யுத்தம் பலமாய் நடந்தது. அந்த யுத்தத்தில் என் பிள்ளைகளும் பேரர்களும், கொல்லப்பட்டார்கள். அரசன் தோல்வியடைந்து ஓடிவிட்டான். இதைக் கண்டதும், நான் இரணகளத்திற்கு ஓடி அங்கு அவர்கள் அலங்கோலமாய் விழுந்து மரித்துக் கிடப்பதைக் கண்ணுற்று, துக்க சாகரத்தில் மூழ்கினவளாய்க் கதறினேன். ஓ என் குழந்தைகாள்! உங்களுக்கு இக்கதி வர வாய்க்குமோ? உங்கள் பலம் எங்கே போயிற்று? உங்கள் சாமர்த்தியம் எங்கு மறைந்தது? யுத்தத்தில் பின்வாங்காத உங்கள் சௌரியம் எங்கு ஒளிந்தது? ஹம்ஸதூளிகா தல்பத்தில் சுகமாய்த் தூங்கும் நீங்கள் இம்மண்ணில் ஏன் இப்படிப் புரண்டு கிடக்கிறீர்கள்? எழுந்திருங்கள்! என்னைப் பாருங்கள்! உங்களைவிட்டுப் பிரிந்து கன்றுகளைப் பறிகொடுத்த பசுவைப் போல் கதறுகிற என்னைத் தேற்றுங்கள்!" என்று நான் பலவாறாகப் புலம்பிக்கொண்டிருக்கும் தருணத்தில் பகவான் ஸ்ரீமகாவிஷ்ணுவானவர் ஓர் கிழப் பிராம்மண வேடம் பூண்டு என்னருகில் வந்து என்னைப் பார்த்து "பெண்மணியே! நீ ஏன் அழுகிறாய்? நீ யார், இவர்கள் யார்? இவர்களுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? இவைகளெல்லாம் மோகத்தினாலுண்டான பிரமமே தவிர வேறொன்றுமில்லை. அழாதே. எழுந்திரு. பரலோகத்தை யடைந்தவர்களைக் குறித்து ஸ்நானதர்ப்பணங்கள் செய்யவேண்டிய தவசியம். அவர்களுக்காக ஸ்நானம் வெளித் தீர்த்தத்தில்தான் செய்யவேண்டியது. வீட்டில் செய்யக்கூடாதென்று தர்மசாஸ்திரங்களில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது" என்று மொழிந்தார். இவ்விதம் அவர் உரைக்கக்கேட்டு நானெழுந்திருந்து அரசன் பந்துஜனங்கள் இவர்களோடு, பிராமண வேடம்பூண்ட பகவான் முன்னாடி வழிகாட்ட, ஓர் தடாகத்தினருகில் வந்துசேர்ந்தேன். அந்தத் தடாகத்தின் ஜலத்தினருகில் ஸ்ரீபகவான் கிருபையுடன் என்னையழைத்துப் போய் "ஓ பெண்கள் சிகாமணியே! துக்கத்தை விட்டுவிடு. இறந்தவர்களுக்காக ஸ்நானம் தர்ப்பணம் செய்யவேண்டிய சமயமிது. எத்தனையோ ஜன்மங்களில் உனக்கு எத்தனையோ கோடி பிள்ளைகளும் பேரர்களும் மரித்திருப்பார்கள். எத்தனையோ தாய்தந்தைகள், எத்தனையோ ஸகோதரர்கள், எத்தனையோ நாட்டுப்பெண்கள் மரித்துவிட்டார்கள். நீ யாரைக் குறித்துத் துக்கப்படுவாய்? இது வெறும் பொய். கனவுக்கொப்பானது. பிராணிகளுக்குத் துக்கத்தை உண்டுபண்ணக்கூடியது. தன் மனத்தினால் கற்பித்துக்கொண்ட வீண் பிரமமே தவிர வேறொன்றுமில்லை. ஆகையால் துக்கத்தை விட்டுவிட்டு இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்" என்றார்.

நானும் உடனே அந்தப் புருஷதீர்த்தத்தில் (ஸ்திரீரூபம்போய் புருஷரூபம் வரக்கூடிய தீர்த்தத்தில்) ஒரு முழுக்கு முழுகினேன். முழுகி எழுந்து பார்க்கும்பொழுது ஸ்திரீரூபம் போய் என்னுடைய ஸ்வயரூபம் (நாரதரூபம்) வந்துவிட்டது. அப்பொழுதே பிராமணரூபத்தை விட்டுத் தம் ஸ்வயரூபத்துடன் வீணையைக் கையிலேந்திக் கரையில் நிற்கும் பகவானைத் தரிசித்தேன். அப்பொழுது எனக்கு ஞாபகம் வந்துவிட்டது. நாம்தான் நாரத மகரிஷி; பகவானுடைய மாயையில் அகப்பட்டுக்கொண்டு ஸ்திரீ ஸ்வரூபத்தை யடைந்து கஷ்டப்பட்டோம்" என்று நினைத்துக்கொண்டிருக்கும்போதே, பகவான் "ஓ நாரதரே! ஜலத்தில் நின்றுகொண்டு என்ன செய்கிறீர்? இங்கே வாரும்!" என்று கூப்பிட்டார். நான் மிகவும் வெட்கமடைந்து அவரருகிற் சென்றேன். சென்றதும் என்னைப் பார்த்து ஓயாமல் சிரித்து, "நாரதரே மாயையின் ஸ்வரூபம் இப்பொழுதாவது தெரிந்ததா? நான் மாயையை ஜயித்தவன் என்று இப்பொழுது சொல்வீரா? பிரம விஷ்ணு ருத்ராளான எங்கள் மூவராலுமே மாயையை ஜயிக்க முடியாதென்றால் மற்றவர்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? மாயையின் ஸ்வரூபம் இன்னதென்று உமக்குக் காண்பிப்பதற்காகவே உம்மை இங்கழைத்து வந்தேன். என் எண்ணம் நிறைவேறிற்று. இனி நீர் உம்மிஷ்டப்படி எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்" என்றுரைத்து வீணையையும் கிருஷ்ணாஜிநத்தையும் என்னிடம் கொடுத்துவிட்டுக் கருடன்மேலேறி வைகுண்ட மேகினார்.

. கேட்டீரா வியாஸமகாரிஷி! நான் அனுபவித்ததை உமக்கு அப்படியே சொன்னேன். ஆகையால் நீரானாலும் சரி, நானானாலும் சரி, வேறு யாரானாலும் சரி, மாயை விஷயத்தில் மிகவும் ஜாக்கிரதையாகவே இருக்கவேண்டும். நாம் மாயையை ஜயித்துவிட்டோம் என்று ஒருபோதும் அகங்காரம் கொள்ளக்கூடாது. அது எப்போதும் யாரையும் மோகிக்கச் செய்யும். இதுதான் மாயையின் மகிமை யென எடுத்துரைத்தார்.

வர்த்தனா சாஸ்திரம்

வேட்கையும் உபயோகமும்

WANT AND UTILITY

மனிதர் வேட்கைகளும் ஆசைகளும் எண்ணிறந்தனவாயும் பல்வகைப் பட்டனவாயும் இருக்கின்றன. நாகரிகமடையாத மனிதனுக்கு, மிருகங்களுக்கு அவசியமான பொருள்களைவிட அதிகப் பொருள்கள் அவசியமில்லை. ஆனால் அவன் நாகரிக மார்க்கத்தில் முந்த முந்த, அவனுடைய அவசியங்களும் அவ்வவசியங்களை அவன் தேடிக்கொள்ளும் விதங்களும் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. மனிதன் நாகரிகமடைய அடைய அவன் புத்தி விசாலமாகிறது; அவனது மிருகத்தன்மைக்குரிய ஆசைகளும் அவனது புத்தி அபிவிருத்தியினால் சிறப்புற்று முன்னிலும் நுண்ணியவைகளாக ஆகின்றன.

ஒரு மனிதனது ஐசுவரியம் விருத்தியாகவாக, அவனுடைய அன்ன பானாதிகள் அதிக விலைபெற்றவைகளாகவும் பல்வகைப்பட்டவைகளாகவும் ஆகின்றன. ஆனால் அவ்வகைச் செலவுக்கு அவன் வயிற்றின் அளவு ஓர் வரம்பை விதிக்கிறது. அவ்வரம்பை யடைந்தவுடன், அவன் விருந்தினரை யுபசரிக்க வேண்டுமென்ற ஆசையையும் ஆடம்பரமாக வாழவேண்டுமென்ற ஆசையையும் பூர்த்தி செய்துகொள்ளத் தொடங்குகிறான். பிறரைவிட தான் ஸ்திதியில் உயர்ந்தவனென்று நிரூபிப்பதற்காக, உயர்ந்த சிற்பவேலைகள் அமைந்த விசாலமான மாளிகைகளைக்கட்டியும், அவைகளில் விலையுயர்ந்த விசித்திர வஸ்துக்களைச் சேகரித்து வைத்தும், வருபவர்க்கெல்லாம் விருந்தளித்தும், பசுக்கள், காளைகள், குதிரைகள், வண்டிகள் இவைகளைத் தனக்கு வேண்டிய அளவைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமாக வைத்துக்கொண்டு மாற்றிமாற்றி உபயோகித்தும் ஆடம்பரமாய் வாழ்கிறான். இந்த ஆடம்பர ஆசைமட்டும் ஒருபோதும் பூர்த்தியாக நிறைவேறாது.

ஆடையாபரணாதிகளிலுள்ள ஆசையானது ஐசுவரியத்தை ஏராளமாய்ச் செலவழிக்க இடந்தருமே யெனினும், இவ்வாடம்பர ஆசையின் பக்கத்தில் வைத்து ஒப்பிட்டுப் பார்த்தால், அது அற்பமாகத் தோன்றும்.

ஆரம்பத்தில் மனிதனுடைய ஆசைகள்தாம் அவனைப் பலவித வேலைகளைச் செய்யத்தூண்டுகின்றன. அவ்வேலைகளைச் செய்வதில், அவன் அவைகளைத் திருத்தமாகச் செய்யவேண்டுமென்ற ஆவல்கொண்டு, அதற்கனுகூலமாகவிருக்கக்கூடிய வேறு பல பொருள்களைத் தேடிக்கொள்ள முயலுகிறான். ஆகையினால் கொஞ்சகாலம் சென்றபின், அவன் செய்யும் வேலைகளே அவன் ஆசைகளை விருத்தி செய்கின்றன.

இவ்வாறு பொருள்கள் வேண்டுமென்று மனிதன் கொள்ளும் ஆசைக்கு அப்பொருள்களின் உபயோகமே ஆதாரமாக விருக்கிறது. ஒருபொருள் ஒருவனுக்கு எவ்வளவு உபயோகமுள்ளதா யிருக்கிறதோ, அவ்வளவாகவே

யிருக்கிறது அவன் அதன்மீது கொள்ளும் ஆசையும். ஆடம்பர ஆசையைத் தவிர மற்ற எவ்வித ஆசைக்கும் ஒரு அளவு ஏற்பட்டிருக்கிறதாகையால், ஒரு ஆசையைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒருபொருள் ஒருவன் கையிலிருக்கும் அளவு அதிகரிக்க அதிகரிக்க, அப்பொருளையே பின்னும் அதிகமாகச் சம்பாதிக்க வேண்டுமென்ற ஆசை குறைந்து வருகிறது. அவனுடைய ஆசையைப் பூர்த்திசெய்யக் கூடிய அளவு அந்தப் பொருள் அவனுக்குக் கிடைத்தபின், அதற்கு அடுத்தபடியாயுள்ள ஆசையைப் பூர்த்திசெய்துகொள்ள ஆரம்பிப்பான்.

மேற்கூறிய ஆசைகளுக்கு வரம்புகளுண்டென்று மேலே கூறியிருக்கிறோம். அவ்வரம்புகள் ஸ்திரமான வரம்புகளல்ல, சௌகரியத்துக்குத் தக்கபடி அவைகள் மாறக்கூடியவை. "இந்தச் சாமான்தான் இவ்வளவு நம்மிடம் இருக்கிறதே, இன்னும் வாங்தவானேன்? ஒருசமயம் விலை குறைவாக இருந்தால் இன்னும் கொஞ்சம் வாங்கினாலும் வாங்கலாம்; முன்பு வாங்கிய விலைக்கே இன்னும் வாங்க எனக்கு இஷ்டமில்லை" என்று ஒவ்வொருவரும் பலமுறை சொல்லிக்கொள்ளும்படி நேரிடுகிறது. அதை ஒரு உதாரணத்தால் விளக்குவோம்.

இப்போது நமது நாட்டில் காப்பி அரிசியைப்போலவே ஒரு அவசியமான பதார்த்தமாகிவிட்டது. ஆயினும், ஒருவன் உபயோகிக்கும் காப்பிக்கொட்டையின் அளவு அதன் விலையையும் பொறுத்ததாகவிருக்கிறது. உருண்டைக் காப்பிக்கொட்டை வீசை ரூ. 2-0-0 வீதம் விற்பதாக வைத்துக்கொள்ளுவோம். காப்பிக்கொட்டை விலை வீசை ரூ. 10-0-0 ஆக இருக்கும்பக்ஷத்தில், வருஷத்துக்கு ஒருவன் ஒருவீசை வாங்குவதற்கும், இலவசமாகக் கிடைப்பதாயிருந்தால், வருஷத்துக்கு முப்பதுவீசை உபயோகிப்பதற்கும், தயாராயிருப்பதாக வைத்துக்கொள்ளுவோம். அப்படிப்பட்டவன் வீசை ரூ. 2-0-0 வீதம் விற்கும்போது பத்து வீசை வாங்குவானேயாகில், நாம் தெரிந்துகொள்ளவேண்டுவன பின்வரும் விஷயங்கள்:—ஒன்பது வீசை வாங்கியபிறகு, பத்தாவது வீசையையும் ரூ. 2-0-0 கொடுத்து வாங்குகிறான். முதல் வீசை வாங்குவதை ரூ. 10-0-0 பெறுமானமுள்ளதாக நினைக்கும் அம்மனிதன் பத்தாவது வீசையை ரூ. 2-0-0 பெறுமானமுள்ளதாகக் கருதுகிறான். அவன் முப்பது வீசை கொட்டையை உபயோகித்துக் கொள்ளக்கூடியவனேயெனினும், பத்து வீசையுடன் நிறுத்திக்கொண்டதனால், அவன் பதினோராவது வீசையை ரூ. 2-0-0 பெறுமானமுள்ளதாகக் கருதவில்லை. காப்பிக்கொட்டை வீசை ரூ. 2-0-0 வீதம் விற்கும்போது, அவனுக்கு அதிலுள்ள ஆசையின் வரம்பு பத்தாவது வீசையெனக் கொள்ளவேண்டியிருக்கிறது. நாம் இன்னுமொரு விஷயத்தைக் கவனிக்கவேண்டும். ஒருவன் கையிலுள்ள ஓர் பண்டத்தின் அளவு அதிகரிக்க அதிகரிக்க, அது ஒவ்வொரு முறை அதிகரிப்பதனாலும் அது அதற்கு முந்தியமுறையில் அதிகரித்ததனாலுண்டான அளவு திருப்தியுண்டாக மாட்டாததலால், அப்பண்டத்தினால் ஏற்படும் மொத்த உபயோகமானது வரவர அதிகரிக்குமேயெனினும் பண்டம் அதிகரிக்குமளவில் அதிகரிக்காது.

இவ்வுண்மை பண்டங்களுக்கேயன்றி பணத்துக்கும் பொருந்தும். முப்பது ரூபாய் சம்பளம் பெறும் உத்தியோகஸ்தன் தன் வீட்டுக்கும் தான் வேலைசெய்யுமிடத்துக்கும் மூன்று மைல்தூரமிருந்தாலும், வண்டிக்கு ஒன்றரை அணா கொடுக்க மனமில்லாமல் நடந்து போகிறான். நூறுரூபாய் சம்பளமுள்ளவன் தினந்தோறும் ஒன்றரை அணா கொடுத்து வண்டியிலேறிச் செல்லுகிறான். ஆகையினால், ஒன்றரை அணா என்னும் தொகையை, ஏழை அதிக மதிப்புள்ளதாகவும் பணக்காரன் குறைந்த மதிப்புள்ளதாகவும், கருதுவதாக ஏற்படுகிறது. அந்த ஒன்றரை அணாவினால் பணக்காரன் அடைய எண்ணும் பலனைவிடப் பன்மடங்கு அதிகமாயிருக்கிறது ஏழை அடைய உத்தேசிக்கும் பலன்.

காப்பிக்கொட்டை வீசை ரூ. 2-0-0 வீதம் விற்கும்போது, ஏழை வருஷத்துக்கு நான்கு வீசையும், தனிகன் வருஷத்துக்குப் பத்து வீசையும், சொந்த பானத்துக்கு உபயோகித்துக் கொள்ளுகிறார்கள். அதற்குக் காரணமென்னவெனில், இரண்டு ரூபாய் என்னும்

தொகை அவர்களுக்கு வெவ்வேறு மதிப்புள்ளதாக இருக்கிறது. அப்படிப்பட்ட வேறுபாட்டினால், நான்காவது வீசையினால் ஏழை அடையும் திருப்தி, பத்தாவது வீசையினால் தனிகன் அடையும் திருப்தியைவிட அதிகமாகவிருக்குமென்பது எளிதில் விளங்கும்.

இங்கு ஒரு உண்மை தானாகவே விளங்குகிறது. எவ்வளவுக் கெவ்வளவு ஒருவனுடைய தனம் அதிகரிக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அவனுக்குப் பணத்தின்மீதுள்ள மதிப்புக் குறைகிறது; அவ்வளவுக்கவ்வளவு அவன் யாதாயினுமொரு பலனைப் பெறுவதற்குச் செலவழிக்க இஷ்டப்படும் தொகை அதிகரிக்கிறது.

ஒரு பண்டத்தை ஒரு விலைக்கு ஓர் அளவு வாங்கும் ஒருவன் அப்பண்டத்தை அதே விலைக்கு அதிக அளவு வாங்கினால்தான், அப்பண்டத்தைப் பெறவேண்டுமென்ற ஆசை அவனுக்கு அதிகரிக்கிறதென்று சொல்லலாம். அவன் தனம் அதிகரித்ததனாலாவது அப்பண்டத்தின் விலை குறைந்ததனாலாவது அவன் அப்பண்டத்தை வாங்குவானேயாகில், அவனுக்கு அவ்வாசை அதிகரித்ததாகச் சொல்லக்கூடாது.

இதுகாறும் நாம் ஒரு மனிதனுக்கு ஒரு பொருள் தேவையாயுள்ளதைப்பற்றிக் கவனித்தோம். தற்காலம் காப்பிக்கொட்டை நமது இராஜதானியில் பெரும்பான்மையோரால் அவசியமாகக் கருதப்பட்டு வாங்கப்படுவதால், ஒரு மனிதனுக்கு அது தேவையாயுள்ள அளவு சாதாரணமாக எல்லோருடைய தேவையின் அளவையும் காட்டக்கூடியதாக இருக்கிறது. காப்பிக்கொட்டையைப் போலவே அவ்வளவு அத்தியாவசியமாகக் கருதப்படாத வஸ்துக்கள் (உதாரணமாக, கைக்கடியாரம், துணிக்குடை, பௌண்டென் பேனா முதலிய வஸ்துக்கள்) விஷயத்தில், அவைகளின் விலை சிறிது ஏறி இறங்குவதனால் அவைகள் தேவை குறைந்து அதிகரிக்காது. அவைகளின் விலை மிகவும் அதிகமாக ஏறியோ இறங்கியோ செய்தாலல்லது, அவைகள் தேவையின் அளவு மாறாது.

இது நிற்க, பணக்காரர்கள், ஏழைகள், சிறுவர்கள், பெரியோர்கள், ஸ்திரீகள், புருஷர்கள், பலவகைப்பட்ட இச்சைகள், குணங்கள், தொழில்களுள்ளவர்கள் முதலியோர், பண்டங்கள் வாங்கும் பெரிய வியாபாரஸ்தலங்களில், யாவருக்கும் உபயோகமான வஸ்துவின் விலை சிறிது இறங்கினாலும், அந்த ஸ்தலத்தில் வாங்குபவருக்கு அது தேவையாயுள்ள மொத்த அளவு நிச்சயம் அதிகரிக்கும். ஆனால் அதற்கு ஓர் நிபந்தனை உண்டு; என்னவெனில், மற்றப்படி சந்தர்ப்பம் மாறுபாடில்லாமலிருக்க வேண்டும். உதாரணமாக, எலுமிச்சம்பழம், தயிர் இவைகளின் விலை மாரிகாலத்தில் கொஞ்சம் இறங்குமேயாயினும், அவைகள் அந்தக் காலத்தில் அதிகமாக உபயோகிக்கப்படமாட்டாவாகையால், அவ்விலையிறக்கத்தினால் அவைகள் தேவை அதிகரிக்காது. அல்லது, ஒரு பண்டத்தின் விலை இறங்கும் சமயத்தில், ஓர் வியாபாரஸ்தலத்தைச் சுற்றி வசிப்பவர்களது வழக்கம் மாறுபட்டுப் போய், அப்பண்டத்தின் தேவை அற்றேபோயிருக்கலாம்; அப்போதும் விலையிறக்கத்தினால், தேவை அதிகரிக்காமலிருக்கும். அல்லது, ஒரு பண்டத்திற்குப் பதிலாக உபயோகிக்கத்தக்க விலைசரசமான மற்றொரு பண்டம் கண்டுபிடிக்கப்பட்டதனால், முதற்கூறிய பண்டத்தின் விலையிறங்கினாலும், அதன் தேவை அதிகரிக்காமல் இருக்கலாம். ஆகையினால்தான் விலையிறக்கத்தினால் தேவையதிகரித்தல் மற்றப்படி சந்தர்ப்பம் மாறுபடாமலிருக்கவேண்டுமென்ற நிபந்தனைக்கு உட்பட்டதாகவிருக்கிறது.

தேவையைக்குறித்த பொதுவிதி:-யாதாயினுமொரு பண்டம் ஏராளமாக விற்பனைக்கு வருமாகில், அவ்வளவையும் வாங்கிக்கொள்ள மனிதர்களைத் தூண்டுவதற்கு, அப்பண்டத்தின் விலையைக் குறைக்கவேண்டும். அதே விஷயத்தை வேறுவிதமாகக் கூறுமிடத்து, ஒரு பண்டம் தேவையான அளவானது அப்பண்டத்தின் விலையிறங்கும்போது அதிகரித்து, அதன் விலை ஏறும்போது குறைகிறது.

ஆனால் விலையின் ஏற்ற இறக்கத்தின் அளவுக்கும் தேவை அளவு குறைந்து அதிகரிப்பதின் அளவுக்கும் ஓரே கணக்கான சம்பந்தம் இடையாது. உதாரணமாக, காப்பிக்கொட்டையின் விலை இரண்டணா குறைந்தால், ஒரு வியாபார ஸ்தலத்திலுள்ள மொத்த விற்பனை முப்பது வீசை அதிகரிக்கும்; அதன் விலை நாலணா குறைந்தால், மொத்த விற்பனை நூறு வீசை அதிகரிக்கும். ஆகையினால், விலை இறங்கினால் தேவை அதிகரித்து விற்பனை அதிகரிக்கும் என்று மட்டுந்தான் கூறமுடியும்.

பாடசாலைகளில் சித்திரம் வரைதல் என்னும் பாடத்தைப் பற்றிய சில குறைகள்

DEFECTS IN TEACHING DRAWING

சித்திரம், கவனம், கானம் இம்மூன்றும் பைன்ஆர்ட்ஸில்(Fine Arts)சேர்ந்தவைகள். இவைகளில் விசேஷ ஞானமுள்ளவர் சொற்பமேயாகும். இவைகளில் தேர்ச்சி அடைவதென்றால், பி.ஏ., பட்டம்பெற ஒருவர் எவ்வளவு சிரமப்பட்டு எவ்வளவு அறிவு பெறவேண்டுமோ அதிலும் அதிகக் கஷ்டப்பட்டுக் கற்கவேண்டுமென்றே துணிவாய்ச்சொல்லலாம். பி.ஏ. பட்டமாவது எவரும் பெறலாம். மற்ற மூன்றிலும், விசேஷ அறிவுள்ளவர்களே அடைதல் கூடும். சித்திரம் வரைதல் என்பது எவ்விதக் கைத்தொழிலுக்கும் தாயாகும். சித்திரம் இல்லாமல் எந்தக்கைத்தொழிலும் நடைபெறாது. சித்திரம் எல்லாக் கைத்தொழில்களையும் மேம்படுத்துகிறது. ஒரு தச்சன் அரிகால் ஜன்னல் செய்வதைவிட, தேரில் பொம்மை முதலிய வேலையைச் செய்வதனால் அதிக பலனை அடைகிறான். ஒரு தட்டான், காப்பு, ஒட்டியாணம் செய்வதைவிட பலவிதச் சித்திரப்பாடுள்ள நகாசுகள் இழைப்புகள் செய்வதனாலே அதிக பலனை அடைகிறான். ஒரு நெசவுக்காரன் சாதாரணத் துண்டுவேஷ்டி நெய்வதைவிட புடவைகளில் முகதலையில் மாங்காய், யானை, குதிரை, பலவித பூக்கள்போட்டு அதிகபலனை அடைகிறான். அதிக பலனுக்கு சித்திரம் காரணமல்லவா? தவிர, பி.ஏ. பட்டம் பெற்றாலும், சித்திரம் தெரிந்த காரணத்தினால், தெரியாதவரைவிட மேம்பட்டே இருக்கிறார். எஞ்சினீயரிங் இலாகாவில் சித்திரத்தை விசேஷமாய்க் கவனிக்கிறார்கள். உபாத்தியாயர்களும்பிள்ளைகளுக்கு ஒருவஸ்துவை விளக்கும்போது அதன் உருவத்தை ஒரு சித்திரத்தால் வரைந்து, கண், காது இவ்விரு புலன்களினால் சீக்கிரம் பதியவைக்கிறார். வக்கீல் வேலை என்றாலோ அதிலும் அவசியமே. ஒரு கக்ஷிக்காரன் தன் வழக்கைச் சொல்லிக்கொண்டு வரும்பொழுது ஏதாவது ஒரு பச்சிலையை எடுத்துக்கொண்டு, 'ஐயா! இது என் நிலம் ஆச்சதுங்களா' என்று ஒரு கோடு கிழிக்கிறான். ஆகவே, சித்திரம் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது. மற்றும் விவரமாய் எழுதுவதென்றால் சித்திரத்தின் பெருமையைவருணிப்பதே அசாத்தியம். இவைகளெல்லாம் நன்றாய்த் தெரிந்துதான் நவீன புஸ்தகங்களில் பாடம் பாதி, பொம்மை பாதியாக அச்சிட்டிருக்கிறார்கள். சுவர்களில் படங்களால் பிரசாரம்செய்வதற்கும் அதுவே காரணம். இவ்வித இரகசியங்களை அநேக பிள்ளைகள் தெரிந்துகொள்ள இடமில்லாமலே அநேக பள்ளிக்கூடங்களில் நடந்துவருகிறது. பள்ளிக்கூடங்களில் வாசிக்கிற ஒவ்வொருவரும் பி. ஏ. பட்டம் பெறுகிறதில்லை. நூற்றுக்கு இரண்டு அல்லது மூன்றுபேர்கள் தாம் பெறுகிறார்கள். அப்படிப் படிப்பில் விசேஷ புத்தி இல்லாதவர்களுக்கு கைத்தொழிலுக்குத் தாயான இந்தச் சித்திரத்தை ஸ்கூல் பைனலில் (School Final) ஓர் உப பாடமாக ஏற்படுத்தினால் பலர் தெரிந்துகொள்ள இடமுண்டாகிறது. அப்படி அதில் விசேஷ புத்தியுள்ளவன் ஒருவன் ஏதாவது சித்திரம் வரைவதைவீட்டில்கண்டால் பெற்றோர்கள் 'கோழி, கொக்கா நாளைக்குச் சாப்பாடு போடப் போகிறது? இதைப் போடவேண்டாம்' என்று தடுத்துவிடுகிறார்கள். ஆகையால் இதில் ஆசையுள்ளவன் பெற்றோர்களுக்குத் தெரியாமலே விருத்திபண்ணவேண்டியிருக்கிறது. அவர்கள் தடுப்பது நியாயமே, உணர்ச்சியில்லாத பாடத்தை பள்ளிக்கூடத்தில் வைத்திருக்கிறார்கள் என்று பெற்றோர்கள் நன்றாய் அறிந்திருக்கிறார்கள். அதில் பலன் இருந்தும்,இல்லையென்றே தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஷார்ட் ஹாண்ட், டைப்ரைடிங் வியாபார உதவிக்குரிய பாடங்கள் இவைகளைப்போல் சித்திரம் வரைதலையும் ஓர் உபபாடமாக ஏன் ஏற்படுத்தக்கூடாது? ஒரு உபபாடமாக ஏற்படுத்தினால் சித்திரம் வரைதலிலும் உற்சாகம் காட்டி நடப்பார்கள். தவிர, 3-வருஷ காலமாய் 5-ம் 6-ம் பாரங்களில் சித்திரப் பாடத்தைத் தெரிந்தோ தெரியாமலோ நீக்கிவிட்டார்கள். இதுவும் நம் துரதிருஷ்டமல்லவா? ஒரு உபபாடம் என்று ஏற்பட்டால், அதைச் சொல்லித்தர, விதிகள் ஏற்படவேண்டுமல்லவா? இந்தக் குறைகளை கல்வி இலாகா அதிகாரிகள் ஆராய்ந்துபார்த்து, சித்திரம் வரைதலின் அபிவிருத்திக்குரிய வழிகளைத் தேடவேண்டும்.

நமது சிறு கதை

OUR SHORT STORY

சூது நாணயக்காரர் சூழ்ச்சி

அல்லது

மோகனசுந்தரி

முதல் அத்தியாயம்

காமவலை

ஆஸ்தமனமாகிச் சுமார் ஐந்துநாழிகைப் பொழுது ஆகியிருக்கும். துரைசாமி பிள்ளை சென்னைக் கடற்கரையில் கலசமஹாலுக்கெதிரில் அடர்ந்து வளர்ந்த செடிகளிருபுறங்களிலுமுள்ள பாதையில் நடந்து கொண்டிருந்தார். முன்னிருட்காலமாயிருந்ததுடன் அன்று மூடுபனி அதிகமாயிருந்ததினால், தமக்கு நாலடிக்கப்பால் யாராயினும் நிற்கிறாரோ என்றுகூடத் தெரிந்துகொள்ள முடியாமலிருந்தது. கடற்கரைக்கு வந்திருந்தவர்களிற் பெரும்பான்மையோர் காரிருளையும் மூடுபனியையுங் கண்டு, அஸ்தமித்துச் சிறிது நேரத்துக்கெல்லாம் அவ்விடத்தைவிட்டகன்றனர். நமது துரைசாமி பிள்ளை மனத்தில் ஒரு பெரிய கவலை ஏற்பட்டு அதைக்குறித்து அவர் அச்சமயம் சிந்தித்துக்கொண்டிருந்தாராதலால், பனியையும் இருளையும் கவனிக்கவில்லை; கவனித்திருந்தாலும் இலக்ஷியஞ்செய்திருக்கமாட்டார். துரைசாமி பிள்ளை ஓர் பாங்கில் மாதம் நூறு ரூபாய் சம்பளத்துக்கு வேலையாயிருந்தார். அவருடைய எட்டின பந்துக்களிலொருவரான பழனியாண்டி பிள்ளை என்னும் இலக்ஷாதிகாரியான ஒரு பெரிய வியாபாரியின் வீட்டில் நவீன நாகரிகத்திற்கேற்ப நடந்துவந்த பல கச்சேரிகளுக்கும் விருந்துகளுக்கும் அவர்போய் அவைகளை நன்றாய் நடத்துவதற்குப் பெரிய உதவியாயிருந்துவந்தார். அவ்வாறு அங்கு உதவி புரியுங் காலங்களில் நவீன நாகரிகப்படி அவர் பழனியாண்டி பிள்ளை வீட்டுப் பெண் பிள்ளைகளுடன் பழகிவந்தார். அவர் பந்துவென்ற காரணத்தினாலும் தங்கள் வீட்டு விசேஷகாரியங்கள் சிறப்பாய் நடைபெற அவர் செய்துவந்த உதவியின் காரணத்தினாலும், அச்சீமாட்டிகள் அவரைத் தங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவராகக் கருதி அவரிடத்தில் மிக்க அன்பு பாராட்டிவந்தார்கள்.

அவர்கள் அவ்வாறு அன்பு பாராட்டியது நமது துரைசாமி பிள்ளை மனத்தில் முடவன் கொம்புத் தேனுக்குக் கொண்டதைப்போன்ற ஆசையை எழுப்பிற்று. பழனியாண்டி பிள்ளைக்கு ஒரேவொரு பெண்தான். வேறு பிள்ளை பெண்கள் கிடையா. அப்பெண்ணின் பெயர் மோகனசுந்தரி. அப்பெயர் அவள் வடிவத்தைக்கண்டே எல்லோராலும் இடப்பட்டது. அவள் தமிழ், ஆங்கிலம் இரண்டு பாஷைகளிலும் தேர்ச்சிபெற்றவள். அவள் வீணையை வைத்துக்கொண்டு பாடவாரம்பித்தால், தேவர்கள் கானத்தைப்போல் இரம்மியமாயிருக்கும். அவளுக்கு வயது பதினாறாகியும் இன்னும் விவாகமாகவில்லை. அப்பெண்ணின்மீது ஆராத காதலுற்று அவளைமணந்துகொள்ளவேண்டுமென்று அடங்காத ஆசைகொண்டார் நமது துரைசாமிபிள்ளை.

ஆனால் அவர் தமக்கும் அப்பெண்ணுக்குமுள்ள ஸ்திதி வித்தியாசத்தை மறக்கவில்லை. அதைக்குறித்தே அவர் எப்போதும் கவலையுற்றிருந்தார். இச்சமயத்திலும் அவர் அதைக்குறித்தே யோசித்துக் கொண்டிருந்தார். அந்த யோசனையில் அவர் ஆழ்ந்திருந்தார். அப்போது அவர் மனத்தில் முன்னிலுமதிகச் சஞ்சலம் உண்டாக்கத்தக்க வார்த்தைகள் அவர் காதில் விழுந்தன. "மோகனசுந்தரியா? இலக்ஷாதிகாரி மோகனசுந்தரியா? பலே பேஷ்! அதுவா உன் நோக்கம்? சரி, எனக்கென்ன? அது உன்னிஷ்டம். ஆனால் என்னைவிட்டுப் பிரியும் உத்தேசம் மாத்திரம் வேண்டாம். பத்திரம்! நான் சொல்லுகிறபடி நடந்து வருவாயேயானால், மோகனசுந்தரியை மணந்துகொண்டு சுகமாயிருக்கலாம்!" என்று யாரோவொருவர் இன்னொருவர் மனத்தில் அம்புபோற் பாயுமாறு பேசிய வார்த்தைகள் அவர் காதில் விழுந்தன. அவை இருவர் இரகசியமாய்ப் பேசிக்கொண்ட வார்த்தைகள். அப்பால் அவர்கள் பேசிக்கொண்ட வார்த்தைகள் துரைசாமி பிள்ளை காதிற் படவில்லை. அப்போது துரைசாமிபிள்ளை யோசனையில்லாமல் மிகவுந் தவறான ஒரு காரியத்தைச் செய்தார். தாம் காதலித்த பெண்ணை மணஞ்செய்துகொள்ள முயலுவது யாரென அறிந்துகொள்ள

வேண்டுமென நிச்சயித்து, முன் கூறியவாறு பேசிக்கொண்டிருந்தவர்களைப் பின்தொடர ஆரம்பித்தார்.

மூடுபனியினாலும் இருட்டினாலும் அவர்களைப் பார்க்கமுடியவில்லையே யெனினும், அவர்களது அடிச் சத்தத்தைக் கொண்டு அவர்கள் செல்லும் மார்க்கத்தை ஒருவாறு நிதானித்துப் பின்தொடர்ந்தார். சிந்தாத்திரிப் பேட்டைக்குள் நுழைந்தபிறகுதான், பட்டணத்துக்குள் மூடுபனி சிறிது குறைவாக இருந்ததினாலும் சிறிது தூரத்துக்கொரு விளக்கு முணுக்குமுணுக்கென்று எரிந்துகொண்டிருந்ததினாலும், அவர் தொடர்ந்துசென்ற இருவரும் அவர்கண்ணுக்குப் புலப்பட்டனர். பலசந்துகளின் வழியே சென்று பெரியமேட்டில் ஒரு பெரிய கிடங்கிற்குள் அவர்களிருவரும் நுழைவதைக் கண்டார். பெண்காதலென்னும் மாயவலையிற் சிக்கி மதியிழந்தவராதலால், துரைசாமி பிள்ளை அக்கிடங்கின் கதவையணுகி அதைத் தள்ளிப் பார்த்தார். கதவு திறந்தது. முன்பின் யோசிக்காமல் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்து கும்மிருட்டில் கைகளினால் தம்மைச் சுற்றிப் பரிசித்துப் பார்த்துக்கொண்டே மெல்லச் சென்றார்.

சிறிதுதூரம் சென்றதும், யாரோவொருவர் அவர் கையை யிறுகப்பிடித்துக்கொண்டு, "நீ வருவதற்கு ஏன் இந்நேரம்? நீ வரமாட்டாயென்று எண்ணி உள்ளே போவதற்கிருந்தேன். உள்ளே போகும் வழியை மாற்றியிருப்பதனால், அதை உனக்குக் காட்டுவதற்காக இங்கே காத்திருக்கச் சொன்னார் நமது தலைவர். நேரமாயிற்று, வேகமாய் நட!" என்று சொல்லிக்கொண்டே, அவரை அழைத்துச்சென்றார். கொஞ்சதூரம் சென்றபின், துரைசாமி பிள்ளையை அழைத்துச்சென்றவர் நின்று ஒரு கதவைத் திறந்தார். இருவரும் உள்ளே நுழைந்தனர். கதவு மூடப்பட்டது.

அவர்கள் நுழைந்த அறையில் ஒரேவொரு பெரிய சுவரில் விளக்குமட்டும் எரிந்துகொண்டிருந்தது. ஐந்தாறு பேர்கள் கூடி ஏதோ பேசிக்கொண்டு நின்றனர். இவ்விருவரும் உள்ளே நுழைந்தவுடன், அவர்கள் திரும்பி இவர்களைப் பார்த்தார்கள். உடனே அவர்கள் முகத்தில் அளவற்ற ஆச்சரியமும், கரைகடந்த கோபமும் தோன்றின. அவர்களில் ஒருவன் "என்னடா! வீராசாமி! எங்களைக் காட்டிக் கொடுத்துவிட்டாயா என்ன? நீ இங்கே கொண்டுவந்து நிறுத்தியிருப்பது யார்?" என்று வெகு உக்கிரமாய்க் கேட்டுக்கொண்டே, ஒரு கைத்துப்பாக்கியை நீட்டி வீராசாமியைச் சுடுவதற்குக் குறிபார்த்தான். அப்போது துரைசாமி பிள்ளையை அழைத்துச்சென்றவன் முன்வந்து திரும்பி, துரைசாமி பிள்ளையின் முகத்தை உற்றுப்பார்த்தான். உடனே அவன் முகத்தில் அத்தியாச்சரியக் குறிகள் தோன்றின. 'இதென்ன விபரீதம்! இவன் மாரியப்பன் என்றல்லவோ எண்ணினேன்!" என்றான்.

முதலில் பேசியவன், "அடே வீராசாமி! நீ முட்டாள்தனமாய் இப்படிச் செய்திருந்தாலே உன்னைச் சுடுவது தகுந்த தண்டனையாகும். எங்களைக் காட்டிக்கொடுப்பதற்காக இவ்வாறு சூழ்ச்சிசெய்திருப்பாயாகில், தூக்கிலேறினாலும் ஏறுவேனேயொழிய உன்னைக் கொல்லாமல்விடமாட்டேன்" என்று வெருட்டினான்.

வீராசாமி அவ்வார்த்தைகளினால் சிறிதும் கலக்கமடையாது, அமைதியுடன், "அண்ணே! நீங்கள் தலைவராயிருந்துகொண்டு இப்படிப் படபடப்பாய்ப் பேசுவது நன்றாயில்லை. துப்பாக்கியை அப்பால் எடும். இப்படி நேர்ந்த விதத்தைச் சொல்லுகிறேன்" என்றான். தலைவன் அப்பொழுதும் துப்பாக்கியைச் சிறிதும் சாய்க்காமல், "உன்னுடைய கதையை அள; பிறகு துப்பாக்கியை என்ன செய்யலாமென்று யோசிக்கிறேன்" என்றான். வீராசாமி, "சரி, அப்படியானால் கேளுங்கள். உங்கள் உத்தரவுப்படி மாரியப்பனுக்கு வழிகாட்டுவதற்காக வெளியே நின்றுகொண்டிருந்தேன். நீங்களும் பிரபுவும் உள்ளே நுழைந்து சிறிது நேரத்துக்கெல்லாம், இந்த மடையன் உள்ளே நுழைந்தான். மாரியப்பனைத்தவிர வேறெவருமாய் இருக்கமுடியாதெனவெண்ணி உள்ளே அழைத்துவந்தேன். இதுதான் நடந்தது. என்னைச் சித்திரவதை செய்தாலும், இதைத்தான் சொல்லுவேன்" என்றான்.

வீராசாமி சொன்ன வார்த்தைகள் உண்மையென்று தலைவன் மனத்தில் தோன்றிற்றுபோலும். உடனே தலைவன் துரைசாமி பிள்ளையைக் கோபாவேசத்துடன் நோக்கி, துப்பாக்கியை அவர் புறமாய்த் திருப்பிக் கொண்டு, "நீர் யாரையா? இங்கு எப்படி வந்தீர்? உண்மையைப் பேசும். என்னை ஏமாற்றமுடியாது" என்றான்.

பனியை நம்பி ஏர் பூட்டினதுபோல.

துரைசாமி பிள்ளை தாம் வீட்டைவிட்டுப் புறப்பட்ட வேளையை நொந்துகொண்டு, "ஐயா! என் பெயர் துரைசாமி பிள்ளை. பாங்கில் வேலையாயிருக்கிறேன். ஏதோ தற்செயலாய் இங்கே வந்துவிட்டேன்" என்று வணக்கத்துடன் சொன்னார்.

தலைவன் நகைத்து, "ஓய்! என்ன, நாங்களெல்லோரும் நேற்றுப் பிறந்த குழந்தைகளென்று எண்ணினீரோ? யாரையோ நீர் பின்தொடர்ந்து வந்திருக்கவேண்டும். இருக்கட்டும். உமது கைகளிரண்டையும் தூக்கும்" என்றான்.

துரைசாமி பிள்ளை சுற்றிப் பார்த்தார். அவ்வறையின் ஓர் புறத்தில் எரிந்துகொண்டிருந்த உலையும், குகைகளும், புதுவெள்ளி நாணயக் குவியலும், மற்றும் பலவிதமான ஆயுதங்களும் அவர்கள் சூதுநாணயம் செய்பவர்களென அவருக்கு நன்றாய்த் தெரிவித்தன. தாம் உயிருடன் தப்புவது அரிதெனத் தீர்மானித்தார். அவர்கள் சொல்லும் வண்ணம் நடந்துகொண்டால் ஒருவேளை உயிர் பிழைக்கலாமென்ற சபலத்தினால், கைகளை மேலே தூக்கினார். அங்கு நின்றவர்களில் ஒருவன் வந்து அவரது சட்டைப் பைகளிலுள்ள காகிதங்களை யெடுத்துப் போய்த் தலைவனிடம் கொடுத்தான். தலைவன் அவைகளைச் சற்றுப் பார்வையிட்டு, பிறகு துரைசாமி பிள்ளையை நோக்கி, "ஐயா! நீர் எங்களுடன் சேர்ந்தாலொழிய உம்மை உயிருடன் வெளியே விடமாட்டோம். மரியாதையாய் எங்களுடன் சேர்ந்துவிடும். மாதம் ரூபாய் ஐம்பது சம்பளம் கொடுக்கிறேன். வீணாக உயிரை இழக்காதேயும்!" என்று நயமாய்ப் பேசினான்.

துரைசாமி பிள்ளை, முகத்தில் அடங்கா வெறுப்புடன், "என் பிராணன் போனாலும் உங்களுடன் சேரச் சம்மதிக்கமாட்டேன்" என வுரைத்தார். தலைவன் அவர் வார்த்தைகள் தன் காதிற்படாதது போல, 'துரைசாமி பிள்ளையவாளே! உம்மைப்போலத்தான் மற்றும் இருவர் எங்களுடன் சேர்ந்துகொண்டது. இதோ பார்த்தீரா ரசீது!

"நாளது...௵........மீ...உ. சென்னைப் பட்டணத்தில் சூது நாணயம் செய்துவரும் கூட்டத்தவர்களின் தலைவனான கங்காதர முதலியாருக்கு அக்கூட்டத்தைச் சேர்ந்து வேலை செய்துவரும்........ஆகிய நான் எழுதிக்கொடுத்த ரசீது. சென்ற...மீ த்தில் நான் சூது நாணய வேலை செய்ததற்காகத் தலைவனாகிய உம்மிடத்தில் நாளது தேதியில் பெற்றுக்கொண்டது ரூபாய் ஐம்பது மாத்திரம். இந்தப்படிக்கு.

தேதி .... கையெழுத்து. இந்த ரசீதைப் பூர்த்திசெய்து கையொப்பமிட்டுப் பணத்தைப் பெற்றுக்கொள்ளும்!" என்றான்.

துரைசாமி பிள்ளை திரும்பவும், "என் உயிர் போனாலும் உங்களுடன் நான் சேரவே மாட்டேன்" என்றார். அதைக்கேட்டுத் தலைவனாகிய கங்காதர முதலியார், "ஏன் ஐயா! வீணாக உயிரிழக்கிறீர்? வேலை கடினமாகவே யிராது. உமக்கிஷ்டப்படும் போது வாரும், போதும். பாங்கில் இருப்பதனால் எங்களுக்கு நிரம்ப உதவிபுரியமுடியும். அவ்வுதவிக்குத் தக்க பொருளுதவி செய்கிறோம். வேலை கஷ்டமாயிருக்குமென்று நினைக்கிறீர் போலும். வேலை மிகவும் சுலபமானது. இதோ பாரும் நமது பிரபுவை! அவரைப் பார்த்தால் சூது நாணயம் செய்பவருள் இவர் ஒருவர் என்று யாராயினும் கனவிலேனும் நினைப்பார்களா? என்ன, முத்துசாமி பிள்ளையவாள்! இனத்தாரான துரைசாமி பிள்ளைக்குப் புத்திமதி சொல்லக்கூடாதா?" என்றார்.

அப்போது முத்துசாமிபிள்ளை தம்மைத் தலைவன் சுட்டிக்காட்டியதனால் அதிருப்தியடைந்தவர்போல, "எல்லாம் நீங்களே சொல்லுங்கள். அதெல்லாம் என்னாலாகாது" என்று சலிப்புடன் கூறினார். தாம் எவ்வளவு சொல்லியும் துரைசாமி பிள்ளை தம் வார்த்தைகளுக்கு இணங்காததைக் கண்ட கங்காதர முதலியார் கோபமூண்டு, "உருக்கின வெள்ளி எவர் மனோ நிச்சயத்தையும் கணப்பொழுதில் குலைத்துவிடும். உமது மனவுறுதி எப்படிப்பட்டதோ, ஒருசொட்டுக் கையில் விட்டுப்பார்த்தால் தெரியும். துரையப்பாசாரி! குகையை உலையில் வைத்துக் கொஞ்சம் வெள்ளி உருக்கு!" என்றான். துரையப்பாசாரி அவ்வண்ணமே வெள்ளியை உருக்க

பனைமரத்தின்கீழே பாலைக்குடித்தாலும் கட்குடித்தான் என்பார்கள்.

ஆரம்பித்தான். யாவரும் மௌனமாயிருந்தார்கள். அவ்விடத்தில் நிசப்தம் மிகவும் பயங்கரமாயிருந்தது. துரையப்பாசாரிஉருகினவெள்ளியில் ஒருசொட்டு ஒரு நுண்ணிய கரண்டியினாலெடுத்து மேஜையின் ஓர்மூலையில் வைத்தார். அச்சொட்டு கால் அங்குலம் மரத்தைத் துளைத்துக்கொண்டுபோய், பிறகு இறுகிற்று. அதைக் கண்டதும் துரைசாமிப் பிள்ளையின் தேகம் குலுங்கிற்று.

கங்காதரமுதலியார் துரைசாமி பிள்ளையை நோக்கி, “தம்பி! ரசீதில் கையெழுத்துப் போடுவாயா மாட்டாயா, சொல்!” என்றார். துரைசாமி பிள்ளை “மாட்டேன்” என்று திடமாய்ச் சொன்னார். அச்சமயத்தில் யாரோ ஒருவர் கதவைத்தட்டின சத்தம் கேட்டது. வீராசாமி பிள்ளை, “இதோ மாரியப்பன் வந்து பழைய வாசற்படிக் கதவை இடிக்கிறான். அவனை அழைத்துக்கொண்டு வருகிறேன்” என்று சொல்லி வெளியே சென்று, ஒருவனை அழைத்துக்கொண்டு உள்ளே வந்தான். வந்தவன் மிகுந்த படபடப்புடன், “புதிதாக ஆள் சேர்க்கிறீர்களா? இப்போது வேண்டாம். நமது கதை வெளியாய் விட்டது. போலீஸ்காரர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். தாமதிக்காமல், இங்கிருந்து ஓடும் வழியைத் தேடுங்கள்!” என்றான்.

கங்காதரமுதலியார் கோபாவேசத்துடன், “போலீஸ்காரர்கள் வருகிறார்களா? நம்மைக் காட்டிக்கொடுத்தது யாரென்று சொல்; தொலைத்து விடுகிறேன்!” என்றார். மாரியப்பன், “ஒருவரும் காட்டிக்கொடுக்கவில்லை. இந்தக் கிடங்குக்காரர்தாம் நாம் வியாபாரமொன்றும் செய்யாமல் வாடகையை மட்டும் சரியாய்க் கொடுத்துக்கொண்டு வருவதைக்கண்டுசந்தேகமுற்று, நமது வரத்துப்போக்குகளைக் கவனித்துப் போலீசாருக்குத் தெரிவித்தார். போலீசார் வந்துகொண்டிருக்கிறார்கள். வாருங்கள், ஓடிப்போவோம்!” என்றான்.

வெளியே போலீஸ்காரர் பிகில் சத்தம் கேட்டது. உடனே அவ்வறையிலிருந்த விளக்கு அணைந்தது. உலையின் மீது எங்கிருந்தோ நீர் சொரிந்தது. அறையில் அந்தகாரம் நிறைந்தது. பலர் ஓடும் சத்தமும், ஓர் கதவு திறந்து மூடப்பட்ட சத்தமும் கேட்டன. துரைசாமி பிள்ளையும் தாம் வந்த வாசற்படிக்குச் சென்று கதவைத் திறந்தார். யாரோ ஒருவர் அவர் கையை இறுகப் பிடித்துக்கொண்டார். ஓர் லாந்தர் அவர் முகத்திற்கு நேரே பிடிக்கப்பட்டது. அவரைப் பிடித்தவர், “ஒருபயல் இங்கே இருக்கிறான், வாருங்கள்!” என்று கூவினார். அடுத்த நிமிஷம் சிலர் ஓடி வந்து, அவர் கைகளில் விலங்கிட்டார்கள். துரைசாமி பிள்ளைக்குத் தலைசுழன்றது. பிறகு நடந்ததெல்லாம் கனவுபோலிருந்தது.

இரண்டாவது அத்தியாயம்
பலமான சாக்ஷியங்கள்

துரைசாமி பிள்ளையை செஷன்ஸுக்குக் கமிட் செய்துவிட்டார்கள். தாம் சேர்த்து வைத்திருந்த சிறிது பொருளைக்கொண்டு அவர் ஒரு வக்கீலை நியமித்தார். வக்கீல் சிறைச்சாலைக்கு வந்து, நடந்ததை யொளிக்காமல் உரைக்கும்படி சொன்னார். துரைசாமி பிள்ளை நடந்தவைகளை நடந்தவண்ணம் உரைத்தார். அவர் சொன்ன வார்த்தைகளைச் சிறிதும் நம்பாமல் வக்கீல் புன்னகையுடன் அவ்விடம் விட்டகன்றார்.

செஷன்ஸ் கோர்ட்டில் கேஸ் விசாரணைக்கு வந்தது. சர்க்கார் வக்கீல் துரைசாமி பிள்ளை குற்றவாளியென்று நிரூபிக்கத்தக்க விஷயங்களைப் பின்வருமாறு எடுத்துரைத்தார்.

1. குற்றவாளி சூது நாணயம் செய்யுமிடத்தில் அவைகளைச் செய்துகொண்டிருக்கையில் பிடிக்கப்பட்டான்.
2. அவனைப் பிடித்தபொழுது அவன் சட்டைப்பையிலிருந்த பணத்தில் மூன்று கால் ரூபாய்கள் சூது நாணயங்களா யிருந்தன.
3. அவ்வறையிலிருந்த ஓர் மேஜையில் குற்றவாளியின் கடிதங்களும், வெள்ளிக்கட்டி, மற்றும் சில லோகங்கள், மருந்துகள் இவைகளுடன் காணப்பட்டன.
4. சூது அரைரூபாய் நாணயங்கள் அடங்கிய சிறுபை யொன்று குற்றவாளி குடியிருக்கும் அறையில் அகப்பட்டது.
5. அவனைக் கைதுசெய்த மறுநாட்காலையில் அவன் குடியிருக்கும் இடத்துக்கு இரகசிய வார்த்தைகளடங்கிய ஓர் கடிதம் வந்தது.
6. குற்றவாளி வேலையாயிருக்கும் பாங்கில் வெகுகாலமாக எப்படியோ சூதுவெள்ளி நாணயங்கள் ஏராளமாய் வந்துசேர்ந்துகொண்டிருந்தன.

இவ்வளவு பலமான சாக்ஷியங்களுக்கு எதிரே எந்தவார்த்தை நிற்கும்? துரைசாமிபிள்ளையின் வக்கீல் ஏதாவது சொல்லவேண்டுமே யென்று, துரைசாமி பிள்ளை தாம் சூது நாணயக்காரர் வேலைசெய்யும் இடத்தில் அகப்பட்டதற்குச் சொன்ன காரணமானது நிஜமானதென்றும், நிஜமான குற்றவாளிகள் தங்கள் குற்றத்தை இவர்மீது சுமத்தவேண்டுமென்ற நோக்கத்துடன் இவர் சட்டைப்பையிலும் இவர் வசிக்கும் அறையிலும் சூது நாணயங்களை இவருக்குத் தெரியாமல் வைத்துவிட்டதாகவும், தமது கக்ஷிக்காரர் நல்லொழுக்கமுடையவரென்று யாரும் சொல்லுவார்களென்றும், அவரது பாலியத்தையும் அனுபோகக் குறைவையும் உத்தேசித்து, சுலபமான தண்டனை விதிக்கவேண்டுமென்றும் சொன்னார். ஜூரியும் ஜட்ஜும் தயவு பண்ணி அவருக்கு மூன்றுவருஷக் காவல் தண்டனை விதித்தார்கள்.

துரைசாமி பிள்ளை அன்று சாயங்காலம் குற்றவாளியின் வண்டியிலேறும்போது அருகே வேகமாய்ப் போய்க்கொண்டிருந்த இரட்டைக் குதிரைவண்டியில் பழனியாண்டி பிள்ளையின் குமாரத்தி மோகனசுந்தரியைக் கண்டார். அவளும் அச்சமயம் அந்தப்பக்கம் திரும்பி அவரைப் பார்த்தாள். துரைசாமி பிள்ளை பரபரப்புடன் வண்டியிலேறி, பிறர் இகழ்ச்சிக்குப் பாத்திரமான தமது உருவத்தை மறைத்துக் கொண்டார்.

மூன்றாவது அத்தியாயம்
விவாகம் நிறுத்தல்

மூன்று வருஷ காலம் கழிந்தது. துரைசாமி பிள்ளை சிறைச்சாலையைவிட்டு வெளியே வந்தார். அறிந்தவர் முகத்தில் விழிக்க வெட்கினாரேயாயினும், தம்மைச் சிறைச்சாலைக்கு அனுப்பிய காதலின் கோவிலான மோகனசுந்தரியின் ஸ்திதியைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற ஆசையினால் தூண்டப்பட்டு, துரைசாமி பிள்ளை பழைய பூந்தமல்லி ரோட்டிலுள்ள பழனியாண்டி பிள்ளையின் பங்களாவைநோக்கி நடந்தார்.

பங்களாவில் பெரிய பந்தல் போட்டு, தேர்ச்சீலைகள், மகாதோரணங்கள், ஈச்சங்குலைகள் முதலியன தொங்கவிடப்பட்டு, வாழைமரங்கள் குலைகளுடன் நிறுத்தப்பட்டிருப்பதை வெகு தூரத்திலிருந்தே கண்ணுற்றும், கோஷிக்கும் மங்கள வாத்தியங்களின் இன்னொலியைச் செவியுற்றும், துடிக்கும் மனத்துடன் துரைசாமி பிள்ளை சிறிதும் யோசனையின்றி பங்களாவை நோக்கி விரைந்தோடினார். பங்களாவை நெருங்கியதும் அவருக்குப் புத்தி சிறிது சுவாதீனமாகி, தாம் அப்படி ஓடுவது தகுதியல்லவென உணர்ந்து, ஓட்டத்தை நிறுத்திப் பையநடந்து சென்று, பங்களாவையடைந்து, அங்கு நின்றவர்களி லொருவரை என்ன விசேஷமென்று கேட்டார். அதற்கு அவர் பழனியாண்டி பிள்ளை குமாரத்திக்கு அன்று விவாகமுகூர்த்தமென்றும், அப்போது தாலிகட்டும் தருணமென்றும் பதிலுரைக்க, துரைசாமிபிள்ளை தாம் கனவிற்கண்ட வாழ்வு ஒருபோதும் நிறைவேறுவதற் கிடமில்லாமற் போவதை யுன்னி மிகவும் வருந்தி, தாம் காதலித்த சீமாட்டியின் முகத்தை இன்னும் ஒருமுறை பார்த்துவிட்டு, தமது பாக்கியத்தை வேருடன் அழிக்கும் எதிரியாரென்று அறிந்துகொண்டு வரவேண்டுமென்ற ஆவல்கொண்டு, கூட்டத்துடன் கலந்து பங்களாவுக்குள் நுழைந்து, கலியாண மண்டபத்தை யணுகினார்.

அப்போது பழனியாண்டி பிள்ளை தம் மகளை மாப்பிள்ளைக்குத் தாரைவார்த்துக் கொடுக்குந் தருணம். மணக்கோலத்துடன் நிற்கும் பெண்ணையும் மாப்பிள்ளையையும் பார்த்ததும், துரைசாமி பிள்ளையின் கண்களினின்று தீப்பொறிகள் சிந்தின. அவர் உதடுகள் துடித்தன. பித்தனைப்போல் கூட்டத்தை விலக்கிக் கொண்டு கலியாண மண்டபத்துக்குப் போய்ச் சேர்ந்தார். அவரது செய்கையைக் கண்டவர்கள் அவரைப் பித்தனென்றே எண்ணினார்கள். சிறிது சந்தடியுண்டாயிற்று. சந்தடியின் காரணமென்னவென்றறிய பழனியாண்டி பிள்ளை நிமிர்ந்து பார்த்தார். உடனே துரைசாமி பிள்ளை, “பிள்ளையவாள்! அதோ நிற்பவன் மோகனசுந்தரியை மணந்துகொள்ளத் தகுந்தவனல்ல. அவன் சூது நாணயம் செய்பவன். ஆகையினால் நீர் அவனுக்குத் தங்கள் பெண்ணைக் கொடுக்கக்கூடாது! கடவுளின் மேல் ஆணை!” என்று உரக்கக் கூவினார்.

இவ்வாறு அவர் கூவியதும், யாவரும் அவர் பித்தனென்றே நிச்சயித்து, அவர் வேறு ஏதாவது தொந்தரவு செய்யாமலிருக்குமாறு, அவ

ரைச் சூழ்ந்து பிடித்துக்கொண்டார்கள். துரைசாமி பிள்ளை மூன்று வருஷகாலம் சிறைச்சாலையிலிருந்து மிகவும் மாறியிருந்தபோதிலும், பழனியாண்டி பிள்ளை அவர் இன்னாரென அறிந்துகொண்டு பண்டு தாம் அவரிடத்தில் வைத்திருந்த அன்பையுத்தேசித்து, தாமிருந்த இடத்தைவிட் டெழுந்து போய் அவரைத் தனியே ஓரிடத்துக்கு அழைத்துச் சென்றார். கலியாணமாப்பிள்ளையும் இன்னும்

"சூது நாணயக்காரர் தலைவன் தனது ரிவால்வரை துரைசாமி பிள்ளையின்மீது குறிபார்த்துப் பிடித்தல்."

இரண்டு தக்க மனிதர்களும் அவர்களுடன் சென்றார்கள்.

தனியான ஓரிடத்தை யடைந்ததும், பழனியாண்டி பிள்ளை, "என்ன அப்பா துரைசாமி! உன்னுடன் சிலநாள் நான் பழகிய தோஷத்துக்காக இவ்வளவுதூரம் என்னை நீ துன்பப்படுத்தலாமா! எனதருமை மகளுக்குக் கணவனாகத் தேர்ந்தெடுத்திருக்கும் இவர்மீது அபாண்டமான குற்றஞ் சாட்டினாயே பெரிய சபை நடுவில்! இது தருமமா?" என்று மிகுந்த விசனத்துடன் கேட்டார்.

துரைசாமி பிள்ளை, "பிள்ளையவாள்! தயைபுரிந்து என்னை மன்னிக்கவேண்டும். தங்கள் புதல்வியை இதோ நிற்பவனுக்குக் கொடுத்துவிட்டால் அதனால் இதைவிடப் பெரிய துன்பம் விளையுமென்று எனக்கு நிச்சயமாய்த் தெரியுமாதலால்தான் தங்களுக்கு இத்துன்பத்தை யுண்டாக்கத் துணிந்தேன். இதோ நிற்பவன் சூது நாணயஞ் செய்பவன்! இவன் பெயர் முத்துசாமி பிள்ளை. இவன் கூட்டாளிகள் அவனைப் பிரபுவென்று அழைப்பார்கள். அன்று நான் தவறிச் சென்ற விடத்தில் இவனை இவன் கூட்டாளிகளுடன் கண்டேன்" என்றார்.

இவ்வார்த்தைகளைக் கேட்டு பழனியாண்டிபிள்ளை சிறிது சலிப்புடன் முத்துசாமி பிள்ளையின் புறமாகத் திரும்பினார். அப்போது முத்துசாமி பிள்ளை மிகுந்த அனுதாபத்துடன், "அப்பா! உனக்குக் கிடைத்த தண்டனை மிகவும் கொடிதாதலால் உன் மனத்தையொடித்து உன் அறிவைக் கலக்கிவிட்டதுபோலும். அதனால்தான் யாரைக் கண்டாலும், இவன் சூது நாணயம் செய்பவன் என்று சொல்லுகிறாய். ஐயோ பாவம்! உன் ஸ்திதியைக் கவனிக்கும்போது என் மனம் மிகவும் வருந்துகிறது. உன் வாணாளை வீணே கெடுத்துக்கொண்டாய்! போனது போகட்டும். இன்று எனக்குப் பேரானந்தம் கிடைக்கும் நாள். ஆதலால் உனக்குத் தகுந்த பொருளுதவி செய்து, உனக்கு ஏதாயினும் பிழைக்கும் வழி யுண்டுபண்ணுகிறேன்" என்றார். பழனியாண்டி பிள்ளை, "நானும் அவ்வாறே தகுந்த உதவிசெய்கிறேன். அப்பா! தயவுசெய்து இட்ட ஆணையை விலக்கிவிடு!" என்று வேண்டினார். அதற்கு துரைசாமி பிள்ளை, "நான் பித்தனுமல்ல, கேவலம் பொருளுக்காகத் தகாத காரியத்தைச் செய்பவனுமல்ல! முன்னிட்ட ஆணையை இன்னொருமுறை யிடுகிறேன்!" என்றார். இதற்குள் பந்துக்கள் சிலர் வந்து ஓர் பித்தன் வார்த்தைக்காக முகூர்த்தத்தைத் தவக்கப்படுத்துவது

நியாயமல்லவென்று சொல்லி, துரைசாமி பிள்ளையை அத்தனிமையான அறையிலேயே வைத்துப் பூட்டிவிட்டு, மற்றவர்களை அழைத்துக்கொண்டு கலியாண மண்டபத்துக்குச் சென்றார்கள்.

அங்கே போய்ச் சேர்ந்ததும், புரோகிதர் மந்திரங்களை விட்டுப்போன விடத்திலிருந்து தொடங்கி, கன்னிகாதானத்துக்குஏற்பாடுசெய்தார். பந்துக்களுள், சிலர் பழனியாண்டிபிள்ளையின் மனைவியை நோக்கி, பெண்ணை அழைத்துவரும்படி சொன்னார்கள். அந்த அம்மாள் தன்னருகே இரத்தினகம்பளத்தின்மீது உட்கார்ந்திருந்த மோகனசுந்தரியைநோக்கி, "எழுந்திரு, அம்மா! போகலாம். ஆனாலும் துரைசாமி பிள்ளை இப்படி நடந்துகொள்ளுவாரென்று நான் கனவிலும் எண்ணவில்லை. ஆனால் பயித்தியம் பிடித்தவர்மீது வருத்தப்படுவது தருமமன்று. கலியாண மண்டபத்துக்குப் போவோம், வா!" என்றாள். மோகனசுந்தரி எழுந்திருந்து உணர்ச்சியற்ற பாவைபோல் தன் தாயுடன் சென்றாள். கலியாண மண்டபத்தை யடைந்ததும், தன் தந்தையின் முகத்தைக் கவனித்தாள். அவர் முகம் சஞ்சலத்தின் உருவமாய் இருந்தது. கலியாணம் நடைபெறுவதில் அவருக்கும் அவ்வளவாக இஷ்டமில்லைபோல் அவளுக்குத் தோன்றிற்று. புரோகிதர் தன் தந்தையை நோக்கி, "தங்கள் புதல்வியைக் கிட்ட அழைத்துக் கொள்ளுங்கள்! தாரைவார்த்துக் கொடுக்க வேண்டும்" என்றார். பழனியாண்டி பிள்ளை சஞ்சலத்துடன் மோகனசுந்தரியின் முகத்தைப் பார்த்தார். உடனே அவள் கண்களில் நீர்ததும்ப தன் தந்தையை நோக்கி, "அப்பா! இன்றைக்கு என்னைத் தாரைவார்த்துக் கொடுக்க வேண்டாம். என் மனம் ஏனோ பதைக்கிறது. துக்கம் மேலிடுகிறது. ஆகையினால் தயவுசெய்து கலியாணத்தை இன்று நிறுத்திவிட வேண்டும்!" என்று மிகுந்த துயரத்துடன் வேண்டினாள்.

பழனியாண்டி பிள்ளை அவ்வார்த்தைகளைக் கேட்டவுடன், "எனக்கும் இன்று கலியாணத்தை நடத்துவதில் இஷ்டமில்லை. அவனிட்ட ஆணையே முன்வந்து நிற்கிறது. கலியாணத்தை இப்போது நிறுத்திவிடுவோம். வேறு சுப முகூர்த்தம் பார்த்து நடத்துவோம். முத்துசுவாமி பிள்ளையவாள்! தங்கள் அபிப்பிராயமும் அதுதானே?" என்றார். முத்துசாமி பிள்ளை வேறு அபிப்பிராயப்பட வழியில்லாமல், "ஆமாம்! எனது அபிப்பிராயமும் அதுதான்!" என்றார்.

வந்தவர்களெல்லோரும் திருப்தியாய்ச் சாப்பிட்டுவிட்டுச் சென்றனர். துரைசாமி பிள்ளையைச் சிறிது நேரத்துக்கெல்லாம் வெளியே அனுப்பிவிட்டார்கள். அவர் பங்களாவை விட்டகன்றபோது, ஆகாரத்தை எதிர்பார்த்து அங்கு கூடியிருந்தவர்களெல்லோரும் வாயார அவரை வைதனர். அவர் எதையும் சிறிதும் இலக்ஷியஞ்செய்யாது, தாம் நினைத்தகாரியம் கைகூடியதற்காகச் சந்தோஷித்து அவ்விடத்தைவிட் டகன்றார்.

ராஜஸிம்ஹன்

RAJASIMHAN

[எம். ஏ. பட்டம்பெற்ற ஒருவர் எழுதியது.]

(101-ம் பக்கத் தொடர்ச்சி.)

இரண்டாம் அத்தியாயம்

அவுரங்கசீப் நிர்மலைக்கு வசமாதல்

ஷஹஜாதன் அக்பரை முன்னால் அனுப்பிவிட்டு, பாதுஷா உதயஸாகரத்தின் தீரத்தில் தளத்துடன் இறங்கியிருந்தான். பாதுஷாவின் சைனியம் இன்னொரு டில்லி நகரம்போ லிருந்தது. நகரத்தில் எப்படி அநேகம் வீதிகளுண்டோ அப்படியே இங்கும் ஆயிரக்கணக்கான கூடாரங்க ளடிக்கப்பட்டு வஸ்திரங்களினா லமைக்கப்பட்ட மகா நகரம் போலிருந்தது. இவைகளெல்லாவற்றிற்கும் மத்தியில் பாதுஷாவின் கூடாரங்கள். அதற்குள் தர்பாருக்கு ஸ்தலம், பைடக்கானு, ரங்கமகல் எல்லாம் வஸ்திரங்களிலேயே அமைக்கப்பட்டிருந்தன. இருப்பு பித்தளை முதலிய இரண்டு லோகங்களினாலும் செய்யப்பட்டிருந்தன. சில கூடாரங்களில் இரண்டு மூன்று மாடிகள் கூட

இருந்தன. எதிரில் டில்லியின் கோட்டை வாசல்களைப்போல் பெரிய பெரிய வாசல்கள். பாதுஷா இருந்தவிடத்தைச்சுற்றி பட்டுவஸ்திரத்தினால் நிர்மிக்கப்பட்ட பிராகாரங்கள் நாலு மைல் விஸ்தீர்ணமுள்ளவை. இப் பிராகாரம் பித்தளைக் கம்பிகளால் தாங்கப்பட்டிருந்தது. அறைகளுக்கு வெளிப்புறம் பிரகாசமுள்ள சிவப்புப்பட்டுகளாலமைக்கப்பட்டு உட்பக்கத்தில் சுவர்களெல்லாம் பலவிதமான படங்களினால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. டேராவின் மேற் புறத்தில் தங்கத்தால் செய்யப்பட்ட குடை. கீழ் விசித்திரமான இரத்தின கம்பளங்கள். மத்தியில் இரத்தினங்களிழைத்த இராஜஸிம்மாஸனம். நாலு பக்கங்களிலும் பிடித்த கத்தியுடன் தார்த்தாரி சேவகர்கள்.

பாதுஷாவின் அரண்மனைகளுக்குப் பிறகு உத்தியோகஸ்தர்களின் கூடாரங்கள் அநேகம். அவைகள் அநேகம் மைல்தூரம் வியாபித்திருந்தன. சில மஞ்சள்வர்ணம்; சில வெளுப்பு; சில சிவப்பு; இப்படி எல்லாம் சூரிய கிரணங்களில் ஜ்வலித்துக்கொண்டிருந்தன. கடைசியில் இவைகளையெல்லாம் சுற்றி, நாலு பக்கங்களிலும் டில்லியிலிருக்கும்போல் கடைவீதி. பார்த்தால் பாதுஷாவை உபசரிக்கிறதற்காக உதயனாகரத்தின் தீரத்தில் ஒரு அழகிய நகரம் புதிதாய்ச் சிருஷ்டிக்கப்பட்டாற்போல் தோன்றும்.

பாதுஷா டில்லியைவிட்டு வெளியே புறப்படும்போதெல்லாம் அந்தப்புரத்து ஸ்திரீகளும் புறப்படுவார்கள். பேகங்களெல்லாரும் புறப்படுவார்கள். இப்பொழுதும் வந்திருந்தார்கள். யோதபுரிபேகம், உதயபுரிபேகம், ஜேப உன்னிஸா எல்லாரும் வந்திருந்தார்கள். யோதபுரியுடன் நிர்மலகுமாரியும் வந்திருந்தாள். டில்லிப் பட்டணத்தில் எப்படி அவர்களுக்கெல்லாம் வேறு வேறு மண்டபங்களிருந்தனவோ அப்படியே இங்கும் கூடாரங்களிருந்தன.

இவ்வளவு ஆநந்தமயமான சிபிரத்தில் அவுரங்கசீபு இராத்திரி வேளைகளில் யோதபுரி பேகமிடத்தில் வந்து சுகமாய்ப் பேசிக்கொண்டிருக்கிற வழக்கமுண்டு. அங்கே நிர்மலகுமாரியும் இருப்பாள்.

இம்லி பேகம் என்று பாதுஷா நிர்மலையைக் கூப்பிடுகிற வழக்கம். பாதுஷா நிர்மலையைப் பார்த்து "இம்லி பேகம்! நீ நம் கக்ஷியோ, ரஜபுத்திரர் கக்ஷியோ?" என்று கேட்டான். நிர்மலை கைகூப்பிக்கொண்டு, "பிரபஞ்சத்துக்குப் பாதுஷா தாங்கள். பிரபஞ்ச விசாரணையெல்லாம் செய்கிறவர்கள். தாங்களே விசாரித்துப் பார்த்துக்கொள்ளலாம்" என்றாள்.

அவுரங்கசீபு.—எனக்குத் தோன்றுவதென்னவென்றால், நீ ரஜபுத்திரன் மகள்; ரஜபுத்திரன் உன் கணவன்; நீ ரஜபுத்திர மஹிஷியின் ஸகி; ஆகையினால் நீ ரஜபுத்திரர் கக்ஷியென்றே தோன்றுகிறது.

நிர்மலை.—ஷஹான்ஷா! விசாரணை சரியாயிற்றோ? நான் ரஜபுத்திரன் மகளென்பது நிஜந்தான். ஹஜரத் யோதபுரி பேகம் என்னைப்போல் ரஜபுத்திரியல்லவா? தங்கள் பாட்டி, கொள்பாட்டிகூட ரஜபுத்திர ஸ்திரீகளல்லவா? அவர்கள் மொகலாயருக்கு இதத்தைக் கோரவில்லையா என்ன?

அவுரங்க.—அவர்கள் மொகலாய பாதுஷாவுக்கு பேகமானார்கள். நீ ரஜபுத்திரன் பெண் சாதி யல்லவா?

நிர்மலை.—(நகைத்து) நான் ஷஹான்ஷா பாதுஷா அலங்கீரின் இம்லி பேகம்.

அவுரங்க.—நீ ரூபநகரத்தாளுக்கு ஸகி.

நிர்மலை.—யோதபுரிபேகமுக்கும் ஸகிதான்.

அவுரங்க.— அப்படியானால் நீ என்கக்ஷியோ?

நிர்மலை.—தாங்கள் எப்படிச் சொல்லுகிறீர்களோ, அப்படி.

அவுரங்க.—நான் உனக்கு ஒரு வேலை கொடுக்கவேண்டுமென்றிருக்கிறேன். அதனால் எனக்கு உபகாரமுண்டாகும். ஆனால் ராஜஸிம்ஹனுக்குத் தீங்குண்டாகும். அப்படிப்பட்ட வேலை கொடுக்கலாமென்றிருக்கிறேன். செய்வாயா?

நிர்மலை.—காரியம் இன்னதென்று தெரியாமல் சொல்லமுடியாது. நான் தேவதைகளுக்கும் பிராமணர்களுக்கும் கெடுதியுண்டாக்குகிற காரியத்தில் பிரவேசிக்கமாட்டேன்.

அவுரங்க.—அப்படிப்பட்ட வேலை செய்யச் சொல்லவில்லை. நான் உதயபுரம்போய்ச் சேருவேன். ராஜஸிம்ஹனின் அந்தப்புரத்துக்குள் பிரவேசிக்கமுடியும். ஆனால் அந்தப்புரத்திற்குள் பிரவேசித்த பிறகு ரூபநகரத்தாளைக் கைவசம் செய்துகொள்ள முடியுமோ என்று மாத்திரம் சந்தேகம். அந்த விஷயத்தில் நீ சகாயம் செய்யவேண்டும்.

நிர்மலை.—கங்கை யமுனை தாய் இவர்கள் மேல் ஆணையிட்டுச்சொல்லுகிறேன். தாங்கள் உதயபுரஞ்சேர்ந்து அந்தப்புரத்திற்குள் பிரவேசித்தால், சஞ்சலகுமாரியைத் தாங்கள் கைவச மாக்குகிறேன்.

அவுரங்க.—நீ சொல்வதை நம்புகிறேன். ஏனென்றால், என்னை ஏமாற்றிப்பொய்சொல்லுகிறவளைத் துண்டுதுண்டாய் வெட்டி நாய்க்குப் போடுவேனென்று உனக்குத் தெரியுமல்லவா?

நிர்மலை.—வஞ்சிப்பேனோ இல்லையோ அது முன்னமே தெரிந்திருக்கிறது. ஆனால் நான் தங்களை ஏமாற்றவில்லையென்று சத்தியம் செய்கிறேன். தாங்கள் அந்தப்புரத்தைக் கைவசம் பண்ணிக்கொள்ளும்பொழுது அவள் உயிரோடிருப்பாளோ இல்லையோ அது சந்தேகம். ரஜபுத்திரமஹிஷிகள் சத்துருக்கள் கையில் விழுவதற்கு முந்தியே சிதையிலேறிவிடுகிற வழக்கம். அவள் உயிருடன் அகப்படமாட்டாளென்றே நான் இதற்கு ஒப்புக்கொண்டேன். உயிரோடிருந்தால், சஞ்சலகுமாரிக்கு என்னால் ஒருவிதமான தீங்கும் உண்டாகாது.

அவுரங்க.—இதனால் தீங்கு என்ன? பாதுஷாவின் பேகமாகிறாள்.

நிர்மலை. பதில் சொல்லுவதற்குள்ளே ஒரு சேவகன் வந்து, "பேஷ்கார் தர்பாரில் வந்து நின்றுகொண்டிருக்கிறார். ஜரூராய்ப் பேசவேண்டியதிருக்கிறதாம். ஹஜரத் ஷஹஜாதா அக்பர்ஷாவின் சமாசாரம் வந்திருக்கிறதாம்" என்று அறிவித்தான்.

அவுரங்கசீபு அதிசயத்துடன் தர்பாருக்குப் போய் பேஷ்காரை விசாரிக்கவும், அக்பரின் ஐம்பதினாயிரம் வீரர்களும் சின்னபின்னமாகிக் கொல்லப்பட்டாரென்றும், பாக்கி தப்பிப் பிழைத்தவரைப்பற்றி ஒன்றும் தெரியாதென்றும் தெரியவந்தது. அவுரங்கசீபு உடனே சைனியம் புறப்படும்படி ஆக்கினை செய்தான். அக்பரின் சமாசாரம் ரங்கமகலுக்குள் எட்டிற்று. கேட்டு நிர்மலை கதவைச் சாத்திக்கொண்டு யோதபுரியினிடம் போய் ரூபநகரத்துச் சஞ்சல குமாரியைப்போல் வேஷம் மாற்றிக்கொண்டு நடித்தாள்.

பிற்பாடு வேஷம் கலைத்து, தன் உடுப்புடனுட்கார்ந்துகொண்டிருக்கும்பொழுது பாதுஷா அவளைக் கூப்பிட்டனுப்பித்தான். 'நான் சிபிரத்தைவிட்டுப் புறப்படப்போகிறேன். நீ உதயபுரத்திற்குப் போக இஷ்டப்படுகிறாயோ?" என்று கேட்டான்.

நிர்மலை.—இல்லை. நான் சைனியத்துடன் வருகிறேன். போகும்போது எங்கே அனுகூலமோ அங்கிருந்து புறப்பட்டுப் போகிறேன்.

அவுரங்கசீபு கொஞ்சம் விசனத்துடன் "எதற்காகப் போகிறாய்? " என்றான்.

நிர்மலை.—ஷாஹான்ஷா உத்தரவுப் பிரகாரம்.

அவுரங்கசீபு.— (சந்தோஷத்துடன்) நான் போகிறதற்கு உத்தரவு கொடுக்காமலிருந்தால், வெகுகாலம் ரங்கமஹலிலிருப்பதற்கு இஷ்டமிருக்குமா?

நிர்மலை.—(கையைக் கூப்பிக் கொண்டு) எனக்கு எஜமானன் இருக்கிறான்.

அவுரங்கசீபு முன்னும் பின்னும் பார்த்து, "நீ இல்லாமானால், உன் எஜமானன் உன்னைத் தள்ளிவிட்டால், உதயபுரியைக் காட்டிலும் அதிக கௌரவமாய் நான் வைத்துக்கொள்வேன்" என்றான்.

நிர்மலை, நகைத்துக்கொண்டு "அப்படியாக முடியாது" என்றாள்.

அவுரங்க. — ஏன் முடியாது? எத்தனையோ ரஜபுத்திரக் கன்னிகைகள் மொகலாயர் வீட்டுக்கு வந்திருக்கிறார்கள்.

நிர்மலை.—ஆனால் ஒருவராவது கணவனை விட்டுவிட்டு வரவில்லை.

அவுரங்க.—உனக்கு எஜமானன் இல்லாமலிருந்தால் வருவாயல்லவா?

நிர்மலை.—அது சொல்லிப் பிரயோசனமென்ன?

அவுரங்க.—அதைச் சொல்லவும் லஜ்ஜையாயிருக்கிறது. இப்பேர்ப்பட்ட வார்த்தை நான் ஒருநாளும் சொன்னதில்லை. நான் இப்போது விருத்தனாய்விட்டேன். ஆனால் ஒரு நாளும் ஒருத்தியிடத்திலாவது நான் பிரீதி வைக்கவில்லை. அதனால் சொல். உனக்குக் கணவன் இல்லாமலிருந்திருந்தால், எனக்கு பேகம் ஆகியிருப்பாயல்லவா? அப்படியிருந்திருந்தால் பிரீதி என்ற பேர்கூட அறியாத எரிகிற காடு போலவுள்ள என் இருதயம் கொஞ்சம் பிரீதியடைந்திருக்கும்.

நிர்மலை அவுரங்கசீபின் வார்த்தையைக் கேட்டு, அவன் குரலிலிருந்து அவன் சொன்னதில் நம்பிக்கையுள்ளவளானாள். ஒரு விதமான கபடமுமில்லாமல் பூரண மனத்துடன் பரமார்த்தமாய்ச் சொன்ன வார்த்தையாயிருந்தது. நிர்மலை அவுரங்கசீபுக்காகத் துக்கித்து, "ஷாஹான்ஷா! தாசியான நான் தங்கள் பிரீதி விசுவாசத்திற்குப் பாத்திரமாவதற்குத் தகுந்த காரியமென்ன செய்திருக்கிறேன்?" என்று கேட்டாள்.

அவுரங்க. — அது சொல்லமுடியாது. நீ ஸௌந்தரியென்பது நிஜந்தான். ஆனால் அழகைப் புகழுகிற பிராயம் எனக்குப் போய்விட்டது. அன்றியும், நீ அழகுள்ளவளாயிருந்தாலும், உதயபுரியைக்காட்டிலும் அழகுள்ளவளென்று சொல்லமுடியாது. உன்னைத்தவிர என்னிடத்தில் ஒருவரும் உண்மை பேசினவர் இல்லை என்று தோன்றுகிறது. உன் புத்தி சாதுரியம் ஸாஹஸங்களைப் பார்த்தால், நீயே எனக்குச் சரியான மகிஷியென்று தோன்றுகிறது. அது எப்படியாவது இருக்கட்டும். அலங்கீர் பாதுஷா உன்னைத்தவிர வேறு யாருக்கும் வசமாகவில்லை. வேறு யாருடைய கடாக்ஷத்திலும் இப்படி மயங்கினதில்லை.

நிர்மலை.—ஷாஹான்ஷா! ரூபநகரத்து ராஜகுமாரி ஒருதரம் நீ யாரைக் கலியாணம் பண்ணிக்கொள்ளப் போகிறாய் என்று கேட்டாள். நான் அதற்கு அலங்கீர் பாதுஷாவைக் கலியாணம் பண்ணிக்கொள்ளப் போகிறேனென்றேன். அவள் எதற்காக என்று கேட்டாள். நான் பாலியத்தில் புலி வளர்த்தேன். புலியை வசமாக்கிக் கொள்வதில் எனக்கு ஒரு ஆநந்தம் இருந்தது. பாதுஷாவை வசஞ்செய்து கொண்டால் அதேவிதமான ஆநந்த முண்டாகுமென்று சொன்னேன். என் துர்ப்பாக்கியத்தால் எனக்கு விவாகமாகாமலிருக்கும்பொழுது தங்கள் தரிசனம் கிடைக்கவில்லை. நான் அந்த ஏழையை ஸ்வாமியாக வரித்தேன். அதனாலேயே சுகமாய் இருக்கிறேன். இப்பொழுது எனக்கு உத்தரவு கொடுக்கவேணும்.

அவுரங்கசீபு விசனத்துடன், "பிரபஞ்சத்துக்குப் பாதுஷாவாயிருந்தாலும், அதனால் மாத்திரம் சுகமடைகிறதில்லை. யாருக்கும் சுகம் வேண்டுமென்ற ஆசை நிறைவேறுவதில்லை. இந்தப் பூலோகத்தில் உன்னிடத்தில் மாத்திரம் பிரீதிவைத்தேன். ஆனால் உன்னையடைய முடியவில்லை, அந்தரங்கமாய் உன்னிடத்தில் பிரீதிவைத்திருக்கிறபடியால், நீ போவதற்கு நான் ஒருவிதமான தடையும் செய்கிறதில்லை. நீ சுகமாயிருக்கிறதற்கு என்னென்ன வேண்டுமோ அதையெல்லாம் செய்வேன். உனக்கு வருத்தம் வரும்படியான காரியம் ஒன்றும் செய்யமாட்டேன். நீ போ. என் ஞாபகமிருக்கட்டும். என்னால் ஏதாவது உபகாரம் ஆகவேண்டியிருந்தால், சொல்லியனுப்பு. நான் செய்கிறேன்" என்றான்.

நிர்மலை, "வந்தனம்செய்து நான் ஒன்று மாத்திரம் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இருதிறத்தாருடைய க்ஷேமத்திற்காக உடன்படிக்கை செய்துகொள்வதே நல்லதென்று நினைக்கிறேன். நான் சொல்வதை மனத்தில் போட்டுக்கொள்ளலாமோ?" என்றாள்.

அவுரங்கசீபு, "சமயம் வந்தால் அப்போது யோசித்துக்கொள்வோம்" என்றான். அப்பொழுது நிர்மலை தன்னிடத்திலிருந்த சுபோத பக்ஷியைக் காண்பித்து "இது நான் வளர்த்த பக்ஷி. தங்களிடத்திலிருக்கட்டும். தாங்கள் இந்த வேலைக்காரியாகிய என்னை நினைக்கும்போது, இந்தப்பக்ஷியை விட்டுவிடவேண்டும். அப்பொழுது எப்படியாவது என் பதிலைத் தங்களுக்குத் தெரிவிக்கிறேன். நான் இப்போது தங்கள் சைனியத்துடன் இருக்கிறேன். நான் போக விரும்பும்பொழுது உத்தரவு கொடுக்கும்படி பேகம் சாகேபவர்களுக்குச் சொல்லவேண்டும்" என்றாள்.

பிறகு அவுரங்கசீபு சைனியத்தைக் கிளப்பப் புறப்பட்டுப்போனான். ஆனால் அவனுக்கு மனத்தில் வெகு வருத்த முண்டாயிற்று. நிர்மலையைப்போல் பேச்சில் சாதுரியமும் சாமர்த்தியமும், ஸாஹஸமுள்ளவரை மொகலாய பாதுஷா ஒருபோதும் பார்த்ததில்லை. ஸிவாஜீயாகட்டும், ராஜஸிம்ஹனாகட்டும், எந்த ராஜாவாகட்டும், எந்த ஸேனாதிபதியாகட்டும், அக்பராகட்டும், ஷஹாலமாகட்டும் இவ்வளவு தைரியமாயும் ஸ்பஷ்டமாயும் பேசியிருந்தால், அவுரங்கசீபு பொறுத்திருக்கமாட்டான். ஆனால் ரூபவதியும், யுவதியும், அநாதையுமான நிர்மலையினுடைய வார்த்தையைக் கேட்டு மிக்க ஆச்சரியப்பட்டு அவள் வசமானான்.

மூன்றாம் அத்தியாயம்

பாதுஷா பாளையம் வலையிற் சிக்குதல்

மறுநாட்காலையில் பாதுஷாவின் மூலபலம் புறப்பட வாரம்பித்தது. எல்லோருக்கும் முன்னே மார்க்கம் சீர்திருத்தம் செய்கிற சேனை மார்க்கத்தைச் சோதிக்கிறதற்காக வேண்டிய ஆயுதங்களுடன் புறப்பட்டது. அதன் ஆயுதங்கள் கோடரி, மண்வெட்டி, பாரை, அரிவாள் முதலியன. அந்தச் சேனையிலுள்ளவர்கள் மார்க்கத்திலிருக்கிற விருக்ஷங்களை வெட்டித் தூரவெறிந்து, மேடுபள்ளங்களைச் சமமாக்கி பாதுஷாவின் சைனியம் போவதற்குத் தகுந்தபடி மார்க்கத்தைச் சீர்செய்துகொண்டு முன்னே போய்க்கொண்டிருந்தார்கள். அந்த மார்க்கத்தில் முதலில் பீரங்கிகள் வண்டிகளின்மேல் தடபடவென்று சப்தத்துடன் போயின. கணக்கில்லாத பீரங்கி வண்டிகளின் சத்தத்தினால், காது செவிடாகும்போலிருந்தது. ஆயிரக்கணக்கான வண்டிச்சக்கரங்களிலிருந்து கிளம்பிய புழுதியினால் கண்மறைபட்டது. காலாந்தக யமனைப்போல் வாயைத் திறந்துகொண்டிருந்த பீரங்கிகளைப் பார்த்தால் மனம் நடுநடுங்கும். அந்தப் பீரங்கிகளுக்குப் பின் பாதுஷாவின் பொக்கிஷங்கள். பாதுஷாவின் பொக்கிஷம் பாதுஷாவின் கூடவே இருக்கும். அவுரங்கசீபு டில்லியில் யாரையும் நம்பிப் பொக்கிஷத்தை விட்டுவிட்டுப் புறப்படுகிறதில்லை.

அநேக இரத்தினங்கள் முதலான தனங்கள் நிறைந்து யானைகளின்மேல் கொண்டுபோகப்பட்ட இராஜ்ய பொக்கிஷத்தின்பின் கங்கை ஜலக்குடங்களைச் சுமந்துகொண்டுபோகிற ஒட்டைகளின் வரிசைகள். கங்கைஜலத்தைப்போல் குடிக்க இனிப்பான ஜலம் வேறெங்குமில்லை. அதனால் பாதுஷாவுடன்கூட கங்கை ஜலமும் போய்க்கொண்டிருந்தது. ஜலத்தின் பின் ஆகாரத்துக்குவேண்டிய சாமான்கள் கோதுமை ரவை, மாவு, நெய், அரிசி, மசாலைகள், சர்க்கரை, நானாவிதமான பக்ஷிகள், மிருகங்கள், சில பக்குவமானதும் சில அபக்குவமானதுமாய்ப் புறப்பட்டன. அதன்கூட ஆயிரக்கணக்கான சமையறகாரர்களும் மற்ற வேலைக்காரர்களும், அதன்பின்னே தோஷீகானா போஷாக் ஆபரணங்கள். அதன்பின்னே எண்ணமுடியாத குதிரைவீரர்களின் படை.

இது, புறப்பட்ட சேனையின் முதற் பாகம். இரண்டாவது பாகத்தில் ஸ்வயம் பாதுஷா. முன்னேயெல்லாம் அநேகம் ஒட்டைகளின்மேல் தூபக்கால்கள். அவைகளிலிருந்து கிளம்பின சுகந்தப்புகை எங்கும் வியாபித்தது. சந்தனம், அத்தர், ஸுகந்தத் தைலங்கள், கஸ்தூரி, ஜவ்வாது, புனுகு முதலிய வாசனைத் திரவியங்களின் வாசனை காததூரம் வரையிலும் எட்டி, பூமிமுதல் ஆகாசம் வரையில் மணத்தினால் நிறைந்திருந்தது. அதன்பின்னே நிர்மலமான வெகு அழகான குதிரைகளின்மேலேறிக்கொண்டிருக்கிற பாதுஷாவின் மெய்க்காவலாளர் இரண்டு பக்கங்களிலும் வரிசை வரிசையாய் வந்துகொண்டிருந்தனர். மத்தியில் இரத்தினங்களும் உயர்ந்த கற்களும் இழைக்கப்பெற்று விளங்குகிற, இந்திரன் குதிரைக்கு நிகரான, குதிரையின்மேல் ஸ்வயம் பாதுஷா. தலைமேல் கிபாதிபெற்ற வெள்ளைக்குடை. அதற்குப்பின்னே டில்லிக்கு ஸாரமாயுள்ள பாதுஷா. பதவிக்கு ஸாரமாயுள்ள அவுரங்கசீபின் அந்தப்புரத்து ஸௌந்தரிகள். சிலர் ஐராவதத்திற்குச் சமானமான யானைகளின்மேல் தங்க சரிகையுள்ள மகமல் பட்டினால் அலங்கரிக்கப்பட்ட அம்பாரிகளில் மேகங்களினால் மறைக்கப்பட்ட பூரணசந்திரனுக்கொப்பான காந்தியுடன் பிரகாசித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் பின்னல்கள் கிருஷ்ண ஸர்ப்பங்கள்போல் பின்பக்கத்தில் ஆடிக்கொண்டிருந்தன. இப்படி ஸௌந்தரிகள் ஒருவர் இருவரல்ல. யானையின்பின் யானை, அதன்பின்னே யானை, இப்படி நூற்றுக்கணக்காய் வரிசைவரிசையாயுள்ள யானைகளின்மேல் பிரகாசித்துக்கொண்டிருந்தார்கள். யோதபுரி, உதயபுரி, நிர்மலகுமாரி, ஜேபஉன்னிஸா இவர்கள் யானைகளின்மேல். உதயபுரி சிரித்துக்கொண்டிருக்கிறாள். யோதபுரி வருத்தத்துடனிருக்கிறாள். ஜேப உன்னிஸா கோடைகாலத்தில் வேரோடு பிடுங்கப்பட்ட கொடியைப்போல் துக்கத்தினால் வாடிப்போய் இளைத்து மரண காலத்தை நெருங்குகிறவள்போலிருக்கிறாள்.

ஜேப உன்னிஸா மனத்தில் இந்த யானைகளின் மத்தியில் விழுந்து சாக முடியாதோ என்று நினைத்துக்கொண்டிருந்தாள்.

இந்த மனமோகமான வரிசைகளுக்குப்பின் பரிவாரத்தைச் சேர்ந்த ஸ்திரீகள், தாசிகள், எல்லாரும் குதிரைமேலே சவாரி செய்துகொண்டுவருகிறார்கள். இதற்குப்பின் மறுபடியும் பீரங்கி சைனியம். ஆனால் பின்னேயுள்ள பீரங்கிகள் முன்னேயுள்ளவைகளைக் காட்டிலும் சிறியவை. ஸ்திரீகளின் அழகான கடாக்ஷங்கள் இருக்கும்பொழுது பெரிய பீரங்கிகள் அவசியமில்லை என்று பாதுஷா யோசித்தாற்போல் தோன்றிற்று.

மூன்றாவது பாகத்திய சைனியம் காலாட்படை. அதன் பின்னே வேலைக்காரர்கள், சாமான், ஸரபரா, நர்த்தகிகள், வித்தையாடிகள், வெறும் குதிரைகள், வண்டிகள் முதலியன. இந்தப் பரிமாணமில்லாத கணக்கற்ற ஆச்சரியகரமான மொகலாய சைனியமானது, எப்படி மகா சப்தத்துடன் கிராமங்களை யெல்லாம் மூடிக்கொண்டு நீரின் சுழிகளில் பயங்கரமான திமி முதலான பெரிய ஜலசரங்களையும் பிரவாகத்தில் அகப்பட்ட கிராமங்களையும் மேடுகளையும் முழுகடித்துக்கொண்டு ஒரு மகாநதி மழைகாலத்தில் வெள்ளம் புரண்டுபோகுமோ, அப்படி ராஜஸிம்ஹன் இராஜ்யத்தை முழுகடிப்பதற்காகப் புறப்பட்டது.

ஆனால் இப்படியிருக்கும்பொழுது ஒரு விக்கினம் நேர்ந்தது. அக்பர் எந்தமார்க்கமாய்ப் போனானோ அதே மார்க்கமாய் அவுரங்கசீபும் சைனியத்தை நடத்திக்கொண்டு போனான். அக்பர் சைனியத்தோடு தன் சேனையைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், மத்தியில்குமார ஜயஸிம்ஹனகப்பட்டால் அடித்துப் பொடிபண்ணிவிட வேண்டுமென்றும், பின் அக்பரும் தானுமாய் உதயபுரம்போய் இராஜ்யத்தை நாசம் செய்யவேண்டுமென்றும் யோசித்துக்கொண்டு அந்த மார்க்கமாய்ப் போனான். ஆனால் மலையின்மேலுள்ள மார்க்கத்தி லேறுவதற்கு முந்தியே, ராஜஸிம்ஹன் பர்வதத்தின் மேல் தலைக்கு நேரே மார்க்கத்தை காத்துக் கொண்டிருந்தான். ராஜஸிம்மன் நயனமென்கிற கணவாய்மார்க்கத்தைக் காத்துக்கொண்டிருந்தான். வேகமுள்ள சாரணர்களால் அக்பரின் சமாசாரத்தை அறிந்துகொண்டு, வெகு தீவிரமாய் முன்னேயே நன்றாய்ப் பழக்கமுள்ள பர்வத மார்க்கத்தைத் தாண்டிப்போய் அவுரங்கசீபின் சேனை வருகிற பர்வதமார்க்கத்தில் நின்றுகொண் டிருந்தான். பாதுஷா பார்க்கவும், ராஜஸிம்ஹனின் இரணவித்தையின் திறமையால் தனக்கு நாசத்திற்குக் காரணமுண்டாயிற்றென்று தெரிந்துகொண்டான். ஏனென்றால், மொகலாயர் போகவேண்டிய மார்க்கத்தில் முன்னேபோனால் ராஜஸிம்ஹனை ஒரு கைப்பக்கமாய் விட்டுப் போகவேண்டி வரும். அதுவோ ஒரு பெரிய ஆபத்துக்குக் காரணமாகும். ஒரு கைப்புறத்திலிருந்து எதிர்ப்பவரை ஜயிப்பது மகா கஷ்டம். சேனையின் பக்கத்தில் இருக்கிற சத்துருக்களை வெகு சீக்கிரமாய் வெல்லமுடியும். அவுரங்கசீபு அவர்களை எதிர்க்க வேண்டுமானால் தன் சேனைகளை யெல்லாம் அவர்களுக்கு எதிராகவும் நேராகவும் திருப்பவேண்டி வருமென்று நன்றா யறிந்தான். இந்தப் பருவதப் பிரவேசத்தில் போய்க்கொண்டிருக்கிற கணக்கில்லாத மகா சைனியத்தை முன்பின்னாகத் திருப்புவதற்குத் தகுந்த இடமுமில்லை நேரமுமில்லை. ஏனென்றால், சைனியத்தின் முன் பாகத்தை திருப்புவதற்குள்ளே ராஜஸிம்ஹன் குன்றிலிருந் திறங்கிவந்து, அந்தச் சேனையை இரண்டாகப் பிரித்து, துண்டு துண்டாக்கி விடுவான். அந்தச் சமயத்தில் யுத்தம் செய்வது கஷ்டம். ராஜஸிம்ஹன் அவுரங்கசீபு முன்னே அப்படி யில்லாமல் போகும்படி விட்டுவிட்டானே யானால், அவர்கள் முன்னே போனால் இன்னும் அதிகமான ஆபத்துக்கு இடமாகும். பாதுஷா முன்னே போனால் ராஜஸிம்ஹன் பர்வதத்திலிருந்திறங்கி மொகலாய சேனையின் பின் பக்கத்தில் நின்றுகொண்டு அவர்கள் சாமான் ஸரபராக்களை யெல்லாம் கொள்ளையிடுவான். பின்னும் ஸரபரா வருகிற மார்க்கத்தைக் கட்டிவிடுவான். முன்னே குமார ஜயஸிம்ஹன் சேனையுடன் தயாராய் நின்றுகொண் டிருந்தான். முன்னே ஜயஸிம்மன் சைனியம், பின்னே ராஜஸிம்ஹனது. பொறியில் விழுந்த எலிபோல் இரண்டு சேனைகளுக்கும் மத்தியில் பாதுஷா அகப்பட்டுக் கொண்டு சாகும்படியாகும். பார்க்கும்போது டில்லீசுவரனின் நிலைமை, வலையில் விழுந்த மீனுடைய நிலைமையை ஒத்திருந்தது. எப்படிப்போனாலும் தப்பிப்பிழைக்க வழியில்லை. ஆனால் அவன் பின்னே திரும்பி, வந்தவழியே திரும்பிப் போகலாமே யென்றால், அப்

பாதகர் பழக்கம் பாம்பொடு பழகல்போல.

போதும் ராஜஸிம்ஹன் பின்னே யிருந்து எதிர்ப்பான். பாதுஷாவின் சைனியம் முதுகு காட்டி யோடினால் உலகமே நகைக்கும். மொகலாய பாதுஷா பிரபஞ்சத்தி லெல்லாம் புகழ்பெற்றவன். அவனுக்கு அதைப் பார்க்கிலும் அவமானம் என்ன வேணும்? அவுரங்கசீபு, சிங்கம் எலிக்குப் பயந்து திரும்பி ஓடுவதுண்டோ என்று நினைத்துக்கொண்டு, திரும்பி ஓடுகிற யோசனையை மனத்திலேயே வாங்கிக் கொள்ளவில்லை. மற்றென்னதான் செய்கிறது? ஒரே வழியுண்டு. உதயபுரத்திற்கு வேறே மார்க்கம் தேடவேண்டும். பாதுஷாவின் உத்தரவுப்பிரகாரம் நான்கு திக்குகளிலும் குதிரைவீரர்கள் மார்க்கம் தேடப் புறப்பட்டார்கள்.

அவுரங்கசீபு நிர்மலகுமாரியை மார்க்கத்தைப்பற்றி விசாரித்தான். "அவள் நான் கோஷா ஸ்திரீ, எனக்குத் தெரியாதென்றாள். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் சமாசாரம் வந்ததில், உதயபுரத்திற்கு வேறே மார்க்கமிருக்கிறதென்று தெரியவந்தது. ஒரு மொகலாய ஸாவுகார் மார்க்கத்தைக் காண்பிக்கிறேனென்று ஒப்புக்கொண்டதின்மேல் சைனியத்திலிருந்த ஸுபேதார் ஒருவன் அவனுடன் கூடப்போய்ப் பார்த்துவந்தான். அது பர்வதத்தின் கணவாய் மார்க்கம். மிகவும் இக்கட்டான வழி. அங்கே ரஜபுத்திரர் ஒருவரும் இருப்பதாகக் காணப்படவில்லை. ஸாவுகார் "அங்கே சைனியம் ஒன்றுமில்லை" என்று சொன்னான்.

அவுரங்கசீபு, "ரஜபுத்திர சைனியம் அங்கே ஒளிந்துகொண்டிருக்கலாம்" என்றான்.

மார்க்கத்தைத் தெரிந்துகொண்டு வருகிறதற்காகப் போயிருந்த ஸுபேதார் பகத்கான், "நான் மார்க்கத்தைக் காண்பித்த ஸாவுகாரைப் பருவதத்தின்மேலே யனுப்பினேன். சேனை ஒளிந்துகொண் டிருந்தால் ஸங்கேதம் செய்யும்படி சொல்லியிருந்தேன்" என்றான்.

அவுரங்கசீபு. — அவன் நம்முடைய கக்ஷியைச் சேர்ந்தவனோ ?

பகத்கான்.—இல்லை. அவன் ஒரு மொகலாய ஸாவுகார். உதயபுரத்தில் சால்வைகளை விற்பதற்காகப் போயிருந்தான். இப்பொழுது நம்முடைய சைனியத்தில் விற்பதற்காகக் கொண்டுவந்திருக்கிறான்.

அவுரங்கசீபு.— அப்படியானால் சைனியம் அந்த மார்க்கமாய்ப் போகட்டும்.

அப்போது பாதுஷாவின் ஆக்கினைப்பிரகாரம்முழக்கமெல்லாம் திரும்பிற்று. ஏனென்றால், கொஞ்சதூரம் பிந்திப்போய் அந்தக் கணவாய் மார்க்கமாய்ப் போகவேண்டும். இப்படிச் செய்வதும் ஆபத்துக்குக் காரணம். என்ன செய்யலாம்? வலையிற் சிக்கிக்கொண்ட பெரிய மீன் என்ன செய்யும்? மொகலாய சேனை யெப்படி வரிசை வரிசையாய் வந்ததோ அப்படியே திரும்பிற்று. பின்னேயிருந்த மூன்றாம் பாகத்திய சேனை முதலில் புறப்பட்டது. அவுரங்கசீபு முன்னேயுள்ள இச்சேனை முன் தளமிறங்கியிருந்த உதயஸாகரம் வரைக்கும் போய் பாக்கி சைனியம் வந்து சேர்ந்தவுடன் திரும்பிவரும்படியாய் உத்தரவு செய்தான்.

அவுரங்கசீபு மேற்சொல்லிய சிறு பீரங்கிகளுடன் காலாட்படையை நடத்திக்கொண்டு கணவாய் மார்க்கமாய்ப் புறப்பட்டான். முன்னே பகத்கான், வழி காண்பித்துக்கொண்டு போனான்.

ராஜஸிம்ஹன் அதுகண்டு சிங்கத்தைப் போல் மலையிலிருந் திறங்கிவந்து மொகலாய சைனியத்தின் மத்தியில்வந்து பாய்ந்தான். மொகலாய சைனியம் கத்தரிக்கோலினால் கத்தரிக்கப்பட்ட பூமாலையைப்போல் இரண்டு பாகமாயிற்று. ஒரு பாகம் அவுரங்கசீபுடன் கணவாய்க்குள் பிரவேசித்துக்கொண் டிருந்தது. மற்றொன்று மார்க்கத்தில் ராஜஸிம்ஹனுக்கு எதிரில் நின்றுகொண் டிருந்தது.

ஆபத்தின்மே லாபத்து. யானை குதிரை பல்லக்குகளின்மேல் பாதுஷாவின் அந்தப்புரத்து ஸ்திரீகள் போய்க்கொண்டிருந்த ஸ்தலத்துக்குச் சரியாய் ராஜஸிம்ஹன் தன் சைனியத்துடன் வந்து பாய்ந்தான். பருந்து வந்து விழுந்தால், எப்படி சிட்டுக்குருவிகள் கீச்சுகீச்சென்று சத்தஞ் செய்யுமோ, அப்படி அவ்விடமிருந்த சேனை பயத்தால் சத்தம்போடவாரம்பித்தது. அங்கே யுத்தமென்ற பேச்சேயில்லை. ஆயுதங்களைப் பிரயோகித்தால் பேகம் அவர்களுக்கு அபாய முண்டாகுமோ என்ற பயத்தால் மொகலாயர் ஒருவரும் ஒன்றும் செய்யத் துணியவில்லை. ரஜபுத்திரர் யுத்தமேயில்லாமல் அங்கே இருந்தவர்களை யெல்லாம்

பாத்திரம் அறிந்து பிச்சை இடு, கோத்திரம் அறிந்து பெண் கொடு.

சிறைசெய்தார்கள். எல்லா பேகம் அவர்களும் அவர்கள் தாசிகளும் கைதியானார்கள்.

மாணிக்கலாலன் ராஜஸிம்ஹன் பக்கத்திலேயே இருந்துகொண்டிருந்தான். வந்து கைகூப்பி ராஜஸிம்ஹனைப் பார்த்து, "மகாராஜாதிராஜ! இந்தப் பெண்பூனைகளைக் கட்டிக்கொண்டு என்ன செய்கிறது? உத்தரவானால் பால்தயிர் வயிறுநிறையக் குடிப்பதற்காக உதயபுரத்துக்கு அனுப்புவிக்கிறேன்" என்றான். ராஜஸிம்ஹன் சிரித்துக்கொண்டு, "இவர்களுக்கு வேண்டியவளவு பால் தயிர் உதயபுரத்திலேது? டில்லிப் பூனைகளின் வயிறு பெரிதென்று கேட்டிருக்கிறேன். உதயபுரி ஒருத்தியை மாத்திரம், மகிஷி சஞ்சலகுமாரியினிடம் அனுப்பு. சஞ்சலகுமாரி அவள் விஷயமாய் ரொம்பவும் சொல்லியிருக்கிறாள். மற்றவர்களையெல்லாம் அவுரங்கசீபுக்குக் கொடுத்துவிடு" என்றான்.

மாணிக்கலாலன்.—(கைகளைக் கூப்பிக்கொண்டு) கொள்ளையடித்த சொத்தில் சேனைக்குச் சேரவேண்டியது கொஞ்ச பாகமுண்டு.

ராஜஸிம்ஹன்.—(சிரித்துக்கொண்டு) உங்களுக்கு அவசியமானதை எடுத்துக்கொள்ளுங்கள். ஆனால் முஸல்மானரின் ஸ்திரீகளை ஹிந்துக்கள் தொடக்கூடாது.

மாணிக்கலாலன்.—அவர்களுக்குப் பாடுகிறதற்கும் நர்த்தனஞ் செய்வதற்கும் தெரியும்.

ராஜஸிம்ஹன்.—நாட்டியத்திலும் பாட்டிலும் மனம் வைத்தால் ரஜபுத்திரர் உன்னைப்போல் சௌரியத்துடன் யுத்தஞ்செய்வார்களா? எல்லோரையும் விட்டுவிடு. உதயபுரியை மாத்திரம் உதயபுரத்திற்கு அனுப்பு.

மாணிக்க.— இந்தச் சமுத்திரத்தில் அந்த இரத்தினத்தை எப்படித் தேடுகிறது? எனக்கு அடையாளம் தெரியாது. உத்தரவானால் அப்படியே எல்லாரையும் ஹனுமான் கந்தமாதன பருவதத்தைக் கொண்டுபோனதுபோல் உதயபுரத்துக்குக் கொண்டுபோய் மகிஷியவர்களிடம் கொண்டுவிடுகிறேன். அவர்கள் தேடி எடுத்துக்கொள்ளட்டும். வைத்துக்கொள்ளுகிறபேரை வைத்துக்கொள்ளட்டும். பாக்கிப் பேர்கள் உதயபுரத்துப் பஜாரில் பல்பொடி, பன்னீர் முதலானது விற்றுப் பிழைக்கட்டும்.

இந்தச் சமயத்தில் ஒரு பெரிய யானையின்மேலிருந்து நிர்மலகுமாரி மாணிக்கலாலனையும் ராஜஸிம்ஹனையும் பார்த்தாள். கைகளிரண்டையும் தூக்கி அவர்களிரண்டு பேர்களுக்கும் நமஸ்காரம் செய்தாள். ராஜஸிம்ஹன் மாணிக்கலாலனைப் பார்த்து, "அவள் யாரோ பேகம். ஹிந்துபோல் தோன்றுகிறது. ஸலாம் செய்யாமல் நமக்கு நமஸ்காரம் செய்கிறாள்" என்றான்.

மாணிக்கலாலன் உரக்க நகைத்து, "மகாராஜா! அவளொரு வேலைக்காரி. அவளெப்படி பேகம் ஆனாளோ தெரியாது. அவளைப் பிடித்துக்கொண்டு வரவேண்டும்" என்றான்.

இப்படிச் சொல்லி மாணிக்கலாலன் நிர்மலையை யானையிலிருந்து இறக்கிக்கொண்டு வந்தான். நிர்மலை ஒன்றும் பேசாமல் சிரிக்கவாரம்பித்தாள். மாணிக்கலாலன் "இதென்ன மறுபடியும்? நீ எப்படி பேகமானாய்?" என்றான்.

நிர்மலை கண்களையும் முகத்தையும் வக்கிரமாக்கிக்கொண்டு, "நான் ஹஜரத் இம்லீ பேகம்! ஸலாம் செய்!" என்றாள்.

மாணிக்க.—ஸலாம் செய்வதில்லை. நீ பேகம் இல்லையென்று எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் இந்தவேஷம் உனக்கு எப்படி வந்தது?

நிர்மலை.—முதல் நீ என் உத்தரவுப்பிரகாரம் நட. உன் வார்த்தை அப்படி இருக்கட்டும்.

மாணிக்க.—ராம-ராம! பேகம் ஸாகேபவர்களுக்கு என்ன ராங்கி, என்ன ஜோர்?

நிர்மலை.—நம்முடைய உத்தரவென்னவென்றால் ஹஜரத் உதயபுரிபேகம் ஸாகேபவர்கள் முன்னே யானைமேல் ஐந்து கலசம் வைத்த அம்பாரியின்மேல் தயவுசெய்துவீற்றிருக்கிறார்கள். அவர்களை நம் முன்னே ஹாஜர்செய்!

அவள் சொல்லி வாய்மூடுமுன், மாணிக்கலாலன் உதயபுரிபேகத்தை யானையிலிருந்திறக்கினான். உதயபுரி, வஸ்திரத்தினால் முகத்தை மறைத்துக்கொண்டு கண்ணீர் சொரிந்துகொண்டு இறங்கினாள். மாணிக்கலாலன் ஒரு பல்லக்குத் தருவித்து யானையின் பக்கத்தில் அனுப்பினான். உதயபுரி அதில் உட்கார்ந்துகொண்டு வந்தாள். பிறகு மாணிக்கலாலன், நிர்மலை காதில, "ஜீ! இம்லீ பேகம் ஸாகேபவர்களே! இன்னொரு வார்த்தை சொல்ல வேண்டியிருக்கிறது" என்றான்.

நிர்மலை.—சும்மாவிரு. என் பெயர் ஹஜ்ரத் இம்லீ பேகம்.

மாணிக்க.—எந்த பேகமாயோ அந்த பேகமாயிரு. ஜேப உன்னீஸா ஷஹஜாதை எங்கே தெரியுமா?

நிர்மலை.—தெரியாதா? பார்! அதோ மூன்று தங்கக்கலசங்கள் வைத்த அம்பாரியுள்ள யானையின்மேல் ஜேப உன்னீஸா ஸாகேபவர்கள் மந்தஹாசத்துடன் வீற்றிருக்கிறார்கள்.

மாணிக்கலாலன் அவளையும் யானையிலிருந்திறக்கி பல்லக்கில் உட்காரும்படி செய்வித்து, அழைத்துக்கொண்டு வந்தான். இந்தச் சமயத்தில் அம்பாரியின் திரையைத் திறந்து இன்னொருத்தி நிர்மலையைக் கூப்பிட்டாள். மாணிக்கலாலன் நிர்மலையைப் பார்த்து "வேறு யாரோ உன்னைக் கூப்பிடுகிறார்கள்" என்றான்.

நிர்மலை பார்த்து, "ஆமாம், அவள் யோதபுரி பேகம். அவளைக் கூப்பிட்டுக்கொண்டு வரக்கூடாது. என்னை யானைமேலேற்றி அவள் பக்கத்திற்கனுப்பு" என்றாள்.

மாணிக்கலாலன் அப்படியே செய்தான். நிர்மலை யோதபுரியின் யானையின்மேல் தாவி அவள் அம்பாரிக்குள் பிரவேசித்து நின்றாள்.

யோதபுரி.— நீ என்னையும் உன்னுடன் அழைத்துக்கொண்டு போ.

நிர்மலை.—தாயே எதற்காக?

யோதபுரி.— எதற்கென்று எத்தனையோ தரம் சொல்லியிருக்கிறேன். நான் இந்தத் துருக்கர் கூட்டத்தில் இனிமேலிருக்கமாட்டேன்.

நிர்மலை.—அப்படிச் சொல்லக்கூடாது. தாங்கள் வரக்கூடாது. அன்று மொகலாய ராஜ்யம் மிஞ்சினால் தங்கள் குமாரன் டில்லி பாதுஷா பதவிக்கு வருவான். நான் அதற்கு வேண்டிய பிரயத்தனம் செய்கிறேன். தங்கள் குமாரன் இராஜ்யபரிபாலனகாலத்தில் நாமெல்லோரும் சுகமடைவோம்.

யோதபுரி.—குழந்தாய்! அந்த வார்த்தை சொல்லவேண்டாம். இது பாதுஷா காதுக்கு எட்டினால், என் மகன் ஒரு நாள்கூடப் பிழைத்திருக்கமாட்டான். விஷப்பிரயோகத்தால் பிராணனை இழப்பான்.

நிர்மலை.—இப்பொழுது சொல்லக்கூடாது. ஷஹஜாதன் பதவி அவனுடையதல்லவா? தாங்கள் என்னுடன் வந்துவிட்டால், தங்கள் புத்திரனுக்கு ஆபத்து நேரிடும்.

யோதபுரி.—(அப்படியே தானும் யோசித்து) நீ சொல்லுகிறது தெரிந்தது. நீ சொல்லுகிறது நிஜம். நான் வரவில்லை. நீ போ.

நிர்மலை அவளுக்கு நமஸ்காரஞ் செய்து உத்தரவு பெற்றுக்கொண்டு புறப்பட்டுப்போனாள்.

உதயபுரி, ஜேப உன்னீஸா இவர்களிருவரையும் தகுந்த பல்லக்குகளில் நிர்மலகுமாரியுடன் சஞ்சலகுமாரியிருக்குமிடத்துக்கு அனுப்பினார்கள்.

நான்காம் அத்தியாயம்

மபாரகனது பிரார்த்தனை

அப்போது ராஜஸிம்ஹன் மற்ற அந்தப்புரத்து ஸ்திரீகளையும், குதிரை, யானை, பல்லக்குகளின்மேலேறியிருந்த எல்லாஸ்திரீகளையும், அவுரங்கசீபு பிரவேசித்திருந்த கணவாய்மார்க்கத்தில் போகும்படி விட்டுவிட்டான். அவர்கள் பிரவேசித்த பிறகு, இரண்டு சேனைகளும் அசையாமல் நின்றுகொண்டிருந்தன. அவுரங்கசீபின் பாக்கி சைனியம் முன்னே போகமுடியாமற்போயிற்று. ஏனென்றால், ராஜஸிம்ஹன் மார்க்கத்தை மறித்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தான். ஆனால் அவுரங்சீபின் சமுத்திரத்துக்கொப்பானகுதிரைப்படை யுத்தஞ்செய்யப் பிரயத்தனப்பட்டது. அப்படையிலுள்ளவர்கள் குதிரைகளைத் திருப்பிக்கொண்டு ரஜபுத்திரருக்கு எதிரில் நின்றார்கள். அப்போது ராஜஸிம்ஹன் ஒருபக்கமாய் ஒதுங்கிக்கொடுத்து முன்னே மார்க்கத்தை விட்டுவிட்டான். அவர்களுடன் யுத்தஞ்செய்யவில்லை. அவர்கள் தீன்! தீன்! என்று கூவிக்கொண்டு பாதுஷாவின் உத்தரவுப்பிரகாரம் பாதுஷா பிரவேசித்த கணவாய்க்குட் பிரவேசித்துவிட்டார்கள்.

அப்போது ராஜஸிம்ஹன் மாணிக்கலாலனைக் கூப்பிட்டு "மொகலாயரைப் பார்த்தால் சந்தோஷமாயிருக்கிறது. நான் உத்தேசித்ததைப்பார்க்கிலும் அதிக அனுகூலஞ் செய்துகொடுத்திருக்கிறார்களென்று காண்கிறது. நான் யுத்தஞ்செய்து மொகலாயரைத் தோற்கடிக்கவேண்டுமென்றிருந்தேன். யுத்தமில்லாமலே காரியம் அனுகூலமாகும்போல் தோன்றுகிறது. மபாரகனை இங்கே அழைத்துக்கொண்டுவா. அவனுக்குநாம் மரியாதைசெய்யவேண்டியிருக்கிறது" என்றான். மபாரகன் மாணிக்கலாலனால் மறுபடியும்பிழைத்து அவனுடன் உதயபுரத்திற்கு வந்தானென்பது வாசிக்கிறவர்களுக்கு ஞாபகமிருக்கலாம். ராஜஸிம்ஹன் அவன் சௌரியத்

றைதயறிந்து தன் சைனியத்தில் ஒரு உத்தியோகம் அவனுக்குக் கொடுத்திருந்தான். ஆனால் அவன் மொகலாயனென்று அவனிடத்தில் பூரணநம்பிக்கை வைக்கவில்லை. அந்த வருத்தத்தினால் அவன் ஒரு பெரிய காரியம் செய்து கொடுத்தான். அந்தப் பெரிய காரியம் படிப்பவருக்குத் தெரிந்ததுதான். மபாரகன்தான் அந்த மாறுவேஷம் பூண்டுவந்த மொகலாய ஸாவகார்.

மாணிக்கலாலன் ராணாவின் கட்டளைப்பிரகாரம் மபாரகனை அழைத்துவந்தான். ராஜஸிம்ஹன் மபாரகனைப் புகழ்ந்து மெச்சி, "நீ இந்த ஸாஹஸமான வேலை செய்யாமலிருந்திருந்தால், அநேகம் பேர்கள் இன்று மாண்டிருப்பார்கள். உன்னை யாராவது இன்னானென்று தெரிந்துகொண்டிருந்தால், உனக்கு ஜாஸ்தியான ஆபத்து உண்டாயிருக்கும்" என்றான்.

மபாரகன்.— மகாராஜா! எல்லோர் கண்ணுக்கும் நேரே செத்துப்போய் கோரியான பிறகு செத்துப்போனவனைக் கண்டால் ஒருவருக்கும் தெரியாது. அப்படியே தெரிந்துகொண்டாலும் ஆச்சரியப்பட்டுப் பிரமிப்பார்களென்று தெளிந்து நான் இந்த ஸாகஸ காரியத்தைச் செய்துவிட்டேன்.

ராஜஸிம்ஹ.—இதன்மேல் காரியம் ஜயிக்காமற் போனால், அது என் பிழையென்றே சொல்லவேணும். நீ எப்பேற்பட்ட வெகுமானம் கேட்டாலும் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்.

மபாரகன்.— மகராஜ்! அவமரியாதையை மன்னிக்கவேண்டும். நான் மொகலாயனாயிருந்து மொகலாய இராஜ்யத்தின் நாசத்திற்கு வேண்டிய உபாயத்தைச் செய்திருக்கிறேன். நான் முஸல்மானாயிருந்து ஹிந்துக்கள் ராஜ்யத்தை நிலைநிறுத்த யத்தனித்தேன். நான் இதுவரையில் ஸத்தியஸந்தனாயிருந்து இப்பொழுது பொய் சொல்லி அவர்களை வஞ்சித்தேன். நான் பாதுஷாவின் உப்புத்தின்றவன். உமக்குச் சகாயம் செய்தேன். நான் மரணவேதனைக்கு மேற்பட்ட கஷ்டம் அனுபவிக்கிறேன். எனக்கு வேண்டிய வெகுமானம் ஒன்றுதான். என்னைப் பீரங்கிவாயில் நிறுத்திச் சுட்டுவிட்டால், அதே பெரிய வெகுமானம். அப்படியே உத்தரவாகவேண்டும். எனக்கு இனிப் பிழைத்திருக்க இஷ்டமில்லை.

ராஜஸிம்ஹன் ஆச்சரியப்பட்டு, "உனக்கு இதனால் இவ்வளவு வருத்தமானால், எதற்காக இந்தக் காரியம் செய்தாய்? எனக்கு ஏன் சொல்லாமலிருந்தாய்? நான் வேறு மனிதன் யாருக்காவது கட்டளையிட்டிருப்பேன். ஒருவர் மனத்துக்குச் சங்கடமுண்டாக்கக் கூடிய காரியத்தை அவரைச் செய்யச்சொல்ல எனக்கு இஷ்டமில்லை" என்றான்.

மபாரகன் மாணிக்கலாலனைச் சுட்டிக்காட்டி "இந்த மகாத்மா எனக்கு ஜீவதானம்கொடுத்து பிழைப்பித்தார். அவர் சொன்னதின் பேரில் இந்தக் காரியம் செய்தேன். நான் இல்லாமலிருந்தால், இந்தக் காரியம் நிறைவேறியிராது. மொகலாயர் மொகலாயரைத் தவிர வேறு யாரையும் நம்பமாட்டார்கள். நான் இதற்கு ஒப்புக்கொள்ளாதிருந்தால் நன்றி மறந்தவன்; பாபம் வந்துசேர்ந்திருக்கும். அதனால்தான் இந்தக் காரியத்தைச் செய்தேன். இப்பொழுது பிராணனை வைத்திருக்க இஷ்டமில்லை. என்னைப் பீரங்கிவாயில் சுட்டுவிடும்படி பிரார்த்திக்கிறேன். அது முடியாவிடில் என்னைக் கைதியாய் பாதுஷாவினிடம் அனுப்பிவிடவேண்டும். இல்லாவிட்டால், உத்தரவானால் எப்படியாவது மொகலாய சைனியத்தில் சேர்ந்துகொண்டு தங்களுடன் யுத்தஞ்செய்து பிராணனை விடுகிறேன்" என்றான்.

ராஜஸிம்ஹன் வெகு சந்தோஷத்துடன், "நாளையதினம் நீ மொகலாய சேனையைப் போய்ச் சேருவதற்கு உத்தரவு தருகிறேன். இன்னுமொரு நாள் மாத்திரம் இங்கே இரு. ஆனால் ஒரு வார்த்தை கேட்கவேண்டியிருக்கிறது. என்னவென்றால், அவுரங்கசீபு உன்னை எதற்காக வதஞ்செய்தான்" என்பதே.

மபாரக.—அது மகாராஜாவுக்கு முன்னால் சொல்லதக்க தல்ல.

ராஜஸிம்ஹ.—மாணிக்கலாலனுக்கு?

மபாரக.—சொல்லியிருக்கிறேன்.

ராஜஸிம்ஹ.—இன்னொரு நாள் இரு.

இப்படிச்சொல்லி ராஜஸிம்ஹன் மபாரகனுக்கு உத்தரவளித்தான். பிறகு மாணிக்கலாலன் மபாரகனை ஏகாந்த ஸ்தலத்துக்கு அழைத்துக்கொண்டுபோய் "ஸாகேப்! தாங்கள் சாவதற்கு இஷ்டமுள்ளவராயிருந்தால், ஷஹஜாதையைப் பிடித்துவரும்படி எதற்காகச் சொன்னீர்கள்?" என்றான்.

பாம்பின் வாய்த் தேரைபோல.

மபாரக.—அது தப்பு. நான் இன்னும் ஷஹஜாதையைக் கட்டிக்கொண்டு என்ன செய்வேன்? நான் அவள்மேல் வைத்த பிரீதிக்குப் பதிலாய் அவள் என்னை காலஸர்ப்பத்தின் விஷத்தால் சாகும்படி செய்தாள். அதற்குப் பதில் அவளைத் தண்டிக்கவேண்டுமென்றிருந்தேன். ஆனால் மனிதன் இன்றைக்கு எதில் இஷ்டப்படுகிறானோ, அதில் நாளைக்கு இஷ்டம் வைப்பதில்லை. நான் இப்போது சாக விரும்புகிறேன். ஷஹஜாதை எப்படிப்போனால் எனக்கென்ன? அவளைப் பார்க்கிறதற்கு எனக்கு இப்பொழுது இஷ்டமில்லை.

மாணிக்க.—ஜேப உன்னிஸாவை வைத்துக்கொண்டிருக்கவேண்டுமென்று தங்களுக்கு இஷ்டமில்லாதிருந்தால், பாதுஷாவினிடமிருந்து ஏதாவது பிரதிபலன் வாங்கிக்கொண்டு அவளை விட்டுவிடுகிறேன்.

மபாரகன்.—இன்னொரு தடவை அவளைப் பார்க்கவேண்டுமென்றிருக்கிறது. ஜகத்தில் தர்மம் அதர்மம் என்பதை நம்புகிறாளோ இல்லையோ என்பதை மாத்திரம் அவளிடம் கேட்கவேண்டுமென்றிருக்கிறது. இப்போது என்னைப்பார்த்து என்ன சொல்லுகிறாள் என்று பார்க்கவேண்டுமென்ற ஆசையுமிருக்கிறது.

மாணிக்க.—தாங்கள் இன்னும் அவளிடத்தில் பிரீதி வைத்திருக்கிறீர்களோ?

மபாரகன்.—சுத்தமாய் இல்லை. ஒருதடவை மாத்திரம் அவளைப் பார்க்கவேண்டும். நான் கேட்டுக்கொள்வது அவ்வளவுதான்.

எட்டாம் பாகம்

முதல் அத்தியாயம்

பாதுஷாவின் துயரம்

இது இப்படியிருக்க பாதுஷாவுக்கு மகா கஷ்டமுண்டாயிற்று. அவன் சேனையெல்லாம் கணவாய்க்குள் பிரவேசித்துக் கொஞ்சநேரமானவுடன் சூரியன் அஸதமித்தது. ஆனால் யாரும் கணவாய்தாண்டிப் போய்ச்சேரவில்லை. கணவாயின் இந்தப் பக்கத்தில் என்ன நேர்ந்ததென்பது யாருக்கும் தெரியாது. சாயங்காலமாகவே அந்த மார்க்கமிருந்த பருவதப் பிரதேசமெல்லம் அந்தகாரமான இருட்டாயிற்று. வெளிச்சத்தை முன்னிட்டுக்கொண்டு முன்னே போகலாமென்றால் எண்ணெய் முதலான ஸாமான்கள் ஒன்றுமில்லை. பாதுஷா பேகம் இவர்களிருந்த இடத்தில் மாத்திரம் தீபங்கள் ஏற்றப்பட்டன. ஆனால் மற்ற இடங்களிலெல்லாம் ஜாஸ்தியான இருட்டு. மேலும் மேடுபள்ளமான காட்டு மார்க்கம். குதிரைகள் இடறி விழுந்துகொண்டிருந்தன. எத்தனையோ குதிரைகள் மேலிருந்தவர்களுடன் விழுந்தும் அநேகர் குதிரைகள் கால்களினிடையே அகப்பட்டும், காயப்பட்டார்கள். யானைகளின் கால்களில் பெரிய பெரிய கற்கள் பட்டு கால்கள் ஒடிந்து அவைகளெல்லாம் அடக்கமுடியாமல் போயின. சரியாய்ப்போகாமல் மார்க்கம்விட்டு மார்க்கமாய்ப் போகவாரம்பித்தன. குதிரைகளின்மேல் சவாரிசெய்தஸ்திரீகள்கீழேவிழுந்து குதிரைகளின் கால்களிலகப்பட்டு அலறிக்கொண்டிருந்தார்கள். பல்லக்குப் போயிகளின் கால்கள் கற்களால் காயப்பட்டு இரத்தமயமாயிருந்தன. காலாட்படை முன்னே போகமுடியாமல் நின்றுவிட்டது. இதையெல்லாம் பார்த்து அவுரங்கசீபு அங்கேயே தளத்தை இறங்கும்படி ஆக்ஞாபித்தான்.

ஆனால் அங்கே கூடாரம் போடவிடமில்லை. வெகு கஷ்டப்பட்டு பாதுஷாவுக்கும் பேகங்களுக்கும் ஏதோ கிடைத்தமட்டிலும் நிற்க இடம் தயார் செய்ததே பிரயாசமாயிற்று. குதிரைவீரர்கள் குதிரைமேலும், யானைமேலிருந்தவர்கள் யானைமேலும் காலாட்கள் நின்றுகொண்டும், இப்படியே எல்லோரும் அங்கங்கே நின்றுகொண்டிருந்தார்கள். சிலர் பருவதத்தின் தாழ்வுகளில கொஞ்சம் கொஞ்சம் இடஞ்செய்துகொண்டு காலை நீட்டிக்கொண்டு உட்கார்ந்து கொண்டார்கள். ஆனால் தாழ்வுகளில் ஏறுவது கஷ்டமாயிருந்ததால் எல்லோரும் ஏறிக் களைப்பாறமுடியாமற் போயிற்று.

இது ஒரு கஷ்டம். இதன்மேல் சாப்பிடுவதற்கு ஸாமான் ஒன்றுமில்லை. கூடவந்திருந்த ஸரபரா ஸாமான்களை ரஜபுத்திரர் கொள்ளை செய்துகொண்டு போய்விட்டார்கள். சேனையிறங்கியிருந்த கணவாய் மார்க்கத்தில் என்ன பதார்த்தம் அகப்படும்? குதிரைகளுக்குப் புல் கூட செதுக்கக்கூடிய இடமல்ல. பகல்முழுவதும் சிரமப்பட்ட சிப்பாய்களுக்கு ஆகாரமில்லாமற் போயிற்று. பாதுஷாவானால் என்ன? பேகமானாலென்ன? ஒருவருக்காவது நித்

பாம்புக்குப் பால் வார்த்து வார்த்தாலும் விஷத்தையே கொடுக்கும்.

திரையே யில்லை; பசியினால் வருந்தினார்கள். மொகலாயர் சேனையில் எங்கும் ஒரே குழப்பமாயிற்று.

இதற்குள் பாதுஷாவுக்கு உதயபுரி ஜேப உன்னீஸா இவர்களின் அபஹரண சமாசாரம் வந்துசேர்ந்தது. கோபாக்கினி ஜ்வலித்தது. ஒண்டியாய் சைனியத்தை யெல்லாம் கொல்லமுடியாது. முடியுமாயிருந்தால், அவுரங்கசீபு சேனையையெல்லாம் கொன்றிருப்பான். குகைக்குள் அடைபட்ட சிங்கம் தன் பெண்சிங்கம் கூட்டிலகப்பட்டதைக் கண்டால் எப்படிக் கர்ச்சிக்குமோ அப்படி அவுரங்கசீபு கர்ச்சிக்க வாரம்பித்தான்.

அர்த்த ராத்திரியானபொழுது சேனையில் கூச்சல் கொஞ்சம் குறைந்தது. வெகு தூரத்தில் அநேக பர்வதங்களின்மேலே அநேக மரங்கள் வேரறுந்து விழுந்தாற்போல் சத்தங் கேட்டது. என்னவென்று தெரியாமல் ஏதோ பூதப்பிரேதங்களின் சத்தமென்று நினைத்துச் சும்மாவிருந்தார்கள்.

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

அற்பசகவாசம்

யுதிஷ்டிரர் பாரத யுத்தம் முடிந்தபிறகு, அம்புப்படுக்கையில் வீற்றிருந்த பீஷ்மாசாரியாரிடம்பல தரும ரகஸ்யங்களைக் கேட்டறிந்து கொண்ட பொழுது, "எந்தச் சமயத்தில் அரசனுக்கு நற்குலத்திற் பிறந்த துணைகளில்லையோ, அப்பொழுது தாழ்ந்த குலத்திற் பிறந்தவர்களைச் சேர்த்துக்கொள்ளலாமா?" என்று கேட்டார். அதற்குப் பீஷ்மர் பின்வரும் கதையை யெடுத்துச் சொன்னார்.

ஒரு தபோவனத்தில் ஒரு மகரிஷி ஆசிரமத்தைக் கட்டிக்கொண்டு இந்திரியங்களை யடக்கி ஆசார நியமத்துடன் வேதாத்யயனம், விரதம், உபவாசம் முதலியவைகளிற் காலங் கழித்துவந்தார். அவருடைய சுத்தமான மனத்தையும் ஜீவகாருணியத்தையும்,அன்பையும் கண்டு, அங்குள்ள சிங்கங்கள், பெரும்புலிகள், மதயானைகள், கரடிகள்,காண்டா மிருகங்கள் முதலான பிராணிகளும் பயமின்றி அவரைச் சூழ்ந்து விளையாடிக்கொண்டிருக்கும். அவருக்குச் சிஷ்யர்களைப்போல் குற்றேவல் செய்துகொண்டு, அவர் சுகமா வென்று கேட்டவுடன், தத்தம் சத்தங்களால் பதிலளித்து தத்தம் வேலைகளுக்குச் செல்லும். ஆனால் கிராமத்திலுள்ள ஒரு நாய் மாத்திரம் அவரைவிட்டு ஒருபோதும் விலகாமல், ஆகாரம் தேடப் போகாமல், கிழங்குகளையும் பழங்களையும் தின்று பசியால மெலிந்து மிகுந்த பக்தியும் பொறுமையும் வாய்ந்து அவருடைய காலடியில் படுத்திருக்கும். ஒருநாள் ஒரு சிறுத்தைப்புலி அந்த நாயைத் தின்ன நினைத்துப் பெருங்கூச்சலுடன் அதையடிக்கடி நாவினால் நக்கிற்று. அதைக்கண்ட அந்த நாய் உயிர்தப்ப விரும்பி மகரிஷியைப்பார்த்து "சுவாமி! எங்களுக்குச் சத்துருவான இந்தச் சிறுத்தை யிடத்திலிருந்து எனக்குப் பயமில்லாமற் செய்ய வேண்டுகிறேன்" என்றது. சகலப் பிராணிகளின் எண்ணங்களையும் தன் யோகசக்தியால் அறிந்த அம்முனிவர் "குழந்தாய்! பயப்படாதே. நீயும் சிறுத்தையாகக் கடவாய்" என்றார். அப்படியே அது உருவம் மாறினவுடன் இரண்டு புலிகளும் நட்புப் பாராட்டின.

பிறகு ஒரு நாள் ஒரு பெரிய புலி இதைக் கண்டு பசியால் தூண்டப்பட்டு உறுமிக்கொண்டு இதன்மேற் பாய்ந்தது. மறுபடியும் அது முனிவரைச் சரணமடைய, அவர் அதனிடத்தில் வைத்த சிநேகத்தினால் அதைக் கொடிய புலியாக மாற்றினார். பிறகு பல மிருகங்களை அது கொன்று தின்று பலத்தால் இறுமாந் திருக்கும்பொழுது பருவதம் போன்ற ஒரு யானை ஒரு நாள் மதஜலத்தைப் பெருக விட்டுக்கொண்டு அங்கேவர,நாய் பயத்தால்நடுங்கி ரிஷியைச் சரணமடைந்தது.அவர் அதை ஒப்பற்ற பலமும் கொழுப்புமுள்ள யானையாகச் செய்தார். அது தன் இனத்தாருடன் கூடிக் காடுகளில் மதத்துடன் சஞ்சரித்துக்கொண்டுஅடிக்கடிரிஷியிருக்குமிடம்வந்து அவரைத் தரிசனம் செய்துகொண் டிருந்தது.

பிறகு ஒருநாள் மலைக்குகையிலிருந்த ஒரு சிங்கம் காலாந்தகனைப்போல் அந்த யானையின் மேற் பாய்ந்து தாக்க, அது மறுபடியும் முனிவரைச் சரணமடைந்தது. அதை அவர் சிங்கமாகச் செய்து பயத்தை நீக்கினார். இப்படி நாயாயிருந்த அந்தச் சிங்கம்,அக்காட்டில்சஞ்சரித்துக்கொண்டு அவருடைய ஆசிரமத்தினருகிலேயே அடிக்கடி வருவதும் போவதுமாயிருந்தது. மற்ற மிருகங்கள் அந்தத் தபோவனத்தை விட்டு ஓடின.

ஒருநாள் எல்லாப்பிராணிகளையும் கொல்லத் தகுந்த பலமுள்ளதும் எட்டுக்கால்களும் கூர்மையான நகங்களுமுள்ளதுமான ஒரு சரபம் அந்தச் சிங்கத்தைக் கண்டு கர்ச்சித்து அதைக் கொல்லவந்தது. அப்பொழுதும் தவமுனிவர், சிங்கத்தைச் சரபமாய்ச்செய்து காப்பாற்றினார். இப்படிச் சிலகாலம் சென்றபொழுது அற்ப சுபாவமுள்ள அந்த நாய் "இம்முனிவரின் மகிமையால் நாயிலிருந்து படிப்படியாய்ச் சரபமானேன். ஒரு வேளை இவர் என்னிடத்தில் பிரீதி குறைந்து என்னை முன்போல் நாயாகச் செய்தாலும் செய்வார். அல்லது வேறொரு மிருகத்தை என்னைப்போல் சரபமாய்ச் செய்தாலும் செய்வார். ஆகையால் இந்த உருவமும் பலமும் இருக்கும்பொழுதே இவரைக் கொன்றுவிட்டுப் பயமில்லாமல் இவ்வனத்திற்கு அரசனாயிருப்பேன்" என்று நினைத்தது.

தவ வலிமையினால் அதையறிந்த ரிஷி அதை நோக்கி, "நான் பிருகுவின் குலத்திலுத்தவன்; அக்கினிப்பிரபன் (தேஜஸுள்ளவன்) என்று பெயர் படைத்தவன். இவ்வுலகத்தை எரிக்கவும் தருக்கவும் திறமையுள்ளவன். தர்மத்தைக் காப்பாற்றுவதும் அதருமத்தைத் தண்டிப்பதுமே என் நோக்கம். ஆதியில் நீசமான நாயாயிருந்தாய்,பயத்தால் என்னைச் சரணமடைந்து சிறுத்தை யானாய், பெரும் புலியானாய், கொழுத்த யானையானாய், மிருக ராஜனானாய், பயங்கரமான சரபமுமானாய். இந்த நன்றியை மறந்து உன் ஜாதி சுபாவத்தையே கைக்கொண்டு உனக்கு உபகாரத்தையே செய்யும் என் உயிரை வாங்க நினைத்தாய். இதற்குப் பதிலாய் உன் உயிரை வாங்குவது நியாயம். ஆனால் உனக்கு நல்ல புத்தி யுண்டாவதற்காக, உன்னைக் கொல்லாமல் விட்டு,முன்போல் நாயாகச் செய்கிறேன்" என்றார். உடனே எட்டு கால்களுள்ள அந்தச் சரபம் நாலு கால்களும் வாலுமுள்ள நாய் ரூபத்தை யடைந்தது.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

மந்தோதரி

(110-ம் பக்கத் தொடர்ச்சி.)

மயன் அதை யங்கீகரித்து, மந்தோதரியை அழைத்துவர உள்ளே சென்றான். அப்பொழுது மாதவன், "ராவணா! ஆத்திரத்தால் உனக்கு முன்பின் தெரிகிறதில்லை. யோசிக்காமல் எதையோ சொல்லிக் காரியத்தைக் கெடுத்துவிட இருந்தாயே. பரமசிவன் பார்வதியை இவனிடத்தில் ஒளித்துவைத்து யார் கேட்டாலும் 'இவள் என் பெண்' என்று சொல்லும்படி வற்புறுத்தியிருக்கிறார். அந்த இரகசியத்தை நாம் வெளியிட்டால், இவன் இந்தப் பெண்ணைக் கொடுக்கவே மாட்டான். நானோ இந்த வரலாற்றை முற்றிலும் அறிந்தவன். பரமசிவன் இங்கே ஒளித்துவைத்திருக்கும் பார்வதியைக் கொடுத்துவிடென்று நீ கேட்கப்போனாயே, அப்படிக் கேட்டிருந்தால் இங்கே பார்வதியுமில்லை, பரமசிவனுமில்லையென்று சாதித்திருப்பான். அப்படியில்லாமல், உன் மகளை இலங்கேசுவரனுக்கு மனைவியாய்க் கொடுக்கவேண்டுமென்று நான் சொன்னதனால் என்னிடத்திலுள்ள தாக்ஷண்யத்தாலும், என்னை விரோதித்துக்கொள்ள இஷ்டமில்லாததாலும், மகாராஜாவான உனக்குத் தன் பெண்ணைக் கொடுக்கமாட்டேனென்று சொல்வதற்கு யாதொரு காரணமு மில்லாததாலும், இப்பொழுது தருமசங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டு தப்ப வழியில்லாமல் விழிக்கிறான். அதிருக்கட்டும். அந்தப் பெண் வந்தவுடன் நன்றாய்க் கவனித்துப்பார். முன்பு பார்வதியென்றெண்ணி நீ சுமந்து வந்தவளுக்கும் உண்மையான இந்தப் பார்வதிக்குமுள்ள பேதம் உன்னைப்போன்ற புத்திமானுக்குத் தெரியாமற் போகாது' என்றார்.

தன்னைப் புகழ்ந்ததைப்பற்றி இராவணன் அடங்கா மகிழ்ச்சிகொண்டு "எனக்குத் தெரியாதா? ஒரு நிமிஷத்தில் கண்டுபிடிக்கிறேன்!" என்றான். பிறகு மயன் மந்தோதரியை யழைத்துக்கொண்டு அங்கேவர, தசக்ரீவன் அவளுடைய உத்தமலக்ஷணங்களையும் ரூபலாவண்யத்தையும் கண்டு மதிமயங்கி,இவள் பார்வதியென்று மாறாத நிச்சயங்கொண்டு

"மாதவா! நீ சொன்னது சரியே. இவளை எப்படியாவது மணம்புரியவேண்டும். இவள் பார்வதியென்று நான் கண்டுபிடித்ததை எந்நாளும் காட்டிக்கொள்ளக்கூடாது. மயனுடைய பெண்ணென்றே எண்ணியிருப்பதாய் இவர்கள் நம்பும்படி நடந்துகொள்ளுகிறேன்" என்றான். பிறகு மயன் திருமாலின் சட்டளைப்படி மந்தோதரியைத் தசமுகனுக்கு விவாகம் செய்வித்து, அச்சமயத்தில் அவனுக்கு ஸ்திரீதனமாய் ஒப்புயர்வில்லாத ஓர் சக்தியாயுதத்தை இராவணனுக்குக் கொடுத்தான். உயுத்த களத்தில் இலக்ஷ்மணன்மேல் இராவணன் விடுத்தது இதுவே.—(ஆனந்த ராமாயணம் I 9.)

இராமன்பராசக்தியை உபாஸிப்பவர். இராவணன் சீதையை யபகரித்தபிறகு இராமன் பருவபூஜை செய்யும் காலம் வந்தது. அப்பொழுது பாசிரவணகிரியில் மழைக்காலத்தில் தங்கியிருந்தார். அதுவரையில் சகல உத்தமலக்ஷணம் பொருந்தின சீதையையே தேவிரூபமாய் வைத்துப் பூஜை பண்ணிக்கொண்டிருந்ததால் அவளில்லாமையால் பூஜை தடைபடும்போலிருந்தது. இதற்கு என்ன யுக்தி யென்று நெடுநேரம் இராமச்சந்திரன் ஆலோசித்து, "ஆஞ்சநேயா! சீதைக்கு அடுத்தபடியாய் சகல உத்தமலக்ஷணங்களும் பொருந்தினவள் உலகத்தில் மந்தோதரி ஒருத்தியே. அவள் வந்தால் பூஜை நடக்கும். இதற்கென்ன வழி?" என்றார். மாருதி, "இது தங்களுடைய மனத்தை வருத்த வேண்டியவிஷயமல்லஇதோவந்துவிட்டேன்" என்று இலங்கைக்குச் சென்று மந்தோதரியிடத்திற்குப்போய் தன் கோரிக்கையை நிறைவேற்றி வைக்கும்படி பிரார்த்தித்தார். அவள் மகா பதிவிரதையானதாலும் இராமனுடைய உண்மையான ஸ்வரூபத்தை யறியும் ஞானதிருஷ்டியுடையவளானதாலும் அதற்கிணங்கி ஆஞ்சநேயருடன் பாசிரவணகிரிக்கு வந்து மஹாதேவியின் பூஜையை முடித்துவைத்தாள்.

மாருதி இராவணனுடைய அந்தப்புரத்தில் நுழைந்து சீதையைத் தேடிக்கொண்டிருக்கையில் ஓரிடத்தில் தனியாய் திவ்வியாலங்காரங்களுடன் ஒரு படுக்கையையும் அதில் அழகே உருவெடுத்து வந்ததுபோன்ற ஒரு மங்கை கண் துயில்வதையும் கண்டார். முத்துக்களாலும் நவமணிகளாலும் இழைக்கப்பெற்றஆபரணங்களை யணிந்துகொண்டு உருக்கியோடவிட்டு ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கத்தைப்போல் ஜ்வலிக்கும் தேக காந்தியுடன் தன் தேஜஸாலும் கலைகளாலும் அந்த விமானத்திற்கு ஒரு திவ்ய ஆபரணம்போல் விளங்கும் அப் பெண்மணி மந்தோதரியென்ற கீர்த்தி பெற்ற இராவணனுடைய பட்ட மகிஷி; அவனுக்கு உயிருக்குயிரானவள்; அந்தப் புரத்திற்கு அதிபதி என அறிந்தார்.

வாயுபுத்திரன் அவளுடைய அபூர்வமான ரூபத்தையும் யௌவனத்தையும் கவனித்து, இவள் சீதையாயிருக்கலாமென்று நினைத்து, சந்தோஷம் தாங்காமல் தோள் தட்டி, வாலை முத்தமிட்டு ஆனந்தமடைந்தார்; குதித்து விளையாடினார்; பாடினார்; ஆடினார்; உலாவினார்; தூண்களின்மேல் ஏறிக் குதித்தார். பிறகு சற்றுநேரம் கவனித்து அவள் மூச்சு விடும் மாதிரியைக்கண்டு இவள் சீதையல்ல மந்தோதரியெனத் தன்னை திடப்படுத்திக்கொண்டார். நவ வியாகரண பண்டிதரும் நிகரற்ற புத்தியுமுடையவருமான ஆஞ்ஜநேயரை மோசம் போகும்படியான சௌந்தரியத்தையுடையவளென்று இதனால் விளங்குகிறது.—(வால்மீகிராமாயணம், சுந்தரகாண்டம். X.)

சீதை மந்தோதரியின் புத்திரியென்று சில உப புராணங்களில் ஓர் விசித்திரமான கதை சொல்லப்படுகிறது. அது வெகு விஸ்தாரமானபடியால் இங்கே சொல்லப்படவில்லை.

இராவணனைக்காட்டிலும் பலபராக்கிரமமும் வரப்பிரசாதமும் பெற்ற இந்திரஜித்தென்ற சுத்தவீரனை மகனாய்ப்பெற்றவள் இவளே. தர்மசிந்தையும் ஜீவகாருண்யமும் பெருந்தன்மையுமுடையவள்; இராவணனுடைய இதத்தையே நாடினவள்; அவன் செய்யும் குரூரகிருத்தியங்களுக்காகப் பயமில்லாமல் கண்டித்து நல்வழியில் நடக்கும்படி அவனை வற்புறுத்தினவள்; பலவிதமாய் அவனை யெச்சரித்து சீதையை யபகரிப்பதால் விளையக்கூடிய பெருங்கேட்டை யெடுத்துச் சொல்லி அவளை மறுபடியும் இராமச்சந்திரனிடத்தில் கொண்டுபோய் விடும்படிக்கும், பிரஹஸ்தன் மகோதரன், மகாபார்சுவன் முதலிய துஷ்டர்களின் யோசனைகளைக்கேட்டு நாசமடையாமல் விபீஷணனை யாதரித்து அவனுடைய சொற்படி நடக்கவேண்டுமென்றும் எவ்வளவோ மன்றாடிக் கேட்டுக்கொண்டாள். கணவனுக்கு ஓர் உத்தமபத்தினிசெய்யவேண்டிய கடமையை எள்ளளவேனும் குறைவில்லாமல் செய்தவள். திவ்வியஞானமுடையவள். பரமாத்மாவே இராமலக்ஷ்மண பரதசத்துருக்னர்களாய்ப் பூமியில் அவதரித்து இராக்ஷஸகுல ஸம்ஹாரம் செய்வாரென்று அவளுக்கு நன்றாய்த் தெரியும். சீதை அசோகவனத்தில் காவலில் வைக்கப்பட்டுக் கோரமான ராக்ஷஸிகளால் பலவிதமாய் உபத்திரவமடைந்தபொழுதும் விபீஷணருடைய பாரியையையும் மகளையும் இரகசியமாய் அனுப்பி, அவளைப் பலவிதமாய்த் தேற்றினாள். இராவணன் சீதையைத் தனக்குட்படும்படி நயத்தாலும் பயத்தாலும் நிர்ப்பந்தஞ்செய்தபொழுது அவனுடைய வார்த்தைகளுக்கு இடங்கொடாமல் பயப்படாமல் அவனை அலக்ஷியஞ்செய்து பேசும்படிக்கும் தன் பர்த்தாவினிடத்தில் வைத்த பிரேமையையும்நம்பிக்கையையும்கைவிடாமலிருக்கும்படிக்கும் அவருடைய கீர்த்தியையும் யெடுத்து இராவணனிடத்தில் வருணிக்கும்படிக்கும், அவனுக்குத் தெரியாமல் பலவிதமாய் ஜாடைகளாலும் பார்வையாலும் சீதையை தைரியப்படுத்தினவள். வால்மீகி மஹரிஷியால் இயற்றப்பட்ட இராமாயணமென்ற ஆதிகாவியத்தில் ஒவ்வொரு பாகமும் ஒப்பற்ற அழகு வாய்ந்திருக்கிற தென்பதை யறியாதவர்களில்லை. ஆயினும் தாரையின் பிரலாபமும் மந்தோதரியின் பிரலாபமும் சர்வசிரேஷ்டமாய் விளங்கும். இவ்விரண்டிலும் மந்தோதரியின் பிரலாபம் எவ்விதத்திலும் உயர்ந்தது. அதை மூலத்தில் (யுத்த காண்டம் 113) பூரணமாய்ப் படித்தாலல்லாது அதன் அருமை விளங்காது.

இப்படி மகாவிஷ்ணுவின் அருளால் சிருஷ்டிக்கப்பட்டவளும், பலபராக்கிரமத்தில் நிகரற்ற சிற்பியான மயனுக்குப் பெண்ணாய் விளங்கினவளும், சகல ராக்ஷஸர்களுக்கும் பதியான பிரதாப லங்கேசுவரனைப் பிரிய நாயகனாய் அடைந்து, பட்ட மகிஷியாய்ச் செங்கோல் செலுத்தினவளும் முப்பத்து முக்கோடி தேவதைகளுக்கும் அரசனான இந்திரனைக்கட்டி இழுத்துச் சிறையில் அடைத்த இந்திரஜித்தைப் புத்திரனாய்ப்பெற்றவளுமான மந்தோதரி யென்ற உத்தமஸ்திரீ, ராக்ஷஸராஜனுக்குப் பத்தினியாய், ராக்ஷஸனுக்குத் தாயாய், ராக்ஷஸர்களுடன் காலங்கழித்தாலும், கற்பு, சத்தியம், கருணை, தருமம், கல்வி, கேள்வி, ஞானம், ஒழுக்கம் முதலிய மகாபதிவிரதைகளின் இலக்ஷணங்கள் வாய்ந்த மங்கைக்கரசி யென்றே சொல்லவேண்டும்.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

இந்தியக் குழந்தைகளின் கனம்.—இந்திய வைத்திய ஆராய்ச்சிப் பத்திரிகையின் அக்டோபர் மாதத்திய பத்திரிகையில், டாக்டர் டாக்மார் எப். கர்ஜெல் என்பவர் இந்தியக் குழந்தைகளுக்கு பிறக்குங் காலத்திலுள்ள கனத்தைக் குறித்துத் தாம் செய்த ஆராய்ச்சியினால் அறிந்துகொண்டதைப் பின்வருமாறு தெரிவிக்கிறார்:— "பல ஜாதிகளிலும், பல ஸ்திதிகளிலும் பிறந்த சாதாரண இந்தியக் குழந்தைகள் 1849-ன் கனங்களை அவைகள் பிறந்தவுடன் நிறுத்துத் தெரிந்துகொண்டு பார்த்ததில், பிறக்குந் தருணத்தில் இந்தியக் குழந்தையின் சராசரி கனம் $6\frac{1}{2}$ பவுன் என்று தெரியவருகிறது. இந்தச் சராசரி கனத்தை இந்தியாவில் (இந்தியரல்லாத) வேறு இனத்தவர்களுக்குப்பிறக்கும்குழந்தைகளின் பிறவிக்கால கனங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், அது அதிகக் குறைவானதாகக் காணப்படவில்லை. 83 பாரசீகக் குழந்தைகளைப் பரிசோதித்ததில், சராசரி கனம் $6\frac{3}{4}$ பவுனாகவும், 201 ஐரோப்பியக் குழந்தைகளையும் பரங்கிக்கார (Anglo Indian) குழந்தைகளையும் பரிசோதித்ததில் சராசரி கனம் $7\frac{16}{25}$ பவுனாகவும் ஏற்பட்டது. கடைசியாகச் சொல்லப்பட்ட குழந்தைகள் (மற்ற இனங்களைச்சேர்ந்த குழந்தைகளைக் காட்டிலும்) அதிகக் கனமுள்ளவைகளாக இருந்தன. இந்தியக் குழந்தைகளுக்குள்ளேயே வெவ்வேறு ஜாதிக்குழந்தை

களுக்குள் சாதாரண வளர்த்தியுடன் பிறந்த குழந்தைகளின் பிறவிக்கால சராசரி கனத்தைக் கவனிக்கும்போது, விசேஷ வளர்த்தி வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை; 305 மகம்மதியக் குழந்தைகளைப் பரிசோதித்ததில், அவைகளின் சராசரி கனம் $6\frac{11}{25}$ பவுனுகவும், 1,018 ஹிந்துக் குழந்தைகளைப் பரிசோதித்ததில், அவைகளின் சராசரி கனம் $6\frac{9}{20}$ பவுனுகவும், 463 இந்திய கிறிஸ்தவக் குழந்தைகளைப் பரிசோதித்ததில், அவைகளின் சராசரி கனம் $6\frac{1}{2}$ பவுனுகவும் ஏற்பட்டது. இந்தியக் குழந்தையின் பிறவிக்கால கனத்தைக் கவனிக்கும்போது,(ஐரோப்பிய ஜாதியாருடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் மிகவும் இளமைப் பருவத்திலேயே மணந்துகொள்ளுவதாக ஏற்படும்) இந்தியத் தாய்களின் இளம்பருவ விவாகத்தினுல் அவர்களது குழந்தைகளின் வளர்த்திக்கும் போஷணைக்கும் யாதொரு குறைவும் ஏற்படவில்லையென்று தெரியவருகிறது.''

*
* *

குளத்து உள்வாய்நில சாகுபடி.—உணவுக்குரிய தானியங்கள் குறைவாக இருப்பதினுல், சர்க்காரைச்சேர்ந்த குளத்து உள்வாய் நிலங்களில் 1329, 1330 பசலிகளில் பின்வரும் நிபந்தனைகளுக் குட்பட்டு உணவுக்குரிய தானியங்களைப் பயிரிடுவதற்கு குடிகளுக்கு அனுமதி கொடுப்பதற்கு சென்னை இராஜதானியிலுள்ள கலெக்டர்களுக்கு கவர்ன்மெண்டாரால் அதிகாரம் அளிக்கப்பட்டது. நிபந்தனைகளாவன:—

1. ஓர் குளத்தின் ஆயக்கட்டில் ஒருவர் நஞ்சை நிலத்தின் சுவான்தாராகவோ சாகுபடிதாராகவோ இல்லாவிட்டால் அக்குளத்தின் உள்வாய் நிலத்தைச் சாகுபடிசெய்ய அவருக்கு இவ்வுத்தரவின்படி அனுமதி கொடுக்கப்படமாட்டாது.

2. குளத்து உள்வாயைச் செல்வாக்குள்ள சிலருக்கே முழுவதையும் கொடுத்து விடாமல், கூடியவரையில் மேற்கூறிய நிபந்தனைக்கிசைய அருகதையுள்ள மனுதார்களுக்கு ஈவுப்படி பாகித்துக் கொடுக்கவேண்டும்.

3. அப்படிக் குளத்து உள்வாய் நிலத்தில் சாகுபடியாகும் விஸ்தீரணத்துக்கு அக்கிராமத்திய புஞ்சைத்தீர்வைத் தாரணைகளில் மிகவும் உயர்ந்த தாரணைப்படி தீர்வை விதிக்கப்படும். உணவுக்குரிய தானியங்கள் இன்னும் குறைவாகவே இருப்பதனுல், கவர்ன்மெண்டார் மேற்கூறிய சௌகரியத்தை 1331-வது பசலிக்கும் கொடுக்கும்படி உத்தரவிட்டிருக்கிறுர்கள்.

*
* *

ஓர் விநோதத் தண்டனை:—அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் ஒன்முன ஒக்லஹாமாவின் பிரதிநிதிகள் சபையில் கொண்டுவந்திருக்கும் ஓர் மசோதாச் சட்டத்தின்படி, இரவில் ஒரு மணிக்கப்பால் யாராவது குறட்டைவிட்டாவது, தூக்கத்தில் உளறியாவது, வேறு விதமாகவாவது தமது குடும்பத்தினர்களின் தூக்கத்தையோ அயல் வீட்டுக்காரர்களின் தூக்கத்தையோ கெடுத்து விடுவார்களாயின், அது சட்ட விரோதமாகக் கருதப்பட்டு, முதல்தரம் செய்யும் குற்றத்துக்கு அவரது காலை போஜனத்தை நிறுத்தியும், இரண்டாவது முறைசெய்யும் குற்றத்துக்கு அவரை மாமியார் வீட்டுக்குச் சிலகாலம் அனுப்பியும், மூன்முவது முறைமுதல் 20 பவுன் முதல் 200 பவுன் வரையில் அபராதம் போட்டும், அவருக்குத் தண்டனை விதிக்கப்படு மென்று தெரியவருகிறது.

*
* *

ருஷ்யாவில் பஞ்சத்தின் கோடுமை.—ருஷ்யாவில் பஞ்ச நிவாரண வேலைசெய்யும் கமிட்டியிலுள்ள அமெரிக்க மாதர் மிஸ் ஹெய்னஸ் ஸமாரா ஜில்லாவில் தாம் அனுபவித்த கஷ்டங்களையும், கண்ட காட்சிகளையும் லண்டனில் விவரித் துரைத்தபோது, தெருக்களில் ஏராளமான குழந்தைகளும் வயோதிகர்களும் இறந்துபோய் அவரது பிரேதங்கள் வண்டிகளில் இழுக்கப்பட்டுக் கொண்டு போய்ச் சேர்க்கப்படுவதாகவும், ஒரு கிழவன் தனது பெண்சாதியும் பிள்ளையும் மிகவும் தள்ளாதவர்களாக விருக்கிறுர்களென்று தனக்கு சாவு சமீபத்தில் நேரிடப்போவதை அறிந்து தனக்குத் தானே புதைக்குழியை வெட்டிக் கொண்டாரென்றும் அறுபது குழந்தைகளுக்கு சாப்பாடுபோடுமிடத்தில் 420-பேர்கள் இருந்து வருவதால், சாப்பாடு அதிகமாகக் கிடைக்கவில்லையென்றும், அங்குகூட 100-க்கு 80-பேர்கள் இறந்துபோவதாகவும், இவ்வாமுன கொடுமை இங்கிலாந்தைவிட மூன்றுமடங்கு விஸ்தீரணத்தில் நடைபெற்று வருகிறதாகவும் சொன்னுர்.

தனபாக்கியத்தைப்பற்றி சுதேசமித்திரன் (7—12—21) ல் எழுதுவது:—

இப் பெயர்கொண்ட நாவலொன்று நமது விமரிசனத்திற்காக வந்திருக்கிறது. ஆங்கில பாஷையிலுள்ள சிறந்த கற்பனைக் கதையொன்றைத் தழுவி இது எழுதப்பட்டிருந்தபோதிலும், தமிழுலகிற்கேற்ற வண்ணமாகவும், தமிழ் மகளிர்க்கு அறிவை ஊட்டத்தக்க விதமாகவும் எளிய நடையில் சொற்சுவை பொருட்சுவையுடன் எழுதப்பெற்றிருக்கிறது. நவீனநாகரீகப் பெருக்கினுல் பட்டிணவாசத்தை விரும்பி அங்குவந்து ஸ்திரமாக வாசம் செய்வோருக்கு இயல்பாகவும், சாகவாசத்தாலும் ஏற்படக்கூடிய பல துர்க்குணங்களையும், கிராம வாழ்வின் பரிசுத்தமான தன்மையையும் இக்கதை நன்கு விளக்கிக் காட்டுவதாக இருக்கிறது. கதாநாயகியாகிய தனபாக்கியம் வாலப் பருவம் முதல், கிராமாந்தரத்திலேயே தனது பிதாவின் பாதுகாப்பிலிருந்து வந்து உத்தமமான குணங்களுக்கு ஆஸ்தான பீடமாக விளங்கியதையும், தந்தைசொல் மிக்க மந்திரமில்லையென்னும் ஆப்தமொழிக்கிணங்க தன்னுடைய பிதாவால் வளர்க்கப்பெற்றுவந்த ஒருவரை மணம்புரிய இசைந்ததையும் பிறகு பட்டிணவாழ்வி லீடுபட்டு பலவித துன்மார்க்கங்களுக்கு முறைவிடமான தனது அத்தை மகனின் படாடோபங்களில் மயங்கி தன்னையே அறியாது அவனை மணம்புரிந்துகொள்ள அந்தரங்கமாக இசைவதையும், திக்கற்றவருக்குத் தெய்வமே துணை என்பதுபோல் நீண்ட காலத்திற்கு முன்னரே இறந்துபோய்விட்டதாகக் கருதப்பட்ட தனது பிதாவின் சகோதரர் வேற்றுருவில் பிரசன்னமாகி அவளுடைய மயக்கத்தைத் தெளிவிப்பதும், அவளுடைய பிதா வளர்த்துவந்த நடராஜனென்பவன் பால்யம் முதல் சற்சாகவாசத்தினுல் நல்வழியிலிருந்து வந்ததையும், கதாநாயகியை மணந்துகொள்ள நினைத்திருந்த நினைவு பகற்கனவாகிவிடவே சிறிதும் பொறுமை கொள்ளாது வேறிடத்திற்குச் சென்றுவிடுவதையும், முடிவில் அத்தை மகன் பேரிலிருந்துவந்த மயக்கம் தெளிந்து ஆதி காதலனையே கதாநாயகி அடைவதையும், அவளுடைய நற்குணங்களுக்குகந்தவாறு ஒப்பற்ற செல்வம் அவளுக்கு கிடைப்பதுடன் காதலனின் உயர் பிறப்பு வெளியாவதையும் மற்றுமுள்ள பல சம்பவங்களையும் வெகு கோர்வையாகவும் படிப்போர் மனதை கவரத்தக்கவிதமாகவும் தமிழ் மகளிர்க்கு அறிவை ஊட்டும் விதமாகவும் அழகாகவும் இக்கதை எழுதப்பெற்றிருக்கிறது. வீண்படாடோபங்களில் மயங்கி தங்களுடைய வாழ்நாளை வீணுளாக்கிக்கொள்ளும் பல பெண்பாலார்க்கு இக்கதை எச்சரிக்கை செய்வதாக இருக்கின்றது. உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அழகாக அச்சடிக்கப்பட்டிருக்கிறது. நவீனங்களைதகளிற் காணப்படும் பிழைகளின்றி இருக்கிறது. இக்கதையைப் படிப்போர் பயனுறுவரென்பதில் சந்தேகமில்லை. விலை ரூ. 2.

THE VIVEKA BODHINI

(EDITED BY V. KUPPUSWAMI AYYAR.)

Vol. XIV.] November—1921. [No. 5.

PRINCIPAL CONTENTS

Worship of Lord Muruga 153
Skanda Puranam 154
The Reformatory for Juvenile Offenders 160
Mr. "Pussyfoot Johnson" 164
Our Short Story (Illustrated)* ... 167
Rajasimhan (An Historical Novel) 172
News & Notes 184

Illustrations.

1. Prince of Wales. (Frontispiece.)
2. The deaf hunchback at the hotel.*

1922-ம் ௵ காலண்டர்

பெரிய ஸைஸ் - இரண்டு கலர், இங்கிலீஷ் தேதியுடன் தமிழ் தேதியும் பிரத்தியேகமான வர்ணத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. 12-மாதங்களுக்கும், 12 தினுசு அழகிய ஆப்டோன் படங்கள். ஒரு காப்பியின் கிரயம் அணு 4. ஒரு டஜன் ரூ. 2—10—0. வேண்டுவோர் உடனே எழுதிக்கொள்ளவும்.

= எமது புதிய பெரிய நாவல் =

தனபாக்கியம்

[அல்லது ஓர் அதிர்ஷ்டவதியின் சரித்திரம். டெமி ஸைஸ் 282 பக்கங்களும், 8 ஆப்டோன் படங்களும் கொண்டது. ஆசிரியர் ஸ்ரீ ச. தா. மூர்த்தி முதலியார். விலை ரூபா 2 : போஸ்டேஜ் அணு 6.]

விலாஸம்:—அல்லயன்ஸ் கம்பெனி,
மயிலாப்பூர், சென்னை.

(A. No. 1819) THE MOST CHARMING PERFUME

OTTO DILBHAR (Registered.)

எல்லாருடைய மனதையும் அதியுற்சாகப்படுத்தும் சுகந்தம்

ஆடோ தில்பஹார் (ரேஜிஸ்டர்ட்)

நீடித்திருக்கக் கூடியதும், நிகரில்லாத உன்னத வாசனையுடையதும், மனதிற்கு சந்தோஷமுண்டாகக் கூடியது. ஆல்கஹால், சாராயம் முதலிய சம்பந்தமில்லாத பொறுக்கான சில சுகந்த புஷ்பங்களிலிருந்து இறக்கிய சத்தினால் சேர்க்கப்பட்டது. உம்முடைய கைகுட்டையில் சில துளிகள்விட, புஷ்பத்தோட்டத்தின் மத்தியிலிருந்து அனுபவிக்கக்கூடும் வாசனையை தரக்கூடியது. விவாக காலங்களிலும், பூஜாகாலங்களிலும், இன்னும் மற்ற செண்டுகள் அத்தர்களைவிட இந்த ஆடோ டில்பஹார் அதிக இன்பத்தைக் கொடுக்கும்.

அடியில் வருமாறு அளவு புட்டிகளில் நிரப்பி விற்கப்படுகிறது.

பெரிய புட்டி 1-க்கு (4 டிராம் அல்லது ½ அவுன்ஸ்) விலை ரூ. 2—0—0

வேறு	,,	(2 டிராம்)	,,	1—4—0
நடுத்தரம்	,,	(1 டிராம்)	,,	0—12—0
சிறிய புட்டி	,,	(½ டிராம்)	,,	0—8—0
மாதிரி	,,		,,	0—2—0
வாசனைக் கார்ட் 1-க்கு			,,	0—1—0

பிரசித்தமான எல்லா வியாபாரிகளாலும் விற்கப்படுகிறது. இதே மாதிரி அநேக பெயர்கள், மார்க்கட்டில் இருப்பதால் வாங்கும்பொழுது புட்டிகள்பேரில் ஆடோ டில்பஹார் என்னும் பெயர் இருக்கிறதா என்று ஜாக்கிரதையுடன் கவனிக்கவும்.

சோல் ஏஜண்டுகள்:—

ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,
155, ஜும்மாமஸ்ஜித், மார்க்கட், பம்பாய்

பெரிய கம்பெனி! பெரிய கம்பெனி!!

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி

நாணயமான சரக்குகள்
சுத்தமான பட்டு ! சகாய விலை !!

உயர்தரமான
பட்டுபீதாம்பர சேலைகள் ரவிக்கைகள்

துப்பட்டாக்கள், வெண்பட்டு வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள், உருமால்கள் முதலிய எல்லாத் தினுசுகளும், சிவப்பு, ரோஸ், ஊதா, பச்சை, மஞ்சள், மேகவர்ணம், வெள்ளை, சிலேட் கலர், ஆரஞ்சு, கத்தரிப்பூக் கலர், கிரிம்ஸன் முதலிய எல்லா இங்கிலீஷ் கலர்களிலும் மிகவும் சரச விலைக்குக் கிடைக்கும்.

பட்டு பீதாம்பர கேட்லாக் இனாம்.
உடனே எழுதுங்கள்.

Adderss:—Manager, (A. No. 2914)
Silk Pitamber Co., *Benares City.*
விலாசம்:— மானேஜர்,
பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி

Gratis! Gratis!

(A. No. 2550) THE

Katha Upanishad

Sanskrit Text with English Translation

By

AUROBINDO GHOSE.

Will be sent gratis to all on receipt of anna and a half ($1\frac{1}{2}$) in stamps.

☞ *None can get more than one copy.*

ASHTEKAR & Co.,
POONA CITY.

A. No. 2383)

"அமிருதஸால்"

அல்லது [சகல வியாதி நிவாரண சஞ்சீவி]

இதை உபயோகிப்பதனால் தீரும் சில முக்கிய வியாதிகள்

இன்புளுயன்சா என்னும் கொடிய நோய்	பிரமேகம், படர்தாமரை	சூலை கட்டு, சந்துவாதம்
சீதஜுரம், சீதபேதி	தொண்டையிரணம்	வாந்தி, காயங்கள்
சீழ்கட்டி	மலச்சிக்கல்	தலைநோய்
வயிற்றுப் புளிப்பு	வெட்டு காயங்கள்	நெஞ்செரிச்சல்
முகப்பரு	அதிசாரம், ஈரல்வலி	வீக்கங்கள், சொரிச்சிரங்கு
இரத்தக்ஷீண குராகம்	கிராணிகழிச்சல்	மஞ்சள்காமாலை
உஷ்ண ஜன்னி	சீதபேதி, சூதகவாய்வு	கெர்ப்பமேகம்
சுவாசகாசம்	சூதகவயிற்றுவலி	இடுப்புவலி, பெரும்பாடு
இருமல், மார்பு சளி	அக்கினிமாந்தம்	வாய் குமட்டல்
தீப்புண், ஜலதோஷம்	நமைச்சல், சொறி	தேக குடைச்சல்
விஷபேதி, வயிற்றுவலி	காக்காய் வலிப்பு	சர்வவலிகள்
வயிற்றுப் பொருமல்	பலவித ஜுரங்கள்	விஷக்கடிகள், கீல்வாய்வு
	வெள்ளை வெட்டை	பல்வலி, கிருமிகள்

இந்த சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கத்தக்கது. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். அமிருதஸால் பெரிய புட்டி விலை ரூபா 2.

தபால் கூலி பிரத்தியேகம்.

விலாஸம்:— அமிருதஸால் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்

ஆதங்க நிக்ரஹ ஔஷதசாலை

ஜகப்பிரசித்தியான ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

நோயுள்ளவர்களுக்கும், நோயற்றவர்களுக்கும், ஆடவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும், உபயுக்தமான **ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்** தற்கால பல விருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் தலைவன்.

இந்த மாத்திரைகள்

(1) ஜீரண சம்பந்தமான தொந்திரவுகளை நிவர்த்திப்பன.
(2) நரம்பு ஸ்தானங்களைப் பலப்படுத்துவன.
(3) இழந்துபோன ஞாபக சக்தியைத் திரும்பக்கொடுத்து, ஞாபக சக்தியைப் பெருக்குவன.
(4) இரத்தசுத்தி இரத்த விருத்தி செய்வன.
(5) தேகத்துக்குப் பலத்தையும், ஊக்கத்தையும், சுறுசுறுப்பையும் கொடுப்பன.
(6) உயிர் நிலைகளைத் திடப்படுத்துவன.

32, மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1.

வைத்திய சாஸ்திரி, மணிசங்கர் கோவிந்தஜீ,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்
ஹெட் ஆபீஸ் :— ஜாம்நகர், கத்தியவார்
(A. No. 1749) பிராஞ்சு ஆபீஸ் :— பிராட்வே, மதராஸ்.

(A. No. 963) **Aletris Cordial**

அல்லெட்டரிஸ் கார்டியல்

ஸ்திரீகளின் பலஹீனத்தைத் தீர்க்கும் மருந்து

உலகெங்கும் வைத்தியர் யாவராலும் ஸ்திரீகளின் சகலவிதமான நோய்களுக்கும் உபயோகிக்கப் படுவது. ருது அடையநிற்கும் சிறுமிகளுக்கும் இம்மருந்து மிகச்சிறந்தது.

அளவு :—தேயிலைக் கரண்டி மருந்தை, உண்டபின்னும், நித்திரைக்குப் போவதற்கு முன்னும் உட்கொள்ளவேண்டும். உஷ்ணமான ஜலத்துடன் கலந்துகொண்டால் விசேஷ குணம் உண்டு.

Celerina

ஸிலரீனு

பலமற்றவர்க்குக் கைகண்ட மருந்து

உண்பதற்கும், உறங்குவதற்கும் ஒரு மணி முன்பு ஒரு தேயிலைக் கரண்டியளவு, நாளுக்கு மும்முறை சாப்பிட்டால், மனத்தளர்ச்சி, அலட்டல், புரட்டல், தூக்கமில்லாமை, மூர்ச்சை, மயக்கம், நரம்புக் கேட்டாலாகும் அஜீர்ணம், பலஹீனம், குடிக்கேடால் விளையும் நோய்கள் இவை யாவும் ஒழிந்து உடம்பு புஷ்களமடையும். லாகிரி வஸ்துக்கள் கலவாது, மூளை வஸ்து விருத்தியடைய கவனத்துடன் செய்யப்பட்டது.

இப்பிரஸித்திபெற்ற மருந்துபோல் போலியாக இருக்கும் மருந்துகளைப் பார்த்து ஏமாறுமல்
RIO CHEMICAL COMPANY, NEW YORK CITY, U. S. A.
என்ற லேபிலைப் பார்த்து வாங்கவும். இது மருந்துக்கடைகளி லெங்கும் கிடைக்கும்.

(A. No. 2278)

பாலாஜி அண்டு கம்பெனி, காசி

புதிய சரக்குகள் உடனே எழுதுங்கள் சகாய விலைகள்

புதுமாதிரி பட்டுப் புடவைகள்

இந்தப் புடவைகள் மெல்லிய பட்டுநூல் பளபளப்பாகவும் அழுத்தமாகவும் நெசவு செய்யப்பட்டுள்ளது. சிவப்பு, பச்சை, ரோஜா, நீலம் முதலிய கலர்களில் விழிம்பு முந்திகளும் அழகான ஜரிகைவேலையும் செய்யப்பட்டுள்ளது. 8 கஜம் $2\frac{1}{2}$ முழம் அகலம் புடவை 1-க்கு விலை ரூ. 25, 30, 35 முதல் 45 வரை.

பட்டு ரவிக்கைகள்

உடல் சாதா விழிம்புக்கு அழகான ஜரிகை வேலை செய்யப்பட்டு பலவித புதுமாதிரி கலர்களில் ரவிக்கை 1-க்கு விலை ரூ. 3- முதல் ரூ. 5 வரை.

விளையாட்டுப் பாத்திரங்கள்

பித்தளை வெங்கலத்தால் செய்த 32 வித சாமான்கள் அடங்கியதும், குழந்தைகளுக்கு சந்தோஷத்தை உண்டுபண்ணக் கூடியதுமானவை.

1. நெ. பெரிய செட்	1-க்கு	ரூ. 4—0.
2. நெ. மத்திம செட்	1-க்கு	ரூ. 2—8.
3. நெ. சிறு செட்	1-க்கு	ரூ. 2—0.

அன்னபூர்ணி அம்மன் ஸ்தோத்திரம் இனும்.

Balajee & Co., Silk Merchants,
Benares City.

(A. No. 1750)

இரவில் மணி பார்க்கும் 8 மூலை ரேடியம் ரிஸ்ட்லெட் கெடியாரம்

இரவில் மணி பார்ப்பதற்கு இக்கெடியாரத்திற்கு விளக்கு முதலிய வேறு வெளிச்சம் வேண்டியதில்லை. இதில் ரேடியம் என்னும் ஓர்வித வஸ்துவை நெம்பர்களிலும் முள்களிலும் சேர்த்திருப்பதால், இரவில் மணி நன்றாய்த் தெரியும். இருட்டு எவ்வளவு கருக்கலாக இருக்குமோ அவ்வளவிற்கும் எண்கள் நன்றாய்த் தெரியும்:





8 மூலை நிக்கல் ரிஸ்ட்லெட் ரேடியம் கெடியாரம் 1-க்கு ரூ. **7.**

8 மூலையில்லாத ரவுண்டுரேடியம் ரிஸ்ட்லெட் கெடியாரம் 1-க்கு ரூ. **6.**

ரேடியம் இல்லாத ரிஸ்ட்லெட் கெடியாரம் 1-க்கு ரூ. **5.**

இது சரியான டைம் காட்டக்கூடியது. இதைப் பார்ப்பவர்கள் ஆச்சரியப்படுவார்கள். வெகு அழகாய் இருக்கும்: உயர்ந்த தோல் பட்டையுடன் அனுப்பப்படும். கைவசம் கொஞ்சம் தான் இருக்கிறது: உடனே தருவித்துக்கொள்ளுங்கள்.

மானேஜர் :— **தைரியலட்சுமி அண்டு கம்பெனி,**
போஸ்ட் பாக்ஸ், நெ. 265, மதராஸ்.

Travel always with an Annapurna Cooker

(A. No. 2888) உங்கள் பிரயாணங்களிலெல்லாம் அன்னபூர்ணா

= குக்கரை எடுத்துச் செல்லுங்கள். =



சிரமமின்றி சௌகர்யமாய் எடுத்துக்கொண்டு போகக்கூடியது. இதை உபயோகித்த ஒவ்வொருவரும் இதன் பெருமையைப் புகழ்கின்றனர். ஒவ்வொரு வீட்டிற்கும் இது இருந்தே தீரவேண்டும். நீடித்த காலம் உழைக்கும்படிச் செய்யப்பட்டிருக்கிறது. இதைப்பற்றிய முழுவிபரமும் கீழ்கண்ட விலாஸத்திற்கெழுதிப் பெறலாம். எழுதும்போது இப்பத்திரிகையைக் குறிப்பிடவும்.

Address:— **THE MANAGER, ANNAPURNA COOKER Co.,**
Arabind House, near Cinema : : Bombay No. 4.

Telegrams "SADANANDAM" **Established 1910.**

(A. No. 2988)

முக்கிய விளம்பரம்

எங்களால் தயார்செய்யப்படுகிற சதானந்த "**சர்வரோக நிவாரணி**" யானது நூற்றுக் கணக்கான வியாதிகளை குணப்படுத்துகிறது. இதற்குப் பத்தியமோ இல்லை; இதை இன்ன நேரத்தில்தான் உட்கொள்ளவேண்டுமென்ற நியதியும் இல்லை. இது வெளிப்பிரயோகம் உட்பிரயோகம் இரண்டிற்கும் உபயோகப்படுகிறது. தவறிச்சாப்பிடுவதனால் எவ்விததீங்கும் செய்வதில்லை. பாலர் விருத்தர் யாவரும் சந்தேகமில்லாமல் சாப்பிடலாம். இம்மருந்தை கன்றுகாலிகளுக்குங்கூட உபயோகப்படுத்தலாம். இம்மருந்தானது சர்க்கியூட் ஆபீசர்களுக்கு மிகவும் சௌகரியமாயிருப்பதுடன் இயந்திரம், ஆயுதம் முதலியவைகளால் நேரிடும் அபாயகரமான காயங்களையும் வெகு விரைவில் குணப்படுத்தும். இம்மருந்தை பல இங்கிலீஷ் வைத்தியர்களும், ஐரோப்பியர்களும், இந்து கனவான்களும் விசேஷமாகப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். மருந்துக்கு ஆர்டர் செய்கிறவர்களுக்கு முழுவிவரமடங்கிய கியாட்லாக் புத்தகமொன்று இனாமாக அனுப்பிக்கப்படும். **விலை ரூ. 2.** வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

வி. லக்ஷ்மிநரசு அண்டு பிரதர்,

A Trial is Solicited — **சதானந்த வைத்தியசாலை, கோயமுத்தூர்.**

Supplement to the " Viveka Bodhini."] [" விவேக போதினி " அநுபந்தம்.

PRINCE OF WALES
வேல்ஸ் இளவரசர்

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XIV } துன்மதிஸு ஐப்பசிமீ :: 1921-ம்ஸு நவம்பர் மீ { பகுதி 5

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

உரைதரு பரசம யங்க ளோதுவ
  தருவென அருவென வொன்றி லாததொ
  ரொளியென வெளியென வும்ப ராமென
  இம்பரானின்—
றுலகுகள் நிலைபெற தம்ப மாமென
  வுரைசெய அதுபொருள் கண்டு மோனமொ
  டுணர்வுற வுணர்வொடி ருந்த நாளு
  மழிந்திடாதே;
பரகதி பெறுவதொ ழிந்தி டார்வன
  பரிசன தெரிசன கந்த வோசைகள்
  பலநல விதமுள துன்ப மாகிம யங்கிடாதே—
பரிபுர பதமுள வஞ்ச மாதர்கள்
  பலநல விதமுள துன்ப சாகர
  படுகுழி யிடைவிழு பஞ்ச பாதக
  மென்று தீர்வேன் ;
அரகர சிவசுத கந்த னேநின
  தபயம பயமென நின்று வானவர்
  அலறிட வொழிகிய வஞ்சிடாதென
  அஞ்சல் கூறி—
அடல்தரு நிருதர நந்த வாகினி
  யமபுர மடையஅ டர்ந்து போர்புரி
  அசுரன தகலமி டந்து போகவ கிர்ந்தவேகம்;
விரிகடல் துகளெழ வென்ற வேலவ
  மரகத கலபசி கண்டி வாகன
  விரகுள சரவண முந்தை நான்மறை
  யந்தமோதும்—
விரைதரு மலரிலி ருந்த வேதனும்
  விடவர வமளிது யின்ற மாயனும்
  விமலைகொள் சடையர னும்ப ராகிய
  தம்பிரானே !

சூரபதுமனால் வருத்தப்பட்ட தேவர்கள், "அரஹரா! சிவகுமாரா! ஸ்கந்தா! சூரனிழைக்கும் கொடுமைகளை எங்களாற் சகிக்க முடியவில்லையே! அபயங்கொடுத்து இரக்ஷிக்கவேண்டும்!" என்று கூறிக் கதறிக் முறையிட்டுக்கொண்ட காலத்தில், கருணையுடன், "இனி பயந் தவிர்த்திருப்பீர்களாக!" என்று கூறியருளி, போருக்குவந்த சூரன்முதலிய அசுரர்களது எல்லையற்ற சேனாசமுத்திரம் யமனுக்கிரையாகும்படி தாக்கிப் போர்புரிந்து, தன் தாய் மாயையின் போதனையினால் அகங்கார மென்னும் வலையிற் சிக்கி நின்னைச் சிறுபாலகனென் றெண்ணி நின்னை எதிர்த்துப் போர்புரியத் துணிந்த சூரபதுமனது உடல் அகலத்தில் இருகூறாகப் பிளவுபடுமாறு நீ எறிந்தபோது தான்சென்ற மகாவேகத்தினால் அகன்ற சமுத்திரங்கள் நீர்வற்றித் தூளிபறக்கும்படிச்செய்த உக்கிரமான ஞானசக்தியாகும் வேலாயுதத்தைக் கையிற்றாங்கும் வீரனே! மரகதத்தைப்போல் ஒளி வீசும் தோகையையுடைய மயிலை வாகனமாகக் கொண்டவனே! முக்கண்ணெந்தையின் ஆறு திருமுகங்களிலுமுள்ள ஆறு நெற்றிக்கண்களிலுமிருந்து எம்பெருமானருளாற் கிளம்பிய ஆறு தீப்பொறிகளையும் இறைவனாணைப்படி அக்கினியும் வாயுவும் சுமந்து கொண்டுபோய்க் கங்கையிலுள்ள சரவணப்பொய்கையிற் சேர்த்தகாலத்தில், ஆறு அற்புதத் திருவுருவங்கள் கொண்டு விநோதமாய் விளையாடின சரவணபவனே! சிருஷ்டி கர்த்தாவாயும் சதுர்வேதங்களையும் நன்கு ஓதி உலகத்துக்குப் போதிப்பவராயுமுள்ள கமலாசனராகிய பிரமதேவரும், கொடிய விஷத்தைக் கக்கும் ஆதிசேஷனென்னும் பாம்பையே பஞ்சணையாகக் கொண்டு உறங்கும் மகாவிஷ்ணுவும், நிர்மலமான கங்காதேவியைச் சடாமுடியில் மறைத்துவைத்திருக்கும் பரமசிவனும் "யாவர்க்கும் தலைவன் நீயே!" யென்று கூறி வணங்கிய தம்பிரானே! மிகவும் சிறந்தவைகளாகக் கருதப்படுவனவும் பரம்பொருளின் குணாதிசயங்களையும் அதை யடையும் நெறிகளையும் தம்மிடத்தே அடக்கிக்கொண்டுள்ளனவுமான நான்குவேதங்களும் பரம்பொருள் உருவமுடையதென்றும், உருவமற்றதென்றும், வேறொன்றுடனும் கலக்காத சுயஞ் சோதி

(இதன் தொடர்ச்சி 160-ம் பக்கம் பார்க்க.)

 பார்க்கிற கண்ணுக்குக் கேட்கிற செவி பொல்லாது.

விவேக போதினி

தோ.14] துன்மதிஹூ :: ஐப்பசிமீ [ப. 5

கந்த புராணம்

SKANDA PURANAM

சர்வேசுவரரான முக்கண்ணெந்தை தக்ஷனுக்கு ஞானம் புகட்டுமாறு தமது திருவுருவத்தை மறைத்தருளியவுடன், கருமத்தை உலகில் வளர்க்கும் உலகமாதாவாகிய தாக்ஷாயணி அரிய தவத்தினாற் பெருநிதியைப் பெற்றோர் அந்நிதியைக் கைசோரவிட்ட காலத்துத் துயருறுவதுபோலக் கலங்கித் தியங்கினாள்; தனது பெருந்துயரத்தைச் சகிக்கமாட்டாது மணப் பலகையைவிட்டு விரைந் தெழுந்து கமலமாதாகிய இலக்ஷ்மி முதலிய தேவமாதர்கள் கூடி நிற்குமிடத்துக்குச் சென்று, ஜ்வலிக்கும் தீயிலிட்ட பொன்னைப்போல உருகி விம்மினாள்; பெருமூச்செறிந்தாள் ; அழுதாள் ; உணர்ச்சி மங்கி அயர்ந்தாள்; வருந்தி வாடினாள்; அங்கம் வியர்த்தனள்; மனம் வெதும்பினள் ; விமலன் கொண்ட திருமணக் கோலத்தை அன்போடு நினைத்து மெய்சிலிர்த்தனள் ; பிறகு பின்வருமாறு யோசித்தாள்.

“ தேவேந்திரன், பிரமதேவர், மகாவிஷ்ணு முதலிய தேவர் யாவரும் நிறைந்துள்ள சபையில் நடைபெறும் கன்னிகாதானமாகிய பெருவேள்வியிற் கலந்து அமர்ந்திருந்த இறைவன் மாயையினால் திடீரென மறைந்தாரே ! அவர் கள்வன் போலும் ! சீ ! என்ன எண்ணம் இது ! என்னைத் தவ நெறியில் நிற்க வொட்டாத பலஹீனமான தேகத்தைப் பெறும் தீவினையுடையேன் இங்கு சிவபெருமானைப் பெறுவதற்காகச் செய்த தவம் சிறிது, அத்தகைய அற்புதப் பலனைத் தரத்தக்கதன்று என்று தெளியாமல், கருணை மேலீட்டினால் தமது பாதமலர்கள் சிவப்ப நடந்து தாமாகவே வந்து என்னை மணந்துகொண்ட இறைவனைக் கள்வனெனக் கருதுவது தகுதியாகுமோ ?”

இவ்வாறெண்ணிப் பெருமூச்செறிந்து வருந்தும் தனது புதல்வியை வேதவல்லி தன் மார்போடு அணைத்துக்கொண்டு, “எனதாருயிரே! மனந்தளராதே! நின் கணவனைப் பெறும் வழி தவமொன்றே யாதலால், அதை இன்னும் புரிவாயாக !” என்றாள். அப்போது அருகில் நின்ற திருமகளும், சரஸ்வதியும், ஏனைய தேவமாதர்களும் தாக்ஷாயணியை நோக்கி, “ தாயே ! அகில முழுவதையும் ஈன்றருளியவள் நீயே யாதலின், பிரபஞ்சத்திலுள்ள பொருள்கள் யாவும் நின்னுருவமே யாகும். அப்பிரபஞ்சத்தில் நிறைவுகுறை வொழிவற நிறைந்தெங்கும் நிற்கும் நின் நாயகனை நினது கண்களுக்குப் புலப்படவொட்டாது மறைக்க வல்ல பொருளும் உளதோ ? நின்னை விட்டுக் கணமும் பிரியாது நின்னுடன் கலந்து நிற்கும் நாயகனைப் பெறுவதற்கு இன்னும் தவமியற்றவா எண்ணுகிறாய் ? நன்று, நன்று ! நினைத்தற்கரிய உங்கள் திருவிளையாடல்களை முற்றினு முணர யார்தாம் வல்லவர் ? வாக்கினாலும் மனத்தினாலும் தொடருவதற்கரிய நின் நாயகனையும் நின்னையும் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றோம்; நுமதடைக்கலமெனக் கூறி எங்கள் வினைப்பயன்களை யொழித்துக் கொண்டோம் ; பிறவிப் பிணியையுந் தொலைத்துக் கொண்டோம் ; ஞான போதகமும் நிறையப் பெற்றோம் ; முத்தி வீட்டில் ஆனந்தம் பெருகும் வாழ்வையும் பெற்றோம் ; இத்தகைய பெரும் பாக்கியங்களைப் பெற்ற நாங்கள் செய்த தவம் பெரிதாகவே யிருக்கவேண்டும் !” என்று கூறி, அவளை வாழ்த்தினர். இம்மொழிகளைக் கேட்டு இறைவி அவர்களைக் கருணை பொழியும் கண்மலர்களினால் ஒருமுறை நோக்கி, பிறகு அவ்விடம்விட் டகன்று தன் நாயகனைத் திரும்பவும் பெறுவதற்காகச் சிறந்த தவத்தினை யியற்றும் நோக்கத்துடன் முன்பு தான் தவமியற்றிவந்த கன்னி மாடத்தை யடைந்தாள்.

அப்போது அங்கு கூடியிருந்த தேவர்கள், “ இறைவன் எங்கு சென்றார் ? மாயமாக வன்றோ மறைந்துபோனார் ! தாம் மணந்து கொண்ட தேவியை விட்டுச் சென்றதன் காரணமென்ன ? இனிமேல் நடக்கப்போவதென்ன ?” என்று பற்பல விதமாகப் பேசிக்கொண்டு, இரவில் மேகத்தினாற் சூழப்பெற்ற சந்திரனைப்போலப் புத்திமயங்கிக் கவலையுற்றிருந்தார்கள். அப்பொழுது தக்ஷன் மகா கோபங்கொண்டு, கண்களினின்றும் தீப்பொறி பறக்க, புழுங்கும் உள்ளத்துடன் நகைத்து, “மிக்க செல்வமாக நான் நடத்தப்புகுந்த கலியாணம் மிகவும் அழகு ! தான் கொடுத்த வரத்தினைப் பூர்த்திசெய்வதற்காக வந்த இச்சிவன் என் மகளிடத்திற் சென்று அவளைத் தன் மனைவியாகும்படி வேண்டினான். அது கேட்டு, நான் உலகவியல்புக்கேற்ப மணமுறைப்படி இச்சபையிற் கூடியுள்ள தேவர்கள் யாவரும் காண என் மகளை அவனுக் கீந்தேன். அவ்வாறு மணம் செய்துகொடுத்த பின்னர், யாவரும் வெட்குமாறு அவன் மறைந்தான். அப்படி அவன் செய்வதற்கு அவன் என்னிடத்தில் என்ன குற்றத்தைக் கண்டான் ? தொன்றுதொட்டு வழங்கிவரும் திருமணச் சடங்கை இழிவாக்கி, அதற்கு இடையூ றுண்டாக்கி, என்னையும் நிந்தனைக் காளாக்கி, தான் செய்யுங் காரியத்தினால் விளையும் பயனென்னவென்று சிறிதும் ஆலோசியாது மறைந்தானே இச்சிவன் ! ஆனால் அது ஆச்சரியத்தை விளைவிக்கத் தக்கதன்று. ஏனெனில், தாய், தந்தை, சுற்றத்தவர் யாருமில்லாதவனாய், பலர் கூடும் வெட்டவெளியையே தனது வீடாகக் கருதி அங்கு நிர்த்தனம் செய்கின்ற பித்தன் பிராமண வடிவங்கொண்டாலும் பித்தன் தானே ? அவ்வேடம் பூண்டதனால் அவன் மனத்திலுள்ள மருள் நீங்குமோ ? ஆராய்ந்து பார்த்தால் அவன் குணம் தீயதேயென்று இன்றுதான் எனக்கு விளங்கிற்று ” என்று கூறி, தேவர்களுக்கு விடை கொடுத் தனுப்பினான்.

தக்ஷன் சிவபெருமான் செய்த மாயத்தினையே உன்னியுன்னி கோபக்கடலிற் படிந்திருக்கையில், அவன் மகளான தாக்ஷாயணி அச்சிவபெருமானை அடையுந் தகைமையைத் தான் பெறுமாறு, முன்பு தான் நோற்றுவந்த கன்னிமாடத்தில் அரியதவ மியற்றிவந்தாள். அத்தவத்தைக்கண்டு சிவபெருமான் மனமுவந்து ஒரு தவசியின் வேடம்பூண்டு, வெண்ணிறமுள்ள தலையோடான உண்கலத்தைக் கையிலேந்தி, திருநீறணிந்து, உருத்திராக்ஷமாலையணிந்து, காதிற்குழைகளையும், திருவடிகளில் வேதங்களைப் புலம்பும் சிலம்புகளையும் அணிந்து, வலக்கரத்தில் சூலந்தாங்கி, அழகிய ஜடைப்பின்னலையு முடையவராய் உமாதேவியின் முன்னே தோன்ற, அவள் இவர் எம்பிரானுக் குகந்தவரென வெண்ணி, எதிர்கொண்டு சென்று தனது கைகளைச் சிரமேற்குவித்து, அவரைத் தோத்திரஞ் செய்தாள்.

அப்போது சிவபெருமான் வெள்விடை மீது தமது பழைய வடிவத்துடன் தாக்ஷாயணிக்குத் தரிசனமளித்து நின்றார். அச்சேவையைக் கண்டு இன்னலொழித்து உள்ளம் பூரித்த தாக்ஷாயணி எம்பெருமானை யணுகி, பன்முறை அவர் திருமுன்னர் வீழ்ந்து பணிந்து, “ சின்மயனே ! முன்னம் என்னைவிட் டகன்றீரே. இன்று என்னிடத்திலுள்ள குற்றங்களை அகற்றுவதற்கு வந்தருளினீரோ ?” என்று கூறினாள். அம்மொழிகளைக் கேட்ட நஞ்சுண்ட கண்டர் தம் தேவியினிடத்தில் அகங்காரம் என்பது சிறிதுமின்மையைக் கண்டு உளமகிழ்ந்து, தமது மலர்க்கரத்தை நீட்டித் தேவியைத் தூக்கி மழவிடையின் மீது தமது இடப்புறத்தி லிருத்தினார். பிறகு எம்பெருமான் உலகமாதாவாகிய தாக்ஷாயணியுடன் புறப்பட்டுச் சென்று திருக்கைலாயத்தை யடைந்தார்.

அவ்வாறு அவ்விருவரும் சென்றதைக் கண்ணுற்ற சேடியர்கள் பயந்து நடுங்கி தக்ஷன்பாற் சென்று, “ மகாப்ரபு ! சிவந்த வானத்தினை யொத்த செஞ்சடை யண்ணல் ஒரு தவசி வேடம் பூண்டு வந்தார். அவர் சூதையறியாத தங்கள் புதல்வி அவரை யணுக, அவர் தமது பழையவுருக் கொண்டு, அவளைத் தூக்கி இடபத்தின்மீது வைத்துக்கொண்டு செல்கிறார் !” என வுரைத்தனர். அம்மொழிகளைக் கேட்டு தக்ஷன் அக்கினி ஜ்வாலையில் நறுநெய்யைச் சொரிந்தாற்போல உக்கிரமான கோபங்கொண்டு, சர்வேசுவரனுக்கு யாதொரு தீங்கும் இழைப்பதற்குத் தனக்கு வல்லமையின்மையை யுன்னிப் பெருமூச் செறிந்து வீற்றிருந்தான். அப்பொழுது தேவர்களெல்லோரும் வழக்கப்படி அங்கு வந்து, சிவபெருமான் “பிரபஞ்சத்திலுள்ள யாவரும் எம்மைத் தொழுவதுபோலவே நின்னையுந் தொழுக !”

பார்த்தாற் பசுப்போல, பாய்ந்தால் புலிப்போல.

பார்ப்பான் கறுப்பும் பறையன் சிவப்பும் ஆகாது.

என்று தக்ஷனுக்களித்த வரத்துக் கேற்ப தக்ஷனை வணங்கித் துதித்து நின்றனர். தக்ஷன் அத்தேவர்களை நோக்கி, "தேவர்காள்! நீலகண்டன் செயலை யென்னென்றுரைப்பேன்! முன்பு மணச்சடங்கு நிறைவேறுவதற்குமுன் மறைந்தான். இப்போது என்முன் வாராமல், தவசி வேடம் பூண்டு என் மகளிடஞ்சென்று, அவளைக் கைப்பற்றிச் செல்கிறான். அன்னை தந்தையர் அன்புடன் அளிக்கவும் சுற்றத்தவர் மகிழ்ந்து வாழ்த்தவும் என் மகளை யழைத்துப்போகாமல், பெற்றவர்களுக்குத் தெரியாமல் இவ்வண்ணம் பெண்ணைக் கைப்பற்றிச் செல்வது முறையோ? இப்படிப்பட்ட அக்கிரமச் செய்கையைச் செய்வார் பிரபஞ்சத்திலேயே இல்லை. அவன் சகலஜகத் காரணனான சங்கரனானால் என்ன? அவன் மட்டும் அக்கிரமம் செய்வது தகுதியாகுமோ? எங்கள் குலத்துக்கு ஓர் குறைவை யுண்டாக்கினதுமன்றி, எனது இராஜ்யத்தில் வந்து என் ஆணையை மீறி நடந்தானே இச்சிவன்! நன்று நன்று! இதுகாறும் பிச்சை வாங்குபவன் என்று மட்டும் யாவரும் அவனை இகழ்ந்துவந்தனர். இனி, சமயத்தில் ஒளிந்து கொள்பவன், பெண்ணைக் கவர்ந்து செல்பவன் என்றும், பிரபஞ்ச மெல்லாம் தன்னை இகழும்படி அவன் நடந்து கொண்டான்" என்று செய்ந்நன்றி மறந்த தக்ஷன் பலவாறு பிதற்றி எம்பெருமானை யிகழ்ந்து, தேவர்களுக்கு விடைகொடுத் தனுப்பினான். தன்னைப் படைத்தருளி தனக்கு நிகரற்ற வளங்களனைத்தையும் நல்கிய எம்பெருமானிடம் விரோதம் பாராட்டும் நெஞ்சத்தைப் பெற்ற தக்ஷன் அன்று தொட்டு இறைவனை அன்புடன் நினைத்துத் துதியாமல் இகழத் தொடங்கினான்.

இதை யறிந்த பிரமாதி தேவர்கள்கூடிப் பின்வருமாறு ஆலோசித்தனர். "சிறந்த மெய்த்தவத்தினால் நிகரற்ற செல்வம் பெற்று விளங்கும் தக்ஷன் எம்பெருமானை நினைப்பதில்லை யாதலால், அவன் சீக்கிரத்தில் ஆவியை யிழப்பது நிச்சயம். சிவத் துரோகியான அவனது ஏவலை நாம் செய்துவருகின்றோமாதலால், நமதாருயிருக்கும் இறுதி நெருங்கி வருகின்றது. அச்சிவத துரோகியின் ஏவலைச் செய்யாதொழிவோமென்றாலோ, அவன் பண்டு தனக்குச் சிவபெருமானளித்த வரப்பிரசாத மகிமையினால், நம்மை நமது பதவிகளினின்றும் தள்ளிவிடுவான். இவ்வாறு இருதலைக் கொள்ளியிடைப்பட்ட எறும்பைப் போலத் தத்தளிக்கும் நாம் தப்புவதற்கு வழியொன்றே உளது. அதென்னவெனில், சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கைலாய மலைக்குச் சென்று அவரைத் தரிசிக்கும்படி தக்ஷனுக்கு நற்புத்தி புகட்டுவதுதான். அவன் அவ்வாறு சென்று எம்பெருயானை அன்புடன் வணங்குவானேயாகில், அவனது செல்வம் நிலைபெறும்; நமக்கு நாசமுண்டாதலும் ஒழியும்."

இவ்வாறு யோசனை செய்து தீர்மானித்த தேவர்கள் தக்ஷன்பாற் சென்று, "வள்ளலே! எங்கள் குறையை நீக்கி யருள வேண்டும். தாங்கள் செய்த சிறந்த தவத்தின் பயனாக தங்கள் புதல்வியாக அவதரித்த தாக்ஷாயணியையும் அவள் நாயகனான பரமசிவனையும் தாங்கள் இவ்வண்ணம் மறந்திருத்தல் தகுதியன்று. குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை யென்னும் நீதியை மறப்பீராயின், தாங்கள் உலகநிந்தைக் காளாகுவீர். ஆதலின் தாங்கள் திருக்கைலாயத்துக்குச் சென்று செஞ்சடாதரனைத் தேவியோடும் தரிசித்து வரவேண்டும்" எனக் கூறி வேண்டினார்கள். அதுகேட்ட தக்ஷனும் சற்று ஆராய்ந்துபார்த்து அவர்கள் கூறியது உண்மையெனத் தேர்ந்து, தேவர்களை ஆங்கேயிருத்தி, மெய்க்காவலாளர்களுடன் தன் நகரத்தைவிட்டுப் புறப்பட்டுச்சென்று திருக்கைலாய மலையின் நடுவில் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பொற்கோயிலையடைந்து, திருநந்திப்பெருமானுடைய உறைவிடமான கோபுரவாசலையணுக, அங்கு நெருக்கமாக நின்று காத்துக்கொண்டிருந்த பூதர்கள் அவனை உள்ளே செல்லவொட்டாது தடுத்தார்கள்.

தக்ஷன்கோபமுற்று, "நான் முன்புசிவபெருமானுக்கு மணஞ்செய்துகொடுத்த எனதருமைப்புதல்வி அவளுடைய நாயகனுடன் கூடி வாழுந் தன்மையை யறிந்துகொள்வதற்காக உள்ளே செல்கின்றேன். நீங்கள் என்னைத் தடுப்பதற்குக் காரணமென்ன?" என வினவினான். பூதர்கள் மகா கோபத்துடன் அவனை நோக்கி, "அறிவிழந்தவனே! முன்னாளில் விடமுண்ட கண்டரான எம்பெருமானை நீ இகழ்ந்தனையே! நீ இப்போது இங்கு ஏன் வந்தாய்? திரிபுரரென்ற அசுரர்கள் வையகத்தையும் வானுலகத்தையும் மிகுந்த துன்பத்துக்கு ஆளாக்கினரேயாயினும், எம்பெருமானிடத்து எப்போதும் மெய்யன்பு பூண்டவர்களாகவே யிருந்தனர். அவர்கள் எம்பெருமான்பாற் கொண்ட அன்பிற் சிறிதளவேனும் நின் மனத்திற் பொருந்தியிருக்கவில்லையே! அப்படியிருக்க, நீ வாழ்வுற் றிருப்பது எங்ஙனம்? ஆலகாலவிடத்தால் இமையவர்க்கு மரணமுண்டாகும்போ விருந்தகாலத்தில், அவர்களுடைய துயரத்தைத் தவிர்ப்பதற்காக அக்கொடிய விடத்தைத் தமது திருவாயிற் போட்டுக்கொண்டு, நீலகண்டராய் விளங்கிய எம்பெருமான் கருணையினால் நினக்களித்த செல்வங்களனைத்தையும்பெற்று அனுபவித்துக்கொண்டு, அப்பெருமான் செயலனைத்தையும் மறந்தனையே; அது தகுதியோ? ஆயின், நீ என் செய்வாய்? நீ மாயையின் வசமானாய்! எம்பெருமானது பாதமலர்களை வணங்கி, அவரை அன்போடு போற்றாதவருடன் பழகுவது தகாத செய்கையாதலால், பந்த பாசத்திற் கட்டுண்டு நிற்கும் உன்னோடு வார்த்தையாடுவதும் பாவச் செயலாகும். ஆயினும், ஒரு வார்த்தை சொல்லுகிறோம், கேள்! நீ இறைவன் திருமுன்னர் சென்று, அன்புடன் அவரை வணங்குவாயெனில், இங்கு நில்! இல்லாவிட்டால், புவியிலுள்ள உன் நகரத்துக்குப் போய்விடு!" என்று கூறினார்கள்.

எண்ணிறந்த பூதர்கள் காக்கும் அச்செம்பொன் வாயிலைக்கடந்து உள்ளேசெல்லச் சக்தியற்றவனாய், நாணமுற்று வருந்தி அவ்விடம் விட்டுப் புறப்படுகையில், தக்ஷன் அவர்களை நோக்கி, "ஏ! பூதர்காள்! உங்கள் இறைவனான சிவனை நான் ஒருபோதும் வணங்கமாட்டேன். அச்சிவன் எனது மருமகன். நாராயணனும் பிரமனும் எனக்கு ஊழியஞ்செய்பவர்கள். இது விஷயம் உங்களுக்குத் தெரியாதுபோலும்! பிரபஞ்சத்தில் உயிருடன் நிற்பவர் யாவரும் என் தொண்டர்கள். ஞாலமுழுவதும் வணங்கித் துதிக்கும் இறைவன் நான்தான். என் பெயர் தக்ஷன் என்று சொல்லுவார்கள். அப்படிப் பட்ட நானா வழக்கமில்லாத வழக்கமாக உங்கள் பித்தனை யடைந்து பணிந்து போற்றுவேன்? 'இங்கே நில்!' என்று சொல்லி, என்னை உள்ளே செல்லவொட்டாது தடுத்தீர்கள். அவ்வார்த்தை நீங்கள் சுயமாகச் சொல்லக்கூடிய வார்த்தைகளோ? என் மருகனும் மகளும் அவ்வாறு சொல்லும்படி உங்களுக்குக் கட்டளையிட்டிராவிடில் நீங்கள் அவ்வாறு சொல்வீர்களா? நீங்கள் சேவகர்களானபடியால், அவர்களிட்ட கட்டளையைச் செய்தீர்கள். உங்கள்மீது யாதொரு குற்றமுமில்லை. ஆராய்ந்துபாராமல் இவ்வண்ணம் கட்டளையிட்ட உங்கள் தேவனை எவரும் போற்றாமலும், வந்து பணியாமலும், புகழ்ந்து துதியாமலும், இகழும் வண்ணம் ஏற்பாடு செய்கின்றேன்" என்று சொல்லிவிட்டு, அவன் முற்செய்த தீவினை அவனை அங்கிருந்து தள்ள, அவ்விடம்விட் டகன்று திரும்பித் தன் நகரத்துக்குப் போய்ச் சேர்ந்தான்.

உடனே அங்கு கூடியிருந்த தேவர்களை நோக்கி, "என்மகள் ஈசன்பாற் கொண்ட ஆர்வத்தினால் அவனுடன் சேர்ந்துகொண்டாள். அவர்களிருவரும் என்னை அவமதிக்க ஓர் தந்திரத்தை யாலோசித்து, தங்கள் தகைமைக்குத் தக்க காவலாளரைக்கொண்டு என்னை உட்செல்ல வொட்டாது தடுத்தனர். அது மாத்திரமன்று. அவர்கள் என்னைப் பலவிதமாக நிந்திக்கும்படி தங்கள் காவலாளர்களுக்குக் கட்டளையிட்டார்கள். அச்சேவகர்கள் பேசிய வார்த்தைகளை நினைக்கும்பொழுது என் மனம் நாணுகிறது. அவைகளை யெல்லாம் சொல்லி என்ன பிரயோசனம்? அவர்களுடைய குணம் தெரிந்தும், அவரிடத்திற் சென்ற என்னையே நொந்துகொள்ள வேண்டுமே யன்றி, அவர்கள்மீது குற்றங்கூறச் சிறிதும் இடமில்லை. நன்று, நன்று! தேவர்காள்! என்னை மதியாத ஈசனையும் உமையையும் நீவிர் இன்றுமுதல் இறைஞ்சி வணங்காதேயுங்கள்! என் ஆணை மீறி நீவிர் அவ்வண்ணம் செய்வீரேயாகில், நுமக்குரிய பதவிகளினின்றும் நும்மை யகற்றி விடுவேன்!" என்று சீற்றத்துடன் மொழிந்தான்.

அதுகேட்டுத் தேவர்கள், "மகாப்ரபு! தாங்கள் இவ்வார்த்தைகளை யுரைத்ததின் காரணம் தங்களுக்கு எம்பாலுண்டான வெறுப்பே போலும்! இதுகாறும் தாங்கள் இட்ட ஏவல்களில் எதையேனும் செய்ய நாங்கள் மறுத்ததுண்டோ? இல்லையே! இன்று தாங்களிட்ட கட்டளையின்படியும் நடக்கச் சித்தமாயிருக்கி

பாலகருக்குப் பலம் அழுகை, மச்சத்துக்குப் பலம் உதகம்.

பாலர்மொழி கேளாதார் குழல் இனிது யாழ் இனிது என்பார்.

றோம். எங்கள்மீது தாங்கள் கோபங்கொள்ள வேண்டாம்" என்று தக்ஷனுக்குச் சமாதானங் கூறிவிட்டு, தத்தம் நகரங்களுக்குச்சென்றனர்.

இவ்வாறு பன்னெடுங்காலம் யாவரும் நிகரில்லாத் தக்ஷனது ஆக்கினைக்கஞ்சி நடந்துவந்த பின்னர், ஒருநாள், பிரமதேவர் திரிபுரங்களை யெரித்தருளிய எம்பெருமானது அருளால் ஓர் சிறந்த வேள்வியைச் செய்யவேண்டுமென வெண்ணி, அதற்கு வேண்டியவைகளையெல்லாம் சித்தஞ் செய்துகொண்டு, தக்ஷன் ஆக்கினையினால் தாம் உயிரை யிழக்கும்படி நேரிடுவதா யிருந்தாலும், நெற்றிக்கண்ணையும் பிறைவிளங்கும் சடா முடியையு முடைய பரமேசுவரனை வேள்விக்கு வரவழைத்து, முதல் அவிர்ப்பாகம் அவருக்கே யளிக்கவேண்டுமென்று நிச்சயித்து, தமது புதல்வர்களை யழைத்து, மகாவிஷ்ணு முதலியோரிடஞ் சென்று வேள்வியில் அவிர்ப்பாகம் பெற்றுக்கொள்ள வரவேண்டுமென்று அழைத்து வாருங்களெனக் கட்டளையிட்டு அவர்களை யனுப்பிவிட்டு, தொன்றுதொட்டுச் சிறப்புற்று விளங்கிவரும் திருக்கைலாயமலைக்குச் சென்றார். திருக்கைலாயத்தையடைந்த பிரமதேவர் நந்தியெம்பெருமானால் உள்ளே அழைத்துக் கொண்டுபோய் விடப்பட்டவுடன், சர்வேசுவரனை அன்பொடு பணிந்தெழுந்து போற்றி நிற்க, கருணைக்கடலாகிய எம்பெருமான் வந்த காரிய மென்னவெனப் பிரமதேவரை வினவியருளினார். அப்போது பிரமதேவர், "திரிபுரங்களை நகைத்தெரித்த புனிதரே! அடியேன் ஒரு வேள்வியைச் செய்ய எண்ணி யிருக்கிறேன். தேவரீர் வந்து நான் செய்யப்புகும் வேள்வி இனிது முடிவுபெறும்படி யருளவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார். அதுகேட்டு இறைவன் புன்முறுவல் செய்து, "நமது உருவமேயான நந்தி அவ்விடத்துக்கு வருவான்!" எனத் திருவாய்மலர்ந்தருளி பிரமதேவருக்கு விடைகொடுத் தனுப்பினார்.

பிரமதேவர் எம்பெருமானது திருவடிகளைப் பணிந்து திருக்கைலையைவிட் டகன்று, தக்ஷமா புரத்துக்குச் சென்று, தக்ஷனை யடைந்து, "ஐயனே! தேவர்களுக்கு அவிர்ப்பாக மளிக்கும் மார்க்கத்தைத் தரும் யாகத்தைச் செய்ய யத்தனித்திருக்கிறேன். நீ தேவர் முனிவர் முதலியோருடன் அந்த யாகத்துக்கு வரவேண்டும்" எனக் கூறினார். தக்ஷன், "நல்லது. தாங்கள் முன்னேசென்று யாகத்தை ஆரம்பியுங்கள்; நாம் வந்து சேர்வோம்!" என்று பதிலளிக்க, பிரமதேவர் அந்நகர்விடுத்துத் தமது மனோவதி நகரத்தை யடைந்து யாகத்தைச் செய்ய வாரம்பித்தார்.

உடனே மகாவிஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் தக்ஷன்முன் வந்துசேர, தக்ஷன் அவர்கள் தன்னைத் துதித்துப் புடைசூழ்ந்துவரப் புறப்பட்டுத் தன் தந்தையாகிய பிரமதேவருடைய நகரத்திலுள்ள யாகசாலையை யடைய, அவர் எழுந்து ஆசிகூறி, மிகுந்த அன்பொடு தமக்கருகேயுள்ள ஓர் ஆசனத்தில் அவனை யிருத்தினார். பிறகு பிரமதேவர் மகாவிஷ்ணுவை அடிபணிந்து, அவரைத் தக்க ஆசனமொன்றிலமர்த்தி, பின்னர் மற்றவர்களெல்லோரையும் தக்க ஆசனங்களில் அமர்த்தி, தாமும் ஓர் ஆசனத்திலமர்ந்தார்.

அப்போது கைலயங்கிரியிலுள்ள எம்பெருமான் நந்திதேவரை யழைத்துக் கருணையுடன் நோக்கி, "பிரமன் செய்யும் வேள்விக்குச் சென்று, நமக்கு அவன் அளிக்கும் அவிர்ப்பாகத்தைப் பெற்றுக்கொண்டு, சீக்கிரத்தில் வருவாயாக!" எனப் பணித்தார். நந்திதேவர் எம்பெருமானது ஆக்கினையைச் சிரமேற்கொண்டு, வலிமை மிக்க நூறு கோடி பூதர்கள் தம்மைச் சூழ்ந்துவர, விடையேறும் அண்ணலை மனத்தில் தியானித்துக் கொண்டு கைலையைவிட் டகன்று சென்று, பிரமதேவரது யாகசாலையை யடைய, அவர் எழுந்து நந்திதேவரைப் போற்றி வணங்கி, அவரை நவரத்தினங்களிழைத்த பொற்பீடத்திலிருத்தி, அவருடன் வந்த பூதர்களுக்கும் ஆசனமளித்தார். நன்றிமறந்த தக்ஷன் அது கண்டு வெகுண்டு நகைத்து, "இப்பிரமன் அக்கைலாயமலையிலுள்ள சிவனுக்கு அடிமைபோலும்! நாராயணன் முதலிய தேவர்களும், இலக்குமி முதலான தேவஸ்திரீகளும் நிரம்பியுள்ள இச்சபையில், விடத்தையுண்டு பித்தனைப்போல் ஆடல்செய்யும் சிவனுக்கு ஊழியஞ்செய்யும் பூதங்களுமோ நடுவில்வந்து அமர்வது! இதுவோ தகுதியான காரியம்!" என்று சொல்லி, நந்திதேவரையும் பூதகணங்களையும் வேள்விக்கு வரும்படி அழைத்தது யாரென்று

தனது ஞானதிருஷ்டியினால் ஆராய்ந்து, அவ்வண்ணம் அழைத்தது பிரமதேவரே எனத் துணிந்து, அடங்காச் சினங்கொண்டு, பிரமதேவரை வெகுண்டு நோக்கி, "ஆதி நான்முகக் கடவுளாகிய நீ அக்கினிமுகமாக யாகம் செய்யப்போவதை ஓர் பேதையைத் தன்னுடலின் ஒருபாகத்தில் வைத்துக்கொண்ட பித்தனுக்கு உரைத்தாய்! அப்பித்தன் அனுப்பிய நந்தியை என் கண் காண அன்புடன் வணங்கிச் சபை நடுவே ஆசனத்திலமர்த்தினாய்! இவை உனக்குத் தகுதியோ? நீ என்தாதை யாதலாற் பிழைத்தாய்! இல்லாவிடில் நின் தலையைத் துணித்திருப்பேன்! அறிவிலியே! இன்னுமொன்று கூறுவேன் கேள்! சுடுகாட்டையே தன் உறைவிடமாகக்கொண்டு, பூதங்கள் தன்னைச்சூழப்பெற்று, தசைகழிந்த உடலைச் சூலத்தின்மீது ஏந்தி, தீயின் நடுவே நின்று ஆடுபவனுக்கு நீ இந்த யாகத்தில் முன்னாளிற்போல அவிர்ப்பாகம் அளிக்காதே! இன்று முதல் அவனுக்கு யாகத்தில் அவிர்ப்பாகம் கிடையாது! எலும்பையும் நாகத்தையுந் தலைமாலையையும் ஆபரணங்களாக அணிந்து, தேகமெலாம் சாம்பலைப் பூசிக்கொண்டுள்ள பித்தனோ வேள்வியில் அவிர்ப்பாகம் பெறுவதற் குரியவன்? இதுகாறும் யாவரும் சிறிதும் யோசிக்காமல் இதுவே வேதத்திற் கூறியுள்ள முறையென நினைத்துத் தூய்மையுள்ள அவிர்ப்பாகத்தை அவனுக்கு அளித்துவந்தனர். தொன்றுதொட்டு வழங்கிவருவதனாலேயே ஓர் நெறி தகுந்த நெறியாகுமோ? அவனையன்றி மற்ற தேவர்களுக்கெல்லாம் அவிர்ப்பாகம் கொடு! இன்றுமுதல் மகா விஷ்ணுவையே முதல்வராகக்கொண்டு, முதல் அவிர்ப்பாகத்தை அவருக்குக் கொடு! நீண்ட சடையையும் நெற்றிக் கண்ணையுமுடைய கடவுளே பரம்பொருள் என்று வேதத்திற் கூறியுள்ள வசனங்களை விலக்கிவிடு!" என்று கூறினான்.

இப்பாவ வசனங்களைக் கேட்டதும், நந்திகேசுவரப் பெருமான் தமதிரு செவிகளையும் கரங்களாற் பொத்திக்கொண்டு, அம்மொழிகளைக் கேட்கும்படி தம்மை எம்பெருமான் அனுப்பியதை யுன்னி மிகவும் துயருற்றுத் துக்கசாகரத்தி லழுந்தி, பிறகு அவ்வார்த்தைகளின் கொடுமையைச் சகிக்கமாட்டாமல் திடீரெனச் சினங்கொண்டார். திரிபுரங்களைச் சிரித்தெரித்த எம்பெருமானது கருணையினால் சிவ கணங்களின் தலைமைபூண் டுள்ளவரும், சிலாதமுனிவரின் இணையற்ற குமாரருமான நந்திகேசுவரர் சீற்றங்கொண்டதைக் கண்டு தேவர்கள் நடுங்கினார்கள்; யாகத்தில் அவிர்ப்பாகங்களை அவரவர்களுக்கு வாங்கிக்கொடுக்கும் தொழிலுள்ள அக்கினியும் உளம்நடுங்கினான்; அண்டங்களனைத்தும் நடுங்கின. பிரமதேவரும் மகாவிஷ்ணுவும், இடபவாகனரது பெருமையைச் சிறிதும் எண்ணாது அவருக்கு அவிர்ப்பாகங் கொடுப்பதை அகந்தையினால் தடுத்த தக்ஷனுக்கு அஞ்சி அவன் பேசிய அடாத வார்த்தைகளை நாம் மறுத்துப் பேசாமலிருந்தோம், நந்தி யெம்பெருமானோ அவைகளைச் சகிக்கமாட்டாமல் அடங்காச் சினங்கொண்டாரே, அதனால் நமக்கென்ன கேடு விளையுமோ வென்று நடுங்கினார்கள்.

அப்போது நந்திகேசுவரப் பெருமான் கண்களினின்றும் தீப்பொறி சிந்த, தக்ஷனை வெகுண்டு நோக்கி, "உமைபங்கனை நீ இகழ்ந்தாய்! ஆதி முதல்வன் உன்னை யழிக்கும்படி எனக்குக் கட்டளையிடவில்லை யாதலால் உன் வாயைக் கிழிக்காது விட்டேன். இனி ஒரு நிந்தைமொழி கூறுவாயாயினும், உன் தலையைத் துணித்துவிடுவேன். சிறந்த வேள்வியில் எம்பிரானுக்கு அவிர்ப்பாகம் கொடுக்கக் கூடாதென்று கட்டளையிட்டாயே. யாவர்க்கு மிறைவரான சிவபெருமானையன்றி, முதல் அவிர்ப்பாகம் பெறும் தகைமையுடையவர் பிரபஞ்சத்தில் வேறெவரேனும் உளரோ? சிவபெருமானுக்கு அவிர்ப்பாகம் கொடுக்காமல் வேள்வி செய்வோர் தலை அறுந்துவிழக் கடவது! சிவபெருமானது தன்மையை மதியாத தக்ஷனே! நின்னிடம் பொருந்தியுள்ள செல்வங்களனைத்தும் விரைவில் அழிந் தொழியக் கடவது! விடையேறும் எம்பெருமானை வணங்காததும் விரோதங்கொண்டு நிந்தனைசெய்த வாய் பொருந்தியதுமான நின் அற்பத் தலை யழிந்து யாவருங் காணுமாறு வேறொரு சிறுதலை உனக்கு உண்டாகட்டும்! இறைவனிடத்து அன்பில்லாத பேயே! உன்னைச் சார்ந்துள்ள தேவர்களும் ஒருகாலத்தில் ஆருயிரிழந்து எண்ணிறந்த யுகங்கள் சூரன் என்னும் அசுரனால் துன்புறுத்தப்பட்டு துயர்க்கடலில் மூழ்கியிருப்பாராக!" என்று உக்கிரமான சாபங்களை

மொழிந்து, பூதகணங்களுடன் அவ்விடம் விட் டகன்று சென்று திருக்கைலையை யடைந்து, எம்பெருமானது திருக்கோவிலின் கீழ்த்திசைத் திருவாயிலில் முறைப்படி காவலாக நின்றார்.

பிரமதேவர் நந்திகேசுவரர் கொடுத்த சாபத்தை நினைத்து நடுங்கியும் தக்ஷனது ஆக்கினைக்கு அஞ்சியும் இருதலைக் கொள்ளியிடைப் பட்ட எறும்பைப்போல் தத்தளித்து, வேள்வியை நிறுத்தினார். சிவபெருமானிடத்துத் தீர்க்க விரோதங்கொண்ட தக்ஷனும் அப்பெருமானுக்கு அவிர்ப்பாகமில்லாமல் தான் செய்ததை யுன்னிப் புன்மகிழ்ச்சி கொண்டும், நந்திகேசுவரரது சாபத்தை யுன்னி மனத்தில் அச்சமுற்றும், தேவர்கள் புடைசூழ அவ்விடம் விட் டெழுந்துசென்று தன்நகரத்தை யடைந்தான். தேவர்களும் தமக்குற்ற கொடிய சாபத்தினைநினைத்து வருந்தித் தத்தம் நகரங்களுக்குச் சென்றனர்.

(153-ம் பக்கத் தொடர்ச்சி).

யென்றும், சுத்தசூன்யமான வெட்டவெளியென்றும், வானுலகிலுள்ள தேவரில் ஒருவனென்றும், இவ்வுலகிலேயே நின்று சகலவுலகங்களும் நிலைபெறுமாறு தாங்கிநிற்கும் தம்பமென்றும் பலவிதமாகக் கூறுவதன் பொருளை யாதென்று உணருமாறு மௌனமாக நிஷ்டையிலமர்ந்து, எனது புலன்களெல்லாம் உணர்ச்சியுடையனவா யிருக்கும் காலத்தை (நின்னைச் சேவித்து வணங்கித் துதிப்பதிற் கழிக்காமல்) அவமேபோக்கி என் ஜன்மத்தைப் பாழாக்கிக் கொள்ளாமலும், முத்திவீடாகிய நின்பாதமலர்களை யடையும் மார்க்கத்தில் நிற்கவொட்டாது வஞ்சித்திழுக்கும் சப்த ஸ்பரிச ரூபரச கந்தங்களாகிய சுகம்போல் தோன்றும் பல துன்பங்களிற் சிக்கித் தியங்காமலும், பஞ்சமா பாதகங்களையும் செய்யும்படி என்னைத் தூண்டுவதும் பலவகைப்பட்ட துன்ப சாகரப் படுகுழிகளில் என்னை வீழ்த்தக் கூடியதும், உண்மையை யறியவொட்டாமல் என்னை வஞ்சித்து மயக்குவதுமான பெண்ணாசையிற் சிக்காமலும், நான் தப்பிப்பிழைப்பது எக்காலம்? [நின்!அருள் பாவியேனுக்குச் சித்திக்காவிடில், ஒருக்காலுமில்லை.]

இளங்குற்றவாளிகளின் சீர்திருத்தச் சாலை

THE REFORMATORY FOR JUVENILE OFFENDERS

"அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு."—திருக்குறள்.

நாட்டின் சட்டங்களின்படி தண்டனைக்குள்ளாக்கத்தக்க குற்றங்களைச் செய்யும் வாலிபர்களை தீய நெறிகளில் வெகுநாட் பயின்று, மனச்சாக்ஷி யென்பதைக் கொன்று அழித்து, பாபகருமங்களைச் செய்வதையே தம் மனத்துக் குகந்த தொழிலாகக் கொண்டுள்ள பாபச் செய்கைகளில் முதியோர்களுடன் சேர்த்துச் சிறைச்சாலைகளில் அடைத்து வைப்பதனால் அவ்வாலிபர்களுடைய குணம் முன்னினும் அதிகமாகக் கெட்டு, சிறுவயதிலேயே அவர்களுக்குக் குற்ற அனுபவம் முதிர்ந்து, அவர்கள் ஜனசமூகத்தின் அமைதிக்கும் பத்திரத்துக்கும் தீர்க்க விரோதிகளாக ஆகிவிடுவதால், அப்படிப்பட்ட குற்றங்களைச் செய்யும் வாலிபர்களைத் தனியாக வேறு சிறைச்சாலைகளில் வைக்கவேண்டுமென்றும், அச்சிறுவயதில் அவர்கள் குணம் ஒருவிதமாக ஸ்திரப்பட்டுப் போயிராதாகையால், அவர்கள் குணத்தைச் சீர்திருத்தஞ்செய்து, அவர்கள் வறுமையினால் களவுத்தொழிலைக் கைக்கொள்ளாது தடுப்பதற்கு அவரவர்கள் புத்திக்கேற்ற தொழிலைக் கற்றுக் கொடுக்கவேண்டுமென்றும் நாகரிகம் பெற்ற நாடுகளனைத்தும் கண்டுகொண்டு, அதற்கேற்பத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். ஆயினும், பலநாடுகளிலும் செய்யப்பட்டிருக்கும் ஏற்பாடுகள் ஒன்றுக்கொன்று மிகுந்த வித்தியாச முடையவைகளா யிருக்கின்றன. சில நாடுகளில் அச் சீர்திருத்தச்சாலைகள் சிறைச்சாலையை முற்றிலும் ஒத்திருக்கின்றன. சில நாடுகளில் அச்சாலைகளில் கட்டுப்பாடுகள் குறைவா யிருந்தாலும், வாலிபர்களின் நற்குணத்தை அபிவிருத்தி செய்வதற்குப் போதுமான ஏற்பாடுகள் செய்யப்படாம லிருக்கின்றன. மற்றும் சில நாடுகளில், அப்படி நற்குணத்தை அபிவிருத்தி செய்ய முயற்சி செய்யப்பட்டும், அம்முயற்சி பயன்படாமற் போகிறது. அதற்கு முக்கியக் காரணமென்னவெனில், சிறுவர்களின் தீ

பாலை ஊட்டுவோர்கள், பாக்கியத்தை ஊட்டுவோர்களா ?

குணங்கள் அகன்று, நற்குணங்கள் அவர்கள் மனத்தில் செழிப்புற்று வளரவேண்டுமானால் அவர்களை மெய்யன்புடன் ஆதரிக்கவேண்டும்; அவ்வாறு ஆதரிக்கத் தகுந்தவர்களாக கவர்ன்மெண்டு சீர்திருத்தச் சாலைகளில் உத்தியோகத்துக்குக் கிடைப்பது மிகவும் அரிது. ஆதலால் தான் எல்லாநாடுகளிலும் கவர்ன்மெண்டாரது முயற்சி கோரிய பலனைத் தராமற் போகிறது.

அன்பு மேலீட்டினால் இப்புண்ணிய கருமத்தைத் தமது வாழ்க்கையின் தனி நோக்கமாகக் கொண்டு, தமது சொந்தச் செலவில் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களிலுள்ள ஆல்பியான் என்னும் நகரத்தில் மிஸ்டர் ப்ளாய்டு ஸ்டார் என்னும் அறிவாளர் ஸ்தாபித்துள்ள இளங்குற்றவாளிகளின் சீர்திருத்தச் சாலையானது, அவ்விதச்சாலையை நன்கு நடத்துவதற்குரிய வழியிதுவென யாவர்க்கும் காட்டக்கூடிய ஒரு ஜோதி விளக்காய்த் துலங்குகிறது. தத்துவத்தை முற்றிலுமுணர்ந்து தமது நிகரற்ற இனிய கவிகளினால் உலகமுழுதுக்கும் அழிவில்லாத உண்மையைப் போதித்துவரும் நமது ரபீந்திரநாத் டாகோர் அச் சீர்திருத்தச் சாலைக்குச் சென்று அது நடத்தப்படும் வழியை நன்றாய்க் கவனித்து, பிறகு அதைப்பற்றி வெகுவாய்ப் புகழ்ந்து பேசுகிறார்.

மிஸ்டர் ப்ளாய்டு ஸ்டார் என்பவர் கெட்ட பையன் என்று ஒரு பிராணி உலகத்திலில்லையென்றும், நற்குணம் என்பது ஒருவனது மனத்திலுள்ள எண்ணங்கள் சுயேச்சையாக வெளியே தோன்றுவதேயன்றி, எப்படியாவது கஷ்டப்பட்டு மானிடரியல்புக்கு நேர் விரோதமான சட்டத்துக்கேற்ப நடந்துகொள்ளுவதல்லவென்றும் நிச்சயமாய் நம்பி, பத்து வருஷங்களுக்கு முன் இளங்குற்றவாளிகளைச் சீர்திருத்துவதற்காக அச் சீர்திருத்தச்சாலையை ஸ்தாபித்தார். அதுமுதல் அவர் தமது அளவற்ற அன்பினால் பல சிறுவர்களை பாவப் படுகுழிகளினின்றும் விடுவித்து, நாட்டுக்கு நன்மை புரியத்தக்க குடிகளாகச் செய்திருக்கிறார்.

அச்சாலையை ஸ்தாபிக்கும்பொழுதே மிஸ்டர் ஸ்டார் தம்மிடத்து வந்துசேரும் சிறுவர்களை முற்றிலும் நம்பி விடவேண்டுமென்று தீர்மானித்தார். ஆரம்பத்தில் "மிகவும் கெட்ட பையன்" ஒருவன் அவரிடம் வந்து சேர்ந்தான். பதின்மூன்று வயது நிரம்புவதற்கு முன்னரே அப்பையன் பலமுறை வீடுகளிற் கன்னம்வைத்துத் திருடி, கோர்ட்டாரால் தண்டிக்கப்பட்டு மிருந்தான். அந்த ஸ்திதியில் ஒருநாள் அப்பையன் எட்டு வெவ்வேறு குற்றங்களைச் செய்ததாகக் கோர்ட்டுக்குமுன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டான். நியாயாதிபதியானவர் இவனை இனித் தண்டிப்பதிற் பிரயோசன மில்லை, ஏதாவதொரு சீர்திருத்தச் சாலைக்கு அனுப்ப வேண்டுவதுதானென்று நிச்சயித்து, தமது அபிப்பிராயத்தைச் சபையில் வெளியிட்டார். அச்சமயம் அங்கு வந்திருந்த மிஸ்டர் ஸ்டார் அப்பையனைத் தம்முடைய சீர்திருத்தச் சாலைக்கு அனுப்பும்படி கேட்டுக் கொண்டார். அப்பையனது நன்னடத்தைக்குத் தாம் பாத்தியப்படுவதாக மிஸ்டர் ஸ்டார் ஒப்புக்கொண்டதின் பேரில், அப்பையனைக் கோர்ட்டார் அவர் கையில் ஒப்புவித்தார்கள். அப்பையனை அழைத்துக்கொண்டு தமது சீர்திருத்தச்சாலைக்குப்போய்ச் சேர்ந்ததும், மிஸ்டர் ஸ்டார் அப்பையனை நோக்கி, "இங்கே பார் அப்பா! ஹாரல்டு! நீ என் குடும்பத்தில் ஒருவனாகிவிட்டாய். நான் இவ்வீட்டுக் கதவுகளைப் பூட்டுவதே கிடையாது. என் கையிலுள்ள ரொக்கத்தை யெல்லாம் இச்சொருகு பெட்டியில்தான் வைத்திருக்கிறேன். அதன் சாவி எங்கேயோ தொலைந்து போய்விட்டது. உனது படுக்கையறை மெத்தையி லிருக்கிறது. இரவில் நீ எழுந்திருந்து அச்சொருகு பெட்டியிலுள்ள பணத்தை யெடுத்துச் சொக்காய்ப் பையிற் போட்டுக்கொண்டு எவருமறியாமல் வீட்டை விட்டு வெளியே போக முயலுவாயாகில் உன்னைத் தடுக்கக்கூடியது ஒன்றுமில்லை. ஆனால் நீ அப்படிச் செய்யமாட்டாயென்று எனக்குத் தெரியும்" என்றார்.

அவ்வார்த்தைகளைக் கேட்டதும், அப்பையன் முகத்தில் அத்தியாச்சரியத்தின் குறிகள் தோன்றின. அவன் கணநேரம் மௌனமாயிருந்து, பிறகு, 'அப்படியா? சரி! நீர் என்னிடம் நியாயமாய் நடந்துகொண்டால், என்னாலும் உம்மிடத்தில் நியாயமாய் நடந்து கொள்ள முடியுமென்றே நினைக்கிறேன். இதற்கு முன் எவரும் என்னை நம்பியதில்லை!" என்றான். அன்றுமுதல் இன்றுவரையிலும் ஹாரல்டு என்னும் அப்பையன் கணநேரமேனும் அவ

பாலோடாயினும் காலம் அறிந்து உண்.

ருக்குத் தண்டம் விளைவித்ததே கிடையாது. அவன் மிஸ்டர் ஸ்டாரினிடம் வந்து சேர்ந்த ஒரு வருஷத்துக்கெல்லாம், பல பாடசாலைகளிலும் படிக்கும் பையன்கள் யாவரும் கூடியவிடத்தில் எல்லா விஷயத்திலும் சிறந்த பையனுக்கு வருஷந்தோறும் கொடுக்கும் கோப்பையானது அங்கு கூடியிருந்தவர்களிற் பெரும்பான்மையோர் இஷ்டத்துக் கிணங்க அவனுக்குக் கொடுக்கப்பட்டது. அது நடந்து ஏழு வருஷங்களாயின. இப்போது ஹாரல்டு அச்சீர்திருத்தச் சாலையில் மிஸ்டர் ஸ்டாருக்கு வலது கையாக இருந்து உதவிசெய்து வருகிறான்.

ஒருநாள் ஒருவர் மிஸ்டர் ஸ்டாரினுடைய சீர்திருத்தச் சாலையைப் பார்க்கவந்தவர் தாம் அதற்குமுன் பார்த்துவிட்டு வந்த ஒரு சீர்திருத்தச் சாலையைப்பற்றிப் பேச ஆரம்பித்து, கன்னக்கொள்ளை, கூடலேகை (போர்ஜரி) முதலிய பெரிய குற்றங்களைச் செய்த குற்றவாளிகள் கூட அச்சீர்திருத்தச் சாலைக்கு அனுப்பப்பட்டு வந்ததாகச் சொன்னார். அவர் அவ்விஷயத்தைச் சொல்ல ஆரம்பித்ததும், அவ்வறையில் களையுள்ள முகத்துடன் நின்றுகொண்டிருந்த ஒரு பையன் முகவாட்டமடைந்து கடைசியாக அவ் அறையைவிட்டு வெளியே சென்றதை அவர் கவனித்து, அதற்குக் காரணமென்னவென்று மிஸ்டர் ஸ்டாரைக் கேட்டார். அப்பையன் கூடலேகை செய்து திருடியவனென்று மிஸ்டர் ஸ்டார் சொன்னதும், வந்தவர் மிகுந்த ஆச்சரியத்துடன் அவரை நோக்கி, "தாங்கள் ரயில்வே ஸ்டேஷனுக்கு என்னை எதிர்கொள்ள வந்தபோது, தங்கள் வண்டியில் இப்பையன்தானே இருந்தான்?" என்றார். ஆம் என்றார் மிஸ்டர் ஸ்டார். "தாங்கள் இவனைப் பாட்டுக் கற்றுக்கொள்வதற்காக நடுவழியில் இறக்கிவிட்டு, அவன் இங்கு வந்துசேர வண்டிச் செலவுக்கும் கொடுத்தீர்களே; அது அபாயகரமானதல்லவா? அவனை அவ்வளவு தூரம் நம்புவது தகுதியா?" என்று கேட்டார்.

"கணநேரமாயினும் நான் அவனிடத்திற் சந்தேகப்படுமாறு அவன் இதுவரையில் நடந்துகொண்டதே யில்லையாகையினால் நான் அவனை நம்புகிறேன். அவன் இங்கு வந்து சேர்ந்து ஆறுமாதங்களாயின. இதுவரையில் அவன் நடத்தை மிகவும் வியக்கத் தக்கதாயிருந்துவருகிறது. இங்குள்ளவர்களில் மிகவும் நல்லபையன்களில் அவன் ஒருவன்" என்றார் மிஸ்டர் ஸ்டார்.

வந்தவர் அந்தப் பையனது பூர்வவிருத்தாந்தமென்னவென்று கேட்க, மிஸ்டர் ஸ்டார் பின்வருமாறு கூறினார்:— "இப்பையன் பெயர் ரால்ப். இவன் தகப்பனார் இவன் தாயாரைக் கைவிட்டுவிட்டு எங்கேயோ போய்விட்டான். தன்னையும் தன் பிள்ளையையும் காப்பாற்றிக்கொள்ளவேண்டிய கடமை அவள் தலைமீது வந்து இறங்கிற்று. வெளியே வேலை செய்யச் சென்றதுமல்லாமல், அவள் தன் வீட்டிலுள்ள அறைகளைக் குடிக்கூலிக்கு விடும்படியும் நேர்ந்தது. ஆகையினால் தன் மகனைக் கவனிக்க அவளுக்குப் பொழுதே யில்லாமற் போயிற்று. அவன் பள்ளிக்கூடத்துக்குச் சரிவரப் போகாமல், தன்னைப்போலவே வீட்டில் தங்களை நல்வழிப் படுத்துவாரற்ற சிறுவர்களுடன் சேர்ந்துகொண்டு, பல அக்கிரமங்களைச் செய்து பலமுறை நியாயசபைக்குக் கொண்டுபோகப்பட்டான். அவனுக்கு நல்ல உடைகளில் மிகுந்த பிரியமுண்டு. ஆனால் அதற்கு வேண்டிய பொருள் அவன் கையிலில்லாமையால், அவன் செக் (Cheque) ஒன்று கூடலேகை (போர்ஜரி) செய்து, அதைக் கொடுத்துப் பணம் வாங்கிக்கொண்டு எங்கேயோ ஓடிப்போய்விட்டான். கொஞ்சகாலங் கழித்து அவன் அகப்பட்டுக்கொண்டான். அப்போது நியாயாதிபதி அவனைச் சொற்பத் தண்டனையுடன் விட இஷ்டப்படாமல், அவனைக் கவர்ன்மெண்டாரது சீர்திருத்தச்சாலைக்கு அனுப்பவேண்டுமென்று நிச்சயித்தார். அப்போது அப்பையனுக்கு வேண்டியவர்கள் என்னை மன்றாடிக் கேட்டுக் கொண்டதின்பேரில், நான் என் சீர்திருத்தச்சாலைக்கு அழைத்துக் கொண்டுவரச் சம்மதித்தேன். ஆனால் அவனை இங்கு அழைத்து வருமுன் நான் அவனை நோக்கி, 'ரால்ப்! நான் உன்னிடம் பூரண நம்பிக்கை வைப்பதாக உத்தேசித்திருக்கிறேன். நீ என்னிடத்தில் யோக்கியமாயும் நியாயமாயும் நடந்து கொள்வாயா?' என்று கேட்டேன். 'அப்படியே நடந்து கொள்வதாக வாக்களிக்கிறேன்!' என்று ரால்ப் பதிலுரைத்தான். அவன் செய்த வாக்குறுதியினின்றும் சிறிதும் வழுவாது நடந்துகொண்டிருக்கிறான்."

பால் இருக்கிறது, பாக்கியம் இருக்கிறது, பாலிலே போட்டுக் குடிக்கப் பத்துப் பருக்கைக்கு வழியில்லை.

மிஸ்டர் ஸ்டார் ஸ்தாபித்துள்ள சீர்திருத்தச் சாலையில் வந்துசேரும் வாலிபர்கள் தங்கள் காரியங்களைத் தாங்களே செய்துகொண்டும் தங்கள் பிழைகளுக்காகத் தங்களைத் தாங்களே தண்டித்துக்கொண்டும் மிகுந்த சுதந்தரமுடையவர்களாயிருப்பதனால், அச்சாலைக்கு "ஸ்டார் குடியரசுதரணி" என்று பெயரிடப்பட்டிருக்கிறது. அதிலுள்ள பையன்கள் அவர்களுடைய மரியாதைக்கும் நல்லொழுக்கத்துக்கும் யாவராலும் புகழப்படுகிறார்கள்.

ஆயின், அதிலுள்ள சிறுவர்கள் யாதொரு தொந்தரவுஞ் செய்வதில்லையாவென்ற கேள்வி பிறக்கக்கூடும். அதற்குப் பிறக்கும் பதில், தொந்தரவு செய்யத்தான் செய்கிறார்கள், இல்லாவிட்டால் அவர்களைப் பையன்களென்று எப்படிச் சொல்வது, என்பதுதான். ஆனால் அவர்களால் ஏற்படும் தொந்தரவு எங்கும் சிறுவர்களால் ஏற்படும் தொந்தரவேயன்றி அதைவிட அதிகமல்ல. எப்போதாவது அங்குள்ள சிறுவர்கள் இரண்டு மூன்று பேர்கள் சேர்ந்துகொண்டு திரிவதன்மேல் ஆசையுள்ளவராய் அச்சாலையைவிட்டு ஓடிப்போவதுண்டு. ஆனால் சில நாட்களுக்கெல்லாம் திரும்பவும் போலீஸ்காரர்களால் பிடிக்கப்பட்டு, அச்சாலைக்குத் திரும்பவும் கொண்டு வரப்படுவார்கள். அவர்கள் அவ்வாறு திரும்பிவந்தபின், அவர்கள் ஓடியதற்காக அவர்கள் சுதந்தரத்தை எவ்விதத்திலாவது குறைத்துத் தண்டிப்பது வழக்கமில்லை. மிஸ்டர் ஸ்டார் அவர்களைத் தனிமையிலழைத்துப் போய் அவர்கள் செய்த பிழையை அவர்களுக்கு எடுத்துக் காட்டுவாரேயன்றி, வேறு போதகர்கள் அவ்விஷயத்தைக் குறித்து அவர்களை யாதொன்றும் கேட்பதில்லை. அங்குள்ள பையன்களின் சபை, சில சமயங்களில் அவர்களுக்கு ஏதாவது தண்டனை விதிப்பதுண்டு.

பலமுறை குற்றங்களைச் செய்து நியாயசபைக்குக் கொண்டுபோய்த் தண்டிக்கப்பட்ட வாலிபர்கள் தீயநெறியை யொழித்து நன்னெறியில் நிற்பதற்குக் காரணமென்னவென்று ஆராய்ந்து பார்ப்போம். மிஸ்டர் ஸ்டார் அப்பையன்களிடத்தில் நடந்துகொள்வது மிகவும் வியக்கத்தக்கதாயிருக்கிறது. அவர் அப்பையன்களிடத்திற் பூரணநம்பிக்கை வைப்பதுமன்றி, அவர்களைத் தமது சொந்தப் புதல்வராகக் கருதி அன்புபாராட்டி வருகிறார். ஸ்டார் குடியரசுதரணியானது சீர்திருத்தச் சாலையாக விராமல், அவ்வாலிபர்களுக்குச் சொந்தவீடாக இருக்கிறது. ஒவ்வொரு பையனுக்கும் அவன் பிறந்தநாளன்று ஞாபகச் சின்னமாக தக்க பரிசொன்று அளிக்கப்படுகிறது. அடிக்கடி அவர்களுக்குப் பக்ஷணங்களும் பணியாரங்களும் செய்து கொடுக்கப்படுகின்றன. அவர்கள் நன்னெறி தவறாதிருக்கும்வரையில், அவர்கள் தத்தம் புத்திக்கேற்றபடி நடந்துகொள்ளுவதை எவரும் தடுப்பதில்லை. பையன்களுக்கு ஒரே விதமான உடைகளைக் கொடுப்பது அவர்களுடைய புத்தியின் இயற்கையான அபிவிருத்தியைத் தடுக்குமென்று அபிப்பிராயப்பட்டு, மிஸ்டர் ஸ்டார் ஒவ்வொரு பையனுக்கும் அவன் மனத்துக்கிசைந்த உடையை வாங்கித்தருவது வழக்கமாயிருக்கிறது. தங்களிடம் இவ்வளவு அன்புபாராட்டிவரும் மிஸ்டர் ஸ்டாரிடத்தில் அப்பையன்களுக்குள்ள விசுவாசத்துக்கு அளவேயில்லை. அவர் தூரத்தில் போவதைக் கண்டாலும், அப்பையன்கள் குதூகலத்துடன் "பளாய்டு மாமா!" என்று கூவிக் கரகோஷம் செய்வார்கள்.

மிஸ்டர் ஸ்டார் அவர்களை அவ்வளவு அன்புடன் நடத்திவருவதால், அவர்கள் தங்களில் எவரும் அவர் ஏற்படுத்தியிருக்கும் சீர்திருத்தச் சாலைக்கு அவமானம் விளைவிக்கத்தக்கதாய் யாதொன்றும் செய்யக்கூடாதென்று கட்டுப்பாடு செய்துகொண்டு, தவறி நடப்பவர்களைத் தாங்களே தண்டிக்கிறார்கள்.

பையன்களை நல்வழிப்படுத்த முயலும்போது, அவர்கள் அதற்கு எவ்வித உதவிபுரிய வேண்டுமென்றும் ஏன் புரியவேண்டுமென்றும் தெளிவாய் எடுத்துரைத்தால், அவர்கள் மனப்பூர்வமாக அவ்வுதவி புரியத் தயாராயிருப்பார்களென்று அறிவாளர் பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். சீர்திருத்தஞ் செய்யப்படவேண்டுவது பையனைச் சூழ்ந்துள்ள பொருள்களும் மனிதர்களுமேயன்றி பையனல்லவென்றும், பையனது குணத்தைச் சீர்திருத்துவதற்குப் பையன்தான் மிகுந்த இஷ்டமுள்ளவன் என்றும் உணர்ந்திருந்துகொண்டு, அக்கோட்பாடு

பால் தொட்டுப் பால் கறக்கவேண்டும்.

களுக்கியைய நடந்துகொண்டால்தான் இளங்குற்றவாளிகளின் சீர்திருத்தச் சாலைகள் கருதிய பலனைத் தருமெனவும் அவ்வறிவாளர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

நமது தேசத்திலும் பொங்கிப் பெருகும் அன்பினையுடைய பெரியோர்கள் இளங்குற்றவாளிகளைச் சீர்திருத்த முன்வந்து, சொந்தச் செலவிலோ பொதுஜனச் செலவிலோ ஸ்டார் குடியரசுதரணியைப் போன்ற சீர்திருத்தச் சாலைகளை ஸ்தாபித்து, அனுபவத்தினால் மிஸ்டர் ஸ்டார் சிறந்ததெனத் தெளிந்துகொண்ட நெறியில் நின்று, சிறுவர்களைப் பாவ நெறியினின்றும் அன்பினாற் கவர்ந்திழுத்துக் காப்பாற்றி நாட்டுக்கு நன்மை புரியவேண்டுமென ஈசன் திருவருளைப் பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீரங்கம்.—தென்னிந்தியாவில் நீர்வளமும் நிலவளமும் பொருந்திய சிறந்தநாடு சோழ நாடல்லவா? அந்நாட்டிற்கு அவ்வளவு செழிப்பு, அதன் வழியாய் ஓடுகிற காவேரி யாற்றினாலுண்டாயிற்றேயன்றி வேறல்ல. அவ்வாற்றினிருகரையும் செடிகளும் மரங்களும் பசுமையாய்த் தழைத்திருக்க, நடுவில் அந்த நதி வெளுத்தோடுவதைப் பார்த்தால், இரண்டோரங்களிலும் பச்சை நாடா தைத்த வெண்பட்டுபோல் கண்ணுக்கு வெகு நேர்த்தியாயிருக்கின்றது. அது திரிசிரபுரத்திற்கு மேற்கே சுமார் பத்துமைல் வரையில் ஒன்றாய் ஓடிவருகின்றது. அங்கே அதற்கு அகண்ட காவேரி யென்று பெயர். அந்த நதி அங்கிருந்து இரண்டாய்ப் பிரிந்து கொஞ்சதூரம்வரையில் பிரவஹித்து மத்திய பூமியை ஒரு தீவாக்கி மறுபடியும் ஒன்றாய்ச் சேருகின்றது. அப்படி நாற்புறமும் காவேரியாற்றால் சூழப்பட்ட தீவிலே ஹிந்துக்கள் மேலாகக் கொண்டாடு ஸ்ரீரங்கமென்றொரு புண்ணிய ஸ்தலமும், அதன் மத்தியில் ஒரு சிறந்த தேவாலயமுமுளது. அக்கோயிலைச் சுற்றி ஏழு பிராகாரங்கள் உண்டு. அவைகளுள் முதல் பிராகாரத்துக்கு அடையவளைந்தானென்று பெயர். அது சுமார் நான்குமைல் சுற்றளவுள்ளது. அந்த ஆலயத்துக்குத் தென்னண்டை வாயில் தான் முதன்மையானது. முதல் பிராகாரத்தின் தென்னண்டை வாயிலுக்கு ராயகோபுரமென்று பெயர். அந்த வாயில் மிகவும் விசாலமானது.

மிஸ்டர் "புஸ்ஸிபுட்" ஜான்ஸன்

Mr. "PUSSYFOOT" JOHNSON

அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் மதுபான விலக்கு இயக்கத்தில் முக்கியஸ்தராயிருந்த மிஸ்டர் "புஸ்ஸிபுட்" ஜான்ஸன் நமது தேசத்துக்குவந்து அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள் மதுபானத்தை விலக்கியது எதற்காகவென்பதையும், அதை விலக்குவதால் தமது நாட்டுக்கு ஏற்பட்ட நன்மைகள் என்னவென்பதையும் விவரமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்துவருவது யாவர்க்கும் தெரிந்த விஷயமே. நமது நாட்டவர்கள், தமது இயற்கையான சுபாவத்தினாலும், தொன்றுதொட்டு வழங்கிவரும் வழக்கங்களினாலும் மதுபான விலக்கானது நாடு நல்ல ஸ்திதியிலிருப்பதற் கவசியமென நம்புகிறார்களாதலால், அமெரிக்காவிலுள்ளவர் மதுபானத்தை விலக்கியதற்குரிய காரணங்களை யறிந்துகொள்ள நமது நாட்டவர்கள் விருப்பமுள்ளவராயிருப்பார்களென்று நம்பி, அவைகளைத் தெரிவிப்பதற்காக மிஸ்டர் ஜான்ஸன் நமது நாட்டுக்கு வந்திருக்கிறார்.

மிஸ்டர் ஜான்ஸன் சுமார் அறுபது வருஷங்களுக்கு முன் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் ந்யூயார்க் என்னும் மாகாணத்திலுள்ள சிறு கிராமமொன்றிற் பிறந்தார். அவருடைய முன்னோர் இருவர்க்கத்தினர்களும், 200 வருஷங்களுக்குமுன் இங்கிலாந்திலிருந்து வந்து அமெரிக்காவிற் குடியேறினவர்கள். அவருடைய பாட்டனார் கனெக்டிகட் என்னும் ஊரிலிருந்தவர் ந்யூயார்க் நகரத்துக்கு நிலம் வாங்குவதற்காகச் சென்று திரும்பிவந்து பார்க்கையில், தாம் தமது சகோதரர் கையில் ஒப்புவித்துவிட்டுப் போன தமது மொத்தக் கைமுதல் முந்நூறு டாலர்களையும் அவர் மதுபானத்திற் செலவழித்துவிட்டதாகக் கண்டார். தமக்கு அவ்வளவு கெடுதிவிளைவித்த மதுபானத்தின் மீது தீர்க்க விரோதங்கொண்ட அப்பாட்டனாரிடமிருந்து அதன்மீது அதே அளவு விரோதத்தை மிஸ்டர் ஜான்ஸன் பிதுரார்ஜிதமாக அடைந்தார்.

சுமார் முப்பது வருஷங்களுக்கு முன், நெப்ராஸ்கா என்னும் மாகாணத்தில் மதுபானத்தை விலக்குவதற்காகப் பெருமுயற்சி நடந்தது.

பால் நக்காத பூனையும் பரிதானம் வாங்காத பிராமணனும் உண்டோ?

மதுவியாபாரிகள் உயர்ந்த ஸ்திதியிலும் தாழ்ந்த ஸ்திதியிலுமுள்ள பல மனிதர்களுக்கு இலஞ்சம் கொடுத்து, மதுவிலக்குச் சட்டம் நிரூபிக்கப்படுவதை எவ்வளவு காலம் தாமதப்படுத்த முடியுமோ அவ்வளவு காலம் தாமதப்படுத்த வேண்டுமென முயன்றனர். அவர்கள் அவ்வாறு லஞ்சம் கொடுத்துவந்ததை நிரூபிக்கத்தக்க சாக்ஷியங்களைச் சம்பாதித்து, அவைகளை யாவர்க்குங்காட்டி, யாவர்க்கும் அவர்கள் மீது அருவருப்பு உண்டாக்குவதே மதுவிலக்குச் சட்டத்தை நிரூபிக்கச் செய்வதற்குச் சிறந்த மார்க்கமெனத் தெளிந்து, மிஸ்டர் ஜான்ஸன் தமது மாகாணத்தில் மதுபானத்தை விலக்க முயற்சி செய்துவந்தவருடைய நோக்கம் நிறைவேறாமற் போகும்படி செய்வதற்குத் தாம் முயன்று வந்ததாகவும், தங்கள் தங்கள் மாகாணங்களில் அவர்கள் மதுவிலக்குக் கக்ஷியாரைத் தோல்வியடையச் செய்வதற்கு என்னென்ன செய்தார்களென்று தமக்குத் தயவுசெய்து தெரிவிக்கவேண்டுமென்றும் பல மாகாணங்களிலுமுள்ள மதுவைச் செய்வோருக்கும், மதுவை மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்போருக்கும் தாம் ஒரு மதுவியாபாரியைப்போல நடித்துக் கடிதங்களெழுதினார். அவர்களெல்லாரும் அவர்செய்த சூதையறியாது, தத்தம் மாகாணங்களில் தாங்கள் இராஜாங்க விஷயங்களைப்பற்றிப் பிரசங்கம் செய்வோருக்கும் சட்ட நிருபணசபை மெம்பர்களுக்கும் பத்திராதிபர்களுக்கும் இலஞ்சங்கொடுத்து வசப்படுத்திக்கொண்ட விதத்தைக் கடிதங்கள் மூலமாகத் தெரியப்படுத்தினார்கள். மதுவியாபாரத்தைக் கெடுக்கப் போதுமான அளவு சாக்ஷியங்கள் கிடைத்தவுடன், அவர் அக்கடிதங்களை ந்யூயார்க் கால், லிங்கல்ன் கால் என்னும் இருபத்திரிகைகளிலும் பிரசுரம் செய்தார். அவ்வாறு அவர் செய்ததனால் கஷ்டமடைந்தவர்கள் தங்கள் செல்வாக்கினால் அப்பத்திரிகைகளை நெப்ராஸ்கா மாகாணத்திற்பரவவொட்டாது தடுத்துவிட்டார்கள். ஆனால் மிஸ்டர் ஜான்ஸன் அதனாற் சிறிதும் தயக்கமடையாது, நெப்ராஸ்காவில் தாமே ஒரு பத்திரிகையைப் பிரசுரஞ் செய்ய ஆரம்பித்து, அதன் மூலமாக மேற்கூறிய அயோக்கியத்தனத்தைத் தமது மாகாணத்தவருக்கும் நாட்டவருக்கும் வெளிப்படுத்தினார்.

1906-ம் வருஷத்தில் ஐக்கிய மாகாணங்களின் தலைமை கவர்ன்மெண்டார் அமெரிக்காவின் ஆதிவாசிகளான சிவப்பு இந்தியர்கள் வசித்துவந்த பாகத்தில் மதுவிற்பனையை நிறுத்துவதற்கு வேண்டிய புத்திகூர்மையும் மனோதைரியமும் மிஸ்டர் ஜான்ஸன் ஒருவருக்குத்தாம் உண்டென்று நிச்சயித்து, அவரையழைத்து தமக்கு இஷ்டப்பட்ட வேலைக்காரர்களை நியமித்துக்கொண்டு தமக்கு உசிதமாகத் தோன்றிய செலவைச் செய்துகொண்டு அங்கே மது விற்பனையை எப்படியாவது நிறுத்தும்படி சொல்லி, வேண்டிய அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்தார்கள். அவ்வபாயகரமான உத்தியோகத்தை அவர் ஒப்புக்கொண்டு, தமது பிராணனுக்கே மோசம் வந்துவிடும்போல் தோன்றிய சந்தர்ப்பங்களிலும் சிறிதும் மனந்தளராதிருந்த, சாதுரியத்துடனும் தைரியத்துடனும் வேலைசெய்து கொடிய அயோக்கியர்கள் பலரை ஏமாற்றிப் பிடித்துத் தண்டனைக்காளாக்கி, மதுவிற்பனையை நிறுத்துவதற்காக காங்கிரஸ் நிருபித்த சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்து, அதுவரையில் எவராலும் நிறைவேற்ற முடியாத காரியத்தைச் சாதித்தார். அப்படி அயோக்கியர்களைப் பிடித்துவருகையில், ஒருநாள் அவர் தம்மைத் தொலைத்துவிடுவதாக ஜம்பமாகச் சொல்லிக்கொண்டு திரிந்த ஒரு மதுவியாபாரியின் கடைக்குச்சென்று, நிரம்பக்குடித்துப் போதையிலிருந்தவனைப்போல நடித்து அவனை மயக்கி, அவன் ஒளித்து வைத்திருந்த மதுவை எடுக்கும்படிசெய்து, அவன் அப்புறம் திரும்பியிருந்த தருணத்தில் மேசையின்பேரில் அவன்வைத்த அவன் துப்பாக்கியையெடுத்து அவன்மீது குறிபார்த்து வைத்துக்கொண்டு, அவனைப் பிடித்துக் கைதுசெய்தார். பூனை எலியைப் பிடிப்பதுபோல் அவர் தமது சாகசத்தினால் அவனைப்பிடித்தாராகையால், அவரை அன்றுமுதல் யாவரும் "பூனைக்கால்" ஜான்ஸன் என்று அழைக்கலாயினர்.

சிவப்பு இந்தியர்கள் வசிக்கும் பாகத்தில் மது வியாபாரத்தை நிறுத்தியபின், மிஸ்டர் ஜான்ஸன் மதுபானவிலக்கானது யாவர்க்கும் நன்மைபுரியும் என்னும் உண்மையை எளிதில் விளக்கிக்காட்டக்கூடிய சமாசாரங்களைச் சேகரிப்பதிலும், அவைகளைப் பிரசங்கங்கள் மூல

பால் பசுவைக் கன்றிலே தெரியும், பாக்கியவான் பிள்ளையை முகத்திலே தெரியும்.

மாகவும் சிறுபுத்தகங்கள் மூலமாகவும் யாவர்க்கும் எடுத்துரைப்பதிலும் தமது காலத்தைச் செலவழித்து, நாடுமுழுவதுக்கும் மதுபான விலக்குச்சட்டம் நிருபிக்கப்படுவதற்குத் தகுந்தவாறு தமது நாட்டவருக்குப் போதித்துவந்தார். மதுபான விலக்குச் சங்கத்தார் அவரது திறமையைக்கண்டு மிகவும் மெச்சினவராய், 1918-ம் வருஷத்தில் அமெரிக்காவில் அச்சட்டம் நிருபிக்கப்பட்டவுடன், உலகமுழுவதும் மதுபானத்தை விலக்கும்படி செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் அவரை ஐரோப்பாவுக்கு அனுப்பினார்கள். மிஸ்டர் ஜான்ஸன் தமது சங்கத்தாருக்கு லண்டனில் தலைமை ஆபீசு ஏற்படுத்தச் சென்றபோது, மதுவியாபாரிகள் அமெரிக்கா தேசத்தவராகிய மிஸ்டர் ஜான்ஸன் இங்கிலாந்தின் காரியங்களில் தலையிட்டுக்கொள்ள முயலுவது இங்கிலாந்துக்குப் பெரிய அவமதிப்பென்று வஞ்சகமாய்ப் போதித்து, லண்டன் நகரமெங்கும் "பூனைக்கால்" ஜான்ஸன் இங்கிலாந்தின் காரியங்களில் தலையிட்டுக் கொள்வதற்காகத் திருட்டுத்தனமாய் அட்லான்டிக் மகாசமுத்திரத்தைக் கடந்து வருவதுபோல் விநோதச் சித்திரப்படங்கள் ஒட்டிவைத்திருந்தார்கள்.

மிஸ்டர் ஜான்ஸன் எஸ்ஸெக்ஸ் ஹால் என்னுமிடத்தில் மதுபான விலக்கைப்பற்றிப் பிரசங்கஞ்செய்ய ஆரம்பித்தபோது, அங்கு கூடியிருந்த மாணாக்கர்கள் கூச்சலிட்டு அவரைப் பேசவொட்டாது தடுத்து, அவரைக் கிங்ஸ் காலேஜுக்குக் கொண்டுபோய், குடிப்பதற்கு அவருக்குச் சாராயங் கொடுத்து, அவர் அதை மறுத்தபின் அவரைத் தூக்கிக்கொண்டு, லண்டனில் தனவந்தர்கள் வசிக்கும் பாகமான வெஸ்ட்எண்டின் தெருக்களின்வழியே ஊர்வலம் சென்றார்கள். அப்போது யாரோ ஒருவர் மிஸ்டர் ஜான்ஸன்மீது கல்லைவிட்டெறிய, அது அவர் இடதுகண்ணிற் பட்டது. காயம் மிகவும் பலமானதாயிருந்ததால், அந்தக் கண்ணையே எடுத்துவிடும்படி நேர்ந்தது. அதைக்கண்டு லண்டன் நகர வாசிகள் மிகுந்த துயருற்று, அவருக்குப் பொதுச்செலவில் விருந்தளித்து, வெஸ்ட்மின்ஸ்டர் அப்பியில் கூட்டங்கூடி அவருக்கு நேர்ந்த விபத்துக்காக இங்கிலாந்து ஜனங்களின்மேல் வருத்தப்பட்டுக்கொள்ளக் கூடாதென அவரை வேண்டிக்கொண்டார்கள்.

அமெரிக்காவின் மதுபானவிலக்கு இயக்கத்தின் கதையை மிஸ்டர் ஜான்ஸன் எடுத்துரைப்பதின் சாரமென்னவென்றால்:— ஆரம்ப முதல் கடைசிவரையில் ஜனங்கள்தாம் மதுபானச் சாபத்தை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அமெரிக்க ஜனங்களில் வெவ்வேறு வகுப்பினர் வெவ்வேறு காரணங்களுக்காக அவ்வியக்கத்தை ஆதரித்தார்கள். அநேக சம்பள ஆட்களை வைத்துத் தொழில் நடத்துபவர் மதுவானது தங்கள் வேலைக்காரர்களின் வேலைத்திறமையைக் குறைத்ததனாலும், தொழிலாளிகள் அது போதையுண்டாக்கித் தங்களை யந்திரங்களிற் சிக்கவைத்து தங்கள் அங்கங்களைக் குறைத்தும் உயிரை மாய்த்தும் கெடுதி செய்ததனாலும், அவர்களுடைய பெண்பிள்ளைகள் அது அவர்களைத் தங்கள் பெண்சாதிகளை யடித்து, குழந்தைகளைமறந்து, பொருளைப் பாழாக்கும்படி செய்ததனாலும், போலீஸ்காரர்களும் மாஜிஸ்டிரேட்டுகளும் அது கொடிய குற்றங்களுக்குத் தாயாக விருந்ததனாலும், இன்னும் பலர் மற்றும் பல காரணங்களுக்காகவும் அதை ஆதரித்தனர். மதுபான விலக்கினால் ஜனங்கள் ஆரோக்கியத்துடன் செல்வமாகவும் மரியாதையாகவும் வாழ்ந்துவருகின்றனர். குழந்தைகள் தகப்பனால் கவனித்து வளர்க்கப்படுகின்றன ; குற்றங்கள் குறைந்துவிட்டன ; பாங்குகளுக்கு வேலை அதிகரித்துவிட்டது. மிஸ்டர் ஜான்ஸனது பிரசங்கங்களின் சாரம் இதுவே. நமது நாடு அப்படிப்பட்ட நல்ல ஸ்திதிக்கு என்று வருமோ ?

Rao Bahadur late Mr. L.C. Williams Pillai Retired Inspector of Schools.— * * a *very readable journal full of interesting matter written in chaste Tamil.* As a means of disseminating valuable information on various subjects among the masses, it deserves the liberal support of the educated public.

M. S. H. Thompson, Esq., B. A., (Assistant Inspector of Schools).—* * I have looked through this *interesting magazine.* The Magazine is written in *simple, but good Tamil.*

நமது சிறு கதை

OUR SHORT STORY

(137-ம் பக்கத் தொடர்ச்சி.)

நான்காவது அத்தியாயம்

பழியகற்றப் பெருமுயற்சி

பல்லாவரத்தில் புஷ்ப பவனத்தில் ஒருநாள் சாயங்காலம் சூரியன் அஸ்தமன மானபின், தோட்டக்காரனான கண்ணுசாமி பிள்ளையும் காஞ்சீபுரம் ஏகாம்பரநாதமுதலியாரும் புஷ்பச் செடிகளைப் பற்றியும் கொடிகளைப்பற்றியும் மிகவும் இரசமாகச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். கண்ணுசாமி பிள்ளைக்கு புஷ்பச் செடி கொடிகளை வைத்து வளர்ப்பதைத் தவிர வேறு நோக்கம் வாழ்க்கையிற் கிடையாது. அவைகளைப்பற்றிப் பேச ஆரம்பித்து விட்டால், அவர் ஓயவேமாட்டார். ஆகாரநித்திரையின்றி இரவும் பகலும் மூச்சுவிடாமற் பேசுவார். கண்ணுசாமி பிள்ளையும் காஞ்சீபுரம் ஏகாம்பரநாதமுதலியாரும் அவைகளைப்பற்றிப் பேசத்தொடங்கி இரண்டு நாட்கள் முழுவதுங் கழிந்து, அன்று மூன்றாவது நாள் ; ஆயினும் அவர்கள் பேச்சு, சுவாரஸ்யத்திற் சிறிதுங் குறைவில்லை. இவ்விஷயத்தில் தன்னைப்போலவே அவ்வளவு துறையெடுத்துக் கொள்பவர்களை கண்ணுசாமி பிள்ளை கண்டதில்லை யாதலால், தான் ஏகாம்பரநாத முதலியாரை இரண்டு நாட்களுக்கு முன்புதான் தெரிந்துகொண்டானெனினும், அவரிடத்தில் பலநாட் பழகிய நட்புக்கொண்டு அவரைத் தன் உடன்பிறந்தவராகக் கருதினான்.

புஷ்பச் செடிகொடிகளைப் பற்றி வெகு தாராளமாய்ப் பேசுவானே யெனினும், கண்ணுசாமி பிள்ளை மற்றைய விஷயங்களைப்பற்றி மிகவும் அடக்கமுள்ளவன். ஆகையினால் புஷ்ப பவனத்தின் எஜமானனைப்பற்றி ஏகாம்பரநாத முதலியார் விசாரித்தபொழுது இரண்டொரு வார்த்தை சொல்லிவிட்டுப் பேச்சை மாற்றி விட்டான். யாதொரு சந்தேகத்தினாலும் அப்படிச் செய்யவில்லை ; அதுவே அவனது வெகு காலத்திய வழக்கம். ஆகையினால், ஏகாம்பரநாத முதலியாருக்கு அப்பங்களாவில் வசித்து வந்த சுரோத்ரியந்தார்களைப்பற்றி விவரமாய்த் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற அவா நிரம்ப இருந்தபோதிலும், கீழேகண்ட விவரங்கள் மட்டுந்தாம் அவர் தெரிந்துகொள்ள முடிந்தது.

"புஷ்ப பவனத்தில் தற்காலம் வசித்துவரும் சுரோத்ரியந்தார் பெயர் முத்துசாமிபிள்ளை. சென்னையில் ஒரு பயித்தியக்காரன் வந்து ஒருவர் கலியாணத்தை நிறுத்திவிட்டதாகப் பத்திரிகைகளில் போட்டிருந்தார்களே, அது இந்த முத்துசாமி பிள்ளையின் கலியாணந்தான். முத்துசாமிபிள்ளை தற்காலம் சென்னையிலேயே இருக்கிறார். எப்போது இங்கே வருவாரோ தெரியாது. இப்போது வந்தாலும் வரலாம், இன்னும் பத்துநாட்கள் கழித்து வந்தாலும் வரலாம். கண்ணுசாமிபிள்ளை புஷ்பபவனத்தில் தோட்டக்காரனாகி முப்பது வருஷங்களாயின. சுரோத்ரியந்தார் குமாரலிங்கம் பிள்ளை நிரம்ப பெரிய மனிதர். மிகுந்த நற்குணமுடையவர். அவருடைய ஒரேபிள்ளை இறந்ததுமுதல் அவர் எவரோடும் அதிகமாகப் பேசுவதில்லை. இந்த முத்துசாமிபிள்ளை அவருடைய பிள்ளையல்ல. இவர் அநந்தர வார்சு. குமாரலிங்கம்பிள்ளை இறந்து இவர் சுரோத்ரியந்தார் ஆகுமுன், இவர் நிரம்ப ஏழையாயிருந்தார். கசடர்களுடன் சேர்ந்து பழகினதாகச் சொல்லிக்கொண்டார்கள். இப்போது பெரிய மனிதர்களுடன்தான் பழகுகிறார். நிரம்பவும் தாராள சுபாவமுடையவர். ஆனரரி மாஜிஸ்திரேட்டாயிருக்கிறார். போர்டிலே மெம்பர். நிரம்ப சாமார்த்தியசாலி."

எவ்வளவு சாதுரியமாகப் பேசியும் ஏகாம்பரநாத முதலியாரால் இவைகளை விட அதிக விவரங்கள் கண்ணுசாமி பிள்ளை வாயிலிருந்து அறிந்துகொள்ள முடியாமற் போயிற்று. மூன்றுநாட்கள் பேசியும் அவர் அறிந்து கொள்ள முடிந்தது இவ்வளவே. ஆனால் அதுகாரணத்தினால் ஏகாம்பரநாத முதலியார் வருத்தமுற்றதாகக் காணப்படவில்லை. புஷ்பச் செடிகளில் அவருக்கிருந்த பிரியம் அவைகளைப்பற்றியே அவரைப் பேசும்படி செய்தன. இருவரும் பொழுது போனதே தெரியாமல் பேசிக்கொண்டிருந்தார்கள். கண்ணுக் கிருட்டும் சமயத்தில் ஒருவர் பங்களாவைவிட்டுப் புறப்பட்டுப் போவதைப்பார்த்தவேகாம்பரநாதமுதலியார் அவரை அடையாளந் தெரிந்துகொண்டும் சிறிது சந்தேகமுற்றவர் போல, "அதோ

வெளியே போகிறவர் யார் ?" என்று கண்ணு சாமி பிள்ளையைக் கேட்டார்.

"அவர்தாம் வீரபத்திர முதலியார். எங்கள் எஜமானருக்கு ரொம்பவும் நெருங்கிய நண்பர்" என்றான் கண்ணுசாமி பிள்ளை.

"அப்படியா ! வீரபத்திர முதலியார் இங்கே பல்லாவரத்தில்தான் குடியிருக்கிறாரோ ?" என்று கேட்டார் ஏகாம்பரநாத முதலியார்.

"இல்லையில்லை. இங்கு அடிக்கடி என் எஜமானரைப்பார்க்க வருவார். சென்னையில் நான் இருக்கிறார்போலும்" என்றான் கண்ணுசாமி பிள்ளை.

"ஓகோ ! சென்னையிலா இருக்கிறார் ? அவர் மேல்விலாசம் தங்களுக்குத் தெரியுமோ ?" என்று வினவினார் ஏகாம்பரநாத முதலியார்.

"எந்தப் பேட்டையிலிருக்கிறார் என்று கூடத் தெரியாது. இவ்வளவுதூரம் அவரைப் பற்றி விசாரிக்கிறீர்களே ! அவரைத் தங்களுக்குத் தெரியுமா என்ன ?" என்றான் கண்ணுசாமி பிள்ளை.

"தெரியுமென்றுதான் நினைக்கிறேன். அவராய்த்தாம் இருக்கவேண்டும் இவர். ஒரு முக்கிய சமாசாரம் இவரைக் கேட்டால்தான் தெரியும். போய்த் தெரிந்துகொள்ளுகிறேன். தயவுசெய்து மன்னிக்கவேண்டும் அவசரமாய்ப் போவதற்காக —போய்வருகிறேன் !" என்று சொல்லிவிட்டு, ஏகாம்பரநாத முதலியார் சிறிது தூரம் விரைவாய் நடந்துசென்று, பிறகு முன்னே சென்ற வீரபத்திர முதலியாரை மெதுவாய்ப் பின்தொடர்ந்து சென்றார். பங்களாக்களையெல்லாம் கடந்து சென்று, கடைத்தெருவையுந் தாண்டிப்போய், ஒரு தெருவில் நாகலிங்க முதலியார் சைவாள் ஹோட்டல் என்றெழுதிய பலகை தொங்கவிடப்பெற்றிருந்த கட்டிடத்தில் வீரபத்திர முதலியார் நுழைந்து வெகு நேரம்வரையில் வெளியே திரும்பி வாராததைக் கவனித்துவிட்டு, ஏகாம்பரநாதமுதலியார் அவ்வூரிலுள்ள சத்திரத்துத் திண்ணையிற்போய்ப் படுத்துக்கொண்டார்.

ஐந்தாவது அத்தியாயம்
செவிட்டுக் கூனன்

மறுநாட்காலையில் எட்டு மணி சமாருக்கு நல்ல ஆடைகளை யணிந்து கொண்டிருந்த ஒரு பெரிய கூனன் இரு தண்டுகளை ஊன்றிக்கொண்டு நாகலிங்க முதலியார் சைவாள் ஹோட்டலுக்கு வந்து, "நான்கு நாட்கள் தாமதிக்க இங்கே இடமிருக்கிறதா" என்று திண்ணையிலுட்கார்ந்திருந்த ஒரு சிறு மனிதனைக் கேட்டான். அம்மனிதனது உயரம் நாலரை அடிக்குமே விராது. தேகமும் ஒல்லியாகத்தானிருந்தது. வயதிலும் சிறுவனாகவே தோன்றினான். கூனன் அவனை அவ்வாறு கேட்டதும், அவன் இதோ வருகிறேன் என்று சொல்லிவிட்டு உள்ளேபோய்க் கணநேரத்தில் ஆறரை அடி உயரமும் அதற்குத் தகுந்த காத்திரமுமுள்ள ஒரு பெண்பிள்ளையை அழைத்துக்கொண்டு வந்தான். அந்த ஸ்திரீ கூனனை ஒரு நிமிஷநேரம் உற்றுப்பார்த்து விட்டு, தன்னையழைத்து வந்தவனை நோக்கி, "உங்களுக்குத் தெரியாதது நான் என்ன சொல்லப் போறேன்? நீங்க சொன்னாப்போலே அந்தச் சின்ன ரூம் தான் இருக்குது. அதுலேதான் வேணா இவுரு இருக்கலாம்" என்று சொல்லிவிட்டுக் கூனனைப் பார்த்து, "என்ன ஐயா ! சின்ன ரூம் ஒன்றுதான் இருக்குது. அது உங்களுக்குப் போதுமா, பாருங்க !" என்றாள். அதற்குக் கூனன், "போதாமலென்ன? எல்லாம் போதும். எங்கே இருக்குது, காட்டுங்க !" என்று சொல்ல, மூவரும் உள்ளே சென்றனர்.

அந்தப்பெரிய ஸ்திரீயும் அந்தச்சிறிய மனிதனும் யாரென்று நமது நண்பர்களுக்குத் தெரிவிக்க வேண்டுவது அவசியமெனக் கருதுகிறோம். அவர்கள்தாம் நாகலிங்க முதலியாரும் அவருடைய மனைவி பார்வதியம்மாளும். நாகலிங்க முதலியாருக்குப் பார்வதியம்மாள் மாமன் மகளானதால், அவர்களுக்கு வயது வித்தியாசமில்லாமலிருந்தும், சிறு வயதிலேயே அவர்களைப் பிணைத்துவிட்டார்கள். நாகலிங்க முதலியார் அதிக வளர்த்தியில்லாமலிருந்து விட்டார் ; பார்வதியம்மாளோ தஞ்சாவூர்ப் பெரிய கோவில் நந்தி வளர்ந்ததைப்போல வளர்ந்து விட்டாள். நாகலிங்கமுதலியார் ரொம்ப சாது. பார்வதியம்மாள் ரொம்பசாமர்த்தியசாலியானதால், குடும்பக் காரியங்களனைத்தையும் திறத்துடன் நடத்தி வந்ததுடன், யாவும் தன் கணவனால் நடத்தப்பட்டன வென்று யாவரிடமும் பெருமை பேசி தன் புருஷனையும் மேன்மைப்படுத்திக் களிப்பித்துவந்தாள்.

இப்படி ரொம்ப ஒற்றுமையுள்ள தம்பதிகள் வைத்து நடத்தி வந்த சோற்றுக்கடைக்கு வந்துசேர்ந்த கூனன் அவர்கள் காட்டிய சிறு அறை போதுமென்று சொல்லி அவர்களுடன் தங்கியிருந்தான். அவனைப்போலவே இன்னும் நாலைந்து பேர்கள் அச் சோற்றுக்கடையிலேயே தங்கியிருந்தனர். அன்று பகலில் யாவரும் சாப்பிட உட்கார்ந்த பொழுது கூனனும் வந்து உட்கார்ந்தான். ஒட்டகையின் திமில்

செவிட்டுக் கூனன் நாகலிங்க முதலியார் சோற்றுக் கடைக்கு வந்தது.

போன்ற அவனது கூனைக்கண்ட யாவரும் நகைத்து, அவரவர்கள் மனத்துக்கிசைந்தபடி விநோதமாய்ப் பேசிக்கொண்டார்கள். தாங்கள் பேசுவதை அக்கூனன் சிறிதும் கவனியாததைக் கண்ட அவர்கள் அவன் செவிடனென ஊகித்து, உரக்க அவனைப் பரிகசித்துப் பேசினார்கள். கூனன் சிறிதும் இலக்ஷியஞ் செய்யாமல் சாப்பிட்டுவிட் டெழுந்தான்.

கூனன் அச்சோற்றுக்கடைக்கு வந்து நான்கு நாட்களாயின. நான்காவது நாள் இரவு கூனனுடைய அறைக்குப் பக்கத்து அறையிலிருந்த வீரபத்திர முதலியாரைப் பார்க்க யாரோ வொருவர் வந்தார். அவர் உள்ளே நுழைந்ததும், வீரபத்திரமுதலியார் தமது அறையின் கதவைத் தாளிட்டுக்கொண்டார். பிறகு அவர்களிருவரும் தாழ்ந்த குரலில் இரகசியமாய்ப் பேசிக்கொண்டார்கள். அவர்கள் பேசிக்கொண்டதிற் சிலபாகம், அடுத்த அறையில் நின்றுகொண்டு அவ்விருவறைகளுக்கும் இடையே சடுத்துவைத்த பலகையில் துளைத்திருந்த ஒருசிறு துவாரத்தின் வழியாக ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்த கூனன் காதில் பின்வருமாறு விழுந்தது.

வீரபத்திர.—* * அப்படிப் பேசுவதிற் பயனென்ன ? பணத்துக்காகவேயல்ல ; விநோதத்துக்காகத்தான்.

வந்தவன் ஏதோ வாய்க்குள் முணுமுணுத்துக்கொண்டான்.

வீரபத்திர.—குடிகாரனுக்கு மதுவின் மேல் எவ்வளவு ஆசையிருக்குமோ அவ்வளவு ஆசையுண்டு எனக்கு இதன்மேல். அது இல்லாமற் போனால் என்னால் உயிர் பிழைத்திருக்க முடியாது. உன்னிடத்தில் ஏராளமாய்ப் பொருளிருக்கிறதே ; எப்பொழுதாயினும் நான் உன்னைக் காலணா கேட்டதுண்டா ? எனக்குமட்டும் அவ்வெண்ணம் தோன்றினால், உன் சொத்திற் பாதி கறந்துவிடமுடியாதா ? அது தவறு. திருடர்களுக்கும் தருமமுண்டு. எப்போதும் என்னைப் போலீஸ்காரர்கள் துரத்தலும், நான் அவர்களை ஏமாற்றிவிட்டு ஓடிப் பிழைத்தலுமாயிருந்தால் தான் எனக்குச் சந்தோஷமாயிருக்கிறது.

வந்தவன் திரும்பவும் ஏதோ இரகசியமாய்ச் சொன்னான். அது கூனன் செவிக்கு எட்டவில்லை.

வீரபத்திர.—நீ கொடுக்கத் தயாராயிருப்பது வாஸ்தவந்தான். ஆனால் நான் உன்னிடமிருந்து காலணாக் கூட வாங்கிக்கொள்ளமாட்டேன். இரண்டு வருஷகாலமாய் ஒன்றுஞ் செய்யாமலிருப்பது எனக்குப் பயித்தியம் பிடித்தாற்போ லிருக்கிறது. இந்த முறை நோட்டுகள் செய்வதாக உத்தேசம். அதற்கு

ஒரு அச்சு வேலைக்காரனைத் தயார் செய்திருக்கிறேன். சிறிதும் பயமேயில்லை. * * * அதெல்லாம் சாத்தியமில்லை. நம்முடைய கூட்டத்தைச் சேர்ந்தவன் நீ. எப்போதாவது இரண்டொருமுறை வந்தால் போதும். வராமற்போனால் என்ன சிக்ஷை கிடைக்குமென்பது உனக்கே தெரியும். இப்படிப்பட்ட வேலை செய்யாவிட்டால், என்னால் பிழைத்திருக்க முடியாது.

வந்தவன்.— எனக்குத்தான் அத்தொழிலிற் சிறிதும் இஷ்டமில்லையே. என்னையேன் கட்டிப்பிடித் திழுக்க வேண்டும்?

வீரபத்திர.— ஒருமுறை ஒரு ஆளைப் பிடித்தால், பிறகு ஒருபோதும் அவனை நான் விடுவதில்லை. அதில் எனக்கு ஒருவிதச் சந்தோஷம்.

வந்தவன்.— உம் இஷ்டத்துக்கு நான் இம்முறை இசையாவிட்டால்?

வீரபத்திர.— நீ யெனக்கு எழுதிக் கொடுத்திருக்கும் ரசீதுகளைப் போலீசாருக்கு அடுத்த க்ஷணத்தில் அனுப்பிவிடுவேன். அவைகள் நிஜமென்று நிரூபிக்க ஒரு சாக்ஷியும் இருக்கிறான். அந்த பாங்க் குமாஸ்தா சிறையிலிருந்து விடுதலையாகி வந்துவிட்டானே தெரியுமா?

வந்தவன் பற்களை நெறுநெறெனக் கடித்து அந்தக் குமாஸ்தாவை விகாரமாகத் திட்டினான். வீரபத்திர முதலியார், "நான் சொல்லுகிறபடி மட்டும் நடப்பாயேயானால், அந்தப் பயலை எட்டுநாளில் தொலைத்துவிடுகிறேன். கவலைப்படாதே. சரி. நேரமாகிறது. "ஹிந்து" பத்திரிகையில் சில்லரை விளம்பரங்களிருக்கும் பக்கத்தைக் கவனித்துக்கொண்டிரு. நீ என்ன செய்யவேண்டுமென்று அதில் தெரிவிக்கிறேன்" என்றார். சம்பாஷணை முடிந்தது.

மறுநாட்காலையில் வீரபத்திரமுதலியார் அச்சோற்றுக்கடையைவிட் டகன்றார். இரண்டு நாட்கள் கழித்துக் கூனனும் எங்கேயோ போய்விட்டான்.

ஆறாவது அத்தியாயம்
தலைவனும் பிரபுவும்

முந்திய அத்தியாயத்திற் கூறிய சம்பவம் நடந்து ஒருவாரங்கழித்து, ஒருநாளிரவு எட்டு மணி சுமாருக்கு சென்னையில் ப்ராட்வே என்னுந்தெருவின் முகலிலுள்ள சங்கரய்யர் காப்பி ஹோட்டலுக்குள் துரைசாமிபிள்ளை கையில் ஒரு சிறு மூட்டையுடன் நுழைந்து பரிசாரகன் ஒருவனைக் கூப்பிட்டார். அவர் குரலைக்கேட்டதும், அவர் உட்கார்ந்த இடத்துக்கு எதிரே மற்றொரு மேசையினண்டையி லுட்கார்ந்திருந்த மற்றொருவர் நிமிர்ந்து பார்த்தார். துரைசாமி பிள்ளையும் தமக்கு நேரேபார்த்தார். துரைசாமி பிள்ளையின் மனத்திற் சிறிது அச்சமுண்டாயிற்று. ஏனெனில், தமக்கு எதிரே உட்கார்ந் திருந்தவர் தாம் சூதுநாணயக்காரருடைய தலைவனென அறிந்துகொண்டார். ஆனால் எதிரே உட்கார்ந்திருந்தவர் முகத்தில் அவர் தம்மை யறிந்துகொண்டதைக் காட்டக்கூடிய யாதொரு சின்னமும் காணப்படவில்லையாதலால், துரைசாமி பிள்ளையின் அச்சம் சிறிதுகுறைந்தது. ஆயினும் தாம் மாறுவேடம் பூண்டுவராததைக் குறித்து வருந்தினார். இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் சூதுநாணயக்காரர் தலைவன் எழுந்துவெளியே போய்விட்டான்.

துரைசாமி பிள்ளையும் அற்ப ஆகாரம் செய்துவிட்டு, தமது மூட்டையை யெடுத்துக்கொண்டு வெளியே சென்று டிராம் வண்டியிலேறிப்போய் பெரியமேட்டி லிறங்கி, இருண்ட சந்து ஒன்றில் நுழைந்தார். பத்து நிமிஷங் கழித்து அச்சந்தின் மற்றொருகோடியில் கந்தல் சராயும் சொக்காயும் அணிந்துகொண்டு ஒரு கிழிந்த தொப்பியைத் தலைமீது வைத்து அழுத்திக்கொண்டு, ஏராளமாய் மதுவைச் சாப்பிட்டவன் என்பதற் கடையாளமாக தள்ளாடி வீழ்ந்து வீழ்ந்து எழுந்துகொண்டு ஒருவன் வெளிப்புறப்பட்டு, முன்பு துரைசாமி பிள்ளை யகப்பட்டுக்கொண்ட சூதுநாணயக்காரர் தொழிற்சாலையை நோக்கி நடந்து சென்றான். அக்குடிகாரன் அத்தொழிற்சாலையின் வாயிலையடைந்து, அதன் வாசற் கதவைத் தள்ளிப்பார்த்தான். கதவு பூட்டப்பட் டிருந்ததைக் கண்டு, அங்குமிங்கும் கையினால் தடவிப்பார்த்தான். ஒருகட்டைவண்டி சமீபத்தில் நிறுத்தியிருக்கக்கண்டு அவ்வண்டிக்கும் சுவருக்குமிடையே ஒளிந்துகொண்டு நின்றான்.

அவன் அவ்வாறு ஒளிந்துகொண்டு கால்

நாழிகைக்கெல்லாம் இருவர் அவ்விடத்தை நோக்கி வரும் சத்தம்கேட்டது. குடிகாரன் ஓர் மூலையில் ஒடுங்கிப் பதுங்கிக்கொண்டான். ஒருவன், "என்னை இங்கு இழுத்ததின் காரணமென்ன? அபாயமில்லாத இடங்கள் அநேகமிருக்க இந்தவிடத்தை ஏன் விடமாட்டேனென்கிறீர்?" என்று கோபத்துடன் கேட்டான்.

மற்றொருவன்.—ஏன் என்று எனக்கே தெரியவில்லை. ஒருசமயம் போலீஸ்காரர்களை ஏமாற்ற வேண்டும் என்று எனக்குள்ள ஆசையே அதற்குக் காரணமாக விருக்கலாம்.

முதலிற்பேசியவன்.—கங்காதரமுதலியாரே! இந்தத் தொழிலைக் கைவிட்டுவிடும். உமக்கு வேண்டிய பொருள் தருகிறேன்.

கங்காதர.—அப்பா! முத்துசாமி! பொருளின்மேல் எனக்கு ஆசையிருந்தால், இவ்வளவு காலம் உன்னிடமிருந்து பணம் பறிக்காமலிருப்பேனா?

முத்துசாமி.—ஏதோவொரு காலத்தில் யோசனையின்றி ஒரு கெட்ட காரியத்தைச் செய்துவிட்டதற்காக, ஆயுள்பரியந்தம் அக்கெட்ட காரியத்தைச் செய்யும்படி தண்டிப்பது தருமமா? எனக்கு இத்தொழிலிற் சிறிதும் இஷ்டமில்லை. நான் உமக்கு எழுதிக்கொடுத்த ரசீதுகளைக் கொடுத்துவிடும். நீர் எவ்வளவு பொருள் கேட்டாலும் கொடுக்கிறேன்.

கங்காதர.—பொருள் தருகிறேன், பொருள் தருகிறேன் என்கிறாயே! உன் பொருள் யாருக்கு வேண்டும்? நீ இப்பொழுது ரொம்ப யோக்கியனாகப்போய்விட்டாய்போலும்! உன்னை நன்றாய்த் தெரியும் அப்பா! ஏராளமான ஆஸ்தி கிடைத்து விட்டதனால், அபாயகரமான காரியத்திற்பிரவேசிக்க இஷ்டமில்லாமலிருக்கிறாய். அது கிடைத்திராவிட்டால், இத்தொழிலை நீ விடுவாயா? ஏன் வீண்பேச்சு? என் உத்தரவுப்படி நீ நடந்தே தீரவேண்டும்.

முத்துசாமி.—என்னுடைய பொறுமைக்கும் அளவுண்டு என்பதை மறந்துவிடாதேயும்!

கங்காதர.— இந்தப்பூச்சிக்கு நானா பயப்படுபவன்? நான் எதற்கும் துணிந்தவன் என்பதை மறந்துவிட்டாயா! நாமிருவருந்தாம் இருக்கிறோம் இவ்வந்தகாரம் நிறைந்த தெருவில. நீ ஒரு நிமிஷத்தில் என்னைச் சுட்டுக் கொன்றுவிடலாம். ஆனால் நீ அதனால் தப்பித்துக் கொள்ளமாட்டாய். அதனால் உனக்குப் பெருங்கேடு விளையும். நாளைக் காலையில் உன் ரசீதுகளெல்லாம் போலீஸ் ஸ்டேஷனுக்குப்போய்ச் சேரும். ஆகையினால் அடங்கியேயிரு! எனக்குத் துரோகம் செய்யாமலிரு; உனக்கு எவ்வித உதவியும் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறேன். உன்னைத் தொல்லை பண்ணுகிற பாங்க் குமாஸ்தாவைக் கூடிய சீக்கிரத்தில் தொலைத்து விடுகிறேன்.

முத்துசாமி.— ஆனால் என்னை மன்னித்து விட்டுவிட மாட்டீர்களா?

கங்காதர.— அந்தப் பேச்சே பேசாதே. ஒருமுறை என் கக்ஷியைச் சேர்ந்துவிட்டால், ஆயுள் பரியந்தம் என் கக்ஷிதான். அது கிடக்கட்டும்; நான் சொல்லப்போவதைக் கவனித்துக் கேள். இன்றைக்கு நான்காவது நாள் இரவு திருவல்லிக்கேணியில் ஹனுமந்த லாலா தெருவில் எட்டாவது நெம்பர் வீட்டில் நோட்டுகள் அச்சடிக்க ஆரம்பிக்கலாம் என்று நிச்சயித்திருக்கிறோம். அச்சமயம் நீ தவறாமல் அங்கு வந்துசேரவேண்டும். இடத்தை மறந்துவிடாதே. ஹனுமந்தலாலா தெரு, எட்டாவது நெம்பர் வீடு ஞாபகம் வைத்துக்கொள்.

பேச்சுமுடிந்தது. அவ்விருவரும் அவ்விடத்தைவிட் டகன்றார்கள். குடிகாரனும் தான் ஒளிந்திருந்த விடத்தைவிட்டு வெளியே வந்து சரியாய்நடந்து சிறிதுதூரம்போய், பேசிய இருவரும் சமீபத்தில் நிற்பதைக் கவனித்துத் திரும்பவும் தள்ளாடி நடந்துகொண்டு அவர்களைத் தாண்டிச் சென்றான்.

முத்துசாமி பிள்ளை, "குடியனா! நாம் பேசிக்கொண்டிருந்ததை யாரேனும் ஒட்டுக்கேட்டுக்கொண் டிருந்துவிட்டுப் போகிறார்களோ வென்று முதலிற் சிறிது பயமுற்றேன்" என்றார். கங்காதர முதலியார், "வேடிக்கைதான்! உன் மனச்சாக்ஷி ரொம்பச் சுறுசுறுப்பா யிருக்கிறது போலும்!" என்று நகைத்தார்.

"சுதேச மித்திரன்."—* * விவசாயம், கல்வி, பூர்வீகர்களின் சரித்திரம், தற்காலத்துப் பிரசித்தி பெற்றவர்களின் சரித்திரம், தற்காலத்து யுத்த விஷயம், ஹிந்துக்களின் விரதாதிகள், சிலாசாஸன ஆராய்ச்சி, தமிழ் ஆராய்ச்சி, ஸ்தல சரித்திரங்கள் பட்சிகளின் சாஸ்திரங்கள் முதலிய தலைப்புகளின் கீழ் அநேக அருமையான வியாஸங்கள் எழுதப்பட்டு இந்த சஞ்சிகை விளங்குகிறது. ** இப்'போதினி' யை நம் தமிழுலகினர் நன்கு போஷிப்பாராக.

ராஜஸிம்ஹன்

RAJASIMHAN

[எம். ஏ. பட்டம்பெற்ற ஒருவர் எழுதியது.]

(148-ம் பக்கத் தொடர்ச்சி.)

இரண்டாம் அத்தியாயம்

பசியின் கொடுமை

மறுநாட்காலையில் வெளிச்சமானவுடன் அவுரங்கசீபு சைனியம் கிளம்பும்படி உத்தரவு செய்தான். அந்த அற்புதமான சைனியம்—பீரங்கிகளும் சேர்ந்து சதுரங்க சேனையாகவிருந்தது. புறப்பட்டுக் கணவாய் வெளித்துவாரமுகமாய்ச் சென்றது. பசிதாகத்தினால் வருந்திய சிப்பாய்கள் கணவாய்க்கு வெளியே போய்ச்சேர்ந்தால் ஆகாரம் கிடைக்குமென்கிற எண்ணத்துடன் வரிசைவரிசையாய்ப் புறப்பட்டார்கள். அவுரங்கசீபு உதயபுரியையும் ஜேப உன்னீஸாவையும் விடுதலைசெய்து உதயபுரத்தைச் சாம்பலாக்கிவிடவேண்டுமென்கிற எண்ணத்துடன் தன்னுடைய கோபாக்கினியில் தானே வெந்துகொண்டிருந்தான். அவனுக்கு இன்னும் கொஞ்சமாவது மனந்தாழவில்லை. வரிசையாய் மொகலாயரின் சேனை கணவாயின் வழியாய் வந்து பார்த்ததும் மொகலாயருக்கு சர்வநாசம் வந்ததாகக் கண்டது. கணவாயின் வாசல் மூடப்பட்டிருந்தது. இராத்திரியில் ரஜபுத்திரர் பெரிய பெரிய மரங்களை வெட்டிக் கணவாய் வாயிலின் பக்கத்தில் பருவதத்தின்மேலிருந்து தள்ளிவிட்டிருந்தார்கள். அந்த மகா விருக்ஷங்கள் இலைகிளைகளுடன் கணவாயின் வாயிற்பக்கத்தில் நெருக்கமாய்விழுந்துவழியை மறைத்துக் கொண்டிருந்தன. யானை, குதிரை, காலாட் படை சைனியம் இருக்கட்டும்; நாய் நரி போகிறதற்குக்கூட மார்க்கமில்லை.

மொகலாய சேனை அலறவாரம்பித்தது. ஸ்திரீகள் அழவாரம்பித்ததைக் கேட்டு அவுரங்கசீபின் கடினமான இதயங்கூடக் கொஞ்சம் கரைந்தது.

மார்க்கம் தயார் செய்கிற சைனியக்காரர் முன்னால் இருக்கிற வழக்கம். ஆனால் இந்த மொகலாயரின் மகா சைனியம் முன்னால் கணவாய் மார்க்கத்திற் புறப்பட்டதனால் மார்க்கம் தயார் செய்பவர்கள் பின்னே தங்கிவிட்டார்கள். அவர்களை முந்திவரும்படி அவுரங்கசீபு உத்தரவுசெய்தான். ஆனால் பிந்தியிருந்தவர்கள் முன்னே வருவதற்குக் காலதாமதம். அவர்கள் வருகிறவரையில் காத்துக்கொண்டிருந்தால் அன்று முழுவதும் எல்லாரும் உபவாசஞ்செய்ய வேண்டிவருமாதலால், அவுரங்கசீபு காலாட்படையிலிருந்தவர்களை எதிரில் இருந்த விருக்ஷங்களைப் பக்கத்தில் தள்ளும்படி ஆக்ஞாபித்தான். அவர்களுக்குச் சகாயமாய் யானைகளையனுப்பினான். ஆயிரக்கணக்கான சிப்பாய்களும் 400, யானைகளும் மரங்களை முறித்து எறிவதற்காரம்பித்தார்கள். இப்படி விருக்ஷங்களைத் தள்ளுவதற்குள்ளேயே கல்மழை பெய்வதுபோல பெரிய பெரிய கல்கள் இடைவிடாமல் சொரியவாரம்பித்தன. இந்தக் கல்மழையாற் காலாட்படையில் அநேகருக்குக் கைகால்கள் முறிந்தன; சிலர் பொடி பொடியாக்கப் பட்டார்கள். யானைகளுக்கும் தலை தந்தம் எலும்பு முதலியவைகளெல்லாம் உடைந்து சிப்பாய்களைக் கால்களின் கீழ் தள்ளிக்கொண்டு நாலாபக்கங்களிலும் ஓடவாரம்பித்தன. அவுரங்கசீபின் சைனியமெல்லாம் பயந்து சாகவாரம்பித்தன. தலையை நிமிர்ந்து மேலே பார்த்தால், மலையின் மேல் ரஜபுத்திரரின் காலாட்படையெறும்புகளைப்போல் வரிசைவரிசையாய்த் தோன்றினார்கள். கல்மழையினால் சாகாதவர்கள் ரஜபுத்திரரின் துப்பாக்கிகளுக் கிரையானார்கள். அவுரங்கசீபின் சேனையிலுள்ளவர்களுக்கு விருக்ஷப்பிராகாரத்தின் பக்கத்திற்குப் போகமுடியாமல் போயிற்று.

அவுரங்கசீபு அதுகேட்டுத் தன் சேனாதிபதிகளையழைத்து அவர்களையிகழ்ந்து பேசி மறுபடியும் விருக்ஷப்பிராகாரத்தை உடைத்தெறியவேண்டுமென்று ஆக்கினை செய்தான். மறுபடியும் தீன் தீன் என்று சத்தம் செய்துகொண்டுசிப்பாய்கள் புறப்பட்டார்கள். மறுபடியும் கல்மழையினாலும் துப்பாக்கிக்குண்டுகளினாலும் வளர்ந்துநின்ற கரும்புப்பயிர் சண்டமாருதத்தினாற் சாய்வதுபோல் பூமியிற்சாய்ந்துமாண்டார்கள். இப்படி எத்தனைதரம் பிரயத்தனப் பட்டபோதிலும், கோட்டையைப்போல் விழுந்திருந்த மரக்குவியல்களை மொகலாயர் எடுத்தெறியமுடியாமற் போயிற்று.

அப்பொழுது அவுரங்கசீபு மகா வருத்தத்துடன் அந்தப் பெரிய சேனையைக் கணவா

யின் வழியாய்ப் பின்பக்கம் திரும்பும்படி கட்டளையிட்டான். சேனை நின்றபடியே திரும்பவேண்டும். எல்லாச் சிப்பாய்களும் பசிதாகத்தாற் கஷ்டப்பட்டதுபோலவே அவுரங்கசீபும் அவன் பிறந்தது முதல் இதுதான் முதற்தடவை பசிதாகத்தால் களைப்படைந்தான். பேகம் அவர்களெல்லாரும் அப்படியே கஷ்டப்பட்டார்கள். கதி வேறில்லை. பர்வதத்தின் தாழ்வரவின்மேல் ஏறுவது பிரயாசம். வேறு உபாயமில்லாமல் பின் திரும்பவேண்டியதாயிற்று.

பின் திரும்பிய சேனை முதலில் எவ்விடத்திலிருந்து ரந்திரத்துக்குள் பிரவேசித்ததோ அவ்விடம்வந்து நின்றது. அப்பொழுது மத்தியானமாயிற்று; வந்து பார்க்கவும், யமன் அங்கேயும் அவர்களை விழுங்குவதற்குத் தயாராயிருந்ததாகத் தெரியவந்தது. கணவாயின் இந்தண்டைப்பக்கத்திலும் மரங்கள் விழுந்து மார்க்கத்தை அடைத்துக்கொண்டிருந்தன. வெளியில் நகருவதற்கு மார்க்கமில்லை. மலையின் மேல் முன்போலவே ரஜபுத்திரசேனை வரிசையாய் நின்றுகொண்டிருந்தது.

கணவாயிலிருந்து வெளியே போகாமலிருந்தால் நிச்சயமாய்ச் சைனியமெல்லாம் யமனுக்கு இரையாகவேண்டும். ஆதலால், அவுரங்கசீபு சேனாதிபதிகளைக் கூப்பிட்டு பயபயத்தினால் பிராணனில் ஆசையை விடாமல் மார்க்கம் திறக்கவேண்டுமென்று சொன்னான். சேனாதிபதிகள் சைனியத்தைக் கொண்டுபோய் மறுபடியும் விருக்ஷப்பிரகாரத்தை எதிர்த்தார்கள். இந்தத் தடவைகொஞ்சம் அனுகூலமிருந்தது. மார்க்கம் தயார்செய்கிற சைனிகர் அங்கேயிருந்தார்கள். மொகலாயர் உயிருக்கஞ்சாமல் மரங்களையெல்லாம் வெட்டியெறியவாரம்பித்தார்கள். ஆனால் ஒரு க்ஷணநேரந்தான் அப்படிச்செய்தார்கள். மறுக்ஷணத்தில் மலையிலிருந்து பொழிந்த கல்மழையினாலும் குண்டுமழையினாலும் சேனை முழுகிப் போயிற்று. பிறகு ஆபத்துக்குமேலாபத்து சம்பவித்தது. சமீபத்தில் மலைச்சாரலில் ராஜஸிம்ஹன் சேனை. அவன் தூரத்திலிருந்து மொகலாய சேனை பின்திரும்பி வருவதைக்கண்டு பீரங்கிகளை முன்பக்கமாய்த் திருப்பினான்.

ராஜஸிம்ஹன் பீரங்கியின் குண்டுகள் பாய்ந்தன. விருக்ஷங்கள் பக்கமாய்க் குறிவைத்த பீரங்கிகளின் குண்டுகளினால் யானை குதிரை காலாட்படை சேனாதிபதிகள் எல்லாரும் அடிபட்டார்கள். மொகலாயசேனை கணவாயில் பின்னே திரும்பிகுரூரமான ஸர்ப்பம், தீயின் பயத்தால்எப்படிச்சுருட்டிக்கொண்டு பொந்துக்குள் மறைந்துகொள்ளுமோ, அப்படி மறைந்துகொண்டு நின்றது. ஷஹான்ஷா பாதுஷாவாயிருந்தவன் வஜ்ரங்களிழைத்த தன் வெள்ளைத் தலைப்பாகையைக் கழற்றித் தூர எறிந்து பூமியில் முழங்கால் படியிட்டுக்கொண்டு மண்ணைத் தலையின்மேல் போட்டுக்கொண்டான். டில்லி பாதுஷா, ரஜபுத்திரர் எதிரில் பொறியில் விழுந்த எலிபோலானான். ஒரு எலிக்கு எவ்வளவு ஆகாரம் வேண்டுமோ அவ்வளவு கிடைத்தாலும் பிராணனைக் காப்பாற்றிக் கொள்ளலாமென்றிருந்தது.

அப்பொழுது பாரதபதியான அவுரங்கசீபு ஒரு ரஜபுத்திரப்பெண் தன்னைக் காப்பாற்றலாமென்று நினைத்து அவள் கொடுத்திருந்த புறுவை உயரப் பறக்கவிட்டான்.

மூன்றும் அத்தியாயம்

உதயபுரியின் அவமானம்

நிர்மலகுமாரி உதயபுரிபேகம் ஜேப உன்னீஸா இவர்களிரண்டுபேர்களையும் தகுந்த இடத்திலிருக்கச்செய்து மகாராணி சஞ்சலகுமாரியினிடம்போய் நமஸ்காரம் செய்து ஆதியோடந்தமாய் நடந்த விருத்தாந்தத்தை யெல்லாம் அறிவித்தாள். கேட்டு, சஞ்சலகுமாரி முதலில் உதயபுரியை அழைத்துவரச் சொன்னாள். உதயபுரிவந்தவுடனேயேஅவளைப் பிரத்தியேகமாய் உட்காருவித்து மரியாதைக்காக சஞ்சலகுமாரி எழுந்து நின்றாள். உதயபுரி சஞ்சலகுமாரி வணக்கத்துடன் மரியாதை செய்வதைக் கண்டு ஹிந்து ஸ்திரீ பயப்பட்டு ஸௌஜன்னியம் காண்பிக்கிறாள் என்று நினைத்துக் கொண்டாள். பிறகு நீங்கள் மொகலாய சைனியத்தாரிடமிருந்து எதற்காக மரணத்தைக் கோருகிறீர்களென்றாள்.

சஞ்சலகுமாரி சிரித்துக்கொண்டு, "நாங்கள் அவர்களிடத்திலிருந்து மரணம் கிடைக்கவேண்டுமென்று பிரார்த்திக்கவில்லை. அவர்கள் அதை எங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்கிற ஆசையுடன் வந்திருந்தால் அது தப்பு. ஏனென்றால், நாங்கள் ஹிந்துக்

களின் தானத்தை வாங்கத் தக்கவர்களல்ல" என்றாள்.

உதயபுரி கொஞ்சம் வருத்தத்துடன், "உதயபுரத்தார் காட்டு மனிதர்கள். தலைமுறை தலைமுறையாய் முஸல்மானரிடமிருந்து இந்தத் தானம் வாங்கியிருக்கிறார்கள். அல்தான் அல்லாவுதீன் சமாசாரம் தெரிந்திருக்கலாம். மொகலாய பாதுஷா அக்பரிடமிருந்தும் பின்னும் அவன் பௌத்திரனிடமிருந்தும் ராணா ராஜஸிம்ஹனது முன்னோர்கள் இந்தத்தானம் வாங்கியிருக்கிறார்கள்" என்றாள்.

சஞ்சல.—பேகம் ஸாசேப்! தாங்கள் மறந்துபோய்விட்டாற்போலிருக்கிறது. நாங்களதைத் தானமாக வாங்கிக்கொள்ளவில்லை. அதைக் கடனாக நினைத்துக்கொண்டிருக்கிறோம். அக்பர் பாதுஷா கொடுத்த கடனை பிரதாப ஸிம்ஹன் தானே சொந்தமாய்த் தீர்த்துவிட்டான். தங்கள் மாமனார் கடனை இப்பொழுது நாங்கள் தீர்க்க ஆரம்பித்திருக்கிறோம். அந்தக் கடனின் முதல் பாகதை தவாங்கிக் கொள்வதற்காகவே தங்களை இங்கே யழைத்து வந்தது. எனக்குத் தாம்பூலம் தயார் செய்து கொடுக்கவேண்டும். தயவுசெய்து தாம்பூலம் மடித்துக் கொடுக்கவேண்டும்.

சஞ்சலகுமாரி முதலில் காண்பித்த ஸௌஜன்யத்தைச் சரியாய் அறிந்துகொண்டு அதற்குத் தக்கபடி நடந்துகொண்டிருந்தால், பேகத்துக்கு இந்த அவமானமுண்டாயிராதென்று தோன்றுகிறது. அப்படிச் செய்யாமல் அவள் கடோரமான வார்த்தைகளால் சஞ்சல குமாரியின் கர்வத்தை விருத்தி செய்துவிட்டாள். தாம்பூல வார்த்தை வந்ததும், முன்னே தாம்பூலம் தயார்செய்துகொடுக்க வரவேண்டுமென்று சஞ்சலகுமாரி எழுதியிருந்த காகிதத்தின் ஞாபகம் வந்தது. ஆனாலும் கர்வத்தை விடாமல், "பாதுஷாவின் பேகம் தாம்பூலம மடிக்கமாட்டாள்" என்றாள்.

சஞ்சலகுமாரி.—நீ பாதுஷாவின் பேகமாயிருந்தபொழுது வெற்றிலை மடிக்கவேண்டி வரவில்லை. நீ இப்பொழுது எனக்குத் தாசி. மடித்துக்கொடுக்கத்தான வேண்டும். அது என் உத்தரவு.

உதயபுரி அழுதுவிட்டாள். துக்கத்தினாலல்ல, கோபத்தினாலழுது, "அலங்கீர் பாதுஷாவின் பேகம் வெற்றிலை மடித்துக்கொடுக்கவேண்டுமென்று சொல்லும்படி அவ்வளவு கர்வம் உனக்கு எதற்காக?" என்றாள்.

சஞ்சல.—அலங்கீர் பாதுஷா தானே மகாராணாவுக்குத் தாம்பூலம் தயார்செய்து கொடுப்பதற்காக நாளைக்கு இங்கே வருவானென்று நான் நம்பிக்கொண்டிருக்கிறேன். அவனுக்கு அந்த வேலை தெரியாமலிருந்தால் நீ அவனுக்குச் சொல்லிக்கொடுக்க வேண்டிவரும். அதற்காக நீ அந்த வேலையைக் கற்றுக்கொண்டிருக்க வேண்டும்.

என்று சொல்லி சஞ்சலகுமாரி தன் வேலைக்காரியை நோக்கி, "நீ இவளிடமிருந்து வெற்றிலை மடித்து வாங்கிக்கொண்டு வரவேண்டும்" என்றாள்.

உதயபுரி எழுந்திருக்கவில்லை.

அப்பொழுது வேலைக்காரி எழுப்புவதற்காக வந்தாள். அவமான பயத்தால் நடுங்கி ஷாஹான்ஷாவின் மகிஷி இரண்டொரு அடி எடுத்து வைத்தாள். அதற்குள் நடுநடுங்கி கம்பளி விரித்திருந்த நிலத்தின்மேல் விழுந்துவிட்டாள். வேலைக்காரி பிடித்துக் கொண்டாள். உதயபுரி பூமியின்மேல் விழுந்தவள் மூர்ச்சையடைந்தாள்.

அப்பொழுது சஞ்சலகுமாரியின் உத்தரவுப் பிரகாரம் வேலைக்காரி மஞ்சத்தின்மீது மெத்தையின்மேல் உதயபுரியை அழைத்துக் கொண்டுபோய்ப் படுக்கவைத்தாள். அங்கே அவளுக்கு வேண்டியபடி தாசிகள் உபசாரஞ் செய்தார்கள். கொஞ்ச நாழிகைக்கெல்லாம மூர்ச்சை தெளிந்தது. சஞ்சல குமாரி வேறே யாரும் பேகமுக்கு அவமானம செய்யக்கூடாதென்று உத்தரவு செய்திருந்ததுமல்லாமல் ஆகாரம் முதலான உபசாரங்கள் தன்னைக்காட்டிலும் அதிகமாய் உதயபுரிக்குச் செய்யவேண்டுமென்று நிர்மல குமாரியை நியமித்திருந்தாள்.

நிர்மலே.—அதெல்லாம் செய்கிறேன். ஆனால் அதிலிருந்து அவள் திருப்தியடைய மாட்டாள்.

சஞ்சலே.—ஏன்? வேறு என்ன கேட்கிறாள்!

நிர்மலா.—அவள் கேட்கிறது அரண்மனையில் இல்லை.

சஞ்சலே.—சாராயமோ? அது கேட்கிறபோது கொஞ்சம் கோமயம் கொடு.

உதயபுரி உபசாரங்களால் சந்தோஷமடைந்தாள். ஆனால் இராத்திரியில் சரியான காலம் வந்தவுடன், அவள் நிர்மலையைக் கூப்பிட்டு வணக்கத்துடன், "இம்லீபேகம்! கொஞ்சம் சாராயம் தயவுசெய்து தருவிக்க வேண்டும்" என்றாள்.

நிர்மலே வரவழைக்கிறேனென்று சொல்லி இராஜவைத்தியனை வரவழைத்தாள். இராஜவைத்தியன்வந்து ஏதோ மாத்திரைகொடுத்து, "ஷரபத் செய்து அதில் ஔஷதத்தைப் போட்டு, சாராயம் என்று குடிக்கச் சொல்லுங்கள்" என்று சொன்னான்.

நிர்மலே அப்படியே செய்துகொடுத்தாள். உதயபுரி குடித்து மிகுந்த திருப்தி யடைந்து, உயர்தரமான சாராயமென்று சொல்லிக் கொஞ்ச நேரத்துக்கெல்லாம் மயக்கத்தால் நித்திரை யடைந்தாள்.

நான்காம் அத்தியாயம்

ஜேப உன்னீஸா துர்கித்தல்

ஜேப உன்னீஸா தனியா யுட்கார்ந்துகொண்டிருந்தாள். வேலைக்காரிகள் இரண்டொருவர் பக்கத்தி லிருந்துகொண்டிருந்தார்கள். நிர்மலகுமாரியும் அப்போதைக் கப்போது விசாரித்துக் கொண்டிருந்தாள். உதயபுரிக்கு நடந்த வர்த்தமானமெல்லாம் காதிற் பட்டு ஜேப உன்னீஸா தன் விஷயமாய் ஆலோசனை செய்ய வாரம்பித்தாள்.

கடைசியில் நிர்மலகுமாரி அவளைச் சஞ்சல குமாரியினிடம் அழைத்து வந்தாள். அவள் அதிகக்கர்வமுமில்லாமலும் அதிக வணக்கமுமில்லாமலும் வந்து நின்று, மனத்தில் தான் அலங்கீர் பாதுஷாவின் மகளென்பதை மறந்துவிடக்கூடாதென்று தீர்மானித்துக் கொண்டாள்.

சஞ்சலகுமாரி அவளை வெகு ஆதரவுடன் வேறொரு ஆசனத்தி லுட்காரும்படி சொன்னாள். அவளுட்கார்ந்தவுடன் நானாவிஷயங்களைப்பற்றிப் பேசினாள். ஜேப உன்னீஸா ஸௌஜன்யமாய்ப் பதில் சொன்னாள். ஒருவர்க் கொருவர் விரோதம் வரக்கூடிய வார்த்தையை எடுக்கவேயில்லை. கடைசியில் சஞ்சலகுமாரி அவளுக்குச் சரியாய் உபசாரங்கள் செய்யும்படி உத்தரவு கொடுத்து அவளுக்கு அத்தர் தாம்பூலம் முதலானது கொடுத்தாள்.

ஆனால் ஜேப உன்னீஸா எழுந்து புறப்பட்டுப் போகாமல், "மகாராணி என்னை இவ்விடத்திற்கு அழைத்துவந்தது எதற்காக? அதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லையே" என்றாள்.

சஞ்சல.—வந்த சமாசாரம் தங்களுக்குச் சொல்லவில்லை. சொல்லாமலிருந்தாலும் பாதகமில்லை. யாரோ ஒரு ஜோஸியன் சொன்ன பிரகாரம் தங்களை யழைத்து வரவேண்டியதாயிற்று. தாங்கள் இன்றையதினம் தனியாய்ச் சயனஞ்செய்யவேண்டும். அறையின் கதவைத் திறந்து வைத்திருக்கவேண்டும். தங்களை வேறொருவரும் பார்க்காதபடி நான் உத்தரவு செய்கிறேன். உமக்கு ஒரு விதமான கெடுதியுமுண்டாகாது. இன்றைக்கு இராத்திரி உங்களுக்குச் சொப்பனம் வருமென்று குறிகாரன் சொல்லியிருக்கிறான். அப்படிக் கனாக் கண்டால் காலையில் அதை எனக்குச்சொல்ல வேண்டுமென்பதே என்னுடைய பிரார்த்தனை.

ஜேப உன்னீஸா கேட்டுச்சிந்தையுடன் சஞ்சலகுமாரியின் உத்தரவைப் பெற்றுக்கொண்டாள். நிர்மலகுமாரி ஜேபஉன்னீஸா டில்லியில் ரங்கமஹலில் எப்படி இருந்தாளோ அப்படியே அவளுக்கு ஆகாரம் முதலானவைகளெல்லாம் தயார் செய்யும்படி பார்த்துக் கொண்டாள். இராத்திரி வந்தவுடன், ஜேப உன்னீஸா படுத்துக்கொண்டாள். ஆனால் நித்திரை வரவில்லை. சஞ்சலகுமாரியின் உத்தரவுப் பிரகாரம் தனியாய்ப் படுத்துக்கொண்டிருந்தாள். கதவு திறந்திருந்தது. உத்தரவு மீறி நடந்தால் உதயபுரிக்குப் போல் தனக்கும் அவமானம் வந்துவிடுமென்ற பயம். கதவு திறந்திருந்ததால் யாராவது வந்து தன் மேல் துராசாரம் செய்வதற்காக இப்படி ஏற்பாடு செய்திருந்தாலுமிருக்கலாமென்று நினைத்தாள். அதனால் தூங்காமல் விழித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று தீர்மானம் செய்து கொண்டாள். ஆனால் பகலெல்லாம் அதிகக் கஷ்டத்துக்குட்பட்டிருந்ததால், அவள் தீர்மானத்துக்கு விரோதமாய்த் தூக்கம் வர வாரம்பித்தது. தூக்கத்தில் நடுவில் விழித்துக்கொள்வாள். தூக்கம் வந்தாலும் தூங்கப்படாது என்கிற எண்ணம் மனத்திலிருந்தது. தூக்கத்திலிருந்து விழித்துக்கொள்ளும் பொழுதெல்லாம் தன் அவஸ்தை ஞாபகத்துக்குவந்தது. டில்லி பாதுஷாவின் பெண்ணாயிருந்தது எங்கே! உதய

புரத்தில் கைதியாயிருப்பதெங்கே! மொகலாய ஸிம்மாஸனத்துக்கு உயர்ந்த இரத்தினமாயிருந்து காபூல்முதல் கோல்கொண்டா வரையிலுள்ள தேசங்களெல்லாம் யாருடைய கைபலத்தால் அரசாளப்பட்டுவந்ததோ அப்பேர்ப்பட்ட ராஜாதிராஜனுக்கு வலதுகை மாதிரியிருந்து தன் இஷ்டப்பிரகாரம் சிற்றரசர்களின் சுகத்துக்கும் நாசத்துக்கும் காரணமாயிருந்ததெங்கே? இன்று காடுமலைக்குநடுவிலுள்ள உதயபுரக்கோட்டைக்குள் பொறிக்குள் விழுந்த எலிபோல் அடைபட்டு அற்பராஜனாகிய ரூபநகரத்தரசன் பெண்ணுக்கு உட்பட்டு ஹிந்துவின் வீட்டில் எல்லோராலும் கீழ்ஜாதியென்று இகழப்பட்டிருப்பதெங்கே? இதைக்காட்டிலும் இறந்து போகிறது நல்லதல்லவா? நல்லதில்லாமல் வேறென்ன? எந்த மரணதண்டனையைத் தனக்குப் பிராணனைக் காட்டிலுமதிகமான மபாரகனுக்கு விதிக்கும்படி செய்தாளோ அந்த மரணம் நல்லதோ கெட்டதோ? மபாரகனுக்குக் கொடுத்தது விலைபற்றது. "ஹா—மபாரகா—மபாரகா—உன்னுடைய வீரிய காம்பீரியங்களினால் சாமானியமான பாம்பு விஷத்தை ஜயிக்கமுடியாமற் போயிற்றே? ஐயோ! உன்னுடைய நிர்மலமான சரீரமெல்லாம் ஸர்ப்பவிஷத்தால் நீலமாய்ப் போயிற்றே? இப்பொழுது இந்த உதயபுரத்தில் இந்த மகாபாபியான என்னைக்கடிக்க அப்பேர்ப்பட்ட ஸர்ப்பங் கிடைக்காதோ? ஹா—மபாரகா—நீ ஒருதரம் மறுபடியும் சரீரத்துடன் வந்து தரிசனம் கொடுத்துப் பாம்பை என்னைக் கடிக்கவிட்டு நான் சாகிறேனோ இல்லையோ பார்?" என்றாள்.

இப்படி ஜேபஉன்னீஸா சொல்லிக்கொண்டிருக்கும்பொழுது மறுபடியும் மபாரகனைச் சரீரத்துடன் பார்க்கவேண்டுமென்று கண்களைத் திறந்துகொண்டு படுத்துக்கொண்டிருந்தாள். பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே மபாரகன் சரீரியாய் எதிரே நிற்பதைக் கண்டாள். காணவே கண்மூடி மூர்ச்சையடைந்தாள்.

ஐந்தாம் அத்தியாயம்

ஜேப உன்னீஸாவின் வேண்டுகோள்

மறுநாள் ஜேப உன்னீஸா படுக்கையைவிட்டு எழுந்திருந்தபொழுது அவளைப் பார்த்தால் அடையாளமே தெரியவில்லை. ஏற்கனவே வாடி உலர்ந்து போயிருந்தாள். அன்று முன்னிலும் இரண்டு மடங்கு அதிகமாய் வாட்டமுண்டாயிருந்தது. இராத்திரி பகல் முழுவதும் மனிதன் நெருப்பின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தால் எப்படி யாவானோ அப்படியிருந்தாள் ஜேபஉன்னீஸா. அவள் எரிந்து சுட்டுப்போய்க்கொண்டிருந்தாள்.

வஸ்திராபரணங்கள் இல்லாமலில்லை. ஜேப உன்னீஸா இஷ்டமில்லாமல் உடுப்பு முதலியவை தரித்துக்கொண்டு, பிறர் சொல்லுகிறதைத் தட்டமுடியாமல் கொஞ்சம் பலகாரமும் செய்தாள். பிறகு உதயபுரியைப் பார்க்கப்போனாள். பார்க்கவும், உதயபுரி ஒண்டியாய் உட்கார்ந்துகொண்டிருந்தாள். எதிரில் மேரியின் ஒரு பிரதிமையையும் சிலுவையையும் வைத்துக்கொண்டிருந்தாள். வெகு காலமாய் உதயபுரி இயேசுகிறிஸ்துவையும் அவர் தாயையும் மறந்திருந்தாள். இப்பொழுது கஷ்டதசை வந்ததும் அவர்கள் ஞாபகம் வந்தது. ஏழைகள் மழைகாலம் வந்தவுடன் பழங்குடைகளை வெளியே எடுப்பதுபோல் இன்றையதினம்சிலுவையையும், மேரியின் படத்தையும் வெளியே எடுத்து வைத்துக்கொண்டாள். ஜேப உன்னீஸா பார்க்கும்பொழுது உதயபுரியின் கண்களிலிருந்து நீர் தாரைதாரையாய்ச் சொரிந்துகொண்டிருந்தது. ஜேப உன்னீஸா உதயபுரி இவ்வளவு அழகாயிருந்ததை ஒருநாளும் கண்டதில்லை. அவள் சுபாவமாய் வெகு அழகுள்ளவள். ஆனால் கர்வத்தினாலும், விலாஸங்களாலும், பொறாமை முதலான குணங்களாலும் அந்த அழகெல்லாம் மாறுபட்டிருந்தது. இன்றையதினம் கண்ணீரினால் அந்த விகிருதியெல்லாம் அலம்பப்பட்டு அந்த அபூர்வமான அழகு மலர்ந்து பிரகாசித்தது.

உதயபுரி ஜேப உன்னீஸாவைப் பார்த்து தன் துக்க சமாசாரத்தைச் சொல்லத்தொடங்கி, "நான் முதலில் அடிமையாயிருந்தேன். அடிமையாய் விற்கப்பட்டேன். ஏன் அடிமையாகவே இல்லாமற் போனேன்? எதற்காக என் தலையில் இந்த ஐசுவரியமெல்லாம் எழுதியிருந்ததோ?" என்று சொல்லி நிமிர்ந்து ஜேப உன்னீஸாவைப் பார்த்து, "உனக்கும் இந்த அவஸ்தை ஏன் வந்தது? உனக்கு நேற்று என்ன நேர்ந்தது? இந்தத் துஷ்டை உன்னை எப்படியாயினும் அவமதித்தாளோ?" என்று கேட்டாள்.

ஜேப உன்னீஸா பெருமூச்சுவிட்டு, "துஷ்டையினால் முடியுமோ? கடவுள் செய்தது" என்றாள்.

உதயபுரி.—எல்லாம் அவர் செய்ததுதான். என்ன ஆயிற்று? சொல்லக் கூடாதோ?

ஜேப.—இப்பொழுது அதையெல்லாம் சொல்ல முடியாது. சாகிறபொழுது சொல்லிவிட்டுச் சாகிறேன்.

உதயபுரி.—எப்படியாவது ஆகட்டும். கடவுள் ரஜபுத்திரரை இந்தக் கர்வத்திற்காகத் தண்டிப்பார்.

"இதில் ரஜபுத்திரர்மேல் என்ன பிசகு? ஒன்றுமில்லை!" என்று சொல்லி ஜேப உன்னீஸா மௌனமாயிருந்தாள். உதயபுரியும் ஒன்றும் சொல்லவில்லை. கடைசியில் ஜேப உன்னீஸா, "சஞ்சலகுமாரியைப் பார்க்கப் போகிறேன்" என்றாள்.

உதயபுரி.—உன்னைக் கூப்பிட்டாளா என்ன?

ஜேப.—இல்லை.

உதயபுரி.—அப்படியானால் வலுவில்போய் பார்க்கவேண்டாம். நீ பாதுஷாவின் மகள்.

ஜேப.—என் சொந்தக் காரியத்துக்காகப் போய்ப் பார்க்கவேணும்.

உதயபுரி.—போய்ப் பார். எத்தனை மோகரு கொடுத்தால் இந்தத் துஷ்டர்கள் நம்மை விடுவார்களென்று அவளிடமிருந்து தெரிந்துகொள்.

தெரிந்துகொண்டு வருகிறேனென்று சொல்லி, ஜேப உன்னீஸா புறப்பட்டுப்போய் சஞ்சலகுமாரியைப் பார்த்தாள். முதல்நாள் போலவே சஞ்சலை மரியாதையெல்லாம் செய்து க்ஷேமசமாசாரம் விசாரித்துக் கடைசியில், "நன்றாய் நித்திரை வந்ததோ?" என்று கேட்டாள்.

ஜேப.—இல்லை. தங்கள் உத்தரவுப்பிரகாரம் நடக்கவேண்டுமென்கிற பிரயத்தனம் செய்ததால், நித்திரை சரியாய் வரவில்லை.

சஞ்சலை.—ஆனால் கனவு ஒன்றும் வரவில்லையோ?

ஜேப.—கனவு ஒன்றும் காணவில்லை. ஆனால் பிரத்தியக்ஷமாய் ஏதோ பார்த்தேன்.

சஞ்சலை.—நல்லதோ? கெட்டதோ?

ஜேப.—நல்லதோ கெட்டதோ சொல்லமுடியாது. அந்த விஷயத்தைப்பற்றித் தங்களை நான் பிரார்த்திக்கவேண்டுவது ஒன்றிருக்கிறது.

சஞ்சல.—சொல்லலாம்.

ஜேப.—நான் இன்னொரு தரம் அதைப் பார்க்கமுடியுமா?

சஞ்சலை.—ஜோஸியனைக் கேட்காமல் சொல்லமுடியாது. ஐந்தாறு நாட்களுக்கெல்லாம் அவனுக்கு ஆளனுப்பிக் கேட்டுவரச் சொல்லுகிறேன்.

ஜேப.—இன்றைக்கே அனுப்பக்கூடாதோ?

சஞ்சலை.—அவ்வளவு அவசரமென்ன, ஷஹஜாதை?

ஜேப.—அவசரமா! இந்த நிமிஷத்தில் அதைக் காண்பித்தால் உங்களுக்கு அடிமையாவதற்குச் சித்தமாயிருக்கிறேன்.

சஞ்சல.—ஷஹஜாதா! நீ ஆச்சரியகரமான வார்த்தை சொல்லுகிறாய்? அது காண்பிக்கக் கூடிய சாமானா?

ஜேப உன்னீஸா பதில் சொல்லவில்லை. அவள் கண்களிலிருந்து நீர்சொரிய வாரம்பித்தது. பார்த்தும் சஞ்சலகுமாரி தயவு காண்பிக்காமல் "நீங்கள் ஐந்தாறு நாட்கள் காத்துக்கொண்டிருந்தால், யோசித்துச் சொல்லுகிறேன்" என்றாள்.

அப்பொழுது ஜேப உன்னீஸா ஹிந்துமுஸல்மானர் என்கிற பேதத்தை மறந்துவிட்டாள். தான் போகப்படாத இடத்துக்குப் போனாள். சஞ்சலகுமாரி உட்கார்ந்திருந்த கம்பளத்தின் மேல் போய் நின்றாள். பிறகு இருந்தாற்போலிருந்து கத்தரிக்கப்பட்ட கொடியைப்போல் சஞ்சலகுமாரியின் பாதத்தின்மேல் தன் முகத்தை வைத்துக்கொண்டு அவள் கால்களின் மேல் கண்ணீர்விட்டு, "எனக்குப் பிராணரக்ஷணம் செய்யவேண்டும். இல்லாவிட்டால் நான் இப்போதே உயிர்விடுவேன்!" என்றாள்.

சஞ்சலகுமாரி அவளை யெழுப்பி உட்காரவைத்தாள். அவளும் ஹிந்து முஸல்மானர் என்கிற ஜாதிபேதத்தை மனத்தினால் நினைக்கவுமில்லை. அவள், "ஷஹஜாதே! நீ நேற்று இராத்திரி எப்படிக் கதவைத் திறந்துவிட்டுப் படுத்துக்கொண்டிருந்தாயோ, அப்படியே இன்று இராத்திரியும் செய். அப்படிச் செய்தால் உன் இஷ்டம் நிறைவேறும்!" என்றாள். இப்படிச் சொல்லி ஜேப உன்னீஸாவை

அனுப்பிவிட்டாள். இதுவரையில் உதயபுரி ஜேப உன்னீஸாவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். ஆனால் அவள் வரவில்லை. உடனே உதயபுரி தானேபோய்ச் சஞ்சலகுமாரியைப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். அனுமதியுடன் உள்ளே வந்து சஞ்சலகுமாரியைப் பார்த்து எத்தனை மோகரு கொடுத்தால் தனக்கு விடுதலையாகுமென்று கேட்டாள்.

சஞ்சலை, "பாதுஷா பாரதவருஷத்திலுள்ள எல்லாப் பள்ளிவாசல்களையும், விசேஷமாய் டில்லியிலுள்ள ஜும்மா மஸ்ஜீதையும் இடித்துவிட்டு, மயிலாசனத்தை இவ்விடத்தில் கொண்டுவந்து கொடுத்து வருஷாவருஷம் கப்பங் கட்டுவதற்கு ஒப்புக்கொண்டால் உன்னை விடுதலை செய்கிறேன்" என்றாள்.

உதயபுரி கோபத்தால் தைரியமடைந்து, "மாட்டுக்காரர்களுக்கு இவ்வளவு கர்வம் இருப்பது ஆச்சரியம்!" என்றாள்.

சொல்லிவிட்டுப் புறப்பட்டுப் போகிறதாயிருந்தாள். சஞ்சலகுமாரி, "உத்தரவில்லாமல் போகிறதெங்கே? நீ மாடு மேய்க்கிறவர்களுக்கு அடிமையா யிருக்கிறாய். அது தெரியாதோ?" என்று சொல்லி வேலைக்காரியைப் பார்த்து இந்தப் புதிய அடிமையை அழைத்துக்கொண்டுபோய் மற்ற இராஜமகிஷிகளுக்கெல்லாம் காண்பித்து, இவள் தாராசேகன் விற்ற அடிமை என்று சொல் !" என்றாள்.

உதயபுரி அழுதுகொண்டு வேலைக்காரியுடன் போனாள். வேலைக்காரி அவளை ராஜஸிம்ஹன் மகிஷிகளுக் கெல்லாம் காண்பித்துவிட்டு அழைத்துவந்தாள்.

நிர்மலை சஞ்சலகுமாரியினிடம் வந்து, "மகாராணி! முக்கியமான சமாசாரம் ஏதோ மறந்துவிட்டாற்போல் தோன்றுகிறது. எதற்காக உதயபுரியைப் பிடித்துக்கொண்டு வந்திருக்கிறது ! ஜோஸியன் சொன்னது ஞாபகத்தில் இல்லையோ ?" என்றாள்.

சஞ்சலகுமாரி சிரித்துக்கொண்டு, "அது மறக்கவில்லை. இன்றைக்குப் பேகம் ரொம்ப வருத்தமடைந்ததால், அதிகத் தொந்தரவு கொடுக்கவில்லை. ஆனால் அவள் தானாகவே என் மனத்திலுள்ள இரக்கத்தையெல்லாம் வரண்டு போகும்படி செய்கிறாள்" என்றான்.

ஆறாம் அத்தியாயம்

ஜேப உன்னீஸாவின் காதலன்

பாதி இராத்திரியாயிற்று. எல்லோரும் நிசப்தமாய்த் தூங்கிக்கொண்டிருந்தார்கள். பாதுஷாவின் மகள் நல்ல மெத்தையின்மேல் படுத்துக்கொண்டு கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தாள். இராத்திரி அன்று பயங்கரமாயிருந்தது. ஆகாயம் மேகங்களால் மூடப்பட்டிருந்தது. காற்று பலமாயடித்துக்கொண்டிருந்தது. ஜன்னல் வழியாய்த் தூரத்தில் காணப்பட்ட மலைகளிலெல்லாம் இருட்டு. ரஜபுத்திரர் சேனையிருந்த விடத்தில்மாத்திரம் அநேக தீபங்கள் எரிந்துகொண்டிருந்தன. பாக்கி இடங்களிலெல்லாம் சப்தமே இல்லை. அந்தகாரமான இருட்டு. அப்போதைக்கப்போது சிப்பாய்களின் துப்பாக்கிச் சத்தம் எதிரொலிப்பது பயங்கரமா யிருந்தது. இடி, பீரங்கியின் சத்தம் ரஜபுத்திரர் குதிரை லாயங்களில் பயந்து வெருளுகிற குதிரைகளின் கனைப்புச் சத்தம்,—இப்பேர்ப்பட்ட நடு ராத்திரியில் எல்லாச் சத்தங்களையும் கேட்டு மனத்தில் துக்கமடைந்த ஜேப உன்னீஸா, "இப்பொழுது கேட்ட பீரங்கிச் சத்தம் மொகலாயரின் பீரங்கியின் சப்தமென்று தோன்றுகிறது. இப்பேர்ப்பட்ட பீரங்கிச் சத்தம் நான் வேறெங்கும் கேட்டதில்லை. என் தந்தையின் பீரங்கிதான். இப்பேர்ப்பட்ட பீரங்கிகள் நம்முடைய சைனியத்தில் நூற்றுக்கணக்கா யிருக்கின்றன. ஆனால் ஒன்றுகூட எனக்கு உபயோகமில்லை. அந்தப் பீரங்கியின் வாயில் விழுந்து அந்த நெருப்பினால் இந்தச் சரீரத்திலுள்ள நெருப்பை அணைத்துக்கொள்ளலாமா ! யானையின் காலின்கீழ் விழுந்து பிராணனை விட்டிருக்கலாம். ஏன் அப்படிச் செய்யவில்லை? சாகிறதற்கு இஷ்டமிருந்தால் ஏன் அதற்குப் பிரயத்தனஞ் செய்யவில்லை. இப்பொழுதும் தேகத்தில் அநேக வைரங்களிருக்கின்றன. வைரத்தை அரைத்துக் குடித்து ஏன் பிராணனை விடக்கூடாது" என்று இப்படியெல்லாம் யோசித்துக்கொண்டிருந்தாள்.

அந்தச் சமயத்தில் திறந்திருந்த வாசற்படி வழியாய்க் காற்று பலமாயடித்து எரிந்துகொண்டிருந்த விளக்குகளையெல்லாம் அணைத்துவிட்டது. இருட்டாகவே, ஜேப உன்னீஸாவுக்குக் கொஞ்சம் பயமுண்டாயிற்று. பயப்பட்டு

பிடாரனுக்கு அஞ்சிப் பாம்பு எலிக்கு உரவு ஆச்சுதாம்.

மனத்தில், 'எதற்காகப் பயம் ? சாகிறதற்குச் சித்தமா யிருக்கிறவர்கள் யாருக்குப் பயப்படவேண்டும்? நேற்றுச் செத்துப்போன மனிதனை கண்டேன். இன்னும் பிழைத்திருக்கிறேன். செத்துப்போன மனிதன் எங்கே இருக்கிறானோ அங்கே போகிறது நிச்சயம். பின்னை யாருக்குப் பயப்படவேண்டும் ? அப்படி யானால் சுவர்க்கம் என் அதிர்ஷ்டத்தில் எழுதியிருக்கவில்லையோ ? நரகத்துக்குப் போக வேண்டுமோ? அதனால்தான் இவ்வளவு பயம்! நான் சுவர்க்கம் நரகம் என்கிற வார்த்தைகளை இத்தனை நாட்களாய் நம்பினதேயில்லை. நரகமுமில்லை, சுவர்க்கமுமில்லை என்று எண்ணியிருந்தேன். கடவுள் இருக்கிறாரென்றுகூட நம்பவில்லை. ஜாதி தர்மம் இன்னதென்றும் அறிந்தவளல்ல! கேவலம் சுகம் இன்பம் இவைகளை மாத்திரந்தான் அறிந்திருந்தேன். அல்லா ரஹீம்! நீர் எனக்கு எதற்காக ஐசுவரியத்தைக் கொடுத்தீர். ஐசுவரியத்தினால்தான் என் வாழ்க்கையெல்லாம் விஷமாய்ப் போயிற்று. அந்த ஐசுவரியமதத்தினால்தான் உண்மை அறிந்துகொள்ளவில்லை. ஐசுவரியத்தில் சுகமில்லை என்று தெரியவில்லை. என்னைப்போல் யாருக்கு ஐசுவரிய மிருக்கிறது. ஆனால் என்னைப் போல் துக்கப்படுவோர் யார் இருக்கிறார் ?' என்றெல்லாம் நினைத்துக்கொண்டிருந்தாள்.

மெத்தையின்மேல் எறும்போ வேறு ஏதோ பூச்சியோ இருந்தது. இரத்தினமிழைத்த படுக்கையில் பூச்சி ஒன்றும் வரக்கூடாது என்று ஒருவராலும் தடுக்க முடியவில்லை. எறும்பு ஜேபஉன்னீஸாவைக் கடித்தது. அது கடித்துக் கொஞ்சம் எரிந்ததினால் கொஞ்சம் வருத்தப்பட்டாள். பிறகு தனக்குள் தானே சிரித்துக்கொண்டு, "பூச்சிகடித்தது பொறுக்கமுடியவில்லையே ! ஒரு பூச்சி கடித்தது பொறுக்க முடியாத நான் என் பிராணவல்லபனைப் பாம்பைவிட்டுக் கடிக்கும்படி செய்தேனே! அப்பேர்ப்பட்ட விஷப்பாம்பை இங்கே கொண்டுவந்து எனக்குக் கொடுக்கிறவர் ஒருவரும் இல்லையே. பாம்பு இல்லாவிட்டால், மபாரகனையாவது கொண்டுவருபவர் யாருமில்லையே" என்றாள்.

மனத்தில் துக்கம் ஜாஸ்தியாகிக் கலங்கும்பொழுது சிந்தையிலாழ்ந்திருப்பதால் மனத்திலிருப்பவைகளையெல்லாம் வெளியில் வாயால் உரக்கச்சொல்லிவிடுவதுண்டல்லவா? அதேப் பிரகாரம் ஜேப உன்னீஸா மேலே சொன்னதையெல்லாம் தானே உரக்கச் சொல்லிக்கொண்டாள். அந்த அந்தகாரமான இராத்திரியில் காற்று பலமாயடித்துக்கொண்டிருக்கும்பொழுது, பாம்பு இல்லாவிட்டால் மபாரகனையாவது கொண்டுவருபவர் யாருமில்லையே என்று சொல்லிக் கொண்டதும், இருட்டிலிருந்து யாரோ ஒருவன், "மபாரகனிடம் சேர்ந்தால், நீ சாகமாட்டாயோ?" என்று பதில் சொன்னான்.

'இது என்ன ? ' என்று மனத்தில் நினைத்துக் கொண்டு ஜேப உன்னீஸா படுக்கையை விட்டு எழுந்துவந்து உட்கார்ந்தாள். ஸங்கீதத்தைக் கேட்டுப் பெண்மான் தலைநிமிர்ந்து கேட்பது போல் அப்படியே உட்கார்ந்துகொண்டு காதுகொடுத்துக் கேட்டு, "இதென்ன, இதென்ன கேட்டது "? என்றாள். "அது யார் குரல் ?" என்ற பதில் வந்தது.

ஜேப உன்னீஸா.—யாரது ? சுவர்க்கத்திற்குப் போனவர்களுக்கும் குரலுண்டோ? அவர்கள் சாயை மாத்திர மாகிறார்களல்லவா ? நீ எப்படிச் சுவர்க்கத்திலிருந்து வந்து பேசினாய்? மபாரகா! நீ நேற்று வந்து தரிசனம் கொடுத்தாய். இன்று உன் குரல் கேட்கிறது. நீ உயிரோடிருக்கிறாயோ ? இறந்துவிட்டாயோ ? அலிருத்தீன் வந்து சொன்னது பொய்யோ ? நீ உயிரோடிருந்தாலும் சரி, செத்துப்போயிருந்தாலும் சரி, என்பக்கத்தில் இந்த மஞ்சத்தின் மேல் ஒரு முகூர்த்தம் உட்காரப்படாதா ! நீ சாயையா யிருந்தாலும் எனக்குப் பயமில்லை. ஒருதரம் வந்து உட்கார்ந்துகொள்.

பதில்:—எதற்காக ?

ஜேப உன்னீஸா (பரபரப்புடன்) நான் சொல்லவேண்டுவது கொஞ்சமிருக்கிறது. நான் ஒருபோதும் சொல்லாததைச் சொல்லுகிறேன்.

மபாரகன் (வந்து நின்றது மபாரகனென்று சொல்லவேண்டிய அவசியமில்லை) அந்த இருட்டில் மஞ்சத்தின்மேல் வந்து ஜேப உன்னீஸாவின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தான். ஜேப உன்னீஸாவின் கை அவன் கையை ஸ்பரிசித்தது. ஜேப உன்னீஸாவின் சரீரம் சந்தோஷத்தினால் மயிர்க்கூச்செறிந்து ஆநந்தத்தில் முழுகலாயிற்று. இருட்டில் முத்துப் போன்ற கண்ணீர்த்துளிகள் கன

பிடாரி வரம் கொடுத்தாலும், ஓச்சன் வரம் கொடுக்கிறது அரிது.

னங்களில் சொரிந்தன. ஜேப உன்னீஸா ஆதரவுடன் மபாரகன் கையை எடுத்துத் தன் கையில் வைத்துக்கொண்டு, "பிராணநாந்தா! நீ சாயையல்ல. நீ மறந்துவிட்டாலும், நான் மறக்கமாட்டேன். நான் உனக்குரியவள். இனி உன்னை விடமாட்டேன்" என்றாள்.

பிறகு ஜேப உன்னீஸா மஞ்சத்திலிருந்திறங்கி, மபாரகன் பாதங்களில் விழுந்து "என்னை மன்னிக்கவேண்டும். நான் ஐசுவரிய மதத்தால் பைத்தியம்பிடித்திருந்தேன். நான் இன்று ஐசுவரியத்தை யெல்லாம் துறந்தேன் என்று சபதம் செய்கிறேன். நீ என் குற்றத்தை மன்னித்தால் மறுபடி டில்லிக்கு நான் போகவில்லை. நீ உயிரோடிருக்கிறேன் என்று சொல்!" என்றிப்படி யெல்லாம் புலம்பினாள்.

மபாரகன் பெருமூச்சுவிட்டு, "நான் உயிரோடிருக்கிறேன். ஒரு ரஜபுத்திரன் என்னைக் கோரியிலிருந்து எடுத்துச் சொஸ்தம்செய்து பிராணதானம் செய்தான். நான் அவனுடன் இங்கே வந்தேன்" என்றான்.

ஜேப உன்னீஸா அவன் பாதங்களை விடவில்லை. அவள் கண்ணீரினால் அவன் பாதங்கள் நனைந்தன. மபாரகன் அவள் கையைப் ப்பிடித்து எழுப்புவதற்குப் பார்த்தான். ஆனால் அவள் எழுந்திருக்காமல், "என்னை தயவுசெய்து மன்னிக்கவேண்டும்" என்றாள்.

மபாரகன், "உன்னை மன்னித்து விட்டேன். மன்னிக்காமலிருந்தால் உன் கிட்ட வந்திருக்கமாட்டேன்" என்றான்.

ஜேப.—அப்படி மன்னித்து என்பேரில் தயவுசெய்து வந்திருந்தால், என்னை அங்கீகரிக்க வேண்டும். அங்கீகரித்து, இஷ்டமிருந்தால் என்னைப் பாம்பின் வாயில் போடு. அது இஷ்டமில்லா விட்டால் வேறு என்ன செய்ய வேண்டுமோ அப்படிச் செய். இனிமேல் என்னைக் கைவிடக்கூடாது. நான் டில்லிக்கு இனிமேல் போகிறதில்லை யென்று பிரமாணம் செய்கிறேன். அலங்கீரின் ரங்கமகலுட்குள் இனிமேல் பிரவேசிக்கிறதில்லை. நான் ராஜ வம்சத்தில் பிறந்தவர்களை விவாகம் பண்ணிக் கொள்ளவும் மாட்டேன். உன்னுடன் வருகிறேன்.

மபாரகன் எல்லாவற்றையும் மறந்தான். ஸர்ப்பங் கடித்ததையும் மறந்துவிட்டான். தான் சாகவேண்டுமென்று பண்ணிக்கொண்ட சங்கற்பத்தையும் மறந்தான். தரியாவையும் மறந்துவிட்டான். கேவலம் ஜேப உன்னீஸாவின் அழகுக்கடலில் மூழ்கியிருந்தான். அவளுடைய பிரீதி வசனங்கள் அவனுக்கு வெகு இனிப்பாயிருந்தன. ஷஹஜாதையின் கர்வம் பொடியானதுகண்டு அவன் மனங்கரைந்தது. அப்பொழுது அவன், "ஏழையான என்னை விவாகம் பண்ணிக்கொள்ள உனக்குச் சம்மதமா?" என்று கேட்டான்.

ஜேப உன்னீஸா கையைக் கூப்பிக்கொண்டு, "அந்தப் பாக்கியம் என் தலையில் எழுதியிருக்கிறதா?" என்றாள்.

பாதுஷாவின் குமாரி பாதுஷா குமாரியாயில்லை. சாதாரண ஸ்திரீ யாயினாள்.

மபாரகன், "அப்படியானால் பயமில்லாமல் ஸங்கோசமில்லாமல் என்னுடன் வா!" என்றான்.

மபாரகன் லாந்தர் ஏற்றிக்கொண்டு அறையின் வெளியேவந்து நின்றான். அவன் சொன்னபிரகாரம் ஜேப உன்னீஸா உடுப்பு உடுத்துக் கொண்டாள். மபாரகன் அவள் கையைப் பிடித்துக் கொண்டு வெளியே அழைத்துக் கொண்டு வந்தான். அங்கிருந்த வேலைக்காரிகளில் இரண்டுபேர்கள் அவன் உத்தரவுப் பிரகாரம் கூடவந்தார்கள். போகும்போது மபாரகன் ஜேப உன்னீஸாவினிடம், "அரசன் அந்தப்புரத்தில் புருஷர் வரக்கூடாது. அதிலும் மூஸல்மானர் வாசனைகூட இருக்கப்படாது. அதனால்தான் இராத்திரி வந்தேன். அதுவும் மகாராணியின் உத்தரவுப்பிரகாரம் வந்தேன். ஸிம்ஹத்துவாரம் வரையில் வேலைக்காரிகள் வருவார்கள். வெளியில் எனக்கு ஒரு குதிரையும் உனக்கு ஒரு பல்லக்கும் தயாராயிருக்கிறன" என்று சொன்னான்.

வெளியேவந்து அவர்கள் தங்கள் தங்கள் வாகனங்களிலேறிக்கொண்டார்கள். உதயபுரத்திலும் ஏழெட்டு மூஸல்மானர் வியாபாரத்துக்காக வாசஞ்செய்துகொண் டிருந்தார்கள். அவர்கள் ராணாவினிடம் உத்தரவு வாங்கிக்கொண்டு நகருக்குச் சமீபத்தில் ஒரு சிறிய பள்ளிவாசல் கட்டிக்கொண் டிருந்தார்கள். மபாரகன் ஜேப உன்னீஸாவை அந்த மசூதிக்கு அழைத்துக் கொண்டுபோனான். அங்கே ஒரு மௌல்வியும் ஒரு பக்கீர் சாக்ஷியும் தயாராக விருந்தார்கள். அவர்கள் உதவியால் மபாரகன் ஜேப உன்னீ

ஸாவைக் குரான் விதிப்பிரகாரம் விவாகஞ் செய்துகொண்டான்.

பிறகு மபாரகன் ஜேப உன்னீஸாவைப் பார்த்து, "உன்னை எங்கேயிருந்து அழைத்து வந்தேனோ அங்கேயே கொண்டுவிடுகிறேன். ஏனென்றால், நீ இப்போது மகாராணாவின் கைதியாயிருக்கிறாய். ஆனால் உனக்குச் சீக்கிரம் விடுதலையாகும்" என்று சொல்லி, மபாரகன் அவளை மறுபடியும் அவள் படுக்கையில் கொண்டுவந்து விட்டான்.

ஏழாம் அத்தியாயம்

நிர்மலையின் புரு

மறுநாட் காலையில் ஜேப உன்னீஸா சஞ்சல குமாரியின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு மலர்ந்தமுகத்துடன் பேசிக்கொண்டிருந்தாள். இரண்டு இராத்திரி விழித்துக்கொண்டிருந்ததால் சரீரம் வாடியிருந்தது. இரத்தினங்களாலும் புஷ்பங்களாலும் அலங்கரித்துக்கொண்டு ரங்கமகலில் ஒவ்வொரு நிலைக்கண்ணாடியிலும் தன்னழகைப் பார்த்து ஆநந்தப்பட்டுக்கொண்டிருந்த ஜேபஉன்னீஸாவல்ல. இவள் பாதுஷாவின் பெண் கேவலம் இன்பங்களுக்காகவும் சுகங்களுக்காகவும் மாத்திரம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறாளென்று நினைத்துக்கொண் டிருந்த ஜேப உன்னீஸாவல்ல. ஜேப உன்னீஸா பாதுஷாவின் பெண்ணும் ஸ்திரீதானென்றும் அவள் இதயமும் ஸ்திரீ இதயமென்றும் பிரீதியில்லாத ஸ்திரீயின் இதயம் ஜலமில்லாத நதிக்குச் சமானமென்றும் அறிந்து கொண்டாள்.

ஜேப உன்னீஸா கபடமில்லாமல் கர்வத்தை விட்டு சென்ற இராத்திரிநடந்த விருத்தாந்தத்தையெல்லாம், சஞ்சலகுமாரிக்கு விவரமாய்த் தெரிவித்தாள். சஞ்சலைக்கு முன்னமேயே தெரிந்திருந்தது. ஜேப உன்னீஸா சமாசாரம் சொன்ன பிறகு, "மகாராணி! என்னை இங்கே இனி வைத்துக்கொள்வதில் தங்களுக்குப் பிரயோசனமென்ன? நான் அலங்கீர் பாதுஷாவின் மகளென்பதை மறந்துவிட்டேன். தாங்கள் என் தகப்பனாரிடம் அனுப்பினாலும் போகிறதற்கு எனக்கு இஷ்டமில்லை. போனாலும் என் பிராணன் தப்புமென்று தோன்றவில்லை. ஆனதால், என்னை விடுதலை செய்தால், என் யஜமானனுடன் அவன் சுதேசமாகிய துர்க்கிதேசத்திற்குப் புறப்பட்டுப் போவேன்" என்றாள். அது கேட்டு சஞ்சல குமாரி, "இதற்குப் பதில் நான் சொல்ல முடியாது. மகாராணாவே சொல்லத்தக்கவர். அவர் உன்னை என்னுடன் வைத்துக்கொண் டிருக்கும்படி சொல்லியனுப்பின பிரகாரம் இங்கே வைத்துக்கொண்டிருந்தேன். இப்பொழுது உன் விஷயமாய் நடத்தியிருக்கிற காரியங்களுக்கு ராணாவின் சேனாதிபதியான மாணிக்கலாலன் ஜவாப்தாரியா யிருக்கிறான். நான் மாணிக்கலால ஸிம்ஹனுக்கு ரொம்ப கடமைப்பட் டிருப்பதால் அவன் வார்த்தைக் கொப்புக்கொண்டு இவ்வளவுக்கு இடங் கொடுத்தேன். ஆனால் விடுதலைசெய்யும்படி யாரும் என்னிடத்தில் சொல்லவில்லை. அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லமுடியாது" என்றாள்.

ஜேப உன்னீஸா விசனத்துடன், "மகாராணாவுக்கு இந்த என் பிரார்த்தனையைத் தாங்கள் தெரிவிக்கக்கூடாதோ? அவர் தளம் இருக்குமிடம் சமீபந்தானே. நேற்று இராத்திரி அவர் இறங்கியிருந்தவிடத்தில் தீபம் எரிந்தது என் கண்ணுக்குத் தெரிந்ததே" என்றாள்.

சஞ்சலை.—மலையானபடியால் சமீபத்திலிருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால் அது அவ்வளவுகிட்ட இல்லை. நாங்கள் பருவத தேசங்களி லிருப்பதால் அது எங்களுக்குத் தெரியும். நீங்கள் காஸ்மீரதேசம் போயிருக்கிறதால் தெரிந்திருக்கலாம். அதுபோகட்டும். ஆள் அனுப்புவது கஷ்டமில்லை. அனுப்பினாலும் ராணா இதற்கு ஒப்புக்கொள்வாரென்ற நம்பிக்கை எனக்கு இல்லை. ஒருக்கால் உதயபுரத்தின் இந்த அற்ப சைனியம் மொகலாயராஜ்யத்தை இந்த ஒரே யுத்தத்தில் துவம்ஸம்செய்து பாதுஷாவுடன் சமாதானம் செய்யவேண்டிய அவசியமில்லாதிருந்தால், உன்னை உன் எஜமானனுடன் அனுப்புவதற்கு அனுமதி கொடுப்பதற்கு அட்டியிராது. அப்படியாகாமல் பாதுஷாவுடன் ஸந்திசெய்யவேண்டி வந்தால் உங்களை யெல்லாம் பாதுஷாவினிடம் அனுப்பும்படி வரும்.

ஜேப.—அப்படியானால் என்னை யமன் வாயில எறிந்த மாதிரியாகும். இந்த விவாக விருத்தாந்தம் கேட்டால் எனக்கு என் தகப்பனார் விஷமிட்டுவிடுவார். என் கணவன் பெயர் கூட பாக்கி நிற்காது. அவன் டில்லிக்குப்போக

மாட்டான். போனால் மரணம் நிச்சயம். இந்தக் கலியாணம் செய்துகொண்டதனால் ஒரு விதமான சுகமுமில்லாமற் போய்விடும்.

சஞ்சலை.—ஒன்றும் கெடுதியுண்டாகாதபடி ஏதாவது ஒரு உபாயம் செய்யலாமென்று தோன்றுகிறது.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது நிர்மலகுமாரி அவ்விடம் ஏதோ மனக்கலக்கத்துடன் வந்தாள்.

சஞ்சலை.—ஏன் இவ்வளவு மனக்கலக்கம், நிர்மலா?

நிர்மலை.—விசேஷ சமாசாரமுண்டு.

அப்போது ஜேப உன்னிஸா எழுந்திருந்து புறப்பட்டுப்போனாள்.

சஞ்சலை.—யுத்த சமாசாரந்தானோ!

நிர்மலை.—ஆமாம்.

சஞ்சலை.—அதை பராபரியாய்க் கேட்டேன். எலி வளைக்குள் நுழைந்தது. மகாராணா வளையின் வாயை மூடிவிட்டார். எலி வளைக்குள்ளேயே வெந்து போகுமென்று கேள்விப்பட்டேன்.

நிர்மலை.—இன்னொரு சமாசாரமிருக்கிறது. எலிக்கு ரொம்ப பசிக்கிறதாம். என் புறு திரும்பி வந்திருக்கிறது. பாதுஷா விட்டிருக்கிறான். அதன் காலில் ஒரு சீட்டும் கட்டியிருந்தது.

சஞ்சலை.— சீட்டைப் பார்த்தாயோ?

நிர்மலை.— பார்த்தேன்.

சஞ்சலை.— யார் பேருக்கு?

நிர்மலை.— இம்லீ பேகம் பேருக்கு.

சஞ்சலை.— என்ன எழுதியிருக்கிறது?

நிர்மலை காகிதத்தை எடுத்துச் சில பாகத்தை வாசித்துக் காண்பித்தாள். அதிலெழுதியிருந்ததென்ன வென்றால்:—

"நான் உன்னிடத்தில் எப்படி சிநேகவிசுவாசம் வைத்தேனோ அப்படி ஒருநாளும் ஒருவரிடத்திலும் விசுவாசம் வைக்கவில்லை. நீயும் நான் சொன்னபிரகாரம் இருந்தாய். இப்போது டில்லீசுவரன் ஆபத்திலகப்பட்டுக்கொண்டிருக்கிறான். ஜனங்கள் மூலமாய்க் கேட்டிருக்கலாம். ஆகாரமில்லாமல் சாகப்போகிறேன். டில்லி பாதுஷா இன்று ஒருதுண்டு ரொட்டிக்காக யாசிக்கவேண்டியிருக்கிறது. உபகாரம் செய்கிறவர் ஒருவருமில்லை. முடியுமானால் நீ யாவது செய். இப்போது செய்கிற உபகாரத்தை ஒருநாளும் மறக்கமாட்டேன்.

சஞ்சலை.— (கேட்டு) நீ என்ன உபகாரம் செய்தாய்?

நிர்மலை.— நான் என்ன செய்கிறது? வேறொன்றும் இல்லாமற் போனாலும், பாதுஷாவுக்காகவும் யோதபுரி பேகமுக்காகவும் ஏதாவது சாப்பிடுகிறதற்கு அனுப்பவேண்டும்.

சஞ்சலை.— எப்படி? அங்கே மனிதன் போகிறதற்கு மார்க்கமில்லையே?

நிர்மலை.— அது இப்போது சொல்லமாட்டேன். நான் ஒரு தரம் சிபிரம் இருக்கிற விடத்துக்குப் போய்வரும்படி உத்தரவு கொடுக்கவேண்டும். என்ன செய்யலாமென்று பார்த்துக்கொண்டு வருகிறேன்.

சஞ்சலகுமாரி அனுமதி கொடுத்தாள். நிர்மலகுமாரி யானைமேலேறிக்கொண்டு, கூட ஆட்களை யழைத்துக்கொண்டு தன் எஜமானனைத் தளத்தில் பார்ப்பதற்காகப் போனாள். போனவுடன் மாணிக்கலாலனைப் பார்த்தாள்.

மாணிக்க.— யுத்த சமாசாரந்தானே?

நிர்மலை.— நீ யாரோடு யுத்தம் செய்வாய்? நீ என்னோடு யுத்தத்துக்கு நிற்கமுடியுமா?

மாணிக்க.— அது ஒருநாளும் முடியாது. அலங்கீர் பாதுஷாவோடு.

நிர்மலை.—நான் அவனுடைய இம்லீபேகம். அவனோடா யுத்தம்? அவனைக் காப்பாற்றுவதற்காக வந்திருக்கிறேன். நான் செல்வதைக் காது கொடுத்துக் கேட்கவேண்டும்.

அதற்குப் பிறகு அவர்களிரண்டுபேர்களுக்கும் ஏதோ பேச்சு நடந்தது. என்ன பேசினார்களோ அது நமக்குத் தெரியாது. வெகுநேரம் பேசிக்கொண்டார்கள்.

மாணிக்கலாலன் நிர்மலையை உதயபுரத்துக்கனுப்பிவிட்டு ராஜஸிம்ஹனுடன் பேசுவதற்காகப் புறப்பட்டுப் போனான்.

எட்டாம் அத்தியாயம்

ரஜபுத்ரர் ஆலோசனை

மகாராணா ராஜஸிம்ஹனைப் பார்த்து நமஸ்காரம் செய்து மாணிக்கலாலன் கை கூப்பிக்கொண்டு, "இந்தத் தாஸனாகிய என்னை வேறு ஏதாவது ஒரு யுத்தகளத்திற்கு அனுப்புவதாக மகாராஜா அவர்களுக்கு அபிப்ராயமிருந்தால் அனுக்கிரகமாகும்" என்றான்.

பிண்டத்துக்குக் கிடையாது தெண்டத்துக்கு அகப்படும்.

ராணா.—எதற்காக? இவ்விடத்து வேலை முடிந்து போயிற்றோ?

மாணிக்க.—இங்கே காரியமொன்றுமில்லை. பசியால் வருந்துகிற மொகலாயரின் வாடின முகங்களைப் பார்க்கிறதும் அவர்கள் புலம்புகிறதைக் கேட்கிறதும் தவிர இங்கு வேலை வேறொன்றுமில்லை. வேண்டுமானால், மலை மேலே ஒரு மரத்திலேறிக்கொண்டு பார்த்துக்கொண்டு வருகிறேன். இந்த வேலை யாரும் செய்யலாம். இவ்வளவு யானை குதிரை ஒட்டை ஆட்கள் எல்லாரும் இந்தக் கணவாயிலேயே பசியினாலே பிராணனை விடுவார்கள். அந்த நாற்றத்தினால் உதயபுரத்திலும் யாரும் பிழைத்திருக்க முடியாது என்று தோன்றுகிறது. மகா வியாதிகளுக்குக் காரணமாகும்.

ராணா.—அதனால் உன் அபிப்பிராயம் இந்த மொகலாய சேனையை இங்கே ஆகாரமில்லாமல் சாகும்படி செய்கிறது தப்பு என்பதோ?

மாணிக்க.— அப்படியே தோன்றுகிறது. யுத்தத்தில் லக்ஷம் ஜனம் சாகிறதைப் பார்த்தாலும் துக்கம் வருவதில்லை. சோறில்லாமல் கொஞ்சங் கொஞ்சமாய் ஒருவன் செத்தாலும் பார்க்கமுடியாது.

ராணா.—அப்படியானால் இவர்கள் விஷயமாய் என்ன செய்யவேண்டும்?

மாணிக்க.—மகாராஜா! இப்பேர்ப்பட்ட விஷயத்தில் ஸன்னிதானத்தில் யோசனை சொல்வதற்குத் தகுந்த புத்தி எனக்கில்லை. என் அற்ப புத்திக்கு, ஸமாதானம் செய்கிறதற்கு இது நல்ல சமயமென்று தோன்றுகிறது. வயிற்றில் அக்கினி எரியும்போது மொகலாயர் மிருதுவாயிருக்கிறதுபோல், வயிறு நிரம்பினவுடன் இருக்கமாட்டார்கள். மந்திரிகளையும் சேனாதிபதிகளையும் அழைத்து அவர்களுடன் யோசனைசெய்வது உத்தமமென்று தோன்றுகிறது.

ராஜஸிம்ஹன் அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டான். உபவாஸமாய் அத்தனைபேர்கள் சாகிறது அவனுக்கு இஷ்டமில்லை. ஹிந்துக்கள் பசித்தவருக்கு அன்னம்போடுவது பரமதருமமென்று நினைக்கிறார்கள். ஆதலால் ஹிந்துவானவன் சத்துருவைக்கூட அன்னமில்லாமல் கொல்லமாட்டான்.

சாயங்காலமானவுடன் கூடாரத்தில் சபை கூடிற்று. பிரதான சேனாதிபதிகளும் பிரதான மந்திரிகளும் கூடியிருந்தார்கள். மந்திரிகளில் முக்கியமானவன் தயாளுஷா. இவனும் இருந்தான். மாணிக்கலாலனும் இருந்தான்.

ராஜஸிம்ஹன் ஆலோசிக்கவேண்டிய விஷயத்தைத் தெரியும்படி சொல்லிச் சபையிலுள்ளவர்களைத் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொண்டான். அநேகர் மொகலாயர் அன்னமில்லாமல் இருந்தவிடத்திலேயே வருந்திச் சாகவேண்டுமென்றும், அவுரங்கசீபைப் பிடித்து உயிரோடு சித்திரவதை செய்யவேண்டு மென்றும், இல்லாவிட்டால் உயிரோடேயே கோரி செய்துவிட வேண்டுமென்றும், இன்னும் சிலர் மொகலாயரால் ஹிந்துக்களுக்கு நேர்ந்திருந்த ஆபத்துக்களை நினைத்துக்கொண்டால் கையிலகப்பட்டபோது விடக்கூடாது என்றும் இப்படி நானாவிதமாய் அபிப்பிராயப்பட்டார்கள்.

இதற்குப் பதில் ராணா ராஜஸிம்ஹன், "விடக்கூடாது நிஜந்தான். இந்த மொகலாயரை இங்கேயே சோறு தண்ணீர் இல்லாமல் தவித்துச் சாகும்படி செய்யவேணும். ஆனால் அவுரங்கசீபையும் அவனுடன் இங்கிருக்கிற சைனியத்தையும் பாக்கியில்லாமல் கொன்றுவிட்டால் மொகலாயர் வேறே இல்லையோ? வேரோடு பிடுங்கினதாகுமோ? ஆகாது. அவுரங்கசீபு செத்தால் ஷா அலம் பாதுஷா ஆவான். ஷா அலமுடன் தக்ஷிணத்தில் ஜெயம்பெற்ற மகா ஸைனியம் மலைக்கு அந்தண்டை தயாராயிருக்கிறது. வேறு இரண்டு மொகலாய சேனைகளும் இன்னுமிரண்டு பாகங்களில் தயாராய் நின்றுகொண்டிருக்கின்றன. எப்படி இந்தச் சேனைகளையெல்லாம் பாக்கியில்லாமல் நாம் கொல்லமுடியும்? அப்படி முடியாமற்போனால் என்றைக்காவது ஒரு நாள் சமாதானம் செய்தே தீரவேண்டும். சமாதானம் செய்வதற்கு இதைக்காட்டிலும் நல்ல சமயம் வேறு எப்போது கிடைக்கும்? இப்போது அவுரங்கசீபின் பிராணன் தொண்டையில் துடித்துக்கொண்டிருக்கிறது. நான் இப்போது என்ன சொன்னாலும் ஒப்புக்கொள்வான். வேறு சமயத்தில் அப்படியாகுமோ?" என்று சொன்னான்.

தயாளுஷா.—அப்படிக் கிடைக்காது. ஆனால் இந்த மகா பாபிஷ்டனாகிய அவுரங்கசீபை வதம்செய்துவிட்டால், பூமியைக் காப்பாற்றின

பித்தனுக்குத் தன் குணம் நூலினும் செவ்வை.

மாதிரியாகும். அதைப்போல் புண்ணியமான காரியம் வேறொன்றுமில்லை. மகாராஜா வேறு அபிப்பிராயம் வைத்துக்கொள்ளக்கூடாது.

ராஜஸிம்ஹ.—எல்லா மொகலாய பாதுஷாக்களையும் பார்த்திருக்கிறோம். எல்லோரும் லோகத்திற்கு நாசத்துக்காகப் பிறந்தவர்கள். அவுரங்கசீபு, ஷாஜிஹானைக் காட்டிலும் ரொம்பக் கெட்டவனே? குஷ்ருவினால் நமக்கு உண்டான தீங்கு அவுரங்கசீபால் உண்டாயிற்றோ? ஷா அலம் தகப்பன் பாட்டனைக் காட்டிலும் கெட்டவனாயிருக்கமாட்டானென்று என்ன நம்பிக்கை? நீங்கள் இந்த நாலு மொகலாய சைனியங்களையும் ஜயித்துவிடலாமென்று எண்ணிக்கொண்டிருக்கலாம். எனக்கு மாத்திரம் அந்த நம்பிக்கை இல்லை. அப்படி நம்பிக்கையிருந்தாலும் எத்தனையோ ரஜபுத்திரர் யுத்தத்தில் மாண்டபிறகுதான் இஷ்டம் நிறைவேறும். பாக்கியிருப்பவர் எத்தனைபேர்கள்? யோசித்துப்பாருங்கள். நாம் எத்தனைபேர்கள்? மொகலாயர் கணக்கில்லாமலிருக்கிறார்கள். எண்ணிக்கை குறைந்தால் மறுபடியும் வந்து அவர்கள் தொந்தரவுசெய்தால் யார் பலத்தால் அவர்களைத் துரத்துகிறது? இதையெல்லாம் யோசிக்கவேண்டும்.

தயாளுஷா.—ரஜபுத்திரரெல்லாரும் ஒன்றுசேர்ந்தால் மொகலாயரை ஸிந்துநதிக்கு அந்தண்டைக் கரையில் துரத்திவிடுவதற்கு எத்தனை நாழிபாகும்?

ராஜஸிம்.— அது நிஜமான வார்த்தை. ஆனால் எப்பொழுதாவது அது நிறைவேறுமோ? இப்பொழுதும் அதற்குவேண்டிய பிரயத்தனம் செய்துகொண்டுதானிருக்கிறேன். ஆனால் பிரயத்தனம் நிறைவேறுமோ? ஒருநாளும் அந்த நம்பிக்கை எனக்கு இல்லை.

தயாளுஷா.— சமாதானம் செய்துகொண்டாலும் அவுரங்கசீபு அதைக் காப்பாற்றமாட்டான். இப்பேர்ப்பட்ட கபடன், பொய்க்களஞ்சாதவன் இந்தப் பூமியில் இதுவரையில் பிறந்ததில்லை. தப்பித்துக்கொண்டவுடன் சந்திப்பத்திரத்தைக் கிழித்து எறிந்துவிடுவான். இப்போது போலவே மறுபடியும் பிரவிருத்திப்பான்.

ராஜஸிம்.— அப்படியே நினைத்துக்கொண்டிருந்தால் ஒருநாளும் சமாதானமாகாது.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

ஒரு ஸ்திரீ வக்கீல்.—மிஸ் கார்னீலியா என்னும் சீமாட்டி அலஹாபாத் ஹைகோர்ட்டில் வக்கீலாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறாள். இந்திய ஹைக்கோர்ட்டுகளில் வக்கீல் உத்தியோகம் செய்யும் முதல் ஸ்திரீ அந்த அம்மாள்தான். அந்த அம்மாள் 1898-ம் வருஷத்திலேயே ஆக்ஸ்போர்டு பாச்சேலர் ஆப் சிவில் லா பரீக்ஷையில் தேறி, பிறகு லிங்கல்ன்ஸ் இன் என்னும் சட்டக் கல்லூரியில் படித்துத் தேர்ச்சியடைந்தாள். 1904-ம் வருஷம் முதல், அந்த அம்மாள் வங்காளம், பேகார், ஓரிஸ்ஸா, அஸ்ஸாம், இம்மாகாணங்களின் கோர்ட் ஆப் வார்ட்ஸ் (மைனர் பாதுகாப்பு இலாகா) சம்ரக்ஷணையிலுள்ள கோஷா ஸ்திரீகளுக்கு லீகல் அட்வைஸர் என்னும் உயர்ந்த உத்தியோகத்தை வகித்து வந்தாள். இச்சீமாட்டி பல நவீனங்களும் கட்டுக் கதைகளும் இயற்றியிருக்கிறாள்.

* *
*

ஒரு விநோத வெடிகுண்டு.—அமெரிக்காவிலுள்ள பிலாடெல்பியா வென்னும் நகரத்தில், கலகஞ்செய்யும் நோக்கத்துடன் கூடுபவர்களையும் கொள்ளைக்காரர்களையும் கலைத்துப் பிடிப்பதற்கு ஓர் தந்திரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஓர் வெடிகுண்டைப் பெரிய கூட்டத்தின் நடுவே விட்டெறிந்தால், அது வெடித்து, அதிலிருந்து ஒருவிதமான ஆவிகிளம்பி கூடியுள்ளோர் கண்களில் நீர் ததும்பிப் பெருகச்செய்து அவர்கள் அவ்விடம்விட்டுப் பெயராமல் கண்களைத் துடைத்துக்கொண்டு நிற்கும்படி செய்கிறது. ஆனால் அது அவர்களுக்கு யாதொரு நிலையான தீங்கையும் செய்யாது. அவ்விதக் குண்டுகளையே அக்காரியங்களுக்கு அந்நகரப் போலீஸ்காரர்கள் உபயோகிக்கின்றனர்.

நமது நேயர்களுக்கு.—ராஜஸிம்ஹன் என்னும் நாவலை அடுத்த மாதத்துக்குள்ளாக முடிக்கவும், ஜனவரி முதல் புது நாவல் ஒன்று ஆரம்பிக்கவும் வேண்டி, இம்மாதம் சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்களுக்கு இடம் கொடுக்க முடியவில்லை.

பிரமசாரி ஓடம் கவிழ்த்ததுபோல.

வீரபத்திரருக்கும் மஹாவிஷ்ணுவுக்கும் சண்டை.

டிசம்பர்

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

FEB 1922
MADRAS

தொகுதி XIV } துன்மதிஸு கார்த்திகைமீ :: 1921-ம்ஸு டிசம்பர்மீ } பகுதி 6

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

தமாகு ரங்களுங் காரி ருட்பி ழம்பு
மெழுகிய அங்கமும் பார்வையிற் கொளுந்து
தழலுமிழ் கண்களும் காளமொத்த கொம்பும்
—உளகதக்கடமாமேல்

தனிவரு மந்தகன் பாசம் விட்டெறிந்து
அடவரு மென்று சிந்தா குலத்தி ருந்து
தமரழ மைந்தருஞ் சோக முற்றி ரங்க
—மரணபக்குவமாநாள்

கமலமு கங்களுங் கோம ளத்தி லங்கு
நகையுநெடுங்கணுங் காதி னிற்று லங்கு
கனககு தம்பையுந் தோடும் வஜ்ர அங்க
—தமுமடர்சுடர்வேலும்

கடிதுல கெங்கணுந் தாடி யிட்டு வந்த
மயிலுமி லங்கலங் கார பொற்ச தங்கை
கழலொலி தண்டையங் கானு மொக்க வந்து
—வரமெனக்கருள்கூர்வாய் !

இமகிரி வந்தபொன் பாவை பச்சை வஞ்சி
அகிலத லம்பெறும் பூவை சத்தி யம்பை
யிளமுலை யின்செழும் பால்கு டித்தி லங்கு
—மியல்நிமிர்த் திடுவோனே

இறைவரி றைஞ்சநின் முக மப்ப்ர சங்க்
முறைசெய்தி டும்ப்ரசண் டாவி சித்து நின்ற
ரணமுக துங்கவெஞ் சூருடற் பிளந்த
—அயிலுடைக் கதிர்வேலா !

அமணர டங்கலுங் கூட லிற்றி ரண்டு
கழுவிலு தைந்துதைந் தேற விட்டு நின்ற
அபிநவ துங்ககங் கார திக்கு மைந்த
—அடியவர்க் கெளியோனே !

அமரர்வ ணங்குகந் தாகுறத்தி கொங்கை
தனில்முழு குங்கடம் பாமி குத்த செஞ்சொ
லருணைநெ டுந்தடங் கோபு ரத்தமர்ந்த
—அறுமுகப்பெருமாளே !

இமயமலை யீன்றருளிய அழகிய புதல்வியும், பைங்கொடியைப் போன்ற மெல்லியலாளும், சகல புவனங்களையும் ஈன்றருளிய தாயும், பரம்பொருளின் சக்தியாய் நிற்பவளுமாகிய உமாதேவியாரின் தனபாரங்களினின்று பெருகும் சிறந்த பாலைக்குடித்து வளரும் லீலாவிலாச மாடியவனே ! யாவர்க்கும் இறைவனான சிவபெருமான் சிஷ்யனாக நின்னைவணங்கி நிற்க, ஆகமங்களிற் கூறப்பட்டுள்ள மெய்ப்பொருளை உபதேசித்த ஞானத்தின்மிக்க சுவாமிநாதா ! மருவலர்கள் எதிர்த்துநிற்கும் போர்க்களத்தில் ஒப்புயர்வற்றவனாய் விளங்கும் திறலோனே ! கொடிய சூரபதுமனது உடலை இருகூறாகப்பிளந்த ஒளிபொருந்திய வேலாயுதத்தைக் கையில் தாங்கியவனே ! சைவசமயம் தழைத்தோங்குமாறு திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாராக அவதரித்து கூன்பாண்டியனைச் சுந்தரபாண்டியனாக்கி, அவன்முன்னே சமணர்களை வாதில்வென்று அவனாணையால் எண்ணாயிரம் சமணர்களைக் கழுவிலேற்றி யாவரும் ஆச்சரியமடையச்செய்த பாலகனே ! நதிகளிற் சிறந்த கங்கைக்கு மைந்தனாய் வளர்ந்தவனே ! நின்பால் மெய்யன்பு பூண்ட அடியவர் நின்னை எளிதிலடையுமாறு நின்ற கருணைக்கடலே ! தேவர்களும் வணங்கும் கந்தா ! வள்ளியம்மையின் தனபாரங்களைத்தழுவும் சுகத்தில் மூழ்கும் கடம்பமாலையோனே ! பெரியோர்பலரால் புகழப்பட்டுள்ள திருவருணையிலிருக்கும் பெரியகோபுரத்தி லமர்ந்துள்ள ஆறுமுகப்பெருமானே ! அடியேனுக்கு நீ ஒரு வரந்தரவேண்டும். அதென்னவென்று கூறுகிறேன், கேள் ! பேரொலி செய்யும் குளம்புகளையும், காரிருட்டொகுதியைப் பூசினாலன்ன தேகத்தையும், பார்க்கும்போதே எரித்துவிடக்கூடிய அக்கினியைக் கக்கும் கண்களையும், காளத்தை யொத்த நீண்டகொம்புகளையும் உடைய உக்கிரமான கடா மாட்டின்மீது, பலர்கூடியிருக்குமிடத்திலும் தானும் தான் மாய்க்கவந்த ஜீவனும் தனியேயிருக்கும்படி செய்துகொள்ளவல்ல இயமன் ஏறிவந்து தனது பாசக்கயிற்றை யெறிந்து எனதுயிரைக் கொள்ளைக் கொள்வானே யென்று கவலையுற்று என் சுற்றத்தவர் அழவும் என் மைந்தர்கள் மனஞ்சோர்வுற்று ஏங்கவும் என் மரணகாலம்

(இதன் தொடர்ச்சி 194-ம் பக்கம் பார்க்க.)

பிரமா நினைத்தால் ஆயுசுக் கென்ன குறை ?

விவேக போதினி

தொ.14] துன்மதி௵ :: கார்த்திகை மீ [ப. 6

கந்த புராணம்

SKANDA PURANAM

நந்திகேசுவரப் பெருமான் இட்ட சாபத்தைக் கேட்டு அஞ்சி பிரமதேவர் தாம் செய்யப் புகுந்த யாகத்தை நிறுத்தியநாள் முதலாக வெகு காலம் தேவர்களும் முனிவர்களும் அந்தணர்களும் யாதொரு வேள்வியும் செய்யாதொழிந்தனர். ஊழின் வலியினால் தீயநெறியில் நின்றொழுகி வந்த தக்ஷன் அதை ஆலோசித்து, ஒருநாள் தனது சபையிற் கூடியிருந்த தேவர்களை நோக்கி, “வேதத்தை நன்குணர்ந்த தேவர்காள்! செய்வதற்குரிய வேள்வியை நீங்கள் வெகு காலமாகச் செய்யாதொழிந்ததன் காரணமென்ன?” என்று கேட்டான்.

அதற்குத் தேவர்கள், “ஐயனே! பிரமதேவர் முன்னாளில் இயற்றப்புகுந்த யாகத்தில் பரமசிவனுக்கு அவிர்ப்பாகம் கொடுக்கக்கூடாது என்று ஆணையிட்டாய்! நந்திகேசுவரரும் கொடிய சாபத்தினையிட்டார்! நின்னாணைப்படி நடத்தல் சாத்தியமில்லையாதலினால், யாதொரு யாகமும் செய்யாமலிருக்கின்றோம்” என்று உண்மையைத் தைரியமாய் உரைத்தனர். தக்ஷன் நகைத்து, “வெகுகாலத்துக்கு முன் ஒரு நாள் ஈசனால் அனுப்பப்பட்ட நந்தியிட்ட சாபத்திற்கு இன்னுமா அஞ்சியிருக்கிறீர்கள்? உங்கள் அச்சத்தை ஒழிப்பதற்காக நான் ஒரு பெருவேள்வியை முன்னே செய்து முடிக்கின்றேன். அவ்வேள்வி நிறைவேறி நந்தியின் சாபம் பயனற்றதென நிரூபிக்கப்பட்டபின் நீங்கள் யாகம் செய்யலாமன்றோ?” என்று கூறினான்.

தேவர்கள் அதற்கிணங்கவே தக்ஷன், அவர்களை அவரவர்கள் நகரங்களுக் கனுப்பிவிட்டு, தேவசிற்பியான விசுவகர்மாவை வரவழைத்து, அளவிடப்படமுடியாத பெரிய யாகசாலையொன்றை முறைப்படி நிருமிக்கும்படி கட்டளையிட்டான். விசுவகர்மன் அவனிட்ட பணியைச் சிரமேற்கொண்டு கங்காநதிக் கரைக்குச் சென்று ஆங்கு கனகலமென்ற ஒரு அழகிய தலத்தில் வித்தாரமான அற்புத யாகசாலையொன்றை அதிவிரைவில் நிருமித்துப் பிறகு தக்ஷன்பால் திரும்பிவந்து வணங்கி, “ஐயனே! நின் யாகசாலையைக் கட்டிமுடித்துவிட்டேன். சென்று பார்ப்பாயாக!” என்று கூறிச் சென்றான்.

உடனே தக்ஷன் தன் யாகசாலைக்குச் சென்று அதன் வனப்பினைக் கண்ணுற்று வியந்து, அவ்விடத்திற் சிறந்த யாகத்தைச் செய்ய நிச்சயித்து, தன்னருகில் நின்ற முனிவர்கள் பலரை நோக்கி, “யாகத்துக்கு அவசியமான சமிதை, தருப்பை, யூபஸ்தம்பங்கள், ஆடு முதலிய பல்வகைப் பசுக்கள், நல்ல தானியங்கள் முதலியவைகளைச் சீக்கிரம் கொண்டு வாருங்கள்!” எனக் கட்டளையிட்டான். பிறகு காமதேனு, கற்பகவிருக்ஷம், சங்கநிதி, பதுமநிதி, நவநிதிகள், தேவமணிகள் முதலியவைகளை வரவழைத்து, “நீங்கள் எனது யாகம் முடிவுபெறும் வரை இங்கேயே யிருந்து, யாகத்தைக் காணவரும் முனிவர் முதலாயினோர்க்கு வேண்டியவைகளைக் கொடுத்துதவுங்கள்!” என்று கட்டளையிட்டான். பிறகு தனது பந்துக்களான முப்பதினாயிரம் முனிவர்களை வரவழைத்து, வருபவர்க்கெல்லாம் திருப்தியாக அன்னம் முதலிய ஆகாராதிகளைக் கொடுக்கும்படி கட்டளையிட்டான். பிறகு தக்ஷன் தேவர்கள், முனிவர்கள், அந்தணர்கள் முதலியோரை யாகத்துக்கு அழைத்துவரும்படி தூதர்களை யனுப்பினான்.

பிரமன், விஷ்ணு, இந்திரன் முதலிய தேவர்கள் தத்தம் தேவிமார்களுடன் தக்ஷன் யாகசாலைக்கு வந்து அவனால் உபசரிக்கப்பெற்று, யாகசாலையில் திவ்விய ஆசனங்களிலமர்ந்தனர். உலகத்திலுள்ள பல முனிவர்களும் அந்தணர்களும் தக்ஷன் வேள்வியைப் பார்ப்பதற்காக அங்கு வந்து கூடினர். தக்ஷனால் அனுப்பப்பட்ட தூதர்கள் திரும்பிவந்து

பிழைக்கப்போன இடத்திலே பிழைமோசம் வந்ததுபோல.

தக்ஷனை வணங்கி நிற்க, தக்ஷன் அவர்களை நோக்கி, “சிறந்த தவத்தினையுடையீர்காள்! நீங்கள் அழைத்தவர்களில் இங்கு வராது தவறினவர்கள் எவரேனுமுண்டோ? உண்டாயின் அவர்கள் யாரெனக் கூறுங்கள்!” என்றான். அது கேட்ட தூதுவர், “ஐயனே! அகத்தியர், சநகாதியர், அத்திரி, வசிஷ்டர், உலகத்தில் உயர்ந்தவனெனக் கருதப்படும் பிருகு, தவசிரேஷ்டனான ததீசி, கொடிய சாபத்தீயைக் கக்கும் இயல்புடைய துர்வாசர், ஐம்புலன்களை வென்ற பராசரர் முதலியோர் மட்டும் இந்த யாகத்தினை இகழ்ந்து இங்கு வரவில்லையென்று நினைக்கிறோம்” எனப் புகன்றனர்.

அது கேட்டுத் தக்ஷன், “முனிவர்களுக்குள் இவர்கள்தாமோ நெற்றிக்கண்ணையுடைய சிவனுக்கு அன்பர்கள்!” என்று கடுங் கோபத்துடன் கூறி, அங்கு கூடியிருந்த தேவர்கள் யாவரும் நடுங்குமாறு சிரித்தான்.

அத்தருணத்தில் ததீசி மாமுனிவர் பல முனிவர்கள் தம்மைப் புடைசூழ்ந்துவர அந்த யாகசாலைக்குள் நுழைந்தார். அது கண்ட தக்ஷன் அம்முனிவர் தனக்கு அஞ்சி அங்கு வந்ததாகக் கருதி மகிழ்வுற்று உள்ளங்குளிர்ந்து அவரைத் தமதருகிலுள்ள ஒரு பெரிய ஆசனத்திலமர்த்தினான். அவ்வாசனத்திலமர்ந்த பின், ததீசி மாமுனிவர் தக்ஷனை நோக்கி, “எம்மை யழைத்த காரணமென்ன? இங்கு நீ செய்ய முயற்சிப்பதென்ன? எல்லாவற்றையும் ஒன்று விடாமல் எடுத்துரைப்பாயாக!” என்று கூறினார். அப்போது தக்ஷன் தன் மகளைச் சிவபெருமான் மணந்து மணம் முடிவுபெறுமுன் மறைந்ததையும், தான் தன் மகளையும் சிவபெருமானையும் பார்ப்பதற்காகத் திருக்கைலாயத்துக்குச் சென்றதையும், தன் மகளும் மருமகனும் தங்கள் சேவகர்களான பூதர்களைக் கொண்டு தன்னை அவமானப்படுத்தியதையும், அதனாற் கோபமுற்றுத் தான் சிவ ஆராதனையைத் தடுத்ததையும், தன் தந்தையாகிய பிரமதேவர் யாகம் செய்யத் தொடங்கிச் சிவபெருமானுக்குரிய அவிர்ப்பாகத்தை அவருடைய சேவகன் நந்திக்குக் கொடுப்பதாக நிச்சயித்ததுகண்டு, தான் வெகுண்டு அதைத் தடுத்ததையும், மத்தளம் அடிப்பதான சிறு தொழிலைச் செய்பவனான நந்தி அது கண்டு சீற்றங்கொண்டு கொடிய சாபத்தினை மொழிந்ததையும், அச் சாபத்துக்கஞ்சி தேவர்கள் வெகு காலமாக வேள்வி செய்யாதொழிந்ததனால், அவர்களுக்குத் தைரியமுண்டாக்குவதற்காகத் தான் சிவபெருமானுக்கு அவிர்ப்பாகம் அளிக்காமல் ஒரு யாகத்தைச் செய்துமுடிப்பதாக உத்தேசித்ததையும் வித்தாரமாக எடுத்துரைத்தான்.

அது கேட்டு அம்மகா முனிவர் தக்ஷன் செயலானது, புண்ணியம் பயனற்றது, பாவமே ஈட்டத்தக்க பொருளென்று எண்ணும் இழிகுணமுடையோர் செயலைப் போன்றது என்றெண்ணி நகைத்தார். அம் மாமுனிவர் தன் வார்த்தைகளைக் கேட்டுத் தனக்கு யாதொரு பதிலும் உரையாது அவமதிப்பாகச் சிரித்ததும், தக்ஷன் ஊழிக்காற்றில் மிகுந்தெழும் வடவாமுகாக்கினியைப்போல ஊர்த்துவ சுவாசம் விட்டுக் கோபித்துச் சீறி, “நீ முக்கண்ணன் அடியவன் போலும்! அதனால்தான் என் மொழிகளைக்கேட்டுச் சிரித்திகழ்ந்தாய்!” என்று அதட்டிக் கூறினான்.

அப்போது ததீசிமுனிவர் தக்ஷனை நோக்கி, “பிரமன் முதலாகவுள்ள எல்லையற்ற உயிர்த்தொகையனைத்தையும் முதன்முதலில் உண்டாக்கும் தந்தையாய் உலகத்தைச் சிருஷ்டித்துக் காத்து அழித்து, உலகெலாம் தாமேயாகி, எங்கும் நிறைந்து நிற்கும் ஒப்பற்ற தனிப்பொருளாய் உயிருக்குயிராய் யாவற்றினும் மேலாய் விளங்கும் பரமேசுவரனை நீக்கியோ நீ யாகம்செய்ய யத்தனித்தாய்! தேவர்களனைவருக்கும் கொடுக்கும் சிறந்த அவிர்ப்பாகத்தைப் பெற்றுக்கொள்பவரும், அவ்வவிர்ப்பாகங்களைத் தேவர்களுக்குச் சேர்ப்பிப்பவனாகிய அக்கினிதேவருக்குத் தலைவரும், யாகத்துக்குத் தலைவரும், யாகத்தின் பலனை அளிப்பவரும் சங்கரர்தாமென்று வேதங்கள் கூறுகின்றன. வேள்விக்கு முதல்வராகிய ஸ்தானத்தை வகிக்குந் தகைமைவாய்ந்த தேவர் எவரேனும் இச்சாலையில்உளராகில், அவர் எழுந்து அதைத் தெரிவிப்பாராக! திருமால், பிரமன் முதலிய தேவர்கள் யாவரும் எல்லையற்ற இச்செல்வங்களைப் பெறுமாறு முன்னாளில் அநுக்கிரகித்தவரும், மலரகிதரும், இவர்களுக்கெல்லாம் ஆதிகாரணரும், தமக்கு எவரும் ஆதிகாரணராக விருக்கப் பெறாதவரும், கல்லாலின் நிழலில் அமர்ந்து சநகாதி முனிவர்களுக்கு

பிள்ளை அருமை மலடி அறிவாளா?

மெய்ப்பொருளைப் போதித்த எமது சங்கரரே யன்றி அமரர்களுக்குள் வேறு யாவர்? தேவதேவன், மகாதேவன், யாவரினும் சிறந்த ஈசன், எமதிறைவன், மும்மூர்த்திகளில் முதல்வன், எங்கும் வியாபித்துச் சகலமும் தானேயாகி நிற்பவன், சங்காரகர்த்தாவுக்குச் சங்காரகர்த்தாவாயிருப்பவன், உயிருக் குயிராயிருப்பவன், கருணை வடிவமானவன், எல்லாவற்றிற்கும் ஆதிமூலம் என்று வேதங்களெல்லாம் யாரைக் குறிப்பிட்டுக் கூறின? பிரமன் முதலாயினோர் உயிர்த்தொகை யென்றும், பரமசிவனே அவர்களுக்குப் பதியென்றும், அவனிட்ட கட்டளையையே அவர்கள் யாவரும் செய்து வருகின்றனரென்றும்வேதங்கள் உண்மையை எடுத்துக்கூறி யிருக்கின்றன. இவைகளை யெல்லாம் மறந்து மதிமயங்கி நீங்காத மாயையிற் சிக்கி அழுந்துகின்றாய்! அந்தணருக்கு முதல்வன் சிவபெருமானென்றும் ஏனையோர்க்கு பிரமன், விஷ்ணு, இந்திரன் என்றும் வேதங்கள் கூறியிருக்கின்றன. ஆதலின், பிராமணர்கள் முறைதவறி தங்கள் தலைவனான சிவபெருமானைத் தவிர்த்து வேறொரு தேவனை முதல்வனாக நாடுதல் தன்னைப் பெற்ற தந்தையை விலக்கி வேறொரு தந்தை தேடுவோர் செயலை யொக்கும். ஆகையினால் யாவர்க்கும் மேலாம் ஆதிமுதல்வனாகிய பரமசிவனை இகழ்தல் பேதைமையைக் காட்டுமேயன்றி பெருமையைத் தராது. வேதத்திற் கூறியுள்ள மெய்வசனத்தை யொறுத்து நீ செய்யும் யாகம் நிறைவேறாது; அது பெரிய கலக்கத்தையே யுண்டாக்கும். அமலனது ஆணை செல்வதை நீ காண்பாய்! அவனுக்கு அஞ்சாது நடப்பவர் எவரேனுமுண்டாகில் அவர் மாய்வர்! பிரளய காலத்தில் முத்தலைச் சூலத்தைக் கையிற்றாங்கி யாவற்றையும் சங்கரித்துத் தான் மட்டும் மாயாது நிற்கும் ஒருவன் சங்கரனே யென்று வேதங்கள் கூறியுள்ளதை யறிந்திலையோ? ஆதலால், ஆதியும் அந்தமுமில்லாத அமலனுக்கு அவிர்ப்பாகத்தை யளித்து வேதத்திற் கூறியுள்ள முறைவழுவாது வேள்வி இயற்றுவாயாக! நீ இப்பொழுது கொண்டுள்ள எண்ணம் தீங்கையே விளைவிக்கும்!" என்று கூறி தக்ஷனைக் கண்டித்து நல்லபுத்தி கூறினார்.

ததீசி மகாமுனிவர் கருணையினாற் கூறிய நற்புத்தியைச் சிறிதும் ஏற்றுக்கொள்ளாத தக்ஷன், "சிவனுக்குக் கொடுக்கவேண்டிய முதல் அவிர்ப்பாகத்தை மகா விஷ்ணுவுக்கு அளித்து யாகத்தை நடத்துவேன்!" என்றான். அதற்கு ததீசி, "யாவராலும் புகழப்படும் பெரியோரை இகழ்ந்து சிறியோரை யுயர்த்தல் நற்கதியடையும் மார்க்கமன்று. உங்கள் யாவருடைய உயிர்களுக்கும் இறுதிகாலம் நெருங்கிவிட்டதுபோலும்!" என்று மறுமொழி புகன்றார்.

குற்றம் நிறைந்த குணத்தினனாகிய தக்ஷன் அதுகேட்டு, "ஏ! ததீசி! உனது உருத்திரனைப் போன்ற பதினொருபேர்கள் ஏகாதச ருத்திரர்கள் இருக்கின்றார்கள். மற்றும் அஷ்டதிக்பாலர்களாகிய ஈசானர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு முதல் அவிர்ப்பாகத்தைக் கொடுத்து வேள்வியை நடத்துகிறேன்" என்று துடுக்காய்க் கூறினன்.

அப்போது ததீசிமாமுனிவர், "தக்ஷனே! பிரபஞ்சத்துக்கு ஓர் இறுதியை யுண்டாக்கி, அகில அண்டங்களையும் தனக்குள் ஒடுக்கிக் கொண்டு பிறகு திரும்பவும் பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்தருளி எவராலும் நினைத்தற்கரியனாய் நிற்கும் உருத்திரமூர்த்திக்கு அவனது அருளினால் அவன் உருவத்தையும் நாமத்தையும் பெற்றவர்கள் ஒப்பாவார்களோ? உருத்திரமூர்த்தி யென்போன் யாவரினும் உயர்ந்த பரம்பொருளாய் நமது இதயத்தாமரையில் நின்று நிருத்தம் செய்பவன். அவன் பொற்பாதங்களை அன்புடன் நினைத்து வழுத்துவோர் அவனுடைய உருவத்தையும் அவன் பெயரையும் பெறுகிறார்களாதலால், அப்படிப்பட்டவர்களைக் கணக்கிடவே முடியாது! ஆனால் ஆதியான சிவபெருமானுடைய திருநாமத்தைப் பெற்றதனாலேயே அவர்கள் அவன் தன்மையடைந்தவ ராகமாட்டார்கள். அவர்கள் கொண்ட குற்றமற்ற வடிவமும் அப்படியே அவனது திருமேனியின் தன்மையை யடைந்ததாகா தெனினும், அவர்கள் பூலோகத்தவராலும் வானவராலும் இறைவனான பரமசிவனாகக் கருதப்பட்டு வணங்கப்படுவர். அளவற்ற காலம் எம்பெருமானிடத்து அன்புபூண்டு ஆராதித்து வந்ததனால் சிவசாரூப்பிய பதவியைப்பெற்ற ஏகாதச ருத்திரர்களும் அஷ்டதிக்பாலர்களும் இந்திராதி தேவர்களைப்போல் இங்கு வரும் தன்மையுடையவ ரல்லர். அவர்

கள் நீ எந்தைபால் அன்பில்லாதவனா யிருப்பதை அறிந்திலர் போலும்!" என்று கூறினார்.

அப்போது தக்ஷன், "மும்மூர்த்திகளில் நான்முகனையும் நாராயணனையும் விலக்கி முத்தொழிலில் ஒரு தொழிலான சங்காரத்தைச் செய்யும் சிவனை யாவர்க்கும் ஆதியெனக் கூறியதேன்?" என்று வினவினான். அதற்குத் ததீசிமுனிவர், "தக்ஷனே! அதற்குரிய காரணத்தைத் தெளிவாகக் கூறுகிறேன், கேள்! ஆதியந்தமில்லாத எமதிறைவனுக்குப் பெயரும் உருவமும் செயலும் இல்லையென்று வேதங்கள் நிச்சயமாய்க் கூறுகின்றன. அப்படிப்பட்ட பரம்பொருளான அண்ணல் தனது ஆணையினால் முன்னம் அந்தகாரத்துள் மூழ்கிய உயிர்த்தொகையின் கொடியவினையை யகற்றத் திருவுளங்கொண்டு, பெயர், உருவம், செயல் இவைகளைத் திருவருளினாற் கொண்டு, முன்புபோல் பிரபஞ்சம் தோன்றுமாறு செய்து, பிறகு பிரமன் முதலான தேவர்களைச் சிருஷ்டித்து, பண்டு அவர்கள் செய்துவந்த தொழில்களைச் செய்துவரும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டு, பின்னர் சங்காரத்தொழில் தன்னாலன்றிதன் மைந்தராகிய அமரராலியற்ற முடியாதென வுணர்ந்து, அத் தொழிலைத் தானே வகித்தான். அன்று தேவர்கள் அவன் பொன்னடி பணிந்து, 'எந்தையே! இத்தொழில்களின் பாரம் சிறியேங்களை விட்டு எப்போது நீங்கும்?' என்று கவலையுடன் வினவினர். அப்போது கருணாசாகரமான எம்பெருமான் அவர்களை நோக்கி, "இத் தொழில்களை நீங்கள் உங்கள் ஆயுள்முழுவதும் செய்ய வேண்டும். இவைகளைப் பாரமென நினைத்தீர்களல்லவா? தூய்மையான மந்திரங்களைச் சொல்லித் திருநீறுண்டாக்கி வணங்கி அதைத் தேகத்தின்மீது அணிந்துகொண்டு, நாவினால் உச்சரிப்பதனாலேயே முத்தியை எளிதிற் பெறச்செய்யும் பஞ்சாக்ஷரத்தைச் செப்புவீராகில், அத்தொழில்களை எளிதிற்புரியும் வலிமையுறுவீர்; அன்றியும், பூர்வத்தில் நீங்கள் அடைந்திருந்த ஞானமும் மீண்டுவரும்; அதனால் அழியாத நன்மை யடைவீர்கள்!" என்றருளினான். இதை யறிந்தே வேதங்கள் பரமேசுவரனையே பஞ்சகிருத்தியங்களைச் செய்யும் முதல்வனாகக் கூறுகின்றன. உருத்திரன் என்னும் நாமம் ஒப்புயர்வற்ற அரனுக்கும், அவன் ஈந்தருளும் புத்திரர்களுக்கும், அவனது பாதமலர்களைத் தியானித்துத் துதிக்கும் சிவகணங் கட்கும், ஒப்பற்ற அன்பினால் சிவசாரூப்பிய பதவியடைந்து அவன் திருமேனி பெற்றவர்கட்கும், அக்கினிக்கும் பொருந்தும். துன்பசாகரத்திற் பட்டோர் யாவரையும் கைதூக்கிக் காக்குந் தன்மையினால் எம்பெருமான் உருத்திரன் என்னுந் திருநாமம் பெற்றான். இத்தகைய கருணைவாரிதியே ஆதியாகிய தேவதேவன் என்று முன்னொருநாள் மயக்கமற்றிருந்த பிரமனும் தன்னையணுகித் தங்கள் சந்தேகத்தை நீக்கும்படி கேட்டுக் கொண்ட முனிவர்களுக்குப் போதித்தான். நான் இதுகாறும் மொழிந்தவைகளெல்லாம் அன்புமேலீட்டினால் பரமனைத் துதித்த சொற்களென்று கருதாதே! அவைகள் சத்தியமென்று வேதங்களும் சாஸ்திரங்களும் விளக்கிக் கூறுவதை நீயே காணலாம். முன்னாளில் உன் தந்தையாகிய பிரமதேவனிடம் இவ்வுண்மைகளை யெல்லாம் கேட்டுணர்ந்து மெய்த்தவத்தினை இயற்றி சங்கரனருள் பெற்று வரம்பில்லாத வளங்களடைந்தாய்! நீ அழிந்து போகுங்காலம் நெருங்கிவிட்டதனால் அவைகளை மறந்தாய் போலும்! நின் தந்தை முதலியவர்களெல்லோரும் தங்களுக்கும் இறுதி நெருங்கிவிட்டதனால் நின் சபையில் வந்து கூடியிருக்கிறார்கள். நீ மாயையினால் மயக்கமுற்றிருக்கிறாய்! அழியாது பிழைத்திருக்க வேண்டுமென்ற இச்சை உனக்கிருக்குமாகில், பரம்பொருளாகிய அரனார்க்கு அவிர்ப்பாகமளித்து இச்சிறந்த யாகத்தினை இயற்றுவாயாக!" என்று அருளின் தன்மையால் நற்புத்தி கூறினார்.

மாயையின் வலிமையினால் தன் சிந்தையில் அகங்காரமே நிறையப்பெற்ற தக்ஷன் தவத்திற் சிறந்த அம்முனிவர் கூறிய நன்மொழிகளைக் கேட்டும் மாயை யகலப்பெறாது நகைத்து, "பரம்பொருள் என்னும் மேலோன் இடுகாட்டில் எரியும் உடம்புகளினின்றும் சிந்திவீழும் எலும்புகளையும் தலைகளையும் ஆபரணங்களாக அணிந்துகொள்வானோ? தேவர்கள் வெந்த சாம்பரை அன்போடு தேகமெல்லாம் பூசிக் கொள்வானோ? தசைகழிந்த உடலைச் சூலத்திலேந்தித் திரிவானோ? இடுகாட்டில் விழுந்துகிடக்கும் தலைமயிரைத்

தரிப்பானோ? பன்றியின் கொம்பையும் இறந்த ஆமையின் ஓட்டையும் மார்பின்மீது ஆபரணங்களாகப் பூணுவானோ? பிரபஞ்சம் அழியுமாறு உயிர்த்தொகையனைத்தையும் மாய்த்திடுவானோ? பகவான் என்பவன் புலியின் தோலையுடுத்து, யானையின் அற்பத்தோலினால் தன் வலிமையுள்ள புயங்களைப் போர்த்துக்கொண்டு, அக்கினி, மழு, மான், முத்தலைச் சூலம் இவைகளைக் கையில் தாங்கி நிற்பானோ? எங்குந் திரிந்து பிச்சை வாங்குவானோ? வெறியனைப் போல் நிர்த்தஞ் செய்வானோ? யாவர்க்கும் நாதனாயுள்ளவன் பூதர்கூட்டங்களையே தனது படையாகக்கொண்டு திரிவானோ? விஷத்தைக் கக்கும் கொடிய பாம்புகளைத்தாம் ஆபரணங்களாகப் பூணுவானோ? வெண்ணிறமுள்ள தலையோட்டை ஓர் ஆபரணமாகக்கருதி தன் செஞ்சடாமுடியில் அணிந்துகொள்வானோ? எண்திசைகளையே ஆடையாகவுடுத்த நிர்வாணியாவானோ? மாறுவேடம் பூணுவானோ? பரம்பொருள் என்பவன் ஓர் காளையைத் தன் வாகனமாகக் கொள்வானோ? தன் பசியைத் தீர்த்துக்கொள்ள விஷத்தை யுண்பானோ? சுடலையில் நின்று பேயைப்போலக் கூத்தாடுவானோ? ஒரு பெண்ணைத் தலையிற் சுமந்து, மற்றொரு பெண்ணுக்குத் தனது இடப்பாகத்தையே கொடுப்பானோ? பிள்ளைகளையும் பெறுவானோ? பரம்பொருளுக்குரிய சாந்தத்தை விடுத்து கொடிய குணத்தை கொள்ளுவானோ? பரம்பொருள் செய்யத்தகாத செய்கைகளைச் செய்பவனும் கொள்ளக்கூடாத குணங்களைக் கொண்டவனுமான உங்கள் ஈசன் பரமனல்லனாதலின், நான் புரியும் வேள்வியில் அவனுக்கு அவிர்ப்பாகம் அளிக்கமாட்டேன்!" எனப் புகன்றான்.

அந்த நிந்தை மொழிகளைச் செவியுற்றதும், அத்தபோதனன் உலகெலாமீந்த எந்நாதனையோ இவன் பழிப்பது என்று கடுங்கோபமுற்று, பரிசுத்தனான சிவபெருமானது உண்மை நிலையை யறியாத இவ்வற்பனுடன் வார்த்தையாடுதல் தகுதியன்றே யெனினும், பிரமன் விஷ்ணு முதலிய தேவர்கள் கூடியுள்ள அச்சபையில் அவன் எந்தையை நிந்தித்த மொழிகளுக்குப் பதிலுரைக்க வேண்டுவதவசியமெனத் துணிந்து, சில உண்மைகளைப் பின்வருமாறு அவனுக்கு எடுத்துரைத்தார்.

"புத்தியற்ற கயவனே! சிவபெருமானது பெருமையை விளக்கும் செயல்களையே இழி செயல்களாகச் சுட்டிக்காட்டி நிந்தித்தாய்! அவைகளின் உண்மையை யுரைக்கின்றேன். கேட்டு உய்ந்துபோ! அருபியான எங்கள் நாயகன் தன் தண்ணருளினால் ஓர் திருவுருவங்கொண்டு, தேவர்களுக்குள் தலைமைபெற்ற பிரம விஷ்ணுக்களைச் சிருஷ்டித்து, உலகங்களையெல்லாம் படைத்துக்காக்குங் கடமையை அவர்களுக்கு அளித்து, பிரமனிடத்து நின்று தானே உயிர்களனைத்தையும் சிருஷ்டித்து, விஷ்ணுவினிடத்து நின்று அவைகளைக் காத்து, ஐம்புலன்களுக் குரிய போகங்களை அவைகள் நுகரும்படி செய்து, இறைவனிடத்திலுள்ள தூயவன்பினால் தமது மூர்ந்தை வினையைத் தொலைத்துக் கொண்டாரை முத்தியடையச் செய்து, பிறகு எஞ்சிய உயிர்களனைத்தையும் உலகங்களனைத்தையும் அழிக்கிறார். இப்படியே அவர் யுகங்கள் தோறும் செய்துவருகிறார். அவ்வாறு சங்கரிக்கும்போது சில சமயங்களில் பிரமன் முதலியோர்களின் எலும்புகளை யெடுத்து அணிந்துகொள்வார்; சிலசமயங்களில் அப்பெரியோரின் சிரங்களையெல்லாம் எடுத்துத் தொடுத்து சிரமாலையாக அணிந்துகொள்வார்; அவர்கள் தலைமயிரை முந்நூலைப்போல அணிந்துகொள்வார்; மற்றும் சில சமயங்களில் அவர் அவர்களைத் தமது முத்தலைச் சூலத்தினால் மெல்லத் தூக்கி ஏந்தி நிற்பார்; பின்னும் சிலசமயங்களில் அவர் அவர்களை நீறாக்கி அந்நீற்றை யணிந்துகொள்வார்; இவ்வாறெல்லாம் ஈசன் அவர்களைச் செய்வது அவர்கள் இயற்றிய அரியதவத்தின் பயனேயாகும். யாவரும் தன் செயலைக்கண்டு வியப்புறவேண்டுமென்ற ஆசையினால் அவர் அப்படிச் செய்யவில்லை. அவர் அவ்வாறு செய்வதற்கு மற்றொரு காரணமு முண்டு. அதென்னவெனில், எவரும் தமது தீவினைப் பயன்களை யெல்லாம் ஒழித்துவிட்டு முத்தி பெறுவதற்கு முதல்வன் பாதங்களை நாடி வணங்குவது அவசியமாதலின், தாமே அம்முதல்வன் என்று யாவரும் எளிதில் அறிந்துகொள்வதற்காகவும் அவர் பிரமன் முதலிய தேவர்களின் சிரங்களை மாலையாகத் தொடுத்து அணிந்துகொண்டார். என்பு மாலை, சிரமாலை, தலைமயிர் இவைகளை யணிவதும், தசைகழிந்த

பிள்ளைக்காரன் பிள்ளைக்கு அழுகிறான், பணி செய்வோன் காசுக்கு அழுகிறான்.

உடலைச் சூலத்திலேந்துவதும் எம்பெருமான் தமக்கு உயிர்த்தொகையின்பாலுள்ள அன்பினாற் செய்யும் செயல்களாகும்."

"எம்பெருமான் பன்றியின் கொம்பையும் ஆமையின் ஓட்டையும் அணிந்ததற்குக் காரணம் கூறுகிறேன், கேள்! முன்னொரு காலத்தில் இரணியாக்ஷன் என்னும் அசுரன் பூலோகத்தைச் சுருட்டித் தன் வயிற்றினுள் வைத்துக் கொண்டு பாதாளத்துக்குப் போய் விட்டான். அப்போது உயிர்களெல்லாம் வருந்தின; தேவர்களெல்லோரும் அஞ்சி நடுங்கினர். அதுகண்ட விஷ்ணுவானவர் பிரமனது நாசியின் வழியாக ஓர் பன்றியாய்த் தோன்றி அண்டத்தின்மீது சென்று மகாமேருகிரியைப்போல் வளர்ந்து, ஓர் இமைப் பொழுதில் பாதாளத்துக்குச் சென்று அவ்வசுரனைக் கொன்று பூவுலகத்தை மீட்டுக்கொண்டு வந்து முன்போல வைத்துப் பிறகு வெற்றி வெறியினால் தாமே பெரியவரென வெண்ணி மயங்கி உலகத்தை யழிக்கவும் சமுத்திரத்தின் கரையை யுடைத்துவிடவும் தலைப்பட்டார். அப்போது விஷ்ணுவைப் பீடித்த மாயையை யகற்றி உயிர்த்தொகையின் துயரத்தை நீக்க வேண்டுமென்ற கிருபா நோக்கத்துடன் எம்பெருமான் பன்றியுருவத்துடன் ஆரவாரித்து நின்ற விஷ்ணுவையணுகி, அவரது கோடுகளிலொன்றைத் தமது திருக்கரத்தினால் ஒடித்தார். அப்போது விஷ்ணுவுக்கு உணர்வு திரும்பி வரவே, அவர் தமது இன்னொரு கோட்டையும் ஈசன் ஒடித்து விடுவாரெனப் பயந்து அவரை வணங்கிப் புகழ்ந்தான். அன்று தாம் ஒடித்த விஷ்ணுவின் கோட்டை எம்பெருமான் ஒரு சின்னமாக மார்பில் அணிந்து கொண்டார். இன்றும் அது அங்கிருந்து விளங்குகிறது."

"அன்று தேவர்களும் அசுரர்களும் திருப்பாற்கடலைக் கடைந்த காலத்தில் மத்தாக உபயோகப்படுத்திய மந்தரகிரி கவிழ்ந்ததைக் கண்ட திருமால் கடலுக்குள் மூழ்கி அம்மலையைத் தம் முதுகின்மீது தாங்கினின்றார். கடலிலிருந்து அமுதம் கிளம்பியதும் சுரர்களும் அசுரர்களும் அதைக்குறித்து ஒருவரோடொருவர் போர்புரிந்தனர். அப்போது திருமால் அப்போரினை விலக்காமல், மந்தரகிரியைத் தாங்கவல்லவர் தேவர்களுக்குள் தாமொருவரே யென்று அகங்காரங் கொண்டு உண்மையை உணராதவராய் உலகத்துக்கு அழிவுண்டாகுமாறு கடல்களைக் கலக்கித் திரிந்தார். ஜீவகோடிகளைக் காப்பதுவே தமது கடமையெனக் கொண்ட சிவபெருமான் விஷ்ணுவிருந்த விடத்துக்கு விரைந்து சென்று, அவ்வாமையை நோக்கிச் சினங்கொண்டு, தமது திருக்கரத்தால் அதைப் பிடித்து அதன் அகந்தையையும் வலிமையையும் பறித்துக்கொண்டார். அப்போது திருமால் தம் சுய வுருவங்கொண்டு எம்பெருமானை வணங்கித் துதிக்க, அவர், "நீ போய் அசுரரை யழித்துச் சுரருக்கு அமுதத்தை யளிப்பாயாக!" என்று பணித்து விஷ்ணுவை விடைகொடுத்தனுப்பி, பிறகு அவ்வாமையின் ஓட்டினையும் திருமால் பெருமாலினாற் கொண்ட அகங்காரத்தைத் தாம் அழித்தருளியதற்கு மற்றொரு சின்னமாகத் தமது மார்பினிற் பூண்டருளினார்."

"மான், மழு முதலியவைகளை எம்பெருமான் ஏந்தியிருப்பதற்குக் காரணம் சொல்லுகிறேன், கேள். முன்பு தாருகவனத்திலுறைந்து வந்த முனிவர்களெல்லாம் ஈசனிடத்து அன்பில்லாதவராய், தமது வேள்வியுந் தவமுந் தாமே ஈசனருளின்றியே தமக்கு முத்தியை யளிக்க வல்லவையெனத் தீர்மானித்து, ஈசனை மதியாமல் வேள்வியையும் தவத்தையுமே புரிந்து வந்தனர். அவ்வாறு கர்மத்தையே கர்த்தாவாகக் கொண்டொழுகிய அறிவிலிகளாகிய முனிவர்கள் செய்கையை கயிலைநாதர் அறிந்து, அவர்களது மாயையையகற்றத் திருவுளங்கொண்டு, திருமாலை யழைத்து அவரை மோகினி வேடந்தரிக்கச்செய்து, தாம் அற்புதச் சுந்தரம் வாய்ந்த தவசிவேடம் பூண்டு, தம்மரையிலுடுத்திருந்த நரசிங்கத்தின் தோலைக் களைந்தெறிந்து நிர்வாணியாகி, திரிசூலத்தையும் பிச்சைவாங்கும் பாத்திரத்தையும் திருக்கரங்களிலேந்திக் கொண்டு, மோகினி வேடந்தரித்த திருமாலை யழைத்துக் கொண்டு தாருக வனத்துக்குச் சென்று, அவரை நோக்கி, "நீ இவ்வனத்திலுறையும் முனிவர்கள் கூடியிருக்கும் இடங்களுக்குச் சென்று அவர்களுடைய மனத்தில் காமத்தீயை யுண்டாக்கி, அவர்களை மாயையிற் சிக்கவைத்து, அவர்களது தவத்தினை யழித்துப் பிறகு எம்மிடம் வந்து சேர்வா

பிள்ளைக்கு விளையாட்டுச் சுண்டெலிக்குப் பிராண சங்கடம்.

யாக!" எனப் பணித்தனுப்பிவிட்டு, வேதவாக்கியங்களை இன்னிசையுடன் பாடிக்கொண்டு பிச்சைகொள்வாரைப் போல அம்முனிவர் இல்லங்களுள்ள ஊருக்குட் சென்றார். அவரது இன்னிசையைக் கேட்டு மனங்கவரப்பெற்று வீட்டுக்குள்ளிருந்து தெருவுக்குவந்த அம்முனிவர்களின் தேவியர்கள் பிக்ஷாடன மூர்த்தியாய் நின்ற எம்பெருமானது திருவுருவத்தைக்கண்டு மையல்கொண்டு விரகத்தீயிற்பட்டுக் கருத்தரித்து அப்பொழுதே நாற்பத்தெண்ணாயிரம் புத்திரர்களை யீன்றனர். அப்புத்திரர்கள் எம்பிரானை அடிபணிந்து போற்றி நிற்க, அவர், "நீவிர் நம்மை நினைத்து நற்றவம் புரிவீராக!" எனப்பணித்தார். பிறகு தம்மிடத்துக் காதல்கொண்டு தத்தளிக்கும் அம்மாதர்கள் தம்மைத் தொடர்ந்துவர எம்பெருமான் அவ்வூரைவிட்டு வனத்தைநோக்கிச் சென்றார். அதற்குள் மாயவன் தமது மோகன வுருவத்தால் அம்முனிவர்கள் மனத்தில் காமத்தீயைமூட்டி, அவர்கள் நல்லொழுக்கத்தினின்று பிறழ்ந்து நடக்கும்படிசெய்து அவர்களுடைய தவத்தினை யழித்து, தம்மழகினால் அவர்களை யிழுத்துக்கொண்டு எம்பெருமானிருந்த விடத்தை நாடி வந்தார். முனிவர்களால் தொடரப்பெற்ற மாயவனும் அவர்களுடைய பத்தினிகளால் தொடரப்பெற்ற சிவபெருமானும் சந்தித்தகாலையில், சிவபெருமானருளினால் மாயவன் மோகினியுருவம் நீங்கித் தம் சுயவுருவம் பெற்றுநின்றார். அதுகண்ட முனிவர்கள் மயக்கம் நீங்கி, கற்பிற்சிறந்த தமது பத்தினிமார்களின் கற்பை யழித்தவர் சிவபெருமானென்றும், அவரது கட்டளையின்படி திருமால் தங்கள் தவத்தை யழித்தாரென்றும் உணர்ந்து கடுஞ்சினங்கொண்டு, கொடிய யாகமொன்றினைச் செய்து சிவனைக் கொல்ல நிச்சயித்து, அங்கே ஓமத்தீயைமூட்டி யாகஞ் செய்தனர். அப்போது அவ்வோமத்தீயினின்று கொடியபுலி யொன்று கிளம்பி, அம்முனிவர்களால் எம்பெருமானைக் கொல்லும்படி ஏவப்பட்டு, எம்பெருமான் மீது சீறிப்பாய்ந்தது. எம்பெருமான் அதைத் தமது திருக்கரங்களாற் பிடித்துக் கிழித்து அதன்தோலை யுரித்து வஸ்திரத்தைப்போல அரையி லுடுத்துக்கொண்டார். பிறகு அத்தீயினின்று ஓர் மழு கிளம்பி எம்பெருமானைக் கொல்லவர, அவர் அதைப் பிடித்துத் தமது திருக்கைக ளொன்றில் ஆயுதமாகத் தரித்துக் கொண்டார். அதன் பிறகு அத்தீயினின்று ஒருமான் உதித்து வானிலெழுந்து தன் நெடுங்குரலால் சராசரங்களையழிக்க ஆரம்பித்தது. அப்போது எம்பெருமான் உயிர்த்தொகை யழியாவண்ணம் தம் கடைக்கண்ணோக்கத்தை அம்மானின்மீது செலுத்தினார். பிறகு அம்மானையழைத்து தமது செவிக்கருகே யமர்ந்து எப்போதும் இனிமையாய்க் கூவும்படி பணித்து, அதைத் தமது இடக்கரங்களி லொன்றிற் பிடித்து அழகாய் ஏந்தினார். பிறகு அவ்வோமத்தீயினின்று எண்ணிறந்த சர்ப்பங்கள் தோன்றி, முனிவர்களாலேவப்பட்டு எம்பெருமான்மீது சீற்றத்துடன் பாய்ந்தன. அவைகளை எம்பெருமான் முன்னாளில் கருடனுக்கஞ்சித் தம்மிடம் அடைக்கலம் புகுந்த நாகங்களுடன் தமது மார்பில் ஆபரணங்களாக அணிந்துகொண்டார். உடனே அத்தீயினடுவினின்று அளவற்ற பூதவெள்ளம் கிளம்பி முனிவரால் ஏவப்பட்டு எம்பெருமான்மேற் பாய்ந்தனர். அப்போது எம்பெருமான் அவர்களைநோக்கி, "நீவிர் எம்மைவிட் டகலாது என்றும் எமது படையாக விருங்கள்!" எனப் பணித்தார். தாங்கள் அனுப்பிய பூதர்கள் சிவபெருமானுக்குச் சேவகர்களாகி நின்றதைக் கண்டு சீற்றங்கொண்ட முனிவர்களின் கொடிய மந்திரங்களினால் அவ்வோமத்தீயினின்றும் வெண்டலை யொன்று கிளம்பி உலகமனைத்தும் அழியுமாறு சிரித்தது. நகைத்தெழுந்த அவ்வெண்டலை முனிவர்களின் ஏவுதலினால் சிவபெருமானை யணுக, அவர் அதைத் தமது திருக்கரத்தினா லெடுத்து சடையில் தரித்துக்கொண்டார். பிறகு அம்முனிவர்கள் தமது மந்திரங்களைச் சிவபெருமான்மீது செலுத்த, அவைகள் ஒரு உடுக்கையின் வடிவங்கொண்டு புவனமனைத்தும் செவிடுபட ஒலித்தன. ஈசனது கருணையினால் மாயாதுய்ந்தனவேயெனினும் புவனங்கள் மயங்கிக் கலங்கின. அப்போது ஈசன் தமக்கெதிரேவந்த அவ்வுடுக்கையைத் தமது திருக்கரங்களி லொன்றாலெடுத்து ஏந்தி, தமது காதினருகேயிருந்து ஒலிக்கும்படி அதற்குக் கட்டளையிட்டார். அது கண்ட பின்னும் முனிவர்கள் சங்காரமூர்த்தியைச் சங்கரிக்கவல்லார் எவருமில்லையென்று உணராதாராய், ஓமத்தீயினின்று கிளம்பிய

முயலகன் என்னுமொரு பூதத்தையும் ஓமத்தீயையும் எம்பெருமான்மீது விடுக்க, அவர் அவ்வக்கினியை ஒரு கரத்தி லேந்திக்கொண்டும் முயலகனை ஒரு பாதத்தினால் தள்ளிக் கீழே யழுத்திக்கொண்டும் நின்றார். பிறகு அம்முனிவர்கள் எண்ணிறந்த சாபங்களையிட்டனர். யாவும் பயன்படாமற் போனபின், அம்முனிவர்கள் நாணமுற்று வாடினர். அப்போது எம்பெருமான் அவர்களுக்கு நல்லுணர்ச்சியைத்தர, அவர்கள் இறைவன் பாதங்களில் வீழ்ந்து தங்கள் பிழைகளைப் பொறுத்தருளும்படி வேண்டினார்கள். இறைவனும் அவர்களை மன்னித்து, சிறந்த தவத்தினைப் புரியும்படி பணித்தார்."

"தக்ஷனே! பின்னும் எம்பெருமான் பெருமையை எடுத்துக் கூறுகிறேன், கேள்! முன்னொருகாலத்தில் கயாசுரன் என்பவன் பிரமதேவரை நோக்கி அருந்தவமியற்ற, அவர் அவன்முன்னே தோன்றி 'நீ எதை வேண்டித் தவஞ்செய்கிறாய்?' என்று கேட்டதற்கு, அவன் அழியாத பேராயுளும், ஆற்றலும், வெற்றியும் வேண்டுமெனக் கேட்க, அவர், "அவைகளை உனக்குத் தந்தோம். ஆயின், நீ சிவபெருமானை எதிர்ப்பாயாகில் அழிந்துபோவாய்!" என்று சொல்லிப் போனார். அதுமுதல் அவ்வசுரன் வானுலகத்துக்குச்சென்று இந்திரனை வென்று துரத்தி, அமராவதி நகரத்தை யழித்து, அஷ்டதிக் பாலர்களையும் துரத்தி, அசுரர்களையும் இராக்ஷதர்களையு மழித்தான். பிறகு பூமிக்குச் சென்று மனிதர்களை வருத்தத் தொடங்கினான். தவமுனிவர்கள் அது கண்டு காசியை யடைந்து விசுவநாதருடைய ஆலயத்துக்குட் சென்று எம்பெருமானிடம் முறையிட்டனர். எம்பெருமான் சருவ சங்கார மூர்த்தி யுருவத்தை யெடுத்துக்கொண்டு, மதிமயக்கித் தம்மையெதிர்த்த கயாசுரனை ஓர் காலினால் தள்ளி மற்றொருகாலை அவன் தலைமீது வைத்து அழுத்தி, அவன் தோலினை யுரித்தார். அச்சமயத்தில் உலகிலுள்ள உயிர்களனைத்தும் எம்பெருமானது திருமேனியின் பேரொளியைக் கண்ணுற்றுப் பார்க்கச் சக்தியற்றவராய்த் தியங்கினர். அதுகண்ட எம்பெருமான் கருணையினால் அந்த யானைத்தோலினால் தமது திருமேனியைப் போர்த்தி மறைத்தார். எம்பெருமான் வாகனமாகக் கொண்ட விடையை இகழ்ந்து பேசினாய். அது தருமதேவதையாகும். நீ நிந்தையாகக் கூறியவைகளெல்லாம் எம்பெருமானது பெருமையையும் கருணையையும் நன்கு விளக்குகின்றன. இறைவன் சுடலையிலாடுகிறார் என்று இகழ்ந்தாய். யுகமுடிவில் சங்காரகாலத்தில் உடல் உயிர் யாவும் ஒடுங்கிய இடமன்றோ சுடலையென்று சொல்லப்படுவது! இறைவன் கங்கையைச் சடையிற்றாங்கியிருப்பதை இகழ்ந்தாயே. உமாதேவியார் விளையாட்டாக தமது திருக்கரங்களினால் எந்தையின் கண்களைப்பொத்த, அதனால் பிரபஞ்சமெங்கும் இருள்சூழ்ந்து ஆருயிர்கள் துயரமுற்றதைக் கண்ட எந்தை தமது நெற்றிக்கண்ணைத் திறந்து அமுதகலைகளைப் பொழிந்து எங்கும் இனியவொளி வீசுமாறு செய்ய, உமாதேவியார் அதுகண்டு அஞ்சி, எந்தையின் கண்களை மூடிய தமது திருக்கரங்களை விரைவில் எடுத்தபோது விரல்கள் பத்தினின்றும் அச்சத்தினால் வியர்வை பெருகியோடிப் பத்துக் கங்கைகளாகிக் கடல்களை நிறைத்த பின் உலகங்கள் முழுவதையும் அழிக்கத் தலைப்பட்ட காலத்து தேவர்கள் முறையிட, எந்தை அக்கங்கைகளை யழைத்துத் தம்சடையிலுள்ள ஒரு ரோமத்தின் மீது விட்டுப் பிரபஞ்சத்தைக் காப்பாற்றினார். அது குற்றமுள்ள செயலாகுமோ? தக்ஷனே! இனி பரம்பொருளாகிய சிவபெருமானை நீ நிந்திக்காதே! முன்போலவே அவருடைய உண்மை நிலையை யுணர்ந்து அவரைப் போற்றுவாயாக!" என்று ததீசிமுனிவர் கூறினார்.

பவத்தை யீட்டுவதிலேயே கண்ணாயிருந்த தக்ஷன் அம்முனிபுங்கவரது புத்திமதியைச் சிறிதும் ஏற்றுக்கொள்ளாமல், "முனிவனே! பலபல வுரைப்பதிற் பயனென்ன? கைலாசகிரியிலுறையும் உன் இறைவன் பரம்பொருளேயானாலும், அவனுக்கு நான் செய்யும் வேள்வியில் அவிர்ப்பாக மளிக்கமாட்டேன். ஆகையினால் நீ இத்தகைய வார்த்தைகளை இனிப்பேச வேண்டாம். நீ இவ்விடம்விட்டுப் போய்விடு! நான் எடுத்த காரியத்தை என்னிஷ்டப்படி செய்து முடிப்பேன்!" என்று அம்முனிவரை அவமதித்துத் துடுக்காய்ப் பேசினான்.

அவ்வார்த்தைகளைக் கேட்டதும், ததீசிமுனிவர் மனத்தில் கோபம் பொங்கிற்று. அது கண்டு வடவாமுகாக்கினியும் அஞ்சிற்று,

தேவர்கள் நெஞ்சந்தளர்ந்தனர், மேருமலையும் சலித்தது, அஷ்ட குலபர்வதங்களும் நிலை பெயர்ந்து அசைந்தன, சமுத்திரங்களேழும் ஓடுங்கின, உலகங்களெல்லாம் நடுங்கின. ததீசி முனிவர் அதையுணர்ந்து தக்கனொருவன் செய்த பிழைகளுக்காக உலகமெல்லாம் நாசமடையும்படி செய்வது தருமமன்றென்று தம் சீற்றத்தையடக்கிக்கொண்டு, தக்ஷனை நோக்கி, "தக்ஷனே! நீ சங்கரனை விலக்கிச்செய்யும் வேள்வி அழியக்கடவது! நின்னோடு இங்கு அமர்ந்துள்ள தேவர்களெல்லோரும் இன்றே அழிவார்களாக!" என்று சாபமிட்டுப் பிறகு அங்கிருந்த அந்தணர்களை நோக்கி, "மறையோர்களே! நீங்கள் உங்கள் குலத்தின் தன்மையை இழந்துவிட்டீர்கள். ஆதலால், நீங்கள் வேதங்களெல்லாம் பரம்பொருளெனக் கூறும் சிவபெருமானையும், அவரன்பரையும், திருநீற்றையும், உருத்திராக்ஷத்தையும் இகழ்ந்து, என்றென்றும் அந்தணராய்ப் பிறந்திறந்து, முத்தியடையாமல் பாசத்தின் வாய்ப்பட்டு, வேதத்திற் கூறப்படாத மார்க்கத்திலேயே நின்றொழுகுவீராக!" என்று சபித்து, பிறகு தம்மைச்சேர்ந்த முனிவர்களுடன் அவ்விடம்விட் டகன்றார். தக்ஷனுடைய செல்வமும், தவமும், கீர்த்தியும், ஆற்றலும், கர்வமும் அவரைப் பின் தொடர்ந்து அவ்விடம் விட் டகன்றன.

(185-ம் பக்கத் தொடர்ச்சி.)

நெருங்கும்போது, நீ உனது செந்தாமரையை யொத்த ஆறு திருமுகங்களும், இளமை பொருந்திய உன்முகங்களில் பிரகாசிக்கும் புன்னகையும், காதிலுள்ள குழையளவு ஓடும்பரவிய செந்தாமரைக்கண்களும், செவிகளிரண்டிலும் ஒளிரும் பொற்குதம்பைகளும் தோடுகளும், வஜ்ரத்தினாற் செய்யப்பட்டுள்ள தோளணிகளும், போர்க்குரிய கதிர்வேலும், நொடிப்பொழுதில் அண்டங்களனைத்தையுஞ்சுற்றி வலம் வந்த மயிலும், மிக்க ஒளிவீசும் அழகியபொற் சதங்கைகளும் வீரக்கழல்களும் இனிமையாக் கலீர் கலீரென வொலிக்கும் தண்டைகளும் அணிந்துள்ள பாதமலர்களும் யாவும் அடியேன் கண்முன்னே தோன்றுமாறு வந்தருளி, உன் பாதமலர்களை யடைவதாகிய வரத்தை நீ அச்சமயத்தில் எனக்குத் தந்தருளவேண்டும்.

பால் ஆகாரம்

MILK DIET

ஆகாரத்தில் பாலை உபயோகிப்பதனால் விளையும் பயனைப் பின்வருமாறு பரீக்ஷை மூலமாய் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் விவசாய இலாகாவில் ஆராய்ச்சி செய்துபார்த்தார்கள். ஒரே வயதான பன்னிரண்டு எலிகளை யெடுத்து ஆறு ஆறாக இரண்டு கூடுகளில் அடைத்துவைத்து, ஒரு கூட்டிலுள்ள எலிகளின் ஆகாரத்தில் பால் சேர்த்தும் மற்றொரு கூட்டிலுள்ள எலிகளுக்குச் சிறிதும் பால்சேராத ஆகாரமளித்தும் சுமார் இரண்டரைமாதம் வைத்துப் பரீக்ஷித்துப் பார்த்தார்கள். இரண்டு கூடுகளிலுள்ள எலிகளுக்கும் கோதுமை ரொட்டி கொடுத்தார்கள். ஆகாரத்தில் பால் சேர்த்து வளர்த்த எலிகள் பருத்த எலும்புகளும், வளர்ந்த தசையும், மிருதுவான மயிரும், ஒளிபொருந்திய கண்களும், நல்ல நிறமும் உடையவைகளா யிருந்தன; அவைகளைப் பார்த்தவுடன், அவைகள் ஆரோக்கியமுள்ளவைகள் என்று யாவரும் சொல்லத் தக்கவைகளா யிருந்தன. பால் சேராத ஆகாரமிட்டு வளர்த்த எலிகள் தசைப் பற்றில்லாமல் எலும்புந் தோலுமாய்ச் சிறிதும் வளர்த்தியில்லாமல் பலஹீனமான சிறு பிராணிகளாக விருந்தன.

பாலிலுள்ள வஸ்துக்கள் தசையை வளர்த்து ஆரோக்கியத்தைத் தருகின்றன. அதிற் கலந்துள்ள சுண்ணாம்பு தேகத்தில் எளிதிற் கலந்து எலும்புகளைப் பெருக்கச் செய்கின்றன. பால் சேர்த்து வளர்த்த எலிகளிருந்த கூட்டின் நிறை அக்காலத்தில் நூற்றுக்குப் பதினொன்று வீதம் அதிகரித்தது. பால் சேராத ஆகாரம் பெற்ற எலிகளிருந்த கூட்டின் நிறை அதே காலத்தில் நூற்றுக்கு இருபது வீதம் குறைந்தது. பாலின் உபயோகத்தை விளக்க இதைவிடத் தெளிவான சாக்ஷியம் வேண்டுமோ?

பாலின் உபயோகத்தை நன்றாய் அறிந்ததனால்தான் நமது முன்னோர்கள் பசுவைச் செல்வங்களனைத்திலும் முதன்மையானதாக மதித்துவந்தனர். பசுவை அலக்ஷியஞ் செய்ததனாலேயே நமது தேசம் க்ஷீணதசை யடைந்திருக்கிறது.

பிள்ளையும் கிள்ளித் தொட்டிலும் ஆட்டுகிறதா?

கல்வியில் சுயேச்சை.

FREEDOM IN EDUCATION

கல்விப் பயிற்சியில் குழந்தைகளைச் சுயேச்சைப்படி நடந்துகொள்ள விடவேண்டிய அவசியத்தைக்குறித்து "குழந்தை வாழ்க்கை" என்னும் பத்திரிகையில் மிஸ்டர் நார்மன் மாக்மன் என்பவர், படிப்பவர் யாவர் மனத்தையும் யோசனையி லாழ்த்தத்தக்க ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். அதன் சாரத்தை நாம் இங்கு எடுத்துக்கூறுவோம்.

குழந்தைகளுக்கு உண்மையாகவே சுதந்திரம் கொடுக்க வேண்டுமானால், அவர்கள் தங்களிச்சைப்படி தங்கள் காரியங்களைச் செய்துகொள்ள இடங் கொடுக்கவேண்டும். பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் அளிக்கும் போதகத்திற் பெரும்பான்மையை நீக்கி, குழந்தைகள் தம்மைத் தாமே போதித்துக் கொள்ளவும், ஒருவரையொருவர் போதித்துக் கொள்ளவும் வழிகளை ஏற்படுத்தவேண்டும். அவ்வழிகளை ஏற்படுத்துங்கால் முக்கியமாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டியதென்னவெனில், குழந்தையின் வேலை விளையாட்டுத்தான் என்பதான இயற்கை நீதிதான். அன்றியும், வகுப்புகளிலுள்ள குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைத்து, ஒவ்வொரு குழந்தையின் சக்தியையும் கவனித்து அதற்குத் தக்கவாறு அக்குழந்தைக்குப் போதிப்பதற்கு உபாத்தியாயருக்குச் சௌகரியங்கள் ஏற்படுத்த வேண்டும்.

இஷ்டமில்லாமல் வேலைசெய்யுங் குழந்தையானது பேருக்குமாத்திரமே வேலைசெய்கிறதாகையால், அவ்வாறு வேலைசெய்வதனால் வேலையிலேயே இஷ்டமில்லாமலிருக்கும் கெட்ட வழக்கம் அதற்கு உண்டாவதற்கு இடமுண்டு. குழந்தையானது விளையாட்டான வேலையில் களிப்புடன் தன்மனமுழுவதையும் தெரிந்தும் தெரியாமலும் செலுத்துகிறபடியால், வேலையை ஊக்கத்துடனும் சந்தோஷத்துடனும் செய்யும் நல்ல பழக்கத்தைப் பெறுகிறது. எவ்வேலையாயினும் அது திருத்தமாய்ச் செய்யப்பட வேண்டுமானால், அதைச் செய்பவன் களிப்புடன் அதில் தன் மனத்தைச் செலுத்த வேண்டுவது அவசியமாதலால், இந்நல்ல பழக்கம் குழந்தைப் பருவத்திலேயே ஒருவனுக்கு உண்டாக வேண்டுமென்பது யாவர்க்கும் எளிதில் விளங்கும்.

போதகர்களின் உதவியை அதிகமாகத் தேடாமல் குழந்தை தன்னைத்தானே போதித்துக்கொள்ள வேண்டுமானால், கருவிகளும் இயந்திரங்களும்பள்ளிக்கூடங்களில் அதிகமாக உபயோகிக்கப்பட வேண்டும். ஊகித்துப்பார்த்தால் அது நோக்குமிடங்களிலெல்லாம் விளையாட்டுக் கருவிகள் கிடைக்குமென்னும் உண்மையைக் குழந்தைக்கு விளக்கிக் காட்டுவதற்கே அக்கருவிகளும் இயந்திரங்களும் உபயோகிக்கப்படவேண்டும்.

பள்ளிக்கூடத்தில் குழந்தைக்குக் கல்வியைப் போதிப்பதற்குச் சிறந்த வழி, பள்ளிக்கூடத்தை விளையாட்டுக்கருவிக் கடையாகவும் புத்தகசாலையாகவும் இருகூறுகளாகப் பிரித்து, குழந்தையை அவ்விளையாட்டுக் கருவிக் கடையின் வழியாகப் புத்தகசாலைக்கு அழைத்துச் செல்வதேயாகும். விளையாட்டுக் கருவிக் கடையின் பக்கத்திலிருப்பதனால் புத்தகசாலைக்குச் சிறிதும் கௌரவக்குறைவு ஏற்படாது. ஏனெனில், குழந்தை நிறைந்த ஞானத்தை யடையும் மார்க்கம் நிறைந்த ஆநந்தம் பெறுவதேயாகும். பள்ளிக்கூடத்தில் நாள் முழுவதும் பல புத்தகங்களை ஓயாமற் படித்துவிட்டு அந்திப்பொழுதில் சிறிது நேரம் மிதமிஞ்சிக் களித்துக் குதிப்பது நிறைந்த ஆநந்தமாகக் கருதத்தக்கதன்று.

கல்விப் பயிற்சி சிறந்த பலனைத் தரும்படி செய்வதற்கு மற்றும் சில சீர்திருத்தங்கள் அவசியமா யிருக்கின்றன. ஒவ்வொரு குழந்தையின் சக்தியையும் அபிவிருத்தி செய்வதற்குரிய மார்க்கங்களைத் தேடி அவைகளுக்கியையப் போதகமளிக்கவேண்டும். ஒருவகுப்புக்கு ஒரேவிதமான பாடங்களை விதிக்காமல், பலவிதமான பாடங்களை ஏற்படுத்தி, ஒவ்வொரு குழந்தையின் சக்திக்குத் தக்கவிதமான பாடங்களையே அதற்குப் போதிக்க ஏற்பாடு செய்யவேண்டும். குழந்தைகளை ஒருவரோடொருவர் போட்டிபோடச் செய்யும் பரீக்ஷைகளை யொழிக்கவேண்டும். ஏனெனில், அவ்விதப் பரீக்ஷைகள் தங்களுடைய சகபாடிகளை வெல்லவேண்டுமென்ற ஆசையைக் குழந்தைகளின் மனத்தில் உண்டாக்கி, அவர்களைத் தங்கள் சக்திக் கியையாத விஷயங்

பிறக்கும்பொழுதே முடமானால், பேய்க்கு இட்டுப் படைத்தாலாகுமா?

களில் உழைக்கச்செய்து அவர்களுக்கு இயற்கையாயுள்ள சக்தியை மிகவும் குறைக்கிறது. இதுவரையில் உபாத்தியாயர்கள் உலகெலாம் படைத்த சர்வேசுவரனது நோக்கத்துக்கு மாறுபாடாக நடந்து, தங்கள் கையிலகப்படும் குழந்தைகள் தங்கள் அபிப்பிராயங்களையும் வழக்கங்களையும் ஏற்றுக்கொண்டு குரங்குகளைப்போல் நடிக்கும்படி செய்து, அவர்களுக்கு சர்வேசுவரன் அளித்த பல்வகைப்பட்ட சக்திகள் வேரோடழியும்படி அவர்களுக்குப் போதக மளித்துவந்தார்களென்பதை உலகத்தாரெல்லோரும் நன்றாய் அறியவேண்டும். அப்போதுதான் மனிதர் தத்தம் சக்திகள் அபிவிருத்தி யடையப்பெற்று சர்வேசுவரன் தங்களை உலகத்தாருக்குச் செய்யும்படி கட்டளையிட்ட நன்மைகளைப் புரிந்து, உபயோகமுள்ளதும் சுகம் நிறைந்ததுமான வாழ்க்கையுடையவர்களாவார்களென்பது திண்ணம்!

ஆகையினால் குழந்தைகளின் அபிவிருத்தியை உண்மையாக நாடுவோர் பள்ளிக்கூடங்களைச் சீர்திருத்துவதுடன் திருப்தியடையாமல், அவர்கள் தாய்தந்தையர்களை யணுகி இவ்வுண்மையை அவர்களுக்குத் தெரிவித்து, குழந்தைகள் நன்னெறியில் நின்றொழுகும் வரையில் அவர்களுடைய சுயேச்சையைச் சிறிதும் குறைக்காமல், அவர்களுக்கு இயற்கையாயுள்ள சக்திகளை அவர்கள் அபிவிருத்தி செய்துகொள்ளும்படி விட்டுவிடவேண்டும். தச்சுவேலையில் புத்தி செல்லும் ஓர் குழந்தையைப் பள்ளிக்கூடத்துக்கனுப்பி, அவன் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறாவிடில் அவனை இகழ்வது மகாபாபமான செயலாகும். அப்படியே அவன் அப்பரீக்ஷையில் தேறினாலும், அவன் தனக்கிஷ்டமில்லாத எழுத்து வேலையிற் பிரவேசித்து, அவ்வேலையை நன்றாய்ச் செய்யும் திறமற்று, தன் வாழ்நாள் முழுவதையும் துக்கத்திற் கழிப்பான். ஆகையினால் நமது தேசத்திலுள்ள பெரியவர்கள் இவ்விஷயத்தைக் குறித்துத் தீர்க்காலோசனை செய்து, நாட்டிற் பிறக்கும் மேதாவிகள் விளங்குவதற்குரிய வழிகளைத் தேடுவார்களென்று நம்புகிறோம்.

மாகதவல்லி.—தமிழ் நாவல்களுள் மிக்கச் சிறந்தது. புதிய பதிப்பு. அழகிய படங்களுடன், விலை அணா 12.

நமது சிறு கதை

OUR SHORT STORY

(171-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஏழாவது அத்தியாயம்

தற்செயலாய்ச் சந்தித்தல்

துரைசாமிபிள்ளை அன்றிரவு தாம் சூதுநாணயக்காரர்களைப் பிடித்துவிடுவது நிச்சயமெனவெண்ணிக் களிப்புடன் சாயங்காலம் பூந்தமல்லிச்சாலையின் வழியே நடந்து சென்றார். தாம் காதலித்த பெண்ணை தூரத்தில் நின்றாவது ஒருமுறை காணவேண்டுமென்ற ஆசையுடன் அவர் அச்சாலையிற் சென்றார். பழனியாண்டி பிள்ளையின் பங்களாவை யணுகியதும், அவர் சாலையில் ஓர் மரத்தின்பின் மறைவாக நின்று நெடுநேரம் அப்பங்களாவையே உற்றுப் பார்த்துக்கொண் டிருந்தார். தம் காதலியைக் காணாது கண்கள் வெறுப்புற்றன. இனித் தாமதிப்பதிற் பயனில்லையென்று நிச்சயித்தும், ஒரு சமயம் அவள் பங்களாவின் பின்புறத்தில் இருக்கலாமென்று எண்ணி, அவர் அப்பங்களாவின் பக்கத்திலிருந்த ஓர் சந்தின் வழியே விரைவாய்ச் சென்றார். கண்ணுக்கிருட்டும் சமயமாகிவிட்டது. அப்போது அச்சந்தில் கொஞ்சதூரத்துக் கப்பால் தமக்கெதிரே ஒரு பெண் வருவதைக் கண்டு, அவள் தமது காதலியேயென்று கணநேரத்தில் நிச்சயித்து, அவள் தம்மைக்கண்டு நின்று பேசாமல் தம்மைக் கடந்து அலக்ஷியமாய்ச் சென்றால் என்ன செய்வதென்று கலங்கினார். அவளுடைய விவாகத்தைத் தாம் தடுத்து அவள் மனத்தைப் புண்பண்ணியதற்காக அவள் தம்மை விஷத்தைப்போல் வெறுப்பது நிச்சயமெனத் தீர்மானித்து வருந்தினார். அவளைப் பார்க்காமல் பின் திரும்பிச் செல்லவும் மனமில்லை. என்ன செய்வார் பாவம்! தியக்கக் கடலில் மூழ்கித் தத்தளித்தார்.

மோகனசுந்தரியோ தன்னெதிரே தூரத்தில் நிற்பவர் யாரெனத் தெரிந்துகொண்டு விரைவாய் நடந்துவந்து அவரை யணுகி, "துரைசாமி! நீ தானோ?" என்று கேட்டாள். அவள் குரல் நடுங்கிற்று. துரைசாமி பிள்ளையால் வாய்திறந்து பதிற்சொல்ல முடியவில்லை. மோகனசுந்தரி திரும்பவும், "துரைசாமி! உன்னைக்கண்டு பேசவேண்டுமென்ற ஆவல் எனக்கிருந்தது. நல்லவேளையாய்ச் சந்தித்தேன். உன்மேல் யாதொரு குற்றமுமில்லை. நான் முட்டாள்தனமாய்ச் சில சமயங்களிற் பேசிய வார்த்தைகளே உன்னை இக்குற்றத்தைத் செய்யத் தூண்டினவென்பது என் புத்திக்கு நன்றாய்த் தெரிந்தது. ஆகையினால் நீ பட்ட துன்பங்களுக்கெல்லாம் நானே காரணமென்று தன்னைத்தானே வெறுத்துக் கொண்டிருக்கிறேன்" என்றாள்.

"நான் குற்ற மொன்றும் செய்யவில்லை. கர்மவசத்தால் குற்றவாளியாக எல்லோராலும் கருதப்பட்டேன். நீயும் நான் குற்றவாளியென்றுதான் நினைக்கிறாயோ?" என்றார் துரைசாமிபிள்ளை. அதற்கு மோகனசுந்தரி, "துரைசாமி! செய்த குற்றத்தைச் செய்யவில்லையென்று சொல்வதிற் பயனென்ன? உன்னுடைய விசாரணையைப்பற்றி தினப் பத்திரிகைகள் கூறியதை யெல்லாம் படித்துப் பார்த்தேன். சிறிதும் சந்தேகத்துக்கு இடமில்லாமல்தான் நிரூபித்துவிட்டார்களே நீ குற்றவாளி யென்பதை! அப்பால் எப்படி வேறு விதமாய் எண்ணுகிறது?" என்று அன்புடன் தன் மனத்திலுள்ளதை உண்மையா யுரைத்தாள்.

"மோகனா! சத்தியமாய்ச் சொல்லுகிறேன்! நான் சூதுநாணயக்காரன் அல்ல! உன்னை விவாகம் செய்துகொள்ள அன்று முயன்றானே அவன்தான் சூதுநாணயக்காரன்! அவன் பெரிய அயோக்கியன்!" என்று துரைசாமிபிள்ளை படப்படப்புடன் கூறினார்.

மோகனசுந்தரி சிறிதும் அமைதிகுலையப் பெறாது, "துரைசாமி! முத்துசாமி பிள்ளையவான் உன்னிடத்து மிகுந்த அநுதாபமுடையவராயிருக்க, நீ அவர்மீது இப் பெரும்பழி சுமத்துவது தருமமன்று! நீ கொடிய துன்பத்தை அனுபவித்தாய். அதனால் ஒரு சமயம் உன் புத்தி கலங்கியிருக்கலாம். இப்படியெல்லாம் நீ பேசுவது எனக்குத் துக்கத்தை விளைவிக்கின்றது. உனக்கு நான் ஏதாயினும் உதவிசெய்யமுடியுமா?" என்றாள்.

துரைசாமி பிள்ளை சிறிது நேரம் மௌனமாயிருந்து பிறகு, "மோகனா! நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்கு நீ உண்மையாய்ப் பதிலுரைப்பாயே யாகில் என் துயரமுழுவதையும் நான் மறந்துவிடுவேன். உண்மையுரைப்பாயோ?" என்றார். "அப்படியே சொல்லுகிறேன்!" என்றாள் மோகனசுந்தரி.

துரைசாமி.—முன்னொரு தினம் திருநாள் கூட்டத்தில் நீ உன் தாய்தந்தையரை விட்டுப் பிரிந்து போய்த் திகைத்தபோது என்னைக் கண்டு, அதுகாறும் என்னுடன் பேசாதவள் உன்னை வீட்டுக் கழைத்துப் போகும்படி சொன்னாய்! அன்றுமுதல் என்னுடன் கூச்சமின்றித் தாராளமாய்ப் பேசிக் கொண்டிருந்தாய். சில சமயங்களில் நீ என்னிடம் மிகுந்த பிரியத்தைக் காட்டினாய். அதனால் நான் உன் அன்பைக் குறித்து ஓர் அபிப்பிராயங்கொண்டு களித்து வந்தேன். அவ் வபிப்பிராயம் சரியோ தவறோ?

மோகனா.—துரைசாமி! இக்கேள்வி நீ கேட்பது தகுதியன்று. எனக்கும் முத்துசாமி பிள்ளைக்கும் விவாகம் நிச்சயித்திருப்பது தெரிந்தும் நீ இப்படிக் கேட்கலாமா?

துரைசாமி.—இனி என் வாழ்நாளை எத்தகைய மார்க்கத்திற் கழிப்பதென்பதை உனது பதிலைக்கொண்டே நிச்சயிக்கப்போகிறேன். ஆகையினால் நீ உண்மையாய்ப் பதிலுரைக்கவேண்டும். நான் கொண்ட அபிப்பிராயம் தவறா?

மோகனா.—ஆ! தெய்வமே! நான் எப்படி உண்மையை யுரைப்பேன்! துரைசாமி! அக்கேள்வியை இன்னொருமுறை கேட்காதே!

துரைசாமி.—நீ பதிலுரைக்க வேண்டாம்! உண்மையை யறிந்துகொண்டு விட்டேன். நம்மைக் காப்பாற்ற ஈசனொருவர் இருக்கிறார். போய் வருகிறேன்.

இவ்வாறு கூறிவிட்டு, துரைசாமிபிள்ளை அவ்விடம்விட் டகன்று வெகு விரைவாய் நடந்து சென்றார்.

எட்டாவது அத்தியாயம்

சூதுநாணயக்காரர் சூழ்ச்சி

இரவு சுமார் ஒன்பது மணியிருக்கும். அமாவாசையிருள் எங்கும் சூழ்ந்திருந்தது. திருவல்லிக்கேணியில் அநுமந்தலாலா தெருவின் வடவண்டைக் கோடியில் மின்மினிப்பூச்சியைப்போல் எரிந்துகொண்டிருந்த முனிசிபல் விளக்கு அவ்வந்தகாரத்தை அதிகரிக்கச்செய்தது. துரைசாமி பிள்ளை கீழண்டைச்சாரியி

பிறந்தபிள்ளை பிடி சோற்றிற்கு அழுகிறது, பிறக்கப்போகிற பிள்ளைக்குத் தண்டை சதங்கை தேடுகிறார்கள்.

பிறந்தன இறக்கும், தோன்றில மறையும்.

ஞோமாய் மெல்லமெல்ல நடந்துபோய் எட்டாவது கதவிலக்கமுள்ள வீட்டையடைந்து, தாளிடாமல் சும்மா மூடியிருந்த கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்து கதவை மூடிவிட்டு, இருளில் கையினுலெங்கும் பரிசித்துப் பார்த்துக்கொண்டுபோய், பலகையிணைக்கப்பட்டிருந்த ஓரிடத்தை யடைந்து அப்பலகையின்மீது கையிற் பட்ட ஒரு பிடியை மெல்ல அழுத்தினுர். ஓசையின்றி அப்பலகையினடுவே ஓர் திறப்பு உண்டாயிற்று. துரைசாமி பிள்ளை அதன் வழியே நுழைந்து பார்த்ததில், தாம் நின்றவிடம் ஒருசிறிய அறையென்றும், அதற்குப் பக்கத்து அறையில் பிரகாசமான வெளிச்சமிருந்ததென்றும், அவ்வறைக்கும் இவ்வறைக்கும் இடையில் பலகையடைப்புத்தா னிருந்ததென்றும் பலகையிடுக்கின் வழியே அடுத்த வறையிலிருந்து வந்த வெளிச்சத்தினுல் அவர் தெரிந்துகொண்டார். உடனே அந்தப் பலகை யடைப்பை யணுகித் தடவிப் பார்த்ததில், அவ்வடைப்பின் நடுவில் ஒரு சிறு பலகை ஜன்னல் நகர்ந்து இடைவெளி யுண்டாக்குவதைக் கண்டு, அப்பலகையை இரண்டு அங்குலம் தள்ளி இடைவெளியின் வழியாக அவ்வறையைக் கவனித்தார்.

அவ்வறையின் ஒரு மூலையில் ஓர் உலை உக்கிரமாய் எரிந்துகொண்டிருந்தது. அதன்மீது ஓர் பெரிய குவை மழுப்போற் காய்ந்து ஜ்வலித்துக்கொண் டிருந்தது. அருகில் சூதுநாணயஞ் செய்வதற்குரிய ஆயுதங்கள் பல கிடந்தன. அவ்வறையில் மனிதர்கள் இருந்ததாகத் தெரிந்ததே யெனினும், ஓர் தட்டி மறைத்துக் கொண்டிருந்ததனுல், எத்தனை பேர்கள் இருந்தார்களென்றும் அவர்கள் யாரென்றும் அவரால் தெரிந்துகொள்ள முடியாமற் போயிற்று. துரைசாமி பிள்ளை அப்பலகையைப் பின்னும் கொஞ்சம் தள்ளி எட்டிப்பார்த்தார். அப்போது ஒரு அதிசயம் சம்பவித்தது. "உன்னைப் பிடித்துக்கொண்டுவிட்டேன்! நகர்ந்தால் உன்னைக் சுட்டுவிடுவேன்!" என்று யாரோ ஒருவர் அவர் காதிற் சொன்னுர். அடுத்த நிமிஷத்தில் இருவா அவருடைய இரு கைகளையும் இறுகப் பிடித்துக்கொண்டார்கள். துரைசாமிபிள்ளை தம்மை விடுவித்துக் கொள்ள முயன்ருர். உடனே அவரது இரு கைகளும் பின்புறத்திற் சேர்த்து விலங்கிடப்பட்டன; அவரது கால்கள் கயிற்றினுல் இறுகக் கட்டப்பட்டன; வாயில் சீலைத் துணியும் வைத்து இறுக்கப்பட்டது. அப்போது இன்னெருு அதிசயம் சம்பவித்தது. ஒருவர் உள்ளே நுழைந்து லாந்தரை உயரத் தூக்கிப் பிடித்தார். அதுவரையில் தாம் சூதுநாணயக்காரர் கையிற் சிக்கிக் கட்டுண்டதாக எண்ணிய துரைசாமிபிள்ளை தாம் போலீஸ்காரர் கையிலகப்பட்டுக்கொண்டதாகக் கண்டுகொண்டார். புதிதாய் உள்ளேநுழைந்த போலீஸ் உத்தியோகஸ்தன் துரைசாமிபிள்ளையை நோக்கி, "துரைசாமிபிள்ளை! நீ இதில் சம்பந்தப்பட்டிருப்பாய் என்று அப்போதே நிச்சயித்துவிட்டேன். உன்னைத் துன்பப்படுத்துவதில் எங்களுக்குச் சிறிதும் இஷ்டமில்லையே யெனினும், நீ கூவி மற்றவர்களுக்கு எங்கள் வரவைத் தெரிவிக்காமலிருக்க வேண்டுமே யென்று உன் வாயிற் சீலைத்துணியை யடைத்திருக்கிரும். வாயைத் திறந்துகொண்டு கூவ முயலாதே!" என்று தாழ்ந்த குரலிற் சொன்னுர்.

அப்போது பலர் அவ்வறைக்குள் நுழைந்தார்கள். அவர்களில் ஒருவர், "தலைவனுகிய துரைசாமிபிள்ளை அகப்பட்டுக்கொண்டான் போலிருக்கிறதே! வாருங்கள், மற்ற அயோக்கியப் பயல்களையும் பிடிக்கலாம்! இவனை நாங்கள் இதுவரையில் ஒளிந்திருந்த அறையில் வைத்துக் கதவைப்பூட்டிக்கொண்டு வாருங்கள்!" என்ருன். துரைசாமி பிள்ளையைப் பிடித்துநின்றவர்கள் அவரை யிழுத்துக்கொண்டுபோய் அந்தகாரம் நிறைந்த ஓர் அறைக்குள்ளிட்டு, அவ்வறைக் கதவைப் பூட்டிக்கொண்டு சென்றனர்.

துரைசாமிபிள்ளை தமது நிலைமையை ஆராய்ந்துப்பார்த்தார். முதல்தடவை தம்மீது சாட்டப்பட்ட குற்றத்தைப் பொய்யென நிருபிக்கத் தாம் முயலுவதே பித்தன் செயலென வுணர்ந்த துரைசாமிபிள்ளை இனி தாம் நல்லொழுக்க முள்ளவனென நிருபிப்பது அசாத்திய மெனத் தேர்ந்தார். பிள்ளையார் பிடிக்கப் போய்க் குரங்காய் முடிந்ததேயென வருந்தினுர். த்வீபாந்தரச் சிக்ஷையடைந்து தமது வாழுநாளைக் கசடர்களுடன் கழிப்பதைத் தவிர வேறுகதி தமக்கு இனி இல்லையெனத்தேர்ந்து தம்மைத் தாமே நொந்துகொண்டார். துயரம்

மிகுந்து அவர் கண்களினின்றும் நீர் பெருகிற்று.

அச்சமயத்தில் யாரோ ஒருவர் தமக்கு அருகில் நிற்பதாக வுணர்ந்தார். பூட்டிய அறைக்குள் யார் எப்படித் தம்மை அணுகியிருப்பார்களென்று அதிசயித்தார். அவர் அருகே நின்றவர் மிகவும் தாழ்ந்தகுரலில், "துரைசாமிபிள்ளை! நல்லவேளையாய் உம்மை இவ்வறையிலிட்டுப் பூட்டினுர்கள்! உம்மை விடுவிக்க வந்திருக்கிறேன்!" என்று அவர் காதுக்குள் உரைத்தார். அக்குரலினுல் துரைசாமிபிள்ளை தம்மருகில் நின்றவர் சூதுநாணயக்காரர் தலைவரான கங்காதரமுதலியார் என்று தெரிந்துகொண்டான். ஆயினும், அவர் வாயில் சீலைத்துணி அடைத்திருந்தபடியால், யாதும் சொல்லமுடியாமல் சும்மா நின்ருர்.

கங்காதரமுதலியார், "துரைசாமி பிள்ளை! நீர் மிகவும் எளிதில் ஏமாந்துபோய், நாங்களிட்டவலையிற் சிக்கினீர்! அன்று சங்கரய்யர் காப்பிஹோட்டலில் உம்மைஅடையாளந் தெரிந்துகொண்டதுமுதல் நான் இதுவரை செய்ததெல்லாம் ஆயுள் பரியந்தம் உம்மைக் கட்டுப்படுத்திவைக்கத்தக்க வலையிற் சிக்கவைப்பதற்காகத்தான். ஹாஹா! குடிகாரன் வேஷம் போட்டா என்னை ஏமாற்றப் பார்த்தீர்? உமக்காகத்தான் இவ்வீட்டை அமர்த்தி வேண்டிய ஆயுதங்களையெல்லாம் சேகரித்துவைத்தேன். ஏ! அப்பா! எவ்வளவு பணம் செலவாயிற்று தெரியுமா? நானே அவ்வேற்பாடுகளெல்லாம் செய்துவைத்துவிட்டு, போலீஸ்காரர்கள் இன்றிரவு இங்குவரவும் ஏற்பாடு செய்தேன். உம்மால் எனக்கு எவ்வளவு சிரமம் தெரியுமா? நீர்தாம் சூதுநாணயக்காரரது தலைவன் என்று போலீஸ்காரர்களுக்குப் பல கடிதங்கள் கிடைத்திருக்கின்றன. இனி நீர் தப்புவதுகிடையாது; அதாவது, நான் உமக்கு உதவிசெய்யாவிட்டால், நீர் தப்பமுடியாது. நான் உமக்குப் புத்திகூறுகிறேன். கேட்டுப் பிழைத்துப் போம்! என்னை வெல்ல உம்மாலும் முடியாது, உம்மைப்போல ஆயிரம்பேர்கள் திரண்டாலும் முடியாது. சொல்வதைக் கவனித்துக் கேளும். பின்புறமாகச் சேர்த்து விலங்கிடப்பட் டிருக்கிற உமது கைகளுக்குச் சமீபத்தில் ஒரு காகிதத்தை நீட்டி ஒருகையில் ஒரு பேனு கொடுக்கிறேன். தயவுசெய்து அதில் உமது கையெழுத்தைப் போடும். உம்மை இப்பரிதாப நிலைமையிலிருந்து விடுவிக்கிறேன்" என்ருர். பிறகு அவர் ஒருபேனுவை துரைசாமிபிள்ளையின் ஒருகையிற் கொடுத்து கையெழுத்துப் போடும்படி வேண்டினுர். துரைசாமி பிள்ளை பேனுவைப் பிடிக்க மனமில்லாதகாரணத்தினுல் கைகளை இறுக மூடிக்கொண்டார்.

கங்காதர முதலியார், "நன்ருய் யோசித்துப் பாரும்! நீர் போலீஸ்காரர் கையில் கையுங்களவுமாக இரண்டாவது முறை அகப்பட்டுக்கொண்டிருக்கிறீர். இம்முறை உமக்குத் தீபாந்தரச் சிக்ஷை கிடைப்பது திண்ணம். இதில் கையெழுத்துப் போடும்; உம்மை விடுவித்து, உமக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்கிறேன். பேனுவைப் பிடியும்" என்று சொல்லி மறுபடியும் பேனுவை நீட்டினுர். துரைசாமி பிள்ளையின் இறுக மூடின கைகள் திறக்கவில்லை. அச்சமயத்தில் அறைக்கு வெளியே ஏதோவொரு சப்தம் கேட்டது. அப்போது கங்காதர முதலியாருக்கு வேறொரு எண்ணம் தோன்றிற்று. உடனே அவர் துரைசாமி பிள்ளையின் விலங்குகளைக்கழற்றி, கட்டுகளைத் தறித்து, வாயிலிருந்த சீலைத்துணியையும் எடுத்தெறிந்தார். பிறகு அவர் துரைசாமி பிள்ளையை நோக்கி, "சிறிதும் சப்தம் செய்யாமல் விரைவாய் நடந்து என்கூட வாரும். உம்மைத் தப்புவிக்கிறேன்!" என்று சொல்லி, துரைசாமி பிள்ளையின் கையைப் பிடித்துக் கொண்டு அநேக இரகசிய வழிகளின் வழியே சென்று இரண்டு நிமிஷப்பொழுதில் பத்திரமாய் அவ்வீட்டைவிட் டகன்று வெங்கடரங்கம்பிள்ளை தெருவில் நுழைந்தார்.

அப்போது கங்காதரமுதலியார், "உம்முடன் ஐந்துநிமிஷ நேரம் பேசவேண்டும். எனது இருப்பிடத்துக்கு வருகிறீரா? அல்லது இங்கேயே தெருவில் நடந்துகொண்டே பேசலாமா?" என்று துரைசாமி பிள்ளையைக் கேட்டார். அதற்குத் துரைசாமிபிள்ளை, "பேசுவதற்கென்ன இருக்கிறது? அக்காகிதத்தில் ஒருநாளும் நான் கையெழுத்துப் போடமாட்டேன். உம்முடைய கூட்டத்தைச் சேரவும் மாட்டேன். எவ்வளவு கஷ்டப்படவேண்டியிருந்தாலும் என்னைச் சூழ்ந்துள்ள பழியை

யகற்றிக்கொள்ள முயற்சி செய்யாமலிருக்க மாட்டேன்!" என்று பதிலுரைத்தார்.

கங்காதரமுதலியார் நகைத்து, "துரைசாமி பிள்ளையவாள்! நீர் நிரம்பவும் வீம்புக்காரர். உம்மைப் போலீசார் கையில் பிடித்துக் கொடுப்பதற்காகச் சூழ்ச்சிசெய்தேனே; அது நீர் சிறிதும் சந்தேகமுறாமல் பலித்ததல்லவா? ஏன் வீணாகக் கஷ்டப்படுகிறீர்? நீர் இனி வெளியில் தலைகாட்ட முடியாது. எங்கு கண்டாலும் போலீஸ்காரர் உம்மைப் பிடித்துக் கொள்வார்கள். உமக்குத் தீபாந்தரத் தண்டனையும் கிடைக்கும். ஆகையினால் நீர் என் கூட்டத்துக்கு இனி ஒரு தொந்தரவும் செய்ய முடியாது. ஆகையினால் உம்மைக்கேட்டு அக்காகிதத்தில் கையெழுத்து வாங்கவேண்டுவது அவசியமில்லை. உம்மை நான் மடுத்த வலையிலிருந்து விடுவித்தும் விட்டேன். நீர் எனக்கும் என் கூட்டத்தவருக்கும் தீங்கு செய்தும் நீர் தீபாந்தரத்தண்டனை யடையும் ஸ்திதியிலிருக்கும் சமயத்தில் உம்மை நான் விடுவிப்பது உமக்கு ஆச்சரியத்தை விளைவிக்கலாம். ஆனால் யோசித்தால் அது அவ்வளவு ஆச்சரியத்தைத் தரத்தக்கன்று. போலீஸ்காரர் கையிற் சிக்காமல் ஓடி யொளிய வேண்டிய நீர் எங்களுக்குத் தீங்கு செய்ய முயலமுடியாது. ஆனால் உம்மைக் கோர்ட்டுக்குக் கொண்டுபோய் நீர் செய்த குற்றத்தைப்பற்றி விசாரித்தால், ஒருசமயம் உமக்கு எங்கள் சமாசாரம் அதிகமாகத் தெரிந்திருந்து அதை நீர் சொல்லி எங்களுக்கு அதனால் பெருந்தீங்கு நேரிடலாம். ஆகையினால் உம்மைக் கோர்ட்டில் விசாரிக்காமலிருப்பதே நலமெனத் தீர்மானித்தேன். என்னுடைய தீர்மானம் சரிதானே?" என்றார். துரைசாமி பிள்ளை, "வீரபத்திர முதலியார் செய்யும் தீர்மானம் எப்போதும் சரியாகத்தானிருக்கும். கேட்பானேன்?" என்றார்.

கங்காதரமுதலியார் திடுக்கிட்டு, "ஆ! நாகலிங்க முதலியார் சோற்றுக் கடையில் வந்த செவிட்டுக் கூனன் நீர்தாமோ? அப்போதே சந்தேகித்தேன். பார்த்தீரா? இப்படியேதாவது உமக்கு எங்கள் இரகசியம் அதிகமாகத் தெரியலாமென்று சந்தேகித்தே உம்மை இன்று விடுவித்தேன். ஒரு வார்த்தை சொல்லுகிறேன், கேளும். வேறு நாட்டுக்குச் சென்று வசிப்பதற்கு வேண்டிய பொருள் தருகிறேன். இந்நாட்டைவிட்டுப் போய்விடும். அல்லது இந்நாட்டிலிருந்துகொண்டே எங்கள் வழிக்கு வராமலிரும். சிறிது பொருளும் அப்போதைக்கப்போது தருகிறேன்; உம்வழிக்கும் நாங்கள் வரவில்லை. இவ்விரண்டு வழிகளும் உமக்குப் பிடிக்காமல், எங்களுக்குத் தீங்கிழைக்க இனியும் முயலுவீராகில் உம்மைப் பொடிபொடியாக்கி விடுவேன்! உமது தீர்மானமென்ன? யோசித்துச் சொல்லும்!" என்றார்.

துரைசாமி பிள்ளை, "யோசிப்பதற்கொன்றுமில்லையே. இச்சம்பாஷணை ஆரம்பிக்கும்போதே என் தீர்மானத்தைத் தெரிவித்துவிட்டேனே. உமது கூட்டத்தைப் போலீசார் கையிற் பிடித்துக் கொடுக்கும் வரையில் எனக்கு ஊணுறக்கத்தில் இச்சையிராது. என்மீதுள்ள பழியை யகற்றிக் கொள்ளாமல் நான் ஜீவித்திருக்கமாட்டேன்" என்று கண்டிப்பாய்ச் சொன்னார்.

கங்காதரமுதலியார், "சரி அப்படியானால் நம்மிருவருக்கும் போர்தானா? உமதிஷ்டம்!" என்று சொல்லிவிட்டு தேர்த்தெருவுக்குள் நுழைந்தார்.

ஒன்பதாவது அத்தியாயம்

மோகனசுந்தரியின் மாமன்

முந்திய அத்தியாயத்திற் கூறிய சம்பவம் நடந்த மறுநாள் மத்தியானம் பழனியாண்டி பிள்ளை வீட்டுக் கூடத்தில் அவர் மனைவி பங்கஜத்தம்மாள், அவர் மைத்துனர் முத்துக்குமாரபிள்ளை, அவர் பெண் மோகனசுந்தரி, புரோகிதர் குருநாதையா இவர்கள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். சிறிதுநேரம் ஏதேதோ ஊர் வர்த்தமானங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தபின், குருநாதையா திடீரென்று பங்கஜத்தம்மாளை நோக்கி, "அம்மா! அன்று உங்களெல்லோருக்கும் அவ்வளவு துயரத்தை விளைவித்தானே சூதுநாணயக்காரன், அவன் சமாசாரம் புதிதாக ஒன்று வெளியாயிருக்கிறதே; அது தெரியுமா?" என்று கேட்டார்.

பங்கஜத்தம்மாள் மிக்க அனுதாபத்துடன், "ஐயோ பாவம்! துரைசாமி பிள்ளை நிரம்பவும் யோக்கியனாகத்தானிருந்தான். எங்களுக்கும் பெரிய உதவியாயிருந்தான். அவனைப்பற்றி

பிள்ளை வரத்திற்குப்போய், புருஷனைப் பறிகொடுத்ததுபோல்.

நினைக்கும்போது நிரம்பவும் வருத்தமாயிருக்கிறது" என்றாள். அதற்கு குருநாதையா, "அம்மா நீங்கள் நிரம்பவும் குணசாலியானதால், அவனிடத்தில் அநுதாபப்படுகிறீர்கள். ஆனால் அவ்வநுதாபத்தைப் பெற அவன் அர்கதையுள்ளவனல்ல. பெரிய மோசக்காரன்! நல்லவன்போல் வேஷம் போட்டு எத்தனையோ சூதுநாணயங்களைச் செய்து நாட்டிற் செல்லவைத்து விட்டானே! நிரம்ப வஞ்சகமுள்ளவன்!" என்றார்.

யார் என்ன சொன்னாலும் அதற்குப் பிரதி சொல்லிக் கக்ஷியாடுவதில் மிகுந்த பிரியமுள்ளவரான முத்துக்குமார பிள்ளைக்கு தமது சக்தியைக் காட்டச் சரியானசமயம் வாய்த்துவிட்டது. முகமலர்ச்சியுடன் அவர் புரோகிதரை நோக்கி, "என்ன, குருநாதைய பந்துலு! அம்மனிதன்மீது உமக்கு ஏன் அவ்வளவு துவேஷம்? முன்பு அவன் கேஸ் விசாரணை நடந்தபோது நான் பத்திரிகைகளைக் கவனமாய்ப் படித்தேன். அவன் குற்றவாளியென்று நிரூபிக்கத்தக்க சாக்ஷியம் சிறிது மிருந்ததாகத் தெரியவில்லை. அப்படியிருக்க அவனை வஞ்சகனென்றும் மோசக்காரனென்றும் பலவாறு திட்டுகிறீரே! இது தர்மமா?" என்றார்.

"அவன் குற்றவாளி யென்று நிரூபிக்கத் தக்க சாக்ஷியமில்லை யென்றா சொன்னீர்கள்? ஹைக்கோர்ட்டில் ஜூரிவைத்து நடந்த கேஸ் அல்லவோ அது! தகுந்த சாக்ஷிய மில்லாவிட்டால் தண்டிப்பார்களா?" என்று ஆச்சரியத்துடன் கூறினார் புரோகிதர் குருநாதய்யா.

முத்து.—ஆமா! ஹைக்கோர்ட்டில் ஜூரி வைத்து நடத்தினால், தவறு ஏற்படவே ஏற்படாதோ? யாதுமறியாத ஏழைகள் எத்தனை பேர்கள் அநியாயமாய்த் தண்டனை யடைகிறார்கள் தெரியுமா?

குரு.—ஏதோ ஆயிரத்தி லொன்று அப்படி ஏற்படலாம்.

முத்து.—ஆயிரத்தி லொன்றா? நூற்றில் ஐம்பது அப்படி ஏற்படுகிறது. அது போகட்டும். நீங்கள் சொல்லுகிறபடியே வைத்துக் கொண்டாலும், இம்மனிதன் கேஸ் ஏன் அந்த ஒரு கேஸாக இருக்கக்கூடாது?

குரு.—பிள்ளையவாள்! அப்படி எண்ணுவதற் கிடமில்லை. இன்னொருமுறை அதே மனிதன் சூதுநாணயஞ் செய்யுமிடத்தில் குற்றஞ் செய்துகொண்டிருக்கும்போது நேற்றிரவு பிடிக்கப்பட்டானாம்.

முத்து.—ஹா! அப்படியா?

மோகன.—ஆனால் அவன் திரும்பவும் கைதியாகவா இருக்கிறான்?

குரு.—இப்போது கைதியாகவில்லை. அதுதான் அதில் அதிசயம். போலீஸ்காரர்கள் அவனைப் பிடித்து ஒரு அறையிலிட்டுப் பூட்டிவிட்டு, அவனைச் சேர்ந்த மற்றவர்களைப் பிடிப்பதற்காகப் போனார்களாம். பிறகு திரும்பி வந்து பூட்டைத் திறந்து பார்த்தபோது, அவன் அவ்வறையி லில்லையாம். அவ்வறையிலிருந்து வெளியே போக வேறு வழியில்லையென்று போலீசார் அவ்வறை முழுவதையும் ஆராய்ந்து பார்த்துத் தெரிந்து கொண்டார்களாம்.

முத்து.—அப்படிச் சொல்லும். நான்தான் முன்னமே சொன்னேனே. அவன் யாதொரு பாவத்தையு மறியாத ஏழை. சூதுநாணயக்காரரைப் பிடிக்கச் சக்தியில்லாத போலீஸ்காரர்கள் அவ்வேழையைத் தொந்தரவு செய்கிறார்கள். முன்னொருமுறை பிடித்துத் தண்டித்ததை ஆதாரமாக வைத்துக்கொண்டு, அவன் அவ்விடத்துக்கே வராவிட்டாலும், அவனைப் பிடித்ததாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள் போலும்!

குரு.—அப்படியல்ல. அவனைத் தம் கண்ணால் பார்த்ததாக போலீஸ் இன்ஸ்பெக்டர் சுப்பராய முதலியார் சொன்னார். அதுவுமன்றி பலநாட்களாகப் போலீஸார் அவனைக் கவனித்துக்கொண்டிருக்கிறார்களாம். இப்போதும் அவனைப் பிடிப்பதற்கு ஒரு மார்க்கமிருக்கிறதாம்.

முத்து.—சரிதான். அவன் குற்றவாளியென்று முன்னமே தீர்மானித்துத் தொடர்ந்தால், அவன் செய்வதெல்லாம் குற்றமாகத்தான் தோன்றும். பாவம்! ஏழை துன்பப்படுகிறான்.

முத்துக்குமார பிள்ளையை வாதத்தில் வெல்லுவது சாத்தியமல்லவென்பதை நன்றாயறிந்த குருநாதையா அப்பேச்சை அங்கு நிறுத்தி வேறேதோ வொரு விஷயத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்தார். மோகனசுந்தரி வாடிய முகத்துடன் அக்கூடத்தைவிட் டகன்று தோட்டத்துக்குட் சென்று புஷ்பச் செடிகளி

பின்னாலே வரும் பலாக்காயினும் முன்னாலே வரும் கலாக்காய் நலம்.

ளிடையே நடந்துகொண்டு தன் காதலனது துன்பத்தை நினைத்து வருந்திக்கொண்டிருந்தாள். சிறிது நேரம் சென்றபின் யாரோ தானிருக்கு மிடத்தை நோக்கி வரும் சப்தம் கேட்டு, அவள் திரும்பிப் பார்த்தாள். முத்துசாமி பிள்ளை மலர்ந்த முகத்துடன் விரைவாய் நடந்து வந்துகொண்டிருந்தார்.

சமீபத்தில் வந்ததும், அவர், "மோகனா! தனியேவந்து என்ன யோசித்துக்கொண்டிருக்கிறாய்?" என்று அன்புடன் கேட்டார். மோகனசுந்தரியும் புன்னகையுடன், "யோசனை யென்ன? ஒன்றுமில்லை. கூடத்தில் மாமா தர்க்கத்துக்கு ஆரம்பித்தார் வழக்கம்போல். தலைவேதனையா யிருந்தது. அதற்காக இங்கே வந்தேன்" என்றாள். பிறகு இருவரும் பக்கத்திலிருந்த ஒரு பெஞ்சியின்மீது உட்கார்ந்துகொண்டார்கள்.

முத்துசாமி.—மோகனா! கலியாணத்தைச் சீக்கிரம் நடத்திவிட்டால், நலமாயிருக்குமே. உன் தகப்பனார் உன்னிஷ்டப்படி நடத்தப் போவதாகச் சொல்லிவிட்டார். உன் இஷ்டமென்ன?

மோகனா.—என்னா லானவரையில் முயன்று பார்த்தேன். முடியவில்லை. என்ன செய்கிறது? தங்களைப் பர்த்தாவாகப் பெறும் தகைமை யுடையவளல்ல நான். தாங்கள் எவ்வளவோ பெருங்குணமுடையவர். உங்களை யடையப் பெரும் பாக்கியம் செய்திருக்கவேண்டும். நானோ மகாபாபி! துக்கத்துக்கே பிறந்தேன். தங்களிடத்தில் எனக்குச் சிறிதும் காதல் என்பதில்லை. ஆதலால் தங்களை நான் மணஞ்செய்துகொள்வது தகுதியன்று. இதுவரையில் இவ்விஷயத்தைச் சொல்லாமலிருந்தது பெரிய தவறு. அதற்காக அடியேனைத் தயவு செய்து மன்னிக்கவேணும்.

முத்துசாமி.—மோகனா! அப்படியெல்லாம் சொல்லாதே! அன்று அப் பைத்தியக்காரன் வந்து நமது விவாகத்தைத் தடுத்ததுமுதல் உன் மனம் நொந்துபோய் நீ துயரத்திலேயே அழுந்தியிருக்கிறாய். அழகும் புத்தியும் குணமும் நிறையப்பெற்ற உன்னை மணஞ்செய்துகொள்ள நானல்லவோ பெருந்தவம் செய்திருக்கவேண்டும். உனதன்பிற் சிறிதளவு எனக்குக் கிடைத்தாற் போதுமே. விவாகத்துக்கு நான் அவசரப்படவில்லை. எவ்வளவு காலம் வேண்டுமானாலும் காத்துக்கொண்டிருக்கிறேன்.

மோகனா.—எவ்வளவு காலம் காத்திருந்தாலும் பிரயோசனமில்லை யென்று நினைக்கிறேன். அன்று முதல் நானும் என் புத்திக்கெட்டியவரையில் யோசித்துப் பார்த்துவிட்டேன். நாம் விவாகஞ்செய்து கொண்டால், துக்கந்தான் விளையும்.

முத்துசாமி.—மோகனா! நீ பேசுவதைக் கேட்கும்போது, ஒரு துரோகி வஞ்சனையாக உன் மனத்தைக் கவர்ந்து என் வாழ்வை வீணாக்கிவிட்டான் என எண்ணவேண்டியிருக்கிறது. அது உண்மைதானோ?

மோகனா.—ஆம்.

முத்துசாமி.—அவன் யாவனென்று சொல்!

மோகனா.—சொல்வதிற் பயனென்ன?

முத்துசாமி.—இரண்டு வருஷகாலமாக என் மனத்தில் ஆசையை வளர்த்துவந்த நீ இக் கேள்விக்குப் பதிற் சொல்லாதிருப்பது தகுதியன்று.

மோகனா.—உண்மைதான். ஆனால்நான் காதலிப்பவன் பெயரைச் சொன்னால், தாங்கள் இப்பொழுதைக் காட்டிலும் அதிகமாக என்னை இகழ்வீர்கள். ஆயினும் தங்கள் இஷ்டத்துக்கு விரோதமாக நடக்க மனமில்லை. சூதுநாணயஞ் செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட துரைசாமி பிள்ளையே நான் காதலிப்பவன்!

முத்துசாமி பிள்ளை சிறிது நேரம் திகைத்து நின்றார். மோகனசுந்தரி அம்மனிதனைக் காதலிப்பாளென்று அவர் கனவிலும் நினைக்கவில்லை யாதலால் அவர் ஆச்சரியம் கரைகடந்தது. பிறகு அவர் பெருங்கோபத்துடன், "துரைசாமி பிள்ளையையா? சூதுநாணயஞ் செய்யும் அயோக்கியனையா? என்னைவிட அவனையா நீ பெரிதாக மதித்தாய்? இப்போது இன்னொரு முறை அவன் போலீஸ்காரர் கையில் அகப்பட்டுக்கொண்டுவிட்டானே, அது தெரியுமா உனக்கு?" என்றார்.

மோகனசுந்தரி அமைதியுடன், "தெரியும். உலகமெல்லாம் சேர்ந்து அவன் குற்றவாளியென்று சொன்னாலும் எனக்கு அவனிடத்திலுள்ள காதல் சிறிதும் குன்றாது. உலகத்தாரால் துறக்கப்பட்டால் மெய்யன்புடையவர் துறப்பாரோ? அவன் அயோக்கியனா யிருந்தாலும் சரி, குணக்குன்றா யிருந்தாலும் சரி,

பின்னை என்பதும் பேசாதிருப்பதும், இல்லையென்பதற்கு அடையாளம்.

அவனே என்னால் முதன்முதலில் பர்த்தாவாக வரிக்கப்பட்டவன். அன்றியும், அவன் இந்த க்ஷணத்தில் என்முன் தோன்றி, நான் குற்றவாளியல்ல வென்று சொல்லுவானேயாகில், அவன் வார்த்தையை வேதவாக்கியமாக நம்புவேன்!" என்று கூறினாள்.

அவள் அவ்வாறு சொல்லி வாய்மூடுமுன் அவர்கள்நின்ற விடத்துக்குச் சமீபத்திலுள்ள ஓர்புதரின் மறைவிலிருந்து துரைசாமி பிள்ளை ஓடிவந்து அவள்முன் நின்று, "மோகனா! நீ சொன்னதையெல்லாம் கேட்டுக் களித்தேன். நான் யாதொரு குற்றமும் செய்யவில்லை. இது சத்தியம்!" என்றான். க்ஷணநேரம் மோகனசுந்தரி தியங்கினாள். மறுநிமிஷத்தில் அவள் ஓரேபாய்ச்சலாய்ப் பாய்ந்து துரைசாமி பிள்ளையை இறுகவணைத்துத் தேம்பித்தேம்பி யழுதாள்.

முத்துசாமிபிள்ளை உக்கிரமான கோபத்துடன், "குற்றஞ் செய்யவில்லையா? நியாயசபையிற்போய்ச் சீக்கிரத்தில் சொல்லலாம்" என்று சொல்லிப் பற்களை நெறுநெறெனக் கடித்து, "அடே! முனிசாமி! கண்ணா! ஓடிவாருங்கள்! திருடன்! திருடன்!" என்று உரக்க கூவினார்.

அப்போதுதான் மோகனசுந்தரிக்கும் துரைசாமிபிள்ளைக்கும் ஜடவுலக ஞாபகம் திரும்பி வந்தது. உடனே மோகனசுந்தரி, "கண்ணே! துரைசாமி! ஓடு! ஓடு! ஆபத்து வந்துவிட்டது!" என்று கூவினாள். துரைசாமி பிள்ளை ஓட ஆரம்பித்தார். முத்துசாமிபிள்ளை அவர் கால்களைத் தடுக்கிவிட்டு அவரைக்கீழே வீழ்த்தினார். அவர் திரும்ப எழுந்திருக்குமுன், தோட்டக்கார முனிசாமி, கண்ணன், வண்டிக்காரன், இரண்டு வேலைக்காரப் பையன்கள் இவர்கள் ஓடிவந்து துரைசாமி பிள்ளையைப் பிடித்துக்கொண்டார்கள்.

தோட்டத்திற் பெருங்கூச்சல் கேட்டு ஓடிவந்த முத்துக்குமாரபிள்ளை முத்துசாமிபிள்ளையை என்ன விசேஷ மென்று கேட்டார். முத்துசாமிபிள்ளை, "விசேஷமா? அதோ நிற்கிறான் பாருங்கள் சூதுநாணயக்காரப்பயல்! பட்டப்பகலில் தாராளமாய்த் தோட்டத்துக்குள் உலாவுகிறான். முனிசாமி! அவனை இறுகப்பிடித்துக் கொள்ளுங்கள். அவனைப் பிடித்துக் கொடுப்பவருக்குப் போலீசார் இருநூறு ரூபாய் இனாம் கொடுப்பார்கள்" என்றார்.

மோகனசுந்தரி, "அடே முனிசாமி! நான் அல்லவா இந்த வீட்டுக்கு யஜமானி? என் பேச்சைக் கேள்! அவரை விட்டுவிடு!" என்றாள்.

அப்போது முத்துக்குமாரபிள்ளை முத்துசாமிபிள்ளையை நோக்கி, "பிள்ளையவாளே! இவன் சூதுநாணயக்காரன்தான் என்று உமக்கு நிச்சயமாய்த் தெரியுமோ? அவனுடைய கந்தல் வேஷ்டியையும் சொக்காயையும் பார்த்தால், இரும்பையும் தகரத்தையும் போட்டுப்பொன் சவரனாக்குகிற சூதுநாணயக்காரனாகத் தோன்றவில்லையே" என்றார். முத்துசாமிபிள்ளை, "தங்களுக்கு ஏன் அந்தச் சந்தேகம்? அவனையே கேட்டுப் பாருங்கள்" என்றார்.

முத்துக்குமார பிள்ளை துரைசாமி பிள்ளையை நோக்கி, "ஏன் அப்பா! உன்பெயரென்ன?" என்று கேட்டார். அவர்! "துரைசாமி பிள்ளை!" என்று பதிலளித்தார். பிறகு முத்துக்குமார பிள்ளை, "நீ சூதுநாணயக்காரனா?" என்று புன்னகையுடன் கேட்டார். அதற்குத் துரைசாமிபிள்ளை இல்லையென்று சொன்னார். அது கேட்டு முத்துக்குமாரபிள்ளை முத்துசாமி பிள்ளையைப் பார்த்தார். அவர், "நேற்றிரவு இவனைப் போலீஸார்கள் சூதுநாணயக்காரர் தொழிற்சாலையில் பிடித்ததுண்டா இல்லையா வென்று கேளுங்கள்" என்றார். முத்துக்குமார பிள்ளை அக்கேள்வியைக் கேட்டதும், துரைசாமிபிள்ளை "பிடித்ததுண்டு" என்று பதிலளித்தார்.

முத்துக்குமாரபிள்ளை முத்துசாமி பிள்ளையை நோக்கி, "பிள்ளையவாள்! போலீஸ்காரர் பிடித்ததனாலேயே அவன் குற்றஞ்செய்தவனாவானா? அவன்தான் தான் சூதுநாணயக்காரன் அல்லவென்று சொல்லுகிறானே. அவனை விட்டுவிடலாமென்று எனக்குத் தோன்றுகிறது. தங்கள் அபிப்பிராயமென்ன?" என்றார். உடனே முத்துசாமிபிள்ளை, "என்ன, பிள்ளையவாள்! சூதுநாணயஞ் செய்பவன் பேச்சை நம்பி அவனை விட்டுவிடுவது தகுதியா?" என்றார்.

"தாங்கள் சொல்வது உண்மைதான். அவன் சொன்னதெல்லாம் பொய்தான். அவன் துரைசாமி பிள்ளையுமல்ல, அவனைப் போலீசார் நேற்றுப் பிடித்துக் கொள்ளவு மில்லை.

புண்ணியத்துக்குக் கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதுபோல.

ஆகையினுல் அவன் நீர் சொல்லும் மனிதனுக இருக்கவே முடியாது. ஆகையினுல் அவனை விட்டுவிடலாம்" என்ருர் முத்துக்குமார பிள்ளை.

முத்துசாமிபிள்ளைக்குக் கோபம் பொங்கிற் றேயெனினும் முத்துக்குமார பிள்ளையுடன் வாதாடி வெல்லுவது சாத்தியமல்ல வென்று நன்ருயறிந்து, அவர் சாதுரியத்தைக் கண்டு மெச்சினவர் போல் நகைத்து, தோட்டக்கா

முத்துசாமிபிள்ளை சொல்லியபடி போலீஸார் துரைசாமிப் பிள்ளையைப் பிடித்தல்.

ரனைநோக்கி, "முனிசாமி! பிள்ளையவாள் இன் றைக்கெல்லாம் நகைக்க நகைக்கப் பேசுவார். எனக்குக் கொஞ்சம் அவசரவேலை யிருக்கிற படியால், நான்சீக்கிரம் போகவேண்டும். ஆகை யினுல் விரைவாய்ச் சென்று போலீஸ்காரரை அழைத்துக்கொண்டு வா!" என்ருர். அப்போது மோகனசுந்தரி, "அடே முனிசாமி! நீ இருக்கு மிடத்தை விட்டு நகர்வாயேயாயின், அடுத்த நிமிஷத்தில் உன்னை நான் வேலையை விட்டு விலக்கிவிடுவேன். இது என் வீடு என்பதை எல்லாரும் மறந்துவிட்டீர்களோ ?" என்று கறுவினுள். அவ்வார்த்தைகளைக் கேட்டு எல் லோரும் யாதொரு பதிலும் சொல்ல முடியா மல் சும்மாவிருந்தனர். அப்போது முத்துக் குமாரபிள்ளை, "மோகனு! நீ இவ்வாறு சொல் வது சரியல்ல. உன் வீட்டுக்குள் ஒரு கொள் ளைக்காரன் நுழைந்தால், அவனை ஒருவரும் பிடிக்கக்கூடாதோ உனக்கு இஷ்டமில்லா விட்டால்? அப்படிப் பேசாதே! முத்துசாமி பிள்ளையவாள் ! இந்த வைக்கோல் கொட்ட கைக்குள் இவனை அடைத்துவைத்துவிட் டுப் பிறகு யாரையாவது போலீஸ்காரரை அழைத்துவர அனுப்பலாமென்று தோன்று கிறது" என்ருர்.

அதுவரை துரைசாமி பிள்ளைக்கு அனு கூலமாய்ப் பேசிவந்த முத்துக்குமாரபிள்ளை திடீரென்று அவருக்கு விரோதமாய்ப் பேச வே, யாவரும் ஆச்சரியமடைந்தனர். மோ கனசுந்தரி துயரத்தினுல் கைகளைப் பிசை ந்து நின்ருள். முத்துசாமிபிள்ளை தம் எண்ணம் இனி நிறைவேறுவது நிச்சய மென்று தைரியங்கொண்டு, "அப்படியே செய்வோம். தங்களுக்கு எது உசிதமாய்த் தோன்றுகிறதோ அதையே செய்வோம்" என்ருர்.

"சரி! நானும் முனிசாமியும் இந்த ஆளைப் பிடித்துக் கொள்ளுகிருேம். தாங்களும், கண்ணனும், இந்தப் பயல்களுமாக இக் கொட்டகைக்குள்போய், அதிலிருந்து தப்பி யோட வழியில்லையா வென்பதைத் தெரிந்து கொண்டு வாருங்கள்" என்ருர் முத்துக் குமாரபிள்ளை.

முத்துசாமிபிள்ளையும் வேலைக்காரர்களும் அக்கொட்டகைக்குள் நுழைந்தனர். முத் துக்குமார பிள்ளையும் முனிசாமியும் துரை சாமிபிள்ளையை அக்கொட்டகையின் வாசற் படிக்குப் பிடித்துக் கொண்டுபோனுர்கள். இருந்தாற்போலிருந்து முத்துக்குமாரபிள்ளை, "நீயும் உள்ளேபோய்ப் பார்! "என்று சொல்லி, முனிசாமியைப் பிடித்துக் கொட்டகைக்குள் தள்ளி, அதன் கதவை மூடித் தாளிட்டுவிட்டு, துரைசாமி பிள்ளையின் காதில், "நாளையதினம்

சாயங்காலம் ஏழுமணிக்கு எழும்பூர் இரயில் ஸ்டேஷனில் இரண்டாவது வகுப்புப் பிர யாணிகள் போகும் வழியண்டை நானிருக் கிறேன். என்னை வந்துபார். இப்போது உன் ஞல் எவ்வளவு விரைவாய் ஓடமுடியுமோ அவ்வுளவு விரைவாய் ஓடிப்போ!" என்று சொன்னுர். துரைசாமி பிள்ளை மான்போற் பாய்ந்து அதிவிரைவாய் ஓடினுர். மோகன சுந்தரி தன் மாமனைக் கட்டி முத்தமிட்டாள். அவர், "கண்ணே! பயப்படாதே! உன் காதல னுடன் உன்னை எப்படியாயினும் சேர்த்து வைக்கிறேன்" என்று கூறினுர்.

கொட்டகைக்குள் அடைபட்டவர்கள் அதன் கதவை மடமடவென்று இடித்துப் பெருங்கூச்சல்போட்டார்கள். முத்துக்குமார பிள்ளை அவர்களைச் சிறிதும் இலக்ஷியஞ் செய் யாமல் மோகனசுந்தரியை யழைத்துக் கொண்டு அவ்விடத்தைவிட் டகன்ருர்.

ராஜஸிம்ஹன்

RAJASIMHAN

(184-ம் பக்கத் தொடர்ச்சி.)

எட்டாம் அத்தியாயம்

ரஜபுத்திரர் ஆலோசனை

இப்படி அநேகவிதமாய்த் தர்க்கமாயிற்று. கடைசியில் எல்லோரும் ராணு சொன்ன வார் த்தையே சரி யென்று ஒப்புக்கொண்டார்கள். உடன்படிக்கை செய்துகொள்வது என்று தீர் மானமாயிற்று.

பிறகு சபையில் ஒருவன், "அவுரங்கசீபு உடன்படிக்கைக்காகத் தூதனை நம்மிடத்துக்கு அனுப்பவில்லை. உடன்படிக்கை செய்து கொள்ளவேண்டுவது அவனுக்கு முக்கியமோ நமக்கோ?" என்று கேட்டான்.

அதற்கு ராஜஸிம்ஹன், "தூதன் வருவது எப்படி? இந்தக் கணவாய் வழியாய் வெளியே ஒரு பூச்சிகூட வரமுடியாமல்மூடியிருக்கிறது. தூதன் எப்படி வருவான்?" என்ருன்.

தயாளுஷா.—அப்படியானுல் நம்முடைய தூதன் எப்படி அங்கே போவான்? முன் தட வை நம்முடைய தூதன் போயிருந்தபொழுது அவனைக் கொல்லும்படி உத்தரவு செய்யவில் லையா? இப்போதும் அப்படிச் செய்யமாட்டா னென்று எப்படித் தெரியும்?

ராஜஸிம்.—இந்தத் தடவை அப்படிச் செய்யமாட்டான் என்பது நிச்சயம். இப்போது அவனுக்கு பொய் உடன்படிக்கையாவது செய் துகொள்ளவேண்டுவது அவசியம். ஆனுல் தூதன் எப்படிப்போகிறது என்பதுமாத்திரம் சந்தேகம். அது யோசிக்கவேண்டுவதுதான்.

அப்பொழுது மாணிக்கலாலன், "அந்தப் பா ரம் என்மேலிருக்கட்டும். நான் மகாராணுவின் காகிதத்தை அவுரங்கசீபுக்குச் சேர்ப்பித்து அவனிடமிருந்து பதில் வாங்கிக்கொண்டு வரு கிறேன்" என்ருன்.

மாணிக்கலாலன் தந்திரத்திலும் சாமர்த்தி யத்திலும் நிகரற்றவனென்று எல்லோருக்கும் தெரிந்திருந்தபடியால் எல்லோரும் அவன் வார்த்தையை நம்பினுர்கள். தயாளுஷா காகி தம் எழுதினுன். அதன் சாரமென்னவென் ருல்:—பாதுஷா மீவாரிலிருந்து புறப்பட்டுச் சேனையை யெல்லாம் கொண்டுபோய் விட வேண்டும். மீவாரில் பசுஹத்தி நடக்கக் கூடாது. தேவாலயங்களை இடிக்கக்கூடாது. ஜாஸியா வரி வாங்கக்கூடாது. அப்படியானுல் ராஜஸிம்ஹன் மார்க்கத்தைத் திறந்துவிடு வான். பாதுஷா பயமில்லாமல் போகலாமென்ற தாற்பரியம். காகிதத்தைச் சபையிலுள்ளவர்க ளெல்லோருக்கும் வாசித்துக் காண்பித்தாயி ற்று. கேட்டு மாணிக்கலாலன், "பாதுஷாவின் பெண்சாதியும் மகளும் நம்மிடத்தில் கைதி களா யிருக்கிருர்களே. அவர்கள் இருக்க வேண்டுமோ?" என்று கேட்டான்.

இது கேட்டவுடன் ஒருவர் இரண்டுபேர்கள் ஒன்ருென்று பரிகாசமாய்ச் சொல்ல வாரம் பித்தார்கள். ஆனுல் எல்லோரும் விடக்கூடா தென்ருர்கள். சிலர், "இருக்கட்டும். அவர்களை டாக்காவுக்கு அனுப்பவேணும். அங்கே ஹிந்து வாகி வைஷ்ணவ வேஷந் தரித்து ஹரிநாம கீர்த்தனம் செய்யட்டும்" என்ருன். ஒருவன், "அவர்கள் விடுதலைக்காகபாதுஷா கோடிரூபாய் கொடுக்கட்டும்" என்ருன். இப்படி நானுவித

மாய்ச் சொல்லத் தொடங்கினார்கள். மகாராணா ராஜஸிம்ஹன், "இரண்டு முஸல்மான் கைதிகளுக்காக உடன்படிக்கையை விட்டுவிடுகிறது சரியல்ல" என்றான். அவர்கள் இரண்டுபேர்களையும் பிந்தி அனுப்பிவிட வேண்டுமென்று உத்தரவு செய்தான்.

அதேப்பிரகாரம் எழுதப்பட்டது. காகிதத்தை மாணிக்கலாலன் வசம் கொடுத்தார்கள். சபை கலைந்தது.

ஒன்பதாம் அத்தியாயம்
மபாரகனுக்கு வெகுமானம்

சபை கலைந்தபோதிலும் மாணிக்கலாலன் போகவில்லை. எல்லோரும் புறப்பட்டுப்போன பிறகு ஏகாந்தமாய் மகாராணாவினிடம்போய், "மபாரகனுக்கு வெகுமான விஷயமாய் தங்களுக்கு விக்ஞாபனஞ் செய்துகொள்ளுவதற்காக நின்றேன்" என்றான்.

ராஜஸிம் —அவன் என்ன கேட்கிறான்?

மாணிக்க.—நம்மிடத்தில் கைதியாயிருக்கிற பாதுஷாவின் மகளைக் கேட்கிறான்.

ராஜஸிம்.—அவளைப் பாதுஷாவின் பின்னே அனுப்பாமலிருந்தால் சமாதானமாகாதென்று தோன்றுகிறது. அதுவுமல்லாமல் ஸ்திரீயை நாம்எப்படி நிர்ப்பந்தப்படுத்துகிறது?

மாணிக்க.—அவளுக்கு ஒரு தொந்தரவும் கொடுக்கவேண்டியதில்லை. மபாரகனுக்கும் அவளுக்கும் நேற்று இராத்திரி விவாகமாயிற்று.

ராஜஸிம். — ஷஹஜாதை பாதுஷாவுக்கு அப்படிச் சொல்லிவிட்டால் எல்லாம் சரியாகிறது.

மாணிக்க.—இரண்டு பேர்கள் தலைகளும் நிற்கா.

ராஜஸிம்.—எதற்காக?

மாணிக்க.—ஷஹஜாதைகள் பாதுஷா வம்சத்தில் பிறந்தவர்களைத் தவிர வேறு புருஷரைக் கலியாணஞ் செய்துகொள்ளக்கூடாது. இந்த ஷஹஜாதை ஒரு ஸைனிகனைக் கலியாணம் செய்துகொண்டது பாதுஷாவுக்கு அவமானத்துக்கிடமாகும். அதுவுமன்றி பாதுஷாவுக்குத் தெரியாமல் கலியாணஞ்செய்துகொண்டதால், டில்லீ ரங்கமகல் வழக்கப்பிரகாரம் விஷம் கொடுத்துக் கொல்லும்படி உத்தரவாகும். மபாரகன் ஸர்ப்ப விஷத்தினால் சாகாதிருப்பதால் யானையின் காலால் இடறியாவது கழுவிலேற்றியாவது கொலைசெய்வார்கள். இந்தக் குற்றத்துக்காக மன்னித்துவிட்டாலும், சமூகத்துக்கு அவன் செய்த உபகாரத்திற்காகவாவது கழுவி லேற்றுவார்கள். அது தெரியாமலிருந்தாலும் பாதுஷாவின் அனுமதியில்லாமல் விவாகஞ்செய்துகொண்டதற்காகக் கழுவுக்கிறையாவான் என்பதற்குச் சந்தேகமில்லை.

ராஜஸிம்.—நான் இதற்கு ஏதாவது அனுகூலம் செய்யமுடியுமா?

மாணிக்க.—அவுரங்கசீபு தன் மகள் மருமகன் இவர்களுடைய குற்றத்தை மன்னிக்காவிட்டால், தாங்கள் உடன்படிக்கைக்கு ஒப்புக்கொள்வதில்லை என்று சொல்லலாம்.

ராஜஸிம்ஹன், "நான் அப்படியே சொல்லுகிறேன். அதற்காகப் பாதுஷாவுக்கு வேறொரு கடிதம் எழுதுகிறேன். அதையும் இந்தக் கடிதத்துடன் கொண்டுபோ. அவுரங்கசீபு மகளின் குற்றத்தை மன்னிப்பான். ஆனால் மபாரகனின் குற்றத்தை மன்னிப்பதாக ஒப்புக்கொண்டாலும் அந்தப்படி நடப்பானோ என்பது சந்தேகம். எப்படியாவது மபாரகன் இதனால் சந்தோஷப்படும்படி செய்யத் தயாராயிருக்கிறேன்" என்று சொல்லி ராஜஸிம்ஹன் தன்கையால் வேறொரு கடிதமெழுதி மாணிக்கலாலன் வசம் கொடுத்தான். மாணிக்கலாலன் அந்த இரண்டு காகிதங்களையும் எடுத்துக்கொண்டு அன்று இராத்திரியே உதயபுரம் புறப்பட்டுப் போனான். உதயபுரம் போய் முதலில் இந்த விருத்தாந்தங்களை யெல்லாம் நிர்மலைக்குத் தெரிவித்தான். நிர்மலைக்கு வெகு சந்தோஷமாயிற்று. அவள் பாதுஷாவுக்கு வேறொரு காகிதம் எழுதிக்கொடுத்தாள். எப்படியென்றால்,

"ஷஹான்ஷா!

தாஸியின் அநேகாநேக வந்தனங்கள்! தங்கள் உத்தரவுப்பிரகாரம் நடத்தி முடித்திருக்கிறேன். இப்போது ஹுஜூரின் சம்மதியாகவேண்டுவது ஒன்றுதான் பாக்கி. நான் கடைசியில் தங்களைக் கேட்டுக்கொண்டதை ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டும். உடன்படிக்கை செய்துவிடுகிறேன்."

இப்படி எழுதிக் காகிதத்தை மாணிக்கலாலனிடம் கொடுத்தாள். பிறகு அவள் இந்த விருத்தாந்தத்தை யெல்லாம் ஜேபஉன்னீஸாவுக்குத் தெரிவித்தாள். அவளும் சந்தோஷப்பட்டாள்.

புத்தி கெட்ட ராஜாவுக்கு மதி கெட்ட மந்திரி.

மாணிக்கலாலன் நடந்ததையெல்லாம் மபாரகனுக்குச் சொன்னான். மபாரகன் ஒன்றும் பதில் சொல்லவில்லை. மாணிக்கலாலன் மபாரகனுக்குஜாக்கிரதையுண்டாக்குவதற்காக, "ஸாகேப்! பாதுஷாவினிடம் திரும்பிப்போனால் அவன் உம்மை மன்னிப்பான் என்று நான் நம்பவில்லை" என்று சொன்னான்.

மபாரகன்.—நம்பிக்கை வேண்டாம்.

மறுநாட் காலமே நிர்மலகுமாரியினிடத்திலிருந்து புறாவை வாங்கிக் காகிதங்களைச் சிறிதாய் மடித்து அதன் காலில் கட்டி விட்டுவிட்டான். அது உடனே ஆகாயமார்க்கமாய்ப் பறந்தது. காலில்கட்டியிருந்தது கொஞ்சம் கனமாயிருந்தது. ஆனால் கடைசியில் அவுரங்கசீபினிடம் போய்ச் சேர்ந்தது. அவுரங்கசீபு உயரவே பார்த்துக்கொண்டிருந்தான். அங்கே போய்க் கீழே இறங்கிக் காகிதங்களைச் சேர்ப்பித்தது.

பத்தாம் அத்தியாயம்
உதயபுரியின் கர்வபங்கம்

புறா சீக்கிரம் அவுரங்கசீபின் பதில் காகிதம் கொண்டுவந்தது. ராஜஸிம்ஹன் என்னென்ன கேட்டிருந்தானோ அதற்கெல்லாம் அவுரங்கசீபு ஒப்புக்கொண்டான். ஆனால் சஞ்சல குமாரியை மாத்திரம் விட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டான். ராஜஸிம்ஹன் அதைக்காட்டிலும் தங்களை ஸைனியத்துடன் இங்கேயே கோரி செய்துவிடுவது என் அபிப்பிராயமென்று சொன்னான். இது கேட்டு அவுரங்கசீபு அந்த ஆசையை விட்டுவிட்டான். அவுரங்கசீபு உடன்படிக்கைக்கு ஒப்புக்கொண்டு முன்ஷியினால் ஸந்திபத்திரம் எழுதுவித்து தன்முத்திரை வைத்துத் தன்கையினால் "முத்திரை வைத்திருக்கிறேன்" என்று எழுதிக்கொடுத்தான். ஜேபஉன்னீஸா, மபாரகன் இவர்கள் விஷயமாயும் மன்னிப்பதாக வேறொரு காகிதமெழுதி யனுப்பினான். ஆனால் அந்த விவாகத்தைப்பற்றி ஒருவரும் சொல்லாமலிருக்கவேண்டுமென்று கறாராய் எழுதியிருந்தான். மகள் புருஷனைப் பார்ப்பதற்கு வேறே உபாயம் செய்வதாகவும் எழுதியிருந்தான்.

ராஜஸிம்ஹன் உடன்படிக்கைப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு மொகலாய சேனையை விட்டுவிடும்படி கட்டளையிட்டான். ரஜபுத்திரர் அநேக யானைகளைக் கொண்டுவந்து மரங்களை இழுத்தெறிந்தார்கள். மொகலாயருக்கு உடனே ஆகாரத்துக்கு வேண்டிய சாமான்கள் கிடைக்காதாகையால் ராஜஸிம்ஹன் தயவுசெய்து அநேக யானைகளின்மேல் சாப்பாட்டுக்கு வேண்டிய சாமான்களை யனுப்புவித்தான். கடைசியில் உதயபுரத்திலிருந்த ஜேபஉன்னீஸா, உதயபுரி, மபாரகன் இவர்களையும் விட்டுவிடும்படி உதயபுரத்திற்குச் சொல்லியனுப்பினான். அப்பொழுது நிர்மலை சஞ்சலையைக் குறித்துக் கண்காட்டி, "பேகம் உனக்குத் தாஸியாக வேலைசெய்து கொடுத்தாளோ?" என்று மெதுவாய்க் காதோடு சொன்னாள். அதுகேட்டுச் சஞ்சலை உதயபுரியைப் பார்த்து, "நான் தங்களை டில்லியிலிருந்துவந்து செய்யவேண்டுமென்று சொல்லியிருந்த காரியம் செய்யவேண்டுமே" என்றாள்.

உதயபுரி, "நான் உன் நாக்கையறுத்துத் துண்டு துண்டாக்கிப் போடுவேன். நான் உனக்கு தாம்பூலம் மடித்துக்கொடுக்கும்படி நீ எம்மாத்திரம்? பாதுஷாவின் பேகத்தைக் கைதியாக வைத்துக்கொள்வதற்கு அற்பாகிய உங்களால் முடியுமா? இந்தமாதிரி அவமானம் செய்வதற்குத் தகுந்த சிக்ஷை உனக்குச் சீக்கிரத்தில் கிடைக்கும். உதயபுரமென்கிற பெயரே இல்லாமல் செய்துவிடுகிறேன்" என்றாள்.

அப்பொழுது சஞ்சலகுமாரி உறுதியாய், "மகாராணா அவர்கள் தயவுசெய்து பாதுஷாவை விடுதலைசெய்து உம்மையும் விடும்படி உத்தரவு செய்தாரென்று கேள்விப்பட்டேன். அதற்கு ஒரு நல்ல வார்த்தை சொல்ல உமக்குத் தெரியாமற்போயிற்று. அதனால் உம்மை விடுகிறதில்லை. நீங்கள் வேலைக்காரிகளிருக்கிற இடத்துக்குப் போய்த் தாம்பூலம் தயார்செய்து எனக்குக் கொண்டுவந்து கொடுக்கவேண்டும்" என்றாள்.

ஜேபஉன்னீஸா, "மகாராணி! அதென்ன, தாங்கள் இவ்வளவு நிர்த்தயவா யிருக்கும்படியாயிற்று?" என்றாள்.

சஞ்சல.—நீங்கள் மாத்திரம் போகலாம். நீங்கள் போகிறதற்குத் தடையில்லை. இவளை நான் விடமாட்டேன்.

ஜேப உன்னீஸா புத்தி சொன்னதின் மேல் உதயபுரி வணக்கத்துடன் நின்றாள்.

புத்தி முற்றினவர்க்குச் சித்தியாதது ஒன்றுமில்லை.

ஆனால் சஞ்சலகுமாரி, "நீ ஒருதடவை எனக்கு வெற்றிலை மடித்துக் கொடுத்துவிட்டுப் பிற்பாடு புறப்பட்டுப் போகலாம்" என்றாள்.

உதயபுரி, "எனக்குத் தாம்பூலம் மடித்துக் கொடுக்கத் தெரியாதே" என்றாள்.

சஞ்சலை, "வேலைக்காரி சொல்லித் தருவாள்" என்றாள்.

வேறு வழியில்லாமல் உதயபுரி ஒப்புக்கொண்டாள். வேலைக்காரிகள் சொல்லிக் கொடுத்த பிரகாரம் சஞ்சலகுமாரிக்குத் தாம்பூலம் தயார்செய்துகொடுத்தாள்.

அப்பொழுது சஞ்சலகுமாரி ஸலாம்செய்து அனுமதிகொடுத்து, "இங்கென்னென்ன நடந்ததோ அதையெல்லாம் பாதுஷாவுக்குச் சொல்லவேண்டும். அன்றியும் நானே படத்தைக் காலால் உடைத்தவளென்று சொல்லுவதும் தவிர, இனிமேலும் அவன் ஹிந்துப்பெண்களை அவமானம் செய்ய வாரம்பித்தால் படத்தை மாத்திரம் உடைத்துத் திருப்தியடைவதில்லை என்று சொல்லுங்கள்" என்றாள்.

அப்பொழுது உதயபுரி கோபத்துடனும் துக்கத்துடனும் புறப்பட்டுப் போனாள். மகிஷியையும் பெண்ணையுமடைந்து அவுரங்கசீபு வெட்கத்துடன் ராஜஸிம்ஹன் ஸமுகத்திலிருந்து முதுகு காட்டிப் புறப்பட்டுப்போனான்.

பதினோராம் அத்தியாயம்

விக்கிரமஸிம்ஹன் கடிதம்

பேகங்கள் அனுமதி வாங்கிக் கொண்டு போய்ச் சேர்ந்தார்கள்; மொகலாயர் அபஜயப்பட்டார்கள்; பாதுஷாவின் மகிஷி சஞ்சலகுமாரிக்குத் தாஸியைப்போல் ஸேவித்தாள்; ஆனாலும் ராணா யாதொரு வார்த்தையும் சொல்லவில்லை. சஞ்சலகுமாரி அழுதுகொண்டிருந்ததைப் பார்த்து நிர்மலை வந்து அவள் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டாள். அவள் மனத்திலுள்ள எண்ணத்தை யறிந்துகொண்டு, "மகாராணாவுக்கு ஏன் ஞாபகப் படுத்தக் கூடாது? என்று கேட்டாள்.

சஞ்சலை.—நீ என்ன பைத்தியமா யிருக்கிறாயே? பெண்ணாயிருந்துகொண்டு அடிக்கடி இப்பேர்ப்பட்ட வார்த்தை சொல்வதா?

நிர்மலை.—அப்படியானால் உன் தகப்பனார் வரும்படி ரூபநகரத்துக்கு ஒரு கடிதம் எழுதப்படாதோ?

சஞ்சலை.—எதற்காக? அந்தக் காகிதத்திற்கு அப்பேர்ப்பட்ட பதில் வந்தபிறகு மறுபடியும் காகிதம் எழுதுகிறதோ?

நிர்மலை.—தகப்பனார் மேல் கோபித்துக் கொண்டிருக்கலாமா?

சஞ்சலை.—கோபம் ஒன்றுமில்லை. ஆனால் ஒருதரம் எழுதி (அதுவும் நான் எழுதினது) சாபம் வாங்கிக்கொண்டேன். அதை நினைக்கிறபோதெல்லாம் இன்னும் வயிறு எரிகிறது? மறுபடியும் எழுதுவதற்குத் தைரிய முண்டாகுமோ?

நிர்மலை.—விவாக விஷயம் எழுத வேண்டாமே?

சஞ்சலை.—மற்றும் எதைப்பற்றி எழுதுகிறது?

நிர்மலை.—மகாராணா ஒரு வார்த்தையும் சொல்லாமலிருந்தால் தகப்பனார் அரண்மனைக்குப்போய் இருப்பதுதான் நல்லது. அவுரங்கசீபு மறுபடியும் இந்தப் பக்கம் திரும்பிப்பார்க்க மாட்டான். அதனால்தான் காகிதம் எழுத வேணு மென்கிறேன். தகப்பனார்வீடு தவிர வேறென்ன உபாயம்?

சஞ்சலை ஏதோ பதில் சொல்ல வாரம்பித்தாள். ஆனால் பதில் வாயைவிட்டு வெளியே வரவில்லை. சஞ்சலை அழுதுவிட்டாள். நிர்மலைக்கும் ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை.

சஞ்சலை கண்ணீரைத் துடைத்துக்கொண்டு லஜ்ஜையினால் கொஞ்சம் சிரித்தாள். நிர்மலையும் நகைத்தாள். பிறகு நிர்மலை, "நான் டில்லி பாதுஷாவின் எதிரில்கூட பதில் சொல்லப் பயப்படவில்லை. உனக்கு எதிரில் பதில் சொல்லமுடியாமல் போயிற்று. இது டில்லி பாதுஷாவுக்குக் கௌரவக் குறைவாகிறது. இம்லீ பேகமுக்கும் கௌரவக் குறைவாகிறது. ஆனால் இன்னொரு தரம் இம்லீபேகத்தின் முன்ஷி சக்தியைப் பரீக்ஷித்துப்பார். பேனா மைக்கூடு கொண்டுவந்து எழுதஆரம்பி. நான் சொல்லிக்கொண்டு போகிறேன் நீ எழுது" என்றாள்.

சஞ்சலை. யாருக்கு எழுதுகிறது? தாய்க்கோ தகப்பனாருக்கோ?

நிர்மலை.—தகப்பனாருக்கு.

சஞ்சலை எழுதினாள். நிர்மலை சொல்லிக்கொண்டு போனாள்:—"இங்கே மொகலாய பாதுஷா மகாராணா கையில்" என்றாள்.

"பாதுஷா" என்கிற வரையில் எழுதி, சஞ்சலை, "மகாராணாவின் கையில் என்று எழுதக் கூடாது; ரஜபுத்திரர்கையில் என்று எழுதுகிறேன்" என்றாள்.

நிர்மலை புன்சிரிப்புடன், "அப்படியே எழுது!" என்றாள். பிற்பாடு சஞ்சலை நிர்மலை சொன்ன பிரகாரம் எழுத ஆரம்பித்தாள்.

"கையில் அபஜயப்பட்டு ராஜஸ்தானத்திலிருந்து அடிபட்டுக்கொண்டுபோயிருக்கிறான். இனிமேல் அவன் நம்மேல் தன் பலத்தைக் காட்டமாட்டான். இப்பொழுது தங்கள் குமாரத்தி விஷயத்தில் தங்கள் உத்தரவு என்ன? நான் தங்களாதீனத்திலேயே இருக்கிறேன்?"

பிறகு நிர்மலை "மகாராணாவுக்கு ஆதீனமாக வில்லை என்று எழுது" என்றாள்.

சஞ்சலை "போ தூர!" என்று சொல்லி அந்த வார்த்தைகளை எழுதவில்லை. நிர்மலை, "அப்படியானால் வேறெவருடைய ஆதீனத்திலுமில்லை என்று எழுது" என்றாள். சஞ்சலை அப்படியே எழுதினாள். இப்படிக் காகிதமெழுதிமுடித்த பிற்பாடு நிர்மலை சொன்னபிரகாரம் ரூபநகரத்திற் கனுப்பினாள். ரூபநகரத்தரசன் அக்காகிதத்துக்குப் பதில், "நான் இரண்டாயிரம் வீரர்களுடன் உதயபுரத்திற்கு வருகிறேன். ரஸ்தா மார்க்கமெல்லாம் அட்டியில்லாமல் விட்டிருக்கவேண்டுமென்று ராணாவுக்கு அறிவி!" என்று எழுதினான்.

இந்த ஆச்சரியகரமான காகிதத்தின் அர்த்தம் கண்டுபிடிக்க முடியாமல் சஞ்சலையும் நிர்மலையும் தர்க்கம் செய்து சேனையின் சமாசாரமாயிருப்பதால் ராணாவுக்கறிவிப்பது நல்லதென்று தீர்மானித்தார்கள். நிர்மலை மாணிக்கலாலனிடம் சொல்லியனுப்பினாள்.

ராணா ராஜஸிம்ஹனும் யோசித்துக்கொண்டேதா னிருந்தான். அவன் சஞ்சலகுமாரியை மறக்கவில்லை. அவனும் விக்கிரமஸிம்ஹனுக்குக் காகிதம் எழுதியிருந்தான். சஞ்சலகுமாரியின் விஷயமாய்த்தான் எழுதியிருந்தான். அதில் மகளுக்குச் சாபங் கொடுத்ததை ஞாபகத்துக்குக்கொண்டுவந்து, ராஜஸிம்ஹன் பாத்திரனென்று தெரிந்தால் தானே வந்து ஆசீர்வாதஞ்செய்து கன்னிகாதானம் செய்து கொடுப்பதாக எழுதியிருந்ததையும் எடுத்துச் சொல்லி, இப்பொழுது உம்முடைய அபிப்பிராயமென்னவென்று கேட்டு எழுதியனுப்பியிருந்தான்.

அதற்கும் பதில் விக்கிரமஸிம்ஹன், "நான் இரண்டாயிரம் குதிரை வீரர்களுடன் தம்மிடத்திற்கு வருகிறேன். மார்க்கம் விட்டிருக்க வேண்டும்" என்று எழுதியிருந்தான்.

ராஜஸிம்ஹனும் சஞ்சலகுமாரியைப் போலவே அர்த்தம் புரியாமல் விக்கிரமஸிம்ஹன் இரண்டாயிரம் பேர்களை அழைத்துக்கொண்டு வந்து என்னசெய்வான்? நாம் ஜாக்கிரதையாயிருக்கவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு விக்கிரமஸிம்மனுக்காக மார்க்கத்தையெல்லாம் விக்கினங்களில்லாமல் விட்டிருக்கும்படி உத்தரவுசெய்தான்.

பன்னிரண்டாம் அத்தியாயம்

பாதுஷா பேச்சுப்பிறழ்தல்

உதயஸாகரத்தின் கரையில் மறுபடியும் வந்து அவுரங்கசீபு தளமிறக்கினான். பொழுது விடிந்தது. சிப்பாய்களுக்கும் யானை குதிரை முதலான கால்நடைகளுக்கும் ஆகாரமாயிற்று. அப்பொழுது சிப்பாய்கள் பாடவும் ஆடவும் ஆரம்பித்தார்கள். ஒரு சிப்பாய், "ஹிந்து ராஜ்யத்திற்கு வந்ததால் ஏகாதசி உபவாஸம் செய்த மாதிரியாயிற்று" என்றான். இதைக்கேட்டபொடினவர்களில் ஒருத்தி, "பிழைத்துவந்ததே பெரிதாயிற்று" என்றாள். ஒருவன், "நாமெல்லாம் சிப்பாய்கள். மரம்வெட்டுகிற வித்தை நமக்குத் தெரியாது. அதனால்தான் தோற்றுப்போனோம்" என்றான். அதற்குப் பதில் மற்றொருவன் "உமக்கு வயலில் அறுப்பு அறுக்கத் தெரியுமேயொழிய மரம் வெட்டத்தெரியுமா என்ன?" என்றான். இப்படியெல்லாம் ஒருவரோடொருவர் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இது இப்படியிருக்க, பாதுஷா தன் சேனையின் மத்தியிலுள்ள ரங்கமகலுள் பிரவேசித்தான். உடனே ஜேபஉன்னீஸா வந்து கை கூப்பிக்கொண்டு நின்றாள். "நீ செய்துகொண்ட விவாகம் நீ மனப்பூர்வமாய்ச் செய்துகொண்டதில்லை என்று தோன்றுகிறது. அதனால் உன்னை மன்னித்திருக்கிறேன். ஆனால் அந்த ஸமாசாரம் ஒருவருக்கும் தெரியாதபடி ஜாக்கிரதையா யிருக்கவேண்டும்" என்றான். பிற்பாடு உதயபுரியைப்போய்ப் பார்த்தான். அவன்

தனக்கு நடந்த அவமானங்களை யெல்லாம் ஆதியோடந்தமாய் நடந்ததைப் பார்க்கிலும் பத்து மடங்கு அதிகமாய்ச் சொன்னதைக் கேட்டு, அவுரங்கசீபு அதிக விசனப்பட்டு கோபாக்கினியால் ஜ்வலித்துக் கொண்டிருந்தான்.

மறுநாள் தர்பாரில் உட்காருவதற்கு முன்னமே மபாரகனைத் தனியாய்க் கூப்பிட்டு, "உன் குற்றங்களையெல்லாம் மன்னித்துவிட்டேன். நீ எனக்கு மருமகனாய்விட்டாய். என் மருமகனாயிருந்து கீழ்ப் பதவியிலிருப்பது சரியல்லவாதலால், உன்னை இரண்டாயிரம் சிப்பாய்களுக்கு ஸுபேதாராக நியமித்திருக்கிறேன். இன்றைக்கே உத்தரவாகும். ஆனால் நீ இப்பொழுது இங்கேயிருக்கக்கூடாது. ஏனென்றால், ஷஹஜாத் அக்பர் மலைகளின் மத்தியில் என்னைப்போல் கஷ்டத்தில் விழுந்திருக்கிறான். அவன் உதவிக்காக டிலீர் கான் போகப்போகிறான். அங்கே உன்னைப்போன்ற வீரர்களின் ஒத்தாசை வேண்டியிருப்பதால், நீ இன்றைக்கே புறப்பட்டுப் போகவேண்டும்"என்று கட்டளையிட்டான்.

மபாரகன் இதைக்கேட்டுச் சந்தோஷப்படவில்லை. அவுரங்கசீபின் ஆதரவான வார்த்தைகள் சீக்கிரத்தில் துன்பத்துக்குக் காரணமாகுமென்பது அவனுக்குத் தெரியும். இருந்தாலும் வருத்தத்தைக் காண்பிக்காமல் வெகு வணக்கத்துடன் பாதுஷாவின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு டிலீர் கான் இறங்கியிருந்த விடத்துக்குப் போகிறதற்குப் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருந்தான்.

பிறகு அவுரங்சீபு டிலீர்கானுக்கு, "மபாரகனை இரண்டாயிரம் ஆளுக்கு ஸுபேதாராக நியமித்து உன்னிடமனுப்பியிருக்கிறேன். அவன் ஒருநாள் கூட பிராணனோடிருக்கப்படாது. யுத்தத்தில் செத்தால் நல்லதாயிற்று. இல்லாவிட்டால் வேறு எப்படியாவது சாகவேண்டும்" என்று ஒரு காகிதமெழுதி ஒரு நம்பிக்கையான வேலைக்காரன்வசம்கொடுத்தனுப்பினான்.

டிலீர் கானுக்கு மபாரகனைத் தெரியாது. பாதுஷாவின் ஆக்கினைப்பிரகாரம் செய்துவிடவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டான்.

பிற்பாடு தர்பாரில் உட்கார்ந்துகொண்டு அவுரங்கசீபு தன்னபிப்பிராயத்தை எல்லாருக்கும் தெரியும்படி சொன்னான். என்னவென்றால்:—நாம் விறகு வெட்டிகள் மோசத்திற்குள்பட்டு உடன்படிக்கைக்கு ஒப்புக்கொண்டோம். அப்படிப்பட்ட உடன்படிக்கைப் பிரகாரம் நடக்கவேண்டிய ஆவசியகமில்லை. அற்பனாகிய ஒரு ராஜாவுடன் பாதுஷாவாகிய நான் சமாதானம் செய்வதென்றாலென்ன? நான் உடன்படிக்கைப் பத்திரத்தை கிழித்தெறிந்துவிட்டேன். ஏனென்றால், அந்த ரூபநகரத்துப் பெண்ணை அவன் அனுப்பாததால் அப்படிச் செய்துவிட்டேன். ரூபநகரத்துப் பெண்ணை அவள் தகப்பன் நம்மிடத்துக் கனுப்பிவிட்டதால் ராஜஸிம்ஹனுக்கு அவள் பேரில் அதிகாரமில்லை. அவளை அனுப்பினாலொழிய நாம் ராஜஸிம்ஹனது குற்றத்தை மன்னிக்கமாட்டோம். அதனால் யுத்தம் எப்படி நடந்துகொண்டிருந்ததோ அப்படியே நடக்கட்டும். ராணாவின் ராஜ்யத்தில் பசுக்களைக் கண்டவிடத்திலெல்லாம் முஸல்மானர் கொன்றுவிட வேண்டும். தேவாலயங்களை இடிக்கவேண்டும். ஜாஸியா வரியை எங்கும் வசூல் செய்யவேண்டும். இவ்வாறு அவுரங்கசீபு கட்டளையிட்டான்.

மேலே சொன்ன உத்தரவுகளெல்லாம் உடனே அனுஷ்டானத்திற்கு வந்தன. இது இப்படியிருக்க, டிலீர்கான் தைஸூர் மார்க்கமாய் மார்வாரிலிருந்து உதயபுரத்திற்கு வந்துகொண்டிருந்தான். இதுகேட்டு ராஜஸிம்ஹன் உடன்படிக்கையான பிறகு மறுபடியும் யுத்தம் எதற்காக என்று அறிந்துகொண்டு வருவதற்காகத் தூதர்களை அவுரங்கசீபினிடம் அனுப்பினான். அதற்கவன், "விறகு வெட்டுகிற காட்டாள்களுடன் பாதுஷாவுக்கு உடன்படிக்கை ஏற்படுமோ? ரூபநகரத்து ராஜகுமாரியை அனுப்பினாலொழிய பாதுஷா ராஜஸிம்ஹனது குற்றத்தை மன்னிப்பதில்லை" என்று சொல்லியனுப்பினான்.

இதைக்கேட்டு ராஜஸிம்ஹன், "நான் இன்னும் ஜீவித்துக்கொண் டிருக்கிறேன்" என்றான். ரூபநகரத்து ராஜகுமாரியை அபகரித்துப்போனது அவுரங்கசீபின் மனத்தில் சூலம்போல் குத்திக்கொண்டிருந்தது. அவன் ராஜஸிம்ஹனிடத்தில் தன் காரியம் பலிக்காதென்று தெரிந்துகொண்டு, ரூபநகரத்து அரசனுக்கு, "உன்னுடைய மகள் இன்னும் என்னிடம் வந்து சேரவில்லை. அவளை உடனே

அழைத்துவரவேண்டும். இல்லாவிட்டால் ரூபநகரமென்கிற அடையாளமே இல்லாதபடி செய்துவிடுவேன்" என்று ஒரு காகிதமெழுதியனுப்பினான். அவுரங்கசீபு ரூபநகரத்து ராஜகுமாரி தன் தகப்பன் பலவந்தம் செய்தால் வருவதற்குச் சம்மதிப்பாள் என்று நம்பிக்கொண்டிருந்தான். காகிதம் வந்து சேர்ந்தவுடன், விக்கிரமஸிம்ஹன், "நான் சீக்கிரமாய் இரண்டாயிரம் குதிரைவீரர்களுடன் தங்கள் ஹுஜூரில் வந்து ஹாஜராகிறேன்" என்று பதில் எழுதியனுப்பினான்.

அவுரங்கசீபு, "சேனை எதற்காக இருக்கலாம்? அநேகமாய் எனக்கு ஒத்தாசை செய்வதற்காகத்தா னிருக்கலாம்" என்று நினைத்துக்கொண்டான்.

பதின்மூன்றும் அத்தியாயம்

தரியாவின் வருகை

அழகின் மகிமை எப்பேர்ப்பட்டதென்று வருணிப்பது எளிதல்ல; மபாரகன் ஜேபஉன்னீஸாவை மறுபடியும் பார்த்து எல்லாவற்றையும் மறந்துவிட்டான். ஜேப உன்னீஸா இப்போது வணக்கத்தோடும், கர்வமில்லாமலும், ப்ரீதியோடும் கண்களில் நீருடனிருந்தாள். மபாரகன் முன்னே அவளிடத்தில் வைத்திருந்த ப்ரீதியெல்லாம் மறுபடியும் அவன் இதயத்திற் பெருகிற்று. தரியாவை மறந்துவிட்டான். மனிதன் ஸ்திரீ ஜாதியின் ஆசையினால் அந்தகனானால் தருமாதரும ஞானம் உண்டாவதில்லை.

ஆயிரக்கணக்கான தீபங்களின் காந்தியின் பிரதிபிம்பத்தால் விளங்குகின்ற உதயசாகரத்தின் நாலு பக்கங்களிலும் சுற்றிக்கொண்டிருந்த மலைகளைப் பார்த்துக்கொண்டு கூடார மண்டபத்தின் மத்தியிலுள்ள இந்திர சபைக்குச் சமானமான ஒரு அறையிலுட்கார்ந்துகொண்டு மபாரகன் ஜேபஉன்னீஸாவின் கையைத் தன் கைக்குள் வைத்துக்கொண்டான். மபாரகன், "வெகு துக்கத்துடன் உன்னை மறுபடியு மடைந்தேன். ஆனால் இந்த சுகத்தை இன்னும் பத்து தினங்கள் கூட அனுபவிக்கப் போகிறதில்லை" என்று சொன்னான்.

ஜேப உன்னீ.—எதற்காக? உன்னைத் தடுக்கிறவர் யார்! பாதுஷாவா?

மபாரக.—அது சந்தேகமாயிருக்கிறது. இப்போது பாதுஷாவின் வார்த்தையைப் பற்றிச் சொல்லப்படாது. நான் நாளைக்கு யுத்தத்துக்குப் போகப்போகிறேன். யுத்தத்தில் மரணமுண்டாகலாம். தப்பிப்பிழைப்பது முண்டு. ஆனால் என்னைப்பற்றின வரையில் மரணமே நிச்சயம். ரஜபுத்திரர்கள் யுத்தத்திற்காகச் செய்திருக்கிற கிரமங்களையும் ஏற்பாட்டையும் பார்க்கும்பொழுது, இந்தப் பருவத யுத்தத்தில் நாம் நிச்சயமாய்த் தோற்றுப் போவோமென்று தோன்றுகிறது. நான் ஒருதரம் தோற்று வந்திருக்கிறேன். இன்னொருதடவை தோற்றுவரமாட்டேன். நான் யுத்தத்தில் சாகவே வேண்டும்.

ஜேப உன்னீஸா கண்ணீர்விட்டுக்கொண்டு, "ஈசுவரன் நீ யுத்தத்தில் ஜயமடையும்படி செய்வார். நீ மறுபடியும் வராமலிருந்தால் நானும் பிராணனை விடுவேன்" என்று சொன்னாள்.

இருவரும் கண்ணீர் விட்டார்கள். அப்பொழுது மபாரகன் சாகிறதோ இல்லையோ என்று யோசித்துக்கொண்டிருந்தான். எதிரில் மலைகளால் சூழப்பட்ட உதயசாகரத்தின் இருட்டுமயமான ஜலம். அதில் தீபங்களால் பிரகாசிக்கின்ற கூடாரங்களின் 'நிழல் இருட்டு. அந்த இரண்டுபேர்களும் அந்தகாரமான அந்த இருட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இப்படி யிருக்கும்பொழுது பயத்துடன் ஜேப உன்னீஸா, "இந்த இருட்டில் அதோ சுவரண்டை யாரோ ஒளிந்து கொண்டிருக்கிறார்போல் தோன்றுகிறது. உனக்காக என்மனம் எப்போதும் சந்தேகப் பட்டுக்கொண்டே யிருக்கிறது" என்றாள்.

மபாகரன் என்னவென்று பார்த்துவருகிறேனென்று சொல்லிப்போய்ச் சுவரின்கீழ் பார்க்கவும், நிஜமாகவே யாரோ படுத்துக்கொண்டிருந்தார். மபாரகன் இருட்டில படுத்திருந்தவரைக் கையைப்பிடித்து எழுப்பினான். ஒளிந்துகொண் டிருந்தவர் எழுந்த பிறகு மபாரகன் பார்த்தான். இருட்டில ஒன்றும் தெரியவில்லை. மபாரகன் அந்த மனுஷியாளை வேலைக்காரர் வசம் ஒப்புவித்துவிட்டு ஜேபஉன்னீஸாவினிடம் வந்துசொன்னான். ஜேப உன்னீஸா, "அது யாரென்று பார்க்கவேண்டும். அந்தப் பேர்வழியை இங்கே அழைத்துவரவேண்டும்" என்று சொன்னாள். மபாரகன் அழைத்து வந்தான்.

ஜெப உன்னிஸா.—நீ யார்? எதற்காக ஒளிந்துகொண்டிருந்தாய்? முகத்திலிருந்து வஸ்திரத்தை எடு.

அந்தப்பேர்வழி ஒருஸ்திரீ. முகவஸ்திரத்தை எடுத்தாள். இரண்டுபேர்களும் ஆச்சரியத்துடன் பார்க்கவும், தரியாவா யிருந்தாள்.

வெகு சந்தோஷமாயிருந்த சமயத்தில் திடீரென்று மேகமில்லாம லிருக்கும்பொழுது எதிரில் இடிவிழுந்தாற்போல் ஜெப உன்னீஸாவும் மபாரகனும் மதிமயங்கினார்கள். மூன்றுபேர்களும் ஒன்றும் பேசவில்லை.

வெகுநேர மானபிறகு மபாரகன் பெருமூச்சுவிட்டு, "ஐயோ! அல்லா! நான் சாகவே வேண்டும்" என்றான்.

ஜெப உன்னீஸா துக்கத்துடன், "நானோ?" என்றாள்

தரியா, "நீ யார்?"

மபாரகன் என்றான். அவனை, "என்னுடன் வா" என்றாள்.

அப்பொழுது மபாரகன் விசனத்துடன் ஜெப உன்னிஸாவினிடம் அனுமதி பெற்றுக் கொண்டு போனான்.

பதினான்காம் அத்தியாயம்

விக்கிரமஸிம்ஹன் ராணாவைப்பணிதல்

ராஜஸிம்ஹன் ராஜநீதிகளிலும் யுத்தநீதிகளிலும் நிகரற்ற பண்டிதனாயிருந்தான். மொகலாய ஸைனியம் தன் ராஜ்யத்தைவிட்டு வெகுதூரம் போகிறவரையில் தன் சேனையை நிறுத்திவைத்துக்கொண்டிருந்தான். அவன் கூடாரத்தில் இருக்கும்பொழுதே விக்கிரமஸிம்ஹன் இரண்டாயிரம் குதிரைவீரர்களுடன் வந்துசேர்ந் திருக்கிறானென்கிற வர்த்தமானம் கிடைத்தது. ராஜஸிம்ஹன் யுத்தத்துக்குத் தயார் செய்துகொண்டான்.

ஒரு குதிரைவீரன் தூதனென்று முன்பாக வந்து ராஜஸிம்ஹன் பேட்டி வேண்டிக்கொண்டான். சேவகர் அவனை உள்ளே யழைத்து வந்தார்கள். அவன் வந்து ராஜஸிம்ஹனுக்கு வந்தனம்செய்து ரூபநகரத்ததிபதி விக்கிரமஸிம்ஹன் பேட்டிக்கு ஸைனியத்துடன் வந்திருக்கிறானென்று அறிவித்தான்.

ராஜஸிம்:—கூடாரத்துக்குள் வந்து பார்ப்பதற்கு இஷ்டமிருந்தால் ஒருவராய் வந்து பார்க்கலாம். ஸைனியத்துடன் பார்க்கவேண்டுமென்று இஷ்டமிருந்தால் வெளியில் இருக்கவேண்டும். நானும் ஸைனியத்துடன் வருகிறேன்.

விக்கிரமஸிம்ஹன் கூடாரத்துக்குள் வந்து பார்க்கிறதற்கே இஷ்டப்பட்டு ஒருவனாகவே வந்து தரிசனம் செய்தான். வரும்பொழுதே ராஜஸிம்ஹன் அவனுக்கு வெகு ஆதரவுடன் ஆசனங்கொடுத்து உட்காரும்படி சொன்னான். விக்கிரமஸிம்ஹன் ராணாவுக்குக் காணிக்கைகள் கொடுத்தான். உதயபுரத்திய ராணா ரஜபுத்திரர்களுக் கெல்லாம் பிரதானமானவனாதலால் காணிக்கைகளுக் குரியவனாயிருந்தான். ஆனால் ராஜஸிம்ஹன் அவைகளைப் பெற்றுக் கொள்ளாமல், "தங்கள் காணிக்கைகள் மொகலாய பாதுஷாவுக்குச் சேரத் தக்கவை" என்று சொன்னான்.

விக்கிரமஸிம்.—மகாராணா ராஜஸிம்ஹன் ஜீவித்திருக்கும்பொழுது ரஜபுத்திரனொருவனும் டில்லி பாதுஷாவுக்குக் காணிக்கை கொடுக்கமாட்டானென்று நம்புகிறேன். மகாராணா என் குற்றத்தை மன்னிக்கவேண்டும். நான் தெரியாமல் அந்தக் காகித மெழுதினேன். தாங்கள் மொகலாயரைத் தோற்கடித்தாற்போல் ஸமஸ்த ரஜபுத்திரர்களும் சேர்ந்து தங்களுக்குட்பட்டுக் காரியங்களைச் செய்தால் மொகலாய ராஜ்யம் நாசத்தையடையு மென்பதற்குச் சந்தேகமில்லை. நான் எழுதின காகிதத்தில் கடைசியில் எழுதியிருந்த பாகத்தை நினைத்துக் கொள்ளவேண்டும். பின்னும் இரண்டொரு ஸாமக்கிரியைகள் கொண்டுவந் திருக்கிறேன். முதல் இந்த இரண்டாயிரம் குதிரைப்படை. இரண்டாவது எனக்குச் சொந்தமான இந்தக் கத்தி. இப்பொழுதுகூட இந்தக் கைகளில் கொஞ்சம் பலமுண்டு. என்னை எந்தக்காரியத்தில் நியமித்தாலும் நான் பிழைத்திருக்கிற வரையிலும் அந்தக் காரியத்தைச் சரியாய் சித்திக்கும்படியான பிரயத்தனங்களைச் செய்வேன்.

ராஜஸிம்ஹன் மிகவும் சந்தோஷத்துடன் தன் உள்ளத்திலுள்ள ஆநந்தத்தை விக்கிரமஸிம்ஹனுக்குத் தெரியும்படி சொல்லி, "துஷ்டர்களான மொகலாயர் என் கையிலகப்பட்டுக் கொண்டிருந்தார்கள். உடன்படிக்கை செய்து கொண்டு தப்பிப் பிழைத்தார்கள். தப்பித்துக் கொண்ட பிற்பாடு உடன்படிக்கை செய்து

கொள்ளவில்லையென்று சொல்லுகிறதுந்தவிர மறுபடியும் சண்டைசெய்கிறார்கள். டிலீர் கான் ஸைனியத்துடன் அக்பரின் ஸகாயத்திற்காக வந்துகொண்டிருக்கிறான். டிலீர் கானை மார்க்கத்திலேயே மறித்து அடித்துவிடவேண்டும். அவன் வந்து அக்பருடன் சேர்ந்துகொண்டால் குமார ஜயஸிம்ஹனுக்கு ஆபத்து நேரிடும். அதற்காக நான் கோபிநாத டாகூரை அனுப்புவதாயிருந்தேன். ஆனால் அவன் ஸைனியம் வெகு அற்பம். என் ஸைனியத்திலிருந்தும் சில பாகத்தை யனுப்புகிறேன். மாணிக்கலாலஸிம்ஹன் என்று என் சேனாதிபதியொருவன் வெகுஸமர்த்தன். அவன் இவர்களை யெல்லாம் கூட்டிக்கொண்டு போவான். ஆனால் நான் இந்த ஸ்தலத்தைவிட்டு அவுரங்கசீபு இருக்கிறவிடத்துக்குப் போகக்கூடாது. அதுவுமன்றி என் ஸைனியத்திலிருந்தும் அதிகப்பேர்களை அனுப்பவும் முடியாது. தாங்கள் தங்கள்குதிரை வீரர்களுடன் அந்தச் சண்டைக்குப் போகவேண்டும். நீங்கள் மூன்று பேர்களும் சேர்ந்து டிலீர்கானை ஸைனியத்துடன் ஸம்ஹாரஞ் செய்யவேண்டும்" என்று சொன்னான்.

விக்கிரமஸிம்ஹன் சந்தோஷத்துடன், "தங்கள் கட்டளையைச் சிரசின்மேல் வைத்துக் கொள்வேன்" என்றான்.

இப்படிச்சொல்லி விக்கிரமஸிம்ஹன் யுத்தத்துக்குப் போகிறதற்குத் தகுந்த பிரயத்தனங்கள் செய்வதற்கு அனுமதி பெற்றுக்கொண்டான். சஞ்சலகுமாரியின் வார்த்தை ஒன்றும் நடக்கவில்லை.

பதினைந்தாம் அத்தியாயம்

மபாரகன் மரணம்

கோபிநாத டாகூர், விக்கிரமஸிம்ஹன், மாணிக்கலாலஸிம்ஹன் இம்மூன்றுபேர்களும் டிலீர்கானைத் துவம்ஸம் செய்வதற்காகப் புறப்பட்டார்கள். அவன் வரவேண்டிய வழியில் மூன்றுபேர்களும் மூன்று இடங்களில்போ யொளிந்துகொண்டு காத்துக்கொண் டிருந்தார்கள். விக்கிரமஸிம்ஹன் குதிரைப்படை கொண்டுவந்திருந்ததால், மலையின் தாழ்வரவுகளில் மேடுபள்ளமான இடங்களில் நிற்க முடியவில்லை. மலைமேலிருந்துகொண்டு யுத்தஞ்செய்ய முடியாதாகையால் அவன் பருவதத்தின் மேல் ஏறாமல் கொஞ்சம் மேடுபள்ளங்களில்லாச் சமதலமான இடந்தேடினான். அவன் மனத்துக்குப் பிடித்த விடமும் கிடைத்தது. அந்த இடத்திற்கு முன்னே ஒரு சிறிய காடு. அந்தக் காட்டின் பின்பக்கத்தில் தன் குதிரைகளை வரிசை வரிசையாய் நிறுத்தினான். அதற்கு மேல் பக்கத்தில் மாணிக்கலாலன் ராணாவின் காலாட் படைகளுடன் ஒளிந்துகொண்டிருந்தான். எல்லோருக்கும் பின்னே கோபிநாத டாகூர் நின்றுகொண்டிருந்தான்.

டிலீர் கான் அக்பரின் நிலைமையை நினைத்துக்கொண்டு கொஞ்சம் ஜாக்கிரதையாய் வந்துகொண்டிருந்தான். ரஜபுத்திரர் அங்கங்கே எங்கேயாவது ஒளிந்துகொண் டிருக்கிறார்களோவென்று நாலாபக்கங்களிலும் பார்த்துக் கொண்டு வந்துகொண் டிருந்ததால், விக்கிரமஸிம்ஹன் குதிரைப்படையுடன் காட்டுக்குப் பின்புறம் ஒளிந்துகொண்டிருந்தது தெரியவந்தது. அவர்களை அங்கேயிருந்து வெளிப்படுத்துவதற்காக டிலீர் கான் சில குதிரைவீரர்களை யனுப்பினான். விக்கிரமஸிம்ஹன் பாக்கி விஷயங்களில் ஸ்தூலபுத்தியுள்ளவனாயிருந்தபோதிலும் யுத்தத்தில் வெகு தந்திரமும் பாண்டித்தியமும் உள்ளவனாயிருந்தான். அநேக சமயங்களில் வஞ்சகத்தன்மையே ரணபாண்டியத்தியமென்று கூறப்படுகிறது. அவன் மொகலாய சேனையுடன் ஏதோ யுத்தம் செய்வது போல் நடித்துவிட்டு புறங்காட்டி ஓடுவது போல் நடித்தான்.

டிலீர்கான் மாணிக்கலால னிருந்தவிடந் தாண்டிக் கொஞ்சம் முன்னேபோனான். மாணிக்கலாலன் ஒருகைப்புறமாய் ஒளிந்துகொண்டிருந்தது தெரியவில்லை. மாணிக்கலாலன் சிறிதளவுகூட சத்தஞ்செய்யவில்லை. டிலீர் கான் விக்கிரமஸிம்ஹனைத் துரத்தின பிறகு ரஜபுத்திரரெல்லாரும் ஓடிப்போய் விட்டார்களென்று நினைத்துக்கொண்டான். அதனால் முன்போல் அவ்வளவு ஜாக்கிரதையாய்ப் போகவில்லை. மாணிக்கலாலன் அது சரியான சமயமில்லை என்று சும்மாவிருந்தான். கடைசியில் கோபிநாதடாகூர் ஒளிந்துகொண்டிருந்த இடத்துக்கு டிலீர் கான் வந்தான். அங்கே வழி இக்கட்டாகிக் கொண்டுவந்தது. அங்கே ஸைனியம் வர ஆரம்பிக்கும்பொழுதே கோபிநாதன் வழிப்போக்கனை புலி தின்னுவதற்காக வந்து உட்காருவது போல் ஸைனியத்துடன் வந்துநின்றான். டிலீர் கான் மபாரகனைப் பார்த்து முந்தியுள்ள ஸை

னியத்தைக்கொண்டு மார்க்கத்தை மறித்துக்கொண்டிருக்கிற ரஜபுத்திரர்களை விரட்டும்படி சொன்னான். ஆனால் கோபிநாதனை விரட்டுகிறதெப்படி? இக்கட்டான மார்க்கத்தில் மொகலாய ஸைனிகர் கொஞ்சம் பேர்கள் தாமிருந்தார்கள். வளையிலிருந்து ஊர்ந்து வெளியே வருகிற பொழுதே எறும்புகளைச் சிறுபிள்ளைகள் நசுக்கிவிடுவதுபோல் ரஜபுத்திரர் மொகலாய ஸைனிகர்கள் குறுகலான மார்க்கத்தில் வரவர அடித்துக் கொன்றுகொண்டிருந்தார்கள். இது இப்படியிருக்க, டிலீர் கான் முன்னே மார்க்கமில்லாமல் ஸைனியத்துடன் நடுமார்க்கத்தில் நின்றான். மாணிக்கலாலன் இது சரியான சமயமென்றறிந்துகொண்டான். அவன் தன் ஸைனியத்துடன் மலையின்மேலிருந்து வந்து டிலீர் கான்மேல் விழுந்தான். டிலீர் கான் சேனையிலிருந்தவர்கள் பிராணனில் ஆசையை விட்டுச் சண்டைபோட்டார்கள். ஆனால் அதே சமயத்தில் விக்கிரமஸிம்ஹன் தன் குதிரை வீரர்களுடன்வந்து டிலீர்கான் ஸைனியத்தின் பின்னே நின்றுகொண்டான். அப்போது மூன்று பக்கங்களிலேயும் சூழப்பட்டு மொகலாயர் ஒரு நாழிகைகூட நிற்க முடியாமற் போயிற்று. முடிந்தவர் ஓடிப்போய்ப் பிழைத்தார்கள். அநேகருக்கு ஓடுவதற்கு மார்க்கம் கிடைக்கவில்லை. அவர்கள் குடியானவன் அறுப்பரிவாளுக்கு அகப்பட்ட பயிர்போல் வெட்டுண்டு மாண்டார்கள்.

கோபிநாதனுக்கு முன் நின்ற சிலர் மாத்திரம் முதுகு காட்டாமல் நின்றார்கள். பிராணனைத் துரும்பாக நினைத்துக்கொண்டு சண்டை செய்துகொண்டிருந்தார்கள். அவர்கள் மொகலாய சேனையில் ஸாரமானவர்கள். எல்லாரும் யௌவனப் பிராயமுள்ளவர்கள். அவர்களுக்குத் தலைவன் மபாரகன். ஆனால் அவர்களுக்கும் எதிர்த்து நிற்க முடியாமற் போயிற்று. நிமிஷத்துக்கு நிமிஷம் ஒவ்வொருவனாய் விழுந்திறந்தார்கள். கடைசியில் ஐந்தாறு பேர்கள் மாத்திரம் பாக்கி நின்றுகொண்டிருந்தார்கள்.

மாணிக்கலாலன் இதைத் தூரத்திலிருந்து பார்த்து, அவ்விடத்துக்கு ஜாக்கிரதையாய்வந்து ரஜபுத்திரர்களைப் பார்த்து, "இவர்களை யடிக்க வேண்டாம். இவர்கள் வீரபுருஷர்கள். இவர்களை விட்டுவிடுங்கள்" என்றான்.

ரஜபுத்திரர் சற்று நின்றார்கள். அப்பொழுது மாணிக்கலாலன், "நீங்கள் புறப்பட்டுப் போங்கள். உங்களை விட்டுவிட்டோம். நீங்கள் ஒன்றும் சொல்லவேண்டாம்" என்றான்.

ஒரு மொகலாயவீரன், "நாங்கள் யுத்தத்தில் ஒருபொழுதும் புறங்காட்டினதில்லை. இப்பொழுதும் முதுகுகாட்டி யோடுவதில்லை" என்றான். சிலர் மறுபடியும் சண்டைபோட ஆரம்பித்தார்கள். அப்பொழுது மாணிக்கலாலன் மபாரகனைக் கூப்பிட்டு, "கான் ஸாகேப்! மறுபடியும் யுத்தஞ்செய்து என்ன செய்வீர்?" என்று கேட்டான்.

மபாரகன்.—செத்துப் போவேன்.

மாணிக்க. — எதற்காகச் செத்துப்போக வேண்டும்?

மபாரகன். — மரணந்தவிர எனக்கு வேறு கதியில்லை என்பது தங்களுக்குத் தெரியாதா?

மாணிக்க. — அப்படியானால் கலியாணம் பண்ணிக்கொண்டது எதற்காக?

மபாரக.—சாகிறதற்குத்தான்.

இந்தச் சமயத்தில் ஒரு துப்பாக்கியின் சத்தம் மலைகளில் எங்கும் பிரதிதொனித்துக்கொண்டிருந்தது. சத்தம் காதில்பட்டதோ இல்லையோ மபாரகன் சிரசு உடைந்து கீழேபூமியில் விழுந்தான். மாணிக்கலாலன் பார்க்கவும், மபாரகன் பிராணன் போய்விட்டது. குண்டு தலைக்குள் பாய்ந்து விட்டது. மாணிக்கலாலன் சுற்றிமுற்றிலும் பார்க்கவும், மலையின் தாழ்வரையில் ஒரு ஸ்திரீ துப்பாக்கியைக் கையில் வைத்துக்கொண்டிருந்தாள். துப்பாக்கியின் வாயிலிருந்து புகை வந்துகொண்டிருந்தது. அவள் பைத்தியம் பிடித்த தரியா வென்று சொல்லவேண்டிய அவசியமில்லை.

மாணிக்கலாலன் அவளைப் பிடித்துவரும்படி சொன்னான். அவள் சிரித்துக்கொண்டு ஓடிப் போனாள். அது முதற்கொண்டு தரியாவை இந்தப் பூமியில் யாரும் காணவில்லை.

யுத்தமானவுடன், ஜேப உன்னீஸா சண்டையில் மாபாரகன் இறந்தானென்கிற சமாசாரம் கேட்டாள். அப்பொழுது அவள் தன் ஆபரணங்களை யெல்லாம் கழற்றி எறிந்து உதயஸாகரத்துக் கரையில் பூமியின்மேல் விழுந்தாள்.

பதினொரும் அத்தியாயம்

சஞ்சலையின் மணம்

யுத்தம் முடிந்தவுடன் விக்கிரமஸிம்ஹன் ஜயசமாசாரத்துடன் ராஜஸிம்ஹன் தங்கியிருந்த விடத்திற்கு வந்தான். ராஜஸிம்ஹன் ஆதரவுடன் அவனை ஆலிங்கனம் பண்ணிக் கொண்டான். விக்கிரமஸிம்ஹன், "இன்னொரு வார்த்தை பாக்கியிருக்கிறது. அது என் மகளைப்பற்றியது. பூரணமனத்துடன் ஆசிர்வாதஞ்செய்து அந்தப் பெண்ணைத் தங்களுக்குப் பாணிக்கிரகணம் செய்துகொடுக்க இஷ்டமுள்ளவனா யிருக்கிறேன். தங்களுக்கு அப்படிச் செய்வதில் இஷ்டமோ?" என்றான்.

ராஜஸிம்.—அப்படியானால் உதயபுரம்போக வேணும்.

விக்கிரமஸிம்ஹனும் உதயபுரம்சென்றான். அதே இராத்திரி ராஜஸிம்ஹன் சஞ்சலகுமாரியைப் பாணிக்கிரகணம் செய்துகொண்டான். அதற்குப்பிறகு நடந்த சங்கதிகளைச் சொல்லுவது இந்துதேசச் சரித்திரக்காரர்களைச் சேர்ந்தது. மறுபடியும் அவுரங்கசீபு தானே சொந்தமாய்ப்போய் ராஜஸிம்ஹனைத் துவம்ஸம் செய்யவேண்டுமென்று முயற்சிசெய்தான். அஜிமன் வந்து அவனுடன் சேர்ந்துகொண்டான். ராஜஸிம்ஹன் பிரசித்திபெற்ற மார்வார் தேசத்தாசனுகிய துர்க்கதாஸனோடு சேர்ந்துகொண்டு அவுரங்கசீபை எதிர்த்தான். அவுரங்கசீபு மறுபடியும் தோற்கடிக்கப்பட்டு அவமானமடைந்து ஓடிப்போனான். ரஜபுத்திரர் அவனுடைய சேனையிலிருந்த சொத்தெல்லாவற்றையும் சூறைசெய்துகொண்டார்கள்.

அவுரங்கசீபு அஜிமனோடு பயத்துடன் ஓடி ராணுவின் பூர்வ ராஜதானியாயிருந்த சித்தூரில் போய்த் தங்கிக்கொண்டான்.

ஆனால் அங்கேயும் அவனுக்கு க்ஷேமமுண்டாகவில்லை. ஸுபலதாஸன் என்கிற ஒரு ரஜபுத்திர ஸேனாதிபதி பின்னே போய் சித்தூருக்கும் ஆஜ்மீருக்கும் மத்தியில் சேனையை ஸ்தாபித்துக்கொண்டு நின்றான். மறுபடியும் ஆகாரத்துக்கு வேண்டிய சாமான் முதலானவை மறிக்கப்பட்டுப் போகுமோ என்கிற பயத்தால் அவுரங்கசீபு ரோஹில்கான் என்ற ஸேனாதிபதியை பன்னீராயிரம் சிப்பாய்களுடன் போய் ஸுபலதாஸனுடன் சண்டை செய்ய அனுப்பிவிட்டு தன்பாட்டுக்குத் தான் ஆஜ்மீர்பக்கம் ஓடிப்போனான். அதற்குப் பிறகு உதயபுரப்பக்கம் முகத்தைத் திருப்பிப் பார்க்க முடியவில்லை. உதயபுரம் போகிற ஆசை அத்துடன் முடிந்தது. இது இப்படியிருக்க, ஸுபலதாஸன் ரோஹில்கானை எதிர்த்து அவனைத் தோற்கடித்தான். ரோஹில்கான் ஆஜ்மீருக்குப் புறப்பட்டுப் போனான். இன்னொரு பக்கத்தில் ராஜஸிம்ஹனின் இரண்டாவது புத்திரன் குமாரபீமஸிம்ஹன் மொகலாய அதிகாரத்துக்குச் சேர்ந்திருந்த குஜராத் தேசத்தில் பிரவேசித்துக்கிராமங்கள் பட்டணங்களையெல்லாம் கொள்ளை யடித்துக்கொண்டிருந்தான். அநேக பிரதேசங்களைக் கைவசம் பண்ணிக்கொண்டு ஸௌராஷ்டிரதேசம் வரைக்கும் ராஜஸிம்ஹனது அதிகாரத்தை ஸ்தாபித்துக்கொண்டிருந்தான். பிரஜைகள் கொள்ளைகளால் வருந்தியதைக்கண்டு ராஜஸிம்ஹன் தயைகொண்டு பீமஸிம்ஹனைத் திரும்பிவரும்படி உத்தரவு செய்தான்.

ஆனால் மந்திரியாகிய தயாளுஷா அப்பேர்ப்பட்ட சுபாவமுள்ளவனல்ல. அவன் யுத்தத்தில் புகுந்து மால்வா தேசத்தில் முஸல்மானரை ஸர்வநாசம் பண்ணிக்கொண்டிருந்தான். தயாளுஷா குமார ஜயஸிம்ஹனுடன் சேர்ந்து இருவரும் ஷஹஜாத் அஜிம்ஷாவை எதிர்த்துச் சித்தூருக்குச் சமீபத்தில் யுத்தம் செய்தார்கள். அஜிம்ஷான் ஸைனியத்தைப் பறிகொடுத்துத் தோற்றுப்போய் ஓடிப்போனான்.

நான்கு வருஷகாலம் யுத்தம் நடந்தது. மேன்மேலே மொகலாயர் தோல்வியடைந்தார்கள். கடைசியில் அவுரங்கசீபு நிஜமான உடன்படிக்கை செய்துகொண்டான். ராணு கேட்டதற்கெல்லாம் ஒப்புக்கொள்ளுவதற்குத் தயாராயிருந்தான். மொகலாயர் இப்பேர்ப்பட்ட பள்ளிக்கூடத்தில் ஒருநாளும் படித்ததில்லை.

முற்றிற்று.

மாமிசத்திலிருந்து பட்டு:—உபயோகமற்ற குதிரைகளையும் மாடுகளையும் கொன்று அவைகளின் மாமிசத்தை ஒரு திராவகத்திற் போட்டு தசைகளின் மெல்லிய நார்களைப் பிரியச்செய்து, அந்நார்களைத் திரும்பவும் மற்றொரு திராவகத்திற் போட்டு அவைகளுக்குப் பட்டின் பளபளப்பு உண்டாகும்படி செய்வதாகவும், அவசியமானால் பட்டுப்போன்ற அவ்வஸ்துவுக்கு ரப்பர் மேற்பூச்சுப் பூசி, நீரில் நனையாததாகச் செய்யமுடியு மென்றும் இங்கிலாந்தில் லங்காஷைர் என்னும் பட்டணத்தில் பிரசுரமாகும் தினப்பத்திரிகை ஒன்றிலிருந்து தெரியவருகிறது.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

கருப்பஞ் சர்க்கரை.—டென்மார்க் தேசத்தவரான மிஸ்டர் ஷ்மிட் என்னும் இரசாயன சாஸ்திரியொருவர் கருப்பஞ் சாற்றைச் சுண்ணாம்பில் சுத்தஞ்செய்யும் கஷ்டத்தை யொழிக்க ஒரு நூதன வழி கண்டுபிடித்திருக்கிறார். அவரது முறையில் ஆலையிலிருந்து வரும் கருப்பஞ்சாறானது ஒரே தடவையில் பரிசுத்தமான நீரைப்போல் தெளிந்து போகிறது; அதைக் காய்ச்சினால் சுத்தமான சர்க்கரை கிடைக்கிறது. அவர் கண்டுபிடித்திருக்கும் சுலபமான முறை யாதெனில், ஆலையிலிருந்து வரும் கருப்பஞ்சாற்றில் சுண்ணாம்பு போடுவதற்குப் பதிலாக மிகவும் நுண்ணிய அணுக்களாகப் பொடிசெய்யப்பட்ட கரியைப்போட்டுக் கடைந்து, பிறகு வடிக்கட்டுவதுதான். அவ்வாறு கடைந்து வடிக்கட்டப்பெற்ற சாறு அசுத்தம் முற்றிலும் நீங்கித் தெளிந்து போகிறது. இம்முறைக்கவசியமான கரியை கருப்பஞ்சக்கையை எரிப்பதனாலேயே அவர் சேகரிக்கிறார். மிஸ்டர் ஷ்மிட் ஜாவா என்னும் தீவிலுள்ள கரும்பாலைக்கூடத்தில் வேலையாயிருப்பதாகவும், அங்கு அவர் வெகுகாலமாகப் பரீக்ஷைசெய்து கடைசியாக இந்நூதனமுறையைக் கண்டுபிடித்தாரென்றும், இம்முறையை அனுஷ்டிப்பதனால் சர்க்கரை செய்வது சுலபமாவதுமன்றி, கருப்பஞ் சாற்றிலிருந்து கிடைக்கும் சர்க்கரையின் அளவும் அதிகமாகிறதென்றும் தெரியவருகிறது.

*
* *

குழந்தை கற்கத் தொடங்கும் வயது.—மிகவும் சிறுவயதிலேயே ஒரு குழந்தைக்குப்படிக்கக் கற்றுக்கொடுப்பதனால் அக்குழந்தைக்குத் தீங்கு நேரிடுமென்ற அபிப்பிராயம், இப்போது அவ்விஷயத்தை நன்றாய் ஆராய்ந்து பார்த்துள்ளவர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. சாதாரணமான வளர்த்தியுள்ள குழந்தை, நான்கு வயதிலேயே படிக்கத் தொடங்க வேண்டுமென்றும், ஆறுவயதாகும்போது அக்குழந்தை பிறர்பேசித் தான் தெரிந்துகொள்ளக்கூடிய எதையும் படிக்குந் திறமுடையதாகவிருக்கவேண்டுமென்றும் ஆராய்ந்தோர் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

ஐரோப்பிய யுத்தத்தில் வென்றவர் யார்?

வெகுகாலமாக பொருள்களைச்செய்து விற்பதில் ஜர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் போட்டியாக இருந்ததில், ஐரோப்பிய மகாயுத்தகாலத்தில் ஜர்மனி போட்டிபோடுந் திறனற்றுப் போயிற்று. இப்போது ஜர்மனி தேசத்துப் பொருள் செய்வோர்கள் உலகமுழுவதிலும் தங்கள் சரக்குகள் மூந்தும்படி செய்ய முயன்று வருகிறார்கள். அம்முயற்சி பலிக்கும் போலவே தோன்றுகிறது. ஆகையினால், வியாபாரப் போட்டியும் ஐரோப்பிய யுத்தத்தின் முக்கியக் காரணங்களி லொன்றென்று கருதுவோர், யுத்தத்தில் வென்றது இங்கிலாந்துமல்ல அமெரிக்காவுமல்ல ஜர்மனியேயென்று அபிப்பிராயப்படுகிறார்கள். இவ்வபிப்பிராயம் "லண்டன் அபிப்பிராயம்" என்னும் பத்திரிகையில் ஒரு விநோதப் படத்தினால் விளக்கப்பட்டிருக்கிறது. அப்படத்தில் இங்கிலாந்து, தானே போரில் வென்றதாக எண்ணும் மனிதனாகவும், அமெரிக்கா போரில் வென்றது தானாகத்தான் இருக்கவேண்டுமென்று ஊகிக்கும் மனிதனாகவும், ஜர்மனி போரில் வென்றது தான் தான் என்று நன்றாயறிந்த மனிதனாகவும் வேடிக்கையாகக் காட்டப்பட்டிருக்கின்றன.

*
* *

மெஸோபொடேமியாவில் ஹிந்து நாகரிகம்.—நார்வே தேசத்தவர்கள் இந்துக்களின் பூர்வீக நாகரிக ஆராய்ச்சிக்காக ஏற்படுத்தியிருக்கும் ஆராய்ச்சிச் சாலையைச் சேர்ந்த டாக்டர் ஸ்டென் கோனோ என்பவர் மெஸொபொடேமியாவிலுள்ள சிலாசாசனங்களைப் பரிசீலனை செய்ததில், அத்தேசத்தில் சுமார் 3300 வருஷங்களுக்கு முன் மிதானி என்னும் ஜாதியார்கள் குடியிருந்ததாகவும், அவர்கள் மற்றொரு ஜாதியாருடன் செய்துகொண்ட உடன்படிக்கையில் ரிக்வேத தேவதைகளான மைத்திரா வருணர்கள், அசுவினிகள், இந்திரன் இவர்களது அருள் கிடைக்கவேண்டுமென்ற பிரார்த்தனை காணப்படுகிறதென்றும், அந்நாடு 3700 வருஷங்களுக்கு முன் அந் நாகரிகமடைந்திருக்க வேண்டுமென்றும் தகுந்த சாக்ஷியங்களினால் நிரூபித்திருப்பதாக ஸ்ரீ கே. பி. ஜயஸ்வால் "நவீன விமரிசனம்" என்னும் பத்திரிகையில் எழுதுகிறார்.

புலி பதுங்குவது பாய்ச்சலுக்கு இடம்.

THE RE... No. 20 JUN 1922

முருகன் திரு அவதாரம்

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

OF THE REG... No.— 20 JUN 1922

தொகுதி XIV} துன்மதிஞூ மார்கழிமீ :: 1922-ம்ஞூ ஜனவரிமீ {பகுதி 7

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

கொந்து வார்குர வடியினு மடியவர்
சிந்தை வாரிச நடுவினு நெறிபல
கொண்ட வேதனன் முடியினு மருவிய
குருநாதா-

கொங்கி லேர்தரு பழநியி லறுமுக
செந்தில் காவல தணிகையி லிணையிலி
கொந்து காவென மொழிதர வருசம
யவிரோத;

தந்த்ர வாதிகள் பெறவரி யதபிநர்
சந்தி யாதது தனதென வருமொரு
சம்ப்ர தாயமு மிதுவென வுரைசெய்து -
விரைநீபச்-

சஞ்ச ரீகரி காமுரல் தமனிய
கிண்கி ணீமுக விதபத யுகமலர்
தந்த யேருள் கனவிலு நனவிலு
மறவேனே;

சிந்து வாரமு மிதழியு மிளநவ
சந்த்ர ரேகையு மரவமு மணிதரு
செஞ்ச டாதரர் திருமக வெனவரு
முருகோனே-

செண்ப காடவி யினுமித ணினுமுயர்
சந்த ஞடவி யினுமுறை குறமகள்
செம்பொ னூபுர கமலமும் வளையணி
புதவேயும்;

இந்து வாண்முக வனசமு ம்ருகமத
குங்கு மாசல யுகளமு மதுரித
இந்த ளாம்ருத வசனமு முறுவலு
மபிராம-

இந்த்ர கோபமு மரகத வடிவமு
மிந்த்ர சாபமு மிருகுழை யொடுபொரு
மிந்த்ர நீலமு மடலிடை யெழுதிய
பெருமாளே!

திரையாயும் கங்காநதியையும் கொன்றையையும் பிறைச் சந்திரனையும் நாகத்தையும் சூட்டியுள்ள சிவந்த சடைமுடியையுடைய சிவபெருமானுடைய திருமகனாக வந்து அவதரித்தருளிய ஞான தேசிகனே! சண்பக வனத்திலும், தினைப்புனத்தி லமைக்கப்பட்டுள்ள பரண்மீதும், ஓங்கி வளர்ந்துள்ள சந்தன மரங்கள் அடர்ந்த வனத்திலும் வசிக்கும் குறவர் குலத்தில் அவதரித்தருளிய உலக மாதாவான வள்ளிநாயகியாரிடத்துக்கொண்ட மிகுந்த காதலினால் அத்தேவியாரது செம்பொன்னாலாகிய சிலம்புகளணிந்த செந்தாமரை மலர்களை யொத்த பாதங்களையும், வளைகளையணிந்த திருக்கரங்களையும், சந்திரனது தண்ணொளி வீசும் செந்தாமரை முகத்தையும், கஸ்தூரி முதலிய திவ்விய வாசனைகளை யணிந்துள்ள தனபாரங்களையும், மிகவும் இரம்மியமான இந்தளம் என்னும் பண்ணையொத்ததும் துக்கத்தை யகற்ற வல்லதுமான அமுத மொழிகளைச் சிந்தும் திருவாய் மலரையும், அதிற் பொருந்தி விளங்கும் புன்னகையையும், அழகிய சிவந்த உதடுகளையும், மரகதத்தைப்போல் பச்சையான திருவுருவத்தையும், வானத்தில் தோன்றும் வில்லைப்போல் வளைந்த புருவங்களையும், காதுகளிலணிந்துள்ள குழைகளினளவு ஓடும் இந்திர நீலத்தைப்போற் சிறந்த வொளி வீசும் கண்களையும் விசித்திரமாக எழுதிக்களித்த பெரியோனே! நறுமணம் வீசும் பூங்கொத்துக்கள் தழைந்திருக்கும் குராமரத்தின் கீழும், அடியவர்களுடைய இதயத்தாமரையின் நடுவிலும், நற்கதி பெறுவதற்குப் பல வழிகளை யெடுத்துப் போதிக்கும் வேதத்தின் முடிமீதும் மகிழ்ந்து அமர்ந்தருளும் குருநாதா! கொங்குதேசத்தை அழகுபெறச்செய்யும் பழநிமலையில் அமர்ந்தருளும் ஆறுமுகப்பெருமாளே! திருச்செந்தூரில் உறைந்தருளும் எனதிறைவனே! திருத்தணிகை மலையில் இணையற்றவனாய் விளங்கும் எனதண்ணலே! [கொடுந்தொழிலையே புரிந்துவந்த வேடர்களின் நடுவில் தோன்றி அவர்களைப்போலவே வனசர வாழ்க்கையை வாழ்ந்து நடித்த எனதன்னை வள்ளிநாயகியாரைத் தடுத்தாண்டதுபோல ஐம்புலன்களாகிய வேடர்கள் கைப்பட்டு வருந்தும்

(இதன் தொடர்ச்சி 226-ம் பக்கம் பார்க்க.)

புலியைப் பார்த்து நரி சூடு இட்டுக்கொண்டதுபோல.

விவேக போதினி

தொ.14] துன்மதிவருஷ :: மார்கழிமீ [ப. 7

கந்த புராணம்

SKANDA PURANAM

மேற்கூறியவாறு ததீசி மகா முனிவர் அடக்கவொணாச் சினத்தினால் தக்ஷனையும் தேவர்களையும் மறையவர்களையும் சபித்துவிட்டு அந்த யாகசாலையை விட்டகன்றவுடன், அந்த யாகசாலையில் பல அபசகுனங்கள் காணப்பட்டன. தக்ஷனது கொடி தம்பத்திலிருந்து அறுந்து கீழே விழுந்தது. காட்டிலுள்ள காகங்களும் கழுகுகளும் கூட்டமாய் விரைந்துவந்து யாகசாலையிலுள்ள யூபஸ்தம்பங்களின்மீது அமர்ந்தன. கண்டோர்யாவரும் மனஞ் சலங்குமாறு, வேதவல்லியின் கழுத்திலிருந்த திருமங்கல்ய சூத்திரமும் தானாகக் கழன்று கீழேவிழுந்தது. மற்றும் பல துற்சகுனங்கள் தக்ஷனது இறுதி நெருங்கிவிட்டதென்று உணர்த்தின. ஆனால் ஊழினால் தீய நெறியில் தள்ளப்பெற்ற தக்ஷன் அவைகளைச் சிறிதும் இலக்ஷியஞ் செய்யாது, தன் பிதாவான பிரமதேவனையும் திருமாலையும் முதலில் முறைப்படி பூசித்து, பிறகு தனது பெண்களுக்கும் மருகர்களுக்கும் மங்களகரமான பல சீர்களைக் கொடுத்தான். பிறகு தக்ஷன் கட்டளைப்படி யாகமுறையில் வல்ல பலமுனிவர்கள் ஓமகுண்டங்களில் அக்கினியை வருவித்து, மந்திரங்களைக் கூறி, நெய்யை ஆகுதி செய்து, சிவபெருமானைத் தவிர மற்றத் தேவர்கள் யாவர்க்கும் அக்கினி மூலமாக அவிர்ப்பாக மளித்தனர்.

இவ்வாறு தனக்கு நாசமுண்டாகுமாறு தக்ஷன புரிந்த யாகத்தினை திரிலோக சஞ்சாரியான நாரதமாமுனிவர் கண்டு, ஆச்சரியத்துடன் திருக்கைலாயத்துக்குச் சென்று, எம்பெருமானை அன்புடன் வணங்கித் துதித்து நின்றார். பிரபஞ்சமெங்கும் வியாபித்து நிற்கும் முக்கண்ணைதை யாது மறியாதவர் போல உலகத்தில் என்ன விசேஷமென்று நாரதமாமுனிவரைக் கேட்டருளினார். அதற்கு அம்முனிவர், "யாவரினும் சிறந்த தக்ஷன் தன் மதியை யிழந்து கங்கைக்கரையில் மாயோன் பிரமன் முதலிய தேவர்களுடன் ஒரு வேள்வி இயற்றுகின்றான். இதுதான் இப்போது உலகத்திலுள்ள புதுமை!" என்றுரைத்தார்.

எம்பெருமான் திருவருளினால் அவரது இடப்பாகத்தி லுறையும்படியான பெரும்பேற்றைப் பெற்ற தாக்ஷாயணி அவ்வார்த்தைகளைச் செவியுற்றதும், எம்பெருமான் பக்கத்திலிருந்து எழுந்து, அவரது திருவடிகளைப் பணிந்து கைகூப்பி நின்று, "எனக்குத் தந்தையென்று யாவராலும் கருதப்படும் தக்ஷன் செய்யும் யாகத்தைக் காணவேண்டுமென்ற விருப்பமுடையவளா யிருக்கிறேன். அதைப் பார்த்துவிட்டுச் சீக்கிரம் திரும்பிவந்துவிடுகிறேன். அடியேனுக்கு இப்பொழுதே விடைகொடுத் தருளவேண்டும்" என வேண்டினாள்.

அப்போது சிவபெருமான், "பெண்ணே! அத் தக்ஷன் நின்னை மதிக்கமாட்டான். அந்தத் தவத்தினால் நம்மிடமிருந்து பெற்ற சிறந்த வரத்தினால் அவன் செருக்குற்று தேவர்களுடன் கூடி மயக்கமுற் றிருக்கிறான். இப்போது நீ அவன் செய்யும் வேள்வியைப் பார்க்கப் போகவேண்டாம்" என்று கூறியருளினார். அதுகேட்டு தாக்ஷாயணி, "எம்பெருமானே! தீய நெறியிற் பட்ட தக்ஷன் தன் மதியை யிழந்துவிட்டானாதலால், அவன் பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று கூறி எம்பெருமான் திருவடிகளை வணங்கினாள். பிறகு அருட்கடலாகிய உமாதேவியார், "பிழைபொறுத் தாட்கொண்டு முத்தி வீடருளும் பெருங்குணமுடைய அண்ணலே! அவ்வேள்வியைப்பார்த்துவிட்டுச் சீக்கிரம் திரும்பி வருகிறேன். அடியேனுக்கு விடைகொடுத்தருள வேண்டும்" என்று வேண்டினாள்.

அதுகேட்டு எம்பெருமான், "உமையே! தக்ஷன் செய்யும் யாகத்தின் சிறப்பைக் காண உனக்கு அவ்வளவு ஆவலிருக்குமாயின், அவ்வாறே சென்று விரைவில் திரும்பிவருவாயாக!" என்றுகூறி விடைகொடுத்தருளினார்.

உமாதேவியார் இறைவனடி பணிந்தெழுந்து சிறந்ததோர் விமானத்திலேறி, சுமாலி மாலியென்னும் பெண்கள் வெண்மதிபோன்ற குடையைத் தாங்கவும், மங்கலை, சுமனை முதலிய எண்ணிறந்த மாதர்கள் சாமரைகளை வீசவும், அழகிய மாதர்கள் பலர் ஆலவட்டம், மயில்தோகை விசிறி இவைகளை எங்கும் நறுமணம் வீசமாறு வீசவும், பல மாதர்கள் கண்ணாடி, புஷ்பமாலை இவைகளை ஏந்தி நிற்கவும், இந்திர தேவரின் மனைவியான சசிதேவி யென்பவள் தேவியின் பாதுகைகளைக்கொண்டு பின்தொடரவும், பல மாதர்கள் மங்களகீதங்களைப் பாடவும், மற்றும் பல மாதர்கள் அவைகளுக்கிசைய நிர்த்தனஞ் செய்துவரவும், சோமநந்தியைத் தலைவனாகக்கொண்ட பன்னிரண்டு கோடிப் பூதகணங்கள் வெண்கொற்றக் குடைகளையும் இடபக் கொடிகளையும் தாங்கியவராய் தன்னைப் புகழ்ந்து முன்னே செல்லவும், விரைந்து சென்று தக்ஷனது யாகசாலையை யடைந்து, விமானத்தினின்று இறங்கித் தக்ஷன் எதிரே சென்றாள்.

அப்போது சீலமில்லாத தக்ஷன் உமாதேவியாரை வெகுண்டு நோக்கி, "தந்தை தாயில்லாத சிவன் சிந்தைக்குகந்த மனைவியான நீ இந்த யாகத்தினை நான் செய்யுங்காலத்தில் நான் பெற்ற மகளிரைப்போலவே இங்கு எதற்காக வந்தாய்? இச்சிறந்த யாகத்துக்கு விரைவில் வரவேண்டுமென்று கூறி உன்னை எவரும் அழைக்காதபோது நீ வரலாமோ? நீ உன் மலைக்குப் போகலாம்!" என்று அலக்ஷியமாய்ப் பேசினான்.

அதுகேட்டு உமாதேவியார், "என் தங்கைமாருக்கும் அவர்களை மணந்த மருகருக்கும் தகக தக்க சீர்களைக்கொடுத்த நீ என்னையும் என் நாயகனையும் சிறிதளவு நினைக்கவுமில்லை. நீ செய்யும் யாகத்தைப் பார்ப்பதற்காகத் தானாகவே வந்த என்மீது கோபங்கொள்ளுகிறாய். இது உனக்கு அழகோ? இது உன் பெருமைக்கு ஓர் குறைவை யுண்டாக்காதா? இவ்வாறு நீ நடந்துகொள்ளுவதற்குக் காரணமென்னவென்று உரைப்பாயாக" என மொழிந்தாள்.

உடனே கொடியோனாகிய தக்ஷன் உமாதேவியாரை நோக்கி, "சத்துவகுணம், ரஜோகுணம், தமோகுணம் என்னும் முக்குணங்களில் தீயதான தமோகுணத்துக்குரிய சங்காரத் தொழிலைச் செய்து, பேய்களோடு ஆடல் செய்யும் பித்தனுக்குத் தேவியானவுடன் நீயும் அவன் நிலையை அடைந்தாய்! அவனுடன் கூடி நீ செருக்குற் றிருந்ததனால் உன்னை நான் இகழ்ந்தேன். உனது தங்கைமார்களை மணந்துகொண்ட மருகர் யாவரும் என்னிடத்து அன்புடையவர்கள். ஆதலால் நான் அவர்களிடத்துப் பிரியம் பாராட்டி சிறந்த வரிசைகளை அவர்களுக்கு அளித்தேன். சிறந்த அவிர்ப்பாகங்களையும் அவர்களுக்கு ஈந்தேன். உலகமுண்ட மாயவன், பிரமன் முதலிய யாவரும் வந்து என்னைத் துதிக்கின்றனர். சிவனும் நீயும் என்னைச் சிறிதும் மதிக்கவில்லை. ஆதலால் உங்களிடத்து எனக்குப் பிரியமில்லை. காளையை வாகனமாகக்கொண்ட நின் நாயகனுக்கு இந்த யாகத்தில் அவிர்ப்பாகமும் அளிப்பேன்! சிவனைக் குறித்து வேதங்களிற் கூறியுள்ள மெய்வசனங்களையும் என் வல்லமையினால் மாற்றியும் விடுகிறேன். இங்கு தானாக வந்துள்ள உனக்கும் நான் தினையளவும் மரியாதை செய்யமாட்டேன்" என்று கடுமையாய்க் கூறினான்.

அந்தக் கடுமொழிகள் எமதன்னையின் செவியிற் பட்டவுடன், அவள் மனத்தில் மாசற்ற கோபமுற்பவித்து அவளது பெருமூச்சுடன் கலந்து வெளியேவந்து சண்டமாருதத்துடன் கலந்த ஊழித் தீயைப்போல அண்டங்களையும் அளவில்லா உயிர்களையும் அழிப்பதற் கெழுந்தது. பல உலகங்களும், சமுத்திரங்களும், குலபருவதங்களும், அக்கினிகளும், திக்கு யானைகளும் தேவரும் திக்கிட்டு நடுங்கினார்கள். அச்சமயத்தில் உமாதேவியின் அருகில் நின்ற விமலையென்னும் மாது, தேவியை வணங்கி, "உலகங்களையெல்லாம் ஈன்ற தாயாகிய உனக்கு இக்கோபம் ஏற்குமோ? எண்ணிறந்த மைந்தர்களை ஈன்றருளி அவர்கள் அனுபவித்துக் களிப்பதற்குரிய பலவித போகங்களையுமளித்த தாயாகிய நீயே யாவற்றையும் அழிக்கத் தலைப்பட்டால், அவர்கள் தப்பிப் பிழைப்பதற்கு வழியேது? இவன் தருமநெறி பிறழ்ந்து நடந்தானென்று நீ கோப

முற்றாய்! அது நியாயமேயெனினும், அக்கோபம் இமைப்பொழுதுக்குள் யாவற்றையும் அழித்துவிடுமாதலால், இப்பிழையைநீபொறுத்தருளவேண்டும்!" என்று கூறித் துதித்தாள்.

அவ்வார்த்தைகளைக் கேட்டு உமாதேவி தனது கோபத்தை அடக்கி உள்ளே செலுத்தி, தக்ஷனைநோக்கி, "நீ என்னை இங்கு இகழ்ந்ததை ஒருபொருட்டாக நான் எண்ணவில்லை. ஆனால் என் நாயகனை நீ இகழ்ந்ததைக்கேட்டுச் சகிக்கமுடியவில்லை. அந் நிந்தை மொழிகள் என் செவிகளுக்குள் விஷத்தைப்போல் பாய்ந்துசென்றன. குணமென்பது இல்லாதவராயும் மாசென்பது என்றும் தம்மீதுபடியப்பெறுதலவராயுமுள்ள இறைவர் உலகங்களின் நன்மையைக் கருதி சிற்சில சமயங்களில் பரிசுத்தமான குணங்களை யுடையவராகத் தோன்றுகிறார். அவ்வாறு அவர்கொள்ளும் குணங்கள் எண்ணிறந்தனவாதலால், அவர் சங்காரஞ் செய்யும் தமோகுண முடையவர் என்று நீ கூறியவிதமாக அவ்வளவு எளிதாக அவர் குணங்களை எடுத்துரைப்பது சாத்தியமன்று. சங்காரகாலத்தில்மட்டும் அந்தத் தமோகுணத்தைக்கொள்ளுகிறாரேயன்றி, அக்குணம் எந்நாளும் ஞானநாயகனான எம்பெருமானுடைய இயற்கையிற் கலந்ததன்று. அச்சங்காரத்தொழிலும் தீயதன்று. ஏனெனில், உயிர்கள் ஓயாமல் செத்தும் பிறந்தும் வருந்தி அலைவுறுவதைக்கண்டு மனமிரங்கி அவைகளுற்ற இளைப்பை யாற்றுகிறதற்காகவே சர்வேசுவரன் அவைகளை மாய்க்கிறார். அச்சங்காரத்தொழிலைச் செய்யத்தக்கவர் தமக்கோர் இறுதி யற்றவரே யாதலாலும், படைத்தல், காத்தல் என்னும் தொழில்களைப் போலன்றி அத்தொழில் தம் மனத்தில் அகங்காரம் இறையளவு மிருக்கப்பெறுதவர்களால்தாம் இயற்றக்கூடியதாகையாலும், அத்தொழிலை எமதிறைவனே புரிந்துவருகிறார். அவ்வாறு சங்கரிக்கும் எம்பெருமான் உலகங்களையும் உயிர்களையும் முன்போலவே திரும்பவும் சிருஷ்டிக்கிறார். குற்றமற்ற ஆகமங்களையும் வேதங்களையும் திருவாய்மலர்ந்தருளி, பவநோய் தம்மை யணுகாமல் ஆன்மாக்கள் தம்மைக் காப்பாற்றிக்கொள்ளும் சக்தியைத் தரும் வித்தைகளுக்கு இறைவனாய், பவநோயை முற்றுமகற்றும் முத்திவீட்டைத் தந்துதவும் எந்தையைத் தாமத குணமுடையவனென வுரைத்தல் தகுதியோ? சிவவென்னும் சிறந்த எழுத்துக்களிரண்டையும் செப்புவோர் எளிதில் நற்கதி யடைவார்கள். அப்படிப்பட்ட திருநாமம் வாய்ந்த எம்பெருமானை நீ இகழ்ந்தனையே. நீ கடைத்தேறுவதெங்ஙனம்? முன்னம் பிரமனும் முகுந்தனும் தேடியுங்காணவொணாதசிவபெருமானை முதல்வராகக் கருதாமல் இகழ்வாருக்குத் தண்டனை கிடைக்குமென வேதங்கள் கூறுகின்றன. வேதநாயகரான எம்பெருமானை விலக்கி நீ வேள்வி செய்தாயாதலால், அத்தண்டனை உனக்கும் விரைவிற் கிடைக்கட்டும்!" என்று கூறிவிட்டுத் தன் பரிசனங்கள்சூழத் தன் விமானத்திலேறி திருக்கைலாயத்துக்கு விரைந்து சென்றனள். சிறந்த அக்கிரியை யடைந்ததும் உமாதேவி விமானத்தைவிட் டிறங்கித் திருக்கோவிலுக்குட் சென்று, தன் நாயகனது திருவடிக் கமலங்களில் வீழ்ந்துவணங்கி யெழுந்து, "எம்பெருமானே! அற்பனான தக்ஷன் தேவரீரை மிகவும் இகழ்ந்தானாதலால் அவன் அருமையாகச் செய்யும் வேள்வியை யழித்துவிட வேண்டும்" என வேண்டினாள்.

குற்றமற்ற பேரருள் வாரிதியான எமது இறைவர் எத்தேவர்க்கு எவரால அளிக்கப்படும் அவியும் வந்து அமரப்பெறும் திருக்கரத்தினை யுடையவராதலின், பிரமன், விஷ்ணு முதலிய தேவர்களுக்குத் தக்ஷன் அளித்த அவிர்ப்பாகங்களை யெல்லாம் அத்தேவர்களுக்குள் நின்று தாமே அடைந்திருந்தாராதலின், உமாதேவி கூறிய மொழியைச் செவி சாற்றாதவராய்ச் சும்மாவிருந்தார். அதுகண்ட அம்பிகை இறைவரை நோக்கி, "எனது நாயகனே! தேவரீருக்கு விருப்பு வெறுப்பு இரண்டுமில்லையெனினும், தங்களிடத்தில் அன்புடைய எனக்காக அவன் செய்யும் தீயவேள்வியை யழித்தருளவேண்டும்" என்று கூறி வணங்கினாள்.

அப்போது எமதிறைவா உலகெலாமீன்ற அன்னையாகிய உமாதேவியாரது அன்பினைக் கண்டு வியந்து உளங்கசிந்து எமதன்னையின் இச்சை நிறைவேறுமாறு சிறிது மனத்தினில் நினைத்த மாத்திரத்தில், பிறைச்சந்திரனைச் சூடிய செஞ்சடாமுடியை யுடைய ஆயிரந்தலைகள் விளங்கவும், ஆயிர முகங்களிலும் மும்மூன்று கண்கள் தீப்பொறிகள் சிந்தவும், சண்டமாருதமும் அக்கினியும் அஞ்சி விலகு

மாறு நாசியினின்று ஊர்த்துவ சுவாசம் கிளம்பவும், பிறைச்சந்திரனைப்போன்றவக்கிரதந்தம் நிலவினைய ஒளிவீசி விளங்கவும், கொடிய அரவங்களே கடகங்களாகவும், தோளணிகளாகவும், மற்றும் பலஆபரணங்களாகவும் அணியப்பட்டு விளங்கவும், எலும்புமாலையும், சிரமாலையும், பன்றிக்கொம்பும், ஆமையினோடும் முப்புரிநூலுடன் மார்பினில் அசைந்து விளங்கவும், ஈட்டி, வேல், தடி, வச்சிராயுதம், வாட்படை, திரிசூலம், வில், அம்பு, சக்கரம் முதலிய அநேகவிதமான ஆயுதங்கள் இரண்டாயிரம் திருக்கரங்களில் தோன்றவும், பவநோயையுன்னி அஞ்சி வருந்தும் அன்பர்களைத் தைரியப் படுத்துமாறு அஞ்சல் அஞ்சல் என்று பொற்கழல்களிலுள்ள சிலம்புகள் ஒலிக்கவும், அந்திக்காலத்து வானத்தையொத்த சிவந்த திருமேனியுடனும் விடத்தினையுடைய கண்டத்துடனும் எந்தையின் வடிவத்தை யுடையவராய் வீரருக்குள் முதல்வராகிய வீரபத்திரர் எந்தையின் நெற்றிக் கண்ணினின்றும் தோன்றினார்.

அப்போது உமாதேவி தனது கோபத்தினால் ஆயிரந் தலைகளும் இரண்டாயிரங் கைகளுமுடைய பத்திரகாளியைச் சிருஷ்டிக்க, அவள் வீரபத்திரக்கடவுளை யணுகி அவருக்குத் துணையாக நின்றாள். அவர்களிருவரும் சேர்ந்து நிற்பதைக்கண்டு மகாதேவரும் தேவியும் மகிழ்ந்தனர். அக்காலையில் வீரபத்திரர் தம்மை வந்தடைந்த பத்திரகாளியுடன் சிவபெருமானையும் உமாதேவியையும் வலம்வந்து வணங்கி, அவர்களெதிரில் கைகூப்பி நின்று, "எந்தாய்! திருமாலையும் பிரமனையும் பிடித்துக்கொண்டு வந்து இங்கே நிறுத்தவோ? அல்லது கொடிய இயமனது உயிரை முடிக்கவோ? அல்லது, அசுரர் குலத்தைக் களைந்தெறிந்திடவோ? அல்லது தேவர்களையே அழித்துவிடவோ? கடல்சூழ் புவி முழுவதையும் விழுங்கிவிடவோ? அல்லது உயிர்த்தொகை யனைத்தையும் அழித்துத் துடைக்கவோ? அல்லது எல்லையற்ற அண்டங்களைப் பொடியாக்கிவிடவோ? தேவரீருடைய திருவடித் தாமரைகளை என் சென்னிமீது வைத்துக்கொண்டு எக்காரியமாயினும் செய்து முடிக்கிறேன். தேவரீர் என்னைச் சிருஷ்டித்தது எக்காரியத்துக்காக வென்று தெரிவித் தருளவேண்டும்" என்று மிகுந்த விநயத்துடன் கூறினான்.

அப்போது சிவபெருமான் வீரபத்திரரை நோக்கி, "தக்ஷன் எம்மை விலக்கி வேள்வி செய்கின்றான். அங்கு நீ சென்று எமக்குரிய அவிர்ப்பாகத்தைத் தாவென்று கேள். அவன் அதைக்கொடுத்தால்நீ இங்கு வந்துவிடுவாயாக! கொடுக்காவிட்டால், அவன் தலையினைக் கொய்து, அவனிடத்து அன்பு பாராட்டி அவனுடன் கூடியிருக்கும் அனைவரையும் அழித்து, அவன்புரியும் யாகத்தையும் கலைத்துவிடுவாயாக! அச்சமயம் நாம் அங்குவந்து சேர்வோம்! நீ இனி அங்கே செல்வாயாக!" என்று கட்டளையிட்டார். உடனே வீரபத்திரர் பத்திரகாளியுடன் முதல்வர் அம்பிகையிருவர் பாதங்களிலும் மெய்யன்புடன் வீழ்ந்து பணிந்து விடைபெற்றுக்கொண்டு அப்பாற் சென்று, எம்பெருமானை யிகழ்ந்த தக்ஷனை யழிக்கவேண்டுமென்று நினைத்துச் சீற்றங் கொண்டு, அந்த க்ஷணத்திலேயே தமது சுவாசத்தினாலும், வியர்வையினாலும், வாக்கினாலும், அக்கினியைக் கக்கும் நெற்றிக் கண்ணினாலும், சடாமுடியினாலும், தோளினாலும், தாளினாலும், கரங்களினாலும் எண்ணிறந்த வலிய பூதர்களைப் படைத்தார். அவ்வாறே பத்திரகாளி எல்லையற்ற காளிகளின் கூட்டத்தைச் சிருஷ்டித்தாள்.

அவ்வாறு தங்களால் உண்டாக்கப்பட்ட பூதர்களும் காளிகளும் தங்களை நெருங்கிச் சூழ்ந்து வெண்கொற்றக் குடைகளைத் தாங்கியும் சாமரைகளையும் வீசியும் பல ஆயுதங்களைக் கரங்களில் தரித்தும் யுகமுடிவில் கர்ச்சிக்கும் சமுத்திரங்களைப்போலக் கோஷித்து வர, வீரபத்திரரும் பத்திரகாளியும் வெள்ளியங்கிரியைவிட்டுப் புறப்பட்டுச்சென்று கங்கைக் கரையில்தக்ஷன் யாகஞ்செய்துகொண்டிருந்த யாகசாலையை யடைந்து, பூதர்களையும் காளிகளையும் அவ் யாகசாலையைச்சுற்றிப் பத்திரமாய்க் காவலாயிருக்கும்படி கட்டளையிட்டுவிட்டு, சில பூதர்களுடனும் காளிகளுடனும் யாகசாலைக்குள் நுழைந்தனர்.

அங்ஙனம் நுழைந்த வீரபத்திரரையும் பத்திரகாளியையும் பார்த்துப் பிரமன் முதலிய தேவர்கள் சிங்கத்தின் வரவைக்கண்ட மான்களின் கூட்டத்தைப் போலவும் தம்மீது

பேரிடி விழப்பெற்ற பாம்பின் கூட்டத்தைப் போலவும் அஞ்சி நடுங்கி, நகை நீங்கிய முகத்தினராகி வாடியொடுங்கி, "ஈசனுமை யிருவருடைய கோபத்தினாலுதித்த இவர்களின் சீற்றம் மிகவும் பெரிதாதலின், நம்முயிர்க்கெல்லாம் இன்று நாசமுண்டாகுமென்பது நிச்சயம். முக்கணெந்தையை யிகழ்ந்தவர்கள் அழியாம லுய்வது எங்ஙனம்?" என்று பலவாறாகப் பேசி, பூதர்கள் யாகசாலையைச் சுற்றி நெருங்கிச் சூழ்ந்திருந்ததைக்கண்டு தப்பியோடுவதற்கும் வழியில்லையேயென ஏங்கி, நெருங்கிச் சூழ்ந்த அக்கினியின் நடுவே அகப்பட்டுக்கொண்ட யானைகளைப்போலத் தவித்தார்கள்.

வீரபத்திரர் பத்திரையுடன் தக்ஷனிருந்த விடத்தையணுகி அவன் யாகஞ் செய்வதைக் கண்டு கடுங்கோபத்துடன் தீப்பொறி பறக்க அவனை விழித்துப் பார்த்துக் கர்ச்சித்து வெற்றிக் கொம்பினை முழக்கினார். அதன் பேரொலியைக்கேட்டுத்தேவர்களும்முனிவர்களும்மிக்க அஞ்சி நடுங்கினர். தக்ஷன் தன்னெதிரே நிற்கும் வீரபத்திரரைக்கண்டு நடுங்கி மனந்தளர்ந்து,வெளிப்புறத்தில்பூதர்கள்சூழ்ந்துநின்றதையும், யாகசாலையிலுள்ள வானவர்கள் யாவரும் அயர்ச்சி யடைந்ததையும் கண்டு பெருந்துயருற்றுப் பிறகு தன்னைத் தானே சிறிது தேற்றிக்கொண்டு, மிகுந்த வலிமை வாய்ந்தவன் போல நடித்து, வீரபத்திரரை நோக்கி, "நீ யாவன்? நீ இங்கு வந்த காரணமென்ன?" என்று வினவினான். அதற்கு வீரபத்திரர், "தக்ஷனே! நான் சங்கரனுடைய புதல்வன்! நீ இயற்றும் யாகத்தில் அவருக்கு அளிக்க வேண்டிய அவிர்ப்பாகத்தை என்னிடம் தருவாயாக! அதைப் பெற்றுக்கொண்டு போவதற்காகவே அப்புங்கவனருளால் இங்கு வந்தேன்!" என மறுமொழி பகன்றார். அப்போது தக்ஷன், "உங்கள் நாயகனுக்கு இனி உலகம் வேள்வியிலுள்ள அவிர்ப்பாகத்தைக் கொடுக்காது!" என்று கூறினான். அம்மொழிகள் அவன் வாயிலிருந்து வந்தவுடன், அங்கிருந்த நான்கு வேதங்களும் தூய்மைமிக்க பிரணவமும் திடுக்கிட்டெழுந்து நின்று, "எல்லையில்லாத உயிர்த்தொகைகளெல்லாம் இறைவனாகிய சங்கரனல்லாது யாகத்துக்கு நாயகனாக விருக்குந் தகைமை வாய்ந்தான் வேறொரு தேவனுண்டோ? கிடையாதாதலால், அவருக்குரிய அவிர்ப்பாகத்தைக் காலதாமதஞ்செய்யாமற் கொடுப்பாயாக!" என்று தக்ஷனுக்கு நற்புத்தி யுரைத்தன. அதுகேட்டும் தக்ஷன் எமதிறைவனுக்கு அவிர்ப்பாக மளிக்காமல் வாளாவிருந்ததைக் கண்டு, அவைகள் அவ்விடம்விட் டகன்று தத்தம் இருப்பிடங்களுக்குச் சென்றன.

அவ்வாறு அவைகள் அவ்விடம் விட்டு அகன்றபின், வீரபத்திரர், "தக்ஷனே! வேதங்களும் பிரணவமும் கூறிய மெய்ப்பொருளைக் கேட்டனை. இனியேனும் எம்பெருமானுக்குரிய அவிர்ப்பாகத்தை யளிப்பாயாக!" என்று இன்னொருமுறை கருணையினால் தக்ஷனைக் கேட்டருளினார். அதற்குத் தக்ஷன், "சுடுகாட்டில் பேய்களுடன் ஆடல்செய்யும் பித்தனுக்கு நான் அவிர்ப்பாகம் அளிக்கமாட்டேன்" என்று கூறினான்.

அதுகேட்டு வீரபத்திரர் அருகே சூழ்ந்து அமர்ந்திருந்த பிரமன் முதலாயினோரை நோக்கி, "நீங்களும் இவன் சார்பிலிருக்கிறீர்கள் போலும்! இவன் நிமலராகிய எம்பெருமானுக்கு அவிர்ப்பாகம் அளிக்காமல் அவரை இகழ்வது உங்களுக்குச் சம்மதந்தானோ?" என்று கேட்டார். தீவினைப்பயனை அனுபவிக்குங்காலம் நெருங்கப்பெற்ற தேவர்கள் அவர் கூறிய மொழிகள் தங்கள் செவிகளிற் படாதது போல் சும்மாவிருந்தார்கள். அதுகண்டு வீரபத்திரர் கடுஞ்சினங்கொண்டு அழகிய வக்கிரதந்தங்கள் விளங்க நகைத்து, பெரிய கதையொன்றினால் தக்ஷனது மலைபோலகன்ற மார்பு பிளவுபடுமாறு அடித்தார். தக்ஷன் உளம் நடுங்கித் திருமாலின்முன் வீழ்ந்தான். பிறகு வீரபத்திரர் பிரமதேவரது தலையில் இடிவிழுந்தாற்போல் ஒருகையினாற் குட்டினார். பிரமதேவர் மூர்ச்சித்து வீரபத்திரர் பாதங்களில் வீழ்ந்தார். அதுகண்ட தேவர்கள் நடுங்கிப்பதைத்து ஓடி யொளிந்துகொள்ள முயன்றனர். வீரபத்திரரோ ஓடும் தேவர்களைப் பிடித்து மாய்த்தார்.

இதையெல்லாம் தக்ஷன் கண்டு மெய்யுணர்ச்சி திரும்பவும் பெறறு, முன்னாளில் தனது அரிய மெய்த்தவத்துக்குகந்து தனக்கு வரம் பல வளங்களளித்த சர்வேசுவரனான முக்கணெந்தையைத் தான் இகழ்ந்த பாவத்தினால் தனக்கேயன்றித் தேவர்களுக்கும் முனிவர்க

புறக்கடை மருந்து சுவைக்கு உதவாது.

ளுக்கும் மற்றும்பலருக்கும் கொடியநாசமுண்டாக நேர்ந்ததை யுன்னி, மிகவும் துயருற்று யாகசாலையைச் சூழ்ந்துள்ள பூதர்களைத் தாண்டி ஓடுவது அரிதெனவுணர்ந்து, ஒப்பற்ற திறலினையுடைய வீரபத்திரருக்கு எதிரே போய் வலிமை யுடையாரைப்போல நிற்பதே தகுதியெனத் தேர்ந்து, அவர்முன் போய் நின்றான். அதுகண்ட வீரபத்திரர், "தேவர்களுடன் கூடி நீ ஈசனை இகழ்ந்தாய்! அதற்கு இதுவே தண்டனை!" என்று கூறித் தமது வாளினால் அவன் சிரத்தைத் துணித்து, அவன் தலை கீழே விழுமுன் அதைப் பிடித்து அங்கு எரிந்துகொண்டிருந்த தீயிலிட்டார். கணப்பொழுதில் தக்ஷன் தலை நீறாயிற்று.

அதுகண்டு மனந்துடித்துப் பதைத்து தக்ஷன் மனைவியர்களான வேதவல்லி முதலாயினோரும் அவனது மகளிரும் தமது கூந்தலவிழ்ந்து தரையிற் புரள தமது செவ்விய கரங்களைத் துயர மிகுதியினால் உதறிக்கொண்டும் புலம்பிக்கொண்டும் அவ்விடத்தை யணுகினர். அப்போது பத்திரகாளி முன்சென்று வேதவல்லியின் காதுகளை யறுத்துப் பின்னர் ஏனையோரைக் கொன்றாள். பிறகு வீரபத்திரரும் பத்திரையுமாகச் சேர்ந்து ஏனைய தேவர்களையும் தேவமாதர்களையும் கொன்று அழித்தனர். பூதர்களும் யாகசாலைக்குள் நுழைந்து யாவரையும் அழித்தனர்.

அவ்வாறு யாவரும் அழிந்து யாகமும் அழிந்ததைக்கண்ட திருமால் தக்ஷனால் யாகநாயகனாக அமர்த்திப் பூசிக்கப்பெற்ற தாம் அவ் யாகத்தினைக் காப்பாற்றமுடியாமற் போனதை யுன்னி வெட்கமுற்றுப் பிறகு சிவபெருமானை யிகழ்ந்தவருக்கு அத்தகைய தண்டனையே சித்திக்குமென்ற உண்மையை மாயையின் வலிமையினால் அறியமாட்டாது மயங்கிக் கோபங்கொண்டு, வெற்றிவீரராக விளங்கிய வீரபத்திரருடன் போர்புரியக்கருதி கருடனை நினைத்தார். வீரபத்திரருக்கு அஞ்சிக் கருடன் அங்கு வாராமலிருக்கவே, திருமால் தமது கோபாக்கினியினால் ஒரு கருடனை யுண்டாக்கி, அக்கருடன்மீதேறி பஞ்சாயுதங்களைக் கரங்களிலேந்திக்கொண்டு யாகசாலையிலுள்ள பூதர்கள்மீது கோபத்துடன் சென்று வில்லைவளைத்து அவர்கள்மீது எண்ணிறந்த பாணங்களை விடுத்தார். பூதர்களுங் கூடி அம்புகளைக் கூட்டங் கூட்டமாகத் திருமாலின்மேல் விடுத்தனர்.

திருமால் தமது பூதப்படையுடன் போர்புரிவதைக்கண்டவீரபத்திரர்நகைத்து, அவருடன் தாமே போர்புரிய வேண்டுமென நினைத்தார். அவ்வாறு அவர் நினைத்த மாத்திரத்தில், ஆயிரங்குதிரைகளாக உருவங்கொண்ட வேதங்களினால் இழுக்கப்பெற்றதும், எண்ணிறந்த கொடிகளும் சிறந்த படைக்கலங்களும் தன்மீதிருக்கப்பெற்றதுமான புவியினு மகன்ற தேரொன்று எம்பெருமானருளினால் அங்கு வந்து தோன்றிற்று. அப்போது மயக்கந் தெளிந்தெழுந்த பிரமதேவர் வீரபத்திரருடைய தயவைப் பெறுவதற்கு இதுவே நல்ல தருணமெனத் துணிந்து, அவ்விரதத்திலேறிச் சாரதியா யமர்ந்து அத்தேரை வீரபத்திரர் முன் கொண்டுபோய் நிறுத்தி, "பகைவரை வெல்லும் வெந்திற லுடையோய்! நின் துணைவியுடன் இவ்விரதத்திலேறி என் சாரத்தியத் திறத்தினைக் காண்பாயாக!" என்று கூறி, வீரபத்திரரும் பத்திரையும் அத்தேரின்மீது ஏறிக்கொண்டதும் அத்தேரைச் செலுத்தித் திருமாலின் முன்னர் கொண்டுபோய் நிறுத்தினார். அப்போது வீரபத்திரர் திரிபுர தகனம் செய்யச் சென்ற புராரியைப்போலவே விளங்கினார்.

தம்முன் அத்தேர் வந்து நின்றவுடன், திருமால் வீரபத்திரரை நோக்கி, "கங்கையமர்ந்த சடாமுடியையுடைய சிவபெருமானை யிகழ்ந்த தக்ஷனைக் கொன்றதுடன் நிறுத்திக்கொள்ளாமல், அவனருகிலிருந்த குற்றமற்ற தேவரனைவரையும் அழித்ததன் காரணமென்ன?" என்று வினவினார். அதுகேட்ட வீரபத்திரர், "ஆதியந்தமில்லாத பரமேசுவரனை யிகழ்ந்த தக்ஷன் இயற்றிய யாகத்தில் அவிர்ப்பாகம் பெற்றுக்கொண்டவர்களுக்கெல்லாம் வேதத்திற் கூறப்பட்டுள்ள தண்டனையையே விதித்தேன். நின்னையும் தொலைக்கப்போகிறேன். நினக்கு வலிமையுண்டாகில் காத்துக்கொள்!" என்றார்.

அம்மொழிகளைக் கேட்டுத் திருமால் வில்லைவளைத்து நாணேற்றி அம்புகளை மாரிபோற் பெய்தார். வீரபத்திரரும் தமது வில்லைவளைத்து நாணேற்றி அம்புக்கூட்டங்களைச் சரமாரியாகப் பொழிந்தார். இருவரும் தங்களிடத்திலுள்ள

புற்றிலே ஈசல் புறப்பட்டாலும், மண்ணிலே கறையான் கூடினாலும் மழை வரவேவரும்.

அஸ்திர சஸ்திரங்க ளனைத்தினையும் உபயோகித்து நெடுநேரம் ஒருவரோடொருவர் கொடும்போர் புரிந்தனர். கடைசியில் திருமால் தமது சக்கரப்படையை வீரபத்திரர்மீது விடுத்தார். அவர் அதைப்பற்றித் தமது திருவாயிற் போட்டுக்கொண்டு விழுங்கினார். பிறகு திருமால் தமது கதையை எறிய, அவர் அதைத் தமது கரத்திலுள்ள தண்டத்தினால் தடுத்தார். அதுகண்டு கடுஞ்சினங்கொண்ட திருமால் தமது வாட்படையை யோங்கி வீரபத்திரரை வெட்டச்சென்றார். அப்போது வீரபத்திரக் கடவுள் கோபத்துடன் ஹுங்காரஞ் செய்தார். உடனே உலகினையுண்டு கடலின்மீது கண்டுயிலும் மாயவன் செயலற்றுக் கையும் வாளுமாகச் சித்திரம்போல் நின்றார். அவ்வாறு மாயவன் அச்சமுற்றுத் தளர்ந்தகாலத்தில், வீரபத்திரர் யாதுசாரணத்தினாலோ முனிவுற்றார். உடனே "மிக்க கோபத்தினை விட்டுவிடு!" என்ற கண்ணுதலின் சொல்லொன்று விசும்பில் கேட்டது. அச்சொல்லைக் கேட்டதும் வீரபத்திரர் தமது கோபத்தைத் தவிர்த்து நின்றார். அச்சமயத்தில் பிரமன் அவர் பாதங்களைப்பணிந்து, தாம் தக்ஷன் வேள்விக்குச் சென்று அவிர்ப்பாகம் பெற்றுக்கொண்ட குற்றத்தினை மன்னித்து விடும்படி வேண்டினார். வீரபத்திரர் கருணையினால், "அவ்வாறே யாகுக!" என மொழிந்தார்.

அப்போது திருமால் வீரபத்திரருடைய கருணை மிகுதியைக்கண்டு திடங்கொண்டு, அவரை நோக்கி, "என் வில்லையொடித்து, எனது சிறந்த ஆயுதங்கள் பலவற்றையு மழித்து, என் சக்கரத்தையும் விழுங்கி என்னை வென்று வாகைமாலை யணிந்த ஒப்பற்ற வெற்றிவீரனே! நின் தகைமை முழுவதையும் எடுத்துரைக்க வல்லார் எவருமிலர். ஈசனையிகழ்ந்த தக்ஷன் செய்தபூசனையை விரும்பி வேள்விக்குச்சென்ற என்னைத் தேவரீர் தண்டித்தது நீதியேயாகும். இனி என் குற்றத்தினைத் தேவரீர் பொறுத்தருள் புரிய வேண்டும்" என்று கூறினார். திருமால் கூறிய வசனங்களைக் கேட்டு வீரபத்திரர் கருணைபூண்டு அவரை யணுகினார். அச்சமயத்தில் சிவபெருமான் பூதர்கள் சூழ நந்திதேவர் வணங்க உமாதேவியாருடன் இடபவாகனத்தின்மீதுவந்து யாவருங்கண்டு உய்யுமாறு திவ்விய தரிசனமளித்தார்.

உடனே வீரபத்திரர் அச்சத்துடன் எம்பெருமானை யணுகிக் கைகுவித்துத் தொழுது நின்றார். திருமாலும் பிரமதேவரும் எம்பெருமானது பாதங்களை வணங்கி, நீங்கிய தாயைத் திரும்பவும் பெற்ற குழந்தையின் தன்மையராய் நின்றார்.

அப்போது உமாதேவி வேள்விச் சாலையில் தேவர்களும், தக்ஷனும், தேவமாதர்களும், முனிவர்களும் இறந்து கிடந்ததைக் கண்டு கோபம் நீங்கி அருள்கொண்டு எம்பெருமானை நோக்கி, "எந்தாய்! இவ்வேள்வியைச் செய்த தக்ஷனுக்கும் தேவர்களுக்கும் என்னால் நாசமுண்டாயிற்று என்று உலகத்தார் கூறுவார்கள். தேவரீருடைய மெய்ந்நிலையை யுணராமல் தவறுசெய்த இவர்களுக்குத்தகுந்த தண்டனை நமது வீரத் திருமகனால் கிடைத்துவிட்டது. முன்னர் இவர்களை யழிக்கவேண்டுமென நான் விரும்பிய வரத்தை யளித்ததுபோலவே, அவர்கள் குறைநீங்கி உயிர்பெற்றெழுமாறு இப்போது ஓர் வரம் தந்தருள வேண்டும்!" எனக் கூறினாள்.

எம்பெருமான், "உமையே! உன் கருணை வியக்கத்தக்கதே!" எனக் கூறி நகைத்து, வீரபத்திரரை நோக்கி, "புருஷன் என்னும் பெயரை வகிக்கத் தகைமையுடையோனே! இங்கு எம்மையிகழ்ந்து நின் கோபத்தினால் மாண்டு சிதைந்துபோன வலியற்றவர்களுக்கு நீ மீண்டும் உயிரை யளித்து அவர்கள் தமது பழைய உருவங்களைப் பெறும்படி செய்வாயாக!" எனக் கட்டளையிட்டார். உடனே வீரபத்திரர், "இறந்தவர்கள் யாவரும் முன்னாளிற் போலவே உயிர்பெற்றெழுவீராக!" எனக் கூற, யாவரும் துயிலினின்று எழுபவரைப் போல எழுந்துநின்று எம்பெருமானை வானத்திற் கண்டு தமது குற்றத்தை யுன்னி நடுங்கினர். அதுகண்ட எம்பெருமான் தம்மையன்றி அவர்களுக்கு வேறு கதியில்லாததை யெண்ணி, அஞ்சாதீர் என்று திருவாய் மலர்ந்தருளினார். அவரது கருணையைக்கண்டு யாவரும் மனங்கசிந்து அவரது பாதங்களில் வணங்கித் துதித்தனர்.

அப்போது வீரபத்திரருடைய கருணைமொழியினால் யாவரும் உயிர்த்தெழ தக்ஷன்மட்டும் எழாததைக் கண்டு பிரமன், எம்பெருமான் திருவடிகளை வணங்கி, "அறிவிலியான தக்ஷ

னுடைய அகங்காரத்தை யழித்து, அவன் நரகத்துக்குச் செல்லாமற் காப்பாற்றினீர்! எங்களைப்போலவே அவனும் உயிர்த்தெழுமாறு அருள் புரியவேண்டும்" என்று கூறினான்.

உமைபாகன் கருணை கூர்ந்து "அப்படியேயாகுக!" எனத் திருவாய்மலர்ந்தருள, வீரபத்திரர் பானுகம்பனை யழைத்து தலையில்லாத் தக்ஷனுடலத்தைக் கொணரும்படி கட்டளையிட்டார். அவ்வுடலம் கொண்டுவரப்பட்டவுடன், வீரபத்திரர் அவ் யாகத்திற் கொல்லப்பட்ட ஆடொன்றின் தலையைக் கொண்டுவரச் சொல்லி, அத்தலையை அவ்வுடலத்திற் பொருத்தி, "வேதங்கள் முதல்வனெனப் போற்றும் பரமேசுவரனை இகழ்பவரெல்லோரும் அடையும் கதி இதுவே!" எனக் கூறி, அத்தலையை நோக்கி, "தக்ஷனே! எழுக!" என்றார்.

உடனே தக்ஷன் உயிர்பெற்றெழுந்து, தன் முன் நின்ற வீரபத்திரரைக்கண்டு அச்சமுற்று தன் தகைமையிழந்து தான் பெற்ற அற்பத்தலை யின்னதென வுணர்ந்து வெட்கித் தலைகுனிந்து, அன்று நடந்தவற்றை யெல்லாம் நினைத்துத் துயர்க்கடலில் மூழ்கினான். அச்சமயத்தில் சிவபெருமானும் உலகமாதாவும் அங்கு விஜயஞ் செய்திருந்ததைக் கண்ணுற்று அவன் மிகவும் அச்சமுற்று, தேகம் நடுங்க நின்றான். அதுகண்ட எமது அண்ணல், "தக்ஷனே! இனி நீ அஞ்சாதே!" என்று கூறியருளினார்.

அப்போது தக்ஷன் எமதிறைவன் முன்னர் சென்று அவரடிகளில் வீழ்ந்து பணிந்தெழுந்து கரங்களைச் சிரமேற் குவித்துநின்று, "எனதிறைவனே! தீயனேன் செய்த தீவினைகள் மனத்தினாலும் அளப்பது அரிதாதலின், அவைகளைப்பற்றி நினைக்குந்தோறும் அவைகள் என் நெஞ்சத்தைச் சுடுகின்றன. தேவரீர் அத்தீவினைகளை யகற்றி எனக்குப் பேரருள் புரிந்ததனால் அடியேன் உய்ந்தேன். தேவரீர் செய்த பெருமாயையினால்தான் சிறியனேன் மதிமயங்கித் திருமாலைத் துணையாகக் கருதி நுமது திருவடிகளை யிகழ்ந்தேனாதலின் பாவியேன் பிழையைப் பொறுத்தருளவேண்டும்" என்று கூறி, எம்பிரானைத் துதித்தான்.

எம்பெருமான் அப்போது அங்கு கூடிநின்ற தேவர்களை நோக்கி, "தேவர்காள்! நீவிர் தக்ஷனது யாகத்தில் எம்மை யிகழ்ந்து துன்புற்றதெல்லாம் முந்தைவினையின் பயனேயாகும். நுமக்கு யாம் தண்டனை விதித்தது இவ்வுலக வழக்கத்துக்கேற்கச் செய்ததாகும். ஆதலால் அவைகளை நினைத்து வெட்கமுற்று வருந்தாதேயுங்கள்" என்று கூறியருளினார். தம்மை அன்புடன் நினையாதவர்மீதும் தமது கடைக்கணோக்கத்தைச் செலுத்தி யருள்புரியும் இயல்புடையவரான நிமலன் அவ்வாறு அருள்புரிந்ததும், தேவர்கள் யாவரும் எம்பெருமானையும் எம் அன்னையையும் வீரபத்திரக்கடவுளையும் அன்பொடு வணங்கித் துதித்தனர்.

பிறகு எம்பெருமான் வீரபத்திரரும் பத்திரகாளியும் தமதருகில் வரவும், நந்திதேவர் முன்னேசெல்லவும், பூதகணங்கள் எங்கும் பரவித் தம்மைச் சூழ்ந்துவரவும் உமாதேவியாருடன் சிறந்த இடபத்தின்மீது திருக்கைலாயத்துக்கு ஏகினார். திருக்கைலாயத்தை யடைந்து திருக்கோவிலிலுள்ள சபையி லெழுந்தருளிய பின், எந்தை வீரபத்திரருக்கும் பத்திரைக்கும் வானுலகத்தில் ஒரு சிறந்த பதவியை யளித்து, அங்குசென்று வசிக்கும்படி அனுக்கிரகித்தார். அவர்கள் திருக்கைலையை விட்டுத் தம்முலகுக்குச் சென்று சுகமாக வாழ்ந்துவந்தனர்.

எம்பெருமான் அவ் யாகசாலையை விட்டகன்றபின், பிரமதேவர் தாமும் திருமாலும் தாமே பரம்பொருளென இருவரும் மயங்கி ஒருவரோடொருவர் நெடுநாட் போர்புரிந்ததையும், பிறகு மகா சிவராத்திரியில் சிவபெருமான் அவர்களிருக்கு மிடையே செந்தழல் மலையேபோலத் தோன்றி அவர்களிருவரும் ஒருவர்மீ தொருவர் விடுத்த ஆயுதங்களனைத்தையும் தமக்குள் இழுத்துக்கொண்டு நின்றதையும், உடனே தாங்களிருவரும் கோபமொழிந்து, அச்சோதிமலையை யணுகாது தூரத்திலிருந்த வண்ணம் அதையே நோக்கி நின்றதையும், அச்சமயத்தில் 'முப்புரங்களை யெரித்த பரமன் காணுமாறு உங்களி லொருவர் அம்மலையின் அடியையும் மற்றொருவர் அதன் முடியையும் கண்டுபிடித்து உங்கள் வல்லமையைக் காட்டுங்கள்' என ஒரு அசரீரி வாக்கு வானத்திற் பிறந்ததையும், அதைக் கேட்டதும் தாமும் மாயவனும் அதன் அடியையும் முடியையும் கண்டறிவோமெனச்

சபதங் கூறிக்கொண்டு, மாயவன் பன்றியி னுருவத்தோடு அச்சோதியின் அடியைத் தேடவும், தாம் அன்னப்பறவையி னுருவத்துடன் அதன் முடியைத் தேடவும் புறப்பட்டுச் சென்று பன்னாள் முயன்று நொந்து வலியழிந்து அகந்தை யிழந்து மருள்நீங்கி அறிவு திரும்பப்பெற்று எம்பெருமானை முறைப்படி ஆராதித்ததையும், அப்போது அச்சோதி சுருங்கி ஓர் இலிங்க சொரூபமான திருவருணாசல மலையாகித் தங்களுக்குத் திவ்விய தரிசனம் அளித்தருளியதையும் தமது மகனான தக்ஷனுக்கு வித்தாரமாக எடுத்துரைத்து, சிவபெருமானே தாயும் தந்தையும் குருவும் கடவுளும் தவமும் செல்வமும் யாவுமாதலால் அவரை அன்புடன் வணங்கி நற்கதி யடையும்படி சொல்லி நற்புத்தி கூறினார்.

அகந்தை யிழந்து அறிவடைந்த தக்ஷன் அம்மொழிகள் மெய்யென வுணர்ந்து, காசிக்குச் சென்று அங்கு சிவபெருமானுக்கு ஒரு திருக்கோயில் சமைப்பித்து, அதில் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து ஆயிர வருஷ காலம் சிவாகமங்களிற் கூறியுள்ள விதிப்படி பூசனைசெய்து, அவனது பூசனைக்குகந்து எம்பெருமான் தோன்றவும் அவரது பாதங்களில் வீழ்ந்து அவரடிமலர்களிற் பொருந்தத்தக்க அன்பினைத் தந்தருளும்படி வேண்டி, எம்பெருமானது கருணையினால் அவரது கணநாதனாகவிருக்கும் பெருந்தகைமையைப் பெற்றுய்ந்தான்.

(217-ம் பக்கத் தொடர்ச்சி.)

அடியேன்மீதும் இரக்கம்வைத்து, அடியேனுய்யும் பொருட்டு,] அடர்ந்தோங்கி வளர்ந்துள்ள பல சமயக்காடுகளில்வசித்துக்கொண்டு ஒருவரோடொருவர் மாறுபட்டுத் தங்கள் தங்கள் சமயமே உண்மையான சமயமெனத் தந்திரமாக வாதிப்பவர்கள் பெறமுடியாததும், நின்னை வழிபட்டவர்களல்லாது மற்றெவரும் கண்டறியாததும், ஒப்புயர்வற்றதும், நின் பாதாரவிந்தங்களில் அடியேனைச் சேர்க்கக்கூடியதுமான முத்திநெறி இதுவென அடியேனுக்கு உபதேசித்து, வண்டுகள் மொய்த்துப் பாடி உலவப்பெற்ற நறுமணம்வீசும் கடப்ப மலர்களாலாய மாலையையும் பைம்பொன்னாற் செய்த சதங்கைகளையும் அணிந்துள்ள நின் பாதத் தாமரைக ளிரண்டையும் அடியேனுக்கு அளித்த நின் பெருங் கருணையை ஒருநாளும் விழிப்பு வேளையிலும் கனவிலும் மறக்கவே மாட்டேன்.

தேரையர்-இரணவைத்திய நிபுணர்

TERAYAR—MASTER OF SURGERY

தொல்காப்பியர் யாங்ஙனம் குடமுனியாகிய அகத்தியரிடம் இலக்கணம் பயின்ற மாணவர்களில் முதல்வரோ, அங்ஙனமே அவருடைய வைத்திய சாஸ்திரத்தில் நிபுணர் தேரையர். சாரீரம் நிதானம் சிகிச்சை முதலியன யாவும் கற்றவர். பதார்த்தகுண விசேஷங்களையெல்லாம் விளக்கிப் பதார்த்த குண விளக்கம் செய்தவர். நீர்க்குறி நெய்க்குறி மருத்து பாரதம் யமக வெண்பா முதலிய பதினொன்கு நூல்கள் இவராற் செய்யப்பட்டன. இவர் செய்த வைத்திய நூல்கள், சிறந்த செந்தமிழ் நடையில் யமகம் மடக்கு திரிபு முதலிய வாய்ந்துள்ளன. இவருடைய பிறப்பு, வாழ்நாள், முடிவு இவைகளை விசாரிக்குமளவில் யாதொன்றும் புலப்படாவிடினும் அவர் வைத்தியரத்ன சிகாமணியென்று சொல்லுவதற்கு யாதொரு சந்தேகமும் இல்லை. பூர்வத்தில் இருந்த தேரர் என்கிற இவருடைய திருநாமம் தேரையர் என்று வழங்குவதற்கு வரலாறு ஒன்றுண்டு.

நோயின் கொடுமையினால் பெரிதும் துன்பமுற்ற ஒருவர் வலிபொறுக்கமாட்டாமல் அகத்தியமாமுனிவரைச்சரண்புக, அவர் அந்நோயாளியைத் தமக்கு அருகிலேயே வைத்துக்கொண்டு அவ்வியாதிக்குத் தம்மாலியன்றமட்டும் சிகிச்சைசெய்தும், அவர் முயற்சி பயனற்றதாய் விட்டது. இச்செய்தியானது அவர் மாணவராகிய தேரருக்குத் தெரிய, அவர் அந்நோயாளியைத் தமது பார்வையில் வைத்துக்கொண்டு தம்மாலியன்ற பிரயத்தனங்கள் யாவும் செய்தும் அவரைக் கொடிய பிணியினின்றும் நிவர்த்திக்கமுடியாமல் போய்விட்டது. வியாதிஸ்தரோ பிணியினால் அதிக வருத்தமுற்றார். தேரையர் யாது செய்வது என்றறியாமல் திகைத்து நெடுநேரம் யோசித்து நிற்கையில், அவர் நற்காலத்திற்கியையத் திடீரென்று மின்னல்போற் சரேலென்று ஓர் யுக்தி அவர் மனத்தில் உதித்தது. பிணியாளியின் மண்டையைத் திறந்து பார்க்கவேண்டும் என்ற எண்ணம் மனத்தில் தோன்ற, உடனே அவர் நோயாளிக்கு மருந்து கொடுத்து மயக்கமுண்டாக்கி முறைப்படி மண்டையைத் திறந்து பார்த்தார். அப்போது அவர் அதிசயிக்கும்

பூச்சி மரிக்கிறதில்லை, புழுவும் சாகிறதில்லை.

படி தேரை (விஷமுள்ள ஒரு தவளை) ஒன்று அந்நோயாளியின் மண்டைக்குள் காணப்பட்டது. அத்தேரை நோயாளியின் மண்டைக்குள் மண்டையைக் கௌவிக்கொண்டும் குத்திக்கொண்டும் இடைவிடாமல் வலியைக் கொடுத்துக்கொண் டிருந்தது. அதனால் மூளையில் கலவரத்தையும் உண்டுபண்ணிக்கொண் டிருந்தது. அதை எடுக்க அவர் ஓர் உபாயம் செய்தார். அஜ்ஜெந்துவின் எதிரில் நீருள்ள ஒரு பாத்திரத்தை வைக்கவே, அது திடீரென்று அதில் குதித்து விழுந்துவிட்டது. அதை எடுத்துவிட்டு மண்டையை முன்போல மூடி ஆற்றிவிடவே, அந்நோயாளி சகல உபாதைகளும் நிவர்த்தியாய்ச் சுகமடைந்தான். இதனாலேயே இவர் தேரையர் என்கிற நாமம் படைத்தார். இம்மாதிரி ஆச்சரியத்தைத் தரத்தக்க வைத்தியம் கணக்கற்றவை இவரால் செய்யப்பட்டதை இவ்விடத்தில் வரைவது சாத்தியமில்லை.

தேரையரால் இயற்றப்பட்ட அநேக வைத்திய நூல்களில், சிகாமணி வெண்பா, நாடிக்கொத்து, நோயணுகாவிதி, நோயின்சாரம், கரிசல் ஆகிய இவைகளே அழியாதவைகளும் சிறந்தவைகளுமாம். இவருரைத்துள்ள சுகாதாரவழிகள் மிகவும் நன்மை பயக்கத்தக்கவை. அவைகளைக்குறித்தும் அவர் அநேக நூல்கள் இயற்றியிருக்கிறார். அவைகளில், ஒரு தினத்துக்கு இரண்டுவேளை போஜனம் போதுமென்றும், பகலில் தூங்கக்கூடாதென்றும், அடிக்கடி நீரருந்தல் கூடாதென்றும், வாழைப்பழம் புசிக்கக்கூடாதென்றும், நல்ல போஜனத்துக்குப் பிறகு அதிகதூரம் நடக்கக்கூடாதென்றும் அபிப்பிராயப்படுகிறார். இவர் செய்த நூல்களில் பதார்த்தகுண சிந்தாமணியானது மிகவும் சிறந்ததும் மேன்மை யுடையதுமானது. அது 1,800 பாடல்கள் அடங்கியுள்ளது. அவர் வைத்தியத்தில் மாத்திரம் தேர்ந்தவரன்று; இரசவாதவித்தையிலும் சிறந்தவர்.

யுகிமுனியானவர் தாமியற்றிய வைத்திய சிந்தாமணி என்னும் கிரந்தத்தில், தாம் தேரையரால் அடைந்த அனுபவத்தையும் ஞானத்தையும் சக்தியையும்பற்றி விபரமாய் எழுதியுள்ளார். இரணவைத்தியம் இந்தியாவிலும் பூர்வத்தில் உயர்வுபெற்றிருந்தது என்பதை இவர் சரித்திரம் நன்றாய் விளக்குகிறது.

ப்ரும்மாண்ட அமைப்பும் காலசக்கரமும்

THE STRUCTURE OF THE UNIVERSE —COSMIC CYCLES

I

வானசாஸ்திர ஆராய்ச்சியால் நமக்குக் கிடைக்கும் பிரயோசனங்கள் பல. அவற்றுள் முக்கியமானவை, கோடானுகோடியாய் வானமுழுதும் அள்ளித் தெளித்திருக்கும் தாராகணங்கள் எவ்வித சுபாவமுள்ளவை யென்றும், எம்மாதிரி கட்டுப்பாட்டுடன் சஞ்சரித்துக்கொண் டிருக்கின்றன வென்றும் ஆராய்ந்து அறிவதனாலுண்டாகும் மனக்கிளர்ச்சியே. இவ்விஷயம் இப் பூவுலகின்கண்ணுள்ள வஸ்து விசாரத்தைப்போல அவ்வளவு சுலபமானதல்லவென்று சொல்லுவது மிகையாகும்.

நக்ஷத்திர ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட விஷயங்கள் ஒவ்வொன்றிலும் நிச்சயம் ஏற்படுவது சிரமம். ஆயினும், மேல்நாடுகளைச் சேர்ந்த பற்பல வானசாஸ்திரிகளின் புத்தி கூர்மையினாலும், விடாமுயற்சியினாலும், ஆராய்ச்சி சாதனங்களின் சிறப்பினாலும் நமக்குக்கிடைத்திருக்கும் விஷய லாபத்தால் நக்ஷத்திரங்களைப்பற்றிச் சில கோட்பாடுகளைத் தைரியமாய் நம்ப இடமுண்டா யிருக்கிறது. இவ்வித அனுமானங்களுக்கு சாதனமாயிருப்பது நக்ஷத்திரகோடிகளி லிருந்து நம்மிடம் வந்து சேரும் அவற்றின் ஒளியேயாகும்.

நமக்கும் நக்ஷத்திரங்களுக்கு மிருக்கும் தூரம் வாயினால் சொல்லிப்பார்க்கலாம், எழுத்தினால் எழுதிப் படிக்கலாம். ஆனால் அது மனத்தினால தியானிக்கக்கூடாதபடி அவ்வளவு பெரிது. ஒளியின் அலைகள் ஒருசெகண்டில் (கைந்நொடிப் பொழுதில்) 1,80,000 மைல் தூரம் செல்வதாகச் சொல்லுகிறார்கள். சூரியனுக்கும் நமக்கும் உள்ள தூரம் ஏறக்குறைய $9\frac{1}{4}$ கோடி மைல். ஆகவே, சூரியனிடமிருந்து இந்த க்ஷணத்தில் கிரணம் ஒன்று கிளம்பினால், அது நம்மிடம் வந்துசேர 8 நிமிஷம் 21 செகண்டு ஆகிறதாம். இதே கணக்குப்படி நமக்கு வெகு சமீபத்திலிருப்பதாகச் சொல்லப்படும் α Centauris என்னும் நக்ஷத்திரத்திலிருந்து வரும் வெளிச்சம் நம்மிடம் வந்துசேர சுமார் மூன்றரை வருஷங்கள்

பூட்டிப் புசிக்காமற் புதைப்பார், ஈயைப்போல் ஈட்டி இழப்பார்.

ஆகின்றனவாம். நமக்கு அதிகப் பரிச்சயமுள்ள வடத்துருவ நக்ஷத்திரத்திலிருந்து நமக்கு ஒளிவர சுமார் 40 வருஷங்களாகின்றன. இந் நக்ஷத்திரம் திடீரென்று அணைந்து போனால், அந்த சமாசாரம் நமக்கெட்ட இன்னும் 40 வருஷங்கள் பிடிக்கும். தாராகணங்களில் பெரும்பாலன இன்னும் அதிகமான தூரங்களி லிருக்கின்றன.

இதனால் நாம் அறியவேண்டிய விஷயம்.— ஒரு நக்ஷத்திரத்தைப்பற்றி நாம் ஒரு சமயத்தில் ஆராய்வது அதன் அக்கால நிலைமையைப் பற்றியல்ல; அதன் தூரத்தை யனுசரித்து, வருஷக்கணக்காக வழியில் தாமதித்துவரும் அதன் ஒளி கொண்டுவரும் சரித்திரம், அத்தனை வருஷகாலத்துக்கு முன் அந்நக்ஷத்திரம் எவ்வாறிருந்த தென்பதைப் பற்றியதே.

ஆகையால் ஒரே க்ஷணத்தில் எல்லா நக்ஷத்திரங்களும் எந்த ஸ்திதியி லிருந்தன வென்று சொல்வது அசாத்தியம்.

மேற்சொன்ன நக்ஷத்திர ஆராய்ச்சியில் அமர்ந்திருப்பவர்களின் ஸ்திதியென்ன? அவர்களாவது ஸ்திரமான ஸ்தானங்களி லிருந்து நிதானிக்கிறார்களா? இல்லை. பூமி நாளுக்கொருமுறை தன்னைச்சுற்றிச் சுழல்கிறது. இப்படிச் சுழன்றுகொண்டே அது வருஷத்துக்கொருதரம் சூரியனைச் சுற்றுகிறது. அந்தச் சூரியனும் தன்னைச் சுற்றிவரும் கிரகங்களுடன், கிருத்திகை தாராகணத்தை மத்தியமாய்க்கொண்டு ஹாகுலேச மண்டலத்தை நோக்கி யோடி செல்வதாக ஊகிக்கப்படுகிறது. இம்மாதிரி பல சூரியர்கள் சுற்ற, அக்கிருத்திகா மண்டலம் வேறெந்தத் தாராகணத்தைச் சுற்றி யோடுகிறதோ? ஆகவே, மேற்சொன்ன சாஸ்திர வித்துவான்கள் சுத்த வெளியில் பல ஓட்டங்களின் கலப்பினால் தூக்கிக் கொண்டு போகப் படுகிறார்கள். இப்படிச் சவாரிசெய்து கொண்டே தூரதிருஷ்டிக் கண்ணாடி, ஒளியாராய்ச்சிக் கருவி முதலிய யந்திர சாதனங்களைக்கொண்டு, நக்ஷத்திரங்களின் சேஷ்டைகளையும், சுபாவங்களையும், அவைகளினின்று வருஷக்கணக்காயும், நூற்றாண்டுக் கணக்காயும் தங்களை நோக்கி யோடிவரும் ஒளியைப் பரீக்ஷித்து அறிய முயலுகிறார்கள்!

நாம் வேகமாய்ச் சென்றுகொண்டிருக்கும் ரயில் வண்டியின் ஜன்னல்கள் வழியாக இரு பக்கங்களி லிருக்கும் மரம், செடி, மலைகள் அவ்வண்டியி னோட்டத்திற்கு நேரெதிராக ஓடுவதாகக் காண்கிறோமல்லவா? அப்படியே பூமி தன்னைச்சுற்றிச் சுழலும் கதி, அது சூரியனைச் சுற்றிவரும் வருஷ ஓட்டம், சூரியமண்டலம் கிருத்திகை கணத்தைச்சுற்றி யோடும் வேகம் இவை யெல்லாவற்றின் கலப்பினால், இப்பூமியி லிருந்து நாம் பார்க்கும் நக்ஷத்திரங்கள், நேரெதிராய் நகர்ந்துகொண் டிருப்பதுபோல் காணப்படுகின்றனவென்று நிச்சயிக்கவேண்டியிருக்கிறது.

பற்பல நூற்றாண்டுகளாக, நக்ஷத்திர சலனங்களைப் பரிசோதித்ததனால் நமக்குக் கிடைத்திருக்கும் ஆதாரங்களை நாம் பரீக்ஷிக்குமிடத்தில், ஒவ்வொரு நக்ஷத்திரமும் அதன் தூரத்துக்கும் பரிமாணத்துக்கும் தக்கவாறு ஸ்தானம் மாறியிருப்பதாகத் தெரியவருகிறது. இந்த இடம் மாறுதல் முழுதும் நாம் மேற்கூறிய காரணங்களினால் அவைகளினுடையதே என்று சொல்லக்கூடியதல்ல. ஆராய்ச்சி செய்பவனுடைய ஸ்தான பேதத்தினாலுண்டாகும் பாகத்தைத் தள்ளிப்பார்க்க ஒவ்வொரு நக்ஷத்திரமும் தானாகவே கொஞ்சம் நகர்ந்திருப்பதாகத் தெரிகிறது.

இப்படி எல்லா நக்ஷத்திரங்களின் சுய ஓட்டங்களை (Proper Motions) ஒப்பிட்டுப் பரிசோதிக்குமிடத்து கோடானுகோடி தாராகணங்கள் பெரும்பான்மையும் இரு கக்ஷிகளாகப் பிரிந்து ஒன்றையொன்று நோக்கி, மகாப் பிரயாணங்கள் செய்வதாக ஏற்படுகிறது.

இவ்விதம் ஒன்றையொன்று நோக்கிவரும் இருநக்ஷத்திரப் பிரவாகங்களிலடங்கிய (Star Streams) தாரகங்கள் ஒன்றையொன்று நெருங்கிவர நேரிட்டால், பரஸ்பர ஆகர்ஷண சக்தியினால்இழுக்கப்பட்டுமோதிக்கொள்ளும். இதனால் நூதன நக்ஷத்திரங்கள் காசரூபமாய் (Nebula) ஜனித்து, வரவர இறுகி தன்னைத்தானே நமது பூமி சுழல்வதுபோல சுழல ஆரம்பித்து, கிரகக் கூட்டங்களைப் பெற்று, சூரியமண்டலத்தைப்போல் காலத்தைக் கழிக்கின்றன. இதைப்பற்றிப் பின்னர் விஸ்தாரமாய் எழுதுவோம்.

பூதலம் யாவும் போற்று முச்சுடர்.

வயது முதிர்ந்தவர்களுக்குப் பாடசாலைகள்

CONTINUATION SCHOOLS FOR ADULTS

தற்காலத்தில் பொதுநன்மைக்காக உழைப்பவர்கள் பலரும் இராஜாங்கத்தாரும், சிறுவர் சிறுமிகளுக்குப் பிரதம வித்தியாப்பியாசம் செய்துவைக்க வேண்டுவது அத்தியாவசியமெனக் கருதி அதற்காக மிகவும் உழைத்து வருவது யாவரும் அறிந்த விஷயம். அவர்களுடைய அச்சிறந்த நோக்கத்துக்குக் காரணமென்னவெனில், நமது நாட்டிலுள்ள குடிகள் யாவரும் நமது நாட்டு விஷயங்களைக் குறித்து நன்றாய் ஆலோசித்து தங்கள் ஊக சக்தியின் தொகையினால் சிறந்த தீர்மானங்களைச் செய்தாலல்லது குடிகளுக்கு மிகுந்த நன்மையைத் தரத்தக்க மார்க்கத்தில் நாட்டுக் காரியங்கள் நடைபெறாவென்று அவர்கள் நன்றாய் அறிந்ததே யாகும். அவர்களுடைய அந்த நோக்கம் நாட்டுக்கு மிகுந்த நன்மையைத் தரத்தக்கதேயெனினும், நாட்டிலுள்ளோர் கல்வியைக் குறித்து மற்றுமொரு ஏற்பாட்டைச் செய்யாதொழிந்தால், அவர்களுடைய முயற்சி அவர்கள் கோரிய பலன் அவ்வளவையும் கொடுக்காமற்போக இடமிருக்கிறது. அவ்வேற்பாடு யாதெனில், பிரதம வித்தியாப்பியாசம் செய் வதுடன் கல்விப் பயிற்சியை முடித்துத் தொழிலிற் பிரவேசித்து வயது முதிர்ந்தவர் களுக்குக் கல்வி புகட்டுவதற்குரிய ஏற்பாடு தான்.

பொருளையும், வன்மையையும், காலத்தையும் மிக்கச் செலவழித்துப் பெற்றபிரதமக் கல்வியானது ஒருவன் பள்ளிக்கூடத்துக்குச் செல்லுங்காலம் கழிந்து தொழிலிற் பிரவேசித்தபின் அபிவிருத்தி செய்யப்படாமற் போவதனால், அக்கல்வியும் சீக்கிரம் அழிந்துபோய் அளவற்ற தீங்கை விளைவிக்கிறது. நமதுதேசத்தில்பள்ளிக்கூடங்களில் கல்விப்பயிற்சியடைபவர்களில் நூற்றுக்கு முப்பத்தொம்பதுபேர்கள் தாங்கள் பெற்ற கல்வியைப் பள்ளிக்கூடத்தை விட்டு ஐந்து வருஷ காலத்தில் இழந்துவிடுகிறார்களென்று கூறப்பட்டிருக்கிறது. இதன் உண்மையை விசாரிப்போம்.

மெட்ரிகுலேஷன் அல்லது ஸ்கூல் பைனல் பரீக்ஷையில் தேறியபின்,ஒரு பையன் ஏதோவொரு வேலைக்கமர்ந்து, இளம்பருவத்திலேயே தானடைந்த பெருங் குடும்பபாரத்தைச் சுமந்து துன்புற்றுத் தியங்குகிறான். அச்சமயத்தில் அவன் தான் பெற்ற கல்வியை மேன்மேலும் அபிவிருத்தி செய்துகொள்ள வழியொன்று மில்லாமற் போகிறது.

பிரதமக் கல்வி பயின்ற ஒருவன் பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டு, வயிற்றை வளர்ப்பதற்காகச் சிறு வயதிலேயே ஏதோவொரு தொழிலிற் புகுந்து வேலைசெய்கிறான். தற்காலத்தில் நமது நாட்டில் நாளுக்குநாள் அதிகரித்து வரும் அச்சாபீஸ், நெசவு தொழிற் சாலை, பென்சில் தொழிற்சாலை, காகிதத் தொழிற்சாலை முதலியவைகளில் இயந்திரங்களே எல்லா வேலைகளையும் செய்துவருவதனாலேயும், அத்தொழிற்சாலைகளில் தலைவனாகவிருந்து நடத்துவோனைத் தவிர வேறெவரும் தங்கள் ஊகசக்தியை வேலையிற் செலுத்த அவசியமும் இடமு மில்லாமற் போகிறது. அத்தொழிற்சாலைகளி லுள்ளவர்களுக்குக் கொடுக்கப்படும் வேலையானது அவர்களுடைய புத்தியை உபயோகிப்பதற்கு ஒருபோதும் அவசிய முண்டாக்குகிறதில்லை. ஒரு பண்டத்தைச் செய்யும் வழி முழுவதையுங்கூட தொழிலாளிகள் எவரும் அறிவதில்லை. ஊசி செய்யும் தொழிற்சாலைகளில் வேலையாகவுள்ள சிலர் தங்கள் வாழ்நாள் முழுவதையும் ஊசிகளின் நுனியைக் கூராக்குவதிலேயே கழித்துவிடுகிறார்கள். இவ்வாறு நாம் கூறுவதனால், இயந்திரங்களை வைத்துப் பண்டங்கள் செய்வதையாவது ஒரு தொழிலுக்குரிய பல வேலைகளைப் பிரித்து அந்தந்த வேலையைத் திறத்துடன் செய்யும் வேலைக்காரர்களுக்குக் கொடுப்பதை யாவது நாம் கண்டிப்பதாக எண்ணக்கூடாது. இயந்திரங்களை உபயோகிப்பதானது மனிதர்கள் மெய்வருந்தக் கடினமான வேலைகளைச் செய்வதைப் பெரும்பான்மையும் குறைத்து, விடுகிறதே யெனினும், அது மனிதர்களையும் இயந்திரங்களின் பகுதிகளாகச் செய்யுமட்டில் அவர்களது பெருமையைக் குறைத்து அவர்கள் புத்தி விசாலமடைவதற்குச் சிறிதும் இடமில்லாமற் செய்துவிடுகிறது. இயந்திரங்களை உபயோகிக்கும் தொழிற்சாலைகளில் வேலைசெய்பவர்கள் தொழில் செய்யும்போது வேலைகளில் தங்கள் புத்தியை ஒரு சிறிதும்

பூமி அதிர நடவாத புண்ணியவான்.

உபயோகிக்காம லிருப்பதனால், புத்தியை உபயோகிக்கவேண்டிய வேலைகளை வெறுக்க ஆரம்பிக்கிறார்கள். இப்படிப்பட்ட சுபாவமுடையவராய் அநேகர் இருப்பார்களாகில், அதனால் ஜன சமூகத்துக்கு எவ்வளவு தீங்கு விளையும் என்பது சிறிது யோசிப்பவர்களுக்கும் எளிதில் விளங்கும். புத்தியை உபயோகித்தறியாதவர்கள் கையில், இராஜாங்க சம்பந்தமான விஷயங்களை ஒப்புவித்தால், நாட்டுக்குக் கேடு விளையுமென்பதும் யாவர்க்கும் எளிதில் விளங்கும்.

ஆகையினால் நாட்டிலுள்ளவர்களால் நாட்டுக்கு நன்மையே உண்டாகவேண்டுமானால், பாலசர்களுக்குப் பிரதமக் கல்வியை அளிப்பதுடன் நாம் திருப்தியடையாமல், அக்கல்வியைப் பயின்றவுடன் பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டு புத்தி விசாலமடைவதற்கு வழியில்லாத தொழில்களிற் பிரவேசிப்பவர்களுடைய அறிவு நாளுக்குநாள் அபிவிருத்தி யடைவதற்குரிய ஏற்பாடுகளை நாம் தேடிச் செய்யவேண்டுவது அவசியமாகிறது.

நவீன நாகரிகத்திற் சிறந்த நாடுகளிலெல்லாம் அதற்குரிய ஏற்பாடுகள் பல செய்யப்பட்டிருக்கின்றன. இராக்காலங்களில் பள்ளிக்கூடங்கள் வைத்து நடத்தியும் விடுமுறை நாட்களில் அநேக விஷயங்களைப்பற்றிப் பிரசங்கங்கள் செய்வித்தும், சினிமா பயாஸ்கோப் இவைகளின் உதவியினால் பல அரிய விஷயங்களைக் கண்ணுக்கு நேராகக் காட்டி ஒப்பற்ற போதகம் புகட்டுவித்தும் அந்நாடுகள் தங்கள் எளிய குடிகளுக்கு ஆயுள் முழுவதும் கல்வி அபிவிருத்திசெய்து அவர்களை உபயோகமுள்ள குடிகளாக்குகின்றன.

மேல் படிப்பு படித்தவர்களும் பி. ஏ., எம். ஏ., பி. எல்., முதலிய பட்டங்களைப் பெறுவதையே கல்வி கற்பதன் நோக்கமாகக் கருதாமல், அப்பட்டங்களைப் பெற்றுக் கல்லூரிகளை விட்டுத் தொழில்களைக் கைக்கொண்ட பின்புதான், தமது கல்வி அபிவிருத்திகாலம் தொடங்குகிறது என்பதை நன்றாய் அறிந்துகொள்ளவேண்டும். பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் படிக்குங் காலங்களில் இஷ்டமில்லாமல் ஆழ்ந்து பாராமல் கற்றுக்கொண்ட பல விஷயங்களின் பிரயோசனம் வயது முதிர்ந்து தொழில்களிற் பிரவேசித்துத் தமது கல்வியைப் பிரயோகிக்க வேண்டிய காலத்தில்தான் மனிதர்களுக்கு விளங்க ஆரம்பிக்கிறது. இளம் பருவத்தில் புத்தகத்தில் படிக்கும்போது விளங்காத பல அரிய விஷயங்கள் வயது முதிர்ந்து தொழில் செய்து ஜனசமூகத்தில் பழகும்போதுதான் விளங்கத் தொடங்குகின்றன. அப்போது மனிதர் தமக்கு ஏற்படும் சந்தேகங்களை நிவர்த்தித்துக்கொள்ளப் போதுமான அறிவு இல்லாதவர்களாயிருப்பாராயின், அவர் படக்கூடிய பாட்டிற்கு அளவேயிராது. பிரதமக்கல்விப் பயிற்சியுடன் நிறுத்திக்கொண்டவர் கதி அச்சந்தர்ப்பங்களில் அதோகதிதான்.

ஆகையினால் பிரதமக்கல்விப் பயிற்சி விஷயத்தில் எல்லையற்ற முயற்சி செய்து பொருளை ஏராளமாய்ச் செலவுசெய்யும் நமது இராஜாங்கத்தாரும் பொதுஜன நன்மைக்கு உழைக்கும் பெரியோர்களும் நாட்டுக் கல்வியின் இந்த அமிசத்தை பிரதமக் கல்வியைவிட மிகவும் முக்கியமானதாகக் கருதி, இந்த அமிசமும் அபிவிருத்தி யடையச்செய்து, வயது முதிர்ந்தோரை அறிவிலும் முதிர்ந்தோராக்குமாறு நமது நாட்டின் தற்கால நிலைமைக்கும் பழக்க வழக்கங்களுக்கும் தக்க ஏற்பாடுகளைச் செய்வார்களென பரிபூரணமாய் நம்புகிறோம். அஞ்ஞானமே சகலவிதமான பாபச் செயல்களுக்கும் காரணமாதலால், அறிவைப் புகட்டுவதில் ஏராளமான பொருளைச் செலவழிப்பது கடைசியில் பலவழிகளில் நமக்கு நன்மையைப் பயக்குமென்று சொல்வது மிகையாகும்.

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்
கண்ணென்ப வாழு முயிர்க்கு" [குறள்

என்ற நீதிவாக்கியத்தின்படி மானிடருக்கு எண்ணுமெழுத்துமே கண்களாகக் கருதப்படுவதாலும்,

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு"

என்ற நீதிவாக்கியத்தின்படி, ஒருவருடைய அறிவு அவர் கற்ற கல்வியின் அளவேயாகுமாதலால், நமது நாட்டிலுள்ள பெரியோர்கள் வயது முதிர்ந்தவர்களுக்குக் கல்வி புகட்டுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதில் பெருமுயற்சி செய்யச் சித்தம் வைக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

பாடலீபுத்ர நகரம்

THE CITY OF PATNA

பாடலீபுத்ர மென்னும் சிறந்த நகரம் நமது நாட்டு நகரங்களி லெல்லாம் மிக்கப் பிரசித்திபெற்றதும், அநேக ராஜவம்சங்களுக் கிருப்பிடமாயுமிருந்தது; அந்நகரத்தின் சரித்திரத்தை அறியவேண்டுமாயின், 2000 வருடங்களுக்குமுன் அஜாதசத்ரு என்ற அரசன் ஆண்ட நாளில் அப்பட்டணமிருந்த ஸ்திதியைப்பற்றியும், பிறகு ஆயிரக்கணக்கான வருடங்களில் நாளதுவரை அதற்குநேர்ந்த மாறுதல்கள், அதில் அரசுபுரிந்த ராஜவம்சங்கள் முதலியவைகளைப் பற்றியும் விசாரிப்ப தவசியம். இப்போது காணும் பாடலீபுத்ர நகரம் ஆதியில் காணப்பட்ட ஸ்திதியினின்றும் முற்றிலும் வேறுபட்டதாகும். பாடலீபுத்ர மென்பதற்குப் பொருள் பாடலீயென்ற ஒருமடல் ரோஜாவின் (என்றும் குன்றாத) மகன் என்பதேயாம். மற்றத் தேசங்கள் தங்களுக்குள்ள சுந்தரமான ரோஜா புஷ்பங்களைநினைத்துப் பெருமை பாராட்டுமாயின், நாம் நமக்கென்றமைந்த மனோகரமான ஸீமந்தி அல்லது பாடலீ புஷ்பத்தால் திருப்தியடைவோம். அக்பர் சக்கரவர்த்தி பிறந்தபோது உமாயூன் கஸ்தூரி தானம் செய்தானென்று கேள்விப்படுகிறோம். அதற்குக்காரணம் யாதென்று விசாரிப்போமாயின், பிறந்த அக்பரின் கீர்த்தி கஸ்தூரியின் சுகந்தம் பரவுதல்போல் வியாபிக்க வேண்டுமென்று அத்தானஞ் செய்யப்பட்டதென்று ஏற்படுகிறது; அதைப்போலவே எங்கும் பரவி தன் சுகந்தத்தால் பரிமளிக்கச்செய்கிற பாடலியையே தாயாகக்கொண்ட பாடலீபுத்ர நகரம் கீர்த்தியில் உலகப்பிரசித்தி பெற்றதாயிற்று.

உலகத்தில் யாவருமறிந்த புராதன நகரங்களான நினீவா, பாபிலோன், பர்சிபோலிஸ், ஏக்பதன், டமாஸ்கஸ், டைர் முதலானவைகளைப்போல் பாடலீபுத்ர நகரம் அவ்வளவு புராதனமாயில்லாவிடினும் ஆசியாக் கண்டத்திலுள்ள நகரங்களெல்லாவற்றிலும் ஒருமிக்க பழய நகரமென்றே கூறலாம்.

உலகத்தில் மற்றப் பெரிய நகரங்களெல்லாம் உருமாறி அழிந்து கிடக்கும்போது பாடலீபுத்ர நகரம் மட்டில் செழித்து ஜீவநகரமாக விளங்குகின்றது. இந்நகரத்தின் ஆதிக் கதைகளை நாம் எளிதில் அறியக்கூடும். இதன் ஆதிகாலத்தைப்பற்றி விசாரிக்கும் போது, மாநிடப் பிறவி கொண்டவர்களி லெல்லாம் சிறந்தவரான கபிலவஸ்துவைச் சேர்ந்த புத்த ததாகதரென்ற புருஷ சிம்மத்தின் ஜீவியகாலம் நினைவுக்கு வருகின்றது. அம்மகான் நாலிருபதாண்டு கழித்த ஞானவயதில் ராஜக்கிருகத்திலிருந்து தன் ஜனன க்ஷேத்திரமாகிய கபிலவஸ்துவை யடைந்து சமாதி தசையைக் கழிக்க எண்ணிப் போகையில், வழியில் ஸோன் என்ற நதி கங்கையுடன் ஸங்கமமாகு மிடத்தைக் கடக்க நேரிட்டது. அங்கே மகததேசத்தரசனாகிய அஜாதசத்ருவின் மந்திரியொருவர், கங்கைக்கு அக்கரையில் பிரபலமாய் ஆண்டுகொண்டு போர்புரிவதே தொழிலாயுடைய லிச்சாவிகள், விதேயர்கள் என்ற ஜாதியார்களை விலக்கிப் பயமுறுத்தும்பொருட்டு கோட்டை, மதிட்சுவர் முதலானவற்றைக் கட்டிக்கொண் டிருந்தனர். மகா புத்திமானும், தீர்க்கதரிசியும், மகத தேசத்தைச்சுற்றி நாலா பக்கங்களிலும் 45 வருடங்கள் திரிந்து பார்த்தவருமானபடியால், அவர் அவ்விடம் உலகெங்கும் பிரசித்திபெற்று உத்தமோத்தமமான ராஜநகரமாகுமென்று, தம் ஞானதிருஷ்டியால் கண்டு வெளியிட்டார். அவர் சொன்னபடியே, அதே இடம் வெகு சீக்கிரத்தில் ஒரு பெரிய வியாபார ஸ்தானமாகவும், இராஜபட்டணமாகவும் ஆயிற்று. மகத தேசத்துச் சக்கரவர்த்திகள் ராஜக்கிருகத்திலும், பாடலீபுத்ரத்திலும் இங்குமங்குமா யிருந்து சிலகாலம் கழித்துவந்தார்கள். ஆனால் நந்தன் சிசுநாக வம்சத்தைத் தலையோங்காமல் அடித்து க்ஷத்திரியர்களையே முற்றுமழிக்க முயன்றபோது, ராஜக்கிருகத்தில் தங்குவதே நரகவாசத்தை யொத்ததாயிற்று. அதே காரணமாய் அவர் பாடலீபுத்ரத்திலேயே வசித்துவந்து, அதைத் தம் இராஜதானிப் பட்டணமாக்கிக்கொண்டார். புராதன ராஜநகரமான ராஜக்கிருகமோ காடடர்ந்து வசிப்பதற்கே தகாததாயிற்று. புராணக் கதைகளில்கூட ராஜக்கிருகத்தை வனப்பிரதேசமாகச் சொல்லப்படுகிறது. நந்தர்கள், மௌரியர்கள் ஆகிய இவ்விருவர்களின் அன்புற்ற அரசாட்சியில் பாடலீபுத்ர நகரம் செழித்து,

நீர்வளம், நிலவளம், குடிவளம் பெற்று உன்னத ஸ்திதியை யடைந்தது.

சாணக்யருடைய பிரசித்தமான அர்த்த சாஸ்திரத்தில் நகரத்தின் முக்கிய லக்ஷணமாவது, நெடுக்கில் வரிசையாய் மூன்று ராஜவீதிகளும், குறுக்கில் அதேவிதமாய் மூன்று ராஜவீதிகளும், பன்னிரண்டு பிரதான வாசற்படிகளும் ஏற்பட்டிருக்கவேண்டுமென் றெடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. சந்திரகுப்தர் ராஜசபையில் விளங்கின மகாஸ்தெனிஸ் என்ற பெருமான் பாடலீபுத்ரத்தைக்குறித்துப் பிரஸ்தாபிக்கும்போது அதில் 60 வாசற்படிகளும் 350 கோபுரங்களும் அடங்கியிருந்ததென்று கூறுகிறார். நகரத்தின் மதிள்கள் அநேக குதிரைவீரர்கள் சமவரிசையாய்க் குதிரைமேல் சவாரி செய்துகொண்டு போகத்தக்க அவ்வளவு விசாலமா யுள்ளவைகளா யிருந்தனவென்றும் சொல்லுகிறார். ஒரு கோபுரத்துக்கும் மற்றொரு கோபுரத்துக்கும் மத்தியில் 75 அடி அகலம் இடைவெளிப் பிரதேசம் காணப்பட்டதாம். கௌடில்யர் மேலே சொன்ன மெகாஸ்தெனிஸ் என்ற இரண்டு லோகப் பிரசித்தர்கள் பாடலீபுத்ரத்தின் மேடைகள், மாளிகைகள், உத்யான வனங்கள், நாடகசாலைகள், ராஜசபைகள் முதலான இன்னுமநேகக் காட்சிகளைக்குறித்து வருணித்திருப்பதை மறுபடி எடுத்துரைப்பது வீணாகும். ஆனால் அவ்வுத்தம நகரம் மௌரிய மண்டலத்துக்கு ராஜாங்க ஸ்தானமாகயிருக்கத் தவறினதுமுதல் நாளதுவரையில் அதிலுண்டான மாறுதல்கள், சீர்திருத்தங்கள், ஏற்பாடுகள் முதலான முக்கிய விஷயங்களைப்பற்றி விசாரிப்பது உசிதமே.

அசோகவர்த்தன மகாராஜா, ஜீவபலிகொடுத்துநடத்தப்பட்ட யக்ஞங்களைத் தம்இராஜ்யத்தில் நடத்தக்கூடாதென்று முழுதும் தடுத்துவிட்டார். அதனால் அந்த ராஜ்யத்திலும்அதற்கு வெளியிலுமுள்ள பிராமணர்களெல்லோரும் ஒன்றுகூடி, தங்கள் அதிகாரத்துக்குக் குறைவு நேரிட்டதைக்கண்டு கோபங்கொண்டு, அந்த இராஜவம்சத்துக்கு வேர்ப்பூச்சியாகி, அதைக் கருகச்செய்து அழிக்கத் தங்களாலியன்றவரை முயற்சிசெய்தனர். அசோக மகாராஜா இறந்த 50 வருடத்திற்குள் தாங்கள் கோரியபடியே அந்த இராஜ்யத்தைக் கைக்கொண்டு, எந்த அசோகர் அவர்கள் செய்வித்த யக்ஞங்களைத் தடுத்தாரோ, அந்த மகாராஜாவின் மாளிகையில் ஓர் அசுவமேதயாகம் கோலாகலத்துடன் நடத்தினார்கள். இதனையெல்லாம் முன்னின்று நடத்தினவர்கள் ஸங்க கோத்திரத்தவரான ஸாமவேதியப் பிராமணர்களே. இவர்கள் ஸாமவேத வகுப்பில் ஒன்றுக்குத் தலைமைபெற்ற ஆசாரியர்கள். இவர்கள் புத்தியிலும் சிறந்தவராயிருந்து மேற்கூறிய காரியங்களைச்சாதித்துவைப்பதில்முன்னின்று உழைத்துப் பின்பு கீர்த்தியடைந்தவர் புஷ்யமித்ரர் என்பவர். மௌரியர்களுடைய பெயர் பாடலீபுத்ரத்தில் இதற்குப் பிறகும் சிலகாலம் வழங்கிவந்ததேயெனினும், அப்புராதன நகரத்தின் ஆளுகை முழுமையும் மாளவதேசத்தில் விதிசமென்ற நகரத்திலிருந்து ஆண்டுவந்த ஸங்கர்களுக்கு உட்பட்டதாயிருந்தது. ஸங்கர்கள் அடிசறுக்கித் தாழ்வடைந்த காலத்தில், அவர்களுடைய மந்திரிகளான கண்வாயர்கள் அந்த இராஜ்யத்தில் ரோஹில் கண்டில் மிகுந்து நின்ற ஒரு பாகத்தை ஆண்டுவந்து, முக்கியமாய்ப் பாடலீபுத்ரத்தில் பூரணாதிகாரம் செலுத்திவந்தார்கள். இப் பாடலீபுத்ர நகரம் கல்விக்கே இருப்பிடமாயும், வியாபாரங்களுக்கெல்லாம் தாய்வீட்டையொத்த பெரும்சந்தையாயுமிருந்ததுமன்றி, இந்நகரத்திலிருந்தே நம்நாடு முழுதும் வழங்கி வருகிற சட்டதிட்டங்கள், பற்பல ஆசாரங்கள், மதக் கோட்பாடுகள், நியாயங்கள் முதலியன உண்டாகிப் பரவினவென்று ஏற்படுகிறது. நம் நாடெங்கும் நகரமென்றால் இதற்கே ஏற்றுப் பொருந்தின பெயர் என்று எண்ணப்பட்டு வந்தது. பௌத்த தர்மவித்தைக்கும் பௌத்தாசாரங்களுக்கும் இதுவே முக்கியமான இருப்பிடம். அதேமாதிரி ஜைன வித்தைக்கும், ஜைனாசாரங்களுக்கும் இதுவேதான் முக்கியமான இருப்பிடமா யிருந்தது. இந்த நகரத்திலிருந்தே பத்ரபாகு என்ற ஜைனப் பிரசித்தர் அநேக ஜைன சந்நியாசிகளை அழைத்துச் சென்று மைசூரில் அமர்த்தினர். பௌத்தஸங்கம் ஒன்றுகூடி, உத்தர பௌத்தர்கள், தக்ஷிண பௌத்தர்கள் என்ற இரண்டு கக்ஷிகளாகத் தீர்மானித்துப் பிரிந்தவிடம் பாடலீபுத்ர நகரமே. பௌத்த தர்மத்தைப் பரவச் செய்யவேண்டுமென்று பௌத்த சந்நியாசிகள் உலகெங்கும் அனுப்பப்பட்டது இவ்விடத்திலிருந்தே.

ஐக்கியப் பண்டகசாலையும் ஆரம்ப ஆசிரியர்களும்

CO-OPERATIVE STOPES & ELEMENTARY TEACHERS

நாகரிகம் முற்றுப்பெற்ற இக்காலத்துங்கூட ஒற்றுமையின் பெருமையை விளக்கிக் காட்டல் அவசியமா யிருக்கிறது. 'எத்தால் வாழலாம், ஒத்தால் வாழலாம்' என்ற பழமொழியை விளக்க ஒரு டிபார்ட்மெண்ட் ஏற்பட்டு நடைபெற்றுவருகிறது. 'இருவராய்ப் பூண்டேர்ப்பினல்லால் இல்வாழ்க்கை என்னும் இயல்புடைய வான் சகடம் செல்லாது' என்பதை நன்கறிந்த மாந்தர் ஒவ்வொருவரும் ஒற்றுமையின் குணத்தை அறிந்தவர்களேயாம். பலர்சேர்ந்து ஒரே மனத்தோடு எவ்விதக் காரியத்தைச் செய்யினும், ஜயமடைவதற்கு யாதும் தடையிராது?

இத்தகைய ஒற்றுமையைச் சிறுவர்கட்குத் தகுந்த வயதிலேயே ஊட்டின் நாடு விருத்தியடைவது திண்ணம். அதை இளம் பாலவத்தில் கற்பிக்கத் தகுந்தவர் ஆசானும் பெற்றோர்களுமேதாம். ஆசானுடைய திறமையைப் பற்றிக் கவனிப்போம்.

பிரதம பாடசாலைகளில் அமர்ந்துள்ள உபாத்தியாயர்கட்குள் அதிகமான ஒற்றுமை யிருப்பதாக எண்ண இடமில்லை. அவ்வாறிருக்க, அவர்கள் பிறருக்கு இவ்விஷயத்தை எவ்வாறு போதிக்கமுடியும்? தங்கட்குள் ஒற்றுமையின்மையால் தொழிலுக்கு மகிமை குன்றிவிட்டதெனக் கருதித் தற்காலம் மகாநாடுகள் சபைகள் கூடி விஷயங்களைத் தீர்மானிக்கிறார்கள். ஆயினும், அனுபவத்தில் சரியான ஒற்றுமை இருப்பதாக எண்ண இடமில்லை.

உபாத்தியாயர்களின் ஊதியமோ சொற்பம். அது போதாதென்று மன்றாடிச் சம்பளத்தை உயர்த்தவே மகாநாடுகள் கூடுகிறார்கள். இம்மகாநாடுகளும் சபைகளும் நடந்தேறச்செய்யவும், அங்கு தீர்மானித்த விஷயங்களை அமுலுக்குக் கொண்டுவரவும் திரவியம் ஏராளமாக வேண்டியிருக்கிறது. இதைத் திரட்ட அவர்கள் படும்பாடு மெச்சத்தக்கதாயினும், ஒருவாறு பரிதபிக்கத் தக்கதாகவே இருக்கிறது. இவைகளை ஆராயுமிடத்து சந்தா கொடுப்பதுகூட அவர்கட்கு ஒரு; பாரமாகத் தோன்றுகிறது. என்றாலும், சபைகளினால் தங்கட்கு இனிக் கிடைக்குமென்று எதிர்பார்க்கும் நன்மையையுன்னிச் சந்தா செலுத்துகிறார்கள். இவ்விதத் தொந்தரவு ஒன்றுமில்லாமல் பொதுப் பிரயோசனத்துக்கு ஏராளமான தனம் சேகரிக்கும் உபாயம் ஒன்றுண்டு. அஃது ஒற்றுமையேயன்றி வேறல்ல.

ஒவ்வொரு ஜில்லாவிலும் பிரதம பாடசாலைகள் ஆயிரக்கணக்காக ஏற்பட்டு நடைபெறுவதையும், கல்வி இலாகாவில் ஒவ்வொரு ஜில்லாவையும் சில பிரிவுகளாகப் பிரித்திருப்பதையும் நாம் காண்கிறோம். சாதாரணமாக, உபாத்தியாயர் ஒருவருக்கு 25 பிள்ளைகள்வீதம் இரண்டு உபாத்தியாயருக்குமேல் ஒவ்வொரு பாடசாலையிலு மிருப்பார்கள். இவ்வாறு ஒரு பிரிவில் 160 பாடசாலைகள்வரை இருக்கலாம். ஆகவே, ஒரு பிரிவில் 300 முதல் 400 உபாத்தியாயர்களும் 10,000 பிள்ளைகளு மிருப்பார்கள். இவர்கட்குக் கல்வி கற்பதற்கு வேண்டிய புத்தகம் முதலிய வஸ்துக்கள் எவ்விதம் சேகரிக்கப்படுகிறதென்று கவனிப்போம்.

(1) பிள்ளைகளின்பெற்றோர்கள் சந்தைக்குச் சென்று அங்கு கிடைக்கும் வஸ்துக்களை வாங்கி வருகிறார்கள். தேவையான வஸ்து கிடைப்பதில்லை; விலையும் அதிகமாகக் கொடுத்து விடுகிறார்கள். (2) சில இடங்களில் உபாத்தியாயர்கள் பெரிய பட்டணங்கட்குச் சென்று பலவிதங்களில் திரவியத்தைச் செலவிட்டுப் புத்தகங்களைவாங்கிவந்து அதிக விலைக்குப் பிள்ளைகளிடம் விற்கிறார்கள். (3) மற்றும் சிலர் கம்பெனிகளின் விலாசம் அறிந்து கொண்டு நேராக ஆர்டர் கொடுத்து வி. பி. மூலமாக வரவழைத்துக் கொள்ளுகிறார்கள். மேலே காட்டிய எந்த முறையிலும் விலையானது கம்பெனியில் பிரசுரித்த விலைக்கு $1\frac{1}{2}$ மடங்குக்கு மேல் ஆகிவிடுவதோடு வஸ்துக்கள் குறித்த காலத்தில் கிடைப்பதில்லை. வேண்டிய வஸ்துக்களும் அகப்படுவதில்லை. யாவருக்கும் கஷ்டமும், நஷ்டமுமே ஏற்படுகின்றன.

அவ்வாறின்றி உபாத்தியாயர்கள் யாவரும் ஒரு மனத்தோடு பாடசாலைக் கவசிய வஸ்துக்கள் சுலபமாய்க் கிடைப்பதற்கு ஐக்கியப் பண்டகசாலை ஒன்று ஏற்படுத்தி நடத்தினால், அதனால் அவர்கள் அடையும் பலன் அளவிடமுடி

யாததாகும். அங்கே பாடசாலைக்கு வேண்டிய உபகரணங்களை விற்பதாக வைத்துக் கொள்ளலாம். இதை எவ்வாறு நடத்தலாமென்பதைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

ஒவ்வொரு பிரிவிலும், மாதாமாதம் கூடும் சில உபாத்திமைச் சங்கங்கள் இருக்கின்றன. அவைகள் சிற்சில விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடைபெறுகின்றன. அச் சபைகளின்கண் ஆலோசிக்கப்படும் விஷயங்களைப்பற்றி இங்கு விவரிக்காவிடினும், எல்லா உபாத்தியாயர்களும் ஆஜராகி வருவதையே முக்கியக் கருத்தாகக்கொண்டு எடுத்த காரியத்தை நிறைவேற்றலாம். ஒவ்வொரு உபாத்தியாயரும் மூன்று ரூபாய் மதிப்புள்ள ஒரு பங்கு எடுத்துக்கொண்டால், 400 உபாத்தியாயர்கள் அடங்கிய ஒரு பிரிவில் ஸ்தாபிக்கப்படும் பண்டகசாலைக்கு 1,200 ரூபாய் மூலதனம் ஏற்படும். மாதாமாதம் 1,000 ரூபாய்வரை வியாபாரம் நடைபெறுவதாக எண்ணினால், வருஷத்தில் 12,000-க்கு மேல் தேவையிராது. ஆதலால், 1,200 ரூபாய் மூலதனத்தைக் கொண்டே பண்டகசாலையை நடத்திவர முடியும். இது போதாமற்போனால், ஜில்லா ஐக்கியச் சங்கங்களிலிருந்து கடன் வாங்கிக்கொள்ளலாம்.

மாணாக்கன் ஒருவனுக்கு ஒரு ரூபாய் வீதம் வருஷத்தில் உபகரணங்கட்காகச் செலவுசெய்யப்படுவதாகவும், உபாத்தியாயர் ஒருவருக்கு 25 ரூபாய் வீதம் வியாபாரம் ஆவதாகவும் வைத்துக் கொண்டாலும், 10,000 ரூபாய் வியாபாரமே நடைபெறும். தவிரவும், பிரதம பாடசாலைகளில் வருஷாந்தரப் பரீக்ஷை நடந்தபிறகுதான் வகுப்பு மாற்றுவது வழக்கமாதலால், ஒரே மாதத்தில் யாவரும் ஒருமிக்க வஸ்துக்களை வாங்கமாட்டார்கள்.

இவ்வாறு ஸ்தாபிக்கும்பண்டகசாலையானது போக்குவரத்துக்குச் சாதகமான ஒரு இடத்தில் ஒவ்வொரு பிரிவுக்கு ஒன்றாக அமைக்கப்படுவதாக வைத்துக்கொள்வோம். பிரதி மாதமும் சங்கம் கூடும்பொழுது, ஒவ்வொரு உபாத்தியாயரும் தமக்கும் தமது மாணாக்கர்களுக்கும் அடுத்த ஒரு மாதத்திற்குள் தேவையான உபகரணங்களுக்குப் பட்டியல் ஒன்று தயாரித்து வந்து சங்கக்காரியதரிசியினிடம் கொடுக்கவேண்டும். அவர் தம்முடன் சேர்ந்த நிர்வாகசபையாரில் இருவருடன் கலந்து, கிடைத்த பட்டியல்களைச் சரிவர ஒழுங்குபடுத்திப் பண்டகசாலைக் காரியதரிசிக்கு அனுப்பவேண்டும். அவரும் அதேமாதிரி ஒவ்வொரு கம்பெனியிலிருந்தும் தருவிக்கவேண்டியவைகளைப் பிரித்து ஒழுங்குபடுத்தி, சாமான்களை மொத்தமாக வரவழைப்பார். சாமான்கள்வந்தவுடன் அந்தந்தப்பட்டியல்படி பிரித்துச் சங்கங்களுக்கு அனுப்பிவிடலாம். அல்லது, ரயில்வே, தபால் வசதிகள் இருக்குமிடங்கட்கு நேராக அனுப்பும்படி கம்பெனிகளையே கேட்டுக்கொள்ளலாம். மறுமாதம் சங்கங்கூடும் நாள் அங்கத்தினர்கள் அடுத்த மாதத்துக்கு வேண்டிய சாமான்களுக்குப் பட்டியல் கொடுத்துவிட்டு முன் மாதத்தில் வாங்கிய உபகரணங்களின் விலையைச் செலுத்தலாம்.

இத்தகைய காரியத்தால் அடையும் பலன்கள் யாவை ?

(1) குறித்தகாலத்தில் பாடசாலைக்கு வேண்டிய சாமான்கள் கிடைக்கும்.

(2) சங்கத்தின் நன்மை அதிகப்படுவதோடு உபகரணங்கள் வாங்குவதற்காகச் செலவு செய்து அயல் ஊர்களுக்குச் செல்லவேண்டுவதில்லை. சங்கத்துக்கு ஒழுங்காகப் போய்ச் சேர்வதே போதுமானது.

(3) உபாத்தியாயர்களுக்குள் ஒற்றுமை அதிகப்படும்.

(4) ஒரேவகுப்பில் உள்ள பையன்களிடம் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரேவித புத்தகம் இருக்கும். எல்லோரிடமும் தவறாமல் உபகரணங்கள் யாவும் இருக்கும்.

(5) அங்கத்தினர்கள் சங்கத்துக்குச் சந்தா கொடுக்கவேண்டிய தேவையிராது.

(6) புத்தகம், கற்பலகை, பேனா முதலிய சாமான்களின் விலை சரசமாவதோடு, நேர்த்தியான பொருள்களும் கிடைக்கும்.

(7) இத்துடன் அங்கத்தினர்களுக்கு ஒருவித லாபமும் ஏற்படுகிறது. இது பண்டகசாலையின் முக்கிய நோக்கமில்லையேயெனினும், அதுவும் அதனாலடையும் நன்மைகளில் ஒன்றாகிறது. அதன் விவரம் பின்வருமாறு:—

வியாபாரம் செய்யும் கம்பெனிகளில் 100-க்கு 10 முதல் 20 வரை விந்தாசு (கமிஷன்) கொடுக்கிறார்கள். அதிலும் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் இப்பாஷைகளில் பிரசுரிக்கப்படும் புத்தகங்களை விற்போர் 100-க்கு

பூவுள் மங்கையாம் பொற்கொடியாம், போன இடம் எல்லாம் செருப்படியாம்.

25-வரையிலும் கொடுப்பதைப் பார்க்கிறோம். நாம் 100-க்கு 15 கிடைப்பதாகவே எண்ணிக் கணக்கிடுவோம். 12,000 ரூபாய் வியாபாரத்தில் 1800 ரூபாய் வரை கமிஷன் உண்டு. இதற்கு ஏற்படும் செலவும் கீழே காட்டப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 900 ரூபாய்வரை செலவானபின் மீதி 900 ரூபாயை அங்கத்தினர்கள் தங்கள் மூலதனத்தின் வட்டிக்கும், சங்கத்தின் சந்தாவுக்கும், வியாபாரத்தின் லாபத்துக்கும் பங்கிடலாம். கொஞ்சகாலம் சரிவர நடந்தேறினால், கம்பெனிகள் இப்பாடசாலைகளையே தங்களுடைய ஏஜண்டுகளாகச் செய்துகொண்டு தங்கள் சாமான்களை அங்கேயே வைத்துவிடுவார்கள். அதனால் தபாற்செலவு கூடக் குறைந்துவிடும். தவிரவும், இனமாக இவர்களுக்குக் கிடைக்கும் புத்தகங்களைச் சேர்த்துவைத்தால் ஒருபுத்தகசாலைஸ்தாபிக்கலாம்.

ஆகையால், 'பல துளி பெரு வெள்ளம்' என்ற பழமொழியைத் தீர்க்கமாக ஆலோசித்து ஒவ்வொருவரும் ஒருரூபாய்வீதம் செலவிட்டபோதிலும், யாவரும் கூடியதால் பலன் கிடைப்பதை எண்ணி, இனியாகிலும் சும்மாயிராமல் இவ்விதப் பண்டகசாலை ஏற்படுத்துவார்களென்று எண்ணுகிறோம். இதனால் ஏற்படும் நன்மை அனுபவத்தில்தான் நன்கு விளங்குமாகையால் அதை இங்கு வித்தாரமாக எடுத்துச் சொல்லப்படவில்லை.

கமிஷன் 1,800 ரூபாய்க்கு
வரவு செலவு கணக்கு

வரவு	ரூ.	அ.
வியாபாரம் 12,000 ரூபாய் 100-க்கு 15-வீதம் கூடிய கமிஷன் ...	1,800	0
மொத்தம் ...	1,800	0

செலவு	ரூ.	அ.
1. தபாற் செலவு	600	0
2. வீட்டு வாடகையும், சேவகன், குமாஸ்தா சம்பளமும் ...	225	0
3. சங்கங்கள் கூடும் செலவு ...	75	0
4. 1,200-க்கு வட்டி 100-க்கு 8-வீதம்	96	0
5. 12,000 ரூபாய் வியாபாரத்தில் 100-க்கு $6\frac{1}{4}$ வீதம் லாபம் ...	750	0
6. க்ஷேம நிதி	54	0
மொத்தம் ...	1,800	0

இந்தியாவில் காகிதம் செய்யும் முறையின் சரித்திரம்*

HISTORY OF PAPER-MAKING IN INDIA

ஐரோப்பிய மகாயுத்தத்தினால் உலகத்தில் காகிதப் பஞ்சம் ஏற்பட்டு, ஒவ்வொரு தேசத்தவரும் தமது தேசத்தில் செய்யப்படும் காகிதத்தின் அளவை அதிகரிக்கச்செய்யப் பலவழிகளிலும் முயன்றுவருகிறார்களாதலால், இந்தியாவும் இவ்விஷயத்தில் ஊக்கத்துடன் உழைத்துத்தனது காகிதப்பஞ்சத்தை நீக்கிக்கொள்ள வேண்டும்.

காகிதம் செய்வதற்கு அவசியமான சரக்குகள் இந்தியாவில் ஏராளமாய்க் கிடைக்கின்றன. காகிதம் செய்யும் வித்தையும் நமது தேசத்துக்குப் புதிதல்ல. அவ்வித்தை நமது தேசத்தவருக்குச் சுமார் 2,400 வருஷங்களுக்கு முன்னமே தெரியுமென்பதற்குத் தகுந்த சாக்ஷியங்களிருக்கின்றன. இங்கிலாந்தில் செய்யப்படும் காகிதத்துக்குவேண்டிய மரக்கூழானது பெரும்பான்மையும் நார்வே, ஸ்வீடன் என்னும் இருதேசங்களிலிருந்துமே வந்தாகவேண்டியிருப்பதாகவும், அதன் தற்காலவிலை மகாயுத்தத்துக்குமுன் இருந்த விலையைப் போல் மூன்றுமடங்காக ஆகிவிட்டதாகவும், ஆகையினால் இங்கிலாந்து தன்னைச் சேர்ந்த கானடா முதலிய தேசங்களிலுள்ள காடுகளைப் பரீக்ஷித்து அவைகளிலிருந்து தனக்குக் காகிதம்செய்வதற் கவசியமான சரக்குகளைச் சம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்றும் இங்கிலாந்தில் பிரசுரம்செய்யப்படும் ஓர் பத்திரிகையில் கூறப்பட்டிருக்கிறது.

காகிதம் செய்யப்படுமுன் அதற்குப்பதிலாக பலவஸ்துக்கள் இந்தியாவிலும் உலகத்திலுள்ள மற்ற நாடுகளிலும் உபயோகிக்கப்பட்டு வந்ததாகத் தெரியவருகிறது. இந்தியாவில் மௌரியவம்சத்துச் சக்கரவர்த்தியின் கட்டளைகள் கற்றூண்களில் வெட்டி வரையப்பட்டன; அநேக அரசர்களது உத்தரவுகளும், இராஜவம்சாவளிகளும், போர்ச் சரித்திரங்களும்,

*[சாஸ்திர அபிவிருத்தி இந்திய சங்கத்தார் முன் இரசாயனசாரியர் ஸ்ரீமான் சுனிலால் போஸ், ஐ. எஸ். ஓ., எம். பி., எப். ஸி. எஸ்., செய்த பிரசங்கத்தின் சாரம் இங்கு எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது.]

பூனை உள்ள இடத்திலே, எலி பேரன் பேர்த்தி எடுக்கிறது.

தான சாசனங்களும் கனத்த தாம்பிரத் தகடுகளில் வெட்டி எழுதப்பட்டிருக்கின்றன; மத சம்பந்தமான விஷயங்களும் மந்திரங்களும் பூர்ஜபத்திரம் என்னும் மரவுரியில் எழுதப்பட்டிருக்கின்றன; பனையோலைகளில் எழுத்தாணிகளால் எழுதும் வழக்கம் இப்போதும் வழங்கி வருவதைக் காண்கிறோம். இவ்வாறு இந்தியாவில் காகிதத்துக்குப் பதிலாகப் பல வஸ்துக்கள் உபயோகிக்கப்பட்டு வந்தனவேயெனினும், காகிதம் செய்யும் முறையும் நமது தேசத்தவருக்கு கிறிஸ்து பிறப்பதற்கு முந்நூறு வருஷங்களுக்கு முன்னமே தெரியுமென்பது, அக்காலத்தில் வடக்கேயுள்ள பஞ்சாப் என்னும் மாகாணத்தில், அடிக்காத பருத்திப் பஞ்சை இரண்டு மூன்று வரிசை ஒன்றன்மேலொன்றாக வைத்து அவைகளையழுத்தி ஒன்றுபட்டுச் சேரச் செய்து அவ்வாறு செய்யப்பட்ட மிருதுவான மெல்லிய காகிதத்துக்குப் பளபளப்பு உண்டாக்கிப் பிறகு அதை எழுதுவதற்கு உபயோகித்ததைத் தாம் தம் கண்ணாற கண்டதாக கி. மு. 327-ம் ஆண்டில் இந்தியாவின்மீது படையெடுத்துவந்த மகா அலெக்ஜாண்டர் என்னும் அரசனது சேனாதிபதி நியார்க்கஸ் என்பவர் எழுதியிருப்பதாக பாபு நாகேந்திர நாத் பாஸு ப்ராச்யவித்யா மகார்ணவம் என்னும் பண்டித சிகாமணி தமது பேர்பெற்ற விசுவகோசம் என்னும் நூலில் எழுதியிருப்பதிலிருந்து தெரியவருகிறது.

இந்தியாவில் அடிக்காத பருத்திப் பஞ்சு நாரைக்கொண்டு கையினாற் செய்யப்பட்ட காகிதத்துக்கு துலாத என்று பெயர் வழங்கி வந்தது. ஒருகாலத்தில் நமது தேசத்தில் மத சம்பந்தமான புத்தகங்கள், தஸ்தவேஜுகள், கணக்குகள் முதலியவை அக்காகிதத்திலேதான் எழுதப்பட்டுவந்தன. அந்தத் துலாத் காகிதம் வெள்ளை, மஞ்சள் என இருவகைப்பட்டது. அதில் மஞ்சள் காகிதந்தான் உயர்ந்ததாகக் கருதப்பட்டுவந்தது. கடைசிகாலாந்தரத்தில் அப்படிப்பட்ட காகிதம் வங்காளத்திலுள்ள மால்டா என்னும் பட்டணத்தில காகிதம்செய்வதையேதொழிலாகவுடைய ககஜி யெனனும தனிவகுப்பைச் சேர்ந்த மகம்மதியால விசேஷமாய்ச் செய்யப்பட்டு வந்தது. அவர்கள் கிழிந்த காகிதத் துணுக்குகளையும் பழைய துணிக்கந்தல்களையும் சுத்தஞ்செய்யாத சஜ்ஜி மட்டி, சுண்ணாம்பு இவைகள் கலந்த நீரிலிட்டு வேகவைத்துக் கூழாகச்செய்து, அக்கூழுடன் அரிசிமாவை நன்றாய்க் கலந்து, அப்படிக் கலந்ததனா லுண்டான பதார்த்தத்தை அடியில் துளைகளையுடைய மர அச்சுப்பலகைகளின்மீது இலேசாய்ப் பரப்பி, வெயிலில் வைத்து உலர்த்திக் காகிதம் செய்துவந்தார்கள். ஒருகாலத்தில் இந்தியாவின் மற்றப்பாகங்களுக்கும் இந்தியாவுக்கு வெளியேயுள்ள பிற தேசங்களுக்கும் காகிதம் அனுப்பப்பட்டுவரும்படி அவ்வளவு நல்ல ஸ்திதியில் இருந்தது அக்கைத்தொழில். காகிதம் அழுத்தமானதாயும், நீடித்திருக்கக் கூடியதாயும், எழுதப்பெற்றால் ஊறாததாயும் இருந்தது.

மால்டாவிற் செய்துவந்த அளவுக்குக் கொஞ்சம் குறைவாக ஹூக்ளியைச்சார்ந்த மைமான் என்னும் ஊரிலும், டக்கா, ஷாகாபாத், முஜபர்ப்பூர், அவுரங்கபாத், டௌலதாபாத், ஆமதாபாத், தார்வார், கோலாப்பூர் என்னும் ஊர்களிலும் காகிதம் செய்யப்பட்டுவந்தது. அவ்விடங்களிற் செய்யப்பட்டு வந்த காகிதங்களெல்லாவற்றிலும் அவுரங்கபாத் என்னும ஊரிற்செய்துவந்த காகிதமே மிகவும் உயர்ந்த காகிதமென மதிக்கப்பட்டு வந்தது. டௌலதாபாத் என்னும் ஊரில் காகிதக்கூழில் மெல்லிய தங்கத்தகடுகளைப் போட்டுக் கலந்து காகிதம் செய்துவந்தார்கள். அச்சிங்காரமான காகிதத்தின் பெயர் அப்ஸானி. அக்காகிதத்தை நமது இந்திய மன்னவர்கள் ஆவலுடன் வாங்கிக்கொண்டார்கள்.

கி. பி. 1840-ம் ஆண்டுக்குமுன் இந்தியாவுக்கு வேண்டிய காகிதம்பெரும்பாலும் சீனத்திலிருந்து வரவழைக்கப்பட்டு வந்தது. அவ்வருஷம்முதல் அக்கைத்தொழில் இந்தியாவில செழிக்கத்தொடங்க, நாடெங்கும் அநேக கைத்தொழிற் சாலைகள் ஏற்படுத்தப்பட்டன.

இங்கிலாந்தில் காகிதம் செய்யத் தொடங்கி நானூறு வருஷங்கள்தாம் ஆகின்றன. கி. பி. 1770-ம் வருஷத்தில்தான அத்தேசத்தில் எழுதுவதற்கு யோக்கியமான காகிதம் சீராகவும் மெல்லியதாயும் செய்யப்பட்டது.

கி. பி. 1798-ம் வருஷம் வரையில உலகமெங்கும் காகிதம் கையினாலேயே செய்துவரப்பட்டது. அவ்வருஷத்திலதான் பாரிஸ நகரத்துக்குச் சமீபத்திலிருந்த காகிதக் கைத்தொழிற்சாலையில் வேலையாயிருந்த லூயி ராபர்ட் என்பவர் காகிதம் செய்வதற்கு ஒரு இயந்திரம் முதன்முதலில் உண்டாக்கினார்.

காகிதமானது செடிகொடிமரங்களிலிருந்து கிடைக்கும் நாரினால் செய்யப்படுகிறது. அந்நாரானது மற்றப் பதார்த்தங்களி லிருந்து பிரித்து சுத்தஞ்செய்யப்பட்டபின், இரசாயன முறைகளினாலும் இடித்தல் முதலிய வழிகளினாலும் கூழாகச் செய்யப்படுகிறது. பிறகு அக்கூழானது வெளுக்கப்பட்டு நீரில் மிதக்கவிடப்படுகிறது. அது மிதந்து சென்று கம்பிகளாற்செய்த காகித அச்சில்தங்குகிறது. பிறகு நீர் வடியவிடப்படுகிறது. காகிதக்கூழ் மிதந்து வந்து அவ்வச்சில் தங்குவதனால், நுண்ணிய நார்கள் ஒன்றன்மீதொன்று படிந்து காகிதத் தாள்கள் உண்டாகின்றன. பிறகு அத்தாள்கள் பலமாய் அழுத்தப்பட்டு, உலர்த்தப்பட்டு, பளபளப்புடையவைகளாக ஆக்கப்பட்டு, அளவுக்குச் சரியாய்க் கத்தரிக்கப்படுகின்றன.

பழைய துணிக்கந்தல்களி லிருந்து கலப்பில்லாத காகிதக்கூழ் எளிதிற் கிடைக்கிறது. மற்றும் நமது தேசத்தில் காகிதம் செய்வதற்கு வேண்டிய கூழை ஏராளமாய்த் தரத்தக்க வஸ்துக்களிற் சில பருத்திப்பஞ்சு, சணல் நார், வைக்கோல், கோதுமை, சோளம் இவைகளின் தட்டை, வாழைநார், கருப்பஞ்சக்கை, தேங்காய்நார், புளிச்சக்கீரைநார், மூங்கில் இவைகளே. மூங்கிலின் இளங்கொம்புகள்தாம் காகிதம் செயவதற்கு உபயோகமாக விருக்கின்றன வாகையால், இளங்கொம்புகளை யொடித்தாலும் மூங்கில்தூர் அழியாம லிருப்பதற்கு வழிதேடவேண்டும். மேற்கூறிய வஸ்துக்களைத் தவிர நமது நாட்டில இன்னும் அநேக புற்கள், செடி கொடிகள் காகிதம் செய்வதற் கவசியமான நாரைத் தருகின்றன.

காகிதம் செய்வதற்கவசியமான சரக்குகள் நமது தேசத்தில் ஏராளமாய்க் கிடைப்பதனாலும், மட்டக் காகிதங்கள் செய்வதற்கு அவசியமான இயந்திரங்களை நமது தேசத்திலேயே சொற்பச் செலவில் செய்துகொள்ளக்கூடுமாதலாலும், வேலையாட்களுக்கு எவ்வளவு அதிகமாகக் கூலிகொடுத்தாலும் நமது நாட்டிற கொடுக்குங்கூலி மற்றநாடுகளிற் கொடுக்கப்படுவதைவிட மிகவும் குறைந்ததே யாகையினாலும் தனவந்தர்களும் இரசாயன சாஸ்திர பண்டிதர்களும் ஒன்றுசேர்ந்து நமது தேசத்தில் இயந்திரங்களி னுதவியினால் காகிதம் செய்வதற்காகப் பல பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தி ஏராளமாய்க் காகிதம்செய்து நமது நாட்டிலேயே சுலபவிலைக்கு நயமான காகிதம் கிடைக்கும்படிசெய்து, பிறநாடுகளிலிருந்துநாம் காகிதம் வாங்கவேண்டிய அவசியத்தையொழித்து அந்நாடுகளுக்குநமதுதேசத்தில் சொற்பச் செலவில் செய்யும் காகிதத்தையனுப்பி விற்று நமது நாட்டின் செல்வத்தைப் பெருக்கி, நம் நாட்டிலுள்ளோரை இப்போது வருத்தும் காகிதப் பஞ்சத்தையும் பொருட் பஞ்சத்தையும் ஒருங்கேஒழிக்கவேண்டுமென அவர்களுடைய தேசபக்தியைப் பிரார்த்திக்கிறோம்.

விக்ரமசிங்கன் கோட்டை மர்மம்

இப்புதிய நாவல் பெயர்பெற்ற துப்பறிவாளன் ஷண்முகசுந்தரத்தின் துப்புத் திறத்தை நன்கு விளக்கிக்காட்டுகிறது. ஆரம்பத்தில எவரும் பிரவேசிப்பதற் கரிதான கருங்கற் கோட்டையில் காவற்காரன் எஜமானியைக் கொன்றதாகத் தெரிய வருகிறது. அச்சந்தர்ப்பத்தில் ஷண்முகசுந்தரம் அழைக்கப்பட்டு, அந்த அம்மாள் இறக்கவில்லையென்று அறிந்து அவளை உயிர்ப்பித்து, காவற்காரன் குற்றவாளியல்லவென நிரூபித்து, அப்பிராந்தத்தில் பேர்பெற்ற கொள்ளைக்காரனான சிங்கமாமுகனை தொடர்ந்து, அவன் தாசியை மயக்கி அவன திருட்டிடத்தையறிந்து, சந்நியாசிவேடம் பூண்டு சிங்கமாமுகனுக்குச் சிகிச்சைசெய்யச் சென்று, அப்போது தன் மந்திர சக்தியால் தீரனான சிங்கமாமுகனையடக்கி வீழ்த்தி அவனைக் கொல்ல முயன்ற துருக்க சந்நியாசி யொருவனை தன்னுடைய நிகரற்ற மந்திர சக்தியால அடக்கி, சிங்கமாமுகன்பூண்ட பலவேடங்களையும் துருக்கச் சந்நியாசியின் வேடத்தையும் எளிதில் ஊகித்து, அந்த அம்மாளது கணவனான துருக்கச் சந்நியாசியையும் சகோதரனான சிங்கமாமுகனையும் சிறைப்படுத்தி, கற்பின் அவதாரமான அந்த அம்மாளது கற்பைச் சந்தேகித்து ஆராயாது செய்த செய்கைகளில் யாவருமுற்ற துயரத்தை எடுத்துக் காட்டுகிறான். மிகவும் எளியநடையில எழுதப்பட்டுளது. எடுத்தவர் படித்துமுடிக்காமல் கீழேவைக்க முடியாது. நான்கு அழகிய சித்திரப்படங்கள் அடங்கியது. விலை ரூபாய் ஒன்றுதான். வேண்டுவோர் அலையன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர் என்ற விலாசத்துக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பூனைக்கு இல்லை தானமும் தவமும்.

பூனைக்குக் கொண்டாட்டம் எலிக்குத் திண்டாட்டம்.

பார்க்கவன்*

அல்லது

பரம ரஹஸ்யம்

முதல் அத்தியாயம்

நன்றியறியா மக்கள்

167-௵ ஆகஸ்ட் மீ 20௳ ஸகேதபுரியின் பிரதான வீதிகளில் பிரஜைகள் மிக்க கோலாஹலத்துடன் ஆரவாரம் செய்துகொண்டு திரள்திரளாய்ப் புரண்டு செல்கிறார்கள்.

ஆ! என்ன வித்தியாஸம்! ஸாதாரணமாய் எவ்வளவு ரம்யமாயும், மனோஹரமாயும், அலங்காரமாயும் இருப்பது! உல்லாஸமான உத்யானவனங்களையும் அருகிலுள்ள அழகிய ஆற்று நீர்ப்பெருக்கையும், விசாலமான மாடமாளிகைகளையுங் கொண்டு நித்திய வைபவங்களுடன் விளங்கும் தேவேந்திரபுரி என்று சொல்லத் தகுந்ததல்லவா ஸகேதம்.

எப்பொழுதும் சாந்தசீலர்களாய், தங்கள் விருத்தியிலேயே கண்ணுங் கருத்துமாய் வருந்தி யுழைக்கும் இவ்வூர் வாசிகள் இன்றைய காலையில் மாத்திரம் அடக்கமுடியா ஆவேசத்துடன் இடையில் வாட்படைகளுடனும் கையில் ஈட்டி தோமரங்களுடனும் விரைந்து செல்வானேன்? இவர்கள் நோக்கிச் செல்லும் பூதனக்ருஹம் என்னும் சிறைச்சாலையில் என்ன நடக்கப்போகின்றது? ஓ! இம்மத்ய நாட்டின் ராஜதந்திர நிபுணரான தேவதத்தரின் ஸஹோதரர் காரணேசர் அல்லவா இங்கு ஓர் அபவாதத்திற்குள்ளாகி அடைபட்டுக் கிடக்கின்றார்!

சில ஆண்டுகளாய் இந்த மஹா நாடானது இவ்விரு ஸஹோதரரின அதிகாரத்துக்குட்பட்டிருந்தது. ஆனால் ஸ்வல்பகாலத்திற்கு முன்னால் அயல்நாட்டு அரசனான வீரகேசரி படையெடுக்கவும் இந்நாட்டுப் பிரஜைகள் தங்கள் பாதுகாவலைக் கோரினவர்களாய் முன்னைய அரசாட்சியையே விரும்பினார்கள. அபபடியே ஓர் தலைவனையும் நியமித்தாய்விட்டது.

காரணேசர் தார்த்தாரக நகரில் பிறந்தவர். அரசாங்கத்தில் மிகக கௌரவமான உத்யோகங்களை வஹித்தவர். சிறிதுகாலம் ஸைந்யத் தலைவராயும் இருந்தவர். தமது ஊர்ப் பாதுகாவல்பொறுப்பும் இவருக்கமைந்தது. இம்மாதிரி பலவிதத் துறைகளிலும் உழைத்துவரும் பொழுது ஜனங்களுக்கு மேற்கூறிய காரணத்தாலோ, வேறெந்த மூகாந்திரத்தாலோ குடியரசின்மீது வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. காரணேசருக்கு அரசாங்கத்தில் அடிக்கடி மாறுதல்கள் கூடாதென்பது கொள்கை. ஆகவே, பிரஜைகளின் கோபத்திற்கும் பகைமைக்கும் இலக்காய்விட்டார்.

நாட்டின் தலைவராகத் தற்காலம் நியமிக்கப் பட்டவன் மூத்கலன்; சாந்தசீலனானாலும் அடங்கா வீரதீரம் பொருந்தியவன். வயது இருபத்திரண்டுதா னிருக்கலாம். காரணேசரது ஸகோதரர் தேவதத்தரிடத்தில் ஸகல கலைகளையும் பயின்றவன். ராஜ்ய தந்திரத்தில் கை தேர்ந்தவன்.

நாட்டில் ஏற்கெனவே அரசாங்க முறைமையில் மாறுபாடுகள் ஏற்படுங் காலத்தில் தேவதத்தர் தம் நாட்டாரிஷ்டப்படியே நடக்கட்டுமென் றிருந்துவிட்டார். காரணேசரோ எத்தகைய மாறுபாட்டிற்கும் இடங்கொடாதவராய் தம் கொள்கைகளிலேயே உறுதிப்பாடுடையவரா யிருந்தார். ஆனால் இறுதியில் தம் மனைவி மன்றாடியதின் பிறகு மனத்தளர்ச்சியடைந்து நூதன அரசை அங்கீகரித்தார்.

தம் நாட்டாரது கோரிக்கையின் வண்ணம் காரணேசர் நடந்துகொண்டபோதிலும் பிரஜைகளின் பகைமை மட்டும் அவரைவிட்டு அகலவில்லை. சிலநாட்களுக்குள் அவரைக் குத்திக்கொலைசெய்ய சிலர் முயற்சி செய்தார்கள். ஆதலால் அவருக்குப் பலத்த காயங்கள் பட்டிருந்தன. அப்புதிய கட்சியைச் சேர்ந்தவர்கள் இன்னும் திருப்தி யடையவில்லை. இவ்விரு ஸஹோதரரும் நாட்டிலிருக்கும் வரையில் தங்கள் எண்ணங்கள் கைகூடா வென்பதை யுணர்ந்து அவர்கள் ஆயுதங்களால் முடியாத கொடுந்தொழிலை கோட்சொலலால் நிறைவேற்ற முயன்றார்கள்.

இத்தகைய கொடுந்தொழிலைச் செய்து முடிக்க நியமிக்கப்பட்டவன் தைகலிகன் என்னும் ரணவைத்தியன். நூதன அரசாங்கத் தலைவரை ஒழித்துவிடும்படி காரணேசர் கொலையாளி ஒருவனை ஏற்படுத்தியதாகவும், தானே அவர் ஏற்படுத்திய அக்கொலையாளி யென்றும் அத்தகைய கொடுஞ்செயலைப் புரிவதிலும் வெளியிட்டுவிடுவதே மேலானதென்று தான் கருதியதாகவும் அவன் எல்லோர் முன்னிலையிலும் வெளிவிட்டான்.

* An adaptation of Alexandre Dumas' "The Black Tulip."

இவ்விஷயம் வெளியானதும், நூதன கட்சியினுண்டான உக்கிரத்திற்குக் கரையேயில்லை. 167-௵ ஆகஸ்ட் மீ 16௳ காரணேசர் நியாயாதிபதியின் ஆக்ஞைப்படி கைது செய்யப்பட்டு ஓர் கொலைக் குற்றவாளியைப்போல பலவித வதைகளுக்காளானார்; இம்மாதிரி வதைத்தால் தான் அவர் மீது சாட்டப்பட்ட குற்றங்களை அவர் தாமே ஒப்புக்கொள்வாரென்பது அவரை விசாரணைசெய்தவர்களின் எண்ணம்.

காரணேசர் மகா அறிஞர்; தவிர, மிக்க தயாளகுணமுள்ளவர்; பொறுமையும் சாந்தமும் அமைந்துள்ளவர்; சித்திர வதைகளை அனுபவித்த போதிலும், தான் சொல்லவேண்டியது ஒன்றுமில்லாமையால், தான் ஒன்றும் வெளியிட முடியாதென்று மறுத்துவிட்டார். தைகலிகன் எல்லாக் குற்றங்களினின்றும் விடுதலை செய்யப்பட்டான். ஆனால் காரணேசரோ, தம் கௌரவ ஸ்தானம் உத்தியோகம் முதலியவைகளி லிருந்து தள்ளப்பட்டதுமல்லாமல், விசாரணைக்காக ஏற்பட்ட செலவுகளைச் செலுத்திவிட்டு, எக்காலத்திலும் ராஜ்யத்தின் புறம்பேயே வாழவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

காரணேசர் பிரஜைகளின் பொதுநன்மையை நாடியே எப்பொழுதும் உழைத்திருந்த போதிலும், ஒரு பாபமுமறியா அவ்வுத்தமருக்கு விரோதமாக விசாரணை முடிந்தது அவர்களுக்குத் திருப்தியாகவே யிருந்தது. அவ்வளவு மாத்திரமா? இன்னும் என்ன சம்பவங்கள் நேரிடுமோ!

தமது ஸஹோதரன் மீது வீண் அபவாதம் ஏற்பட்டது என்று எப்பொழுது கேள்விப்பட்டாரோ, அந்த க்ஷணத்திலேயே தேவதத்தர் தம் உத்யோகத்தினின்றும் நீங்கி ஒதுங்கிவாழ்வாராயினர்; ஆனாலும், பிரஜைகள் இவர் உயிருக்கும் உலைவைத்தார்கள்; காயத்தினாலான வடுக்களும் அநேகருடைய விரோதமுந்தாம் இவர் சம்பாதனைகள்.

இப்படியிருக்க, நம் கதா சம்பவங்கள் வெகு மும்முரமாய் நிகழ்ந்துகொண்டு வந்தன. 167-௵ ஆகஸ்ட் மீ 20௳ காரணேசர் பூதனக்ருஹத்திலிருந்து வெளிப்பட்டு தேசப்ரஷ்டனாய்ப் போவதையும் அவர் அனுபவித்த சித்திரவதைகளால் அவர் அடைந்த மாறுதல்களையும் பார்க்க அவலுள்ளதாய் நகரமே திரண்டு வந்ததுபோ லிருந்தது.

பொறாமையும் கபடமும் குடிகொண்ட மனத்தனான தைகலிகன் எல்லோருக்கும்முன்னே சிறைச்சாலையை நோக்கிப் பித்தம் பிடித்தவனைப்போலப் போய்க்கொண் டிருந்தான். அப்பொழுது தன்னுடன் வருபவர்களைப் பார்த்து காரணேசன் தன்னைச் சரிப்படுத்தும்படி லஞ்சங் கொடுக்கச் செய்த முயற்சிகள் இவ்விவை என்று வெகு உத்ஸாகத்துடன் சொல்லிக்கொண் டிருந்தான். 'பொய்யுடையொருவன் சொல்வன்மையினால் மெய்போலும்மே, மெய்போலும்மே' என்று அதிவீரராம பாண்டியர் கூறியதுபோல், அவன் கூறின அபத்தமொழிகளை வெகு ஆவலுடன் எல்லாரும் கேட்டு ஆனந்தமடைந்து தேவதத்த காரணேசர்களைத் தூற்றியும் மூத்கலனைப் போற்றியும் வந்தார்கள். அவன் வார்த்தைகளைக் கேட்கக்கேட்க அவர்களுக்குண்டான மனக்கொதிப்பிற்கு அளவில்லை. மாபாதகனான காரணேசனைப் போன்றவர்களை அவ்வளவு இலேசாய் விட்டுவிட்ட நியாயாதிபதிகள்மீது கோபம் மூண்டெழுந்தது அவர்களுக்கு. எல்லோருக்கும் முன்னே நின்றிருந்த ஒருவன், "அவர்களைச் சும்மா வெளியேபோகவிட்டுவிட வேண்டாம்" என்று சொன்னான்.

"ஆம், ஆம்; சிறைச்சாலைக்குப் போகலாம். சிறைச்சாலைக்கு" என்று ஒருகுரலாய் எல்லோரும் ஆரவாரித்தார்கள். எங்கு பார்த்தாலும் கத்தி, ஈட்டி, கோடரி முதலிய ஆயுதங்களைச் சுழற்றிக்கொண்டும், யமகிங்கரர்களைப்போலக் கொக்கரித்துக்கொண்டும், தம் நடையைத் துரிதப்படுத்திக்கொண்டும், "எங்கே அவர்கள்? தீர்த்துவிடுங்கள் ஓரே வீச்சில்!" என்று கூவிக்கொண்டு மிருந்தார்கள். பூதனக்ருஹத்தின் அருகில் எங்குபார்த்தாலும் பேரமளியா யிருந்தது.

இவர்கள் இம்மாதிரி கோலாஹலத்துடன் பேய்க்கூத்தாடித் திரிந்து வரும்போது, இவர்கள் யாரை நாடிவந்தார்களோ, அவர்களிலொருவன் இவர்களுக்கு முன்னேயே சிறிது தூரத்தில் போய்க்கொண்டிருந்தான். ஆனால்

அதை ஒருவரும் கவனிக்கவில்லை. அவர்கள் மனம் வெறிமயக்கங்கொண் டலைந்ததுபோ லும்!

பூதனக்ருஹத்தின் வாயிலை யடைந்ததும் தேவதத்தர் வண்டியினின்றும் இறங்கி, மௌனமாய் வாயிற்படியைக் கடந்துசென்றார். அங்கிருந்த காவலனை நோக்கி "கிராத, உனக்குத் தெரியுமே! என் ஸகோதரன் தேசப்ரஷ்டனாய் விட்டானே; அவனை வெளியே அழைத்துப் போக வந்திருக்கிறேன்" என்றார். உடனே காவலன் கதவைத் திறந்து தேவதத்தரை உள்ளே விட்டான். தேவதத்தர் சிறைச் சாலையினுள்ளே பத்தடி போவதற்குமுன், சுமார் ஏழெட்டுவயதுள்ள ஓரழகிய கன்னிகை மிக்க பக்தி விநயத்துடன் தேவதத்தர் அருகில் வந்துநின்று, 'அண்ணா' என்றாள். "குழந்தாய், என்ன ஸமாசாரம்? காரணேசனுக்கு உடம்பு எப்படியிருக்கிறது?"

"அவர்பட்ட கஷ்டத்தைப்பற்றி ஒன்றும் பயப்பட வேண்டியதில்லை. அதெல்லாந்தான் ஒழிந்துவிட்டதே." "ஆனால் எதைப்பற்றித் தான் பயப்படவேண்டுமம்மா?" "அம்மம்மா! அவருக்கு இன்னும் என்ன தீங்கிழைப்பார்களோ என்று பயப்படுகிறேன்."

"ஓ, அப்படியா! ஆம், ஆம். அதோ இரைகிற ஜனங்கள் என்ன செய்வார்களோ என்று தானே? இல்லையா?"

"ஆமாம், ஆமாம்! அவர்கள் சொல்வது உங்கள் காதில் விழுகிறதோ இல்லையோ?"

"ஆமாம், கேட்கிறது. அவர்கள் இப்பொழுது மகா உக்கிரமா யிருக்கிறார்கள். ஆனால் ஒருவேளை எங்களை நேரிற்கண்டால் சாந்தமடைவார்கள். நாங்கள் அவர்களுக்கு எப்பொழுதும் நன்மையே செய்துவந்தோமல்லவா?"

என்று சொல்லிவிட்டு எப்பொழுதும்போல சாந்தகுணசீலராய் தம் ஸஹோதரனிருக்கும் அறையை நாடிச்சென்றார். ஆனால் அவர் முகம்மாத்திரம்சற்று முன்பு இருந்ததைக்காட்டிலும் சிறிது மனக்கலக்கத்தைக் காட்டிற்று.

இரண்டாம் அத்தியாயம்

இரண்டு ஸஹோதரர்கள்

சிறைக்காவலன் கிராதனுடனும், அவன் மகள் கல்பகத்துடனும் சற்றுப் பேசியபிறகு தேவதத்தர் தம் ஸஹோதரனிருந்த அறையை நாடிச்சென்றார். காரணேசர் பலவிதஹிம்ஸைகளை அனுபவித்துக் கடைசியாக ஓர் அறையில் கட்டில் ஒன்றில் படுத்திருந்தார். யாதொரு காரணமுமின்றி அவர் ஒப்புக்கொள்ளக்கூடிய குற்றமே கிடையாது; அவரும் எதையும் ஒப்புக்கொண்டு வெளியிடவில்லை. மூன்றுநாள் பலவிதஹிம்ஸைகளுக் குள்ளானார். மரணமே தமக்குக் கதியென்று எதிர்பார்த்திருந்தவர் தேசப்ரஷ்டத்வந்தான் தமக்குத் தீர்மானிக்கப் பட்டது என்பதைக் கேட்டு ஸ்வயேச்சை யடைந்துவிட்டதாக எண்ணினார். படுத்துக் கொண்டு இவ்விஷயங்களைப்பற்றியும் தம் தமையனைப்பற்றியும் எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில், கதவு திறக்கப்பட்டது. தேவதத்தர் உள்ளேநுழைந்து காரணேசரின் படுக்கைக்கு அருகில் சென்று கண்களில் நீர் ததும்ப மிக்க உருக்கத்துடன் "ஆ தம்பி! காரணேசா! என்னகஷ்டம் அனுபவிக்கும்படி நேரிட்டதடா!" என்று சொல்லிக் கதறினார்.

"அண்ணா! எனக்கு இனிக்கஷ்டமேயில்லை; நீ என் பக்கத்தில் இருக்கிறாயே, எனக்குக் கஷ்டமேது?"

"அடா, கண்மணி! உன்னை இந்த ஸ்திதியில் பார்ப்பதற்கு என் மனம் பதறுகிறதேடா! ஸஹிக்க முடியவில்லையே!"

"அது கிடக்கட்டும் அண்ணா! அவர்கள் என்னை ஹிம்ஸித்தபோது உன்னைப்பற்றித் தான் அண்ணா! நினைத்துக்கொண்டு வருந்தினேன். இப்பொழுது நீ என்பக்கத்தில் வந்திருக்கிறாய். நம் கஷ்டமெல்லாம் மறந்து போய் விட்டது. நீ என்னை அழைத்துக் கொண்டு போகத்தானே வந்திருக்கிறாய்?"

"ஆம்."

"என் ரணமெல்லாம் அப்பொழுதே பறந்து போச்சு. என்னை மெள்ளப் பிடித்து எழுந்திருக்கச்செய். நான் நடக்கிறதைச் சற்றுப் பார்."

"அப்பா, நீ வெகுதூரம் நடக்கவேண்டியதில்லை. குளத்தங்கரையில் நம் வண்டி வந்து நிற்கிறது."

"எல்லாம் சரிதான். நீ எவ்வளவோ அபூர்வமான செயல்களையெல்லாம் நாட்டிற்காகச் செய்திருக்கிறாய். ஆனாலும் தற்காலம் இந்த ஆரவாரத்தில், நாட்டுப் பகைமையாகிய பேரலையில், இக்கடுங்காற்றில் உன் சஹோதரனை

பெண்ணாசை ஒரு பக்கம், மண்ணாசை ஒரு பக்கம்.

பூதனக்ருஹத்திலிருந்து அழைத்துப்போவது முடியாதுபோ லிருக்கிறதே!"

"காரணேச! எல்லாம் பகவத் ஸங்கல்பம். நம்மா லானமட்டும் பார்க்கலாம். ஆ! முதலில் உன்னை ஒன்று கேட்கவேண்டும்."

"ஹா ஹா! அதென்ன, அப்படி இரைச்சல்? எவ்வளவு உக்கிரம்! யார்மேல் இதெல்லாம்?"

"எல்லாம் நம்மிருவர்பேரிலுந்தான். அப்பா காரணேச! எதிர்க்கட்சிக்காரர் நம்மீது அனேக கோள்கள் சொன்னது போதாமல் நாம் பாஞ்சால நாட்டாருடன் ஸமாதானம்செய்ய முயன்றதாகவும் தூற்றுகிறார்கள்."

"அட, மடமக்களா!"

"ஆம், அவர்கள் சொல்வது இதுதான். லோகபாலனுக்கு நாம் எழுதிய நிருபங்களை அவர்கள் கண்டுபிடித்துவிட்டார்களானால், நீ சொல்வதுபோல் நான் எவ்வளவு சாமார்த்தியசாலியா யிருந்தபோதிலும், ஸௌக்கியமாய் நாட்டைவிட்டு வெளிச்செல்வதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யமுடியாது. நம் ஜன்மபூமியில் நமக்குள்ளபற்றிற்கும் நம்நாட்டின் விருத்திக்கும் செல்வத்திற்கும் நான் உழைத்து வந்ததின் அத்தாட்சியாயுள்ள அந்நிருபங்கள் எதிர்க்கட்சியின் கையில் கிடைத்துவிட்டதானால் நமக்கு அடியோடு நாசந்தான். என்னிடம் வருவதற்கு முன்னமேயே நீ அவைகளை ஊரில் நெருப்பி லிட்டுவிடவில்லையா?"

"அண்ணா! இந்நாட்டில் வெகு சாமர்த்தியசாலி, தயாளு, உத்தமன் என்பதற்குச் சாட்சி பகர்கின்ற அந்நிருபங்களை எரிக்க யாருக்குத் தான் மனம் வரும்? நான் அவைகளை வெகு பத்திரமாகக் காப்பாற்றிவருகிறேன்."

"அப்படியானால் இன்றோடு நமக்கு முடிவு வந்துவிட்டது" என்று அமைதியுடன் கூறினார் தேவதத்தர்.

"அப்படி யொன்றுமில்லை; நம்முயிர் தப்புவதுமன்றி எல்லோருக்கும் நல்லவர்களாயும் ஆய்விடலாம்."

"எல்லாம் ஸரிதான். அக்கடிதங்களை என்ன செய்தாய்?"

"பார்க்கவன், உனக்குத் தெரியுமல்லவோ? என்னிடம் பாடம் கற்றுக்கொள்ள அடிக்கடி வருவானே! அவனிடத்தில் கொடுத்துப் பத்திரப்படுத்தச் சொல்லியிருக்கிறேன்." "ஐயோ பாபமே! மஹா சாமர்த்தியசாலி யாயிற்றே; கபடமற்ற கன்னியனாயிற்றே! அவனிடத்திலா இந்த ரஹஸ்யங்கள் இருக்கின்றன! ஹா! கஷ்டம், கஷ்டம்! அவனுக்கும் விபரீத காலம் வந்துவிட்டதா?"

"ஏன் அண்ணா! அவனுக்கு விபரீதகாலம்? அவனைப்பற்றி எனக்கொன்றும் தெரியாதா? அவன்மனத்தில் உதிக்கும்எண்ணங்கள், அபிப்ராயங்கள் எல்லாவற்றையும் நானறிவேன். அது கிடக்கட்டும். ரஹஸ்யத்தை அவன் எப்பொழுதும் வெளிப்படுத்தமாட்டான். அவனுக்கு அதைப்பற்றி ஒன்றுமே தெரியாது."

தேவதத்தர் வியப்படைந்தவராய் தம்பியை நோக்கி "அப்பா! அப்படியானால் அவைகளை அப்படியே கொளுத்திவிடும்படி சொல்லியனுப்பிவிடுவோம்; இன்னும் சற்று அவகாசம் இருக்கிறது" என்றார்.

"ஆனால் யாரை அனுப்புவது?"

"நம் மாயாண்டி யிருக்கிறான். நமக்குத் துணையாக அழைத்துப்போகலாமென் றிருந்தேன். அவன் என்னுடன் இங்கு வந்திருக்கிறான்."

"அந்தக் கடிதங்களை அவர்கள் கண்டுவிட்டால் நம்மைக் கொன்றுவிடுவார்களா? உனக்கு என்ன தோன்றுகிறது?"

தேவதத்தர் பதில் ஒன்றும் சொல்லவில்லை. கையால்மட்டும் சிறைக்கூடத்தின் வெளியைச் சுட்டிக்காட்டினார். அதே ஸமயம் பேரிரைச்சலும் ஆரவாரமும் பயங்கரமான கொக்கரிப்பும் உக்ரத்துட னெழும்பியது.

"ஆஹா! இவர்கள் செய்யும் கோலாஹலம் வெகு நன்றாயிருக்கிறது! இப்படி இவர்களிருப்பதின் தாத்பர்யமென்ன?"

தேவதத்தர் மெதுவாய் சாளரத்தைத் திறந்தார். "துரோகிகளைக் கொல்லுங்கள்!" என்று கோஷம் கிளம்பியது.

"காரணேசா, காது கேட்கிறதா?"

"துரோகிகளா? யாரைச் சொல்லுகிறார்கள்? நம்மைத்தான்போ லிருக்கிறதே!"

"ஆம், நம்மைத்தான்."

"மாயாண்டி எங்கே?"

"அதோ வெளியில் தாழ்வாரத்தில் நிற்கிறான்."

"அவனை உள்ளே வரச்சொல்லேன்."

31. பெண்டிர்க்கு அழகு பேசாதிருத்தல்.

உடனே தேவதத்தர் கதவைத் திறந்து மாயாண்டி என்னும் தம் வேலைக்காரனைக் கூப்பிட்டு "மாயாண்டி, நம் தம்பி சொல்வதைக் கவனமாய்க் கேட்டுக்கொள்" என்றார்.

"அண்ணா! வாய்வார்த்தையாய் சங்கதி சொல்லியனுப்பினால் போதாது. கஷ்டகாலம் —நான் கடிதம் எழுதியாகவேண்டும்."

"ஏனப்படி?"

"அக்கடிதங்களைப்போட்டுப் பத்திரப்படுத்தியிருக்கும் பெட்டியை என் நேர் உத்தரவில்லாமல் பார்க்கவன் ஒன்றும் செய்யமாட்டான்.

"ஸரிதான். உன்னால் எழுதமுடியுமா?" என்று நசுக்குண்ட விரல்களையும் ரணமாயிருந்த கையையும் பார்த்துக் கூறினார் தேவதத்தர்.

"மசிக்கூடும் பேனாவும் இருந்தால் எப்படி முடியாமற்போகும் என்பதைப் பார்க்கலாம்."

"இதோ ஒரு பென்ஸிலாவது ஸமயத்திற்கு இருக்கிறது இங்கே."

"ஏதாவது காகிதம் இருக்கிறதோ? என்னிடத்தில் ஒன்றுமில்லை. எல்லாவற்றையும் பிடுங்கிக்கொண்டார்கள்."

"இதோ பகவத்கீதை. முதல் தாளைக் கிழித்துக்கொள்."

பென்ஸிலை எடுத்து, காரணேசர் மிக்க சிரமத்துடன் எழுதத் தொடங்கினார்.

"என் அன்பார்ந்த பார்க்கவ!—உன்னிடம் நான் வைத்திருக்கும் பெட்டியை அப்படியே தீயிலிட்டுவிடு. அதைப் பாராமலும் திறவாமலும் அதிலிருப்பவை எக்காலத்தும் உனக்கே ரஹஸ்யமாயிருக்கும் வண்ணம் தீக்கிரையாக்கிவிடு. இப்படிப்பட்ட ரஹஸ்யங்களை வைத்திருப்பவர்களுக்கு இவைகளே யமனென்று நீ கருதக்கடவாய். அதை சாம்பராக்கினையோ, எங்களுக்கு உயிர்ப்பிச்சை தந்தவனாவாய்.

ஆசீர்வாதம், காரணேசன்.

ஆகஸ்ட்௴ 20௳ 167—ஹ."

தேவதத்தர் கண்களில் நீர் ஆறாய்ப்பெருக்கி அக்கடிதத்தை வாங்கி மாயாண்டியிடம் கொடுத்து ஏதோ சங்கதிகள் சொல்லியனுப்பினார்.

பிறகு பகவந்நாமாவை ஸ்மரித்து தேவதத்தர், "அப்பா காரணேசா! நாம் போகலாம் வா" என்றார்.

மூன்றாம் அத்தியாயம்

படுகொலை

பூதனக்ருஹத்தின் வெளியில் பிரஜைகளின் ஆவேசம் மும்முரமடைந்துவருகின்றது. உள்ளே தேவதத்தர் தம் ஸஹோதரரை அழைத்துக்கொண்டுபோவதில் கண்ணுங் கருத்துமாயிருந்து துரிதப்படுத்திவருகிறார். அச்சமயத்தில் நகரஸபாமண்டபத்தை நோக்கிப் போகிற சிலருடன் வெகுவிரைவாய் போய்க்கொண்டிருக்கிறான் ஒருவன். அவனுக்கு வயது சுமார் 22 அல்லது 23 இருக்கலாம். உத்ஸாகக் குறிகளைக் காணோம் அவன் முகத்தில். தன்னை யாராவது பார்த்துவிடுவார்களோ என்று, கண்ணைத் துடைக்கும் பாவனையாய்த் தன் கைக்குட்டையால் அடிக்கடி முகத்தை மூடிக்கொள்கிறான். சாதாரண உடைதான் தரித்திருக்கிறான்; மற்றவர்களைப்போல் கையில் ஆயுதங்களைக் காணோம். அவன் கைகள் மெலிந்து நீண்டிருக்கின்றன. பூதனக்ருஹத்தில் நடக்கும் காட்சிகளை வெகு ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்த ஒரு போர்வீரனுடன் வந்துகொண்டிருக்கிறான் அவன்.

கோவீதியின் கடையில் வந்ததும் அந்தமனிதன் நகர ஸபாமண்டபத்தின் மேன்மாடியை நோக்கலானான். அவ்விடத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு ஜன்னல்வழியாக ஒருவன் ஜனங்களுக்கு ஏதோ சொல்லவந்தான்.

"அம்மாடிமேல் இருப்பது யார்?" என்று போர்வீரனை அவ்வாலிபன் கேட்டான்.

"அவர்தாம் மோஹனலால். ஜனப்பிரதிநிதிகளில் ஒருவர்" என்றான் போர்வீரன்.

"எப்படிப்பட்டவர் அவர்? அவரை உனக்குத் தெரியுமா?"

"மஹாராஜ், அவர் மஹா கௌரவம் வாய்ந்தவரென்று ஜனங்கள் சொல்லிக்கொள்கிறார்கள். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். எனக்கு அவர் சிறிதாவது அறிமுகம் கிடையாது."

"ஸரி, சற்றுநின்று எல்லாவற்றையும் பார்க்கலாம்."

அப்படியே யாகட்டுமென்பதற் கறிகுறியாய்த் தலையை யசைத்து மௌனமாயிருந்தான் போர்வீரன்.

"இம் மோஹனலால் கௌரவஸ்தராய்மட்டும் இருப்பவராயின் இப்பித்தம்பிடித்து அலை

யும் ஜனங்களின் வேண்டுகோளுக் கிணங்கியே பேசமாட்டார்" என்றான் வாலிபன். இவன் யாரென்றாலோ புதிதாய் நியமிக்கப்பட்ட நாட்டுத் தலைவனாகிய முத்கலன்!

மோஹனலால் பேச எவ்வளவோ முயன்றும் அவன் மொழிகள் ஜனங்களின் செவியில் நுழையவில்லை. கைகளையும் கால்களையும் ஆட்டிப் பலவித சைகைகள் செய்வதுதான் தெரிந்தது. தான் சொல்வதை ஒருவரும் கேட்கிறதில்லை என்று தெரிந்தவுடன் திரும்பவும் மேல்மண்டபத்துள் நுழைந்தான்.

முத்கலனும் போர்வீரனும் அங்கேயே நின்றுகொண்டிருந்தார்கள். ஜனக்கூட்டம் ஸபாமண்டபத்துள் ஆரவாரத்துடன் நுழைந்துசெய்யும் அமளி வெகு நன்றாய் அவர்கள் செவிக்கெட்டியது. திடீரென்று அரவமடங்கியது. மறுபடியும் க்ஷணநேரத்தில் முன்னிலும் பன்மடங்கதிகமாய்க் கிளம்பி அக்கட்டடமே அதிர்ந்துவிழும்படி பேரிடிபோல முழங்கியது. கீழே படிக்கட்டுகள் மூலமாய் வெகு பரபரப்புடன் கூட்டங் கூட்டமாய்த் திரண்டு வாயிலினருகில் வந்துசேர்ந்து புற்றிலிருந்து ஈசல் புறப்படுவதுபோல் வெளிவந்தார்கள் அவர்கள். இப்படி வந்தவர்களின் முதலில் இருந்தான் தைகலிகன்; மகா ஆத்திரத்துடன் பறந்தான்; குடிவெறிகொண்டவனைப்போல் பல்லைக்காட்டி இளித்தான்; முகம் பார்க்கப் பயங்கரமாயிருந்தது.

'கைக்கு வந்துவிட்டது, கைக்கு வந்துவிட்டது' என்று ஓர் காகிதச் சுருளை கையிலெடுத்து உதறிக் காட்டினான்.

'ஹா, உத்தரவு வாங்கிவிட்டார்கள்' என்று போர்வீரன் பிரமையடைந்தவன்போல் முத்கலனுக்குச் சொன்னான்.

சிறைக்கூடத்தின் வெளியிலும் அருகிலும் ஏராளமான ஜனங்கள் கூடியிருந்தார்கள். இவர்கள் செய்யும் ஆரவாரத்தையும் அக்கிரமங்களையும் வெகு சாமர்த்தியத்துடன் அடக்கிக் கொண்டிருந்தார்கள் சில குதிரைவீரர்கள். "இதோ உத்தரவு" என்று பதினாயிரம் பேர்கள் கூவினார்கள்; தைகலிகன் ஸேனாதிபதியிடம் சென்று அச்சீட்டை நீட்டினான். அவன் அதைக் கண்டதும் மதிகலங்கியவனாய் படித்துப்பார்த்து "இவ்வுத்தரவிற்குக் கையெழுத்திட்டவர்களே காரணேசரின் கொலையாளிகள், இவ்வபவாதமான உத்தரவில் ஓரெழுத்து எழுதுவதைக் காட்டினும் என் இருகைகளையும் நானாயிருந்தால் இழந்து விடுவேன்" என்று உரத்துச் சொன்னான். அச்சீட்டைத் தன்னிடமிருந்து எடுத்துக்கொள்ள வந்தவனொருவனைத் தம் கத்திமுனையால் ஒதுக்கிவிட்டு "சற்றுநிதானி; இத்தகைய நிரூபங்கள் வெகு பத்திரமாயிருக்கவேண்டும்" என்று சொல்லி அதை மடித்துத் தன் சட்டைப்பையில் போட்டுக்கொண்டான். பிறகு தன் வீரர்களை வந்தவழியை நோக்கித் திரும்ப ஆக்ஞாபித்தான். பிறகு மெதுவாய்—ஆனால் அருகிலுள்ள எல்லோர் காதிலும் நன்றாய்ப் படும்படியாய், "ஆஹா, கொலைபாதகர்காள்—உங்கள் வேலையைச் செய்யுங்கள்" என்றான். உடனே பயங்கரமாய் ஊளையிட்டு இரையத் தொடங்கிவிட்டார்கள்.

தேவதத்தர் தம் ஸஹோதரருக்குக் கை கொடுத்து உதவி, துரிதமாய்ப் புறப்பட்டுக் கொண்டிருக்கையில் தங்களுக்கு நேரிட்டிருக்கும் ஆபத்தை எவ்விதத்திலும் அதிகமாய்ச் சொல்லவில்லை. தம் ஸஹோதரரின் தோளில் சாய்ந்தவண்ணம் படியில் இறங்கிவருகையில் கீழே கல்பகம் நடுக்கத்துடன் நின்றிருப்பதைக் கண்டார் காரணேசர்.

"அண்ணா! என்ன துரதிருஷ்டம்!"

"என்ன சமாசாரம்? குழந்தாய்!" என்றார் தேவதத்தர்.

"வீரகேசரியின் ஸேனையை அனுப்பிவிடும்படி உத்தரவு பெறுவதற்கு நகர ஸபாமண்டபம் போயிருக்கிறார்களாமே!"

"ஆ, அப்படியா! வெளியிலுள்ள போர்வீரர்கள் போய்விட்டால் நமக்கு மஹா ஆபத்தாயிற்றே!"

(இன்னும் நடுக்கத்துடன்) "நான் உங்களுக்குச் சொல்லவேண்டிய சமாசாரம் ஒன்றிருக்கின்றது!"

"என்ன சொல்லப்போகிறாயம்மா?"

"ஜனங்கள் நடமாட்டமில்லாத அடுத்த தெருவிற்குப் போகும் தோட்டவழியாய் புறக்கடைக் கதவைத் திறந்து போய்விடலாமே! வாசல்வழியாய் வருவார்கள்வருவார்கள் என்று அவர்கள் காத்துக்கொண்டிருக்கும்போது நீங்கள் நகரைவிட்டு எந்த வழியாய்ப் போக

வேண்டுமோ அதைப்போய் அடைந்துவிடலாமல்லவா?"

"ஆனால் இவனால் நடக்கமுடியாதே!"

காரணேசன் (உறுதியுடன்) "நான் நடக்க முயல்கிறேன் என்னாலானவரையில்."

"உங்கள் வண்டியிருக்கிறதோ இல்லையோ?"

"அது வாசலிலன்றோ நின்றிருக்கிறது."

"இல்லை, இல்லை. உங்கள் வண்டிக்காரன் நிரம்ப நல்லவனென்று கருதி வண்டியைப் பின்புறம் கொண்டுவரச் சொல்லியிருக்கிறேன்."

இரு ஸகோதரரும் ஒருவரையொருவர் ஏறிட்டுப்பார்த்துப் பின் கல்பகத்தை வெகு விசுவாஸத்துடன் நோக்கினார்கள்.

"எல்லாம் ஸரிதான். கிராதன் சதவைத் திறப்பானா என்பதுதான் ஸந்தேகம்."

"எங்கப்பா திறக்கவே மாட்டார். எனக்கு அது முன்னமே தெரியும். அங்கே அவர் என்னமோ பேசிக்கொண்டிருக்கையில் அவர் கொத்திலிருந்து சாவியைக் கொண்டுவந்துவிட்டேன்."

"குழந்தாய்! உனக்கு நாங்கள் என்ன பிரதியுபகாரம் செய்யப்போகிறோம். நான் இருந்த அறையில் என் கீதை யிருக்கிறது. ஞாபகார்த்தமாய் அதை யெடுத்துவைத்துக்கொள். நீ ஸௌபாக்கியவதியாய் இருப்பாய்!"

"ஆஹா, அப்படியே எடுத்துக்கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் பிறகு—

"எனக்கு ஸம்ஸ்கிருதம் தெரியவில்லையே?" என்று துக்கித்தாள்.

"இரைச்சல் அதிகமாய்க்கொண்டே வருகிறது. தம்பி! இனிச் சற்றேனும் தாமஸிக்கக் கூடாது."

"இப்படியே என்னுடன் வாருங்கள்" என்று அப்பெண்மணி அவ்விருவரையும் உட்கட்டின் வழியாய் தோட்டத்திற்கு அழைத்துச் சென்றாள். அவள் போனவழியே சென்று, பத்துப்பன்னிரண்டு படிகளைக் கடந்து, ஓர் அகன்ற முற்றத்தில் வந்துசேர்ந்தார்கள். பெரிய மதிட்புறத்திலுள்ள இருப்புக் கதவை கல்பகம் திறக்கவும் ஸஹோதரர் இருவரும் ஜன ஸந்தடியில்லாத ஒரு தெருவில் தங்கள் வண்டியிருப்பதைக் கண்டார்கள்.

"ஜல்தி, ஜல்தி, எசமாங்க—ஓங்களுக்கு எல்லாம் கேக்குதோ யில்லையோ!" என்றான் வண்டிக்காரன்.

"பகவான்தான் துணை!—என்னமோ அவர்கள் வாயிற்கதவைப் பெயர்க்கிறார்கள்போல் இருக்கிறதே" என்றாள் கல்பகம்.

தேவதத்தர் வெகு விரைவாய் தம் ஸஹோதரனுடன் வண்டியிலேறி உட்கார்ந்து "அடே கீழவாயிலுக்கு ஓட்டு" என்று வண்டிக்காரனை எச்சரிக்கை செய்தார்.

கல்பகம் நினைத்தவண்ணம் வெறிகொண்ட அம்மக்கள் சிறைக்கூடத்தின் கதவைப்பிடுங்கிவிடுவதற்கு முயன்றுகொண்டிருந்தார்கள். அவர்களை அடக்குவார் யாருமில்லை.

கதவும் மதிற்சுவரும் மிக்க உறுதியாயிருந்தனவேனும், கிராதன் சதவைத் திறக்க முடியாதென்று கண்டிப்பாய் மறுத்தனனேனும், அது எத்தனை நாழிகைதான் அப்பித்தர்களுக்குமுன் நிற்கும்? சிறைக்காவலனும் கிராதன் மனமுடைந்து அவர்களே கதவைத் தகர்த்துவிடுவதினும் தானே திறந்து விடுவது நலமா என்ற யோசனையில் ஆழ்ந்தவனாயிருக்கையில், யாரோ தன் வேஷ்டியை இழுத்ததாகத் தெரியவந்தது. திரும்பிப் பார்த்தான். தன் மகள் கல்பகம்.

"இவர்கள் போடும் இரைச்சலைக் கேட்டாயா?"

"ஆஹா, நன்றாய்க் கேட்டேன். நானாயிருந்தால்—"

"என்ன செய்வாய்? கதவைத் திறந்துவிடுவாயோ?"

"ஹூம்—மாட்டவே மாட்டேன்."

"ஆனால் நம்மைக் கொன்றுவிடுவார்களே!"

"நம்மைப் பார்த்தால்தானே?"

"எப்படி நம்மைப் பார்க்கமாட்டார்கள்?"

"ஒளிந்துகொள்கிறது."

"எங்கே?"

"ரஹஸ்யமா யிருக்கிறதே அந்த நிலவறையில். இரண்டுபேரும் உள்ளே புகுந்து உட்பக்கம் பூட்டிக்கொள்ளலாம். அவர்கள் வெளிச்சென்ற பிறகு நாம் அங்கிருந்து வந்துவிடலாம்."

"நீ சொல்வது நிரம்ப ஸரி! கண்ணே, உனக்கு இவ்வளவு தோன்றிற்று?" என்றான்.

வெளியில் ஜனங்கள் உக்ராவேசத்துடன் கதவைத் தகர்க்கிறார்கள். கதவும் உடைந்து

விழுந்து, எல்லோரும் உள் நுழைகிற சமயம், கல்பகம் ஒரு பொறிக் கதவைத் திறந்து "அண்ணா, வா வா!" என்று கூவினாள்.

"நம் கைதிகள்!"

"பகவத் ஸஹாயந்தான் அவர்களுக்கு!"

கிராதன் தன் மகளுடன் பொறிக்கதவின் கீழ் நுழைந்தான். அதுவும் மூடிக்கொண்டது. ஜனங்களும் சிறைக்கூடத்தினுள்ளே நுழைந்து விட்டார்கள். கல்பகமும் கிராதனும் ஒளிந்துகொண்ட அறை வெகு மறைவான இடம். நகராதிபருக்கு அது தெரியுமேயொழிய மற்றெவருக்கும் தெரியாது. உள் நுழைந்த ஜனங்கள் இரத்தவெறி கொண்டவர்களாய் "அடி! கொல்லு! பாபிகள்! துரோகிகள்!" என்று கொக்கரித்தார்கள்.

இனி ஒருக்ஷணமாவது எதனிமித்தமும் தாமஸிக்க ஸாத்யமில்லை; வெகு விரைவில் இவ்விரு ஸஹோதரரும் வெளிக்கிளம்பினாலொழிய உயிர் தப்பமுடியாது. சிறைக்கூடத்தில் நுழைந்த நகரவாசிகள் எப்படியாயினும் இவர்களைப் பிடித்துச் சற்றேனு மிரக்கமில்லாமல் அவ்வேளையில் தங்கள் வாள்களுக்கிரையாக்கி விடுவார்கள். ஆகவே வண்டிக்காரனை வண்டியை வேகமாய்விடத் தூண்டினார்கள். சிறிது நேரத்திற்குள் வண்டி திடீரென நின்றுவிட்டது.

"என்ன ஸமாசாரம்?" என்றார் தேவதத்தர்.

"எசமாங்க, கீழவாசல் சாத்தி யிருக்குதுங்க!" என்று நடுக்கத்துடன் சொன்னான் வண்டிக்காரன். தேவதத்தர் வண்டிக்காரன் சொன்னது சரிதான் என்று ஜன்னல் வழியாய் எட்டிப்பார்த்தார்.

"பாதகமில்லை; நீ ஓட்டு. (நாட்டைவிட்டு நீங்கிப்போகும்படி செய்த) தீர்மான உத்தரவு என் கையிலிருக்கிறது. வாயிற்காவலன் கதவைத் திறப்பான்" என்றார்.

தேவதத்தர் ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தபொழுது ஒருவன் அவர் முகத்தைக் கண்டு இன்னாரென அறிந்துகொண்டு வெகு வேகமாய் ஓடிச் சிலருடன் தான் கண்டதை ஆச்சரியத்துடன் அறிவித்தான. இதற்குள்ளாக வண்டி கீழவாயிலின் பக்கத்தில வந்து நின்றது. வண்டிக்காரன் காவலனை விளித்து கதவைத் திறக்கும்படி சொல்ல, அவன் நகராதிகாரிகள் திறவுகோலைத் தனனிடமிருந்து அன்று காலையில் வாங்கிக்கொண்டு போய்விட்டபடியால் முடியாதென்று சொல்லிவிட்டான்.

"சரி; மனுஷ்ய யத்தினத்திற்குக் குறைவில்லாமல் செய்துவிடலாம்; பிறகு பகவத்சங்கல்பம் இருக்கவே இருக்கிறது. வடக்குவாயில் வழியைப் பார்க்கலாம். அதோ இருக்கிற கூட்டத்தின் மத்தியில் வெகு வேகமாய் விட்டு இடதுபக்கம் இருக்கும் வீதியில் திருப்பு; அந்த ஒருவழிதான் இப்பொழுதிருக்கிறது" என்றார் தேவதத்தர்.

குதிரைகள் வெகு வேகத்துடன் வருவதை ஜனங்கள் கண்டவுடன் உடனே வீதியின் குறுக்கே அணைபோட்டதுபோல் நின்றுவிட்டார்கள். "அடே பயலே! நிறுத்து, நிறுத்து!" என்று கூவிக்கொண்டே தங்கள் தடிகளைச் சுழற்ற ஆரம்பித்தார்கள். வண்டிக்காரன் குதிரைகளை வெகு ஆத்திரத்துடன் முடுக்கிய போதிலும் அவைகள் மேலே செல்ல வழியில்லாமையினால் நின்றுவிட்டன.

"அகப்பட்டுக்கொண்டார்கள்! அகப்பட்டுக்கொண்டார்கள்!!" என்ற ஓரே அமளி எங்கும் பரவியது. வண்டியை ஜனங்கள் சூழ்ந்துவிட்டார்கள். சிலர் குதிரைகளை அவிழ்த்துவிட்டனர். ஒருவன் வண்டிக்காரனை இழுத்துத்தள்ளித் துவைத்துவிட்டான். வேறு சிலர் வண்டியைத் திறந்து காரணேசரை இழுத்துவர, அவர் பாதம் பூமியில் படுவதற்கு முன்னமேயே ஒரு கொலைபாதகன் அவர் மண்டையை நோக்கி ஓங்கித் தன் தடியாலடித்துவிட்டான். அவர் மண்டை பிளந்து அவர்கள் கால்களின் கீழ் பிராணனைவிட்டார்.

"ஹா, தம்பீ, தம்பீ!" என்று கதறியழுது அந்த கோரத்தைக் காணச் சகியாராய்க் கண்களைத் தம் கையால் மூடிக்கொண்டார் தேவதத்தர்.

"அடே! கண்ணையா மூடிக்கொள்கிறாய்? இதோ அவைகளைப் பெயர்த்துவிடுகிறேன்" என்று ஒருவன் தன் ஈட்டியால் அவர் கண்ணை நோக்கிக் குத்தினான். தேவகத்தர் இடறிக் கீழே விழுந்தார். எழுந்திருப்பதற்குள் அவர் மண்டையை நோககி மற்றொரடிவிழ, அப்படியே நிலத்தில் சாய்ந்து ஆவியை நீத்தார். ஹா! கொடுமை, கொடுமை!

மானிடராய்ப் பிறந்து நற்பயனை யடைய விரும்பாமல் கேவலம் காட்டு மிருகங்களாம்

புலி, ஸிம்ஹங்களைப் போல இரத்தவெறி கொண்டு திரியும் இவர்களை என்னவென்று சொல்வது !

கொடிய பிராணிகள்கூடத் தம்மினமென்று கருதி சிலசமயங்களில் ஒத்துவாழ்கின்றன. இவர்கள் அக்கொடிய பிராணிகளிலும் கேவலமான பிசாசங்கள் என்றே சொல்லவேண்டும்.

இவர்கள் இம்மாதிரி தேவதத்த காரணேசர்களைக் கொலைபுரிந்து ஆனந்தக் கூத்தாடிக் கொண்டிருக்கும் பொழுது, மாயாண்டி என்னும் வேலைக்காரன், தான் புறப்பட்டபிறகு நடந்த கோரசம்பவங்கள் ஒன்றையும் அறியானாய், ஓர் நல்ல குதிரைமீதேறி நன்னிழலமைந்த சாலைமார்க்கமாய்ச் சென்று தார்த்தாரக நகரை யடைந்தான்.

நமது சிறு கதை

OUR SHORT STORY

(205-ம் பக்கத் தொடர்ச்சி.)

பத்தாம் அத்தியாயம்

முயற்சியின் பயன்

முந்தின அத்தியாயத்திற் கூறிய சம்பவங்கள் நடந்து ஒரு வாரம் கழித்து, ஒருநாள் இரவு எட்டுமணி சுமாருக்குப் பாங்கிமலையில் முத்துக்குமாரசாமி பிள்ளையினுடைய பங்களாவில் ஓர் அறையில் பிள்ளையவர்களும் துரைசாமி பிள்ளையும் சம்பாஷித்துக் கொண்டிருந்தனர்.

முத்து.—துரைசாமி! அன்று சாயந்திரம் நாம் எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனில் சந்தித்தோமே, அதற்குப்பிறகு நடந்ததை யெல்லாம் சொல், பார்ப்போம்.

துரை.—தாங்கள் ஸ்டேஷனைவிட்டுச் சென்றபின், நான் மூன்றாவது வகுப்புப் பிரயாணிகள் இருக்குமிடத்துக்குச் சென்று, கூட்டத்தோடு கூட்டமாகக் கலந்துநின்றேன். அச்சமயத்தில் இரண்டு பெண்பிள்ளைகள் என் தாயார் பெயரையும் என் தாயாரைப்பெற்ற பாட்டனார் பெயரையும் சொல்வதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு அவர்கள் பேசியதைக் கவனித்தேன். அவர்கள் பேசியதிலிருந்து என் தாய்க்குக் கலியாணமாகவில்லை யென்று என் தாயின் ஊரான குன்னத்தூர் முழுவதும் அபிப்பிராயப்பட்டதாகத் தெரியவந்தது. அது கேட்டுப் பெருந்துயரமுற்று, என்னை வளர்த்துக்காப்பாற்றிய என் தாயின் தமக்கை தன் மரணகாலத்தில் பல்லாவரத்தில் யாருடன் வசித்து வந்தாளோ அந்த ஸ்திரீயைக் கண்டு உண்மை யாதென்று கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டுமென நிச்சயித்து, பல்லாவரத்துக்கு அடுத்த ரயிலிலேயே சென்று, அந்த ஸ்திரீ குடியிருந்த வீட்டையடைந்து உள்ளே சென்று, "என் பெரியதாயார் இறக்குங்காலத்தில் ஏதாயினும் தஸ்தவேஜு வைத்துவிட்டுப் போனார்களா?" என்று கேட்டேன். அந்த அம்மாள் ஒரு கட்டுக் காகிதங்களைக் கொடுத்தாள். அக்கட்டிலுள்ள காகிதமொன்றை எடுத்துப் பார்த்ததில், சுபேதார் மேஜர் மாணிக்கம்பிள்ளை என் தாயாரைத் திருச்சானூரில் கலியாணஞ் செய்துகொண்டதாகவும், அவர் தம் மனைவியாகிய என் தாயார் அவருக்குப் பிற்காலம் அவர் சொத்து முழுவதையும் அடையவேண்டுமென்று ஓர் உயில் எழுதி, திருப்பதிசப்ரெஜிஸ்ட்ரார் ஆபிசில் ரெஜிஸ்தர் செய்வித்ததாகவும், அதில் ஒரு பல்லாவரம் கண்ணுசாமி பிள்ளையும், ஒரு பார்வதியம்மாளும் சாக்ஷிக் கையெழுத்துப் போட்டிருந்ததாகவும் தெரியவந்தது. பல்லாவரம் கண்ணுசாமி பிள்ளையென்ற மனிதன் ஒரு சமயம் பல்லாவரத்தில் முத்துசாமி பிள்ளையின் பங்களாவின் தோட்டக்காரனாகிய கண்ணுசாமி பிள்ளையாக விருக்கலாமென்று சந்தேகித்து, அம்மனிதனிடம் மாறுவேடம் பூண்டு சென்று இச்சங்கதியைக் குறித்துக் கேட்டேன்.

முத்து.—பலே துரைசாமி! ஒருவாரத்துக்குள் நிரம்பவேலை செய்து விட்டாயே! அத்தோட்டக்காரன் என்ன சொன்னான்?

துரை.—அவன் ஒன்றும் சொல்லமாட்டேன் என்கிறான். என் தாயை மணந்து கொண்டவர் அவனுக்கு எஜமானரா யிருந்தாராம். அவர் இன்னாரென்று எவருக்கும் சொல்லுவதில்லையென்று தன் எஜமானருக்கு

அவன் சத்தியஞ் செய்துகொடுத்தானாம். ஆகையினால் ஒன்றும் சொல்லமுடியாதென்கிறான்.

முத்து.—எஜமானனிடம் அவ்வளவு விசுவாசம் பாராட்டுபவன், எஜமானன் பிள்ளை பிறரால் இகழப்படும்பொழுது, உண்மையையுரையா திருப்பது தருமமா வென்று கேட்டுப் பார்த்திருக்கலாம்.

துரை.—அவ்வாறு நான் கேட்டதற்கு, அவன் எந்தக் காரியம் எப்படியானாலும், தான் சத்தியந் தவறமுடியாது என்று சொல்லிப் பிறகு பல்லாவரத்திலேயே சோற்றுக்கடை வைத்திருக்கும் நாகலிங்கமுதலியாரின் மனைவி பார்வதியம்மாள்தான் உயில்சாசனத்தில் கையொப்பமிட்ட மற்றொரு சாக்ஷியென்றும், அவள் தன்னைப்போல் வாக்குத்தத்தம் செய்திருக்கமாட்டாளாகையால், அவள் உண்மையை யுரைக்கக்கூடும் என்றும் சொன்னான். அந்த அம்மாளிடமும் மாறுவேடம் பூண்டுபோய்ப் பேசினேன்.

முத்து.—இதற்குள்ளாக அதுவும் தீர்ந்து போயிற்றா? உன் பிறப்பைக்குறித்துப் பெருஞ் சந்தேகம் ஏற்பட்டு இன்னும் ஒருவாரமாக வில்லை. அதற்குள்ளாகவே அச்சந்தேகம் நீங்கியும் போய்விட்டதுபோ லிருக்கிறதே!

துரை.—இல்லை, இன்னும் நீங்கவில்லை. ஆனால் அது நாளைக் காலையில் நிச்சயம் நீங்கிவிடும்.

முத்து.—அவ்வளவு நிச்சயமான நம்பிக்கைக்குக் காரணமென்னவோ?

துரை.—அந்தப் பார்வதியம்மாள் என் தாயாரை மணந்துகொண்டவர் இன்னாரென்ற சங்கதி தனக்குத் தெரியுமென்றும், நான், முத்துசாமிபிள்ளை இருவர்களில் யார் அவளுக்கு அதிகப் பொருள் கொடுக்கிறார்களோ அவருக்கே அவ்விரகசியத்தை அவள் விற்கப் போவதாகவும் நான் யாரென அறியாமல் என்னிடம் வெளிப்படையாய்ச் சொன்னாள்.

முத்து.—நீ யாரென்று அவளுக்குத் தெரிவித்தாயோ?

துரை.—இல்லை இல்லை, நான் யாரோ திருச்சானூர்க் கோவிலைச் சேர்ந்த அதிகாரியென்று எண்ணிக் கொண்டிருக்கிறாள். தான் நாளைக் காலையில் முத்துசாமி பிள்ளையைப் பார்ப்பதற்காகச் சென்னைக்குச் செல்லுவதாகவும், அப்போது நான் அவள்கூடச் சென்று அவளுக்கு உதவியாயிருந்தால், எனக்கு நல்ல பரிசு தருவதாகவும் சொன்னாள். நானும் அதற்கிசைந்தேன். நாளைக்காலையில் அவளுடன் ரயிலேறிச் சென்னைக்குப் போகவேண்டும்.

முத்து.—அவள் அவ்விரகசியத்தை முத்துசாமிபிள்ளைக்கு விற்றுவிட்டால், என்ன செய்கிறது? எல்லாவற்றிற்கும் நான் நல்ல துப்பறிருவனை வரவழைத்து, நீயும் அவளும் நாளைக்காலையில் போகுமிடத்துக்கு உங்களைத் தொடர்ந்து வரும்படி அனுப்புகிறேன். சரி; இதிருக்கட்டும். சூதாணயக்காரர் சங்கதி என்ன? நான்கு நாட்களுக்குமுன் இன்னொரு முறை போலீஸ்காரர்கள் உன்னை வளைத்துக் கொண்டதும் அவர்கள் சூழ்ச்சியினால்தானே?

துரை.—ஆம்; அவர்கள் சூழ்ச்சியினால்தான் என் பெரியதாயாருடன் பல்லாவரத்தில் வசித்துவந்த ஸ்திரீயைப் பார்க்கச்சென்றேனென்று சொன்னேனல்லவா? அப்போது அவள் குடும்பத்தவரின் பேச்சு வந்தது. அவள் தன் சகோதரனொருவன் சந்நியாசியாகி அஞ்ஞானிகளுக்குப் போதித்து வந்ததைப்பற்றி மிகவும் புகழ்ந்துபேசி, பெட்டியிலிருந்து ஓர் போடோ படத்தை யெடுத்து அதில் அச்சகோதரனைக் காட்டினாள். அப்படத்தைப் பார்த்ததும், என் நெஞ்சம் திடுக்கிட்டது. ஏனெனில், கங்காதர முதலியார் என்றும் வீரபத்திரமுதலியார் என்றும் பல பெயர்கள் பூண்ட சூதாணயக்காரர் தலைவன் உருவமும் அப்படத்தில் காணப்பட்டது. முகஜாடையினால் அவனும் அந்த ஸ்திரீயின் சகோதரனென்று தெரிந்து கொண்டேன்.

முத்து.—ஹாம்! உலகம் பெரிது பெரிதென்று எல்லாரும் சொல்லுகிறார்களே! நீ சொல்லுவதைப்பார்த்தால், அது மிகவும் சிறிதுபோ லிருக்கிறதே! அம்மனிதன் உனக்கு மிகவும் நெருங்கினவனாயிருக்கிறானே! ஆராய்ந்து பார்த்தால், அவன் உனக்கு நெருங்கிய தாயாதியாயிருப்பான்போ லிருக்கிறதே!

துரை.—அப்படித்தான் தோன்றுகிறது. அப்படத்தில் அவன் உருவத்தைக்காட்டி அவன்யாரென்று அந்த அம்மாளைக் கேட்டதில், அவள் அவன் தன் சகோதரன் விசுவலிங்க முதலியாரென்றும், தங்கள் குடும்பத்தில் அவனொருவன் தான் ஈசுவரபக்தி யற்றவனென்றும் சொல்லி

அவர் நாஸ்திகத் தன்மையை விளக்குவதற்காக இரண்டு நாட்களுக்குமுன் அவனிடமிருந்து வந்த காகித மொன்றைக் காட்டினாள். அதன் தலைப்பில் விசுவலிங்க முதலியாரது விலாசத்தைப் பார்த்தனவேயன்றி என் கண்கள் அக்காகிதத்திலுள்ள மற்றவிஷயங்களைக் கவனிக்கவில்லை. மூன்று நாட்களுக்குமுன் நான் அவ்விலாசத்திற் கண்ட திருவான்மியூருக்குச் சென்று, இராயசம் விசுவலிங்க முதலியார் வீடு எதுவெனக் கேட்டுத் தெரிந்துகொண்டு போய், அவ்வீட்டுக்குச் சற்றுதூரத்தில் நின்றுகொண்டே அதைக் கவனித்துப் பார்த்தேன். அப்பொழுது அஸ்தமித்து நான்குநாழிகையாகியிருக்கும். திடீரென்று ஒரு ஜட்காவண்டி வந்து அவ்வீட்டுவாசலில் நின்றது. அதிலிருந்து ஒருவன் குதித்து அவ்வீட்டுக் கதவை மடமடவென்று தட்டினான். விசுவலிங்கமுதலியார் கதவைத் திறந்துகொண்டு, லாந்தருங்கையுமாக வெளியே வந்தார். விசுவலிங்க முதலியாரை விளக்கு வெளிச்சத்தில் பார்த்து, அவர் சூதுநாணயக்காரர் தலைவன்தா னென்பதை நிச்சயித்துக்கொண்டேன். அவர் திரும்பி உள்ளே சென்று, ஒரு கைப்பையுடன் திரும்பி வந்து, கதவை யிடித்தவனைப் பார்த்து, "குருசாமி! நான் திரும்பிவர எத்தனை நாட்களாகுமோ தெரியாது. நான் வரும்வரையில் வீட்டைப் பார்த்துக்கொள்ளவேண்டுவது உன் பொறுப்பு. ரயிலைப் பிடிக்கமுடியுமா? சரி, நேரமாகிறது. நான் போய்வருகிறேன்" என்று சொல்லிவிட்டு, வண்டியிலேறி வண்டியை வேகமாய் ஓட்டும்படி வண்டிக்காரனிடம் சொன்னார். அவர் புறப்பட்டுப் போனபிறகு குருசாமி என்ற மனிதன் வீட்டுக்கதவைப் பூட்டிக்கொண்டு லாந்தரை எடுத்துக்கொண்டு போனான். எப்படியாயினும் அவ்வீட்டினுள் புகுந்து, தலைவனுக்குச் சூதுநாணயக்காரர் எழுதிக்கொடுத்த ரசீதுகளைக் கைப்பற்ற வேண்டுமென நிச்சயித்து கொல்லை வழியாய் வீட்டுக்குள் நுழைந்து, என் சொக்காய்ப் பையில் நான் வைத்துக்கொண்டிருந்த சிறு லாந்தரை யேற்றிக்கொண்டு, படுக்கை யறைக்குச் சென்று அங்குள்ள பீரோக்களையும் மேஜைகளையும் திறந்துபார்த்து, நான் தேடிய ரசீதுகளை எங்குங் காணமல மனவருத்தத்துடன் அவ்வறையை விட்டுப் புறப்படுகையில், ஓர் மேஜையின்மீது புதிதாய்எழுதித் தலையொட்டி போஸ்டுக்கு அனுப்பத் தயாராக வைத்திருந்த கடிதமொன்றைக் கண்டு, அதை யெடுத்து மெல்லப்பிரித்துப்படித்துப்பார்த்தேன். அதில், "திருவல்லிக்கேணி, வெங்கட்ரங்கம் பிள்ளை தெரு, 25-ம் நெ. வீடு, முத்தம்மாள்" என்று மேல்விலாசம் எழுதியிருந்தது. அதில் தன்னைச் சில துஷ்டர்கள் தூக்கிக் கொல்ல முயலுவதாகவும், தான் அன்றுமுதல் நான்கு நாட்களுக்குள் அவனை வந்து பார்க்காமற்போனால், அவள் உடனே புறப்பட்டுத்திருவான்மியூருக்கு வந்து சமுத்திரக் கரையிலுள்ள குளத்துக்கு வடபுறத்திலுள்ள சவுக்குத் தோப்பில் குளத்தின் கரையிலுள்ள கோவிலுக்கு நேரெதிராக அதற்கு நூறு தப்படி தூரத்தில் சிறு கற்கள் குவிக்கப்பட்டிருந்த விடத்துக்குப்போய், அக்கற்களின் கீழே 'சென்னைப் போலீஸ் கமிஷனருக்கு' என்று விலாசம் எழுதிவைத்திருக்கும் ரசீதுக்கட்டை யெடுத்து உடனே தபாற்பெட்டியிற் போடவேண்டுமென்றும் எழுதியிருந்தது. அக்கடிதத்தைப் படித்துப் பார்த்தவுடன், நான் அவ்வீட்டைவிட் டகன்று, அக்கடிதத்திற் குறிப்பிட்ட விடத்துக்கு விரைந்து சென்று, அங்குள்ள கற்குவியலைக் கலைத்து அடியிலிருந்த காகிதக்கட்டை யெடுத்துப் பிரித்து, எனது கைலாந்தரின் வெளிச்சத்தில் அக்கட்டிலுள்ள காகிதங்க ளென்ன வென்று பார்த்தேன். அவைகள் யாவும் வெற்றுக் காகிதங்களாக இருக்கக்கண்டு திகைத்தேன். அச்சமயத்தில் "இன்னொருமுறை ஏமாந்து போனாய்!" என்று யாரோ ஒருவர் சொன்னார். அந்தப்புறமாய்த் திரும்பினேன். சமீபத்தில் ஒருவர் உட்கார்ந்திருக்கக் கண்டு அவாருகிற் சென்று, யாரென்று கேட்டேன். அவர் "இன்னொருமுறை ஏமாந்துபோனாய்!" என்று சொல்லி நகைத்தார். அந்தக் குரல் சூதுநாணயக்காரர் தலைவன் குரலென அறிந்து திடுக்கிட்டு விழித்தேன். பிறகு அவன் நயத்தினாலும் பயத்தினாலும் என்னைத் தனக்கு அடிமையாக்கிக்கொள்ள முயன்றான். நான் அவன் கூட்டத்தைச் சேரமாட்டேன் என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டு ரயில்ஸ்டேஷனுக்குப் பக்கத்திலுள்ள ஒரு சோற்றுக்கடையினுள் நுழைந்து சாப்பிட உட்கார்ந்தேன். அக்கடை வேலைக்காரச் சிறுமி வேகமாய் உள்ளே

நுழைந்து என்னை யணுகி, "ஐயா! நீதானா சூதுநாணயம் செய்யும் துரைசாமிபிள்ளை?" என்று கேட்டாள். நான் பயந்து எழுந்தேன். அவள், "ஐயா! போலீஸ்காரர்கள் உன்னைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் நான் உன்னைத் தப்புவிக்கிறேன், பயப்படாதே!" என்று சொல்லி, என்னை ஒரு பரண்மீது ஏற்றி ஒளித்துவைத்துக் காப்பாற்றினாள். எல்லாம் நாளைக்கு ஒருவிதமாய்த் தீர்மானிக்கப் படுமென்று ஏதோ என் மனத்திற் சொல்லுகிறது.

முத்து.—துரைசாமி! ஈசுவரன் உன் பக்கத்திலிருக்கிறா ரென்பதற் கையமில்லை. ஆகையினால், தைரியமாயிரு. நான் இப்போதே பட்டணம் சென்று, ஒரு துப்பனை நியமித்து, நாளைக்கு உனக்கு வேண்டிய உதவிபுரிய ஏற்பாடு செய்கிறேன். இனி, நீ போய்வருகிறாயா?"

சம்பாஷணை முடிந்தது. துரைசாமிபிள்ளை அப்பங்களாவை விட்டு வெளியேறி நள்ளிருளில் மறைந்தார்.

பதினோராம் அத்தியாயம்

துரைசாமி பிள்ளையின் கடைசி அவகேடு

முந்தின அத்தியாயத்திற்கண்ட சம்பாஷணை நடந்த மறுநாள், சென்னையில் பறச்சேரிக் கடைத்தெருவி லுள்ள ஒரு பணியாரக்கடை வாசலில் ஒரு கோச் வந்துநின்றது. உடனே அதிலிருந்து முத்துசாமிபிள்ளை கீழே யிறங்கி அக்கடைக்குள் நுழைந்தார். கடைக்கு அடுத்தாற்போ லிருந்த படிக்கட்டின்மீது ஏறும் போது, பக்கத்து அறையின் மேற்சன்னல் வழியாக அவ்வறையில் துரைசாமி பிள்ளை உட்கார்ந்திருப்பதைப் பார்த்துக் கடுங்கோபத்துடன் கீழேயிறங்கி அவ்வறைக்குட் புகுந்து, "இது உன்னுடைய வேலையாகத்தா னிருக்குமென்று அப்போதே நினைத்தேன். உன்னை இனிச் சும்மா விடுவதில்லை. தொலைத்துவிடுகிறேன்!" என்று சொல்லி, துரைசாமி பிள்ளையின் கைகளைப் பிடித்து வெளியே யிழுத்துக்கொண்டுபோய், "கூ கூ! திருடன்! கொலைகாரன்!" என்று கூவினார். அக்கூச்சலைக்கேட்டு, இரண்டு மூன்று போலீஸ்காரர்களும் மற்றும் அநேக ஜனங்களும் அங்குவந்து கூடினார்கள்.

போலீஸ்காரர்கள் வந்து சேர்ந்தவுடன், முத்துசாமிபிள்ளை அவர்களை நோக்கி, "இவன் தான் சூதுநாணயக்கார துரைசாமி பிள்ளை! இவனைப் பத்திரமாய்ப் பிடித்துக்கொள்ளுங்கள்!" என்றார். முத்துசாமிபிள்ளை ஆனரரி மாஜிஸ்ட்ரேட் ஆனபடியால், போலீஸ்காரர்கள் அவர் வார்த்தைகளை நம்பி, துரைசாமி பிள்ளையைப் பிடித்துக்கொண்டார்கள். அப்போது ஒரு பெண்பிள்ளை அக்கடைக்குள்ளிருந்து ஓடிவந்து, போலீஸ்காரர்களைப் பார்த்து, "ஐயா! நீங்கள் பிடித்துக்கொண் டிருக்கும் மனிதன்கையி லிருப்பது என்னுடைய கைப்பெட்டி. தயவுசெய்து அதை வாங்கி என்னிடம் கொடுங்கள்!" என்றாள். உடனே முத்துசாமி பிள்ளை, "அவளையும் பிடித்துக் கொள்ளுங்கள். அவளும் பெருங் குற்றம் செய்தவள்தான். பெட்டியை அவளிடம் கொடுக்காதேயுங்கள்!" என்றார். போலீஸ்காரர்கள் நகைத்து "என்ன சுவாமி! எல்லோரையும் பிடித்துக்கொள்ளும்படி உத்தரவு கொடுக்கிறீர்களே! அப்படி எல்லோரையும் பிடிக்க முடியாது!" என்று சொல்லிவிட்டார்கள். ஆனால் அவர்கள் அந்தக் கைப்பெட்டியை அந்த ஸ்திரீயின் கையில் கொடுக்க முடியாதென்று சொல்லிவிட்டார்கள். முத்துசாமி பிள்ளை, "அதுதான் சரி!" என்றார். நாகலிங்க முதலியாரது மனைவியாகிய அந்த ஸ்திரீ கோபத்துடன் முத்துசாமிபிள்ளையை நோக்கி, "அதுதான் சரி! போலீஸ்காரர்கள் அப்பெட்டியைக் கொண்டுபோய், அதிலுள்ளவைகளையெல்லாம் எடுத்துப் படித்துப் பார்க்கட்டும். பிள்ளையவாள் வாழ்வு முடியும் காலம் நெருங்கிவிட்டது!" என்று சொல்லிவிட்டு அவ்விடம்விட் டகன்றாள்.

போலீஸ்காரர்கள் துரைசாமி பிள்ளையைப் பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள்.

பன்னிரண்டாம் அத்தியாயம்

துயரின் இறுதி

மறுநாட் காலையில் முத்துக்குமாரசாமி பிள்ளையால் நியமிக்கப்பட்ட துப்பன் மலர்ந்த முகத்துடன் பிள்ளையவர்களுடைய பங்களாவுக்குச் சென்று, அவரிருந்த அறையை யடைந்து அவரை நோக்கி, "பிள்ளையவாள்! துரைசாமி பிள்ளையவாள் சொன்னதெல்லாம் உண்மை. அவர்தாம் புஷ்பவனத்தின் எஜமானர். அவர்தாம் குமாரலிங்கம் பிள்ளையின் பிள்ளை

வ்யிற்றுப் போன்! அவர் சூதாணயக்காரனுமல்ல. பார்வதியம்மாள் கைப்பெட்டி துரைசாமி பிள்ளையினிட மிருந்ததைப் போலீசார் திறந்து அதிலுள்ள காகிதங்களைப் படித்துப் பார்த்ததில், அவைகள் முத்துசாமி பிள்ளையும் மற்றும் சிலரும் சூதாணயக்காரர் தலைவனுக்கு எழுதிக்கொடுத்த ரசீதுகளாகவும் தலைவனது நிஜமான பெயர் மேல்விலாசம் இவைகளைத் தெரிவிக்கும் கடிதங்களாகவு மிருந்தன. அவைகளை அத்தலைவன், தான் இறந்ததும் போலீஸாரிடம் ஒப்புவிக்கும்படி சொல்லி, பார்வதியம்மாளிடம் ஒப்புவித்ததாகத் தெரிய வருகிறது. முத்துசாமிபிள்ளை ஒருவார்த்தை அநுகூலமாகச் சொல்லியிருந்தால், போலீஸ்காரர்கள் அப்பெட்டியைப் பார்வதியம்மாளிடம் கொடுத்திருப்பார்கள். அவர் அதைத் தடுத்து தம்முடைய தலையின்மீது தாமே மண்ணையள்ளிப் போட்டுக்கொண்டார். முத்துசாமிபிள்ளையுள்பட எல்லாச் சூதாணயக்காரர்களையும் போலீசார் பிடித்துவிட்டார்கள். துரைசாமிபிள்ளை நாளைக்கு விடுதலைசெய்யப்படுவார்'' என்று சொன்னார். முத்துக்குமாரசாமிபிள்ளை அவர் திறமையைப் புகழ்ந்து பேசி, அவருக்குத் தக்க பரிசளித் தனுப்பினார்.

ஒருவாரத்துக் கெல்லாம் துரைசாமிபிள்ளை மோகனசுந்தரியை விவாகஞ் செய்துகொண்டு, தமது சொந்த பங்களாவான புஷ்பபவனத்துக்குச் சென்று சுகமாய் வாழ்ந்துவந்தார்.

திவான் பஹதூர் ஸ்ரீமான் பெத்தாச்சி செட்டியார்.—தமிழ் நாட்டார் இவரை நன்கறிவர். கல்வித்துறையிலும், தமிழபிவிருத்தியின் பொருட்டும் இவர் செலவிட்டுவரும் தொகை மிக்க அதிகம் என்றே சொல்ல வேண்டும். வயதிற் சிறியவரேனும், ஆழ்ந்த அறிவும் விசால நோக்கமுமுடையவர். பல கல்வி ஸ்தாபனங்களுக்குத் தாராளமாய் உதவி புரிந்து வந்திருக்கிறார். இவர் செய்துவரும் பல அருமையான காரியங்களுக்கு மெச்சி, சமீபத்தில் நமது செட்டியாரவர்களுக்கு திவான் பஹதூர் பட்டம் அளிக்கப்பட்டதைப்பற்றி நாம் மிகவும் சந்தோஷிக்கிறோம். இந்த உபகாரி இன்னும் பல நற் காரியங்கள் செய்துகொண்டு ஆரோக்கிய திடகாத்திராரா யிருக்க ஈசன் அருள்புரிவாராக!

சிறுவர்களுக்கான பக்கங்கள்
CHILDREN'S PAGES
புண்டரீகன்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.

பண்டரீபுரம் என்றொரு திவ்யக்ஷேத்திர மிருக்கிறது. இதற்குமுன் அதற்கு லோகதண்டம் என்று பெயர். இது ஒரு சிறந்த தெய்வஸ்தலம். இந்த ஊரில் ஓர் அந்தணரிருந்தார். அவருக்கு ஜத்வா என்று பெயர். ஜத்வா பரம சாந்தகுணசீலர்; நல்லவர்; ஸத்தியந் தவறாதவர்; எல்லோருக்கும் நல்லவராய் நடப்பவர்; ஈசுவரபக்தியுடையவர். அவருக்கு ஸாத்யகி என்றொரு மனைவியிருந்தாள். கணவனிடத்தில் அவள் தெய்வவிசுவாசம் பாராட்டிவந்தாள். அவர்களுக்கு வெகுகாலமாகப் பிள்ளையில்லாமலிருந்தது. அதனால் அவர்கள் இரவும் பகலும் பகவானைத் தியானித்தும் ஆராதித்தும் வந்தார்கள்.

பக்தவத்ஸலனாகிய ஸ்ரீ ஹரியினுடைய திருவருளினால் அவர்களுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். அவனுக்கு அவர்கள் புண்டரீகனென்று பெயரிட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்தனர். தக்க வயதில் அந்தணருடைய மரபின்படி உபநயனமும் செய்வித்தார்கள். பிறகு வேதாத்யயனமும் செய்வித்துப் பதினாறுவது வயதில் ஒரு பெண்ணைத்தேடி விவாகம் நடத்தினார்கள்.

விவாகமான கொஞ்சநாளைக்கெல்லாம் புண்டரீகன் தாய்தந்தையருக்கு அடங்காதவனானான்; தன் மனம் போனபடி நடந்துவந்தான். வேசிவீடே கதியாகவிருந்து பணத்தையெல்லாம் கண்டபடி செலவு செய்துவந்தான்; நட்டுவக்காரர்களிடத்தில் மிகுதியாக நட்புப் பாராட்டிவந்தான்; தாய்தந்தையர் பேச்சைக் கேட்பதேகிடையாது. அவர்களைச் சீறிவிழுந்து கண்டபடி பேசத் தலைப்பட்டான்; சிலசமயம் "நீங்கள் எப்போது சாவீர்கள்? நானெப்போது சங்கடமில்லாம லிருப்பேன்!" என்றும் சொல்வான்; ஆனால் மனையாளிடத்தில் பக்ஷமாயிருந்துவந்தான். அவளைத் துன்பஞ்செய்யாமலிருப்பது அவளுடைய புண்யந்தானென்று அநேகர் சொல்வதுண்டு. சோற்றுவேளை தவிர மற்றவேளைகளில் அவன் வீடுதங்குவதில்லை.

பெருங் கயிறு முடி யழுந்தாது.

இப்படிப்பட்ட துஷ்டனிடமிருப்பதைப் பார்க்கிலும் எங்கேனும் போய் எதையேனுமுண்டு மரணமடைவதே உத்தமமென்று அவனுடைய தாய்தந்தையர் எண்ணிப் பெரிதும் மனவருத்தங் கொண்டிருந்தனர். என்ன செய்வார்கள்? நாடோறும் இவனால் திட்டுக்கேட்பதும், அது பொறாமல் வருந்திக் கண்ணீர் விடுவதுமே அவர்கள் வீட்டில் வழக்கமாய்விட்டது. ஊரும் உறவும் சிரித்துக் கண்டபடி பேசத் தொடங்கினர். என்ன செய்வது?

> "அச்சமுள் ளடக்கி அறிவகத் தில்லாக்
> கொச்சை மக்களைப் பெறுதலி னக்குடி
> யெச்சமற் றேமாந் திருக்கை நன்றே."

என்று பெரியார் கூறியிருப்பதை நினைப்பார்களானால் இப்படிப்பட்ட பிள்ளையைப் பெற்றவருடைய மனம் என்ன பாடுதான் படாது?

இப்படியிருக்கையில் ஒருநாள் காசி யாத்திரைக்குப் போய்க்கொண்டிருப்போர் சிலர் லோகதண்டம் என்கிற அந்த ஊரில் வந்திறங்கினர். அவர்களைக் கண்டதும் புண்டரீகனுடைய தாய்தந்தையரும் அவர்களோடு காசி யாத்திரை போகத் தீர்மானித்து, புண்டரீகனை அழைத்து, "அப்பா! எங்களுக்கு வயதாகிவிட்டபடியால் நாங்கள் காசியாத்திரை போய் வரவேண்டுவது அவசியமாயிருக்கிறது. அதை நீ செய்விக்கவேண்டும்" என்று நயந்து கேட்டுக்கொண்டார்கள். புண்டரீகன் நகைத்து, "இவர்கள் எப்பொழுதொழிவார்கள், எப்போது நாம் சுகப்படுவது என்றிருக்கும் என்னிடத்தில் அதைப்பற்றிப் பிரஸ்தாபிப்பானேன்? பிரஸ்தாபியாமலே போகலாம்" என்றான். இதைக்கேட்ட தாய்தந்தையர் "ஆ! பரந்தாமா! இது என்ன பாவம்! இப்படியும் எங்கட்கு ஒரு பிள்ளை பிறக்கவேண்டுமோ? கோவிந்தா! மாதவா!" என்று எண்ணி மகா துக்கத்துடன் அன்றே காசியாத்திரைக்குப் பிரயாணமானார்கள்.

சில நாட்களுக்கப்பால் இன்னும் சிலர் காசியாத்திரையாகப் புறப்பட்டுவந்து அவ்வூரிலே தங்கினார்கள். அவர்களைப் பார்த்த புண்டரீகன் தன் மனைவியை அழைத்து, "நம்மவீட்டுக் கிழங்கள் காசியாத்திரைக்குப் போயிருக்கின்றனவே! நாம் போகவேண்டாமா? காசியாத்திரை போகும் ஜனங்கள் நம்மூர் சத்திரத்தில்வந் திறங்கியிருக்கின்றார்கள். நான் அவர்களைக் கண்டு இங்கிருந்து எப்போது புறப்படுகிறீர்கள் என்று விசாரித்து வருகின்றேன். இன்று நாமும் யாத்திரை புறப்படுவோம். பயணத்துக்கு வேண்டியதைச் சித்தப்படுத்திக் கொள்" என்று சொன்னான். அவள், "அதற்குப் பணம் வேண்டாமா? காசியாத்திரை சும்மா கிடைத்துவிடுமா?" என்று கேட்டாள்.

புண்டரீகன், "அடி அசடே! காசியாத்திரை புறப்படுவதானால் பணத்துக்குத்தானா பஞ்சம்? வேண்டிய பணமிருக்கிறது. புறப்படு!" என்று சொல்லிவிட்டு, உடனே வந்து இறங்கியுள்ள யாத்திரிகரிடம் போய், அவர்கள் எப்பொழுது புறப்படுகிறார்கள் என்று தெரிந்துகொண்டு வீடுவந்து, பயணத்துக்கு வேண்டியவற்றைச் சித்தப்படுத்திக்கொண்டான்; தனக்கொரு குதிரையும் தன் மனைவிக்கொரு குதிரையும் வரவழைத்தான்; ஊர்முழுவதும் "கிழங்கள் காசி யாத்திரைபோவது நாங்கள் போகாமலிருப்பதா?" என்று சொல்லிவந்து, யாத்திரிகர்களோடு பெரிய ஆடம்பரத்துடன் யாத்திரை புறப்பட்டான். இவனொருகுதிரையிலும் இவன் மனைவியொரு குதிரையிலுமாக ஏறிக்கொண்டு செல்வதைக்கண்ட ஊரார், "ஐயோ கிழவர்களைக் கால்நடையாக அனுப்பினான். இவனுக்கும் இவன் மனைவிக்கும் குதிரை அமர்த்திக் கொண்டானே இரக்கமற்ற பாவி!" என்று புண்டரீகன் செய்கையை இகழ்ந்தார்கள்.

இப்படிப் புறப்பட்ட இவன், முன்னே கால்நடையாகச் சென்ற தாய்தந்தையரை வழியிலே கண்டான், கண்டும் அவர்களைச் சிறிதும் கவனியாமலே சென்றான். அவர்கள் பாவம்! கால் நடையாகப் போனதால் அநேக இடங்களிலே தங்கித்தங்கிச் சென்றார்கள். அவர்களை அவர்கள் மனத்தில் காசிக்குப்போகவேண்டுமே என்று கொண்டிருந்த ஆவலே நடத்திக்கொண்டு போயிற்று. அப்படிப்பட்ட அவர்களைக் கவனியாமல் சென்ற புண்டரீகன் காசிமாநகரினருகே செல்லுகையில யாத்திரிகரைவிட்டுப் பிரிந்தான். அப்பொழுது வழி தவறி வேறுபக்கம் போய், காசிக்குத் தெற்கிலுள்ள குக்குட முனிவருடைய ஆச்சிரமத்தினருகே யிருக்கும் சத்திரத்திலே தங்கினான்.

குக்குட முனிவர் என்பவர் தமது தாயதந்தையரைத் தெய்வமாகக்கொண்டு அவர்கள்

பெருமரத்தைச் சுற்றிய வள்ளிக்கொடிபோல.

விரும்பிய பணிவிடைகள் புரிவதையே பெரிதாக எண்ணியிருப்பவர். அவர் பகலெல்லாம் புராணங்கள் படித்துத் தாய் தந்தையரைக் கேட்கும்படி செய்வர்; இராக்காலங்களில் ஸ்ரீ ஹரிபஜனை செய்து தமது தாய்தந்தையரையே வணங்கிவருவர். அவர் அந்தப் பணிவிடையையே பெரிதாகக் கருதி இருந்தமையினால் அவர் காசிக்கு அவ்வளவு சமீபத்திலிருந்தும் காசிக்குப் போகவில்லை. காசியாத்திரை, கங்கா நதியாடல் முதலிய யாவும் தாய் தந்தையரின் பணிவிடைக்குப் பிறகுதான் என்பது அவர் கொண்டிருந்த கருத்து.

அப்படிப்பட்ட அவரைப்பற்றி இப்போது நினைப்பவர்களும் தங்கள் இடையூறுகள் நீங்கப் பெறுவர் என்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அந்த மகான் தமது ஆச்சிரமத்திற்கு வெளியே வந்தார். அவரைப் பார்த்த புண்டரீகன் "ஸ்வாமி இன்னும் காசிஎவ்வளவுதூரத்திலிருக்கிறது?" என்று கேட்டான். அவர் "அப்பா! காசியும் கங்கையும் எந்த மூலையிலிருக்கிறதென்பது எனக்குத் தெரியாது" என்றார். "புண்டரீகன்,ஐயோ! இது என்ன வேடிக்கை! இவ்வளவு அருகிலிருந்தும் இன்னும் காசி க்ஷேத்திரம் போகாத உமது ஜன்மம் எதிற் சேர்ந்தது? எல்லாவற்றிற்கும் பாக்கியம் வேண்டாமா? தவளை தாமரையி னருகேதா னிருக்கிறது! அதன் மணத்தை அது அறிந்து இன்பமடைகிறதா?" என்று கூறிப் பரிகசித்தான்.

புத்தக வரவு

BOOKS RECEIVED

தனபாக்கியம் அல்லது ஓர் அதிருஷ்டவதியின் சரித்திரம்.—* இது ஒரு அனுபவ நாவலாகும். ஸ்ரீமான் ச. தா. மூர்த்தி முதலியார் எழுதியது. 8-ஆப்டோன் படங்களுடன் ரூபா 2.

ஷண்முகசுந்தரம் அல்லது காதல்திறம்.—* இது ஒரு துப்பறியும் நாவல். எட்டு ஆப்டோன் படங்கள் கொண்டது. ஸ்ரீமான் பி. எஸ். சுப்பிரமணியம்,எம்.ஏ.,எழுதியது ரூ. 2.

இவைகளைப்பற்றிய விமர்சனம் பின்னர் சஞ்சிகையில் வெளிவரும்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

நான்கு கன்னிகைகளின் சரித்திரம்

வடதேசத்தில் பூமண்டலத்திற்கே பெருமை தரக்கூடியவளவு மிகவும் அழகுவாய்ந்த வர்த்தமானபுர மென்றொரு பட்டின மிருந்தது. அதில் பரோபகாரி யென்னும் ஓரரசன் நீதிநெறி வழுவாமல் அரசு புரிந்துவந்தான். அவனுக்கு வெகுநாள்வரையில் மக்கட்பேறில்லாமலிருந்து கடைசியில் ஒரு பெண் பிறந்தது. அக்குழந்தையின் மேனி மாசற்ற தங்கத்தை யொத்திருந்ததால், பிதா அக்குழந்தைக்கு கனகரேகை என்று பெயரிட்டு மிகவும் பட்சமாய் வளர்த்துவந்தான். இவ்விதம் அக்குழந்தை பட்சமாய் வளர்க்கப்பட்டு கன்னிகைப் பருவமடைந்ததும், அவள் பிதா அவளுக்கு விவாகம் பண்ணவெண்ணித் தன் பாரியையாகிய கனகப்பிரபையை அழைத்து, "ஓ! கனகப்பிரபா! நம் குழந்தைக்குப் பருவகாலம் வந்துவிட்டதல்லா? அதைப் பார்த்து என் மனம் அதிகக் கவலைப்படுகிறது. பெண்களைப் பெற்று அருமையாய் வளர்ப்பது பெரிதல்ல. அவர்களைச் சரியான பாத்திரமறிந்து கன்னிகாதானம் செய்வதுதான் மிகக் கடினம். ஒரு கன்னிகையைப் பாத்திரமறிந்து தானம் செய்யாவிட்டால், அது ஆயுள்வரையிலும் வருத்தத்துக்கே காரணமாகும். ஆகையால், நம் அருமைச் செல்வியை யாருக்குக் கொடுப்பது? யார் இவளுக்கு நடை யுடை பாவனைகளிலும் குணத்திலும் படிப்பிலும் சமானமாயிருப்பவர் என்கிற கவலைதான் எனக்கெப்போதும் உண்டாகிறது" என்றார்.

இதைக் கேட்டு நகைத்து, "நாதா! தாங்கள் இவ்விதமெல்லாம் யோசிக்கிறீர்கள். நம் குழந்தையோ தனக்கு விவாகமே வேண்டாமென்கிறாள். இப்பொழுதுதான் அவள் மரப்பொம்மைகளை வைத்து விளையாடிக் கொண்டிருக்கும்போது நான் அங்குபோய், "கண்ணே! எப்போது உன் விவாகத்தைக் கண்ணால் காண்பேன்?' என்று அவளிடம் சொன்னேன். அதற்கவள் நான் சொன்னதைத் தடுத்து, 'அம்மா! தாங்கள் அவ்விதம் நினைக்காதீர்கள். ஒருவருக்கும் என்னைக்

பெருமழை விழுந்தால் குளிராது.

கலியாணஞ்செய்து கொடுத்து விடாதீர்கள். நான் எப்போதும் கன்னிகையாகவே யிருக்கிறேன். நான் உங்களை விட்டுப் பிரியவேகூடாது. அப்படி என்னைப் பலாத்காரமாய் ஒருவருக்கு விவாகம் செய்துகொடுத்தால் அப்பொழுதே நான் மரித்துவிடுவேன் என்பதை நிச்சயமாய்த் தெரிந்துகொள்ளுங்கள். இதில் ஓர் இரகசியமிருக்கிறது. அது சொல்லக்கூடியதன்று. ஆகையால் தாங்கள் வீணாய் ஏன் அவ்விஷயத்தைப் பற்றிக் கவலைப்படுகிறீர்கள்?" என்றுரைத்தாள். இதைச் செவியுற்ற அரசன் திடுக்கிட்டு மனங்கலங்கி உடனே அந்தப்புரம் சென்று பெண்ணைக் கண்டு, "குழந்தாய்? ஏன் விவாகம் வேண்டாமென்கிறாய்? தேவாசுர கன்னிகைகளெல்லாம் தமக்கு நல்ல கணவன் கிடைக்கவேண்டும், அவருடன் கூடிக்கலந்து சுகங்களை அனுபவிக்க வேண்டும் என்று அநேக வருஷங்கள் தவஞ் செய்கிறார்களே. அப்படியிருக்க, நீ விவாகத்தை வெறுப்பதேன்?" என்று வினவ, அதற்கவள், "என்னருமைத் தந்தாய்! எனக்கென்னவோ விவாகம் வேண்டாமெனத் தோன்றுகிறது. அப்படியிருக்க, நீங்கள் ஏன் இவ்விஷயத்தில் வற்புறுத்துகிறீர்கள்?" என்றாள்.

இதைக்கேட்ட அரசன், "குழந்தாய் உனக்குத் தெரியாதது என்னவிருக்கிறது? உலகத்தில் ஒரு பெண் பிறக்கும்போதே அவள் பிறருக்கென்றே பிறக்கிறாள். பிறருக்கென்றே வளர்க்கப்படுகிறாள். ஸ்திரீகள் எப்போதும் ஒரு பர்த்தாவை யடைந்து அவருக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுவதுதான் நம் தரும சாஸ்திரங்களின் கொள்கை. விவாகமில்லாமல் தன்னிச்சையா யிருந்தால் உலகம் பழிக்கும். ஆகையால் நீ விவாகம் பண்ணிக்கொள்ளத்தான் வேண்டும்" என்று மிகவும் உறுதியாய்ச் சொல்ல,அச்சிறுமி, "அப்படியானால் பிராமணரோ, ராஜகுமாரரோ, யாரொருவர் தாம் நேராகக் கனகபுரி என்னும் பட்டணத்தைக் கண்ணாற் கண்டதாய்ச் சொல்லுகிறாரோ அவருக்குத்தான் நான் மாலையிடுவேன். அப்படிப்பட்டவர் இல்லாவிடில், என்னை வீணாகத் துன்பப்படுத்தவேண்டாம்" என்றாள். "எப்படியாவ திருக்கட்டும், ஏதோ நிபந்தனையின் பேரிலாவது இவள் விவாகத்துக்கு ஒப்புக்கொண்டாளே,. அதுபோதும்" என்று மனமகிழ்ச்சியுடன் அவ்விடம்விட்டுச் சென்றான் அரசன்.

மறுநாட்காலையில் தான் சபாமண்டபத்தில் வீற்றிருக்கும்போது தன்னைச் சுற்றிலு மூட்கார்ந்திருந்த மந்திரி முதலியவர்களை நோக்கி "உங்களில் யாராவது கனகபுரியைக் கண்டபேருண்டோ? அப்படியானால், உடனே தெரிவித்தால் அவர் பிரமகுலத்தில் தோன்றினவராலும் சரி, க்ஷத்திரியகுலத்தி லுதித்தவராலும் சரி,அவருக்கு என் அருமைப்புதல்வியைக் கன்னிகாதானஞ் செய்வதுடன் அவரை என் இராஜ்யத்துக்கு யுவராஜாவாகவும் செய்துகொள்ளத் தயாரா யிருக்கிறேன்" என்றான்.

அதைக்கேட்டு அச்சபா மண்டபத்திலுள்ளோரனைவரும் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக் கைகளைப் பிசைந்துகொண்டு ஏதோ முணுமுணுத்துவிட்டுக் கடைசியில், "பிரபுவே! நாங்கள் ஒருவரு மிதுகாறும் அப்பட்டணத்தைப்பற்றிக் காதினாற்கூடக் கேட்டதில்லை" என்று பெருமூச்சுடன் பதிலளித்தார்கள். பிறகு அரசன் வாசற் காவலாளரை வரவழைத்து அப்பட்டணத்திலுள்ளோர் அறியும்படி கனகபுரி விஷயமாய்ப் பறைசாற்றுவிக்கும்படி கட்டளையிட்டான்.

"பிராமணராவது க்ஷத்திரிய குமாராராவது எவர் கனகபுரியைக் கண்டதாகச் சொல்லுகிறாரோ அவருக்குத் தம் பெண்ணையும் யுவராஜ பதவியையும் கொடுக்கச் சித்தமாயிருக்கிறார் அரசர்" என்று பறைசாற்றப்பட்டது.

இவ்விதம் பறை சாற்றியதைச் செவியுற்ற நகர ஜனங்கள், "இதென்ன புதுமை? இதுவரையில் நாமும் நம் பெரியோர்களும் இப்பெயர்கொண்ட பட்டணமொன் றிருப்பதாகவே கேள்விப்படவில்லையே" என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். 'நான் பார்த்தேன்' என்று சொல்வோ ரொருவருமில்லை.

இங்ஙனமிருக்க, இவ்விஷயமானது அவ்வூர் வாசியான ஒரு பிராமணப் பிரமசாரி காதில் விழுந்தது. சக்திதேவ னென்கிற அந்தப் பிரமசாரி அச்சமயம் தன் வீட்டிலிருந்த பணத்தை யெல்லாம் சூதாட்டம் முதலிய கெட்டவழியிற் செலவு செய்துவிட்டு பொடிக் காசுகூட இல்லாமற் கஷ்டப்பட்ட சமயமாதலால், இதைக் கேட்டதும் இராஜகன்னிகையி

பெருமாள் இருக்கிற வரையில் திருநாள் உண்டு.

ணிடத்திலும்,பணத்திலும் பேராசைகொண்டவனாய், 'நாம் வீட்டிலிருந்த பணத்தை யெல்லாம் கெட்டவழியில் தொலைத்துவிட்டோமாதலால், தாய்தந்தையர்கள் நம்மை வீட்டிற் புகவிடுவதில்லை. பணமில்லாததனால் வேசியும் ஏசுகிறாள். இப்பொழுது நமக்கு வேறொரு கதியும் காணோம். இச்சமயம் நாம் பொய்சொல்லி எப்படியாவது இராஜகன்னிகையையும் இராஜ்யத்தையும் அடைந்துவிடவேண்டும். நான் கனகபுரியைப் பார்த்தேனென்றால், நீ பார்க்கவில்லையென்று யார் சொல்லப் போகிறார்கள். அப்படிச் செய்வதுதான் சரி' எனத் தீர்மானித்து அந்த இராஜ்ய உத்தியோகஸ்தர்களிடம் போய் "நான் கனகபுரியைப் பார்த்தேன்" என்று தைரியமாய்ச் சொன்னான்.

உடனே அக்காவலாளர்கள் மிக்க சந்தோஷத்துடனும் ஆதரவுடனும் அவனை யழைத்துக் கொண்டுபோய் அரசனிடம் சேர்ப்பித்தார்கள். அரசனும் அவன் சொன்னதைக் கேட்டு மிகவும் மனமகிழ்ந்து அவனைத் தன் பெண்ணிடம் அனுப்பினான். அவள் நமது பிரமசாரியைப் பார்த்து, "ஸ்வாமீ! தாங்கள் கனகபுரியைப் பார்த்தவர்கள்தாமா?" என்று வினவ, அவன், "ஆம். பார்த்தது மாத்திரமல்ல. அங்கேயே மூன்று வருஷமிருந்து ஓர் பெரிய ஆசானிடத்தில் படிக்கவும் படித்தேன்" என்று முதலில் சொன்ன பொய்க்குக் கைகால்கள் வைத்துப் பேசினான். "தாங்கள் அங்கு போனதற்குக் காரணம் என்ன?" என்று அவள் வினவ, "நான் ஒரு சமயம் இப்பூமண்டல முழுவதையும் சுற்றிவர நேர்ந்தது. அப்பொழுது அந்நகரத்திற் போய்க் கொஞ்ச நாள் வசிக்கும்படி நேரிட்டது" என்றான். "அப்பட்டினத்திற் கெவ்வழியாய்ப் போனீர்கள்? அப்பட்டினத்தின் நீர்நில வளப்பங்களெப்படி?" என்று கன்னிகை வினவ, அதற்கவன், "இங்கிருந்து புறப்பட்டு முதலில் ஹார்ஷபுரம் போய்ச் சேர்ந்தேன். அங்கிருந்து காசி, அங்கிருந்து சில நாட்களில் பௌண்ட்ர வர்த்தனம், அங்கிருந்து வெகு நாட்கள் சுற்றி அலைந்து கடைசியில் கனகபுரிபோய்ச் சேர்ந்தேன். அங்குள்ள நீர் நிலவளப்பங்களை என்னவென்றுரைப்பது!" என்று ஒன்றுக்கொன்றுபொருத்தமாய் வெகு அழகாயச் சொன்னான். ஒரு பொய்யைச் சாதிக்க நூறு பொய் சொல்லவேண்டு

மென்கிற விஷயத்தை நம் 'சக்திதேவன் நன்றாய் அறிந்தவன். ஆகையால் அவன் அதோடு நிறுத்தாமல், மேலும் ஏதோ சொல்ல வாரம்பித்தான். இதைக்கேட்ட கன்னிகை அடங்காக் கோபமூண்டு, தன் தோழிகளைக் கூப்பிட்டு "இந்தத் துஷ்டனைக் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளிவிடுங்கள்" என்று ஆஞ்ஞாபித்துவிட்டு, உடனே நேராகத் தன் பிதாவினிடம் சென்று, "தந்தாய்! தாங்கள் இவ்வளவு பெரியவரசராக விருந்தும், சில சமயங்களில் முன்பின் யோசனையின்றிச் சில காரியங்களைச் செய்துவிடுகிறீர்கள். உலகத்தில் சாதுக்களை ஏமாற்றுவதற் கென்றே எத்தனையோ துஷ்டர்கள் காத்திருக்கிறார்கள் என்பது தங்களுக்குத் தெரியாதா? யாரோ ஒரு துஷ்டனை என்னிடம் அனுப்புவித்தீர்களே. அந்த அயோக்கியன் பொய் சொல்லி நம்மை ஏமாற்றி என்னையும் தங்கள் இராஜ்யத்தையும் கைப்பற்ற எண்ணங்கொண்டான். நான் உண்மையை யறிந்து அவனை வெளியில் தள்ளிவிடச் சொல்லிவிட்டேன். ஆகையால் என் விவாகத்தைப்பற்றி இப்பொழுது ஒன்றும் யோசிக்கவேண்டாம். பிறகு பார்த்துக்கொள்வோம்" என்று துக்கத்துடனும் வெறுப்புடனும் சொன்னாள். "பெண்ணே! அவ்விதம் சொல்வது நியாயமாகாது. ஒரு கன்னிகையானவள் குறிப்பிட்ட வயதிற்குமேல் விவாகம்பண்ணிக்கொள்ளாமல் பிறந்தவீட்டிலேயே இருந்தால், அவள் எவ்வளவு நெறி தவறாதவளாயிருந்தாலும் உலகம் சும்மாவிராது. வீணான பழிக்காளாக்கிவிடும்" என்று அரசனுரைக்க, "அப்படியானால் தாங்கள் அதற்கு வேண்டிய பிரயத்தனங்களைக் கூடிய சீக்கிரம் செய்து, கனகபுரியைப் பார்த்தவரைத் தேடி அவருக்கு என்னை மணமுடித்துவையுங்கள்!" என்று சொல்லி அந்தப்புரத்துக் கேகினாள் கன்னிகை. அரசனும் நாள்தோறும் இடைவிடாது பறை யறைவித்துக்கொண் டிருந்தான். ஒருவரும் வரக்காணோம்.

இது இப்படியிருக்க, இராஜகன்னிகையினிடம்போய் அவளால மிகவும் அவமதிக்கப்பட்டுத் திரும்பிவந்த அந்த சக்திதேவன் என்னும் பிராமணப் பிரமசாரி மிகவும் துக்கமடைந்து "நாம் வீணாய்ப் பொய்சொன்னதற்குப் பலனாய் அவளால் அவமான மடைந்தோமே தவிர

அவளை யடையவில்லை. ஆகையால் எப்பாடுபட்டாவது அவளை அடைவதே சரி. இதற்காகப் பூமண்டல முழுவதும் திரிவேன். நடுவில் எத்தனை கஷ்டங்கள்நேர்ந்தாலும், அவைகளைப் பொருட்படுத்தேன். ஒருவேளை பிராணனுக்கே அபாயம் நேர்ந்தாலும் சரி, நான் அப்பட்டணத்தைப்பார்க்காமல் திரும்புவதில்லை" என்று இவ்விதம் திடமாய்த் தீர்மானித்துக்கொண்டு தன்னூரைவிட்டுக் கிளம்பி தெற்குமுகம் நோக்கி பிரயாணப்பட்டு, முதலில் விந்திய மலைச்சாரலை யடைந்து அதைச்சேர்ந்த காட்டினுட்புகுந்து, மிகவுமடர்ந்ததும் புலி கரடி முதலிய துஷ்டமிருகங்கள் பயமின்றி உல்லாசமாய்ச் சஞ்சரிக்கப்பெற்றதுமான அக்காட்டினடுவில் பிராணனைத் துரும்பாக வெண்ணி இராஜகன்னிகையை யடைவதையே பெரும்பொருட்டாய் நினைத்து மிகுந்த தைரியத்துடன் சஞ்சரித்துக்கொண் டிருந்தான்.

இவ்விதம் வெகுகாலம் நடந்து வெகுதூரம் சென்றபின் ஆங்கோரிடத்தில் குளிர்ந்து தெளிந்த ஜலத்தோடுகூடியதும் அழகிய மலர்ந்த தாமரைப்பூ முதலிய ஜலபுஷ்பங்களின் நறுமணம் வீசப்பெற்றதும் ஹம்ஸம் முதலிய ஜலபட்சிகளின் இனிமையான தொனிகள் நிறைந்ததுமான ஒரு தாமரைத் தடாகத்தைக் கண்டான். அதிலிறங்கி ஸ்நானம்செய்து நீர் பருகிச் சற்று இளைப்பாறியதும் கரையேறி நாற்புறமும் நோக்க, அக்குளத்தின் வடபக்கத்தில் ஒரு மகரிஷியின் ஆச்சிரமம் தென்பட்டது. அதனருகிற் சென்று அங்கே ஓர் அரசமரத்தினடியில் அநேக மகரிஷிகளினால் சூழப்பட்டு தேஜோமயமாய் விளங்கும் சூரிய தபசி என்னும் மகரிஷியைக் கண்டு வணங்கி நின்றான். அவர் இவனைப் பார்த்து "அப்பா! நீ யார்? எங்கிருந்து வந்தாய்? எங்கு போகிறாய்? இங்கு வந்ததற்குக் காரணம் யாது?" என்று அன்புடன் வினவ, அதற்குப் பிரமசாரி தன் வரலாற்றைக் கூறி, கனகபுரியிருக்குமிடத்தையும் அதற்குப் போகும் வழியையும் கிருபைகூர்ந்து தனக்குச் சொல்லவேண்டுமெனப் பிரார்த்தித்தான்.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

நமது சந்தா நேயர்களுக்கு.—வெளிநாட்டுச் சந்தா நேயர்களிற் பலரும், உள்நாட்டுச் சந்தா நேயர்களிற் சிலரும், தங்கள் சந்தாவை அனுப்பாமல் அதிகமாய்ப் பாக்கியில் வைத்துக் கொண்டிருப்பது நமக்கு மிகுந்த சிரமத்தையும், அசௌகரியத்தையும் உண்டாக்குகிறது. தனித்தனியாய் வெளிநாட்டு நேயர்களுக்குக் கடிதம் எழுதுவதென்றால் ஒவ்வொரு தடவையும் காகிதம் ஒன்றுக்கு 2-அணா செலவு செய்யவேண்டி யிருக்கிறது. ஆகையால் பத்திரிகாபிமானிகள் தயவுசெய்து தாமதம் செய்யாமலும், இனியும் ஆலசியமாயிராமலும் நம் பத்திரிகையின் சந்தா பாக்கியை உடனே அனுப்புவித்தால் பத்திரிகையை நன்கு நடத்த மிக்கச் சௌகரியமாயிருக்கும்.

எமது பத்திரிகை, மாதாந்தப் பத்திரிகைகளுக்குள் எவ்விதத்திலும் தலைமை ஸ்தானம் வகித்து வருகிறதென்பது நம் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். இப்பத்திரிகையை நடத்துவதில் நமக்கு ஏற்படும் செலவு மிக்க அதிகம். அதை நாம் எப்பொழுதும் சட்டை செய்ததில்லை. ஆனால் கையைக் கடிக்கும்போதுதான் சிரமமாய் இருக்கிறது. அப்போதுதான் சந்தா நேயர்களைத் தங்கள்பாக்கியை அனுப்பும்படிக் கோருவது.

எவ்வித இடையூறுகளையும் கவனிக்காமல், ஆரம்பித்த காரியம் நன்கு நடைபெறவேண்டுமென்ற ஒரே அவாவுடனும், கவலையுடனும் இப்பத்திரிகையை நடத்திக்கொண்டு வந்திருக்கிறோம். இன்னும் இப்பத்திரிகையில் பல விஷயங்களில் சீர்திருத்தம் செய்து, பத்திரிகையை இன்னும் அழகாய் நடைபெறச் செய்யவேண்டுமென்பதே நமது முக்கிய நோக்கமாகும். நம் நேயர்கள் ஆதரவு எவ்வளவு நமக்குக் கிடைக்கிறதோ அவ்வளவையும் பத்திரிகை அபிவிருத்தியிலேயே உபயோகப்படுத்தச் சிறிதும் பின்வாங்கமாட்டோம்.

பத்திரிகாபிமானிகள் தயவுசெய்து நமது பத்திரிகையைப்பற்றித் தமது நண்பர்களுக்கும் சிபார்சுசெய்து, ஒவ்வொரு சந்தா நேயரும் ஒவ்வொரு சந்தாதார் சேர்த்தனுப்பினால் அது எமக்குச் செய்ததோர் பேருபகாரமாகும். பத்திரி

கையை உரியகாலத்திலும், இன்னும் அழகாகவும் வெளிவரச் செய்ய உற்சாகமேற்படும்.

*
* *

நீக்கிரோவர் அபிவிருத்தி.—பல நூற்றாண்டுகளாக அந்நிய தேசத்தினர்களுக்கு அடங்கி வாழ்ந்து வந்ததனால் ஆப்பிரிக்காத் தேசத்து நீக்கிரோவர்கள் புத்திகுன்றி யழியப்பெற்று பிறரிட்ட வேலையைச் செய்யும் இயந்திரங்களாகவில்லை யென்றும், ஐரோப்பியர்களுடன் அவர்கள் நெருங்கிப் பழகியதனால் அவர்கள் புத்தியானது கூர்மையடைந்து மாநிடர்களுக்குப் பிரதானமான சுதந்திரங்களை யடைவதற்கு அவர்களைப் பாத்திரர்களாக்கிவிட்டதென்றும், அவர்கள் உலகமெங்கும் மகாநாடுகள் கூடித் தங்கள் குறைகளை நீக்கிக் கொள்ளுவதற்காகச் செய்யும் பெருமுயற்சியினால் தெரியவருகிறது. இவ்வியக்கம் ஐரோப்பிய மகாயுத்தம் முடிந்தவுடன் ஆரம்பித்து, நாளுக்குநாள் விருத்தியடைந்து வருகிறது. அவ்வியக்கத்தின் தலைவர்களான பூக்கர் வாஷிங்டன், டுபாய், மார்க்கஸ் கார்வே என்னும் மூவரில், கடைசியில் கூறப்பட்ட மார்க்கஸ் கார்வே யென்பவர்தாம் நீக்கிரோவர்கள் மனத்தைப் பூரணமாய்க் கவர்ந்து கொண்டிருக்கிறார். ஆப்பிரிக்காவில் சகல நீக்கிரோவர்களையும் ஒன்றுசேர்த்து, பிற தேசத்தார் ஆளுகையை நீக்கி, பெரிய நீக்கிரோவ இராஜ்யம் ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்பதே அவருடைய பிரதான நோக்கமென்று தெரியவருகிறது.

*
* *

கல்விப் பயிற்சியில் நூதன முறைகள்.—இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ் என்னும் நகரத்திலுள்ள பெர்ஸ் பாடசாலையில் தலைமை உபாத்தியாயரான டாக்டர் ரௌஸ் தமது பாடசாலையில் வந்துசேரும் சிறுவர்களுடைய மேதையை நன்றாய் அபிவிருத்தி செய்து விளங்கச் செய்யக்கூடிய நூதன முறைகளைக் கண்டுபிடித்து அவைகளை அநுஷ்டித்து வருகிறார். அந்தப் பாடசாலைகளிலுள்ள பையன்கள் தாங்களாகவே ஆங்கில பாஷையில் கவிகளியற்றியும், நாடகங்களியற்றி நடித்தும், தங்களுக்கு வேண்டிய துணிகளை நெய்தும், சட்டிபானைகள், மரசாமான்கள் இவைகளைச் செய்து கொண்டும், ஓர் உருவத்தைப்போன்ற பொம்மை செய்யும் வித்தையைப் பயின்றும், இயற்கையாகவே தங்களுக்கு ஈசுவரனால் அளிக்கப்பட்டுள்ள நூதனமா யியற்றுஞ் சக்தியைப் பெரிதும் அபிவிருத்தி செய்துவருகிறார்கள். சங்கீதத்தையும் அவர்கள் பயில வேண்டுமென்று டாக்டர் ரௌஸ் நிச்சயித்து, அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்துவருகிறார். சிலவுணர்ச்சிகளைப் பழக்குவதிலும் உயர்ந்த எண்ணங்களைப் பிறப்பிப்பதிலும் கலைகளின் பயிற்சி ஒப்பற்ற உபயோகமுள்ளது என்ற பெரிய உண்மையை முற்றிலும் உணர்ந்தே டாக்டர் ரௌஸ் கல்விப்பயிற்சியில் இப்படிப்பட்ட சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார்.

* *
*

மிதமிஞ்சிய நாகரிசமடைதல்.—சென்னையிலுள்ள பல ஆபீசுகளில் வேலைசெய்யும் உத்தியோகஸ்தர்களும் வக்கீல்களும் வியாபாரிகளும் ஜனசமூகத்துக்கு மிகுந்த உபயோகமுள்ளவர்கள்தாம் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. அவர்கள் மிதமிஞ்சிய நாகரிகமடைந்திருக்கிறார்களென்று எவரும் சொல்லமாட்டார்கள். ஆனால் அவர்கள் விதிவசத்தினால் நிர்மாநுஷ்யமான ஓர் தீவிற் கொண்டுபோய்ச் சேர்க்கப்படுவாராயின், அத்தீவிலுள்ள வஸ்துக்களிலிருந்து தமக்குத் தகுந்த உணவுப்பொருளைத் தேடிக்கொள்ள வழியறியாது தவிப்பார்கள்; இரவில் துஷ்டமிருகங்கள் தம்மை யணுகாமல் காப்பாற்றிக்கொள்ள பெரிய தீ மூட்ட வேண்டுமென்று அறியாமலும், ஒரு வேளை அது தெரிந்தாலும் தீப்பொறியொன் றுண்டாக்க வழியறியாமலும் விழிப்பார்கள்; வானத்தை நோக்கிப் பெருமழை பொழியப்போகிற சமயத்தை யறிந்துகொள்ளுந் திறனற்று, மழையிலகப்பட்டு வருந்துவார்கள்; துஷ்டமிருகங்கள் தம்மை யணுகும்போது அருகிலுள்ள உயர்ந்த மரங்களிலேறித் தப்பிப் பிழைக்கமாட்டாமல் உயிரிழப்பார்கள். மனிதன் தனக்கு ஈசுவரன் நன்கொடைகளாக வளித்த இயற்கை யுணர்ச்சிகளையும் சக்திகளையும் உபயோகிக்காமல் அவைகளைக்குன்றி யழியவிட்டு, நவீன நாகரிகம்பெற்றுக் களிப்பது பொருளைக் கைவிட்டு நிழலைக் கைப்பற்றியதாக வெண்ணி மகிழும் களியன் செயலை யொத்திருக்கிறது.

*
* *

மஹாத்மா காந்தி

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XIV} துன்மதி௵ தை௴ :: 1922-ம்௵ பிப்ரவரி௴ { பகுதி 8

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

சுருதி வெகுமுகபு ராண கோடிகள்
சரியை கிரியைமக யோக மோகிகள்
துரித பரசமய பேத வாதிகள்
என்றுமோடித்

தொடர வுணரரி தாய தூரிய
பொருளை யணுகியநு போக மானவை
தொலைய இனியவொரு ஸ்வாமி யாகிய
நின்ப்ரகாசங்

கருதி யுருகியவி ரோதி யாயருள்
பெருகு பரமசுக மாம கோததி
கருணை யடியரொடு கூடி யாடிம
கிழ்ந்து நீபக்

கனக மணிவயிர நூபு ராரிய
கிரண சரணஅபி ராம கோமள
கமல யுகளமற வாது பாடநி
னைந்திடாதோ ?

மருது நெறுநெறென மோதி வேரொடு
கருது மலகைமுலை கோதி வீதியில்
மதுகை யொடுதறுக ணானை வீரிட
வென்ற தாளால்

வலிய சகடடறி மாய மாய்மடி
படிய நடைபழகி யாயர் பாடியில்
வளரு முகில் மருக! வேல்வி நோதசி
கண்டி வீரா!

விருதர் நிருதர்குல சேனை சாடிய
விஜய! கடதடக போல வாரண
விபுதை புளகதன பார பூஷண
அங்கிராத

விமலை நகிலருண வாகு பூதர!
விபுத! கடககிரி மேரு பூதர
விகட சமர! சத கோடி வானவர்
தம்பிரானே!

கோபிகள் கூடித் தாம்செய்த லீலா விலாசங்க
ளைக் குறித்து முறையிட்டதைக் கேட்ட யசோதை
யினால் உரலுடன் சேர்த்துக் கட்டப்பட்டபொழுது
நாரதமுனிவரது சாபத்தினால் ஆயர்பாடியில் மருத
மரங்களாகி நின்ற குபேர புத்திரர்களான நளகூப
ரன் மணிக்கிரீவன் என்பவர்கள் பெற்ற சாபத்தினை
நீக்கி அவர்களுடைய துயரத்தை யகற்றத் திரு
வுளங்கொண்டு அந்தமருதமரங்களி னிடையில் தவழ்
ந்து சென்று அவ்வுரலை அம்மரங்களிற் சிக்கவைத்
திழுத்து அவைகள் பேரொலியுடன் வேரோடு பிடுங்
கிக்கொண்டு விழும்படி செய்தும், கம்சனால் அனுப்
பப்பட்ட அரக்க ஸ்திரீயான பூதனை தமக்குப் பால்
கொடுத்துக் கொல்ல முயன்றபோது அவள் தனத்
தினின்றும் பெருகிய விஷப்பாலுடன் அவள் ஆவி
யையுங் குடித்து அவளை மாய்த்தும், கம்சனால்
அவன் செய்த யாகத்துக்கு அழைக்கப்பட்டபொ
ழுது மதுராநகரத்தின் வீதியில் கம்சன் கட்டளைப்
படி அவனுடைய பட்டத்துயானையாகிய குவலயா
பீடத்தினால் தாக்கப்பட தம் ஒப்பற்ற வல்ல
மையினால் அது அலறிக்கொண்டு வீழ்ந்து மடிய
மாறு வென்றும், கம்சனால் ஏவப்பட்டு சகடவுரு
வெடுத்துக்கொண்டு தம்மைக் கொல்லவந்த சகடா
சுரனைத் தமது காலினால் உதைத்து மாயமாய்க்
கொன்று தளர்நடை பழகியும், ஆயர்பாடியில் இளம்
பருவத்தில் வளர்ந்துவந்த நீலமேக சாமளரான
கிருஷ்ண பகவானுடைய மருகோனே! ஞான சக்தி
யான வேலாயுதத்தையும் விசித்திரமான தோகை
யையுடைய மயிலையுமுடையவீரனே! சிறந்த வீரர்கள்
பலர் அடங்கிய அசுரகுலச் சேனையைத் தோல்வி
யடையச் செய்த வெற்றிவீரனே! விசாலமான மத்
தகத்தையும் கதுப்புகளையுமுடைய ஐராவதத்துக்
குத் திருமகளாக உதித்த தெய்வயானை யம்மை
யாருடைய புளகாங்கிதமுற்ற தனபாரங்களையும்
வேடர் குலத்தில் வந்துதித்த நிர்மலையான என்
தாய் வள்ளிநாயகியாரது பொன்மலைகளை யொத்த

(இதன் தொடர்ச்சி 265-ம் பக்கம் பார்க்க.)

 பெற்ற தாய் செத்தால், பெற்ற அப்பன் சிற்றப்பன்.

விவேக போதினி

தொ.14] துன்மதிஸூ :: தைமீ [ப. 8

கந்த புராணம்

SKANDA PURANAM

மேன்மைபொருந்திய காசிப முனிவரது புதல்வர்களாயுள்ள அறுபத்தாறு கோடி அசுரர்களுக்கும் அரசனாயுள்ள அசுரேசன் மங்கல கேசி யென்னும் இராக்ஷத ஸ்திரீயை மணந்து, சுரசை என்னும் மகளைப் பெற்றான். அவள் தக்க வயதடைந்ததும், அசுர குருவாகிய சுக்கிராசாரியர் தீயவைகளான மாய வித்தைகள் யாவையும் அவளுக்குக் கற்பித்து, அவள் அவ்வித்தைகளில் அடைந்த தேர்ச்சியைக் கண்டு வியந்து அவளுக்கு மாயை யென்ற காரணப் பெயரிட்டு, பிறகு அக்காலத்தில் அசுரர்கள் அடைந்திருந்த தாழ்ந்த நிலைமையையும், தேவர்கள் பெற்றிருந்த பெருமையையும், பிரமதேவர் செய்த வேள்வியில் தக்ஷன் சிவபெருமானுக்கு அவிர்ப்பாகம் அளிக்கக்கூடாதென்று விதித்தபோது சிவபெருமானிடத்துப் பேரன்பு பூண்டு சிவசாரூப்பிய பதவியை யடைந்த திருநந்தி தேவர் வெகுண்டு, தக்ஷனுக்குக் கொடிய சாபமிட்டுப் பிறகு அவனை நோக்கி, "உன்னைச் சார்ந்துள்ள தேவர்களும் ஒருகாலத்தில் வளங்களை யிழந்து எண்ணிறந்த யுகங்கள் சூரன் என்னும் அசுரனால் துன்புறுத்தப்பட்டுத் துயர்க்கடலில் மூழ்கியிருப்பாராக!" என்று கூறித் தேவர்களுக்கிட்ட கொடிய சாபத்தினையும் நினைத்து, மேல் நடக்கப்போகிற காரியங்களின்ன வென்பதையுமறிந்து, அசுரேசன் மகளாகிய அம்மாயையை யழைத்து, "பெண்ணே! நான் சொல்லப் போவதைக் கவனித்துக் கேள்! மகாவிஷ்ணு, இந்திரன், மற்றதேவர்கள், முனிவர்கள் இவர்களால் அளவற்ற அசுரர்கள் மடிந்தார்கள். அவ்வசுரர்கள் முன்னிருந்த மேன்மையான நிலைமையை யாவரும் அறிவார்கள். அவ்வாறு அசுரர்கள் அழிந்ததனால் அசுரேசனாகிய உனது தந்தை வலியிழந்து ஒடுங்கிவருகிறான். மின்னற் கொடியினால் தாழை மலர்ந்திடுவதுபோல பொற்கொடியாகிய உன்னால் அசுரர்குலம் மேன்மை யடைந்து தழைத்தோங்கும். அப்படி அவர்கள் மேன்மையுறுவதற்கு நீ செய்யவேண்டுவது யாதென்று சொல்லுகிறேன் கேள்! நறுமணங் கமழுந் தாமரை மலரில் வீற்றிருக்கும் இலக்ஷ்மியும் நின்னைக்கண்டு வணங்குமாறு நாவினால் எடுத்துரைக்கவொண்ணாப் பேரழகு வாய்ந்த ஓர் உருவ மெடுத்துக்கொண்டு, நீ காசிப மாமுனிவரிடத்திற் சென்று, நின் வல்லமையினால் அவர் மனத்தில் காமத்தை யுண்டாக்கி, இரவில் அவருடன் புணர்ந்து, அசுரர்களைப் பெற்று அவர்களுக்குப் பெயருமிட்டு, அளவற்ற செல்வங்களைப் பெறுவதற்காகத் தொன்றுதொட்டு அசுரர்கள் இயற்றிவரும் வேள்வியையும் விரதத்தையும் அவர்களுக்குத் தெரிவித்துப் பிறகு நின் குழந்தைகள் யாவரும் பெருஞ் செல்வமடையவும் அசுரர்களது பகைவர்களெல்லாம் சொல்வதற்கரிய பழியில் மூழ்கவும் அருந்தவமியற்ற இங்கு மீண்டு வருவாயாக!" என்று மிக்க ஆதரவுடன் மொழிந்தார். அம்மொழிகளைக் கேட்ட மாயை, "சுவாமி! குற்றமற்ற சிறப்பினையுடைய அசுரர்களின் குலம் தழைப்பதற்காகவே தாங்கள் இவைகளையெல்லாம் அடியேனுக்கு எடுத்துரைத்தீர்களாதலால் தங்கள் கட்டளைப்படியே செய்கிறேன்" என்று கூறி, அவர் பாதங்களை வணங்கிச் சென்று, தன் தந்தையினிடம் யாவற்றையும் கூறி விடைபெற்றுக்கொண்டு, இலக்ஷ்மி, இரதி, திலோத்தமை, மோகினி யாவரும் ஒன்று சேர்ந்து ஓர் உருவத்தை யெடுத்துக் கொண்டாற்போல் பேரழகுவாய்ந்த உருவத்தை யெடுத்துக்கொண்டு, தான் அணிந்திருந்த மேகலையும் சிலம்புகளும் சப்திக்குமாறு நடந்து, மகாமேரு பருவதத்தின் வடபாகத்தில் பிரமதேவர் புத்திரராகிய காசிப மாமுனிவர் திருக்கைலாயமலை யிதுவோவென்று மயங்கும்படி மெய்யெலாம் வெண்ணீறுபூசின

வராய் தவஞ் செய்துகொண்டிருந்த விடத்தை யடைந்தாள்.

அவ்விடத்தை யடைந்ததும், மாயையானவள் தன் மாயவித்தையினால் அங்கு தாமரைத் தடாகம், பூஞ்சோலை, இரத்தினக் குன்று, சிறந்த புஷ்பசயனம், பல மண்டபங்கள் முதலியவைகளை உண்டாக்கினாள். இவைகளெல்லாம் புதிதாக அவ்விடத்தில் திடீரென்று தோன்றவும், முக்கணெந்தையின் பொன்னடிகளைத் தன் மனத்தினிலிருத்தி புலன்களை ஞானத்தினால் வலியழியச் செய்து தவமியற்றிக் கொண்டிருந்த காசிபமுனிவர் அவைகள் யாவற்றையுங்கண்டு இஃதென்ன வென்று அதிசயமடைந்து, பன்முறை சென்று அவைகளை யெல்லாம் ஆசையுடன் நோக்கி, அவைகள் தோன்றியது மாயையின் செயலெனவுணராதவராய், அவைகளைச் செய்தவர் யாரோவென வெண்ணிச் சுற்றிலும் நோக்கி எவரையுங் காணாமல் மயங்கி, அவைகள் எவ்வாறு அங்குவந்து உற்றனவோ, அவை யுற்றதனால் விளையும் பயன் யாதோ வென்று சிறிது நேரம் தியங்கிப் பிறகு 'இவைகளிங்குற்றதனால் யாது நேர்ந்தாலும் நேரட்டும், இவைகளைக் கண்டமாத்திரத்திலேயே இவைகளின் சுபாவத்தை முற்றிலும் தெரிந்துகொள்ளவல்ல என் உணர்ச்சி இப்படித் திகைத்தது தகுதியன்று' எனத் தேர்ந்து, முன்போலத் தவமியற்றும் நோக்கத்துடன் புறப்படும் சமயத்தில், அதையுணர்ந்த மாயை அவள் சிருஷ்டித்த இரத்தினக் குன்றின்மீது சிங்காரமவளாய் விளங்கித்தோன்றினாள். அவளைக்கண்ட காசிப முனிவர் தவமியற்றும் நோக்கத்தை மாற்றி, அக்குன்றை யணுகி அவள் அழகைக் கண்டு காதல்கொண்டு, தம் தவநிலைமையையும் ஞானத்தையும் இழந்து, புணர்ச்சியை விரும்பி வருந்தும் ஆண் அன்றிற் பறவையைப்போல் வாட்டமுற்றார். அப்போது மாயையானவள் காமநோயை யுண்டாக்கி அந்நோயை யகற்றும் மருந்தாகவும் ஆகவல்ல தன் அழகிய கண்களின் பார்வையினால், தானும் புணர்ச்சியின் மீது வேட்கையுற்றவளாகத் தெரிவித்தாள்.

அதுகண்டு மகாமுனிவர் மிகுந்த களிப்புற்று அவளது அங்கங்களின் அழகைப் பற்பலவாறு விநோதமாக வருணித்து மகிழ்ந்து, பிறகு மிகுந்த ஆசையுடன் மாயையை யணுகி, "திருமகளைக்காட்டிலும் சிறந்த அழகினையுடைய பெண்ணே! நீ இங்குவந் துற்றது நல்லகாலந்தான். நின் குலம் யாது, நின் ஊர் யாது, நின் பெயர் யாது, நின் தாய்தந்தையர்கள் யாவர் என்று தயவுசெய்து சொல்வாயாக!" என்று கூறினார்.

அப்போது மாயை அம்முனிவரை நோக்கி, "பெருந்தவ மியற்றிவரும் பெரியோய்! நீர் இவ்விஷயங்களை வினவி நிற்பது தகுதியன்று. நானிருக்கு மிடத்துக்குத் தனித்தும் வந்திருக்கிறீர். இத்தகைய செய்கைகள் தவமியற்றுவோருக்கு நன்மையைத் தரத்தக்கவைகளோ? குற்றமற்ற பெருந்தவம் செய்வதை யொழித்து உணர்வில்லாத பேதையர்கள் பேசும் வண்ணம் பேசி, என்னை யணுகுவது நீதியேயன்று. ஆகலால் உமது கடமையாகிய தவத்தை யியற்றப் போவீராக!" எனப் புகன்றாள்.

அதுகேட்டுக் காசிபமுனிவர் மாயையைநோக்கி, "பெண்ணே! அளவற்ற காலம் உடல்வருந்த மனம் வாட்டமடைய யானிறந்த தவங்கள் செய்வதன் நோக்கம் இவ்வுலகில் நாம் வேண்டும் பொருள்களை யடைவதன்றோ? தேகம் வருந்த நான் இங்கு தவம் செய்தது நின்னை யடைதற் பொருட்டேயாகும். தவத்தின் நோக்கம் பூர்த்தியானபின் தவமியற்றுவது எதற்காக? ஆகையினால் தவத்தை யொழித்து நின்னை வந்தடைந்தேன். நின் ஊர், பெயர் முதலியவற்றைப் பிறகு சொல்லலாம். மனமிரங்கி என் காமநோயைச் சடுதியில் தீர்ப்பாயாக!" என்று கூறினார். அதற்கு மாயை நகைத்து, "முனிபுங்கவ! இங்கு பெருந்தவம் செய்தது என் பொருட்டேயென்று பொய்ம்மொழி புகல்வது உமக்குத் தகுதியன்று!" எனவுரைத்தாள். காசிபமுனிவர், "பெண்ணே! பன்னெடுங்காலம் நான் தவம் செய்தது முத்தி பெறுவதற்காக; அதை எனக்கு அளிக்கவே நீ இங்கு தோன்றினாய். எங்ஙனமெனில், உன்னை மேவலன்றோ உயர்ந்த முத்தி!" என்று சிலேடையாக மறுமொழி புகன்றார். [உன்னை மேவல்—உன்னைச் சேர்தல்; அல்லது, சுகதுக்கமென்ற வித்தியாசத்தை உலகில் உண்டுபண்ணும் மாயையாகிய உன்னைச் சமமான தோற்றமுடையவளாக்குதல்; என்று இது இரண்டு விதமாகப் பொருள்படும்.]

அப்போது மாயை, "தவமுனிவரே! யான் கங்கைக் கரையில் அடையத்தக்க பெரும் பலனொன்றை விரும்பி அங்குசெல்ல உத்தேசித்திருக்கிறேன். யான் அங்கு விரைந்து செல்லுகிறேன். நீர் இங்கேயே யிருப்பீராக!" என்றியம்பினாள். காமவலையிற்சிக்கிய காசிபமுனிவர் மாயையை நோக்கி, "பெண்ணே! நீ கங்கைக் கரைக்குச் செல்ல வேண்டுவ தவசியமில்லை. கங்கை மாத்திரமன்று, தமது நீரில் மூழ்கினோர் பாவங்க ளனைத்தையும் தொலைக்கவல்ல சப்த நதிகளையும் இங்கு ஒரு க்ஷண நேரத்தில் வரவழைக்கிறேன்! அவசியமானால், உலகத்திலுள்ள சிவாலயங்கள் விஷ்ணு ஆலயங்கள் அனைத்தையும் நொடிப்பொழுதில் இங்கு வரவழைக்கி[illegible]ன்! தேவலோகத்தையும், வித்தியாதர[illegible]வாழும் உலகத்தையும், மற்ற உலகங்களையும், அஷ்ட திக்பாலர்கள் வாழும் உலகங்களையும் ஆங்காங்கு வசிக்கும் தேவர்களுடனும் வளங்களுடனும் விரைவில் இங்கு வரவழைக்கிறேன்! திரிமூர்த்திகளையும், திரிலோகங்களிலுமுள்ள யாவரையும் நீ பார்க்க விரும்பினால், அவர்களையும் இங்கு வரவழைக்கிறேன்! தாண்டிச் செல்லுவதற்கரிய காவல்கள் பலவுள்ள அமுதத்தையருந்த உனக்கு இச்சையுண்டாகில், அதையும் வரவழைத்துத் தருகிறேன்! நீ எப்பொருள்களை விரும்பினாலும் அவைகள் யாவையும் இமைப்பொழுதில் உனக்குத் தருகிறேன்! புதல்வர்கள் வேண்டுமென்று நீ இச்சைப்படுவாயாகில், புதல்வர்களையும் தந்து, அவர்களை இணையற்றவர்களாகச் செய்து சிறந்த பதவியில் வைக்கிறேன்! நின் இச்சையைத் தெரிவிப்பாயாக! காதல் மிகுதியினால் வருந்தும் எனது துயரத்தையும் விரைவில் தீர்ப்பாயாக!" என மொழிந்தார். அம்மொழிகளைக் கேட்ட மாயை புன்முறுவலுற்று, "முனிவரே! நீர் இவ்வாறுபேசியது நான் தனித்திருப்பதை யுன்னியோ? இத்தகைய செய்கை பெரியோர்க்குத் தக்கதன்று. நான் முன்னம் உத்தேசித்த விடத்துக்குச் செல்கிறேன். நீர் இங்கேயே தவமியற்றியிருப்பீராக!" என்று கூறிவிட்டு, கங்கையை நோக்கி நடந்தாள். காமத்தினால் மதியையிழந்த காசிபமுனிவர் வெட்கத்தைவிட்டு அவளைப் பின்தொடர்ந்து நடந்தார். அதுகண்ட மாயை தன் உருவத்தை மறைத்துக்கொண்டாள். முனிவர் அவள் திடீரென்று மறைந்ததைக் கண்டு திடுக்கிட்டுப் பதைத்து எங்குதேடியுங் காணாது வருந்திப் புலம்பலுற்றார்.

அருவமானது முதல், முனிவர் கூடவே சென்றுகொண்டிருந்த மாயையானவள் அம்மாமுனிவர் புலம்புவதைக் கேட்டு மகிழ்வுற்று சிறந்து அழகுவாய்ந்த தனது உருவத்தை மறைக்காமல் அவர் அருகேவந்து தோன்றினாள். அப்போது சூரியன், மாயையானவள் காசிபமுனிவரிடத்துக்கு வந்து அவர் மனத்தில் காமத்தீயைமூட்டி அவர் தவத்தினையழிப்பதைக்காண இஷ்டமில்லாதவன்போல மேற்றிசைக் கடலில் மூழ்கி மறைந்தனன்; உடனே தேவர்கள் யாவரும் கொண்ட செல்வமும், சிறப்பும், வல்லமையும் தொலையுமாறு மாயையினிடத்து உதிக்கப்போகும் அசுரசேனைகள் பல கூட்டங்கூட்டமாய் எங்கும் பரவி நின்றாற்போல மாலைப்பொழுதும் இருட்கூட்டமும் விரைந்து வந்து பொருந்தின. அவ்விருளைப் பொருது துரத்தவேண்டுமென்ற நோக்கங்கொண்டவன் போலச் சந்திரன் தனது சேனாசமுத்திரமாகிய நக்ஷத்திரக் கூட்டங்களுடன் ஆகாயத்தில் தோன்றினான். திதி அதிதியென்னும் தமது மனைவியர்பால் தேவரையும் அசுரரையும் பெற்றருளிய காசிபமுனிவர் சந்திரனது அமுதகிரணங்களினால் அங்கம்வெந்து வருந்தி அம்மாயையை விளித்துப் புலம்பலுற்றார்.

அத்தருணத்தில் மாயை தமதருகில் வந்து நின்றதைக் கண்டு, "ஆ! யான் உய்ந்தேன்!" என்றுகூறி, மின்னலைக்கண்ட தாழைமலரைப் போல மலர்ந்த முகத்துடன் ஆனந்தித்து நின்றார். பிறகு பித்தனைப்போல அவளைப்புகழ்ந்து பாடிக் குதித்து அங்கம் வியர்க்க ஆடி, அவள் பாதங்களில் வீழ்ந்து வணங்கி, தன்னை ஆண்டருளும்படி அவளை வேண்டினார். அதற்கு மாயை, "முனிவரே! இனி வருந்தவேண்டாம். எனது திவ்விய அழகுவாய்ந்த உருவத்துக்குத் தக்க உருவத்தையும், இனி யான் எடுத்துக்கொள்ளப் போகும் உருவங்களுக்குத் தக்க உருவங்களையும் எடுத்துக்கொள்ளுவீராயின், நாம் கலந்து சுகிக்கலாம்" என மறுமொழி கூறினாள்.

அவ்வாறே காசிப முனிவர் மன்மதனைப் பழிக்கும் ஓருருவத்தை யெடுத்துக்கொள்ள, மாயை அவரை முதற் சாமத்தில் புணர்ந்து

சூரபதுமனைப் பெற்றாள். அவ்விருவர்களுடைய வியர்வையினின்றும் முப்பதினாயிரம் வெள்ளம் அசுரர்கள் உதித்தனர்.

இரண்டாவது சாமத்தில் இருவரும் சிங்கவுருவங்களுடன் புணர்ந்து, இரண்டாயிரம் கைகளையும் ஆயிரம் தலைகளையுமுடைய சிங்கமுகாசுரனைப் பெற்றார்கள். அவர்கள் வியர்வையினின்றும் சிங்கமுகத்தினையுடைய நாற்பதினாயிரம் வெள்ளம் அசுரர்கள் உற்பவித்தனர்.

மூன்றாவது சாமத்தில் இருவரும் யானையுருவங்களுடன் புணர்ந்து, நான்கு தந்தங்கள் பொருந்திய பெரியயானைமுகத்தையுடையதாரகாசுரனைப் பெற்றார்கள். அவர்கள் வியர்வையினின்றும் யானைமுகத்தினையுடைய நாற்பத்தோராயிரம் வெள்ளம் அசுரர்கள் பிறந்தனர்.

நான்காவது சாமத்தில் இருவரும் ஆட்டு உருவங்களுடன் புணர்ந்து, அசமுகியைப் பெற்றனர். அவர்கள் வியர்வையினின்றும் ஆட்டுமுகத்தினையுடைய முப்பதினாயிரம் வெள்ளம் அசுரர்கள் தோன்றினார்கள்.

பிறகு அவர்கள் எண்ணிறந்த மிருகங்களின் வடிவங்களை யெடுத்துக்கொண்டு புணர்ந்து அருணோதயத்துக்கு முன் அறுபதினாயிரம் வெள்ளம் அசுரர்களைப் பெற்றார்கள்.

அச்சமயத்தில் ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் துற்சகுனங்கள் பல, ஒருங்கே இடைவிடாது காணப்பட்டன. அவைகளைக் கண்டு யாவரும் என்ன விபத்து சம்பவிக்கப் போகிறதோ வென்றெண்ணி ஏங்கினர். பொழுது விடிந்ததும் காசிப முனிவரும் மாயையும் தங்கள் பழைய உருவங்களை யெடுத்துக்கொண்டு தமது புதல்வர் கூட்டங்களை ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டு நின்றனர். அப்போது சூரபதுமன் தனது தாய் தந்தையர்களைக் கண்டு, தனது தம்பிமார்களாகிய சிங்கமுகாசுரனையும் தாரகாசுரனையும் அழைத்துக்கொண்டு, தங்கள் பெருஞ்சேனைகளை அங்கேயே நிறுத்திவிட்டு, தன் தாய்தந்தையர்களை யணுகி, அவர்கள் பாதங்களில் வீழ்ந்து வணங்கி, "எங்களை யீன்றருளிய பெரியோர்களே! நாங்கள் செய்யவேண்டுவ தென்ன வென்று சொல்லியருளவேண்டும்!" என வேண்டினான்.

அப்போது காசிபமுனிவர் ஆர்வத்துடன் அவர்களை நோக்கி, "வீரக்கழல்களை யணிந்துள்ள புதல்வர்காள்! என்றுந் தவறாத உண்மையை யுரைக்கிறேன்; கவனித்துக் கேளுங்கள்! நீங்கள் மூவரும் சிறந்த தவநெறியில் நின்று ஒழுகுவீராக! அதன் முறையை யுரைக்கிறேன், கேளுங்கள்! பெரியோர்கள் ஆராய்ச்சி செய்யத்தக்க பொருள்கள் மூன்றுண்டு; அவை பதி, பசு, பாசம் என்னும் மூன்றே யாகும். அவைகளைப்பற்றியே வேதங்களெல்லாம் கூறுகின்றன. சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், மெய்யுணர் வொளித்தல், பேரருள் உதவுதல் ஆகிய பஞ்ச கிருத்தியங்களையும் செய்கிற நீலகண்டராகிய சிவபெருமானே பதியென்று வேதங்கள் கூறுகின்றன. விருப்பு வெறுப்பில்லாத பரம்பொருளாம் சிவபெருமானது தன்மையின்னதென்று எடுத்துரைப்பது எவருக்கும் அரிதே யென்று பெரியோர்கள் கூறியிருக்கின்றனர். முதிர்ந்த ஞானத்தைப் புகட்டவல்லவை யென்று புகழப்படும் வேதங்களாலும் அதைக்குறித்து நிச்சயமாக ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஆகையினால் அவர் தன்மையின்னதென் றுரைக்க யான் வல்லேனல்லேன். ஆணவம், காமியம், மாயை யென்னும் மூன்று தளைகள் பூட்டப்பெற்ற பசுக்களும் பதியைப்போலவே கேடற்றவைகளாய் அநாதியா யிருக்கின்றன; ஆனால் அவைகள் நல்வினை தீவினைகளின் பயனாக ஓய்வில்லாமல் மாறி மாறிப் பிறந்திறக்கும். அவைகள் பூமியில் பிறக்கும், பூமியைச் சூழ்ந்துள்ள கடலில் பிறக்கும், அக்கினி, வாயு, ஆகாசம் இவைகளிலும் பிறக்கும். அவைகளுக்கு ஓரிடமும் நிலையல்ல. அவைகள் மனிதர்களாகவும், மிருகங்களாகவும், பறவைகளாகவும், ஊர்வனவாகவும், புல் பூண்டு விருக்ஷம் முதலிய தாவரங்களாகவும், மலைகளாகவும், அஷ்ட திக்குகளில் அரசுபுரியும் தெய்வங்களாகவும், பிரபஞ்சத்தில் மற்றுமுள்ள எல்லாப் பொருள்களாகவும் பிறக்கும். சில பிறக்கு முன்னமே இறக்கும்; மற்றும் சில பிறந்தவுடன் இறக்கும்; பின்னும் சில கொஞ்சகாலம் இருந்து பிறகு இறக்கும். அவைகள் காளைப்பருவத்திலும் இறக்கும். மூப்பிலும் இறக்கும். அத்தகைய பசுக்கள் எண்ணிறந்தன."

"சாஸ்திர வுணர்ச்சியும், கற்பும், வீரமும், பெருஞ் செல்வமும், வல்லமையும், மற்றவைகளும் நீரில் அலைபடும் நீர்க்குமிழிபோன்றவை

யாதலால், அவைகள் நிலையான பொருள்களாக மதிக்கத்தக்கவையன்று. தருமமென்று ஒரு பொருளுண்டு. அது இம்மையிலும் மறுமையிலும் துயரத்துடன் சம்பந்தப்படாத இன்பத்தை எளிதில் தரத்தக்கது. ஆனால் அது அடைவதற்கரிய பொருளாகும். அவிரோத புத்தியுடன் யாவற்றையும் சமமாகக் கருதுவார்க்கன்றி, மற்றெவர்க்கும் அது இன்னதென்றுணர்வது சாத்தியமன்று. ஒருவன் அத்தருமத்தை அன்புடன் அனுஷ்டிப்பானாகில், அவன் ஈசனுடைய அன்புக்குப் பாத்திரனாவான்; அவருடைய அருளும் அவனுக்குக் கிடைக்கும்; அவைகளிரண்டும் கிடைத்தபின், அவன் செய்யும் தருமம் தவத்தின் சிறப்பை யடையும்; அதன்பின் அவன் இதயத்தில் ஞானம் உதயமாகும்; பிறகு அவன் சிவபெருமானது பாதாரவிந்தங்களை அடைவான். அவ்வாறு அப்பதுமங்களை யடைந்தவுடன், அவனை வருத்திவந்த பிறவிப்பிணி ஒழியும்; தொன்றுதொட்டு அவனை முத்திநெறியிற் சேரவொட்டாது தடுத்துவந்த ஆணவம், காமியம், மாயை என்னும் மூவகைக் கால் விலங்குகளும் நீங்கிவிடும்; ஒருமுறைசென்று சேர்ந்தார் விட்டகலுவதற்கரிய பேரின்பவாரிதியிற் மூழ்கிக் களிப்பான்; அப்பேரின்பத்தின் தன்மையை எடுத்துரைப்பது யாவர்க்கும் அரிதாம்!”

“ஆகையினால் பெருந் தவமொன்றே உயிர்களுக்கு உற்ற துணையாகும். அது சொல்லவொணாத பெருமை வாய்ந்த சிவகதியையும் தருமாதலின், மானிடர் அன்புடன் அனுஷ்டிக்கத்தக்கது அது ஒன்றேயாகும். அத்தவம் பிறவியை நீக்கி, உயர்ந்த முத்தியையளித்து, யாவரினும் மேலான பதவியிற் சேர்க்கும்; அன்றியும், அது இம்மையில் நாம் இச்சிக்கும் இன்பங்களையெல்லாம் தந்துதவும். தவமானது அவ்வாறு இம்மையிலும் மறுமையிலும் இன்பத்தை யளிப்பது பரம்பொருளாகிய சிவபெருமானது திருவருள் திறத்தினாலேயே யாகும். ஒருமை மனத்துடன் அரிய தவம்செய்து சிலர் முத்தியடைந்தனர்; மற்றும் சிலர் செல்வமிக்க போகசுகங்களை யடைந்தனர்; பின்னும் சிலர் இம்மை மறுமை இன்பங்க ளிரண்டையும் ஒருங்கே பெற்றனர். தேவர்களாக உயர்பதவி யடைந்திருப்பவர்களெல்லோரும் சிறந்த தவத்தினை இயற்றியே அத்தகைய மேம்பாடெய்தினர். தவநெறியை அன்பொடு பயின்று முத்தியடைந்து சிவபெருமான் திருவடிகளைச் சேர்ந்தவர்கள் எண்ணிறந்தவர்கள்; மெய்த்தவமியற்றி இருமையிலும் நன்மைபெற்றவர்கள் திருமால், பிரமன் முதலியோர்கள்தாம்.”

“அவ்வளவு பெருமைபொருந்திய தவநெறியிற் சேர்ந்தொழுகாமல், உலகத்திலுள்ள உயிர்த்தொகைகளை யழித்து உலகத்துக்குத் துன்பமுண்டாக்குபவர்கள் இம்மை மறுமையிரண்டிலும் சுகமடையாமல் பிறவி நோயில் ஆழ்ந்து துன்பமடைவார்கள். பெரியோர்கள் தமது முதிர்ந்த ஞானத்தினால் இவ்வுண்மையை யறிந்து உலகத்திலுள்ள மானிடர்களுக்குப் போதித்தாலும், அவர்கள் கொடுமை, கொலை, களவு இவைகளைப் புரிவதை யொழியாமலும், அஞ்ஞானத்தைவிட்டு நீங்காமலும், உலக வாழ்க்கையைத் துறக்காமலும் இருக்கின்றனராதலின், துயரம் நீங்காமலும், பிறப்பு இறப்பு இவைகளினின்று தப்ப மார்க்கமில்லாமலும், முத்தியடைவதற்கு ஏதுவில்லாமலும் தவிக்கின்றனர்.”

“தவமானது ஒப்புயர்வற்றது; யாவற்றினும் அருமையானது; தவத்துக்கு இணையானது தவமே யாகும். ஆதலால், புதல்வர்களே! நீங்கள் தருமத்தைச் செய்யுங்கள்; தீயகுணங்களை யொறுத்து அகற்றுங்கள்; சிவபெருமானை நோக்கி அருந்தவம் புரியுங்கள்; மானிடர் செய்யத்தக்க செயல் தவத்தைத் தவிர வேறொன்றுமில்லை. தேக சுகத்தைப் பாராட்டாது தவமியற்றுவோர் உலகெலாம் புகழும்படி வாழ்வார்கள்; தம்மை யடைந்தவரைக் காக்கும் வல்லமையுடையவர்களா யிருப்பார்கள்; பகைவர்களை யழிக்கும் திறமையுடையவர்களா யிருப்பார்கள்; தாம் இச்சிக்கும் பொருள்கள் எவ்வளவு அருமையானவைகளா யிருப்பினும் அவைகளனைத்தையும் அடைவார்கள்; என்றும் அழிவற்று வாழ்வார்கள்; இவ்விஷயங்கள் அரிய வுண்மைகளென உங்கள் புத்திக்கு நன்கு விளங்குமாறு நான் உங்களுக்கு ஓர் சரித்திரத்தைக் கூறுகிறேன், கேளுங்கள்!” என்று கூறி, காசிபமுனிவர் மார்க்கண்டேயரது திவ்விய சரித்திரத்தை வித்தாரமாய் எடுத்துரைக்கத் தொடங்கினார்.

புலன்களின் நெருங்கிய சம்பந்தம்

THE CLOSE RELATIONSHIP OF THE SENSES

அமெரிக்காவிலுள்ள குருட்டுச் சிறுமிகளுக்குள் மிகுந்த திறமையுள்ள சிறுமி, ஜேன்ஸ் வில்லே யென்னும் ஊரிலுள்ள விஸ்கான்ஸின் குருடர் பாடசாலையில் இருக்கிறாள். அவள் பெயர் வில்லெட்டா ஹக்கின்ஸ். அவள் இப்போது முற்றிலும் குருடாகவும் செவிடாகவும் இருக்கிறாளே யெனினும், அவள் பிறந்தபொழுது அவள் புலன்கள் சரியாகவே யிருந்தன.

1915-ம் வருஷத்தில் அவள் தன் மாகாணத்து இராஜாங்கப் பள்ளிக்கூடத்திற் சேர்ந்தபொழுது, அவளுக்கு வயது பத்து. அப்போது அவளுக்குக் காது கேட்பதும் கண் பார்வையும் கொஞ்சம் குறைவாக விருந்தன. அவ்விரு குறைகளுக்கும் சிகிச்சைகள் பல செய்தும், அக்குறைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வந்தன. ஆதிமுதலே புத்திகூர்மை யில்லாமலும் மனச்சந்தோஷ மற்றுமிருந்த அவளுடைய மனோ நிலைமை, அவளுடைய குறைகள் அதிகரிக்க அதிகரிக்க நாளுக்கு நாள் கெடுதி யடைந்து வந்தது. 1919-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் அவள் முற்றிலும் செவிடானாள். அதற்கு ஒரு வருஷத்துக்கெல்லாம் அவள் கண்பார்வையும் முற்றிலும் அழிந்தது. 1920-ம் வருஷம் கோடைகாலத்தில் அவளுடைய உபாத்தியாயர்களில் ஒருவர், அவளை பேசுபவர் உதடுகளின்மீது விரலை வைத்துப்பேசுவதை யறிந்துகொள்ளுவதான ஹெலென் கெல்லர் ஏற்படுத்திய முறையை அனுசரிக்கும்படி குருட்டுச் செவிடருடைய சைகையிற் சொல்ல, அவள் பிறருடைய உதடுகளைத் தொடுவதற்குத் தனக்கு இஷ்டமில்லை யென்று சொல்லிவிட்டாள். பிறகு அவ்வுபாத்தியாயர், பேசுபவர் தலைமீது தன் கையை அழுத்திவைப்பதனால் அவர் பேசுவதை யறிந்துகொள்ளும் சக்தியுடையவளாக ஒருகுருட்டுச் செவிட்டுப்பெண் இருப்பதாகத் தான் கேள்விப்பட்டிருந்ததை அவளுக்குச் சொல்லி, பேசுபவரது தேகத்திலுள்ள எலும்புகள், பேச்சின் ஒலியினால் தம் அணுக்கள் அசைவுறப்பெறுமென்றும், அவ்வாறு அசைவுறுவதைக் கையினால் ஸ்பரிசித்துணர்ந்து அப்பெண் பேசுபவர் பேசுவதை யறிந்துகொண்டதென்றும், அவ்வித அணுவசைவு தலையில் உணர்வதைக் காட்டிலும் கழுத்தில் அதிகத் தெளிவாய் உணரக்கூடுமென்றும் கூறி, அப்பெண்ணின் அற்புதத் திறமையின் காரணத்தை விளக்கிக்காட்டினார்.

கொஞ்ச காலத்தில் அவள் அம்முறையைக் கற்றுக்கொண்டு அதை யனுஷ்டிக்கத் தொடங்கினாள். பேசுபவர் தலையின்மீதோ பிடரியின் மீதோ தன் கையை அழுத்திவைத்துக்கொண்டு அவர் பேசுவதை யறியும் சக்தியைப் பெற்றாள். அதுமுதல் அவள் குணம் முற்றிலும் மாறிற்று. அவள் துக்க சுபாவம் நீங்கப்பெற்று உண்மையான குதூகலமுடையவளானாள். அது மாத்திரமன்று. அவளுடைய புத்தியும் அற்புதமான மாறுதலை யடைந்தது. முன்பு மந்தபுத்தி யுடையவளாயும் சொல்வதைக் கிரஹித்துக் கொள்ளக்கூடாதென்ற வீம்புடையவளாயும் இருந்தவள், பிறர் தனக்குச் சொல்லுபவைகளை யெல்லாம் கவனமாய்க் கேட்கும் இயல்புடையவளாகவும், எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளவேண்டுமென்ற ஆவலுடையவளாகவும், யார் தனக்கு என்ன சொன்னாலும் அதை விரைவிற் கிரஹித்துக் கொள்ளும் திறமை யுடையவளாகவும் ஆயினாள்.

இவ்வித அற்புத மாறுதலை அவள் அடைந்து இன்னும் ஒருவருஷங்கூட ஆகவில்லை. ஆனால் அவள் இப்போது கூர்மையான புத்தியுடையவளாகவும், தன்னைச்சுற்றி நடக்கும் சம்பவங்களைச் சூக்ஷ்மமாய்க் கவனிக்கும் இயல்புடையவளாகவும், விஷயங்களைக் கற்றுக்கொள்ளுவதில் தன் பொழுதைக் கழிக்கவேண்டுமென்ற இச்சையுடையவளாகவும், அடங்காத ஆனந்த முடையவளாகவும் இருக்கிறாள். அவ்வித அற்புத மாறுதல், அவளுடைய கட்புலனும் செவிப்புலனும் தமது தொழிலைச் செய்வதை முற்றிலும் நிறுத்திய பிறகுதான் நேர்ந்தது என்னும் விஷயம் கவனிக்கத்தக்கது.

அவள் முற்றிலும் செவிடாயிருந்த போதிலும், அவள் செவிப்புலன் குற்றமற்றதாயிருக்கப்பெற்றவர் பலரைவிட அதிக சூக்ஷ்மமாக யாதொரு இயந்திர உதவியில்லாமலே கேட்கிறாள். அவளுடைய கண்கள் பார்க்குந்

நிறத்தை முற்றிலும் இழந்துவிட்டனளே யெனினும், அவள் தேர்ந்த சித்திர வேலைக்காரனைப் போல அவ்வளவு நுட்பமாகவும் விரைவாகவும் நிறங்களை யின்னவென்று அறிந்து சொல்லுகிறாள். அதற்குமுன் அவள் சென்று பழகியிராத தோப்புகளில் மரங்களில் இடித்துக்கொள்ளாமல் தாராளமாயும் வேகமாயும் நடந்து செல்லுகிறாள். அவளுக்குப் பழக்கமானவர்கள், பல அடி தூரத்துக்கு அப்பால் இருக்கும்போதே அவர்கள் இன்னின்னாரென அடையாளங் கண்டுகொள்ளுகிறாள். அவள் செய்கைகளைப் பார்த்தால், அவள் கட்புலனையும் செவிப்புலனையும் இழந்தவளென்று எளிதிற் சொல்ல முடியாது.

பாடசாலையில் அவள் கல்விகற்பதை மேல் பார்த்துவந்த மிஸ்டர் ஹூப்பர் என்பவர் அப்பாடசாலையிலுள்ள விநோதங்களைக் காண வந்த சில சீமாட்டிகளை அவளிடம் அழைத்து வந்து, அவர்கள் இன்னாரென்று அவளுக்குத் தெரிவித்துப் பிறகு அவளை நோக்கி, "வில்லெட்டா! இச்சீமாட்டியுடைய பாவாடையின் நிறம் இன்னதென்று உன்னால் சொல்லமுடியுமா?" என்று கேட்டார். உடனே அவள் முழந்தாளிட்டு உட்கார்ந்து, அச்சீமாட்டியினுடைய பாவாடையின் ஓர் மூலையைக் கையிற் பிடித்துக் கணநேரம் மோந்து பார்த்துப் பிறகு சிறிதும் தியக்கமின்றி, "நீலம், கறுப்பு, வெண்மை" என்றாள். அப்பாவாடை அந் நிறங்களுடையதாகவே யிருந்தது.

பிறகு மிஸ்டர் ஹூப்பர் அவளுடைய கையைப் பிடித்து நூல்களினால் தைத்துச் சித்திரித்திருந்த இலையொன்றின்மீது வைத்து அதன் நிறமென்னவென்று கேட்டார். உடனே வில்லெட்டா அதைக் கணநேரம் மோந்து பார்த்து, "அது பச்சை நிறம்" என்று பதிலளித்தாள். அப்போது மிஸ்டர் ஹூப்பர், "அதன் நிறம் அது ஒன்றுதானா?" என்று அவளைக் கேட்டார். உடனே அவள் வெட்கமுற்று அதைப் பின்னுமொரு முறை கவனித்துமோந்துபார்த்து, "இதன் ஓரத்தில் சிறு கறுப்பு நூலொன்று இருக்கிறது" என்றாள். அவள் சொன்னது உண்மையா யிருந்தது. ஊன்றிப்பார்க்காவிட்டால் கண்ணுக்குத் தெரியக் கூடாத சிறு கறுப்புக் கோடொன்று அதன் ஓரத்தில் காணப்பட்டது.

பிறகு மிஸ்டர் ஹூப்பர் அங்கு வந்திருந்த சீமாட்டிகளில் ஒருவரை நோக்கி, "அம்மா! தாங்களே அவளுடன் நேரிடப் பேசி, தங்களுக்கிஷ்டமான கேள்வியைக் கேட்டுப்பாருங்கள்" என்றார். அச்சீமாட்டி, "அம்மா! நீ கட்டிடத்துக்கு வெளியே போவதுண்டா? கட்டிடத்தைச் சுற்றி அநேக மரங்களிருக்கின்றனவே. நீ வெளியே போனால் அவைகளில் மோதிக்கொள்ள மாட்டாயோ?" என்று கேட்டார். வில்லெட்டா அக்கேள்விகளைக் கேட்டு நகைத்து, "மோதிக் கொள்ளுவானேன்? மோந்து பார்ப்பதினால்தான் அவைகளிருக்குமிடம் எனக்குத் தெரிகிறதே!" என்றாள்.

அவளது வார்த்தைகளைக் கேட்ட சீமாட்டிகள் அவளது அத்திறத்தைக் காணவேண்டுமென்று அபிப்பிராயப்பட, மிஸ்டர் ஹூப்பர் அவளைச் சிறிது தூரம் வெளியே போய்விட்டு வரும்படி சொன்னார். ஒரு சீமாட்டி அவளைக் கட்டிடத்துக்கு வெளியே அழைத்துக் கொண்டு சென்று, ஒரு தோப்பை நோக்கி அவளை நிறுத்திவைத்து அவளை நேரே நடந்து செல்லும்படி வேண்டினார். வில்லெட்டா சிறிதும் தியக்கமின்றிப் புறப்பட்டு விரைந்து நடந்தாள். அவள் தோப்பை யணுகியபோது அவளுக்கு நேரெதிரே ஒரு பெரியமரம் இருந்தது. பார்க்கவந்த சீமாட்டிகளெல்லோரும் எங்கு அவள் அம்மரத்தில் மோதிக்கொள்ளுவாளோ வென்று பயந்து, மூச்சுவிடாமல் அவளை யுற்றுநோக்கி நின்றார்கள். ஆனால் அவள் அம்மரத்துக்குச் சுமார் மூன்றடி தூரத்தில் போகும்போதே ஒருபுறமாகத் திரும்பி அதைச்சுற்றிச் சென்று தோப்புக்குள் நுழைந்து மரங்களினிடையே அவைகளில் மோதிக்கொள்ளாமல் மிகுந்த சாமர்த்தியத்துடன் விரைந்து நடந்து சென்றாள்.

அவ்வாறு தோப்புக்குள் சென்றவள் திரும்பி வரும் சமயத்தில் சிறிது தூரத்தில் அவ்வழியே போய்க்கொண்டிருந்த இரண்டு ஸ்திரீகளை மிஸ்டர் ஹூப்பர் சைகையினால் அழைத்தார். அவர்கள் வில்லெட்டா இருக்குமிடத்தை யணுகியதும், வில்லெட்டா அவர்கள் இன்னாரென்று அறிந்துகொண்டு அவர்கள் பெயரைச் சொல்லி அவர்களை யழைத்து க்ஷேமம் விசாரித்தாள்.

எல்லோரும் திரும்பி உள்ளேசென்று முன்னிருந்த அறையை யடைந்ததும், வந்திருந்த சீமாட்டிகளில் ஒருவர் அவ்வறையின் ஓர் மூலையில் ஒரு பூனை படுத்திருப்பதைக்கண்டு, வில்லெட்டாவின் கையொன்றை எடுத்துத் தம் தலையின்மீது வைத்துக்கொண்டு, "அம்மா! நம்மைத்தவிர இவ்வறையில் என்ன ஜந்து இருக்கிறது?" என்று கேட்டார். அதற்கு வில்லெட்டா, "அந்தக் கிழப்பூனைதான்" என்று புன்னகையுடன் மறுமொழி புகன்றாள். பிறகு எல்லோரும் அவளை ஏதேதோ வினவி அவளது மறுமொழிகளைக் கேட்டு ஆச்சரிய மடைந்தார்கள். இரசமான சம்பாஷணையில் யாவரும் பூனையை முற்றிலும் மறந்துவிட்டார்கள். இருந்தாற்போலிருந்து வில்லெட்டா, "பூனை வெளியே போய்விட்டது" என்று சொன்னாள். கட்புலனும் செவிப்புலனும் நல்ல நிலைமையில் இருக்கப்பெற்ற தாங்கள் கவனிக்காமற்போன சம்பவத்தை அக்குருட்டுச் செவிட்டுப்பெண் தன் நுட்பமான மூக்கினால் மோந்து கவனித்துத் தங்களுக்குச் சொன்னதைக் கண்டு யாவரும் அத்தியாச்சரிய முற்றனர். பிறகு ஒரு சீமாட்டி அங்கிருந்த புஷ்பச் செடிகளிலிருந்து ஓர் வெண்ணிறமுள்ள மலரைப் பறித்து வில்லெட்டாவினுடைய மூக்குக்குக் கொஞ்ச தூரத்தில் பிடித்துக்கொண்டு அதன் நிறமென்னவென்று கேட்டார். வில்லெட்டா, "வெண்ணிறம்" என்று உடனே சொன்னாள்.

வில்லெட்டாவினுடைய இப்படிப்பட்ட அபூர்வ அநுபவமானது உலகத்தில் சாஸ்திர ஞானத்தைப் பெருக்கி, புலன்களின் சக்தி குறைவதனாலும் அழிவதனாலும் துயருறுவோர்களுக்கு மிகுந்த நன்மை புரியத்தக்கதா யிருக்கிறது. மெய், வாய், கண், மூக்குச் செவி யென்னும் ஐம்புலன்களில், கண் செய்யவேண்டிய தொழிலை மூக்கானது மோப்பத்தினால் செய்யக் கூடுமென்றும், செவி செய்யவேண்டிய தொழிலை மெய்யானது ஸ்பரிசத்தினால் (உணர்ச்சியினால்) செய்யக்கூடு மென்றும், அந்நான்கு புலன்களும் தங்கள் தொழில்களை ஒன்றோடொன்று மாற்றிக்கொள்ளும்படி நெருங்கிய சம்பந்தமுடையவைகளென்றும் வில்லெட்டாவின் அபூர்வ அநுபவத்தினால் தெளிவாய் விளங்குகிறது.

வில்லெட்டா இவ்வரிய வித்தையை எவரிடமும் கற்றுக்கொள்ளவில்லை. தனது இயற்கையறிவினால் அதை அவள் உணர்ந்து அறிந்துகொண்டாள். அவ்வித்தையினால் தன்னைச் சுற்றுமுள்ள ஜீவப்பிராணிகளுடன் தனக்குச் சம்பந்த முண்டாக்கிக்கொண்ட பிறகுதான் வில்லெட்டா துக்கமொழிந்து சந்தோஷமடைந்தாள். ஆகையினால் அவளுடைய நிலைமையிலுள்ள மற்றவர்களும் இவ்வித்தையை யுணர்ந்து அறிந்துகொண்டால், அவர்கள் துயரமும் நீங்குமென்பதற் கையமில்லை.

(257-ம் பக்கத் தொடர்ச்சி)

அழகிய தனபாரங்களையும் ஆர்வத்துடன் அணைந்து கொள்வோனே! பரிபூரண ஞான சொரூபனே! சக்கரவாள பருவதத்தை பாதாளத்தி லழுந்தும்படி செய்தும், மேருமலையில் உன்னை யாரென்றறியாது உன்னுடன் போர்புரியத் துணிந்த இந்திராதி தேவர்களை முறிந்தோடச் செய்தும் விநோதமான லீலைகளைச் செய்தருளிய பாலகுமாரா! சதகோடி தேவர்களுக்கும் தலைவனாயுள்ள தேவாதிதேவனே! வேதங்களும், பல்வகைப்பட்ட எண்ணிறந்த புராணங்களும், (ஞான மார்க்கத்தைக் கடைப்பிடித்தொழுகாது) ஏனைய சிவாகம நெறிகளாகிய சரியை கிரியை யோகம் என்னும் நெறிகளிற் செல்லும் அஞ்ஞானிகளும், பாவத்தையே புரிந்து வேதங்களிலடங்கிய உண்மைகளை மறுத்து வாதிக்கும் பரசமயங்களைச் சார்ந்தவர்களும் எப்பொருளைத் தேடி ஓயாமல் ஓடியும் அதைத் தொடர்ந்து பிடிக்கமுடியாமலும் அதன் தன்மையை உணரமுடியாமலும் தியங்குகிறார்களோ அப்பொருளாகிய பரம்பொருளின் பக்கத்தில் நான் சேர்ந்து எனது ஜடவுலக சுகதுக்க அநுபவம் நீங்குமாறு, நான் நினைக்கும்போதெல்லாம் மனத்தினில் பேரின்பத்தை யூட்டும் இறைவனாகிய உன்னுடைய பரிபூரணஞானமாகிய ஒளியை அன்பொடு நினைத்து மனமுருகி, எவ்வுயிரிடத்தும் எப்பொருளிடத்தும் விரோதம் என்பது சிறிதுமற்றவனாய், நினது திருவருள் பெருகி நிரட்டும் பேரின்ப வாரிதியிற் குளித்து நின்திருவருளைப்பெற்ற அடியார்களுடன் கூடி ஆனந்தக் கூத்தாடி மகிழ்ந்து, வெண்கடம்ப மாலையையும் இரத்தினங்களும் வயிரங்களும் இழைக்கப்பெற்ற பொன் தண்டைகளையும் அணிந்து வருணிப்பதற்கரிய திவ்விய ஒளியைவீசும் இளமையும் அழகும் பொருந்திய நின் திருவடிமலர்களை மறவாமற் புகழ்ந்துபாட நின் திருவருள் புரியமாட்டாயோ? [அருளுக்கு அன்பு காரணமோ? அன்புக்கு அருள் காரணமோ? அன்பில்லார்க்கு அருளில்லை; அருள் பெறாதவர்க்கு அன்பில்லை.]

கள்வ ஞானி*

THE ROBBER SAINT

பிருந்தா வனத்துக்கு மூன்றுநாள்வழித் தூரத்திலிருந்த ஓர் ஊரில் ஒருநாளிரவு பக்தர்கள் நிறைந்த சபையில் ஒரு புராணிகர் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவினுடைய சௌந்தரியத்தைப் பின்வருமாறு வருணித்தார்:—

"மானிடரால் செய்யப்படும் கிருஷ்ணவிக்ரஹத்தின்முன்கூட உலகத்திலிருந்த சௌந்தரியம் வாய்ந்ததாகக் கருதப்படும் உருவம் அற்பமாகத் தோன்றுகிறதென்றால், அவருடைய நிஜமான திவ்விய மங்கள சொரூபத்தை உரைக்கவல்லவர் யார்? அவருடைய அகன்ற நெற்றியிலுள்ள கஸ்தூரி திலகமும், அவர் மார்பிலணிந்துள்ள ஒவ்வொன்றும் ஒரு அரசனைச் சிறைமீட்கத் தக்க மதிப்புள்ளதான அருமையான இரத்தினங்க ளிழைக்கப்பெற்ற பதக்கத்தையுடைய மணியாரமும், திவ்விய வேணுகானஞ்செய்யும் அவரது செவ்விய பவளம் போன்ற உதடுகளும், அவர் திருக்கரங்களிலுள்ள விலைமதிக்க வொண்ணாத நவரத்தினங்களிழைக்கப்பெற்ற அழகிய பைம்பொற் கடகங்களும், அவரது சிரசில் பொருந்தியிருப்பதனால் அழகுமிகுந்து வெயில்வீசும் நவரத்தினகசிதமான மாசற்ற கிரீடமும், காட்டிலுள்ள கொடிய மிருகங்களும் மனமுருகித் தமது கொடுந்தொழிலை விடும்படிச் செய்யும் வேணுகானத்திலும் அவரது தேஜோமயமான மங்களவடிவத்திலும் ஈடுபட்டுக் கைகுவித்து அவரையே கண்கொட்டாது பார்த்துக் கொண்டு நிற்கும் கோபிகளும் ஒருவன் கண்கள்முன் தோன்றினால், அவன் கல்லையொத்த நெஞ்சினை யுடையவனாயினும் மனமுருகி அக்காட்சியில் ஈடுபட்டுக் கைகுவித்து ஆனந்தக் கூத்தாடுவான் என்பதற் கையமுண்டோ?"

இவ்விதமாகவும் இன்னும் பலவிதமாகவும் அப்புராணிகர் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவினுடைய திவ்விய சொரூபத்தை வருணித்து சபையோர் மனத்தில் பேரானந்தத்தை யூட்டினார். சபையிலுள்ளோரிற் சிலர் அணிந்திருந்த விலைபெற்ற ஆபரணங்களைக் கவர்ந்து கொள்ளவேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன், உருமாறி அச்சபையிலுள்ள பக்த கோஷ்டியில் கலந்து உட்கார்ந்திருந்த ஒரு கொடிய திருடன் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா அணிந்திருந்த ஆபரணங்களின் வருணனையைக் கேட்டு அவைகளை எப்படியாயினும் கவர்ந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் கொண்டவனாய், சபையோரிற் சிலர் அணிந்திருந்த ஆபரணங்களைத் துச்சமாகவெண்ணி அவைகளைக் கவரவேண்டுமென்று முன் கொண்ட ஆசையைத் தள்ளி, சபை கலையும் வரையில் காத்திருந்து, கலைந்தபின் புராணிகரை வியத்துடன் அணுகி, "ஸ்வாமி! ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவைக் காணவேண்டுமென்ற ஆவல் கொண்டேன். அவரை எங்கு காணலாம்?" என்று கேட்டான்.

அவர் அவன் ஓர் பக்தனென்று எண்ணி, "அப்பா! அன்பில்லாத இக்கலியுகத்தில் அவரைக் காணக்கூடியவர் மிகவும் சிலரே. அவர்களும் ஓயாமற் பொறுமையுடனும் ஆவலுடனும் தேடினாலல்லது காணமாட்டார்கள். பிருந்தாவனத்தின் தெருக்களில் அவரைக் காண முடியும். ஒருசமயம் அவரை அங்கு காண முடியாவிட்டால், பிருந்தாவனத்துக்கும் கோகுலத்துக்கு மிடையிலுள்ள கடவுவழியினண்டையில் என்றைக்கு வேண்டுமானாலும் நிசிப்பொழுதில் அவரைத் தவறாமல் காணமுடியும்" என்று சொன்னார்.

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியைத் தேடிப்பிடித்து அவரிடத்திலிருந்து அவருடைய விலைமதிக்க வொண்ணாத கிரீடத்தையும் மணியாரத்தையும் பறித்துக்கொள்ளும்வரையில் எதையும் புசிப்பதுமில்லை பானம்பண்ணுவதுமில்லையென்று சபதஞ்செய்துகொண்டு புறப்பட்டு அக்கள்வன் மூன்றுநாட்கள் நடந்து பிருந்தாவனத்தை யடைந்தான். அவ்விடத்தை யடைந்ததும், பரமாத்மாவைக் கண்டுபிடித்துவிடலாமென்ற எண்ணத்தினால் அவன் பசிதாகத்தையும் நடந்துவந்த களைப்பையும் மறந்து எல்லாத் தெருக்களிலும் கோவில்களிலும் தேடிப் பார்த்தான்; கண்டபேர்களையெல்லாம் பரமாத்மாவின் இருப்பிடம் எங்கே யென்று விசாரித்தான். சாமானிய மனிதர்கள் அவன் கேள்வியைக் கேட்டு அவன் பித்தனென நிச்சயித்து நகையாடினார்கள். தெய்வபக்தியுள்ள பெரியோர்கள் அவனது ஆவலையும் மனவுறுதியையும் நம்பிக்கையையும் கண்டு வியப்புற்று, பரமாத்மாவைக் கண்டுபிடிப்பது கடினமேயெனினும் பக்தியுடனும் மனவுறுதியுடனும் தேடினால் அவர் அகப்படுவது திண்ணமென வுரைத்து அவனைத் தைரியப்படுத்தினார்கள்.

ஒரு இடம் விடாமல் பிருந்தாவனம் முழுவதிலும் தேடினான். நான்கு நாட்கள் தேடியும் பரமாத்மாவைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஊரிலிருந்து அவன் புறப்பட்டு ஒரு வாரமாயிற்று. புறப்பட்டது முதல் யாதொரு உணவாவது பானமாவது உட்கொள்ளாததினால், அவன் தேகமும் மனமும் மிகவும் சோர்வுற்றன. அச்சமயத்தில் அவன் மனம் மகா கோபத்துடன் அப்புராணிகர்மீது சென்றது. உடனே புறப்பட்டு ஊருக்குப்போய் அப்புராணிகர் தலையைத் துணித்தெறிந்துவிட்டு தன் பசிதாகத்தைத் தீர்த்துக்கொள்ளவேண்டுமென்று நிச்சயித்தான்.

அவ்விதமான நிச்சயத்துடன் தன் ஊரை நோக்கிப் புறப்பட்டுச் சிறிதுதூரம் சென்றவுடன், பிருந்தவானத்துக்கும் கோகுலத்துக்கு மிடையிலுள்ள கடவுவழியினண்டையில் பரமாத்மாவைத் தவறாமல் காணலாமென்று புராணிகர் சொன்னது அவன் ஞாபகத்துக்குவர, அவன் அவ்விடத்துக்குச் சென்று ஓரிடத்தில் படுத்துக்கொண்டு நிசிப்பொழுதை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

சர்வக்ஞரான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா அவன் வந்த நோக்கத்தையும், அவன் மனவுறுதியையும் அடக்கமுடியாத ஆசையையும், தன் நோக்கம் நிறைவேறாவிடில் புராணிகரைக் கொல்வதாக அவன் செய்துகொண்ட நிச்சயத்தையும் அறிந்தவராய், தமது வாசஸ்தலமான பிருந்தாவனத்துக்கு வந்தவனை உபசரித்து ஆதரிக்கவேண்டுவது தமது கடமையெனக் கருதியவராய், நடுநிசியில் ஒரு பழைய கம்பளியைப் போர்த்துக்கொண்டு அக்கடவுவழியினண்டையில் வந்து நின்றுகொண்டு, "அப்பா! நீ யார்? மனித சஞ்சாரமில்லாத இடத்தில் நிசித்தருவாயில் நீ வந்திருப்பதற்குக் காரணமென்ன?" என்று கேட்டார்.

அதற்கு அவன், "நான் ஒரு திருடன். ஸ்ரீ கிருஷ்ணன் என்னும் ஒருவனுடைய வருகையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்" என்று பரமாத்மாவின் சந்நிதானத்தில் பொய்யுரைக்கமுடியாது உண்மையை யுரைத்தான். "எதற்காக அவன் வரவை எதிர்பார்க்கிறாய்?" என்று கேட்டார் பரமாத்மா. அவன், "அவன் எப்போதும் விலைமதிக்கமுடியாத கிரீடத்தையும் மணியாரத்தையும் தரித்துக்கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவனைத் தேடிப்பிடித்து அவைகளை அவனிடமிருந்து பறித்துக்கொள்ளவேண்டுமென்று நிச்சயித்திருக்கிறேன். என் நோக்கம் நிறைவேறும்வரையில் உணவாவது பானமாவது உட்கொள்வதில்லையென்று சபதஞ்செய்துகொண்டிருக்கிறேன்" என்றான். "நான்தான் ஸ்ரீ கிருஷ்ணன்!" என்றார் பரமாத்மா. "இருக்கவே முடியாது! பழைய கம்பளியைப் போர்த்துக்கொண்டிருக்கும் நீ, செல்வமிக்கவனென்றும் தனது அழகிய தேகத்தில் உயர்ந்த இரத்தினாபரணங்களை யணிந்திருப்பவனென்றும் புராணிகர் சொன்ன ஸ்ரீ கிருஷ்ணனாக இருக்கவே முடியாது!" என்றான் திருடன்.

உடனே கருணாசமுத்திரமான பரமாத்மா தமது கம்பளிப் போர்வையை அப்பால் எறிந்துவிட்டு தமது திவ்விய தேஜோமயமான உருவத்தை வெளியிட்டார். அவ்வுருவத்தின் காந்தியைக் காணச் சக்தியற்றவனாய்த் திருடன் மூர்ச்சித்து விழுந்தான். அவன்மீது இரக்கங்கொண்டு பரமாத்மா அவனுடைய முகத்தை ஒருமுறை தமது திருக்கரத்தினால் தொட்டருளினார். அவரது ஸ்பரிச விசேஷத்தினால் தன் குணம் முற்றிலும் பரிசுத்தமுறப்பெற்று எழுந்தான் திருடன். எழுந்தபொழுது அவன் மனத்தில் பரமாத்மாவினுடைய ஆபரணங்களைப் பெறவேண்டுமென்ற ஆசையற்றுப்போய், அவரது பாதாரவிந்தங்களினடத்துப் பரம பக்தியும் அத்திவ்விய மங்கள சொரூபத்தைத் தனது கண்களின் முன் என்றும் நிலைநிறுத்தவேண்டுமென்ற பேராவும் குடிகொண்டிருந்தன.

திருடனாயினும் அவனுக்கென்ற தருமநீதியொன்றுண்டாகையால், அவனுக்கு அவ்வாபரணங்களைப் பெறவேண்டுமென்ற ஆசை அற்றுப்போயிருந்தபோதிலும், தன் சபதத்தை எப்படியாயினும் நிறைவேற்ற வேண்டுமென்று அவன் எண்ணினான்.

* இந்திய விமர்சனம்" என்னும் பத்திரிகையில் ஸ்ரீமான் பாமா பூரண சக்ரவேர்த்தி எழுதிய வியாசத்தை ஒட்டியது.

அவன் பரமாத்மாவின் தேகத்திலிருந்து அவ்வாபரணங்களைத் தான் பறிப்பதைக்காட்டிலும் தன் கைகளைத் துணித்தெறிவதே நலமென வெண்ணினானாகையால், அவன் தன் சபதத்தை நிறைவேற்றி அன்னபானாதிகள் உட்கொள்ள வழியறியாது தியங்கினான். கருணையின் சொரூபமான பரமாத்மா அவன் மனத்திலுள்ள எண்ண மின்னதென்று அறிந்து, தமது அடிமை தன் சபதத்தை நிறைவேற்றாததனால் அன்னபானாதிகளில்லாமல் மடிவதில் இஷ்டமற்றவராய், உலகத்தை யெல்லாம் சந்தோஷிக்கச்செய்யவல்லமந்தஹாஸத்துடன் அவனை நோக்கி, "அப்பா! நான் இராஸக் கிரீடைக்குப் போகும்போது இவ்வாபரணங்களைத்தாம் அணிந்துகொள்வது வழக்கம். ஆனால் அதற்குப் போகுமுன் வேறுகாரியமாக மற்றோர் இடத்துக்குப் போகவேண்டியிருக்கிறது. நான் வரும் வரையில், இவ் வாபரணங்களை வைத்துக்கொண்டிரு. நான் சிறிது நேரத்தில் திரும்பிவந்து ஆபரணங்களை வாங்கியணிந்துகொண்டு, உன்னையும் இராஸக் கிரீடைக்கு அழைத்துச் செல்லுகிறேன்" என்று சொல்லித் தமது கிரீடத்தையும் மணியாரத்தையும் கழற்றி அவன் கையிற்கொடுத்துவிட்டு அவ்விடத்தைவிட் டகன்றார்.

பரமாத்மா மறைந்ததனால் வருந்தினானேயெனினும் அக்கள்வன் தன்சபதம் நிறைவேறியதையுன்னி மகிழ்ச்சியுற்று, அங்கேயே யிருந்தால் அந்நகைகளைப் பரமாத்மாவுக்குத் திருப்பிக் கொடுக்காம லிருப்பது தனக்குச் சாத்தியமில்லை யாதலின், தான் பசியினால் மடியாமல் வாழ்ந்திருக்க வேண்டுமானால் பரமாத்மா திரும்பிவருமுன் அவ்விடம்விட் டகலவேண்டுமென்று நிச்சயித்து, அங்கிருந்து புறப்பட்டு விரைந்து சென்று, பிருந்தாவனத்துக்கு அப்பால் வெகுதூரம் சென்றபின் தன் பசிதாகத்தை யாற்றிக்கொண்டு, தன் ஊருக்குச் சென்றான்.

திருடன் தன் ஊர் போய்ச் சேர்ந்த அன்றிரவும் புராணிகர் பாகவதத்திலுள்ள விஷயங்களை எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தார். அவன் அக்கிரீடத்தையும் மணியாரத்தையும் அணிந்துகொண்டு சபையில் போய் உட்கார்ந்தான். அவ்வாபரணங்கள் வேறெவர் கண்களுக்கும் தெரியாமல், புராணிகர் கண்களுக்கு மட்டுமே தெரிந்தன. அவைகளின் திவ்விய காந்தியைக்கண்ட புராணிகர் மயங்கி புராணம் சொல்ல மாட்டாதவராய் ஏதோ வொரு முகாந்தரத்தை சொல்லி யாவரையும் அனுப்பிவிட்டு, எல்லோரும் போனபின்பும் உட்கார்ந்திருந்த அத்திருடனை நோக்கி, "ஐயா! உமக்கு இவ்வாபரணங்கள் எப்படிக் கிடைத்தன?" என்றுகேட்டார். திருடன், "சுவாமி! எல்லாம் தாங்கள் செய்த உபதேசத்தின் பலன்தான்!" என்று கூறி அவர் பாதங்களில் வீழ்ந்து பணிந்து, தான் போனபோது கொண்ட நோக்கத்தையும், பரமாத்மாவின் கிருபையினால் தனக்குக் கிடைத்த தரிசன பாக்கியத்தையும் வித்தாரமாய் எடுத்துரைத்தான். அதைக் கேட்ட புராணிகர், அக்கள்வன் பரமாத்மாவைக் காணவேண்டுமென்று கொண்ட எல்லையற்ற ஆவலினால் அவரது பாததரிசனம் பெற்றான் என்பதை யறிந்துகொண்டு, பூர்வஜன்மங்களில் அத்திருடன் செய்திருந்த அளவற்ற புண்ணியத்தின் பயனாக அவ்வாவல் அவன் மனத்திலுதித்த தென்றும், தாம் பரமாத்மாவை வருணித்தது அவனைச் சூழ்ந்திருந்த மாயைக் கோட்டையைப் பொடியாக்கின புண்ணிய வெடிமருந்தைப் பற்றவைத்த தீப்பொறி தானென்றும் நிச்சயித்து, பரமாத்வைத் தரிசனம்பண்ணும்பாக்கியத்தைப் பெற்ற அப்பெரியோனது பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து, "என் குருவே! என்னை யாட்கொள்ள வந்த தெய்வமே! அடியேன்மீது தேவரீர் கிருபை கூர்ந்து, உலக விஷயங்களில் இதுகாறும் வாணாளை அவமே கழித்துவந்து இப்போது தாங்கள் சொன்ன விருத்தாந்தத்தினால் உண்மையறிவு பெற்ற அடியேனை பிருந்தாவனத்துக்கு அழைத்துப்போய், ஸ்ரீகேசவனுடைய திவ்வியபாததரிசனம் அடியேனுக்குக் கிடைக்கும்படி செய்து, அடியேனை உய்வித்தருள வேண்டும். இல்லாவிடில், நான் அன்னபானாதிகளை யொழித்து தங்கள் பாதாரவிந்தங்களின்கீழ் என் உயிரை மாய்த்துக்கொள்வேன்!" என்று கூறி அத்திருடனுடைய பாதங்களைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டார்.

பரமாத்மாவின் அடியார்களும் பரமாத்மாவைப்போலவே கருணையை மிகுதியாகவுடையவர்களாதலால், அத்திருடஞானியும் புராணிகருடைய வேண்டுகோளுக்கியைந்து, அவரை

பேதைகள் வெள்ளத்தில் நின்றும், தாகத்திற்குத் தண்ணீருக்கு அலைவார்கள்.

யழைத்துக்கொண்டு பிருந்தாவனத்துக்கும் கோகுலத்துக்கு மிடையேயுள்ள கடவுவழிக்குச் சென்று அங்கே உட்கார்ந்திருந்தார். நிசிப்பொழுதில் பரமாத்மா அந்தத் திருடஞானியின்முன் தோன்றி, "அப்பா! என் கிரீடத்துக்கும் ஆரத்துக்கும் எந்நேரம் காக்கிறது? உன்னை நம்பினதற்கு இதுதான் பலனோ?" என்று புன்னகையுடன் கேட்டார்.

அவரது திவ்வியசொரூபத்தைக்கண்ணுற்ற அப்பக்தன் பரமானந்தமடைந்தவனாய், "சுவாமி! நான்தான் பெரிய திருடனென் றெண்ணியிருந்தேன். தேவரீர் என்னைவிடப் பெரியதிருடனென்று இப்போதுதான் அறிந்துகொண்டேன். வன்மையில் வயிரத்தை யொத்த என்னெஞ்சத்தைத் தேவரீர் திருடிக்கொண்டுவிட்டீர்களே!" என்று கூறி நகைத்தான்.

இவ்வாறு அவ்விரு காதலர்களும் பேசிக்கொண் டிருக்கும்போது, அருகேயிருந்த புராணிகருடைய கண்களுக்குப் பரமாத்மாவின் உருவம் தெரியவுமில்லை, அவர் செவிகளில் பரமாத்மாவின் வார்த்தைகள் படவுமில்லை. தாம் குருவாகக் கொண்ட திருட ஞானியின் வார்த்தைகளும் செய்கைகளுமே அவருடைய புலன்களுக்குத் தெரிந்தன. உடனே அவர் அந்த ஞானியின் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து, பரமாத்மாவின் தரிசனம் தமக்குக் கிடைக்கச் செய்யும்படி வேண்டினார்.

திருடனாயிருந்த அந்த ஞானி, பிராமண குலத்திற் பிறந்து பல கலைகளையும் படித்துத் தேர்ந்து பல பேர்களுக்குப் பரமாத்மாவின் அனந்த கல்யாண குணங்களை எடுத்துரைத்திருந்த புராணிகருக்குத் தரிசனம் தந்தருள வேண்டுமென்று பரமாத்மாவைப் பிரார்த்திக்க, பரமாத்மாவும் தமது பக்தனுக்குத் திருப்தி யுண்டாக்குவதற்காக அவருக்குத் தரிசனம் தந்தருளினார்.

இவ்வுண்மையான சரித்திரம் பகவத்கீதையில் பரமாத்மாவானவர், "ஓ பார்த்தா! மனிதர் என்னை எவ்விதமாக அணுகினபோதிலும், நான் அவ்வாறே அவர்களை ஏற்றுக்கொண்டு ஆதரிக்கிறேன்; ஏனெனில், மனிதர் எப்புறத்திலிருந்து புறப்பட்டபோதிலும் அவர் நடக்கும் மார்க்கம் என்னுடையதாகவே யிருக்கிறது" என்று கூறிய வாக்கியத்தின் உண்மையை விளக்குகிறது.

கண்ணன் கழலிணை வாழ்க!!

புதுத்துறை ஐக்கியப் பண்டசாலை
PUDUTURAI CO-OPERATIVE STORES

சூர்யாஸ்தமன சமயம். புதுத்துறையின் சாலைவழியாகக் கூச்சல் போட்டுக்கொண்டும் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டும் 7, 8 பேர்கள் போய்க்கொண் டிருந்தார்கள். உற்றுப் பார்த்ததில் அவர்கள் பக்கத்திலுள்ள களத்திலிருந்து அன்றைய வேலை முடிந்தவுடன் தம் தம் எஜமானர்களிட மிருந்து கூலிநெல்வாங்கிக்கொண்டு திரும்பிய வேலைக்காரர்க ளென்று தெரியவந்தது. அப்பொழுதுதான் பக்கத்திலுள்ள மணியாற்றில் உடம்பு குளித்துவிட்டு வீடு நோக்கிச் சென்றுகொண் டிருந்தார்கள். கொஞ்சதூரம் சென்றதும் அவர்களில் காத்தமுத்து என்னும் ஒருவன் மற்றவரை நோக்கி, "என்னா! நீங்கல்லாம் உப்பு, புளி, மூளவா வாங்க செட்டியார் கடைக்கி வல்லீங்களா? இதோ குறுக்குப்பாதை! இப்படியே போகலாமே" என்றான். எல்லோரும் இசைய தங்கதுரை என்பவன், "இந்தச் செட்டி பெரியபாவி; பண்றதெல்லாம் அநியாயம். கூலி கொடுக்கிற வவுத்தெரிச்சல்தான் தெரியுமே, மண்ணும், கல்லும், கருக்காயும், தப்பினா ரெண்டு பசுங்கா, போடராங்க. அதையும் பொடைக்கிரேண்ணு கீழேதள்ளிவிட்டு தொம்பரை மரக்காலாலே பதக்கு ஒருபடியாக அளக்கறான். அதுக்குக் காசுதான் சரியா கொடுக்கிறானா? ஊருக்கெல்லாம் ஒரு ரூபாயானா இவனுக்கு மாத்திரம் ஒரு அணா விலையாம். அதெல்லாம் நம்ப நெல்லுக்குத்தான். அதுக்கு மண் உப்பும் புழுப்புளியும் சொத்தமொளவாயும் பவுன் விலையப்பா. இந்தூர்லே வேலைக்காரர் வீடு மாத்திரம் எவ்வளோ இருக்குது. எவ்வளவு சாமான் வாங்கவேண்டி யிருக்குது. எல்லாத்தையும் கொள்ளையடிச்சூட்டு தினம் தினம் கொஞ்சம் தொப்பை பெருக்க, பலகை கொள்ளாமல் குந்திக்கிட் டிருக்கான்" என்றான்.

அப்பொழுது வீரப்பன், "நான் நேத்திக்கு ராகவபுரத்துக்குப் போயிருந்தேன். எவ்வளவு பெரிய கடைத்தெரு! சாமானெல்லாம் ரொம்ப நல்லா இருக்குது. கையிலிருந்த அரை ரூபாயிக்கு ஏதோ ரெண்டு வாங்கிக்கிட்டு வந்தேன். எங்கவீட்டுப் பொம்பளெ சாமானெல்லாம் எவ்ள நல்லா இருக்குது; எவ்ள

பேதமை என்பது மாதர்க்கு அணிகலம்.

றையா இருக்குதுண்ணா. கொஞ்சம் பாடு பட்டாலும் அதல்ல நல்லது" என்றாள். குப்புசாமி, "நாம்ப இங்கே பெரட்டரத்தே அங்குட்டுத்தான் போய் வந்துடுவமே; புள்ள சாநிங்க நாம்ப வரல்லே வரல்லேண்ணுதான் தவிக்குதோ ?" என, காத்தமுத்து "இத்தனை பேரும் போகணுமாக்கும்? அதோ அப்பில் நாயகன் நெல்லுப்பிடிச்சுக்கட்டரான். கருக்காயாயிருந்தாலும் கல்லாயிருந்தாலும் கலநெல்லா சேத்துக் கொண்டுக்குட்டுப் போய்க் கொடுத்தமானா, நாலுகையினாலே வாங்கிக்கொட்டிக்கிட்டு காசை வீசரான். உனக்கும் எனக்கும் புத்தியில்லே. நாம ஒத்துப் பொழைக்கிறதில்லே. இதென்னத்துக்கு? இதோபாரு! இதோ எனக்கு முக்குருணி கூலி. உனக்கென்னடா கிடைச்சுது? வீரப்பா! அவனவன் உள்ளதெ உள்ளபடி சொல்லிப்போடுங்க, நான் கொண்டுக்குட்டு போயி, காசாக்கிகொண்டாறேன்" என்றான். ஒவ்வொருவனும் என்னுது பதக்கு, எங் கூலி, ரண்டரை மரக்கா, நானும் என் தம்பியும் தூணி சம்பாரிச்சம் என்பதாக காத்தமுத்து கீழே விரித்த சாக்கில் கொட்ட, மொத்தம் இரண்டு கலமாயிற்று. இதைக் கட்டிக் கொண்டு காத்தமுத்து அப்பிலுநாயகன் வீட்டுக்குப் போனான். அவர் நெல் வியாபாரி; கொண்டுவந்த தானியத்தை அளந்துகொண்டு "நித்தநித்தங் கொண்டுக்குட்டுவா தம்பி! நல்ல வெலை தாரேன். இந்தா ரெண்டு கலத்துக்கு 5 ரூபாய்" என்றார்.

பணத்தை எடுத்துக்கொண்டு தன் கூட்டாளிகள் வாக்குவாதம் இன்னும் நடந்து கொண்டிருக்கும்போதே வந்துசேர்ந்தான். பணத்தைப் பங்கிட்டுக்கொண்டார்கள். அப்பொழுது தங்கதுரை, "நெல்லு சேத்துக் கொண்டேப் போட்டோம். நாலுகாசு வந்துது. அதைக்கொண்டுபோய் செட்டியிடம் கொடுத்தூட்டு வாயிலெ வெரலைவச்சுக்கப் போறோம். நாளெல்லாம் வேலெ செஞ்சுக் களச்சுத்தான் இருக்கு. இருந்தாலும் செட்டியிடம் காசைக் கொட்டிக்கொடுக்க இஷ்டமில்லெ. ராகவபுரம் ரெண்டு நாழி வழிதானே இருக்கு. யாராவது ஒருத்தன் கூட வந்தா நானும் புரப்படறேன்" என்றான்.

காத்தமுத்து, "அதுக்கென்னண்ணே! இதோ நான் வரேன். செட்டி அதுக்குக் குடுக்கணும் இதுக்குக் குடுக்கணும், முன்பாக்கி பின்பாக்கி என்று காசெல்லாம் பிடிச்சுக்கிணு என்னமோ சாமான் தர்ரான். காலாற நடந்துதான் போய்வருவமே" என்றான். இருவரும் புறப்படவே வீரப்பன், "காத்தமுத்து! எனக்குக்கூட ரெண்டணாவுக்கு அரைப்படி உப்பு, அரைச்சேர் மொளவா, ஓரணாவுக்கு மசாலெ வாங்கிக்கிட்டு வரயா?" என்றான். அப்படியே எல்லோரும் எனக்கிது எனக்கிதுவென்று சொல்ல, மொத்தமாய் நெல்விற்று லாபங்காட்டிய காத்தமுத்து அப்படியே வாங்கிவருவதாக ஒப்புக்கொண்டான். வீரப்பனுக்கு கணக்குக்கொஞ்சம் தெரியும். அவரவர்கொடுத்ததுட்டை வாங்கிக்கொண்டு வரவேண்டிய சாமான்கள் எவ்வளவு என்பதாகப் பக்கத்துத் தெருவில் ஒருவீட்டில் ஒரு சிறுதுண்டுக் காகிதமும் எழுதுகோலும் வாங்கிக் குறித்துக் கொடுத்தான். கொடுக்கவே காத்தமுத்து தங்கவேலு இருவரும் ராகவபுரம் நோக்கிச் சென்றனர். அவர்களுடன் கூடவிருந்த இரண்டு சிறுபயல்களும் வேடிக்கையாகக் கூடவே போனார்கள். அஸ்தமித்து எட்டு மணியாகும் முன்னரே, அவர்கள் திரும்பி புதுத்துரைக்கு வந்துவிட்டார்கள். அவர்கள் கொண்டுவந்த பெரியசுமையும் களத்திலிருந்து வந்த குடியானவர்கள் பேசிக்கொண்டிருந்த விஷயமும் அவர்கள் அம்மன் கோயில் வாசல் வருமுன்னரே பெரிய கூட்டம் கூட்டிவிட்டது. மொத்தமாக ராகவபுரம் பெரியகடையிலிருந்து வாங்கிவந்த சாமான்கள் மலிவாக மாத்திரமல்ல, வெகு சுத்தமாகவுமிருந்தன. பணம் கொடுத்தவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் பாகத்தைச் சந்தோஷத்துடன் பெற்றுக்கொண்டுபோனார்கள். மற்றவர்கள் மிகுந்த ஆச்சரியமும் தங்களுக்குமப்படிக் கிடைக்கவில்லையே என்பதில் சிறிது ஆற்றாமையும் கொண்டனர். இரண்டுநாட்கள் சென்றன. நமது வேலைக்காரர்கள் திரும்பவும் தாங்கள் சம்பாதித்துவந்த நெல்லை ஒன்றாக விற்கவேண்டுமென்று ஆரம்பிக்கையில், அவ்வீதியிலுள்ள மற்றும் பலரும் தங்கள் சம்பாத்தியத்தையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று வேண்டினர். சாதாரணமாக கூலியாட்களுக்குள் ஒற்றுமை யதிகம். மொத்தமாய்த் தெருவில் அநேகர் கொண்டுவந்து கொடுத்த நெல்லையெல்லாம் சேர்த்து, வியாபாரியிடம்

கொடுத்துப் பணம்வாங்கிக்கொண்டு வரவே, எல்லோரும் அப்பணத்தை பங்குபிரிக்கவேண்டாமெனவும் முன்போலவே ராகவபுரத்திலிருந்து மொத்தமாகச் சாமான்களாகவாங்கிப் பிரித்துக்கொள்ளவேண்டுமெனவும் அபிப்பிராயப்பட்டனர். ஆனால் முதல்நாள்போல் எல்லா சாமான்களையும் ஒருவர் அல்லது இரண்டுபேர்கள் தூக்கிக்கொண்டுவர முடியாதாகையால் கணக்காளியாகிய வீரப்பனும் காத்தமுத்துவும் ஒருஒற்றைமாட்டுவண்டியைக்கட்டிக்கொண்டு போய் ராகவபுரத்திலுள்ள தனவந்தரும் பெரிய வியாபாரியுமான வெங்கடராம செட்டியார் கடையில் சுத்தமாகவும் நிறைகுறையாமலும் பார்த்து வாங்கிச் சாமான்களை வண்டியி லேற்றினர். எளியோராகக் காணப்பட்ட இவர்கள் அதிக சாமான்கள் வாங்குவதைக் கண்ணுற்ற செட்டியார், "என்னப்பா விசேஷம்? நீங்கள் புதுத்துரையாட்களல்லவா? நிரம்பசாமான்கள் வாங்குகிறீர்களே. கோயிலில் ஏதாவது திருவிழாவா? அல்லது உங்கள் வீட்டில் கலியாணமா?" எனக்கேட்க, வீரப்பன், 'இல்லெ செட்டியாரே! எங்கள் தெருவுக்கு வேண்டிய சாமானெல்லாம் மொத்தமாக வாங்கிக்கொண்டு போறோம். வேறு விசேஷமில்லை" என்றான். செட்டியார் "ஓகோ, ஐக்கியப் பண்டசாலையா? அப்படியானால், மாணிக்கம் ! சாமான்களைச் சுத்தமாகவும் நிறையில் ஏற்றத்தாழ்ச்சி யில்லாமலும் கொடுத்திருக்கிறாயா ?" என்றார்.

மாணிக்கம் (கடைக்காரியஸ்தன்) "சரியாகவே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதோ இருக்கிறது கச்சாத்து" என, செட்டியார் அதை வாங்கி ஜாக்கிரதையாகப் பார்த்து வீரப்பனிடம் கொடுத்தார். ஐக்கியப் பண்டசாலையா என்று செட்டியார் கேட்டது வீரப்பனுக்குப் புதுமையாக இருந்தது. ஆதியில் உதாசினமாகவிருந்த செட்டியார் பின்பு சரக்கைச் சாவதானமாகப் பரிசோதித்தது அவனுக்கு வியப்பைத்தந்தது. ஐக்கியப் பண்டசாலை என்பது இன்னதென்று தெரிந்து கொள்ள வேண்டுமென்கிற ஆசை அவனுக்கு உண்டாயிற்று. அப்பொழுது குடியானவர்களுக்கும் செட்டியாருக்கும் பின்வரும் சம்பாஷணை நடந்தது.

வீரப்பன்.—ஐயா செட்டியாரே! என்னவோ பண்டசாலை என்று சொன்னீர்களே. அதென்ன?

செட்டியார். —ஐக்கியப்பண்டசாலை தெரியாதா? அது உங்கள் ஊரிலில்லையா என்ன? நீ பொதுவாக உங்கள் தெருவுக்குச் சாமான் வாங்குவதாகச் சொன்னபொழுது உங்கள் ஊரில் பண்டசாலை நடந்துவருவதாகவல்லவா நினைத்தேன்.

காத்தமுத்து.—அப்படி ஒண்ணுமில்லீங்க. நாங்களா சும்மா கூலியாளுங்க, மொத்தமா பெரிய கடையிலே வாங்கினாக்கா உப்பு, புளி கூட கிடைக்குதல்ல, அதுக்காக நாங்க வந்தம். அண்டை வீட்டுக்காரர் அசல் வீட்டுக்காரர் எங்களுக்கும் சேத்து வாங்கிக்கிட்டு வா இன்னாங்க. அவ்வளவுதான்.

செட்டியார். — அவ்வளவுதானா? இன்னதென்று தெரியாமலே ஐக்கிய வியாபாரம் செய்ய ஆரம்பித்துவிட்டீர்கள். அது நிரம்ப சிலாக்கியமே. நிரந்தரமாக இந்த வியாபாரம் நடந்து ஐக்கியப் பண்டசாலைச் சங்கம் ஒன்று ஏற்படுத்திக்கொண்டீர்களேயானால் நலம். உங்களுக்குச் சாமான் நல்லதாகவும் மலிவாகவும் கிடைப்பதோடு நல்ல செட்டும் மிஞ்சும்.

வீரப்பன்.—செட்டியாரையா! அது எப்படி என்று எங்களுக்குத் தயவுசெய்து தெரிவித்தால் அந்தப்படி செய்யச் சித்தமாயிருக்கிறோமுங்க.

காத்தமுத்து.—ஆமாங்க. உங்களாட்டமா எசமான் சொன்னா தட்டலாமா?

செட்டியார்.—சரி போய்வாருங்கள். நாளைய தினம் சாயங்காலம் புதுத்துரைக்கு வருகிறேன். உங்கள் தெருவின் பேரென்ன?

காத்தமுத்து.—அம்மன் கோயில் தெருவு. அவர் வீரப்பண்ணே. அம்மன்கோயிலிலிருந்து கிழக்குப் பார்த்த வீடு; ரெண்டாவது வீட்டிலிருக்கிறார். என் பேர் காத்தமுத்து. நாளைய சாயங்காலம் கோயில் வாசல்லெ காத்துக்கிட்டே யிருக்கிறேன்.

செட்டியார்.—சரி. நாளைய சாயங்காலம் நானும், ஒரு ஐயருமாக வந்து சேருகிறோம். உங்கள் தெருவில் எத்தனை வீட்டுக்காரர்கள் இருக்கிறார்கள்?

வீரப்பன் —60, 70 வீடு இருக்கும்.

செட்டியார்.—சரி. 30 வீட்டுக்காரரையாவது சேர்த்துவை.

காத்தமுத்து.—என்ன சொல்லிச் சேர்த்து வைக்கிறதுங்க?

செட்டியார்.—சொல்லேன். நாமெல்லோரும் சங்கம் சேர்ந்துக்கொண்டால் நல்லசாமான் கிடைக்கும், நல்ல லாபம் வரும் என்று.

‘அப்படியே’ என்று ஒப்புக்கொண்டு குடியானவர்க ளிருவரும் வீடுபோய்ச் சேர்ந்தனர். வாங்கிவந்த சரக்குகளை, எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்தனர். நடந்ததைத் தெரியப்படுத்தி மறுநாள் சாயங்காலம் எல்லோரும் கோயில் வாசலில் கூடவேண்டுமென எச்சரித்தனர். ராகவபுரம் வெங்கடராமன் செட்டியார் ஐக்கியச் சங்கங்களில் பெருநம்பிக்கை யுள்ளவர். நமது தேசத்தைப் பீடிக்கும் ஏழைமைத்தனத்தைத் தீர்க்கக்கூடிய மருந்துகளில் ஐக்கியமுறை ஓர் பெரிய மருந்தென எண்ணுபவர். ராகவபுரத்தைச்சுற்றி அநேகம் சங்கங்களை ஏற்படுத்தத் தம்மாலான முயற்சி செய்தவர். அவரும் அவ்வூர் ஐக்கியமுறைச்சங்க இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமூர்த்தி ஐயரும் நெருங்கிய சிநேகிதர்கள். மறுநாள் பொழுது விடிந்ததும், அய்யரவர்களுக்குச்செட்டியார் ஒரு சிறு கடிதம் விடுத்து அன்று சாயங்காலம் தம்முடன் புதுத்துறைக்கு வரவேண்டுமெனவும் ஒரு பண்டசாலை ஏற்படுத்தவேண்டுமெனவும் தெரிவித்தனர். அய்யரும் அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்துகொண்டுவர, இருவரும் வண்டியிலேறி சாயங்காலம் 6-மணிக்கு புதுத்துறை வந்து சேர்ந்தார்கள். அம்மன் கோயில் வாசலில் கூடியிருந்த கூட்டம் பெரிதாக இருந்தது. செட்டியார் மூலமாக பெருத்தலாபம் கிடைக்கப் போகிறதென்று காத்தமுத்து எல்லோருக்கும் பலமாகச் சொல்லிவிட்டான். வண்டி வந்ததும், செட்டியாரும் இன்ஸ்பெக்டரும் அம்மன் கோயில் மண்டபத்தில் உட்கார்ந்துகொண்டார்கள். தெருவில் ஜனங்கள் உட்கார்ந்துகொண்டதும், பின்வருமாறு பேச்சு நடந்தது :—

செட்டியார்.— வீரப்பா ! காத்தமுத்து !!

இருவரும்.—சாமி !

செட்டியார்.—நாங்கள் வந்திருக்கிற காரியம் எல்லோருக்கும் தெரியுமே.

காத்தமுத்து.—நல்லா சொல்லியிருக்கிறேன் சாமி. வீடு வீடா போய் செட்டியார் மவராசனாயிருக்க, உங்களுக்கெல்லாம் சாமான் மலுவா தரப்போராங்க. சுத்தமா தூசி போக்கி தரப்போராங்க என்னு.

செட்டியார்.—நான் தரப்போவதில்லை அப்பா! நீங்க ளெல்லாரும் ஒன்றுசேர்வதினால் நீங்களே செய்துகொள்ளலாம்.

கூட்டத்திலொருவன்.—எங்களுக் கென்ன தெரியுஞ் சாமீ. என்னமோ கூலிவேலை சேஞ்சு பொழைக்கிறோம். எழுதத் தெரியுமா, படிக்கத் தெரியுமா? என்ன தெரியும்?

இன்ஸ்பெக்டர்.—எழுதப் படிக்கத் தெரிந்தவர் ஒருவர் கூடவா இல்லை ?

காத்தமுத்து.—வீரப்ப அண்ணனுக்கு எல்லாந் தெரியுமே. அவர்தான் ரெண்டு நாளா கணக்கெல்லாம் பாத்துக்குட்டு வாரு. கூட பள்ளிக்கூடத்து வாத்தியாரும் இருக்குறாரு. தேவாரம் படிக்கிறாரு. நிகண்டெல்லாஞ் சொல்றாரு. லெக்கம் எழுஞ்சுடி குழிமாத்து வரையிலே நல்லா பாடஞ்சொல்றாரு. இங்கிலீஸு கூட படிக்கிறாரு.

செட்டியார்.— அப்படியா ? அவரெங்கே? கூட்டத்தில் ஒரு மூலையிலிருந்து 30 வயதிருக்கும் ஒருவர் எழுந்து மெதுவாய் வர,

செட்டியார்.—வாங்க, வாத்தியாரவாள்! இப்படி உட்காருங்க.

உபாத்தியாயர் நாரணப் பிள்ளை சமீபத்தில் உட்கார்ந்தார். அப்பொழுது இன்ஸ்பெக்டர் கூடியிருந்தவர்களைப் பார்த்து பின்வருமாறு பேசலானார் :—

“ஜனங்களே! இப்பொழுது நீங்கள் கூடியிருக்கிறவிஷயம் உங்களுக்குத் தெரியுமா? உங்களுக்குச்சாதாரணமாய் வேண்டிய சாமான்கள் உங்களுக்கு மலிவாயும் நல்லதாயும் கிடைக்கிறதில்லை. காரணம், சாமான்களை மொத்தமாக வாங்கி உங்களுக்குச் சில்லறையாக விற்கிற வியாபாரிகள் உங்களுடைய நன்மையைக் கவனிக்கிறதில்லை; தங்களுடைய லாபத்தையே நாடுகிறார்கள். விலையை ஏராளமாகத் தூக்கி விற்கிறார்கள். மலிவென்று மட்டமான சாமான்களை வாங்கி உங்களிடம் தள்ளிவிடுகிறார்கள். அதையும், படி என்று சொல்லுமிடத்து முக்கால் படியும், சேரென்றால் இரண்டுபலம் குறைவாகவும் போட்டு அளந்து உங்களை ஏமாற்றிவிடுகிறார்கள். அப்படிச் செய்வதனால் நீங்கள் கொடுத்த காசுக்குத் தகுந்த சாமான்கள் கிடைக்காமல் போய்விடு

கிறது. அதல்லாமலும், கெட்டுப்போனசாமான்களைச் சாப்பிடுவதனால் உங்கள் உடம்பு கெடவும் இடமுண்டாகிறது. உங்களுக்கு வேண்டிய சாமான்களை நீங்களே வாங்கி எடுத்துக்கொண்டால் எவ்வளவு நல்லது ? சாமான் சுத்தமாயிருக்கும். அதனால் உடம்புக்குக் கெடுதியில்லை. அளவு குறையாது; பூரணமாயிருக்கும். தரகன் அல்லது சில்லறைக் கடைக்காரனுக்கு லாபம் கொடுக்காததினால் நல்ல லாபம் கிடைக்கும். அப்படி உங்களுக்கு வேண்டிய சாமானை இப்பொழுது இரண்டு தடவையாய் நீங்கள் செய்துவந்ததுபோல் அப்போதைக்கப்போது வாங்கிக்கொள்வது ஒருமுறை. ஆனால் உங்களுக்குள் யாருக்காவது திடீரென்று ஒரு சாமான் வேண்டியிருந்தாலும், யாதாவதொன்றை வாங்கிவர மறந்துபோயிருந்தாலும் நீங்கள் சில்லறைக்காரரிடத்திலேதானே மறுபடியும் போய்த் தொங்கவேண்டும். இந்தக் குறைக்குப் பரிகாரமாகவும், இப்பொழுது சேர்ந்து வாங்குபவர்கள் மாத்திரமல்ல, இதன்பின் உங்களோடு சேர்ந்து தங்களுக்கு வேண்டிய சாமான்களையும்கூட சேர்த்து வாங்கி லாபமடைய விரும்புவோர்களுக்கும் உபயோகப்படுமாறு, ஓர் சங்கம் ஏற்படுத்தி அந்தச் சங்கத்தின் அங்கத்தினர்களாகச்சேரும் யாவரும் அந்தச் சங்கத்தின் பலனை யடையலாமென வைத்து இவ்வூரிலேயே ஒரு பண்டசாலை ஏற்படுத்தி நல்ல சாமானாய் வாங்கி வைத்துக்கொண்டால் நலமல்லவா ?”

“பண்டசாலை ஏற்படுத்துவதென்பது கொஞ்சம் சிரம சாத்தியந்தான். முதலாவது, அதற்கு கொஞ்சம் பொருள்வேண்டும். பண்டசாலை வைக்கத் தகுந்ததான ஓர் இடம் வேண்டும். சாமானை ஜாக்கிரதையாய் வைத்துக்காப்பாற்றி சரியாக அளந்து கொடுத்து கணக்கெழுத ஒரு கெட்டிக்காரனான காரியஸ்தன் வேண்டும். காரியஸ்தன் செய்யும் வேலை சரியாயிருக்கிறதா இல்லையா என மேற்பார்வைபார்க்க உங்களில் முக்கியஸ்தர்கள் சேர்ந்த ஒரு பஞ்சாயத்து வேண்டும். இவைகளில் ஒன்றும் முடியாத காரியமல்ல. செட்டியாரவர்கள் ஒத்தாசையைக்கொண்டு அநேக இடங்களில் இம்மாதிரி சபைகள் ஏற்பாடு செய்திருக்கிறேன். ராகவபுரத்திற்குக் கிழக்கிலுள்ள ராஜபுரியில் ஓர் பண்டசாலை நேர்த்தியாய் வேலை செய்து வருகிறது. கூலிவேலைக்காரர் மாத்திரமல்ல, ஊராரெல்லோரும் அதனால் பலனடைகிறார்கள். அம்மாதிரி ஏற்படுத்துவதற்கு உங்களுக்குச் சம்மதமா”? என்று சொல்லிமுடித்தார்.

வீரப்பன்.—மூலதனம் என்றால் முதலா? அதாவது, நாங்களெல்லாம் முன்பணம் போட்டுக் கடைவைக்கவேணுமா? அதற்கு ஏராளமாய்ப் பணம்வேண்டுமே? நாங்கள் ஏழைக் குடியானவர்கள். அவ்வளவு பணம் எங்களிடமில்லையே.

இன்ஸ்பெக்டர்.—வேண்டிய பணம் முழுவதும் முன்னதாகவே கொடுக்கவேண்டுவதில்லை. மொத்தம் உங்கள் சங்கத்துக்கு எவ்வளவு மூலதனமென்று ஏற்படுத்திக்கொண்டு ஒருபாகம் கொடுத்து, பாக்கியைப் பின்னர் கொடுப்பதாகச் சொல்லிவிடுகிற பக்ஷத்தில் இம்மாதிரிச் சங்கங்களுக்குப் பொருளுதவி செய்யும் பெரிய நாணயச்சங்கங்கள் உங்களிடத்தில் நம்பிக்கைவைத்து வேண்டிய பணம் கொடுத்துதவும்.

காத்தமுத்து.—அப்படிக்கின்னா ஒருத்தன் 10 ரூபா கொடுக்குரேன்னு சொல்லி இந்த மாதம் 1-ரூபா, வர்ரமீ 1-ரூபா, இப்படிக்குக் கொடுத்துக்கிட்டு வந்தால் பண்டசாலைக்கு வேண்டியபணமெல்லாம் யாரோ சொன்னீங்களே, நாணயச்சங்கம், அவங்க கொடுப்பாங்களா?

இன்ஸ்பெக்டர்.—ஆமாம், கட்டாயம் கொடுப்பார்கள். அப்படி ஏற்பாடு செய்வோமா ?

எல்லாரும் ஒப்பவே, பங்கு ஒன்றுக்குப் பத்துரூபாயாக 500 பங்குகள் கொண்ட ஒரு ஐக்கியப் பண்டசாலைச் சங்கம் ஏற்படுத்தப்பட்டது. அங்கு வந்திருந்தவர்கள் பெரும்பாலார் எளியவர்கள். ஒன்று அல்லது இரண்டு பங்குதான் எடுத்துக்கொள்ள முடியும். ஆயினும் அவ்விஷயத்தில் அதிகமான ஊக்கமிருந்ததனால் 100 பங்குக்குமேல் அப்பொழுதே சேர்ந்துவிட்டது. செட்டியாரும் தம் கடையிலிருந்த ஒரு காரியஸ்தனை யனுப்பி, முதல்முதல் வியாபாரம் தொடங்க ஒத்தாசை செய்வதாகச் சொல்லிப்போனார். இச்செய்தி கேட்ட உள்ளூர் தொப்பைச் செட்டியார் ஆத்திரம் கொண்டார். அம்மன்கோயில் தெருவார் யாரும் தன் கடைக்குவந்தால் சாமான்கொடுப்பதில்லை என்று சபதஞ்செய்தார். ஆனால் புதிய ஏற்பா

(இதன் தொடர்ச்சி 275-ம் பக்கம் பார்க்க.)

பாடலீபுத்ர நகரம்

THE CITY OF PATNA

(232-ம் பக்கத் தொடர்ச்சி)

சிங்களத்திற்குச்சென்று அங்கே பௌத்த மதத்தை ஸ்தாபித்து இன்றைக்கும் அத்தர்மம் அங்கே கொண்டாடப்பட்டுவரச் செய்தலில் முயன்ற ஸந்யாஸிகள் இங்கிருந்து சென்றவர்களே. உஞைச்சதி என்பவர் தம் பிரசித்தமான கிரந்தத்தை எழுதின இடம் இவ்விடந்தான். இந்நகரத்திலேதான் ஆர்யபட்டர் என்ற பிரசித்திபெற்ற வடமொழி நூலாசிரியர் எங்கெங்கும் வியாபகத்தை யுடையவராய்க் கிரந்த ரத்னங்களை எழுதினது. கௌடில்யருடைய அர்த்தசாஸ்திரம், பதஞ்சலியின் மகாபாஷ்யம், கோஹலரின் நாட்டியசாஸ்திரம், வாத்ஸ்யாயனருடைய காமசூத்ரம் ஆகிய இந்நான்கும் சகலருமறிந்த வடமொழிக் கிரந்தங்கள், இந்நகரத்திலேயோ அல்லது இதற்குச் சமீபத்திலுள்ள பிரதேசங்களிலோ எழுதப்பட்டிருக்கவேண்டும். ஏனெனில், அந்நூலாசிரியர்கள் பாடலீபுத்ரத்திற் கென்றமைந்த ஞானாபிவிருத்தியை நன்கறிந்தவர்களாகக் காணப்படுகிறார்கள். பாடலீபுத்ரத்தின் நகரவாசிகள் நாடகசாலைகளில் மிக்கப் பற்றுதலுள்ளவர்களாக விருந்தனர். ஆனால் அவர்கள் கொண்ட பிரியம் நாடகத்தின் அங்கங்கள் எல்லாவற்றிலும் சமமாய்ச் செலுத்தப்படாமல் அபிநயத்தில் மட்டும் விசேஷ மடைந்திருந்தது. அவர்கள் ஸங்கீதத்திலும் நாட்டியத்திலும் அன்பற்றவர்களாகவிருந்தனர். இது மிக்க ஆச்சரியகரமானதாகவே தோன்றுகிறது.

கண்வாயர்களுக்குப்பின் பாடலீபுத்ரத்தை ஆந்திர சதவாஹனர்கள் சுவாதீனப்படுத்திக் கொண்டு ஆண்டுவந்தார்கள். அவர்களும் பிராமணர்களென்றே ஏற்படுகிறது. அவர்களும் அங்கே ஒரு நூற்றாண்டுக்குக் குறையாமல் அரசாட்சி செய்துவந்தார்கள்.

பிறகு குசர்கள் என்ற ஜாதியார் அந்நகரத்தின் மீது படையெடுத்துவந்து அதனைப் பிடித்துக்கொள்ள, அவர்கள் தலைவனான காணிஷ்கா என்ற வீரப்பிரதாபர் அதைமீட்டுக் கொள்ள 9 கோடி ரூபாய்கள் கொடுக்கவேண்டுமென்று நிபந்தனையிட்டார். பலவீனர்களான பாடலீபுத்ரத்தரசர்கள் அப்பெருத்த தொகையைக் கட்டச் சக்தியற்றவர்களாய் அதற்குப் பதிலாய் காணிஷ்கருக்குத் தங்களிடமிருந்த சில வெகுமதிகளை அனுப்பினார்கள். அவற்றுள், சுமார் 3 கோடி ரூபாய் பொறுமான புத்தருடைய கமண்டலமும், அக்காலத்திலேயே எங்கும் பிரசித்தமாகவும் பின்பு நமது தேசமெங்கும் கீர்த்திபெற்றவருமான தத்வசாஸ்திர பண்டிதர் அசுவகோஷர் என்றவருமே இரண்டு முக்கியமான வெகுமதிகள்; அவ் அசுவகோஷரையும் மூன்று கோடி ரூபாய்கள் பொறுமானவராக மதிப்பிட்டதாகச் சொல்லப்படுகிறது.

பின்வந்த அடுத்த இரண்டு நூற்றாண்டுகளில் அவ்விராஜ்யம் குசர்களுடைய ஆளுகைக் குட்பட்டதாயிற்று. அதற்குப்பின் பல காரணங்களால், அந்த ராஜ்யம் சிதறிப்போய் ஆங்காங்குள்ள சிறு தலைவர்களுடைய கைவசமாயிற்று. அத்தலைவர்களுள் பிரபலராயிருந்து ஆட்சி செலுத்திவந்தவர் லிச்சாபிகள் என்று முன்னரே கூறப்பட்டுள்ள ஜாதியாராவர். பாடலீபுத்ரநகரம், சிலகாலம் லிச்சாபிகளுடைய ஆளுகைக் குட்பட்டிருந்து பிறகு குப்தர்களுக்குச் சுவாதீனமாயிற்று. இக்குப்தர்கள் பாடலீபுத்ர நகரத்தையே தங்கள் ராஜாங்க ஸ்தானமாக்கிக்கொண்டு நான்கு ஐந்து நூற்றாண்டுகள் தலைமைபெற்று வந்தனர். அப்போது, இந்நகரம் உஜ்ஜயினி, அயோத்தி முதலிய நகரங்களைப்போலப் பிரசித்தி பெற்று விளங்கிற்று; வித்யாபிவிருத்தியிலும், ஞானப்பெருக்கிலும் நிகரிலா மேன்மை பொருந்தியதாயிற்று. உலகெங்கும் சிறப்புற்ற காளிதாஸ கவி, மாளவத்திலேயே பிறந்து வளர்ந்தவராயினும், பாடலீபுத்ர நகரத்திலும் சிலகாலம்தங்கிவந்தனரென்று புலப்படுகிறது. இதற்கு அத்தாட்சி யாதெனின், அக்கவி தம் காவியங்களில் ஓரிடத்தில் ஸோன் என்ற நதி, கங்கையில் பெருங்கோஷத்துடன் கலப்பதை மிகுஇனிமையாய்வருணித்திருப்பதேயாம். கிறிஸ்து பிறந்த 319-வது ஆண்டுமுதல் 606-வது ஆண்டுவரையில் பாடலீபுத்ரநகரம் குப்தர்களுடையராஜாங்கஸ்தானமாகவேஇருந்தது. பிறகு ஹர்ஷவர்த்தனரென்ற அரசரது ஆட்சியில், இந்நகரம் ராஜாங்கஸ்தான பதவியை யிழந்ததென்று ஏற்படுகிறது; ஆனால், ராஜ்யபாரந் தவிர மற்றெல்லா விஷயங்களிலும் இந்நகரமே சட்டதிட்டங்களைச் செய்துவந்ததென்று தெரிகின்றது.

ஏழாவது எட்டாவது நூற்றாண்டுகளில் மகததேசத்தரசர்களான குப்தர்கள் இந்நகரத்தையே ராஜாங்க ஸ்தானமாக ஏற்படுத்திக்கொண்டு செங்கோல் செலுத்திவந்தார்கள். இவ்விடமிருந்தே தர்மபாலரும் அவருடைய பெருமைபெற்ற புதல்வரானதேவபாலரும் தங்களுடைய பிரசித்தியுள்ள சாஸனங்களை வெளியிட்டார்கள். இந்நகரத்தின் ஒளிர்வு, உயர்வு, செல்வச்சிறப்பு முதலான காரணங்களை முன்னிட்டு, தேவபாலர் இதை ஸ்ரீநகரமென அழைத்து வந்தனரென்று சொல்லப்படுகின்றது. பிற்பட்ட சில நூற்றாண்டுகளில் இந்நகரத்தின் சரித்திரத்தைச் சரிவர அறியத்தக்க பிரமாணங்கள் எளிதிற் கிடைக்கவில்லை. ஆயினும், கிடைக்கக்கூடியவற்றிலிருந்து ஆராயுமிடத்து இந்நகரம் ஜைனர்களால் கொண்டாடப்பட்டு, அவர்களுக்கு ஒரு முக்கிய க்ஷேத்திரமாக விருந்துவந்ததென்று புலப்படுகின்றது. பாடலீபுத்ர நகரத்தின் சூக்ஷ்மஸ்தானங்களின் குறிப்புகளை முதன்முதல் அறிந்தவர் அஜாதசத்ருவே. பிறகு, பதினாறாவது நூற்றாண்டில், ஷேர்ஷா என்ற மகம்மதியச் சக்கரவர்த்தி இந்நகரத்தின் பெருமையைக் கண்டுணர்ந்து இதைத் தம் வசமாக்கிக்கொண்டார். இவ்வரசர் பீஹாரைச் சேர்ந்த ஒரு ஜாகீர்தாருடைய குமாரர். பாடலீபுத்ரத்தின் இரண்டாவது ஸ்தாபகராக மதிக்கப்படத்தக்கவர் இவரே. இவருக்குப் பின்வந்த மொகலாயர்கள் இந்நகரத்தின் பெயரை மாற்ற மிகவும் முயற்சி செய்தனர். அம்முயற்சிகள் யாவும் பயன்படாமல், இந்நகரம் இன்றைக்கும் பாடலீபுத்ரம் அல்லது பாட்னா என்றே வழங்கப்பட்டு வருகின்றது. சிலகாலங் கழிந்தபின் ஷேர்ஷாவைவிட மேன்மை பொருந்திய குணவிசேஷங்களுடன் விளங்கின கோவிந்தஸிங்கு கத்ரி என்பவர் இவ்விடத்திலேயே பிறந்து, ஸீக ஜாதியாருக்குத் தலைவராயினார். இவர் ஸிக்கியர்களின் ஆசாரமுறைமைகளை மாற்றியும் பலவிதமாகத் திருத்தியும் ஹிந்திபாஷையில் பலநூல்கள் எழுதிவைத்துமுள்ளார். பதினேழாவது நூற்றாண்டில் இந்நகரத்தில் அநேக நூல்கள் எழுதப்பட்டுச் சிறந்த வித்யாபிவிருத்தி நடந்துவந்ததென்று காணப்படுகின்றது. பிறகு, சௌஹானஜாதி வீரரான பிஜ்ஜலதேவரெனபவர் டில்லிச் சக்ரவர்த்தியினிடமிருந்து இந்த நகரத்தையும் இதைச் சேர்ந்த நான்கு பர்க்கானாக்களையும் அபகரித்துக்கொண்டார். இவர் நமது தேசத்தினுடையவும், மற்றுஞ் சில வெளி தேசங்களினுடையவுமான சரித்திரங்களை மிக்க விரிவாய் வடமொழியில் வரைந்திருக்கிறார். அக்காலத்தில் நமது தேசத்தில் தலைமைபெற்று நின்ற ராஜ்யங்களின் சரித்திரங்கள் அந்நூலில் விஸ்தாரமாய்க் காணப்படும். லார்ட் ஹார்டிஞ்சும், ஸர் சார்லஸ் பெய்லிப்புமே பாடலீபுத்ர நகரத்தின் மூன்றாவது ஸ்தாபகர்களென்று எண்ணப்படவேண்டும். அவ்விதமே ஆலோசித்துத் தீர்மானித்தபின், பின் உண்டான புதிய நகரம் முன் காலத்திருந்ததினும் மிகச் சிறப்புடையதாயும் அழகு அமைப்பு வாய்ந்ததாயும் விளங்குகிறதென்பதே பாடலீபுத்ர நகரத்தின் சரித்திரத்தை அறிந்தவர்களின் கொள்கை. மௌரியர்கள், குப்தர்கள், மகம்மதியர்கள் முதலானோர் ஆண்டு களித்துவந்த பாடலீபுத்ரநகரம் அதன் முந்திய உயர்ந்த நிலைமையைக் கொஞ்சமேனும் இழக்காதென்பதே நமது நம்பிக்கை. வெகுகாலமாய் வியாபாரத்திலும், வித்தியாபிவிருத்தியிலும், அரசாட்சியிலும் விளங்கிவந்த இந்நகரம் எக்காலத்திலும் புகழுடன் சிறப்புற்று விளங்கு மென்பதற் கையமில்லை. இந்திய புராதன நகரங்களுள் ஒன்றாகிய இப்பாடலீபுத்ர நகரம் சீரிலும் சிறப்பிலும் முதன்மை பெற்று நீடூழிகாலம் வாழ்க!

(273-ம் பக்கத் தொடர்ச்சி.)

டென்று சங்கித்து அதில் சேராமலிருந்த சிலரும் உடனே அதில் சேர்ந்துவிட்டார்கள்.

வருஷங்கள் இரண்டாயின. அம்மன்கோயில் தெருவார் மாத்திரமல்ல, புதுத்துறை ஜனங்களெல்லோரும் சங்கத்தில் சேர்ந்துவிட்டார்கள். சங்கத்தின் பங்குத் தொகையும் விசேஷமாகப் பெருகிவிட்டது. முதலில் பலசரக்கு மாத்திரம வாங்கி விற்றுவந்தார்கள். இப்பொழுதோ ஜவுளி, பாத்திரங்கள் மருந்துசாமான்கள் முதலிய எல்லாம் கிடைக்கும். அவ்வூரிலுள்ளார் ஐக்கியமுறையைத் தவறாது அனுசரித்து அதன் பலனை ஏராளமாக அடைந்ததுடன் ஏனையோர்க்கும் தங்கள் பண்டசாலை ஓர் பெரிய திருஷ்டாந்தமாக ஆகும்படி நடத்திவருகின்றனர்.

நமது சிறு கதை

OUR SHORT STORY

தங்கவேல்

அல்லது

அஞ்சா நெஞ்சுடையோன்

முதல் அத்தியாயம்

கள்ளனுக்குள் குள்ளன் பாய்தல்

சூரியன் மலைவாயில் விழுந்து நாலைந்து நாழிகைக ளாகிவிட்டன. மேகத்தினால் அடிக்கடி மூடப்பட்ட சந்திரன் தனது அமுத கிரணங்களினால் உலகிலுள்ளோர் மனத்தில் குதூகலத்தை யூட்டச் சக்தியற்றவனா யிருந்தான். அச்சமயத்தில் சென்னையிலுள்ள பீபிள்ஸ் பார்க்கில் சிறிதும் ஜனப்புழக்கமின்றி நிசப்தமா யிருந்தது. அப்போது ஆஜானுபாகுவான ஒரு மனிதன், சட்டை சராய் குல்லாய் முதலியன அணிந்துகொண்டு கம்பீரமாய் நடந்து பீபில்ஸ் பார்க்குக்குள் நுழைந்து, படகுகள் நிறுத்தப்பட்டிருந்த விடத்துக்குச் சென்று, அங்கிருந்து தென்கிழக்கு முகமாக நோக்கி நடந்தான். சிறிது தூரம் சென்றதும், அவன் ஏதோவொரு அதிசயத்தைக் கண்டது போல் கணநேரம் திகைத்துநின்றான். அடுத்த நிமிஷத்தில் அவன் சப்தமின்றிக் குப்புறப் படுத்து, தரையோடு தரையாக நகர்ந்து தான் முன் சென்ற திசையை நோக்கியே சென்றான். அச்சமயத்தில் மேகங்களும் அவனுக்கு உதவிசெய்ய நினைத்தாற்போல சந்திரனை முழுவதும் மறைத்து அவ்விடத்தைக் காரிருளில் மடுத்தன.

அவ்வாறு நகர்ந்து சென்றவன் பூச்செடிகள் வளர்ந்திருந்த ஒரு பாத்தியை யடைந்து அதனடுவில் தோன்றிய ஒரு கரிய வஸ்துவின் மேற் பாய்ந்தான். தன்னை மூடிக்கொண்டிருந்த மேகங்களனைத்தையும் பொருதுவென்று துரத்திவிட்டு வெற்றிவீரனாக தன் தண்ணொளி பன்மடங்கு அதிகரிக்கப்பெற்று விளங்கி, கொடியர்களது குரூரத்தொழிலுக்குப் பெரிய இடையூறு உண்டாக்கினான். "ஐயோ!" என்று ஒரு மனிதன் தாழ்ந்த குரலில் மிகுந்த துன்பத்துடன் கூவினான். அடுத்த நிமிஷத்தில் இருவர் எழுந்து நின்றனர். தரையோடு நகர்ந்து வந்தவன், தன்னைவிட மிகவும் குட்டையான மற்றொருவனுக்குப் பின்புறத்தில் நின்று அவன் தோட்களை இறுகப்பிடித்துக்கொண்டிருந்தான். அக்குட்டையான மனிதன் தலையைத் திருப்பிக்கொண்டு தன்னைப் பிடித்தவனுடைய முகத்தை கணப்பொழுது உற்றுப்பார்த்தான். பிறகு தான் அந்த ஸ்திதியிலிருந்ததைக் குறித்துச் சிறிதும் ஆச்சரியமடையாதவனைப்போல, தன்னைப் பிடித்து நின்றவனை நோக்கி,—"மகாராஜாவாகத்தானிருக்குமென்று அப்போதே ஊகித்தேன். என் தோளெலும்புகள் இன்னுங் கொஞ்சகாலம் இருக்கட்டும். அவைகளை ஏன் சூர்ணம் செய்கிறீர்?" என்று பரிகாசமாய்க் கேட்டான். அதற்கு அவனைப் பிடித்து நின்றவன், "மாரியப்பா! பரிகாசம் அப்புறம் பார்த்துக்கொள்ளலாம். இப்போது நான் கேட்பவைகளுக்கெல்லாம் சத்தியமாகப் பதிற் சொல். அன்று கோவிந்தசாமி முதலியார் என்னுடன் சில இரகசிய விஷயங்கள் பேசிக்கொண்டிருந்தபொழுது விழித்துக்கொண்டுதானிருந்தாயோ?" என்று கேட்டான்.

மாரியப்பன் தோட்பட்டைகளி லுண்டான வலியைச் சகிக்கமாட்டாதவனாய் துயரம் நிறைந்த குரலுடன், "ஆம், விழித்துக்கொண்டுதா னிருந்தேன். தங்கவேலு முதலியாரவாள்! தயவுசெய்து தோட்பட்டைகளை அவ்வளவு இறுகப்பிடிக்காதேயுங்கள்!" என்றான்.

தங்கவேலு.—விழித்துக்கொண்டே யிருந்தவன் நான் வந்து பார்த்தபோது தூங்கினாற்போலப் பாசாங்கு செய்தாயோ?

மாரி.—மற்றென்செய்வது? உங்களுக்கோ இரகசியமாய்ப் பேசியாகவேண்டும். இருக்கும் இடமோ சிறைச்சாலை. நான் வெளியேபோய் உங்களைத் தனியே விடுவதற்கு வழியில்லை. நான் விழித்துக்கொண்டிருந்தால் பேசமாட்டீர்கள். ஆகையினால் உங்களுக்குச் சௌகரியம் பண்ணுவதற்காகவே கண்களை இறுக மூடிக்கொண்டு கிடந்தேன்.

தங்க.—சரிதான். உன் காதில் விழுந்த சமாசாரங்கள் என்னவென்று சொல்!

மாரி.—கோவிந்தசாமி முதலியார் இருமலினால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தபடியால், அவர் சொன்னதெல்லாம் என்

காதில் விழவில்லை. ஆங்காங்கு சிற்சில வார்த்தைகள் மட்டுமே காதிற் பட்டன.

தங்க.—சரி, அதிருக்கட்டும். அன்று சிறைச்சாலையில் எனக்குப் பின்னாலிருந்து, 'எல்லாப் பொருளையும் நீயே அடித்துக்கொண்டுபோய் விடாதே! எனக்கும் கொஞ்சம் பங்கு வைத்திரு!' என்று சொன்னது நீதானே?

மாரி.—ஆம், நான்தான். அதில் என்ன பிசகு? கோவிந்தசாமி முதலியார் புதைத்து வைத்துள்ள சொத்தில் அவருக்கு எவ்வளவு பாத்தியமுண்டோ அவ்வளவு பாத்தியம் உமக்குமுண்டு எனக்குமுண்டு. அன்றியும், சிறிதும் எதிர்பாராமல் ஏராளமான பொருள் கிடைக்கும்போது, 'ஆற்றில் போகிற தண்ணீரை அப்பாகுடி அய்யாகுடி' என்பதுபோல, எனக்கும் கொஞ்சம் பொருள் நீர் கொடுக்கக்கூடாதா?

தங்க.—அப்படியா? பங்கு வேணுமா உனக்கு? ஊம் ஹூம்! நான் இப்பொழுது உன்னை என்ன செய்யப்போகிறேன் தெரியுமா?

மாரி.—செய்வதென்ன? தோட்பட்டைகளிலிருந்து கைகளை எடுத்துவிட்டு, என்னையும் உதவியாக வைத்துக்கொண்டு கோவிந்தசாமி முதலியார் பொருளைத் தேடியெடுத்து, எனக்கும் ஒரு பங்கு கொடுத்து அனுப்புவீர்.

மாரியப்பன் மேற்கூறியவாறு பேசி வாய் மூடுமுன், தங்கவேலு முதலியாரின் இடதுகை அவனுடைய தொண்டையைப்பிடித்து நெருக்கிற்று. அவன் விழிகள் பிதுங்கின. கைகள் வலியற்றுத் தொங்கின. தங்கவேலு முதலியார் தமது வலது கையினால் அவன் அங்கவஸ்திரத்தையெடுத்து அவன் கைகளையும் கால்களையும் பின்கட்டு முறையாகக் கட்டிவிட்டு, வாயில் சீலைத்துணியையும் வைத்து அடைத்து, அவனைத் தூக்கிக்கொண்டுபோய் பத்தடிக்கப்பால் போட்டுவிட்டு, முதலில் அவன் உட்கார்ந்திருந்த விடத்துக்குத் திரும்பிவந்து, மண்டிபோட்டு உட்கார்ந்துகொண்டு பூமியில் ஓர் அடி சதுரக் குழியொன்று தோண்டினார்.

மேகங்கள் கூடி கனத்த மழையைப் பொழிய ஆரம்பித்தன. ஆனால் தங்கவேலு முதலியார் தமது வேலையைச் சற்றும் நிறுத்தவில்லை. இரண்டுமுழ ஆழம் தோண்டிய பிறகு, அவர் அதிலிருந்து ஏதோ வொரு பெட்டியை எடுத்துக்கொண்டு அவ்விடத்தைவிட் டகன்றார்.

இரண்டாவது அத்தியாயம்

கோவிந்தசாமி முதலியார்

சிந்தாத்திரிப்பேட்டையில் சுவாமி பண்டாரம் தெருவிலுள்ள ஒரு சிறு வீட்டின் வாசற்புறத்து அறை யொன்றில் ஒரு கம்பீர புருஷன் உட்கார்ந்து ஏதோ யோசனையிலாழ்ந்திருந்தான். அவன் யோசனையைக் கலைப்பதை ஒரு பொருட்டாகத் தாம் கருதவில்லைபோல் ஒருவர் அவ்வறையின் கதவைத் திடீரென்று திறந்து உள்ளே நுழைந்து ஓசையெழுமாறு அதை மூடிக்கொண்டு அவனையணுகினார். அவன் சிறிதும் கோபமுற்றதாகவாவது ஆச்சரியமுற்றதாகவாவது காணப்படவில்லை. உள்ளே நுழைந்தவரைப் பார்த்து அவன் "மூர்த்திமுதலியாரவாள்! அடியேன் மீது இவ்வளவு தயவு தாங்கள் வைத்தது என்ன காலத்துக்கு அறிகுறியோ?" என்று சொல்லி நகைத்தான்.

மூர்த்தி முதலியார் பரிகாச வார்த்தை யாடுவதற்காக அங்கு வந்தவராகத் தோன்றவில்லை. அவர் முகத்தில் கோபம் பொங்கிற்று. அவர் ஒருமுறை அவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "ஐயா! தாங்கள்தாம் நேற்று என் தங்கையினிடம் பாங்கிக்குச் செக்குக் கொடுத்தனுப்பிய கோவிந்தசாமி முதலியாரோ?" என்று கேட்டார்.

கோவிந்.—நான் கொடுத்தனுப்பவில்லை. அந்தப்பெண் வந்து என்னைக் கேட்டுத் தானாக வாங்கிக்கொண்டு போனாள்.

மூர்த்தி.—அந்தச் செக்கைக் கொடுத்து அதற்குப் பணம் வாங்கிவரச் சொன்னீர்களோ?

கோவிந்.—ஆம். அது உம் தங்கை செய்யத்தகாத காரியம்போலப் பேசுகிறீரே. அது அவ்வளவு கெட்ட காரியமா?

மூர்த்தி.—பாங்கியில் இந்தக் கணக்கு ஏற்பட்ட விதம் மிகவும் அபூர்வமானது.

கோவிந்.—உம்மைவிட எனக்கு அதிக நன்றாய்த் தெரியும் அவ்விஷயம்.

மூர்த்தி.—அதுதான் எனக்குச் சந்தேகமாயிருக்கிறது.

கோவிந்.—முதலியாரவாள்! நீங்கள் பேசுவது ஒழுங்காயில்லை. என் பொருளை வைத்து வைக்கும் பாங்கிகளின் குமஸ்தாக்களிடம் நான் அதிகமாக வார்த்தையாடுவதில்லை. உமது

தாயார் வீட்டில் நான் தற்காலம் தங்கியிருப்பதால் உம்முடன் இவ்வளவுதூரம் பேசினேன். அவமரியாதையாகப் பேசினால் உமது வேலை போய்விடும். பத்திரம். போய்வாரும்!

மூர்த்தி.—நாளைக்கு நீங்கள் பாங்கிக்குவந்து இரண்டொரு விஷயங்களை விளக்கிவிட்டால், பிறகு தொந்தரவே யிராது.

கோவிந்.—என்னைத் தொந்தரவு செய்யத் துணிபவர் உலகத்திலேயே இல்லை. பாங்கிக்கு வருவதும் வராமலே யிருப்பதும் என் இஷ்டத்தைப் பொறுத்தது. உமது சந்தேகம் நிவர்த்தியாவதற்காக நான் வரவேண்டிய அவசியமில்லை. தெரிந்ததா? அதோ அதுதான் வாசற்படி; போய்வாரும்!

கோவிந்தசாமி முதலியாரின் கம்பீரத்தையும், அவர் வார்த்தைகளின் கடுமையையும் கண்டு வாய்திறக்கத் துணிவற்று மூர்த்தி முதலியார் அவ்வறையைவிட் டகன்றார்.

மூன்றாவது அத்தியாயம்

அயோக்கியர்கள் தண்டனையுற்றது

முந்திய அத்தியாயத்தில் கூறிய சம்பவம் நடந்த மறுநாட்காலையில் கோவிந்தசாமி முதலியாருடைய அறைக்குள் மூர்த்தி முதலியாரும் அவர் தாயார் தெய்வயானையம்மாளும் நுழைந்தார்கள். தெய்வயானையம்மாள் தன் மகனை நோக்கி, "அப்பா! உனக்குத் தெரியாததல்ல. அவர் இல்லாதசமயத்தில் அவர் அறைக்குள் நுழைந்து அவர் பொருள்களைப் பரிசோதிப்பது தருமமன்று. ஆகையினால் வெளியே போய்விடு!" என்றாள். மூர்த்தி முதலியார் நகைத்து, "அம்மா! தருமாதருமம் யோக்கியருடைய விஷயத்திலன்றோ பார்க்கவேண்டும். இவன் ஜகப் போக்கிரியாயிற்றே! நீ போய்விடு வெளியே. எனக்கு இங்கே கொஞ்சம் அலுவல் இருக்கிறது" என்றார்.

தெய்வயானையம்மாள் வெளியே சென்றாள். மூர்த்தி முதலியார் அவ்வறையிலுள்ள பெட்டிகளைத் திறந்து பார்க்கத் தொடங்கினார். திடீரென்று அறைக்கதவைத் திறந்துகொண்டு ஒரு குடிகாரன் உள்ளே நுழைந்து, "யாரையா! எங்கே அந்த மனிதன்? அவன்தான் ஐயா! கோவிந்தசாமி முதலியார் என்று பெயர் வைத்துக்கொண்டு திரிகிறானே, அவன் எங்கே சொல்லும்? அவனைத் தொலைத்துவிடுகிறேன்!" என்று கூவினான்.

மூர்த்தி முதலியார் அவன் வார்த்தைகளைக் கேட்டு, கோவிந்தசாமி முதலியாருடைய இரகசியத்தை அக்குடிகாரனிடமிருந்து தெரிந்துகொள்ளலாமென்ற நோக்கத்துடன் அவனை நோக்கி "ஐயா! அந்த அயோக்கியனால் நான் மட்டுந்தான் துன்பமுற்றதாக நினைத்தேன்; நீரும் கஷ்டமடைந்ததாகத் தெரிகிறது. இங்கே வந்து உட்காரும். அவன் வெளியே போயிருக்கிறான். வந்தவுடன் பேசிக்கொள்வோம்" என்று சொன்னார். அக்குடிகாரன் அவ்வறையிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்துகொண்டான். பிறகு மூர்த்திமுதலியார், "ஐயா! தங்கள் பெயரென்ன?" என்று கேட்டார். அதற்கு அவன், "என் பெயர் தெரியாதா உமக்கு? என் பெயர் குடிகாரக் குருசாமி பிள்ளை! தெரிந்ததா? எங்கே அந்தப் பயல்?" என்றான்.

மூர்த்தி முதலியார்.—அவன் இன்னும் கொஞ்சநேரத்துக்குள் வந்துவிடுவான். அவன் உமக்குப் பழக்கமுள்ளவன்போ லிருக்கிறதே. அவனைப்பற்றி உமக்கென்ன தெரியும்?" என்று கேட்டார். என்னவிதமாய்க் கேட்டாலும் குருசாமி பிள்ளை பதிற்சொல்லும் வழியைக் காணோம். கடைசியாக அவர் அவனையழைத்து, "ஐயா! உம்மால் இந்த மேஜையின் சொருகு பெட்டியின் பூட்டைத் திறக்க முடியுமா?" என்று கேட்டார். அதற்கு அவன், "குடிகாரக் குருசாமி பிள்ளை திறக்கமுடியாத பூட்டும் உண்டா உலகத்திலே? எந்தப் பூட்டுத் திறக்கவேண்டும், சொல்!" என்றான்.

மூர்த்திமுதலியார் காட்டிய மேஜையண்டையிற் போய் நாற்காலியையிழுத்துப்போட்டு உட்கார்ந்துகொண்டு, மெல்லிய தகடுகளினாலும் கம்பிகளினாலும் செய்யப்பட்ட பொய்ச் சாவிகளையிட்டு அவன் அப்பூட்டைத் திறக்க முயன்றான். இருவரும் பூட்டைத் திறப்பதிலேயே கவனமாயிருந்த அசசந்தர்ப்பத்தில், கட்டைக் குட்டையாகவுள்ள ஒரு மனிதன் உள்ளே நுழைந்து ஆச்சரியத்துடன் அவர்களையணுகி, குருசாமி பிள்ளையை நோக்கி, "யாரடா நீ? கோவிந்தசாமி முதலியாரின் மேஜையை மறுசாவியிட்டுத் திறக்கவா பார்க்கிறாய்?" என்று சொல்லி, ஐம்பமாய் எழுந்து உருட்டி விழித்துப் பயமுறுத்த முயன்ற குருசாமி பிள்ளையின் அடி வயிற்றில் ஓர் உதை கொடுத்தார். குடிகாரக் குருசாமி பிள்ளை நாற்காலியைக் கவிழ்த்துக்கொண்டு அலறி வீழ்ந்தான்.

குருசாமிபிள்ளை நாற்காலியை யுருட்டிக்கொண்டுவிழுந்தபேரொலியைக்கேட்டு தெய்வயானையம்மாள் பயந்துகொண்டு ஓடிவந்து அவ்வறைக்குள் நுழைந்து, "மூர்த்தி! என்ன ஓசைகேட்டது? கோவிந்தசாமி முதலியார் இல்லாத சமயத்தில் அவர் அறைக்குள் நுழைந்து என்னென்னவோ செய்கிறாயே; இது தருமமா?" என்று புலம்பிக்கொண்டே அவ்வறையைச் சுற்றிப்பார்த்து, ஒருவன் தரையில் காலைப் பரப்பிக்கொண்டு கிடப்பதையும், மூர்த்திமுதலியார் தலைகுனிந்து சற்று வெட்கினாற்போல் நிற்பதையும் கவனித்து, குடிகாரக் குருசாமி பிள்ளையை உதைத்துத் தள்ளிவிட்டுக் கடுங்கோபத்துடன் நின்றுகொண்டிருந்த மனிதனை நோக்கி, "நடராஜ முதலியாரவாள்! இங்கு என்ன நடந்தது? தங்களுக்கும் மூர்த்திக்கும் ஏதாவது வாக்குவாதம் நடந்ததோ?" என்று கேட்டாள்.

நடராஜ.—அம்மா! நடந்ததென்னவென்று கேட்கிறீர்கள்? தங்கள் குமாரர் மூர்த்தி முதலியார் இருக்கிறாரே—நல்லொழுக்கத்தின் அவதார புருஷன்—அவர் இந்தக் குடிகாரனை கோவிந்தசாமி முதலியாருடைய அறைக்குள் அழைத்துவந்து, அவருடைய பெட்டிகளையுடைக்கச் சொல்லுகிறார்.

மூர்த்தி.—அவன் சொல்லுவது முற்றிலும் பொய்!

நடராஜ.—சிறிதும் பொய்யல்லவென்று உன் முகத்தை யார் பார்த்தாலும் சொல்லுவார்கள். அது போகட்டும். உன் குடிகாரத் தோழனிருக்கிறானே, அவனை—

மூர்த்தி.—அவன் என்னுடைய தோழனல்லவென்று எத்தனைமுறை சொல்லவேண்டும்? நடராஜமுதலியார் மூர்த்திமுதலியார் சொன்னதைச் சிறிதும் சட்டை செய்யாமல், "இதோ தொலைத்துவிடுகிறேன்!" என்று தான் ஆரம்பித்ததைச் சொல்லிமுடித்து, கீழேகிடந்த குருசாமிபிள்ளையின் புயங்களைப்பிடித்துப் பாரமான சாக்குமூட்டையை யிழுப்பது போல் இழுத்துக்கொண்டு போய்த் தெருவிலுள்ள சாக்கடையினண்டையில் அவனைப் படுக்க வைத்தார்.

குடிமயக்கத்தில் அடிவயிற்றில் பலமான உதைபெற்றதனால் பிரக்ஞையற்றிருந்த குடிகாரக் குருசாமிபிள்ளைக்கு அவ்வளவுதூரம் இழுக்கப்பட்ட பிறகுதான் பிரக்ஞை திரும்பி வந்தது. உடனே அவன் சுருட்டி மடக்கிக்கொண்டு எழுந்து தன்னை அவ்வளவுதூரம் துன்பப்படுத்தத் துணிந்த நடராஜ முதலியாரைத் தொலைத்துவிடுவதாக வாய்க்குள் முணுமுணுத்துக்கொண்டு, தட்டித்தடுமாறிக் கொண்டு நடந்து அவ்விடம்விட் டகன்றான்.

நடராஜமுதலியார் அக்குடிகாரனுக்குத்தகுந்த சிக்ஷை பண்ணினபிறகு திரும்பவும் உள்ளே நுழைந்தார். தெய்வயானையம்மாள் மிகுந்த மனக்கலக்கத்துடன், அவரை நோக்கி "ஐயா! நடராஜ முதலியாரவாள்! இதனால் ஏதேனும் பெரிய கெடுதி சம்பவிக்குமோ? அந்தக் குடிகாரனை உள்ளே விடாதேயென்று என்னாலான மட்டும் மூர்த்தியினிடம் சொன்னேன். அவன் கேட்கவில்லை" என்றாள்.

நடராஜ.—நீங்கள் சொன்னதை அவன் அலக்ஷியஞ் செய்ததற்குத் தகுந்த காரணங்களிருக்கு மென்பது நிச்சயம்.

மூர்த்தி.—அதெல்லா மொன்று மில்லை. அவன் கோவிந்தசாமியைப் பார்க்கவேண்டுமென்றான். ஆகையினால் உள்ளேவந்து காத்திருக்கச் சொன்னேன்.

நடராஜ.—ஐயோ பாவம்! நீ நிரம்ப சாதுவன்றோ! ஒன்றுந் தெரியாது! ஆகையினால் உள்ளேவந்து காத்திருக்கச் சொன்னாய் அந்த அயோக்கியக் குடிகாரப்பயலை!

தெய்வ.—நடராஜமுதலியாரவாள்! நீங்கள் இருவரும் சண்டைபோடாதேயுங்கள். ஏற்கனவே எனக்கிருக்கிற கஷ்டங்கள் போதும். அதை இன்னும் பெருக்காதேயுங்கள்.

நடராஜ.—அம்மா! இப்போது மூர்த்தியுடன் சண்டைசெய்வதாக எனக்கு உத்தேசமில்லை. ஆனால் மூர்த்தியினிடம் இரண்டொருவார்த்தை தனிமையில் பேசவேண்டியிருக்கிறது. ஆகையினால் நீங்கள் வீட்டுக்குள் போங்கள்!

தெய்வயானையம்மாள் வேறுவழியில்லாமல் அவ்வறையைவிட் டகன்று வீட்டுக்குட் சென்றாள்.

நடராஜ.—மூர்த்தி! நல்ல பிள்ளையடா நீ! வயதுகாலத்தில் தாயாருக்கு எவ்வளவு ஆதர

பைய மென்றால் பனையையும் மெல்லலாம்.

பொதியை வைத்துவிட்டுப் பிச்சைக்குப் போனான், அதையும் வைத்துவிட்டுச் செத்துக் கிடந்தான்.

வாயிருக்கிறாய்! பின்னால் வரும் சங்கதிகளை முன்னமேயே தெரிந்துகொள்ளும் ஞான திருஷ்டி, காய்களுக்கு இருந்தால், அவர்கள் உன்னைப் போன்ற குழந்தைகளை அவைகள் பிறந்தவுடன் கழுத்தைத் திருகிப் புதைத்து விடுவார்கள்.

மூர்த்தி.—இவ்விஷயத்தைச் சொல்லவா என்னுடன் தனிமையிற் பேசவேண்டுமென்று சொன்னாய்?

நடராஜ.—இது மாத்திரமன்று. இன்னும் சொல்லுவதற்கு இருக்கிறது. கோவிந்தசாமி முதலியாரைப்பற்றி ஏதோ கெட்ட இரகசியமிருக்கிறது போலவும் அது உனக்குத்தெரியும் போலவும் நீ பத்துநாளாகப் பிதற்றிக்கொண்டிருக்கிறாய். அவர் குணம் எனக்கு நன்றாய்த் தெரியும். இழிவான காரியம் என்றால் இன்னதென்று அறியாத பெரியமனிதர் அவர். உன்னிடத்திலிருக்கும் அற்ப நாய்க்குணம் அவரிடத்தில் அணுவளவேனும் கிடையாது.

மூர்த்தி.—அதனால்தான் நீ உன் காதலியை அவருக்குக் கடனாகக் கொடுத்தாயோ?

நடராஜ.—என்னடா பிதற்றுகிறாய்?

மூர்த்தி.—பிதற்றவில்லை. என் தங்கை சுந்தரவல்லியை நீ கலியாணம் செய்துகொள்ளப் போவதாக நினைத்திருந்தேன். நேற்று அவளைத் தனியாக கோவிந்தசாமி முதலியாருடன் நாடகம் பார்க்க அனுப்பியதைப் பார்த்து, கோவிந்தசாமி முதலியார் உனக்குக் கொடுத்தாரே நாலுகாசு உன் பைத்தியக்கார இயந்திரத்துக்காக, அந்தக் காசுக்குப் பதிலாகச் சுந்தரவல்லியைக் கொஞ்சகாலம் அவருக்குக் கடனாகக் கொடுத்தாயென்று நிச்சயித்தேன்.

நடராஜ.—அடே அற்பப்பயலே! உன் தாயாரும் தங்கையும் பெருங்குண முடையவர்களா யிருக்கிறார்களே. அப்பெருங் குணத்தில் தினையளவேனும் உன்னிடத்திற் காணோமே. இனி சுந்தரவல்லியைப் பற்றியாவது கோவிந்தசாமி முதலியாரைப் பற்றியாவது தூஷிப்பாயேயாகில், உன் தோழன் குடிகாரனுக்குச் செய்த மரியாதையை உனக்கும் செய்வேன். பத்திரம்!

மூர்த்தி.—என் தோழன் என்று சொல்கிறாயே! அந்தக் குடிகாரனுடைய பெயரில் ஒன்றும் மோசமில்லை. உன் தோழனிருக்கிறானே, அவன் பெயர்கூட மோசம். அவன் கோவிந்தசாமி முதலியாரல்ல. அவன் பெரிய போக்கிரி! ஏமாந்து போகாதே! பத்திரம்!

மூர்த்திமுதலியார் அவ்வார்த்தைகளை மொழிந்ததும், நடராஜமுதலியார் கடுங்கோபத்துடன் கைகளை மூடி ஓங்கிக்கொண்டு அவரைக்குத்துவதற்கு இரண்டடி முன்னெடுத்து வைத்தார். மூர்த்தி முதலியாருக்கு குஸ்திச்சண்டை போட்டுப் பழக்கமில்லை யாதலின், அவர் மரியாதையாய் விரைந்து அவ்வறையைவிட்டகன்றார்.

நான்காவது அத்தியாயம்

ஜப்தியும் காதலும்

ஒருநாள் பகல் சுமார் இருபது நாழிகைக்கு கோவிந்தசாமி முதலியார் வெளியே எங்கேயோ போயிருந்தவர் வீட்டுக்குத் திரும்பிவந்த போது, வீட்டு வாசலில் வண்டியில் சாமான்கள் ஏற்றப்பட்டிருந்தன; வாசற்படியில் நான்கு பேர்கள் ஒரு பெரிய பீரோவை நகர்த்திக்கொண்டுவருவதைக்கண்டு ஆச்சரியப்பட்டு அவர்களை விளித்து, "ஏன் அப்பா! பீரோவை வெளியே கொண்டுவருகிறீர்கள்?" என்று கேட்டார். அவர்களி லொருவன், "ஏனென்று கேட்கிறீர்கள்? தலைக்குமேல் வெள்ளம் ஓடிவிட்டது. அதனால் சாமான்களையெல்லாம் வீட்டைவிட்டு வெளியே கொண்டு போகிறோம்" என்றான். கோவிந்தசாமி முதலியார், "நடந்ததென்ன அப்பா! சற்று விவரமாய்ச் சொல்லக்கூடாதா?" என்றார். அதற்கு அம்மனிதன், "விவரம் என்ன! இந்த அம்மாளுக்குக் கடன் நிரம்ப அதிகமாய்ப் போய்விட்டது. கடன்காரர்கள் வியாஜ்யம் செய்து தீர்ப்புப் பெற்றார்கள். தீர்ப்புத்தொகைக்காக சாமான்களை ஜப்தி செய்துகொண்டுபோய் விற்கப் போகிறோம். அவ்வளவுதான் சமாசாரம்" என்றான்.

(தொடரும்.)

புதிய தமிழ்ப் பிரசுரங்கள்

ஷண்முகசுந்தரம்	ரூ.	2 0
தனபாக்கியம்	,,	2 0
விக்ரமசிங்கன் கோட்டை மர்மம்	,,	1 0
தஞ்சைநாயகர் தாழ்வு	,,	1 0

குறிப்பு.—மற்றைய தமிழ்ப் புத்தகங்களும் கிடைக்கும். விபரம் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

பார்க்கவன்

அல்லது

பரம ரஹஸ்யம்

நான்காம் அத்தியாயம்

பார்க்கவன்

காரணேசனது அன்பிற்குகந்த பார்க்கவன் தான் புத்தியறிந்தநாள்முதல் ஒருவீட்டிலேயே வசித்துவருகிறான். அவ்விடத்திலேயேதான் அவனது முன்னோர்கள் மிக்க தனவந்தர்களாய், பேரும் பிரக்யாதியு மடைந்துவந்தார்கள். அவனுடைய தகப்பனார் 'திரைகடலோடியுந் திரவியந் தேடு' என்னும் முதுமொழியைக் கொண்டவராய் அந்நியதேசங்கள் பலவற்றிற்குச் சென்று வியாபாரம் செய்து அத்துறையில்விருத்தியடைந்து மிக்கப்பொருளைச் சேகரித்து செல்வாக்குடன் வாழ்ந்துவந்தார். அவருக்குப் பிறகு, அவ்வமோகமான பொருளுக்கு நம் பார்க்கவனே அதிகாரி யானான். இது தவிர, ஏராளமான ஸ்தாவர சொத்துக்களும் திரண்ட வருமானத்திற் காதாரமாயிருந்தது. ஆகவே யாதொரு கவலையுமின்றி தன் காலத்தைக் கழிக்கலானான் பார்க்கவன். புஷ்பங்களின்மீதும், புஷ்பச்செடிகளின்மீதும் அவனுக்குப் பரமப்பிரியம். துல்யம் என்றால் போதும். பார்க்கவனுக்கு ஆநந்தம் பொங்கிவிடும். துல்யமலரை விருத்திசெய்து அம் மலர்ச் செடியை வளர்ப்பதிலேயே தன் பொருள், காலம் எல்லாவற்றையும் செலவிடலானான். காலக்கிரமத்தில் அவன் துல்யமலர்ச் செடிகள் எங்கும் பிரசித்தமாய்விட்டன. அவன் பூந்தோட்டம், நாற்றங்கால், விதை முதல் ஆகிய இவைகளைக் காண்பதற்காக நாட்டிலுள்ள ஜனங்கள் அடிக்கடி வரலானார்கள்.

காரணேசரும் தார்த்துாரக நகரத்தில் பிறந்து வளர்ந்தவர். அவருடைய முன்னோர்களும் வெகு காலமாய் அவ்விடத்திலேயே மிக்க கௌரமாய் வாழ்ந்துவந்தார்கள். 167-ஆறு ஆரம்பத்தில் காரணேசர் தம் சொந்த ஊரில் ஸ்வல்பகாலம் வசித்துப்போகலாமென்று வந்திருந்தார். ஆனால் அவரிடத்தில் ஜனங்களுக்குச் சிறிதேனும் பற்றென்பது கிடையாது. சிலர், ராஜாங்கவிஷயக் கொள்கையை இவர் பரவச்செய்கிறாரென்று இவர்மீது விரோதம் பாராட்டத் தலைப்பட்டார்கள். காரணேசர்மீது எவ்வளவுக்கு எவ்வளவு விரோதமோ அவ்வளவுக்கு அவ்வளவு பார்க்கவனிடத்தில் அந்நகரவாசிகளுக்கு பற்றிருப்பதாகத் தெரியவந்தது. காரணத்தை விசாரிக்கப்புகின், பார்க்கவன் ராஜ்ய விஷயங்களில் தலையிட்டுக் கொள்வதில்லை என்பதுதான்.

மேலே கூறியபடி பார்க்கவன் வேலையாட்களுக்கும் கூலியாட்களுக்கும் அவனிடத்தில் அத்யந்தப் பிரியம். பார்க்கவனும் இவ்வுலகம் நன்மை நிறைந்ததென்றே நம்பியிருந்தான். பொறாமையும், பகையும், கொலையும் குடிகொண்டிருக்கின்றது இப்ரபஞ்சத்தில் என்ற எண்ணமே கிடையாது. அதிலும் அவனுக்கு விரோதம்பூண்டவன் இப்பிரபஞ்சத்தில் எவனாயினும் உளனோ என்று எண்ணினனோ என்பதும் ஸந்தேகம். இப்படியிருந்த போதிலும், இவனை யறியாமலே இவன்மீது பொறாமையும் பகைமையும் கொண்டுள்ள மகாபாவியொருவ னிருந்தான்.

பார்க்கவன் துல்யமலர் தோட்டத்தின்மேலேயே கண்ணுங்கருத்துமா யிருக்குங்காலையில் அவன் வீட்டிற்கு அடுத்த வீட்டில் பயங்கரன் என்பவனிருந்தான், அவனுக்கும் துல்ய மலர்மீது பரமப் பிரியம். துல்யம் என்றாலே ஆனந்தத் தாண்டவம் ஆடுவான். ஆனால், சகாரன் பார்க்கவனைப்போல தனவந்தனல்ல. ஆகிலும் வெகு ஸாமார்த்தியத்துடன் தன் வீட்டிற்குச் சமீபத்தில் ஓர்தோட்டமமைத்து வெகு ஜாக்கிரதையாய் துல்ய மலர்ச்செடிகள் வளர்த்துவந்தான். அவன் தோட்டத்து மலர்களும் காலக்கிரமத்தில் பிரசித்திபெறத் தொடங்கின. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் பார்க்கவனுக்கும் துல்ய மலர்ப் பைத்தியம் பிடித்தது. ஆகவே தன் தொழிலுக்கு வேண்டிய ஸௌகரியங்களை அனுசரித்து தன் வீட்டை ஒருவாறு புதுப்பிக்கலானான். தன் முற்றத்திலுள்ள கட்டடத்தின்மீது ஓர் மாடி உயர்த்திடவே அடுத்த வீட்டுக்காரனான சகாரனது தோட்டத்தில் சூர்யகிரணங்கள் விழவொட்டாதபடி தடுத்துவிட்டது. சகாரனது எண்ணங்களும் ஏற்பாடுகளும் பலிக்கஇடமில்லாமல் போய்விட்டது. என்ன செய்வான் பாவம்! என்ன ப்ரமாதம்! பார்க்கவன் ஓவியம் பயில்பவனன்றோ!

சிறுவர்களுக்கான பக்கங்கள்

CHILDREN'S PAGES

அன்றையதினம் இரவில் புண்டரீகன்வெகு நேரம்வரையில் பலயோசனை செய்துகொண்டு தூங்காம லிருந்தான். பொழுது விடிய ஒரு ஜாமமிருக்குந் தருவாயில் மூன்று ஸ்திரீகள் இடையில் தண்ணீர்க்குடமெடுத்துக்கொண்டு அவன் இறங்கும் சத்திரத்தின் வாசல்வழியே குக்குடர் வீட்டை நோக்கிப்போவதைக் கண்டான்; இவர்கள் யாவர் இந்நேரத்தில் செல்வது என்று கவனித்தான். அவர்கள் மூவரும் குக்குடரின் ஆசிரமத்திற்குள் போய் அதைப் பெருக்கிச் சாணமிட்டு மெழுகிச் சுத்தஞ் செய்து கோலம்போட்டு இன்னும் சில பணிவிடைகள் செய்துவிட்டு வெளியே வந்தனர். இதைக் கவனித்துக்கொண்டிருந்த புண்டரீகன், "அவர்களைக் கண்டு நீங்கள் யார்! இவ்வேளையில் இங்கே எங்குவந்து போகின்றீர்கள்?" என்று கேட்டான். அவர்கள் பதிற்பேசவில்லை. பிறகு வழிமடக்கி நின்றுகொண்டு, "நீங்கள் யார்?" என்று கேட்டான்.

அவர்களுள் ஒருஸ்திரீ "அடேபாபி! கொடியவனாகிய நீ, ஏன் எங்களை வழிமறிக்கின்றாய்! சை! விலகு தூர! போ!" என்று கடிந்துகொண்டாள். புண்டரீகன் பயந்து அவர்கள் எதிரில் கை குவித்துநின்று, 'தாய்மாரே! அடியேன் பாபி என்பதை ஒப்புக்கொள்கின்றேன்? நீங்கள் யாவர்? ஏன் இங்கு வந்து பணிசெய்து செல்கின்றீர்கள்? இதைமாத்திரம் எனக்குச் சொல்லவேண்டும்" என்று கேட்டான். அவர்கள் மனமிரங்கி, "நீ முன் ஜன்மத்திலே செய்த புண்ணியத்தினாலே எங்களைக் கண்டாய்? கண்டதுமல்லாமல் எங்களைப்பற்றிய வரலாறு கேட்கவும் அவாவுடையவனாயிருக்கின்றாய்! இனி உனக்குபாபம் நீங்கியது! இது குக்குட முனிவருடைய தரிசன விசேஷத்தினால் கிடைத்த பலன்! இவர் மகாசாது! புண்ணிய புருஷர்! இவரைப் பிரமதேவரும் துதித்து வாழ்த்துகின்றார்" என்று கூறி மேலே பேசுவதற்குள், புண்டரீகன், "தாய்மார்களே! பிரமதேவரும் கொண்டாடும்படியாய் இவர் செய்த புண்யச் செய்கை யாது?" என்று கேட்டான். அவர்கள், "குக்குடர் பூர்வ ஜன்மத்தில் செய்த புண்ணியம் பெரிது. அதை எங்களால் வருணித்தற் கியலாது. இப்போது இவர் தாய்தந்தையரையே தமது தெய்வமாகக்கொண்டு எப்போதும் அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகள் செய்து பூஜை புரிந்துவருகிறார். இவருடைய மனைவியும் இவர் மனம்போல் நடந்துவருகிறாள். தாய்தந்தையர் சேவையைக் காட்டிலும் பெரிய புண்ணியம் ஒன்றுமில்லை. புண்ணியச் செய்கைகளெதுவும் இதிலடங்கும். தாய்தந்தையர் சேவை நல்ல ஞானத்தைக் கொடுக்கும். பகவான் அவர்களுக்கு நினைக்கும்போதெல்லாம் காட்சிதருவர், புராணங்களும் வேதமும் தாய்தந்தையரைத் தெய்வமாகக்கொண்டு வழிபடும்படிச் சொல்லுகின்றன. தாய்தந்தையரை நிந்திப்பவர் கொடு நரகமடைவர். அவர்களைப்போல் பாவி வேறொருவருமில்லை. அவர்கள் முகத்தில் நல்லவர்கள் விழிக்கமாட்டார்கள்" என்று சொன்னார்கள்.

இந்தப் பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்கும்போதே புண்டரீகன், தேம்பித் தேம்பி அழுது அவர்களைப் பார்த்து, "நான் அடைதற்கரிய மானிட ஜன்மமெடுத்தும் அந்த ஜன்மத்தை வீணாக்கிக்கொண்டேன். நான் மகா பாபியானேன். நான் கடையன். என்னை யமன் கொடிய நரகத்திலேதான் தள்ளுவான். நான் என் தாய் தந்தையரைப் படுத்திவைத்த பாடு கொஞ்சமல்ல! என்றுகூறி, "என் பாபம் ஒழியவும் நான் நல்வழியிலேகவும் எனக்குப் போதியுங்கள்!" என்றழுது வணங்கினான்.

அவர்கள், "விசனப்படாதே! இதைக்கேள்! எங்களுக்கொரு சாபம் நேரிட்டது. அது நீங்கும்பொருட்டு நாங்கள், தாய்தந்தையரை தெய்வமாகக்கொண்டு பூஜித்துவரும் புண்ணியாத்துமாவாகிய இவர்க்கு இந்தப் பணிவிடைகளைச் செய்கின்றோம். நாங்கள், கங்கை, யமுனை, ஸரஸ்வதி. நாங்களே இந்தக் குக்குட முனிவருடைய பணிவிடையை மேற்கொண்டோமென்றால், தாய்தந்தையரின் பூஜையைப் பிரதானமாகக் கொண்டவர்களுடைய புண்ணியத்தைப்பற்றி நாங்கள் என்ன சொல்வது? நீ இவரையே குருவாகக்கொள். தாய்தந்தையரையே தெய்வமாகக்கொள். இதுதான் உன் பாபம் அகல வழி" என்று கூறி மூவரும் மறைந்தனர்.

புண்டரீகன் மனம் மாறியது! புண்ய பாவமிதுவென்று தெரிந்துகொண்டது! தான் இவ்வளவுநாள் செய்துவந்ததை யெல்லாம் எண்ணி எண்ணி வருந்தியது. இப்படியாகவே புண்டரீகன், அப்பொழுதே ஓடித் தாய்தந்தையரைத் தேடி யடையவேண்டுமென்கிற ஆவல் மேலிட்டு தூங்காமல் அவர்களையே நினைத்துக்கொண்டு படுத்திருந்தான். பொழுது விடிந்தது. உடனே ஸ்நானஞ்செய்து தன் தாய் தந்தையர்களைத் தியானித்துக்கொண்டே தன் மனைவியுடன் குக்குடர் ஆசிரமம்போய் அவரைப் பணிந்தான்; மனைவியும் பணிந்தாள். குக்குடர் ஆசீர்வதித்தார்.

புண்டரீகன், "ஸ்வாமி தமது பெருமையுணர்ந்தேன்! தாம் காசிக்குப் போகவேண்டுமென்கிற அவசியமில்லை! காசி இராமேசுவரம் யாவும் தாமிருக்குமிடமே" என்று கூறி விடைகொண்டு வெளியே வந்தான். அங்கே அவன் தாய்தந்தையர் வேறு சில யாத்திரைரோடு நடக்கமாட்டாமல் தள்ளாடித் தள்ளாடி வருவதைக்கண்டு ஓடி அவர்கள் பாதத்தில் விழுந்து பணிந்தெழுந்து கண்ணீர் பெருக அழுது "என் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும்! பொருத்தருளவேண்டும்!" என்று கதறினான்.

தங்கள் பிள்ளையிடம் இப்படிப்பட்ட அருமையான குணங்கண்ட அவர்கள், பரம சந்தோஷமடைந்து, இது காசியாத்திரை பலன் என்று கருதி, 'அப்பா! பிள்ளை செய்த குற்றம் பெறறோர்க்கு ஒரு குற்றமாகுமா? பொறுத்தோம்! விசனியாதே! நீ பகவானை மறவாத உத்தமனாகவேண்டும். அதுதான் உன்னிடம் விரும்புவது" என்றனர்.

பிறகு புண்டரீகன் அவர்களைச் சத்திரத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் ஸ்நானஞ்செய்வித்துப் பூஜித்து உணவுகொடுத்து உட்காரவைத்துத் தனக்கு அந்த இடத்துல் நேர்ந்த விசேஷங்களைச் சொல்லி முடித்துக் குக்குட முனிவரின் தரிசனமுஞ் செய்வித்தான். மறுநாள் அங்கிருந்து காசிக்குப் பிரயாணப்பட்டு அவர்களைக் குதிரைமே லேற்றிவைத்துக்கொண்டு, தான தன் மனைவியோடு அவர்கள் பின் நடந்து போனான்.

காசிக்குப்போய் அங்கே தாய்தந்தையர்க்குக் கங்கா ஸ்நானஞ்செய்வித்துத் தானும் தன் மனைவியோடு நீராடிப் பிறகு அங்குச் செய்யவேண்டியவற்றையெல்லாம் செய்து முடித்துக்கொண்டு தன் ஊருக்குப் பிரயாணப்பட்டு வந்தான். புண்டரீகன் ஊருக்குள்வரும்போது தன் தாய்தந்தையர் முன்னே குதிரைகளில் வரப், பின்னே இவனும் இவன் மனைவியும் கால் நடையாய் ஹரிபஜனை செய்துகொண்டு வருவதைப்பார்த்த ஊராரெல்லோரும் "ஆகா! காசியாத்திரை செய்த பயன்போலுமிவன் குணம் திரும்பியதற்கு" எனச் சந்தோஷித்தார்கள்.

இவ்வாறு வீடு வந்துசேர்ந்த புண்டரீகன் நாடோறும் தன் தாய்தந்தையரைப் பூஜிப்பதும் அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகள் செய்வதும் பிறகு பகவானை நினைத்து பாடித் துதிப்பதுமா யிருந்துவந்தான்.

புண்டரீகன் இவ்வாறு பெற்றோர் பணிவிடையில் இறங்கியிருப்பதை உணர்ந்த கிருஷ்ணபகவான், அவனைச் சோதிக்கவெண்ணி துவாரகையை விட்டு புறப்பட்டு அவனுடைய வீட்டில் வந்து நின்றார். பகவான் சங்கு சக்கர பீதாம்பரதாரியாய் விளங்குகிறார். இவருடைய காட்சியைக்கண்ட புண்டரீகன், பணிந்து வரவேற்று ஒரு செங்கல் எடுத்துவந்து போட்டு அதிலிருக்கச்செய்து, தன் தாய்தந்தையர்க்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைச் செய்துமுடித்துப் பிறகு வந்து பகவானைப் பணிந்து நின்றான்.

பகவான் பரம சந்தோஷமடைந்து, "உன்னிடத்தல் நாம் கொண்டிருக்கும் சந்தோஷம் இவ்வளவென்று சொல்லமுடியாது. நீ புனிதன். பாபமற்றவன். உனக்கு வேண்டும் வரத்தைக் கேள் "தருகின்றேன்" என்றார். புண்டரீகன் பகவானைப் பணிந்து துதித்து, "பிரபுவே, தேவரீர் எப்போதும் இப்பொழுது நின்ற திருக்கோலத்துடனிருந்து தரிசித்தவர்களுடைய பாபங்களை யொழித்துப் புனிதர்க்கு முத்தியருளல்வேண்டும். விட்டலன் என்னும் திருநாமத்தால் பிரக்கியாதியடைதல் வேண்டும்" என்று வரங்கேட்டான். பகவான், புன்முறுவலுடன் புண்டரீகனைப் பார்த்து, "புண்டரீக! உன் விருப்பப்படியே நாம் இங்கு விளங்குவோம்!" என்று கூறி மறைந்தனர். பிறகு அந்த ஊருக்குப் புண்டரீபுரம் என்கிற பெயருண்டாயிற்று. புண்ட

ரீகன் ஊரும் உலகும் புகழ நெடுநாள் சுகமாக வாழ்ந்துவந்தான்.

பண்டரீபுரத்தில் இப்போதும் புண்டரீகனுக்குப் பகவான் தரிசனந்தந்த கோலங் காணலாம்.

சிறுவர்களே! தாய்தந்தையர்க்குரிய பணிவிடை செய்து அவர்களைப் பூஜித்து வந்ததின் பயனைப் பாருங்கள். அரிய பெரிய தவஞ்செய்து தரிசிக்கக்கூடிய பகவானுடைய தரிசனம் புண்டரீகனுக்குத் தன் வீட்டிலேயே கிடைத்தது. பகவான் தம்மை பூசிப்பவரைவிடத் தாய்தந்தையரைப் பூஜிப்பவரையே பெருமைப்படுத்துகிறார் என்பது இதனால் நீங்கள் தெரிந்துகொள்ளத்தக்க நீதியாகும்.

ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

LADIES' PAGES

அதற்கு அம்முனிவர், "அப்பா! நான் இந்த ஆச்சிரமத்திலேயே சுமார் 300 வருஷ காலமாய் வசித்துவருகிறேன். இதுவரை அப்பெயர்கொண்ட பட்டணம் இருப்பது என் காதில் விழுந்ததேயில்லை. ஆனால் ஒன்று சொல்லுகிறேன். இங்கிருந்து முந்நூறு யோஜனை தூரத்துக்கப்பால் காம்பில்ய தேசமென ஒரு தேசமுளது. அதில் உத்தரம் என்கிற ஒரு பர்வதமிருக்கிறது. அதன் அடிவாரத்தில் ஓர் ஆசிரமத்தில் என் தமையன் தீர்க்கதபசு என்பவர் தவம் செய்துவருகிறார். ஒருசமயம் அவருக்குத் தெரிந்திருக்கலாம். அவரைப் போய் விசாரித்துப்பார்!" என்றருளிச் செய்தார்.

உடனே புறப்பட்டான் நம் பிரமசாரி. காடு மலை வனாந்தரம் முதலியன கடந்து சிரமம் என்பதே தெரியாமல் அநேக நாட்கள் நடந்து, குறிப்பிட்ட இடம் போய்ச்சேர்ந்து அங்கு அம்முனிவரைத் தரிசித்துத் தன்வரலாற்றைச் சொல்லி அவரைக் கனகபுரிக்குப் போக வழி கேட்டான். அவரும், "நான் அப்பட்டணத்தைப்பற்றி கேள்விப்பட்டதில்லை. ஆனால் ஒரு உபாயம் சொல்லுகிறேன். கடல் நடுவில் உன்னத ஸ்தலமென்று ஒரு தீவு இருக்கிறது. ஸத்யவ்ரதன் என்னும் ஓர் செம்படவர்க்கரசன் அத்தீவுக்கு அதிபதி. அவனுக்கு எல்லாத் தீவுகளிலும் பழக்கமிருக்கிறது. அவனுக்கு அப்பட்டணத்தைப் பற்றி அநேகமாய்த் தெரிந்திருக்கலாம். ஆகையால் நீ இங்கிருந்து நேராகக் கடற்கரைக்குப் போய், அங்குள்ள வர்த்தகர்களில் யாராவதொருவனுடன் சிநேகஞ் செய்துகொண்டு அவ்வர்த்தகன் மூலமாய் அத்தீவு போய்ச்சேர்ந்து அங்கு விசாரித்தால் ஏதாவது புலப்படும்" என்றருளினார்.

உடனே அங்கிருந்து சக்திதேவன் புறப்பட்டு சிலநாட்களில் கடற்கரை போய்ச்சேர்ந்து அங்கு விடங்கமென்னும் பட்டணத்தில் வசிக்கும் சமுத்திரகுப்தன் என்னுமோர் தீவாந்தர வியாபாரியினிடம் சிநேகஞ் செய்துகொண்டு, அவனுடைய கப்பலிலேறி உன்னத ஸ்தலத்திற்கு புறப்பட்டான். கப்பலும் வெகு வேகமாய்ச் சென்றது. அநேகமாய் உன்னத ஸ்தலத்துக்கு நான்கு மைல்தூரத்தில் வந்துவிட்டது. நம் பிரமசாரிக்கு நம்பிக்கையும் ஆசையு மதிகமாயின. 'இந்தச் செம்படவ அரசனுக்குக் கனகபுரியைப்பற்றித் தெரிந்திருக்குமென்றே நினைக்கிறேன். எப்படியும் நான் அக்கன்னிகையை யடையாமல் விடப்போகிறதில்லை' என்று எண்ணிக்கொண்டே போகுமளவில் திடீரென்று அகால யமன் போல் ஒரு புயற்காற்றுக் கிளம்ப, கப்பலானது அக்காற்றினா லடிபட்டுப் பலமான அலைகளினடுவில் அகப்பட்டுக்கொண்டு தத்தளித்துக் கடைசியில் சமுத்திரத்தில் கவிழ்ந்துவிட்டது. ஐயோ பாவம்! உலகத்தில் பெண்ணாசையும்பொன்னாசையும் மனிதர்களை எந்தெந்த ஆபத்துக்களுக்குத்தான் உள்ளாக்கவில்லை? ஆனால் கொஞ்சம் நல்வினையிருந்தால், அது அந்த ஆபத்துக்களிலிருந்து மனிதனைக் காப்பாற்றிவருகிறது.

நம் சக்திதேவன் ஜலத்தில் விழுந்த நிமிஷத்திலேயே கடலிலிருக்கும் ஒரு பெரிய மீனினால் விழுங்கப்பட்டான். ஆனால் அவன் சாகவில்லை. இரண்டுநாட்கள் பரியந்தம் நல்லகாற்றுண்டு சாகாமலிருக்கக்கூடிய வளவு அம்மீனின் வயிறு பெரிதா யிருந்தது. அம்மீன் கடலி லுலவிக்கொண்டே அத்தீவின் சமீபம் சேர அங்கிருந்த மீன் பிடிப்பவர்கள் இதைப்

பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொலலவேண்டும்.

பிடித்து தங்கள் அரசனிடம் சேர்த்தார்கள். அரசனும் இதுவரை கண்டிராத அவ்வளவு பெரிய தேகமுள்ள அம்மீனைப் பார்த்து ஆச்சரியங்கொண்டு அதைத் தன் எதிரிலேயே நறுக்கச் சொன்னான். சமையற்காரர்கள் அவ்விதம் செய்ய, பார்ப்போர் பிரமிக்கும்படி மீனின் வயிற்றிலிருந்து நம் பிரமசாரி வெளியேவந்து அவ்வரசன்முன் நின்றான்.

அவ்வரசன் அளவிலா ஆச்சரியமடைந்து "நீர் யார்? இம்மீனின் வயிற்றில் போனதற்குக் காரணம் யாது?" என்று கேட்க, "நான் ஒரு பிராமணன், நானிருப்பது வர்த்தமானபுரம், நான் கனகபுரியைத் தேடுவதற்காகப் புறப்பட்டேன். அதிருக்குமிடம் தெரியாமல் வெகுவாய் அலைந்துதிரிந்து கடைசியில் தீர்க்கதபசு என்னும் ஒரு முனிவரால் சமுத்திரநடுவில் ஸத்யவ்ரதன் என்று ஒரு தீவுக்கரசனிருப்பதாகவும் அவனைக் கேட்டால் கனகபுரியின் வரலாறு தெரியுமென அறிந்து அவ்வரசனைத் தேடி கப்பலேறிவருகையில் நடுவில் புயலடித்து கப்பற் கவிழ்ந்துவிட என்னை ஒரு மீன் விழுங்கிவிட்டது. தங்களுங்கெதிரில் இப்போது நிற்கிறேன்" என்று சுருக்கமாய்ச் சொன்னான் சக்திதேவன்.

உடனே "அவ்வரசன் ஸ்வாமி! நான்தான் அந்த ஸத்யவ்ரதன். என்னுடையதுதான் இத்தீவு. நான் கணக்கில்லாத தீவுகளைச் சுற்றிப் பார்த்திருக்கிறேன். அந்தக் கனகபுரியைக் காதால் கேட்டிருக்கிறேனே யொழிய கண்ணால் கண்டதில்லை. அது எங்கிருக்கிறதென்றும், அதற்கு வழி எப்படி என்றும் எனக்குத் தெரியாது" என்று சொல்லிக்கொண் டிருக்கும்போதே ஒரு பெரிய வருத்தக் குறியை சக்திதேவன் முகத்தில் கண்ட ஸத்யவ்ரதன், "ஐயா! கவலைப்படாதேயுங்கள். இன்றிரவு இங்கே தங்கியிருங்கள். காலையில் அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறேன்" என்று அவனைச் சமாதானப்படுத்தி அவனுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்வித்து தானும் போஜனம் செய்து நித்திரைக்குச் சென்றான்.

சக்திதேவனும் வேண்டிய உபசாரங்களைப் பெற்று அங்கேயே ஓரிடத்தில் சயனித்துக் கொண்டான். விடியற்காலம் ஸத்யவ்ரதன் வந்து சக்திதேவனை எழுப்பி "ஐயா! உம்முடைய எண்ணத்தை நிறைவேற்றிவைக்க ஓர் உபாயம் யோசித்திருக்கிறேன். அதாவது இங்கிருந்து வெகு தூரத்திற்கப்பால் கடல் நடுவில் ரத்னகூடம் என்றொரு தீவிருக்கிறது. அதில் ஓர் விஷ்ணுவாலயமுளது. அப்பகவானைத் தரிசிக்க ஆடிமாசம் சுக்லபக்ஷம் துவாதசியன்று எல்லா தேசங்களிலிருந்தும் கோடானுகோடி ஜனங்கள் அங்கு வருவார்கள். அங்கு போனால் கனகபுரியின் விருத்தாந்தம் கட்டாயம் தெரியும். அந்த தினமும் சமீபத்திலேயேதான் வருகிறது. ஆகையால் இப்போதே புறப்பட வேண்டியதுதான்" என்றான்.

உடனே இருவரும் ஒரு பெரிய படகிலேறிப் புறப்பட்டார்கள். படகு வெகுதூரம் சென்றதும் நடுசமுத்திரத்தில் உயர்ந்து கருப்பாய் ஏதோ தென்பட அஃதென்னவென்று சக்திதேவன் ஸத்யவ்ரதனை வினவினான். அதற்கு அவன், "அது ஒரு பெரிய ஆலமரம். அதனடியில் ஒரு பெரிய சுழலும், அதற்கடியில் வடவாமுகாக்கினியு மிருக்கிறது. இச்சுழலில் அகப்பட்டுக்கொண்டவர் தப்புவதில்லை. ஆகையால் வெகு ஜாக்கிரதையாய் சுழல்பக்கம் போகாமல் ஒதுங்கிப் போகவேண்டும்" என்று சொல்லிக்கொண் டிருக்கும்போதே, படகு ஜலத்தின் வேகத்தினா லிழுக்கப்பட்டு சுழலை நோக்கிப் போக வாரம்பித்தது. அதைக்கண்ட ஸத்யவ்ரதன் "ஐயா நமக்கின்றைக்கு விநாசகாலம் நேர்பட்டுவிட்டதுபோல் தோன்றுகிறது. படகு சுழல் பக்கமே போகிறது. ஏதேது, இனி நாம பிழைப்பதில்லை. எனக்கு மரணத்தைப்பற்றிக் கவலையில்லை. இவ்வளவு சிரமப்பட்டும் தங்கள் எண்ணம் நிறைவேறாமற்போகிறதே யென்று மாத்திரம் கவலைப்படுகிறேன். என்னாலானவரை படகை நிறுத்திப் பார்க்கிறேன். அதற்குள் இம்மரத்தின் கிளையைக் கெட்டியாய் பிடித்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லி ஓடத்தைத் தன்னாலானவரை தடுக்க முயன்றான். என்ன முயன்றும் பயன்படாமல யமன்வாயில் விழுவதுபோல் அச்சுழல்வாயில் விழுந்து இறந்தான ஸத்யவ்ரதன்.

நம் சக்திதேவனோ வென்றால், அவ்வாலமரத்தின் ஓர் உறுதியான கிளையைப் பற்றிக்கொண்டு அதன் வழியால் மெல்ல மரத்தின் மேல் ஏறிவிட்டான். அங்கிருந்துகொண்டு

பொய்யான பொருளாசை மெய்யான அருளாசையை விலக்குகிறது.

கீழ் இருக்கும் சமுத்திரத்தையும் அதன் அலைகளையும் பார்க்கவும் ஸத்யவ்ரதனின் கதியை நினைக்கவும் அவனுக்கு துக்கம் மேன்மேல் அதிகரித்தது. அடடா! என்ன ஈசுவரன் செயல். நமக்கு உபகாரம் செய்வதாக வந்த ஸத்யவ்ரதன் இப்படியும் இறக்கவேண்டுமா? பரோபகாரம் செய்ய உத்தேசித்த ஒருவனுக்கு இதுதானா பலன்? இப்பொழுது நம்முடைய கதியென்ன? இப்படி எத்தனை நாளைக்கு இம்மரத்தி லுட்கார்ந்திருக்க முடியும்? இங்கிருந்து பார்த்தால் நாலாபக்கங்களிலும் சமுத்திரத்தின் ஜலத்தைத்தவிர வேறொன்றும் தென்படவில்லையே. நாமும் இதில் விழுந்து மடிவதைத்தவிர வேறு உபாயம் ஒன்றையும் காணோம். ஈசுவரா! என்னை இப்படியும் துக்கத்திற்காளாக்கலாமா" வென்று வெகுவாய்ப் புலம்பிக்கொண்டிருக்குந் தருவாயில் இவன்படுந் துக்கத்தைக்கண்டு சகியாதவன்போல் கதிரவன் தன் கரங்களைச் சுருக்கிக்கொண்டு மேற்றிசையில் மறைந்தான்.

உடனே நாலுபக்கங்களிலுமிருந்து அநேக ஜாதி பறவைகள் அம்மரத்தில் கூடின. அவைகளிற் சில பெரிய கழுகுகள், தாங்கள் அன்று பகலில் போயிருந்த இடத்தைக் குறித்தும், மறுநாள் போகப் போகிற இடத்தைக் குறித்தும் பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு கழுகு தான் மறுநாள் கனகபுரிக்குப் போவதாய்ச் சொல்லிற்று. அதைக் கேட்ட நம் பிரமசாரிக்கு உண்டான ஆனந்தத்திற் களவேயில்லை. எப்படியாவது இப்பட்சியுடன் கனகபுரிக்குப் போய்விடவேண்டுமெனத் தீர்மானித்தான். பறவைகள் ஒருவாறு பேசிமுடித்துவிட்டு, பகலில் தாங்கள் பட்டசிரமத்தினால் அயர்ந்து நித்திரை போயின. அச்சமயம் இவன் கனகபுரிக்குப் போவதாய்ச் சொன்ன கழுகின் நடுமுதுகில் மெதுவாயேறி அங்குள்ள சிறகுகளைப் பலமாய்ப் பிடித்துக்கொண்டான்.

பொழுதுவிடியுமுன் பட்சிகள் தாங்கள் போக உத்தேசித்த இடத்தைக் குறித்து புறப்பட்டன. நம் சக்திதேவன் ஏறிய கழுகும் அவன் முதுகிலிருப்பது தெரியாமலே அவனைத் தூக்கிக்கொண்டு கனகபுரி போய்ச் சேர்ந்து அங்கொரு பூங்காவனத்திலிறங்கிற்று. சக்திதேவன் தான் அப்பறவையின் முதுகிலேறிவந்தது அப்பறவை உணருமானால், உடனே தன்னை அது கொத்திக்கொன்று தின்றுவிடும் என்று அறிந்திருந்தானாகையால் அதற்குத் தெரியாமலே மிகவும் மெதுவாய் முதுகிலிருந்து பின்புறமா யிறங்கி மெல்லமெல்ல நடந்து ஓர் புதரில் மறைந்துகொண்டான். பறவை போனதும் வெளியில்வந்து அவ்வுத்தியானவனத்தின் அழகைச்சுற்றி பார்க்கும்பொழுது அங்கோரிடத்தில் மெல்லிய பாணிகளால் மலர்களைக் கொய்துகொண்டிருக்கும் இரு சிறுமிகளைக் கண்டான். கண்டதும் "இது என்ன ஊர்? இதற்கு யார் அரசன்? நீங்கள் யார்?" என்று வினவ அவர்கள் "இப்புரிக்குக் கனகபுரியென்று பெயர். இது வித்தியாதரர்கள் வசிக்குமிடம், இப்பட்டணத்தில் தற்காலம் ஓர் வித்தியாதரகுமாரி அரசியா யிருக்கிறாள். அவளுடைய தோழிகள் நாங்களிருவரும். அவளுக்காகப் புஷ்பம் பறித்துப்போக வந்தோம்" என்றார்கள். "அப்படியானால் உங்கள் அரசியைப் பார்க்க நான் ரொம்ப ஆவலுள்ளவனா யிருக்கிறேன். அதற்கு வேண்டிய ஒத்தாசையை நீங்கள் செய்யமாட்டீர்களா" வென்றான் சக்திதேவன். அப்படியே யாகட்டுமென்று அவனைத் தங்களுடன் கூட்டிக்கொண்டுபோய் ஒரு மாளிகையின்முன் நிறுத்தி "இதுதான் எங்கள் அரசியின் மாளிகை" என்றுரைக்க அதற்குள் வாசற்காவலர் உள்ளேயோடி இந்த அபூர்வமான மனிதன்வரவை தங்களரசிக்குத் தெரிவித்தார்கள். அரசியும் உடனே இவனை உள்ளே வரவழைத்து மிகுந்த மரியாதையுடன் தனக்குச் சமீபத்திலேயே ஓராஸனத்திலமர்த்தி வேண்டிய உபசாரங்களைச் செய்தபிறகு "தாங்கள் யார்? மானிடரால் மனதாற்கூட நினைக்க முடியாத இவ்விடத்திற்கு தாங்கள் எப்படி வந்தீர்கள்?" என்று மிகுந்த வணக்கத்துடனும் பிரியத்துடனும் வினவினாள்.

சக்திதேவனும் பிரமாவின் ஒப்புயர்வற்ற சிருஷ்டியான அம்மடந்தை ரூபத்தைக் கண்ணாரக்கண்டு ஆனந்தக்கடலில் மூழ்கி பரவசனாகிவிட்டான். சற்று நேரங்கழித்து மனதை ஒருவாறு திடப்படுத்திக்கொண்டு தன்வரலாற்றைச் சுருக்கமாக அவளுக்குக் கூறினான்.

இதைக்கேட்டு நீண்டதோர் பெருமூச்சுவிட்டு, அம்மடந்தையும் சக்திதேவனைத் தனி

பொருளும் போகமும் கூடவாரா, புண்ணியமே கூடவரும்.

யாய் அழைத்துப்போய் "ஒருவிஷயம் தங்களுடன் சொல்லுகிறேன். அதைக் கவனமாய்க் கேட்கவேண்டும். அதாவது—இந்நகரில் சசிகண்டரென்கிற ஒரு வித்தியாதரருக் கதிபதியிருந்தார். அவருக்கு சந்திரப்பிரபை, சந்திரரேகை, சசிப்பிரபை, சசிரேகை என நான்கு பெண்கள் பிறந்தோம். அவர்களுள் நான்தான் மூத்தவள். என் பெயர் சந்திரப்பிரபை. நாங்கள் நால்வரும் மிகவும் பட்சமாய் வளர்ந்து வந்தோம். எங்களுக்கு பருவகாலமும் வந்தது. இங்ஙனமிருக்க ஒருநாள் என் தங்கைகள் மூவரும் தேவகங்கையில் ஸ்நானம் செய்யப் போனார்கள். நான் வீட்டிலேயே யிருந்தேன். அவர்கள் ஸ்நானம் செய்துகொண்டிருக்கும்பொழுது அங்கு ஒரு மகரிஷி ஸ்நானம் செய்ய வந்தார். என் தங்கைகள் யௌவன மதத்தினால் அவர்பேரில் ஜலத்தை வாரியிறைத்தார்கள். அவர் என்ன சொல்லியும் இவர்கள் கேட்டிலர். முடிவில் அவர் சினங்கொண்டு "நீங்கள் மூவரும் மண்ணுலகில் அவதரிப்பீர்களாக" எனச் சபித்தார்.

இதை யறிந்த என் பிதா ஓடோடியும்போய் முனிவர் பாதம் பணிந்து வேண்டிக்கொள்ள, அவர் "ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஸமயத்தில் தனித்தனியாக சாபவிமோசன மேற்படும். தவிர, இவர்களுக்கு மனுஷ்யப் பிறவியிலும் பூர்வக்ஞான மிருக்கும்" என வருளிச் செய்து போயினர். இவர்களும் அந்த வித்தியாதர சரீரத்தை விட்டுவிட்டு பூலோகத்தில் போய்ப் பிறந்தனர். அந்தத் துக்கத்தை சகிக்க மாட்டாதவராய் என் பிதா இந்த ராஜ்யத்தை என்னிடம் ஒப்புவித்துவிட்டு வனத்திற் கேகினார். நான் இங்கேயே வசித்துவருகிறேன். ஒருநாள் என் கனவில் தேவி பிரசன்னமாய் "பெண்ணே! உனக்கு ஒரு மானிட யுவகன் நாயகனாகப் போகிறான்" என்று அருள்புரிந்தாள். அதுமுதல் நானும் என்னைக் கோரி வந்த வித்தியாதரயுவர்கள் எல்லோரையும் நிராகரித்துவிட்டு விவாகமில்லாமலே மனிதர் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்து இன்று இவ்வாச்சரியகரமான தங்கள் வரவைக் கண்டேன். கண்டதும் ஆனந்தம் கொண்டேன். தங்களுடைய ரூபலாவண்யமானது என் மனதைக் கவர்ந்து என்னையும் என் மனதையும் தங்களுக்கே அர்ப்பணம் செய்துவிட்டது. இங்கிருந்து கொஞ்சதூரத்தில் ஒரு பருவதமிருக்கிறது. அதன்மேல் பகவான் பரமசிவன் எழுந்தருளி யிருக்கிறார். அவரைத் தரிசிப்பதற்காக, வருகிற சதுர்த்தசியன்று எல்லா வித்தியாதரர்களும் வருவார்கள். அங்கு என் பிதாவும் வருவார். அன்றையதினம் நான் அங்குபோய் அவரிடம் தங்கள வரவைத் தெரிவித்து விவாகத்திற்காக அவரிடமிருந்து விடைபெற்று வருகிறேன். பிறகு என்னைத் தாங்கள் மணம் புரிந்துகொள்ளவேண்டும்" என்றுரைத்து அவனை வித்தியாதரருக்குரிய உபசாரங்களினால் நன்கு உபசரித்தாள்.

ஒருபோதும் கண்டிலாததும் கேட்டிராததுமான அவ்வுபசாரங்களைப் பெற்ற நம் பிரமசாரி தன்னையே மறந்துவிட்டானென்றால், தான் வழியில் பட்ட சிரமங்களையும், தன் ஊரையும், தன்னூரசன் மகளான கனகரேகையையும், மறந்துவிட்டா னென்பதில் என்ன ஆச்சரியமிருக்கிறது?

இவ்விதம் அந்த சுகத்தில் மூழ்கினவனாய் நாலைந்து நாள் இருந்தான். சதுர்த்தசியும் வந்தது. அன்றையதினம் சந்திரப்பிரபை சக்திதேவனைப்பார்த்து "நான் இன்று என் பிதாவினிடம் சென்று உத்தரவு பெற்றுவருகிறேன். என் வேலைக்காரர்களும் என்னுடன் வருவார்கள். தாங்கள் தனியாக இங்கு இரண்டு நாள் இருக்கவேண்டி யிருக்கும். ஆகாராதிகளுக்கு வேண்டிய சகல சௌகரியங்களும் செய்வித்துப் போகிறேன். ஏதோ தனியாய் இருக்கிறோமென்று மனதில் கவலைவேண்டாம். கட்டாயம் மூன்றாவதுநாள் நான் வந்துவிடுகிறேன். தாங்கள் இம்மாளிகையில் எங்கு வேண்டுமானாலும் இருக்கலாம். மேல்மாடிக்கு மாத்திரம் போகவேண்டாம். நான் போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு புறப்பட்டாள்.

(இன்னும் வரும்.)

ஆரியமத உபாக்கியானம்.—இதில், முதல் இரண்டாம் பாகங்களில் புராணக்கதைகள் 108 அடங்கியிருக்கின்றன. மிகவும் அருமையான நூல்கள். 15 பதிப்புகளுக்குமேல் வெளிவந்துள்ளன. சுமார் 1,00,000 பிரதிகள் செலவாகியிருக்கின்றன. இவைகளின் சிறப்புக்கு வேறு அத்தாட்சியும் வேண்டுமோ? இந்தப் புத்தகம் தெலுங்கு, கன்னட பாஷைகளிலும் கிடைக்கும்.

பொருள் போனவழியே துக்கம் போம்.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

விரல் விலங்கு.—கைதிகளுக்கு இடுவதற்கு கைவிலங்குக்குப் பதிலாக விரல் விலங்கு புதிதாகச் செய்யப்பட்டிருக்கிறது. அதைச் செய்தவர் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் போலீஸ் இலாகாவைச் சேர்ந்த மிஸ்டர் ஏப்ரஹாம் லிங்கல்ன் என்பவர். அவ்விலங்கு ஒவ்வொரு கையிலும் ஒவ்வொரு விரலில் இடப்படுகிறது. மணிக்கட்டுகளிலிடும் விலங்குகளை எவ்வளவு பலமாய்ப் பிடித்திழுத்தாலும் அதனாலுண்டாகும் வலியைப் பொறுத்துக்கொள்ள முடியுமென்றும், ஆனால் விரலிலிட்ட விலங்கைச் சிறிதளவு இழுத்தாலும் அதனாலுண்டாகும் வலியைப் பொறுக்க முடியாதென்றும், ஆகையினால் திருடர்களை திமிறிக்கொண்டு ஓடாமல் தடுப்பதற்கு விரல் விலங்கே கைவிலங்கைக் காட்டிலும் சிலாக்கியமென்றும் மிஸ்டர் ஏப்ரஹாம் லிங்கல்ன் அபிப்பிராயப்படுகிறார்.

* * *

மூங்கில் கடியாரம்.—நேபிள்ஸ் நகரத்து கான்ஸான்ஸோ என்னும் சீமான் மூன்று வருஷகாலம் பொறுமையுடன் விடாமுயற்சி செய்து ஒரு மூங்கில் கடியாரம் செய்திருக்கிறார். அக்கடியாரத்தின் மணியைத் தவிர வேறு எப்பாகமும் உலோகங்களினாற் செய்யப்படவில்லை; மற்றவைகள் யாவும் கல்மூங்கில் துண்டுகளினாலேயே செய்யப்பட்டிருக்கின்றன. அது மணி, நிமிஷம், விநாடி இவைகளைக் காட்டுகிறது, கால்மணிக் கொருமுறை மணியடிக்கிறது, கிழமை மாதங்களையும் தெரிவிக்கிறது. நான்கு வருஷங்களுக்கு ஒருமுறைதான் அதன் முட்களை ஒழுங்கு படுத்தவேண்டும். அது நாள்தோறும் பகல் பன்னிரண்டு மணிக்கு ஒரு சிறு பீரங்கியைச்சுட்டு வேட்டுப் போட்டு, ஒரு கொடியை விரித்து, ஒரு ஊது குழலை ஊதி, மணியையும் அடிக்கிறது.

* * *

தேங்காயைக் காப்பாற்றும் வழி:—அமெரிக்காவுக்குச் சமீபத்தில் அதன் கீழ்ப்புறத்தில் தென்கடலி லிருக்கும் தீவுகளில் தேங்காய்தான் முக்கியமான ஏற்றுமதிச் சரக்கு. அத்தீவுகளில் எலிகளும் நிலநண்டுகளும் தென்னைமரத்தின்மீதேறித் தேங்காய்களை இளநீர்க்காய்களா யிருக்கும்போதே தின்று மிகுந்த நஷ்டம் விளைவித்து வந்தன. அதைத் தடுக்க அத்தீவிலுள்ளவர்கள் நூதனமாய் ஓர் உபாயம் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதென்ன வெனில், தென்னை மரங்களின் அடிப்பாகத்தைச் சுற்றிச் சிறிது உயரம் வரையில் தகரத் தகடுகளினால் கவசம் செய்து போடுகிறார்கள். தகரம் அவைகளுக்குக் கால்பிடிப்புக்கு இடந்தராமல் வழுக்கிவிடுகிறது. இவ்வற்ப உபாயத்தினால் அத்தீவிலுள்ளவர்கள் அடைந்த பலன் மிகவும் பெரிது.

* * *

நூதன இரண்டு சக்கரவண்டி (பைஸிகில்).—அமெரிக்காவில் மெஸ்ஸாசுஸெட்ஸ் என்னும் மாகாணத்தில் மிஸ்டர் வால்டர் மெட்ஸ் என்பவர் பத்துப் பேர்கள் ஏறி, அவர்களெல்லோரும் காற்பிடிகளை (பெடல்களை) யழுத்தி இயந்திரத்தைச் செலுத்தத்தக்க ஒரு பைஸிகிளை வைத்திருக்கிறார். அந்த பைஸிகிளுக்கு இரண்டு சக்கரங்கள்தா மிருக்கின்றனவே யெனினும், இருபது பெடல்களிருக்கின்றன. பத்துப்பேர்கள் ஏறி அதைச் செலுத்தினால், அது மணிக்கு அறுபதுமைல் தூரம் சென்று, மோட்டார் வண்டிகளையும் தோல்வியடையச் செய்கிறது. மணிக்குப் பதினைந்துமைல் வீதம் அவ்வண்டி ஓடாவிட்டால், அவ்வண்டி கவிழ்ந்துபோகுமாம். அந்த பைஸிகிளின் சக்கரங்கள் இரண்டும், சிறு மோட்டார் வண்டிகளின் சக்கரங்களினளவு கனமா யிருக்கின்றன.

* * *

சாப்பிடும்போது ஜலம் குடித்தல்.—போஜனத்திற்குச் சற்றுநேரம் முன்பாக, சுத்தமான குளிர்ந்த ஜலத்தை ஒரு கோப்பையளவு உட்கொண்டால், அது இரைப்பைக்கு பலகாரியாக வேலை செய்கிறது; விஷமமான பசியினாலேற்படும் குடலின் அழற்சியை உடனே தணியச்செய்கிறது. அமிதபோஜனம் செய்வதற்கான அவாவைக் குறைக்கின்றது. போஜனம் செய்துவருகையில், ஜலத்தை மிக்கச் சொற்பமாய்ப் பானம் செய்வதோ அல்லது முற்றிலும் ஜலத்தைப் பானம் செய்யாமலிருப்பதோ நலம்.

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

20 JUN 1922
MADRAS

தொகுதி XIV | துன்மதிஸ்ரீ மாசிமீ :: 1922-ம்ஸ்ரீ மார்ச்மீ | பகுதி ௯

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

ஒருவரையு மொருவரறி யாம லுந்திரிந்
திருவினையி னிடர்கலியொ டாடிநொந் துநொந்
தலையிலிடு மெழுகதென வாடி முன்செய்வஞ்
சனையாலே

ஒளிபெறவெ யெழுபுமர பாவை துன்றிடுங்
கயிறவித மெனமருவி யாடி விண்பறிந்
தொளிருமின லுருவதென வோடி யங்கம் வெந்
திடுவேனைக்

கருதியொரு பரமபொரு ளீது என்றுளன்
செவியிணையி னருளியுரு வாகி வந்த என்
கருவினையொ டருமலமும் நீறு கண்டுதண்
டருமாமென்

கருணைபொழி கமலமுக மாறு மிந்துளந்
தொடைமகுட முடியுமொளிர் நூபு ரஞ்சரண்
கலகலென மயிலின்மிசை யேறி வந்துகந்
தெனையாள்வாய் !

திரிபுரமு மதனுடலும் நீறு கண்டவன்
தருணமழ விடையுடைய ராஜ னெங்களுந்
திகழருண கிரிசொருப ஜோதி யந்தமங்
கறியாத

சிவயநம நமசிவய கார ணஞ்சுரந்
தமுதமதை யருளியெமை யாளு மெந்தைதன்
திருவுருவின் மகிழெனது தாய் படைத்திடும்
புதல்வோனே !

குருகுகொடி யுடன்மயிலி லேறி மந்தரம்
புவனகிரி சுழலமறை யாயி ரங்களும்
குமரகுரு வெனவலிய சேட னஞ்சவந்
திடுவோனே !

குறமகளி னிடைதுவள பாத செஞ்சிலம்
பொலியவொரு சசிமகளொ டேக லந்துதிண்
குருமலையின் மருவுகுரு நாத வும்பர்தம்
பெருமாளே !

தேவர்களைப் பெரிதும் துன்புறுத்திவந்த திரிபுரர் என்னும் அசுரர்களது நகரங்களான திரிபுரங்களைத் தமது சிரிப்பினாலும், சூரபதுமனால் துன்புறுத்தப்பட்ட தேவர்களால் தூண்டப்பட்டுத் தமது நிஷ்டையைக் கலைத்துத் தம்மைக் காமமுறச் செய்யவெண்ணித் தம்மீது புஷ்ப பாணங்களை எய்யத்துணிந்த மன்மதனது உடலைத் தமது நெற்றிக்கண் பார்வையினாலும், எரித்துச் சாம்பராக்கியவரும், மிகவும் இளமைபொருந்திய இடபத்தைத் தமது வாகனமாகக் கொண்டவரும், அண்டமெங்கும் ஒளிவீசிய சோதிப்பிழம்பாயாகி, அது கண்டு மோகம் நீங்கிய பிரமவிஷ்ணுக்களின் வேண்டுகோளுக்கிரங்கி திருவருணாசலமாகிய சிவலிங்கமாக மாறி நின்றவரும், ஆதியந்தமற்றவராய் சகல அண்டங்களுக்கும் காரணராய் நமசிவாய என்னும் பஞ்சாட்சரத்தில் பொருந்தி நிற்பவரும், திருவருள் மேலீட்டினால் பேரானந்தமாகிய அமுதத்தை அடியார்களுக்கு ஊட்டி யாட்கொள்பவரும், அகிலாண்டங்களுமளித்த எமது தந்தையுமாகிய சிவபெருமானது செவ்வானம்போற் சிவந்த திருமேனியின் திவ்ய சௌந்தரியத்தைக் கண்டு மகிழும் எமது தாயாராகிய பார்வதி தேவியார் உலகமுய்யும் பொருட்டுப் பெற்றருளிய புதல்வோனே! சிவபெருமானது திருக்கரத்திலிருந்த மாதுளங்கனியைப் பெறுவதற்காக விநாயகக்கடவுளுக்கு முன் உலகப் பிரதட்சணஞ்செய்து திரும்பவேண்டுமென்ற நோக்கத்துடன் சேவற்கொடியுடன் மயிலின்மீதேறி சலனமற்ற மகாபருவதங்களான மந்தரகிரியும் சக்கரவாள பருவதமும் சுழலவும் ஆயிரம் சாகைகளையுடைய வேதங்கள் பரமேசுவரன் அளித்த குமாரனான ஞானதேசிகன் வந்தான் என்று கோஷிக்கவும் வன்மைமிக்க ஆதிசேஷன் அஞ்சிநடுங்கவும் மிகுவும் உக்கிரமான வேகத்துடன் வந்தவனே! துவதுவர் குலத்திலுதித்த மின்னற்கொடி கருவுறயு, இடையையுடைய வள்ளிநாயகியுடனும், குற்றதனர்கள் வாழ

(இதன் தொடர்ச்சி 296-ம் பக்

விவேக போதினி

தொ.14] துன்மதி௵ : : மாசி௴ [ப. 9

கந்த புராணம்

SKANDA PURANAM

"கடகம் என்னும் நகரத்தில் குச்சகமுனிவர் என்னும் தவசிரேஷ்டர் ஒருவர் இருந்தார். அவருக்கு கவுச்சிக ரென்னும் பெயர்வாய்ந்த ஒரு சற்புத்திரர் இருந்தார். அக்கவுச்சிகர் அரிய வேதங்களைப் பயின்று எல்லை காணவொண்ணாத பவசாகரத்தைக் கடக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் ஒரு தடாகத்தின் கரையில் ஒரு மூலையில் பசுவின்கூட்டங்கள் உரைவதற்குரிய தம்பத்தைப்போல அசைவற்றுநின்று ஒருமைமனத்தராய் சிவபெருமானது பஞ்சாக்ஷரங்களை அன்புடன் உச்சரித்துக்கொண்டு நெடுநாள் அருந்தவமியற்றினார். அவர் அவ்வாறு தவமியற்றுகையில், மிருகங்கள் தமது மெய்யிலுண்டாகும் கண்டூயத்தை (தினவை) நீக்கிக்கொள்வதற்காக அவரது தேகத்தில் உராய்ந்துகொண்டு செல்லும். ஆயினும்அவர் தமதுநிஷ்டை கலையாமல் தம்பம்போல்நின்று தவமியற்றிவந்தார். அதுகண்ட திருமால் மிகவும் வியப்புற்று தேவர்களை யழைத்துக் கொண்டு அம்முனிவரெதிரிற் சென்று, ஒளி வீசும் அவரது தேகத்தைத் தமது கரத்தினால் தடவிக்கொடுத்து, மிருககண்டூயன் என்னும் ...காரணப்பெயரளித்து, "உனது முந்தை வினை குழுவைத்தும் ஒழிக! பிறைச்சடையண்ணலின் ...ா கடாக்ஷம் நினக்குக் கிடைப்பதாக!"

தேங்கா... அன்புடன் திருவாய்மலர்ந்தருளி, காவுக்குச் | ச... ...ன் அவ்விடம்விட் டகன்றார். தென்கடலி ல... ...ச்சிகரும் அவ்விடம்விட்டு நீங்கித் தான் மூக்கி... ...யை யடைந்து, அவரது பாதங் தீவுகளில் எச...

களில் வீழ்ந்து நமஸ்கரித்து, தமக்கு நிகழ்ந்தவைகளைக் கூறினார். அவைகளைக் கேட்ட குச்சிகர் மிகவும் மனமகிழ்ந்து, தமது புதல்வனைப் புகழ்ந்து, இல்லறமார்க்கத்திற் சில நாள் நின்று வம்சத்தை விருத்திசெய்யும்படி வேண்டினார். கவுச்சிகர் முதன் முதலில் அவருடைய வேண்டுகோளுக்கு இயையாமலிருந்து, பிறகு தமது தந்தைசொல்லிய நீதி வசனங்களைக் கேட்டு அவர் சொல்லியவை மெய்யென வுணர்ந்து இல்லற நெறியைத் தழுவச் சம்மதித்து, குற்றமற்ற பெண்ணொருத்தியைத் தேடிக் கொணரும்படி தமது தந்தையை வேண்டிக்கொண்டார்.

பிறகு குச்சகமுனிவர் தம்மைக் காணவந்த சில முனிவர்களை விசாரித்து, சோழதேசத்தில் அநாமயமென்னும் திவ்விய வனத்தில் வசித்துவந்த உசத்திய முனிவரிடத்தில் சகல குணங்களும் பொருந்தப்பெற்று வழுவற்றவளாயுள்ள ஒருபெண் இருப்பதாகத் தெரிந்துகொண்டு, அவர் ஆசிரமத்துக்குச் சென்று, "உமது புதல்வியை எனது ஒரே குமாரனுக்கு மணஞ்செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள வந்தேன்" என்று அம்முனிவரிடம் தெரிவித்தார்.

அதுகேட்ட உசத்தியமுனிவர், "நல்லொழுக்கத்தின் அவதாரமான உமது புதல்வனுக்கு என் மகள் விருத்தையை மணஞ்செய்துகொடுக்கும் பாக்கியத்தைப் பெற நான் முன் செய்த சிறந்த தவம் யாதோ!" என மனமகிழ்ச்சியுடன் கூறி, கவுச்சிகருக்குத் தமது புதல்வியை மணஞ்செய்து கொடுக்க இசைந்தார். பிறகு அம்முனிவரது வேண்டுகோளுக்கிசைந்து குச்சிகமுனிவர் ஆங்கே சில நாள் தங்கியிருந்தார். அப்படியிருக்க ஒரு நாள் விருத்தையானவள் தனது தோழிமார்களுடன் ஒரு தடாகத்துக்கு நீராடச் சென்று அங்குள்ள செடிகளிலிருந்து புஷ்பங்களைக் கொய்து மாலையாகத் தொடுத்து அதை யணிந்துகொண்டு விளையாடிக்கொண்டிருந்தாள். அச்சமயத்தில் மலைபோன்ற மத யானையொன்று மதநீர் ஆறாய்ப்பெருக மகா கோபத்துடன் இடிபோல் கனைத்துக்கொண்டு வெகு வேகமாய் இவர்களிருக்கு மிடத்தை நோக்கிவந்தது. விருத்தையின் தோழிகள் நேர்ந்த வழிகளிலோடி ஒளித்துக்கொண்டார்

கள். விருத்தையும் நடுநடுங்கி ஒருபுறமாக ஓட, வழியில் புல் அடர்த்தியாக வளர்ந்து மூடிக்கொண்டிருந்த ஆழமான கிணற்றில் விழுந்து இறந்தாள்.

அம்மதயானை அவ்விடம்விட்டு நீங்கியபின் தோழிகள் விருத்தையைத்தேடிக் காணாமல் மனம்வெதும்பி, அவள் தாய்தந்தையரிடம் அச்சங்கதியைத் தெரிவிக்க, அவர்கள் தடாகத்தைச் சுற்றிலும் தேடி அவள் ஆபரணங்கள் சிந்திக்கிடந்ததை அடையாளமாகக் கொண்டு அவ்வழியே போய்ப் பாழுங்கிணற்றில் தங்கள் அருமைப் புதல்வி இறந்து கிடந்ததைக்கண்டு, மிகுந்த துயரத்துடன் புலம்பத் தொடங்கினர். அப்போது குச்சகமுனிவர், தாம் அவர்கள் பெண்ணை உயிர்ப்பித்துத் தருவதாகக்கூறி அவர்களைத் தேற்றி, அத்தடாகத்தில் மூழ்கி இயமதருமராஜனை நோக்கித் தவம் புரிந்து அவனருள் பெறவே, விருத்தை தூங்கி விழித்தவளைப்போல எழுந்திருந்தாள். பிறகு உசத்தியமுனிவர் விருத்தையை அவளது உயிரைமீட்ட குச்சகரது புதல்வனாகிய கவுச்சிகருக்கு மணஞ்செய்து கொடுத்தார். அவர்களை ஆசீர்வதித்துவிட்டுக் குச்சகமுனிவர் வட திசையை நோக்கித் தவஞ்செய்யச் சென்றார்.

மகாவிஷ்ணுவினால் மிருககண்டூயன் என்னும் புகழ்பெற்ற திருநாமம் அளிக்கப்பெற்ற கவுச்சிகமுனிவரது தபோபலத்தினாலும் விருத்தையின் விரதானுஷ்டானங்களினாலும் அவர்களுக்கு ஒரு சற்புத்திரன் பிறக்க, அவர்கள் அவனுக்கு மிருகண்டு என்னுந் திருநாமமிட்டனர். அப்புதல்வனுக்கு ஆறுவயதானவுடனே கவுச்சிகமுனிவர் அவனுக்கு முறைப்படி உபநயனஞ் செய்வித்து, பிறகு தவஞ்செய்யச் சென்றார். மிருகண்டு என்னும் அப்புதல்வன் பிரமசாரி யாசிரமத்தை யனுஷ்டித்துப் பிறகு முற்கலமுனிவரது புதல்வியும் சகல கலைகளையும் ஓதியுணர்ந்தவளுமான மருத்துவதி யென்பவளை மணந்துகொண்டு இல்லற மார்க்கத்தில் நின்று, அநாமயமென்னும் தபோவனத்திற் சிலநாள் தவமியற்றி, புத்திரப்பேறின்மையால் வருந்தி, தனது மனைவி, பந்துக்கள் முதலாயினோர்களுடன் காசிக்ஷேத்திரத்துக்குச் சென்றான்.

மிருகண்டு என்பவன் அந்த க்ஷேத்திரத்தையடைந்து சிவபெருமானுடைய திருவாலயத்துட் சென்று வலம்வந்து வணங்கித் துதித்து, அக்கோவிலினருகில் சிவபெருமானைப் பிரதிஷ்டைசெய்து பூசித்து அரியதவம் இயற்றினான்.

அவ்வாறு மிருகண்டு முனிவர் ஒருவருஷ காலம் தவமியற்றியபின், திரிபுரங்களை யெரித்தருளிய சிவபெருமான் கருணை கூர்ந்து அவர் முன்னே தோன்ற, மிருகண்டு முனிவர் பெருமகிழ்ச்சியுடன் எம்பெருமானை வணங்கித் துதித்தார். அப்போது எம்பெருமான், "அப்பா! உன் மனத்தில் எதனை விரும்பி இவ்வருந் தவம் செய்தாய்?" என்று வினவியருள, அம்முனிவர், "எம்பெருமானே! அடியேன் புதல்வனை விரும்பித் தவஞ் செய்தேன். அடியேனுக்குப் புத்திரப் பேற்றை யளித்தருளவேண்டும்" எனப் பிரார்த்தித்தார்.

அதுகேட்டு எம்பெருமான் புன்னகை கொண்டு, "மாதவ! கொடியகுணமே மிகுந்து சிறிதும் மெய்யுணர்வில்லாமல் ஊமையாயும் செவிடனாயும் முடவனாயும் நோயினாற் பீடிக்கப்பட்டவனாயும் நூறு வயது ஆயுள்காலமுடையவனாயும் உள்ள புதல்வனைத் தரவா? அல்லது, பேரழகு வாய்ந்து ஊனமென்பதேயில்லாத வடிவமுடையவனாயும், நோயற்றவனாயும், சகலகலைகளும் வல்லவனாயும், எம்மிடத்தில் அன்பு பூண்டவனாயும், பதினாறுவயதே ஆயுட்கால முடையவனாயுமுள்ள ஒரு சற்புத்திரனைத் தரவோ? உனது விருப்பமென்னவென்றுசொல்!" என்று திருவாய்மலர்ந் தருளினார். அம்மொழிகளைக் கேட்டு மிருகண்டு முனிவர் சிறிதுநேரம் ஆலோசித்து, "இறைவனே! அற்ப ஆயுளுடையவனா யிருந்தாலும், அறிவுள்ளவனாயும், அங்கஹீன மில்லாதவனாயும், எம்பெருமானிடத்து அன்பு பூண்டவனாயுமுள்ள புதல்வனையே பெறவிரும்புகிறேன். ஆகையினால் அத்தகைய புதல்வனையே தந்தருளவேண்டும்" என்று கூறினார். முக்கண்ணெந்தையும் "அவ்வாறே யாகுக!" என்று திருவாய்மலர்ந் தருளி மறைந்தார்.

அவ்வாறு ஆதிமுதல்வராகிய சிவபெருமான் வரங்கொடுத்துச் சிலகாலம் கழிந்தபின், மிருகண்டு முனிவரது மனைவியாகிய மருத்துவதியம்மையார் சர்வேசுவரனருளினால் கருவுற்று, உலகத்திலுள்ள துன்பம் நீங்கவும், குற்றமற்ற தருமம் வளரவும், தபோதனர்கள் வாழ

வும், வேதங்களைத் தழுவிய சமயமான சைவ சமயம் பெருகவும், 'விதியை வெல்லவே முடியாது'என்று தவறான எண்ணங்கொண்டு அகங்காரங்கொண்ட இயமதர்மராஜன் மாளவும், சுபதினத்தில் ஓர் சற்புத்திரனைப் பயந்தருளினார். அப்புத்திரன் பூமியில் அவதரித்தவுடன் தேவதுந்துபிகள் முழங்கின; மும்மூர்த்திகளைத் தவிர ஏனைய தேவர்கள் யாவரும் வந்து அக்குழந்தையை ஆசீர்வதித்தனர்; யாது காரணமென்று உணராமலே உலகமுழுதும் பெருங்களிப்புற்றது; மிருகண்டு முனிவர் பல தானங்களைச் செய்தார்; பிரமதேவரே நேரில் வந்து அப்புதல்வனுக்கு மார்க்கண்டன் என்ற திருநாமம் அளித்தார்.

மார்க்கண்டனுக்கு ஐந்து வயது நிரம்பியவுடன், மிருகண்டு முனிவர் அவருக்கு உபநயனம் செய்வித்து, ஓதத்தக்க கலைகளையெல்லாம் ஓதுவித்தார். மார்க்கண்டன் அவைகளையெல்லாம் ஓதி, வேதங்களிலும் ஏனைய நூல்களிலும் அடங்கிய மெய்ப்பொருளை உணர்ந்து, யாவற்றினும் மேலானதாயும் சகல அண்டங்களுக்கும் ஆதிகாரணமானதாயும் உள்ள பொருள், சிவபெருமானே யெனத் துணிந்து, அவரது திருவடித் தாமரைகளையே தனக்குப் புகலிடமாகக் கொண்டு, சிவபெருமானை முதலில் வணங்கி, பிறகு அவரது அடியார்களையும், ஆசாரியரையும், தவத்திற் சிறந்த முனிவர்களையும், பெற்றோர்களையும் முறைப்படி வணங்கி பிரமசரிய நெறியில் ஒழுகிவந்தார்.

அப்படியிருக்கையில், மார்க்கண்டனுக்கு வயது பதினாறாயிற்று. அதுகண்டு அவனது தாய்தந்தையர்களிருவரும் தனித்தனியேயிருந்து இடைவிடாது துயர்க்கடலில் மூழ்கி வருந்தினார்கள். அங்ஙனம் அவர்கள் வருந்தியதைக் கண்ணுற்ற மார்க்கண்டன் அவர்கள் வருத்தத்துக்குக் காரண மின்னதென்று அறியமாட்டாதவனாய், அவர்களை, "நானறியாமல் உங்களுக்குற்ற அவகேடு யாது?" என்று வினவினான்.

அப்போது அவர் தந்தை, "கண்மணி! ஆதிகாலத்தில் இடபவாகனராகிய சிவபெருமான் உன்னை எங்களுக்கு அளித்தபோது, உனக்கு வயது பதினாறாயினவுடன் உன் ஆயுள்முடிவுமெனத் தெரிவித்தார். இப்போது உனக்கு வயது பதினாறாகிறது. உன்னை யிழக்கவேண்டுமே யென்று வருந்துகிறோம்" என்றார். அதுகேட்ட மார்க்கண்டன், "நீங்கள் இதைக் குறித்து வருந்தவேண்டாம். நான் சென்று உயிர்க்குயிராய் நின்று, என்றும் அழியாது நிலைபெற்றிருக்கும் சிவபெருமானைத் துதித்து அருச்சனை செய்து அவனதருள் பெற்று இயமனது வல்லமையை வென்று சீக்கிரம் உங்களிடம் திரும்பிவருகிறேன்" என்று சொல்லி அவர்களைத் தேற்றிவிட்டு, அழகிய மணிகர்ணிகையை யடைந்து அங்குள்ள செம்பொன் கோயிலுக்குட் பிரவேசித்து, பிரதக்ஷணஞ் செய்து எம்பெருமானை வணங்கி, பிறகு திருக்கோவிலின் தென்புறத்தில் ஓரிடத்தில் சிவப்பிரதிஷ்டை செய்து, அநேகநாள் அருச்சித்துத் துதித்து அருந்தவமியற்றினான். பிறகு எம்பெருமான் அவனுடைய தவத்துக் குவந்து அவன்முன் தோன்றி, "குழந்தாய்! பூசையுடன் குற்றமற்ற தவம் இயற்றினாய்! அதுகண்டு நாம் மிகவும் மகிழ்ந்தோம்! நீ விரும்பியதை யுரைப்பாயாக!" என்று திருவாய்மலர்ந்தருளினார்.

அப்போது மார்க்கண்டன், "ஐயனே! நின்மலனே! எல்லாமாகிய மெய்ப்பொருளே! பரமனே! விமலனே! செந்தழலைக் கையிலேந்தியவனே! அடியேன் இயமன் கையிலகப்படாமல் பிழைத்துப் போகும்படி தேவரீர் என் மரணத்தருவாயில் வந்து என்னைக் காத்தருள வேண்டும்" என்று சொல்லிப் பிரார்த்திக்க, எம்பெருமான், "குழந்தாய்! நீ இயமனுக்கு அஞ்சாதே! அஞ்சாதே!" என்று கூறி, தமது திருவடிகளை அவன் தலைமீது சூட்டியருளினார். மார்க்கண்டன், "இனி உய்ந்தேன்! உய்ந்தேன்!" என்று கூற, எம்பெருமான் மறைந்தருளினார்.

மார்க்கண்டனுக்குப் பதினாறாவது வயது நிரம்பிற்று. உடனே பெரிய கரிய மேகம் போன்ற ஒரு இயமதூதன் மார்க்கண்டனுள்ளவிடத்துக்கு வெகு விரைவாய் வந்து, முன்னாளில் திரிபுரத்தை யெரித்தருளிய சிவபெருமானது திருவடித் தாமரைகளை மார்க்கண்டன் மெய்யன்புடன் பூசித்து வந்ததைக்கண்டு, அவனை யணுகுவதற்கு அச்சமுற்றுத் திரும்பிச்சென்று இயமனது பாதங்களை வணங்கி, "ஐயனே! செவ்வானம் போன்ற திருமேனியையுடைய சிவபெருமானிடத்திற் பொருந்திய சிந்தையுடையவனையும், அவரது பாதத் தாமரைகள் தன் தலைமீது சூட்டப் பெற்றவனையும், சந்ததமும் அவன் புகழையே வோதும் விரதத்தை யனுஷ்டிப்பவனையும், ஈசனை எப்போதும் அருச்சிப்பவனையும், தூய்மையான மனமுடையவனையும், மெய்ஞ்ஞான முடையவனையும், மார்க்கண்டன் என்ற சிறந்த நாமம் பூண்டு கீர்த்திபெற்று விளங்குபவனையுமுள்ள ஒரு பிராமணன் காசியிலிருக்கிறான். அவனையணுகஎன்மனம் நடுங்குகிறது. அவனெதிரிலும் என்னால் செல்லமுடியாது" என்று கூறினான்.

அதுகேட்டு இயமன் வெகுண்டு, "அச்சிறுவன் அழிவில்லாத இறைவனோ? நீ அஞ்சியது அழகாயிருக்கிறது. நமது கருணீகரை அழைத்துவா!" என்று சீறினான். தூதன் சென்று சித்திரகுத்தரென்னும் இருகணக்கர்களையும் அழைத்துவர, இயமன் அவர்களை நோக்கி, "சிவபெருமானை அருச்சித்துத் துதித்துவரும் மார்க்கண்டனுடைய ஆயுள் முடிவு காலம் எதுவென்று சொல்லுங்கள்!" எனப் பணித்தான்.

அப்போது அவர்கள் தங்கள் கணக்குகளைப் பார்வையிட்டு, "ஐயனே! சிவபெருமான் ஆதியில் இவனுக்குப் பதினாறு வயதென விதித்தார். அவ்வயது முடிந்துவிட்டது. முதிர்ந்த தவமுடைய முனிவராயினும், நிகரற்றசெல்வமுடையவராயினும், மெய்ஞ்ஞானிகளாயினும், மிகுந்த வல்லமைபொருந்தியவராயினும், யார்தாம் விதியை வெல்ல வல்லவர்கள்? ஆகையினால் இவன் உயிரிழக்க வேண்டியவன்தான். ஆனால் இவன் தான் செய்த புண்ணியத்தின் பலனாக நரக அனுபவ மொழியப்பெற்று தேவலோகத்தை அடையவேண்டியவனாயினான்" என்று தெரிவித்தார்கள்.

பிறகு இயமன் தனது மந்திரியாகிய காலனை யழைத்து, மார்க்கண்டன் உயிரைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். உடனே காலன் புறப்பட்டுக் காசிப்பதியை யடைந்து மார்க்கண்டன் சிவாராதனை செய்ததைக்கண்டு அவனை வலிதிற் பிடித்திழுக்க அஞ்சி, அவனெதிரிற் சென்று வணங்கினான். மார்க்கண்டன் அவனைக்கண்டு "நீ யார்?" என்று வினவ, காலன், "ஐயனே! யான் எல்லா வுலகங்களிலுமுள்ள உயிர்களைச் சங்கரிக்கிற அதிகாரத்தினையுடைய இயமனது பாதங்களை வணங்கும் அடிமை. நான் இங்குவந்த காரணம் யாதெனில், உமக்குச் சிவபெருமான் அளித்தருளிய ஆயுள் முடிவுபெற்ற தாகையினால், நீர் இயமலோகத்துக்கு வரவேண்டும். இது எவராலும் விலக்கக் கூடியதன்று. சிருஷ்டி, ஸ்திதி என்னும் தொழில்களைப் போலவே சங்காரத் தொழிலும் நஞ்சுண்ட கண்டனாகிய எம்பெருமானருளிய பணியாகும். ஆதலால் நான் உம்மை யழைக்கிறேன். அன்றியும், அமலன் பாதமலர்களை நீர் மெய்யன்புடன் அருச்சிப்பதைப்பற்றி பலரும் புகழ்ந்து பேசுவதைக்கேட்ட தென்றிசைக் கடவுள் உம்மைப் பார்க்க ஆவலுள்ளவராயிருக்கிறார். இயமதருமராஜன் சங்காரத்தொழிலை நடத்துவதனால் அவரை அவிவேகிகள் கொடியனென்று கூறுவார்கள். ஆனால் அவர் ஜீவகோடிகள் செய்யும் பாவபுண்ணியங்களை ஆராய்ந்து ஆயுள்முடிவில் அவைகளுக்குத்தக்க பலனைத் தருவதனால் விவேகிகள் அவரை நடுவன் என்று உரைப்பார்கள். நீர் இயமலோகத்துக்கு வருவீராயின், இயமதருமராஜன் உம்மை எதிர்கொண்டுவந்து வணங்கித் துதித்து, உமக்கு இந்திரபதவியைத் தருவார். ஆகையினால் சிறிதும் கவலையின்றி வரலாம்" என்றான்.

அம்மொழிகளைக் கேட்ட மார்க்கண்டன், "சந்திரசேகரராகிய சிவபெருமானைத் துதிக்கின்ற அன்பர்கள் இந்திரவுலகத்துப் போக இச்சைப்படவு மாட்டார்கள், உன்னுடன் இயமலோகத்துக்குவர இசையவு மாட்டார்கள். யாவற்றினு முயர்ந்த சிவலோகத்துக்குத்தான் அவர்கள் சென்று வாழ்வார்கள். யான் சிவபெருமானடியார்களுக்கு அடியவன்; ஆதலால், அந்தகனுலகத்துக்கு வரமாட்டேன்; பிரமவிஷ்ணுக்களுடைய பதவியையும் அடைய விரும்பேன்; சீக்கிரம் இவ்விடம் விட்டுப் போய்விடு!" என்றுரைத்தார். காலனும் மறுமொழி புகலாது அவ்விடம்விட்டகன்று, இயமபுரத்துக்குச் சென்று இயமனது பாதங்களை வணங்கி, நடந்தவைகளையெல்லாம் கூறினான்.

காலன் கூறியதைக்கேட்ட இயமன் கடுஞ்சினங்கொண்டு மனம் பதைக்க உடல்வியர்க்க கண்கள் தீப்பொறிசிந்த, தனது எருமைக்

பொறுத்தார் அரசாளவார் பொங்கினார் காடாள்வார்.

வும், வேதங்களைத் தனது பரிவாரங்கள் தன் சமயம் பெருகா காசிப்பதிக்குச் சென்று, யாது'என்றுக்கு முன்னே, சிவத்த தலைமயிர்காரங்', கருமுகில் போன்ற உருவத்துட னும், கோபத்தினால் ஜ்வலிக்கும் கண்களுடனும், பாசம், தண்டம், சூலம் இவைகளை ஏந்திய கரங்களுடனும் தோன்றினான். அவனைக் கண்ட மார்க்கண்டன் இயமனே நேரில் வந்தான் போலும் என்றெண்ணி, அவன் செய்கையைக் கவனித்தவனாய், எந்தையின் பாதாரவிந்தங்களைத் துதித்து வணங்கினான்.

அப்போது இயமதருமராஜன் மார்க்கண்டனை நோக்கி, "குழந்தாய்! நீ என்ன எண்ணம் கொண்டாய்? என்ன காரியம் செய்தாய்? பிரமன் நின் தலையிலெழுதிய விதியையும் முக்கண்ணனது கூறியருளின வசனத்தையும் அழித்துவிடமுடியுமோ? விதியின் வலிமையை நீ சற்றும் உணரவில்லை போலும்! சனன மரணம் என்பவைகளை யாவரும் அடைவார்கள். மாதவம் செய்த பெரியோர்களாலும் தடுத்துக்கொள்ளமுடியாத சனனமரணங்களை உன்னால் தடுக்கமுடியுமென்று நீ எண்ணுவது உன் விவேகத்துக் கழகன்று. நீ ஈசனுடைய பாதமலர்களின்மீது உள்ளன்புடன் மலர்கள் தூவி அருச்சித்துத் துதித்து வணங்குவது நினது பாவங்களைப் போக்குமே யன்றி நான் வீசும் பாசத்தைத் தடுக்கும் வல்லமையுடையதன்று. என் பாசத்தினால் உயிரிழந்த தேவர்களையும், அசுரர்களையும் மற்ற ஜீவராசிகளையும் கணக்கிடமுடியாது. பிரமனுக்கும் திருமாலுக்கும் எனக்குங்கூட பிறப்பிறப்புக்கள் உண்டென்றால், உனக்கும் அவைகள் உண்டென்று சொல்லுவானேன்? நான் மணம் பொருந்திய சிறந்த புஷ்பங்களினால் ஈசனது பாதமலர்களை அருச்சித்து வணங்கினேனாகையினால்தான் ஈசனார் எனக்கு சங்கரிக்கும் அதிகாரமுள்ள அரசையும்,சூலம்,பாசம்,மழு, தண்டம் என்னும் ஆயுதங்களையும் எனக்கு அளித்தருளினார். ஆகையினால்தேவர்கள் வந்து உன்னை இரக்ஷிக்க முயன்றாலும், சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்னும் தொழில்களைச் செய்யும் திரிமூர்த்திகளே வந்து உன்னை இரக்ஷிக்க முயன்றாலும், அவர்களினும்பெருவலியுடைய வேறு யார் வந்து உன்னை இரக்ஷிக்க முயன்றாலும், உன் னுயிரைக் கொண்டுபோகாமல் என்னுலகத்துக்கு மீண்டு செல்லமாட்டேன். நான் இவ்வாறு சொல்வதனால் வருத்தப்படவேண்டாம். சூலபாணியாகிய சிவபெருமானது அடியார்களாயிருந்தாலும், அவர்களுக்கு ஆயுள்முடியுங் காலத்தில் அவர்களைத் தென்றிசையிலுள்ள என்னுலகத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பேன். ஆகையினால் தாமதமின்றிப் புறப்பட்டு என்னுடன் வருவாயாக!" என்று புத்திகூறினான்.

அதற்கு மார்க்கண்டன், "இயமதருமராஜனே! ஓர் உண்மையைச் சொல்லுகிறேன்; கேட்டுத் தெரிந்துகொள்! முக்கண்ணனையின் மெய்யன்பர்களுக்கு மரண மென்பதே கிடையாது. அப்படி யொருக்கால் அவர்களுக்கு மரணம் சம்பவித்தாலும், அவர்கள் திருக்கைலாயத்துக்குச் செல்லுவாரேயன்றி நின்னுலகத்துக்கு வரமாட்டார்கள். அவர்கள் தூயதவம் செய்யும் முனிவர்களாயினும், இல்லற மார்க்கத்தில் நின்றொழுகுபவ ராயினும் கன்மாகிதமான முத்தியின்பத்தை 'யடைவார்கள். அவர்கள் பிறப்பை யொழித்தவர்கள். அவர்களது பாதஞ் சேர்தல் மோக்ஷவீட்டை யடைவதற்குச் சமானமாகும். அவர்கள் எம்பெருமானையன்றிவேறெவரையும் மதிக்கமாட்டார்கள். சிவபெருமானையும் அவரது அடியார்களையும் வேறுபடுத்திப் பேசுதல் பேதைமையென்று வேதங்களிற் கூறப்பட்டுள்ள மெய்ம்மொழி என்றும் பொய்க்காது. நல்ல எண்ணங்களையே மனத்தினில் நிரப்பியவராய், சிறந்த குணங்களும் ஒழுக்கமுமுடையவராய், கோபம் முதலிய கொடியகுணங்களை யகற்றி விளங்குபவராய், அகங்காரத்தையும் ஒழித்தவராயுள்ளவர் மரணமடையாமலே இவ்வுலகத்திலேயே பேரின்பமடைவார்கள். அவர்கள் எக்காலத்திலும் துக்கப்படமாட்டார்கள்; நல்ல காரியங்களையே இயல்பாக நாடுவார்கள்; பேரின்பத்தையே யன்றி நிலையில்லாத அற்பப்பொருள்களை விரும்பமாட்டார்கள்; அவர்களுடைய தன்மையை எடுத்துரைக்க வல்லவர்யாவர்? அவர்களது தன்மையை அறியாதவனாய், அவர்களைச் சாதாரண மாநிடராய் எண்ணியவனாய், அவர்களடித் தொண்டனாகிய என் ஆவிகுத் தீங்கு செய்ய நினைத்தாய்! இவையெல்லாம் உன் ஆவிக்கும் உன் அதிகாரத்துக்கும் கேட்டை விளைவிக்குமென்பது திண்ணம். தீய வச

னங்களை என் செவி கேட்கப் புகன்ற பேதாய்! நீ இங்கு நிற்பது தகுதியல்ல; நில்லாமற் போய்விடு!" என்று கூறினார்.

அம்மொழிகளைக்கேட்ட இயமன் உக்கிரமான கோபங்கொண்டு, இடிமுழக்கத்தைப் போலக் கர்ச்சித்து, மார்க்கண்டன் எதிரிற் சென்று தன் கையிலுள்ள பாசத்தை அவன் மீது வீசி யிழுத்தான். அப்போது எம்பெருமான் திருவடி நிழலைவிட்டுப் பிரியாதிருந்த மார்க்கண்டனுக்கு முன் எம்பெருமான் தோன்றி, "குழந்தாய்! நீ எதற்கும் அஞ்சாதே! உன் துன்பத்தை யகற்றுகிறேன்!" என்று அஞ்சல்கூறி, பிறகு இயமன் அச்சிறுவனுயிரை வாங்கப் பதைத்தான், அதற்கு அவன் அகங்காரமே காரணமென வெண்ணிக் கோபமுற்று, தமது இடது சேவடியைத் தூக்கி இயமனை மெல்ல உதைத்தார்; உடனே இயமன் கார்முகில்போல் பூமியின்மீது வீழ்ந்தான். அவன் விழுந்த ஓசையைக்கேட்டு அண்டங்களெல்லாம் நடுங்கின. அவனது எருமைக்கடாவும் பரிவாரங்களும்கூட மண்ணில்வீழ்ந் திறந்தன. அப்போது, "என் ஆவி, காப்பதற்கு அரன் இருக்கையில், கூற்றுவன் என்செய்ய வல்லான்?" என்ற பழைய சமஸ்கிருத நூலிலுள்ள சந்தப்பாக்களினால் எம்பெருமானைத் துதித்துத் தனியே நின்ற மார்க்கண்டனை நோக்கி, "குழந்தாய்! நீ நம்மைத் துதித்து குற்றமற்ற பூசனை செய்து வந்தாயாகையினால், முடிவில்லாத ஆயுளை உனக்குக் கொடுத்தோம்" என்று திருவாய்மலர்ந்தருளி, எம்பெருமான் தமது திருவடிகளைப் பூசித்த மார்க்கண்டன் பிரதிஷ்டை செய்திருந்த சிவலிங்கத்தினுள் மறைந்தார். மார்க்கண்டனும் எம்பெருமானது திருவுருவத்தை அன்பொடு தியானித்துக் கொண்டே மணிகர்ணிகையிலுள்ள கோயிலுக்குட் சென்று எம்பெருமானது திருவடிகளை வணங்கிப் பிறகு தன் தாய்தந்தையர்களிடம் சென்று அவர்களை வணங்கி அவர்கள் மனத்திலுள்ள துயரத்தை யகற்றினான்.

இயமன் அழிந்து போகவே, பூமியிலுள்ள ஜீவராசிகள் அழிவின்றிப் பெருகின. பூமிதேவியானவள் அவைகளின் பாரத்தைப் பொறுக்கமாட்டாமல், ஸ்திதி கர்த்தாவாகிய திருமாலின் பாதங்களில் வீழ்ந்து பணிந்து தன் துன்பத்தைத் தெரிவித்துக்கொண்டாள். உடனே திருமால் பிரமன், இந்திரன் முதலிய தேவர்களையும் அழைத்துக்கொண்டு எம்பெருமானிடஞ் சென்று, "இறைவனே! தேவரீரது திருவருட் டிறத்தை யறியாமையினால் இயமன் தனதுயிரை யிழந்தான். ஜீவராசிகள் அழிவின்றி வளர்ந்து பெருகின. அதனால் பூமகள் துன்புற்று வருந்துகிறாள். இயமன் செய்த தீமையைப் பொறுத்துக்கொண்டு, அவனை மீண்டும் உயிர்ப்பித்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

அப்போது எம்பெருமான் கருணை கூர்ந்து, "இயமனே! எழுந்திரு!" என்று திருவாய் மலர்ந்தருள, இயமன் உயிர்பெற்றெழுந்து எந்தை திருமுன்னர் வந்து வணங்கி, "தேவரீர் திருவடி அடியேன் மீது பட்டமையால், ஏழையேன் உய்ந்தேன்!" என்று கூறி, எம்பெருமானது திருவருளைத் துதித்து நின்றான். அச்சமயத்தில் எம்பெருமான் கூற்றுவனை நோக்கி, "உருத்திராக்ஷ மாலையை யணிந்து விபூதிதரித்து எம்மைத் தியானிக்கும் அடியார்களை இனி நீ அணுகாதே! அடைதற்கரிய சிவானந்தப் பேற்றைப்பெறும் எமது அடியார்களை மண்ணுலகத்தவ ரென்றும் மாநிடரென்றும் அலக்ஷியமாக எண்ணாதே! அவ்வடியார்களை யாமென்று நினைக்கக் கடவாய்! அவர்களைக் கண்ணுறும்பொழுது அவர்கள் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரிப்பாயாக! மனோவாக்குக் காயங்களினால் புண்ணிய பாவங்களைச் செய்யும் ஏனையோர்களை சுவர்க்கத்துக்கும் நரகத்துக்கும் அவரவர்கள் செய்த வினைகளுக்குத் தக்கபடி அனுப்பக்கடவாய்!" என்று திருவாய்மலர்ந்தருளி, "நின் பரிவாரங்களை மீண்டும் பெற்று நின்னுலகத்துக்கு நீ செல்வாயாக!" என்று பணித்தருளினார். தேவர்கள் யாவரும் சிவபெருமானை மும்முறை வணங்கித் திருக்கைலாயத்தினின்றும் நீங்கித் தத்தமது உறைவிடங்களுக்குச் சென்றனர்.

பாசத்தைக் கையிலேந்தியுள்ள இயமன் முன்புபோல தனக்கு இன்னும் ஏதேனும் கேடு விளையுமோவெனப் பயந்து, ஈசனது நிலையான திருவருளைப் பெற்ற மார்க்கண்டனது திவ்விய சரித்திரத்தை யுரைப்போர் முன்னேயும் செல்லுவதற்கு அஞ்சுவான்.

குச்சகமுனிவர் தமது அருமையான தவத்தினால் ஒரு பெண்ணின் உயிரைக்கூற்றுவனிடத்திலிருந்து மீட்டுக்கொடுத்தார். அவரது புதல்வரான கவுச்சிகமுனிவர் திருமால் முதலிய தேவர்கள்கண்டு வியப்புறும்படியான அருந்தவமியற்றி, மிருககண்டியென்னும் சிறப்புப் பெயரைத் திருமாலினால் அளிக்கப்பெற்றார். அவரது புதல்வரான மிருகண்டு முனிவர் தமது தபோபலத்தினால் மார்க்கண்டன் என்னும் சற்புத்திரனை விடையேறும் பெருமான் அளித்தகொடையாகப்பெற்றார். அம்மார்க்கண்டரோ நிகரற்ற தவமியற்றி யம்பெருமான் அருள்பெற்று விதியை வெல்ல எவராலும் முடியாது என்று அகங்காரங்கொண்டிருந்த இயமனது அகங்காரத்தை யழித்து, "இறைவனருளினால் விதியையும வெல்லலாம்!" என்னும் சிறந்த உண்மையை சகல ஜீவராசிகளுக்கும் எடுத்துக்காட்டி உபதேசித்து, மூப்படையாத வரம்பெற்று, தேவர்களிலும் சிறப்புற்று விளங்குகிறார்.

ஆகையினால், புதல்வர்காள்! தவமே யாவற்றினும் பெரிது. அதுவே நீங்கள் செல்லத்தக்க நெறி. அதுவே உங்களைத் துக்கமில்லாத பேரின்ப வீட்டிற் சேர்க்கும். அந்தத் தவநெறியில் நின்றொழுகுவதற்கு நீங்கள் அனுஷ்டிக்க வேண்டிய விரதங்களைச் சொல்லுகிறேன், கேளுங்கள்!" என்று காசிபமுனிவர் தமது புதல்வராகிய சூரபதுமன், சிங்கமுகன், தாரகன் என்ற அசுரர்களை நோக்கிக் கூறினார்.

காசிபமுனிவர் இவ்வாறுகூறி, அவர்கள் அனுஷ்டிக்கவேண்டிய விரதங்களை எடுத்துரைக்கத் தொடங்குகையில், மிக்க சாதுரியமுள்ள மாயை நகைத்து, "வேதங்களையுணர்ந்த முனிவரே! என்றும் உறுதியாயுள்ள உண்மையை உரைத்தீரென்பதற் கையமில்லை. ஆயின், மேலான மோக்ஷவீட்டை யடைய விரும்பும் மெய்ஞ்ஞானிகளான முனிவர்களுக்கேயன்றி நாம் பெற்ற சிறுவர்களுக்கு இந்நெறி தகுந்ததன்று. நமது புதல்வர்கள பெருஞ் செல்வத்தையும, குற்றமற்ற வெற்றியையும், சுகத்தையும், அழிவில்லாத ஆயுளையும், நிலைபெற்ற பெருங் கீர்த்தியையும், துன்பமற்ற வாழ்க்கையையும் அடையவேண்டும். அவைகளை அவர்கள் பெற்றிடும் நெறியை அவர்களுக்குத் தாங்கள் போதிக்கவேண்டும் என்றுரைத்தாள். காசிபமுனிவர், "உனதுஎண்ணம். அப்படியாயின், நீயே அவர்களுக்குத் தகுந்த நெறியைப் போதிப்பாயாக!" என்று கூறினார். அப்போது மாயை தன் புதல்வர்களை நோக்கி, "சிறுவர்காள்! இம்முனிவர் கூறியது உண்மையேயெனினும், உங்களுக்குத் தக்கதன்று. உங்களுக்குத்தக்க நெறியைச் சொல்லுகிறேன் கேளுங்கள்" என்று பின்வருமாறு ஆசாபாசங்களாற்கட்டுண்டு இருவினைகளைச்செய்து பவசாகரத்திலுழலும் நெறியைத் தெளிவாய் எடுத்துரைத்தாள்.

(289-ம் பக்கத் தொடர்ச்சி).

செம்பொற் சிலம்புகளை யணிந்துள்ள இந்திராணியின் மகளாம் தெய்வயானையுடனும் மாட்சிமை தங்கிய சுவாமிமலையின் மீது அமர்ந்துள்ள சுவாமிநாதா! தேவர்களை இரட்சித்தருளிய தேவாதிதேவா! மாயையினாற் சூழப்பட்டுள்ள காரணத்தினால் சகல ஜீவராசிகளிலும் மறைந்து நின்று ஆட்டிவைப்பவன் ஒருவனே யென்பதை யறியமாட்டாதவனாய் அல்லற்பட்டுத் திரிந்து முற்பிறப்பிற் செய்த இருவினைகளின் பயனாக இடையூறுகளும் துக்கங்களும் மிக்க உலக வாழ்க்கையை வாழ்ந்து மனம்நொந்து, முற்பிறப்புக்களிற் செய்த வஞ்சனைச் செயல்களினால் உலையிலிட்ட மெழுகைப்போல் வாடி, தன்னிடத்திற் பொருந்திய சூத்திரக்கயிற்றினால் ஆட்டிவைக்கப்பட்டு ஒளிபெற வெழும்பி நடிக்கும் மரப்பாவைபோல இருவினைப் பயனால் ஆட்டிவைக்கப்பட்டு ஆகாயத்தில்தோன்றி இமைப்பொழுதில் மறையும் மின்னற்கொடியைப்போல நிலையற்ற காயத்துடன் கணநேரம் உலகவாழ்க்கையை வாழ்ந்து அக்கணநேரத்திலேயே அதன் கொடுமையினால் அங்கம் வெந்துபோகப்பெறும் அடியேனை ஒருபொருட்டாக வெண்ணி, ஒப்பற்ற பரம்பொருள் இதுவென்று இருசெவியிலும் உரைத்தருளி, இருவினைப்பயனாக இச்சடலத்தைப்பெற்று ஜனித்த என்னுடைய பிறவி வினையையும் (மீண்டும் மீண்டும் பிறக்கும்படி செய்யும் வினையையும்) அகற்றுவதற்கரிய ஆணவம், காமியம், மாயை என்னும் மும்மலங்களையும் எரித்துச் சாம்பராக்கி, வெந்துபோன என் தேகத்தின் துன்பம் அகலுமாறு குளிர்ச்சி தரத்தக்க சிறந்த பெருங்கருணை பொழியும் செந்தாமரை போன்ற ஆறு திருவதனங்களும், கடம்பமாலை யணிந்த மகுடமுடிகளும்என் கண்களின்முன்னே தோன்றவும், பாதமலர்களிலணிந்த ஒளிவீசும் தண்டைகள் கலகலென ஒலிக்கவும், மயிலின்மீதேறிவந்து மனமகிழ்ச்சியுடன் என்னை யாளவேண்டும்.

ஜயதேவர்

JAYADEVA

ஜகந்நாதம் என்கிற திவ்யக்ஷேத்திரமொன்றுண்டு. அதற்கு அருகே துந்துபில்வம் என்றொரு கிராமம் உண்டு. அங்கொரு பிராமணரிருந்தார். அவருக்கு ஒரு புதல்வன் பிறந்தான். அவர் அப்புதல்வனுக்கு ஜயதேவர் என்று பெயரிட்டு அருமையாக வளர்த்து வந்தார். ஜயதேவர் வியாஸமகாமுனிவர் அம்சமாதலால், நாளடைவில் சகல வித்தைகளிலும் வல்லவரானார்; கலியுகத்தில் ஹரிகீர்த்தன மொன்றே பகவானுடைய திருவருளைக் கொடுப்பது என்றறிந்தார். ஆகையினால் அவர், பத்மபுராணத்திலுள்ள இராதாமாதவ விலாசம் என்பதைக் கீர்த்தனை ரூபமாகப் பாடி, அதற்குக் கீதகோவிந்தம் என்று திருப்பெயர் கொடுத்துப் பிரசுரப்படுத்தினார். அதைப் பக்திமான்கள் எல்லோரும் எழுதிவைத்துக்கொண்டு பாடம் செய்து பாடி ஸ்தோத்திரம் செய்துவந்தார்கள். பிறகு அது உலகெங்கும் பரவியது.

ஜகந்நாதத்தில் சாத்விகன் என்னும் பெயர் கொண்ட ஒரு வேந்தன் இருந்தான். அவன் ஜயதேவர் செய்த கிரந்தத்தின் மகிமையைக் கேட்டு, அதனை வாங்கிப்பார்த்து, அதைப் போலவே ஒரு கிரந்தம் செய்து, தன் ஊழியர்களைவிட்டுப் பல பிரதிகள் எழுதுவித்து, எல்லோரையும் பாடித் துதிக்கும்படி செய்தான். இப்படி அரசன் செய்ததைப் பண்டிதர்கள் அறிந்ததும், அவர்கள் அரசனிடம் போய், "நீர் செய்த நூல் ஜயதேவருடைய நூலுக்கு நேராகாது. நீர் வீணே உம்மையே புகழ்ந்து கொள்கிறீர். புத்திசாலிகளெவரும் தம்மைத் தாமே புகழ்ந்து கொள்ளமாட்டார்கள். நீர் செய்த நூலைப் படிக்கும்படி எல்லோருக்குங் கட்டளையிடுகின்றீர். கல்வியும், குருவின் உபதேசமும், இரத்தினமும், கஸ்தூரியும், கன்னிகையும் — வலிதில் விற்பதானால் மதிப்புக் குறைந்துபோகும். நீர் செய்த நூலை ஜகந்நாத ஸ்வாமி அங்கீகரிப்பது கஷ்டமாகும். ஏனென்றால், இதுகர்வத்தினாலே வெளிவந்திருக்கிறது" என்றார்கள். அரசன் "ஏன் இவ்வாறு சொல்லுகிறீர்கள்? ஜயதேவர் ஹரியின் குணங்களை வர்ணித்தது போல் நானும் அந்த ஹரியின் குணங்களையேதாம் வருணித்திருக்கிறேன். எப்படி பகவான் இதை அங்கீகரியாம லிருப்பார்? இரண்டு நூல்களையும் ஜகந்நாதருடைய ஸந்நிதியில் வைப்போம். எது பகவானுடைய அங்கீகாரம் பெறவில்லையோ அதைத் தள்ளிவிடுவோம்" என்றான். பண்டிதர்கள் "அப்படியே செய்வோம்" என்று கூறிச் சம்மதித்தார்கள். பிறகு அரசன் ஜயதேவருடைய நூலையும் வரவழைத்து ஒருநா ளிரவு பண்டிதர்களுடன் ஜகந்நாதருடைய ஆலயம்போய் இரண்டு நூல்களையும் அந்த ஸந்நிதியில் வைத்துக் கதவைப்பூட்டிக்கொண்டு வந்து மறுநாள் எல்லோருடனும் போய்க் கதவைத் திறந்து பார்த்தான். ஜயதேவருடைய நூல் பகவானுடைய சமீபத்திலிருந்தது. அரசனுடைய நூல் கீழே ஒரு பக்கம் விழுந்திருந்தது. இதைக்கண்ட எல்லோரும் அதிசயித்தார்கள். ஜயதேவரைப் புகழ்ந்தார்கள். அரசன் வெட்கமடைந்து அங்கேயே ஸந்நிதியில் நின்றுகொண்டு, "ஸ்வாமி! உமது பக்தர்கள் இருவரில் ஒருவரை ஆதரித்தீர். ஒருவரை அநாதரவு செய்தீர். ஜயதேவருடைய மனத்திலிருந்து அவரைப் பாடும்படி செய்தவரும் நீர்தாம். என் மனத்திலிருந்து பாடும்படி செய்தவரும் நீர்தாம். இப்படியிருக்க இந்த வேறுபாடு உண்டானதேன்?" என்று கேட்டான். இதைக் கேட்டதும் பகவான் அரசன்முன் தோன்றி, அவன் செய்த நூலிலிருந்து இருபத்துநான்கு சுலோகங்களை யெடுத்து ஜயதேவருடைய நூலிலே எழுதிவைத்து மறைந்தார். அரசன் இதனால் மனத்திருப்தி யடைந்து மகிழ்ந்தான்.

ஜகந்நாத க்ஷேத்திரத்தில் ஓர் அந்தணனிருந்தான். அவனுக்குப் பத்மாவதியென்ற ஒரு பெண் இருந்தாள். அப்பெண்ணை அவன் பகவானுக்கே கொடுப்பதென நிச்சயித்திருந்தான். ஆகையினால் அவனிடம் எந்தப் பிராமணன் வந்து பெண் கேட்டாலும் அவன், "என் பெண்ணை நான் பகவானுக்கே அர்ப்பணம் செய்துவிட்டேன்" என்று சொல்லி அனுப்பிக் கொண்டிருந்தான். அந்தப்பெண்ணுக்கு விவாகத்திற்குரிய வயது வந்தது. அப்பொழுது பகவான் அந்த அந்தணனுடைய கனவிலே தோன்றி, "ஜயதேவர் எனது அம்சமாகப் பிறந்தவர். அவருக்கு உன்

பெண்ணை விவாகம் செய்து கொடுத்துவிடு" என்று கட்டளையிட்டுச் சென்றார். பிறகு அந்தணன் சந்தோஷமடைந்து ஜயதேவரை வரவழைத்து அவரிடம் பகவானுடைய திருவுள்ளமிது வென்று கூறித் தன் பெண் பத்மாவதியை ஒரு நல்ல நாளில் வெகு விமரிசையாக விவாகம் செய்துகொடுத்தான். ஜயதேவர் அந்த அழகிய மனைவியுடன் அவ்வூரிலேயே வாழ்ந்துவந்தார்.

இப்படியிருக்கையில், ஒரு நாள் ஒரு வர்த்தகன் அவரிடம் வந்து அவரைப் பணிந்து தன்னைச் சீடனாக ஏற்றுக்கொண்டு அநுக்ரகம் செய்யவேண்டு மென்று வேண்டிக்கொண்டான். ஜயதேவர் அவனைப்பற்றி விசாரித்தார். அவன் நல்ல குணங்களுடையவனென்பதைத் தெரிந்துகொண்டு அவனைத் தம் சீடனாக ஏற்றுக்கொண்டார். வர்த்தகன் சில நாள் ஜயதேவருடனிருந்து பிறகு அவரைத் தன் ஊருக்கு அழைத்துக்கொண்டுபோனான். ஜயதேவர் அவன் வேண்டுகோளின்படி அவனுடன் சிலநாள் தங்கியிருந்து, பிறகு ஜகந்நாதத்திற்குத் திரும்பினார். வர்த்தகன் தன் குருவுக்கு ஏதேனும் தக்ஷிணை கொடுக்க வேண்டுமென்று விரும்பினான். ஆனால் ஜயதேவர் பொன், வெள்ளி, பூஷணம், வஸ்திரம் இவற்றில் ஆசையற்றவர் என்பதறிந்து தன் விருப்பத்தை எவ்வாறு நிறைவேற்றிக் கொள்வதென்று ஆலோசித்துப் பிறகு அவருடைய மனைவிக்கு அவரை அறியாமல் ஏதேனும் கொடுத்தனுப்பிவிடுவதெனத் தீர்மானித்து, ஒரு வண்டியில் அநேக இரத்தினங்களும் பூஷணங்களும், ஆடைகளும் அடங்கிய ஒரு பெட்டியை வைத்து அப்பெட்டியின்மீது ஒரு விரிப்பை விரித்து மறைத்து ஜயதேவரை அதிற் பிரயாணப்படுத்தி அனுப்பினான். தான் இரகசியமாக வைத்திருந்த பெட்டியைக் குருவின் மனைவியிடம் சேர்த்துவிடும்படி வண்டிக்காரனுக்குச் சொல்லியிருந்தான்.

வண்டி [illegible]ஊரை விட்டுக் கொஞ்சதூரம் போனதும் [illegible]டிக்காரனைத் தேடிக்கொண்டு அவனைச் சா[illegible]ந்தவன் ஒருவன் வந்து, "உன் மனைவி பிரச வேதனைப்படுகிறாள். ஆதலின் நீ இப்பொழுதுபோவது நன்றாயில்லை. திரும்பு. ஸ்வாமிகளே வண்டியை ஓட்டிக்கொண்டு போகட்டும். பிறகு இரண்டுநாள் பொறுத்து நீ ஜகந்நாதத்திற்குப்போய் வண்டியை ஓட்டி வந்து விடலாம்" என்றான். என்ன செய்வான் வண்டிக்காரன்! ஜயதேவரிடம் விண்ணப்பஞ் செய்துகொண்டான். ஜயதேவர், "நீ போ! நான் ஓட்டிக்கொண்டு போகின்றேன்" என்று கூறி அவனை அனுப்பினார். பிறகு வண்டியைத் தாமே மெதுவாகச் செலுத்திக் கொண்டு போனார்.

வண்டி ஓர் அரண்யத்தில் போய்க்கொண்டிருந்தது. அது ஜனசஞ்சாரமற்ற காடு. மேலும் அஸ்தமிக்குந் தருணம். அப்பொழுது இரண்டு திருடர்கள் வந்து வண்டியைமடக்கிக் கொண்டார்கள். ஜயதேவர் திரவியமூலமாக அநர்த்தமும் பிராணஹானியும் நேருமென்பதை யெண்ணி வண்டியை விட்டுக் கீழே இறங்கித் திருடர்களைப் பார்த்து "இதனுள் ஏதாவதிருக்கலாம். அதை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி வழியே கால் நடையாகச் சென்றார். அவர் அப்படிச் சென்றதும் "இவர் முன்னே சென்று யாரையேனும் கூட்டிக்கொண்டு வருவார். இவரை விடக்கூடாது" என்று எண்ணி, அவர் முன் போய் மடக்கிக்கொண்டு "நில்லு போசாதே! உன்னை விடமாட்டோம்" என்று கூறினர். ஜயதேவர் பகவானைத் தியானம் பண்ணிக் கொண்டு நின்றுவிட்டார். திருடர்கள் அவருடைய கையையும் காலையும் வெட்டி அவரைத் தூக்கி அருகிலிருந்த ஒரு குட்டையிற் போட்டுவிட்டுக் கொள்ளையடிக்க வண்டிக்குப் போய்விட்டார்கள். ஜயதேவர் தமது ஹிருதயத்தில் பகவானாகிய ஹரியைத் தியானித்துக்கொண்டு தம்மை மறந்திருந்தார்.

இவ்வாறிருக்கையில் மறுநாள் அப்பக்கமாக வேட்டையாடிவந்த ஓர் அரசன் ஜயதேவரைக்கண்டு இரக்கங்கொண்டு அவரைக் கரை சேர்ப்பித்து, வேண்டிய உபசரணைகள் செய்து "இவ்வாறு உமக்குத் தீங்கு செய்தவன் யாவன்?" என்று கேட்டான். ஜயதேவர், 'என்னுடைய பிறப்பே இப்படி! கரசரணமிரண்டும் எனக்குக் கிடையா. என்னுடைய சகல இந்திரியங்களும் அன்னியமானவை' என்று சொன்னார். இவ்வார்த்தையைக் கேட்டதும், அரசனும் இவர் பரமபக்தர் என்பதையுணர்ந்து உடனே ஒரு பல்லக்கை வரவழைத்து அதில் ஜயதேவரை யேற்றிவைத்துக்

பொன் ஆபரணத்தைப் பார்க்கிலும், புகழ் ஆபரணமே பெரிது.

கொண்டு தன் நகரத்துக்குப் போய் அவரைத் தன் குருவாகக்கொண்டு வெகு மரியாதையாய் வைத்திருந்தான். ஜயதேவர் எப்போதும் பகவானைப் பாடிக்கொண்டு ஒரு கவலையுமில்லாமலிருந்தார். அவரைப் பார்த்துப் பலபேர் பக்தியி லீடுபட்டு எப்போதும் அவருக்கு வேண்டிய பணிவிடைகள் புரிந்துவந்தனர்.

அரசன் ஜயதேவருடைய கட்டளைப்படி நாடோறும் சாது ஜனங்களுக்குத் திருப்திகரமாகப் போஜனமளித்து அவர்கட்கு உடுக்க ஆடையும் பொருளும் கொடுத்துவந்தான். சாது ஜன ஆராதனையே சிறந்த சாதனமென்பதும் அதனால் பகவான் சந்தோஷமடைகிறார் என்பதும் அவனுக்கு ஜயதேவர்செய்த போதனைகளாதலால், அதை வெகு சிரத்தையாய்ச் செய்துவந்தான். அரசனுடைய இப்படிப்பட்ட செய்கையைக் கேட்ட சாது ஜனங்கள், சர்க்கரையின் மணமறிந்த எறும்பு ஓடுவது போலவும், மேக கர்ஜ்ஜனைகேட்ட மயில்கள் ஆடுவது போலவும் அவனுடைய பக்தியைப் பார்க்கவிரும்பி அவனிடம் அடிக்கடி வந்து கொண்டே யிருந்தார்கள். அரசன் தன்னிடம் வரும் சாதுக்களையெல்லாம் வந்தனத்தோடு வரவேற்று, தன் அரண்மனையிலேயே மாதக்கணக்காக வைத்திருந்து பிறகு அவர்கள் விரும்பியவற்றைக் கொடுத்தனுப்புவான்.

இப்படியிருக்கையில், ஜயதேவரின் கால் கைகளை முன் வெட்டிய திருடர்களும் சாதுக்களைப் போல் வேடம்பூண்டு அரசனிடம் வந்தார்கள். அரசன் அவர்கள் உண்மையான சாதுக்களென்றே நம்பித் தன்வழக்கப்படி வரவேற்று அரண்மனையிற் சிலகாலமிருந்து செல்லும்படி உபசரணை செய்தான். அவர்கள் அவ்வாறேஇருந்து வந்தனர். அப்பொழுது ஜயதேவர் அங்கு அரசனுடைய குருவாய் விளங்குவதைக்கண்டு "ஓ இவரெங்கே இங்கு வந்தார்? இனி நாம் தப்ப வழியில்லை. இவர் நம்மை யறியாதிருக்கும் வரையில் நமக்குக் குறைவில்லை. அறிந்துவிட்டால் உயிரை இழக்கவேண்டியதுதான்" என்றெண்ணி மிகக் கவலை கொண்டனர்; "நம்முடைய வஞ்சகம் நம்மையே மாய்க்கின்றது" என்றும் சொல்லிக்கொண்டு தப்பிச் செல்ல வழி தேடுவாராயினர். அவர்களை ஜயதேவரும் இன்னாரென்று தெரிந்துகொண்டார். ஆனால் அவர் எல்லா உயிர்களையும் சமமாகப் பார்க்கும் பொறுமை யுடையவராகையினால், அந்தப் பகைவர்களையும் நண்பர்களாகவே பாவித்து வந்தார். திருடர்கள் ஜயதேவருடைய இந்த அரிய குணத்தைக்கண்டு, அந்தோ இந்தப் பெரியவர்க்கு நாம் தீங்குசெய்தோமே என்று வருந்தினார்கள். ஆயினும் அந்த அரண்மனையைவிட்டுச் செல்லதக்க சமயம் பார்த்துக்கொண்டிருந்தனர். அரசனுடைய அரண்மனை அவர்களுக்குச் சிறைச்சாலைபோலிருந்தது. அதனால் அரசன்செய்யும் உபசாரங்களிலெதையும் பொறுக்க முடியாமல் அவர்கள் தவித்தார்கள். நாளடைவில் இளைத்துப்போனார்கள். இதை அறிந்த அரசன் ஜயதேவரிடம் போய், "சமீபத்தில் வந்த இரண்டு சாதுக்களும் எக்காரணத்தாலோ மிகவும் இளைத்துப்போய் வருகின்றனர். இதற்குக் காரணம் புலப்படவில்லை" என்றான். ஜயதேவர், "சாதுக்களுக்கு இப்படிப்பட்ட உபசரணைகளிலெல்லாம் விருப்பமிராது. அவர்கள் ஆநந்தமடைவது வேறு விதமாயிருக்கும். அதனாலிருக்கலாம். இவர்கள் அதிக விரக்தியுடையவர்போல் தோன்றுகிறார்கள். பாக்கிய வசத்தால் இத்தனைநாட்கள் உன்னிடமிருந்து வருகின்றனர். இனி அவர்கள் இதைவிட்டுப்போக பிரியப்பட்டால் அவர்களுக்குவேண்டிய பொருளைக் கொடுத்து அனுப்பி விடலாம்" என்றார். அரசன் "அவ்வாறே செய்கின்றேன்" என்று ஒப்புக்கொண்டு தன் அலுவலைக் கவனித்து வந்தான்.

அப்பால் சில நாட்களுக்கெல்லாம் வஞ்சகர்கள், "எங்களுக்குப் போக விடைதரவேண்டும்" என்று அரசனை விடை கேட்டனர். அரசன் உடனே அவர்கள் விரும்பியபொருளைத் திருப்திகரமாகக் கொடுத்து "போய்வரலாம்" என்று மரியாதையோடு பணிந்து விடைகொடுத்தான்; அவர்கள்கூட இரண்டு சேவகர்களை வழிவிட்டு வரும்படி அனுப்பினான். ஊரைக்கடந்து கொஞ்சதூரம் போனதும், சேவகர்கள் அவர்களை நோக்கி, "ஜயதேவ ஸ்வாமிகளுக்கும் உங்களுக்கும் இதற்குமுன் ஸ்நேகமுண்டுபோல் இருக்கிறது. அவர்கள் உங்களிடத்தில் காட்டிய அன்பே அதைக் காட்டுகிறது. அப்படித்தானே?" என்று கேட்டனர். வஞ்சகர்கள், "ஆம் ஸ்நேகமுண்டு. நாங்களும் ஜயதேவரும் ஓர் அரசனிடம் வேலை பார்த்தவர்கள்.

பொன் என்றால் பிணமும் வாய்திறக்கும்.

அவர் மந்திரியா யிருந்தார். நாங்கள் சேவகர்களாகவிருந்தோம். அந்த அரசன் துஷ்டன். அவன் ஒரு சமயம் இவர்மீது ஏதோ ஒரு குற்றஞ்சாட்டி இவரைக் காட்டிற் கொண்டுபோய் வெட்டிவிடும்படி எங்களுக்கு உத்தரவிட்டான். நாங்கள் அவன் உத்தரவின்படி இவரைக் காட்டிற்குக் கொண்டுபோய், வெட்ட மனம்வராமல் கைகால்களை மாத்திரம் வெட்டி இவரைஒரு குட்டையிலே கிடத்திவிட்டு அவ்வரசனிடத்திலும் உலகவாழ்விலும் அன்று முதல் வெறுப்புக்கொண்டு இவ்வாறு பகவத் பக்தியி லீடுபட்டவர்களா யிருந்துவருகிறோம். இப்படிப்பட்ட சம்பந்தம் எங்களுக்குள் உண்டு. இதனாலேதான் அவருடைய திருவருளுக்குப் பாத்திரர்களானோம்" என்றார்கள்.

இப்படி அவர்கள் பொய் கூறியவளவில், பூமி தேவி நடுக்கங்கொண்டு பிளவுபட்டு அவ்விருவரையும் தன்னுள் இழுத்துக்கொண்டாள். இந்த அதிசயத்தைக் கண்ட சேவகர்கள் திரும்பி ஓடி ஜயதேவரிடம் கூறினர். ஜயதேவர், உடனே, "ஸ்ரீகிருஷ்ணா! வாசுதேவா! ஜனார்த்தனா!" என்று கூறி விசனமுற்று "என் பகைவர்களை அதோகதிக் காளாக்கியதேன்! உமது பகைவனாகிய இராவணனுக்கு சாயுஜ்ய பதவி கொடுத்தீர். நூறு குற்றங்கள் செய்த சிசுபாலனிடம் கிருபை யுடையவரா யிருந்தீர்! மகா கொடியவனான கம்ஸனுக்கு முத்தி கொடுத்தீர். அந்தோ! என் பகைவர்களுக்கேன் அதோகதி கொடுத்தீர்?" என்று கூறிப் பகவானை ஸ்தோத்திரம்செய்தார். உடனே பகவான் நான்கு புயங்களுடன் நீலமேக ச்யாமள ரூபராய் எதிரே தோன்றினார். அந்த நிமிஷமே ஜயதேவருடைய கைகால்கள் முன்போல் வளர்ந்தன! — வஞ்சகர்கள் அங்கு புஷ்பக விமானத்தில் விளங்கினர். பகவான், அவர்களிடம்போய் அமர்ந்து, ஜயதேவரை நோக்கி, "உன் பக்தி முதிர்ந்தது! பொறுமையும் தயையும் சாந்தமும் உன்னிடமிருக்கின்றன. பகைவர்களிடமும் நண்பர்களிடமும் சமபாவனையுடையவர்கட்கு நாம் ஸ்வாதீனமாயிருப்போம்" என்று கூறி மறைந்தனர். ஆகா! பக்தியின் மகிமையே மகிமை!

ஜயதேவருக்குக் கைகால்கள் வளர்ந்ததை அறிந்த அரசன் பெருவியப் படைந்து அவரைக்கண்டு பணிந்து, முன் கரசரணங்களில்லாமலிருந்ததற்குக் காரணம் என்னவென்று கேட்டான். ஜயதேவர் முன் நடந்ததை விவரமாய்க் கூறினார். அரசன் கேட்டு ஆச்சரியமும் ஆநந்தமுமடைந்து உடனே ஜயதேவருடைய மனைவி பத்மாவதி அம்மாளுக்குப் பல்லக்கனுப்பி அதில் வரவழைத்தான். பத்மாவதி அம்மாள் வந்ததும், அந்த அம்மாளுக்கு நல்ல ஆடைகளையும் அணிகளையும் கொடுத்து நமஸ்கரித்து வேண்டிய உபசரணைகளைச் செய்து அந்தப்புரத்திலுள்ள தன் மனைவியினிடம் அழைத்துப்போய், "இவர்கள் குருநாதருடைய மனைவியார். இவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்துகொண் டிருப்பது உன் கடமை" என்று கூறி அம்மையாரை அங்கிருந்து தன் மனைவிக்குச் சேவை தந்துகொண்டிருக்கும்படி வேண்டிக்கொண்டு தான் எப்போதும்போல் ஜயதேவருக்கு வேண்டிய பணிவிடை செய்துகொண்டிருந்தான்.

இவ்வாறு பத்மாவதி அம்மையார் இங்கு வந்து சேர்ந்தபிறகு, ஒருநாள் அரசன் மனைவி ஒரு சபைசேர்த்துச் சம்பாஷித்துக்கொண்டிருந்தாள். பத்மாவதி அம்மையார் அச்சபைக்குத் தலைமை வகித்திருந்தனர். அப்பொழுது அரசனுடைய உறவினரில் யாரோ ஒருவன் இறக்க, அவன் மனைவி அவனுடன் உடன்கட்டை யேறப்போவதாக ஒரு செய்தி வந்தது. இதைக் கேட்டதும் அரசன் மனைவியும் மற்றவர்களும் பெரிய ஆச்சரியமடைந்தனர். பத்மாவதி அம்மையார் மாத்திரம் அதை ஓர் ஆச்சரியமாக எண்ணவில்லை. இதை யறிந்த இராணி அம்மையாருடைய பக்கம்போய்ப் பணிந்து நின்று, "தன் புருஷன் இறந்ததும் தானும் அவனோடு உடன்கட்டை யேறப்போவதாக ஓர் அதிசயமான செய்தியைக்கேட்டும் தாம் வியப்படையாமலிருப்பதன் காரணமென்ன?" என்று கேட்டாள். பத்மாவதி அம்மையார், "புருஷன் முன்னே இறந்து, பிறகு மனைவி இறப்பாளாயின், அவள் தன் புருஷனை எந்தக் காலத்தில் சேருவாளோ தெரியாது. ஆனால் புருஷன் இறந்தானென்னும் சொல் கேட்ட அக்கணமே உயிரைவிடும் மனைவியே சிறந்தவளாவாள். இப்படியிருக்கின்றது தர்மம். ஆதலால் இப்போது வந்த செய்தியில் வியப்படைவதற் கென்ன விருக்கிறது?" என்றார்கள்.

இராணி, "ஓ அப்படியா! நல்லது" என்று கூறித் தன் மனத்திற்குள், "இவள் அநுபவமில்லாதவள். இது நம்புவதற்கில்லாத பேச்சு" என்று எண்ணிக்கொண்டு அவர்களிடம் விடைபெற்றுச் சென்றாள். அப்பால் ஒரு நாள், மந்திரியை அழைத்துப் பத்மாவதியம்மையார் சொல்லியதை அவனிடம் கூறி, ஜயதேவர் மரணமடைந்ததாக வதந்தியுண்டாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டாள்.

அப்பால் ஒரு நாள் அரசன் வேட்டையாடக் காட்டுக்குச் சென்றான். அப்பொழுது அவன் ஜயதேவரையும் தன்னோடு பல்லக்கில் அழைத்துக்கொண்டு போனான். அந்தச் சமயம் பார்த்து மந்திரி இரகசியமாய் ஒரு மனிதனை ஏவி, ஜயதேவர் காட்டில் புலியிடம் அகப்பட்டு இறந்தாரென்று பட்டணமெங்கும் வதந்தி உண்டாக்கும்படி செய்தான். இராணி இதைப் பத்மாவதியம்மையாருக்குக் கூறினாள். பத்மாவதியம்மையார் தமது பதி இறந்ததாகக் கேட்டமாத்திரத்தில் ஆ என்றலறிக் கீழே விழுந்து உயிரைவிட்டாள்.

அப்பால் அன்றுமாலை அரசன் ஜயதேவரோடு ஆரண்யத்திலிருந்து வந்தான்; பத்மாவதி அம்மையார் இறந்த செய்தியை அறிந்தான்; உடனே அதற்குக் காரணமும் விசாரித்துத் தெரிந்துகொண்டான், தன் மனைவியைக் கொன்றால் ஸ்திரீஹத்தி தோஷம் சம்பவிக்குமென்றஞ்சி ஒரு தோட்டத்தில் தீ வளர்க்க ஏற்பாடுசெய்து அதில்விழுந்து மடியப்போனான். ஜயதேவர் அப்பொழுது அரசனைத் தடுத்து, உடனே பகவானைத் தியானித்து நின்று ஸ்தோத்திரம் செய்தார். பகவான் அவர்களுக்குப் பிரஸந்நமாய்ப் பத்மாவதியம்மையாரை உயிர்பெற்றெழும்படி செய்து, ஜயதேவரை ஆலிங்கனஞ்செய்து வாழ்த்தி, "நீ இப்பொழுது செய்த துதிகளைப் பாடித் துதிப்பவர்முன் நான் அவர்கள் நினைக்கும் எந்த வேளையும் வந்து காப்பேன்" என்று கூறி மறைந்தார். எல்லோரும் ஜய, ஜய வென்று ஆரவாரித்து பகவானைப் புகழ்ந்து துதித்து வணங்கினார்கள். தேவர்கள் மலர்மாரி பொழிந்து ஜயதேவரையும் அவர் மனைவியையும் வாழ்த்தினார்கள். எல்லோரும் சந்தோஷமாய் வாழ்ந்துவந்தார்கள்.

சுபம்!

குழந்தைகளுக்கேற்ற சில விளையாட்டுகள்

SOME GAMES FOR CHILDREN

கல்வி கற்பிப்பதானது அறிவையே புகட்டுவதல்ல. அறிவைப் புகட்டும் மார்க்கமெனச் சொல்லுவதுண்டு. கல்விகற்பிப்பதில் கவனிக்க வேண்டிய விஷயங்கள் மூன்றுள்ளன. அவை யாவன:— குழந்தை தன் வாழ்நாட்களை சுகமாகக் கழிக்கவேண்டி அதற்கின்றியமையாத சில பாடங்களைச் சொல்லிக்கொடுப்பது; அந்தப் பாடங்கள் மூலமாகச் சில நீதிகளையும் கோட்பாடுகளையும் எடுத்துச்சொல்வது; சுகமாக வாழ்வதற்கு இன்றியமையாததான தன் சரீரத்தைச் செவ்வனே பாதுகாத்துக்கொள்ள வேண்டிய முறையை எடுத்துச்சொல்வது ஆகிய இவைகளே. மேற்சொல்லியவைகளில் முதலிரண்டு விஷயங்களைக் காட்டிலும் பின்னால் கூறப்பட்டது, கேவலம் புஸ்தகத்தைப் படிப்பதனால் மாத்திரம் விருத்திக்கு வராது. புஸ்தகங்களிலிருந்து படித்ததை நாள்தோறும் அப்பியாஸம் செய்துவரவேண்டியது முக்கிய விஷயம். மேலும், கீழ்த்தர வகுப்புக் குழந்தைகளுக்கு தேகப்பயிற்சி சம்பந்தமான புஸ்தகங்களைப் படிப்பது அசாத்தியமான காரியம்.

மேலும் வாரத்தில் ஒருமணி அல்லது இரண்டு மணி நேரம் வெகு அசிரத்தையாக ட்ரில் (Drill) செய்வது, போதவே போதாது. ட்ரில் செய்வதிலேயே நாற்பது அல்லது ஐம்பது நிமிஷம் கழிப்பது மிகவும் துர்லபமான காரியம். ட்ரில் என்பதைக் கண்டாலே குழந்தைக்கு ஒரு வெறுப்பு உண்டாகிறது. எத்தனை குழந்தைகள் முழங்காலை மடக்கி உட்காரு என்று சொன்னால், சிலர் தள்ளாடிக்கொண்டே உட்காருகிறார்கள். சிலர் தயங்கி நின்று மெதுவாக உட்கார்ந்தும் உட்காராததும்போல் நடுநிலைமையை வகிப்பதுமாய் இருக்கிறார்கள். இம்மாதிரி செய்வதில் உட்காருவதற்கு ஒரு நிமிஷமும் எழுந்திருப்பதற்கு ஒரு நிமிஷமும் ஆவதுடன், அதே அப்பியாஸத்தை மெதுவாக எட்டுத் தடவை நடத்தினால் குழந்தை எப்படி வலியைப் பொறுக்கமுடியும்? தேகப்பயிற்சியும் வேண்டும்; அது பிள்ளைகளுக்கு விளையாட்டாகவும் இருக்கவேண்டும். இந்த இரண்டை

யும் கவனித்தே அப்யாஸங்களைத் தேர்தெடுக்கவேண்டும். ஆகவே சில பள்ளிக்கூடங்களில் ட்ரில் அப்பியாசங்களை நடத்தும்பொழுது பாட்டுகள் பாடுகிறார்கள் அல்லது வாத்தியப் பெட்டியில் வாசிக்கிறார்கள். பாட்டுப்பாடுவதால் சிறுவர்களுக்கு ஓர் உத்ஸாகமும், குதூகலமும் உண்டாகின்றன. அதுவுமன்றி, அப்பியாஸங்களைச் சீக்கிரமாகச் செய்வதும் குழந்தைக்கு அவ்வளவு தேகசிரமத்தைக் கொடுப்பதில்லை. ஒவ்வொரு புது அப்யாஸத்திற்கும் இடையில் சற்று ஓய்வு நேரம் ஏற்பட்டிருக்கவேண்டும். அந்த நேரத்தில் குழந்தை ஸ்வயேச்சையாக உட்கார்ந்தோ, நின்றோ, அல்லது ஓடிக்கொண்டோ இருப்பான். குழந்தைகளுக்காக ஏற்பட்டுள்ள ஸ்வீடிஷ் டிரில் (Swedish drill) அப்யாஸங்களை எடுத்துக் கொள்ளலாம். மேலும் இந்த அப்யாஸங்களைத் தொடர்ந்தாற் போல நாற்பது ஐம்பது நிமிஷம் செய்தல் கூடாத காரியம்.

குழந்தை தன்னிஷ்டப்படி செய்ய விரும்பும் தன்மையுள்ளவன்; தன் வகுப்புப் பிள்ளைகளுடன் கலந்துநடக்க இச்சைப் படுபவன்; ஒருவரைப்பார்த்து அவர்போல் தானும் நடக்க முயலுபவன்; சற்றுநேரமாவது யாதொன்றும் செய்யாமலிருக்க அவனால் முடியாது. ஆகையால், பள்ளிக்கூடத்திலேயே நேர்த்தியான சில விளையாட்டுகளை அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்து உபாத்தியாயரின் முன்னிலையிலேயே அவர்களை அந்த விளையாட்டுகளை விளையாடச்செய்யவேண்டும். சிறு சிறு விளையாட்டுகளிலும் செவ்வனே நடந்துகொள்ளும் குழந்தை, வயதான பின்பு கடினமான காரியத்தையும் சிரத்தையாகக் கவனித்து ஸாதிக்கப் பிரயத்தனப்படுவான். இப்பொழுது அடியில் கூறப்பட்ட விளையாட்டுகளெல்லாம் நாம் குழந்தைகளாயிருந்த பொழுது விளையாடினதுந் தவிர, இப்பொழுதும் அவ்விளையாட்டுகளைக் குழந்தைகள் விளையாடிவருகிறார்கள்.

1. நாற்காலி ஆட்டம் [Musical Chairs.] இது முதலிரண்டு வகுப்புகளிலும் அனுஸரித்து வரும் ஓர் ஆட்டம். குழந்தைகள் இவ் விளையாட்டில்தான் மிகவும் சந்தோஷிக்கிறார்கள்.

ஆரம்பம்.—வகுப்பில் எத்தனை குழந்தைகளிருக்கிறார்களோ அதற்கு ஒன்று குறைவாக சிறு சிறு நாற்காலிகள் ஒரே வரிசையாய் மாற்றி மாற்றிப் போட்டிருக்கவேண்டும். சிறு நாற்காலிகளில்லாத பக்ஷத்தில், பிள்ளைகள் காலால் ஒவ்வொரு வட்டம் வரைந்துகொண்டு அதில் ஒவ்வொருவனும் மேலே கூறியபடி வரிசையாக ஒருவன் ஒருபுறம் பார்த்துக்கொண்டும், அடுத்தவன் அதற்கெதிர்ப்புறம் பார்த்தும் உட்காரவேண்டும். உதாரணமாக, தெற்குவடக்காக ஒரு வரிசை ஏற்படும் பக்ஷத்தில் 1,3,5,7 எண்ணிக்கையுள்ள பையன்கள் கிழக்கு முகமாகவும் 2, 4, 6, 8 எண்ணிக்கையுள்ளவர்கள் மேற்குமுகமாகவும் பார்த்து இருக்கவேண்டும். நாற்காலியோ வட்டமோ ஒன்று குறைவாயிருப்பதால் ஒரு பையன் மாத்திரம் ஒரு மூலையில் நிற்கவேண்டியிருக்கும்.

ஆட்டத்தை நடத்தும் விதம்.—உபாத்தியாயர், ஒன்று என்றவுடன், பிள்ளைகள் எழுந்திருக்கவேண்டும். இரண்டு என்றவுடன், வலது கைப் புறம் திரும்பவேண்டும். இவ் விளையாட்டிற்கு வாத்தியப் பெட்டி இருத்தல் சிலாக்யம். பிறகு வாத்தியப் பெட்டியில் உபாத்தியாயர் பாடும்பொழுது பிள்ளைகள் நாற்காலிகள் அல்லது வட்டங்கள் இவைகளைச் சுற்றிச்சுற்றி ஓடுகிறார்கள். எப்பொழுது உபாத்தியாயர் சங்கீதத்தை நிறுத்தப் போகிறார் என்று கவனித்து, நிறுத்தினவுடனே ஒவ்வொருவனும் ஏதாவது ஓர் இடத்தில் முன்கூறியபடி அமரவேண்டும். ஓர் இடம் குறைவாயிருப்பதனால் ஒரு குழந்தைக்கு உட்கார இடமிருக்காது. அவன் மாத்திரம் வரிசையிலிருந்து ஒரு நாற்காலியை எடுத்துக்கொண்டு வேறு பிரத்தியேகமான இடத்தில் மற்றப்பிள்ளைகளுடன் கலவாதபடி உட்காரவேண்டும். வட்டமாக இருக்கும்பக்ஷத்தில் இடமில்லாதவன் ஒருவட்டத்தை அழித்துவிட்டுவேறு இடத்தில்போய் உட்காரவேண்டும். மறுபடியும் முன்போல் வாத்தியம் வாசிக்க ஆரம்பித்தவுடன் பிள்ளைகள் எழுந்து நின்று திரும்பிச் சுற்றிச்சுற்றி ஓடி, வாத்தியம் நின்றவுடன் தங்களுக்ககப்பட்ட விடங்களில் உட்காரவேண்டும். இப்பொழுதும் ஒருவனுக்கு இடமிருக்காதாகையால் அவனும் ஒரு நாற்காலியை எடுத்துக்கொண்டு முன்பு தனியாக உட்கார்ந்தவனோடு சேர்ந்து உட்காரவேண்டும். இப்படியே தடவைக்குத் தடவை

ஒரு நாற்காலியும் ஒரு பையனும் குறைந்துவரவே, கடைசியில் இரண்டு குழந்தைகளும் ஒருநாற்காலியும் மாத்திரந்தானிருக்கும். கடைசியாக ஒருமுறை வாத்தியம் வாசித்து நிறுத்தி, அந்தத் தடவையில் எவன் நாற்காலியில் உட்காருகிறானோ அவனை இவ்விளையாட்டில் ஜயித்தவனாக எடுத்துக்கொண்டு பாக்கியுள்ளவர்கள் கரகோஷம் செய்கிறார்கள். குழந்தைகள் இடங்களைக் கவனித்துக்கொண்டு சரியாக ஓடவும் சங்கீதத்தைச் சரியாகக் கவனிக்கவும் இவ்விளையாட்டில் பழகுகிறார்கள். குழந்தைகள் அதிகமிருக்குமானால், இரண்டு நாற்காலிகள் குறைவாகப்போட்டு தடவைக்குத் தடவை இரண்டு நாற்காலிகளாகவும் இரண்டு பிள்ளைகளாகவும் தள்ளிவிடவேண்டும்.

2. நான்குமூலைத்தாச்சி.— சாதாரணமாக இதைக் குழந்தைகள் தெருத்திண்ணைகளிலும், தெருக்களில் அமைக்கப்பட்டுள்ள பந்தல்களிலும் விளையாடுவது வழக்கம். நான்கு பேர்கள்தானிருக்கவேண்டு மென்பதவசியமில்லை. வகுப்பிலுள்ள பிள்ளைகளில் ஒருவன் குறைவாக பாக்கியுள்ளவர்கள் இரண்டு வரிசைகளாக எதிரெதிரே ஒவ்வொருவருக்கும் மத்தியில் தாராளமாக இடம்விட்டு நிற்கிறார்கள். பிள்ளைகள் தங்களுக்கு எதிரிலுள்ளவர்களுக்காவது பக்கத்திலுள்ளவர்களுக்காவது நேர் குறுக்குமூலையில் எதிரிலுள்ளவர்களுக்காவது ஸமிக்ஞைகாட்டி தங்களிடங்களை ஒருவர்க்கொருவர் மாற்றிக்கொள்ளுகிறார்கள். இப்படி ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாறி ஓடிக்கொண்டிருக்கும் சமயத்தில் தனியாகவுள்ள பையன் திடீரென்று ஒருவருமில்லாத இடத்தைப் பிடித்துக்கொள்கிறான். இடமில்லாத பையன் மறுபடியும் இடத்தைத்தேட. அங்குமிங்கும் போய்க்கொண்டு பிள்ளைகள் குறுக்கு நெடுக்காக ஓடுகிற ஸமயத்தில் காலியாயுள்ள இடத்தைப் பிடித்துகொள்ளுகிறான். இதே மாதிரி ஆட்டம் வேண்டிய நேரம் நடக்கலாம்.

3. பின்னல் கோலாட்டம்.—பெரும்பாலும் பெண் குழந்தைகளே இந்த விளையாட்டை விளையாடிவருகிறார்கள். சிறு குழந்தைகளுக்கும் இதை நடத்தலாம்.

ஒருவட்டமான மரப்பலகையைச் சுற்றிலும் ஓரமாக 20 அல்லது 24 துவாரங்கள் செய்து அவைகளிலிருந்து இரண்டுவித வர்ண நாடாக்களை மாறிமாறிக் கட்டித் தொங்கவிட்டு பலகையை உயரமான ஓர் இடத்தில்கட்டி நாடாக்கள் தொங்கும்படிசெய்யவேண்டும். உதாரணமாக, சிவப்புநூல் வெள்ளைநூல் என்று வைத்துக்கொள்ளுவோம். முதலில் சிவப்பு நூல் பிடித்துக்கொண்டிருக்கிற பிள்ளைகள் பின்னுவதற்காகஎழுந்து, நூலை வலதுகையிற்பிடித்து வலதுகைப் புறமாகவே திரும்பி நிற்கவேண்டும் ஒன்றுஎன்று சொன்னவுடனே பிரதக்ஷணமாக தனது பக்கத்திலுள்ள பையன் பிடித்திருக்கும் நாடாவின் உட்புகுந்து அவனது பக்கத்தில் வந்துநிற்கவேண்டியது. மறுபடியும் இரண்டு என்று சொன்னவுடன் இப்பொழுதுவலதுகைப்பக்கத்தில் அடுத்தாற்போலுள்ள பையன் முதுகுப்புறமாக நடந்து வந்து அவன்பக்கத்தில் நிற்கவேண்டும். இந்தமாதிரி மாறி மாறி உட்புகுந்தும் வெளிவந்தும் பின்னவேண்டியது. இனிமேல் கையாற் பிடித்துக்கொள்ளப் போதுமானவளவு நாடாகிடையாது என்று தெரிந்தபிறகு அவர்கள் உட்காருகிறார்கள். அவர்கள் உட்காருமுன் நாடாவை இரண்டு என்று சொல்லுவதற்கு எந்தமாதிரி வரவேண்டுமோ அம்மாதிரி செய்துவிட்ட பிறகே உட்காரவேண்டும். மறுபடியும் முன் வெள்ளை நாடாக்களைப் பிடித்து கீழே உட்கார்ந்தவர்கள் இப்பொழுது எழுந்து, உள்ளும்வெளியும் சுற்றி சுற்றி வந்து பிரிக்கிறார்கள். ஒன்று இரண்டு என்று சொல்லுவதற்குப் பதிலாக வாத்தியப்பெட்டியிலும் மெதுவாக வாசிக்கும் பக்ஷத்தில் பிள்ளைகள் மாறி மாறி வந்து பின்னியும் பிரித்துவிடுவார்கள்.

4. கண்ணாம்பூச்சி.— இதை ஸாதாரணமாகப் பிள்ளைகள் விளையாடுவது எப்படி என்றால் ஒரு குழந்தை உட்கார்ந்துகொண்டு மற்றொருவன் கண்களைத் தான் மூடி, பாக்கியுள்ளவர்களை அநேக இடங்களில் ஒளிந்துகொள்ளச்செய்து, பிறகு தான் மூடின பையன் கண்களைத் திறந்துவிட்டு அவனை மற்றவர்கள் ஒளிந்த விடத்திலிருந்து பிடித்துவரச்சொல்லி தான் அதே இடத்தில் உட்கார்ந்துகொள்ளுவது. பிறகு தேடுகிறவன் பிறர்களைக் கண்டு பிடிக்க அங்குமிங்கும் ஓடி அலைந்து முயற்சி செய்து பார்க்கையில், ஒளிந்துள்ளவர்கள் தங்களைக்கண்டுபிடிக்க அவன் வரவில்லையே என்று கண்டு, ஒளிந்துகொண்ட விடத்திலிருந்து

வெளிவந்து அவனைப் பார்த்துவிட்டபோதிலும், அவன்ஓட இவர்கள்ஓட அவன் கையிற்படாதபடி உட்கார்ந்துள்ள குழந்தையைத் தொடவருகிறார்கள். ஒரு தடவை அப்படித் தொட்டுவிட்டால் தேடுகிறவன்தொட்டவனைப் பிடிக்கக்கூடாது என்பது அவர்கள் கட்டுப்பாடு. இம்மாதிரி தெருக்களில் விளையாடுவதை நாம் பார்த்திருக்கிறோம். மற்றும் இதை அநேக விதங்களாகவும் விளையாடலாம்.

முதலாவது—வகுப்பிலுள்ள ஒருவன் கண்ணைக் கட்டிவிட்டு அவனை ஒரு பெரிய வட்டத்திற்குள் நிற்கவைத்து, பாக்கியுள்ளவர்கள் அவனது கையிற்படாமல் அவ்வட்டத்தைச் சுற்றி ஓடும்பொழுது, கண் கட்டப்பட்டவன் ஓடுகிறவர்களில் எவனையாவது பிடித்து அவன் இன்னானென்று சொல்லவேண்டும். அவன் பேச்சைக் கொண்டாவது அவன் அங்கங்களைத் தடவிப் பார்த்தாவது யாரென்று கண்டறியலாம்.

இரண்டாவது.—வகுப்பில் ஒருவனைத் தவிர பாக்கிப் பிள்ளைகளைக் கண்ணைக் கட்டித் தனியாக ஓரிடத்தில் விட்டு, மீந்துள்ளவன் மாத்திரம் இவர்களுக்குச் சற்று தூரத்தில் உட்கார்ந்து ஒரு மணியையாவது குழாயையாவது வைத்துக் கொண்டு சப்தம் செய்துகொண்டிருக்கும்படி சொல்லவேண்டும். கண் கட்டியுள்ளவர்கள் ஓசையைக் கவனித்து அந்த திக்கை நோக்கிச் சென்று, உட்கார்ந்துகொண்டு மணியடிப்பவனைப் பிடிக்கவேண்டும். சிலர் கண் கட்டியுள்ளவர்களையே பிடித்துக் கட்டிக்கொண்டுவிடுவார்கள். சிலர் சுற்றிச்சுற்றி அங்குமிங்கும் தேடுவார்கள். கவனமாக ஓசையைக் கேட்டு முதன்முதலில் மணியடிப்பவனைத் தொடுகிறவனே ஆட்டத்தில் ஜயித்தவனாவான்.

மூன்றாவது.—ஒரு பையனை மாத்திரம் கண்ணைக் கட்டிவிட்டு, பாக்கியுள்ளவர்கள் வட்டமாக உட்கார்ந்து, அதில் எவனாவது ஒருவன் எதைக்கொண்டாவது சப்தம் செய்யும்பொழுது அவ்வோசையைக் கேட்டு கண் கட்டப்பட்டவன் ஓசைசெய்பவனைத் தொட்டு அவன் அணிந்திருக்கும் ஆடைகளைக்கொண்டும், அவனைத் தடவிப் பார்த்தும் அவன் இன்னானெனக் கண்டுபிடிப்பதே இவ்வாட்டத்தின் கருத்து.

5. 'எலுமிச்சம்பழம், கிச்சிலிப்பழம்.'—இதுவும் கிண்டர்கார்டன் பள்ளிக்கூடத்தில் பாலர்கள் அப்யஸித்துவரும் ஓர் ஆட்டமே. இவ்விரண்டு பழங்களின் பெயருக்காக வேறு ஏதாவது இரண்டின் பெயரையும் வைத்துக் கொள்ளலாம். இரண்டு கைகளையும் கோத்துக் கொண்டு இரண்டு சிறுவர்கள் ஒருவரையொருவர்பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள். ஒருவனுக்கு கிச்சிலிப்பழம் பிடிக்குமென்றும் மற்றவனுக்கு எலுமிச்சம்பழம் பிடிக்குமென்றும் வைத்துக் கொள்வோம். மற்றப் பிள்ளைகள் வரிசையாக ஒருவர்பின் ஒருவராகநின்று சுற்றிச்சுற்றி வந்து, மேலே சொல்லிய இரண்டு சிறுவர் கோர்த்துக் கொண்டிருக்கும்படியான கைகளுக்குள்ளாக நுழைந்து செல்லுகிறார்கள். அப்படிச் செல்லும்பொழுது அந்தவரிசையில் முதற்பையனையாவது கடைசிப் பையனையாவது கையைக் கோர்த்துக்கொண்டிருக்கிறவர்கள் அவன் வெளியிற் செல்ல முடியாதபடி பிடித்துக் கொண்டு, அவனைப் பார்த்து 'உனக்கு என்ன பழம் வேண்டும்' என்று கேட்கிறார்கள். நடுவில் அகப்பட்டுக்கொண்டவன் தனக்கு எலுமிச்சம்பழம் பிடிக்குமென்றால், அவன் கைகளைக் கோர்த்து நிற்பவர்களில் எவனுக்கு எலுமிச்சம்பழம் பிரியம் என்று சொன்னானோ அவன் பின்னால் போய் நிற்கவேண்டும். கிச்சிலிப்பழம் என்று சொல்லுவானானால் மற்றவன் பின்னால் போய் நிற்கவேண்டும். இம்மாதிரி ஒவ்வொரு பையனாகக் கைகோர்த்து நிற்கிற இருவர் மத்தியில் அகப்பட்டு, தங்களுக்கு எது பிடிக்குமோ அதைக் காண்பிக்கும்படியான பையன் பின்னால் வந்து நிற்கிறார்கள். அதிகப் பிள்ளைகளிருந்தால் இரண்டிரண்டு பிள்ளைகளாகப் பிடித்து அவர்களுக்கு எது எது பிரியமோ அதற்குத் தகுந்தபடி அவர்களை நிற்கச் செய்யலாம். கடைசியாக இரண்டுபிரிவுகள் ஏற்பட்டதைக் காணலாம். அதாவது, ஒன்று கிச்சிலிப் பழக் கக்ஷி, மற்றது எலுமிச்சம்பழக் கக்ஷி.

பிறகு ஒவ்வொரு கக்ஷியிலும் முதல் பையனைத் தவிர பாக்கிப் பையன்கள் தங்களுக்கு முன்னுள்ளவனைக் கெட்டியாக அணைத்துப் பிடித்துக் கொள்ளுகிறார்கள். உபாத்தியாயர் 'எலுமிச்சம்பழம் கிச்சிலிப்பழம்' என்றவுடன் முதன்மையாகநிற்கிற இருவர்களும் ஒருவரை ஒருவர் இழுக்கிறார்கள். இப்படி இழுப்பதினால் இரண்டு கக்ஷிகளுக்கும் ஒரு பந்தயம் நடப்பது போலாகிறது. கடைசியில் ஒரு கக்ஷியாரை

பொன்னாங்காணிக்குப புளிவிட்டு ஆக்கினால், உண்ணாக்கு எல்லாம் தித்திக்கும்.

மற்றொரு கக்ஷியார் இழுத்துக்கொண்டே செல்வார்கள். இப்படி இழுத்துச் செல்லும் கக்ஷியே ஆட்டத்தில் ஜயித்ததாக தாத்பர்யம். பிள்ளைகள் கைகளை நழுவ விடாமலும், கீழே விழாமலுமிருக்கும்படி நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். பிறகு எல்லோரும் சரியாக நின்று எந்தக் கக்ஷி ஜயமடைந்ததோ அந்தக் கக்ஷியின் ஜயத்தைக் குறித்து கரகோஷம் செய்கிறார்கள்.

இவ்விளையாட்டுகளைத்தவிர மற்றும் பள்ளிக்கூடத்திலேயே உபாத்தியாயர் முன்னிலையில் நடத்தக்கூடிய வேறு சில விளையாட்டுகளையும் எடுத்துக்கொள்ளலாம். அவைகளில் சிலவற்றை அடியிற் கூறுவோம்.

சிறு குழந்தைகளை வரிசையாக நிறுத்தி ஒவ்வொருவனிடத்திலும் ஒரு நீண்ட கழிகொடுத்து, வகுப்பிலுள்ளவர்களில் பெரியவனைத் தலைவனாக வைத்து பாக்கியுள்ளவர்களை அவன் பின் ஒவ்வொருவராகச் செல்லும்படி சொல்லலாம். அப்படிச் செல்லும்பொழுது வாத்தியப் பெட்டியில்வாசிப்பது குழந்தைகளுக்கு மிகுந்த உத்ஸாகத்தை யுண்டுபண்ணும். சற்றுநேரங் கழித்து அவர்களை அப்படியே படுக்கச்செய்து ஏதோ ஒன்றைக் குறிவைத்து சுடுகிற பாவனையாக டப் டப் என்று சத்தமிட்டுச் சுடும்படி சொல்லலாம். மேலும் அந்நீண்ட கழிகளில் அவர்களாலேயே செய்யப்பட்ட கொடிகளையும் ஒட்டிவைக்கலாம். பிறகு கழிகளைக் கீழே வைத்து ஊர்ந்துசெல்லுவதுபோல் மெதுவாய்ச் செல்லலாம். உடனே இரண்டு கைகளையும் மடக்கி வைத்துக்கொண்டு சுற்றிச்சுற்றி வட்டமாக ஓடலாம். சற்றுக் களைப்படைந்தார்கள் என்று கண்டவுடனே வாத்தியத்தை நிறுத்தி அவர்களை அங்கங்கே படுக்கும்படி சொல்லலாம். மறுபடியும் சற்று நேரங்கழித்து எழுந்து நிற்கச்செய்து இரண்டு கைகளையும் நன்றாகப் பக்கத்தில் நீட்டி பக்ஷிகள் பறக்கும் பாவனையாக கைகளை ஆட்டிக்கொண்டும் போகச் செய்யலாம். ஒரு காலை மடித்துக் கொண்டு ஓடலாம். 'நொண்டி! நொண்டி! நொடித்துக்கொள். வெல்லம் தருகிறேன் கடித்துக்கொள்!' என்னும் குழந்தைகளின் வசனம் நமது ஞாபகத்திற்கு வரலாம். இவைகளெல்லாம் குழந்தையின் இயற்கையே. சில சமயங்களில் தாண்டித், தாண்டிப் போகும்படிக்கும், குதித்துக் குதித்துப் போகும்படிக்கும் வழக்கப்படுத்தலாம். இரண்டு வரிசையாகப் பிள்ளைகள் சற்று இடம் விட்டு எதிரெதிரே நின்று பந்துவிட்டெறிந்து பிடிப்பதும் ஓர் ஆட்டம். காலால் பந்தை உதைத்து மறுபடியும் அதை எதிரிலுள்ள பையன் மற்றொரு பையனுக்கு உதைத்துத் தள்ளுவதும் ஓர் ஆட்டம். பிள்ளைகள் ஒரு வரிசையாக நின்று ஒவ்வொருவனாகத் தனக்கு எதிரிலுள்ள தொட்டியில் பந்தை விட்டெறிந்து, அதை எத்தனை தரம் தொட்டியில் விழும்படி செய்யலாம் என்று கணக்கிடுவதும் ஒரு விளையாட்டே. மறுதினம் அதே தொட்டியைப் பின்னும் சற்று தூரத்திலே வைத்து மேலே சொன்னபடி ஆட்டத்தை நடத்தலாம்.

பிள்ளைகள் இரண்டுபேர் மணலில் உட்கார்ந்து, மணலைக் குவியலாகத் தங்கள் எதிரில் வைத்து, ஒருவன் ஒரு குச்சியை மணற்குவியலில் நுழைத்துவிட்டு, தன் தோழனைக் குச்சியைக் கண்டுபிடிக்கச் சொல்லுகிறான். கண்டு பிடிக்கிறவன் தன் இரண்டு கைவிரல்களைக் கோத்து குச்சி சொருகப்பட்ட மணற்குவியலில் இந்த விடத்தில்தானிருக்கிறதென்று சொல்லி, மேற்சொல்லியபடி கோத்துக் கொண்ட பத்து விரல்களால் ஓரிடத்தில் மூடவேண்டும். அப்படி அவன் கண்டு பிடித்தால் 'எனக்கு ஒரு மார்க்கு' என்று ஒரு பிடி மண்ணை எடுத்து தனது பக்கத்தில் வைத்துக் கொள்கிறான். இப்பேர்ப்பட்ட ப்ராசீனமான விளையாட்டுகளிலும் குழந்தைகள் அநேக விஷயங்களைத் தாங்களாகவே கற்றுக்கொள்ளுகிறார்கள்.

இவைகளைத்தவிர சற்றுப் பெரிய குழந்தைகளுக்கும் வருஷத்திற் கொருமுறை அல்லது இருமுறை விசேஷதினக் கொண்டாட்டத்திற்கென்று நாம் வழங்கும் விளையாட்டுகளை வாரந்தோறும் பள்ளிக்கூடக் கால அட்டவணையில் விளையாட்டிற்கு ப்ரத்யேகமான நேரத்தில் விளையாடலாம். 'பள்ளிக்கூடம் போய்ப் படிப்பதிலும் விளையாட்டிற்காகவும் குறிப்பிட்ட நேரமும் வேண்டுமா? ட்ரில் என்பதற்காக விடப்பட்ட ஒரு மணி நேரம் போதாதா' என்பர் சிலர். குழந்தையின் தேகப்பயிற்சியை சரியாய்க் கவனித்து வரவேண்டுமானால் அநேக விளையாட்டுகளில் ஓடி

39. பொன்னாலே கலம் உண்டானாலும் மண்ணாலே சுவர் வேண்டும்.

யாடிக் குதித்து தேகத்தின் எல்லா உறுப்புகளுக்கும் சரியான அப்பியாஸம் கொடுத்து வரவேண்டியது அவசியம். அவ்விளையாட்டுகள் ஆரம்பத்தில் உபாத்தியாயர் முன்னிலையிலேயே நடைபெறவேண்டு மாதலால் பள்ளிக்கூட நேரத்திலேயே நடத்துதல் அவசியம். வாரத்தில் இரண்டு நாட்களிலாவது கால அட்டவணையில் கடைசி மணிநேரம் இதற்கென்று பிரத்தியேகமாக ஏற்படவேண்டும். கீழ்வகுப்புக் குழந்தைகளுக்கு காலையிலுங்கூட விளையாட்டிற்காக நேரம் ஏற்பட்டிருக்கலாம். இங்கு கீழே சொல்லப்பட்டனவும் மேல் வகுப்புக் குரித்தாயினவுமான விளையாட்டுகளை பள்ளிக்கூடத்திற்கருகிலுள்ள மைதானத்தில் உபாத்தியாயர் பார்வையின்கீழ் நடத்துவது நலம்.

1. **எலுமிச்சம்பழமும் கரண்டியும்.**—அதிக ஆழமில்லாமல் சற்றுத் தட்டையாயுள்ள கரண்டியில் எலுமிச்சம்பழத்தை வைத்துக் கொண்டு குறிப்பிட்ட விடத்திற்கு எவன் முதலிற் செல்லுகிறானோ அவனே கெலித்தவன். கீழே பழம் விழுமாகில், அதைக் கையிலுள்ள கரண்டிகொண்டே எடுத்து முன் செல்லவேண்டும். பழத்திற்குப் பதிலாக பெரிய கோலிகளை உபயோகித்து இவ்விளையாட்டை அனுஸரிக்கலாம். ஒரு விஷயத்திலேயே கவனத்தைச் செலுத்திப் பழக்க இதை ஒரு அப்யாஸமாக வழங்கலாம்.

2. **உருளைக்கிழங்கு பொறுக்குதல்.**—ஒழுங்காக இடம் விட்டு ஐந்தாறு வரிசையில் வரிசைக்கு ஐந்து அல்லது ஆறு கிழங்குகள் வீதம், அவைகள் நன்றாகத் தெரியுமாறு அவைகளை ஒரு பிடி மணற் குவியல்மீது வைக்கவும். எத்தனை வரிசைக ளிருக்கின்றனவோ அத்தனை பிள்ளைகள் தேவை. அவனவன் இதில் கவனிக்கவேண்டிய தென்னவென்றால், தன் வரிசைக்கு எதிரிலுள்ள கிழங்குகள் அனைத்தையும் அவன் ஒருவனே பொறுக்க வேண்டும். ஒரு தடவையில் ஒரு கிழங்கு மாத்திரம் எடுத்துவந்து அடிவரிசைக்கு ஸமீபமாய் வைத்துள்ள ஒரு பெட்டியில் போட்டுவிட்டு மறுபடியும் அடுதத கிழங்குள்ள இடத்திற்குச் சென்று அதை எடுத்துவந்து பெட்டியினுள் போட்டு இம்மாதிரியே தடவைக்குத் தடவை ஒவ்வொன்றாக எடுத்து எல்லாக் கிழங்குகளையும் முதன் முதலிற் பெட்டியிற் சேர்ப்பவனே முதல் பரிசுக்கு உரித்தானவன். ஒரு காரியத்தில் சுறுசுறுப்பாகவும் கவனமாகவுமிருக்கும்படி இவ்வாட்டத்தில் பிள்ளைகள் பழகுகிறார்கள். கிழங்குகளுக்குப் பதிலாக சுண்ணும்பு பூசிய கற்களையும், பெரிய கோலிகளையும் உபயோகிக்கலாம்.

3. **ஒரு டம்ளரில் ஜலம் எடுத்துக்கொண்டு ஓடுதல்.**—ஜலம் கீழே சிந்தாமற்படி குறிப்பிட்ட விடத்திற்கு முதலிற் செல்லுபவனே முதற்பையனாவான்.

4. ஒரு பெரிய வட்டம் வரைந்து கிட்டிகொண்டு ஒருவன் பந்தை வெகு தூரத்திற்கப்பால் அடித்துவிட்டு, அந்தப் பந்தை மற்றொருவன் எடுத்து வட்டத்திற்குள் விழுமாறு விட்டெறியுமுன்பே, எவ்வளவு தூரம் அவ்வட்டத்தைச் சுற்றிவரலாம் என்று கணக்கிடுவதும் ஒரு நேர்த்தியான ஆட்டம். அந்த வட்டத்தின் சுற்றளவுக் கோட்டில் ஒரு பையன் நின்று பந்தடிப்பதற்கு ஒரு இடம் ஏற்பட்டிருக்கவேண்டும். வட்டத்திற்கு எதிரில் சுற்றிலும் பந்தைப் பிடிப்பதற்கு அனேக பையன்க ளிருக்கலாம். சுற்றிவருகையில் தான் சுற்றளவுக் கோட்டில் ஏற்பட்டுள்ள அடையாளத்திற்கு வருமுன்னமே பந்து விழுந்துவிட்டாலும் சரி, அடித்த பந்து பிடிபட்டாலும் சரி, இவன் வெளியே வந்துவிட்டு, பந்தை விட்டெறிந்தவன் அல்லது பிடித்தவனுக்கு இடம் கொடுக்கவேண்டும்.

5. **கோலி ஆடுவதும் ஓர் ஆட்டமே.**—ஆனால் ஸாதாரணமாக குழந்தைகள் பழகிவரும் கொடூரமான 'முட்டிவைத்தல்' என்பது மாத்திரம் ஆட்டத்திலிருந்து விலக்கப்படவேண்டு மென்பதை அவர்களுக்குப் போதிக்க வேண்டும். ஒருவனது கையின் முஷ்டியில் கோலிகொண்டு அடித்து வருத்தப்படுத்துவது குழந்தைகளின் சங்கத்திறகே வெறுப்பைத்தரக்கூடிய தெனவும் சொல்லலாம். ஆடுவதற்கேற்ற இடம் சுத்தமாக விருக்கவேண்டுமென்பதும் கவனிக்கத்தக்கது.

6. குட்டிக்கரணம் போடுதல், நொண்டி நொண்டி வருதல், மார்போடு மார்பாகத் தரையில் ஊர்ந்து பதுங்குதல், பச்சைக் குதிரை தாண்டுதல், பாண்டி ஆடுதல் என்பவைகளையும் பையன்கள் ஆடலாம். வயிறு நிறைய சாப்பிட்டுவிட்டு குட்டிக்கரணம் போடுதல்

போகா ஊருக்கு வழி கேள.

கூடாது. சரி ஸமானமான பையன்களே பச்சைக்குதிரை தாண்டலாம்.

7. இப்பொழுது புதிதாக மேல் வகுப்புப் பிள்ளைகள் பழகிவரும் ஆட்டங்களாகிய புட்பால் க்ரிகெட் என்பவைகளிலேயும் நான்காவது ஐந்தாவது வகுப்புபிள்ளைகள் கற்றுக்கொண்டு அவைகளிலும் தேர்ச்சியடையலாம். இவைகள் சம்பந்தமாகச் சில சாமான்கள் வாங்க பணச்செலவு பிடிக்குமாதலால் அதற்குத் தகுந்தபடி யோசித்தே இவ்வாட்டங்களை பள்ளிக்கூடங்களில் சேர்க்கவேண்டும்.

ஒருநாள் சாயங்காலம் பட்டம் பறக்கவிட்டும் இனிமையாகக் காலம் கழிக்கலாம். இவ்விளையாட்டுகளைப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பதில் அவர்கள் கற்கவேண்டிய நற்குணங்கள் பலவுள. தலைவனுக்குக் கீழ்ப்படிவது, ஆட்டத்திற்கேற்ற சட்டங்களை அனுஸரித்து நடப்பது, வகுப்புப் பிள்ளைகளுடன் அன்புபாராட்டுவது, ஒருமிக்கக் கூடிவாழ்வது, பிறருக்கு நன்மைசெய்யக் கருதுவது ஆகிய முக்கியமான சிலவற்றை நாம் எடுத்துக்கொள்ளலாம்.

மேற்கூறிய நற்குணங்களில் பழகிவரும் பொருட்டே இப்பொழுது நூதனமாகப் பரவிவருகிற ஸ்கௌடிங் என்னும் இயக்கம் கவனிக்கத்தக்கது. இதில் இரண்டு வகுப்புகளிருக்கின்றன. ஒன்று பன்னிரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும், மற்றொன்று அதற்கு மேற்பட்ட வயதுப் பிள்ளைகளுக்கும் பொருந்தும். பெரிய பிள்ளைகளை ஸ்கௌட் என்று வழங்குவார்கள். சிறுவர்களை வுல்ப்கப் என்று கூறுவார்கள். இரண்டு திணுஸுகளிலும் நமக்குள்ள நோக்கமொன்றே. ஆனால் இவர்களைப் பழக்கும் முறையில்தான் வேறுமை யுண்டு. சிலஜனங்கள் மேலேசொல்லிய ஸ்கௌட் சிறுவர்கள் அந்த முறைக்கேற்ற உடுப்புகள் தரித்துக்கொண்டிருப்பதைப்பார்த்து, இவர்களைச் சிப்பாய்களாகப் பழக்க இது ஒரு ஆரம்பம்போலும் என்று சொல்லுகிறார்கள். அப்படியல்ல. மேலே சொல்லியபடி நற்குணங்களில் பழகுவதற்கும், தன் காரியங்களைத் தானே செய்துகொள்ளுவதற்கும், அதிலும் முக்கியமாகப் பிறருக்கு ஒத்தாசை செய்வது என்பது நாள்தோறும் தான் கவனித்துவரவேண்டிய கடமைகளில் சிறந்ததென்று கற்றுக்கொள்ளவும் ஏற்பட்டதேயொழிய வேறல்ல. இதையும் கல்விகற்பிப்பதில் அனுஸரிக்கவேண்டிய ஒரு பாகமென்று கொள்ளவேண்டும். சிலர் இதிலேயே அதிமும்முரமாக வேலைசெய்கிறதைக் கவனித்து 'இதிலேயே இவ்வளவு ஊக்கம் செலுத்தினால் படிப்பை யார் கவனிப்பார்?' என்று சொல்லுவர். அதற்கென்றேதான் கல்வி கற்பிப்பதில் இதை ஒரு பாகமெனக் கருதவேண்டுமென்று மேலே சொல்லப்பட்டது.

பூர்வீக இந்தியக் கதைகள்.—(2) தத்வதர்சி

INDIAN HISTORICAL TALES.—2. TATVADARSI

பூர்வீக இந்தியாவில் ஜனங்கள் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என நான்கு ஜாதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் உயர்குலத்தாரென மதிககப்பெற்ற பிராமணர் பலர், தமக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுக்கடங்கி, தம் ஊரைவிட்டுப் பக்கங்களிலுள்ள வனங்களிலும், ஆற்றோரங்களிலும் ஆசிரமங்கள் கட்டிக்கொண்டு அவைகளில் வசித்துவந்தனர். அனுஷ்டானங்கள் முடிந்தபின்னர், கடவுளையும், பெரியோரையும்பற்றிய கதைகளைக் கேட்பதிலும், வேதமோதுவதிலும், சாஸ்திர தர்மங்களை அறிவதிலும் அன்னோர் தமது காலத்தைக் கழிப்பாராயினர்.

கி. மு. 500-வது வருஷத்துக்கு முன், இந்துக்களால் மிக்க உயர்ந்த க்ஷேத்ரமென மதிக்கப்பெற்ற காசிமாநகருக் கருகில் ஓர் உபவனத்தில் யாக்ஞவல்க்யர் எனப் பெயர்பெற்ற ஒரு பிராமணர் தர்மஅனுஷ்டானத்திலும் வேதசாஸ்திர ஞானத்திலும் மிகச் சிறந்தோனெனப் பெயர்பெற்று விளங்கினர். அப்பெரியோரிடம் வித்தை கற்கவேண்டுமென்று வந்து அவருக்குச் சிஷ்யர்களாய் அமர்ந்தவர் பலர். அவர்களில் சுருதிசாகரன் என்னும் ஓர் அந்தணச் சிறுவன் பார்வைக்கு அழகாயும், புத்திசாதுர்ய முடையவனாயும், பெரியோர் கற்பித்த விஷயங்களைத் தெரிந்துகொள்வதில் முதலவனாயுமிருந்தான். அவனிடத்தில ஆசிரி

போகாத இடத்திலே போனால் வராத சொட்டு வரும்.

யருக்கு அன்பு அதிகம். அவனைத் தமது பிரதம சிஷ்யனாக மதித்து, தமக்குச் செய்ய வேண்டிய குற்றேவல்களில் அவனை விசேஷமாக அனுப்புவது வழக்கம். அவைகளை ஒழுங்காகச்செய்து வருவானாதலால் நமது சுருதிசாகரனிடத்தில் ஆசிரியருக்குப் பிரியம் அதிகரித்தது. ஆசிரியன் தக்க சிஷ்யனை அடைந்து அவனிடம் தன் ஞானத்தைப் புகட்ட வேண்டுமென்பது அவ்வந்தணரின் கொள்கை. அதன்படி அச்சிறுவனுக்கு எல்லாவற்றையும் புகட்டியதுடன் அச்சமயத்தில் புதிதாக இத்தேசத்தில் உலவிவந்த சில மதங்களையும் கண்டித்து தமது மத ஸித்தாந்தத்தைப் போதித்துவந்தனர். அவ்விஷயங்களைக் கருத்துடன் கேட்ட அச்சிறுவன் பிறமதங்களிடத்தில்அதிக வெறுப்புவாய்ந்தவனாய் வைதிக மதப்பற்று மேன்மேலும் அதிகரித்தவனாய் ஆயினான்.

அச்சிறுவன் ஒருநாள் காசிமாநகரில் தன் பெற்றோர் வீட்டிற்குப் போயிருந்தான். அன்று காலையில் வீட்டு வாசலில் நின்றுபார்க்க, திரள் திரளாக ஜனங்கள் மேற்கு வாயிலை நோக்கிப் போவதைக் கண்டான். யாது விசேஷமெனக் கேட்க, மஹா ஞானியாகிய கௌதமபுத்தர் அவ்விடம் வந்திருக்கின்றனர் என்றும், அவ்வூருக் கருகாமையிலுள்ள லாவண்ய உபவனத்தில் வணிகச் சிரேஷ்டனான குமாரகுப்தனுடைய அழகிய இல்லத்தில் இறங்கியிருக்கின்றனர் என்றும் அவரைக் காணவே எல்லோரும் போகிறதாகவும் அறிந்தான்.

அப்பொழுது நமது அந்தணச் சிறுவனுக்குத் தோன்றிய எண்ணங்கள் பல. இந்தக் கௌதமரைப்பற்றிப்பல விஷயங்கள் கேள்விப்பட்டிருந்தான். வைதிக மதப்பற்றுடையோனாய் இளம்பிராயத்தில் தன் இராஜபதவியைத் துறந்து தவஞ்செய்யச்சென்ற இந்த க்ஷத்திரியன் மதப்பற்று அற்றோனாய், புதிய மத ஸ்தாபனம் செய்து ஆர்யாவர்த்தமான இப்புண்ய பூமியைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பு என்று தம் உபாத்தியாயர் சொன்ன விஷயம் மனதுக்குவர, தான் ஏன் நேரில்போய் அவருடன் வாதம்புரிந்து வைதிகமத ஸ்தாபனம்செய்து அவரை நல்வழிக்குக் கொண்டுவரக் கூடாதென்று தோன்றிற்று.

இப்புத்தர் பலவிடங்களிலும் சென்று தம் மதத்தைப் போதிக்குங்கால் தாழ்ந்த ஜாதியார் பலரும், மேன் குலத்தாரில் சிலரும் அவரைக் குருவென நினைத்து அவர் வழியில் நடந்துகொண்டிருப்பதாகக் கேட்டிருந்த இவன் அவர் எப்படிப்பட்டவர், பெரியோரான பிராமணர்களைக் கூட எவ்வாறு தம் மதத்தில் சேர்த்துக்கொண்டார் என்றறிய வேண்டுமென்னும் அவா உதித்தது.

தமது ஆசிரியர் கற்பித்த அபூர்வ விஷயங்களைக் கொண்டு குமதபோதகரான புத்தரையே நல்வழி திருப்பினால் தனது ஆசிரியர் பெயர் சிறக்கும். அதுவே தான் அவருக்குக் கொடுக்கக்கூடிய உயர்ந்ததோர் குருதக்ஷிணையாகும் என்னும் எண்ணம் உண்டாயிற்று.

இப்படிப் பலவிதமாய் நினைத்துக்கொண்டு, போய்க்கொண்டிருந்த கூட்டத்தில் கலந்து, லாவண்ய உபவனத்தை நோக்கிச்சென்றனன் சுருதிஸாகரன்.

நகரத்தைவிட்டு வெளிப்புகுங்கால் அவன் பார்த்த காட்சி அவனுக்கே ஆச்சரியத்தை விளைவித்தது. பெயர்பெற்ற காசிமாநகரத்தில் விஜயம் செய்த ஞானவிருத்தர்கள் பலர். அப்படிப்பட்டவர்கள் வரும்போதெல்லாம் அவர்கள் உபன்யஸிக்கும் விஷயங்களைக் கேட்பதற்கென ஒன்றுகூடும் ஜனத்திரள் மிகப் பெரியது. ஆயினும் இப்பொழுதுஅவன் கண்ணிற்பட்ட கூட்டத்திற்கு முந்தியவைகள் ஒரு பொருட்டாகச் சொல்லமுடியாது. கங்காநதிக் கரையோடு போன அந்த இராஜமார்க்கத்தில் "எள்ளுப் போட்டால் எள்ளு விழாதெனக்" கூறும் வண்ணம் நினைக்கக் கூடியதாய், கண்ணுக் கெட்டியதூரம் பரவியிருந்தது அந்த ஜனக்கூட்டம். இவர்கள் மத்தியில் தான் எப்படி அவரைப் போய்ப் பார்ப்பதென நம் சிறுவனுக்குச் சிந்தையு முண்டாயிற்று.

மறுபடியும் கூட்டத்தைப் பார்த்தான். வைதிகமத பிரவர்த்தகர்களான பெரியோரைப் பார்க்கவந்த கூட்டங்களில் அநேகமாய் முதல் மூன்று வருணத்தாரே இருப்பது வழக்கம். நாலாவது வருணத்தார் அக்கூட்டங்களுக்கு வருவதேயில்லை யெனச் சொல்ல லாகாது. ஆயினும் அவர்களில் சிறுபான்மையரே அச்சமயங்களில் காணப்படலாம். ஆனால் இப்பொழுதோ அவ்வருணத்தார் கூட்டமே அதிக

போக்கணம் கெட்டவன் ராஜாவிலும் பெரியவன்.

மாயிருந்தது. பட்டணத்திற்கு வெளியே குடிசைகள் கட்டிக்கொண்டு ஏனையோரால் நிக்ருஷ்டர் எனக் கருதப்பெற்ற சண்டாளர் அநேகர் "பௌத்தமதாசாரியரே மங்களம்! கௌதம பிரானே மங்களம்!" எனக் கோஷித்துக் கொண்டு ஒரு புறம் போய்க்கொண்டிருந்தனர்.

இக்கூட்டத்தி னடுவில் மேல் வருணத்தார் சிலர் கலந்திருந்தனர். அவர்களில் அநேகரை நம் அந்தணச் சிறுவன் அறிவான். விசேஷமான வைதிக ஞானமாவது, அனுஷ்டான சீலமாவது உடையவர் அவர்களுக்குள் அதிகம் இல்லை. பலர் வைதிகமதத்தின் கடுமையான கட்டுப்பாட்டுக்குள்ளடங்காது போனவர். தம் குலத்தாரால் கர்மசண்டாளரென நிந்திக்கப்படுபவர்.

கடைசியாகக் கூட்டம் உபவனத்தையடைந்தது. *ததாகதர் வந்தனரெனக் கேள்வியுற்ற அத்தேசத்தார் பலரும் அங்கு வந்திருந்தனர். அவர்களினிடையே மெதுவாக நகர்ந்து புத்தர் இருந்த விஸ்தாரமான மண்டபத்துக்கு வந்து சேர்ந்தான் நமது சுருதிஸாகரன்.

அப்பொழுது அவனுக் கெதிர்ப்பட்ட தோற்றம் அவனுக்கும் மிகவும் வியப்பைத் தரத்தக்கதா யிருந்தது. மிகுந்த வணக்கத்துடனும் பயபக்தியுடனும் யாது சொல்லப் போகின்றார் என வெகு கவனமாய் எதிர் பார்த்து உட்கார்ந்திருந்த ஜனத்திரளின் நடுவே ஓர் அற்புதமான மஹாபுருஷர் உட்கார்ந்திருந்தார். காவிவஸ்திரம் தரித்த இவர் சரீரம் மெல்லியதாயும் கம்பீரமாயுமிருந்தது.

ஆனால் அவர் முகம் சாந்தமும் ஞானமும் விளங்க திவ்யதேஜோமயமா யிருந்தது. பார்ப்பவர் கண்ணைக் கவரும்படியான அவருடைய திவ்ய பார்வையும் மெதுவான குரலில் அவர் உச்சரித்த வார்த்தைகளும் மனக்கவர்ச்சியை உண்டுபண்ணின. அவர்தாம் பௌத்த ஞானியென்று அறிந்துகொள்வது சுருதிஸாகரனுக்கு ஒரு பெரிய காரியமல்ல. ஆயினும் அவர் யாது சொல்லுகிறார் என்று கேட்டுத் தமது சமய விரோதியான அவரை, அவருடைய சிஷ்யர்களும் அபிமானிகளுமுள்ள சபையில் கர்வபங்கம் செய்து தனது ஆசிரியன் கற்பித்த வித்தையை ஸபலமாக்கவேண்டுமென்னும் எண்ணம் மறுபடியும் அவன் மனத்துக்குவர, நடப்பதை யெல்லாம் ஸாவதானமாகக் கேட்டுக்கொண்டு வந்தனன்.

புத்தரான சாக்கிய முனியும் அச்சமயம் தாம் புதிதாக ஏற்படுத்தின சித்தாந்தத்தைப் போதித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அவர் சொன்ன விஷயங்கள் பின்வருமாறு:—

ஜனங்களே! அபிமானிகளே! உலகத்தில் பாபம் குடிகொண்டிருக்கின்றது. புண்ணியம் தத்தளிக்கின்றது. மதங்களின் பெயரால் செய்யும் அக்கிருத்யங்கள் பல. உதாரணமாய்ப் பாருங்கள். பாபிகள் பலர் ஏற்பட்டிருக்கின்றனர். பிறப்பைக்கொண்டே மனிதர் "நான் பெரியவன், நான்பெரியவன்", எனவாதிக்கின்றனர். ஒரேவிதமான அங்கங்களுடன் பிறந்திருக்கின்ற மனிதரில் பிறப்பினால் மாத்திரம் எவரேனும் பெரியவராயிருக்கமுடியுமா? மதி, வித்தை, பணம், ரூபம் இவைகளினால் பேதமேற்படலாம். மூடனாயிருந்தும் துஷ்டனாயிருந்தும் நான் உயர்ந்த ஜாதியான் என்று சொல்லிக்கொண்ட ஒருவன் பிறப்பினாலேயே மற்றவரை அவமதித்தல் தகுதியா?

இது மாத்திரமல்ல. ஆத்மசக்தி இல்லாது, வேறு சக்தியைப் பரமென நினைத்து, அதனாலேயே மோக்ஷ சாம்ராச்சியத்தை அடைய நினைக்கின்றார்களே! யாகமென்னும் கொடிய தொழில் செய்து ஜீவஹத்தி செய்கிறார்களே! ஜீவஹத்தி எந்த விதத்தாலாவது உயர்ந்ததாகுமா? ஜீவதயை அல்லவா மிக்க உயர்ந்த தர்மம். மனம், வாக்கு, காயம் இவைகளினாலே பாபம் நேரிடாது காப்பாற்றிவருவதல்லவா நிஜமான ஸத்யம்?

இதையெல்லாம் கேட்ட சுருதிஸாகரன், பரபரப்புடன் எழுந்து, கௌதமரைத் தான் சில கேள்விகள் கேட்கவேண்டுமெனத் தெரிவித்தான். சாக்கியமுனியும் கேட்கலாமெனவே, அவர்களுக்குள் பின்வருமாறு விவாதம் நடந்தது:—

சுருதி.—ஐயா கௌதமரே! ஜாதி வித்யாஸம் கிடையாதென்று சொல்லுகிறீரே, பின் அது எப்படி வந்தது?

கௌ.—வாரீர், சுருதிசாகரரே! அது மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட ஒரு விஷயமேயன்றி, பிரகிருதியால் ஏற்பட்டதன்று. அப்படி யிருந்தால் தாழ்ந்த ஜாதியாரை உயர்ந்த

* கௌதமபுத்தர்.

போக்கற்ற நாய்க்கு, போனதெல்லாம் வழி.

ஜாதியிலிருந்து தெரிந்துகொள்வதற்காக ஏன் வித்தியாஸமான சின்னங்கள் ஏற்படக் கூடாது ?

சுருதி.—ஐயா கௌதமரே! ஜாதி பேதம் வேதங்களெல்லாம் உண்டென்று முறையிட வில்லையா? ஆங்காங்கு ஆசிரியர்கள் ஜாதி வித்தியாஸம் பிரமாவினால் கல்பிக்கப்பட்டது என்றுகூடக் கூறவில்லையா ?

கௌ.—ஆமாம், கூறினாலென்ன ? யுக்திக்கும் அனுபவத்திற்கும் எட்டாத ஒரு விஷயத்தை சுருதி சொல்லுகிறதென்பதற்காகவே ஒப்புக்கொள்வதாகுமா ? பிராமணர்கள் உயர்ந்த ஜாதி, சுவேதவர்ணம், பிரம்மாவின் புத்திரர்கள், அவர் முகத்திலிருந்து வந்திருக்கிறார்கள் எனச் சொல்லுகிறதே! பிராமண ஸ்திரீகள் ஏனைய ஸ்திரீகளைப்போல் பிரஸவ வேதனைப் பாதை படுவதில்லையா ?

சுருதி.—ஆமாம், படுகிறதுண்டு.

கௌ.—நமது தேசத்தை ஒட்டின தேசங்களில் ஜனங்கள் இல்லையா ? அவர்களுக்குள் இம்மாதிரி வித்தியாஸம் யாதொன்றும் இல்லையே ?

சுருதி.—இல்லைதான்.

கௌ.—நல்லது! கொலை, களவு, விபசாரம், பொய், பேராசை, பொறாமை உள்ள மனிதன் உயர்ந்த ஜாதியாயிருந்தால் மறு ஜன்மம் எடுப்பானா ?

சுருதி.—இவ்விஷயத்தில் எல்லாரும் ஒன்றே.

கௌ.—தர்மானுஷ்டானம் செய்து தர்ம வழியில் நடந்துகொண்டு இருப்பவர், தாழ்ந்த ஜாதியாயிருந்தால் மறு ஜன்மத்தில் நல்ல ஜாதியடைவார்களா ?

சுருதி.—ஆம். எந்த ஜாதியாயிருந்தாலும் ஸத்கர்மம் ஜன்மாந்தரத்தில் நன்மையையே பயக்கும்.

கௌ.—அப்படியாயின் பிராமணன், எந்த வழியில ஏனையோரைவிடப் பரிசுத்தன்? நல்லது! நம் தேசத்தில உயர்ந்த ஜாதியார் மாத்திரந்தானா ஸத்ஸங்கம், ஸத்காரம், (உதவி) தர்மம் இவைகள் செய்யக்கூடும்; அல்லது எல்லோரும் செய்யலாமா ?

சுருதி.—எல்லோரும் செய்யலாம். இவ்விஷயத்தில் எல்லோரும் ஒன்றே.

கௌ.—சரி. அப்படியாகில் உயர்ந்த ஜாதி யாரெனப்படுபவரைப்போல் ஏனையோரும் பரிசுத்தமான தேஹிகள் என்று ஒப்புக்கொள்ளும். நல்லவாஸனையுடைய சந்தன விறகைக் கொண்டு ஏற்றப்படும் அக்கினியைப் போல், நாய், பன்றி முதலிய ஜந்துக்களிருக்கும் இடங்களிலுள்ள விறகுகளினாலே சாதாரண ஜனங்கள் மூட்டும் நெருப்பும் பிரகாசித்துக்கொண்டு பாவனமாயிருக்கிறது அல்லவா ?

சுருதி.—கௌதமரே, தாம் சொல்லுவது சரியாகத்தான் தோன்றுகிறது.

கௌ.—நல்லது! ஒரு குதிரை கழுதையுடன் சம்பந்தப்பட்டால் அவைகளுக்குப் பிறப்பது அவ்விரண்டு மிருகங்களிலிருந்தும் வித்தியாஸமான கோவேறுகழுதை யாகும். அதுபோல் இரண்டு ஜாதி ஸ்திரீ புமான்களுக்குள் ஏற்பட்ட சம்பந்தத்தால் உண்டான குழந்தைகள் தங்களுடைய ஜாதியைக் குறிக்கும்படியான வித்தியாஸம் உடையனவாயிருக்கின்றனவா ?

சுருதி.—இல்லை.

கௌ.—அண்ணன் தம்பிகள் இருவர் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவன் படித்தவன். மற்றொருவன் படியாதவன். இவர்களில் யாருக்கு மரியாதை உண்டு.

சுருதி.—படித்தவனுக்குத்தான். கேட்பானேன் ?

கௌ.—அப்படிப் படித்தவன் கெட்ட சுபாவமுடையோனாய், துஷ்கர்மங்களில் பிரவர்த்தித்தவனாய் இருக்க, படியாதவன் யோக்யனாயும் நல்ல வழிகளில் மனஞ் செலுத்துபவனாயுமிருந்தால், பிராமணர்கள் அவ்விருவரில் யாருக்கு மரியாதை செய்வார்கள் ?

சுருதி.—கெட்டவனை யார் மதிப்பார்கள்? படியாதவனாயிருந்தாலும் ஸத்தாக இருப்பவனே சிரேஷ்டன்.

கௌ.—அப்படியா! அப்படி ஒப்புக்கொள்வதினால் மனிதருக்குள் ஒரு ஜாதி பரிசுத்தம், மற்றொன்று இல்லையென்று சொல்வதெப்படி?

என்பதாகச் சொன்னதைக் கேட்ட சுருதிஸாகரன், மேலொன்றும் பேசமுடியாதவனாய் மெதுவாக நகர்ந்து போய்விட்டான்.

II.

அன்று முழுவதும் மேல்நடந்தவைகளையே நினைத்துக் கொண்டிருந்த சுருதிஸாகரன்

கௌதம புத்தருடைய சாந்தத்தையும், முகவசீகரத்தையும், ஸாத்வீக புத்தியையும், ஆத்மாக்களிடத்தில் உள்ள தயையையும், மிகுந்த வியப்போடு நினைந்துநினைந்து ஆழ்ந்தயோசனையிலிருந்தான். எனவே, மறுநாள் பொழுது விடிந்ததும் நித்யகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, சீக்கிரமாகவே லாவண்ய உபவனம் வந்துசேர்ந்தான். மறுபடியும் புத்தரோடுபேசி, தத்வங்களைப்பற்றி அவரபிப்ராயம் என்னவென அறிய ஆவல் மிகவும் மேம்பட்டது. வந்தபொழுது ஏற்கனவே பெரிய கூட்டம் கூடியிருந்தது. சுருதிஸாகரன் வந்ததும், கௌதமர் மிருதுவாய் "வாரீர் சுருதிஸாகரரே! என்ன, நேற்று நீர் செய்த வாதம் எப்படியிருந்தது ? இன்னும் மனுஷ்யன் நாலு பேதமான வர்ணமாக சிருஷ்டிக்கப்பட்டானென்றே நம்புகிறீரா?" என, சுருதிஸாகரன் "கௌதமரே! அதிருக்கட்டும். உலகத்தில் மோக்ஷத்தையடையப் பல வழிகள் உண்டு. ஞானத்தினாலேயும் யோகத்தினாலேயும் கடவுளை அறியலாம் அவனைத் த்ருட பக்தியினாலே அடையலாம். ஜாதி வித்தியாஸத்தினாலேயாவது வேறு அதுபோல் சாதாரண விஷயத்தினாலாவது ஒரு பெரிய மதத்தைக் கண்டிப்பது இயலாது. வைதிக மதம் பலவழிகளிலும் நாம் கடவுளை அடயலாமென போதிக்கின்றது. அதனாலல்லவோ உலகத்தில் பல ஆசிரியர்களும் பல மதப்ரவர்த்தகர்களும், ஏற்பட்டனர்? எல்லோரிலும் நீர் சிறந்தவரென்றும், நீர் சொல்லும் வழியே உத்தமமான வழியென்றும் சித்தாந்தப்படுத்தினாலல்லது அதற்கு ஆதிக்யம் ஏற்படாது" என,

கௌ.—நீர் என்ன சொல்லுகிறீர்? உங்கள் ஆசிரியர்களெல்லாம் ஒரே வழியாகப் பேசுகிறார்களா ? தைத்திரியம், சாந்தோக்யம் முதலிய உபநிஷத்துக்கள் எல்லாம் ஒரே மோக்ஷ வழியைக் காண்பிக்கிறதென்றா சொல்லுகிறீர்?

சுருதி.—ஆமாம்.

கௌ.—நல்லது சுருதிசாகரரே! மூன்று வேதமும் அறிந்த பிராமணர்களாகட்டும், அவர்கள் ஆசிரியர்களாகட்டும், ஏழு தலைமுறைக்கு அவர்கள் மூதாதைகளாகட்டும், பிரமனை நேரில் பார்த்தவர்கள் யாராவது உண்டா ?

பிராமணர்களுடைய புராதன ரிஷிகள், மூன்று வேதமும் அறிந்தோர்கள். வேத உச்சாடனம் செய்தவர்கள். யாருடைய வாக்கைக் கேட்டு தற்காலத்திய பிராமணர்கள் அவர்களைப் போலவே ஸ்வரத்துடன் அவ்வேதங்களை ஒப்புவிக்கிறார்களோ, அப்பேர்ப்பட்ட ரிஷிகள் எங்கேயாவது, "எங்களுக்குத் தெரியும் ! நாங்கள் பார்த்திருக்கிறோம் ! ப்ரும்மம் எங்கேயிருக்கிறது, எங்கிருந்து வந்தது, எங்கே போகிறது என்று எங்களுக்குத் தெரியும்" என்று சொல்லியிருக்கிறார்களா ?

சுருதி.—இல்லை.

கௌ.—அப்படியானால் என்ன சொல்லுகிறீர் ? அநேக தலைமுறைகளாக பிராமணர் ஒருவராவது பிரமத்தை நேரில் பார்த்ததில்லை. புராதன ரிஷிகளும் பார்த்ததில்லை. அப்படியிருக்க, வேதமோதிய வேதியர் "எதை நாங்கள் பார்த்ததில்லையோ, எதை நாங்களறியமாட்டோமோ, அத்துடன் ஐக்யத்திற்கு நாங்கள் வழிகாட்டுவோம்" என்று சொல்லுகிறார்கள் அல்லவா ? சில அந்தகர்கள் ஒருவரை ஒருவர் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். முன்னிருப்பவனுக்கும் கண் தெரியாது. நடுவில் இருப்பவனுக்கும் கண் தெரியாது. கடையில் இருப்பவனுக்கும் கண் தெரியாது. அதுபோலவே பிராமணர்களுடைய வாதம் கண்மூடி வாதமாயிருக்கிறது! முந்தின ரிஷிகளும் கடவுளைப் பார்த்ததில்லை. நடுவில் உள்ள ஏழு தலைமுறைக்கு முந்தின ஆசிரியர்களும் பார்த்ததில்லை. இப்போதுள்ள பிராமணர்களும் பார்த்ததில்லை. இவர்களுடைய வார்த்தை பிரயோஜனமற்ற பொய்யாகத் தோன்றவில்லையா ?

சுருதி.—அப்படித்தான் நினைக்கவேண்டியிருக்கிறது.

கௌ.—நல்லது. ஒரு மனிதன் "ஆஹா! இந்தத் தேசத்திலுள்ள அத்யந்த ரூபலாவண்யமுள்ள ஸ்திரீயை அடைய என் ஆவலுக்கு அளவு உண்டோ?" என்று சொல்லுகிறான். ஜனங்கள் "அடே! அப்பேர்ப்பட்ட ஸ்திரீ, நீ அடையவேண்டும் என்று ஆஸ்தைப்படப்பட்டவள் அவள் யார் ? எந்த ஜாதியைச் சேர்ந்தவள் ?" என்று கேட்க, "எனக்குத் தெரியாது" என்று அவன் சொல்லவும், மறுபடியும் அவர்கள், "இந்த ஸ்திரீரத்னத்தின் பெயர் உனக்குத் தெரியுமா ? கோத்ரம் தெரி

யுமா? அவள் உயரமா? குட்டையா? கறுப்பா? மாநிறமா? சிவப்பா? எந்த ஊரில், எந்தப் பட்டணத்தில் வசிக்கிறாள்?" என்று கேட்டால், அப்பொழுதும் அவன் "தெரியாது" எனச் சொல்லுகிறான். ஜனங்கள் "அடே! யாரென்று தெரியாமல், எங்கிருக்கின்றாளெனத் தெரியாமல், "ஒரு ஸ்திரீயை நினைத்து மோஹிக்கிறேன்" என்று மாத்திரம் சொன்னாயாகில், நீ பரம முட்டாள் என்று சொன்னால், அது சரியல்லவா?

சுருதி.—ஆமாம், சரிதான்.

கௌ.—அம்மாதிரி கடவுள் யார்? எங்கிருப்பவர்? எப்பேர்ப்பட்டவர் எனத் தெரியாத இவ்வேதமோதிய வேதியர் "பிரமத்தையடையுங்கள். பிரமமே பெரியது" எனச் சொன்னால் அது நம்பத்தகுந்த விஷயமா?

சுருதிஸாகரன் ஒன்றும் பதில் சொல்லாமலிருந்தான். அப்பொழுது,

கௌ.—இதோபக்கத்திலோடுகின்றது இப்பெரியநதி, இதன் அக்கரையில் வேலையிருந்து அங்கே போகவேண்டுமென்னும் விருப்பமுள்ள ஒருவன் இக்கரையில் நின்றுகொண்டு எதிர்க்கரையை நோக்கி "ஏ கரையே! இங்கு தயவுசெய்து வரவேண்டும்" எனப் பரிவுடன் பிரார்த்தித்தானானால் வந்துவிடுமா?

சுருதி.—வராது.

கௌ.—அதேமாதிரியாக, மூன்று வேதமும் உணர்ந்த பிராமணர், பிராமணனுக்கு ஏற்ற குணங்கள் இல்லாமல் தீயகுணங்களுடையோராய், "ஹே இந்திரனே! ஹே சந்திரனே! வருணனே! ஈசானனே! ப்ரும்மமே என்பதாக மாத்திரம் ஸ்தோத்ரம் செய்துகொண்டிருந்தால், தர்மத்தில் நில்லாமல் தீமையைக் கடைப்பிடிப்பவர், ஜபம் செய்வதனாலும் தெய்வத்தின் பேரைச் சொல்வதனாலும் மாத்திரம் ப்ரும்மத்தோடு ஐக்கியமடையலாமென்று நினைக்கிறீரா? அது எங்கேயாவது நடக்குமா?

சுருதி.—நடவாதுதான்.

கௌ.—இந்திரியவசனாய் காமபரவசனாய், அஸூயை, கர்வம், மதம் முதலிய துர்க்குணங்கள் மேலிட்டவன், மோக்ஷஸாதனம் பெற முடியுமா? பிராமணர்களில் கோபதாபங்களுடையவர்களாய் பாபிகளாய் கட்டுக்கடங்காதவர்களாய் இருக்கிறார்களல்லவா? அப்பேர்ப்பட்டவர்களுக்கும் ஸத்வகுணங்கள் நிறைந்த ப்ரும்மத்திற்கும் எந்த விதத்தில் ஒற்றுமையுண்டு?

வேதம் தெரியும் காரணத்தினாலேயே மோக்ஷமடையலாம் என நினைக்கும் பிராம்மணர் நிஜமாகவே போக்கற்ற ஒரு காட்டின் வழியாக நடந்து நாசமடைகிற வழிப்போக்கனை ஒத்திருக்கிறார்கள்.

சுருதி.—உருக்கத்துடன்) ஆனால் கௌதம புத்தரே! முக்திக்குத் தம்மால் வழிகாட்ட முடியுமா?

கௌ.—முடியும்.

சுருதி.—ஆயின் அப்படியே செய்து, பிராம்மண குலத்தைக் காப்பாற்றுவது தர்மமல்லவா?

கௌ.—சொல்லுகிறேன் கேளும். லோகத்தில் ஒரோர் காலங்களில் ஓர் "ததாகதர்" அவதரிக்கிறார். அவர் மஹாஞானி. சர்வக்ஞர். ஸதானந்தர். அஞ்ஞானிகளான * மர்த்தியர்களுக்கு இணையில்லாத வழிகாட்டி. தேவர்களுக்கும் மனுஷ்யர்களுக்கும் ஆசாரியன். புத்தர் அவர் தாமாகவே இவ்வண்டத்தையும் அதிலுள்ள தேவதைகளையும், பல லோகங்களையும், எதிரில் நிற்பதுபோல நன்றாய்ப் பார்த்துத் தெரிந்துகொள்ளுகிறார். கீழ் லோகத்தையும் அதிலுள்ள பூதங்களையும், மேல் லோகங்களையும், ப்ரும்மத்தையும், மற்ற ஜந்துக்களையும், மனுஷ்யர்களையும், தேவதைகளையும் அறிந்து கொள்ளுகிறார். அதன் பிறகு, தம் ஞானத்தைப் பிறருக்கு அறிவிக்கிறார். சத்யத்தை உள்ளபடி சொல்லுகிறார். உயர்ந்ததானதோர் ஜன்மத்தையும் அதனுடைய பூரண பரிசுத்தமும் சொரூபமும் தெரியும்படி செய்கிறார்.

இச் சத்தியத்தைக் கேட்டவன் கிருஹபதியானாலும், சிறுவனானாலும், தாழ்ந்த ஜாதியானாலும் கேட்டவுடன் ததாகதரிடம் நம்பிக்கையுண்டாகி பின்வருமாறு யோசிக்கிறான்:—

"காமாந்தகாரமான கிருஹஸ்த தர்மம் தடைகள் நிறைந்திருக்கின்றது. உலகத்தைத் துறந்தவரின் வாழ்நாளோ காற்றுப்போல் அடக்கம் அற்றிருக்கின்றது. வீட்டில் இருக்கின்ற மனிதனுக்குத் துரியஜன்மம் சம்பூர்ணமாகவும் பரிசுத்தமாகவும் குறைவில்லாமலும் எப்படி ஏற்படும்? ஆகையால் என்னுடைய

* மனிதர்.

போதகருக்கே சோதனை மிஞ்சும்.

கேசத்தை எடுத்து, காஷாயத்தை உடுத்தி, கிரஹத்தைவிட்டு வானப்ரஸ்தனாவேன்" எனச் சிந்தித்து,

அதன்மேல், சொற்பமோ அதிகமோ, தன்னுடைய தனத்தையெல்லாம் விட்டு, பந்துஜனத்தையும் துறந்து, மொட்டையடித்துக்கொண்டு, காஷாய வஸ்திர மணிந்தவனாய் வானப்ரஸ்தனாகிறான்.

அப்படியானவன், பிறகு மோக்ஷத்தின் கட்டுப்பாட்டுக் கடங்கி தன்னைக் கட்டுப்பாடு செய்துகொள்ளுகிறான். தர்மமே அவனுக்குச் சந்தோஷம். தான் தள்ளவேண்டிய விஷயங்கள் எதைக் கண்டாலும் அதை அணுகுகிறதில்லை. தர்ம மார்க்கத்தை யனுசரித்து அதில் பழகுகிறான். வார்த்தையிலும் காரியத்திலும் சத்வத்தாலேயே (Holiness) தன்னைச் சூழ்ந்துகொள்ளுகிறான். பரிசுத்தமான வழிகளினாலேயே உயிரைக் காப்பாற்றுகிறான். அவன் குணம் நல்லது. ஐம்பொறிகளும் அவனுக்கு அடக்கம். மனஸ்வியாய், ஸ்வசனாய் இருக்கும் அவன் எப்பொழுதும் சந்தோஷமாயிருக்கிறான்.

அவன் உயிர்களைக் கொல்வதில்லை. கத்தியும் கதையும் அவன் ஆயுதங்களல்ல. பூததயையும், பச்சாத்தாபமுமே அவனுக் கதிகம். இதுவே அவன் லக்ஷணம்.

தனதல்லாததை அவன் திருடுவதில்லை. கொடுத்ததையே வாங்கிக்கொள்வான். கிடைத்தமட்டும் ஸந்தோஷம். இம்மாதிரி தன் வாழ்நாளை யோக்யதையுடனும் பரிசுத்த மனத்துடனும் கழிக்கிறான்.

இதுவும் அவன் லக்ஷணம்.

அன்னிய ஸ்திரீகளின் இச்சை அவனுக்குக் கிடையாது. ஸ்திரீ ஸங்கத்தை வெறுத்து, பரிசுத்தனாய் பிரமசாரியாய்க் காலங்கழிக்கிறான்.

இதுவும் அவன் லக்ஷணம்.

பொய்யைத் தவிர்த்து மெய்யையே பேசுகிறான். துரோஹ எண்ணம் இல்லாமலும் நம்பிக்கையுள்ளவனாகவுமுள்ள அவன் தன்னைப்போன்ற மனிதரை ஏமாற்றுகிறதில்லை.

இதுவும் அவன் லக்ஷணம்.

பிறர்பேரில் தூஷணை சொல்லுகிறதில்லை. ஒருவரிடம் சொல்வதைக் கேட்டு மற்றோரிடம் சொல்லி இரண்டிடத்தி லுள்ளோர்களுக்கும் சண்டை மூட்டுவதில்லை. இம்மாதிரிப் பிரிந்தோரைச் சேர்த்துவைத்தும், ஒன்று கூடினவரைப் பாலித்தும், சாந்தமான வார்த்தையுடன், மனிதர்களுக்குள் கூட்டுறவை உண்டுபண்ணுபவனாயு மிருக்கிறான்.

இதுவும் அவன் லக்ஷணம்.

ஒருவரையும் கடிந்து வார்த்தை சொல்வதில்லை. சாந்தமாகவும், இனிமையாகவும், மனத்துக்குச் சந்தோஷமாகவும், மரியாதையாகவும், ஜனங்களுக்குப் பிரீதியுண்டாக்கக்கூடிய வார்த்தைகளையே அவன் பேசுகிறான். பிரயோஜனமற்ற வார்த்தைகளைப் பேசுவதில்லை. காலமறிந்து பேசுவான். உள்ளதையே பேசுவான். தர்மத்தையே பேசுவான். ஸத்சரித்திரத்தையே பேசுவான். காலத்தில் உபயோகமுள்ளதும், சரியானதும், ஞானமுடையதுமான வார்த்தைகளையே அவன் பேசுவான்.

இதுவும் அவன் லக்ஷணம்.

இம்மாதிரியாகப் பல விஷயங்களையும்பற்றி கௌதமர் விசேஷமாகச் சொல்லச் சொல்ல, சுருதிஸாகரர் மனங் கரைந்து, "ஸ்வாமீ! அற்புதமானது தங்களுடைய வாக்கு. விழுந்து போனதை மறுபடியும் நேராக நிறுத்திவைப்பவரையும், மறைந்திருப்பதை எடுத்துக் காட்டுபவரையும், துன்மார்க்கத்தில் போனவனுக்கு நல்வழி காட்டுபவரையும், அந்தகாரமான விடத்தில் விளக்கு ஏற்றிவைப்பவரையும்போல தம்மால் அநேக ப்ரகாரங்களாக நிஜம் எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆகையால் அடியேனை இன்று முதல் உயிர் உள்ளளவும் தம்முடைய சிஷ்யனாக ஏற்றுக் கொள்ளவேண்டும்" என உரைத்தான்.

கௌதமபுத்தரும் சந்தோஷத்துடன் ஒப்புக்கொள்ளவே, சுருதிஸாகரன் "தத்வதர்" என்னும் புதிய நாமத்துடன் பெயர்பெற்ற ஒரு பௌத்த ஸந்யாசியாய் உலகெங்கும் சென்று, தூர தேசங்களிலும் கௌதம புத்தருடைய மதத்தைப் பரவச்செய்து, கடைசியாக நிர்வாண தசையை அடைந்தான்.

இனிய தமிழ்ப் பிரசுரங்கள்

விக்கிரமசிங்கன் கோட்டை மர்மம் ...	ரூ.	1
தனபாக்கியம் (8-அழகிய படங்களுடன்)...	,,	2
ஷண்முகசுந்தரம் (8-அழகிய படங்களுடன்)	,,	2
தஞ்சைநாயகர் தாழ்வு (4-படங்களுடன்)...	,,	1

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

40. போரைக் கட்டிவைத்துப்போட்டுப் பிச்சைக்குப் போவானேன்?

பார்க்கவன்
அல்லது
பரம ரஹஸ்யம்

(281-ம் பக்கத் தொடர்ச்சி.)

'நல்ல வெளிச்சம் வேண்டுமென்று மேல் மாடி யியற்றினான்! வேண்டியது தானே! நாம் என்னசெய்யலாம்?' என்று எண்ணினான் பயங்கரன்.

"ஆ! என்ன புதுமை! என்ன மோசம் போனேன்? மாடியில் வைத்திருப்பது என்ன! அதோ அந்த ஜன்னலில் என்ன இருக்கிறது! மூளைகள்! நாற்றுகள்!! துல்யத் தொட்டிகள்! பார்க்கவனும் துல்யமலர்த் தோட்டம் வைத்திருக்கிறானா!!! ஒன்றும் தெரியவில்லையே! மாலையில் ஸாவதானமாய்ப் பார்த்துக்கொள்ளலாம்!" என்று இவ்வாறு எண்ணமிட்டான் சகாரன் முதன் முதலில் மாடியில் உள்ளவைகளைக் கண்டவுடன். எப்பொழுது அஸ்தமிக்கும் என்று பார்த்துக்கொண்டேயிருந்து அஸ்தமித்துச் சற்று இருட்டியதும் தன் வீட்டிற்கும் பார்க்கவன் வீட்டு முற்றத்திற்கும் மத்தியிலுள்ள சுவரின் மீது ஓர் ஏணியைச் சார்த்தி அதன் மீதேறிப்பார்த்தான். வயிறு பகீரெனப் பற்றியெரியலாயிற்று. அன்று பகலில் அவன் எண்ணிய எண்ணங்கள் எல்லாம் உண்மையாய்விட்டன.

'ஆ! நமக்கும் ஒரு மனுஷ்யன் போட்டியாக ஏற்பட்டுள்ளானா? உம் - இப்படிப் போட்டிக்கு வருகிறவன் அநாமதேயப் பேர்வழியாயிருந்தாலும் கிடக்கிறது! ஐயோ இவன் காரணேசனைச் சேர்ந்தவனாயிற்றே! எல்லோருக்கும் இவன் அறிமுகமாயிற்றே! ஆ! நம் தொழிலுக்குச் சத்துருவாய் இவன் எங்குவந்து சேர்ந்தான்! என்ன செய்வேன்! ஒன்றும் தெரியவில்லையே! எங்காவது ஓடிப்போய் விடலாமா? சீ! இதற்காகவோ ஓடிப்போகிறது?' என்று இவ்வாறு எண்ணமிட்டு மனம் நொந்து வருந்தினான். தவிர, தன் சொந்தத் தோட்டத்திலுள்ள ஓர் மரத்தின்மீது மறைந்து உட்கார்ந்து ஒவ்வொரு அரும்பு, புஷ்பம் எல்லாவற்றையும் பார்க்கவனைப்போலவே கவனிக்கலானான். பாக்கவனது மலர்களையும் மொட்டுகளையும் காணும்பொழுதெல்லாம் தன்னுடைய பூங்காவிற்கும் இதற்குமுள்ள தாரதம்மியம் மனத்தில் உதிக்க, உடனே பொறாமை கொள்ளுவான், பற்களை நறநறெனக் கடிப்பான், கைகளைப் பிசைவான், விழிப்பான், அழுவான்! அப்படியே இரவில் பார்க்கவன் தோட்டத்தில் குதித்து செடிகளைப் பிடுங்கி யெறிந்துவிட்டு, பாத்திகளையும் ஏழிகளையும் கலைத்துவிடவேண்டுமென நினைப்பான். பார்க்கவன் எதிரில் அகப்பட்டால் அவனை அப்பட்டியே ஒழித்துவிட்டும் இருப்பான். தனக்குப் போட்டியாக ஒருவன் இருக்கக்கூடாது என்றதே அவன் மனத்தில் குடிகொண்டிருந்தது. ஆனாலும் மலர்களின்மீது மாத்திரம் கை வைக்க அவனுக்கு மனம்வரவில்லை. மலர்கள், அதிலும் துல்யமலர்கள் என்றால் அவனுக்குப் பிராணனன்றோ!

பார்க்கவனோ தனக்குப்பிரியமான நந்தவனம் வைத்துப் பயிர்செய்வதைக் கைக்கொண்ட நாள் முதற்கொண்டு, மிக்க உத்ஸாஹமுள்ளவனாய்த் தன் கைப்பொருள், கல்வி முதலிய எல்லாவற்றையும் அத்தொழிலின் அபிவிருத்தியிலேயே செலவிடலானான். உயர்ந்த ஜாதித் துல்யப் புஷ்பவகைகளுக்கும் பலவர்ணப் புஷ்பராசிகளுக்கும் பார்க்கவன் தோட்டமே புகழ்பெற்று வரலாயிற்று. கண்டான் பயங்கரன். பார்க்கவன் புகழ்பெறுவது பயங்கரனுக்குப் பொறுக்குமா! துல்யமலர்த் தோட்டத்தில் கல்லுகளையும் கட்டிகளையும் எறிந்து செடியின் மூளைகளை நாசமாக்கிவிடலாமெனக் கருதினான். பிறகு அகப்பட்டு மகா சங்கடப் படுவோம், நாட்டார் பார்த்து நகைப்பார்கள், வேறு வழிதேட வேண்டுமென்று யோசிக்கலானான். ஒருநாள் மாலை இரண்டு பூனைகளைப் பிடித்து அவற்றின் பின்னங்கால்களை சுமார் ஆறடி நீளமான மெல்லிய கயிற்றினால் பிணித்து நன்றாய் இருட்டியவுடன் பார்க்கவன் துல்யமலர்ச் செடிகளின் நாற்றுவளர்க்கும் பாத்தியின்மீது எறிந்தான். இருட்டு வேளையானபடியாலும், மேலே அதிக உயரத்திலிருந்து விழுந்தபடியாலும் பூனைகள் பயந்துவிட்டன. அவைகள் கோரமான சப்தமிட்டுக்கொண்டு ஒன்றையொன்று எதிரெதிராக இழுக்கவும் பாத்திகள் மிக்க சேதமடைந்தன. சிறிது நேரத்திற்குள் கயிறும் அறுந்துபோய்விட்டது. பூனைகளும் மறைந்தன. பயங்கரனுக்கு மிக்க ஆனந்தம்.

இனிமேல் தனக்குப் போட்டியாய் வருபவர் ஒருவருமில்லையன்றோ? பொழுதும் விடிந்தது. பார்க்கவன் வழக்கம்போல் தோட்டத்திற்குள்வர, தான் அருமையாய் வளர்த்துவரும் துல்ய மலர்ச் செடிகளின் பாத்தி மிக்க அழிவடைந்திருந்ததைத் தூரத்திலிருந்தே கண்டான். ஆ! என்று கதறினான். ஓடிவந்தான். உற்றுப்பார்த்தான். ஆனந்தரஹிதனாய் நின்றான். இவை யெல்லாவற்றையும் மரத்தில் மறைந்து பார்த்திருக்கும் பயங்கரனுக்கு ஒன்றும் புரியவில்லை. பிறகு சற்று நிதானித்துப் பார்த்தான். பூனைகளால் பாத்தி அழிந்திருந்தபோதிலும் சில துல்யநாற்றுக்கள் யாதொரு ஊறுமடையாது வெகு கம்பீரமாய்த் தலை[illegible]ந்திருப்பவைகளா யிருந்ததைக்கண்டுதான் [illegible]வன் அகமகிழ்ந்தான். உடனே பாத்திகளின் அலங்கோலத்தைப்பற்றி விசாரிக்கவும், இரவில் பூனைகளின் சப்தம் தோட்டத்தில் இருந்ததாக அறிந்ததும்தவிர அவைகள் அடிச்சுவடுகளையும் மயிர் உதிர்ந்து கிடப்பதையும் கண்டு இனி இம்மாதிரி ஒன்றும் நேரிடாமல் தோட்டத்தைப் பாதுகாக்க ஒரு வேலைக்காரன் இரவில் அங்கேயே இருக்கும்படியும் நியமித்தான்.

இப்வடியிருக்குங் காலையில், புஷ்பங்களுக்காகப் பிரசித்திபெற்ற ஹாரிளம் என்னும் ஊரில் தனிகர் ஒருவர், யார் கருந்துல்யமலர் உற்பத்தி செய்கிறார்களோ அவர்களுக்குப் பத்துலக்ஷம் பொன் இனாமளிப்பதாகப் பிரசுரம் செய்திருந்தார். கருமையான துல்யமலரை அதுவரையில் ஒருவரும் பார்த்ததில்லை. அம்மாதிரி மலர் உற்பத்தியாவதும் துர்லபம் என்பது அநேகர் கொள்கை. அப்படிப்பட்டவர்களில் ஒருவன் நம் பயங்கரன். ஆனால் பார்க்கவனோ கருந்துல்ய மலரை உற்பத்திசெய்யக் கூடுமென்று உறுதியாய் நம்பி, அம்மாதிரியே செய்யத்தக்க ஏற்பாடுகளும் செய்துவந்தான். எப்பொழுது தீங்கிழைக்கலாமென்று பயங்கரனும் காத்திருந்தான்.

ஐந்தாம் அத்தியாயம்
பார்க்கவன் கைதியாதல்

நல்ல வஸந்தகாலம். ஜனங்கள் ஸகலவித வைபவங்களையும் அனுபவித்துக் குதூஹலத்துடன் இருக்கும் காலம். பயிர்பச்சைகள் தழைத்துத் தளிர்த்து எல்லோருடைய மனத்தையும் ஆனந்தப்படுத்தும் காலம். பார்ப்போரது கண்ணைக்கவர்ந்து அவர்கள் இன்பத்தை நுகருவதற்கு நறுமணம் வீசும் பலவகை புஷ்பஜாதிகளும் நிறைந்துள்ள காலம்.

ஆனால் சூரியனுடைய உக்ரமும் தினே தினே அதிகரித்து வருகின்றது. அவனது கிரணங்களைத் தாங்குவதும் அருமையாயிருக்கின்றது. வெயிலின் கொடுமையைத் தணிக்க வேண்டி ஜனங்கள் பற்பல வழிகளை நாடுகிறார்கள். சிலர் தம் வீடுகளின் முற்றங்களிலும் வாசல்களிலும் பந்தல் போடுகிறார்கள். சிலர் வீட்டில் அடிக்கடி தண்ணீர்தெளித்து குளிரச் செய்கிறார்கள். சிலர்வீடுகளில் பங்காக்களும், இன்னும் சிலர் வீட்டில் யந்திர விசிறிகளும் காணப்படுகின்றன. ஆனாலும் சிலர் குளிர்ச்சியாயுள்ள சில பட்டணங்களுக்குச் செல்லுகின்றனர். நமது தார்த்தூரகமும் அத்தகைய நகரங்களி லொன்று.

வெயிற்காலக் கொடுமைக்குப் பயந்தோ யாது காரணத்தாலோ நம் காரணேசர் தம் ஜன்ம நகரமாகிய தார்த்தூரகத்திற்கு இவ்வேனிற் காலத்தில் வந்துசேர்ந்தார். ஆயினும் அவர் இவ்வூரில் அநேக நாள் தங்கியிருக்கவில்லை. தங்கியிருந்த இரண்டொரு நாட்களையும் தம் அருமை சிஷ்யனாகிய பார்க்கவன் வீட்டிலேயே கழித்தார். காரணேசருக்கு செடிகளிடத்தும் புஷ்பங்களிடத்தும் அதிகப் பிரியமில்லாமற் போனபோதிலும், பார்க்கவனது செடிகளையும் புஷ்பத்தொட்டிகளையும் மிக்க வியப்புடன் பார்வையிட்டுக் களிப்படைந்தார். ஒரு இடத்தையும் பார்க்காமல் விடவில்லை. தோட்டம், முற்றம் இவைகளிலுள்ள செடிகளைப் பார்த்துவிட்டு மாடிமீதேறி பாக்கவனது அறைக்குள் நுழைந்தார். பார்க்கவனுடன் சற்று நேரம்ஏதோபேசிக்கொண்டிருந்துவிட்டு பிறகு தமது சட்டைப்பையிலிருந்து அழகான வேலைப்பாடமைந்த சிறு மரப்பெட்டியை எடுத்து அவனிடம் கொடுத்தார். பார்க்கவனும் அதை மிக்க விநயத்துடன் பெற்றுக்கொண்டு தனது மேஜையின் அறையொன்றில் வெகு பத்திரமாய் வைத்துப்பூட்டினான். இன்னும் சற்று நேரம் ஏதோ அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். பிறகு காரணேசர் எழுந்து புறப்பட்டுப் போய்விட்டார். பார்க்கவனும் பின்சென்று வழி கொண்டுபோய்விட்டான்.

இவைகள் எல்லாவற்றையும் அடுத்தவீட்டுக்காரனாகிய பயங்கரன் வெகு கவனமாய்த் தன் மாடியிலிருந்து ஒருவருக்கும் தெரியாமல் உற்று நோக்கிக்கொண்டிருந்தான். காரணேசர் வந்தது முதல் அவர் போகும் வரையிலும் கண்டு அவர் தம்மிடமிருந்த சிறுபெட்டியை பார்க்கவனிடம் கொடுக்கும்போது அதில் ஏதோ முக்கிய விஷயத்தைக் குறிக்கும் ரிகார்டு வகைகள் அவசியம் இருக்கவேண்டுமென்று கருதினான். ஆம்! அவன் நினைத்தமட்டும் உண்மைதான். அதில்தான் பாஞ்சால தேசத்தரசனுக்கும் இவருக்கும் நடந்தேறியுள்ள கடிதங்கள் இருந்தன. ஆனால் காரணேசர் பார்க்கவனிடத்தில் அப்பெட்டியி லிருப்பது இன்னதென்றும் தெரிவிக்காமல் அதைப் பத்திரமாய்க் காப்பாற்றும்படியும் தன் சொந்த உத்தரவின்றி அதை ஒருவரிடமும் கொடுக்கவேண்டாமென்றும் கேட்டுக்கொண்டார்.

தனக்குப் பகைஞன் ஒருவன் இருக்கிறான் என்னும் எண்ணம் சிறிதேனு மில்லாமல் பார்க்கவன் தன் புஷ்பச்செடிகளை வளர்த்துவந்தான். கருந்துல்யச் செடியை உண்மைப்படுத்த வேண்டுமென்பதே அவன் முழுக் கருத்தையும் கவர்ந்தது. என்றையதினம் ஸகேதபுரியில் தேவதத்த காரணேசர்கள் கொலைசெய்யப்பட்டார்களோ அன்றையதினம் வெகு ஆனந்தத்துடன் தானடையப்போகும் ஜயத்தைக்குறித்து மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தான் பார்க்கவன். "அடுத்த வருஷம் இந்த நாளைக்குள் கருந்துல்யம் புஷ்பித்துவிடும். ஹரிளநகரத்தில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு ஏழைகளுக்குச் சத்திரங்களையும் பாடசாலைகளையும் கட்டுவேன்" என்று இவ்வண்ணம் எண்ணமிட்டுக் கொண்டிருந்தான்.

திடீரென்று தெருக்கதவைத் தட்டுகிற சப்தம் கேட்டது. ஒருநிமிஷத்திற் கெல்லாம் தன் வேலைக்காரன் ஓடிவந்து "எசமாங்க, தேவதத்த ஐயா வீட்டு மாயாண்டி வந்திருக்காங்க" என்றான். "சரி, அவனைக் கூப்பிடு" எனவும் மாயாண்டி உள்ளேவந்து காரணேசன் கொடுத்த சீட்டையெடுத்து மேஜையின்மீது வணக்கமாய் வைத்தான். அதை எடுத்துப் படிப்பதற்குள் மறுபடியும் மிக்கபலமாய் கதவு இடிக்கப்படுவதைக் கேட்டான். உடனே முன்னே வந்த வேலைக்காரனும், தன்னை மிகவும் அன்பாய் வளர்த்துவந்த தாய்போலுள்ள வேலைக்காரியும் ஓடிவந்து "மகனே, மகனே, ஓடு, ஓடு, போலீஸ்காரர் முதலானவர்கள் நம்வீட்டைச் சூழ்ந்துகொண்டார்கள். நம் வாயிற் கதவை உடைக்கிறார்கள். ஓடு, ஓடு" என்று கதறினார்கள்.

பார்க்கவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. "ஏன் நம் வீட்டை உடைக்கிறார்கள்?" என்று கேட்க, "என்னமோ, தெரியவில்லை, நீ ஓடு, ஓடு" என்று மாத்திரம் சொன்னார்கள். வேறு வழியில்லாமையால் ஜன்னலைத் திறந்து குதிக்கலாமாவென்று கருதினான். ஆனால் அதிக உயரமாயிருந்தபடியாலும் அப்பொழுது தன் கையில் வைத்திருந்த கருந்துல்யமுளைகள் நசுங்கிவிடுமாகையாலும் அப்படிக் குதியாமல் பின்வாங்கி அவைகளை மேஜையின்மேலிருந்த காகிதத்தில் சுற்றினான். அதற்குள் போலீஸ் வீரர்களும் முக்ய அதிகாரியும் உள் நுழைந்து இவனறைக்கு வந்துவிட்டார்கள். போலீஸ் அதிகாரியைக் கண்டதும் பார்க்கவன் தலைவணங்கி வரவேற்று நின்றான். போலீஸ் அதிகாரி தம் வழக்கத்திற்கு விரோதம் செய்யாமல் (பார்க்கவனை நன்றாய் அறிந்திருந்தபோதிலும்)

"நீர்தாம் பார்க்கவர் என்பவரோ?" என்றார்.

"ஆம்" எனவும், "அப்படியானால் ராஜத்ரோகத்திற்காக நீர் கைதுசெய்யப்படுகிறீர்" என்று கூறினான். "உம்மிடத்தில் அரசாங்கத்திற்கு விரோதமான சிலரிகார்டுகள் இருக்கின்றனவே. அவைகளை எடுத்துக்கொடுத்துவிடும்" என்று கூறினான். பார்க்கவனுக்கு ஒன்றும் புலப்படவில்லை.

"அப்படி ஒன்றும் என்னிடத்தில் இல்லையே.—ஆம், எனக்கு ஒன்றும் தெரியாது."

"உம்மிடத்தில் காரணேசன் சில காலத்துக்கு முன் சிலரிகார்டுகள் கொடுக்கவில்லையா?"

பார்க்கவனுக்கு இன்னதென இப்பொழுது தான் சற்றுப் புலப்பட்டது.

"இப்பொழுது ஞாபகமில்லையா?"

"ஆம், அவைகள் அரசாங்கத்துக்கு விரோதமான ரிகார்டுகள் என்றீரே. என்னிடத்தில் அப்படிப்பட்டவை ஒன்றும் இல்லையே!"

"இல்லையென்று ஸத்யம் செய்வீரா?"

"என்னிடத்தில் அவை இல்லை."

"ஆனால் உம்முடைய ஸொந்த அந்தரங்க அறை எது?"

போன சுரத்தைப் புளியிட்டு அழைத்ததுபோல

"நீர் இப்பொழுது இருக்குமிடமே."

"ஸரி, அக்கடிதங்களைக் கொடுத்துவிடும்."

"கொடுக்கமுடியாது. அவைகள் என்னிடம் அடைக்கலமாக வைக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்டவைகளைக் கொடுத்துவிடுதல் பாபமன்றோ?"

"ஆனால் நானே எடுத்துக் கொள்ளுகிறேன்" என்று தம் கையினாலேயே மேஜையின் அறையை இழுத்தான். மிகவும் ஒழுங்காகவும் அழகாகவும் புஷ்பச்செடியின் விதைகள் பொட்டணங்களாகக் கட்டிவைக்கப்பட்டிருந்தன. இவைகளுக்குப் பின்னால் சிறிய கைப்பெட்டி யிருந்தது. அதை உடனே உடைத்து அதனுள்ளிருந்த நிருபங்களை எடுத்துப்பார்த்து,

"பார்க்கவரே! அரசாங்கத்தாரது அதிகாரத்தை… முன்னிட்டு உம்மைக் கைதுசெய்கிறேன்" என்று அவர்மீது கையை வைத்தான்.

"நாவிந்ாக?"

"…பல்லா… ஒன்றும் தெரியாது. நீர் நியாயாதிபதி… இரண்… முன்பாக உமதுகக்ஷியை எடுத்து… பதில்கொள்ளும்" என்றான்.

…ம் படித்தவர்கள் அழுதுகொண்டு நின்றார்கள். …வாது வயதுசென்ற தாதி மூர்ச்சையாய் விழுந்துவிட்டாள். பிடிவாதம் செய்வதில் இனிலாபமில்லை. தயாராய்க் காத்திருந்த ஒரு குதிரைவண்டியில் இவரை யமர்த்தி ஸகேதபுரிக்குச் சென்றார்கள்.

வேலைக்காரரது அழுகையும் கூக்குரலும் வெகு நேரம் ஓயவில்லை. இரவும் வந்துவிட்டது. என்ன செய்வார்கள் பாபம்! பசியுடன் உறக்கமும் ஏற்படவே, அவ்வவர் போஜனம் செய்து களைத்து உறங்கினார்கள். மணியும் பன்னிரண்டடித்தது. பார்க்கவனது தோட்டத்தில் ஒரு உருவம் வந்து இங்குமங்கும் நடமாடிக்கொண்டிருக்கின்றது. யாராயிருக்கலாம்? ஒரு மனிதனைப்போல் காணப்படுகின்றதே! அவன் என்ன செய்கிறான்? பாத்திகள் தோறும் சென்று கவனித்துப் பார்க்கிறானல்லவா? ஆம், அவன் ஒரு பாத்தியண்டையில் வந்து கீழே உட்கார்ந்து தோண்டுகிறான். ஒன்றும் அகப்படவில்லை. பொறுமையும் கோபமும் அதிகரிக்கின்றன. எழுந்து யாதொரு சப்தமும் செய்யாமல் மெதுவாக பார்க்கவனின் மாடிமீது செல்கின்றான். அவனது அந்தரங்க அறைக்குள் நுழைந்து மேஜையைத் திறக்கிறான். தன் கையில் கொண்டுவந்த மெழுகுவத்தியை ஏற்றி, ஒவ்வொன்றையும் சோதிக்கிறான். தான் தேடுவது மட்டும் இன்னும் அகப்படவில்லை. கடைசியாக இன்னது செய்வதென்று தெரியாமல் திகைத்து நிற்கையில், எதிரே மேஜையின்மேலேயே கிடந்த தோட்டச்செடிகளின் ஜாப்தா தென்பட்டது. அதைப் புரட்டிப் பார்த்தான். கடைசிப் பக்கத்தில் "கருந் துல்யத்தின் முளைகள் மூன்றுதான் தேறின. அவைகளைப் பத்திரமாய்க் காப்பாற்றிவரவேண்டும்" என்று எழுதியிருந்தது. இதைக் கண்டதும் "எங்கே அவைகள் இருக்கலாம், எங்கே யிருக்கலாம்?" என்று தனக்குள் தானே சொல்லிக்கொண்டு கையைப் பிசைந்துகொண்டிருந்தான். இப்படி அரைமணிநேரம் கழித்துவிட்டு ஆடிழந்த கள்ளன்போல் வந்தவழியே திரும்பி தன் வீடடைந்தான்.

நமது சிறு கதை

OUR SHORT STORY

(280-ம் பக்கத் தொடர்ச்சி.)

உடனே கோவிந்தசாமி முதலியார், "அப்படியா சமாசாரம்? சரி, பீரோவை உள்ளே கொண்டுபோங்கள்!" என்றார். முன்னால் பேசிய மனிதன், "ஐயா! நீங்கள் யாரோ தெரியவில்லை. ஏன் சாமான்களை உள்ளே கொண்டுபோகச் சொல்லுகிறீர்கள்? நடவடிக்கைகளெல்லாம் ஒழுங்காகவே நடந்திருக்கின்றன. வேண்டுமானால் நீங்கள் உள்ளே போய் அந்த அம்மாளைக் கேட்டுப்பாருங்கள்" என்றான்.

கோவிந்தசாமி முதலியார், "அப்பா! அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். சாமான்களை உள்ளே திரும்பக் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுங்கள். தீர்ப்புத்தொகையைக் கொடுத்துவிடுகிறேன்" என்றார். அம்மனிதன், "ஐயா! சாமான்களை வெளியே கொண்டுவரப்பட்ட

போனதை நினைக்கிறவன் புத்தி கெட்டவன்.

பாடு பெரும்பாடாக விருந்தது. அவைகளை உள்ளே கொண்டுபோய்விட்டுத் திரும்பவும் வெளியே கொண்டுவருவதானால் நிரம்பவும் கஷ்டமாயிருக்கும். ஆகையினால் பணத்தை நிச்சயமாய்த் தாங்கள் கொடுப்பதாயிருந்தால் சொல்லுங்கள். தீர்ப்புத் தொகை ரூபாய் முந்நூற்றைம்பது. கொடுத்துவிட்டால் சாமான்களை உள்ளேகொண்டுபோய்ச் சேர்த்துவிடுகிறேன். எங்களுக்கும் தொல்லை விட்டது" என்றான்.

அச்சமயத்தில் கோவிந்தசாமி முதலியாருடைய பேச்சுக்குரலைக் கேட்டு தெய்வயானையம்மாள் வாசற்படிக்கு வந்து, "முதலியாரவாள் ! நான் என்ன செய்வேன் ? என்னாலானமட்டும் செட்டாகக் குடித்தனம் செய்து கடன்களைத் தீர்க்க முயன்றேன். முடியவில்லை. சாமான்களை ஜப்தி செய்துவிட்டார்கள்" என்று சொன்னாள். அந்த அம்மாள் கண்களினின்றும் கண்ணீர் தாரைதாரையாகப் பெருகிக் கொண்டிருந்தது.

கோவிந்தசாமி முதலியார் "அம்மா! வருத்தப்படாதேயுங்கள் ! சாமான்கள் திரும்பவும் உள்ளே வந்துசேரும்!' என்று சொல்லி அந்த அம்மாளைத் தேற்றிவிட்டுத் தமது பணப்பையை யெடுத்து முந்நூற்றைம்பது ரூபாய்க்கு நோட்டுகளையெடுத்துத் தம்முடன்பேசிய மனிதனிடம் கொடுத்து ரசீது பெற்றுக்கொண்டு, சாமான்களை யெல்லாம் உள்ளே கொண்டுபோய்ச் சேர்க்கும்படி அம்மனிதனிடம் சொல்லிவிட்டு வீட்டுக்குள் நுழைந்து தமது அறைக்குட் சென்றார்.

அவர் அவ்வாறு தமது அறைக்குள் நுழைந்தவுடன் சுந்தரவல்லி ஆனந்தபாஷ்பம் சொரியும் கண்களுடன் அவ்வறைக்குள் நுழைந்து, "எங்கள் துன்பத்தை நீக்கிய தெய்வமே!" என்று சொல்லி மேலே பேச நாவெழாமல் சும்மா நின்றாள். கோவிந்தசாமி முதலியார், "நீங்கள் இவ்வளவு கெட்டவர்களென்று நான் எண்ணவேயில்லை. நான் சிறிதும் வித்தியாசமின்றி உங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனாக இருந்துகொண்டு வரும்போது என்னிடத்தில் இவ்வாபத்தைக்குறித்துச் சொல்லாமலேயிருந்தது நியாயமா ? " என்று சிறிது கோபத்துடன் கேட்டார்.

சுந்தர.—நியாயமல்லவென்றுதான் என் தாயாரிடம் இப்போது சொல்லிவிட்டு வந்தேன். நாங்கள் உங்களிடம் சொல்லாமலிருந்ததற்குக் காரணம் கடன்காரர் வீட்டு சாமான்களை ஜப்தி செய்யும்படி விட்டுவிடமாட்டான் மூர்த்தி என்று நம்பிக்கொண்டேயிருந்ததுதான். சாமான்களை ஜப்திசெய்ய ஆட்கள் வண்டியுடன் வரும்வரையில், மூர்த்தி இவ்வளவு அலக்ஷியமாயிருப்பானென்று நாங்கள் எண்ணவேயில்லை.

கோவிந்த.—குடும்ப பாரத்தை நீயும் உன் தாயாரும் சேர்ந்துகூடச் சுமக்கமுடியவில்லையன்றோ ? அப்பாரத்தை என் தோள்மீது ஏன் நீங்கள் ஏற்றிவிடக்கூடாது ?

சுந்தர.—என் சகோதரன் அப்பாரத்தைச் சுமக்கமாட்டேன் என்று சொல்லும்போது, அயலார் தலையில் சுமத்துவது நியாயமல்லவே.

கோவிந்த.—என்னை அயல் மனிதனாகத்தான் உங்களால் பாவிக்கமுடியுமோ ? "

சுந்தர.—முதலியாரவாள்! தாங்கள் எங்களுக்கு எத்தனையோ பெரிய உதவிகளைச் செய்துவிட்டீர்கள். உங்களைப் போன்ற நண்பர்கள் எங்களுக்கு உலகத்தில் எவருமில்லை. ...னும் தாங்கள் அயலார்தாமே !

கோவிந்த.—அயலார் சொந்தமாகவே ஆக முடியாதோ ?

சுந்தர.—எப்படி முடியும் ?

கோவிந்த.—விவாகத்தினால் !

சுந்தர.—விவாகத்தினாலா ? ஆக முடியும். இங்கு அதற்கு வழியைக் காணோமே.

கோவிந்த.—சுந்தரவல்லி! உண்மையுரைப்பது உன்னுடைய சுபாவத்தில் மணிபோல் ஜ்வலிக்கிறது. ஆகையினால் உண்மையாகச் சொல் ! என்னை மணந்துகொள்ள உனக்கு இஷ்டமுண்டோ ?

சுந்தரவல்லியின் மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது. அவள் தன் இடது கையை இதயத்தின்மீது வைத்து அழுத்திக் கொண்டாள் ; பிறகு, " தாங்கள் கோடீசுவரர் என்பதற்கையமில்லை. கோடீசுவரராயில்லாமற் போனால், நடராஜமுதலியாரது இயந்திரத்தை முன்னுக்குக் கொண்டுவரத் தங்களால் இலக்ஷ ரூபாய் செலவிட முடியாது. நானோ பரம ஏழை. தங்கள் தாராள குணத்தினால்தான் நாங்கள் மூன்றுமாத காலமாகக் காலங்கழித்து வருகிறோம். அப்படியிருக்க என்னைத் தாங்கள் எப்படி மணந்துகொள்வது ? " என்று தழுதழுத்த குரலுடன் சொன்னாள்.

கோவிந்த.—நீ சொல்லும் வண்ணம் நான் கோடீசுவரனாகையால், நான் மணந்துகொள்ளும் பெண்ணின் மூலமாகப் பொருளடைய இச்சிக்க மாட்டேன். அப்பெண் நற்குணமுடையவளா வென்றுதான் பார்ப்பேன். நற்குணத்துடன் சுந்தரமும் கலந்திருந்து பெயரும் சுந்தரவல்லியென்ற இனிய பெயராகவிருந்துவிட்டால், அப்பெண்ணை எவ்விதத்திலும் அடைய முயலுவேன். என்னை மணந்துகொள்ள உனக்கு ஏதேனும் ஆக்ஷேபனையுண்டோ ?

சுந்தர.—இவ்வுலகத்தில் பெருவாழ்வு வாழ்வதற்குத் தங்களுக்கு ஏதேனும் ஆக்ஷேபனையுண்டோ ?

கோவிந்த.—இல்லவேயில்லை. ஆகையினால் உன் தாயாரிடம் பேசி எல்லாவற்றையும் முடித்துக்கொள்ளுகிறேன்.

கோவிந்தசாமி முதலியார் பார்க்கு ஸ்டேஷனில் பல்லாவரத்துக்குப்போகும் இரயில்வண்டியில் இரண்டாவது வகுப்புப் பெட்டியிலேறி, "ஹிந்து" பத்திரிகையில் ஒரு பக்கத்தை வெகுநேரம் படித்துக்கொண்டிருந்துவிட்டுப் பிறகு, "நல்லவேளையாய் போயிற்று. கங்காதரனுக்குப் பிள்ளைபிறந்தது என்மனத்திலுள்ள பெருந்துயரத்தை யகற்றிவிட்டது. முருகன்பூண்டி ஜமீனுக்குவாரிசு உண்டாகிவிட்டது. இனிமேலென்னகவலை? ஹூம்! முருகன்பூண்டியைமட்டும் மறக்கவே முடியவில்லை. ஆனால் இனி முருகன் பூண்டிக்குப் போவதில்லை" என்று தனக்குள் தானே மெல்லச் சொல்லிவிட்டு, சிலநாட்களாய் தினந்தினம் இராப்பொழுதில் தம் அறைக்கு வெகு சமீபத்தில் யாரோவொருவர் விசித்திரமாக வாயினால் ஊதிக்கொண்டுவந்தது அவருக்குப் பழக்கமாகி விட்டபடியால் தற்செயலாய் அந்த ஞாபகம்வந்து அம்மாதிரி ஊதினார்.

அவர் அவ்வாறு ஊத ஆரம்பித்ததும், அப்பெட்டியில் பத்திரிகைவைத்துப் படித்துக்கொண்டிருந்த மற்றொருவர் ஆச்சரியத்துடன் தமது கையிலிருந்த பத்திரிகையைக் கீழே வைத்துவிட்டு கோவிந்தசாமி முதலியார் ஊதுவதையே கவனித்துக்கொண்டிருந்தார். கோவிந்தசாமி முதலியாரோ தம்மைத்தவிர மற்றொருவர் அப்பெட்டியிலிருப்பதைக் கவனிக்கவேயில்லை. அவர் அவ்வாறு ஊதி ஓய்ந்தவுடன், அப்பெட்டியிலிருந்த மற்றொருவரும் அதேமாதிரி ஊதத் தொடங்கினார். அதுவரை யோசனையிலாழ்ந்திருந்த கோவிந்தசாமிமுதலியார் தம்மைச் சுற்றிப்பார்த்து அப்பெட்டியில் மற்றொருவர் இருந்ததையும், தம்மைப் போலவே அவர் ஊதியதையும் கவனித்தார். அவர் அவ்வாறு கவனித்தவுடன், மற்றொருவர் ஊதுவதை நிறுத்தினார்.

" தாங்கள் ஊதியது நான் ஊதியதின் எதிரொலிபோல முற்றிலும் ஒத்திருக்கிறதே " என்றார் கோவிந்தசாமி முதலியார்.

"எதிரொலியும் பதிலு மாகும் !" என்றார் மற்றொருவர்.

கோவிந்த.— ஓ ! அப்படியா ! மெத்த சந்தோஷம். இந்தப் பாட்டுத் தங்களுக்கு நன்றாய்த் தெரியும்போ லிருக்கிறது. இதன் பெயரென்னவோ ?

மற்றொருவர்.—'காலன் தூது' என்று பெயர்"

கோவிந்த.—காலன் தூது ! இவ்வளவு நல்ல பாட்டுக்கு எவ்வளவு பயங்கரமான பெயர்? இதற்கு இப்பெயர் வந்ததற்குக் காரணம் தங்களுக்குத் தெரியுமோ ?

மற்றொருவர்.—'தெரியும்'. எட்டுப்பேர்களிட்ட முத்திரையை அவர்களிலொருவர் மற்ற ஏழுபேர்களில்லாத சமயத்தில் உடைத்தால் அவர் தமது பிராணனையிழப்பார் என்பதை அப்பெயர் உணர்த்துகிறது.

கோவிந்தசாமி முதலியார் "சரிதான்" என்று சொல்லிவிட்டுத் தமது பத்திரிகையை எடுத்துக்கொண்டு திரும்பவும் படிக்க ஆரம்பித்தார். அப்போது மற்றொருவர் எழுந்து அவரையணுகி, கடிதம்போன்ற தந்தத்துணுக்கை கோவிந்தசாமிமுதலியார் கையிற் கொடுத்தார். அவர் அதை வாங்கி, " மார்க்கசகாய முதலியார் " என்று வாசித்து, " தாங்கள் இன்னாரென்று தெரிந்துகொள்ள மெத்த சந்தோஷம் !" என்றார்.

மார்க்க.—தங்கள் நாமதேயம் என்னவோ ?

கோவிந்த.— அந்நியர்களுடன் அவ்வளவு நெருங்கிப் பழகுவது எனக்கு வழக்கமில்லை.

மார்க்க.—அந்நியர்களா ? எனக்குத் தங்களை நன்றாய்த்தெரியும். தங்களுக்கும் எங்கள் ஏழு பேர்களுடையபெயர்களும் நன்றாய்த்தெரியும். இதற்குச்சாக்ஷியும் தாங்கள் இப்போது ஊதிய

போனமாட்டைத் தேடுவோரும் இல்லை, மேய்த்த கூலி கொடுப்பாரும் இல்லை.

மகன் செத்தாலும் சாகட்டும், மருமகள் கொழுப்பு அடங்கினாற் போதும்.

'காலன்தூது' என்னும் பாட்டுத்தான். நாங்களும் பலநாட்களாகப் பொறுமையுடன் காத்துக்கொண்டிருக்கிறோம். வீண்வம்பில்லாமல் எங்கள் சொத்துக்களை எங்களிடம் ஒப்புவித்துவிட்டுப் பிழைத்துப்போம். நீர் கோவிந்தசாமி முதலியாரல்ல என்பது எனக்குத் தெரியும். கோவிந்தசாமிமுதலியாருடன்கூட நீர் சிறைச்சாலையில் இருந்தீர்போலும். பாங்கியில் இருப்புப்பெட்டியி லிருந்த சொத்துக்களெல்லாம் கோவிந்தசாமி முதலியாருக்கு ஏகதேசமாய்ப் பாத்தியப்பட்டவைகளல்ல. அவைகள் நாங்கள் எட்டுப்பேர்களும் தேடிய சொத்துக்கள். எங்களிலிருவர்தாம் இங்கே சென்னையில் இருக்கிறோம். மற்றவர்கள் பர்மாவிலும், ஜப்பானிலும், அமெரிக்காவிலும், ஆப்பிரிக்காவிலும், உழைத்துப் பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒன்றுகூடி உம்மைத்தொலைத்துவிடுவார்கள். ஆகையால் சமாதானமாகப் பொருளைக் கொடுத்துவிடும். நீர் சிறைச்சாலையில் சந்தித்த கோவிந்தசாமி முதலியாரின் உண்மையான பெயர் சிதம்பரநாத முதலியார். அவர் உம்மை ஏமாற்றிவிட்டார் போலும். பொருளைத் திருப்பிக்கொடுத்து விடும். வீணே உயிரை இழக்காதேயும்!"

கோவிந்தசாமி முதலியார் எழுந்தார். உடனே மார்க்கசகாய முதலியார் தமது நிஜாரின் பையிலிருந்து ஒரு சிறு கைத்துப்பாக்கியை எடுத்துக் கோவிந்தசாமி முதலியார் தலைக்குக் குறிபார்த்துப் பிடித்தார். இமைப்பொழுதில் கோவிந்தசாமி முதலியார் அக்கைத்துப்பாக்கியை அவர் கையிலிருந்து பிடுங்கி அவர் தலைக்குக் குறிபார்த்துப் பிடித்தார். மார்க்கசகாய முதலியார் ஆச்சரியத்தினால் வாயைப் பிளந்துகொண்டு நின்றார். அப்போது கோவிந்தசாமி முதலியார் புன்னகையுடன், "மார்க்கசகாய முதலியாரவாள்! வழிமறித்துக் கொல்லும் உமக்கு இவ்வளவு நல்லபெயர் யார் வைத்தார்கள். இத்துப்பாக்கி உமது மார்க்கத்திற் சகாயமாயிராது. உம்மை இப்பொழுது சுட்டுக்கொல்லாமல் விடுகிறேன். பிழைத்துப்போம். இனிமேல் என் வழிக்கு வராமலிரும். உமது சிநேகிதர்களுக்கும் புத்திமதி சொல்லும். இதோ பல்லாவரம் ஸ்டேஷன் வந்துவிட்டது. உமது கைத்துப்பாக்கியை நீரே வாங்கிக்கொள்ளும்" என்று சொல்லித் துப்பாக்கியை அவரிடம் கொடுத்துவிட்டு, அலக்ஷியமாக இரயில்வண்டியை விட்டிறங்கிச் சென்றார்.

ஐந்தாவது அத்தியாயம்

மூர்த்திமுதலியார் கோவிந்தசாமி முதலியாரைத் தப்புவித்தல்.

கோவிந்தசாமி முதலியார் தாம் உட்கார்ந்திருந்த குறிச்சியை விட்டு எழுந்திராமலும் வாயிலிருந்த ஸ்பென்ஸர் சுருட்டையெடுக்காமலும் அலக்ஷியமாக, "என்ன, மூர்த்தி முதலியாரவாள்! இஷ்டமானால் சுருட்டு எடுத்துக்கொள்ளலாம்!" என்றார்.

மூர்த்தி.—புகையிலையை எந்த விதத்திலும் நான் உபயோகப்படுத்துவதில்லை. அன்றியும், திருடர்கள் அளிக்கும் பதார்த்தங்களை என்னைப் போன்ற யோக்கியர்கள் வாங்கி உபயோகப்படுத்த மாட்டார்கள்.

கோவிந்த.—மூர்த்திமுதலியாரவாள்! என்னென்னவோ விசித்திரமாகப் பேசுகிறீர்களே.

மூர்த்தி.—உன்னைப்போன்ற அயோக்கியர்களுடன் பழகும்படி நேரிட்டால், அப்படிப் பேசாமல் என்ன செய்வது? மகாராஜாவைப்போல் அலக்ஷியமாக நீ உட்கார்ந்திருப்பதைக் கண்ணுறும் பொழுது, சர்வேசுவரன் உன்னைப்போன்ற விஷப்பாம்புகளை உலகத்தில் உலவவிட்டிருப்பதற்குக் காரணமென்னவாயிருக்கலாமென்று சிந்திக்கவேண்டியிருக்கிறது.

கோவிந்த.—ஒரேமுட்டாய் எல்லாவற்றையும் சொல்லி விடுகிறீர்களே! மையப்பையச் சொல்லும்.

மூர்த்தி.—பையவா சொல்லவேண்டும்? என் மனம் பதைக்கிறது உன்செய்கைகளை நினைக்கும்பொழுது. உலகமுழுவதையும் நீ ஏமாற்றிவிட்டாயே. எனினும் நான் ஏமாந்துபோகவில்லை. நீ யாரென்று எனக்கு நன்றாய்த் தெரியும். உனக்குச் சிறிதும் பாத்தியமில்லாதபொருளைக் கைப்பற்றிக் கொள்ளுவதற்காக நீ மற்றொருவன் பெயரைத் திருட்டுத்தனமாய் வைத்துக்கொண்டு திரிவது எனக்குத் தெரியாதென்று நினைத்தாயோ?

கோவிந்த.—உமக்குத் தெரியும். இரகசியங்களுக்கு முடிவேயில்லைபோ லிருக்கிறதே!

மூர்த்தி.—இப்படி ஜம்பமாய்ப் பேசித்தான் உலகத்தை ஏமாற்றுகிறாய். மானம் வெட்கம் என்பது சிறிதுமற்ற அயோக்கியன் நீ. சாதாரணமான அயோக்கியத் தனத்துடன்

திருப்தியடையாமல் கள்ளங்கபடமற்ற ஒரு சிறுமியையும் ஏமாற்ற ஆரம்பித்துவிட்டாய்.

கோவிந்த.—இது சுந்தரவல்லியின் கதையோ. ஆகா! இதல்லவோ தமயன்பரிவு! எவ்வளவு பரிசுத்தமான அன்பு!

மூர்த்தி.—ஊரான் பணத்தைக் களவாடும் அயோக்கியன், ஏழைப் பெண்பிள்ளைகளுக்குப் பொருளை வாரிக்கொடுக்கலாம். என்னைப்போன்ற யோக்கியர்கள் தங்கள் சக்திக்கேற்றவாறுதான் உதவிபுரியமுடியும். நீ சும்மா ஜம்பமாய்ப் பேசிக்கொண்டிரு. உன் சிண்டு என் கைக்குள் அகப்பட்டுக்கொண்டிருக்கிறது. நான் வாய்திறந்து ஒரு பேச்சுப் பேசினால், உன்னைப் போலீசார் பிடித்துக்கொண்டு போய் விடுவார்கள். பத்துவருஷங்களுக்குக் குறையாமல் சிறைச்சாலை வாசமும் கிடைக்கும். அப்போது இந்த ஜம்பமெல்லாம் காற்றாய்ப் பறக்கும். நான் சொல்வது விளங்குகிறதா?

கோவிந்த.—அப்படியா? ஆனால் அதோ நிற்கும் போலீஸ்காரனைக் கூப்பிடட்டுமா?

மூர்த்தி.—பொறு பொறு! உன் ஜம்பம் குலைந்துபோகும். தர்மத்தையே என் பிராணனுக்கும் மேலாகக் கருதுபவன் நான். ஆகையினால் உன்னைப்போன்ற கொடிய வஞ்சகர்களைப் போலீசார்வசம் ஒப்புவிக்காமலிருப்பது எனக்குச்சாத்தியமன்று. ஆனால் நீ என் தங்கையையும் தாயையும் ஏமாற்றி அவர்களுடைய அன்புக்குப் பாத்திரனாயிருப்பதால், தற்காலம் உன் மோசச்செயல்களை மறைத்துவைத்து உன்னைக் காப்பாற்றுவதாக நிச்சயித்திருக்கிறேன்.

கோவிந்த.—ஆகா! என்ன தயாள குணம்! என்ன தருமசிந்தை! என்னை யாட்கொள்ள வந்த தெய்வமே!

மூர்த்தி.— ஆகா! என்ன ஜம்பம்! பொறு பொறு! உன்னைக் காப்பாற்றவேண்டுமானால் நீ சில நிபந்தனைகளுக்குக்கட்டுப்படவேண்டும். எங்கள் பாங்கியில் கோவிந்தசாமி முதலியார் கணக்கில் நீ பெற்றுகொண்டிருக்கும் தொகைகளைத் திரும்பவும் கட்டிவிடவேண்டும். நிஜமான கோவிந்தசாமி முதலியார்வந்து பணம் கேட்டால் எங்கள் பாங்கிக்கு நஷ்டம் வரக்கூடாது. இரண்டாவது, இனிமேல் எங்கள் பாங்கிக்கு நீ நஷ்டம் ஏறபடுத்தாமலிருக்க வேண்டியதற்கு ஜாமீனாக என்வசம் நீ பதினாயிரம் ரூபாய் கட்டிவைக்கவேண்டும்.

கோவிந்த.—அந்தப் பதினாயிரம் ரூபாயை நீ வாயில் போட்டுக்கொள்ள மாட்டாயென்பதற்கு என்ன ஜாமீன்?

மூர்த்தி.—அவமரியாதையாய்ப் பேசாதே! பத்திரம்! என்னுடைய நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுகிறாயா, பத்துவருஷம் சிறைச்சாலையில் வசிக்கிறாயா?

கோவிந்த.—எல்லாம் சரிதான். என்னென்னவோ அயோக்கியத்தனமெல்லாம் செய்துவிட்டு, பணத்துக்குத் திண்டாடும் உன்கையில் பதினாயிரம் ரூபாயைக் கொடுத்தால், அந்தப் பணத்தை நீ அபகரித்துக்கொண்டுவிட மாட்டாயென்பதற்கு என்ன ஜாமீன்?

மூர்த்தி.—அவமரியாதையாய் ஏதேதோ பிதற்றுகிறாயே. அவைகளையெல்லாம் நான் இலக்ஷியம் செய்வேனென்றா எண்ணுகிறாய்? என் நிபந்தனைகளுக்கு உட்படுகிறாயா அல்லது சிறைச்சாலைக்குப் பத்துவருஷம் போகிறாயா?

கோவிந்த.—உன்னிஷ்டம்போல் செய்!

மூர்த்தி —அப்படியென்றால் பத்துவருஷம் சிறைச்சாலை வாசம் நிச்சயம்!

கோவிந்த.—யாருக்கு? உனக்குத்தானே? பாங்கிக் கணக்குகளில் நீ செய்திருக்கும் அயோக்கியத்தனங்களை அதிகாரிகள் கண்டுபிடிக்கும்போது, உனக்குப் பத்துவருஷம் கண்டிப்பாய்க் கிடைக்கும்?

மூர்த்தி.—அடே! நீ பேயா? என்ன சொன்னாலும் மனந்தளராமல் ஏதேதோ பிதற்றுகிறாயே!

கோவிந்த.—ஆதியிலிருந்து நான் பாங்கியை ஏமாற்றிவருவது தெரிந்தும் என்னிடம் லஞ்சம் வாங்கிக்கொண்டு அதை அதிகாரிகளுக்குத் தெரிவிக்காமல் மறைத்து வைத்திருந்த உன்னைத் தண்டித்த பின்னல்லவா என்னைத் தண்டிப்பார்கள்? அது மாத்திரமன்று. நீ பாங்கிப்பணத்தைக் கையாண்டிருப்பது எனக்குத் தெரியாதென்றா நினைக்கிறாய்? நான்தான் உங்கள் பாங்கியில் மாறுபெயர் பூண்டு பணம் போட்டுவைத்தேன். அந்தப் பணத்தை என்னைத்தவிர வேறெவரும் கேட்கமாட்டார்கள். என்னைப் பயமுறுத்திப் பணம் லஞ்சம் வாங்க யத்தனித்தாய். என்னைப் பயமுறுத்த உன்னால் முடியாது. என் கண்முன் நில்லாமல் போய்விடு. இல்லாவிட்டால், எனக்

குக் கோபம்வந்து உனக்கு ஏதேனும் தீங்கு செய்துவிடுவேன்.

மூர்த்தி.—ஐயா! கோபிக்காதேயுங்கள். நான் ஏதேதோ வியாபாரங்கள் செய்ய ஆரம்பித்தேன். எல்லாம் நஷ்டமாகவே முடிந்தன. நானென்ன செய்வேன்? வேறு விதியில்லாமல் பாங்கியிலிருந்து.

கோவிந்த.—எவ்வளவு பணம் அபகரித்துக் கொண்டாய் சொல்!

மூர்த்தி.—மூவாயிரம் ரூபாய்.

கோவிந்த.—மூவாயிரம் ரூபாயா? நீ ஐம்பது ரூபாய் சம்பளகாரன். அவ்வளவு பெரிய தொகையைக் கையாட எப்படித் துணிந்தாய்? இருக்கட்டும். நீ எனக்குக் கெடுதிசெய்ய யத்தனித்தபோதிலும், உன் தங்கையும் தாயாரும் நீ சிறைச்சாலைக்குச் செல்வதைக் கண்டு வருந்தாமலிருப்பதற்காக உனக்கு ஐயாயிரம் ரூபாய் தருகிறேன். ஆனால் அவ்வாறு நான் தருமுன், நீ உன் அயோக்கியச் செயல்களையெல்லாம் ஒப்புக்கொண்டு எனக்கு ஒரு கைக்கடிதம் கொடுக்கவேண்டும். அதில் கையெழுத்து இயல்பாகப் போடவேண்டும். என்னை ஏமாற்ற முயலாதே! பத்திரம்!

மூர்த்தி.—இல்லையில்லை. தாங்கள் என்ன செய்யச் சொன்னாலும் செய்கிறேன். என்னை இந்த ஆபத்தினின்று கரையேற்றி விடுங்கள். உங்களுக்கு மிகுந்த புண்ணியமுண்டு.

பிறகு கோவிந்தசாமிமுதலியார் ஒருகைக்கடிதமெழுதி மூர்த்திமுதலியாரிடம் அதில் கையெழுத்து வாங்கிக்கொண்டு, ரூபாய் ஐயாயிரத்துக்கு பாங்கிக்கு ஒரு செக்கு எழுதிக் கொடுத்து மூர்த்தி முதலியாரை வெளியே அனுப்பினார்.

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S AND LADIES' PAGES

(287-ம் பக்கத் தொடர்ச்சி.)

சக்திதேவனும் அம்மாளிகையினழகையும் அமைப்பையும் கண்டு களிப்பதும் அங்கு இவனுக்காக வைத்திருந்த அமிர்தம் போன்ற பழங்களையும் மற்றுமுள்ள ஆகாரவகைகளையும் புசிப்பதுமாக வினோதமாய்க் காலந்தள்ளினான். பிறகு நம்மை ஏன் மேல்மாடியில் ஏறவேண்டாமென்று சொன்னாள்? அதற்கு என்ன காரணமிருக்கும் என்று வெகு நேரம் யோசித்தான். ஒன்றும் புலப்படவில்லை. கடைசியில் ஏறித்தான் பார்ப்போம், என்ன தான் வரப்போகிறது என்று துணிந்து மேல் மாடியில் ஏறினான். எதைச் செய்யவேண்டாமென்று சொல்லுகிறார்களோ அதிலேயே கட்டாயம் செல்வது மனுஷ்ய புத்தியின் ஸ்வபாவமன்றோ? மாடியி லேறினதும் விலையுயர்ந்த பட்டுகளினால் மூடப்பட்ட மூன்று ரதனமயமான மண்டபங்களைக் கண்டான். கண்டதும், ஒன்றின் கதவைத் திறந்து உட்சென்றான். சென்றதும் ரத்னமயமான கட்டிலில் ஹம்ஸதூளிகா மெத்தையின்மேல் தன் சரீரத்தைத் துணியால் மூடிக்கொண்டு யாரோ படுத்திருந்ததாகத் தோன்றிற்று. சமீபத்தில் போய் போர்வையைத் திறந்துபார்த்தான். அப்படியே பிரமித்து நின்றுவிட்டான். ஒன்றும் தோன்றவில்லை. இதென்ன நாம் கனவு காண்கிறோமோவென நினைத்தான். இல்லை, நாம் நின்றுகொண்டிருக்கிறோமே, தூங்கவில்லையே, நமக்கிப்போது கனவேது என்று சமாதானப்படுத்திக்கொண்டான். இதென்ன மாயை? நம்மை வஞ்சிப்பதற்காக யாராலாவது செய்யப்பட்ட இந்திரஜால வித்தையோவென எண்ணினான். நமக்குப் புத்திதான் ஸ்வாதீனமில்லாமலிருக்கிறதோவென யோசித்தான். இல்லை, நாம் சரியான ஸ்திதியிலேயே இருக்கிறோம்" என நிச்சயித்துக்கொண்டான்.

இவ்விதமெல்லாம் நினைக்கும்படியாய் அங்கு என்ன காரணம் நேர்ந்ததென்று நம் நேயர்கள் அறியவிரும்புவார்கள். எந்தக் கன்னிகையை உத்தேசித்து நடுவில் அனேகவிதக் கஷ்டங்களைப்பட்டு தன் பிராணனையும் த்ருணமாய் நினைத்து மனுஷ்யர்களே போகமுடியாத மனுஷ்ய சஞ்சாரமில்லாத இக்கனகபுரிக்கு வந்துசேர்ந்தானோ, அதே கன்னிகை கனகரேகை, பரோபகாரி அரசன் மகள், அக்கட்டிலில் உயிரற்றுக் கிடப்பதைக் கண்டதுதான் அவன் எண்ணினவைகளுக்குக் காரணம். அவ்வுடலில் பிராணன் மாத்திரம் இல்லையே தவிர தேகம் கொஞ்சங்கூட வாடவுமில்லை. காந்தி குறையவுமில்லை.

சக்திதேவன் முன் சொன்னவாறெல்லாம் நினைத்து இது ஏதோ பகவானுடைய மாயையாயிருக்கிறது எனத் தீர்மானித்து அறையிலிருந்து வெளியில் வந்து மற்றிரண்டு மண்டபங்களிலும் போய்ப் பார்க்க அங்கும் வேறிரண்டு கன்னிகைகள் அதேமாதிரி உயிரற்றுக் கிடக்கக்கண்டு மிகவும் வியந்து மண்டபங்களை விட்டு வெளியில் வந்து ஓரிடத்தில் உட்கார்ந்து சுற்றிலும் பார்த்தான்.

அப்படிப் பார்க்கும்பொழுது அம்மாளிகையின் வடபுறத்தில் ஒரு பெரிய தடாகம் தென்பட்டது. அதன்கரையில் ரத்தினக் கடிவாளமிட்ட ஒருயர்ந்த குதிரை கட்டியிருந்தது. நம் பிரமசாரிக்கு குதிரை சவாரியென்றால் வெகுப் பிரியம். ஆகையால் அக்குதிரையைக்கண்டதும் அதன்மேலேறிச்சவாரிசெய்ய எண்ணினவனாய் மாளிகையைவிட்டுக் கீழிறங்கி குளக்கரை சேர்ந்து குதிரையினருகிற் சென்று அதின்மேலேற யத்தனித்தான். அது பின்னங்காலால் ஒருதை உதைத்து அத்தடாகத்தில் அவனைத் தள்ளிவிட்டது. அதில் மூழ்கி அரை நிமிஷத்திற்கெல்லாம் மேலே வந்து பார்க்க, தன்னூராகிய வர்த்தமான பட்டணத்தின் உத்தியானவன மத்தியிலிருக்கும் தடாகத்தினடுவில் தானிருப்பதாய்க் கண்டான் நம் சக்திதேவன். "ஆகா! என்னைப் போல் துர்ப்பாக்கியசாலியு மிவ்வுலகிலுண்டா? என்ன அழகு? என்ன லாவண்யம்? சந்திரப்பிரபை யென்றால் அவளுக்கே தகும். நான் அவளை விவாகஞ் செய்துகொண்டு வித்தியாதரர்களுக்குரிய சுகங்களை அனுபவிப்பதுமல்லாமல் அக் கனகபுரிக்கே அரசனாய் விடலாமென்றெண்ணியிருந்தேனே. கைக்கெட்டினது வாய்க்கெட்டவில்லையே! நம்மை யாரோ ஏமாற்றி விட்டார்களே. இனிமேல் என்ன சொல்லித்தான் என்ன பலன்? விதியை வெல்ல யாரால் முடியும் என்று பலவாறாய் நினைத்து நினைத்து அடங்காத் துயரத்துடன் தன் வீடுபோய்ச் சேர்ந்தான். போனதுபோல் வந்தான் புதுமாப்பிள்ளை.

முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.

இவ்விதம் நம் சக்திதேவன் தான் பட்ட சிரமங்களெல்லாம் வீணாய்ப்போனதை நினைத்துக்கொண்டு ஆராத்துயரத்துடன் வீடுபோய்ச் சேர்ந்தான். வெகுநாள் கழித்துவந்தவனாகையால் வீட்டிலுள்ளோர் இவனை மிகவும் பரிவுடன் உபசரித்தார்கள். அவர்களால் நன்குபசரிக்கப்பெற்று அந்நாளை யொருவாறு அங்கு கழித்தான். மறுநாட் காலையிலெழுந்து வெளியில்வர, முன்மாதிரி பறையின்சத்தம் மறுபடி காதில் விழுந்தது. அதைக்கேட்டதும் விரைந்தோடி "நான் கனகபுரியை நிச்சயமாய்க் கண்டேன்" என்று காவலரிடம் சொன்னான். அவர்களும் இவனை முன்போல் அரசனிடம் அழைத்துச் சென்றார்கள். அரசன் இவனைப் பார்த்ததும், இவன் முன்போலவே இந்தத் தடவையும் பொய் சொல்லப்போகிறானெனத் தனக்குள் நினைத்தான். இதையறிந்த சக்திதேவன் "ஓ ராஜகுஞ்சரமே! நான் சொல்வது பொய்யென்று இத்தடவை நிரூபிக்கப்படுமாகில் என் உயிரைத் தக்ஷணமே தங்களெதிரிலேயே விட்டுவிடுகிறேன் என்று சத்தியம் செய்கிறேன். தங்கள் கன்னிகை என்னைக்கேட்கட்டும், அவளுக்குத் தக்கபடி யான் விடையளிக்கிறேன்" என்று தைரியத்துடன் கம்பீரமாய்ச் சொன்னான்.

உடனே அரசன் தன் பெண்ணை அவ்விடம் அழைப்பிக்க, அவள் வந்ததும் இவனைக் கண்ணுற்று முன்னறிந்தவனாயிருக்கக்கண்டு "இவன் மறுபடியும் அஞ்சாமற் பொய் சொல்லப்போகிறான்: இதற்காக என்னை ஏன் இங்கு அழைத்தீர்கள்" என்று கடிந்துபேசினாள். அதற்கு சக்திதேவன் "ஓ கன்னிகா ரத்னமே! நான் பொய்சொல்லுகிறேனோ அல்லது நிஜம் சொல்லுகிறேனோ என்பதைப்பற்றிப் பிறகு விசாரித்துக்கொள்ளுவோம். பிராணனில்லாமல் பிணமாய்க்கிடந்த உன்னைக் கனகபுரியில் கண்டேன். இங்கு நீ உயிருடனிருக்கிறாய். இதென்ன வாச்சரியம்? இதென்ன ரகசியம்? தயவுசெய்து இதை எனக்கு விளக்கிச் சொல்வாயாக" வென விளம்பினான்.

இதைக்கேட்ட அக்கன்னிகை அடங்கா மகிழ்ச்சயுடன் தன் பிதாவை யுற்றுநோக்கி "என்னருமைப் பிதாவே! இம்மகானுபாவர்

னகபுரியைக் கண்ணுற் கண்டவர் தாம் என்பதிற் கொஞ்சமேனும் ஐயமில்லை. கூடிய சீக்கிரத்தில் எனக்குப் பர்த்தாவாகப்போகிறார். அங்கிருக்கும் என்னுடைய மூன்று சகோதரிகளையும் இவர் விவாகம் செய்துகொண்டு அப்பட்டணத்திலேயே வசித்துக்கொண்டு வித்தியாதர ராஜ்யத்தையும் ஆளப்போகிறார். நான் அந்தப் பட்டணத்திற்குப் போய் அங்கிருக்கும் என்னுடலுக்குள் சீக்கிரம் பிரவேசிக்கவேண்டும். ஒரு முனிவர் சாபத்தினால் தங்கள் வீட்டில் தங்களுக்குப்புத்திரியாய்ப்பிறந்தேன். 'ஒரு மானிடன் கனகபுரிக்குப் போய், உன் சரீரத்தைக் கண்டுவிட்டு எப்பொழுது உன் ரகஸ்யத்தைவெளியிடுவானோ அப்பொழுதே உனக்கு சாபவிமோசனம். மானிட ஜன்மத்திலும் பூர்வக்ஞானமிருக்கும்'' என்று அம்முனிவர் சாபவிமோசனத்தையும் செப்பியருளினார். "அக்காலம் வந்துவிட்டது. என் ரகஸ்யம் வெளியாய்விட்டது. ஆகையால் நான் என் இருப்பிடம்போய்ச் சேருகிறேன். இவ்வளவு நாள் என்னை அன்புடன் காப்பாற்றியதற்கு நான் மிகவும் நன்றியறிதலுள்ளவளாயிருக்கிறேன்'' என்றுரைத்துக்கொண்டே அந்தச் சரீரத்தை விட்டு மறைந்தாள். உடனே அரண்மனை முழுவதும் அழுகையால் நிறைந்தது.

நம் சக்திதேவன் உடனே அவ்விடத்தை விட்டகன்று தான் எவ்வளவோ பிரயாசைப்பட்டும் பலன் கிட்டாததைப்பற்றி நினைத்து நினைத்து மனமுருகினான். பிறகு சற்று யோசித்து "ஆகா! நாம் ஏன் இவ்விதம் விசனிக்கிறோம். அக்கன்னிகைகளும் வித்யாதர ராஜ்யமும் நமக்கு நிச்சயமாய்க் கிடைக்குமென்றல்லவோ கனகரேகை சொல்லிப் போனாள். முயற்சியைச் சரியாய்ப் பண்ணினால் அது ஒருநாளும் வீண்போகாது. இந்தத் தடவை அவர்களை யடையாமற் திரும்புவதில்லை'' என நிச்சயித்துக்கொண்டு மறுபடியும் புறப்பட்டு முன் நடந்த வழியே நடந்து சமுத்திரக்கரையைச் சேர்ந்தான். அங்கு மிகுந்த முகமலர்ச்சியுடன் ஒருமனிதன் தன்னை நோக்கிவருவதைக் கண்டான். முன் தடவை போனபோது இவன் ஒரு வியாபாரியுடன் சேர்ந்து உன்னத ஸ்தலம் என்னும் தீவைக்குறித்து கப்பலில் பிரயாணஞ் செய்துகொண்டிருக்கையில் ஓடங்கவிழ்ந்து போய் இருவரும் சமுத்திரத்தில் விழுந்துவிட்டது நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம். அப்பொழுது சமுத்திரத்தில் விழுந்த சமுத்திரதத்தனென்னும் வியாபாரிதான் இப்போது நம் சக்திதேவனை நோக்கி வருபவன்.

அவனைக் கண்டதும் நம் சக்திதேவன் அளவிலா வாச்சரியங்கொண்டு அன்று நம்முடன் கடலில் விழுந்தவர் இங்கு எப்படி வந்தார்? ஏன் வந்திருக்கக்கூடாது? கடவுள் செயலை யாரால் வருணிக்கமுடியும்? அதற்கு நாமே ஓர் உதாரணமல்லவா? என்று நினைத்துக்கொண்டிருக்கும்பொழுதே அவ்வியாபாரி சமீபத்தில் வந்து சந்தோஷத்தினால் அவனைத் தழுவிக்கொண்டான்.

பிறகு குசலப் பிரச்னம் பண்ணினதும் அவனைத் தன்னகத்துக் கழைத்துச் சென்று அங்கு அவனுக்கு வேண்டியவைகளை யன்புடனுதவி "ஸ்வாமீ! தாங்கள் எவ்விதம் கடலிலிருந்து கரையேறினீர்கள்'' என்று ஆச்சரியத்துடன் வினவினான். அப்பொழுது சக்திதேவன் அன்று முதல் இன்றுவரை நடந்த தன்னுடைய விருத்தாந்தங்கள் யாவையும் செவ்வனே வுரைத்து, "நீர் எவ்விதம் கரை யேறினீர்'' என்று அவனை வினவ, அவன் சொன்னதாவது:—

"கடலில் விழுந்து நான் தத்தளிக்குந்தருவாயில் ஈசன் செயலால் ஓர் உடைந்த பலகை எனக்கருகில் மிதக்கக் கண்டு அதின்மேலேறிக்கொண்டு மூன்றுநாள் வரையில் அப்படியேயிருந்தேன். நான்காவதுநாட் காலையில் இனி இவ்விதம் எத்தனைநாட்களிருக்கமுடியும்? குளிரும் பசியும் நம்மை மிகவும் வருத்துகின்றன. பிழைப்பதற்கோ ஒருவழியுங்காணோம். இனி நமக்குப் பூவுலகிலிருக்க ஈசனருளில்லை போலிருக்கிறது எனத் துக்கித்துக்கொண்டிருக்கும்போது கொஞ்சதூரத்தில் வந்துகொண்டிருக்கும் ஒரு கப்பல் என் கண்ணில் தோன்றியது.''

"அதைக் கண்டதும் ஆசையற்றுக் கிடந்த என் மனம் ஆசையில் மூழ்கியது. கப்பல் கொஞ்சம் சமீபத்தில் வந்ததும், அக்காலமிருந்த என் பலத்தைக்கொண்டு உரக்கக் கத்தினேன். அதைக்கேட்டு அக்கப்பலிலுள்ளோர் மனமிரங்கி என்னருகில் கப்பலை யோட்டி வந்து என்னைக் கப்பலின் மேலேற்றிக்கொண்டனர். அதிலேறினதும் யான் அக்கப்பற்றலைவரிடம் கொண்டுபோகப்பட அவர் என்னருமைப்பிதா

வாயிருக்கக் கண்டேன். என்னைப் பார்த்ததும் அவருக்குத் துக்கமேலிட்டு என்னைக் கட்டிக்கொண்டு ஓவென்றலறி "குழந்தாய்! உனக்கு இக்கதிவருவானேன்'' என்று கேட்க "பிதாவே! தாங்கள் தீவாந்தரம்போய் வெகுநாளாகியும் யாதொரு செய்தியும் தெரியாமலிருக்கக்கண்டு நம் குலதர்மத்தைக் கைவிடக் கூடாதென நினைத்து வியாபாரத்திற்காகக் கப்பலேறிச் சென்றேன். செல்லும்போது நடுவில் கப்பல் கவிழ்ந்துவிட்டது'' என நானுரைக்க அதற்கவர் என்மேல் சினந்து "அப்பா! நீ ஏனிப்படி பிராணனுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய காரியங்களி லிறங்குகிறாய். உனக்கென்ன பணத்திற்குக் குறைவா? எனக்கு நீ ஒரே பிள்ளை. வேண்டிய பணம் சேகரித்து வைத்திருக்கிறேன். போதாக் குறைக்கு சம்பாதிக்க நானிருக்கிறேன். இதோ பார். இக்கப்பல் பூராவும் தங்கம். இவ்வளவும் நம்முடையதுதான். ஆகையால் நீ இவ்விதம் ஸாஹஸமான காரியங்களைச் செய்யாதே'' என்று சொல்லி என்னை வீட்டுக்கழைத்துவந்தார். இதுதான் என் வரலாறு'' என்றான்.

சக்திதேவன் அன்றிரவு அங்கு கழித்துக் காலையில் எழுந்து காலைக்கடனை முடித்து வர்த்தகனை நோக்கி "எனக்கு மறுபடியும் அந்த உன்னதஸ்தல மென்னும் தீவுக்குப் போக வேண்டும்'' என வுரைத்தான். "இதோ என் வேலையாட்களிற் சிலர் அங்கு செல்லுகிறார்கள். அவர்களுக்காகக் கப்பல் தயாராயிருக்கிறது. அதிலேயே தாங்களும்போகலாம்'' என்று வியாபாரி சொன்னான்.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் கப்பல் புறப்பட்டது. சரியானகாலத்தில் உன்னதஸ்தலம் போய்ச் சேர்ந்தது. சக்திதேவன் உடனே கப்பலைவிட்டிறங்கி பட்டணத்திற்குள் பிரவேசித்து ஒரு தெருவழியாய்ப் போய்க்கொண்டிருக்கும்போது அத்தீவுக்கரசனாயிருந்த சத்யவிரதனுடைய குமாரர்கள் இவனை யடையாளங்கண்டு இவனருகில்வந்து "ஸ்வாமீ! தாங்களும் என் பிதாவும் சேர்ந்து கனகபுரியைத்தேடிச் சென்றீர்களே. அப்படியிருக்கத் தாங்கள் மாத்திரம் எப்படி இங்குவந்தீர்கள்? எங்கள் பிதாவெங்கே?'' என்று கேட்டார்கள். அதற்கு சக்திதேவன் "உங்கள் பிதா சமுத்திரத்தில் வடவாமுகாக்கினிக் கிரையாயினார்'' என்றுரைக்க, மிகவும் கோபித்துக்கொண்டு அச்செம்பட யுவகர்கள் தங்கள் வேலையாட்களை யழைத்து, "இவன்தான் எங்கள் பிதாவைக்கொன்ற மாபாதகன். இல்லாவிடில் இருவரும்சேர்ந்து ஒரு கப்பலில் போய்க்கொண்டிருக்கும்பொழுது ஒருவர் மாத்திரம் வடவாமுகாக்கினிக்கிரையாவானேன்? மற்றொருவன் தப்பிப் பிழைத்து வருவானேன்? இவனைப் பிடித்துக்கட்டி காளிகோயிலிற்குக் கொண்டுபோய் அங்கு அடைத்துவையுங்கள். நாளைய தினம் இவனைக் காளிக்குப் பலிகொடுத்து விடுவோம்'' என்று சொல்ல, அவர்களும் அப்படியே செய்தார்கள்.

அக்கோயிலோ மகா பயங்கரமாயிருந்தது. அதற்குள் அடைக்கப்பட்டிருந்த சக்திதேவன் இன்ன செய்வதென்று தோன்றாமல் கடைசியாய்க் காளியைத் தோத்திரம் செய்யவாரம்பித்தான். "அம்மணி! தாயே! பகவதி! ஸகல லோகங்களுக்கும் பிறப்பு, இருப்பு, இறப்பு இம்மூன்றுக்கும் காரணம் நீதான். நீ இல்லாமல் ஓரணுவுமசையாது. ஈசனே உன்னருளால்தான் எதையும் செய்யவல்லவனென்றால் மற்றவரைப்பற்றிக் கேட்பானேன்? நிரபராதியாகிய யான் இக்கொடியோர் கையிற் சிக்கிக்கொண்டேன். பொழுது விடிந்தாற் பிழைப்பில்லை. அதற்குள் எப்படியாவது இவ்வாபத்தினின்றும் என்னைக் காத்தருளவேண்டும்'' என்றிவ்வாறாக ஸ்தோத்திரம் செய்துகொண்டிருக்கும்போதே தன்னை யறியாமற் சோர்ந்து நித்திரைபோனான்.

இவ்விதம் நித்திரை போனதும் ஒரு கனவு கண்டான். அக்கோயில் கர்ப்பக் கிருகத்திலிருந்து ஒரு திவ்ய ஸ்திரீ வெளியில் வந்து அவனருகிற்சென்று "குழந்தாய்! பயப்படாதே! ஒருபோதும் உனக்குக் கெடுதியுண்டாகாது. இந்தச் செம்படவக் குமாரர்களுக்கு மிகவும் அழகுவாய்ந்த ஒரு ஸகோதரி யிருக்கிறாள். அவள் பெயர் பிந்துமதி. அவள் காலையில் இங்குவந்து உன்னைக் காண்பாள். கண்டதும் உன்மேல் மோகங்கொண்டு தன்னை விவாகஞ் செய்துகொள்ளும்படி உன்னை வேண்டிக்கொள்வாள். நீ ஒப்புக்கொள். அவள் இவ்வாபத்திலிருந்து உன்னை விடுவிப்பாள். அவள் செம்படவப் பெண்ணாயிற்றே யென்று நிராகரித்து விடாதே. அவள் கேவலம் ஒரு வலை

ளுன் பெண்ணல்ல. அவள் ஒரு வித்தியாதர ஸ்திரீ, சாபத்தினுல் இங்கே பிறந்திருக்கிருள்" என்று சொல்லி மறைந்தாள்.

உடனே சக்திதேவன் விழித்துக் கொண்டான்; எதிரில் ஒருவரையுங் காணேம். இது தேவியின் அனுக்ரஹமாகத்தா னிருக்க வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு அக்கன்னிகையின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

கதிரவன் உதித்ததும் அக்கன்னிகை காளி கோயிலுக்குவந்து இவனைக்கண்டு இவன் வரலாற்றை வினவ, இவன் தன் வரலாற்றைச் சுருக்கிச் சொன்னுன். அதைக்கேட்ட அக்கன்னிகை "நான் தங்களை இவ்வாபத்தினின்றும் விடுவித்து விடுகிறேன். ஆனுல் நான் சொல்வதைத் தாங்கள் கேட்கவேண்டும். அதாவது—'என் விவாகத்திற்காக என் ஸகோதரர்கள் தேசங்களெல்லாந் திரிந்து அனேக யுவகர்களை தேடிக்கொண்டுவந்தார்கள். அவர்களில் ஒருவராவது என்மனத்திற் கேற்றவராக இல்லாததினுல் நான் அவர்களை நிராகரித்துவிட்டேன். ஆனுல் தங்களைப் பார்த்தமாத்திரத்தில் தங்கள்மேல் எனக்கு அளவுகடந்த அன்புண்டாகிவிட்டது. ஆகையால் தாங்கள் தயவுசெய்து அடியாளை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்ருள்.

சக்திதேவன் தான் இரவில்கண்ட கனவை நினைத்துக்கொண்டு "அப்படியே யாகட்டும்" என்று ஒப்புக்கொண்டான். உடனே தன்னபிப்பிராயத்தைத் தன் ஸகோதரர்களுக்குத் தெரிவித்து, இவனைத் தன் வீட்டிற் கழைத்துச் செல்ல அங்கிவ்விருவருக்கும் வெகுவிமரிசையாய் விவாகம் நடந்தேறியது.

நம் சக்திதேவன் இவ்வளவு நாள் பட்ட அளவுகடந்த சிரமத்திற்குப் பரிகாரமாக அவ்வழகியுடன் திவ்விய சுகபோகங்களையனுபவித்துக்கொண்டு அவ்வூரிலேயே வெகுநாளிருந்தான்.

இங்ஙனமிருக்க, ஒருநாள் இருவரும் உல்லாஸமாய் வீட்டின் மாடியில் நின்றுகொண்டு வீதியில் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒரு சண்டாளன் கோமாம்ஸத்தை எடுத்துக்கொண்டு தெருவில் போய்க்கொண்டிருந்தான். இதைக் கண்ட சக்திதேவன் "பிரியே! இதோ பார். மூவுலகிலும் பூஜிக்கப்பட்டுக் கொண்டாடப்படும் பசுவின் மாம்ஸத்தை இவன் உண்பதற்காகக் கொண்டுபோகிருன். இவன் எவ்வளவு பாபியாயிருக்கவேண்டும்" என்று சொல்ல, அதற்கவள் "அதற்கென்ன சந்தேகம்?" பசுவின் விஷயத்தில் நான் செய்த மிகவும் அற்பமான ஒரு தப்பினுல் எனக்கு இந்தச் செம்படவ ஜன்மம் வந்ததென்ருல் இவனைப்பற்றி என்ன சொல்வது!" என்ருள்.

அதைக்கேட்ட சக்திதேவன் "நீ யார்? உனக்கெப்படி இச்சன்மம்வாய்த்தது?" என்றுவினவ அதற்கவள் ஒன்றும் பதில் சொல்லவில்லை. பின்னும் நிர்ப்பந்தித்து இவன் கேட்க, அதற்கவள் "நான் மிகவும் ரகஸ்யமான ஒரு விஷயம் சொல்லுகிறேன். அதை மிகவும் கோப்யமாக வைத்துக்கொள்ளுவதுந் தவிர அதன்படி தாங்கள் நடப்பதானுல் அதைச் சொல்லுகிறேன்" என்ருள்.

"அப்படியே செய்கிறேன்" என்று சக்திதேவன் உறுதிமொழி கூறியபிறகு, அவள் சொன்னதாவது:-"இதே தீவில் இப்பொழுது தங்களுக்கு மற்றொரு பாரியையும் கிடைக்கப்போகிருள். அவள் தங்களை யடைந்ததும் கர்ப்பந்தரிப்பாள். கர்ப்பந்தரித்த எட்டாவது மாதத்தில் அவளுடைய வயிற்றைக்கிழித்து அச்சிசுவை வெளியிலெடுத்துவிட வேண்டும். இவ்விஷயத்தில் கொஞ்சமாவது தயையாவது கருணையாவது காட்டக்கூடாது. இதுதான் தாங்கள் செய்யவேண்டிய வேலை. என் விருத்தாந்தத்தைக் சொல்லுகிறேன், கேளுங்கள். நான் பூர்வஜன்மத்தில் ஒரு வித்தியாதர ஸ்திரீயாயிருந்தேன். ஏதோ சாபத்தினுல் பூமியில் மனுஷ்ய ஸ்திரீயாய்ப் பிறந்தேன். அந்த ஜன்மத்தில் நான் வீணைவாசிப்பது வழக்கம். அப்பொழுது வீணையின் தந்தி அறுந்துபோனுல் அதைப் பல்லால் கடித்துக்கொண்டு முடிபோடுவது வழக்கம். பசுவின் நரம்பாகிய அந்தத் தந்தியை, பல்லால் கடித்ததின் பலனுக இந்த ஜன்மம் எனக்கு வந்தது. இதற்கு இக்கதி வாய்க்குமானுல், பசுவின் மாம்ஸத்தைப் புசிப்பவர்களுக்கு எக்கதி யுண்டாகும் என்பதை யோசித்துப் பாருங்கள்" என்று சொல்லிக்கொண் டிருக்கும்பொழுதே அவளுடைய சகோதரர்களில் ஒருவன் ஓடிவந்து "எழுந்திரும்; ஏதோ ஒருபெரிய பன்றி, மிகுந்த வேகத்

துடன் ஓடிவருகிறது. அது வழியில் அனேகரைக் கொன்றுவிட்டு நம் வீட்டைநோக்கி ஓடிவருகிறது" என்று கத்தினுன். இதைக்கேட்டதும் சக்திதேவன் வெகு வேகமாய் மாடியை விட்டிறங்கி கையில் வேலாயுதந்தரித்து ஒரு குதிரையின்மே லேறிக்கொண்டு பன்றியைத் துரத்திக் கொண்டு ஓடினுன்.

பன்றியும் இவனைக்கண்டு பயந்தோடிற்று. சக்திதேவன் அதை விடாமல் வெகுதூரம் துரத்திச்சென்று கடைசியில் அதன் கிட்ட நெருங்கி அதைத் தன் வேலால் குத்தினுன். அதைப் பொறுக்கமாட்டாமல் அப்பன்றி கதறிக்கொண்டே ஒரு பெரிய புதரில் புகுந்துவிட்டது. அக்குகை மனிதர் நுழையக்கூடியவளவு பெரிதாயிருந்ததால் பன்றியைப் பின்பற்றி இவனும் அதனுட்சென்ருன். சென்றதும் கொஞ்சதூரத்தில் ஓரழகிய உத்தியானவனத்தையும் அதனடுவில் ஒரு மாளிகையையும் கண்டான். அதைப் பார்த்துக்கொண்டே நிற்கும்பொழுது அங்கு சந்திரபிம்பம்போல் மாசற்ற முகத்தினளான ஓர் சுந்தரி எதிரில் தோன்றினுள். அவளைப் பார்த்து "பெண்ணே நீ யார்? நீ எப்படி இங்கு வந்தாய்? உன்னைப் பார்த்தால் மிகவும் பயந்தவளாகக் காணப்படுகிருயே, யாது காரணம்பற்றி பயப்படுகிருய்?" என்று சக்திதேவன் கேட்க, அதற்கு அச்சிறுமி "நான் சண்டவிக்கிரமனென்னும் தக்ஷிண தேசாதிபதியின் மகள். என் பெயர் பிந்துரேகை. மகா பாபியான இவ்வசுரன் என்னைத் தூக்கிக்கொண்டுவந்து இங்கே சிறைவைத்திருக்கிருன். இப்பொழுது மாம்ஸத்தில் ஆசையுள்ளவனுய் பன்றி உருவமெடுத்து வெளிக்கிளம்பினுன். ஆனுல் யாரோவொரு மகாவீரனுல் சக்தியாயுதத்தா லடிக்கப்பட்டு உடனே இங்குவந்து விழுந்து பிணமாய்க் கிடக்கிருன். இதுவரை என் கற்பு கெடவில்லை. எனக்கு இன்னமும் விவாகம் ஆகவில்லை. இவன் மரித்ததைப் பார்த்ததும் நான் வேகமாய் ஓடிவந்தேன்" என்று இனிய குரலால் மொழிந்தாள்.

"பெண்ணே! பயப்படாதே. நான்தான் இந்தவேலாயுதத்தினுல் இவனைக்கொன்றேன்" என்று சக்திதேவனுரைக்க "அப்படியானுல் தாங்கள் யார்? தங்கள் பெயரென்ன?" என்று அக்கன்னிகை வினவினுள். "நான் சக்திதேவன் என்னும் ஒரு பிராமணன்" என்று இவன் பதிலளிக்க, "அப்படியானுல் தாங்கள் தான் எனக்குப் பர்த்தாவாக வேண்டும். தயவு செய்து என்னை ஸ்வீகரித்துக்கொள்ளவேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள் சிறுமி. சரி யென்று அவளைக் கையில் பிடித்துக் கொண்டு குகையிலிருந்து வெளியேறித் தன் வீடுசேர்ந்து நடந்த விவரங்களையெல்லாம் பிந்துமதிக்குச் சொன்னுன். அவளும் "தாங்கள் இவளை மணந்துகொள்ளவேண்டும்" என்று வற்புறுத்த, சரியான முகூர்த்தத்தில் அவளையும் மணம்புரிந்துகொண்டு மூவரும் மிகவும் அன்புடன் காலங்கழித்து வந்தார்கள்.

இப்படியிருக்க பிந்துரேகை கர்ப்பமாயினள். மாதங்களும் ஏழு நிறைந்தன. எட்டாவது மாதமும் பிறந்தது. அப்பொழுது பிந்துமதி "பிராணநாதா! இது பிந்துரேகைக்கு எட்டாவது மாதம். இப்பொழுது தாங்கள் செய்வதாக ஒப்புக்கொண்ட காரியத்தைத் தங்களுக்கு நினைப்பூட்டுகிறேன். சத்தியம் ஒருபோதும் தவறவிடக் கூடாதல்லவா?" என்ருள். ஒருபக்கம் ஸ்நேகமும் தயையும் பாதிக்கிறது. இன்னொரு பக்கம் பிரதிக்ஞை வந்து எதிர்நிற்கிறது சக்திதேவனுக்கு. என்ன சபதஞ் செய்துவிட்டோம். அழகிய சிறுமி. அவளிடம் வைத்திருக்கும் ஆசைக்கோ அளவேயில்லை. மேலும் கர்ப்பிணி. இவளை எப்படிக் கொல்வது என்கிற துக்கத்துடனே வெளியிற் கிளம்பி பிந்துரேகை யிருக்குமிடம் சென்ருன்.

அவள் இவன் மனஞ் சோர்வுற்று இருப்பதை யறிந்து "நாதா! என்ன இன்றைக்குத் தங்கள் முகம் வாடியிருக்கிறது. ஓகோ! இதற்குக் காரணம் எனக்குத் தெரியும். பிந்துமதி என் கர்ப்பத்தைச் சேதிக்கும்படி சொல்லியனுப்பியிருக்கிருள். அதுதான் வருத்தத்திற்குக் காரணம் அல்லவா?" என்ருள். சக்திதேவன் ஆச்சரியத்துடன் ஆம் என்ருன். "நாதா! தாங்கள் இவ்விஷயத்தில் ஒன்றும் யோசிக்க வேண்டாம். இதில் ஒருவித தோஷமுமில்லை. இதைத் தாங்கள் செய்தே தீரவேண்டும். இதில் ஒரு ரகஸ்யமிருக்கிறது. அது தங்களுக்கு பிறகு வெளியாகும். ஆகையால் கொஞ்சங்கூட வருத்தப்படாமல் இக்காரியத்தை சந்தோஷமாய்ச் செய்யுங்கள்" என்று சொன்

ளுள் பிந்துரேகை. அவள் என்ன சொல்லியும் அவனுக்கு மனந்துணியவில்லை. அப்பொழுது ஆகாயத்திலிருந்து 'ஓ சக்திதேவனே! கொஞ்சங்கூட யோசிக்காமல் இவள் கர்ப்பத்தைக் கிழித்து சிசுவை வெளியில் எடு. எடுத்து அதன் கழுத்தைப் பிடித்தமாத்திரத்தில் அது ஒரு கத்தியாய் மாறிவிடும்'' என்று ஆகாயவாணி சொல்ல, இதைக் காதாற் கேட்டதும் சக்திதேவன் மனந்துணிந்து அவ்விதம் செய்து சிசுவின்கழுத்தைக்கையினால் பிடிக்க, உடனே அது ஒரு கத்தியாய் மாறிவிட்டது.

கத்தி கையில் வந்ததும், அந்த சக்திதேவன் என்னும் பிராமணன் தன்னுருமாறி ஒரு அழகிய வித்தியாதரனாகிவிட்டான். பிந்துரேகையும் மறைந்துவிட்டாள். உடனே தன் வித்தியாதர ரூபத்தோடு பிந்துமதியினிடம் சென்று இங்கு நடந்தவரலாற்றைக் கூறினான். அதற்கு அவள் "நாதா! நாங்கள் மூன்று பேர்களும் சாபத்தினால் கனகபுரியை விட்டுப் பூமியில் வந்து பிறந்தோம். ஒருத்தி பெயர் கனகரேகை. அவள்தான் வர்த்தமானபுரத்தில் ராஜகுமாரியாய்ப் பிறந்து, தாங்கள் பார்த்துக்கொண்டிருக்கும்போதே சரீரத்தை விட்டவள். அவளுக்குச் சாபவிமோசனமாய்க் கனகபுரி போய்ச் சேர்ந்துவிட்டாள். இரண்டாவது தான் இந்த பிந்துரேகை. இவளுடைய சாபமுடிவின் வேடிக்கையைத்தான் கண்ணாற்கண்டீர்கள். நான்தான் மூன்றாவது. எனக்கும் இப்போது சாபவிமோசன மாகப்போகிறது. நாங்கள் மனுஷ்ய லோகத்தில் பிறந்தாலும் எங்களெல்லோருக்கும் வித்தையும் பூர்வ ஜன்ம ஞானமுமிருந்தன. இப்போதே நானும் புறப்பட்டுக் கனகபுரி போய்ச்சேரவேண்டும். எங்களுக்கெல்லாம் மூத்தவள் சந்திரப்பிரபை அங்கேயே யிருக்கிறாள். ஆகையால் தாங்கள் இப்போது பெற்றிருக்கும் கட்கசித்தியைக் கொண்டு கனகபுரி வந்துசேருங்கள். அங்கு வந்ததும் வனத்திலிருக்கும் என் பிதா எங்கள் நால்வரையும் தங்களுக்கு தாரைவார்த்துக் கொடுப்பார். அப்படி அவரால் கொடுக்கப்பட்ட எங்களைப் பாணிக்கிரஹணம் செய்துகொண்டு வித்தியாதர ராஜ்யத்தையுமடைந்து சுகமடைவீர்கள்!" என்றாள்.

(இக்கதை அடுத்த சஞ்சிகையில் முடிவுபெறும்.)

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

இந்தியாவில் துணி இறக்குமதி.—சென்ற பிப்ரவரிமாதம் 28உயோடு முடிவான 12 மாத காலத்துக்கு இந்தியாவில் இறக்குமதியான பருத்தித் துணிகளின் விலைமதிப்பு 44 கோடியென்றும் 1220 லக்ஷம் கஜம் துணிகள் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன வென்றும், ஆனால் 1914-ம் ௵ பிப்ரவரி ௴ 28உயோடு முடிந்த ஒரு வருஷகாலத்தில் 57 கோடி ரூபாய் மதிப்புள்ள 31,810 லக்ஷம் கஜம் துணிகள் இறக்குமதியாயினவென்றும் தெரிகிறது.

* * *

ஜெர்மன் நஷ்ட ஈடு.—1922-ம் வருஷத்திற்கு ஜெர்மனி கொடுக்க வேண்டிய தொகை, பணமாய் 72 கோடி தங்க மார்க்குகளென்றும், 145 கோடி தங்கமார்க்குகளுக்குப் பொருள்களும் கொடுக்க வேண்டுமென்றும் நஷ்ட ஈடு கமிஷன் தீர்மானித்திருக்கின்றது.

* * *

பீஹார் ஒரிஸ்ஸா கல்விச் சங்கம்.—தற்காலக் கல்வி முறையைத் திருத்தும் நோக்கத்துடன் சமீபத்தில் பாட்னாவில் ஜஸ்டிஸ் ஜாவா பிரசாதின் அக்கிராசனத்தின்கீழ் கல்விமான்களும், பொதுஜனங்களும் ஒரு கூட்டம் கூடினர். அச்சமயம் பீஹார் ஒரிஸ்ஸா கல்விச் சங்கமொன்று ஸ்தாபிக்கப்பட்டது. இப்பொழுது கல்வி முறையி லிருந்துவரும் கெடுதிகளைத் திருத்தி, கல்வியின் நன்மையை ஸ்தாபிப்பதே சங்கத்தின் நோக்கம். கவர்ன்மெண்ட் போதனா பள்ளிக்கூடத்துத் தலைவர் மிஸ்டர் ஜாக்கட் தமது பிரசங்கத்தில் தற்கால முறையைக் கண்டித்து, இந்தப் படிப்பில் மாணவர்களின் க்ஷேமம் சற்றும் கவனிக்கப்படவில்லை யென்றும், வருஷா வருஷம் தங்களையே நம்பியிருக்க சக்தியற்ற பலர் பீ. ஏ. பட்டம் பெறுகின்றனரென்றும், இந்தச் சங்கம் முதலில் அந்த மாகாணத்தைப் பொறுத்தமட்டில் வேலைசெய்ய வேண்டுமென்றும், பிறகு அகில இந்திய சங்கமொன்றை ஏற்படுத்த வேண்டுமென்றும் சொன்னார். 10 கல்விமான்களும், 5 சாமானியர்களும் கலந்த கமிட்டி ஒன்றும். சபையின் விதிகளை ஏற்படுத்த மற்றொரு கமிட்டி நியமிக்கப்பட்டுள்ளன.

மட்டான போசனம் மனதிற்கு மகிழ்ச்சி.

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XIV | துன்மதி௵ பங்குனி௴ :: 1922-ம்௵ ஏப்ரல்௴ | பகுதி 10

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

புகரில் சேவல ! தந்துர சங்க்ரம
நிருதர் கோபக்ர வுஞ்சநெ டுங்கிரி
பொருத சேவக ! குன்றவர் பெண்கொடி
மணவாளா !

புளித பூசா ருஞ்சுர ரும்பணி
புயக பூதர ! என்றிரு கண்புனல்
பொழிய மீமிசை யன்புது ளும்பிய மனனாகி

அகில பூதவு டம்புமு டம்பினில்
மருவு மாருயி ருங்கர ணங்களு
மவிழ யானுமி ழந்தஇடந்தனி லுணர்வாலே

அகில வாதிக ளுஞ்சம யங்களும்
அடைய ஆமென அன்றென நின்றதை
அறிவி லேனறி யும்படி யின்றருள் புரிவாயே!

மகர கேதன் முர்திகழ் செந்தமிழ்
மலய மாருத மும்பல வெம்பரி
மளசி லீமுக மும்பல மஞ்சரி வெறியாடும்

மதுக ராரவ்வி குஞ்சணி யுங்கர
மதுர கார்முக மும்பொர வந்தெழு
மதன ராஜனை வெந்துவி மும்படி முனிபால

முகிழ்வி லோசன முஞ்சிறு திங்களு
முதுப சீரதி யும்புனை யுஞ்சடை
முடியர் வேதமு நின்றம ணங்கமழ் அபிராமி

முகர நூபுர பங்கய சங்கரி
சிரகு மாரித்ரி யம்பகி தந்தருள்
முருகனே ! சுர குஞ்சரி ரஞ்சித பெருமாளே!

மீன் கொடியுடனும், கீர்த்திபெற்று விளங்கும் செந்தமிழின் உற்பத்தி ஸ்தானமான பொதியமலையிலிருந்து வீசும் தென்றற்காற்றுடனும், மிகுந்த நறுமணம் வீசும் பலவித புஷ்ப பாணங்களுடனும், வண்டுகள் மொய்த்தாடும் பல புஷ்பமாலைகளை ஏராளமாய் அணிந்து ஹுங்காரஞ்செய்யும் இனிய அழகிய முகத்துடனும் போர்தொடுக்க வந்த மன்மதனை வெந்து விழும்படிக் கோபித்த (யோகத்தினால்) குவிந்த பார்வையையுடைய கண்களும், இளம்பிறைச் சந்திரனையும் கங்கையையும் அணிந்த சடாமுடியுமுள்ள சிவபெருமானும், வேதங்களின் வாசனை வீசும் உமாதேவியாகவும் சங்கத்தினால் செய்யப்பட்ட தண்டைகளை யணிந்த பாதத்தாமரைகளையுடைய சங்கரியாகவும் பர்வதராஜன் புதல்வியான பார்வதிதேவியாகவும் மூன்றுகண்களையுடைய அர்த்தநாரீசுவரர் தேவியாகவும் விளங்கும் உலகமாதாவானவளும் உலகமுய்யும்பொருட்டுத் தந்தருளிய ஞானதேசிகனே! தெய்வயானையின் மனத்தில் ஆநந்தத்தையூட்டும் பெருமானே! நான், குற்றமற்ற சேவற்கொடியை யுடையவனே! சிங்கப்பற்களை யுடையவரும், மாயவித்தையில் தேர்ந்தவருமான அசுரர்களது கோபத்தின் சொரூபமான பெரிய க்ரௌஞ்சபர்வதத்தை வேலாயுதத்தினால் பிளந்து துகளாக்கிய வெற்றிவீரனே! வேடர் குலத்திலுதித்த வள்ளிநாயகியை மணந்துகொண்ட பெரியோனே! தூய்மைபொருந்திய பிராமணர்களும் தேவர்களும் வணங்கும் குன்றுகளையொத்த தோள்களை யுடையவனே! என்று சொல்லி என் வாயார உன்னைத் துதித்து, கண்களினின்றும் ஆநந்தபாஷ்பம் சொரிய, மேன்மேலும் எழும்பும் அன்பு நிறைந்த மனத்தையுடையவனாய், பஞ்சபூதங்களாலாகிய தேகமும் அத்தேகத்தி லுறையும் அருமையான உயிரும் புலன்களும் வேறாகவிருக்கும்படி நான் பிரிந்து பற்றற்று நின்று, நான் என்னும் அகந்தையையுமிழந்து, அப்பொழுது மெய்யுணர்வுபெற்று, சகல மதங்களும் மதவிஷயமாகத் தர்க்கஞ்செய்யும் சகலரும் ஜீவராசிகள் தங்கள் முயற்சியினால் அடையக்கூடுமென்றும், அடையமுடியாதென்றும் எப்பொருளைக்குறித்துச் சொல்லுகிறார்களோ அப்பொருளை அறிவில்லாத அடியேனும் அறியும்படி இன்று அருள் புரியவேண்டும்.

மட்டி எருக்கலை, மடல் மடலாய்ப் பூத்தாலும் மருக்கொழுந்து வாசனை ஆகுமா ?

விவேக போதினி

தொ. 14] துன்மதிவூ :: பங்குனிமீ [பு. 10

கந்த புராணம்

SKANDA PURANAM

"எனதருமைப் புதல்வர்காள்! உயிர்களெல்லாம் பிறப்பினால் அடையத்தக்க சிறந்த பலன்கள் சாஸ்திர ஞானமும் குறைவில்லாத செல்வமுந்தான். அவைகளில் ஒன்றையாயினும் ஒரு உயிர் அடையாவிடின், அதன் பிறப்பைவிடப் பேய்ப்பிறப்பே மேலானதெனக் கூறலாம். சிறந்த பலன்களாகிய அவ்விரண்டையும் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து கல்வியினும் செல்வமே சிறந்ததென விவேகிகள் கூறுவார்கள். சாஸ்திர ஞானம் முதிர்ந்தவரா யிருந்தாலும் ஒருவர் வறுமையினால் வருந்துவராயின், அவர் பொருளைப் பெறவேண்டிப் பிறரை வணங்கி நிற்பார். கல்வியையும் மற்றும் மாணிடர்களுக்கு அவசியமானவைகளையும் குறைவில்லாமற் பெறுவதற்கு உதவிபுரியும் செல்வமே மேலானது. சாஸ்திரஞானமுடையவர்களா யிருந்தாலும், வறியோர்களா யிருந்தால் அவர்களை உலகத்தார் இகழ்வார்கள். ஆகையினால் செல்வமே ஒருவன் பெற விரும்பவேண்டிய பலன். முயற்சியுடையவர்கள் அச்செல்வத்தை நிச்சயமாய்ப் பெறுவார்கள். அசுரர்களாகிய உங்களுக்குப் பகைவர்களாகிய தேவர்கள் அனைவரும் தங்கள் தங்கள் முயற்சியினால் மேன்மைபெற் றிருக்கிறார்கள். நீங்கள் அவர்களைவிட அதிகமான செல்வத்தைப் பெறுவீர்கள்போலத் தோன்றுகிறது. ஆதலால், அதைப்பெற நீங்கள் மூவரும் முயற்சி செய்யவேண்டும். இதற்கு வடக்குத் திக்கில் அசுரர்கள் யாகஞ்செய்வதற்கென்று ஏற்பட்ட ஸ்தலமிருக்கிறது. ஆங்கு நீங்கள் உங்கள் பரிசனங்களுடன் சென்று, ஓம குண்டம் அமைத்து நஞ்சுடன்கலந்த விறகைக் கொளுத்தி அக்கினியுண்டாக்கி, உதிரம், மாமிசம் முதலிய பொருள்களை அவ்வக்கினியில் ஆகுதிசெய்து சிவபெருமானைத் துதித்துக் கொடிய யாகத்தைச் செய்யுங்கள். அப்படி யாகம் செய்வீர்களாயின், நஞ்சுண்டகண்டரான எம்பெருமான் கருணைகூர்ந்து உங்கள்முன் தோன்றி, நீங்கள் விரும்பிய பொருள்கள் யாவும் உங்களுக்கு இம்மையிலேயே கிடைக்கும்படி அருள்புரிவார். நீங்கள் அவ்விடத்துக்குப் போய்ச் சேர்வீர்களாயின், அந்த யாகத்துக்குவேண்டிய பொருள்களெல்லாம் உங்களுக்கு வந்துசேரும்படி நான் ஏற்பாடுசெய்கிறேன். இனி நீங்கள் புறப்பட்டுப் போவீர்களாக!" என்று மாயை உரைத்தாள். அப்பால் சூரபதுமன் தன் தாய்தந்தையர்களை வணங்கி, தன் தம்பிமார்களுடனும் பரிசனங்களுடனும் அவ்விடம்விட் டேகினான்.

அவர்கள் சென்றபின், மாயை காசிபமுனிவரைப்பார்த்து, "முனிவரே! நான் புதல்வர்களைப் பாதுகாக்கச் செல்லுகிறேன். ஆதலால், நீங்கள் வருந்தாதிருங்கள்" என்று கூறிவிட்டுச் சென்றாள். அப்போது காசிபமுனிவர் அவளிடத்திற்கொண்ட மோகத்தினால் அவளைப் பின்தொடர்ந்து சென்று, "நீ என்னை அயலானாக மதித்து இவ்வாறு என்னைத் தனியே விட்டுச் செல்லுதல் நீதியோ, சொல்வாயாக!" என்று மனம் வெதும்பிக் கூறினார். அதுகேட்ட மாயை, "முனிவரே! வருந்தாதேயுங்கள்! நான் புதல்வர்களைப் பெறும்பொருட்டு உம்மை வந்தடைந்தேனேயன்றி உம்முடன் கூடிவாழ்வதற்காகவன்று. நான் மாயை என்று தெரிந்துகொள்வீராக!" என்று சொல்லி மறைந்தாள். மாயையைக்காணாது வாட்டமுற்று காசிப முனிவர் துயர்க்கடலில் மூழ்கினார். அப்போது அவர் தந்தையாகிய பிரமதேவர் அவ்விடத்துக்கு வந்து அவரை நோக்கி, "வேதங்களையும் சாஸ்திரங்களையும் உணர்ந்து சிறந்த மெய்ஞ்ஞானத்தை யடைந்த முனிவனே! நீ ஒரு பெண்ணின்மீது காமமுற்று பேதைமாந்தரைப் போல் வருந்துகிறாயோ? தொலையாத பிறவிப் பிணியையும் வினைகளனைத்தையும் உண்டாக்குவது காமமே யாதலால், என்றும் கலக்கமுறாத நல்லறிவினால் அக்காமநோயை யொழித்தவர்தாம் மோக்ஷவீட்டை யடையக்கூடியவர்.

மட்டைக் கரியையும் மடப்பள்ளியாரையும் நம்பப்படாது.

ஆகையினால் இனி வருந்தாமல், இங்கு மாயையுடன் புணர்ந்ததனாலுண்டான பாவத்தை நீக்கிக்கொள்வதற்காக முன்போலவே தவம் புரிவாயாக!" என்று நற்புத்தி கூறிவிட்டுத் தமது உலகத்துக்குத் திரும்பிச்சென்றார். காசிபமுனிவர் அவ்வுண்மைமொழிகளைக் கேட்டு மயக்கம் நீங்கி, தம்மைச்சூழ்ந்த பாவத்தை யகற்றிக் கொள்ளுவதற்காகத் தவமியற்றத் தொடங்கினார்.

காசிபமுனிவரைவிட்டு நீங்கிய மாயையானவள் சுக்கிராசாரியாரிட்ட கட்டளைப்படி தன் புதல்வர்கள் செய்யவேண்டிய யாகத்துக்கு அவசியமான பொருள்களை யுதவவேண்டுமென்று பரமசிவனை நோக்கித் தவமியற்றினாள்.

தாங்கள் தவமியற்ற வேண்டிய ஸ்தலத்தை நோக்கிச் சூரபதுமன் தன் தம்பிமார்களுடனும் பரிசனங்களுடனும் போய்க்கொண்டிருக்கையில், அசுரகுல குருவாகிய சுக்கிராசாரியர் அவர்களது தீரத்தையும் தேகவலிமையையும் கண்டு வியப்புற்று, அவர்கள் சிவபெருமானது அருள்பெற்று உயர்ந்த ஆயுதங்களைப் பெறவில்லையேயென வருத்தமுற்று, அவர்களுக்குப் புத்திமதி கூறவேண்டுமென நிச்சயித்து, வீராவேசத்துடன் செல்லும் அசுரசேனைக்குட் புகுந்து சூரபதுமனை யணுகி அவனுடன் வார்த்தையாடுவது சாத்தியமன்றெனத் தேர்ந்து, ஒரு வசீகர மந்திரத்தை யுச்சரித்துப் பின்னர் சூரபதுமன் எதிரிற் சென்றார். அம்மந்திரத்தின் சக்தியினால் அவனையறியாமல் அவன் மனத்தில் ஆர்வமுண்டாக, அவன் அவரை அன்புடன் வணங்கித் துதித்து அவரது தரிசனம் தனக்குக் கிடைத்ததைப்பற்றிக் களிப்புற்றான்.

அப்போது சுக்கிரன் அவனை ஆசீர்வதித்து, அவன் யாகஞ்செய்யுங் காலத்தில் அவனுக்குப் பகைவர்களால் இடையூறுகள் உண்டாகாவண்ணம் சிவபெருமானது மந்திரமொன்றை அவனுக்கு உபதேசஞ்செய்து, "கூற்றுவனை வென்று அடக்கிய சிவபெருமானது பஞ்சாக்ஷரத்தைச் சொல்லிப் பிறகு இம்மந்திரத்தை ஜபித்து, ஐம்புலன்களையும் மனத்துடன் ஒன்றுபடுத்தி, பொய், கொலை, களவு, காமம் முதலியவைகள் உன்னை யணுகாதபடி தடுத்துக்கொண்டு தவமியற்றுவாயாக!" என்று புத்தி கூறிவிட்டுச் சென்றான்.

பிறகு சூரபதுமன் தனது பரிசனங்களை யழைத்துக்கொண்டு வடதிசையிற் சென்று தனது வமிசத்தினர் தவமியற்றும் வனத்தை யடைந்து பதினாயிரம் யோஜனை பூமியை மதில்களினால் சூழ்வித்து, நான்கு திசைகளிலும் வாயில்களை அமைத்து, அநேக கோடி அசுரர்களை அங்கு காவலாக அமர்த்தி, அவ்விடத்தில் ஆயிரம் யோஜனை ஆழமுள்ள ஓமகுண்டந் தோண்டி, மாயையானவள் சிவபெருமானருளினால் அங்கு சேர்ப்பித்த ஏராளமான பொருள்களைக்கொண்டு, சிவபெருமானை நோக்கிப் பன்னெடுங்காலம் தவமியற்றினான். சூரபதுமன் ஆங்கு இயற்றிய வீர வேள்வியில் தோன்றிய யாகாக்கினியானது யாவரும் அஞ்சுமாறு மேலே கிளம்பி, பிரபஞ்ச முழுவதும் பரவி யாவற்றையும் சுட்டது. சூரபதுமனைப்போலவே அவன் தம்பிமார்களும் ஆங்கு அருந்தவம் செய்தனர். இவ்வாறு தானும் தன் தம்பிமார்களும் ஆயிரவருட காலம் அருமையான யாகம் செய்தும் சிவபெருமான் எழுந்தருளாததைக் கண்ட சூரபதுமன் அவ்வேள்வியைச் செய்வதைத் தன் தம்பிமார்களிடத்தில் ஒப்புவித்துவிட்டு, தேவர்கள் நடுங்க ஆகாயத்தி லெழும்பிச் சென்று வானத்தில் நின்று தன் தேகத்திலுள்ள மாமிசத்தை வாளினாலரிந்து யாகாக்கினியில் அவிர்ப்பாகமாகச் செலுத்தி மழைபோற் சொரியும் தன் உதிரத்தை நெய்போல் ஆகுதிசெய்து சிறந்த வீரயாகம் செய்தான். அப்பொழுது தன் சரீரத்திலுள்ள மாமிசத்தை யறுக்க வறுக்க அது வளர்ந்துவந்ததைக் கண்ட சூரபதுமன் ஆச்சரியமுற்று, யாவரும் நடுங்கும்படி கர்ச்சித்து, ஆயிர வருஷகாலம் அவ்வாறே அவிர்ப்பாகமளித்து ஆகுதிசெய்து யாகஞ்செய்தான். அப்பொழுதும் சிவபெருமான் வாராமையினால் சூரபதுமன் மிகவும் வருத்தமுற்று தான் மாண்டு போவதே தன் கடமையெனத் துணிந்து, ஓமகுண்டத்தினடுவே தீயினாற் சூழப்பட்டு நின்ற வஜ்ரகம்பத்தின்மேற் குதித்து அதைத் தழுவியபடியே உள்ளந்துடிக்க சரீர முழுவதும் பொடிப் பொடியாகக் கீழேயிறங்கி ஓமத்தீயில் எரிந்து மாய்ந்தான்.

அதுகண்ட சிங்கமுகாசுரன் மனந்துடித்துத் துயர்க்கடலில் மூழ்கி பலவிதமாகத் தன் அண்ணனது பராக்கிரமத்தையும் சிவபெரு

மணற்சோற்றில் கல் ஆய்வதுபோல்.

மானது அருளில்லாச் சுபாவத்தையும்பற்றிப் புலம்பிப் பூமியில் வீழ்ந்தான். அதுகண்டு தாரகாசுரனும் பெருந்துயருற்றுப் பலவாறு புலம்பிப் பூமியில் வீழ்ந்தான். அசுரர் சேனை முழுவதும் அதுகண்டு விம்மியழுது சோர்வுற்றது. இவ்விஷயத்தைக் கேட்டு இந்திரன் மகிழ்ச்சியுற்று ஐராவதத்தின்மீதேறி தேவர்கள் சூழ அவ்விடத்துக்கு நேரே மேக மண்டலத்துக்கு வந்து அசுரர்கள் நிலைமையைக் கண்ணாரக்கண்டு களிப்புற்று நின்றான்.

அப்போது சிங்கமுகனெழுந்து, "என்னுயிர்க்குயிராயிருந்த தமயன் இறந்தபின், நான் உயிரோடிருத்தல் தகுதியோ?" என்றுரைத்து, தன் ஆயிரந்தலைகளையும் தன் கரங்களிலுள்ள வாட்களினால் அறுத்து, முன்பு சூரபதுமன் வேள்விசெய்த ஓமத்தீயிலிட்டுமந்திரங்களை வர்மத்துடன் உச்சரித்தான். அவன் தன் தலைகளையறுத்து யாகத்தீயி லிடுமுன்னர் தலைகளனைத்தும் மீண்டும் முன்போலவே முளைத்தன. அவனும் ஓயாமல் அவைகளை யறுத்துத் தீயிலிட்டுக்கொண்டே யிருந்தான். அதுகண்ட தாரகாசுரனும் தன் பெரிய யானைத் தலையை யறுத்து அக்கினியிலிட்டான். அதுவும் முன்போலவே மீண்டும் முளைத்தது. அவனும் ஓயாமல் அதை யறுத்தறுத்துத் தீயிலிட்டுக்கொண்டே யிருந்தான். இவ்விதமாகப் பலகாலம் அவர்கள் தங்கள் சிரங்களைத் தீயிலிட்டபின்,சிங்கமுகாசுரன் தானும் தன் அண்ணனைப்போலவே யாகத்தீயிற் குதித்து உயிரைத் துறக்கவேண்டுமென நிச்சயித்தான். அப்போது கொன்றைமலர் மாலையும் பிறைச்சந்திரனையும் தரித்த சிவந்த சடையினையும் ஞான சொரூபமான திருநீற்றை யணிந்த திருமேனியையுமுடைய சிவபெருமான் அதை யுணர்ந்து, தாம் திருவெண்ணெய்நல்லூரில் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்தாட்கொள்ள வந்தபோது கொண்ட திருக்கோலமாகிய வயது முதிர்ந்த பிராமண வடிவங்கொண்டு ஒரு திருக்கரத்தினால் ஊன்று கோலையும் ஊன்றிவந்து, ஓமகுண்டத்தின் சமீபத்திற் சென்று, சிங்கமுகாசுரனைப் பார்த்து, "நீங்களனைவரும் இங்கு வருந்துகிறீர்களே; உங்கள் நிலைமையென்ன?" என்று கேட்டருளினார். அப்போது சிங்கமுகாசுரன் அவரது இரக்கத்தைக்கண்டு மனங்கசிந்து அவரது பாதங்களில வீழ்ந்து நமஸ்கரித்து எழுந்து தங்கள் வரலாற்றை ஆதியோடந்தமாக அவருக்கு எடுத்துரைத்தான்.

அப்போது சிவபெருமான் அவனைப்பார்த்து, "உங்கள் தமயன் இறந்தானேயென்று துயருற்று நீங்களும் உயிர் துறக்காவண்ணம் உங்கள் தமயனை இப்பொழுதே அவனிறந்த இவ்வோமத்தீயினின்றும் எழுப்பித்தருகிறேன்" என்று திருவாய் மலர்ந்தருளி, கங்காநதியை நினைக்க, அந்நதி உடனே அளவற்ற முகங்களுடன் ஆரவாரித்தெழுந்து விண்ணுலகத்தை விரைவிற் கடந்து நிலவுலகத்துக்கு வந்து, எம்பெருமான் திருவடிகளை வணங்கி, அக்கினி ஜ்வாலையாய் எரிந்துகொண்டிருந்த குண்டத்தினடுவே பிரவேசிக்க, உடனே அலைமோதும் சாகரத்தினின்று ஆலாகலம் தோன்றியதுபோல சூரபதுமன் ஆரவாரித்தெழுந்தான். அதுகண்ட சிங்கமுகாசுரனும் தாரகாசுரனும் வறியோன் பெருநிதி யடைந்தாற்போல மகிழ்ச்சியுற்று, சோர்வு நீங்கி எல்லையிலாத மனோதைரியமடைந்து, விரைந்தோடி சூரபதுமன் பாதங்களில் வீழ்ந்து வணங்கினார்கள். அசுரர்கள் யாவரும் கடலைப்போலக் கோஷித்து சூரபதுமனைத் துதித்து ஆரவாரித்தார்கள். வானத்தில் அதுவரை அசுரர்கள் சோர்வைக்கண்டு களித்து நின்ற இந்திரன் முதலிய தேவர்கள் மிகுந்த வருத்தத்துடன் விரைந்தோடித் தத்தம் பதிகளை யடைந்தார்கள்.

அச்சமயத்தில் வேதியர் உருவத்துடன் எதிரில்நின்ற சிவபெருமான் மறைந்து தம்மை அவர்கள் அறியக்கூடிய உருவத்துடன் ஆகாயத்தில் எழுந்தருளினார். பார்வதி தேவியார் வாமபாகத்தில் தோன்றவும், இமையாத முக்கண்கள் கருணையுடன் நோக்கவும்,நான்கு திருப்புயங்கள் எதற்கும் அஞ்சேல் என்று வரைகளை யொத்துத் தோன்றவும், மிக்க வலிமை பொருந்திய சிறந்த இடபத்தின்மீது எழுந்தருளியதைக் கண்ட சூரபதுமன் தன் தம்பியர்களுடன் பூமியில் வீழ்ந்து நமஸ்கரித்தெழுந்து பன்முறை வணங்கித் துதித்து எல்லையிலாப் பெருமகிழ்ச்சியுடன் கைகூப்பி நின்றான். அப்போது சிவபெருமான் சூரபதுமனை நோக்கி, "எமதருளைப் பெறவுன்னி செயற்கரிய சிறந்த யாகத்தனைச் செய்து இளைத்தாய்! உனக்கு வேண்டும் வரம் யாதெனச் சொல்வாயாக!" என்று, திருவாய்மலர்ந்தருளினார். அப்போது

தேவர்கள் "நமது மேன்மையெல்லாம் இன்றோடு தொலைந்தது" என்று சொல்லிச் சோர்வுறுமாறு,சூரபதுமன் சிவபெருமானை நோக்கி, "பூமி முதலான பல புவனங்களடங்கிய அண்டத் தொகுதிகளுக்கெல்லாம் அடியேன் அரசனாயிருக்கவேண்டும். அவைகளைக் காப்பதற்குரிய ஒப்பற்ற ஆக்ஞாசக்கரமும் கிடைக்க வேண்டும். நினைக்குமுன் அவ்வண்டங்கள் தோறும் செல்லத்தக்க வாகனங்களையும் அடியேனுக்குத் தந்தருளவேண்டும். எந்நாளு மழியாத தேகத்தையும் அடியேனுக்கு உதவியருளவேண்டும். பாற்கடலின்மீது பள்ளிகொண்டிருக்கும் திருமால் முதலியோர் போர் செய்தாலும் களைக்காமல் அவர்களுடன் போர் செய்து வெல்லக்கூடிய பேராற்றலையுடைய சேனைத்திரளை யுதவவேண்டும். அழியாமல் என்றென்றும் அடியேன் இருக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தான்.

அப்போது சிவபெருமான் திருவருள் சுரந்து, "பிரபஞ்சத்திலுள்ள ஆயிரக்கோடி அண்டங்களில் ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகங்கள் ஆள்வாயாக!" என்று கூறி யருளி, அவ்வண்டங்களுக் கெல்லாம் செல்லத்தக்க வலிமை பொருந்திய இந்திரஜாலம் என்ற இரதத்தையும், அவ்வாயிரத்தெட்டு அண்டங்களைப் பாதுகாக்கும்வல்லமை பொருந்திய ஆக்ஞா சக்கரத்தையும், கோபமிக்க ஆண்சிங்க வாகனத்தையும் அவனுக்கு அளித்தருளி, அகிலத்திலுள்ள சகல தேவர்களுக்கும் தலைவனாயிருக்கும் பதவியையும் கொடுத்தருளினார்.பிறகு மேலுலகத்தில்வாழும் தேவர்களையும் அசுரர்களையும் மற்றவர்களையும் வெற்றிகொள்ளத்தக்க வீரத்தையும் வல்லமையையும் அவனுக்கு அளித்து, சிறந்த பாசுபதாஸ்திரம் முதலான சகல தெய்வப்படைகளையும் கொடுத்து, எந்நாளும் அழிந்திடாமல் மேன்மையடையும் வஜ்ரத்தையொத்த அழகிய மேனியையும் அவனுக்குத் தந்தருளினார். பிறகுபெருங்கடல்போல் பதினாயிரக்கோடிவெள்ளம் சதுரங்கசேனையையும் அளித்தருளினார்.

இவ்வாறு சூரபதுமனுக்குச் சிறந்த வரங்களை யளித்தபின்னர், சிவபெருமான் தம்மை வணங்கி நின்ற சூரபதுமனது தம்பிமார்களை நோக்கி, "நீங்கள் சூரபதுமன் இரண்டு தோள்களைப் போலவே வீரமுற்று விளங்கி நூற்றெட்டு யுகங்கள் சிறப்புடன் வாழக் கடவீர்கள்! தேவர்கள் யாவரையும் வென்று புறங்காட்டி யோடச்செய்யும் வல்லமை அடையக் கடவீர்கள்! தேவர்கள் யாவராலும் தொழப்படும் சிறப்புற்று விளங்கும் உங்கள் மூவரையும் அழிவில்லாத எமது சக்தியே யன்றி எவரும் வெல்லவல்லவர்களன்று" என்று திருவாய் மலர்ந்தருளி, மற்றும் பல வரங்களை யளித்துப் பின்னர் அவ்விடத்தைவிட்டுத் திருக்கைலாயத்துக்குச் சென்றருளினார்.

பிறகு சூரதுமன் தன் தம்பிமார்களுடனும் எல்லையில்லாத சேனாசமுத்திரத்துடனும் அவ்விடம் விட்டு நீங்கித் தன் தந்தையாகிய காசிப முனிவர் தவஞ்செய்துகொண்டிருந்தவிடத்தை யடைந்து, அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கியெழுந்து, தானும் தன் தம்பிமார்களும் சிவபெருமானிடத்தில் சிறந்த வரங்கள்பெற்ற வரலாற்றைவித்தாரமாய் எடுத்துரைத்து,தாங்கள் அதன்மேல் செய்யவெண்டுவதென்னவென்று வினவினான். காசிபமுனிவர் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் சிவபெருமானது திருவருட்டிறத்தினால் பெருந்தீங்கு விளையப்போவதையுன்னி வருந்தி, பிறகு தமது குமாரர்களை நோக்கி, "பண்டைக்காலந் தொடங்கி அசுரர்களுக்கு முதல் ஆசிரியனான சுக்கிரனைப் போய் நீங்கள் செய்யவேண்டுவதைக்கேட்டு தெரிந்துகொள்ளுங்கள்!" என்று அவர்களுக்கு விடைகொடுத்தனுப்பினார்.

சூரபதுமன் அவ்விடம் விட்டு நீங்கி சுக்கிரனிருக்கு மிடத்துக்குச் செல்ல, சுக்கிரன் தன் சிஷ்யகளுடன் அவனை எதிர்கொண்டு சென்று நல்வரவளித்தான். சுக்கிரனைக் கண்டதும் சூரபதுமனும அவன் தம்பியர்களும் தங்கள் வாகனங்களைவிட் டிறங்கி சுக்கிரனது பாதமலர்களில் வீழ்ந்து வணங்கிெழுந்தனர். சுக்கிரன் அவர்களை ஆசீர்வதித்து,சூரபதுமனை இருகரங்களாலும் தழுவிக்கொண்டு, சூரபதுமனையும் சிங்கமுகனையும் தனது மாளிகைக்குள் அழைத்துப்போய், அவர்களுக்கு ஆசனமளித்து, அவர்கள் வந்த காரியம் யாதென வினவினான். சூரபதுமன் தங்களுக்கு அதுவரைநிகழ்ந்தவை யாவற்றையும்எடுத்துரைத்து, தாங்கள் அதற்குமேல் செய்யவேண்டிய காரியம் யாதென்று தெரிந்து சொள்ளவந்ததாகக் கூறினான்.

அப்பொழுது தேவர்கள் முனிவர்கள் முதலி

யோருக்குத் தீங்கு செய்யவேண்டுமென்று உத்தேசித்திருந்த சுக்கிரன் சூரபதுமனை நோக்கி, "அசுரேசனே! பிரபஞ்சத்தில் பதி, பசு, பாசம் என மூன்று பொருள்கள் உண்டெனச் சிலர் கூறுவர். ஆனால் உண்மை அப்படியல்ல. பரமேசுவரன சகலத்தையும் மாயையைக் கொண்டு படைத்தார். பிறகு பரமாத்மாவாகிய தமது அம்சத்தைப் பிரித்து சரீரத்தோடும் இந்திரியங் களோடும் ஜீவாத்மாக்களாக விளங்கி வருகிறார். அவ்வாறு செய்வதனால் அவர் பெறக் கருதும் பலன் லீலையேயன்றி வேறொன்றுமல்ல. குடத்துக் குள்ளிருக்கும் ஆகாயமானது குடமுடைந்தவுடன் பேராகாயத்தோடு சேர்ந்து ஒன்றாகிவிடுவதுபோல, ஒருவருடைய தேகத்துக்கு அழிவுநேர்ந்தக்கால் அத்தேகத்திலிருந்த ஜீவாத்மாவானது பரமாத்மாவாகிய பரமேசுவரனோடு கலந்துகொள்கிறது. ஒருவர் செய்யக்கூடிய வினைகளை நல்வினையென்றும் தீவினையென்றும் இரண்டாக வகுத்து, அவ்வினைகளின் பயனாகப் பிறவியுண்டாகுமென்றும் துன்பமும் இன்பமும் உண்டாகுமென்றும் கூறுவார்கள். போதலும், வருதலும், அழகாகத் தோன்றுதலும், அழிதலும், செயல்களும், கடங்களுக்குரிய காரியங்களேயன்றி கடங்களிலுள்ள ஆகாயத்துக்குச் சம்பந்தமில்லை. அதுபோலவே, எல்லாவிடங்களிலும் ஏக ஆத்மாவாய் நிறைந்துநிற்கும்சிவபெருமான் யாதொரு வேறுபாடுமில்லாதவர். எப்போதும் ஒரே தன்மையுடையவர். நிலையான இவ்விஷயம் உண்மையென்று உணர்வாயாக! மறுமையில் நமக்குத் துணையாக இருக்கக்கூடியது தருமமென்றெண்ணி அதை இடைவிடாது செய்வதும், பாவம் தீதெனவெண்ணி அதற்கு அஞ்சி நடுங்குவதும் அறிவின்மையாகும். சிவபெருமானால் மாயையினாற் சிருஷ்டிக்கப்பட்ட இவ்வுலகத்தில் யாவும் பொய்யாகையினால், புண்ணிய பாவங்களும் பொய்யே யாதலின் அவைகளைச் செய்வதனால் யாதொரு பயனும் விளையத்தக்கதில்லை. எவ்வாறு நாம் கனவில் இச்சித்த பொருள்களையும், வெறுப்புற்ற பொருள்களையும் விழிப்பு வந்தபின் காண்பதில்லையோ, அவ்வாறே நாம் இச்சடவுலகத்திற் செய்யும்செயல்களை இச்சடம்நீங்கியபின் காணமாட்டோம்; அவைகளெல்லாம் மாயத்தோற்றமாகும். இப்பிறப்பிற் செய்யும் இருவினைகளின் பயனை மறுபிறப்படைந்தாலன்றோ அனுபவிக்கவேண்டும்? அந்த மறுபிறப்பென்பதே பொய்யாகவிருக்கையில், அப்பொய்யிற் பிறந்த முந்தைவினை யனுபவக் கொள்கை மெய்யாகுமோ? சிலரைச் சிறியரென்றும் மற்றுஞ் சிலரைப் பெரியரென்றும் கூறுதல்தகுதியன்று. எண்ணிறந்த ஜீவராசிகளிலும்இயங்கும் உயிர் ஒன்றே என்னும் உண்மையை யறியவேண்டும். இதுவே சத்தியம். இனி உங்கள் மரபின் வழக்கத்தை யுரைக்கிறேன், கேட்பாயாக! சகலதேவர்களைக்காட்டிலும் மகாவிஷ்ணு முதலியவர்களைக்காட்டிலும் மேலான தலைமையும், வலிமையும், ஆக்கினையும், அழிவற்ற செல்வமும் உன்னிடத்திற் பொருந்தியுள்ளன. உனக்குக் கிடைத்த மேன்மையைக் கவனித்து நீயே பிரமமென்று தெளிவாய் உணர்வாயாக! ஆதலின், பிரமன் முதலியோர்களைப் பொருட்டாக மதிக்காதே! அவர்களைப் பெரியோரென்று மயங்கிப் பணியாதே! தேவர்கள் உங்கள் குலத்துக்குப் பகைவர்கள். ஆகையினால் விரைவில் அவர்களது செல்வத்தையழித்து அவர்களைத் துன்புறுத்துவாயாக! அத்தேவர்களுக்கு இந்திரன் என்பவன் அரசன். அவன் முன்னாளில் எண்ணிறந்த அசுரர்களை வதைத்தான். ஆதலின் அவன் தான் செய்த தீங்கின் பலனை யனுபவிக்காது தப்பிப் பிழைக்கா வண்ணம் அவனைச் சீக்கிரத்திற் பிடித்து வலிய விலங்கிட்டுச் சிறையிலடைப்பாயாக! அவனைச் சிறையிலடைத்துப் பலவிதமாகத் துன்புறுத்தி, வேதமோதும் முனிவர்களையும் தேவர்களையும் திக்குப்பாலகர்களையும் தினந்தோறும் ஏவல்கொண்டு, அவர்களது பதவிகளை அசுரர்களுக்கு அளித்துதவுவாயாக! கொலை, களவு, காமம் மற்றுமுள்ள வஞ்சகங்கள் இவைகளையெல்லாம் இடைவிடாது புரிவாயாக! அவைகளைச் செய்வதனால் பின்னாளில் உனக்கு யாதொரு தீயபலனும் உண்டாகாது. நீ அவைகளைப் புரியாவிட்டால், இவ்வுலகத்தில் நீ விரும்பியவைகளெல்லாம் உனக்கு ஒருங்கே கிடைக்கமாட்டா; அதுவுமன்றி, உன்னைக் கண்டு எவரும் அஞ்சமாட்டார்கள். சிவபெருமான் நினக்கு அளித்தருளிய ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கும் சேனைகளுடன் இன்றே சென்று அரசனுக்குரிய அதிகாரத்தைச் செலுத்தி எண்டிக்குகளும் புகழத் திரும்பிவந்து இவ்வண்டத்திலேயே வசித்திருப்பாயாக!"

மண்டையுள்ள வரையில் சளி போகாது.

இவ்வாறு சுக்கிரன் துற்புத்தி கூறியதைக் கேட்டதும் சூரபதுமன், "இது நன்று. எங்கள் குலகுருவாகிய தாங்களிட்ட கட்டளைப்படி நடந்துகொள்ளுகிறேன். இனி, தாங்கள் தயை புரிந்து சிவபெருமான் எனக்களித்த ஆயிரத்தெட்டு அண்டங்களின் நிலைமைகளையெல்லாம் எனக்கு உரைத்தருளவேண்டும்" எனவேண்ட, சுக்கிரன் அவைகள் யாவற்றையும் வித்தாரமாய் எடுத்துரைத்தான்.

பிறகு சூரபதுமன் தன் தம்பிமார்களுடனும் சைனியங்களுடனும் திக்குவிஜயஞ் செய்யப் புறப்பட்டான். அப்போது மாயையானவள் அவர்கள்முன் தோன்றி பெருமகிழ்ச்சியுடன் அவர்களை ஆசீர்வதித்து, "மைந்தர்காள்! நீங்கள் உங்கள் வல்லமையினால் இந்திராதி தேவர்களை ஜயித்து, சகல வுலகங்கங்களையும் ஆண்டுகொண்டு இவ்வுலகத்தில் என்றென்றும் வாழ்ந்திருப்பீர்களாக! மாயைகள் உங்களுக்கு வேண்டுமானால் என்னை நினையுங்கள். நினைத்தவுடனே நான் வந்து நீங்கள் வேண்டியவாறு செய்துமுடிப்பேன். அதுவுமன்றி, நான் உங்களைப் பிரிந்திருக்கமாட்டேன். என் மனத்திலுள்ள ஆர்வத்தினால் நான் தானாகவே பலதடவை வந்து உங்களைப் பார்த்துச் செல்வேன். நீங்கள் ஒருவரோடொருவர் கலந்து பேதமற இருப்பீர்களாக!" என்று கூறி அவ்விடம் விட்டு ஏகினாள்.

மாயை சென்றபின், சூரபதுமன் சேனைகளை யழைத்து குபேரநகரத்துக்குச் செல்லும்படி கட்டளையிட்டான். யுகமுடிவில் சமுத்திரங்களெல்லாம் பொங்கிக்கோஷித்துக் கரைபுரண்டு பு[illegible] யழிக்கச் செல்வதுபோல், சூரபதுமனது சே[illegible]கள் அதிவிரைவிற்சென்று குபேரனது நகரமாகிய அ[illegible]காபுரியைச்சூழ்ந்துகொண்டன. அவ்வாறு அ[illegible]வர்கள் சூழ்ந்துகொண்டதைத் தூதுவர்களால் [illegible]தெரிந்துகொண்ட குபேரன் சிவபெருமானருள்[illegible]ற்ற பராக்கிரமசாலிகளான சூரபதுமன் முதல[illegible]யினோரை எதிர்த்துப் பொருது வெல்வது தன[illegible]க்குச் சாத்தியமன்றென்பதையுணர்ந்து, அவர்[illegible]ளிடம்சென்று அவர்களைப் புகழ்ந்து ஆசீர்வ[illegible]ப்பதே தக்கநெறியெனத் தேர்ந்து, புஷ்பக விம[illegible]னத்தின்மீதேறிச் சென்று, சூரபதுமனை வணங்கித் துதித்து, "யான் உமக்கு அடியவன்!" என்று கூறிநின்றான். சூரபதுமன், "நீ சுகி[illegible]யாக இருப்பாயாக!" என மொழிந்தான். உடனே அசுரசேனைகள் அளகாபுரிக்குட்புகுந்து, இருநிதிகளையும், இரத்தினங்களையும், உயர்ந்த விமானங்களையும், அழிவற்ற ஆயுதங்களையும், தேர்கள், யானைகள், குதிரைகள் முதலியவைகளையும் கொள்ளையடித்துக்கொண்டன.

பிறகு சூரபதுமன் தன் சேனைகளுடன் அளகாபுரியைவிட்டு நீங்கிச்சென்று ஈசான நகரத்தை யடைந்து, அது சிவசாரூப்பிய பதவியையடைந்த ஈசானமூர்த்தியுறையும்நகரமெனவுணர்ந்து, அந்நகரைவிட்டகன்று மகாகோபத்துடன் கீழ்த்திசையிலுள்ள இந்திரனது நகரமான அமராவதி நகரத்துக்குச் சென்றான். அதுகண்ட இந்திரன் மிகுந்த துயரத்துடன் தன் நகரத்தைவிட்டு விண்ணுலகத்துக்குச் சென்றான். அதைக் கேள்வியுற்று சூரபதுமன் அந்நகரத்தை தீக்கிரையாக்கி அவ்விடம் விட்டு நீங்கி அக்கினிதேவனுடைய நகரத்துக்குச் சென்றான். அதுகேட்ட அக்கினிதேவன் மகாகோபங்கொண்டு இலக்ஷங்கோடி வீரர்களுடன் சென்று அவனை எதிர்த்துப் போர்செய்தனன். அப்போரில் அக்கினிதேவனது சேனை தோல்வியடையவே, அக்கினிதேவன் துன்பமுற்ற மனத்தையுடையவனாய், ஊழிக்காலத்தில் உலகங்களையெல்லாம் அழிக்கும் வல்லமைபொருந்திய பேருருவத்தைச் சீக்கிரத்தில் எடுத்துக்கொண்டு, "சிறந்த அசுரர் தலைவனது சேனா சமுத்திரம் வற்றிப்போகும்படி இன்றே அழித்துவிடுகிறேன்" என்று கூறி, அசுர சேனையினூடே பரவியும் அதைச் சூழ்ந்தும் நெருங்கி நின்று அதை யழிக்கத் தொடங்கினான்.

அதுகண்ட தாரகாசுரன் மிக்க கோபமடைந்து, "யான் இப்பொழுது தேவர்களையும் இந்த அக்கினியையும் ஏனையோர்களையும் ஒருங்கே அழித்துவிடுகிறேன் என்றுகூறி, சிவபெருமானளித்த பாசுபதாஸ்திரத்தைப் பூஜித்துத் துதித்துக் கையிலெடுத்தான். அதை அக்கினிதேவன் கண்ணுற்று, "இதனை இவன் இப்போது பிரயோகிப்பானாயின், அது இப்பொழுதே உலகமனைத்தையும் அழிக்கும், என்னையும் கொன்றுவிடும், பிரமன் முதலியோர்களையும் தொலைத்துவிடும்" என்றுணர்ந்து வருந்தி, தனது உருவத்தைச் சுருக்கி மனநடுங்கி விரைவில் தனது இருகரங்களையும் சிரமேற்குவித்துத் தாரகனை யணுகி வணங்கி

மண்ணாங்கட்டி மா[illegible]ப்பிள்ளைக்கு எருமுட்டைப் பணிகாரம்.

"உலகங்களையெல்லாம் சிருஷ்டித்துப் பின் சங்கரிக்கின்ற சிவபெருமானது பாசுபதாஸ்திரத்தை என்மீது தொடுக்க நினைந்தீர். அவ்வஸ்திரத்தின்முன் எப்புவனத்தி லுள்ளவர்களது வலிமையும் உயிரும் நிற்கமாட்டா. சிறந்த அவ்வஸ்திரத்தை விடுத்தால்,உலகனைத்தும் அழியும்; அன்றியும், அஸ்திரராஜனாகிய அவ்வஸ்திரமும் பழிப்படையும். ஆதலால் சினங்கொள்ளாது என் குற்றத்தை மன்னித்தருள வேண்டும்" எனப் பிரார்த்தித்தான். அது கேட்ட தாரகன் கோபம் நீங்கிக் களிப்புற்று அவ்வஸ்திரத்தை அக்கினி தேவன் மீது பிரயோகிக்காமல் அக்கினி தேவனை நோக்கி, "நீ நமக்கு ஏவல்செய்வாயாக! இப்போது நீ, உன் நகரத்துக்குச் செல்லலாம்" என வுரைத்தான். அதற்குள் அசுரர்கள் அவனது நகரத்திற்குள் புகுந்து அங்குள்ள பொருள்களைக் கொள்ளை யடித்துக்கொண்டு மீண்டனர்.

பிறகு சூரபதுமன் கட்டளைப்படி அசுர சேனைகள் இயமபுரத்துக்குச் சென்றன. அவர்கள் வருதலைக் கேள்வியுற்ற இயமன் இடி முழக்கத்தைச் செவியுற்ற பாம்பைப்போல நடுநடுங்கி, சூரபதுமனை எதிர்கொண்டு சென்று வணங்குவதே தக்க நெறியெனத் தேர்ந்து, தனது எருமைக்கடாவின் மீது ஏறிக்கொண்டு சென்று இமைப்பொழுதில் சூரபதுமனை யணுகி அவன் பாதங்களை வணங்கினான். சூரபதுமன் இயமனை நோக்கி, "இங்கே நீ உன் பரிசனங்களுடன் வாழ்வாயாக!" என்றுரைத்தான். அப்போது அசுரசேனைகள் இயமனது நகரத்திற்குள் சென்று அதிலுள்ள செல்வங்க ளனைத்தையும் கொள்ளையடித்து வந்தன. இயமனும் வலிமையிழந்து தன்னை வணங்கியதை நினைத்துப் பெருமகிழ்ச்சியுற்று சூரபதுமன் தென்மேற் றிசையிலுள்ள நிருதியின் நகரத்துக்கு விரைந்து சென்றனன். நிருதி அது தெரிந்து அவனை எதிர்கொண்டு வணங்க, சூரபதுமன் அவ்விடம்விட் டகன்று வருணன் வாயு இவர்களுடைய நகரங்களுக்குச் செல்ல, அவர்கள் பயமுற்றுத் தம் நகரங்களைவிட் டோடி முறையே கடலிலும் இருள் சூழ்ந்த உலகத்திலும் ஒளிந்துக் கொண்டனர். சூரபதுமன் அவர்கள் நகரங்களிலுள்ள செல்வங்களைக் கொள்ளை யடித்துக்கொண்டு, பிறகு பாதாளவுலகங்களுக்குச் சென்று அங்குள்ள அசுர அரசர்களிடத்திற் கருணைகாட்டி, பிறகு ஆதிசேட னுலகத்துக்குச் சென்று தன்னை எதிர்த்துப் பொருத ஆதிசேடனை வென்று, முன்னொருகாலத்தில் அமரர்களால் ஆதிசேடனிடத்தில் பாதுகாப்புக்காகக் கொடுக்கப்பட்டிருந்த அமுதத்தை அவனிடமிருந்து பிடுங்கி தன் தம்பிமார்களுடன் அதனையுண்டு, பிறகு நிலவுலகத்துக்கு மீண்டுவந்து திருப்பாற்கடலின் நடுவுக்கு விரைந்து சென்றான்.

அப்போது திருமால் விழிப்புற்று தம்மையும் அசுரர் எதிர்க்கத் துணிந்ததை யுன்னி, ஊழித்தீயும் அஞ்சுமாறு கோபித்துச்சீறி தமது கரங்களைப் புடைத்துச் சிரித்தார். பிறகு வலிமைமிக்க கருடன்மீதேறி பஞ்சாயுதங்களுடன் அசுரர்களோடு போர்செய்யச் சென்றார். அசுரர்களது சேனை யணுகியதும், திருமால் தமது சார்ங்கம் என்னும் வில்லை வளைத்து நாணேற்றிப் பாணங்களை மழைபோற் சொரிந்தார். பேய்களும் பூதங்களும் களித்துக் குதிக்குமாறு அசுரசேனைகள் அழிந்து சூறைக்காற்றிலகப்பட்ட மேகங்கள்போலச்சிதறின. அப்போது தாரகாசுரன், சிதறியோடும் தனது சேனைகளுக்குத் தைரியஞ்சொல்லி அவைகளை மீண்டும் அழைத்துவந்து, திருமாலுடன் கடுமையாகப் போர்செய்தான். கடைசியாக தாரகன் ஒரு தண்டாயுதத்தைக் கையி லெடுத்துக்கொண்டு தேரைவிட்டுக் கீழேயிறங்கி நடந்து திருமாலைத் தாக்கச்சென்றான். அப்போது திருமால் தமது சக்கராயுதத்தைப் பிரயோகித்தார். அச்சக்கராயுதம் அதிவிரைவாகச் சென்று தாரகன் கழுத்தை யடைந்ததும் சிவபெருமானது திருவருட் பெருமையினால் செம்பொன்னாரமாக விளங்கி, தவத்தின் பெருமையை உலகுக் கெல்லாம் உணர்த்தி நின்றது.

அதுகண்ட திருமால் மிகுந்த ஆச்சரியமுற்றுத் தாரகனை நோக்கி, "அப்பா! போரில் உனக்கு நிகரானவர், தக்ஷன் வேள்வியைத் தகர்த்த வீரபத்திரக் கடவுள் ஒருவர்தாம். எனது சக்கராயுதம் உனக்குச் செம்பொன்னாரமாக ஆயிற்றென்றால்,வெற்றி உன்னுடையதேயென்பதற்கு ஐயமுண்டோ? இனி, உனக்கும் எனக்கும் போர் ஏது? உனக்கும் உன் தமயன்மார்களுக்கும் வலிமையில் நிகரானவர் அசுரர்களில் ஒருவருமில்லை. ஆதலால் உங்களை

வெல்லவல்லவர் யாவர்? நீங்கள் எனக்கு உறவினர்கள்" என்று சொல்லி, முறைப்படி அளவற்ற ஆசிமொழிகளைக் கூறிச்சென்றார்.

பிறகு, சூரபதுமன் நிலவுலகமுழுவதும் சுற்றிப்பார்த்து வந்து, சுவர்க்கத்துக்குச் சென்றான். அதுகேட்ட இந்திரன் வலிமைகுன்றிப் பின்வருமாறு தனக்குள் ஆலோசிக்கத் தொடங்கினான். "முறைப்படி நான் சூரபதுமனை எதிர்த்துப் போர்செய்வேனேயாயின் என்னுயிருக்கு அழிவுண்டாகும். பிழைத்திருப்பேனாயின் துன்பக்கடலில் ஆழ்ந்து நீங்காத பழியில் மூழ்குவேன். செல்வமுண்டானபோது மகிழ்ந்தும், அச்செல்வம் நீங்கினபோது துன்பமடைந்தும் பாசத்தில் கட்டுண்டு வருந்துவார்களோ கல்வி கேள்விகளை யுடைய பெரியோர்? வருவது வந்தேதீரும். அதனைத் தடுப்பது சாத்தியமோ? ஆதலால் போர்செய்து உயிரிழக்கமாட்டேன்; வருத்தமடையவுமாட்டேன். ஏனெனில், மிகுந்த துன்பமுற்றவர்களும் ஒருகாலத்தில் சொல்லுவதற்கரிய மகிழ்ச்சியை யடைவார்களென்ற உண்மைக்கு கொடிய இவ்வசுரர்களே சாக்ஷியமாக விளங்குகிறார்களன்றோ! சூரபதுமனை நான் எதிர்கொண்டு சென்று காண்பேனாயினும் அவன் கறுவுகின்ற மனத்துடன் எனக்கு விலங்கிட்டு என்னைச் சிறையிலடைப்பான்." இவ்வாறு ஆலோசித்து இந்திரன் இந்திராணியுடன் குயிலுருவ மெடுத்துக்கொண்டு ஆகாயத்திற் பறந்து சென்றான்.

அசுரர்கள் தேவேந்திரனை எங்குந் தேடியும் காணாதவராய்ச் சினங்கொண்டு ஏனைய தேவர்களைப் பிடித்துப் பலவிதமாகத் துன்பப்படுத்தி அவர்களைக் கட்டி சூரபதுமன் முன் கொண்டுபோய் நிறுத்தினார்கள். அப்போது தேவர்கள் மிகவும் பயந்து சூரபதுமனை வணங்கி, "ஐயனே! தாங்கள் சிறிது வெகுண்டாலும் நாங்கள் அழிந்துபோவோம், உலகமும் அழிந்துவிடும். இன்றுமுதல் என்றென்றைக்கும் தாங்களே எங்களுக்குற்ற கடவுள். எங்களை இரக்ஷிக்கிற அரசனும் தாங்கள்தாம். ஆதலின் நாங்களனைவரும் தங்கள் ஏவலை முறைப்படி செய்கின்றோம்" என்று கூறினார்கள். சூரபதுமன், "நன்று. நீங்கள் நமது ஏவலைச் செய்து வாழுங்கள்" என்று கூறி, அவர்கள் கட்டுகளை யவிழ்த்துவிடும்படி கட்டளையிட்டான். பிறகு சூரபதுமன் அமரருலகத்திலுள்ள செல்வங்களைக் கொள்ளையடித்துக் கொண்டு,மார்க்கண்டேயன் முதலானமேலோர் வசிக்கும் மகாலோகம் ஜனலோகம் தபலோகம் என்னும் மூன்றுலகங்களிலுமுள்ள பெரியோர்களால் துதிக்கப்பெற்று அவ் வுலகங்களைவிட்டகன்று பிரமலோகத்துக்குச் சென்றான்.

பிரமதேவர் குற்றமற்ற தவத்தினையுடைய மெய்ஞ்ஞானிகள் பலர் தம்மைச் சூழ்ந்து வர சூரபதுமனை எதிர்கொண்டு சென்று, அவன் செய்த வேள்வியின் பெருமையைப் புகழ்ந்து பேசி, தமது பேரனாகிய அவனுக்குக்கிடைத்த கீர்த்தி யெல்லாம் தம்முடையதே யென்று கூறி, பல உபசார வசனங்களை யுரைத்து, அவன் தம்பியர்களுக்கு அழிவில்லாத பொன்மயமான வில்லையும் வலிமைபொருந்திய இரதத்தையும், தமது பிரமாஸ்திரத்தையும் அளித்தார். சூரபதுமன் பிரமதேவரை அங்கிருக்கச் சொல்லி அவ்விடம் விட்டகன்று வைகுண்டத்திற்குச் சென்று மகாவிஷ்ணுவின் ஆசீர்வாதங்களைப் பெற்று, பிறகு சிவலோகத்துக்குச் சென்று தனது சேனைகளை வெளியிலேயே நிறுத்திவிட்டுத் தன் தம்பிமார்களுடன் எம்பெருமான் வீற்றிருக்கும் திருக்கோயிலுக்குள் நந்தியெம்பெருமானால் அழைத்துச்செல்லப்பட்டு, எந்தை திருமுன்னர் சென்று உமைபங்கரது பாதமலர்களை வணங்கித் துதித்து,எம்பெருமானது திருவருள்பெற்று மீண்டு தன் சேனைகளையடைந்து ஏனைய அண்டங்களுக்கும் சென்று மேற்கூறியவாறே திக்கு விஜயஞ் செய்து வெற்றி பெற்று அங்குள்ள செல்வங்களையெல்லாம் கொள்ளை யடித்துக்கொண்டு, ஆங்காங்கு அநேக அசுரர்களைத் தனது அரசாட்சியை நடத்திவரும்படி நியமித்துவிட்டு மீண்டு சுவர்க்கலோகத்தையடைந்தான். அங்குத் தன் குலத்துக்கு அரசனாகிய அசுரேந்திரன் தன்னை யடைந்து வணங்க, அவனுக்குத் தைரியஞ் சொல்லிவிட்டு, சூரபதுமன் பெரும்பவும் வெற்றியுடன் நிலவுலகத்தை யடைந்தான்.

அதையறிந்த பிரமதேவர், இந்திரன், மற்றத் தேவர்கள், முனிவர்கள் முதலியோர் விரைந்து திருப்பாற்கடலுக்குச் சென்று, துழாய் மாலையையணிந்த திருமாலை வணங்கிப் போற்றி, தாங்கள் கொடிய சூரபதுமனா லடைந்த துன்

பங்களை யெடுத்துரைத்து, தங்கள் துயரம்நீங்கத் தாங்கள் செய்யவேண்டுவதென்ன வென்று வினவினார்கள். அப்போது மகாவிஷ்ணு அவர்களை நோக்கி, "இழிதொழிலினையுடைய தக்ஷனது யாகத்தில் அவிர்ப்பாகம் ஏற்றுக்கொண்ட பாபச்செயலினால் இப்போது உங்களுக்கு இப்படிப்பட்ட துன்ப முண்டாயிற்று. இதனை விலக்க வல்லவர் யார்? இனி நாம் செய்யத்தக்க காரியம் ஒன்றுதான். அதென்னவெனில், ஒப்பற்ற வேள்வியைச் செய்து திரிபுராந்தகரது அருளினால் சிறந்த வரங்களைப் பெற்று எல்லா அண்டங்களிலும் எல்லோரையும் வென்று விளங்கும் சூரபதுமனைக் காண்பதேயாகும். அவனிடம் போவோம், வாருங்கள்" என்றுரைத்து, தேவர்கள் சூழப் புறப்பட்டுச் சூரபதுமனிடம் சென்று ஆசிமொழிகளை யுரைத்து அவனைப் புகழ்ந்தார்.

கயா

GAYA

இது வட இந்தியாவில் மகததேசத்தில் மிகவும் பிரசித்திபெற்ற ஒரு புண்ய க்ஷேத்திரம். இது பல்கு *வென்னும் நதியின் மேற்குக்கரையில் அமைக்கப்பெற்றது. இதன் விஸ்தீரணம் தெற்குவடக்கில் சுமார் மூன்றுமைலும் கிழக்கு மேற்கில் இரண்டு மைலும் உள்ளது. பட்டணத்தை நதியினக்கரையிலிருந்து பார்த்தால், காட்சி வெகு அழகாயிருக்கும். பட்டணத்திற்குச்சமீபத்தில் அநேக குன்றுக ளிருக்கின்றன. அவற்றுள் முக்கியமானதும் உயரமாயுள்ளதும் பட்டணத்திற்குத் தெற்கிலுமுள்ள **பிரம்மயோனி** யென்கிற குன்றுதான். அதன் உயரம் சுமார் 450 அடி. அதுமிகவும் செங்குத்தானது. அதன் உச்சியில் ஓரழகிய கோயிலுள்ளது. அதில் பிரும்மசக்தியின் விக்கிரக மிருக்கிறது. இச்சிலையானது 1690 விக்கிரம ஸம்வத்ஸரத்தில் (1633 A. D.) செய்யப்பட்டதென அந்தச் சிலையின் கீழுள்ள லிகிதத்திலிருந்து தெரியவருகிறது. மலையின்மேல் சௌகரியமாய் ஏறிப் போவதற்காக குவாலியர் மகாராஜாவினால் பெரிய படிகள் கட்டப்பட் டிருக்கின்றன.

பிரும்மயோனிக்குன்றின் அடிவாரத்தில் ஒரு பாறையின்மேல்தான் விஷ்ணுபாதக் கோயிலிருக்கிறது. இக்கோயிலானது அகல்யாபாய் என்னும் ஒரு மகாராஷ்டிர ராணியால் கட்டப்பட்டது. கோயிலின் நீளம் சுமார் 82 அடி; அகலம் 54 அடி. கோயிலின் பிரதான மண்டபம் 58 சதுர அடி. கோயிலின் கோபுரமானது எட்டுக் கோணங்களுள்ளது. கோபுரத்தின் உயரம் சுமார் 80 அடியிருக்கும். அதன் குறுக்களவு 38 அடி. அக்கோவிலின் நடுவில் ஒரு பள்ளத்தில் ஒரு பாறை யிருக்கிறது. அப்பாறையின் மேல்தான் ஸ்ரீபகவான் மகாவிஷ்ணுவின் ஒரு பாதம் (வலதுபாதம்) இருக்கிறது. இதுதான் உலகப்பிரசித்தமான **விஷ்ணுபாதம்.** இந்தப் பாதத்தின்மேல்தான் இந்துக்கள் தங்கள் பித்ருக்களைக் குறித்துப் பிண்டம் போடுவது. பிரதிதினமும் அஸ்தமனத்திற்குப் பிறகு, இப்பாதத்திற்குச் செய்யப்படும் அபிஷேகம், அலங்காரம் முதலிய பூஜையின் காட்சி, பார்ப்போர் கண்ணையும் மனத்தையும் கவரும். பிரதி தினமும் இந்தப் பாதத்திற்கு குங்குமப்பூக் குழம்பு சாற்றுவதுண்டு. அநேகம் பக்தர்கள் ஒரு மெல்லிய பட்டுத்துண்டை அப்பாதத்தின்மேல் ஒத்தி, அதில் பதிந்த அந்தப் பாதத்தின் அடையாளத்தைக் கொண்டுபோய் வீட்டில்வைத்துப் பூஜைசெய்கிறார்கள். இந்தப் பாதம் முன்னொருகாலத்தில் புத்தபாதமாக விருந்ததாகவும் வெகுகாலத்திற்குப்பிறகு இது விஷ்ணுபாதமென்று கொண்டாட வாரம்பிக்கப்பட்டதாகவும், மிகவும் சில பேர்களுடைய கொள்கை. ஆனால் அது தப்பென்றும், அப்படி இதைப் புத்தபாதமெனக் கொள்ள ஒருவித ஆதாரமுமில்லை யென்பதே அநேகர்களின் சரியான அபிப்பிராயம். முன் சொன்ன அபிப்பிராயத்தையொட்டிச் சுமார் இருபது வருஷங்களுக்கு முன், ஜப்பானியர்கள் இந்தப் பாதம் விஷ்ணுபாத மல்லவென்றும், புத்த பாதந்தானென்றும், ஆகவே இந்தப் பாதம் தாங்கள் பௌத்தராகையால் தங்களுக்கே சேரவேண்டுமென்றும் நியாயஸ்தலத்தில் ஒரு வழக்குத் தொடர்ந்தார்கள். ஆனால் தங்கள் அபிப்பிராயத்தை நிரூபிக்க அவர்களுக்கு ஒருவிதமான ஆதாரமும் பலமானதாய் அகப்படவில்லை யாகையாலும், தேடியபோதெல்லாம் இது விஷ்ணுபாதந்தான் என்பதற்கே போதிய ஆதாரங்கள் அகப்பட்டபடியாலும், அவர்கள் தாங்களாகவே தங்கள் வழக்கை வாபீஸ் வாங்கிக்கொண்டு விட்டார்கள்.

* இந்நதியைப் பல்குனி என்று நம் தேசத்தில் வழங்கிவருவது தவறு.

விஷ்ணுபாதக் கோயிலை யொட்டியே அதற்குக் கிழக்கில் ஒருபெரிய பாறையின்மேல் **அஷ்டாதச பாதங்க**ளென்கிற பதினெட்டுப் பாதங்களிருக்கின்றன. அப்பாறையின்மேல் ஒரு மண்டபம் கட்டப்பட்டு அம்மண்டபத்தின் தூண்களில அந்தந்தப் பாதங்களின் பெயர்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. *பட்டணத்திற்கு வாயு மூலையில 1 மைல் தூரத்தில் **பிரேதசிலை** யென்றொரு பர்வதமிருக்கிறது. அதன் உயரம் சுமார் 540 அடி. அதன்மேலும் ஸ்ரீமதி அகல்யாபாயினால் கட்டப்பட்ட கோவலிருக்கிறது. இம்மலையின்மேலும் படிகள் கட்டப்பட்டிருக்கின்றன. அம்மலையி லிருக்கும் கற்களில தங்கமிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அம்மலையினடியில ப்ரும்ம ஸரோவர மென்கிற ஒரு தடாகமிருக்கிறது. மலையினடியிலிருந்து ஒரு சாலை இரு பக்கங்களிலும் மரங்களடர்ந்ததாய் ராமசிலைவரை போகிறது.

ராமசிலையென்பதும் ஒரு குன்றுதான். இது பட்டணத்திற்குச் சமீபத்தில வடக்கிலிருக்கிறது. இதன் உயரம் 372 அடி. இம் மலையின் மேல பாடலேசுவரர் என்ற ஒரு சிவலிங்கமிருக்கிறது. அதனுடன் பார்வதீ பரமேசுவரர்களுடைய விக்கிரகங்களு மிருக்கின்றன. இதிலும் அழகியபடிகள் கட்டப்பட்டிருக்கின்றன.

பல்கு நதிக்கு அக்கரையில் ஒரு சிறிய குன்று இருக்கிறது. அதற்கு **ராமகயா** வென்று பெயர் வழங்குகிறது. அவ்விடத்தில் தசரதருக்குப் பிண்டம் போடுகிறமாதிரி பிம்பங்கள் பண்ணி வைக்கப்பட் டிருக்கின்றன.

பட்டணத்திற்குத் தெற்கே 5 மைல் தூரத்தில் மிகவும் பிரசித்திபெற்ற **புத்தகயா** யிருக்கிறது. அவ்விடத்திலதான் புத்தருக்கு ஞானோதயம் ஆயிற்றென்று பிரசித்தமாய்ச் சொல்லப்படுகிறது.

இந்த க்ஷேத்திரத்திற்கு கயா க்ஷேத்திரம் எனப் பெயர் வழங்குவதற்குக் காரணமும் மற்றும் சில விவரங்களும் பின்வருமாறு கயா மாகாத்மியத்தில் காணப்படுகின்றது :—முன்னொருசமயம் ஸ்ரீமகாவிஷ்ணுவின் நாபிக்கமலத்திலிருந்துண்டான பிரும்ம தேவர், அம்மகாவிஷ்ணுவின் ஆக்ஞையின்பேரில் தேவர்களையும் அஸுரர்களையும் சிருஷ்டித்தார். அஸுரர்களுக்குள் கயாஸுரனென்பவன் மிகவும் பலபராக்கிரமசாலியா யிருந்தான். அவன் விஷ்ணு பக்தர்களுக்குள் சிறந்தவனாய் கோலாஹலம் என்னும் பர்வதத்தில அநேகாயிரம் வருஷங்களாய்த் தவஞ்செய்துகொண் டிருந்தான்.

அவ்விதம் அவன் தவஞ்செய்வதைக்கண்டு தேவர்கள் மிகவும் பயந்து ப்ரமலோகம் போய் ப்ரமாவை வணங்கி "ஸ்வாமீ! எங்களை இந்த கயாஸுரனிடமிருந்து காக்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்கள். இவ்விதம் வேண்டிக் கொண்ட தேவர்களைக் கூட்டிக்கொண்டு ப்ரமாவானவர் கைலாயஞ்சேர்ந்து அங்கு பரமசிவனைக் கண்டு அவரை வணங்கிச் சங்கதியைத்தெரிவித்தார். அவர் நாமெல்லோரும் மகாவிஷ்ணுவிடம் போவோமெனச் சொல்லி அவர்களுடன் திருப்பாற்கடலுக்கேகி, அங்கு சேஷன்மேல் பள்ளிகொண்டிருக்கும் காளமேகத்தைக் கண்டார். கண்டதும் எல்லோரும் களிகொண்டு ஒருமிக்கத் தோத்திரம் செய்தனர்.

இதைக் கேட்டதும் பகவான் எழுந்திருந்து வந்து தேவர்களுக்குக் கண்காட்சிதந்து "வாருங்கள். எல்லோரும் சௌக்கியமா? எக்காரியத்தை முன்னிட்டு இங்கேகினீர்கள்?" என்று வினவினார். "ப்ரபுவே, கயாஸுரனிடத்திலிருந்து எங்களுக்கு மிகவும் பயமேற்பட்டிருக்கிறது. அதையப்படியாவது தாங்கள் தீர்க்கவேண்டும்" என்று அவர்கள் உரைக்க, "நீங்களெல்லோரும் கயாஸுரனிடம் போய்ச்சேருங்கள். நானும் இதோ வருகிறேன்" என்று, பகவான் கருடாரூடராய் கயாஸுரனிருக்குமிடஞ்சென்றார். மூவர்

* 18 பாதங்களாவன :—(1) ருத்ரபாதம் (2) பிரம்மபாதம் (3) சுப்பிரமணியபாதம் (4) காரஹபத்தியபாதம் (5) தக்ஷிணாக்கினிபாதம் (6) ஆஹவநீயபாதம் (7) ஸூர்யபாதம் (8) சந்த்ரபாதம் (9) கணபதிபாதம் (10) ஸப்பியபாதம் (11) ஆவஸத்யபாதம் (12) ததீசிபாதம் (13) கண்வபாதம் (14) மாதங்கபாதம் (15) க்ரௌஞ்சபாதம் (16) இந்த்ரபாதம் (17) அகஸ்தியபாதம் (18) காசியபபாதம்.

களும் தங்கள் தங்கள் வாகனங்களிலேறி அவ்விடம் வந்துசேர்ந்தார்கள். வந்ததும் "அப்பா! கயாஸுரனே! நீசெய்தஅருந்தவத்திற்குமெச்சி நாங்களெல்லோரும் உனக்கு வரங்கொடுக்கவேண்டி வந்திருக்கிறோம். ஆகையால் நீ வேண்டிய வரத்தைக் கூசாமல கேட்கலாம்" என்றார்கள். இதைச் செவிசாய்த்த கயாஸுரன் "ஓ தேவர்களே! நான் செய்த தவத்தினால் நீங்கள் சந்தோஷமடைந்தது வாஸ்தவமானால் இவ்வெல்லாவுலகிலும் எத்தனை தேவர்களோ, எத்தனை அந்தணர்களோ, எத்தனை ரிஷிகளோ, எத்தனை மந்திரங்களோ, எத்தனை புண்ணிய க்ஷேத்திரங்களோ, எத்தனை புண்ணிய மலைகளோ, தர்மஞ்செய்பவ ரெத்தனை பேர்களோ, ஞானிகளெத்தனை பேர்களோ, அவர்கள் எல்லோரையும்விட நான் எப்போதும் மிகவும் பரிசுத்தனுக்கடவேன். இந்த வரத்தைத் தந்தருளவேண்டும்" என்றான். "அப்படியே யாகுக!" எனவுரைத்துத் தேவர்கள் சுவர்க்கம் போனார்கள்.

அப்படி மகா பரிசுத்தமாகிவிட்ட அந்தக் கயாஸுரனைத் தொட்டுச் சிலபேரும், கண்டு சிலபேரும், நினைத்துச் சில பேரும், இவ்விதம் பூலோகத்திலுள்ள சகலமான பேர்களும் மகாபுண்யாத்மாககளாய் ஆகிவிடவே, அவர்கள் தங்கள் நியாணத்திற்குப் பிறகு வைகுண்டம் போய்ச சேர்ந்தார்கள். எல்லோரும் வைகுண்டம்போக வாரம்பிக்க, வைகுண்டம் நிறைந்துவிட்டது. இயமபுரம் பாழடைந்துவிட்டது. உடனே தேவர்களெல்லோரும் இந்திரனிடம் முறையிட, இந்திரன் யமன் முதலியவர்களோடு பிரமதேவரிடம் போய் "சுவாமி! தங்களால கொடுக்கப்பட்ட உத்தியோகங்களை இப்பொழுதே ராஜீநாமா செய்துவிடுகிறோம். அங்கீகரிக்கவேண்டும். வேலை யொன்றுமே இல்லாத உத்தியோகங்கள் எங்களுக்கெதற்கு?" என்றுரைததான். உடனே அவர் அவர்களைச் சமாதானப்படுத்தி அவர்களுடன் புறப்பட்டு மகாவிஷ்ணுவினிடம் போய் "சுவாமீ! தங்களால வரம்பெற்ற கயாஸுரனைப் பார்தத மாத்திரத்திலும், நினைதத மாத்திரத்திலுங் கூட பாபங்களெல்லாம் சாம்பலாய்ப்போய் எல்லோரும் வைகுண்டம் வந்துவிடுகிறார்கள். மற்ற உலகங்களெல்லாம் பாழடைந்து விட்டன. இதைககண்ட இந்திரன் முதலியவர்கள் மிகவும் துக்கமடைகிறார்கள்" என்று தெரிவித்தார்.

இவ்விதம் சொல்லக்கேட்ட மகாவிஷ்ணுவானவர் "ஓ பிரமதேவரே! நீர் அவ்வசுரனிடஞ் சென்று உன் சரீரத்தை யாகத்திற்காகத் தரவேண்டுமென்று கேளும். அவன் கொடுத்துவிடுவான். அந்தச் சரீரத்தின்மேல யாகஞ் செய்யும், பிறகு பார்த்துக் கொள்வோம்" என்று ஓர் உபாய முரைத்தார். "அப்படியே" என்று பிரமா அவ்வசுரனிடம் போனார்.

இவ்விதம் தேவர்களுடன் வந்து பிரசன்னமான பிரமதேவரைக் கண்ட அக்கயாஸுரனும் உடனே எழுந்து நமஸ்கரித்து அர்க்கியம், பாத்தியம் முதலியன விதிப்படி எல்லோரையும் பூஜித்து சிரத்தையுடன் வணங்கி நின்று சொன்னதாவது: "என் ஜன்மம் இப்போது தான் ஸபலமாயிற்று. நான் செய்த தவங்களிப்போதுதான் ஈடேறின. பிரமதேவரே நேராக என் வீட்டிற்கு அதிதியாக வர, நான் என்ன பாக்கியம் பெற்றேன். ஸ்வாமீ! ஸகல லோகங்களுக்கும் அதிபதியே! பிதாவே! குருவே! தங்களுக்கு என்ன காரியம் என்னாலாக வேண்டும்? அதைச் சொல்லியருளினால் உடனே என்னால் முடிந்தவரையில செயயக் காத்திருக்கிறேன்."

இதைக்கேட்ட பிரமா "ஓ அசுரச்சிரேஷ்டனே! நான் யாகஞ்செய்ய வேண்டி ஒரு சுத்தமான இடத்தைத் தேடிக்கொண்டு இப்பூமி முழுவதும்அலைந்து திரிந்தேன். எல்லாத் தீர்த்தங்களையும் எல்லா க்ஷேத்திரங்களையும் சுற்றியாய் விட்டது. உன் சரீரத்தைவிட பரிசுத்தமான இடம் எங்கும் கிடையவே கிடையாது. நீ அருமையான தவஞ்செய்து அத்தவத்தின் பயனாக எல்லாவற்றைக் காட்டிலும் பரிசுத்தமான சரீரத்தை அடைந்திருக்கிறாய். ஆகையால் அவ்வளவு பரிசுத்தமான உன் சரீரத்தை யாகத்திற்காகக் கொடுப்பாயானால் நான் மிகவும் சந்தோஷமாய்த் திருப்தியாய் யாகஞ் செய்து முடிப்பேன்" என்று சொன்னார்.

அதற்கு கயாஸுரன் "பிரபுவே! என்னைவிடப புண்ணியசாலி லோகத்தில யாரிருப்பார்கள். என் சரீரத்தின்மேல தாங்கள் யாகஞ்செய்வதால என் இரு குலமும் கடைத்தேறிவிடும். இந்தச் சரீரமானது தங்களாலேயே உண்டாக்கபபட்டது. தங்களாலேயேதான் பரிசுத்தமாகவும் செய்யப்பட்டது. இது தங்களுக்கில்லாமல் வேறு யாருக்கு? ஆகையால் சகலப் பிராணிகளுக்கும் உபகாரமாய் யாகம் என் சரீரத்தின் மேலேயே நடைபெறவேண்டும்" என்று சொல்லிக்கொண்டே அக்கோலாகல பர்வதத்தின்மேல், வடக்கே தலையும் தெற்கே கால்களுமாய் நிருதி திக்கை நோக்கிக்கொண்டு விழுந்தான்.

உடனே பிரமாவானவர் யாகத்துக்கு வேண்டிய சாமான்களையெல்லாம் சேகரித்துக்கொண்டு தம் மனத்தினாலேயே ரித்விக்குகளைச் சிருஷ்டித்தார். இவ்விதம் அக்னிசர்மா முதலிய ரித்விக்குகளைச் சிருஷ்டித்து அவர்களைக் கொண்டு யாகஞ்செய்தார் கயாஸுரன் சரீரத்தின்மேல். அவ்வமயம் அசுரன் அசைந்தான். அதைக்கண்டு பிரமா மிகவும் பயந்து சமீபத்தில் நின்றுகொண்டிருக்கும் இயமதர்மராஜனைப் பார்த்து, "ஓ தர்மராஜனே, உம்முடைய வீட்டில் வெகுநாளாய் வைக்கப்பட்டிருக்கும் தர்மச்சிலை என்னும் பெரிய பாறையைக்கொணர்ந்து இவ்வசுரன்மேல் சீக்கிரம் வைக்கச் சொல்லும்" என்று ஆக்ஞாபித்தார். அவ்வாஞ்ஞையைச் சிரமேற்கொண்டு இயமதர்மராஜனும் அச்சிலையைக் கொண்டுவந்து அவ்வசுரன் தலைமேல் வைக்கச்செய்தார். அசுரனோ இதைக் கொஞ்சமேனும் பொருட்படுத்தாமல் சிலையோடுகூட வசைந்தான். பிறகு பிரமாவானவர் தேவர்களெல்லோரையு மழைத்து அச்சிலையின்மேல் நிற்கச்சொன்னார். அதையும் கொஞ்சமேனும் இலட்சியஞ் செய்யாமல் எலலோருடனும் சேர்ந்து அசைந்தான். அப்பொழுது பிரமா மிகவும் வியாகூலமடைந்து திருப்பாற் கடலுக்கோடி அங்கு ஆதிசேஷன்மேல பள்ளிகொண்டிருக்கும் பகவான் மகாவிஷ்ணுவை வணங்கி வெகுவாய் ஸ்தோத்திரஞ் செய்து, "ஸ்வாமி! தங்களாஞ்ஞைப்படி நான்கயாஸுரன் சரீரத்தில் யாகஞ் செய்ய வாரம்பித்தேன். அவன் யாகஞ் செய்துகொண்டிருக்கும்போது அசைந்தான். அதற்காக இயமதர்ம ராஜனின் வீட்டிலிருந்த "தர்மச்சிலையை" அவன் தலைமேல வைக்கச்செய்தேன். பிறகு எல்லாத் தேவர்களையும் அதன்மேல் நிற்கச் சொன்னேன். ஒன்றும் பயன்படவிலலை. அவன் அசையாம லிருக்கவேண்டுமானால இனிமேல் தாங்கள்தாம் கருணை புரியவேண்டும்" என உருக்கமாய்ச் சொன்னார்.

இதைக்கேட்ட பகவான் தம் ஸ்வரூபத்தில் ஓர் அம்சத்தை எடுத்து ஒரு மூர்த்தியாகப் பண்ணி அதைப் பிரமாவின் கையிற்கொடுத்து இதைக்கொண்டுபோய் அவன்மேல் நிறுத்தும்" என்று சொன்னார். பிரமா அப்படியே செய்ய, பின்னும் அசுரன் அசைந்தான். மறுபடியும் பிரமா, பகவானை ஸாக்ஷாத்தாகவே வர வேண்டிக்கொள்ள அவரும் அப்படியே தம் பூரணமான அம்சத்துடன்வந்து அசுரன்மேல் தன் கதையை பலமாய் ஊன்றிக்கொண்டு நிற்க அசுரனும் அசைவற்றான். அந்தச் சமயத்தில் பிரமா, விஷ்ணு, சிவன், பதினொரு ருத்திரர்கள், பன்னிரண்டு ஸூரியர்கள், எட்டு வஸுக்கள், காயத்ரீ, ஸாவித்ரீ, ஸரஸ்வதீ முதலிய முப்பத்து முக்கோடி தேவர்களும் அவன்மேலே நின்றுவிட்டார்கள்.

இதைக்கண்ட அவ்வசுரன் "ஓ தேவர்களே! எதற்காக என்னை இவ்விதம் வஞ்சித்துவிட்டீர்கள்? கேட்டமாத்திரத்தில் நான் சரீரத்தைக் கொடுக்கவில்லையா? பகவான் ஒரு வார்த்தை சொன்னால் போதாதா? நான் அசையாமல் நின்றுவிடமாட்டேனா? என்னை எல்லோரும் சேர்ந்து இப்படிக் கதையினாலும், மற்றும் அநேகவித ஆயுதங்களினாலும் பிடிக்கலாமா? போகட்டும், நான் கஷ்டப்பட்டாலும் படுகிறேன். நீங்கள் சௌக்கியமடையுங்கள். அதுதான் என்னுடைய கோரிக்கை" என்றான். தேவர்களெல்லோரும் மிக்கச் சந்தோஷமடைந்தார்கள். அவர்கள் பயம் நீங்கிற்று. உடனே அவர்கள் அஸுரனைநோக்கி "ஓ அசுர சிரேஷ்டனே! உன்னுடைய பக்திக்கு நாங்கள் மிகவும் மெச்சினோம். உனக்கு வேண்டியதைக் கேள், தருகிறோம்" என்றார்கள்.

அதற்கு அசுரன் "இப்பூமியுள்ளவரை சந்திர சூரியர்களுள்ளவரை, இப்போது என்மேலிருக்கும் நீங்கள் (தேவர்கள்) எல்லோரும் இங்கேயே இருந்துவிடவேண்டும். இந்த க்ஷேத்திரமானது என் பேராலேயே பிரசித்திபெற்று விளங்கவேண்டும். இந்த கயாக்ஷேத்திரத்துக்குள்ளே ஸகல தீர்த்தங்களு மிருந்துகொண்டு, ஜனங்களுடைய பாபங்களைப் போக்கடித்துக் கொண்டிருக்கவேண்டும். இங்கே பகவான் விஷ்ணுவானவர் ஆதி கதாதரர் (கதையை அஸுரன் சிரசில் ஊன்றித் தரித்துக்கொண்டதினால்) என்கிற பெயருடன் விளங்கிக்

கொண்டு இங்குவரும் ஜனங்களுக்கு ஹிதஞ் செய்துகொண்டிருக்கவேண்டும். இங்கே எவர்களைக்குறித்து சிராத்தம், தர்ப்பணம், பிண்டதானம் முதலியவை செய்கிறார்களோ, அவர்கள் நரகத்தி லிருந்தாலும் சரி, உடனே பாபங்கள் பறந்துபோய் மிகவும் பரிசுத்தர்களாய் அவர்கள் பிரமலோகம் போய்ச்சேரவேண்டும். தேவதைகளே! விரிக்கிற்பெருகும், சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். உங்களில் ஒருவராவது இதைவிட்டுப்போனால் உடனே நான் அசைவேன். இது மாத்திரம் ஞாபகத்தி லிருக்கட்டும்" என்று சொல்ல, தேவர்கள் "நீ கேட்ட யாவும் அப்படியே யாகுக!' என வரந்தந்தருளினார்கள். அசுரனும் அசைவற்று நின்றான். பிரமாவும் தம் யாகத்தை முடித்து பிராமணர்களுக்குக் கணக்கிலலாமல் தக்ஷிணைகளைக் கொடுத்தார். இதைக்கொண்டுதான் இந்த க்ஷேத்திரத்திற்கு கயா க்ஷேத்திரமெனப் பெயர் வழங்கிவருகிறது.

கர்மபூமியாகிய பாரததேசத்துல் இந்தக்ஷேத்திரத்தைப்போல் பித்ருக்களுக்குத் திருப்தியை யுண்டுபண்ணக் கூடியது வேறெதுவுமில்லை. இதுல ஒருதடவை பித்ருக்களைக் குறித்து சிராத்தம், பிண்டம், தர்ப்பணம் இவைகளைச் செய்தால் அதனால் அவர்களுக்கு எத்தனையோகோடி வருஷங்களுக்குத் திருப்தியுண்டாகிறதென்று ஒவ்வொரு ஸ்மிருதியும் ஒவ்வொரு புராணமும் முறையிடுகிறது. பெற்றோர்களுக்காகப் பிள்ளை செய்யவேண்டியவை மூன்று கடமைகள்தாம். அவைகள், (1) அவர்கள் பிழைத்திருக்கும்போது அவர்கள் சொற்படி நடப்பது, (௨) மரித்த பிறகு பிரதி வருஷமும் மரித்த தினத்தில் பிராமணர்களுக்கு போஜனம் செய்துவைப்பது, (3) கயையில போய் சிராத்தம்செய்து பிண்டம்போடுவது என்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. இதையனுசரித்தே வடதேசத்தில் அநேகமாய் கயைக்குப்போகாதவர்களே இருக்கமாட்டார்கள். புரட்டாசிமாதம் மஹாளயபக்ஷத்தில் போய்ப் பார்த்தால் பஞ்சமர்கள்கூட அங்கே மிகுந்த பக்தி சிரத்தையுடன் தம் பித்ருக்களைக்குறித்து பிண்டம்போடுவது நன்கு விளங்கும். இந்த உத்தம க்ஷேத்திரம் அநாதிகாலந்தொட்டு இந்தியாமுழுவதும் பிரசித்தமாயிருந்ததாகவே தெரிகிறது. பூலோகத்தில் மிகவும் சிரேஷ்டமான இப்புண்ணிய பூமியில் செய்யவேண்டியவைகளைப் பலர் தெளிவாய் அறியும்பொருட்டு விவரித்தெழுதுவது மிகவும் அவசியமாயினும், அவைகளுக்கெல்லாம் இச்சஞ்சிகை இடந்தரவில்லை யாகையால் அவ்விஷயங்களைச் சமீபத்தில் வடமொழியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டு அச்சிடப்படப்போகும், "கயா மாகான்மியத்தி" லிருந்து நேயர்கள் அறிந்துகொள்ள முடியுமென்று கருதி இவ்வியாஸத்தை இதோடு முடிக்கிறோம்.

துளஸிதாஸர்

TULASI DASAR

ஹஸ்திநாபுரம் என்கிற பட்டணத்தில் ஒரு பிராமணன் இருந்தான். அவன் நல்ல ஒழுக்கமுடையவனாய் எல்லோருக்கும் நல்லவனாய் இருந்தான். அவனுக்கு அக்பர் மஹாராஜாவினிடம் மந்திரி வேலை. அவன் சிறந்த பக்திமான். நியாயந் தவறாதவன். ஆதலால் அவனுக்கு வால்மீகிமுனி அம்சமாக ஒரு பிள்ளை பிறந்தது. அந்தப் பிள்ளையை அருமை பெருமையாக வளர்த்து, குழந்தைப் பருவத்தில அதற்குச் செய்விக்கவேண்டிய ஜாதகர்ம நாமகாமங்களைச் செய்வித்துத் துளஸிதாஸரென்று பெயரிட்டான். பிறகு துளஸிதாஸருக்கு உபநயனம் செய்வித்து வேதாத்யயனம் முதலியவற்றை விதிப்படி செய்வித்துத் தக்க வயது வந்ததும் மமதாதேவி என்ற பெயர்பெற்ற ஓர் உத்தமகுண மாதைத் தேடி விவாகமும் செய்வித்தான்.

விவாகமானபின் துளஸிதாஸரும் அவர் மனைவியும் ஒருவரையொருவர் விட்டுப் பிரியாமல் மிகவும் அந்நியோந்நியமாய் வாழ்ந்துவந்தனர். மமதாதேவி தன் கணவனிடத்தில் பரம பக்தி செலுத்திவந்தாள். அவளைச் சகல ஜனங்களும் கொண்டாடுவார்கள். இப்படியிருக்கையில் ஒருநாள் துளஸிதாஸர் அக்பர் சக்கரவர்த்தியுடன் ஊரைவிட்டு வெளியே சென்றிருந்தார். அப்பொழுது மமதாதேவியின் அன்னைக்குத் தேகம் மிகவும் அசௌக்கியமென்று செய்தி வந்தது. அதனால் மமதாதேவி மிகவும் விசனமுற்றுத் தன் மாமியிடம்போய், கண்ணுங் கண்ணீருமாக நின்று, தாயாரைப் பார்க்கத் தன்னை

மயிர்சுட்டுக் கரியாகிறதா?

அனுப்பிக்கும்படி வேண்டிக்கொண்டாள். மாமி கருணையுடைய நல்ல உத்தமியாகையால் உடனே தக்கதுணை சேர்த்து, மருமகளை அவள் தாய்வீட்டுக்கு அனுப்பித் தந்தாள்.

பிறகு துளஸிதாஸர் அன்றுமாலை வீட்டிற்கு வந்தார். தமது மனைவி தன் தாய்வீட்டுக்குப் போயிருக்கும் செய்திகேட்டதும் அவர் மிகவும் கவலைகொண்டு உடனே புறப்பட்டு, வெளியே போய்வந்த சிரமத்தைக்கூடக் கவனியாமல் கால் நடையாக நடந்து அவ்வூர்போய்ச் சேர்ந்தார். இவர் அங்குப்போய்ச் சேர்ந்தபொழுது இரவு வெகு நேரமாய்விட்டபடியால் வீட்டில் எல்லோரும் படுத்து நித்திரை போய்விட்டார்கள். இவர் கதவைத் தட்டித் தட்டிப் பார்த்தார். ஒருவரும் எழுந்திருக்கவில்லை. உடனே இவருக்கு எப்படியாவது வீட்டிற்குள்போய்ச் சேரவேண்டுமென்கிற எண்ணமுண்டானபடியினால் வீட்டைச் சுற்றிச்சுற்றிவந்து ஏறிக் குதிக்க வழியிருக்கிறதோ என்று கவனித்தார். வீட்டில் ஒரு பக்கத்தில் ஒரு சர்ப்பம் மெத்தை மேலிருந்து கீழ்வரைக்குந் தொங்கிக்கொண்டிருக்கக்கண்டு அதைக் கயிறென்றெண்ணிப் பிடித்துக்கொண்டு மெதுவாய் ஏறிமெத்தைவழியே உள்ளே பிரவேசித்தார். அப்பொழுது மமதாதேவி விழித்துக்கொண்டு திடுக்கிட்டு யாரென்று பார்க்கையில், தன் நாயகனென வறிந்து ஆச்சரியப்பட்டு, "தெருக்கதவு தாளிட்டபடியிருக்கிறதே! நீங்கள் எப்படி உள்ளேவந்தீர்கள்" என்று கேட்டாள். துளஸிதாஸர், உனக்கும் எனக்குமுள்ள அன்பினாலே, நீ கட்டிவைத்த கயிற்றைப் பிடித்துக்கொண்டு ஏறி, மெத்தை வழியே வந்தேன்" என்றார். இதைக்கேட்டதும் மமதாதேவி, "எங்கே அந்தக் கயிறு?" என்று கேட்க, அவர் மமதாதேவியை அழைத்துக்கொண்டு வெளியேவந்து தாம் பற்றிக்கொண்டு ஏறிய சர்ப்பத்தைக்காட்டினார். மமதாதேவி கையில் விளக்கு கொண்டுவந்திருந்தமையினால் அது பெரிய சர்ப்பமென்று கண்டு ஆச்சரியமடைந்தார்கள். அப்பொழுது சர்ப்பமும் சரேலென்று அவ்விடம்விட்டுச் சென்றுவிட்டது.

பிறகு மமதாதேவி தன் நாயகனை வீட்டிற்குள் அழைத்துக்கொண்டுபோய் நடந்துவந்த சிரமம் தீர உபசரணைகள் செய்தாள். துளஸிதாஸர் நடந்துவந்த சிரமம் தீர்ந்து சந்தோஷமடைந்தார். அச்சமயம் பார்த்து மமதாதேவி, அவரைத் தனியறைக்கு அழைத்துக்கொண்டுபோய், "இந்நள்ளிருளில் ஏன் இங்கு வந்தீர்கள்? கிணற்றுநீரை யார் கொண்டுபோய் விடுவார்கள்? உமக்குப் புத்தியே யில்லை. இப்படி ஒரு ஸ்திரீயினிடம் வைத்திருக்கும் அன்பை நீங்கள் பகவானுடைய சரணாரவிந்தத்தில் வைத்தால் உமக்கு ஜன்மசாபல்யமுண்டாகும். நானும் கடைத்தேறுவேன். அதை மறந்து, இப்படி வீண் மயக்கங்கொள்வது ஒரு புருஷருக்கு அழகாகுமா?" என்று கேட்டுத் துக்கித்தாள். துளஸிதாஸர், சற்றுலோசித்து மனைவியை நோக்கி "நீ சொன்னது சத்தியமான பேச்சு! உன்மதி பெரிது! நான் மூடரைப்போல் நடந்துகொண்டேன்" என்று கூறி அன்று அங்கிருந்து மறுநாளே அவ்விடமிருந்து புறப்பட்டுக் காசிக்குப் போய்விட்டார்.

இவர் இராமபக்தராகையினால் காசியில் வசித்துக்கொண்டு எப்போதும் ஸ்ரீராம சரித்திரத்தைப் பாடிக்கொண்டும், அவரையே தியானித்துக்கொண்டு மிருந்தார்; அன்னம் பழவர்க்கங்கள் கூட உண்ணாமல், சருகு இவைகளையே புசித்துக்கொண்டு தவம் புரிந்துவந்தார். அப்பொழுது ஒருநாள் துளஸிதாஸர் காசிக்கருகேயிருந்த ஒரு காட்டிற்குப்போய் அங்கு சௌசத்திற்குச் சென்று சுத்தி செய்துகொண்டு, மிகுந்த நீரை ஒரு மரத்தடியில் கொட்டினார். அதிலிருந்து ஒரு பிசாசு அவரை எதிர்ப்பட்டு "எனக்குப் பானஞ்செய்வதற்கு நீ நீர் வார்த்தாய். ஆகையினால் உன்னிடம் எனக்குச் சந்தோஷமுண்டாகிறது. வேண்டும் வரத்தைக் கேள் தருகின்றேன்" என்றது. துளஸிதாஸர் பிசாசைப்பார்த்ததும் அஞ்சாமல், ஸ்ரீராமரைத் தியானம்செய்து அதைப் பார்த்து "உன்னால், எனக்காகவேண்டிய தொன்றுமில்லை. எனக்கு ஸ்ரீராமதரிசனம் செய்யவேண்டும். இதற்கு நீ என்னசெய்வாய்?" என்று கேட்டார். பிசாசு, "நீ தரிசிக்கவிரும்பும் பிரபுவின் சேவகரான ஆஞ்சநேயரை உமக்குக்காட்டுகிறேன்" என்றது. தாஸர், "சந்தோஷம் அவரைக் காட்டும்" என்றார். பிசாசு, "நீர் தினந்தோறும் புராண சிரவணஞ் செய்வதுண்டல்லவா? அங்கு ஒரு விருத்தப்பிராமணர் வருகிறார். அவர் எல்லோருக்கும் முன்பு வந்து, எல்லோரும் போனபிறகு போவார்; அவர் தலையில் குல்லாவும் அரையில் கந்தையும், கையில் ஒரு தடியும் தரித்திருப்பார்.

மயிலே மயிலே என்றால் இறகு கொடுக்குமா?

அவரே ஆஞ்சநேயர்" என்றுகூறி மறைந்தது. அப்பால் துளஸிதாஸர் அவ்வாறே புராண சிரவணம் செய்யப்போய் பிசாசு கூறிய பெரியவர் யாவரென்று கவனித்துக் கொண்டிருந்து கடைசியில் அவரைக் கண்டுபிடித்து அவர் செல்லும்போது அவரைத்தொடர்ந்துபோனார். பெரியவர் "நீ யார்? என்னை ஏன் தொடர்கிறாய்?" என்று கேட்டார். துளஸிதாஸர் அவருடைய பாதங்களிலே தம்முடைய சிரந்தோயப் பணிந்து, "எனக்கு அருள் செய்யவேண்டும், ஸ்வாமி!" என்றார். பெரியவர் "நீர் யார்? என்னையேன் தீண்டினீர்? நான் பாமர தரித்திரன். என் பாதத்தில் ஏன் பணிந்தீர்?" என்று கேட்டார். துளஸிதாஸர், "நீர் ராமபக்தராகிய ஆஞ்சனேயர் என்பதை நானறிவேன்" என்று கூறி, மீண்டும் அவர் திருவடிகளைப் பிடித்துக் கொண்டு, "ஸ்ரீராமதரிசனம் எனக்குக் கிடைக்கும்படி கிருபை செய்யவேண்டும்" என்றார். ஆஞ்சனேயர் துளசிதாசருடைய பூர்வ விருத்தாந்தத்தைத் தெரிந்துகொண்டு "உமக்கு அவர் தரிசனம் விரைவிற் கிடைக்கும்" என்று கூறி ஸ்ரீராம மூர்த்தியைத் துதித்துக்கொண்டே போய்விட்டார். பிறகு துளஸிதாஸரும் தமது ஆசிரமத்திற்கு வந்துசேர்ந்தார்.

துளஸிதாஸர், "நமக்கு எப்பொழுது ஸ்ரீராம மூர்த்தி தரிசனங்கொடுப்பார்; எப்பொழுது நாம் அவருடைய திருவடிகளுக்குப் பாத்திரமாவோம்" என்கிற எண்ணத்துடன் அவரையே அல்லும் பகலும் தியானித்துக்கொண்டும் துதித்துக்கொண்டு மிருந்தார். இப்படியிருக்கையில் ஸ்ரீராமமூர்த்தி வேறு உருக்கொண்டு சில வானரவீரர்களுடன் துளஸிதாஸருடைய ஆசிரமத்தினருகே சென்றார். துளஸிதாஸர் அவரைப் பார்த்தார். ஆனால் ஸ்ரீராமமூர்த்தியென்று அவர் கண்டுகொள்ளவில்லை. பிறகு அடுத்தநிமிஷத்தில் அங்குஆஞ்சநேயராகிய பெரியவர் வந்து, "தாசரே, ஸ்ரீராம மூர்த்தியின் தரிசனம் கிடைத்ததோ?" என்று கேட்டார். துளஸிதாஸர் "இல்லையே" என்றார். ஆஞ்சநேயர் "இப்பொழுது இந்தப் பக்கமாகப்போனாரே! பார்க்கவில்லையோ?" என, துளசிதாஸர், "ஒருவர் போனார் சில பேர்களுடன். நான் அவரை யாரோ துருக்கன் என்றிருந்துவிட்டேன்" என்றார். ஆஞ்சநேயர், "அவர்தாம் ஸ்ரீராமர்" என்றார். தாஸர், "ஜலம் பூமியெங்குமிருந்தாலும் சாதகபக்ஷி அந்த ஜலத்தை அடைவதில்லை. அதுபோல் இராமபக்தர்கள் இராம சொரூபத்தைத் தவிர வேறு சொரூபத்தைக் கண்டுகொள்வதில்லை. வால்மீகி பகவான் வருணித்திருப்பதுபோல் ஸ்ரீராமருடைய தரிசனம் எனக்குக் கிடைக்கும்படி அநுக்கிரகிக்க வேண்டும்" என்றுவேண்டினார். ஆஞ்சனேயர், "அப்படியே உமக்கு ஸ்ரீராம தரிசனம் கிடைக்கும்" என்று சொல்லிப் போய்விட்டார்.

பிறகு ஒருநாள் துளசிதாசருக்கு ஸ்ரீராமபிரான், கையில் வில்லையுடையவராய், நீலமேகசியாமள வடிவத்துடன், இடையில் பீதாம்பர முடுத்தவராய்த் தரிசனந் தந்தார். துளஸிதாஸர், உடனே ஸ்ரீராமமூர்த்தியின் திருவடிகளில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்து இருகை குவித்துக் கண்களினின்று ஆநந்த பாஷ்பம் பெருக நின்றுகொண்டு துதித்தார். பகவான் தம் கடைக்கண் நோக்க மளித்து மறைந்தார். உடனே ஆஞ்சநேயர், "தாஸரே, நீர் ஸ்ரீராமரைப் பிரத்தியக்ஷத்தில் பார்த்தீராகையினால் அவருடைய லீலையை ஜனங்களுக்குச் சொல்லக்கடவீர்" என்று ஆக்ஞாபித்தார்.

துளசிதாசர் அவ்வாறே ஸ்ரீராமருடைய லீலைகளை ஜனங்களுக்கு எடுத்துப் போதித்துவந்தார். பிறகு ஜனங்களெல்லோரும் அவரிருப்பதற்குக் காசியில் ஒரு பெரிய மடத்தைக் கட்டி வைத்தார். துளஸிதாஸர் அதிலிருந்துகொண்டு ஸ்ரீராமபஜனை செய்துகொண்டும் அவருடைய பிரபாவத்தை உபந்யசித்துக்கொண்டு மிருந்தார். நாள்தோறும் அநேக ஜனங்கள் அங்கு வந்து கூடத்தொடங்கினார்கள். பிறகு அவர்களுக்கெல்லாம் போஜன வசதிகளும் அந்த மடத்திலேயே ஏற்பாடாயின. அதன்பொருட்டு அநேகர் பொருளுதவியும் புரிந்தனர். சிலர் தாஸரைப் பூஷிப்பார்; சிலர் தூஷிப்பார். தாஸர் ஒன்றையும் இலக்ஷியஞ்செய்வதில்லை. எப்போதும் ஸ்ரீராமருடைய தியானத்திலேயே யிருப்பார். மடத்தில் அநேக பக்தர்கள் வந்து சேர்ந்துவிட்டார்கள். பொருளும் தக்கபடி சேர்ந்துவிட்டது. வெள்ளிப் பாத்திரங்களும் தங்கப் பாத்திரங்களும் வேண்டியமட்டும் சேர்ந்தன. எல்லோரும் துளஸிதாஸரைப் பிரதான புருஷராகக்கொண்டு தினந்தோறும் வெகுநேரம் வரையில் பஜனை செய்துகொண் டிருந்து பிறகு

மடத்துக் கதவுகளைத் தாளிடாமல் திறந்தபடியே வைத்து நித்திரை போய்விடுவார்கள்.

இப்படி யிருப்பதைக்கண்ட சில திருடர்கள் சமயம் பார்த்திருந்து, ஒருநாள் மடத்திற்குள் புகுந்து வெள்ளிப்பாத்திரங்களையும் தங்கப்பாத்திரங்களையும் திரவியங்களையும் கட்டியெடுத்து வெளியேபோக வாசற்படியருகே வந்தார்கள். அங்கே, இருவர் கையிற் கத்தியுடன் காவல் புரிந்து கொண்டிருக்கப் பார்த்து அங்கேயே பிரமித்துப்போய் நின்று "இன்னும் சற்றுப் பொறுத்துப் போவோம்" என்றெண்ணி ஒரு பக்கமிருந்து நான்கு நாழிகை கழித்து மறுபடியும் வந்து பார்த்தார்கள். அவர்கள் முன்போலவே யிருக்கக்கண்டு ஆச்சரியப்பட்டு மரமாய் நின்றுவிட்டார்கள். பொழுது விடியுந் தருணமாய் விட்டது. தாஸர் முதலிய யாவரும் ஸ்ரீராம சங்கீர்த்தனம் பாடிக்கொண்டு எழுந்துவிட்டார்கள். என்ன செய்வார்கள் திருடர்கள்? அகப்பட்டுக் கொண்டமையால், தாஸருடைய பாதத்தில் விழுந்துபணிந்து எழுந்து நின்று, "எங்களை மன்னிக்கவேண்டும்" என்று கூறித் தாங்கள் இன்னாரென்று சொல்லி "தாங்கள் பிரவேசிக்கும்போது காவலில்லாமலிருந்த வாயிற்படியில் இப்போது இருவர் வில்லுங் கையுமாகக் காவலிருக்கிறபடியால் நாங்கள் தப்பிப்போக வழியற்றவர்களானோம். எங்கள் பிழைபொறுக்க வேண்டும்" என்று தெரிவித்தனர். தாஸர் "வாயிலில் காவலாளி யேது? யாரேனும் காவலாளிகளை நியமித்தீர்களா?" என்று தம்மைச் சேர்ந்தவர்களைக்கேட்டார். அவர்கள் "அப்படிக்கொன்றும் நடக்கவில்லையே! தங்களை அறியாமலா?" என, தாஸர் வியப்புடன் வாயிற்படியண்டை வந்துபார்த்தார். அங்கு ஒருவருமில்லை. உடனே தாஸர் திருடர்களைநோக்கி, "ஒருவருமில்லையே. நீங்கள் பார்த்த அவர்கள் எப்படி யிருந்தார்கள்?" என்று கேட்க, அவர்கள் "சுவாமி அவர்கள் கிரீடகுண்டலங்களைத் தரித்துப் பீதாம்பரதாரிகளா யிருந்தார்கள்" என்று கூறினார்கள். துளஸிதாஸர் ஸ்ரீராமலக்ஷமணர்கள் வந்திருக்கிறார்களென்று அறிந்து எல்லோருக்கும் அந்த அதிசயத்தைச்கூறி வியப்படைந்தார். திருடர்களை நோக்கி "உங்களுக்கு விருப்பமான பொருளை எடுதனுக்கொண்டு போங்கள்" என்றார். திருடர்கள், "சுவாமி, சாதுக்களாகிய தங்களுடைய ஸ்தலத்தில் புகுந்த எங்கட்கு பகவான்களாகிய ஸ்ரீராமலக்ஷமணர்களுடைய தரிசன பாக்கியம் கிடைத்தது. இன்னும் எங்கட்கு என்ன பாக்கியம் வேண்டும்? நாங்கள் பாபமற்றவர்களானோம். சாதுக்களுடைய தரிசன விசேஷமுணரலானோம்" என்று கூறி அன்று முதல் அவர்களும் ஸ்ரீராமபக்தர்களானார்கள்.

இப்படியிருக்கையில் ஒரு நாள் எல்லோரும் போஜனத்துக்கு வீற்றிருந்தனர். அப்பொழுது ஓர் அந்தணன் வந்து கதவை இடித்து, "ஜய ஜய ஸ்ரீராம! ஜயஜய ஸ்ரீராம!" என்று கூறி, "பிரமஹத்திசெய்த பாதகன்; எனக்குப் பசிக்கிறது, அன்னமிடவேண்டும்" என்றான். தாஸர், "வாரும். வந்து வீற்றிரும். அன்னமிடுவார்கள்" என்றழைத்துவந்து பந்தியிலுட்காரவைத்தார். அதைக்கண்ட மற்றவர்கள், பிரமஹத்தி செய்தவனைப் பந்தியிலுட்காரவைக்கலாமா?" என்று கேட்டார். தாஸர், "இவருக்கேது பிரமஹத்தி தோஷம்! இவர்தாம் ஸ்ரீராம நாமம் உச்சரிக்கிறாரே" என்று கூற, எல்லோரும் வியப்புற்று அவரையும் பந்தியிலுட்காரவைத்துப் போஜனமுண்டனர்.

அப்பால் ஒரு நாள், அந்த ஊரில் ஒரு வர்த்தகன் இறந்துபோனான். அவனுடைய மனைவி உடன்கட்டை யேறச் சித்தமானாள். அப்பொழுது அவளுக்குத் துளஸிதாஸரைக் கண்டு தரிசித்துப் பின் சுடலைக்குப் போக வேண்டு மென்கிற எண்ண முண்டாயிற்று. அவள் உடனே புறப்பட்டு மடத்திற்கு வந்து தாஸரைத் தரிசித்து அவர் திருவடியில் பணிந்தாள். தாஸர், "உனக்கு மக்கட்பேறுண்டாகுக!" என்று ஆசீர்வதித்தார். இதைக்கேட்டதும் வர்த்தகன் மனைவி தன் நிலைமையைக் கூறி, "சுவாமி தமது ஆசீர்வாதம் பலிப்பதெப்படி?" என்று கேட்டாள். தாஸர், "எனக்கொன்றுந் தெரியாது. உன்னைப் பார்த்ததும் அவ்வாறு வாழ்த்தச் சித்தமுண்டாயிற்று. அவ்வாறு செய்தேன். இந்தப் பேச்சை ஸ்ரீராமனே காப்பாற்றவேண்டும். அவர் மெய்யாக்குவார்" என்று கூறினார். அவள் வேறு பேசாமல் தன் வீடுவந்து பிரேதமாய்க் கிடக்கும் புருஷனைப் பார்த்தாள். இவள் திருஷ்டி பட்ட மாத்திரத்தில் அவன் உயிர்பெற்றெழுந்தான். எல்லோரும் ஆச்சரியப்பட்டனர். பிறகு வர்த்தகனும் அவன் மனைவியும் ஸ்ரீராமபக்தர்களாகி சாதுக்களையெல்லாம் இரக்ஷித்துவந்தார்கள்.

துளஸிதாஸருடைய இந்த மகிமைகளை யெல்லாம் கேட்ட அக்பர் சக்கரவர்த்தி அவரைத் தம் அரண்மனைக்கு வரவழைத்து "நாளையுதயத்திற்குள் எனக்கு ஸ்ரீராமதரிசனம் செய்விக்க வேண்டும் இல்லாவிட்டால் நீர் இவ்விடம் விட்டுப்போவது கூடாது" என்றான். தாஸர் உடனே அவ்விடத்திலேயே ஆஞ்சனேயரைத் தியானித்தார். ஆஞ்சனேயர் ஸ்ரீராமனைத் தியானித்தார். அம்மாத்திரத்தில் ஊரெங்கும் அநேக ஆயிரக்கணக்கான வானரங்கள்தோன்றிப் பலவாறாகத் தங்கள் சேஷ்டைகளைச் செய்யத் தொடங்கின. ஜனங்கள் குரங்கின் உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் அக்பரிடம்வந்து முறையிட்டனர். அக்பர், "இது என்ன இப்படி?" என்று தன் மந்திரிகளைக் கேட்க, அவர்கள் "துளஸிதாஸரைக் கேட்கவேண்டும்" என்று கூறினார்கள். அக்பர் துளஸிதாஸரிடம் வந்து, "ஊருக்குள் வானரங்கள் இப்படி வந்ததற்குக் காரணமென்ன?" என்று கேட்டான். தாஸர், "இவையெல்லாம் ஸ்ரீராமர் அனுப்பவந்த சைனியம். ஸ்ரீராமர் பின்னேவருவார் என்று சொன்னார். அக்பர் "ஸ்ரீராமருடைய தரிசனம் எனக்குப் போதும். குரங்குகளைப் போகும்படி செய்யும்" என்று கூறிப் பணிந்து வேண்டினான். தாஸர், ஸ்ரீராமனை நினைத்தார். உடனே குரங்குகளெல்லாம் மாயமாய்ப் போய்விட்டன. அக்பர் தாஸருடைய மகிமையை வியந்து அவருக்கு வேண்டிய உபசாரணைகள் செய்து அனுப்பினான்.

பிறகு தாஸர் கிருஷ்ண பகவானுடைய தரிசனத்திற்காக மதுரைக்குப் போனார். மதுரையில் ஒருவர் கலியுகத்தில் உதித்த பக்தர்களுடைய சரித்திரங்களையெல்லாம் ஸம்ஸ்கிருத பாஷையில் எழுதிக்கொண்டிருந்தார். அவரிடம் துளஸிதாஸர் சென்று, அந்தச் சரித்திரங்களை யெல்லாம் சொல்லக் கேட்டு, "எல்லோருடைய சரித்திரமும் எழுதி முடித்தாய்விட்டதா?" என்று கேட்டார். அவர், துளஸிதாஸருடைய சரித்திரம் தவிர மற்ற சரித்திரங்களெல்லாம் எழுதிமுடிந்தன" என்றார். தாஸர் "அப்படியா? நல்லது. சந்தோஷம்" என்று கூறிப் புஸ்தகத்தைப் பார்த்துக்கொண்டே போனார். அங்கு தமது சரித்திரமிருக்கக் கண்டு வியப்படைந்து அதை அவருக்குக் காட்டி, "இது யாருடைய சரித்திரம் பாரும்" என, அவர் வாங்கிப் படித்துப்பார்த்து வியப்படைந்து, "இதை நான் எழுதவில்லை. இது துளஸிதாஸருடைய சரித்திரம். அவர் ஸ்ரீராமருடைய பக்தர். ஆகையினால் ஸ்ரீராமரே எழுதிவைத்திருக்கிறார்" என்று கூறி, ஸ்ரீராமமூர்த்தியைத் துதித்து, "பிரபுவே, உன் திருவிளையாடலை யாரறிவார்?" என்று பணிந்தார். பிறகு அவர் துளஸிதாஸரை அறிந்துகொண்டு அவரைப் பணிந்தார். அவரோடு அளவளாவிப் பேசிக்கொண்டிருந்து வேண்டிய உபசாரணை செய்து, "நான் கிருதார்த்தனானேன்! உத்தம பக்தரின் தரிசனம் கிடைத்தது" என்றார். தாஸர் "எல்லாம் ஸ்ரீராமருடைய கிருபை!" என்று கூறி அங்கேயே இருந்துகொண்டு அல்லும் பகலும் ஹரிகுணானுவாதம் செய்துகொண்டு பக்த கோஷ்டிகளுடன் அங்கேயே சுகமாய் இருந்துவந்தார்.

நமது சிறு கதை

OUR SHORT STORY

ஆறாவது அத்தியாயம்

விதியை யெதிர்த்தல்

தாம் சுந்தரவல்லியை மணந்துகொள்ளப் போவதற்குமுதல்நாளிரவு பத்துமணிக்குமேல் கோவிந்தசாமி முதலியார் யாது காரணத்தினாலோ தூக்கம் பிடிக்காததால் வீட்டைவிட்டுப் புறப்பட்டு பீபில்ஸ்பார்க்குக்குள் நுழைந்து புஷ்பச்செடிகளின் நாற்றுகள் வளர்க்கப்படும் இடத்துக்குச் சமீபத்திலுள்ள மண்டபத்துக்குப்போய் ஒரு பெஞ்சியின்மீது உட்கார்ந்தார். அன்று மாலையில் தமது காதலி சுந்தரவல்லி தம்முடன் பேசியபொழுது தங்கள் விவாகம் இடையூறின்றி நடக்கவேண்டுமென்று சிறிது கவலையுடன் கூறியதிலிருந்தோ, வேறெந்தக்காரணத்தினாலோ அவர் மனத்தில் தமது விவாகத்துக்கு ஏதோ பெரிய இடையூறு நேரிடுமென்று தோன்றி, அவர் சற்று வாட்டமுற்றிருந்தார். தமக்கு அன்றிரவுக்குள் பெரிய ஆபத்து நேரிடுவது நிச்சயமென்று அவருக்குத் தோன்றிற்றே யெனினும், வீட்டுக்குள் பத்திரமாய்ப் படுத்திருக்க மனம் வராது வெளியே புறப்பட்டுத் தனிமையான இடத்தை நாடிச் சென்றார். மறுநாட் காலைக்குள் விதியானது தமக்குப் பெருந்தீங்கு விளைவிக்குமென்றும், அதனின்றும் தாம் தப்பிப் பிழைத்தால் பிறகு தமக்கு அபாயமில்லை யென்றும் ஏதோவொன்று அவர் மனத்திற் சொல்லிற்று. அவர் அஞ்சா நெஞ்சுடையோ ராதலின், கொடிய விதியை எதிர்கொண்டுசென்று அதனுடன் போராடித் தமது வலிமையினால் அதை வெல்ல நிச்சயித்தார்.

அவர் தமது வீட்டிலிருந்து புறப்பட்டுப் பத்தடிதூரம் சென்றவுடனேயே தம்மை யாரோ பின் தொடர்ந்துவந்ததை யுணர்ந்துகொண்டார். இரண்டொருமுறை தம்மைப் பின் தொடர்ந்தவர் மிகவும் சமீபத்திலிருந்ததாக வெண்ணி அவர் திடீரென்று திரும்பிப் பார்த்ததில் எவரையுங் காணாமல், தமது அஞ்சாநெஞ்சும் பயந்து மருண்டதைக்கண்டு தமக்குள் நகைத்துக்கொண்டு சென்றார். செடிகளின் நாற்று வளர்க்கப்படும் இடத்தை யடைவதற்குள் பலமுறை அவர் பின்னே திரும்பிப் பார்த்தார். ஆனால் ஒருவரையும் காணோம். ஆயினும் அவர் தம் மனத்தினின்றும் யாரோ தம்மைத் தொடர்ந்து வருகிறார்களென்ற எண்ணத்தை யகற்றமுடியவில்லை. அவ்விடத்தை யடைந்து அதனருகிலுள்ள மண்டபத்தில் பெஞ்சியின் மீது உட்கார்ந்திருந்த பொழுதும் அவ்வெண்ணம் ஸ்திரப்படுமாறு பல சத்தங்கள் கேட்டன. சிறிதுநேரம் அங்கு உட்கார்ந்திருந்து, பிறகு பார்க்கினூடே வடபுறமாய்ச் சூளைக்குச்செல்லும் பாதையின் வழியே நடக்க ஆரம்பித்தார்.

நடராஜ முதலியார் அடிவயிற்றில் ஓர் உதை கொடுக்க, குடிகாரக் குருசாமிபிள்ளை நாற்காலியைக் கவிழ்த்துக் கொண்டு அலறிவிழுந்தான்.

அப்போது ஒரு போலீஸ்காரன் எதிர்ப்பட்டு தனது லாந்தரை அவரது முகத்துக்குப் பக்கத்தில் பிடித்து அவரை யுற்றுப்பார்த்து, அவர் விலையுயர்ந்த உடைகளை யணிந்திருந்ததைக் கண்டு, "ஐயா! நிரம்ப நேரமாயிற்றே. இந்த அவாந்தரமான இடத்துக்கு ஏன் தனிமையில வந்தீர்கள்? வீட்டுக்குத் திரும்பிப்போவது உசிதம். வாருங்கள், நானும் தங்கள்கூடத் துணையாக வருகிறேன்' என்று மரியாதையுடன் சொன்னான். கோவிந்தசாமி முதலியார் நகைத்து, "நீர் சொல்லுவதைப் பார்த்தால், இவ்விடத்தில் திருடர்களும் அயோக்கியர்களும் அதிகம்போல் தோன்றுகிறதே" என்றார். "அதிகந்தான். தினந்தோறும் இரவில் இங்கு சுற்றிவரும் நான் அப்படிப்பட்டவர் அநேகரை இவ்விடத்தில் பார்த்திருக்கிறேன்" என்றான் போலீஸ்காரன். "சரிதான். அப்படியாயின், என்னை யாரோ பின்தொடர்ந்து வருவதாக நான் எண்ணியது முற்றிலும் மனமருட்சி யல்ல" என்று கோவிந்தசாமிமுதலியார் சொன்னார். போலீஸ்காரன், "ஐயா! அப்படியாயின், தாங்கள் வீட்டுக்குத் திரும்பிச் செல்வதுதான் உசிதம். வாருங்கள், போகலாம்" என்று

வற்புறுத்திக் கூறினன். கோவிந்தசாமி முதலியார் நகைத்து, "நீர் கவலைப்படாமல் போம். என்னை எவரேனும் அணுகினல் சுடச்சுட இரண்டு அறை கிடைக்குமே தவிர, துட்டு கிடைக்காது. அதுவுமன்றி, நான் எண்ணியது இருளினல் ஏற்பட்ட மருட்சியாக விருக்கலாம்" என்று சொல்லிப் போலீஸ்காரனை அனுப்பிவிட்டு, தாம் முதலிற் சென்ற வழியே மெல்ல நடந்தார்.

போலீஸ்காரன் கூப்பிடுதூரம் செல்லக்கூடிய நேரம்பொறுத்து கோவிந்தசாமி முதலியார், "அவர்கள் ஏன் நெருங்கி வரமாட்டேன் என்கிருர்கள் ? மார்க்கசகாயமுதலியார் பேத்தியதுமுதல் எட்டுப்பேர்கள் காரியத்தைச் சீக்கிரம் முடித்துவிடவேண்டுமென்ற ஆவல் என் மனத்திலுதித்திருக்கிறது. சூளைச் சாலைவரையில் போய்த் திரும்புகிறேன். அதற்குள் அவர்கள் என்னைக் காண வராவிட்டால், நான்தான் என்ன செய்கிறது ? வீட்டுக்குத் திரும்பிச் செல்லவேண்டுவதுதான். யாரடா பயல அங்கே ?" என்ருர். திடீரென்று பூமியிலிருந்து எழுந்து தமக்கெதிரே நின்ற ஒருருவத்தைக் கண்டு அவர் அக்கேள்வி கேட்டார். கேட்டு வாய்மூடுமுன், இருபுறங்களிலும் இரண்டு உருவங்கள் தோன்றின. உடனே மூன்று உருவங்களும் வெகு வேகமாய் அவன்மீது பாய்ந்தன.

"எட்டுப்பேர்களே ! நமக்குள்ள விவாதம் இன்று தீரப்போகிறதுபோலும்! வாருங்கள் ! மெத்த சந்தோஷம்!" என்று சொல்லி நகைத்துக்கொண்டே கோவிந்தசாமி முதலியார் பின்னல் ஒரு அடி எடுத்துவைத்து முதலில் வந்தவனை முகத்தில் ஒரு குத்து ஓங்கிக் குத்தினர். அவன் "அப்பா!" என்று அலறிக்கொண்டு மல்லார்ந்து வீழ்ந்தான். பிறகு அவர் வலதுபுறமாய் வந்தவனை வயிற்றில் ஒரு குத்துக் குத்தினர். ஆனல் அந்தக் குத்து பலமாய் விழவில்லை. ஏனெனில், வலதுபுறத்தில் அவன் பாய்ந்துவந்த க்ஷணத்திலேயே மற்ருெருவன் இடதுபுறத்திற் பாய்ந்து குரங்கைப்போல் தாவி அவர் கழுத்தைக் கட்டிக்கொண்டு தொங்கினன். வலதுபுறமாய் வந்தவன் கணநேரம் தயங்கி மீண்டும் அவர்மேற் பாயும் சமயததில் கழுத்தைக் கட்டிக்கொண்டு தொங்கினவன், "சற்றுப் பொறு ! நான் இவனைக் கீழே வீழ்த்திவிடுகிறேன் !" என்று சொல்ல, அவன் அவர்மேற் பாயச் சற்றுத் தாமதித்தான். கோவிந்தசாமி முதலியார், "அடே! குரங்கே ! நீயா என்னை வீழ்த்தப் போகிருய் ? இதோ யார் விழுகிருர்களென்று பார்!" என்று சொல்லி வலதுபுறமாய்த் தாவி அவனை உதறினர். அவன் பிடிப்பு நழுவிக் கீழே வீழ்ந்தான். உடனே கோவிந்தசாமி முதலியார் அவனுடலையிறுகப்பிடித்துத்தூக்கி வலதுபுறத்தில் வந்தவன்மீது அவனை மோதினர். இருவரும் வெட்டப்பட்ட மரம்போலச் சாய்ந்தனர். முதலில் விழுந்தவன் எழுந்து தன் சிநேகிதர்கள் கதியைக் கண்டு தயங்கி நின்ருன்.

அதுகண்ட கோவிந்தசாமி முதலியார் மிகுந்த ஆதரவுடன் அவர் மூக்கின் ஸ்திதியைப்பற்றி விசாரித்து, குளிர்காலத்தில் குஸ்தி போடாமல் திறந்த வெளியில் நின்ருல் சளி பிடித்துக் கொள்ளுமாதலால் சீக்கிரம் திரும்பவும் தம்முடன் குஸ்தி போடும்படி புத்திமதி கூறினர். மற்ற இருவர்களும் எழுந்திருந்தார்கள். மூவரும்கூடி என்ன செய்வதென்று ஆலோசித்தார்கள். பிறகு மூவரும் ஒரே க்ஷணத்தில் வெகு வேகமாய்ப் பாய்ந்தார்கள். கோவிந்தசாமி முதலியார் கதாயுதத்தைச் சுழற்றுவதுபோலத் தமது கைகளைச் சுழற்றினர். நேராக வந்தவன் தரைமீது விழுந்தான். மற்ற இருவர்களும் கீழே விழாவிட்டாலும் நல்ல அடிபட்டார்களாதலால் அவரை யணுகாது விலகிநின்றனர். கோவிந்தசாமி முதலியார், "ஏன் ஐயா ! என்னை வீழ்த்தமாட்டேன் என்கிறீர்கள் ?" என்று சொல்லி நகைத்தார். அடுத்தக்ஷணத்தில் ஈரமாய் ஒட்டிக்கொண்ட துணிப்பை யொன்று பின்புறத்திலிருந்து அவர் தலைமீது வீசப்பட்டு தலையை மூடிக்கொண்டது. அப்பையை யாரோ ஒருவர் பின்புறத்திலிருந்து வலித்து இழுத்தார். அப்பையிலிருந்து ஏதோ மயக்கந்தரும் வாசனை யொன்று கிளம்பி அவரை மூர்ச்சையடையச் செய்தது. அவர் தரைமீது சாய்ந்தார். பிறகு என்ன நடந்ததென்பது அவருக்குத் தெரியாது.

ஏழாவது அத்தியாயம்

சிநேகிதன சந்தேகம்

விடிய ஐந்தாறு நாழிகைப் பொழுதிருக்கும். இரவு முற்பாகத்தில் கோவிந்தசாமி முதலியாருடன் பேசிய போலீஸ்காரன் அவ்வழியே

திரும்பி வந்தபோது வழியில் அவர் மல்லார்ந்து பிணம்போற் கிடப்பதைக்கண்டு, அவரைப் பிடித்துக் குலுக்கினன். வெகுநேரம் குலுக்கிய பிறகுதான், அவர் விழித்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்தார். போலீஸ்காரன், "ஐயா! திரும்பி வீட்டுக்குப் போயிருந்தால் நலமாயிருந்திருக்கும்" என்ருன். கோவிந்தசாமி முதலியாருக்கு மயக்கம் முழுவதும் நீங்கவில்லையாதலால், "என்ன சொலலுகிறீர் ? நான் சமீபத்தில் உம்மைப் பார்த்திருக்கிறேன்போல் தோன்றுகிறதே" என்ருர். போலீஸ்காரன், "பார்த்திருக்கிறீர்கள். இரவு பத்து மணிக்கு என்னைப் பார்த்தீர்கள். திரும்பிவருகையில் தங்களைப் பார்த்தபோது தாங்கள் இறந்துவிட்டீர்களென்றே எண்ணினேன். டாக்டரை அழைத்துக் கொண்டுவர வேண்டுமென்று நான் புறப்படுகையில் தாங்கள் விழித்துக் கொண்டீர்கள். நல்லவேளையாய்ப் போயிற்று. தங்களை யாரோ பின்தொடர்ந்து வந்ததாகத் தாங்கள் எண்ணினது மனமருட்சியன்றெனத் தெரிகிறது. அப்போதே அயோக்கியர்கள் இங்கே அதிகமென்று சொன்னேன். தாங்கள் என் வார்தததையை இலக்ஷியஞ் செய்யவில்லை" என்ருன். கோவிந்தசாமி முதலியார், "ஐயா ! என்னென்னவோ ஊகித்துவிட்டீரே க்ஷண நேரத்துக்குள் ! அயோககியர்கள் என்னை எவ்விதத்திலும் உபத்திரவிக்கவில்லை. எனக்கு ஒருவிதமான வலிப்பு வருவது வழக்கம். அது வநது கீழேவிழுந்து மூர்ச்சித்தேன். என்னைத் திருடர்கள்எதிர்க்கவில்லையென்பதற்குச்சாக்ஷியம் என் சொக்காய்ப் பையிலுள்ள பணப்பை பணத்துடன் இன்னு மிருப்பதுதான். இதோ நீர் எனக்குச் செய்த உபகாரத்துக்காக இந்த ஐந்துரூபாய் நோட்டைத் தயவுசெய்து பெற்றுக்கொள்ளும்" என்று சொல்லி, அவன் கையில் நோட்டைக் கொடுத்து அவனை அனுப்பிவிட்டுத் தமது வீட்டை நோக்கிச் சென்ருர்.

தம்மை எதிர்த்தவர்கள் தம்மைக் கீழே வீழ்த்தியபின், தம்மைக் கொலலாமலும் தம்முடைய பணப்பையிலிருந்த பணத்தை எடுத்துக் கொள்ளாமலும் சென்றது அவருக்கு மிகுந்த ஆச்சரியத்தை விளைவித்தது. அவர்களுடைய நோக்கம் என்னவா யிருக்கலாமென்று ஆலோசித்துப் பார்த்தார். ஏதோவொரு எண்ணம் தோன்றி அவர் தமது கடியாரச் சங்கிலியின் மற்ருெரு நுனியைப் பரிசோதித்துப் பார்த்தார். அதில் தொங்கிக்கொண்டிருந்த சிறுசாவியைக் காணேம். உடனே அவருக்கு யாவும் தெளிவாய் விளங்கின. "ஓகோ ! அப்படியா சமாசாரம் ? பாங்கியிலுள்ள இருப்புப்பெட்டியின் சாவியைக் கைப்பற்றவா இவ்வளவு பாடுபட்டீர்கள் ? எட்டுப்பேர்களே ! நீங்கள் என்னை வென்றுவிட்டதாக எண்ணுகிறீர்கள். நான் ஒருபேச்சுப் பேசினல் அந்தச்சாவி உங்களுக்கு எவ்விதத்திலும் சிறிதும் பயன் படாமற்போகும். ஆனல் நான் அந்தப் பேச்சைப் பேசப் போவதில்லை. சாவியைக் கொண்டு போய் இருப்புப்பெட்டியைத் திறந்து பாருங்கள்! நிரம்பப் பொருள்கிடைக்கும். அந்தச் சமயத்தில் உங்கள் முகங்களைக்காண நான் ஆயிரம் ரூபாய் அலக்ஷியமாய்க் கொடுப்பேன். எட்டுப்பேர்களே ! சபாஷ்! இம்முறை நீங்கள் என்னை ஜயித்துவிட்டீர்கள். அடுத்தமுறை பார்க்கலாம் !" என்று வாய்விட்டுச் சொல்லிக்கொண்டே சென்ருர்.

அச்சமயத்தில் அவருக்குச் சமீபத்தில், "கோவிந்தசாமி முதலியாரவாள் ! என்ன தானுக ஏதோ பேசிக்கொண்டு போகிறீரே ! இந்நேரத்தில் இங்கு என்ன செய்கிறீர் ?" என்று யாரோ வொருவர் கேட்டார். கோவிந்தசாமி முதலியாருக்கு அச்சமயத்தில் தமக்குத் தெரிந்தவர்கள் எவரையும் சந்திக்க இஷ்டமில்லையேயெனினும், அவ்வெண்ணத்தை வெளியிடாமல், தமக்கு இயல்பாகவுள்ள உற்சாகத்துடன், "நடராஜ முதலியாரா ? இத்தருவாயில் நீர் என்ன ஐயா செய்கிறீர் இங்கு? உம்மை நான் கேட்கவேண்டிய கேள்வியை நீர் என்னைக் கேட்கிறீரே ! நன்ருயிருக்கிறது" என்ருர்.

"எனக்கு இந்த இடம் மிகவும் ஆவிவந்த இடம். இங்குதான் நான் என்னுடைய சந்தேகங்களை நிவர்த்தித்துக்கொண்டு என்னுடைய இயந்திரத்தைப் பூர்த்திசெய்ய எத்தனையோ நாட்களிரவு நடுநிசிபபொழுதில் நடந்தது. போலீஸ்காரர் எலலோருக்கும் என்னை நன்ருய்த்தெரியும். மற்றவர்களைப் போலவே அவர்களும் என்னைப் பயித்தியக்காரனுகக் கருதுனர்கள. கோவிந்தசாமி முதலியாரவாள்! இவ்வுலகம் இகழ்ந்த என்னையும் ஒரு மனிதனுக மதித்து, என் வார்த்தைகளைச் செவிகொடுத்துக்கேட்டு, அவைகளைப் பித்தன் மொழிக

ளொன்று அலக்ஷியஞ்செய்யாமல் ஏற்றுக்கொண்டு, நான் சொன்னதை நிரூபிக்க இடந்தந்து, கடைசியாக என் வாழ்க்கையின் நோக்கத்தைப் பூர்த்திசெய்துகொள்வதற்கு அவசியமான ஏராளமான பொருளையு முதவிய தங்கள் பெருங்குணத்தை நினைக்கநினைக்க என் மனம் அளவற்ற அன்பினால் உருகி, என் உடலையும் உயிரையும் தங்களுடையவைகளாக்கி ஒருவாறு என் நன்றியறிதலைக் காட்டும்படி தூண்டுகிறது. அவைகளிரண்டும் தங்களுடையனவே. தங்களைச் சகல துன்பங்களிலிருந்தும் நீக்குவதொன்றே இனி என்வாழ்க்கையின் நோக்கமாகும். ஆகையினால் தங்களுக்கு இன்றிரவு நேர்ந்த விபத்து என்னவென்று தயவுசெய்து சொல்லவேண்டும்” என்றார்.

கோவிந்தசாமி முதலியார் மிகுந்த ஆதரவுடன், “நடராஜமுதலியாரே! உமக்கு நான் உதவிபுரிந்தது என் சுய நன்மையைக் கருதியேயென்று எத்தனை முறை சொல்லுகிறது? உமக்கு முதல்கொடுத்து உதவுவதனால் அம்முதலைப்போல் பதின்மடங்கு லாபமன்றோ எனக்குக் கிடைக்கப்போகிறது? ஆகையினால் நானன்றோ உம்மிடம் மிகுந்த நன்றிபாராட்டவேண்டியவன்? இனி, அவ்வாறெல்லாம் சொல்லாதேயும். நீர் எனக்கு எவ்வித உதவியும் செய்வீர் என்பதும் உமது பிராணனைக்கொடுத்தும் நீர் என்னுயிரைக் காப்பாற்றுவீர் என்பதும் தெரியும். இவைகளையெல்லாம் நீர் என்னிடத்திற்கொண்ட பேரன்பின்குறிகள் தெளிவாய்க் காட்டுகின்றன. அவசியமானபோது உமது உதவியை நான் நிச்சயமாய் நாடுவேன். ஆனால் இப்போது எனக்கு ஒரு ஆபத்தும் நேரப்போவதாகத் தோன்றவில்லை. இன்றிரவு எனக்கு வழக்கமாக வரும் ஒருவித வலிப்பைத்தவிர வேறெவ்வித விபத்தும் எனக்குச் சம்பவிக்கவில்லை” என்று கூறினார்.

அதுகேட்ட நடராஜ முதலியார் சிறிது விசனத்துடன், “முதலியாரவாள்! ஏனோ என்னை நம்பமாட்டேனென்கிறீர்கள். யாரோ தங்களைப் பிடித்துத்தள்ளி தங்களைத் தொந்தரவு செய்தார்கள் என்பது தங்களுடைய ஆடைகளைப் பார்த்தால் நன்றாய்த் தெரிகிறது. தங்களை ஒருவிதமான இரகசியம் சூழ்ந்திருக்கிறது. தங்கள் இரகசியத்தை என்னிடம் தெரிவிக்கக் கூடாதா?” என்றார். அதற்கு கோவிந்தசாமி முதலியார், “சில சமயங்களில் ஒருவன் தனது இரகசியத்தை வெளியிடுவதே அவன் பிராணனைப் போக்கிவிடத்தக்கது என்பது தங்களுக்குத் தெரியாதா? அவ்விரகசியம் உமக்குத் தெரியாததனால் நமது சிநேகத்துக்குப் பழுதுண்டாகுமோ?” என்று சொன்னார்.

அதுகேட்டு நடராஜ முதலியார் பரபரப்புடன், “அதனால் சிநேகத்துக்குப் பழுது வராது. அதற்காக நான் கேட்கவில்லை. தங்களைக் காப்பாற்றவேண்டு மென்னும் நோக்க மொன்றுதான் நான் அக்கேள்வியைக் கேட்டதற்குக் காரணம். பிராணனைக்காட்டிலும் இனிய மானத்தையும் தங்களிடம் ஒப்புவிக்க நான் சித்தமாயிருக்கிறேன். ஆகையினால் நான் தங்களிடத்தில் தகாத சந்தேகங்கொண்டதாக எண்ணக்கூடாது. ஆபத்து நேரும்பொழுது உற்ற துணையொன்றிருப்பது மிகவும் நலமாயிருக்குமாதலின், தங்களை இவ்வளவு தூரம் வற்புறுத்திக் கேட்கிறேன்” என்றார்.

கோவிந்தசாமி முதலியார் தமது இயல்பான புன்னகையுடன், “என்ன, முதலியாரே! வலிப்புவந்து கீழே விழுந்த என்னைக்கண்டு என்னென்னவோ கற்பித்து பெரிய மனக்கோட்டை கட்டிவிட்டீரே! வாரும், வீட்டுக்குப்போய்ச் சிறிது நேரமாயினும் உறங்கலாம். பொழுது விடிந்தால் எனக்கு விவாகம் என்பதை மறந்துவிட்டீர்போலும்! என்று பரிகாசமாய்ப் பேசினார். நடராஜ முதலியாரும் அதற்குமேல் தாம் வற்புறுத்திக் கேட்பது உசிதமன்றென நிச்சயித்து அவருடன் வேறு சங்கதிகளைக் குறித்துப் பேசிக்கொண்டு தெய்வயானையம்மாள் வீட்டுக்குச் சென்றார்.

எட்டாவது அத்தியாயம்

கழுகுகள் கூடுகின்றன

கோவிந்தசாமி முதலியாருக்கும் சுந்தரவல்லிக்கும் விவாகமாகி மூன்று மாதங்களாயின. விவாகம் முடிந்து இரண்டு நாட்களுக்கெல்லாம் அவர்களிருவரும் விநோதார்த்தமாக வடக்கேயுள்ள கல்கத்தா, அல்லஹாபாத், மதுராபுரி, அம்ருதஸரஸ் முதலிய புராதன நகரங்களைப் பார்க்கச் சென்றனர். அவர்கள் திரும்புமுன், பல்லாவரத்தில் கோவிந்தசாமி முதலியார் புதிதாய் வாங்கிய பங்களாவைச் சிங்கா

ரிக்க சில சிநேகிதர்கள் மிகுந்த துறையுடன் வேலை பார்த்துவந்தனர். தமது காரியங்களை மேல்பார்த்துவருவதற்காக கோவிந்தசாமி முதலியார் தர்மலிங்க முதலியாரென்பவரை நியமித்திருந்தார். தர்மலிங்கமுதலியார் ஆதியில் ஒரு பாங்கியின் மானேஜராக இருந்தார். அக்காலத்தில் அவருடைய அஜாக்கிரதையினால் அவருக்குக்கீழ் வேலை செய்துவந்த முத்தையா முதலியார் என்பவர் பாங்கியில் பலபேர்கள் பத்திரப்படுத்தி வைத்திருந்தஆதரவுகளையும் விலையுயர்ந்த ஆபரணங்களையும் களவாடிக்கொண்டு போய்விட்டபடியால், அவர் மோசம் என்பதை சொற்பனத்திலும் நினையாதவரா யிருந்தும் ஐந்து வருஷம் சிறைச்சாலையில் வசிக்கும்படி நேரிட்டது. சிறைச்சாலையிலிருந்து வெளியில் வந்தபின், தர்மலிங்கமுதலியார் தமது பெயரை மறைத்து வேறுபெயர் பூண்டு, ஒரு காப்பி ஹோட்டலில் மேஜைகளைச் சுத்தஞ்செய்யும் வேலையிலமர்ந்து கஷ்ட காலக்ஷேபஞ் செய்து வந்தார். அப்படியிருக்கையில் ஒருநாள் கோவிந்தசாமி முதலியார் அவரைக் கண்டுபிடித்து, அவரால் பலர் பெருத்த நஷ்ட மடைந்திருந்ததை இலக்ஷியஞ் செய்யாது, அவரிடத்தில் பூரண நம்பிக்கை வைத்து தமது அளவற்ற ஆஸ்தி முழுவதையும் மேல் பார்த்து வரும்படி அவரை நியமித்தார். அந்நிமிஷமுதல் தர்மலிங்க முதலியார் கோவிந்தசாமி முதலியாரின் அடிமையானார்; அவருக்குச் சிறிதும் துன்பமுண்டாகாமல் தடுக்க தர்மலிங்கமுதலியார் எவ்வளவு பெரிய கஷ்டத்தையு மனுபவிக்கத் தயாராக விருந்தார். பங்களாவைச் சிங்காரிப்பதற்கு மிகவும் பாடுபட்டவர்களில் அவர் ஒருவர்.

அவ்விஷயத்தில் அவரைவிட அதிகத் துறை யெடுத்துக்கொண்டவர் இரத்தினவேல் முதலியார். இரத்தினவேல் முதலியார் பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் தகப்பனார் தமது முன்னோர்கள் வெகுகாலமாய் வைத்து நடத்திவந்த ஒரு பெரிய பாங்கியின் காரியங்களைச் சரிவர மேல்பார்த்து வரும் திறமையற்றவராய் மேற்சொல்லிய தர்மலிங்கமுதலியாரை மானேஜராக நியமித்து அவரையே முழுவதும் நம்பிவந்தார். தர்மலிங்க முதலியாரும் யோக்கியராயிருந்தும் தமது எஜமானரைப்போலவே காரிய நிர்வாகத்தில் திறமற்றவராயிருந்தபடியால், மேற்கூறியவாறு தமது குமாஸ்தாவை நம்பி மோசம் போனார். பாங்கி மூடப்பட்டது. யாவரும் இரத்தினவேல் முதலியாரின் தகப்பனாரைச் சபித்தார்கள். அவர் காரிய நிர்வாகத்தில் திறமற்றவரேயெனினும், மிகவும் மானியாதலால் தமது சொத்துக்க ளெல்லாவற்றையும் விற்று, தம்மால் சொத்துக்களை யிழந்த பல ஏழைகளின் கஷ்டத்தைப் பெரிதும் குறைத்து, தமக்கு நேர்ந்த அவமானத்தைச் சகிக்க மாட்டாமல் பதினாறு வயதுள்ள தமது மகன் இரத்தினவேல் முதலியாரையும் பதிநான்கு வயதுள்ள தமதுமகள் கனகவல்லியையும் தத்தளிக்கவிட்டுப் பரலோகஞ் சென்றார். அப்போது அவரது ஏராளமான ஆஸ்தியில் மிஞ்சியிருந்தது பல்லாவரத்தில் கோவிந்தசாமி முதலியார் வாங்கிய பங்களா ஒன்றுதான். அதுவும் கடன்காரர்களுக்குக் கொடுக்கவேண்டிய கடன்களுக்காக விற்கப்பட்டு, கோவிந்தசாமி முதலியாரால் வாங்கப்பட்டபின், இரத்தினவேல் முதலியாரும் கனகவல்லியும் என்ன செய்வதென்றறியாமல் தியங்குகையில், கோவிந்தசாமி முதலியார் தாமும் நடராஜ முதலியாரும் கூட்டாக ஏற்படுத்திய “கோவிந்த நடராஜா பவர் கம்பெனி” யில் அவரை உயர்ந்த உத்தியோகஸ்தராக நியமித்து அவர்களுடைய வறுமையையகற்றினார். அன்றுமுதல் அவரும் அவர் தங்கையும் கோவிந்தசாமி முதலியாருக்கு அடிமையானார்கள். அதுவுமன்றி, நடராஜமுதலியார் கனகவல்லியின் அழகையும் குணத்தையும் கண்டு அவளிடம் காதலுற்று, அவளை மணஞ்செய்து கொண்டார். அது காரணத்தினால் அவர்களுக்கு கோவிந்தசாமி முதலியாரிடத்தில் முதலிலுண்டான அன்பு பன்மடங்காகப் பெருகிற்று.

பங்களாவைச் சிங்காரிப்பதில் நடராஜ முதலியார் மிகுந்த துறையுடன் வேலை செய்தாரென்று சொல்லவே வேண்டாம். தமக்கு இயந்திர விஷயங்களிலுள்ள திறமுழுவதையும் உபயோகித்துப் பல விநோதங்களைச் சமைத்து அப்பங்களாவை மாயத்தோற்றங்கள் நிறைந்ததாகச் செய்தார்.

கோவிந்தசாமி முதலியாரும் சுந்தரவல்லியும் அன்று மாலை ஆறுமணிக்குத் திரும்பி வரப் போவதாக நடராஜ முதலியாருக்குத் தந்தி கிடைத்தது. உடனே நடராஜமுதலியார்

புறப்பட்டு பங்களாவின் ஓர் புறத்திலுள்ள மோட்டார் காடிகானுவுக்குத் தாமே நேரிற் சென்று சாயங்காலம் ஐந்து மணிக்கே மோட்டார் வண்டி பெரிய ரயிலடிக்குப் புறப்படத் தயாராக விருக்கவேண்டு மென்று சொல்லிவிட்டு, தோட்டக்காரர்களை யழைத்து பங்களாவின் வெளி வாசற்படிமுதல் உள் வாசற்படி வரையில், வரிசை வரிசையாகப் பூச்செடித் தொட்டிகளைக் கொண்டுபோய் வைத்து தண்ணீர் தெளித்துவைக்கும்படி கட்டளையிட்டுவிட்டு, திரும்பவும் பங்களாவுக்குள் சென்று தமது நாயகியை யழைத்துக்கொண்டு தோட்டத்துக்குட் சென்றார். அந்த சமாசாரம் கேள்விப்பட்டு தர்மலிங்க முதலியார் மிகுந்த பரபரப்புடன் பங்களாவில் எல்லாம் சரியாயிருக்கின்றனவா என்று பார்ப்பதற்காகப் புறப்பட்டார். அப்போது சில நாட்களாக பங்களாவின் சிறந்த அமைப்பைப்பற்றியும் அவ்வமைப்புக்குக் காரணமான அவர் திறத்தைப் பற்றியும் புகழ்ந்து பேசி அவரது மனத்திற் களிப்பூட்டி அவரது சிநேகத்தைச் சம்பாதித்திருந்த மார்க்கசகாய முதலியார் அங்கு வந்து, கோவிந்தசாமி முதலியார் வருமுன் இன்னொருமுறை பங்களாவைத் தாராளமாகப் பார்க்கவேண்டுமென்று தமக்கு ஆவலாயிருந்ததாகத் தெரிவித்தார். அச்சமயத்தில் அவருக்கிருந்த கவலை வேறெவரையும் அழைத்துப் போய்ப் பங்களாவைக் காட்ட அவருக்கு இஷ்டமில்லாதபடி செய்ததே யெனினும், அவர் வேண்டுகோளை மறுப்பது பெருந்தன்மைக்கு அழகாயிராதென்று கருதி, அவரை யழைத்துக் கொண்டுபோய் பங்களா முழுவதையும் சுற்றிப் பார்த்துவிட்டுத் திரும்பி பங்களாவின் உள்வாசற்படியை யடைந்தார்.

அப்போது அவ்வாசற்படியண்டை இருவர் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் நல்ல ஆடைகளை யணிந்துகொண்டு நல்ல ஸ்திதியி லிருப்பவராகக் காணப்பட்டார். மற்றொருவர் மட்டமான ஆடைகளை அலங்கோலமாய் அணிந்துகொண்டிருந்ததனாலும் கோவைக் கனிபோற் சிவந்து சலித்துக் கொண்டிருந்த கண்களினாலும் தாம் அமிதமாக மதுபானம் செய்பவர் என்ற விஷயத்தைத் தெளிவாக விளக்கினார். முதலிற் சொல்லப்பட்டவர் மார்க்கசகாய முதலியாரை நோக்கி, "கோவிந்தசாமி முதலியார் நாளைக்கா வரப்போகிறார்?" என்று கேட்டார். மார்க்கசகாய முதலியார் தர்மலிங்க முதலியாரைச் சுட்டிக்காட்டி, "இவர் தாம் கோவிந்தசாமி முதலியாருடைய காரியஸ்தர்" என்றார். உடனே முதலிற் சொல்லப்பட்டவர், "நீதானா தர்மலிங்கம் என்னும் மனிதன்? சரிதான். உன் பூர்வோத்திரங்களெல்லாம் எனக்கு நன்றாய்த் தெரியும். ஆகையினால் காரியஸ்தனுடைய ஜம்பத்தை யெல்லாம் காட்டாதே. நான் யார் தெரியுமா? நான்தான் கோவிந்தசாமி முதலியாருடைய மைத்துனன். என் பெயர் மூர்த்திமுதலியார். பெரிய பாங்கிகளில் நாணயத்துக்கும் யோக்கியதைக்கும் பெயர் பெற்றவன். தெரிந்ததா? என் சகோதரியும் அவள் புருஷனும் வரும்வரையில் எனக்கும் என்சிநேகிதருக்கும் பங்களாவில் தகுந்த ஜாகா தயார் செய்துகொடு" என்று அதிகாரத்துடன் கூறினார். தர்மலிங்க முதலியார் என்ன செய்வதென்றறியாமல் திகைத்து, "தங்களைக் குறித்து எஜமானர் ஒன்றும் உத்தரவுசெய்யவில்லையே" என்று பயத்துடன் சொன்னார். "என்னுடைய உத்தரவே போதுமானது. என் சகோதரி வீட்டில் உன்னுடைய உதவி எனக்கு அவசியமில்லை. நானே வேலைக்காரர்களைக்கூப்பிட்டு உத்தரவு செய்கிறேன்," என்று மூர்த்தி முதலியார் கோபத்துடன் கூறினார்.

அச்சமயத்தில் கனகவல்லி தோட்டத்திலிருந்து திரும்பி அவ்விடத்துக்கு வந்து, தர்மலிங்க முதலியாரை நோக்கி, "முதலியாரவாள்! இவர்களெல்லாம் யார்? எங்கே வந்தார்கள்?" என்று அதிகாரத்துடன் கேட்டாள். தர்மலிங்க முதலியார் அவள் வரவைக்கண்டு கவலையொழிந்து, "இதோ நிற்பவர் தாம் எஜமானரின் மைத்துனர் என்று சொல்லுகிறார்" என்று மூர்த்தி முதலியாரைச் சுட்டிக்காட்டினார். உடனே கனகவல்லி முகத்தில் இகழ்ச்சிக்குறிகளுடன், "தாங்கள் மூர்த்திமுதலியாரவளா? தங்களுக்கு இங்கு என்ன வேலை?" என்று அலக்ஷியமாய்க் கேட்டாள். மூர்த்தி முதலியார் சிறிதுகோபத்துடன், "அம்மா! நீங்கள்தாம் கனகவல்லி யம்மாளென்று நினைக்கிறேன். என் சகோதரிவீட்டில் எனக்கு என்ன வேலையென்று கேட்பதற்கு நீங்கள் யார்?" என்று கேட்டார். "இது உங்கள் சகோதரியின் புருஷன் வீடு. இங்கு நீர் வருவது தகுதியன்று. தெரியாத்தனமாய் வந்துவிட்டீர்போலும். சீக்கிரம் போய்விடும்" என்று கனகவல்லி புத்திமதி கூறினாள். மூர்த்தி முதலியார், "அவ்வாறு உத்தரவிடுவதற்கு உங்களுக்கு எவ்வித அதிகாரமுமில்லை. ஆகையினால் இங்குவிட்டுச் செல்வதாக எனக்கு உத்தேசமில்லை" என்றார். "அப்படியா? இதோ உமக்குத் தகுந்த மரியாதை செய்து வெளியே அனுப்பக் கூடியவர் வருகிறார்! சற்றுப் பொறும்!" என்று கூறி கனகவல்லி நகைத்தாள்.

அப்போது நடராஜமுதலியார் வாசற்படியண்டை கூட்டமாய் மனிதர்கள் நிற்பதைக்கண்டு விரைவாய் நடந்துவந்து, குடிகாரனைப்போல் நின்றவனை நோக்கி, "யாரடா அவன்? குடிகாரக் குருசாமி பிள்ளையா! எங்கேயடா வந்தாய்? யாரடா அங்கே? முனிசாமி! துரைக்கண்ணு! முத்து! இந்தக் குடிகாரப்பயலைப் பிடித்து வெளியே தள்ளிக்கொண்டுபோய் போலீஸார் வசம் ஒப்புவித்துவிட்டு வாருங்கள்!" என்று கூவினார். நாலைந்து வேலைக்காரர்கள் உடனே அங்கு ஓடிவந்தார்கள். குடிகாரக் குருசாமிபிள்ளை, "என்னை வேலைக்காரர் பிடித்துப் போலீஸார்வசம் ஒப்புவிப்பதற்கு நான் என்ன செய்தேன்? என்மேல் கை வைத்தால் தெரியும் செய்தி!" என்று வெகு ஜம்பமாய்க் கூறினான். "இதோ உன்மேல் கைகளை வைக்கிறேன். தெரிகிற செய்தி சீக்கிரம் தெரியட்டும்" என்று கூவிக்கொண்டு, நடராஜ முதலியார் கடுங்கோபத்துடன் குருசாமி பிள்ளையின் தோள்களிரண்டையும்பிடித்துத்தூக்கி வீசியெறிந்தார். குருசாமிபிள்ளை அவ்வாசற்படியின் படிக்கட்டைத் தாண்டி பத்தடிக்கப்பால் போய்விழுந்து மல்லார்ந்துகிடந்தான். உடனே வேலைக்காரர்கள் அவனை இழுத்துக்கொண்டு போய்ப் பங்களாவுக்கு வெளியே தள்ளினார்கள்.

பிறகு நடராஜமுதலியார் மூர்த்திமுதலியாரைப்பார்த்து "நீ இங்கேஎன்னடா செய்கிறாய்? போ வெளியே உன் சிநேகிதன் பின்னால்!" என்று அதட்டினார். மூர்த்திமுதலியார், "தம்பி நடராஜா! உன் கைவரிசையை என்னிடத்திற் காட்டாதே! என் சகோதரி வீட்டைவிட்டு என்னைத் துரத்த உன்னால் முடியாது!" என்று எதிர்த்துப்பேசினார். நடராஜ முதலியார், "என்ன சொன்னாய்? உன் தங்கை வீடா இது? அல்ல! இது என் சிநேகிதர் வீடு! இந்த வீட்டுக்கு இப்போது நான்தான் எஜமானன். தெரியுமா?" என்று வெருட்டிச்சொல்லி, அப்போதுதான் அவ்விடத்துக்கு வந்த இரத்தினவேல் முதலியாரை நோக்கி, "முதலியாரவாள்! இவன்தான் நமது சுந்தரவல்லியம்மாளுடன் பிறந்து அந்த அம்மாளை மிகுந்த கஷ்டத்துக்கு உள்ளாக்கிய அயோக்கிய மூர்த்தி முதலியார்! அவனுக்குத் தகுந்த மரியாதை செய்து அனுப்பப்போகிறேன்" என்றார். அதற்கு இரத்தினவேல்முதலியார், "அப்படியா? நீங்கள் ஏன் கஷ்டப்படவேண்டும்? நான் அந்த மரியாதையைச் செய்து அனுப்புகிறேனே!" என்றார். உடனே மூர்த்தி முதலியார், "நீர்தாம் இரத்தினவேல் முதலியாரென்று எண்ணுகிறேன். இந்த வீட்டைத் தன்னுடையதென்று சொல்லிக்கொள்ளுகிறானே நீர் புதிதாகப் பிடித்திருக்கும் சிநேகிதன், அவன் எப்படிப்பட்டவனென்றுதங்களுக்குத்தெரியுமா?" என்று கேட்டார். அதற்குஇரத்தினவேல் முதலியார், "நன்றாய்த்தெரியும். கோவிந்தசாமி முதலியாரைப்பற்றி என் காது கேட்க தூஷிக்காமலிருந்தால் உமக்கு க்ஷேமமுண்டாகும்" என்றுபடபடப்பாய்ச்சொன்னார். அதைக் கவனிக்காமல் மூர்த்திமுதலியார், "கோவிந்தசாமி முதலியாரா? கோவிந்தசாமி முதலியாருக்கும் அவனுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. அவன் சிறைச்சாலைக்கு—" என்று நிந்தை மொழிபேச ஆரம்பித்தவுடன், இரத்தினவேல் முதலியாரால் தூக்கி எறியப்பட்டு கணநேரத்துக்குமுன் தம் சிநேகிதனடைந்த நிலைமையை யடைந்தார். மூர்த்திமுதலியார் கடுங்கோபத்துடன், "இதன் பலனைச் சீக்கிரம் அனுபவிப்பீர்கள்" என்று சொல்லி வெளியேறினார்.

கடைசியில் மார்க்கசகாய முதலியார் ஒருவர்தாம் மிஞ்சி நின்றார். நடராஜமுதலியார் அவரை நோக்கி, "யார் ஐயா நீர்? இங்குவந்த காரணமென்ன?" என்று அதட்டிக் கேட்டார். அதற்கு மார்க்கசகாய முதலியார், மிக்கத் தாழ்மையுடன் "என் பெயர் மார்க்கசகாய முதலியார். இரத்தினவேல் முதலியாருக்குக்கூட என்னை நன்றாய்த் தெரியும். கோவிந்தசாமி முதலியாருக்கும் எனக்குங்கூட சிநேகமுண்டு. தர்மலிங்க முதலியாரைப் பார்த்துப்போக வந்தேன். சமயம் உசிதமாகவில்லை. போய்வருகிறேன்!" என்று சொல்லிக்கொண்டே மெல்ல நழுவி வெளியேபோய் விரைவாய்ச் சென்றார்.

(இக்கதை அடுத்த சஞ்சிகையில் முடிவுபெறும்.)

மலிந்த பண்டம் கடையிலே வரும்.

மலை அத்தனை சுவாமிக்குத் தினை அத்தனை புஷ்பம்.

பார்க்கவன்

அல்லது

பரம ரஹஸ்யம்

(317-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆரும் அத்தியாயம்

கல்பகத்தின் இளகிய நெஞ்சம்

கல்பகம் நினைத்தவண்ணமே நடந்தது. காரணேசரிருந்த அறை, காலியாயிருந்ததைக் கண்டதும், ஜனங்களுக்குண்டான கோபத்திற்கு அளவில்லை. அப்பொழுது அவர்கள் கையில் சிறைக்காவலன் அகப்பட்டிருப்பானே யானல் அவன் விண்ணுலகைக் கண்டிருப்பானென்பதற் கையமில்லை. நல்லகாலம்! (ஏன், கஷ்டகாலமே !) தேவதத்த காரணேசர்கள் இவர்கள் கையில் அகப்பட்டதனல் இவர்களது இரத்த வெறியெல்லாம் ஒருவிதமாய்த் தணிக்கப்பட்டதென்றே சொல்லவேண்டும்.

இவர்கள் ஆரவாரம் சற்று அடங்கினவுடன் கல்பகமும் கிராதனும் தாங்கள் ஒளிந்திருந்த நிலவறையிலிருந்து வெளிவந்தார்கள். சுமார் இரவு பன்னிரண்டு மணி யிருக்கும். சிறைச்சாலையின் கதவை யாரோ தட்டுகிற ஓசை கேட்டது. கிராதன் ஓடிப்போய் கதவைத் திறந்து பார்த்தான். ஒரு புதிய கைதி வந்திருப்பதை அறிந்துகொண்டான். கைதியின் பெயரை அறிந்துகொண்டானே இல்லையோ, "ஸரி, ஸரி, இவனைக் காரணேசர் அறையில்தான் விடவேண்டும்" என்று தனக்குத் தானே முணுமுணுத்துக்கொண்டான். எங்கும் ஒரே நிசப்தமாயிருந்தது. அவ்வப்போது குரைக்கும் நாயின் குரலைத்தவிர வேறு சப்தமே கிடையாது. பார்க்கவன் படிக்கட்டுகளில் ஏறிச் சென்றபோது இருட்டா யிருந்தபோதிலும் படிக்கட்டு ஓரத்தில் நின்றுகொண்டிருந்த ஓர் பெண்ணுருவத்தைக் கண்டான். கல்பகம் கையில் ஒரு லாந்தலை வைத்துக்கொண்டு நின்றிருக்கும்போது அவ்விருட்டில் பார்க்கவனுக்கு ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை. முன்னே கிராதன் வழிகாட்டிச்செல்ல, பார்க்கவன் பின்சென்று காரணேசர் அன்று காலையில் விட்டகன்ற அறையண்டை வந்துசேர்ந்தான். அங்கிருந்த படுக்கையைக் காட்டி படுக்கச்சொல்லிவிட்டு கதவைப் பூட்டிக்கொண்டு கிராதன் தன் இடத்திற்குச் சென்றான். பார்க்கவன் தனக்குத் தூக்கம்வராமையினல் அங்குமிங்கும் அறையிலேயே உலாவிக்கொண்டிருந்தான். விடியற்காலத்தில் சற்று உறங்கச் சென்றான். பொழுதுவிடிந்து விழித்துக்கொண்டவுடன் தனக்கு அருகில் யாராவது மனிதர்கள் நடமாடிக்கொண் டிருக்கிறார்களா என்று பார்க்கக் கருதினவனய் சாளர வாயிலாய் சிறைச்சாலை முற்றத்தில் எட்டிப்பார்த்தான். ஆ ! கொடுமை ! கொடுமை ! ! சற்று தூரத்தில் ஒரு தூக்குமரம்போல் காணப்பட்ட ஒன்றில் ஏதோ கருப்பாய் இரண்டு உருவங்கள் தொங்கிக்கொண்டிருந்தது இவன் கண்களுக்குப் புலப்பட்டது. ஆ ! "இதென்ன நான் காண்பது !" என்று வாய்விட் டலறலானன். அச்சமயத்தில் அப்பக்கம் வந்த கிராதன் "ஏ, திருடர்களுக்கும் ராஜத்துரோகிகளுக்கும் ஏற்படும் தண்டனை இதுதான். நீயும் ஜாக்கிரதையாயிரு!" என்று சொன்னன். பார்க்கவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. திக்பிரமையாய் நின்றுவிட்டான். பிறகு இன்னது நடந்தது என்றுகூட அறிய முடியவில்லை. தனக்குத் தன்னறிவு வந்ததும் தனிமையாக இருந்ததைக் கண்டு துக்கித்தான். தான் எண்ணுத எண்ணங்களெல்லாம் எண்ணி யெண்ணி ஏங்கினதெல்லாம் வீணுய்ப்போயிற்றே என்று கருந்துல்ய மூளைகளைக் கண்டு கண்ணீர்வடித்தான். கடைசியில் அம்மூளைகளை இன்ன செய்வதெனத் தெரியாமல் தன்னறையின் ஒரு மூலையில் இருண்ட பாகத்தில் அதை முன்னமே சுற்றியிருந்த காகிதச் சுருளுடன் வைத்தான்.

அன்றையதினம் மாலையில் மிகவும் களைத்து சிந்தாக்கிராந்தனய்ப் படுத்திருக்கையில், ஏதோ ஓசைகேட்டது. திடீரென்று திரும்பிப் பார்த்தான். கிராதன் கிரமப்படி தனக்கு ஆகாரம் கொண்டுவரும்போது கதவு திறக்கையில் தவறி விழுந்துவிட்டதைக் கண்டான். உடனே எழுந்து வாசற்படியண்டை சென்று விழுந்தவனை எடுக்கப்போனன். கீழேவிருந்த கிராதன் எழுந்திருக்கமுடியாமல் உள்காயம்பட்டு அவஸ்தைப்பட்டபோதிலும் தனக்கு உதவி செய்ய வரும் பார்க்கவனை நோக்கி "எனக்கு ஒன்றுமில்லை ; நீ இங்கு இப்படி ஒரு காலடி எடுத்து வைக்காதே ! பத்திரம் !" என்று அதிகாரத்துடன் கூறினன்.

கூறினபோதிலும் அவனல் எழுந்திருக்கச் சக்தியற்றவனய்ச் சற்றுநேரம் பேச்சுமூச்சற்றுக் கிடந்தான். கதவு திறந்தவண்ணமே கிடந்தது ; பார்க்கவன் அப்பொழுது தப்பித்துக் கொள்வதற்குத்தக்க சமயமாயிருந்தும் அதைக் கருதாமல் கீழே விழுந்தவனுக்கு உதவிபுரிதலிலேயே கண்ணுயிருந்தான்.

கிராதன் கீழேவிழுந்த சப்தத்தையும் அவனது அதிகார வார்த்தைகளையும் கல்பகம் கேட்டு ஓடிவந்தாள். அவள் வரும் சமயத்தில் பார்க்கவன் குனிந்து விழுந்தவனை எடுக்கும் வண்ணமிருந்தான். தூரத்தில் இக்காட்சியைக்கண்ட கல்பகத்திற்கு வேறு எண்ணம் உதித்து அவள் கூக்குரலிட வாய்திறக்க, அதற்குள் தன் தகப்பனருக்கு பார்க்கவன் உதவிபுரிவதைக் கண்டு ஓடோடியும் வந்து "ஸ்வாமி, என்னை மன்னிக்கவேண்டும். முதலில் தங்களைப்பற்றி வித்தியாஸமாய் எண்ணிவிட்டேன். மன்னிக்கவேண்டும்" என்று கெஞ்சினள்.

பார்க்கவன் புன்சிரிப்புடன், "நான் உன்னை மன்னிக்கும்படியாய் நீ என்ன பெரிய குற்றம் செய்துவிட்டாய் ?" என்றான்.

"என்ன வென்றாலும் நிரபராதியாயுள்ள ஒருவர்மீது கெட்ட எண்ணம் கொள்வது குற்றமல்லவா ?" இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் கிராதன் ப்ரக்ஞையடைந்து "ஆமாம்! உனக்குச் சோறு கொண்டு வந்து போட அவஸரமாய் வரவேதான் விழுந்தேன். கேட்பாரையும் காணும் ! நீங்கள் பட்டினியாய்ச் செத்தால் எனக்கு என்ன ?—" என்று கூறி முடிப்பதற்குள், கல்பகம்,

"அப்பா, ஏன் அவர்மீது கோபித்துக்கொள்கிறாய் ? பாபம், அவர் உனக்கு உதவிசெய்யத் தயாராயிருந்தாரே !" என்றாள்.

பார்க்கவன் : "ஆம், தூக்கிக்கொண்டுபோய் உம்வீட்டண்டை கொண்டுபோய்விடட்டுமா ?"

கிராதன்: "எல்லாம் சரிதான். உனக்கு ஏதாவது வைத்தியம் தெரியுமா ?"

பார்க்கவன்.—"ஏதோ என் தகப்பனரிடமிருந்து கொஞ்சம் கற்றுக்கொண் டிருக்கிறேன்."

கிராதன்.—"எனக்குக் காயம், உள்காயம் பட்டிருக்கிறதே. அதை சுவஸ்தப்படுத்த உன்னல் முடியுமா ?"

பார்க்கவன்.—"ஆஹா, முடியும். முதலில் கொஞ்சம் வெந்நீரும், இரண்டு மூங்கிற் பிளாச்சுகளும் கொஞ்சநீளம் துணியும் வேண்டும்" என்றான்.

கல்பகம் தங்கள் இருப்பிடத்திலிருந்து வேண்டியவற்றைக் கொண்டுவந்தாள். பார்க்கவன் வெகு இலகுவாய், காயம்பட்ட இடத்தில் வெந்நீர்விட்டுக் கழுவி, பிறகு பக்குவமாய்க் கட்டினன். மறுபடியும் சற்றுநேரம் கிராதன் மூர்ச்சைபோய்விட்டான்.

கல்பகம் பார்க்கவனருகில் வந்து, "ஸ்வாமி! தாங்கள் செய்த இப்பேருதவிக்கு என்ன பிரதி செய்யப் போகிறேன். தாங்களே இச்சமயத்தை உபயோகித்துக்கொள்ளலாம்" என்றாள்.

பார்க்கவன் திகைப்புற்று "கல்பகம் ! என்ன சொல்லுகிறாய்; ஒன்றும் விளங்கவில்லையே ?" என, கல்பகம், "நீர் குற்றம் உண்மையாகவே செய்திருந்தபோதிலும், நிரபராதியா யிருந்தபோதிலும் நாளையதினம் விசாரணையில் உமக்கு மரணதண்டனை விதிப்பார்களே ! ஒருவரும் உம்மைக் கவனிக்காத இப்பொழுதே வெளியேறி விடுங்கள்" என்றாள்.

பார்க்கவன் சற்றும் கலக்கமுறாமல் அவள் சொன்னதைக் கேட்காதவன்போ லிருந்துவிட்டான்.

கல்பகம் ஆத்திரத்துடன், "நான் சொன்னது புரிந்ததோ, இல்லையோ ?" என்றாள்.

"ஆமாம் ; ஆனல்—"

"ஆனல் என்ன ?"

"நான் போகமாட்டேன் ; உன்னைப் பிடித்துக் கொள்வார்கள் அல்லவா ?"

"பாதகமில்லை ; நீங்கள் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்."

"குழந்தாய், நீ என்ன பேசுகிறாய் ? உன்னைப் போலும் நான் எங்காகிலும் காண்பேன! கிடக்கட்டும் ; நான் இங்கேயேதா னிருக்கிறேன்."

கிராதன் திடீரென்று கண்விழித்து "ஹும்-ம், நீங்கள் என்ன பேசிக்கொண் டிருக்கிறீர்கள் ? கல்பகம் ! கொஞ்சம் கைகொடு பார்ப்போம்" என்று தனக்கு இப்பொழுது எழுந்திருக்கச் சக்தி வந்துவிட்டதால் கல்பகத்தின் உதவியைக்கொண்டு எழுந்திருந்தான்.

கிராதனும் கல்பகமும் பார்க்கவன் அறையிலிருந்து நீங்கினர்கள்.

ஏழாம் அத்தியாயம்

மரண தண்டனை மாறுதல்

மறுநாட் காலையில் சுமார் பத்தரை மணியிருக்கும். பூதனக்ருஹத்திலிருந்து நியாய விசாரணை சபைக்கு பார்க்கவன் கொண்டுபோகப்பட்டான். நியாயாதிபதிகளும் வந்துசேர்ந்தனர். நியாயவாதிகளும் கூடியிருந்தனர். மற்றைய ஊர்ஜனங்களும் பலர் வேடிக்கை பார்க்க வந்திருந்தனர். விசாரணை மாத்திரம் வெகு நேரம்நடக்கவில்லை. பார்க்கவன் வசத்தில் தேச விரோதிகளுடன் சில ராஜத்ரோகிகள் செய்திருந்த கடிதப் போக்குவரவுகளின் அந்தரங்க நிருபங்கள் இருந்தனவென்று தக்க ஆதாரங்களால் ருஜுவாகிவிட்டது.

பார்க்கவனும் ஒன்றையும் ஒளிக்கவில்லை. தன்னுடைய பழக்கவழக்கங்களும் நடத்தைகளும் இன்னின்னவையென்றும் வாழ்நாளை இன்ன விதமாய்க் கழித்துவந்தானென்பதையும், தான் தேச வ்யவஹாரங்களில் தலையிட்டுக்கொள்ளாமல், தன் படிப்பின்மீதும், சித்திரம், சாஸ்திரம் மலர்ச்செடிகள், புஷ்பங்களின்மீதும் தன் முழு ஆர்வத்தைச்செலுத்தி அவைகளை எப்படிப்பாவித்து வந்தான் என்பதையும் காரணேசர் தன்னிடம் அச்சிறு பெட்டியைக் கொடுத்த நாள் முதற்கொண்டு அதைத்தான்தொட்டும் பார்த்ததில்லையென்றும் விவரமாய் எடுத்துரைத்தான்.

நியாயாதிபதிகள் எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் கேட்டு என்ன தீர்ப்புச் சொல்வதென்று ஆலோசனை செய்யலானார்கள். கடைசியில், புஷ்பமும் புஷ்பச்செடிகளும் வைத்துப் பரிபாலிப்பதை மேல் வியாஜமாகக்கொண்டு தேசத்திற்கு விரோதமாக எதிரிகளுடன் தேவதத்த காரணேசர்கள்செய்த சதியாலோசனையில் கலந்திருப்பதால் பார்க்கவனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டிருக்கிறதென்ற தீர்மானம் பிறந்தது. "மேற்கூறப்பட்டுள்ள பார்க்கவன் பூதனக்ருஹத்திலிருந்து அந்தப் பெருமுற்றத்துள்ள கொலைக்களத்திற்குக் கொண்டுபோகப்பட்டு, இன்றையதினம் நடுப்பகலில் அங்கே கொலையாளியால் அவன் தலை தரிக்கப்படவேண்டும்" என்று ஸ்பஷ்டமாய் கடைசி வாக்கியத்தில் குறிப்பிட்டிருந்தது.

இதைக் கேட்ட யாருக்குத்தான் மனமுருகாது? பார்க்கவன் சற்றாவது பயந்தானா? விசனப்பட்டானா? இல்லவேயில்லை. மிகவும் ஆச்சரியமடைந்தவனாய் நின்றான். நியாயாதிபதிகளில் ஒருவர் எழுந்துநின்று "பார்க்கவ! ஏதாவது நீ கூறவேண்டுமாயின், இங்கேயே கூறவேண்டும்" என்றார்.

"ஓ, நான் கூறவேண்டியது ஒன்றுமில்லை. நான் இறப்பதற்கு விசனப்படவில்லையாயினும், இந்தக் காரணத்தை முன்னிட்டு எனக்கு மரணம் நேருமென்று நினைக்கவில்லை" என்றான் பார்க்கவன்.

இப்படிச் சொல்லி முடிக்கையில் தனக்குப் பின்னால் யாரோ தேம்புகிற சப்தம் பார்க்கவனுக்குக் கேட்டது. பார்க்கவன் யாராயிருக்கலாமென்று திரும்பிப் பார்க்கவும், கல்பகம் கதவினோரத்தில் கதவின்மீது முகத்தைச் சாய்த்த வண்ணம் நின்றிருப்பதைக் கண்டான். இவைகளைக் கண்ட காவலாளி சற்று தூரம் போய் வாயிற்படியருகில் ஒதுங்கி நின்றான். கல்பகம் உடல் நடுநடுங்க, தேம்பிக்கொண்டே பார்க்கவனருகில் சென்று மண்டி போட்டு அவன் கையைப்பிடித்து நிமிர்ந்து, "ஸ்வாமி ஸ்வாமி—" என்று வாய்குழறி பேசமாட்டாமல் பேசவாரம்பித்தாள்.

பார்க்கவனுக்கு இதைக் காணச் சகிக்காமல் "குழந்தாய், என்ன ஸமாசாரம்? ஏன் அழுகிறாய்?" என்று கண்ணீர்ததும்பக் கேட்டான்.

கல்பகம் கண்ணீருதிர்த்துக்கொண்டே தலைகுனிந்த வண்ணம், "நான் கேட்பதை மறுக்காமலிருக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றாள்.

"குழந்தாய்! அழாதேயம்மா! அவரவர் விதிப்படியாகின்றது; நாம் யாது செய்யலாம். இனி என்ன செய்யவேண்டியது, சொல், பார்ப்போம்" என்றான் பார்க்கவன்.

"எங்களண்ணாவை மன்னித்துக் காக்கவேண்டும்."

"என்ன, உங்கள் அண்ணாவுக்கு!"

"ஒன்றுமில்லை; அவர் உம்மைக் கொடூரமாக நடத்தினாரல்லவா? அது அவர் ஸ்வபாவம்; எல்லோரிடத்திலும் அப்படியிருக்கிறார்."

"பேதாய், அதைப்பற்றி என்ன! நான் நேற்றே அதைப்பற்றிச் சொன்னேனே; நான் என்ன மன்னிக்க இருக்கிறது. பகவானே மன்னித்துவிட்டாரல்லவா? பாபம்! அவருக்குக் காயம்பட்டதே! வேண்டுமானால், நானும் உனக்காக மன்னித்துவிட்டேன் என்று சொல்லுகிறேன்."

கல்பகம் நன்றியறிதலுடன் பார்க்கவனை நமஸ்கரித்து "ஸ்வாமி, நான் செய்யக்கூடிய வேலை ஏதாவதிருந்தால் செய்யக் காத்திருக்கிறேன்" என்றாள்.

"கல்பகம், நீ எனக்குப் புதியவள் அல்ல. நான் உன்னைக் கண்டு அதிக நாள் ஆகவில்லை. ஆனபோதிலும் உன்னுடன் கொஞ்சம் பழகியதே உன் அருமையான குணங்களைக்கண்டு பாராட்டப் போதுமானது" என்று சொல்லி, தன் மார்பில் காகிதச்சுருளில் வைத்திருந்த (இனி மேலும் தேடி சோதனை செய்யார்களாகையால்) மூன்று கருந்துல்ய மூளைகளை எடுத்து பின் வருமாறு கூறலானான்:—

"குழந்தாய்கல்பகம்! எனக்குப் புஷ்பங்களின் மீது பரமப் பிரியம். புஷ்பங்களையும் புஷ்பச் செடிகளையுமே அத்யந்த ஆர்வத்துடன் நான் பார்த்து பரமானந்த மடைந்துவந்தேன். ஆம், எனக்கு வேறொன்றின்மீதும் அவ்வளவு பிரியமே யிராமல் இருந்தது. கருந்துல்யமலரை உற்பத்திசெய்யும் விதத்தை நான் கண்டுபிடித்திருக்கிறேன். ஹரிள நகரத்து புஷ்பச் சங்கத்தார் கருந்துல்யத்தை மெய்ப்பிக்கிறவர்களுக்கு லக்ஷம் பொன் ஸன்மானம் செய்வதாக விளம்பரப்படுத்தியிருக்கிறார்கள் என்பது உனக்குத் தெரிந்திருக்கலாம். இதோ இந்தக் காகிதச் சுருளில்தான் அத்தொகை இருக்கிறது; இதில் உள்ள மூன்று முளைகளையும் நட்டு வளர்த்துவந்தால் அடுத்த வருஷம் இந்நாள் கருந்துல்யமலர் உண்டாகும். இவைகளை எடுத்துக்கொள். கல்பகம்! இவைகளை உனக்கு வெகுமதியாகக் கொடுத்துவிடுகிறேன். நீ கருந்துல்யமலரை உற்பத்திசெய்து ஹரிள நகரச்சங்கத்தாரது பரிசைப்பெற்று நல்லகுணவானான புருஷனை மணந்து தீர்க்கசுமங்கலியாய் வாழ்ந்துவரக்கடவாய்!" என ஆசீர்வதித்தான்.

கல்பகத்திற்குத் துக்கம் பன்மடங்கு அதிகரித்தது. பதில் சொல்ல நாவெழவில்லை. பார்க்கவன் அவள் கைகளைப்பற்றி, "குழந்தாய்! அழாதே; அதை எப்படி வளர்த்து வருவது என்று சொல்கிறேன், கேள். தார்த்தாரக நகரம் சென்று என் தோட்டக்காரனைக் கேட்டு ஏழாமிலக்கமுள்ள தொட்டியிலிருந்து மண் வாங்கிவந்து நடவேண்டும். அவ்வளவுதான். அது புஷ்பிக்கும் சமயத்தில் ஹரிள நகர புஷ்பச் சபையின் அக்ராஸனாதிபதிக்கு அறிவித்தால் அவர் சங்க அங்கத்தினருக்குத் தெரியப்படுத்தி எல்லாருக்குமுன்னும் அதைக் காட்டி உனக்குப் பரிசளிப்பார்" என்றான்.

கல்பகம் தேம்பிப் பெருமூச்செறிந்தாள். பார்க்கவனுக்குக் கண்களில் நீர் ததும்பியது. கண்ணைத் துடைத்துக்கொண்டே "குழந்தாய்! ஆனாலொன்று; இந்தக் கருந்துல்யத்திற்கு கல்பக—பார்க்கவம் என்னும் பெயரைவைத்து என்னை மறக்காமலிருப்பாய். உனக்குப் படிக்கத் தெரியாதல்லவா? கிடக்கட்டும்; சிறு துண்டுக் காகிதமும் பென்சலும் கொண்டுவா. எழுதித் தருகிறேன்" என்றான். கல்பகம் இன்னும் தேம்பி அழுதுகொண்டே ஒரு சிறு புத்தகத்தைக் கொண்டுவந்து கொடுத்தாள். அதில் காரணேசன் என்னும் பெயர் அட்டையின்மீது எழுதியிருந்தது.

பார்க்கவன்: "என்ன இது!" எனவும், கல்பகம் "காரணேசர் போவதற்கு முந்தி அவரிடமிருந்து ஞாபகார்த்தமாக இதைப் பெற்றுக்கொண்டேன்" என்றாள்.

பார்க்கவன் அந்த கீதைப்புத்தகத்தைவாங்கி கடைசித் தாளில் (முதல்தாள் முன்னமேயே கிழிக்கப்பட்டது என்று ஞாபகமிருக்கலாம்) தெளிவாய்ப் பின்வருமாறு எழுதலானான்:—

"நாளது......ஹூ......மீ...உ இன்றைய தினம்......கிழமை நான் நிரபராதியாயிருந்தபோதிலும், கொலைக்களத்தில் மரணதண்டனையடையவேண்டியிருக்கிற இத்தருணத்தில், எனக்குத் தற்காலம் உலகிலுள்ள சொத்துக்களையெல்லாம்......அதாவது...நான் கருந்துல்யம் உண்டாகும் என்று உண்மையாய் நம்பி அதற்காக ஹரிளநகரச் சங்கத்தாரது பரிசை எதிர்பார்த்திருந்ததற்குக் காரணமாயுள்ள இந்த மூன்று முளைகளையும் கிராதனது புத்திரி கல்பகத்திற்குக் கொடுத்துவிடுகிறேன். என்னுடைய ஒரே வார்ஸுதாரியான மேல்படி கல்பகத்திற்கு, அவள் ஒரு குணவானை மணஞ்செய்துகொள்ளும் பக்ஷத்திலும், மேல்படி கருந்துல்யத்திற்கு கல்பகபார்க்கவம் என்னும் பெயரிட்டு விருத்திசெய்யும் பக்ஷத்திலும் அதற்காக அளிக்கப்படும் பரிசை அவளுக்கே கொடுத்துவிடும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஸர்வேஜனா: ஸுகினோ பவந்து. இப்படிக்கு,

பார்க்கவன்."

எழுதி முடிந்ததும் கல்பகத்தினிடம் கொடுத்து 'எதோ படி பார்க்கலாம்' என்றான் பார்க்கவன்.

"ஹா—கஷ்டம்! எனக்குத் தெரியாதே" என்றாள் கல்பகம்.

பிறகு பார்க்கவன் எழுதியிருப்பதைப் படித்துக் காட்டினான்.

யாரோ வருவதாகச் சந்தடி கேட்டது. காலடிச் சப்தத்தைக் கேட்டவுடன் மறுபடியும் ஓவென்றலறியழுது "அதோ உங்களைக்கொண்டு போக வந்துவிட்டார்களே!" என்றாள்.

காவலாளிகள் வந்து பார்க்கவனை அழைத்துக்கொண்டு சென்றார்கள். அவன் கல்பகத்தைத் திரும்பித் திரும்பிப் பார்த்த வண்ணம் சென்றான். அவள் மாத்திரம் கீழே உட்கார்ந்து இருகைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு அழுதவண்ணமாய் இருந்தாள். பார்க்கவன் கொடுத்த முளைகள் அடங்கிய காகிதச்சுருளை தன் மடியில் வைத்துக் கொண்டிருந்தாள். பார்க்கவன் நடந்து, கொலைக்கள மேடைக்குச் சென்றபொழுது அங்கு இதற்குமுன் குலைத்துக் கொண்டிருந்த நாயும் இப்பொழுது குரைக்காமல் இருந்தது. அதுவும், யாதொரு பகுத்தறிவுமில்லை யென்று மனிதரால் கருதப்படுகிற நாயும், பார்க்கவன்மீது இரக்கங் கொண்டு கண்ணீர் விடுவதுபோல் இருந்தது!

வேளையும் கிட்டியது. மேடையின்மீது ஏறிக் கண்ணைமூடி பகவானைத்தியானம்செய்து கொண்டு நிற்கின்றான். தன் கழுத்தருகில் மூன்று முறை கத்தி ஓங்கிவந்ததைத் தன்மீது வீசிய காற்றினா லுணர்ந்தான்; சற்றேனுமவன் அசையவாவது கண்ணைத்திறக்கவாவது இல்லை. உதடுகளில் தேவதைகளின் மனத்தையும் கவரத்தக்க புன்னகை தவழ்ந்து கொண்டிருக்கிறது. திடீரென்று கொலையாளியின் வாள் கீழேவிழுந்ததும், தன் பக்கத்தில் நகராதிபர் நின்று ஏதோ தாக்கீதுச் சுருளை எடுத்து வாசிக்கப் போவதும், வாள் கீழவீழ்ந்த சப்தத்தால் கண்விழித்துப் பார்க்கும்போது பார்க்கவனுக்குத் தெரியவந்தது. இதுவரையில் அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்த ஜனங்களின் ஆரவாரமும் ஓய்ந்துவிட்டது. எல்லோரும் ஒருவித ஆச்சரியமடைந்தவர்களாய் பார்க்கவனையும் நகராதிபரையும் உற்று நோக்கினார்கள்.

அவர் படித்த தாக்கீது புதிய அரசரிடமிருந்து அனுப்பப்பட்ட விளம்பரம்.—"குற்றவாளியின் நற்குணத்தையும் அவன் ராஜாங்க விஷயமாய் அதிகம் தலையிட்டுக் கொள்ளாமலிருந்த சங்கதிகளையும் தீர ஆலோசித்து, பார்க்கவனை மரண தண்டனைக் குள்ளாக்கினால் காலக்கிரமத்தில் எல்லா ஜனங்களுமே திகிலடைந்து அரசனுக்கு விரோதமாய் அதிகமாகத் தீங்கிழைப்பார்கள் என்றும் கருதி, பார்க்கவனை மரணதண்டனையினின்றும் விடுவித்தார். ஆனால் பார்க்கவன் ஆயுட்கால முழுமையும் தார்த்தூரக நகரிலிருந்து சற்றுத் தூரமுள்ள லாவண்யபுரிக் கோட்டையில் காலங்கழிக்க வேண்டும்" என்று அந்தத் தாக்கீதில் கண்டிருந்தது.

முதலில் சிறிது ஆனந்தமடைந்தானெனினும் பிறகு மனவருத்தமடையலானான். இன்னும் சற்று யோசனை செய்தானவுடன் "பாதகமில்லை, காரியம் கைகூடும்; ஆயுள் உள்ளளவு சிறைவாஸமாயினும், கருந்துல்யமும் கல்பகமும் நன்றாயிருக்கிற வரையில் விசாரம் என்னத்திற்கு?' என்று தனக்குள் தானே சொல்லிக்கொண்டான்.

பார்க்கவன் கொலைக்களத்தில் இறக்கப்போகும் காட்சியைப் பார்க்கவந்தவர்கள் இரத்த வெறிகொண்ட அந்நகரத்தார் அநேகம் பேர்கள் வெளியில் கூடியிருந்தனர். இக்கூட்டத்தில் சாதாரண உடைதரித்து அங்கு நடப்பவைகளை வெகு கூர்மையாகக் கவனித்துவந்த ஒருவனைக் காணலாம். ஜனங்கள் எல்லோருமே அரசனது தாக்கீது விஷயத்தைக்கேட்டு ஆச்சரியப்பட்டார்களே யெனினும் இம்மனிதனைப் பற்றி நாம் ஒன்றும் நிச்சயமாய்ச் சொல்லமுடியாது. பார்க்கவனுக்கு மரண தண்டனை நீக்கப்பட்டது என்பதைக் கேட்டவுடன் இவன் முகத்தில் ஆச்சரியம், வருத்தம், பொறாமை, கோபம் முதலிய பலவிஷயங்களைக் குறிக்கும் குறிகள் தெளிவாய்க் காணப்பட்டன. மெதுவாகக் கூட்டத்தைத் தன்னாலானவரையில் விலக்கிக்கொண்டு காவலாளர்களுக்கு அடுத்தாற்போல் எல்லோருக்கும் முன்வரிசையில் நின்றுகொண்டிருந்தான். எப்படியாவது கருந்துல்யமலர்ச் செடியின் மூன்று முளைகளையும் கைப்பற்றிக் கொள்ளவேண்டும் என்று அவன் ஸகேதபுரிக்கே புறப்பட்டு வந்திருந்தான்.

மலைமுழுங்கிச் சுண்டெலி பெற்றதுபோல.

இவ்விஷயத்தில் தனக்கு உதவிசெய்யவேண்டுமென்று கிராதனிடம் கெஞ்சிக்கேட்டான். அவன் குணந்தான் நமக்குத் தெரியுமே! அவனைக் கிட்டேகூட அணுகவொட்டாமல் துரத்தி தன் நாயையும் அவன்மேல்ஏவிவிட்டான். சிறைக்காவலனிடம் தன் காரியம் சித்திக்காது போகவே ஒன்றுமறியாக் குழந்தையாகிய கல்பகத்தினிடம் வந்து, அவளுக்கு விலையுயர்ந்த நகைகள் வாங்கித்தருவதாக நயமாகச் சொல்லி அவள் மூலமாக முளைகளைக் கவர முயன்றான். கல்பகம் வயதில் சிறியவளாயிருப்பினும், அறிவிலும் உதாரகுணத்திலும் எவருக்கும் மேலாய் சிறந்தே நின்றாள். தன்னை ஏமாற்ற வந்த மாயப்பிசாசை ஓட்டி, பார்க்கவன் மரண தண்டனையடைந்தபின் அவன் சொத்துக்கள் கொலையாளியை அடையுமாதலின் அவனைக் கேட்கும்படி கொலையாளியினிடம் அனுப்பிவிட்டாள். அவள் சொன்னவண்ணம் பயங்கரனும் கொலையாளியினிடம் சென்று தான் பார்க்கவனாகிய குற்றவாளியின் பரம ஸ்நேகிதனென்றும் அவன் ஞாபகார்த்தமாய் அவனது ஆடைகளை வைத்திருக்கத் தான் விரும்பியதாகவும் அவைகளைக் கொடுத்தானாயின் ஆயிரம் பொன் தருவதாகவும் கூறினான். கொலையாளியும் அதற்கு உடன்பட்டான். ஆனால் முன்னதாகவே அத்தொகை கொடுத்துவிட வேண்டுமென்று கண்டிப்பாய்க் கேட்டான். பயங்கரனும் அதற்கு இசைந்தான். பணத்தைச் செலுத்திவிட்டு மனக்கோட்டை கட்டின வண்ணம் எப்பொழுது பார்க்கவன் மரணதண்டனை அடையப் போகிறான் என்று எதிர்பார்த்திருந்தான்.

இப்படிப்பட்டவனுக்கு மனம் எவ்வண்ணம் இருந்திருக்கவேண்டுமென்று நாமே ஊஹித்துக்கொள்ளலாம். எங்கேயாவது யாருக்காவது கருந்துல்ய முளைகள் கிடைத்துவிடுகின்றனவோ என்றும் (கல்பகத்தினிடம் அவைகளைப் பார்க்கவன் கொடுத்தபோது ஒருவரும் கவனிக்கவில்லை என்று நாம் சொல்வது அனாவசியம்). பார்க்கவன் முளைகளை வைத்திருக்கிறானோ என்றும், அவைகள் நசுங்கிப் போகாமலிருக்க வேண்டுமே என்றும் இத்தகைய கவலைகள் அவனுக் கேற்பட்டன. பார்க்கவனை விட்டு அவன் கண்கள் அகலவேயில்லை. ஆகவே அவன் மிக்க ஆவலுடன் ஆத்திரப்பட்டுக் கொண்டிருந்தான். இப்படியிருக்கையில்தான் நகராதிபர் அரசன் தாக்கீதுடன் தோன்றி, பார்க்கவன் மரணதண்டனையினின்று நீங்கி ஆயுள்பரியந்தம் சிறையிலிருக்க வேண்டும் என்று வெளியிட்டது. இதைக்கேட்டதுந்தான் பயங்கரனுக்கு அடங்காக்கோபம் பொங்கிவிட்டது. ஹா என்றுகூக்குரலிட்டதைப் பார்த்தால் பார்க்கவன்மேல் பாய்ந்து அவனைச் சின்னாபின்னப்படுத்தியு மிருப்பான்போலிருந்தது. ஆனாலும் அதிகமாய் ஒருவரும் கவனிக்கவில்லை.

ஆகா! என்ன விந்தை! பார்க்கவனும் உயிருடனிருக்க வேண்டியதாய் விட்டது! லாவண்ய புரிக்கல்லவோ போகின்றான். கருந்துல்யமுளைகளைத் தன்னுடன் கொண்டுபோவானல்லவா? ஒருவேளை அவனுக்குத் தோட்டமும் கிடைத்து கருந்துல்யம் வளர்ந்து புஷ்பித்தாலும் புஷ்பிக்கலாம்.

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S AND LADIES' PAGES

(328-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்விதம் நம் சக்திதேவன் தன் உண்மையான விருத்தாந்தங்களை அவளிடமிருந்து கேட்டு ஆச்சரியங்கொண்டு, அவளுடனேயே புறப்பட்டு வானமார்க்கமாய்க் கனகபுரிபோய்ச் சேர்ந்தான். அங்கு சேர்ந்ததும் முன் மூன்று அறைகளில் எந்த மூன்று சவங்களைக் கண்டானோ அவர்கள் மூவரும் இவனுக்கெதிரில் நின்று இப்பொழுது நமஸ்கரித்தார்கள். இவர்கள் யார் என்பதை நாம் சொல்லாமலே நமது நேயர்கள் அறிந்துகொண்டிருப்பார்கள். பிறகு இம்மூவருக்கும் மூத்தவளான சந்திரப்பிரபையையும் பார்த்தான்.

அவளும் இவனை வெகுகாலங் கழித்துப் பார்த்ததால் மிகுந்த ஆவலுடன் எதிர்கொண்டழைத்தாள். உடனே வேலைக்காரிகள் ஓடி வந்து உபசாரஞ் செய்தனர். அவைகளைப் பெற்று சந்திரப்பிரபையின் வீட்டிற்குள் நுழைந்ததும் சந்திரப்பிரபை இவனைப்பார்த்து

மலையே மண்ணாங்கட்டி ஆகிறபோது, மண்ணாங்கட்டி எப்படியாகும்?

"ஸ்வாமீ! வர்த்தமானபுரத்தில் கனகரேகையென்னும் ராஜகுமாரி தங்களால் பார்க்கப்பட்டாளே; அவள்தான் இவள்; எனக்கடுத்த தங்கை. சந்திரரேகையென்பது இவள் பெயர். உன்னதஸ்தலத்தில் தங்களால் முதல் முதல் விவாகம் செய்துகொள்ளப்பட்ட பிந்துமதியென்பவளிவள் இரண்டாவது தங்கை இவள் பெயர் சசிரேகை. பிறகு ஓர் அசுரனால்கொண்டு வரப்பட்டு அவ்வசுரனை மாய்த்து தங்களால் பாணிக் கிரஹணம் செய்துகொள்ளப்பட்ட பிந்துரேகை யென்பவள்தான் இவள் மூன்றாவது தங்கை.

சசிப்பிரபை யென்பவள் "வாருங்கள் நாமெல்லோரும் என் பிதாவிடம் போகலாம். அவர் எங்கள் நால்வரையும் தங்களுக்கு விவாகம் செய்துகொடுப்பார்" என்று சொல்லி சக்திதேவனை யழைத்துக்கொண்டு தங்கள் பிதா தவஞ் செய்துகொண்டிருக்கும் வனஞ் சேர்ந்து பிதாவைக் கண்டு வணங்கி நின்றார்கள். அவரும் இவர்களைப் பார்த்து ஆசிகூற, பிறகு இக்கன்னிகைகள் தங்கள் விருத்தாந்தங்களையும் தங்களோடு வந்திருக்கும் புருஷனுடைய வரலாற்றையும் தெளிவுறச் சொன்னார்கள்.

உடனே அவர் மனமகிழ்ந்து இந் நான்கு கன்னிகைகளையும் நம் சக்திதேவன் என்கிற பிராமண குமாரனாயிருந்த வித்தியாதர குமாரனுக்கு பாணிக்கிரஹணம் செய்துகொடுத்து தன் வித்தியாதர ராஜ்யத்தையும் இவருக்குக் கொடுத்தார். இவரும் அக்கன்னிகைகளையும் வித்தியாதர ராஜ்யத்தையும் பெற்று அவர்களுடன் கூடி வித்தியாதர சக்கிரவர்த்தியாய் வெகுகாலம் சுகமாய் வாழ்ந்துகொண்டிருந்தார். சுபம்.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

சொக்காய்ப்பைத் திருட்டு எச்சரிக்கை:— சொக்காயை யணிந்துள்ளவர் அறியாதபடி மிகுந்த திறத்துடன் சொக்காய்ப் பையிலுள்ளவைகளைத் திருடிக்கொண்டுபோகும் சாமர்த்தியசாலிகளைக் கையுங் களவுமாகப் பிடிக்க ஒருவர் நூதனமாக மின்சார எச்சரிக்கையொன்று செய்திருக்கிறார். சொக்காயின் உட்புறத் துணிக்கும் வெளிப்புறத் துணிக்குமிடையே சிறு மின்சார உற்பத்தி இயந்திரம் ஒன்று, சொக்காய் அணிபவருக்கு அசௌகரியம் சிறிதும் இல்லாதபடி வைக்கப்பட்டிருக்கிறது. அவ்வியந்திரத்திலிருந்து மிகவும் மெல்லிய கம்பிகள் சொக்காய் நிஜார்களிலுள்ள எல்லாப் பைகளுக்கும் துணிகளினூடே செல்கின்றன. அங்கிருந்து எல்லாக் கம்பிகளும் கிளம்பி கழுத்துப்புறத்திலுள்ள சொக்காய் மடிப்பின் முன்புறத்துப் பொத்தான் பொத்தலில் அணியப்படும் உலோகத்தினாற் செய்யப்பட்ட ரோஜா மலரில் வந்து கூடுகின்றன. அந்த ரோஜா மலரில் வர்ணங்கொடுத்த மின்சார விளக்குகள் நான்கு அமைக்கப்பட்டிருக்கின்றன. சொக்காயை அணிந்துள்ளவர் தவிர, வேறு யார் அச்சொக்காய் நிஜார்களின் பைகளில் கையை நுழைத்தாலும், அந்த ரோஜா மலரிலுள்ள நான்கு விளக்குகளும் ஒளிவீசி, பைகளிலுள்ள சாமான்கள் திருடப்படுகின்றனவென்று எச்சரிக்கை செய்யும்.

* * *

தேசபாஷைகளுக்கு ஆதரவு.—வங்காள மாகாணத்தில், மத்திய வகுப்புப் பள்ளிக்கூடங்களின் பயிற்சி முறைகள் மாற்றப்படுமெனத் தெரிகிறது. தேசபாஷையே முதற் பாடமாகவும், ஆங்கில மொழி இரண்டாம் பாடமாகவும் கொள்ளப்படும்; இங்கிலீஷைத் தவிர மற்றப் பாடங்கள் தேசபாஷையிலேயே கற்றுக்கொடுக்கப்படும்; விவசாயம், தோட்டவேலைகள், நூல் நூற்றல், நெசவுத் தொழில் முதலியன கற்றுக்கொடுக்கப்படும். இம்மாறுதல்கள் ஏழை இந்தியர்களை உயிர்ப்பித்து உய்விக்குமென்பதற்கையமில்லை.

* * *

ஒரு குருவின் முத்தம்.—லண்டன் சர்வ கலாசாலை ஆசிரியர் ஒருவர், ஒரு பெண்மாணாக்கரைத் தூர்த்த வெறிகொண்டு, அப்பெண்ணின் விருப்பத்துக்கு மாறுபட்டு முத்தமிட்டாராம். அவ்வாசிரியர் சர்வ கலாசாலையினின்றும் விலக்கப்பட்டாராம். அது காரணமாக அவர் தொடுத்த வழக்கும் தள்ளப்பட்டதாம்.

மலையில் விளைந்தாலும் உரலில் மசியவேண்டும்.

["விவேக போதினி" அநுபந்தம்.

கூனூர் காப்பாடி வைத்தியசாலை

Supplement to the "Viveka Bodhini."]

விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XIV} துந்துபிஸூ சித்திரைமீ :: 1922-ம்ஸூ மேமீ { பகுதி 11

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

ஏது புத்திஐ யாஎ னக்கினி
யாரை நத்திடு வேன வத்தினி
லேயி றத்தல்கொ லோஎ னக்குநீ தந்தைதாயென்

றேயி ருக்கவு நாலு மிப்படி
யேத வித்திட வோஜ கத்தவ
ரேச லிற்பட வோந கைத்தவர் கண்கள்காணப்

பாதம் வைத்திடை யாத ரித்தெனை
தாளில் வைக்கநி யேம றுத்திடில்
பார்ந கைக்குமை யாதகப்பன்முன் மைந்தனோடு

பால்மொ ழிக்குர லோல மிட்டிடில்
யாரெ டுப்பதெ னவெ றுத்தழ
பார்வி டுப்பர்க ளோவெ னக்கிது சிந்தியாதோ ?

ஓத முற்றெழு பால்கொ திப்பது
போல எட்டிகை நீச முட்டரை
யோட வெட்டிய பானு சத்திகை யெங்கள்கோவே!

ஓத மொய்ச்சடை யாட வுற்றமர்
மான்ம ழுக்கர மாட பொற்கழ
லோசை பெற்றிட வேந டித்தவர் தந்தவாழ்வே !

மாதி னைப்புன மீதி ருக்குமை
வாள்வி ழிக்குற மாதி னைத்திரு
மார்ப ணைத்தம யூர அற்புத கந்தவேளே !

மாரன் வெற்றிகொள் பூமு டிக்குழ
லார்வி யப்புற நீடு மெய்த்தவர்
வாழ்தி ருத்தணி மாம லைப்பதி தம்பிரானே !

ஸப்த சமுத்திரங்களும் பொங்கி யாரவாரித்தாற் போன்ற பேரொலியுடன் அறிவில்லா நீசர்களாகிய அசுரசேனைகளை எட்டுத் திக்குகளிலும் பயந்தோடும்படி வெட்டியழித்த கோடிய சூரியப் பிரகாசமுள்ள ஞானசக்தியாம் வேலாயுதத்தைக் கையில் தாங்கும் எமதிறைவனே ! கங்காநதியைத் தனக்குள்ளே அடக்இக் கொண்டுள்ள சடாமுடி யாடவும், மானும் மழுவும் வந்து பொருந்தியுள்ள திருக்கரங்கள் ஆடவும், இரு பாத மலர்களிலும் அணிந்துள்ள பொன்னாலாகிய வீரக்கழல்கள் சப்திக்கவும் கனகசபையில் நடித்தருளிய சிவபெருமான் நாங்கள் ஞானோபதேசம்பெற்றுத் துயர்நீங்கி வாழ்வுறுமாறு தந்தருளிய புதல்வனே ! சிறந்த தினைப்புனத்தில் குருவியோட்டிக் காத்து வந்தவளும் மைதீட்டப்பெற்று ஒளிவீசும் கண்களையுடைய குறவர் மகளுமான வள்ளிநாயகியை நினது வலிபொருந்திய மார்புட னணைத்துத் தழுவியவனே ! மயில்வாகனத்தின்மீ தேறி அற்புத சேவை தரும் நாயகனே ! கந்தனே ! மன்மதன் தலைவணங்கும் சிறந்த அழகு வாய்ந்தவனே ! மன்மதனால் வெல்லப்பட்டுக் காமத்தில் மூழ்கியுள்ள பூச்சூட்டிய கூந்தலையுடைய மகளிர் கண்டு எதிர்க்கவொணாத வல்லமையுள்ள மன்மதனை இவர்கள் எங்ஙனம் வென்றாரென்று அதிசயிக்கும்படி வெகுகாலமாக மெய்த்தவம்புரிந்துவரும் பெரியோர்கள் தமதுறைவிடமாகக் கொண்ட மாட்சிமை பொருந்திய திருத்தணிகை மலையில் எழுந்தருளியிருக்கும் தலைவனே ! மாயையின் கையிலகப்பட்டுக் கலங்கும் அடியேனுக்கு மெய்ந்நெறி யீதென்றுணரப் புத்தியேது ? இதுகாறும் உன் பாதமலர்களையே அண்டியிருந்த அடியேன் இனிமேல் யாரை அண்டிப்பிழைப்பேன் ? உன்னருளைப்பெற்று நன்னெறிப்படாமல் இந்த ஜன்மத்தைப் பாழாக்கிக் கொண்டு இறப்பது தகுதியோ ? எல்லாம் வல்ல இறைவனாகிய நீ, எனக்குத் தந்தையுந் தாயுமாயிருக்கையில் நான் இவ்வாறு துயர்க்கடலில் அழுந்தித் தவித்தல் முறையோ ? உலகத்திலுள்ளார் 'இவன் முருகக்கடவுளை நம்பினால் முத்தியடையலாமென்று பிதற்றிக்கொண்டிருந்தான். இவன் இங்ஙனம் துன்பத்திலுழலுவதே அம்மொழி பொய்யென்பதை நிரூபிக்கிறது. இவன் பித்தன் ! பொய்யன் !' என்று என்னை ஏசும்படி விட்டுவிடுதல் உனக்குப் பழியன்றோ ? என்னைப் பித்தனென்று இகழ்ந்து நகைத்தவர்கள் கண்கள்காண என் சிரமீது உன் பாதமலர்களைச் சூட்டி என்னை யாட்கொண்டு இம்மையில் என்னை யாதரித்து மறுமையில் என்னை உனது பாதாரவிந்தங்-

(இதன் தொடர்ச்சி 382-ம் பக்கம் பார்க்க.)

விவேக போதினி

தொ. 14] துந்துபி௵ :: சித்திரை௴ [ப. 11

கந்த புராணம்
SKANDA PURANAM

நறுமணங் கமழும் துளசிமாலையை யணிந்த திருமால் ஏனைய தேவர்களுடனும் முனிவர்களுடனும் சூரபதுமனுக் கெதிரில் சென்று ஆசிகூறித் துதித்து நின்றபோது, அவன் திருமாலை நோக்கி, "முக்கண்ணைதையின் பழைய வடிவத்தையுடையவர் எண்ணிறந்தவர் தேவர்களின் கூட்டத்தில் காணப்படுகிறார்களே, அவர்கள் யார்?" என்று கேட்டான். அப்போது திருமால், "முன்னொரு கற்பத்தில் பிரமதேவர் மூன்று உலகங்களையும் அவ்வுலங்களிலுள்ள ஜீவராசிகளையும் சிருஷ்டித்து அகங்காரங்கொண்டு தாமே பரம்பொருளெனக் கருதி பரமசிவனை மறந்தார். ஆகையினால் அவர் படைத்த உயிர்கள் அவர் படைத்தவளவேயன்றி விருத்தியடையாம லிருந்தன. அதுகண்டு பிரமதேவர் வருந்தி ஆலோசனைசெய்து, தம்மைப் படைத்தருளிய பஞ்சகிருத்தியத் தலைவராகிய பரமசிவனைத் தாம் மறந்ததே அதற்குக் காரணமெனத் தேர்ந்து, தாமே பரம்பொருளெனக் கருதிய பாபம் நீங்குவதற்காகச் சிவபெருமானை நோக்கி நெடுநாள் தவஞ்செய்து, சிவபெருமான் தமக்குக் காட்சி தாராததை யுன்னி ஏங்கி வருந்திக் கண்ணீர் சொரிந்தார். கண்ணீர் விழ விழ, அதன் துளிகள் பேய்களாகி அவரை நெருங்கிச் சூழ்ந்தன. அவைகளைக் கண்டு பிரமதேவர் பயந்து மூர்ச்சையடைந்தார். அப்போது உயிர்க்குயிராய் நின்றருளும் எம்பெருமான் பிரமதேவருக்கு உணர்ச்சிதந்து அவரது கனவிலெழுந்தருளி, "புதல்வனே! இனி வருந்தாமல் எழுந்திரு. நீ எம்மை மறந்ததனால் சிருஷ்டித்தொழில் உனக்குக் கைகூடி வரவில்லை. அத்தொழில் சீக்கிரம் முடிவதற்காக சிவலோகத்திலிருந்து சிலரை நாம் அனுப்புவோம்" என்று திருவாய்மலர்ந் தருளினார். பிரமதேவர்ஆச்சரியத்துடன் விழித்துக்கொண்டெழுந்து நல்லொழுக்கத்துடனும் தெளிந்த மனத்துடனும் இருக்கையில், சிவபெருமானருளினால் அவருடைய நெற்றியிலிருந்து சிவபெருமானது உருவத்தைத் தாங்கிய பதினொரு உருத்திரர்கள் தோன்றி, தங்களைப் போன்ற பதினொருகோடி உருத்திரர்களைச் சிருஷ்டித்து, அவர்களைத் தேவர்களுடன் சேர்ந்திருக்கும்படி கட்டளையிட்டு, 'சிருஷ்டித் தொழிலை முன்போலவே நடத்திக்கொண்டிருப்பாயாக!' என்று பிரமதேவரிடம் சொல்லிவிட்டு, தமக்கு முன்னாளில் சிவபெருமான் கொடுத்தருளிய உலகத்தை யடைந்தார்கள். அவர்களால் சிருஷ்டிக்கப்பட்ட பதினொருகோடி உருத்திரர்கள்தாம் இங்கு தேவர்களுடன் காணப்படுகிறார்கள்" என்று கூறி யருளினார்.

பிறகு சூரபதுமன் தேவத்தச்சனையழைத்து தான் வசிப்பதற்குத் தக்க அலங்காரமான நகரமொன்றை விரைவில் நிருமிக்கும்படி கட்டளையிட்டான். உடனே அவன் சூரபதுமனை வணங்கிச் சென்று, தென்றிசைக்கடலில் எண்பதினாயிர யோசனை விஸ்தீரணமுள்ளதாயும், ஆகாயத்தை யளாவும் மதில்களையும், செம்பொன்னாலாகிய நான்கு பெரிய வாயில்களையும், வாயில்களில் மகமேருவைப்போன்ற உன்னதமான கோபுரங்களையும், நூறு யோசனை விஸ்தீரணமுள்ள பல மாடவீதிகளையுமுடையதாயும், சிறந்த அரண்மனைகள், எண்ணிறந்த மாளிகைகள், கோபுரங்கள், அழகிய தடாகங்கள், சோலைகள், அந்தப்புரங்கள் முதலியவைகள் உடையதாயும் ஓர் அற்புத நகரத்தை மனத்தினால் சிருஷ்டித்து, அந்நகரத்துக்கு வீரமகேந்திரம் என்னும் அழகிய நாமத்தையிட்டான். பிறகு அவன் அந்நகரத்தின் எட்டுத் திக்குகளிலும் ஏமபுரம், இமையபுரம், இலங்காபுரம், நீலபுரம், சோமபுரம் என்ற சுவேதபுரம், அசுரபுரம், வாமபுரம், பதுமபுரம் என்னும் பட்டணங்களை நிருமித்தான். பிறகு அவன் வீரமகேந்திரபுரிக்குச் சமமான விஸ்தீரணமுள்ள நகர மொன்றை வடகடலின் நடுவில் சிங்கமுகாசுரனுக்கென்று சிருஷ்டித்து

மலையைக் கல்லி எலி பிடித்ததுபோல

அதற்கு ஆசுரம் என்று பெயரிட்டு, மற்றும் கடல்களில் விருப்பத்தைத் தரத்தக்க இடங்களிலெல்லாம் அசுர சேனைகள் இருப்பதற்கு அநேக பெரிய நகரங்களை யுண்டாக்கி, மேருமலையின் தென்புறத்தில் சம்புத்தீவில் ஏமகூடபர்வதத்தினருகில் மாயாபுரி யென்னும் அழகிய நகரமொன்றைத் தாரகாசுரனுக்காகச் சிருஷ்டித்தான். பிறகு அவன் சூரபதுமனிடம் சென்று நகரங்களெல்லாம் சிருஷ்டிக்கப்பட்ட செய்தியைத் தெரிவித்தான்.

உடனே சூரபதுமன் தன் சேனைகளுடன் புறப்பட்டுச் சென்று வீரமகேந்திர புரியை யடைந்து மகிழ்வுற்று தேவத் தச்சனது திறத்தைப் புகழ்ந்து, தனது பெரிய அரண்மனையை யடைந்தனன். அப்போது பிரமன் முதலிய தேவர்கள் அவனுக்கு மகுடாபிஷேகஞ் செய்ய நிச்சயித்து, வேண்டிய உபகரணங்களைச் சேகரித்து, சூரபதுமனை ஓர் பீடத்தின்மீதிருத்தி கடலிலுள்ள தெளிந்த நீரினால் அவனுக்கு அபிஷேகஞ் செய்தனர். பிறகு சூரபதுமன் பீதாம்பரமுடுத்துத் தன் தம்பிமார்களுடன் சென்று இரத்தினங்க ளிழைத்த பொற் சிங்காதனத்திலேறி வீற்றிருந்தான். அப்போது பிரமதேவர் திருமால் சூட்டிக்கொள்ளத்தக்க மகுடமொன்றை அவனுக்குச் சூட்டினார். தேவர்களும் முனிவர்களும் அவனை வாழ்த்தி சுவர்ண புஷ்பங்களை அவன்மீது சொரிந்தனர். பிறகு அவன் தம்பியர்கள் கூறியபடி பிரமனும் திருமாலும் அருகிலுள்ள ஆசனங்களி லமர்ந்தனர்; இந்திரன் தம்பலப் படிகமேந்தினான்; குபேரன் அடப்பையேந்தி நின்றான்; வாயுக்கள் சாமரை வீசினார்கள்; அசுரேந்திரன் உடைவாள் ஏந்தினான்; சூரிய சந்திரர்கள் குளிர்ச்சியைத் தரும் குடைபிடித்து நின்றனர்; வருணனும் அவன் புதல்வர்களும் ஆலவட்டம் வீசினார்கள்; யாழில் வல்ல கருட கந்தருவ சித்தர்கள் கானஞ்செய்து நின்றனர்; இயமனும் அக்கினியும் எல்லாரும் சந்நிதிவிட்டு விலகி, முறைப்படி வரிசை வரிசையாக நிற்கும்படி செய்தனர்; நிருதி ஆபரணப்பெட்டியை ஏந்தி நின்றான்; தேவகுருவும் அசுரகுருவும் எண்ணிறந்த முனிவர்களும் செம்பொற் கலசத்திலுள்ள கங்கையின் தூய நீரை அருகம்புல்லினால் வேதமந்திரங்களை யுச்சரித்துக்கொண்டு சூரபதுமன்மீது தெளித்து வாழ்த்தினார்கள்.

பிறகு சூரபதுமன் திருமாலை நோக்கி, "நீ என்னைப்பெற்ற காசிபமுனிவனுக்குப் பாட்டனாகையால், நான் உன்னை யழைக்கும்போதெல்லாம் விரைந்து வரவேண்டும்" என்றும், பிரமனைநோக்கி, "நீ உன் புதல்வர்களுடன் தினந்தோறும் என்னிடத்துக்கு வந்து பஞ்சாங்கம் சொல்லவேண்டும்" என்றும், சூரியனைநோக்கி, "நமது நகரத்தின் மதிட்சுவருக்கு மேலாகச் செல்லுதல் உனக்கு அரிதாதலின், கீழ் வாசற்படியில் நுழைந்து மேல் வாசற்படி வழியாக வெளியேசென்று, நாள் முழுவதும் இளங்கிரணங்களை வீசுவாயாக!" என்றும், சந்திரனை நோக்கி, "தேய்தல் வளர்தல்களையொழித்து எந்நாளும் இந்நகரத்தில் பூரண கலைகளுடன் பிரகாசிப்பாயாக!" என்றும், அக்கினிதேவனை நோக்கி, "இந்நகரத்திலுள்ளவர்கள் யாவராயினும்உன்னை நினைத்தால், நீ உடனே அவர்களிடம் சென்று அவர்கள் ஏவலனைத்தையும் செய்து, அவர்களில் யாவர் உன்னைத் தீண்டினும் செந்தாமரைபோல் குளிர்ந்திருப்பாயாக!" என்றும், இயமனை நோக்கி, "நமது அசுரர்களையாவது, யானை குதிரைகளையாவது கொல்லக் கனவிலும் நினையாதே!" என்றும், வாயுதேவனை நோக்கி, "இந்நகரிலுள்ளவர் அணிந்து களைந்தெறிந்த புஷ்பமாலை, ஆபரணம் ஆடை, சந்தனம் முதலியவைகளை நீ அப்போதைக்கப்போது நீக்கவேண்டும்!" என்றும், வருணனை நோக்கி, "நீ புனுகு, பச்சைக்கற்பூரம், சந்தனம், கஸ்தூரி இவைகளை பாற்புகையினும் நுண்ணியதான பனிநீரிற்கலந்து இந்நகரெங்கும் தெளிப்பாயாக!" என்றும், இந்திரனை நோக்கி, "நீ தேவர்களுடனும் அஷ்டதிக்குப் பாலகர்களுடனும் தவமுனிவர்களுடனும் இங்குவந்து நாம் சொல்லும் ஏவல்களைச் செய்வாயாக!" என்றும் கட்டளையிட்டான். அவர்கள் பயந்து அவ்வாறே செய்வதாகச் சொல்லி அவ்வாறே நடந்துவந்தனர்.

இவ்வாறு அரசுசெலுத்திவரும் நாளில் சூரபதுமன் திருமகளைப்போல்வனப்புடையவளான தேவத்தச்சன் மகள் பதுமகோமளையை வேதவிதிப்படி மணந்துகொண்டு, பிறகு தேவர்கள், அசுரர்கள், கந்தருவர்கள் முதலாயினோர் பெண்களிற் பலரையும் கலியாணஞ் செய்துகொண்டான். பிறகு சூரபதுமன் தன் தம்பியரில் சிங்கமுகாசுரனுக்கு இயமன் புதல்வியான

மலையைத் துளைக்கச் சிற்றுளி போதாதா ?

விபுதை யென்பவளையும், தாரகனுக்கு நிருதியின் புத்திரியான சவுரியென்பவளையும் மணஞ்செய்வித்தான். கலியாணங்கள் முடிந்தபின், சூரபதுமன் தன் தம்பிமார்களை அவரவர் நகரங்களுக்கு அனுப்பிவிட்டு, தன் சேனாஸமுத்திரத்தை வகுத்து ஆங்காங்கு தன் அதிகாரத்துக்குக் குறைவுவராமல் பாதுகாத்துவரும்படி அனுப்பிவிட்டு, துர்க்குணன், தருமகோபன், துன்முகன், சங்கபாலன், வக்கிரபாலன், மகிடன் முதலாயினோர்களை அமைச்சராக வைத்துக்கொண்டு அரசு செலுத்திவந்தான்.

அவ்வாறு அரசுசெலுத்திவருகையில், ஒருநாள் சூரபதுமன் தன் ஏவல்களைக் குறிப்பாலுணர்ந்து சித்தமாகச் செய்துவந்த இந்திராதி தேவர்களையும் முனிவர்களையும் கடலிலுள்ள மீன்களைத் தினந்தோறும் ஏராளமாய்ப் பிடித்துக்கொண்டு வரும்படி கட்டளையிட்டான். தேவர்களும், முனிவர்களும் தங்களுக்குத் தகாத இழிதொழிலைச் செய்யும்படி நேர்ந்ததை யுன்னி பெருந்துயரமுற்று சமுத்திரராஜனாகிய வருணனை கடலிலுள்ள மீன்களனைத்தையும் அலையினால் மோதிக் கரையிற் சேர்க்கும்படி வேண்டிக்கொண்டு, அவ்வாறு வருணனால் கரையிற் சேர்க்கப்பட்ட மீன்களனைத்தையும் மூட்டையாகக் கட்டித் தலைமீதேற்றிச் சுமந்துகொண்டு தினந்தோறும் சூரபதுமன் அரண்மனைக்கு அசுரர்கள் கண்டு நகைப்பச் சென்று குற்றேவல் செய்துவந்தனர்.

அக்காலத்தில் சூரபதுமன் பண்டுசெய்த சிறந்த தவத்தின் பயனாக அவனுக்குப் பதுமகோமளையினிடத்தில் மிகுந்த அழகுவாய்ந்தவனாய் ஒரு புதல்வன் பிறந்தான். அப்புதல்வனைக்கண்டு சூரபதுமன் மிகவும் மனமகிழ்ந்து தன் உறவினர்களான அசுரர்களுக்கெல்லாம் ஏராளமான பொருள்களைவாரிப் பரிசளித்தான். ஒருநாள் அப்புதல்வன் இரத்தினக் கால்களையுடைய செம்பொற்றொட்டிலில் தூங்கிக்கொண்டிருந்தபோது பலகணி வழியாக சூரியகிரணம் உள்ளே நுழைந்து அவனுடம்பிற் பட்டது. அதன் வெப்பத்தினால் அக்குமரன் விழிப்புற்று மிக்க சினங்கொண்டு தொட்டிலினின்று எழுந்து ஆகாயத்திற் பாய்ந்து சூரியனைத் தன் கரத்தாற் பிடித்துக்கொண்டு நொடிப்பொழுதில் மீண்டு சூரியனைத் தன் தொட்டிலின் காலில் இறுகக் கட்டிப் பிறகு தொட்டிலிற்படுத் துறங்கினான். ஆகாய வீதியில் சூரியனைக் காணாது பிரமதேவர் ஏக்கமுற்று, சூரபதுமனது புதல்வனால் சூரியன் கட்டப்பட்டதைச் சில தேவர்களாலறிந்து, இந்திராதி தேவர்கள் புடைசூழப் புறப்பட்டுச் சூரபதுமனிடஞ் சென்று, சூரியனை விடுவிக்கும்படி கேட்டுக்கொண்டார். அப்போது சூரபதுமன் தன் புதல்வனது தீரத்தைத் தேவர்கள் சொல்லக் கேட்டுப் பெருமகிழ்ச்சியுற்று, பிரமதேவரை நோக்கி, "நீங்கள் எனதருமை மைந்தனிடம் சென்று இனிய வசனங்களைக்கூறி சூரியனை விடுவித்துக்கொண்டு போங்கள்!" என்று கூறினான். அவ்வாறே பிரமதேவர் ஏனைய தேவர்களுடன் அக்குழந்தையினிடம் சென்று அளவில்லாத ஆசிமொழிகளை யுரைத்து அவனைப்புகழ்ந்து சூரியனை விடுவிக்கும்படி வேண்டினார். அப்போது அச்சிறுவன் பிரமதேவரை நோக்கி, "நீ உன் சிறந்த படையைத் தருவாயாயின் சூரியனை விடுவிக்கிறேன்" என்றான். பிரமதேவர் தமது அஸ்திரத்தை அவனுக்குக் கொடுக்க, அவன் உடனே சூரியன் கட்டையவிழ்த்து அவனை விடுவித்தான். அப்போது சூரியன் அப்புதல்வனது வல்லமையைப் புகழ்ந்து அவனுக்குமோகனாஸ்திரத்தையளித்தான். பிறகு தேவர்கள் அவனிடமும் சூரபதுமனிடமும் விடைபெற்றுச் சென்றனர். அந்நாளில் சூரபதுமன் தனது தீரமிக்க புதல்வனுக்குப் பானுகோபன் எனப் பெயரிட்டான். அப்பானுகோபன் மன்மதனைப்போன்ற அழகுபெற்ற பேருருவமடைந்து திருமாலுடன் போர்செய்து வெற்றிபெற்றான். பிறகு சூரபதுமனுக்குப் பதுமகோமளையினிடத்தேயே அக்கினிமுகாசுரன், இரணியன், வச்சிரவாகு என்னும் புதல்வர்களும் பிறந்தனர். அதன்பின் அவனுக்கு மற்றத் தேவிமார்களிடத்தில் ஏககாலத்தில் மூவாயிரம் புதல்வர்கள் பிறந்தனர். அதே காலத்தில் சிங்கமுகாசுரனுக்கு அதிசூரனென்ற ஒரு புதல்வனும் மற்றும் நூறுபிள்ளைகளும் பிறந்தார்கள். தாரகாசுரனுக்கு அவன் பண்டுசெய்த சிறந்த தவத்தின் பயனாக நத்தை வயிற்றில் முத்துப்பிறப்பதுபோல் ஒரு சற்புத்திரன் பிறந்தான். அப்புத்திரனுக்குச் சுக்கிராசாரியர் அசுரேந்திரன் என்று பெயரிட்டார். மன்மதனைப்போல சுந்தரமான அவ்விளங் குமரன் ஓதுதற்கரிய கலைகளனைத்தையுமுணர்ந்து,

மலையைப் பார்த்து நாய் குலைத்தால், மலைக்குக் கேடோ நாய்க்குக் கேடோ?

அசுரர்களுக்குரிய மாயவித்தைகளையும் பாதகங்களையும் செய்யாதவனாயும், பழிக்கஞ்சி நடப்பவனாயும், நீதிக்கு மாறுபாடான விஷயங்களை மனத்தினாலும் நினைக்காதவனாயும் இருந்தான். அவன் தன்னை எதிர்ப்பவர்களுடன் நியாயமான போர்செய்து அழிக்கும் இயல்பும் வல்லமையுமுடையவன். சதுரக்கள்ளியானது நறுமணமிக்க அகிற் கட்டையைத் தருவதுபோல் அவ்வசுரேந்திரனைப்பெற்று தாரகாசுரன் மாயமாநகரத்தில் வாழ்ந்துகொண் டிருந்தான்.

இப்படியிருக்கையில், கற்பும் தருமமும் இல்லாதவளும், ஒருவனுக்கு மனைவியாக இல்லாமல் பேரழகினையுடைய வாலிபர்களைத் தேடிப்பிடித்து வலிதிற் புணர்பவளும், தவ முனிவர்கள் செய்யும் யாகங்கள் அழியும்படி கொடுந்தொழில் புரிபவளும், அசுரர்குலத்தை வேருடன் அழிக்கவந்த தீவினைகளி னுருவென்று சொல்லத் தக்கவளுமான சூரபதுமனது தங்கை அஜமுகி யென்பவள் ஒரு நாள் துருவாச முனிவரது ஆசிரமத்தையடைந்து, ஏககாலத்தில் அவர் செய்ததவத்தை யழித்து அவரிடத்தில் புத்திரர்களைப் பெறவேண்டுமென்று நிச்சயித்து, அம்முனிவர் சொன்ன நீதிவார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாமல் அவரை வலிதிற் புணர்ந்து, உடனே அம்முனிவரைப்போல் ஒரு பிள்ளையையும் தன்னைப்போல் ஆட்டுமுகத்தையுடைய மற்றொரு பிள்ளையையும் பெற்று, அவர்களுக்கு வில்வலன், வாதாபி என்று பெயரிட்டாள். அவ்விரண்டு பிள்ளைகளும் தங்கள் தாய் சொல்லியபடி தந்தையான துருவாச மாமுனிவரை வணங்கி, அவரது தவங்களனைத்தையும் தங்களுக்குத் தரும்படி வேண்டினார்கள். அப்போது துருவாச மாமுனிவர் தமது தவங்களைத் தரமுடியாதென்றும் வேறெதாவது பொருளை வேண்டினால் தருவதாகவும் சொன்னார். அதுகேட்டு வில்வலன், வாதாபி இருவர்களும், "இதோ உன்னுயிரை அழித்துவிடுகிறோம்" என்று கர்ச்சித்து அவர்மீது பாய்ந்தார்கள். அதுகண்ட துருவாச மாமுனிவர் மிக்க சினங்கொண்டு, "நீங்கள் குற்றமற்ற முனிவர்களுக்கே நாள்தோறும் இடையூறுகள் செய்து, கடைசியில் அகத்திய மா முனிவரால் அழிவடையுங்கள்!" என்று சபித்து, மாயையினால் தம் உருவத்தை மறைத்துக்கொண்டு அவ்விடம்விட் டகன்றார்.

அதன் பிறகு அஜமுகியின் புத்திரர்களிருவரும் முனிவரைக் காணாமல் தங்கள் தாயினிடத்தில் விடைபெற்றுக்கொண்டு வேறொரு வனத்தை யடைந்து அக்கினியின் மத்தியில் நின்று பிரமதேவரை நோக்கிக் கொடியதவம் புரிந்தனர். பலகாலம் அவ்வாறு தவஞ் செய்தும் பிரமதேவர் பிரத்தியக்ஷமாகாததால், வில்வலன் தன் தம்பியாகிய வாதாபியை வாளினால் வெட்டிக்கொன்று அவன் மாமிசத்தையும் இரத்தத்தையும் அவிசும் நெய்யுமாக உபயோகித்து கொடிய யாகத்தைச் செய்தான். அப்போது பிரமதேவர் அவன்முன் தோன்றி, "அருந்தவ மியற்றுவோனே! நீ கருதிய வரம் யாது?" என்று வினவ, அவன் அவரது பாதங்களை வணங்கி, "எனதையனே! வேள்வித் தீயில் அவிசாகவும் நெய்யாகவும் சேர்ந்து மாய்ந்த என் தம்பி உயிர்பெற்றெழ வேண்டும்" எனப் பிரார்த்தித்தான். பிரமதேவர் "வாதாபி! நீ எழுவாயாக!" என்று திருவாய் மலர்ந்தருள, வாதாபி யாகாக்கினியினின்றும் எழுந்து வந்தான். அப்போது வில்வலன் மகிழ்ச்சியுற்று, மனத்தில் தீயதான ஒரு சூழ்ச்சியைச் செய்து, பிரமதேவரை நோக்கி, "எந்தையே! எனக்கு இன்னொரு வரந்தரவேண்டும்" என்று சொல்லிப் பிரார்த்தித்தான். பிரமதேவர் அது யாதென வினவ, வில்வலன், "புற்களைத் தின்னும் ஆட்டுக்கடாவைப்போல விளங்கும் வாதாபியானவன் இனிமேலும் தேகம் வெட்டப்பட்டு உயிரிழப்பானாயின், நான் அன்புடன் என் தம்பியை 'உயிர் பெற்றெழுவாயாக' என்று கூறினவுடனே அவன் பழைய வடிவத்துடன் என் முன்னே வரவேண்டும். இவ்வர மொன்றே யான்பெற விரும்புகின்றேன்" என்று கூறினான். அப்போது பிரமதேவர், "அவ்வாறே பலகாலு மாகுக!" என்று கூறி மறைந்தருளினார். பிறகு வில்வலன் வாதாபி இருவர்களும் சூரபதுமனிடஞ் சென்று தாங்கள் அஜமுகியின் புத்திரர்களென்றும் தாங்கள் உலகத்திலுள்ள முனிவர்களைக் கொல்லும் வல்லமை யுடையவர்க ளென்றும் தெரிவித்து, அவன் மகிழ்ந்து கூறிய வண்ணம் அவனிடம் சிலகாலமிருந்து பிறகு அவ்விடம் விட்டுநீங்கிக் குடகுதேசத்தில் நான்கு வழிகள் கூடும் இடுக்கான இடத்தில் வளப்ப மிக்க காட்டில் ஒரு ஆசிரமத்தைக் கட்டிக்-

மௌனம் மலையைச் சாதிக்கும்.

கொண்டு யாவரும் விரும்பத்தக்க பலபொருள்களைச் சேகரித்து வைத்துக்கொண் டிருந்தார்கள். வில்வலன் தவமுனிவன் போலவும், வாதாபி பொன்மயமான அழகிய ஆட்டுக் கடாவைப் போலவும் வேடந் தரித்துக்கொண்டார்கள். அவ்வழியே செல்லும் முனிவர்களை வில்வலன் எதிர்கொண்டு சென்று வணங்கித் தன் பர்ணசாலைக்கு அழைத்துச்சென்று இனிய வசனங்களைக்கூறி பலவகைப்பட்ட போஜன பதார்த்தங்களையும் ஆடாகவுள்ள தன் தம்பியை வெட்டிச் சமைத்த கறியையும் அவர்களுக்கு அளித்து, அவர்கள் உண்டபின் தன் தம்பியை அழைப்பான். அப்போது வாதாபி உயிர்பெற்று அம்முனிவர்கள் வயிற்றைக் கீறிக் கொன்று வெளியே வருவான். பிறகு இருவரும் அவ்வாறு கொன்ற முனிவரை யுண்பார்கள். பிறகு வில்வலன் தவ முனிவனாகவும், வாதாபி ஆடாகவும் வேடந் தரிப்பார்கள். இப்படியே இவர்கள் பலநாள் முனிவர்களை யழித்துவந்தார்கள்.

இவ்வாறு அசுரர்களானவர் தேவர்கள், முனிவர்கள் முதலாயினோரைத் துன்புறுத்தியும் அவர்கள் சிறிதும் தீங்குறு வண்ணம் சூரபதுமன் அரசு செலுத்திவந்தான். ஒருநாள் சூரபதுமன் தனது சேனாதிபதிகளி லொருவனை யழைத்து இந்திரனை உடனே பிடித்துக் கொண்டுவந்து தன் முன்னே நிறுத்தும்படி கட்டளையிட்டு, பிறகு ஒன்பது கோடி அசுர ஸ்திரீகளை யழைத்து இந்திராணியைப் பிடித்துக் கொண்டுவரும்படி கட்டளையிட்டான். எண்ணிறந்த ஆயுதங்களைத் தாங்கிப் போர்க் கோலத்துடன் அசுரர்களும் அசுர ஸ்திரீகளும் தேவலோகத்தை நோக்கிச் சென்றனர். அவர்கள் வருகையைக்கண்ட தேவதூதர்கள் இந்திரனிடம் விரைந்து சென்று அவ்விஷயத்தைத் தெரிவிக்க, இந்திரன் அவர்கள் நோக்கமின்னதென் றுணர்ந்து உடனே தனது அந்தப்புரத்துக் கேகி இந்திராணியை அழைத்துக் கொண்டு மாயையினால் மறைந்து பூலோகத்துக்குச் சென்றனன். அசுரர்களும் அசுர ஸ்திரீகளும் அமராவதி நகர முழுவதுந் தேடியும் இந்திரனையும் இந்திராணியையும் காணாமல், தேவர்களைப் பிடித்து இந்திரனும் அவன் தேவியும் சென்றவிடத்தைச் சொல்லும்படி அடித்து வருத்தினார்கள். அவர்கள் சென்றவிடம் தங்களுக்குத் தெரியாதென்று கூறி தங்களைத் துன்புறுத்தாம லிருக்கும்படி அத்தேவர்கள் அசுரர்கள் மனமிரங்கும்படிப் பிரார்த்திக்க, அசுரர்கள் அவர்களைவிட்டுத் தேவலோகத்தினின்றும் நீங்கி மகேந்திரபுரிக்குச் சென்று சூரபதுமனது பாதங்களை வணங்கி நடந்தசங்கதிகளைத் தெரிவித்தார்கள். அதுகேட்ட சூரபதுமன் அருமையான மாணிக்கத்தையிழந்த சர்ப்பத்தைப் போலத் துன்பமுற்று தீயைப்போலக் கோபித்து, தனது தூதுவர்களிற் பலரை யழைத்து, "நீங்கள் இந்திரனும் இந்திராணியும் இருக்குமிடத்தைத் தேடியறிந்து சொல்வீர்களாக!" என்று கட்டளையிட்டான். உடனே தூதுவர்கள் தனித்தனியே ஓடிச்சென்று உலகமெங்குந் தேடினர்; அவ்வாறு தேடியும் காணாதவர்களாய்த் திரிந்தார்கள்.

மேகவாகனனாகிய இந்திரனும் அவன் தேவியும் நீங்கியபின்னர், பொன்னுலகமனைத்தும் சிறிதும் சிறப்பில்லாமற் பாழடைந்திருந்தது. அமராவதி நகர முழுவதும் அழுகை யோசையே நிறைந்திருந்தது. பொன்னுலகத்தில் அசுரர்கள் நுழைந்து தேவர்களுக்குத் துன்பமிழைக்குமுன் தேவலோகத்தை விட்டு வைகுந்தத்துக்குச் சென்ற உபேந்திரனைக் காணச் சென்ற தேவராஜ புத்திரனாகிய ஜயந்தன் வைகுந்தத்திலிருந்தவாறே பொன்னுலகத்தின் நிலைமையைத் தெரிந்துகொண்டு, தன் தந்தை யில்லாத காலத்தில் பொன்னுலகத்தைக் காப்பது தன்கடனே யாகுமெனக் கருதி, பொன்னகரத்தை யடைந்தனன். அங்கு சென்றதும், ஜயந்தன் புலம்புகின்ற தேவர்களைக் கண்டு தன்னுயிரை யொத்த தாய்தந்தையர்களைக் காணாதவனாய் ஏக்கமும் இரக்கமும் மிகுந்து செயலற்றுப் பித்தனைப்போ லிருந்தான். அப்போது நாரத முனிவர் அவன் மனத்தைத் தேற்றுமாறு அவனிடம் சென்றார். அவரைக் கண்டதும் அவனெழுந்து அவர் பாதங்களைப் பணிந்து ஆசனமளித்து அவரருகில் நின்று, "எம்பிரானே! எங்களுக்குற்ற தீமை, என்று நீங்குமெனச் சொல்ல வேண்டும்" என்று பிரார்த்தித்தான். அப்போது நாரதமுனிவர் ஜயந்தனை ஓர் ஆசனத்திலிருக்கச் செய்து, "தீங்கு வந்தடையுமாறும் நன்மையுண்டாகுமாறும் அவரவர்கள் தத்தம் வினையினால் செய்து கொள்ளுகிறார்களே யன்றி, பிறரால், அவை ஒருவரை வந்த

மழை பெய்து நிறையாதது, மொண்டு வார்த்தால் நிறையுமா?

டையமாட்டா. செல்வமும் தரித்திரமும், துன்பமும் மகிழ்ச்சியும், அழிவற்ற ஜீவராசிகளுக்கு நிலையாகவுள்ளவை யென்று கொள்ளமுடியாது. உங்கள் தாழ்வும் அசுரர்கள் உயர்வும் நிலைபெறா. உனது தாய்தந்தையர்கள் தங்களுருவத்தை மாற்றிக்கொண்டு பூமியில் வசிக்கின்றனர். முன்னம் தேவர்களுக்குத் துன்பஞ் செய்த கஜமுகாசுரன் மடியும் வண்ணம் உன் தந்தை முயற்சி செய்தான். அதுபோல இப்போதும் சூரபதுமன் இறக்குமாறு உன் தந்தை முயற்சி செய்வான் உங்கள் துன்பமும் சீக்கிரம் நீங்கும்" என்று சொல்லி அவனைத் தேற்றிவிட்டுச் சென்றார். ஜயந்தனும் தேவர்களை ஒருவாறு தேற்றி பகைவனாகிய சூரபதுமனது ஏவல்களை நாள்தோறும் செய்து வரும்படி தேவர்களைத் தூண்டிக்கொண்டு விண்ணுலகத்தில் வசித்திருந்தான்.

அசுரர்களிழைத்த தீங்குகளைச் சகியாமல் பொன்னுலகத்தை விட்டு நிலவுலகத்துக்குச் சென்ற இந்திரனும் இந்திராணியும் தென்னாட்டிலுள்ள சீகாழிப்பதியை யடைந்து அதுவே சிறந்த தலமென நிச்சயித்து அங்கு தங்கியிருந்தனர். அங்கிருக்கும் நாளில் சிவபெருமானைப் பூஜை செய்யவேண்டுமென்ற ஆசையுடையவனாய் அவன் அங்கு ஓர் நந்தவனத்தை யுண்டாக்கி, அதில் புஷ்பித்த மலர்களைப் பறித்து நாள்தோறும் சிவபெருமானது பாதாரவிந்தங்களை மெய்யன்புடன் அருச்சித்துக்கொண்டு வந்தான். அப்போது சூரபதுமனால் அனுப்பப்பட்ட தூதுவர்கள் உலகத்தில் தன்னையும் தன் தேவியையும் தேடிவந்த சங்கதி தெரிந்து தேவேந்திரன் இந்திராணியுடன் விரைவாக மூங்கிலுருவங்கொண்டு மறைந்து தவஞ் செய்துகொண்டிருந்தான். அசுர தூதர்கள் இந்திரனையும் இந்திராணியையும் காணாமல் நிலவுலகத்தை விட்டகன்றனர். அசுரர்களது கொடுங்கோன்மையால் கரியமேகங்கள் மழைபொழியாமற் போயின. அதனால் இந்திரன் அமைத்த நந்தவனத்திலுள்ள பூச்செடிகள் தீப்பட்டாற்போல வாடின. அதனை யுணர்ந்த இந்திரன் கவலையுற்று வருந்தி சிவபெருமானைத் துதித்தான். அப்போது, "இந்திரனே! இச்சிறந்த தலத்தில் ஒரு நதி வந்து சேரும். ஆதலின் வருந்தாதே!" என்று ஆகாயத்தில் ஒரு அசரீரி வாக்கு உண்டாயிற்று. இந்திரன் இது சிவபெருமான் திருவருளாகு மென்று எம்பெருமானை வணங்கித் துதித்துக் கவலை யொழித்திருந்தான்.

துருவாச மாமுனிவர் தமது புதல்வர்களாகிய வில்வலன் வாதாபி இருவர்களுக்கு மிட்ட சாபம் நிறைவேறவேண்டுவதற்காகவும் இந்திரனுடைய கவலை நீங்குவதற்காகவும் சிவபெருமானருளினால் திரிகாலஞானம் பெற்ற நாரத மாமுனிவர் விந்தகிரியை யடைந்து, தெய்வ வடிவ மெடுத்துக்கொண்ட அம்மலையினால் வணங்கப்பெற்று, அதனை நோக்கி, "விந்தகிரியே! உன்னிடம் ஒரு புதுமையைச் சொல்ல வந்தேன். சொல்லுகிறேன், கேள். மேருமலையானது தான் சிவபெருமானது வில்லாகவாகிய வலிமையினாலும், உலகமாதாவாகிய பார்வதி தேவியார் தனது மரபில் அன்புடன் வந்து பிறந்தமையினாலும், தான் மலையரசனென்ற கொள்கையினாலும், தான் சூரியமண்டலத்தையளாவ உயர்ந்திருக்கும் தன்மையினாலும், சிவபெருமான் சங்கரிக்கும் நாள் வரையில் இவ்வுலகுக்கெல்லாம் தான் ஆதாரமாக நிற்கின்றமையினாலும், ஆயிரஞ்சிகரங்களுடைமையினாலும், சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கைலாயகிரி தன்மீது ஒரு பக்கத்தில் இருக்கப்பெற்றிருக்கின்றமையினாலும், சூரபதுமனால் அழிக்கப்படாமலிருக்கின்றமையினாலும் நவக்கிரகங்களும் நக்ஷத்திரங்களும் தன்னைச் சுற்றிவருகின்றமையினாலும், அநேக தேவர்கள் தன்மீது வாழப்பெற்றிருக்கின்றமையினாலும், தான் பொன்னுருவத்துடன் உயர்ந்திருக்கின்றமையினாலும், அநேக மலைகள் தன்னைச் சூழ்ந்திருக்கின்றமையினாலும் தனக்கு இணையானவர் எவருமில்லை யெனச் செருக்குற்றிருக்கிறது. அதனை நீ உணர்ந்திலை போலும்!" என்று கூறினார். அது கேட்ட விந்த மலையானது மிகுந்த வீராப்புடன் பெருமூச்செறிந்து நகைத்து, "இது நன்று! பெண்களைப் போல நாணமுற்று வில்லாக வளைந்ததும் ஒரு மேன்மையாகுமோ? எக்காலத்தும் எவ்வுயிர்களையுமளிக்கும் உமாதேவியார் இமயபர்வதராஜன் செய்த தவத்துக்குகந்து அவனிடத்தில் குழந்தையாக வந்தருளினாரேயன்றி அவனுக்குப் புத்திரியாகப் பிறந்தாரோ? உலகத்தைத் தாங்கி நிற்பவர் இமயபர்வதத்தைப்போல் பலருளர். அவைகளை யெல்லாம் தாங்கி நிற்பது சிவசக்தியா

மழை முகம் காணாப் பயிரும், தாய் முகம் காணாப் பிள்ளையும்.

கும். சூரியன் முதலிய கிரகங்கள் இமயபர்வ
தத்தை மாத்திரமே யன்றி ஏழு தீவுகளிலு
முள்ள மலைகளெல்லாவற்றையும் சுற்றி வரு
கின்றன. அவைகள் கடல்களையும் சுற்றி வரு
கின்றன. ஆயிரஞ் சிகரங்களுடைமை ஒரு
மேன்மை யாகுமோ? பல தலைகளையுடைய
சதுரக்கள்ளி நான்கு தலைகளையுடைய பிரம
தேவரைவிடப் பெரிதாகுமோ! சூரபதுமன்
இது கல் என்று அலக்ஷியஞ்செய்து அழிக்காது
விட்டதனால் அதுசக்கராயுதத்தையுடைய திரு
மாலைவிட வலிமை மிக்கதெனக் கொள்ளலா
மோ? அவனது பொன்னுருவமானது மண்ணி
னாற் செய்த பாவையின் அலங்காரத்தைப்
போன்றதன்றோ? அவன் தன்னியல்பை நன்
ருய் ஆராயவில்லை போலும்! அவனிடத்தில்
தங்கியிருக்கும் தேவர்கள் என்னிடத்தில் இரு
க்கமாட்டேனென்று சொல்லி என்னை இகழாத
போது அவர்களது இருக்கை அவனை எங்ங
னம் என்னினும் மேலானவனுக்கும்? சிவபெரு
மானது திருக்கைலாயத்தைச் சார்ந்துநில்லாத
மலைகளேது? முன்னம் ஆதிசேஷன் தன்னை
யடைந்து அவன் ஆயிரம் படங்களினாலும்
தன் ஆயிரம் சிகரங்களையும் மூடிக்கொண்ட
காலத்தில், வாயு தேவன் ஆதிசேஷனைவிடத்
தானே வலிமையிற் பெரியனென்று காட்டு
மாறு சண்டமாருதம் வீசித் தன் குவடுகளில்
மூன்றைப் பெயர்த்து அப்பாலெறிந்ததை இம
வான் மறந்தானோ? இரத்தவெறி கொண்டு
உலகத்தை யழிக்கத் தொடங்கிய நரசிங்கத்தை
யடக்குவதற்காக வீரபத்திரக்கடவுள் தன்னுரு
அண்டமெல்லாம் பொருந்த வளர்ந்து சரப
பக்ஷியுருக் கொண்டபொழுது தான் ஒரு பருக்
கைக் கல்லைப்போல் சிதறுண்டதையும் இம
வான் மறந்துவிட்டானோ? அச்சரபபக்ஷியின்
சிறகினின்றும் வீசியகாற்றில் தான் மின்மினிப்
பூச்சியைப்போல் பறந்ததுகூட அவனுக்கு
ஞாபகமில்லையோ? விநாயகக் கடவுள் கஜமுகா
சுரன்மீது எறிந்த கொம்பினால் பாரத மெழு
தப்படுவதற்கு இமயபர்வதம் ஏடானதும்
பொய்யாகுமோ? இமயபர்வதம் ஓர் மலையே
யன்றி பிரமனுமல்ல, திருமாலுமல்ல, இந்தி
ரனுமல்ல. அப்படியிருக்க, எதைக் கருதி இம
வான் தன்னை மேலானவனாக எண்ணினான்?
முனிபுங்கவரே! இமயமலையின் அகங்காரத்
தை இதோ அழிக்கிறேன், பாரும்!" என்று
கூறி, தனது தெய்வ வடிவம் நீத்து, கோடி
விஷ்ணுக்கள் எல்லையில்லாத மாய சரீரங்
களைக் கொண்டு திரண்டு நிமிர்ந்தாற் போல
ஒரு மாய வித்தையினால் உயர்ந்து வளர்ந்து
பிரமலோகத்தை யளாவிநின்றது. அப்போது
விந்த மலையானது இமாசலம் வரையிலும்
விரிந்து அதை நெருங்கி நின்றது. விந்தமலை
அவ்வாறு உயர்ந்து ஆகாய வீதியை யடைந்து
நவக்கிரகங்கள் தங்கள் கதியிற் செல்ல மார்க்க
மில்லாமற் செய்யவே, அவர்கள் இது யாரு
டையசெய்கையென்று அறியமுடியாமல் மயங்
கிப் பயந்து பிறகு ஆராய்ச்சி செய்து விந்த
மலைக்கும் இமயமலைக்கும் ஏற்பட்ட மனஸ்
தாபமே அதற்குக் காரணமெனச் சிவபெருமா
னருளினால் உணர்ந்து, மேருமலையி னருகில்
சிவபெருமானது திருவடிகளைச் சிந்தித்துத்
தவஞ் செய்துகொண் டிருந்த கடலையுண்ட
குறுமுனிவரான அகத்தியர் அவ்விடம் வந்
தால் விந்தமலை யொடுங்குமெனத் தெளிந்து,
அகத்தியமாமுனிவரைத் தோத்திரஞ் செய்து
தங்களைக் காத்தருளும்படி வேண்டிக்கொண்
டார்கள். அச்சமயம் மேருமலையி னொருபுறத்தி
லுள்ள ஒரு சோலையில் தவஞ் செய்துகொண்
டிருந்த அகத்தியமாமுனிவர் அதை யுணர்ந்து
விந்தமலையின் வலிமையை யழித்து ஆகாய
வழியைப் பண்டுபோற் செய்து அண்டர்களு
டைய குறையைத் தீர்க்கவேண்டுமென்று நினை
த்து, கண்களினின்றும் ஆனந்த பாஷ்பம் சொரி
யவும், கரங்கள் தொழவும், மனம் எலும்புடன்
உருகவும், அங்கமெல்லாம் உரோமஞ் சிலிர்க்க
வும், முறுக்கிய சடாமுடியையுடைய அண்ண
லாகிய சிவபெருமானைத் தியானித்துப் புகழ்ந்
தார். அப்போது சிவபெருமான் வெள்விடை
மீதேறிப் பூதகணங்கள் சூழ அங்கு எழுந்தரு
ளினார். உடனே அகத்தியமாமுனிவர் அச்ச
முடனெழுந்து பலமுறை வணங்கித் துதித்து
நின்றார். தம்முன் நின்ற அத்தவ சிரேஷ்ட
ரைச் சிவபெருமான் நோக்கி, "நீ யாது விரும்
பினாய்? அதைக் கூறுவாயாக!" எனப் பணித்
தருளலும், அவர், "விந்தகிரியானது மேருவி
னிடத்துப் பகைமைகொண்டு ஆகாயவழியை
யடைந்தது. அதன் வலிமையை யழிக்க அடி
யேனுக்குச் சிறிது அருள் புரியவேண்டும்"
என்று கூறினார். அதுகேட்ட சிவபெருமான்,
"உனக்கு வலிமையைத் தந்தோம். விந்தத்

தை வேருடனழித்துத் தென்றிசையை யடை
ந்து சிறந்த பொதியமலையில் வசித்திருப்பா
யாக?" என அருளிச்செய்ய, அகத்தியர் வணங்
கித் துதித்து, "கிணறு, தடாகம் இவைகளில்
நீர் வற்றுவது இயல்பாதலின், தேவரீரது
பூசனையை அடியேன் இடையூறின்றிச் செய்
யும் பொருட்டு அத்தென்றிசைக்கென்று ஓர்
புனித தீர்த்தத்தை யுதவியருள வேண்டும்"
எனப் பிரார்த்தித்தார். உடனே சிவபெருமான்
திருக்கைலாயத்திலுள்ள சப்த நதிகளில் மிக
வும் தூய்மை பொருந்தியதான காவிரியை வர
வழைத்து அகத்தியமுனிவருடன் தென்றி
சைக்குச் செல்லும்படி கட்டளையிட, காவிரி
மாது எம்பெருமானை நோக்கி, "இறைவனே!
இம்முனிவர் பஞ்சேந்திரியங்களை ஜயித்தவரே
யெனினும், இவர் ஆண்மகனாதலால் அவருடன்
நான் ஏகுதல் தகுதியோ?" என்று வினவி
னாள். அதற்கு எம்பெருமான், "பெண்ணே!
இம்முனிவன் மாறுத மனத்தினையுடையவன்;
விருப்பு வெறுப்பில்லாத ஒருமை மனத்தை
யுடையவன்; நமதன்பர்களில் மிகச் சிறந்தவன்;
ஆதலால், இவன் பின்னே நீ போவாயாக!"
எனத் திருவாய்மலர்ந் தருளினார். பிறகு காவிரி
எம்பெருமானை நோக்கி, "இம் முனிவரை
விட்டு நான் பிரியுங்காலம் யாது?" என
வினவ, எம்பெருமான், "இம்முனிவன் எந்தக்
காலத்தில் உன்னை நோக்கிப் போவென்று
கூறுகிறானோ அப்பொழுது இவனை விட்டு
விலகி நிலவுலகத்திற் சென்று வசிப்பாயாக!"
என விதித்தருளினார். பிறகு சிவபெருமான்
பணித்தருளியபடி காவிரிநதியானது அகத்திய
முனிவரது கமண்டலத்திற்குள் செல்ல, எம்
பெருமான், "அகத்தியனே! நீ தென்றிசை
நாட்டுக்குச் செல்வாயாக!" என்று கூறி
விடையளித்து பூதகணங்களுடன் மறைந்தரு
ளினார். பிறகு அகத்தியமாமுனிவர் எம்பெரு
மான் பணித்தருளியபடி தென்றிசையை
னோக்கிப் புறப்பட்டார்.

மேருமலையினின்றும் புறப்பட்டு அகத்தியர்
பூமியின் வழியாகத் தென்றிசைக்குச் செல்லு
கையில், சூரபதுமன் தம்பியாகிய தாரகாசுரன்
வசித்துவந்த மாயாபுரியை யணுக, அங்கு
வசித்துவந்த கிரௌஞ்சமென்னும் பெயரை
யுடைய அசுரன் அவர் வரவைக் கண்டான்.
அக்கிரௌஞ்சன் மாயையிற் பெருந்திறமை
யுள்ளவன்; சுவர்க்கத்தைப் பூமியாகச் செய்
வான்; மண்ணுலகத்தை விண்ணுலகமாகத்
தோன்றச்செய்வான்; கடலை மலையாக்குவான்;
மலையைக் கடலாக்குவான்; அணுவை மேரு
வாக்குவான்; மேருவைப் பரம அணுவாக்கு
வான்; ஒருநாழிகையில் பதினாயிரத்திலொரு
பாகத்திற்குள்ளே தேவர்களுக்காயினும் துற
விகளுக்காயினும் பலவித மாயைகளைச் செய்து
சிறுபொழுதைப் பன்னெடுங் காலமாகத்
தோன்றச் செய்வான். அவ்வளவு திறமை
வாய்ந்த அசுரர்கோமான் அகத்தியர் வரவைக்
கண்டு, விந்தமலையைப்போல் பல சிகரங்களையு
டைய மலையாகி தனக்குட் செல்லக்கூடிய ஒரு
வழியுடன் நிற்க, அகத்தியர் அவ்வழியே
சென்று மலையைக் கடக்கலாமென் றெண்ணி
அதன் வழியே செல்ல, ஒரு குரோசதூரம்
சென்றதும் அவ்வழி மறைந்து வேறொரு வழி
தோன்றிற்று. அகத்தியர் அவ்வழியே செல்ல,
அவ்வழியும் முடிவுற்றதைக் கண்டு, வந்த
வழியே செல்லத் திரும்புகையில் பழைய வழி
யும் மறைந்து போயிற்று. அதுகண்டு அகத்
தியர் மனச்சஞ்சலத்துடன் சுற்றிப் பார்த்த
போது மற்றொரு வழி காணப்பட்டது. அகத்
தியர் அவ்வழியே செல்லுகையில், அவ்வழி
யைச்சுற்றிப் பெருந்தீ சூழ்ந்துகொண்டது;
மேகங்கள் அச்ச முண்டாகும்படி மழை
பொழிந்தன; சுழற்காற்று வெகு வேகத்து
டன் அடித்தது; இடியின் முழக்கம் மிகவும்
பயங்கரமாயிருந்தது. அதுகண்ட கும்பமுனி
வர் சிறிது ஆலோசித்து, அது அசுரர்களது
மாயையெனத் தேர்ந்து, மிகுந்த கோபத்து
டன் கைகளைக்கொட்டிச் சிரித்து, "நன்று
நன்று! ஒரு அசுரனா எனக்கு இத்தீங்கைச்
செய்யுந் தகைமையுடையவன்? இதோ அவன்
வலியை யழித்தேன்!" என்று கூறி, தமது
திருக்கரத்திலுள்ள தண்டத்தினால் அசுர
னது மலையுருவத்தின்மீது குத்திப் பெருந்
துவாரம் செய்து, பிறகு, "நல்லுணர்வடை
யாத கொடியோனே! நீ உனது பழைய அசுர
வடிவம் நீங்கிப் பெரிய மலையுருவத்துடன் இங்
கேயே நின்று, அசுரர்களுக் கெல்லாம் வாச
ஸ்தானமாகி, தேவர்களுக்கும் முனிவர்களுக்
கும் பலகாலம் கொடுமைகளிழைத்துவரக் கட
வாய்! நமது தண்டத்தினால் உன்னிடத்திலுண்
டாக்கப்படும் துவாரங்களெல்லாம் பற்பல

மாயைகளுக்கு இருப்பிடங்களாகக் கடவன ! இறுதியில் எம்பெருமான் எமக்களித்தருளும் சுப்ரமண்யக் கடவுளது கைவேலினால் அழிவடையக் கடவாய் !" என்று சாபங்கொடுத்து, தமது கமண்டலத்திலுள்ள காவிரிநீரை மந்திரத்தை யுச்சரித்து அம்மலைமீது தெளித்து, அதனால் அவன் மாயமொழிந்தபின் அவ்விடம் விட்டுப் புறப்பட்டுத் தென்றிசையை நோக்கிச் சென்றார்.

வழியில் அவர் காசிப்பதிக்குள் நுழைந்து விசுவநாதப் பெருமானது திருவடிகளைச் சேவித்து அவ்விடம்விட்டு நீங்கி ஆகாயத்தை யூடுருவிச்சென்று நின்ற விந்தமலையை யடைந்து, அதனை நோக்கி, "விந்தமென்னும் பெரியபர்வதமே ! யாம் பொதியமலையிற் போய் வசிக்கும் கருத்துடன் வந்தோம். ஆதலின் இப்பொழுதே எமக்குச் சிறிது வழி விடுவாயாக! " என்று கூறினார். அதற்கு அந்த மலை சூரியசந்திரர்களும் செல்லமுடியாமல் ஆகாய நெறியை யடைத்து திருவிக்கிரமாவதாரங்கொண்ட திருமாலைப்போல் உயர்ந்திருக்கும் நான் குறியவனாகிய உனக்கு அஞ்சியோ வழிவிடுவேன் ? ஒருநாளுமில்லை. ஆதலின் நீ வந்தவழியே திரும்பிப் போவாயாக !" என்று மறுமொழி புகன்றது. அதுகேட்ட அகத்தியமாமுனிவர், மிக்க கோபத்துடன் நகைத்து சிவபெருமானது இரண்டு திருவடிகளையுந் தியானித்து, முன்னாளில் இந்திரன் வேண்டுகோளுக் கிணங்கி கடலை யடக்க நீட்டிய கரத்தினைப் பிரமபதம் வரையில் நீட்டி, தேவர்கள் கண்டு வியப்புறுமாறு விந்தமலையின் சிகரத்தில் தமது உள்ளங்கையை வைத்து வலிமையுடன் ஊன்ற அவ்விந்தமலையானது விரைவாகப் பூமியில் தாழ்ந்து பாதாளத்திற்குச் சென்று ஆதிசேஷனுடைய இருப்பிடத்தை யடைந்தது. நரகத்தை யடைபவர்களைப்போலப் பாதாளத்தை யடைந்த விந்தமலையானது பயந்து குறுமுனிவரை நோக்கி, "வள்ளலே ! அடியேனுரைப்பதைக் கேட்டருளவேண்டும். அடியேன் உம்மை வணங்காமல் இகழ்ந்து என் மேன்மையை யிழந்தேன். அடியேன் செய்த குற்றத்தை மனத்தில் வைக்காமல், யான் எப்போது மேலெழுவது என்று உரைத்தருளவேண்டும் " என்று பிரார்த்தித்தது. அப்போது அகத்தியமாமுனிவர் நாரதமுனிவர் சூழ்ச்சிக்கேற்ப, "யாம் போய் இவ்வழியே திரும்புவோமாயின் நீ மேலே எழுவாய்!" என்று நகையுடன் கூறினார். விந்தமலை மறைந்தபின் அகத்திய மாமுனிவர் தமது திருக்கரத்தினைச் சுருக்கிக்கொண்டார். துன்பம் நீங்கிய தேவர்கள், புஷ்பவருஷம் சொரிய பொதியமலைக்குச் செல்லத் திருவுளங்கொண்டார். அச்சமயத்தில் சூரியன் முதலிய தேவர்கள் அவரை யடைந்து வணங்கி, " எந்தாய் ! தேவரீரருளினால் நாங்கள் ஆகாயமார்க்கத்தில் செல்ல வழிபெற்றோம். இனித் தேவரீர் எங்கள் பொருட்டுப் பொதியமலையிலேயே உறைந்தருள வேண்டும்" என வேண்டிக்கொண்டார்கள். அதற்கு அகத்தியமாமுனிவர் நன்றெனத் திருவுளமிசைந்து தேவர்களை விண்ணுலகத்துக்குச் செல்லும்படி விடையளித்துவிட்டுத் தென்றிசையை நோக்கி நடந்தார்.

அப்போது மலைகள் நெருங்கிய குடகு தேசத்தில் வசித்துவந்த வில்வலன் வாதாபி யென்னுமிருவர்களும் தங்களுயிரை யிழக்குங்காலம் நெருங்கியவர்களாய் அகத்திய முனிவரது வருகையைக் கண்டு, " இவன்தான் அசுரர்கள் உயிரைப் பறித்தவன்போலும்! இவனுக்கு இப்போதே போஜன மளித்து இவனுயிரையும் ஊனையும் இன்றே கொள்ளை கொள்வோம் " என்று சொல்லி, வாதாபி ஆட்டுக்கிடா உருவத்துடன் மலைச்சாரலில் புல்லைமேயச் செல்ல வில்வலன் தவமுனிவன் உருவொடு அகத்தியரை எதிர்கொண்டு சென்றான். தலையில் சடாமுடி தரித்துக்கொண்டும், நெற்றியில் திரிபுண்டரமாகத் திருநீறு அணிந்துகொண்டும், மெய்யெலாம் தூளாய விபூதி பூசிக்கொண்டும், மார்பில் உருத்திராக்ஷமாலை துலங்க அணிந்துகொண்டும், கையில் தண்டத்தைப் பிடித்துக்கொண்டும், அரையில் மரவுரி யுடுத்துக் கொண்டும் காஞ்சிரங் கனியைப்போலக் கொடிய சிந்தையை யகத்துள்வைத்த சுந்தரவடிவத்துடன் சென்ற பொய்த்தவசியாம் வில்வலன் அகத்திய மாமுனிவரை வணங்கி அஞ்சலி செய்துநின்று, "பாவியேனுடைய ஆசிரமம் இது. இவ்விடம் புனிதமாகும்படி தேவரீர் இங்கெழுந்தருள வேண்டும்" எனப் பிரார்த்திக்க, அம்முனிவர் அவ்வசுரனது நோக்கத்தை யுணராதவராய், தமது பாதங்களை வணங்கிக் கிடந்த அவனை நோக்கி, " தவத்தில் ஒப்புயர்வின்றிச் சிறந்தவனே ! எழுந்திரு ! " எனக் கூறி, பின்னும்,

"நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்களிடத்திலும் மற்றத் தவசிகளிடத்திலும் நின்பாற் காணப்படும் நற்குணத்திற் சிறிதளவேனும் நான் கண்டதில்லை. இது உண்மை. நின் ஆசிரமத்துக்குப் போவோம் வா!" என்று கூறியருளினார். உடனே வில்வலன் அவரைத் தனது ஆசிரமத்துக்கு அழைத்துச் சென்று ஓர் ஆசனத்திலிருத்தி முறைப்படி பூசனைசெய்து, தனது ஆசிரமத்திலேயே தானளிக்கும் உணவைப் புசிக்கவேண்டுமென அவரை வேண்டி, அவர் அதற்கிசைந்தவுடன் தடாகத்துக்குச் சென்று நீராடிப் பரிசுத்தமான ஆடையணிந்து பலவிதமான ஆகாரங்களைச் சமைத்து, கடைசியாக மலைச்சாரலில் புல்லை மேய்ந்துகொண்டு நின்ற தன் தம்பியை வெட்டிகொன்று எலும்பு முதலியவற்றை நீக்கி ஊனை உருசிகரமான கறியாகச் சமைத்து, அகத்திய மாமுனிவரை சமையற்சாலையி னருகில் அழைத்துப்போய் ஆசனத்திலிருத்தி பொன் தட்டு ஒன்றையும் பல கிண்ணங்களையும் அவர் முன் வைத்துப்பதார்த்தங்களை அவைகளிலிட்டு முனிவரை வணங்கி அவைகளை யுண்ணும்படி வேண்டினான். அசுரனது வஞ்சகமறியாத அகத்தியமாமுனிவர் அவைகளை யுண்டு, அவன் கொடுத்த நன்னீரை யருந்தி, கரங்களைச் சுத்தி செய்துகொண்டார். அப்போது வில்வலன் அம்முனிவரது பிராணனை வாங்கும் கருத்துடன் அம்முனிவருடைய வயிற்றில் கறியாயிருந்த தன் தம்பியை நினைத்து, "வாதாபி ! சீக்கிரம் வருக!" என அன்புடனழைக்க, உடனே அகத்திய முனிவரது வயிற்றினுள் ஆட்டுருவத்தை யடைந்த வாதாபி தன் அண்ணனை விளித்து, "ஆலோசனையின்றி முன்பு கடல் நீரைக் குடித்ததுபோல் என் மாமிசத்தையுமுண்ட இக்கொடியோனுடைய உயிரைவாங்கி அதனால் வலிமை மிகப்பெற்று இவன் சிறிய வயிற்றைக் கிழித்துக்கொண்டு இதோ வருகிறேன் !" என்று கூவிக் கர்ச்சித்தான். அப்போது அகத்திய மாமுனிவர் அசுரர்கள் செய்த மாயையை யுணர்ந்து சினங்கொண்டு, " மாமிசக்கறியாக நான் உண்ட வாதாபியானவன் நான் உண்டபொழுது உயிரிழந்தவனாயிருந்த வண்ணமே அழியக்கடவன் !" என்று சொல்லித் தமது வயிற்றைத் தமது கரத்தால் ஒருமுறை தடவலும், காட்டிலுண்டாகும் பெருந்தீயில் எரிந்து சாம்பராகும் சிறு புதரைப்போல் வாதாபி அழிந்தான். தன் தம்பி அவ்வாறு அழிந்ததைக் கண்டு உக்கிரமான கோபங்கொண்ட வில்வலன் தனது உண்மை யுருவத்துடன் ஒரு தண்டாயுதத்தைக் கையிலேந்தி அகத்தியமா முனிவரைக் கொல்லும் நோக்கத்துடன் சீறிவரவே, அம் மகாமுனிவர் ஒரு தருப்பைப் புல்லைக் கரத்திலெடுத்து மந்திரத்தை யுச்சரித்து அதைச் சிவாஸ்திரமாகச் செய்து அவன்மீது பிரயோகிக்க அவனும் இறந்தான்.

பிறகு அகத்தியமாமுனிவர் அவ்விடத்தை விட்டுக் கொங்கு தேசத்தை நோக்கிச் சென்றார். அப்போது வில்வலன் வாதாபி இருவர்களும் பைசாச உருவங்களுடன் தம்மைக்கொல்ல நெருங்கிவர, அகத்தியமாமுனிவர் சிறிது ஆலோசனைசெய்து, அவர்கள் துருவாசமாமுனிவரது புத்திரர்களாகையால் அவர்களைக் கொன்ற தம்மைப் பிரும்மஹத்தி தோஷம் சூழ்ந்ததெனத் தேர்ந்து, அது நீங்குமாறு அவ்விடத்தில் சிவபெருமானது திருவடிகளை அன்புடன் அருச்சனை செய்யவேண்டுமென நிச்சயித்து, கொங்கு தேசத்துக் கருகில் அன்புடன் சிவபெருமானை இலிங்கரூபமாகப் பிரதிஷ்டைசெய்து தமது கமண்டலத்திலுள்ள புனிதமான காவிரி தீர்த்தத்தினால் அபிஷேகஞ்செய்து, பலவகை மலர்களையும் தூபதீபங்களையும் அன்னம் முதலிய நிவேதனங்களையும் சேகரித்து முறைப்படி ஆராதித்துத் தமக்கு ஏற்பட்ட பிரும்மஹத்திதோஷம் நீங்கவேண்டுமென்று எம்பெருமானைப் பிரார்த்தித்தார். அவ்வாறு பலகாலம் அன்புடன் சிவபெருமானைப் பூஜித்தபின் எம்பிரான் திருவருளால் அத்தோஷம் நீங்கிற்று.

அகத்தியமாமுனிவர் அவ்வாறு எம்பெருமானை ஆராதித்துக்கொண் டிருந்தபோது, அதை யுணர்ந்த நாரதமாமுனிவர் தேவகாரியம் நிறைவேறுமாறு சீகாழியில் மூங்கிலுருவத்துடன் தேவேந்திரன் எம்பெருமானை நோக்கி மெய்த்தவம் புரிந்துகொண்டிருந்த விடத்துக்குச் சென்றார். நாரதர் வரவைக் கண்டதும், இந்திரன் தன் சுயரூபத்துடன் அவர்முன் வந்துவணங்க, நாரதமுனிவர், " அரசனே ! எழுந்திரு !" என்று சொல்லி அவனைத்தூக்கி மார்போடணைத்து, " இங்கு சுகமாக இருக்கின்றனையோ ?" என அன்புடன் வினவினார். அப்

போது இந்திரன் கைதொழுது நின்று, "நற்குணக்குன்றே போன்ற முனிவரே! தேவரீரது திருவருளினால் அடியேன் இங்கு சுகமாகவே இருக்கிறேன். ஆனால் சிவபெருமானது பூஜைக்குமட்டும் ஓர்குறை ஏற்பட்டிருக்கிறது. அது யாதெனில், முக்கணெந்தையின் பூஜைக்காகத் தமியேன் அமைத்துள்ள நந்தவனம் நீரில்லாமல் வாடுகின்றது. சிவபூஜைக்கு மலர்கள் அகப்படாமல் வருந்துகிறேன். இதுவே என் ஒரு குறை !" என்றுரைத்துப் பிறகு அம்முனிவரை ஓர் ஆசனத்தில் எழுந்தருளச் செய்து அம்முனிவரர் கட்டளைப்படி தானும் ஓர் ஆசனத்தி லமர்ந்தான். அப்போது நாரத மாமுனிவர் இந்திரனை நோக்கி, "இந்திரனே! அமருலகத்தாட்சி முதலியவை உனக்குக் கூடிய சீக்கிரத்திற் கைகூடும். ஆகையினால் வருந்தாமலிரு! இங்கு சிவபூஜைக்கு ஒரு குறை இருப்பதாகக் கூறினாய். அதுவும் சீக்கிரத்தில் நீங்கும். அது எங்ஙனம் நீங்குமென்று கூறுகிறேன், கேள். இமயமலையினிடத்துப் பகைமைகொண்டு ஆகாய வீதியை யடைந்த விந்தமலையின் வலிமையை யழிப்பதற்காக தேவர்களின் வேண்டுகோளின்படி எம்பெருமான் திருவருளையே ஆயுதமாகக்கொண்டு எம்பெருமான் பணித்தபடி இமயமலைச் சாரலிலிருந்து பொதியமலைக்குப் புறப்பட்ட அகத்தியமாமுனிவர் விந்தமலையின் வலிமையை யழித்து அதைப் பாதாளத்தி லிறுத்தியபின் தென்றிசையை நோக்கி நடந்து, குடகு தேசத்தையடைந்து, அங்கு முனிவர்களைக் கொல்லுவதையே தமது தொழிலாகக் கொண்டிருந்த சூரபதுமன் மருகர்களாகிய வில்வலன் வாதாபியிருவர்களும் தம்மையும் கொல்ல முயன்றபோது அவர்களை யழித்து, அவ்வாறு அழித்ததனால் தம்மைச்சூழ்ந்த பிரும்மஹத்திதோஷம் நீங்குமாறு கொங்குதேசத்துக்கருகில் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து பூசனைசெய்து வருகின்றார். அவருடைய கமண்டலத்தில் எம்பெருமானருளால் புனிதமான காவிரிநதி அடங்கியிருக்கிறது. அக்காவிரிநதி இங்கு வந்தால் உன் நந்தவனம் ஒருநாளும் வாடாது. அந்நதியை இங்கு வரவழைப்பதற்கு ஒரேவொரு வழிதான் உண்டு. அது யாதெனில், விநாயகக் கடவுளை நீ அன்புடன் பூஜித்து அவரது திருவருளைப்பெற்று அகத்தியரது கமண்டலத்தைக் கவிழ்த்து விடும்படி பிரார்த்திக்கவேண்டும். கமண்டலம் கவிழ்ந்தால் அந்நதி பிரவகித்து இங்கு வரும்" என்று கூறி யருளி இந்திரனிடம் விடைபெற்று அவ்விடம்விட் டகன்றார்.

உடனே இந்திரன் விநாயகக்கடவுளைப் பிரதிஷ்டைசெய்து அப்பெருமானது சிறிய திருவடிகளைப் பூஜித்து, கரும்பு, தேங்காய், தினை மா, தேன், கனிகள், வெல்லப்பாகு, மோதகம் முதலியவைகளை அன்புடன் நிவேதனஞ் செய்து, அவரை மனமுருகப் புகழ்ந்து துதிக்க, அத்திமுகக் கடவுள் அளவற்ற சிவகணங்கள் சூழ அங்கு விரைவாக எழுந்தருளினார். உடனே இந்திரனெழுந்து அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கித் துதிக்க, அப்பெருமான் அருளுடன் இந்திரனை நோக்கி, "இந்திரனே! நீ செய்த சிறந்த பூசனையை ஏற்றுக்கொண்டோம். நீ விரும்பிய வரம் யாதென்றுசொல்!" என்று திருவாய் மலர்ந் தருளினார். அப்போது இந்திரன் "எனையனே! அடியேன் சிவபெருமானைப் பூஜிக்கும்பொருட்டு ஒரு நந்தவனத்தை வைத்தேன். அது தண்ணீரில்லாமையால் சூரியனது வெய்ய கிரணங்களால் தீய்ந்து போய்விட்டது. சிவபூஜைக்குப் புஷ்பங்கள் கிடைக்காமல் வருந்துகின்றேன். அத்துன்பம் நீங்கும்படி தேவரீர் அடியேனுக்கு ஓர் உதவிபுரிந்தருளவேண்டும். அதென்னவெனில்: துருவாசமுனிவரது புதல்வர்களான வில்வலன், வாதாபி இவர்களைக் கொன்றதனால் தம்மைச்சூழ்ந்த பிரும்மஹத்திதோஷம் நீங்குவதற்காக அகத்திய மாமுனிவர் கொங்குதேசத்தினருகில் நீலகண்டராகிய எம்பெருமானைப் பிரதிஷ்டை செய்து பூஜித்து வருகிறார். அவருடைய கமண்டலத்தில் காவிரி யென்ற புனிதமான நதியொன் றிருக்கிறது. தேவரீர் அங்குசென்று அக் கமண்டலத்தைக் கவிழ்த்தருளினால், அந்நதி பூமியைச் சேர்ந்து இங்கு ஓடிவந்து தமியேனது நந்தவனத்தைச் செழிக்கச் செய்யும். அடியேனுக்கு இவ் வுதவிபுரிந் தருள வேண்டும்" என்று சொல்லிப் பிரார்த்தித்தான். அவ்வாறே உதவி செய்வதாகச் சொல்லி விநாயகப் பெருமான் இந்திரனை ஆங்கே நிறுத்திவிட்டு விரைவாகச் சென்று காகவடிவத்துடன் அகத்தியமாமுனிவரது கமண்டலத்தின்மீது உட்கார்ந்தார். காவிரி நதியானது அம்முனிவரது கமண்டலத்தினுள் சிவபெருமானருளால் வந்திருந்ததையும், அகத்தியர் அதை நோக்கிப் போவென்றுரைக்காவிடில் அது அக்கமண்டலத்தினின்றும் நீங்கக்கூடாததன்மையையு முணர்ந்த விநாயகக்கடவுள் காகவடிவத்துடன் தந்திரமாய் அக்கமண்டலத்தின் மீது உட்காரவே, அச்சூதை யறியாத அம்முனிவர் காகத்தை நோக்கிக் கரத்தைத் தூக்கிப் போவென ஓட்டினார். உடனே விநாயகப்பெருமான் கமண்டலத்தைக் கவிழ்த்துவிட்டு, "காவிரி நதியே! முன்னம் சிவபெருமான் அருளிச் செய்தபடி அகத்தியர் தமது கரத்தைத் தூக்கி உன்னை நோக்கிப் போவென்றுரைத்தார். ஆகையால் இனி நீ பூமியின்மீது செல்வாயாக!" என்று கூறியருளினார். உடனே காவிரி நதியானது பிரவகித்து விரைவாய்ப் பாய்ந்து சென்றது. அவ்வாறு காவிரி கமண்டலத்தை விட்டு அகன்றவுடனே, தந்திமுகப்பெருமான் காகவடிவத்தை நீத்து வேதாத்தியயனஞ்செய்த ஒரு பிராமணச்சிறுவன் வடிவங்கொண்டு அவ்விடம் விட்டுச் செல்ல, அவர் அங்ஙனம் செல்லுவதைக் கண்ட அகத்தியமாமுனிவர் கடுஞ்சினங்கொண்டு, "என் கமண்டலத்திலுள்ள நதியைக் கவிழ்த்துவிட்டுச் செல்கிறானே! இவன் வரும்பயனைச் சிறிதும் ஆலோசிக்காத அகந்தையன் போலும்! இவன யாரென்பதையும், இவன் வலிமையினளவு யாதென்பதையும் கணப்பொழுதில் அறிவேன்!" எனக் கூறி, விரைவாக அவரைத் தொடர்ந்து சென்றார். அதுகண்ட விநாயகக்கடவுள் பெரிதும் அச்சங்கொண்டவர் போல விலகிச்செல்ல, அகத்தியமாமுனிவர் அவர் தலையிற் குட்டவேண்டுமென்று தமது இருகரங்களையும் முஷ்டியாக மடக்கிக்கொண்டு அவரைத் துரத்திச்சென்றார். அவ்வாறு அகத்தியமுனிவரால் துரத்தப்பட்ட குஞ்சரமுகப் பெருமான் அம்முனிவருக்கு மிகவும் சமீபத்திற்செல்லுவார்; திடீரென்று ஆகாயத்திற் கிளம்பிச் செல்லுவார்; பின்னர் பூமியில் விரைந்து வருவார்; அம்முனிவர் கைக்கு எட்டும்படி நெருங்கும்படி செல்லுவார்; பிறகு திடீரென்று வெகு தூரத்துக்கு அப்பாற் செலலுவார்; அவ்வாறு அவர் பல விடங்களுக்கு அம்முனிவரையிழுத்து அலைத்து அவரது கரத்துக்கு அகப்படாமல் தப்பித்திரியவும், அம்முனிவர் தளர்ச்சியடைந்து, "இவன் மாயம் சொல்லுதற்கரிது. இனி யான் என் செய்வது?" என்று சொல்லி ஏங்கி நின்றார். அப்போது விநாயகக்கடவுள் தமது திருவுருவத்தைக் காட்டியருள, அகத்திய மாமுனிவர் மனங்கலங்கித் தாம் அவரை எதிரியாகத் துரத்தினதற்காக வருந்தி யேங்கி, விநாயகப் பெருமானைக் குட்டுவதற்காக மடக்கிய தமது கரங்களின் முஷ்டிகளினால் கரிய மேகத்திலுண்டாகும் பேரிடியானது மலையின் நடுவு பிளக்கும்படி ஓயாமல் மகாபலத்துடன் தாக்குவதுபோல் தமது நெற்றி நோகக் குட்டிக் கொள்ளத் தொடங்கினார். அப்போது விநாயகக்கடவுள் அவர் அவ்வாறு குட்டிக் கொண்டதற்குக் காரணம் யாதென்று வினவ, அவர், "ஐயனே! ஒன்று முணராத அடியேன் தேவரீரைப் பிராமணச் சிறுவனென் றெண்ணி உமது தலையிற் குட்ட நினைத்தேன். அதற்குப் பரிகாரமாக இவ்வாறு தன்னைத் தானே தண்டித்துக் கொள்ளுகிறேன்" என்றார். பிறகு அகத்தியமாமுனிவர் அவரது பாதங்களைப் பன்முறை வணங்கித் தமது பிழையைத் திருவுளங் கொள்ளாமல் திருவருள்புரியும்படி பிரார்த்திக்க, விநாயகக்கடவுள் தாம் அவரது கமண்டலத்தைக் கவிழ்த்துக் காவிரியைப் பூமியிற்செல்லவிடுத்ததின் காரணத்தை அவருக்கு எடுத்துரைத்து, அப்புனித நதி தம்மை நீங்கியது கண்டு அவர் மனந்தாளாமற் செய்த காரியங்களைத் தாம் மனத்திற் கொள்வதில்லை யென வுரைத்து அவரைத் தேற்றி, அம்முனிவர் வேண்டிக் கொண்டபடி அம்முனிவரைப் போல் தமது சந்நிதானத்தில் நின்று இருகரங்களை மடக்கிய முஷ்டிகளால் நெற்றியில குட்டிக் கொள்பவரது குறைகளைத் தீர்த்து தாயைப்போல் வந்து அருள்புரிவதாகத் திருவாய்மலர்ந் தருளினார். பின்னும் அப்பெருமான் பிரவகித்துப் பூமியிற் சென்ற காவிரி நதியின் நீரில் ஒருகை யள்ளி துளிநீரு மில்லாத அவ்வகத்தியரது கமண்டலத்துனுள்விட, அக்கமண்டலம் நிரம்பியது மன்றி அதனின்றும் நீர் வழிந்து அந்நதியின் பிரவாகத்துடன் கலந்தது. அங்ஙனம் அம் மாமுனிவருக்கு ஸ்நானபானாதிகளுக்கும் பூசனைகளுக்கும் உபயோகப்படுமாறு ஈசனார் அளித்தருளிய புனிதநீரை அவருக்கு மீண்டுமளித்தருளி அவரது மனத்தைக களிப்பித்து, அம்முனிவரர் மனமகிழ்ந்து

மனக்கவலை பலக் குறைவு.

மனதிலே பகை, உதட்டிலே உறவு.

தம்மைத் துதித்ததை யேற்றுக் கொண்டு,
விநாயகக் கடவுள் தமது கணங்கள் தம்மைச்
சூழ்ந்துவர அவ்விடம்விட் டகன்றார். பிறகு
அகத்திய மாமுனிவரும் கொங்கு நாட்டினின்
றும் நீங்கித் தென்றிசையை நோக்கி விரை
வாக நடந்தருளினார்.

போகும் வழியில் அகத்திய மாமுனிவர்
குற்றால மென்னும் நகரத்தையடைந்தார். அந்
நகரத்தில் திருமுற்ற மெனும் பெயர்பெற்ற
திருமாலின் ஆலயமொன் றிருந்தது. அங்
குள்ள வேதியர்கள் உண்மையான நூல்களை
முறைப்படி ஓதி யுணர்ந்தவராயினும் மோகம்
நீங்கப்பெறாது தங்கள் மதத்தையே மேலான
தாகக் கருதி, சிவனடியார்களைக் கண்டால் மிக
வுஞ் சினங்கொண்டு அவர்களைப் பகைவர்களா
கக் கருதி யிகழ்ந்துபேசி, வேதாத்தியயனஞ்
செய்தவரெனும் பெயரைமட்டும் பூண்டு தமக்
கேற்பட்ட நெறியில் நின் றொழுகாதவரா
யிருந்தனர். அவைகளை யெல்லா முணர்ந்த
அகத்திய மாமுனிவர் அந்நகரினுள் நுழைந்து
திருமாலின் ஆலயத்தின் எதிரில் வருதலும்,
அங்கு கூட்டமாயிருந்த வைஷ்ணவர்கள்
அவரை யுற்றுநோக்கிக் கொலையாளர்களைக்
கண்டு பதைபதைப்பவரைப்போலப் பெருமூச்
செறிந்து கடுங்கோபத்துடன் அவரை நோக்கி,
“தரிக்கத்தகாத உருத்திராக்ஷமாலையையும் விபூ
தியையும் அணிந்துகொண்டாய்! தேவர்களெல்
லோருமறிய உலகத்தில் பிச்சையெடுத்தவனு
க்கு அடியவனாயிருக்கிறாய்! நீயா இங்குவருவது?
கையில் ஏகதண்டத்தையும் நீ தாங்கி யிருக்கி
றாய்! புத்தியீனனைப்போல் நில்லாமல் எம்
பெருமானுடைய நகரத்தை யணுகாமல் நீங்கு
வாயாக?” என்று கூறினார்கள். அது கேட்ட
அகத்திய மாமுனிவர், “வேதத்திற் கூறப்பட்
டுள்ள நெறியைத் தள்ளி நிற்போர்களே! இவ்வி
டம் நீங்கள் கூட்டமாயிருப்பதை யானறியேன்.
இது நல்லவழி யென்றெண்ணி வந்தேன். உங்
கள் தன்மை முன்னமே எனக்குத் தெரிந்திரு
க்குமாயின், யான் இந்நகரத்துக்கு வர நினைத்
தேயிருக்க மாட்டேன். கோபங்கொள்ளாதே
யுங்கள். நான் இதோ திரும்பிப் போய்விடுகி
றேன்” என்று சொல்லி அவ்விடத்தினின்
றும் நீங்கி, “திருந்திதேவரும், பிரமதேவரும்,
துருவாசர், பிருகு, கவுதமர், கண்ணுவர், ததீசி
ஆகிய முனிவர்களும் இவர்களுக்கிட்ட சாபங்
கள் பொய்க்குமோ!” என்று தமக்குள்ளேயே
சொல்லிக்கொண்டு, உயிர்க்குயிராய்நிற்கும் சிவ
பெருமானை யிகழ்பவர்களாகிய அவர்களுடைய
அகங்காரத்தை வேருடன் களைந்தெறியவே
ண்டுமென்று தீர்மானித்து, முன்னாளில் தாம்
கற்ற மாயவித்தையினால் பாகவத வேடந் தரித்
துக்கொண்டு மீண்டும் அந்நகரத்துக்குள் சென்
றார். உடனே அவ்வைஷ்ணவர்கள் அவரை
யெதிர்கொண்டு சென்று வணங்க, அகத்தியமா
முனிவர் அவர்களது பக்தியைப் புகழ்ந்து, திரு
மாலின் ஆலயத்துக்குள் தம்மை அழைத்துக்
கொண்டு போகும்படி வேண்டினார். அவ்வாறே
அவர்கள் அழைத்துச்செல்ல, அம் முனிவர்
தமக்குத் திருமாலை அங்கு ஆராதிக்க வேண்டு
மென்ற ஆவலுண்டாயிற் றென்றும் அதற்கு
வேண்டிய சாமக்கிரியைகளைச் சேகரித்துத்
தரவேண்டு மென்றும் அவ்வைஷ்ணவர்களைக்
கேட்டுக்கொண்டார். உடனே அவர்கள் திரு
மஞ்சனத்துக்குத் தூய்மையான தீர்த்தம், அப்
போது பறித்த மலர்கள், செஞ்சந்தனம், அழ
கிய வஸ்திரம் முதலியவைகளைக் கொண்டு
வந்து தர, அம்முனிவர் சிவபெருமானைச் சிந்
தையில் தியானித்து ஆங்குள்ள திருமாலின்
சிலையின் சிரமீது தமது கரத்தை வைத்து
“குறுகு, குறுகு!” என்று கூறினார். அப்
போது அச்சிலை அனலிற்பட்ட மெழுகே
போல் குழைந்து இலிங்கத்தின் வடிவமாக
ஆயிற்று. உடனே அகத்திய முனிவர் தமது
பழைய உருவத்தை யெடுத்துக்கொண்டு சிவ
பெருமானை அங்கு பிரதிஷ்டை செய்து
முறைப்படி அபிஷேகஞ் செய்து ஆராதிக்கத்
தொடங்கினார். அதுகண்ட அவ்வைஷ்ணவர்
கள் மகா கோபங்கொண்டு, “முப்புரத்தை யெ
ரித்த கடவுளுக் கடியவனாகிய இக்குறியவன்
முன்னால் நாம் இகழ்ந்ததும் நில்லாமற் போ
வதுபோல் பாசாங்குசெய்து மாறு வேடத்து
டன் வஞ்சகமாய் மீண்டுவந்து தனது மாயத்
திறல் இவ்வைஷ்ணவ சமயத்தை யழித்து
விட்டான். இவனைப் பிடியுங்கள்!” என்று
கூறி அவரைச் சூழ்ந்துகொண்டார்கள். உட
னே அகத்திய மாமுனிவர் தமது கோபாக்கி
னியை அவர்கள்மீது செலுத்த, அவர்கள்
அதன் வெப்பத்தைத் தாங்கமாட்டாதவர்களா
ய்த் தங்கள் நகரத்தை விட்டோடிப் பூமியெங்
கும் சிதறினார்கள். பிறகு அகத்திய மாமுனிவர்

சிவபெருமானது பூஜையை முறைப்படிசெய்து
முடித்து, எம்பெருமானிடம் விடைபெற்று
அவ்விடம் விட்டு நீங்கிப் பொதியமலையை
யடைந்து சிவபெருமானது பாதத்தாமரை
களைத் தியானித்து மெய்த்தவ மியற்றிவந்தார்.

அகத்தியமாமுனிவர் பொதியமலையில் தவஞ்
செய்துகொண்டிருக்க, அவரைவிட் டகன்ற
காவிரிநதியானது கிழக்குமுகமாக விரைந்து
சென்று சீகாழிப்பதியில் இந்திரன் அமைத்த
நந்தவனத்தைச் செழிப்புறச் செய்தது. இந்
திரன் அதுகண்டு வியப்புற்று விநாயகக்கடவு
ளது அருளைப்புகழ்ந்து, நாள்தோறும் விடியு
முன் எழுந்து மலர்களைப் பறித்துக்கொண்டு
வந்து சிவபெருமானது பாதமலர்களை முறைப்
படி அருச்சித்து ஒப்பற்ற தவத்தைச் செய்து
வந்தான். அக்காலத்தில் சூரபதுமனுக்குக்
குற்றேவல் செய்து இளைத்துப்போன சில தே
வர்கள் மனந்தளர்ந்து அவ்விழிவு நம்மை
விட்டு என்று நீங்குமென வருந்தி பொன்னுல
கத்தைவிட்டு மண்ணுலகத்தை யடைந்து
தென்னாட்டில் சீகாழிப்பதியில் எம்பிரானை
நோக்கித் தவம் புரிந்துகொண் டிருந்த
தங்கள் அரசனாகிய இந்திரனிடம் சென்று
அவனது பாதங்களைவணங்கி யெழுந்துநின்று,
“எமதிறைவனே! தருமத்தை விலக்கிப் புவ
னமெல்லாஞ் சென்று கொலை செய்துவரும்
அவுணர்களுக்கு அடங்கித் தொண்டுசெய்யும்
படி எங்களை விட்டுவிட்டுத் தேவரீர் இவ்விடம்
வந்திருப்பது நியாயமா? எமையாளும் நாயகன்
தேவரீரன்றோ? பூர்வத்தில் கஜமுகாசுரனது
ஏவல்களைச் செய்து மெலிந்தோம். இப்போது
சூரபதுமனது ஏவல்களைச் செய்து மிகவும்
இளைத்தோம். இனி எங்களால் இத்
தகைய துன்பங்களைச் சகிக்கமுடியாது. எந்
நாளும் தேவரீரையே புகலிடமாகக் கருதும்
நாங்கள் பகைவர்களாகிய அசுரர்களால் துன்ப
முற்றிருக்க, தேவரீர் உமதுயிரைக் காப்பாற்
றிக் கொள்வதற்காக இங்குவந்து மறைந்திருப்
பது உமக்குத் தகுதியோ? எங்களுடைய
துன்பம் நீங்க யாதாயினுமொரு காரியத்தைத்
தேவரீர் செய்தருளவேண்டும்” எனத் தங்
கள் குறைகளைப் பலவாறு எடுத்துக்கூறிப்
புலம்பினார்கள். அப்போது இந்திரன் அத்தே
வர்களை நோக்கி, “தேவர்காள்! கொடிய சூர
பதுமன் என்னை இழிதொழில்களைச் செய்யச்
சொன்னதுடன் திருப்தியடையாமல், என்னை
அநியாயமாகச் சிறையிலிட்டு இந்திராணியை
அபகரித்துக்கொள்ள வெண்ணித் தன் சேனை
களைப் பொன்னுலகத்துக்கு அனுப்பினான்.
அவனுடைய கெட்ட எண்ணத்தை அறிந்து
கொண்ட நான் அவனுடைய மீள்வதற்கரிய
சிறையில் நான் அடைபட்டால் நாம் அசுரர்
களையழித்து வெற்றிபெறுவதற்குச் சர்வேசு
வரரான சிவபெருமானை நோக்கித் தவமியற்ற
மார்க்கமில்லாமற் போகுமேயென்று சிந்தித்து,
உங்களைவிட்டு இங்குவந்து மறைந்திருந்து எம்
பெருமானை ஆராதித்துத் தவமியற்றி வந்தேன்.
இனி, நாம் திருக்கைலாயத்துக்குச் சென்று
எம்பெருமானிடம் நமது குறைகளைக்கூறி நம்
மை உய்விக்கும்படி பிரார்த்திப்போம், வாருங்
கள்!” என்றான். அதுகேட்ட தேவர்கள் பர
மானந்தமடைந்து இந்திரனைப் புகழ்ந்தார்கள்.

உடனே இந்திரன் தேவர்களை ஆங்கே நிறு
த்தி இந்திராணியினிடஞ் சென்று தான் திருக்
கைலாயத்துக்குத் தேவர்களுடன் செல்வதாக
நிச்சயித்ததைத் தெரிவிக்க, இந்திராணி தன்
னந்தனியே காட்டி லிருக்கவேண்டுமே யென்
றும், அசுரர்கள் வந்து தன்னைத் துன்புறுத்தி
னால் தன்னைக் காத்துக்கொள்ளத் தன்னாலொ
ன்றும் செய்யமுடியாதே யென்றும் கவலை
யுற்று ஏங்கித் தானும் திருக்கைலாயத்துக்கு
வருவதாகத் தெரிவித்தாள். அதுகேட்ட இந்
திரன் “பெண்ணே! நீ அஞ்சாதே! முன்பு
கடல்கடைந்த காலத்தில் மோகினி வேடம்
பூண்ட திருமாலுடன் காளகண்டராகிய எம்
பெருமான் புணர்ந்து, கருங்கடல்போன்ற மே
னியும் செவ்வானம் போன்ற சடையும் செண்
டை யேந்திய கரமும் உடைய உக்கிரமான
புதல்வனைத் தந்தருளினார். அப்புதல்வனுக்கு
அரிகரபுத்திர ரென்றும் ஐயனா ரென்றும் மகா
சாத்தாவென்றும் திருநாமம் சூட்டப்பட்டது.
அவ்வையனாருக்கு நிகரானவர் எவருமில்லை.
நான் வரும்வரையில் உன்னைக் காத்தருளும்
படி அப்பெருமானை நான் பிரார்த்திக்கிறேன். நீ
கவலையற்றிரு!” என வுரைத்து மகாசாத்தா
வைத் தியானித்தான். உடனே மகாசாத்தாவான
வர் மேகத்தையொத்த கொடிய யானையின்
மீது பூரணை புட்கலை யென்னும் இருதேவி
மார்களுடன் பலபூதங்கள் தம்மைச் சூழ்ந்து
வர இந்திரன்முன் தோன்றினார். உடனே இந்

திரன் அவருடைய திருவடிகளை மெய்யன்புடன் வணங்கி நிற்க, அவர் அவன் விரும்பியது யாதென வினவினார். அப்போது இந்திரன் தான் திருக்கைலாயத்துக்குச் சென்று சிவபெருமானைத் தரிசித்துத் திரும்பும் வரையில் இந்திராணியை அசுரர்கள் கையிலகப்படாமல் காப்பாற்றவேண்டுமென்று பிரார்த்தித்தான். உடனே மகாசாத்தாவானவர், "இந்திரனே! நாம் உன் மனைவியைக் காப்போம். நீ கவலையின்றிச் செல் !" என்று கூறி மறைந்தருளினார். இந்திரனும் கவலைநீங்கித் தேவர்களுடன் திருக்கைலாயத்துக்குச் சென்று எம்பெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோவிலின் வாயிலையடைந்து நந்தி யெம்பெருமானுடைய திருவடிகளை வணங்கித் தன் குறைகளைக்கூறித் தாங்கள் எம்பெருமானைத் தரிசிக்கவந்ததாகத் தெரிவித்தான். அதுகேட்ட திருநந்திதேவர் "இந்திரனே ! எம்பெருமான் சனகாதி முனிவர்களுக்கு ஞானோபதேசம் செய்துகொண்டிருக்கிறார். ஆகையினால் எவரும் இப்போது உள்ளே செல்லக்கூடாது" எனத் தெரிவிக்க இந்திரன், "ஐயனே! எம்பெருமானைத் தரிசிக்காமல் நாங்கள் மீண்டும் பூவுலகத்துக்குச் சென்றால் அவுணர்கள் எங்களைச் சிறையிலிடுவார்கள். ஆதலின் எம்பெருமானைத் தரிசிக்கச் சமயம் வாய்க்கும் வரையில் இங்கேயே நாங்களிருக்கிறோம்" என்று சொல்லி, நந்தியெம்பெருமானுடைய அனுமதிபெற்று அத்திருவாயிலின் ஓர் புறத்திற் காத்திருந்தனர்.

அப்படியிருக்கையில், சூரபதுமன் தங்கையாகிய அஜமுகி யானவள் துன்முகி யென்னும் தோழியுடன் பூவுலகின்கண் உலவிவருகையில் சீகாழிப்பதியிலுள்ள இந்திரனது நந்தவனத்தைக் கண்டு, இது பூவுலகத்தார் வைத்ததன்று, தேவர்கள் வைத்ததுதான் எனத் தீர்மானித்து, இந்திரன் ஒரு சமயம் அங்கு வசித்துவரலாமெனச்சந்தேகமுற்று, அந்நந்தவனத்தினுள் நுழைந்து பார்க்க, இந்திராணி அங்கு தவஞ்செய்துகொண்டிருந்ததைக் கண்டு, தன் தமையனாகிய சூரபதுமன் இந்திராணியினிடத்துக் கொண்ட இச்சையைப் பூர்த்தி செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் அவளை யணுகி, இந்திரனைப் பலவாறு இகழ்ந்தும் சூரபதுமனைப்புகழ்ந்தும், சூரபதுமனது பட்டமகிஷியாயிருக்கும் பாக்கியம் அவளுக்குக் கிடைக்குமென்றும் சொல்லித்தன்னுடன் வரும்படி அவளையழைத்தாள். இந்திராணி கற்புடைமையைப்பற்றிப் பல உண்மைகளை யெடுத்துரைத்தும் அஜமுகி அவைகளை இலக்ஷியஞ்செய்யாமல் அவளது கரத்தைப் பலாத்காரமாகப் பற்றியிழுத்தாள். இந்திராணி நடுநடுங்கி ஐயனாரைத் தியானித்து, "தேவர்களுக்குள் முதல்வரே! ஓலம்! மெய்யர்க்கு மெய்யரே! ஓலம்! வாரணத்திறைவனே! ஓலம்!" என்று கூவினாள். உடனே மகாசாத்தாவினால் இந்திராணிக்குக் காவலாக வைக்கப்பட்டிருந்த வீரர்களிற் சிறந்த வீரரான வீரமாகாளர், கரத்தில் வாளேந்தி இடியோசை போல் ஆரவாரித்துக்கொண்டுவந்து இந்திராணியை யிழுத்துச் செல்லும் அஜமுகியை நில்லென்று சொல்லித் தடுத்து, இந்திராணியை நோக்கி, "தாயே! நீங்கள் சிறிதும் அஞ்சவேண்டாம். தங்களைத்தொட்ட அஜமுகியின் கரத்தை இதோ வெட்டித் துணிக்கிறேன்" என்றார். அது கேட்ட அஜமுகி மிகவும் வெகுண்டு, "மும் மூர்த்திகளும், இந்திரனும், மற்றைத் திக் பாலகர்களும் என்னை யெதிர்க்க அஞ்சுவாரெனில், தேவர் கூட்டத்தில் ஒருவனாகிய நீயோ என்னை யிகழ்ந்து தப்புவாய்?" என்று கூறி உக்கிரமான கோபத்துடன் அவனை வெறித்துப் பார்த்தாள். வீரமாகாளர் சிறிதும் அஞ்சாது, "அஜமுகி! இந்திராணி தனித்திருக்கிறாளென் றெண்ணி அவளைத் திருட்டுத்தனமாகப் பிடித்துச் செல்ல முயன்றாய். இவளைவிட்டுச் செல்வாயாயின், நீ செய்த பெருங்குற்றத்தை மன்னிப்பேன். உன்னைக் கொல்லமாட்டேன். பயமின்றிச் செல்லலாம்!" என்றார். அப்போது அஜமுகி, "இவளைக்காக்கும்படி உனக்குக் கட்டளையிட்டவர் யார்?" என்று வினவ, வீரமாகாளர், "மூவுலகங்களுக்கும் அதிபதியும், மேகங்கள்கூடி நின்றாற்போன்ற கருநிறமுடையவரும், தெய்வத்தன்மைபொருந்திய வெள்ளை யானையை வாகனமாக உடையவருமான ஐயனார் எனக்கு இவ்வேலையை யிட்டார். என் பெயர் வீரர்களில் வீரனான வீரமாகாளன்!" என்று கூறினார். அவர்கூறிய வார்த்தைகள் இந்திரனுக்கும் பொருந்துமாகையால், அஜமுகி அவர் இந்திரனது ஏவலாளனென மயங்கி மகா கோபத்துடன் தனது சூலத்தை அவர்மீதெறிந்தாள். அதை வீரமாகாளர் தமது வாட்படையினால் துணித்தார். பிறகு அவள்

தன் தோழியின் சூலத்தை வாங்கி அவர்மீதெறிய, அதையும் வீரமாகாளர் வாளினால் துணித்தார். பிறகு ஒரு பெரிய மலையைப் பிடுங்கி அவர்மீதெறிந்தாள். வீரமாகாளர் அதையும் தமது வாளினால் வெட்டினார். ஆனால் அவர் வாளும் ஒடிந்தது. அஜமுகியானவள் அவருடைய வல்லமையைக்கண்டு அவரை வெல்லுவது அரிதென வுணர்ந்து, "அறிவிலியே! இங்கு நில்லாதே! என் தமையன் சூரபதுமனுக்கு இந்திராணியைக் கொண்டு போகிறேன். நீ என்னைத் தடுத்ததை அசுரர்கள் அறிந்தால் உன்னை யழித்துவிடுவார்கள். நான் உன்னைக் கொன்று தின்னாமல் உன் பெரும் பிழையைப் பொறுத்து மன்னித்தேன். பிழைத்துப்போ!" என்று சொல்லிக்கொண்டே இந்திராணியைப் பிடித்துக்கொண்டு திருட்டுத்தனமாய்ச் செல்ல முயன்றாள். உடனே வீரமாகாளர் தமது உடைவாளை யுருவிக்கொண்டு அஜமுகியை யணுகி இந்திராணியைப் பிடித்த அவளது கரத்தை வெட்டித் துணித்து இந்திராணியை விடுவித்துப் பிறகு அஜமுகியைத் தமது காலினால் உதைத்துத் தள்ளி யுருட்டினார். பிறகு வீரமாகாளர் துன்முகியும் இந்திராணியைச் சிறிதுநேரம் பிடித்திருந்தாளாகையினால் அவள் கையொன்றையும் வெட்டித்துணித்து அவளையும் காலினால் உதைத்துத் தள்ளி யுருட்டினார். அஜமுகியும் துன்முகியும் கோவென்றலறிக்கொண்டு கீழே விழுந்து புரண்டழுதார்கள். பிறகு துன்முகி தேற்ற, அஜமுகி யெழுந்து அவளையுமழைத்துக்கொண்டு வீரமாகாளரையும் தேவர்களையும் சிறையிலடைப்பதாக வீரம் பேசிவிட்டு, தனக்குநேர்ந்த விபத்தைத் தன் தமையன் சூரபதுமனிடம் சொல்வதற்காக வீரமகேந்திரபுரியை நோக்கி நடந்தாள். அவள் அவ்விடம்விட்டகன்றபின், வீரமாகாளர் இந்திராணியை நோக்கி, "தாயே! நீங்கள் அசுரர்களுக்காகப் பயப்படவேண்டாம். தங்கள் நாயகன் வருமளவும் தங்களை நான் காப்பாற்றுகிறேன்" என்று சொல்லி மறைந்தார். பிறகு இந்திராணி அந்த வனத்திலிருந்துகொண்டு தனது நாயகன் தன் காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு சீக்கிரம் மீண்டு வரவேண்டுமென்று தவமியற்றத் தொடங்கினாள்.

நமது சிறு கதை

OUR SHORT STORY

(353-ம் பக்கத் தொடர்ச்சி.)

அன்றுமாலையில் கோவிந்தசாமி முதலியாரும் சுந்தரவல்லியும் தங்கள் புதிய பங்களாவுக்குத் திரும்பிவந்து பார்த்தபோது அவர்களுக்கு அது அடையாளமே தெரியவில்லை. பங்களாவின் வெளிவாசற்படியிலேயே அவர்கள் மோட்டார் வண்டியைவிட் டிறங்கி தங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துநின்ற தங்கள் சினேகிதர்களுடன் உல்லாசமாய்ப் பேசிக்கொண்டும், நடராஜ முதலியாரால் அமைக்கப்பட்டிருந்த மின்சார விநோதங்களைப்பார்த்து ஆநந்தித்துக்கொண்டும் மெல்லநடந்து உள்ளே சென்றனர். முன்கூடத்தின் மத்தியில் ஓர் அழகிய சலவைக்கல் மேஜையைச்சுற்றிப் போடப்பட்டிருந்த விநோதமான நாற்காலிகளில் அமர்ந்து யாவரும் அற்ப ஆகாரம் புசித்தனர். பிறகு நடராஜ முதலியாரும் கனகவல்லியும், கோவிந்தசாமி முதலியாரையும் சுந்தரவல்லியையும் அவரவர்களுடைய அறைகளுக்கு அழைத்துப்போய் அவர்கள் தங்கள் உடைகளைச் சீர்திருத்திக் கொள்ளும்படி தனியேவிட்டுத் திரும்பினார்கள்.

நடராஜமுதலியார் தமது அறையைவிட்டு அகன்றபின், கோவிந்தசாமி முதலியார் தமது ஞாபகக் குறிப்புப் புத்தகத்தை வைப்பதற்காக மேஜையினண்டையிற் சென்றார். மேஜையின் மீது விநோதமான முகர் வைக்கப்பெற்றும், தமது மேல்விலாசம் எழுதப்பெற்றுமிருந்த ஒருகடிதம் வைக்கப்பட்டிருந்ததைக்கண்டு ஆச்சரியப்பட்டு அதைப் பிரித்து வாசித்துப்பார்த்தார். அதில் பின்வருமாறு எழுதியிருந்தது.

"நாளையதினம், அதாவது, சித்திரைமாதம் முதல்தேதியன்று நமக்குள் உள்ள விவாதங்கள் முடிவாய்த் தீரவேண்டும். ஆகையினால் உனக்குப் பெருந்தீங்கு விளைவித்துக் கொள்ள வேண்டுமென்று, ஆசையில்லாவிட்டால், நீ நாளையதினம் இரவு பத்துமணிக்கு இராயபுரத்துப் பெண்பிள்ளை ஆஸ்பத்திரிக்குப் பத்தடி தூரத்துக்கப்பால் சொக்காய் நிஜார் போட்டுக்கொண்டும், தமது தலைப்பாகையின் மீது இக்கடிதத்தில் காணப்படும் முகரைப் போன்ற வெள்ளிக்குறியை அணிந்துகொண்டும் நிற்கும் ஒருவரை யணுகி, 'எட்டுப்பேர்க

ளிஷ்டப்படி வரத்தயாராயிருக்கிறேன்' என்று சொல்லவேண்டும். அவர் உன்னை எட்டுப்பேர்கள் இருக்குமிடத்துக்கு அழைத்துச் செல்வார். வரத் தவறினல் வேறுவிதமாக உனக்குத் துன்பம் விளைவித்து கணக்குத் தீர்க்கப்படும்."

இவ்வாறு, கையெழுத்து இன்னருடையது என்று கண்டுபிடிக்கமுடியாமல் பலவிதமாகக் கோணலாய் எழுதியிருந்தது. அதன்கீழே யாதொரு கையொப்பமும் காணப்படவில்லை.

"எட்டுப்பேர்களே! நம்முடைய விவாதத்தின் முடிவு நெருங்கிவிட்டதுபோலும்!" என்று தம்மை யறியாமல் கோவிந்தசாமிமுதலியார் உரக்கச் சொன்னர்.

மறுநிமிஷம் நடராஜ முதலியார் நகைத்துக் கொண்டே உள்ளே நுழைந்து, "முதலியாரவாள்! அடிக்கடி 'எட்டுப்பேர்களே!' என்று விளித்து ஏதேதோ சொல்லுகிறீர்களே! அவர்கள் யார்?" என்றார். கோவிந்தசாமி முதலியார், அக்கடிதத்தைத் தமது மேஜைக்குள் வைத்துக்கொண்டு, "எட்டுப்பேர்கள் என்னுடைய அந்தரங்க நேயர்கள். எங்களுக்குள் சில காலமாகவுள்ள **விவாதம்** தீரப்போகிறது" என்று சொல்லி நகைத்தார். பிறகு இருவரும் போஜனத்திற்காக கீழேயிறங்கிச் சென்றார்கள்.

ஒன்பதாம் அத்தியாயம்

கோவிந்தசாமி முதலியாரும் ஜமீன்தாரும்

மூந்தின அத்தியாயத்திற் கூறிய சம்பவங்கள் நடந்த மறுநாள், கோவிந்தசாமி முதலியார் தேவராஜமுதலி தெருவின் வழியாகப் போய்க்கொண்டிருக்கையில், ஒரு கடைக்கு எதிரில் நிறுத்தப்பட்டிருந்த வண்டியிலிருந்து ஒருவர், "தங்கவேல்! தங்கவேல்!" என்று அவரை யழைத்தார். கோவிந்தசாமி முதலியார் திரும்பிப் பாராமல் தம் வழியே சிறிது விரைவாய்ச் சென்றார். உடனே அவரை யழைத்தவர், வண்டியிலிருந்து கீழே குதித்து வெகு விரைவாய் நடந்து அவரையணுகி, "தங்கவேல்! கூப்பிடக் கூப்பிட காதிற் போட்டுக்கொள்ளாமற் போகிறாயே!" என்றார். அவரைச் சந்தித்து அவருடன் பேச மனமில்லாதவர்போல கோவிந்தசாமி முதலியார் சற்றுத்தயங்கி பிறகு திரும்பி "அந்தப் பெயரால் கூப்பிடப்பட்டு நிரம்ப காலமாயிற்று. அதனல் அந்தப் பெயரே மறந்து போயிற்று" என்றார். "பலே! முப்பது வருஷம் கேட்ட பெயர் இரண்டுவருஷம் கேட்காததால் மறந்துபோயிற்றா? என்னுடன் பேச இஷ்டமில்லை போலும்!" என்றார் அவரை யழைத்தவர்.

கோவிந்த.—ஆம்; ஒருவாறு இஷ்டமில்லைதான். முருகன்பூண்டி ஜமீன்தார் குலத்துக்கே பெரிய அவமானம் நேரும்படி குற்றஞ் செய்து சிறைச்சாலைக்குப் போனபின், அந்தக் குலத்தாருடன் திரும்பவும் கலந்து அதனல் அவர்களுக்குத் திரும்பவும் அவமானம் விளைவிக்க எனக்கு இஷ்டமில்லை.

ஜமீன்தார்.—தங்கவேல்! நீ பேசுவது நன்றாயிருக்கிறது. நீ அம்மனிதனைக் கொல்லாமல் விட்டிருந்தாலன்றோ நம் குலத்துக்கு அவமானம் நேர்ந்திருக்கும். நீ கொன்றதுதான் சரி. அதுதான் நமது குலதருமம். அது போகட்டும். சிறைச்சாலையை விட்டு வெளியேவந்து ஆறு மாத காலமாயிற்றே. இவ்வளவு காலமாய் எங்கே யிருந்தாய்? எவ்வளவு தேடியும் உன்னைக் கண்டுபிடிக்க முடியவில்லையே. செலவுக்கு என்ன செய்தாய்; எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தால் அனுப்பியிருக்கமாட்டேனா? இவன் கையில் பணமேது என்று எழுதாமலிருந்தாயோ?

கோவிந்த.—அப்படி யெல்லாம் ஒன்றுமில்லை. நான் இருப்பதாக உனக்குத் தெரிவிப்பதாகவே எனக்கு உத்தேசமில்லை. அதற்காக என் பெயரைக்கூட மாற்றிக்கொண்டு விட்டேன். என் பெயர் தற்காலம் கோவிந்தசாமி முதலியார். ஏதோ கடவுளினருளால் கொஞ்சம் பணமும் கிடைத்திருக்கிறது.

ஜமீன்.— அப்படியா? அதைச் சொல்! இனிமேல் அடிக்கடி நான் உன்னைக் கடன் கேட்பேன்.

கோவிந்த.— முத்துக்குமாரு! உனக்கில்லாத பணம் எனக்கு ஏதுக்கு? எவ்வளவு வேணுமோ சொல்! பாங்கிக்குச் செக்குக் கொடுக்கிறேன். இவனுக்கு ஏது பாங்கியில் பணம் என்று ஆச்சரியப் படுகிறாயோ! "கோவிந்த நடராஜ பவர் கம்பெனி" என்று புதிதாய்ச் சென்னையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பெரிய கம்பெனியில் நான் முக்கியக் கூட்டாளி!

ஜமீன்.—அப்படியா? சரி. இனிமேல் எனக்குக் கவலையில்லை. கடன்காரர்களுக்குப் பெரும்பாலும் ஒத்திவைக்கப்பட்டிருக்கும் நமது

ஜமீன் உன் கையில் உயர்ந்த ஸ்திதிக்கு வரும்.

கோவிந்த.—முத்துக்குமாரு! என்ன சொன்னய்? என் கையிலா! நீ இன்னொரு முறை விவாகஞ் செய்துகொண்டு சுகமாயிரு. நமது ஜமீன், கடன் என்பது சிறிதுமில்லாமலிருப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

ஜமீன்.—தங்கவேல்! நான் உயிருடனிருந்தாலல்லவா நீ அவ்வாறெல்லாம் செய்வதற்கு? நேற்றிரவு முத்துவீரன் சங்கத்தைத் தொனித்து என்னை யழைத்தான். இனிமேல் என் வாழ்நாட்களை விரல்விட்டு எண்ணிவிட முடியும்.

கோவிந்த.—முத்துக்குமாரு? இப்படிப் பட்ட அத்தைப்பாட்டி கதைகளில் உண்மையாகவே உனக்கு நம்பிக்கை யிருக்கிறதா? அதுவுமன்றி சமீபத்தில் உன் மனைவி இறந்ததைப்பற்றி மனவருத்தத்துடன் நினைத்துக் கொண்டிருக்கையில, உன் மனத்தில் அகாரணமாகப் பயமுண்டாகி, முத்துவீரன் சங்கம் தொனித்ததாக நீ மருண்டிருக்கலாம்.

ஜமீன்.—தங்கவேல்! நமது குலத்தின் சரித்திரத்தில் நம்பிக்கை யில்லாதவன்போல் பேசுகிறாயே. இது அத்தைப்பாட்டி கதையல்ல. நான் மருட்சி யடையவுமில்லை.

கோவிந்த.—முத்துவீரன் சங்கம் தொனித்தது எனக்காக இருக்கலாம். நாளைக்காலையில் நான் பிழைத்திருந்தால் மறு ஜன்மந்தான். முத்துக்குமாரு! நான் சமீபத்தில்தான் ஒரு சிறுமியைக் கலியாணஞ் செய்துகொண்டேன். அவள் கர்ப்பமாக இருப்பதாகவும் கேள்விப்பட்டேன். நான் இன்றிரவு உயிரிழப்பேனேயாகில், நீ என் மனைவியையும் குழந்தையையும் காப்பாற்றுவாயா?

ஜமீன்.—தங்கவேல்! என்ன கேள்வி இது! உன் மனைவி என் மகள், உன் குழந்தை என் குழந்தை. என் ஆவி உள்ளவரையிலும் அவர்களுக்கு யாதொரு தீங்கும் நேரிடாது. அதிருக்கட்டும். நீ பேசுவதைப் பார்த்தால், இன்றிரவு ஏதோ அபாயகரமான சம்பவம் நடக்கும்போ லிருக்கிறதே. அதைத் தடுக்கமுடியாதோ? என்னல உனக்கு அவ்விஷயத்தில் ஏதேனும் உதவிசெய்ய முடியுமோ?

கோவிந்த.—தடுக்கவும் முடியாது, பிறர் உதவிசெய்யவும் முடியாது. என்னல் முடிந்த ஏற்பாடுகள் செய்திருக்கிறேன். தர்மம் என் கக்ஷியி லிருக்கிறது. அதனல்தான் அலக்ஷியமாயிருக்கிறேன். நாளையதினம் காலையில் எல்லாம் ஒருவாறு தீர்ந்துவிடும்.

அதுகேட்டு ஜமீன்தார் **விசனத்துடன்** பெருமூச்செறிந்து, கோவிந்தசாமி முதலியாரை ஜாக்கிரதையா யிருக்கும்படி சொல்லிவிட்டுத் தம் வண்டியிலேறிச் சென்றார். கோவிந்தசாமி முதலியாரும் தம் வழியே சென்றார். அவரவர் விதியை அவரவர்தாமே அனுபவித்தாகவேண்டும்!

பத்தாம் அத்தியாயம்

எட்டுப்பேர்கள் தோல்வி

இரவு பத்துமணியாயிற்று. இராயபுரம் ஆஸ்பத்திரிக்குச் சமீபத்தில் ஒருவர் மெல்ல நடந்து போய்க்கொண்டிருந்தார். அவருக்குப் பத்தடி தூரத்தில் ஒரு கோச்வண்டி அவரைப் பின்தொடர்ந்து வந்துகொண்டிருந்தது. அம்மனிதர் ஆஸ்பத்திரியைத் தாண்டிப் பத்தடி தூரம் சென்று, அங்கு நின்றுகொண்டிருந்த ஒருவரை யணுகி, தமது இடதுகையை நீட்டி அவரது தலைப்பாகையிலிருந்த ஒரு வெள்ளிக் குறியை எடுக்க முயன்றார். பாகைக்காரர், "என்ன ஐயா! செய்கிறாய்? சேஷ்டைபண்ணதே ஐயா!" என்றார். "இல்லை, அந்தக் குறிக்கு என்ன அர்த்தம் என்று பார்க்கலாமென்று நினைத்தேன்" என்றார் மற்றொருவர். "அது தெரிவதனல் உனக்கு யாதொரு பயனுமில்லை. நீதானே நான் எதிர்பார்க்கும் மனிதன்?" என்றார் பாகைக்காரர். "நான் கோவிந்தசாமி முதலியார்! நீ எதிர்பார்க்கும் மனிதன் நான்தானே என்னவோ, அது உனக்குத்தான் தெரியும்" என்றார் கோவிந்தசாமி முதலியார். அப்போது இன்னொரு கோச்வண்டியும் அவ்விடத்துக்கு வந்துநின்றது. கோவிந்தசாமி முதலியார் அதன் விளக்கு வெளிச்சத்தில் தமக்குமுன் நின்றவரைக் கவனித்துப் பார்த்தார். கட்டைக்குட்டையாய் ஒரு மார்வாரி நிற்பதைக்கண்டு, "ஓகோ! தூணிசந்தா? என்ன அப்பா! சௌக்கியமா?" என்று புன்னகையுடன் கேட்டார். அதற்கு தூணிசந்து, "நான் சௌக்கியமா யிருந்தாலென்ன, அசௌக்கியமா யிருந்தாலென்ன உனக்கு? புறப்படு, நேரமாயிற்று. அதோ நிற்கும் வண்டியிலேறு!" என்று சொல்லி, முதலில் கோவிந்தசாமி முதலியாரைத் தொடர்ந்து

வந்த கோச்வண்டியைச் சுட்டிக்காட்டினன். கோவிந்தசாமி முதலியார் அந்த வண்டியிலேறத் தமக்கிஷ்டமில்லை யென்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டு, இரண்டாவதாக அங்கு வந்துநின்ற வண்டியி லேறிக்கொண்டு, "தூனிசந்த்! நீயும் வந்து இந்த வண்டியில் ஏறிக்கொண்டால் உன்னுடன் வருகிறேன். இல்லாவிட்டால் நான் வந்தவழியே திரும்பிச் செல்லுகிறேன்" என்றார். தூனிசந்த் அவர் சொன்னபடி செய்வதைத்தவிர வேறு வழியில்லையென்று கண்டுகொண்டு, முதலில்வந்த வண்டியினண்டையிற் சென்று அவ்வண்டிக்காரனிடம் ஏதோ இரகசியமாய்ச் சொல்லிவிட்டுத் திரும்பிவந்து கோவிந்தசாமி முதலியார் ஏறிக்கொண்டிருந்த வண்டியில் தானும் ஏறிக்கொண்டு, வண்டியை வலையர் வளைவு தாண்டி ஓட்டச் சொன்னன்.

வண்டி வெகுவேகமாய்ப் புறப்பட்டுப் பதினைந்து நிமிஷநேரம் ஓடியபின், தூனிசந்த் வண்டியை நிறுத்தச்சொல்லி, கோவிந்தசாமி முதலியாரைப் பார்த்து, "ஐயா! கீழேயிறங்கும். இனிமேல் நடந்துதான் செல்லவேண்டும்" என்றான். கோவிந்தசாமி முதலியார் கீழேயிறங்கி, "தூனிசந்த்! இன்னும் நிரம்பதூரம் போகவேண்டுமோ?" என்று கேட்டார். "இல்லை. இன்னும் இரண்டு பர்லாங்கு தூரந்தானிருக்கும்" என்றான் தூனிசந்த். "சரி, இரண்டு பர்லாங்குக்குமேல் ஒரு அடி கூடவிருந்தாலும் நான் திரும்பிவந்து விடுவேன்" என்றார் கோவிந்தாமி முதலியார். இருவரும் புறப்பட்டுச் சென்றனர். அவர்கள் ஏறிவந்த வண்டி வெகு வேகமாய்ப் புறப்பட்டு பட்டணத்துக்குத் திரும்பிச்சென்றது.

பத்து நிமிஷத்துக்கெல்லாம் கோவிந்தசாமி முதலியாரும் தூனிசந்தும் பத்தடி உயரமுள்ள சுற்றுச்சுவரையுடைய ஒரு பங்களாவின் வாசற்படியை அடைந்தனர். உடனே கதவு திறந்தது. எங்கிருந்தோ இருவர் திடீரென்று வந்து கோவிந்தசாமி முதலியாரின் இருகைகளையும் பிடித்துக்கொண்டனர். அதில் ஒருவன் பர்மா தேசத்தவன், மற்றொருவன் பட்டாணித் துருக்கன். இருவரும் கோவிந்தசாமி முதலியாரைப் பிடித்துப் பலாத்காரமாய் உள்ளே நடத்திச் சென்றனர். எதிரே ஒரு மராட்டியன் வந்து, "உம்மைப் பிடித்த நலல வேளை இப்போதாவது வந்தீர்" என்றான். "உங்களைப்பிடித்த நல்ல வேளையினால் நான் தான் தானாக வந்துவிட்டேனே. என்னை இவர்கள் இப்படிப் பிடித்திழுப்பதற்கு அவசியமென்ன?" என்றார் கோவிந்தசாமி முதலியார். அதற்கு அந்த மராட்டியன், "அவசியமில்லைதான். உம்முடன் பழகும்போது மிகுந்த ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமாதலால் அப்படிப் பிடித்துக்கொண்டார்கள்" என்றான்.

இப்படிப் பேசிக்கொண்டே யிருக்கையில் கோவிந்தசாமிமுதலியார் திடீரென்று திமிறிக்கொண்டு தம்மைப் பிடித்திருந்த இருவரும் பல கஜ தூரத்துக் கப்பாற்போய் விழும்படி உதறிவிட்டு, தமது நிஜார் பைகளிலுள்ள இரண்டு கைத் துப்பாக்கிகளை யெடுத்துச் சுடுவதற்குத் தயாராய்ப் பிடித்துக்கொண்டு நின்றார். அடுத்த நிமிஷத்தில்பர்மாக்காரன் எழுந்து ஓடிவந்து கோவிந்தசாமி முதலியார்மீது பாய்ந்தான்; துப்பாக்கி வெடியொன்று கேட்டது; அவன் கோவென்றலறிக் கீழே விழுந்து உருண்டான். கோவிந்தாமி முதலியார் முராரிராவைப் பார்த்து, "என்ன, ஐயா! உங்களுக்கு மரியாதையே தெரியாதுபோ லிருக்கிறதே! நீங்கள் அழைத்து நான் வந்திருக்க, என்னைக் கைதியைப்போல நடத்துகிறீர்களே! பத்திரமாயிருங்கள்! இன்னும் இருபது பேர்களைக் கீழே வீழ்த்த வெடி குண்டு இருக்கிறது. பத்திரம்!" என்றார். அதற்கு அவர், "நீர் மகா துஷ்டர்" என்றுகேள்விப்பட்டேன். ஆனாலும் இவ்வளவு மூர்க்கத்தன முடையவரா யிருப்பீரென்று நான் நினைக்கவேயில்லை. இன்று நடக்கப்போகிற விவகாரங்களில் இப்படித்தான் நடந்துகொள்வதாக உமக்கு உத்தசேமோ?" என்றார்.

"நீங்கள் எப்படி நடந்துகொள்ளுகிறீர்களோ அப்படித்தான் நானும் நடந்துகொள்வேன். ஆகையினால் வழியைக் காட்டிக்கொண்டு முன்னே போங்கள்! உங்கள் துப்பாக்கியை யெடுக்க முயலாதேயுங்கள்! முயன்றால், அடுத்தநிமிஷம் என் துப்பாக்கிக்கு இரையாவீர்கள்!" என்றார் கோவிந்தசாமி முதலியார்.

அவர்கள் அவருடைய வார்த்தைக் கிணங்கி நடக்கவேண்டுவது அவசியமென வுணர்ந்து, மரியாதையாய்க் கைகளை மேலே தூக்கிக்

கொண்டு முன்னே சென்றார்கள். தோட்டத்தின் வழியே இருபதடி தூரம் சென்றதும், ஓர் படிக்கட்டும் அப் படிக்கட்டின் தலைப்புறத்தில் ஒரு வாசற்படியும் இருந்தன. கோவிந்தசாமி முதலியார் அவ்வாசற்படிக்குள் நுழைந்து இரண்டடி எடுத்து வைக்குமுன், நாலைந்து பேர்கள் எங்கிருந்தோ அவருக்குப் பின்னால் வந்து அவர்மேல் விழுந்து அவரைப் பிடித்து அமுக்கினார்கள். அவர் தம்மாலியன்ற மட்டும் திமிறிக்கொள்ள முயன்றார். திடீரென்று அவர் பிடரியின்மீது பலமான தடியடியொன்று விழுந்தது. உடனே அவர் பிரக்ஞையிழந்தார்.

மூர்ச்சை தெளிந்ததும், அவர் தம்மீது இருவர் பெரிய மரக்கால்களினால் குளிர்ந்த தண்ணீரை வீசிக்கொண்டிருந்ததையும் தமது உடைகளெல்லாம் நனைந்து, தண்ணீர் சொட்டிக்கொண்டிருந்ததையும், தாம் ஒரு நாற்காலியின் மீது வைக்கப்பட்டு நாற்காலியோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்ததையும் கண்டார். நாற்காலியை அசைத்துப்பார்த்து அது அசையாததைக் கண்டு அதுவும் தரையில் ஆணிகளினால் பொருத்தப்பட்டிருக்கவேண்டுமென்று ஊகித்தார். அவருக்கு எதிரே எட்டுப்பேர்கள் பல ஜாதியார்கள் நின்றுகொண்டும் நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டு மிருந்தார்கள்.

அப்போது முராரிராவ் கோவிந்தசாமி முதலியாரைப்பார்த்து, "ஓய்! உம்மை இப்படிச் சிக்ஷிப்பதாக எங்களுக்கு முதலில் எண்ணமில்லை. உம்முடைய முரட்டுத்தனத்தினாலேயே இப்படிப்பட்ட சிக்ஷை உமக்குக் கிடைத்தது. இனிமேலாகிலும் வணக்கமாயிரும். எங்கள் சொத்துக்களை நீர் இஷ்டப்படி செலவழித்துக் கொண்டுவருகிறீர். செலவழிந்து போனதைப் பற்றி உம்மைத் தண்டிப்பதாக எங்களுக்கு உத்தேசமில்லை. போனது போக, பாக்கியை மரியாதையாய்க் கொடுத்துவிடும். உம்முடைய வழிக்கு நாங்கள் வருவதில்லை" என்றார். கோவிந்தசாமி முதலியார் நகைத்து, "ஆகா! என்ன பெருங்குணம்! நீர்தாம் சூதுநோட்டு அச்சிடும் அயோக்கியனோ?" என்றார். முராரிராவ் கடுஞ்சினங்கொண்டு, பர்மாக்காரனை விட்டு கோவிந்தசாமி முதலியாரை குதிரைச் சவுக்கினால் அடிக்கச் சொன்னார். அவன் அவர் தம்மைத் துப்பாக்கியினாற் சுட்ட ஆத்திரத்தையெல்லாம் உபயோகித்து அவர் உதடுகளிலிருந்து இரத்தம் பீறிடும்படி அடித்தான். அவர் அதையும் இலக்ஷியஞ்செய்யாமல், "உங்களுடைய சொத்து என்றீரே! உங்கள் பாட்டன்மார்கள் தேடிய சொத்தா? சொத்து யார் கையிலே அகப்படுகிறதோ அவர்களுடையதுதான் என்று சொன்னால், தற்காலம் என் கையில் அது இருப்பதனால் அது என்னுடைய சொத்துத்தான். உங்களாலாவதைச் செய்யுங்கள். சொத்து உங்கள் கைக்குத் திரும்பாது" என்றார்.

அதுகேட்டு அங்கு கூடியிருந்தவர்கள் அதிகக் கோபமுற்று, அவரை அடித்தும் மற்றும் பல விதமாகவும் துன்புறுத்தினார்கள். எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு கோவிந்தசாமி முதலியார் நகைத்துக்கொண்டே அவர்களைப் பலவிதமாகத் திட்டிக்கொண்டிருந்தார். இப்படியிருக்கையில் திடீரென்று ஒரு சிறு கதவு திறந்து, அதன்வழியே சுந்தரவல்லியும் மற்றொரு ஸ்திரீயும் உள்ளே நுழைந்தார்கள். அதுவரை வாடாத கோவிந்தசாமி முதலியார் முகம் வாட்டமுற்றது. "சுந்தரவல்லி! இங்கு எப்படி வந்தாய்?" என்று அவர் கூவினார். துக்கம் நிறைந்த அவர் குரலைக் கேட்டவுடன் சுந்தரவல்லி அவர் புறமாக வேகமாய்ப் பாய்ந்தாள். உடனே இருவர் அவளை இறுகப் பிடித்துக்கொண்டார்கள். பிறகு முராரிராவ் அவளை நோக்கி, "அம்மா! உனக்கு நாங்கள் யாதொரு தீங்கும் செய்யமாட்டோம். அதோ உட்கார்ந்திருக்கிறானே திருடன், கொலைபாதகன், அயோக்கிய சிகாமணி! அவனுக்குப் புத்திசொல்லி, எங்கள் பொருளை-நாங்கள் வெகுநாள் உயிரைத் துரும்பாக எண்ணி உழைத்துத்தேடிய பொருளை-எங்களுக்குத் திருப்பிக் கொடுக்கும்படி அவனைத் தூண்டுவதற்காகவே உன்னை இங்கே அழைத்துவரச் சொன்னோம், நீயாவது அவனுக்கு நல்லபுத்தி சொல்!" என்றார்.

அதுகேட்ட சுந்தரவல்லி தன் கணவனை நோக்கி, "என் அன்பே! தங்களைப்பற்றிப் பல கொடிய அவதூறுகளைச் சொல்லி என்னை நம்பும்படி செய்து அவைகளை நிரூபிப்பதாகச் சொலலி என்னை அந்தஸ்திரீ இங்கே அழைத்து வந்தாள். இப்போதும் அவர்கள் பேசியதெல்லாம் பொய்யென்று நன்றாய் விளங்கி

விட்டது. என் துக்கமும் ஒழிந்தது. என்னைப்பற்றித் தாங்கள் கவலைப்படவேண்டாம். தங்களுக்கு அவமானம் நேரிடமா லிருக்கும்படி தாங்கள் நடந்துகொள்ளலாம்" என்றாள்.

உடனே அவளைப் பிடித்துநின்ற இருவர்களும் முராரிராவ் செய்த சைகைக் கிணங்க அவளை ஒரு தூணில் இருகக்கட்டினார்கள். பர்மாக்காரன் குதிரைச்சவுக்கை யெடுத்துக்கொண்டு தயாராய் நின்றான். அப்போது அவ்வறையின் கதவு மடமடவென்று இடிக்கப்பட்டது.கட்டப்பாரையினால்கதவு பெயர்க்கப்படும் சத்தம் கேட்டது. "விளக்கை அவித்துவிட்டு எல்லோரும் தப்பும் வழியைத் தேடுங்கள் !" என்றுகூவினார் மார்க்கசகாய முதலியார்."நமது பொருளையும் எடுத்துக்கொண்டு நம்மை அவமரியாதையாகப் பேசி, போலீஸ்காரரையும் வஞ்சகமாய் இங்கே தருவித்த இந்த அயோக்கியப் பயலை சும்மா விடுவதில்லை" என்று சொல்லி,முராரிராவ் மேஜையின்மீது வைக்கப்பட்டிருந்த கோவிந்தசாமி முதலியாருடைய துப்பாக்கிகளி லொன்றை யெடுத்து கோவிந்தசாமி முதலியார்மீது குறிபார்த்துப் பிடித்தார். விளக்கு திடீரென்று அவிக்கப்பட்டது. பலர் நாற்புறமும் ஓடும் சத்தம் கேட்டது. சுந்தரவல்லி, "ஐயோ! பர்மாக்காரன் என்னைக் குத்துகிறான் !" என்று கூவினாள். அவ்வறையின் கதவு பெயர்ந்து திடீரென்று விழுந்தது. பலர் லாந்தர்களுடன் உள்ளே பிரவேசித்தார்கள். "தங்கவேல் ! எங்கே இருக்கிறாய் ?" என்று ஒரு குரல் கூவிற்று. கோவிந்தசாமி முதலியார், "முத்துக்குமாரு! என் மனைவியைபர்மாக்காரன் குத்துகிறான். அவளைக் காப்பாற்று !" என்றார். ஒரு துப்பாக்கி வெடிச் சத்தம் கேட்டது. "சங்கு பொய்யாகாது ! என் காலமாயிற்று !" என்று கூவி முருகன்பூண்டி ஜமீன்தார் பொத்தென்று கீழே விழுந்தார். "யார்ஐயா சுட்டது ? முரார்ரிராவாகத்தா னிருக்கவேண்டும். பத்திரம். இனிமேற் சுடாதேயும். மரணதண்டனை கிடைக்கும்" என்று மார்க்கசகாய முதலியார் கூவினார். இன்னொரு வெடிச் சத்தம் கேட்டது. "என் காலமும் ஆயிற்று !" என்று கூவி முராரிராவ் பொத்தென வீழ்ந்தார்.

இவைகளெல்லாம் நொடிப்பொழுதில் முடிந்தன. இறந்த முராரிராவ் போக,மற்ற ஏழு பேர்களும் பிடிக்கப்பட்டனர். முருகன்பூண்டி ஜமீன்தார் மரணத் தருவாயி லிருந்தார். கோவிந்தசாமி முதலியாரும் சுந்தரவல்லியும் அவருக்கு அருகே சென்று கண்ணீர் சொரிந்தனர். அப்போது ஜமீன்தார், "தங்கவேல்! ஜமீன்தாராக இருக்கத் தகுந்தவன் நீதான். சுந்தரவல்லியுடன் சுகமாய் இரு ! நான் போய் வருகிறேன்" என்று சொல்லி இவ்வுலகத்தை விட் டகன்றார்.

கோவிந்தசாமி முதலியாராகிய தங்கவேல் முதலியார் முருகன்பூண்டி ஜமீன்தாரானார். முதன்முதலில் அவர் செய்த காரியம் நிஜமான கோவிந்தசாமி முதலியார் அபகரித்து வைத்திருந்த விலையுயர்ந்த நகைகளை அவைகளின் சொந்தக்காரர்களுக்குத் திருப்பிக்கொடுத்தது தான். அதற்கு நிஜமான கோவிந்தசாமி முதலியார் எழுதிவைத்திருந்த குறிப்புப் புத்தகமே உதவியாக இருந்தது. பிறகு அவர் மிகுந்திருந்த ஏராளமானபொருளைக்கொண்டுதமது ஜமீனைப் பெரிதாக்கி விருத்திசெய்து தமது குடிகளின் உண்மையான விசுவாசத்தைச் சம்பாதித்துக் கொண்டு, சகல செல்வங்களுடனும் மக்கட்பேறுடனும், நிகரற்ற பத்தினியின் அளவற்ற அன்புடனும், ஈசனது திருவருளுடனும் சுகமாய்ப் பெருங்கீர்த்தியுடன் வெகுகாலம் தமது நாட்டுக்கு ஓர் திலகமாய் விளங்கிவந்தார். சுபம் !

(361-ம் பக்கத் தொடர்ச்சி).

களிற் சேர்த்துக்கொள்ளா நீ மறுப்பாயே யாகில் உலகத்தார் உன்னை இரக்கமற்றவனென்று பழிப்பார்கள். ஐயனே ! கடைசியாக ஒன்று கூறுகிறேன். கேட்டருள வேண்டும். குழந்தையைக் காப்பாற்ற வல்ல ஒரு தகப்பன் முன்னே, ஒரு குழந்தை யோடி பால் நாற்றம் வீசும் வாயினால் குதலைச் சொற்களுடன் 'என்னைக் காப்பாற்றவேண்டும் !' என்று கூவி, அத்தகப்பன் மனமிரங்கித் தன்னையெடுத்து இரக்ஷிக்காததைக் கண்டு அயருற்று, 'என் தந்தை என்னைக் காப்பாற்றமாட்டேன் என்று விட்டான். நான் அநாதையானேன்! என்னை இனி எடுத்து இரக்ஷிக்கக்கூடியவர் யார்?' என்று புலம்பி யழுதால், அதுகண்ட உலகத்தார் அத்தகப்பனை எளிதில் விடுவார்களோ ? உலகத்தில் யாவர்க்கும் உலகத்தார் காட்டும் இப்பரிவு என் விஷயத்தில் மட்டும் ஏற்படாமற் போகுமோ ? [ஆகையினால் உலகத்தாரது பழிக்கும் சிக்ஷைக்கும் நீ ஆளாகாமல் என்னை இரக்ஷித்தருள்வாயாக !]

பார்க்கவன்

அல்லது

பரம ரஹஸ்யம்

(317-ம் பக்கத் தொடர்ச்சி.)

எட்டாம் அத்தியாயம்

கல்பகம் பார்க்கவன்பால் மீள்கிறாள்

லாவண்யபுரக் கோட்டையில் ஒருநாட் காலையில் பார்க்கவன் மாடிச்சாளரத்தின் வழியாய் தன் ஜனன நகரமாகிய தார்த்தூரகமிருக்கும் திசையைநோக்கி தூரத்திலிருந்து காணப்படும் மாடமாளிகைகளும், ஆகாயத்தை யளாவிய சோலைகளும் ஆகிய இத்தகைய காட்சியைக் கண்டு களிப்பெய்தியிருந்தான். அப்படியிருக்கும்போது அந்தத் திசையிலிருந்து புறாக்கூட்டம் ஒன்று வருவதையும் கண்டான். அவைகள் நேரே பறந்துவந்து கோட்டையின்மேல் பார்க்கவனிருக்கும் அறைக்கு அருகில் வந்துட்கார்ந்தன.

"ஆ! இப்புறாக்கள் தார்த்தூரகத்திலிருந்து வருகின்றன. இவைகள் கட்டாயம் மறுபடியும் அங்குதான் போய்ச்சேரும். இவையொன்றின் சிறகில் சிறுநிருபத்தைவைத்து ஏன்நான் சமாசாரமனுப்பக்கூடாது" என்று பார்க்கவன் அப்பொழுது நினைத்தான்.சிறிதுநேரம் ஆலோசனை செய்து "இதோ, அப்படியே செய்கிறேன்" என்றான். அவ்வண்ணமே அப்புறாக்களில் ஒன்றைப்பிடிக்க வகைதேடி, ஒன்றைக் கைப்பற்றினான். தன்னுடைய செவிலித் தாய்க்கு ஒருகடிதம் எழுதியனுப்பி யார் கையில் அது கிடைத்தாலும் அதை அவளிடம் சேர்க்கும்படிகேட்டுக்கொள்வதாக எழுதியிருந்தான். கல்பகத்திற்கும் ஒரு சிறுகடிதம் அதில் அடக்கம் செய்திருந்தான். சிறகின்கீழ் நிருபத்தைக் கட்டிவிட்டு பட்சியைப் பறக்கவிடுத்தான். புறாவும் மிகவும் களிப்புடன் தார்த்தூரகத்தை யடைந்தது. கடிதங்களும் கிரமமாகச் சேர வேண்டியவர்களிடம் வந்துசேர்ந்தன.

ஒருநாள் அஸ்தமித்து இருட்டும் ஸமயம். நட்சத்திரங்கள் ஒவ்வொன்றாய் ஆகாயத்தில் தோன்றி ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றன. பார்க்கவ னிருக்கும் அறைக்கு வரும் படிக்கட்டில் யாரோவருகிற சப்தம் கேட்டது. பேச்சுக்குரலும் பார்க்கவனுக்கு இன்னாருடையதென்று உடனே புலப்பட்டதுபோல் தோன்றியது. ஆம்! கல்பகத்தின் இனிய மிருதுவான குரலல்லவா அது !

கல்பகம் அவ்விடம் வரக் காரணமென்னவென்று பார்க்கவன் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கையில் தன்னறைக்கதவின் இலைகள் (ஜன்னல்கள் போன்று கதவும் இலைக்கதவாயிருந்தது) திறக்கப்படவும் கல்பகம் அத்தியந்த ஆனந்தத்தைக் குறிக்கும் முகத்துடன் "பார்க்கவ! இங்கே நானும் வந்துவிட்டேன்" என்றாள்.

"ஓ, கல்பகம் ! கல்பகம் !" என்றான் பார்க்கவன்.

"பார்க்கவ, சற்றுத் தாழ்த்தியே பேசலாம். அதோ, பின்னால் எங்கள் தகப்பனார் வருகின்றார்."

"உன் தகப்பனாரா !"

"ஆமாம் ! அதோ படிக்கட்டுகளின் கீழே முற்றத்தில் இருக்கிறார். லாவண்யபுரிக்கோட்டைக்காவலரிடமிருந்து எல்லாவிஷயங்களையும் கேட்டுக்கொள்கிறார் ; இதோ வந்துவிடுவார்."

"என்ன, இக்கோட்டைக் காவற்காரரிடமிருந்தா ?"

"ஆம், சற்றுக் கவனித்துக் கேட்டால் எல்லாம் தெரியும். நம் அரசருக்கு ரத்னபுரிக்கருகாமையில் சிறு நிலம் இருக்கிறது. அவ்விடத்தில் என் அத்தை இருக்கிறாள். உம்முடைய கடிதம் வந்தபிறகு நான் என் அத்தையினிடம் சென்றிருந்தேன். அங்கு அரசர் வந்திருந்தபோது என் தகப்பனாரை லாவண்யபுரிக்கோட்டைக்கு மாற்றும்படியாகக் கேட்டுக்கொண்டேன். அரசருக்கு இவ்விஷயங்கள் ஏதாவது தெரிந்திருந்தால் ஒத்துக்கொண்டிருக்கமாட்டார். நான் கேட்டவண்ணமே மாற்றிவிடுவதாக வாக்களித்தார். ஆகையினால் தான் இங்கிருக்கிறோம்."

"ஆ ! அப்படியா? நீ இங்கேயே இருக்கப் போகிறாயா ?"

"ஆம்" என்று சொல்லிவிட்டு "இதோ அப்பாவும் வந்துவிட்டார்" என்று வேகமாய்க் கீழே இறங்கி தன் தகப்பனாரின் கையைப் பிடித்துக்கொண்டு கூடவந்தாள்.

கிராதன் தன் நாயுடன் அக்கோட்டையைச் சுற்றிப்பார்க்கும்பொருட்டு வந்தான். பார்க்கவனறைக்குள் நுழைந்து பார்க்கவனைப் பார்த்து

“ அப்பேன்! பார்த்தாயா, இனிமேல் நான்தான் உங்கள் காவலாளன். எல்லா விஷயத்திலும் ஒழுங்காக நடக்கவேணும். இல்லாவிட்டால் நான் நல்லவனாயிருந்த போதிலும் வெகு கடினமாய் நடத்தவேண்டியிருக்கும். தெரிந்ததா ?” என்றான்.

“ கிராத! உம்மைப்பற்றி வெகு நன்றாக எனக்குத் தெரியும் ” என்று சொல்லிக்கொண்டே கிராதன் கையில் பிடித்திருந்த லாந்தர் வெளிச்சத்திற்குச் சரியாய் வந்தான்.

“ ஹோ, நீயா, பார்க்கவனா, அடடா, என்ன ஆச்சரியம்! ” என்றான் கிராதன்.

“ ஆம், கிராத! உம்மைக் கண்டதில் நிரம்பச் சந்தோஷம் எனக்கு ! கைக் காயம் எல்லாம் நன்றாய் ஆறிவிட்டதா ?”

கிராதன் ஒன்றும் பேசவில்லை.

“ ஐயா, கிராத! நான் உமது கைக்குச் சிகிச்சை செய்தது உமக்குத் திருப்தியில்லையா ?”

“ ஹூம்—அப்படி ஒன்றுமில்லை. நீ வெகு பக்குவமாய்க் கட்டினாயல்லவா? வெகு சீக்கிரத்திலேயே அது குணமாய் விட்டதப்பா ! எல்லாம் சரிதான்—இவ்விடத்தில் முன்னிருந்தாற்போ லிருக்கமுடியாது ” என்று மெதுவாய் ஜன்னலண்டை சென்றான். இவன் குரலைக் கேட்டதனாலும் லாந்தரின் வெளிச்சத்தினாலும் அங்கு தம் கூண்டிலிருந்த இரண்டு புறாக்கள் பயந்து வெளியே பறந்துபோயின.

“ ஹோ ! இதென்ன ?” என்று கூவினான் கிராதன்.

“ என் புறாக்கள்.”

“ உன்னுடைய புறாக்களா? உன்னுடைய புறாக்கள்—முன்னமேயே ஆரம்பித்துவிட்டாயா ? ஹூம்—இருக்கட்டும் ! இருக்கட்டும் ! நாளைக்குச் சொல்லுகிறேன் பார் !” என்று சொல்லிக்கொண்டே ஜன்னலருகிற் சென்று வெளியிலிருந்த புறாக்கூண்டுகளைப் பார்க்கலானான். பார்க்கவன் இதற்குள் வாசற்கதவண்டை வரவும் கல்பகம் “சாப்பிட்டு விட்டு” என்று பார்க்கவனுடன் சொன்னாள். கிராதன் மறுநாள் அப்புறாக்களைப் பிடிக்கவேண்டும் என்று எண்ணி கூடுகளைக் கவனித்துக்கொண்டிருந்தானே, தவிர பார்க்கவன் கல்பகம் இவர்கள் என்ன பேசினார்கள் என்பதைக் கவனித்தானல்லன். ஜன்னற்கதவை மூடிக்கொண்டு, கல்பகத்தை வெளியே வரச்சொல்லி பார்க்கவனிருக்கும் அறையைப் பூட்டிக்கொண்டு வெளியே சென்றான்.

பார்க்கவனோ கிராதன் தன் அறையைவிட்டகன்றதும் தன் வெளிச்சன்னலைத் திறந்து புறாக்கூண்டுகளை நன்றாய்க் கலைத்துவிட்டான். அவைகளைக் கிராதனுக்குக் காட்டிக்கொடுப்பதைக்காட்டிலும் வெளியே துரத்திவிடுவதே மேலென நினைத்தான் பார்க்கவன்.

பார்க்கவன் தனியே எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில் கையில் விளக்குடன் கல்பகம் கதவின் இலைகளைத் திறந்து,

“இதோ நான் வந்துவிட்டேன். பார்க்கவ, என்ன சொல்கிறாய்?” என்றாள்.

“கல்பகம், அதிருக்கட்டும் நீ எப்படிவந்தாய் இந்த இருட்டில்? ஏன் வந்தாய்?”

“பார்க்கவ,நான் இதோ விளக்குடன்வந்திருக்கிறேனே! பயமென்ன? சாப்பிட்டதும் என் தகப்பனார் தூங்கிவிடுகிறார். எனக்குத் தன்னந்தனியே இருப்பது நிரம்ப கஷ்டமாயிருக்கிறது. தூக்கம் வருகிறவரையிலும் உம்முடன் பேசிக்கொண்டிருக்கலாமென்று வந்தேன்.”

“உன் தகப்பனார் விழித்துக் கொண்டால் கோபிக்கமாட்டாரா ? ”

“ஏன் கோபிக்கிறார்? தூக்கம் வராததினால் இப்படி உலாவிக்கொண்டிருந்தேன் என்று சொல்கிறேன்—இதோ உம்முடைய புஷ்பச் செடியின் முளைகளைக் கொண்டுவந்திருக்கிறேன்.”

பார்க்கவன் மனம் குதூஹலத்தை யடைந்தது. இதுவரையிலும் அதைப்பற்றிக் கேட்க அவனுக்கு மனந்துணியவில்லை.

“ஹா! அப்படியா? இதுவரையிலும் வைத்துக் காப்பாற்றினாயா?”

“ஆமாம். அவை உமக்குச் சேரவேண்டியனவாயிற்றே! உமக்குப் பின்னால் அல்லவா அவைகள் எனக்குரியவை. நான் அந்த கீதையைப் பார்க்கும்போதே உம்மிடம் கொண்டு வந்துகொடுக்கவேண்டுமென்றிருந்தேன். அதற்காகவே அரசனைக்கண்டு என் தகப்பனாரை இங்கு காவலாக நியமிக்க வேண்டும் எனக் கேட்க நிச்சயித்தேன். உம்முடைய கடிதம் வந்தபிறகு என் நிச்சயம் உறுதிப்பட்டது. அப்புறம் நடந்தவைகளைத் தான் முன்னமேயே சொன்னேனே !”

“ஆ - அப்படியா - கல்பகம்! நான் கடிதம் எழுதுவதற்கு முன்னமேயே என்னைப் பார்க்க வேண்டுமென்றிருந்தாயோ?”

“ எனக்கு வேறு எண்ணமே கிடையாது ” என்று சொல்லி முடித்ததும் கல்பகம் ஆமென்று மெதுவாகக் கூவினாள், ஒரு விநாடிக்குள் அவள் பார்க்கவனைத் தனியேவிட்டு விளக்கைக் கையிலெடுத்துக்கொண்டு மறைந்துவிட்டாள். அந்த அவசரத்தில் கருந்துல்ய முளைகளைப்பார்க்கவனிடம் கொடுப்பதற்கும் மறந்துவிட்டாள்.

மறுநாள் மாலையில் வழக்கப்படி போஜனம் செய்துவிட்டுப் போனபோது கருந்துல்யமுளைகளை அப்படியே கடிதத்தில் சுருட்டியிருந்த வண்ணம் எடுத்துக்கொடுத்தாள். பார்க்கவன் அதை வாங்காமல் மெதுவாகக் கையால் தடுத்தான். கல்பகத்திற்கு ஒன்றும் தெரியாமல் ஆச்சரியப்படலானாள். பார்க்கவன் “ நான் சொல்வதைக் கவனித்துக்கேள். கல்பகம், நான் இதுவரை முடியாதென்று நினைத்திருந்த காரியம் இனிக் கைகூடும். கருந்துல்யத்தைப் பயிரிட்டு வளர்த்து புஷ்பங்களை அடைவது துர்லபமென்று நினைத்தேனல்லவா? இப்பொழுது நீ வந்துவிட்டாயல்லவா? இனிமேல் நம்மாலான மனுஷ்ய ப்ரயத்தினங்களைச் செய்யலாம்” என்று கூறி “ இங்கு ஏதாவது ஒரு சிறு தோட்டம் இருக்கின்றதா?” என்று கேட்டான்.

சொல்பவைகளையெல்லாம் கல்பகமும் வெகு நிதானமாய்க் கவனித்து, “ ஆஹா, முதல்தரமான தோட்டம் எங்கள் விடுதிக்கு அடுத்தாற்போல் ஆற்றங்கரையோரமாய் இருக்கின்றது. நிறைய பெரிய பெரிய மரங்க ளிருக்கின்றன” என்றாள்.

“அங்கிருந்து மாதிரிக்குக் கொஞ்சம் மண் கொண்டுவருவாயா ?

“ ஆஹா, கொண்டுவருகிறேன் நாளைக்கு வரும்போது.”

“ அது நல்ல மண்ணாயிருந்தால் நம் துல்ய முளைகளை நடலாம். நான் ஒன்றைப் பொறுக்கி எடுத்துத் தருகிறேன். நான் என்றைக்குக் சொல்கிறேனோ அன்றையதினம் நடவேண்டும். நான் சொல்கிற பிரகாரம் நீ அதை வளர்த்து வந்தாயானால் அது புஷ்பிக்காமற் போகாது.”

“ஆக்ஷேபனையில்லை. நீர் சொல்லுகிறபடியே பார்த்துக்கொள்ளுகிறேன் !”

“நான் ஒரு கன்றை என்னறையிலே வளர்த்து வருகிறேன். எனக்கும் அது ஒருவிதப் பொழுது போக்காயிருக்கும். நான் இங்கே தனிமையாக ஒரு வேலையுமில்லாமல் காலந்தள்ள வேண்டியிருக்கிறதல்லவா? மூன்றாவது முளையை மாத்திரம் பத்திரமாகக் காப்பாற்றிவை. முதலிரண்டும் ஒருவேளை கெட்டுப் போய்விட்டால் உதவும்.”

“அப்படியே செய்யலாம். நாளையதினம் மாதிரிக்கு மண் கொண்டுவருகிறேன்.”

“ஆமாம். அதை நட்டபிறகு தினந்தோறும் அது எப்படியிருக்கிறதென்று சொல்லுவாயா? காற்று, மழை, வெயில் முதலானவைகளில் அது அழியாமலிருக்கிறதா என்பதையும், ஏதாவது பூச்சிமுதலானவைகள் அதைப்பிடித்துள்ளதா என்றும், பூனை எலி முதலியவைகளால் அது சேதமடையாம லிருக்கிறதாவென்றும் கவனித்துச் சொல்வாயா? கல்பகம், இவைகள் எல்லாவற்றினும் மிகவும் பொல்லாத பகையாளிகள் இந்தச் செடிக்கு ஒன்று ஒருவேளை ஏற்பட்டாலும் ஏற்படும். ஜாக்கிரதை.”

“அந்தப் பகையாளிதான் எதுவா யிருக்கலாம்?”

“சில செப்புக்காசுகளுக்கே பகையாக மனுஷ்யர்கள் ஏற்படுகின்றார்களே !——பொன்னுக்குப் பெருந்திருடர்கள் ஏற்படுவது ஓர் ஆச்சரியமா, கல்பகம் ?”

“ஆ——எங்கள் தோட்டத்தில் நான் தவிர வேறெவரும் போவதில்லை. ஒருவரும் நுழையாதவண்ணம் சுற்றிலும் பலத்த வேலிபோட்டு அதற்கு வாசற்படியும் கதவுகளும் இருக்கின்றன !”

“கல்பகம்! நிரம்பசந்தோஷம். உன்னாலேயே என் கோரிக்கை ஈடேறவேண்டும்.”

கல்பகம் கருந்துல்யக்கன்றுகளிலொன்றைப் பார்க்கவனிடம் கொடுத்துவிட்டு தன்னிருப்பிடம் சென்றாள்.

மிகவும் நல்லமண்ணென்று பார்க்கவன் தனக்குகுறிப்பிட்டுள்ள தோட்டத்தினின்று தினந்தோறும் ஒருபிடி மண் கொண்டுவந்து கொடுத்தாள். அறையில் வைத்திருந்த ஒரு பெரிய ஜாடியை பூந்தொட்டி மாதிரி உபயோகித்து அதில் கருந்துல்ய முளையை ஊன்றிவைத்து வளர்த்துவந்தான் பார்க்கவன். ஒரு நாளாவது கல்பகம் பார்க்கவனை வந்துபார்க்கத் தவறுகிறதில்லை. அவர்கள் பேசுவதெல்லாம் பற்பல

விஷயங்களைப்பற்றி யிருந்தபோதிலும், கருந்துல்யமே எல்லாவற்றிற்கும் முதன்மையாய் விளங்கிநிற்கும். பார்க்கவன் தற்சமயம் மிக்க சந்தோஷித்தவனுய்க் காணப்பட்டாலும் அவன் மனத்தில் மாத்திரம் ஏதோ சஞ்சலமிருப்பதாகக் காணப்பட்டது. பாபம்! கருந்துல்யமலரும் அதைப் புஷ்பிக்கச்செய்யவேண்டியதினிமித்தம் அடிக்கடி வந்த கல்பகமுமே அவன் சிறைவாஸத்தின் கொடுமையை நீக்கினது. பார்க்கவனுக்கும் கல்பகத்திற்கும் இயற்கையாக உள்ளன்பு எழுந்திராதிருக்குமாயின் பார்க்கவனது வாழ்நாள் பெருந் துக்கமாகவே யிருக்கும்; அவன் குடித்த மனப்பாலெல்லாம் வீணுகவே யிருக்கினும் இருக்கலாம். ஆகவே கல்பகத்தைத் தன் பிராணநிலையாகவே எண்ணியிருந்தானென்று நாம் கருதவேண்டும்.

"உன்னுடைய தகப்பனர் இங்கிருக்கப் பிரியப்படாமல் வேறெங்காவது மாற்றிக்கொண்டால் நீயுந்தான் போகவேண்டும். கருந்துல்யமும் நானும் எக்கதி யாவோமோ! அப்பொழுது புருக்கள் இருந்தும் பிரயோசனப்படாது அல்லவா? நான் ஏதாவது கருந்துல்யத்தைப்பற்றி எழுதினல் அதைப் படித்தறிந்து பதில் எழுதும் சக்தி உனக்கில்லையே!" என்று மிகவும் இரங்கிய குரலுடன் பார்க்கவன் ஒருநாள் கூறினன்.

"பார்க்கவ! நீர் இதற்காக துக்கிக்கவேண்டாம். தினந்தோறும் நான் இங்கு வரும்போது சற்றுநேரம் தங்களிடமேயே எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ளுகிறேன். எழுத்துக் கூட்டிப் படிக்கத் தெரிந்தால் நான் கொஞ்சங் கொஞ்சமாய் நன்ருய்ப் படிக்கிறேன்" என்று உற்சாகத்துடன் கூறினள்.

மறுநாள் மாலையில் பார்க்கவனிடம் வரும்பொழுது தன்னிடமிருந்த கீதைப் புத்தகத்தைக் கொண்டுவந்தாள்.

ஒன்பதாம் அத்தியாயம்

பயங்கரன் சூழ்ச்சி வீணுதல்

கல்பகம் கல்வியில் கிரமமாகத் தேர்ச்சியடைந்தாள். முதலில், படிப்பது அவளுக்கு மிக்க கஷ்டமாயிருந்தபோதிலும் பார்க்கவனது முன்னிலையில் எல்லாம் சுலபமாகவேயிருந்தது. படித்துவிட்டுத் தன்னறைக்கு வந்தவுடன் படுக்கப்போவதற்கு முந்தி, தான் படித்தவைகளைப்பற்றி வெகு கவனமாய்ச் சிந்திப்பாள்.

ஒருநாள் கல்பகம் வருவதற்குச் சற்று நேரமாயிற்று. அவள் எப்பொழுதும் அப்படித் தாமதமாக வருவது வழக்கமில்லையாகையால் பார்க்கவன் அதன் காரணத்தைக் கேட்டான்.

"என்மீது கோபித்துக் கொள்ளக்கூடாது. நான் என்ன செய்வேன்? எங்கள் தகப்பனரிடம் யாரோ ஒருவன் வந்திருக்கிருன். நாங்கள் ஸகேதத்தி லிருந்தபோது நான் அவனைப் பார்த்ததாக ஞாபகமிருக்கிறது. இங்கே சிறைச்சாலையைப் பார்க்கவேண்டுமென்று சொன்னன். பார்த்தால் நல்லவன்போ லிருக்கிறது. நிரம்ப அறிமுகமுள்ளவன்போல் பேசுகிருன்."

"ஆ! அப்படியா? அவன் யாராயிருக்கலாம். ஒருவேளை சிறையில் இருப்பவர்கள் நடவடிக்கைகளை இரசியமாய்க் கவனித்துப் போக வந்திருக்கிருனே? என்னவோ?"

கல்பகம் புன்னகையுடன், "சே, அப்படி ஒன்றும் வந்திருக்கமாட்டான். அப்படி வந்திருந்தாலும் எங்கள் தகப்பனரின் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக வந்திருக்கமாட்டான். ஆ!—இப்பொழுது நன்ருய் ஞாபகம்வருகிறது. தாங்கள் ஸகேதபுரி சிறைச்சாலையில் இருந்த காலத்தில்தான் அங்கு வந்திருந்தான். நாங்கள் அதை விட்டுவிட்டபோது அவன் போய்விட்டான். இங்கே நாங்கள் வந்திருக்கிறபோது இதோவந்திருக்கிருன்—இவன் நேற்று சாயங்காலம் நான் தோட்டத்திற்குள் சென்று கருந்துல்யம் நடுவதெற்கென்று பள்ளம் தோண்டியிருக்கும் இடத்திற்குச் சென்றபோது எனக்குத்தெரியாமல் பின்னலேயே வந்து மரத்தின் பின்னல் நின்றுகொண்டிருந்தான். ஒருவேளை என்னைத்தான் கவனிக்கிருன் போலும்!" என்ருள்.

"அவன் எப்படியிருக்கிருன்?"

"பார்த்தாலே பயமாயிருக்கிறது! கூனைப் போட்டுக்கொண்டிருக்கிருன். சுமார் ஐம்பது வயதிருக்கலாம்; நேரநிமிர்ந்து சரியாய்ப் பேசுகிறதை நான் காணவில்லை."

"அவன் பேர் என்ன தெரியுமா?"

"யோகநந்தனன்."

"புதுப்பேரா யிருக்கிறது. யாரோ தெரியவில்லை"

இதற்குள் கல்பகம்,

மாணிக்கக் காதுக்கு மாற்றுக்கால் இருக்கிறது.

"சரிதான், பார்க்கவ! உமது துல்யம் எப்படி யிருக்கின்றது?" என்று கேட்டாள்.

"கல்பகம், உனக்குச் சொல்லவே மறந்து போனேனே! இன்றையதினம் காலையில் சூரிய வெளிச்சத்தில் ஜாடியைப் பிடித்துக் கொண்டு கொஞ்சம் மண்ணைத் தள்ளிப் பார்த்தேன். அடியில் இப்பொழுதுதான் வேர் விட்டிருக்கிறது!"

"பிழைத்துக் கொள்ளுமல்லவா?"

"ஓ! பிழைத்துக்கொள்ளும் என்றுதான் நினைத்துக்கொண் டிருக்கிறேன்."

"என்னிடத்தில் இருக்கும் முளையை எப்பொழுது நடுவது?"

"நான் என்றைக்குச் சொல்கிறேனே, அன்றைக்கே நட்டுவிடு. நீ என்ன செய்தபோதிலும் ஒருவரும் உன் பக்கத்தில் இராமலிருக்கட்டும். கருந்துல்யத்தைப் பற்றிய இரகசியத்தை மாத்திரம் ஒருவருக்கும் சொல்லாதே. கல்பகம், மூன்ருவது விதை முளையை பத்திரமாய்க் காப்பாற்றிக்கொண்டுவா."

"ஓ! அப்படியே நீங்கள் கொடுத்த அந்தக் காகிதத்திலேயே சுற்றி அது நசுங்கிப்போகாதபடி என் பெட்டியில் பத்திரமாய் வைத்திருக்கிறேன்.——நான் போவதற்குள் தகப்பனர் விழித்துக்கொண்டு என்னைத் தேடப்போகிருர்.நான் போய்வருகிறேன்"என்று சொல்லிவிட்டு கல்பகம் எதையோ கவனித்துக் கேட்பவள்போல் செவிசாய்த்து நின்ருள்.

"என்ன சமாசாரம்?" என்ருன் பார்க்கவன்.

"படிக்கட்டில் ஏதோ காலடி சப்தம் கேட்டாற்போ லிருந்தது. அண்ணவா யிருக்கமாட்டார். ஒருவேளை அந்த யோகநந்தனன்தானே?" என்று படிக்கட்டின்வழியாய் வேகமாய் இறங்கினள்.பத்துப்படி இறங்குவதற்குள் அந்தஇருட்டில் வாயிற் கதவைச் சாத்திக்கொண்டு யாரோ வெளியிற் சென்றதாக கல்பகத்திற்குப் புலப்பட்டது.

பார்க்கவனுக்கு மனத்தில் ஏதோ சொல்ல முடியாச் சஞ்சலம் இருந்துகொண்டே யிருந்தது.ஒருநாள் காலையில்கருந்துல்யத்தைப்பார்த்துக்கொண்டே,பெரிய மனக்கோட்டை பார்க்கவன் கட்டிக்கொண் டிருக்கையில் அவனறையின் கதவைத் திறந்துகொண்டு கிராதன் திடீரென நுழைந்தான். கைதியின் எதிரில் அவ்விடத்தில் சாதாரணமாய் இருக்கக்கூடாத ஒரு வஸ்து இருப்பதைப் பார்த்து அதன்மீது பாய்ந்து கையில் எடுத்து எறிய முயன்ருன்.

"கிராத,அதை ஒன்றும் செய்யவேண்டாம்."

"என்னடா கைதிப்பயலே! என்ன சொல்லுகிருய்?"

"கிராத! அந்தச் செடியை நசுக்கிவிடப் போகிருய்?" என்று ஜாடியைக் கிராதனிடமிருந்து கைப்பற்ற முயன்ருன். பார்க்கவனுக்குப் பெருமூச்செறிகிறது. மிக்க ஆத்திரமும் பரபரப்பும் அவனுக்கு ஏற்பட்டுவிட்டது.

கிராதனே, கைதி ஏதோ சதியாலோசனை செய்துவருகிருன் என்றும் இந்தச் செடியினல் ஏதோ தீங்குகள் உண்டாகுமென்றும் பயந்துஅச்செடியைப் பிடுங்கி எறியப்போனன். இரண்டாமுறை பார்க்கவன், கிராதன் கையைப்பிடித்து "என் உயிர்போனலும் போகட்டும். இந்தச் செடியை ஒன்றும் செய்யாதே" என்ருன். கிராதன் ஒன்றையும் கேட்காமல் மூர்க்கமாய்திமிறிக்கொண்டு அக்கன்றைப்பிடுங்கிக் கீழேஎறிந்துகாலால் துவைத்துவிட்டு ஜாடியையும் கீழே போட்டு உடைத்துவிட்டான். பார்க்கவனுக்கு இன்னசெய்வதென்று தெரியவில்லை. அப்படியே கிராதனைத் தொலைத்துவிடலாமா என்னும் எண்ணம் உதித்தது. கீழே விழுந்திருந்த ஜாடித்துண்டுகளை எறிந்து கிராதன்மண்டையைஉடைத்திருப்பான்.இதற்குள் ஆவென்றலறிக்கொண்டு தன் தகப்பனுக்கும் பார்க்கவனுக்கும் இடையில் நின்று நடுக்கத்துடனிருக்கும் கல்பகத்தைக் கண்டான். "அடா படுபாவி, பொழுதுபோக்குக்காகப் பேதைக்கைதி யொருவன் வளர்த்துவந்த துல்ய முளையை நாசஞ் செய்தாயே!" என்று கூறினன்.

"ஐயோ, பாபம்—ஏனப்பா அப்படிச் செய்தாய்" என்று கூறினள் கல்பகம்.

"ஆமாம்! மகா பெரியவள். வந்துவிட்டாய் போதும்! உன்காரியத்தைப் பார்த்துக்கொண்டு போ. இங்கு ஒன்றும் பேசாதே" என்று கிராதன் சொன்னன். கல்பகம் மாத்திரம் அத்தருணத்தில் வந்திராத பக்ஷத்தில் கிராதன் கதி தெரிந்திருக்கும்!

கிராதனுக்குச் சற்றுக் கோபம் தணிந்தவுடன், சற்று வெட்கி "ஆ! அவ்வளவுதானு? துல்யந்தானு? இப்படியென்று தெரிந்திருந்

மாதம் காதவழி மாணைத் தள்ளுவான்.

தால் நீ எத்தனை வேண்டுமானாலும் வைத்துக் கொள் என்றிருப்பேன்" என்றான்.

"ஹூம்—எத்தனை லக்ஷம் தான் இருந்தால் எனக்கு என்ன? ஆ! நீ நாசம் பண்ணினது போனதுதானே!"

"ஆஹா! தெரிந்துகொண்டேன். பாபம்! போகிறது என்று உனக்கு வெறுந் தண்டனை விதித்தால் இப்படியா யோசனை செய்கிறாய்? உனக்கு மரணதண்டனை மாறாமலே இருந்திருக்கவேண்டும்."

"நீ நாசமாய்ப்போக!" என்று மட்டும் மிக்க துக்கத்துடன் கூறினான் பார்க்கவன்.

கிராதன் கதவைத் தாளிட்டுப் போனவுடன் அவன்பின்னால் கல்பகம் சற்றுத்தங்கி கதவின் சந்து வழியாய் "மற்றொன் றிருக்கிறதல்லவா? அதை நாளைய தினம் நடலாம்" என்று கூறினாள். தன் பிராணனிலேயே போய்விட்டதாகக் கருதித் துக்க சாகரத்திலாழ்ந்திருந்த பார்க்கவனுக்கு களங்கமற்ற ஹ்ருதயமுள்ள கல்பகத்தின் இனிய மொழிகள் அமிர்த தாரைபோல் இருந்தன.

அன்றைய தினமும் இரவில் வழக்கம்போல் பார்க்கவனிடம் வரும்போது கல்பகம் "இனி மேல் என் தகப்பனார் துல்யமலரை நீர் வளர்த்தால் ஒன்றும் சொல்லவுமாட்டார், செய்யவு மாட்டார்" என்றாள்.

"உனக்கெப்படித் தெரியும்?"

"அவர் அப்படித்தான் சொன்னார். இங்கே வந்திருக்கிறானே, யோகநந்தனன். அவன் எப்படி இவரைக் கோபித்துக்கொண்டான், தெரியுமா?"

"ஆ! அவனா? அவன் இங்கேதானா இருக்கிறான்?"

"ஆம், இங்கேதானிருக்கிறான். எங்கும்போகிறதேயில்லை. இப்பொழுது சாப்பிடும்போது என் தகப்பனார் எல்லாக்கதையும் சொன்னார். எல்லாவற்றையும் வெகு கவனமாய்க்கேட்டிருந்தான். ஒருவேளை அவன்கூட அவரைத் தனியாயிருந்தால் அடித்துவிட் டிருப்பான். எல்லாம் ஆனபிற்பாடு என்னைப் பார்த்துக்கொண்டே, அவனிடத்தில் அது ஒன்று மாத்திரமாயிருக்கிறது? அவனைச் சோதனைபோட்டுப் பார்த்தால் எல்லாம் தெரிந்துவிடும். மூன்று நாற்றுக்களாயிற்றே!" என்றான்.

மூன்றா? அவன் என்னிடத்தில் மூன்று இருக்கின்றன என்றா சொன்னான்? ஓ! அந்த யோகநந்தனன் பெரிய அயோக்கியன்போலிருக்கிறது!"

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது"

"அவன் ஒரு நாள் உன் பின்னாலேயே தோட்டத்திற்குள் வந்தானென்று நீ சொல்லவில்லையா?"

"ஆமாம்."

"நீ செய்வதை யெல்லாம் அவன் கவனித்தானென்றும் சொல்லியிருக்கிறாயே!"

"ஆமாம்——எல்லாவற்றையும் மறைந்து பார்த்துக்கொண்டே யிருந்தான்."

"கல்பகம்! எல்லாம் புலப்பட்டுவிட்டது. அவன் உன்னைக் கவனிக்க வந்தவனல்ல. நம் துல்யக் கன்றுகளுக்காகவே வந்திருக்கிறான் அவன்."

"உ.ம்—அப்படியும் இருக்குமோ?"

"நீ வேண்டுமானால் பார்த்துக்கொள். உனக்கே தெரியும். நீ இரண்டு நாளைக்கு முன்னே போ. அப்படியே யோகநந்தனனுக்குத் தெரியும்படியாய்ப் போ. தோட்டத்தில் கன்றை நடுவதாகப் பாசாங்கு பண்ணிவிட்டு வீட்டுக்குவந்துவிடு. மறைவாய் என்ன நடக்கிறது என்று பார்.——" என்று சற்று நேரம் யோசனை செய்த பிறகு, "——ஆமாம், நாளைக்கு யோசனைபண்ணிக்கொள்ளலாம். உன் கன்றை எங்கே நடுவதென்று நான் சொல்கிறேன். அப்படியே நீ செய்வாயல்லவா? மூன்றாவது முதல் இருக்கிறதல்லவா?——" பார்க்கவன் பெருமூச்செறிந்து கொண்டு, "——கல்பகம், நீ அதைக் குழந்தை மாதிரி காப்பாற்றிவரவேண்டும். அதனாலேயே நமக்கு அளவற்ற ஆனந்த முண்டாகுமென்று ஏதோ என்மனத்தில் தோன்றுகிறது."

"பார்க்கவ! நீர் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். நீங்கள் எது சொன்னாலும் செய்யக் காத்திருக்கிறேன்" என்று தழுதழுத்த அன்பார்ந்த குரலில் கூறினாள் கல்பகம்.

"கல்பகம், உன்னைத்தான் அவன் கவனித்து வருகிறதா யிருந்தாலும் அல்லது உன்மேல் அந்த யோகநந்தனனும் உன் தகப்பனாரும் ஏதாவது சந்தேகங்கொண்டாலும் இந்தச்சங்கதிகள் உனக்குத் தோன்றும்பக்ஷத்தில் நீ என்னைப் பற்றி நினைக்கவும் வேண்டாம், என்னைப் பார்க்கும்படியாக வரவும் வேண்டாம்."

கல்பகத்திற்குத் துக்கம் பொறுக்க முடிய

வில்லை; அவள் கண்களில் நீர்ததும்பியது. தேம்பிக்கொண்டே "ஆஹா—கருந்துல்யமே உம் மனத்தில் குடிகொண் டிருக்கிறது! என்ன செய்யலாம்!" என்று தாழ்ந்த குரலில் சொன்னாள். உடனே அவள் மின்னல் போல் மறைந்துவிட்டாள்.

பார்க்கவனுக்கு அன்றைய இரவு தூக்கம் வரவேயில்லை. துக்கத்திலேயே ஆழ்ந்திருந்தான். வரவரக் களைப்பும் மேலிட்டது. விடியற்காலம் மூன்று மணிக்குத்தான் சற்றுத் தூங்கினான். நல்ல தூக்கமுமில்லை. கருந்துல்யத்தைப்பற்றியே கனவு கண்டுகொண்டிருந்தான்.

கல்பகத்திற்கும் அவ்விரவு அவ்விதமேதான் கழிந்தது. கண் மூடவேயில்லை. மனதில் பலவித எண்ணங்கள் போராடிக்கொண்டிருந்தன. உதயமாவதற்கு முன்னமேயே, தான் இனிப் பார்க்கவனிருக்கும் அறையின் அருகே செல்வதில்லையெனத் தீர்மானித்தாள்.

அன்று பகல் முழுவதுங்கூட பார்க்கவனை விட்டுத் துக்கமென்பது அகலவில்லை. அவன் மனதை ஏதோ கலக்கிக்கொண்டே யிருந்தது. கல்பகம் அன்றைய மாலையிலும் வழக்கம் போல் வருவாளோ வரமாட்டாளோ என்ற எண்ணமே அம்மனச் சஞ்சலத்திற்குக் காரணமெனக் கொள்ளலாம். மாலை வந்துவிட்டது. சூர்யாஸ்தமனமாயிற்று. மணி ஏழடித்தது; எட்டாயிற்று; ஒன்பதாயிற்று; ஒன்பதேகால்; ஒன்பதரை; பிறகு கணீர் கணீர் என்று பத்து மணி யடித்தது. வழக்கமாகப் பத்துமணிக்குத்தான் கல்பகம் பாரக்கவனிடமிருந்து விடையெற்றுத் தன் வீட்டிற்குச் செல்வது. இன்று பத்துமணியாகியும் கல்பகத்தைக் காணோம். அன்றைய இரவு பார்க்கவன் பற்பலவிதமாய் எண்ணி மனவருத்தமடைந்தான்.

காலை எட்டுமணிக்கு பார்க்கவனறையைக் கிராதன் திறந்தான்; காலைப்போஜனத்தை வைத்துவிட்டு, சுமார் அரைமணி நேரம் அங்கேயே நின்றான். ஒன்றையும் பார்க்கவன் கவனித்தபாடில்லை. அன்றையதினம் மாலையில் கிராதன் கொண்டுவந்த உணவைத் திரும்பிக் கொண்டுபோக வேண்டியதாயிற்று. பார்க்கவன் உணவைத் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை. மறுநாள் மாலையில்கூட பார்க்கவன் படுக்கையைவிட்டும் எழுந்திருக்கவில்லை.

வீட்டிற்கு வந்த கிராதன் "நம் பெரிய கைதிக்கு என்னமோ காலம் குறுகிவிட்டது. ஆகாரத்தைத் தொடவே காணோம்! படுக்கையைவிட்டு அசையவுமில்லை" என்றான்.

கல்பகம் திகிலடைந்தாள். "ஹா, கஷ்டம். அவர் துல்யமலரைப்பற்றி வருந்துகிறார்போலும்!" என்று தனக்குள்தானே சொல்லிக் கொண்டாள். அடக்க முடியாத் துக்கத்தையடைந்தவளாய்க் கண்ணீர் உகுத்துத் தன்னறைக்குச்சென்று சிறு துண்டுத்தாளெடுத்து ஏதோ எழுதிக்கொண்டிருந்தாள்.

மறுநாள் காலையில் பார்க்கவன் அறையில் கதவின்கீழ் சிறுதுண்டுக் கடிதமிருந்தது. மிக ஆத்திரத்துடன் அதை எடுத்துப் பிரித்துப் பார்த்தான் பார்க்கவன். அழகிய முத்துப் போன்ற அக்ஷரங்களில் பின்வருமாறு எழுதியிருந்ததை வாசித்தான்.

"மனக்கவலை வேண்டாம்; துல்யம் நன்றாய் இருக்கிறது."

கல்பகத்தின் எழுத்தல்லவோ இது! எவ்வளவு நன்றாய் எழுதுகிறாள்! அவள் அசௌக்கியமா யிருக்கவில்லை! அவளை வரவொட்டாமல் ஒருவரும் தடுத்ததாகத் தெரியவில்லை. அவளாகவே வரவில்லைபோலும்! பார்க்கவனது வார்த்தைகள் அவளுக்கு வருத்தத்தைத் தந்தனவோ?

* * * *

"பார்க்கவ! ஆம், நீர் சொன்னது சரிதான். அந்த யோகநந்தனன் புஷ்பச்செடிக்காகத்தான் வந்தான். நீர் அன்றையதினம் சொன்னதை மனத்தில் வைத்துக்கொண்டிருந்தேன். மறுநாள்காலையில், செடியை நடுவதற்குத் தோண்டின பள்ளத்தைப் பார்க்கப்போனேன். என்னை யாராவது முன்போலக் கவனித்துவருகிறார்களாவென்றும் எல்லாப் பக்கங்களையும் சுற்றிப் பார்த்துக்கொண்டிருந்தேன்."——

"அப்புறம்?——

"யாரோ பின்னால் வருகிறதாகத் தெரிந்தது. திடீரென்று மரங்களின் பின்னால், வந்தவன் மறைந்துபோய்விட்டான்."

"நீ கவனித்ததாக அவனுக்குத் தெரியுமா?"

"தெரியவே தெரியாது. நான் அந்த பள்ளத்திற் குனிந்து கன்றைநடுவதாகப்பாவனைசெய்து அதன்மீது மண்ணைத் தள்ளிவிட்டுப் போய் விட்டேன். நான் போனேனோ இல்லையோ ஒரே

ஓட்டமாய் ஓடிவந்து அந்தப் பயிர்க்குழியைக் கிளறி அந்த முளை இருக்கிறதோ இல்லையோ வென்று தேடிப் பார்த்தான். இரண்டு மூன்று தடவை அவன் அப்படியே செய்தும் ஒன்று மகப்படாமற் போய்விடவே, பாவம் தலைமீது கைவைத்துக் கையைப் பிசைந்துகொண்டு பெருமூச்செறிந்தான்."

"அட படுபாவீ! என்ன மோசக்காரன், பார்த்தாயா?——" (வியர்வையைத் துடைத்துக்கொண்டு)——ம்——ம்——ம்—அந்த முளை என்னவாயிற்று? கல்பகம்,—அதை என்ன செய்தாய்?"

"முளையா? அதை நட்டு ஆறு நாளாயிற்று. அதற்கொன்றும் கெடுதிவராது. அந்த வஞ்சகன் என் அறைக் கதவை யுடைத்தாலொழிய அது எங்கும் போய்விடாது."

சிறிது கவலை நீங்கினவனாய் "அப்படியா!— உன்னறையிலா இருக்கிறது? அதை எந்த மண்ணில் நட்டிருக்கிறாய்?"

"உம் ஜாடியைப் போன்ற பெரிதான ஜாடியில் நீர் சொல்லியிருக்கிற மண்ணிலேயே நட்டிருக்கிறேன்."

"ஆறு நாளாயிற்றா?"

"ஆம்! ஆறு நாளாயிற்று."

"அடி இலைவிட்டதா இல்லையா?"

"இல்லை. ஒருவேளை நாளை விடுமென்றிருக்கிறேன்."

"சரி, நாளையதினம் அதைப்பற்றிப் பேசிக்கொள்ளலாம்."

கல்பகம் அநுதாபமும் அன்பும் நிறைந்த மனத்தினளாய்ச் சிறிது பெருமூச்சுவிட்டு வீட்டிற்குச் சென்றாள். அன்றிரவுமுழுவதும் பார்க்கவன் மிகவும் இனிமையாய்க்காலங்கழித்தான். மறுநாள் மிகவும் ஆநந்தபரவசனாயிருக்கையில், உலகமுழுவதுமே அவனுக்கு ஆநந்தமயமாகத் தோன்றிற்று.. பக்ஷிகளும் மிருகங்களும் சந்தோஷமாய்ச் சத்தஞ்செய்வதும் காலைச்சூரியன் தன் கதிரொளியை பரக்கச் செய்வதும், அவனைச் சிறையிலிருந்த போதிலும் இன்பமடையச்செய்தன. ஆகவே, அவன் முன்போல் துக்காக்கிராந்தனாயிராமல் எழுந்து பாட ஆரம்பித்தான். "ஓ! அப்படியா"?' என்றான் கிராதன். "இதோ உன் காலை உண்டி."

"ரொம்ப ஸந்தோஷம்.—மிகவும் பசியாகவிருக்கிறது."

பன்னிரண்டு மணியடித்ததும் கிராதன் நான்கு மனிதர்களுடன் வந்து பார்க்கவனைச் சுட்டிக்காட்டி, " சோதித்துப் பார்க்கலாம் " என்றான். அவர்களும் அப்படியே பாய், படுக்கை, அங்கி முதலிய எல்லாவற்றையும் சோதித்தார்கள். ஒன்றுங்காணோம்: போய்விட்டார்கள். மாலையில் கல்பகம் வந்ததும், பார்க்கவனைப் பார்த்துச் சந்தோஷக் குறிப்புடன்,

"முளைத்துவிட்டது"

"ஆ, என்ன துல்யமா?"

"ஆமாம்"

"ரொம்ப கவலையுடன் அதைப் பாதுகாத்துவா. அது நன்றாய் வளருமென்று நான் சொன்னேனல்லவா?"

அளவிலா ஆனந்தமடைந்தான் பார்க்கவன். அந்நாழிகைமுதல் துல்யச்செடியின் வளர்ச்சியும் பார்க்கவன் கல்பகம் இவ்விருவர்களுடைய அன்பின்முதிர்ச்சியும் அதிகரித்துக்கொண்டே வந்தன. ஒருநாள் இலைகள் நன்றாய் விட்டிருக்கிறது என்றும், மற்றொருநாள் செடிவளர்ந்துவிட்டதென்றும், இன்னுமொருநாள் செடி புஷ்பித்ததென்றும் அவனறிந்தான். இரண்டுநாட்கள் கழித்து புஷ்பம் மலர்ந்துவிட்டதென்று கல்பகம் தெரிவித்தாள். நடுக்கத்துடன் "நிறம், நிறம், நிறம்?"—என்று அவன் வினவினான்.

"கன்னங்கரேலென் றிருக்கிறது."

பார்க்கவன் பேருவகைக்கடலி லாழ்ந்தான். "கல்பகம், அதைப் பாதுகாத்துவா. வெகு ஜாக்கிரதையாய் நிழலில் வை. ஹாரிளநகரத்துப் புஷ்பசங்கத்தின் தலைவரிடம் உடனே போகவேண்டும்; அல்லது சமாசாரத்தை உடனே தெரிவிக்கவேண்டும். போய்க் கருந்துல்யம் மலர்ந்திருக்கிறதென்று சொல். ஹாரிளநகரம் வெகு தூரமாயிற்றே; பணம் வேண்டுமே; பணம் இருக்கிறதா?"

"பார்க்கவா! நீர் சொல்வதெல்லாம் சரிதான். நடுவில் புஷ்பத்தை என்ன செய்கிறது?"

"ஆமாம்; அதை உன்னுடன்கூடவே கொண்டுபோ. ஒரு நிமிஷமாவது அதைவிட்டுப் பிரிய வேண்டாம்."

"மணி பத்தடிக்கிறது. நான் போய்வருகிறேன்."

"சரி போய்வா."

கல்பகம் மிகவும் மனமுடைந்தவளாய் வீட்டிற்குச் செல்லவேண்டியிருந்தது. ஆம் போக

வேண்டியது நியாயந்தானே. தன் கண்ணிற்குக் கண்ணாய்ப் பார்த்துவந்த கருந்துல்யத்தைக் காக்கவேண்டியே அவள் போனாள்.

மறுநாள் இராத்திரி முற்பாகத்தில் தன் ஜன்னலண்டை நின்றுகொண்டு அடங்காமகிழ்ச்சி கொண்டவனாய் ஆகாயத்தை உற்றுநோக்கிய வண்ணம் யாரோ ஒருவரது வருகையை எதிர்பார்த்தவனாயிருந்தான் பார்க்கவன். கடைசியில் யாரோ வருவதாகத் தெரிந்தது. இவனுக்குத் தெரிந்த குரலில், "பார்க்கவா! இதோ பார்த்தீரா எப்படிக் கன்னங்கரேலென்றிருக்கிறது!" என்று கேட்டது.

உண்மையாகவே, துல்ய மலரானது அழகாயும், நேர்த்தியாயும், கம்பீரமாகவு மிருந்தது. அதனுடைய காம்பு வெகு நீளமாயிருந்தது. பசுமையான நான்கு இலைகளுக்கு மத்தியில் மிருதுவாயும் நேராயும் பளபளப்பாயும் நிஷ்களங்கமான ஆகாயத்தில் சந்திரனைப்போல் (பளபளப்பாய்) தோன்றியது.

பார்க்கவன் மிகவும் தழுதழுத்த குரலில், "கல்பகம்! இனிமேல் கடித மெழுதுவதற்குச் சற்றும் தாமதஞ் செய்யாதே!"

"நான் முன்னமேயே—அது மலரும் போதே—கடிதமெழுதிவிட்டேன். இதோ இருக்கிறது; சரிதானா பாரும்!"

பார்க்கவன் கடிதத்தை யெடுத்துப் பின்வருமாறு படிக்கலானான்:—

"ம-ா-ா-ஸ்ரீ புஷ்பசங்கத்தலைவரவர்களுக்கு: கருந்துல்யம் மலர்ந் திருக்கிறது; பூர்ண கருநிறங் கொண்டுள்ளது. நீரே நேரில்வந்து லவஸ்தானத்திலிருந்து எடுத்துக் கொண்டு போவீரென்ற எண்ணத்துடன் இந்த ஆளை உம்மிட மனுப்புகிறேன். நான் சிறைக்காவலர் கிராதருடைய மகளானதால் இந்த அதிசயமான புஷ்பத்தை என்னால் நேரில் கொண்டுவர முடியாது. ஆகையால்தான் உம்மை நேரில் வரச் சொன்னது.

அந்தப் புஷ்பத்திற்கு கல்பக—பார்க்கவம் என்று பேர் வைக்கவேண்டு மென்பது என் கோரிக்கை.

இப்படிக்கு,
வணக்கமுள்ள தங்கள்
கல்பகம்."

"சரிதான், நன்றாயிருக்கிறது. இப்படித்தான் எழுதவேண்டும்."

"சங்கத் தலைவரின் விலாசமென்ன?"

"கடிதத்தைக் கொடு; நான் எழுதித்தருகிறேன்" என்று வாங்கி கைநடுக்கத்துடன் கீழ் வருமாறு பார்க்கவன் எழுதினான்:—

"ம-ா-ா-ஸ்ரீ ஹரிஸேனர் அவர்கள் சமுகத்துக்கு.

புஷ்பசங்கத் தலைவர்,
ஹாரிள நகரம்."

"இதுவரையில் நம்மைக் காத்துவந்த பகவான் இன்னும் காப்பாராக! போய்வா, கல்பகம்!" என்றன்புட னனுப்பினான் பார்க்கவன்.

யோகநந்தனன் இன்னானென்று நம்மவருக்குத்தெரிந்திருக்கலாம். பயங்கரன் இப்பெயருடன் கிராதனது நேசத்தை யடைந்தான். சிறைக்காவலனது சந்தேகங்களை தான்கல்பகத்தை மணஞ்செய்துகொள்ள வந்ததாகக் காட்டி மாற்றினான். கல்பகம் புஷ்பச் செடியின் முளையை நடுவதாகப் பாவனை செய்ததனால் இவன் ஏமாந்து போனதுமுதல் தன் கருத்தைச் சிறிதேனும் வெளிக்காட்டாமல் சர்வ ஜாக்கிரதையுடனும் தனக்கு இயற்கையான வஞ்சகத்துடனும் மற்றக் கன்றுகளை பிறாறியாவண்ணம் கவனிக்க முயன்றுவந்தான்.

கடைசியில் கல்பகத்தினறையி னெதிரேஎதிர் வீட்டின் மாடியை வாடகைக் கமர்த்தி அதிலிருந்து நடப்பதெல்லாவற்றையும் கண்ணாடிக் குழல் மூலமாய் பார்த்துக்கொண் டிருந்தான். உதயம்முதல் அஸ்தமனம் வரையில் அந்தப் புஷ்பத்தொட்டி கல்பகத்தின் அறை ஜன்னலில் வைக்கப்பட்டிருந்தது. கல்பகம் அதை மிக்க கவலையுடன் கவனித்துக் கொண்டிருந்ததைக்கண்டு, அதிலிருப்பது இன்னதெனத் தெரிந்துகொண்டான். அக்கன்றைத் தான் பெறுவது எவ்விதமென்பது அவனுக்கு மனக்கவலைக்கு இடமாயிருந்தது. ஒருநாள் மாலையில் கல்பகம் வீட்டிலில்லாதபோது அவளறையின் கதவைப்பற்றிய விஷயங்களையெல்லா மறிந்துகொண்டான். ஒரு புதிய இரட்டைப் பூட்டால் அவளறை பூட்டப்பட் டிருந்தது. சாவியோ கல்பகத்தினிடமிருந்தது. ஆகையினால் தனக்குக் கிடைத்த கொத்துச்சாவிகள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாய்ப் போட்டுப்பார்த்தான். இரண்டு சாவிகள் உள் நுழைந்தன. அவைகளில் ஒன்று, முதல்பூட்டைத் திறந்தது. இரண்டாம் பூட்டைத் திறக்கவில்லை. அந்த ஒரு

சாவியைக் கொஞ்சம் சரிபடுத்தினால் போதும். ஆனால்தற்கோ இரண்டுநாள்பிடிக்கும்;கொல்லனிடம் போய்க் கொஞ்சம் அராவிக்கொண்டு வரவேண்டும். அப்படியே செய்தான். கல்பகத்தின்றையை அவள் தினந்தோறும் பார்க்கவனிடம் போகுங் காலத்தில் இவன் திறந்து துல்யமலரை பார்த்துவ்ருவது வழக்கமாயிருந்தது. என்றையதினம் புஷ்பம் மலருமென்று அவன் மனதிற்பட்டதோ, அன்று மாலை சிறிது அபினியைக் கொண்டுவந்து கிராதனை மயக்கமடையச் செய்தான். பிறகு கல்பகத்தின் நடவடிக்கைகளைக் கவனிக்க ஆரம்பித்தான். இரவு இரண்டுமணிக்கு அவள் தன்னறையை விட்டு கருந்துல்யச் செடியை மிகவும் பத்திரமாய்த் தன் கையிலெடுத்துக்கொண்டு வெளியிற்செல்வதைக் கண்டான். அவன் மனத்தில் பல்வித எண்ணங்கள் தோன்றின. அவள் சிறைச்சாலையில் பார்க்கவன் அறையினிடஞ்சென்றதையும், பார்க்கவனைக் கூப்பிட்டதையும், அவர்களிருவரும் யோசனைசெய்ததையும் அறிந்துகொண்டான். விளக்கை அணைத்துவிட்டு, அவள் தன்னறைக்கு வருவதையுங் கண்டான். பிறகு அவள் கதவைத்தாளிட்டு வெளியிலகன்றனள்.

அரைமணி நேரஞ் சென்றது. பகலவன், தான் வெளிக்கிளம்புவதற்குமுன் தன் குதிரைகளைச் செலுத்தும்போது, அக்குதிரைகளின் ஆபரணங்களினொளியும், இரதத்தின் ஒளியும் பிரகாசிப்பதைப்போல, கொஞ்சங் கொஞ்சமாகத் தன் வெளிச்சத்தை யனுப்பினான். பார்க்கவன் மிகவும் குதூகலத்தோ டிருக்கும்போது அறையினருகில் காலடிச் சப்தம் பரபரப்புடன் வருவதனா லுண்டாவதைக் கேட்டு யாரோ வருகிறார்களென அறிந்துகொண்டான். பெருமூச்செறிந்துகொண்டு, “பார்க்கவ! பார்க்கவ!” எனக் கல்பகம் அலறினாள்.

முக்கிய அறிவிப்பு

ஆரியமத உபாக்கியானம்.—முதற் பாகம், புதிய பதிப்பு (14-ம் பதிப்பு) வெளியாய்விட்டது. வழக்கம்போல் உயர்ந்த காகிதத்தில் மிக்க அழகாய் அச்சிடப் பெற்றது. மனோஹரமான 14-ஆப்டோன் படங்கள் கொண்டது. புராணங்களிலிருந்து எடுத்தெழுதப்பட்ட 54 சிறந்த நீதிக்கதைகள் அடங்கியது. விலை ரூ. 3. வியாபாரிகளுக்கும், உபாத்தியாயர்களுக்கும், [illegible] தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES.

கல்வி முறையில் திருத்தம்.—ஜெர்மனியில் டாக்டர் இன்ஸ்டீன் என்பவர் கியாதிபெற்ற பிரகிருதி சாஸ்திர விற்பன்னர். அவருடைய பெயர், தற்போது மிகுதியும் வியாபகமடைந்து வருகிறதற்கு அவருடைய நூதன யோசனைகள் காரணமாகும். அவர் தற்போதுள்ள கல்வி முறையைப்பற்றி வெளியிட்டுள்ள அபிப்பிராயம் இந்தியாவிலும் கவனிக்கத் தக்கது. இப்போது கல்வி ஸ்தாபனங்களில், கேவலம் ஞாபக சக்தியையே ஆதாரமாகக் கொண்டு மாணவர்களுக்கு அடிக்கடி பரீட்சைகள் வைத்து கல்வி புகட்ட எத்தனிப்பதை அவர் பலமாகக் கண்டிக்கிறார். பரீட்சைகளை நீக்கிவிட்டு மாணவர்களின் யோசனா சக்தியை விருத்திசெய்யவேண்டுமென்பதே அவருடைய நோக்கம். மாணவர்கள் தாம் படிக்கின்றவைகளை ஞாபகத்தில் வைத்துக்கொள்வது அவசியமேயானாலும், அவர்கள் கற்கின்ற விஷயங்களில் அவர்களுடைய புத்தியைச்செலுத்திக் கொண்டு போவதே அதற்குத்தக்க உபாயமாகும். தவிர ஒவ்வொரு மாணவனும் ஏதேனும் ஒருதொழிலைக் கற்கச்செய்யவேண்டும். அந்தத் தொழிலினால் அவனுடைய அவயவங்களும் புத்தியும்சேர்ந்தாற்போல்விருத்திபெறும் அதனால் ஜாதி வித்தியாசங்களும், தொழில் செய்வோர்களைப்பற்றியுள்ள தாழ்வான அபிப்பிராயமும் நீங்கிவிடும். தவிர, பயாஸ்கோப் அதாவது ஸினிமா படங்களின் மூலமாக மாணவர்களுக்குக் கல்விபுகட்டுவது சிறந்த உபாயமென்று அந்த ஜெர்மன் பண்டிதர் அபிப்பிராயப்படுகிறார். இவ்விஷயத்தை ஜெர்மனியில் அவர் இப்போது நிரூபித்துக் காண்பிப்பதில் வெகு சிரமமெடுத்து வருகிறார். பூகோள சாஸ்திரம், சரித்திரம், முதலிய சாமான்ய விஷயங்களைக் கற்பிப்பதோடு, பிரகிருதி சாஸ்திரம் ரஸாயன சாஸ்திரம் ஆகிய இவைகளைப்பற்றிய கடினமான தத்துவங்களை எளிதாக புகட்டவுங் கூடுமென்பதை அவர் வெளியிட்டு வருகிறார்.

தஞ்சை நாயகர் தாழ்வு அல்லது விதியின் வலிமை—நான்கு ஆப்டோன் படங்களுடன் ரூ. 1.

["விவேக போதினி" அநுபந்தம்.

திருக்கழுக்குன்றம் பக்ஷிதரிசனம்



திருக்கழுக்குன்றம் கோவில்

Supplement to the "Viveka Bodhini."]

விவேகபோதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு." —திருவள்ளுவர்.

22 AUG 1922

தொகுதி XIV} துந்துபிஞ வைகாசிமீ :: 1922-ம் ஞு ஜூன்மீ {பகுதி 12

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

இருந ரார்க்கொரு காலா ஜெயஜெய !
 சுரர்க ளேத்திடு வேலா ஜெயஜெய !
 இமல னார்க்கொரு பாலா ஜெயஜெய ! விதலான

கெடிய வேற்படை யானே ஜெயஜெய !
 என இராப்பகல் தானே நான்மிக
 நினது தாட்டொழு மாறே தானினி யுடனேதான்

தலைவி ழும்த்திரை யேழே போலெழு
 பிறவி மூாக்கட லூடே நானுழ
 சவிலை தீர்த்தன தானே குடியு னடியார்வாழ்

சபையி னேற்றியின் ஞான போதமும்
 அருளி யாட்கொளு மாறே தானது
 தமியனேற்குமு னேநீ மேவுவ தொருநாளே?

தருவி னூட்டர சாள்வான் வேணுவி
 னுருவ மாய்ப்பல னாளே தானுழ
 தவசி னுற்றிவ வியோய் வானவர் சிறைதீரச்

சகல லோகமெ மேதா னாளுறு
 மசுரர் பார்த்திப னோடே சேயவர்
 தமரை வேற்கொடு நீறு போபட விழமோதென்

தருண ஏற்றம தோடே போயவ
 குறைய மாக்கிரி யோடே தானையு
 மழிய வீழ்த்தெதிர் சூரோ டேயம ரடலாடி

அமரில் வீட்டியும் வானோர் தானுறு
 சிறைவி டுேட்டா னூர்பால் மேவிய
 அதிப ராக்கிரம வீரா வானவர் பெருமாளே !

கற்பகவிருக்ஷம் வளரும் பொன்னுலகத்துக்கு அரசனுகிய தேவேந்திரன் தேவர்களுக்குச் சூரபதுமன் முதலானவர்களால் ஏற்பட்ட இடர்கள் நீங்குமாறு சிகாழிப்பதியில் தன்னைத் தேடவந்த சூரபதுமனது தூதர்களுக்குப் பயந்து தன்னுருவத்தை மாற்றிக்கொண்டு மூங்கிலின் உருவத்துடன் வெருகாலம் இயற்றிவந்த தவத்துக்கு வந்து சிவபெருமான், "நீ போய், சூரபதுமனால் சிறையிடப்பட்ட தேவர்களது காராக்கிரகவாசம் தொலையுமாறு, சகலலோகங்களையும் ஆண்டுவருகின்ற அசுரர் கோமானுகிய சூரபதுமனையும் அவன் குமாரர்களையும் சுற்றத்தவர்களையும் வேலாயுதத்தினால் அவர்கள் அழிந்து நீறாக ஆகும்வண்ணம் தாக்குவாயாக!" என்று திருவாய்மலர்ந்தருள, அப்பணியைச் சிரமேற்கொண்டு போர்க்கோலத்துடன் புறப்பட்டுச் சென்று அவர்கள் வசித்துவந்த மாயம் நிறைந்த கிரௌஞ்ச மலையை வேலாயுதத்தினுல் பிளந்து அழித்து, அவர்களுடைய சேனைகளைக் கொன்று, சிறு பாலகனென்றெண்ணி அலக்ஷியமாய் வந்தெதிர்த்த சூரபதுமனுடன் உக்கிரமான போர் செய்து போரில் அவனை வென்று அழித்து, தேவர்களைச் சிறையினின்றும் விடுவித்துவிட்டுச் சிவபெருமான் சந்நிதிக்குத் திரும்பிய அதிபராக்கிரமமுள்ள வீரனே! தேவர்களைக் காத்தருளிய பெரியோனே! அசுரர்களையழிக்க ஒருகாலனை வந்தவனே! ஜயஜய! தேவர்கள் புகழ்ந்து துதிக்கும் வேலாயுதனே! ஜயஜய! நிமலராகிய சிவபெருமானுக்கு ஒப்பற்ற திருமகனுய் வந்து உதித்தவனே! ஜயஜய! மிக்க வலிமைபொருந்திய நீண்ட வேலாயுதத்தைத் திருக்கரத்தில் தாங்கியவனே! ஜயஜய!" என்று அடியேன் அல்லும் பகலும் வாயாரப் போற்றி நினது கழலிணைகளைத் தொழுமாறும், பூவுலகத்தைச் சூழ்ந்தலைகளும் அலைகளை வீசுபவைகளுமான ஆழமான சப்த சமுத்திரங்களைப்போலவே ஆரவாரித்தெழுந்து அடியேனை அலைக்கழித்துக் கரைசேரவொட்டாமல்தடுத்து தனக்குள்ளே ஆழ்த்திக்கொண்டு வரும் பிறவியாகிய பெருங்கடலில் அகப்பட்டுத் தயருழன்று மெலிந்த அடியேனது துன்பத்தை நீக்கி, நின்பாதாரவிந்தங்களை அடியேன் தலைமேற் சூட்டி, நின் மெய்யன்பர்கள் கூட்டத்தில் அடியேனையும் சேர்த்து, துக்கமில்லாத சுகத்தைத்தரும் ஞானத்தை அடியேனுக்கு உபதேசித்து, அடியேனைத் தடுத்தாட்கொள்ளுமாறும் தமியேன் முன்னே நீ தோன்றியருளும் காலமுண்டோ?

 மாலைசுற்றிப் பெண்பிறந்தால் மாமனுக்கு ஆகாது.

விவேக போதினி

தொ. 14] துந்துபி௵ :: வைகாசி௴ [ப. 12

கந்த புராணம்

SKANDA PURANAM

மேற் கூறியவாறு இந்திராணி யானவள் சீகாழிப் பதியிலுள்ள நந்தவனத்தில் தனது நாயகனது வரவை யெதிர்பார்த்துத் தவஞ் செய்துகொண் டிருக்கையில், நாரத முனிவர் அங்கு நிகழ்ந்தவைகளைத் தமது ஞானதிருஷ்டியினாற் கண்டு திருக் கயிலாயத்துக்குச் சென்று இந்திரனுக்குத் தெரிவிக்க, இந்திரன் தேவர்களுட னெழுந்து திருநந்திதேவர் முன் சென்று, "ஐயனே! மகாபாபிகளாகிய அடியேங்கள் எம்பெருமானைத் தரிசிப்பதற்காக வெகுகாலமாகக் காத்திருந்தோம். ஆனால் எம்பெருமான் அடியேங்கள் முன்புசெய்த தீவினையைச் சித்தத்தில் வைத்து இன்னும் திருவருள் புரியவில்லை. ஆதலின் யாங்கள் சிவபெருமான் எங்களுக்குத் திருவருள் புரியுமாறு மெய்த்தவஞ் செய்யப் பூவுலகத்துக்குச் செல்லுகிறோம். எங்களுக்கு விடைகொடுத் தருளவேண்டும்" என்று வேண்டி, அவரிடம் விடை பெற்றுக்கொண்டு சீகாழிப்பதிக்குச் சென்றான். அப்பதியை யடைந்ததும் இந்திரன் தன் நந்தவனத்துக்குச் சென்று மகாகாளரைத் தழுவி விடைகொடுத்தனுப்பிவிட்டு இந்திராணி யிருக்குமிடத்துக்குத் தனித்துச் சென்று அவளைத் தேற்றி, அஜமுகி தேவர்களனைவரையும் பிடித்துச் சிறையிடப் பெருஞ்சேனையை யனுப்புவதாகச் சபதங்கூறிச் சென்றதை இந்திராணி சொல்லக் கெட்டு, அதன்மேல் அங்கிருப்பது தகுதியன்றெனத் தீர்மானித்து இந்திராணியையும் அங்கிருந்த தேவர்களையும் அழைத்துக்கொண்டு அவ்விடத்தினின்றும் நீங்கி மேருமலைக்குச் சென்று ஆங்குமறைந்து தவமியற்றிவந்தான்.

வீரமாகாளரால் கைதுணிக்கப்பட்டு சீகாழிப் பதியைவிட்டுப் புறப்பட்ட அஜமுகி தன்தோழி துன்முகியுடன் வீரமகேந்திர புரத்தினுள் நுழைந்து தனக்கு ஒரு தேவன் இழைத்த கொடுமையைப்பற்றிப் புலம்பிக் கொண்டு சென்று, தனக்கும் தன் தோழிக்கும் நேர்ந்த கொடிய விபத்தைக் கண்டு மனவருந்தித் தங்கள் அரசன் தங்கைக்கும் அத்தகைய தீங்கை யிழைக்க ஒருவன் துணிந்ததை யுன்னி ஆச்சரியமும் கடுஞ்சினமுங் கொண்டு தன்னைப் பின்தொடர்ந்துவந்த அசுரர்களுடனும் அசுரஸ்திரீகளுடனும் வீதிகளின் வழியே நடந்து, மிகுந்த கோலாகலத்துடன் செம்பொற் சபைக் கூடத்தில் நவரத்தின கசிதமான சிங்காதனத்திலமர்ந்து, தேவர்களும் அசுரர்களும் கைகட்டி வாய்புதைத்து நிற்கவும், முனிவர்கள் வெருவி ஓயாமல் ஆசிகூறி நிற்கவும், அரம்பை மாதர்கள் நாட்டியமாடவும் தன் தம்பிமார்களும் புத்திரர்களும் அருகே யிருக்கவும், நடனஞ்செய்தவர்களுக்கும், சேனைத் தலைவர்களுக்கும் விலைபெற்ற பரிசுகளை யளித்துங்கொண்டிருந்த சமயத்தில் அங் கோலாகலமான சபையில் நுழைந்து, தன் தாயையும், தமையன்மார்களையும், மருகர்களையும் முறைமுறையாக விளித்து தனக்குப் பெரிய அவமானமும் கொடுமையும் இழைத்தவனை இன்னும் அழிக்காது வாளாவிருத்தல் அவர்களுடைய வலிமைக்கும் பெருமைக்கும் பழியை விளைவிக்காதாவென்று புலம்பித் தரையில் விழுந்து புரண்டாள். அவள் துயரத்தைக் கண்ணுற்ற சூரபதுமன் கரைகடந்த கோபங்கொண்டு கண்களினின்றும் தீப்பொறி பறக்க, "தங்காய்! உன்னை இன்னாரென்று அறிந்துகொள்ளாமலும் என்னை மதியாமலும் உனது கையையும் இத்துன்முகியின் கையையும் வெட்டி வீரனென்ற பெயருடன் உயிர் வாழ்ந்திருப்பவன் யார்?" என்று வினவ, அஜமுகி, "இந்திராணி பூமியிலொரு புறத்தில் தவஞ் செய்துகொண் டிருந்தாள். அவளை உனக்கு மனைவியாக்கக் கருதி நாங்கள் அவளைப் பற்றியிழுத்தோம். உடனே ஒருதேவன் விரைந்து வந்து கோபித்து எங்கள் கைகளை வெட்டி அவ்விந்திராணியை மீட்டுக்கொண்டு சென்றான்" என்று கூறினாள். அப்போது சூரபதுமன் பெருமூச்செறிந்தான்! பற்களால் உதடுகளைக் கடித்துக்கொண்டான்; இடிமுழங்குவதுபோலக் கர்ச்சித்தான்; கடுங் கோபத்தினால் நகைத்தான்; பற்களை கறகறவென்று கடித்தான்; தன் தம்பியர்களை நோக்கி, "நமது ஏவலின்படி மீன்சுமந்து திரிந்த இந்திரன் காட்டில் மறைந்து வசித்துக்கொண்டு ஒருவனைக்கொண்டு இவள் கையைத் துணிப்பித்தானாகையால், இனி மனிதர்களும் நம்மைக் கொல்லத் தொடங்குவார்கள். தேவலோகத்தில் நடந்த யுத்தத்தில் தோற்றுப்போன தேவர்களை அவர்களுடைய ஆடைகளினாலேயேகட்டி என்முன் கொண்டுவந்து நிறுத்தியபோது, யான் என்னெதிரிலுள்ள அசுரர்களைத் தங்கள் பசிநீங்கும் வண்ணம் அத்தேவர்களை யுண்ணச் சொல்லாமல் தருமத்தை நினைந்து அவர்களை உயிரோடு விட்டேன். அவ்வாறு நான் செய்தது விளைபயனறியாமல் கொள்ளிக்கட்டையைத் தனது ஆடையில் மறைத்து வைத்தவன் செயலை யொத்ததாயிற்று. நீங்களிருக்கின்றீர்கள்; நமது புதல்வர்களு மிருக்கின்றார்கள்; ஒப்பற்ற இந்திரஜால மென்னும் தேரும் இருக்கிறது; சக்கரமுமிருக்கிறது; யானும் இருக்கிறேன்; இருந்தென்ன பிரயோசனம்? இவர்கள் கைகள் வெட்டப்பட்டபோது சிந்திய இரத்தத் துளிகள் என் பெருங் கீர்த்தியை யழித்துவிட்டன. ஆகா! என் அரசாட்சி முறைமை மிகவும் நன்றா யிருக்கிறது!" என்றான்.

உடனே அவனது குமாரன் பானுகோபன் எழுந்து, "தந்தாய்! ஒரு தேவன் இவர்கள் கைகளை வெட்டித் துணித்தானென்பது மலடிபெற்ற மகன் தன் கையை நீட்டி ஆகாயத்தினுலாவும் சந்திரனைப் பிடித்தான் என்பதுபோலிருக்கிறது. அப்படியே ஒரு தேவன் அவ்வாறு செய்திருந்தாலும், தேவர்கள் நமக்கு இழிவான குற்றேவல்கள் செய்துவந்த பேடிகளாதலால், அவன் தங்கள் கோபத்துக்குத் தகுந்த பாத்திரமன்று. ஆயினும் யான் சென்று இவர்கள் கைகளை வெட்டித் துணித்த ஆண்மகனையும், தங்கள் மனத்தில் காமத்தையுண்டாக்கிய இந்திராணியையும், இந்திரனாகிய கள்வனையும், தேவர்களையும் பிடித்துக்கொண்டு வந்து தங்கள் திருமுன் நிறுத்துகிறேன். தாங்களும் தங்கள் தம்பிமார்களும் தயவுசெய்து கோபந் தணித்துக்கொள்ளுங்கள்" என்று கூறி விடைபெற்றுச் சபையைவிட்டு நீங்கித் தன திருப்பிடத்துக்குச் சென்றான்.

அவன் சபையைவிட் டகன்றபின், சூரபதுமன் பிரமதேவரை யழைத்து அஜமுகி துன்முகி இவர்களுடைய அறுபட்ட கையை முன்போலப் படைக்கும்படி கூறினான். உடனே பிரமதேவர், "இவர்களுக்கு மிக்க வலிமை பெற்ற கைகள் வளரக்கடவன!" என்று கூற, அவர்கள் கைகள்அவ்வாறே வளரவும், சூரபதுமன் அவரது திறமையைப் புகழ்ந்து, பிறகு துன்முகியை நோக்கி, "நீ பானுகோபனுடன் சென்று உங்கள் கைகள் வெட்டப்பட்ட இடத்தைக் காட்டிவிட்டுக் வரக்கடவாய்!" என்று கட்டளையிட்டான். பிறகு சூரபதுமன் சூரியனையும், மற்றக் கிரகங்களையும், வாயுக்களையும், அந்த வருஷம், இருது, மாதம் முதலியவற்றின் அதி தேவர்களையும் மண்ணுலகத்தில் அரசு புரிந்துவந்த அரசர்களையும் வரவழைத்து அஜமுகியின் கையை வெட்டித் துணித்தவன் யாரென்று வினவி, அவர்கள் அஜமுகியின் கையை எவரும் வெட்டியதைக் காணவில்லையென்று கூற, அவர்களது மொழிகளை நம்பாது சினங்கொண்டு, உலகத்தரசர்களது அங்கங்களை வெட்டித் துன்புறுத்தி ஏனையோர்களைச் சிறையிலிடுவித்தான். பிறகு அவன் தன் தம்பிமார்களுக்கு விடைகொடுத்து, பிரமதேவரையும், "இனி நீ போகலாம்!" என்று கூறினான். அப்போது பிரமதேவர், "அரசர்க்கரசனாயுள்ள சூரபதுமனே! ஆகாயத்தினுலவுகின்ற சூரியன், நக்ஷத்திரங்கள், வாயுக்கள் முதலியவர்களும், மண்ணுலக வரசர்களும், என்றும் உனக்கு அடங்கி நடப்பவர்கள். உலகவிஷயங்கள் அவர்களில்லாமல் நடந்தேற மாட்டா. ஆதலின் அவர்கள் இக்கொடிய சம்பவத்தைக் கவனிக்காத பிழையைப் பொறுத்து அவர்களைச் சிறையினின்றும் விடுவிப்பாயாக!" என்று கூறினார். அதுகேட்ட சூரபதுமன் நன்றென அதற்கிசைந்து தூதுவர்களை யனுப்பி அவர்கள் யாவரையும் தன்முன் கொண்டுவரச் சொல்லி, அவர்களை நோக்கி, "நீங்கள் எப்போதும் என் ஆணைக்கடங்கி நடக்க வேண்டும்; இந்திரனுடன் சேரக்கூடாது; இனி உங்கள் பழைய தொழில்களைச் செய்யச் செல்லுங்கள்!" என்று கட்டளையிட்டான். அவர்களும் அவ்வாறே

செய்வதாகச் சொல்லி நயமொழிகள் புகன்று அவ்விடம் விட்டு நீங்கினர். பிறகு சூரபதுமன் யாவர்க்கும் விடைகொடுத்தனுப்பிவிட்டுத் தனதிருப்பிடத்துக்குச் சென்றான்.

சபையைவிட்டுச் சென்ற பானுகோபன் தனது சேனைகளைத் தயார் செய்துகொண்டு துன்முகியையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டு, அவளால் தங்கள் கரங்கள் துணிக்கப்பட்ட விடமெனக் காட்டப்பட்ட சீகாழிப்பதியிலுள்ள நந்தவனத்துக்குட் சென்று அதையழித்து வெட்டவெளியாக்கி, அதில் எவரையுங் காணமையால் உலகமுழுவதுந் தேடிப் பிறகு தேவலோகத்துக்குச் சென்றான். அவன் வரவை ஒற்றர்களால் அறிந்த இந்திரன் மகனை ஜயந்தன் தேவர்களை நோக்கி, "என் தாயுந்தந்தையும் தேவர்களிற் பலரும் நிலவுலகத்திற் சென்று மறைந்துகொள்ள, அவர்களிருப்பிடத்தைக் கண்டுபிடிக்க அநேக அசுரர்கள் தேடித் திரிகின்றார்கள். அப்படியிருக்கும்போது நாம் எங்கு ஓடி யொளிப்பது? நம்மை யெல்லாம் காக்கத்தக்க புகலிடமொன்றுண்டோ? இல்லையாதலின், இனி நாம் எங்கும் போகவேண்டாம்; வருந்தவும் வேண்டாம்; வருந்தினால் வருவன வராமல் நிற்குமோ? இனி அசுரர்களுக்குப் புறங்காட்டுவதுமில்லை, அவர்களை வணங்கித் துதிப்பதுமில்லை, அவர்களை யெதிர்த்துப் பொருது வென்று பிழைப்பது அல்லது உயிரிழப்பது என்று என் மனத்தில் நான் உறுதி செய்துகொண்டேன். உங்களில் வர இஷ்டமுள்ளவர்கள் என்னுடன் வாருங்கள். இஷ்டமில்லாதவர்கள் இப்போதே போய் விடுங்கள். நீங்கள் யாவரும் அச்சத்துடன் ஓடிவிட்டாலும், நான் சிறிதும் மனத்தளர்ச்சி யடையாமல் போர் செய்வேன்" என்று கூறினான். அது கேட்ட தேவர்கள், "அசுரர்களுக்கு ஊழியஞ் செய்து நீங்காத துன்பத்தை யனுபவிப்பதைப் பார்க்கிலும், அவர்களை யெதிர்த்துப் பொருது மாண்டுவிடுவது மிகவும் நலம். ஆதலால் விரைந்து போருக்கெழுந்திரு!" என்று கூறினார்கள்.

உடனே ஜயந்தன் வெள்ளையானையின் மீதேறி தேவர்கள் கூட்டம் தன்னைச் சூழ்ந்துவர முரசொலியுடனும் ஆரவாரத்துடனும் அசுரர்களை யெதிர்க்கச் சென்றனன். அதற்கு முதல்நாள்கூடத் தங்களுக்குக் குற்றேவல் செய்த தேவர்கள் தங்களுடன் போர்செய்யக் கிளம்பியதைக் கண்ட அசுரர்கள் மிகுந்த ஆச்சரியத்துடன் போருக்கெழுந்தார்கள். இருதிறத்துச் சேனைகளும் ஒன்றை யொன்று தாக்கின. சிறிது நேரத்தில் தேவர்கள் வலிமையற்றவர்களாய் ஓடினார்கள். அசுரர்கள் அவர்களைத் துரத்திச் சென்று தங்கள் வில்லின் நாணினால் அவர்களது புயங்களைக் கட்டி யிழுத்துக்கொண்டு திரும்பினார்கள். அசுரர்கள் அவர்களைப் பானுகோபன் முன் கொண்டுபோய் நிறுத்தவும் அவன் அவர்களை வலிமையோடு காவல் செய்யும்படி கட்டளையிட்டான். அது கண்ட ஜயந்தன் வெகுண்டு தன் வில்லைக் கையிலெடுத்து வளைத்து பகைவர்களெதிரிற் சென்று அவர்கள் அஞ்சும்படி ஆரவாரத்துடன் பாண வருஷங்களைப் பொழிந்தான். அசுரவீரர்கள் அவனைச் சுற்றிக்கொண்டு அவன்மீதும் ஐராவதத்தின்மீதும் பாணங்களைச் சொரிந்தார்கள். ஆனால் ஜயந்தனது நிகரற்ற வல்லமைக்கு முன், அசுரசேனைகள் நிற்கமுடியவில்லை. ஜயந்தனது அம்புகளினாலும் ஐராவதத்தின் துதிக்கையினாலும், கோடுகளினாலும், கால்களினாலும், வாலினாலும் அநேக கோடி அசுரர்கள் மாண்டனர். கடைசியாக ஜயந்தனை நீலகேசன் என்னும் அசுரன் எதிர்த்துப் போர்செய்து அவனுடைய வில்லின் நாணினை அறுத்தான். அப்போது ஜயந்தன் தான் முன்னாளிற் கற்ற ஒரு மாய மந்திரத்தை யுச்சரித்துப் பல மாய வுருவங்களை யெடுத்துக்கொண்டு அசுரசேனைகளைப் பலவிதமாகக் கொல்ல ஆரம்பித்தான். நீலகேசன் அது மாயையென வுணர்ந்து அதை யகற்றும் வலிமையின்றி எதிர்த்து ஆரவாரிக்க வாயுமின்றி மயக்கங்கொண்டு ஓட்டம் பிடித்தான்; உடனே பானுகோபனது சேனைகள் பிரளய காலத்திலழியும் உயிர்களைப்போல் பயந்தோடின; சோகமடைந்தன; பயந்தழிந்தன. பானுகோபனுடைய ஏனைய சேனாதிபதிகளும் நீலகேசனைப்போலவே ஜயந்தனது மாயையை யகற்ற வலியற்றவராய் ஏக்கமுற்று மயங்கினர். அவ்வாறு தன் சேனைகளழிவதையும் சேனாதிபதிகள் கலங்குவதையும் கவனித்த பானுகோபன் இது ஜயந்தனது மாயையாகுமெனத் தேர்ந்து, முன்பு சுக்கிரன் தனக்கு உபதேசித்த மூல மானான மந்திரத்தை விதிப்படி

மனத்தினில் நினைத்தான். உடனே மாயையினாலுண்டான பலவுருவங்கள் நீங்க, ஜயந்தன் தன் சுயவுருவம் ஒன்றுடன் மகாகோபத்துடன் ஐராவதத்தின்மீது தோன்றினான். பானுகோபன் ஜயந்தனை யிகழ்ந்துபேசிப் போருக்கழைக்க, இரு வீரர்களுக்கும் நெடுநேரம் கொடும்போர் நடந்தது. கடைசியாக பானுகோபன் ஜயந்தனது வில்லை யொடித்து அம்புறாத்தூணியைத் துணித்து, ஜயந்தன் உடம்பு முழுவதிலும் ஐராவதத்தின் உடம்புமுழுவதிலும் அம்புகளை யழுத்தினான். ஜயந்தன் வெள்ளையானையின்மீது விழுந்து வருந்தி மூர்ச்சித்தான். அவன் அமுதத்தைப் புசித்துப் பெற்ற வன்மையால்மட்டும் இறவா தொழிந்தான். அதுகண்ட வெள்ளையானை மிகுந்த கோபத்துடன் பானுகோபனது இரதத்தின் மேற்பாய்ந்து, அதிற்கட்டிய குதிரைகளையும் பாகர்களையும் அழித்துக் கர்ச்சித்தது. உடனே பானுகோபன் தேரினின்றும் குதித்துக் கோபத்துடன் வெள்ளையானையைத் தாக்கச் சென்றான். வெள்ளையானை அவனுடைய மார்பில் தாக்க, அதன் கோடுகள் நான்கும் மலையைத் துளைக்கச் சென்ற ஊசியைப்போல் ஒடிந்தன. உடனே பானுகோபன் அதன் துதிக்கையைப் பிடித்துக்கொண்டு அதன் கன்னத்திலறைய, அது பேரிரைச்சலிட்டு வீழ்ந்து சோர்ந்தது. ஜயந்தனும் தரையில்விழ மயக்கந்தெளிந்து, "மனமே! நாம் செய்த மாயை யொழிந்தது, தனித்து நின்றோம், வலிமையும் குறைந்தது, கொடிய அசுரர்கள் நம்மைப் பிடித்துக்கொள்வார்கள், இப்பொன்னகரமும் அழியும் என்று வருந்தாதே! இவையாவும் விதியின்பயனாகும்" என்று தனக்குள் தானே சொல்லிக்கொண்டான்.

ஜயந்தன் வெள்ளையானையுடன் கீழேவிழுந்து மயங்கிச் சோர்ந்து தனித்திருந்த தன்மையைக்கண்டு அசுரத் தலைவர்கள் ஆரவாரித்து அவனைப் பிடித்துக்கொண்டார்கள்; அசுரர்கள் யாவரும் திரண்டு அவனைச் சூழ்ந்து, "இவன் வஞ்சகன். இவனை அடியுங்கள்! குற்றுங்கள்!" எனக் கூவினார்கள். அப்போது பானுகோபன் வேறொரு தேரிலேறி விரைந்து அங்கு வந்து கூடியிருந்த அசுரர்களை நோக்கி, "இந்த ஜயந்தன் நான் பிரயோகித்த பாணங்களால் அடிபட்டு மயங்கி மிகவும் தேகந்தளர்ந்தனன். ஆதலின் இவனைப் பகைவனாகக் கருதி வருத்தாதீர்கள். இவனைத் தேவர் கூட்டத்துடன் சிறைசெய்யுங்கள்!" என்று கட்டளையிட, அவர்கள் ஜயந்தனது தோள்களை நாண்கயிற்றினாற் கட்டி சிறைப்பட்ட மற்றத்தேவர்களுடன் சேர்த்தனர். பிறகு பானுகோபன் தன்னருகில் நின்ற ஏவலாளரை நோக்கி, "ஜயந்தனும் இத்தேவர்களுமல்லாமல் ஒழிந்து நின்றோரையும் பிடித்துக் கட்டிக்கொண்டுவந்து என் முன்னே நிறுத்துங்கள்! பிறகு இப்பழைய பொன்னகரத்தை அக்கினி தேவனுக்கு இரையாக்குங்கள்!" என்று கட்டளையிட, அவர்கள் அவ்வாறே செய்தனர். தேவர்களும் தேவமாதர்களும் யாவரும் சிறைப்பட்டனர். பொன்னகரம் தீக்கிரையாகிச் சாம்பராயிற்று. பானுகோபன் அவைகளைக் களிப்புடன் கண்டு தன் காவலாளர்களை நோக்கி, "ஜயந்தனையும் மற்றத் தேவர்களையும் நீங்கள் முன்னே வீரமகேந்திரபுரத்துக்குக் கொண்டுபோங்கள்!" என்று கூற, அவர்கள் தேவர்களைப் பிடித்துக்கொண்டு சொர்க்கலோகத்தைவிட் டகன்றார்கள். பிறகு பானுகோபன் தன் சேனைகளுடன் அவ்விடம்விட்டு நீங்கி மண்ணுலகத்துக்குச் சென்று வீரமகேந்திரபுரத்தை யடைந்து இரதத்தைவிட் டிறங்கித் தன் சேனைகளை வெளியே நிறுத்திவிட்டு தேவர்களாகிய சிறையினை யழைத்துக்கொண்டு சென்று சூரபதுமன் முன்போய் அவனது பாதங்களை வணங்கி, "தந்தாய்! இந்திரனையும் இந்திராணியையுங் காணேம். சுவர்க்க லோக முழுவதையும் தீயிட்டுக் கொளுத்திச் சாம்பராக்கி, ஜயந்தனையும் பொன்னுலகத்திலிருந்த தேவர்களனைவரையும் சிறைபிடித்து வந்திருக்கிறேன்" என்று கூறினான். அதுகேட்ட சூரபதுமன் மகிழ்ந்து தனது இளம் புதல்வனைத் தழுவி, தனக்குமுன் கொண்டுவந்து நிறுத்தப்பட்ட ஜயந்தன் முதலாயினோரை மிகவும் கோபித்து வாளைக் கையிலேந்திய சில காவலாளர்களைப் பார்த்து, "நமக்கு முன்னே நிற்கும் இவர்களுடைய அங்கங்களை யெல்லாம் துணித்து விடுங்கள்!" என்று கட்டளையிட்டான். உடனே அவுணர்கள் பலர் தேவர்கள்மீது பாய்ந்து அஜமுகியானவள் காண அவர்கள் அங்கங்களை வெட்டத் தொடங்கினார்கள். ஆனால் தேவர்கள் செய்திருந்த தபோபலத்தினால் அவர்களுடைய அங்கங்களை அசுரர்கள்

வெட்ட வெட்ட அவைகள் உடனுக்குடனே திரும்பவும் உண்டாயின. அதுகண்ட சூரபதுமன் 'தேவர்களை எவரும் கொல்லுவதரிதாகும். அவர்களுடைய அவயவங்களையும் சற்றும் அழிப்பதற்கு முடியாதாயின், அவர்களுடைய வல்லமையினளவை யெடுத்துரைக்க முடியாது. அது என் அரிய தவத்தினால்தான் தொலைந்தது போலும்!' என்று தன் மனத்தினி லெண்ணிக் கோபங்கொண்டு காவலாளர்களை நோக்கி, "இத்தேவர்களை என்றும் மீளவொண்ணாத நரகம்போன்ற சிறையி லிடுங்கள்!" என்று கூற, அசுரர்கள் ஜயந்தனையும் தேவர்களையும் கழுத்தைப் பிடித்துத் தள்ளிச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோய் விலங்கிட்டடைத்தார்கள். பிறகு சூரபதுமன் தன் மகனுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டுத் தன் சபையினின்றும் நீங்கித் தன் அரண்மனைக்குச் சென்றான். சிறையிலகப்பட்ட தேவர்கள் துயர்க்கடலில் மூழ்கினார்கள். தேவமாதர்கள் அவ்வீரமகேந்திரபுரத்தில் காவல் செய்யப்பட்டு இழிவான ஏவல்களைச் செய்துவந்தார்கள்.

தேவலோகத்தில் பானுகோபனுடன் சண்டைசெய்து கொம்புகளொடிந்து கீழேவிழுந்து மூர்ச்சை யடைந்த வெள்ளையானை, பின்னர் மூர்ச்சை தெளிந்தெழுந்து உடனே நிலவுலகத்துக்கு வந்து திருவெண்காட்டை யடைந்து மூலகாரணராகிய முக்கணெந்தையை இலிங்க வடிவமாகப் பிரதிஷ்டைசெய்து ஆசாரத்துடன் அருச்சனை செய்து, நின்மலராகிய சிவபெருமான் அருளிச்செய்த ஆகமவிதிகளையுணர்ந்து முதிர்ந்த மெய்யன்பினால் அவரை வணங்கி மறைந்து வசித்துவரும் நாளில் எம்பெருமானருளினால் அதன் நான்குகோடுகளும் பண்டுபோல் திரும்பவும் வளர்ந்தன. அது கண்டு ஐராவதம் பெருமகிழ்ச்சி கொண்டு அவ்விடத்திலேயே யிருந்தது. இந்திரன் அதை யுணர்ந்து கொடுந்தவம் புரியலுற்றான். இனி சர்வேசுவரரான சிவபெருமான், தேவேந்திரன் தவத்துக் குகந்து தேவர்களுக்கு அருள்புரிய வெண்ணி ஞானதேசிகனாகிய சுப்பிரமண்யக்கடவுளைத் தந்தருளியதையும், முருகப்பெருமான் தமது ஞான சத்தியாகிய கோடிசூரியப் பிரகாசம் பொருந்திய வேலாயுதத்தினால் சூரபதுமனையும் அவனைச்சார்ந்த அவுணர்களையும் அழித்து தேவர்களைக்கொடிய சிறையினின்றும் விடுவித்து அவர்களுக்குத் திரும்பவும்வாழ்வுதந்தருளியதையும்கூறுவாம்.

கொன்றை மலர் மாலையைச் சூடிய சடைமுடியையுடைய சிவபெருமானைப் போலவே அழிவற்றதான திருக்கைலாயம் என்னும் வெள்ளி மால் வரையின் நடுவில் மிகுந்த பிரகாசம் பொருந்திய நவரத்தினங்களின் கிரணங்கள் சூழப்பெற்று செம்பொன் மயமாய் விளங்கும் பெரியதிருக்கோயிலில் சிறந்த இரத்தினங்களிழைத்து அமைக்கப்பெற்ற மண்டபத்தில் முதன்மையான சிங்காதனத்தின்மீது வேதநாயகராகிய சிவபெருமான் உமாதேவியார் தமது வாமபாகத்திலுற எழுந்தருளியிருந்தார். பெருமைவாய்ந்த தவச்செல்வத்தினையுடைய முனிவர்கள் சதாகாலமும் தேடியுணரும்சிறப்புவாய்ந்ததான எம்பெருமானது திருப்புகழை தும்புரு நாரதர்களும் வித்தியாதரர்களும் தாளத்துக்கிசையப் பாடிக்கொண்டிருந்தனர். பல தவமுனிவர்கள் எம்பெருமானுக்கு ஏவல் செய்யவேண்டுமென்ற ஆவலுடன் வெண்சாமரைகளை வீசி நின்றார்கள். முழுமுதற் கடவுளாகிய எம்பெருமானது திருவருளைப்பெற்று அவன் திருவடித் தாமரைகளைத் தம் சிரமீது சூட்டப்பெற்று சிவசாரூப்பிய பதவியையடைந்து எம்பெருமானது திருவுருவத்தை யடைந்தவர்களும், பூதகணங்கள் முதலியவர்களும் எம்பெருமான் திருமுன்னே துதித்துநின்றனர்.

அப்போது உமாதேவியார் தம் மனத்தினுள் ஓர் செய்கையைச்செய்ய நினைத்துத் திடுக்கிட்டெழுந்து, யாவர்க்கும் முதல்வராகிய சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி எம்பெருமான் திருமுன்னே நின்று, "எம்பெருமானே! யான் தேவரீரை யிகழ்ந்த தக்ஷனிடத்தில் பலநாள் வளர்ந்து அவன் புதல்வியென்னும் பெயரையும் பெற்றேன். அப்பெயரையும், அவனிடத்தில் வளர்ந்த சரீரத்தையும் இதுகாறும் தாங்கினேன். இனிமேல் அவைகளைத் தரிப்பதற்கு அச்சமாயிருக்கிறது. அவைகளை நீக்கிக்கொள்ள விரும்புகிறேன். அவ்வாறே கட்டளையிட் டருளவேண்டும்" என்று சொல்லிப் பிரார்த்தித்தார். ஆன்ம கோடிகளனைத்தையும் முன்பு பெற்றருளிய முதல்வியாகிய உமாதேவியார் எம்பெருமானிடத்து அவருக்குள்ள பேரன்பினால் அவ்வாறுரைக்க, தன்னிகரில்லாத முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான், "சக்தியே! எம்மிடத்து உனக்குள்ள அன்பு முதிர்ந்ததாயுள்ள தன்மையினால் உனக்கு நிகரானவர் ஜகத்திலே யில்லை. நீ உனக்குத் தக்ஷன் தந்த தாக்ஷாயணி யென்னும் பெயரையும், அவன் வளர்த்த சடலத்தையும் நீக்கிக்கொள்ள இவ்வாறு முயற்சித்தல் அளவிறந்த நின் புத்திரர்களாகிய ஆன்மாக்கள் முத்திபெறும் பொருட்டே போலும்! இது நல்ல காரியந்தான். இது நிறைவேற வேண்டுமாயின், நின்னைப் புத்திரியாக வளர்த்து அன்புடன் எனக்கு அளிக்கவேண்டுமென்ற கருத்துடன் எம்மை நோக்கி, கொடுந்தவம் புரிந்துவரும் இமயமலையரசனிடம் நீ குழந்தைவடிவமாகச் சென்று, அவன் மனங் களிகூருமாறு அவனிடம் ஐந்து வருஷகாலம் வளர்ந்து பின்னர் எம்மை நோக்கிக் குற்றமற்ற தவத்தைப் புரிவாயாக! அப்போது உலகத்திலுள்ள சிவகணங்களும், கணத்தலைவர்களும், அளவிறந்த தேவர்களும் எம்மைச் சூழ்ந்துவர யாம் ஆங்கு வந்து உன்னை மணந்து இங்கு அழைத்துவருவோம்!" என்று திருவாய்மலர்ந்தருளினார். அது கேட்ட உமாதேவியார் நன்றென மகிழ்ந்து எம்பெருமான் திருவடிகளை வணங்கி, அன்பொடு துதித்து விடைபெற்று நீங்கி, இமயமலையின் உச்சியிலுள்ள தடாகத்தில் அருந்தவம் புரிந்துகொண்டிருந்த இமயமலையரசன் காணும் வண்ணம் அத்தடாகத்தில் மலர்ந்திருந்த ஒரு தாமரைமலரின்மீது பச்சிளங்குழந்தை வடிவத்துடன் எழுந்தருளினார். எமதன்னை அவ்வாறு எழுந்தருளியதைக் கண்ட பர்வதராஜன், "உலகமாதாவாகிய உமாதேவியார்என்பொருட்டு எம்பெருமானை விட்டு நீங்கி யருளினார் போலும்! ஈசன் பேரருளே!" என்று பேரானந்தக் கடலில் மூழ்கி, உள்ளத்தில் மேன்மேலும் பெருகும் அன்பினால் கண்களினின்றும் ஆனந்த வருவிபாய உரோமஞ்சிலிர்ப்ப, "அடியேன் உய்ந்தேன்!" என்று கூவி துள்ளிக்குதித்துப் பாடியாடி அம்மலையைத் தொழுது, பிறகு தாமரை மலரின்மீது எழுந்தருளியிருந்த பராபரையைத் தன் அழகிய கைகளினால் எடுத்துத் தன் சிரசின்மேல் வைத்துக்கொண்டு தன் அரண்மனைக்குச் சென்று தன் மனைவியாகிய மேனையின் கையிற் கொடுத்தான். மேனையானவள் கைதொழுது அக்குழந்தையைத் தன் கைகளில் வாங்கிக்கொண்டு, அக்குழந்தை தன் நாயகனுக்குக் கிடைத்த வரலாற்றை தன் நாயகன் சொல்லக் கேட்டு, சிவபெருமான் திருவருட் பெருமையை யுன்னி உளமகிழ்ந்து, மனக்கவலை யொழிந்து பூர்வஜன்மங்களனைத்தும் தொலையப்பெற்று, அங்கமெல்லாம் உரோமஞ்சிலிர்ப்ப அக்குழவியைத் தன் மார்போடணைத்து தனது கொங்கைகளிற் சுரந்த பாலை உமாதேவியாருக்கு ஊட்டி, நவரத்தினங்களிழைத்த செம்பொன் னாபரணங்களினால் அக்குழந்தையைக் காலோடு தலை யலங்கரித்து, அளவற்ற ஆர்வத்துடன் அக்குழவியை செம்பொற் றொட்டிலிலிட்டு ஆட்டியும் தன் கைகளிற்றூங்கிச் சீராட்டியும் செல்வமாய் வளர்த்துவந்தாள்.

அவ்வாறு அப்பர்வதராஜனிடத்தும் அவன் மனைவியிடத்தும் ஐந்து வருஷகாலம்வளர்ந்த பின், பார்வதி தேவியார் சிவபெருமான் தம்மை மணந்துகொள்ளும் பொருட்டுத் தாம் தவமியற்ற வேண்டுமென்றும், ஏவல் புரிவதற்கு வேண்டிய கன்னியர்களுடன் தம்மை அம்மலையில் தகுந்த இடமொன்றுக்குத் தவஞ்செய்ய அனுப்பவேண்டுமென்றும் தம்மை வளர்த்து வந்த தாய்தந்தையரிடம் தெரிவிக்க, பர்வதராஜன் மிகுந்த பரிவுடன், "தாயே! எங்களை விட்டுப் பிரிந்து சென்று அருந்தவமியற்றுவதற்கு இது தக்க பருவமன்று. உனக்கு வயது ஐந்துதானாயிற்று. தவம்புரியும் கஷ்டத்தை நின் திருமேனி தாங்காது. ஆகையினால் தவஞ்செய்யும் நோக்கத்தை இப்பொழுது தவிர்ப்பாயாக!" என்றுரைத்தான். அது கேட்ட பார்வதி தேவியார் நகைத்து, "எவரையும் ஈசனே காத்தருளுவாரேயன்றிப் பிறராவது அவர் தாமேயாவது குற்றமறக் காத்தல் சாத்தியமன்று என்பது சத்திய மாதலாலும், நான் உங்களிடம் சொல்லிய என் கருத்தும் ஈசன் திருவருளுக்கிசைந்ததே யாதலாலும், என் கோரிக்கையை மறுக்கவேண்டாம்!" என்று கூறியருள, பர்வதராஜன் அன்புடன் அதற்கிசைந்து, "தாயே! உன்னிஷ்டப்படியே நீ தவம்புரிவாயாக!" என்றுகூறி, இமயமலையில் ஒரு புறத்தில் சிறந்த தவச்சாலையொன்றை அமைப்பித்து, தன் உறவினரிடத்தில் அவர் தவமகிமையினால் வந்து பிறந்த கன்னியர்கள் பலரை யழைத்து தன் புதல்விக்கு ஏவல் செய்யும்படி பணித்து அவர்களுடன் பார்வதி

தேவியாரை அத்தவச்சாலைக்கு அனுப்பினான். அத்தவச்சாலையை யடைந்ததும் பார்வதி தேவியார் எம்பெருமானை நோக்கி அருந்தவம் புரியலுற்றாள். பர்வதராஜனும் அவன் மனைவியும் நாடோறும் அத்தவச்சாலைக்குச் சென்று எமதன்னையைத் தரிசித்துவந்தனர்.

இனி, உமாதேவியார் எம்பெருமான் அருகிலிருந்து நீங்கியபின் ஆங்கு நிகழ்ந்தவைகளைக் கூறுவோம். பிரமதேவரது மானச புத்திரர்களான பேரறிவினையுடைய சனகன் முதலிய முனிவர்கள் நால்வரும் தங்கள் தந்தையின் இச்சைப்படி அவரது சிருஷ்டித்தொழிலைச் செய்து பாசத்திற் பின்னும் அகப்பட்டுக் கொள்ள மனமில்லாதவராய் சிவபெருமானை நோக்கிச் சிறந்த தவத்தினைச்செய்ய, சிவபெருமான் அவர்களுக்குமுன் தோன்றி அவர்களுடைய விருப்பம் யாதென்று வினவினார். அதற்கு அவர்கள் வேதத்தின் மெய்ப்பொருளைத் தங்களுக்கு உபதேசித் தருளவேண்டுமெனப் பிரார்த்திக்க, சிவபெருமான் திருக்கைலாயத்தின் தக்ஷிணசிகரத்தில் ஒரு கல்லால விருக்ஷத்தின்கீழே எழுந்தருளியிருந்து வேதங்களின் பொருளையெல்லாம் நன்கு யுபதேசித்தருள, நால்வரும் கேட்டுத் தெளிவுற்று எம்பெருமானிடம் விடைபெற்று நிலவுலகத்துக்குச் சென்றனர். அங்கு சென்றபின் தங்கள் மனத்தை ஒருமைப்படுத்துவது அரிதாயிருந்ததைக் கண்டு வருத்தமுற்றுத் திரும்பவும் எம்பெருமானை நோக்கி அருந்தவமியற்றினார்கள். அதனால் அவர்கள் தங்கள் மனம் பண்டுபோல் தூய்மையடையப்பெற்று எம்பெருமான் திருவருளினால் திருக்கைலாயத்தையடைந்து முற்றுமுணர்ந்தவரான திருநந்தி தேவரால் காக்கப்பட்ட முதற் றிருவாயிலையடைந்து அந்நந்தி யெம்பெருமானை வணங்கிநிற்க, அப்பெருமான் கருணை கூர்ந்து அவர்களைத் திருக்கோயிலுக்குள் அழைத்துச் சென்றார். ஆங்கு அவர்கள் பார்வதி தேவியாரைப் பிரிந்து தனியராயிருந்த செந்தழல் மேனியராகிய எம்பெருமானைத் தரிசித்துக் கண்களினின்றும் ஆனந்த பாஷ்பம் சொரிய மெய்சிலிர்ப்ப வாக்குழற, தழலிலிட்ட மெழுகைப்போல மனமுருகி அவரது திருவடிகளை வணங்கிக் களிப்புற்று ஆனந்தக் கூத்தாடி சிறந்த வேதங்களால் எம்பெருமானைத் துதித்து, "அருட் பெருங்கடலே! அடியேங்கள் பெரிய கருங்கடலில் இரவில் சுழற்காற்றி லகப்பட்ட நாவாயி லுள்ளவர்களைப்போல எண்ணிறந்த வகைப்பட்ட பொருள்களைத் தரும் வேதமாகிய சாகரத்தில் எப்புறத்திற் செல்வமென்றறியாது மலைத்து இளைத்துப் போனோம். நல்லுணர்வு 'பொருந்தப்பெற்றிலேம். மயக்கக் கடலை விட்டு அடியேங்கள் கரையேறும்வண்ணம் ஒன்றை உபதேசித் தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தனர். அதுகேட்ட கருணைநிதியாகிய எம்பெருமான் அவர்களை அன்புடன் நோக்கி, "உங்கள் அறிவு இனிச் சஞ்சலமுறாமல் அடங்கும் வண்ணம் அழிவில்லாச் சிறப்பினையுடைய ஞானசாஸ்திரத்தை உங்களுக்குக் கூறுவோம். உட்காருங்கள்" என்று திருவாய் மலர்ந்தருள, அம்முனிவர்கள் எம்பெருமான் திருவடிகளினருகே உட்கார்ந்தனர். அப்போது நந்தி யெம்பெருமான் அங்கு வர, சிவபெருமான் மன்மதனைத் தவிர வேறெந்தத் தேவரையும் உள்ளே விடவேண்டாமென்று அவருக்குக் கட்டளையிட்டார். உடனே திருநந்தி தேவர், எம்பெருமான் திருவடிகளை வணங்கி அவ்விடம்விட்டு நீங்கி முதற்றிருவாயிலை யடைந்து காவல்செய்ய ஆரம்பித்தார்.

அப்போது சிவபெருமான் அம்முனிசிரேஷ்டர்களுக்கு பதி பசு பாசம் இவைகளைப்பற்றி சிவாகம நூல்களிற் கூறியுள்ளதின் மெய்ப்பொருளை யுரைத்தருள, அவர்கள் மனோலய மூண்டாகும் வண்ணம்மெய்ஞ்ஞானத்தையுபதேசித்தருள வேண்டுமென எம்பெருமானைப் பிரார்த்தித்தனர். அதுகேட்ட எம்பெருமான் நகைத்து யாதொரு பதிலுமுரைக்காமல், 'ஞானம் என்பது இன்னதென்று வாயினால் உரைத்தல் சாத்தியமன்று. இவ்வாறிருத்தலே அதையடையும் நெறி' என்றுணர்த்த நினைந்தாற்போல, வராகத்தினின்றும் பறித்த வெண்ணிறமுள்ள சிங்கப்பற்களும், கூர்மத்தை யடக்கிப் பிடுங்கிய ஓடும், கற்பந்தோறும் அழியும் பிரம விஷ்ணுக்களின் மண்டையோடுகளினாலாகிய தலைமாலையும் விளங்கும் தமது திருமார்பினில் ஒரு திருக்கரத்தை வைத்துச் சின்முத்திரையைக் காட்டி கணநேரம் யோகஞ் செய்வாரைப் போலச் செயலற்றிருந்தார். சிவபெருமானது செயலினால் அவர்கள் சாஸ்திரங்களிலடங்கியுள்ள விஷயங்களை ஓதி யுணர்வதனாலேயே

ஞானம் அடையத்தக்கதன்றெனவுணர்ந்து எம்பெருமான் திருவருளினால் தங்கள் மனமொடுங்கப்பெற்றனர். அவ்வாறு மனமொடுங்கப்பெற்றுச் சித்திரப்பாவைபோற் செயலற்றிருந்த அம்முனிவர்கள் நால்வரும் எம்பெருமானது மெய்த்தவ வடிவத்தைத் தியானித்திருந்தனர்.

சிவபெருமான் அம்முனிவர்களுணரும்வண்ணம் அற்புத ஞானோபதேசம் செய்தருளிய அக் கணப்பொழுதுக்குள் பிரமதேவருக்கும் ஏனைய தேவர்களுக்கும் அநேக யுகங்கள் கழிந்தன. அகிலகாரணராகிய சிவபெருமான் அமர்ந்திருந்த மௌன நிலைமையின் காட்சியினால் தேவர்களும் விண்ணுலகத்தவர்களும் மற்றுமுள்ள சகல ஜீவராசிகளும் காமப்பற்றின்றி புணர்ச்சியை யொழித்திருந்தனர். கரும்பு வில்லைத் தாங்கிய மன்மதனும் அழகிய மாதர்களின் கூட்டங்களைக் கருதாதவனாயிருந்தான். சகல ஜீவராசிகளும் போகத்தை வெறுத்திருந்ததனால் கருவிருத்தியில்லாமல் உலகத்திலுள்ள உயிர்கள் நாளுக்குநாள் குறைவுற்றுவந்தன. அக்காலத்தில்தான் இந்திரன் தன்னிடம் வந்து தங்கள் குறைகளைக் கூறிப் புலம்பிய தேவர்களைத்தேற்றித் திருக்கைலாயத்துக்கு அழைத்துக் கொண்டு சென்று பன்னாட் காத்திருந்தும் எம்பெருமானைத் தரிசிக்கச் சமயம்வாய்க்காமல் மனம் வருந்தி நிலவுலகத்துக்குச்சென்று, அஜமுகியினால் தூண்டப்பட்டால் சூரபதுமன் தன்னை என்ன செய்வானோவென்று பயந்து இந்திராணியையும்அத்தேவர்களையுமழைத்துக் கொண்டு மேருமலைக்குச் சென்று மறைந்து தவம்புரியத் தொடங்கினான். அவ்வாறு இந்திரன் ஒருமை மனத்துடன் பன்னாள் எம்பெருமானை நோக்கி அருந்தவமியற்றியபின், சிவபெருமான் அவன்முன்னே எழுந்தருளி யாதுமறியாதவர்போல அவன் கருதியது யாதென்று வினவ, இந்திரன் தனக்கும் அமரர்களுக்கும் சூரபதுமனால் இழைக்கப்பட்ட கொடுமைகளையெல்லாம் எடுத்துரைத்து, அச்சூரபதுமனையழித்துத்தங்களைக் காத்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தான். அதுகேட்டு எம்பெருமான், "சத்தியந்தவறிய தக்ஷனது யாகத்தில் அவனுடன் சேர்ந்திருந்த பாவமானது உம்மிடத்திற் பொருந்தியிருக்கிறது. அக்காரணத்தினால் நீங்கள் அவனால் துன்பமடைந்தீர்கள். இனி வருங்காலத்தில் எம்மிடத்தில் ஒரு புத்திரன் அவதரித்து சூரபதுமனைக் கொன்று உங்களைக் காப்பான்" என்று கூறி மறைந்தருளினார். எம்பெருமான் உரைத்தருளிய மொழிகளைக்கேட்டு மகிழ் வடைந்தானெனினும் இந்திரன் சிவபெருமான் சனகாதி முனிவர்களுக்கு ஞானோபதேசஞ்செய்ய மோனநிலையில் அமர்ந்ததையும், உமாதேவியார் அவரைவிட்டுப் பிரிந்து பர்வதராஜன் மகளாய்ப் பிறந்து தவஞ்செய்துகொண்டிருந்ததையும் உன்னி அவர்கள் சேர்ந்து ஒரு குமாரனைத் தந்தருளுவதெப்படி யென்று ஏங்கி, கவலையுடன் மனோவதி நகரத்தை யடைந்து பிரகஸ்பதியின் மனைவியான தாராதேவியினிடத்தில் இந்திராணியை வைத்துவிட்டுப் பிரமலோகத்துக்குச் சென்று சிவபெருமானுடைய மோன நிலைமையினால் தம் சிருஷ்டித் தொழில் நடைபெறாது வருத்தமுற்றிருந்த பிரமதேவர் வீற்றிருந்த சபையை யடைந்து அவரது பாதங்களை வணங்கி நின்றான்.

அப்போது பிரமதேவர் இந்திரனை அவன் வந்த காரணம் யாதென வினவ, இந்திரன் அமரர்களும் தானும் சூரபதுமனால் அடைந்த துன்பங்களனைத்தையும் எடுத்துக்கூறி, ஈசனார் கருணையுடன் திருவாய்மலர்ந் தருளியதையும் அதன் பின் அவர் பார்வதி தேவியாரைப் பிரிந்து மோனநிலையடைந்திருந்ததையும் தெரிவித்து,தேவர்கள் கடைத்தேறும் வழி யாதென வினவினான். அதுகேட்ட பிரமதேவர், "யாவர்க்கும் முதல்வராகிய சிவபெருமான் திருவருளுடையவரும், தம்மை யடைந்தாருக்கு உதவி செய்தருளுபவரும், வினைகளுக்குரிய போகங்களை முறைப்படி யூட்டுபவருமாதலால், நம்மை யாளுங் குறிப்புடன் முனிவரைப் போலத் திருக்கைலாயத்தில் தக்ஷிணாமூர்த்தியாக எழுந்தருளியிருக்கிறார். எம்பெருமான் உயிர்களைச் சங்கரிப்பதற்குக் காரணம் அவ்வுயிர்கள் இவ்வுலகிற் பிறந்து வாழ்ந்ததனாலுண்டான வருத்தத்தை நீக்கவேண்டுமென்ற கிருபா நோக்கமே யாவதுபோல கொடிய சூரபதுமனைக்கொண்டு நமக்குத் துன்பமுண்டாக்குவதற்குக் காரணம் நீக்க முடியாத பாவத்தின் பயனை யனுபவிக்கச்செய்து நமக்கு முத்திதந்தருளவேண்டுமென்ற கிருபாநோக்கந்தான். நமது தீவினைப்பயனெல்லாம் முடியுங்காலம் சிறிது சமீபித்திருப்பதனால் சர்வக்ஞரான எம்

பெருமான் ஆதரவுடன் உன்னிடத்தில் வந்து
சிறந்த புத்திரனைத் தந்து நமது குறைகளை நீக்
குவதாகச் சொல்லிப் போயினர். இனிநாம் இரு
வினைக் கடலைக் கடப்பது திண்ணம். ஆனால்
நாம் சிறிது முயற்சி செய்யவேண்டும். அதைத்
திருமாலுக்குத் தெரிவித்துத்தான் செய்ய
வேண்டு மாதலின், நாம் அவரிடத்துக்குச்
செல்லுவோம்" என்று கூறித் தமது ஆசனத்
தைவிட் டெழுந்து இந்திராதி தேவர்கள் தம்
மைச் சூழ்ந்துவர வைகுந்தத்துக்குச் சென்று,
சர்ப்பாசனத்தில் திருமால் எழுந்தருளியிருந்த
கொலு மண்டபத்தை யடைந்து, அவரை
வணங்கித் துதித்து நின்றார். அப்போது திரு
மால் பிரமதேவரை ஓர் ஆசனத்தி லமர்த்தி
அவரது சிருஷ்டித் தொழில் இடையூறில்லா
மல் நடந்துவந்ததாவென்று கேட்டருளி ஈசன்
மோன நிலைமை யடைந்திருந்த சங்கதியை
பிரமதேவர் சொல்லத் தெரிந்து கொண்டு,
" பிரமனே! பர்வதராஜ புத்திரியாகிய பார்
வதி தேவியாரை அகிலகாரணராயுள்ள சிவ
பெருமான் திருமணம் புரிவாராகில், நினது
சிருஷ்டித் தொழில் நிறைவேறும்; அவர்
களுக்கு ஒருபுத்திரன் அவதரித்தால், சூரனது
வமிச முழுவதும் அழியும்; பிறகு துன்பத்தி
லாழ்ந்து தத்தளிக்கும் உலகமெல்லாம் பண்டு
போல் வாழ்வடையும். அவ்வாறு யாவும் சம்ப
விப்பதற்கு நீங்கள் செய்யவேண்டுவதொன்
றுண்டு. அதென்னவெனில், யாவரும் மயங்கு
மாறு புஷ்ப பாணங்களைப் பிரயோகிக்கும் மன்
மதனை எந்தைபால் அனுப்பவேண்டும். அனுப்பு
வீர்களாயின், அவர் சனகாதி முனிவர்களுக்கு
ஞானோபதேசஞ்செய்யும் மௌனநிலை நீங்கி
உமாதேவியாரைத் திருமணம் புரிந்து ஓர்
புத்திரனை நாம் வாழ்வடையுமாறு தந்தருளு
வார்" என்று திருவாய் மலர்ந் தருளினர்.
திருமால் அவ்வாறு கூறவும், பிரமதே
வர், " எந்தையே! இது செய்யத்தக்கதே.
இதோ செய்து முடிக்கிறேன்" என்று கூறி,
அவரது பாதமலர்களை வணங்கி இந்திராதி
தேவர்களுடன் அவ்விடம் விட்டு நீங்கித்
தமது மனோவதி நகரத்தை யடைந்து தமது
திருக்கோயிலுட் புகுந்து கமலாசனத்தில்
அமர்ந்து, மன்மதன் வரும்படி தம் மனத்தி
னில் நினைத்தார். நினைத்த மாத்திரத்தில்
விஷ்ணு புத்திரனாகிய மன்மதன் தன் பரிவா
ரங்களுடன் பிரமதேவருக்கு எதிரில் விரை
ந்து வந்து வணங்கி நின்றான்.

அப்போது பிரமதேவர் அவனை நோக்கி,
" மன்மதனே! கங்காதரராகிய சிவபெருமான்,
பார்வதி தேவியாரைத் திருமணஞ்செய்யும்
பொருட்டு உனது புஷ்ப பாணங்களைப் பிர
யோகித்து அவரது மௌனநிலையை நீக்குவா
யாக!" என்றுரைத்தார். அது கேட்ட மன்
மதன், பல பாவங்கள் வந்தெய்தும்படி செய்
யத்தக்க அக் கொடுமொழியைக் கேட்டு, "ஐய
னே! அறிவுடையோர் தம்மை யணுகும்
கொடியவர்களுக்கும் அவர்கள் கடைத்தேறு
வதற்குரிய நல்ல நெறியை யுணர்த்துவார்கள்:
தேவரீரோ யான் அழிந்துபோவதற்குரிய நெறி
யைப் பற்றிச்செல்லுமாறு போதித்தீர். இது
தகுகியோ? தேவரீர் ஸரஸ்வதி தேவியை
யன்றி புத்திரியான திலோத்தமையினிடத்தி
லும் மோகங்கொள்ளும்படி என் பாணங்களைப்
பிரயோகஞ் செய்தேன். திருமாலும் எண்
ணிறந்த தேவியர்களைப் பணரும்படி காம
முறச் செய்தேன். ஏனைய தேவர்களும் முனி
வர்களும் மானிடர்களும் ஒருவரொழிவின்றி
அனைவரும் என் புஷ்ப பாணங்கள் தைக்க
நொந்து இளைத்தனர். ஆனால் இவ்வருஞ்செ
யல்களை யெல்லாம் செய்தது நானோ? அன்று!
சிவசக்தியே இவையாவையும் செய்தருளிற்று.
ஜகத்காரணராகிய சிவபெருமானைச் சாமானி
யத்தொழில் செய்யும் அற்ப தேவராகக் கருதி
இம்மொழியைத் தேவரீர் புகன்றீர்போலும்.
தாருக வனத்து முனிவர்கள் எம்பெருமானை
யழிக்க விடுத்த ஓமாக்கினியைத் தாங்கும் திருக்
கரத்தையும், திரிபுரங்களை யெரித்து நீறாக்கிய
திருநகையையும், மிகுந்த ஒளியை வீசும் திரி
நயனங்களையும், செந்தழலை யொத்த திரு
மேனியையும் உடைய சிவபெருமான்மீது
என் பாணங்களை யெய்யும் நோக்கத்துடன்
யான் செல்வேனாயின், யான் என்னுயிருடன்
மீளுவதற்குவழியுண்டோ சொல்லும்! ஐயனே!
விருப்பு வெறுப்பில்லாத எம்பெருமானை எப்
படி மயக்குவது? அவருடைய பராக்கிரமம்
அற்பமானதோ? அப்பெருமான் மார்க்கண்
டேயரை அவமதித்த இயமனை திருக்கழலி
னால் மெல்ல உதைத்து அழித்துவிடவில்லை
யோ? முன்பு தேவரீரும் திருமாலும் உங்
களுக்குள்ளே யார் பரம்பொருள் என்பதைப்

பற்றி மாறுபட்டுப் பொருதபோது சிவபெரு
மான் தம்மை நிந்தித்த நுமது நடுத்தலையைக்
கிள்ளி யெறிந்ததை மறந்தீரோ? அப்பெருமா
னிடத்தில் தோன்றிய வீரபத்திரக் கடவுளால்
தக்ஷனும் அவன் யாகசாலையிற் கூடியிருந்த
தேவர்களும் முனிவர்களும் பட்டபாட்டை
அறியீரோ? ஊழிக்காலத்தில் காளகண்ட
ராகிய எம்பெருமானது நயனத்தினின்றும்
சிந்தும் ஓர் தீப்பொறியினால் உலகங்ளனைத்தும்
நீறுபட்டு அழியும் என்பதைத் தேவரீர் உணர்
ந்திலீரோ? முன்னாளில் உலகங்களைப் படைக்
கும் பொருட்டு தம்மைவிட்டு நீங்காத
திருவருளையே ஒருபெண்ணாகச் செய்து அப்
பெண்ணைத் தாமாகவே தமது வாமபாகத்தில்
வைத்துக்கொண்ட சிவபெருமானை அற்பனா
கிய நானோ மயல் கொள்ளும்படி செய்யத்தக்க
வன்?" என்று வருத்தத்துடனும் கோபத்துட
னும் உரைத்தான்.

மன்மதன் தம் வார்த்தைக்கு இணங்காமற்
பேசியதைக் கேட்ட பிரமதேவர் வருத்த
முற்று, அவன் கூறியவையெல்லாம் உண்மை
யென வுணர்ந்து பெருமூச்செறிந்து, "மன்மத
னே! நீ கூறியது உண்மைதான். சிவபெரு
மானுடன் போர் செய்தல் எளிதான காரிய
மன்று. ஆயினும்தம்மை யடைந்தவர்களுடைய
துன்பத்தை யொழிக்கும் சிவபெருமானது
பெருங்கருணையினால் இக்காரியத்தை உன்னால்
நிறைவேற்றமுடியும். வேறு எவரும் அதைச்
செய்யவல்லார் இல்லை. நீ கரும்பு வில்லுட
னும் புஷ்பாணங்களுடனும் எம்பெருமான்
மீது பாணப்பிரயோகம் செய்வதற்காகச் செல்!
இக்காரியம் எம்பெருமான் திருவருளால் நிறை
வேறும். அன்றியும், யாராயினுமொருவர் சகிக்க
முடியாத துன்பத்தை யடைந்து மற்றொரு
வரைத் தமக்கு உதவிபுரியும்படி இரந்து
கேட்டால், அவர் உதவி செய்யமுடியா
தென்று மறுத்துத் தம்முயிரையே பெரிதா
கக் கருதிக் காத்துக்கொள்ளுதல் உலக வியற்
கைக்கு ஏற்றதோ? தான் வாழ்தலையே பொரு
ளாகக் கொண்டு ஒருவர்க்கும் ஒருதவியும்
செய்யாத அற்பன் கழிக்கும் பொழுது, வீண்
பொழுதேயன்றோ? விருத்திராசுரனைக் கொல்
லத்தக்க படையொன்றுமில்லாமல் வருந்தித்
தம்மிடம்வந்து இரந்த இந்திரனுக்கு ததீசிமுனி
வர் தமது முதுகெலும்பைக் கொடுத்துத் தம
தாருயிரைவிட்ட சங்கதியை நீ கேட்டதில்லை
யோ? கீர்த்தியே என்றும் நிலைபெற்றிருக்கும்.
கீர்த்தியை வேண்டுவோர் எவ்வித இடையூறு
களையும் இலக்ஷியஞ் செய்யமாட்டார்கள்.
ஆகையால், இனி தடுத்துப் பேசாமல், எங்கள்
காரியம் நிறைவேறும் பொருட்டு நீ செல்வா
யாக!" என்று கூறினர். அப்போது மன்மதன்
வருத்தத்துடன், " ஐயனே! ஆதி முதல்வரா
கிய சிவபெருமான்மீது யான் போருக்குச்
செல்லமாட்டேன். இதுவன்றி, வேறேதாவது
காரியத்தைச் செய்யும்படி என்னைத் தேவரீர்
கட்டளையிட்டால், அடியேன் அதைச் செய்து
முடிக்கிறேன்" என்று திரும்பவும் மறுத்துப்
பேச, பிரமதேவர் கோபித்து, " நயமாக நாம்
சொன்ன வார்த்தைகளை மறுத்தாய். நாம்
சொன்னபடி செய்தாற் பிழைத்தாய். இல்லா
விட்டால், உனக்கு யாம் கொடியசாப மிடு
வோம்" என்று கூறினர். அக் கொடுமொழி
களைக் கேட்ட மன்மதன் வருந்திப் பெருமூச்
செறிந்து சற்று ஆலோசித்துத் தன் மனத்
தைத் தேற்றிக்கொண்டு, பிரம தேவரை
நோக்கி, " சுவாமி! தேவரீர் கொடுக்கும் சாபத்
தினால் என் பெருமையை யிழந்து துயருற்று
மடிவதைக் காட்டிலும் காளகண்டராகிய எம்
பெருமான் திருமுன்னர் சென்று வெப்பம்
பொருந்திய அம்புகளை வேகமாய் எம்பெரு
மான் திருமேனியின்மீது விடுத்து அப்பாபத்
தினால் உடனே உயிர் துறப்பதே மேலாகுமாத
லின், நான் இன்றைக்கே சிவபெருமானிடத்
துப் போர்செய்யச் செல்லுகிறேன்!" என்று
கூறினான். அதுகேட்ட பிரமதேவர், " மன்
மதனே! நீ அஞ்சாமற் செல்! நாங்கள் யாவ
ரும் உன்னைத் தொடர்ந்து வந்து உன்னைக்
காப்பாற்றுகிறோம்!" என்று தைரியஞ்சொல்லி
அவனுக்கு விடைகொடுத் தனுப்பினர்.

பிரமலோகத்தைவிட்டு நீங்கிய மன்மதன்
தன் நகரத்தை யடைந்து, பிரமதேவர் கூறிய
வைகளைத் தான் சொல்லக் கேட்டு வருந்திய
தன் மனைவி இரதிதேவியைத் தேற்றி, தே
னொழுகும் புஷ்ப பாணங்களிட்ட அம்புறாத்
தூணியை முதுகிலிறுக்கிக் கட்டிக்கொண்டும்,
மாவிலையாகிய வாளை இடுப்பில் பக்கத்தில் தரி
த்துக்கொண்டும், குயில்கள் எக்காளங்களாகவும்
சமுத்திரங்கள் முரசங்களாகவும் முழங்கவும்,
சமுத்திரங்களின் அலைகள் வெண்சாமரைக

ளாக அசையவும், மீன்கொடியாக மேலேபறக்கவும், சந்திரன் குடையாகநிழல்செய்யவும், கிளிகளாலிழுக்கப்பெற்ற தென்றலாகிய தேரின்மீது இரதிதேவியுடன் ஏறித் தன் நகரை விட்டு நீங்கித் திருக்கைலாயத்துக்குச் சென்று, அம்மலையை வணங்கித் தன் தேரைவிட் டிறங்கி, தன் பரிசனங்களை அவ்விடத்திலேயேநிறுத்தி, இரதிதேவியை மட்டும் அழைத்துக்கொண்டு, தன் வில்லுடனும் அம்புறாத்தூணியுடனும் வேங்கைப்புலியைத் துயிலெழுப்பச்செல்லும் மானைப்போலத் துணிந்து அம்மலையின்மீது சென்றான்.

அம்மலையை யடைந்ததும், மன்மதன் தன்னுடைய கரும்புவில்லை வளைத்து அம்மலையிலிருந்த மிருகங்களின் மீதும் பறவைகளின் மீதும் புஷ்ப பாணங்களை எய்தான். அதையுணர்ந்த நந்தியெம்பெருமான் சினங்கொண்டு ஊங்காரஞ்செய்து அதட்ட, மன்மதனுடைய பாணங்கள் அவைகளின்மேற் படாமல் அந்தரத்திலேயே நின்றன. அதுகண்டு மன்மதன் அஞ்சி உளநடுங்கி அப்பெருமானுக்கு முன் சென்று அவரை வணங்கித் துதித்து நின்றான். அப்போது நந்தியெம்பெருமான் அவன் அங்குவந்த காரணம் யாதென்று வினவ, அவன் நடந்தவைகளை யெல்லாம் உண்மையாக எடுத்துரைத்தான். அதுகேட்டு நந்தியெம்பெருமான், 'சிவபெருமான் மன்மதனை மட்டும் திருக்கோவிலுக்குள் விடும்படி பணித்தருளினார். யாகத்தில் பசுவைக்கொன்று யாகத்தை முடித்துப் பிறகு பசுவை முன்போலவே எழுப்புதல்போல மன்மதனையழித்து உமாதேவியாரைத் திருமணம்புரிந்து பிறகு அவனை உயிர்ப்பிக்கத் திருவுளங்கொண்டார் போலும்!' என்று சிந்தித்து, மன்மதனை மேற்குத் திருவாயிலின் வழியே நுழைந்து எம்பெருமான்சந்நிதியையடையும்படி பணித்தருளினார். உடனே மன்மதன் அவரைவணங்கி விடைபெற்றுக்கொண்டு சென்று மேற்குத் திருவாயிலின் வழியே திருக்கோவிலுக்குள் நுழைந்து தேவர்கள் நாயகராகிய சிவபெருமான் நீறுபூத்த நெருப்புமலையைப்போல மௌனத்துடன் வீற்றிருந்ததைக் கண்டு அச்சமுற்று, மெய்யெல்லாம் வியர்க்க நடுங்கி தன் கையிலேந்திய ஆயுதங்களுடன் தரையில்வீழ்ந்துமூர்ச்சையடைந்தான். உடனே இரதிதேவி அவனைத் தனது கரத்தில் தாங்கிக்கொண்டு பல சைத்தியோபசாரங்களைச் செய்ய, மன்மதன் மூர்ச்சை தெளிந்து, "எம்பெருமான் வீற்றிருக்குந் தன்மையைக் கண்டவுடனேயே என் ஆவி காணாமற் போயிற்றே! எனது பாணங்கள் சர்வேசுவரனை வெற்றிகொள்ளும் சக்தி யுடையவைகளோ? யாவும் எம்பெருமானுடைய திருவிளையாடலே யாகும். யாதுவரினும் வரட்டும். நான் எம்பெருமானை யணுகி என் பாணங்களை அவர் திருமேனியின்மீது பிரயோகிப்பேன்!" என்று கூறி, எம்பெருமானையணுகி புஷ்பபாணங்களைந்தையும் எம்பெருமான்மீது பிரயோகித்தான். அச்சமயத்தில் பிரமன் முதலிய தேவர்கள் யாவரும் மன்மதன் எம்பெருமானுடன் செய்யும் சிறுபோரைக் காண வந்து திருக்கோயிலின் முன்னே கூடிநின்றார்கள். மன்மதனுடைய பாணங்கள் எம்பெருமான்மீது படுதலும், சிவபெருமான் தமது நெற்றிக்கண்ணைச் சற்றுத் திறந்து மன்மதனைப பார்த்தருளினார். உடனே அந்நுதற்கண்ணின் கடுமையாகிய அனலினால் மன்மதன் எரிந்து சாம்பராயினான். கோவிலினின்றும் எழுந்த புகையைக் கண்ட நந்தியெம்பெருமான், "மன்மதன் எம்பெருமானது நுதற்கண்ணின் தீயினால எரிந்து நீறானான். இனி இரதிதேவியின் பிரார்த்தனைக் கிரங்கி எம்பெருமான் அவனை உயிர்ப்பித்தருளுவார்!" என்று பிரமாதி தேவர்களுக்குத் தெரிவித்தருளினார்.

மன்மதன் எரிந்து சாம்பராயினபின், எம்பெருமான் மீண்டும் மௌன நிலையில் அமர்ந்தார். தன் நாயகன் வெந்து துகளானதைக் கண்டு சோர்வுற்றுக் கீழே விழுந்து மூர்ச்சையடைந்து பிறகு தெளிந்து உணர்ச்சிபெற்றுத் துயர்க்கடலில் தத்தளித்து வயிற்றி லடித்துக்கொண்டு, "செந்தாமரை மலரில வசிக்கும் திருமகளது அழகிய புத்திரனே! அடியாளுக்கு அரிய உயிர்போன்றவனே! திருமாலின் குமாரனே! சம்பராசுரனை யழித்த சூரனே! செம்பவளக் குன்றனைய சிவபெருமான் திருவிழியால வெந்து தேகமழியப் பெற்றாயே! உன்னை இங்கு அனுப்பியதேவர்கள் இப்போது உன்னைக் காக்க வராமல் தூங்குகிறார்களோ! தாமே சபிப்பதாகப் பயமுறுத்து உன்னையனுப்பிய பிரமதேவர் மனம், இப்போது உவகையடைந்ததோ? திரிபுராந்தகர்மீது போர்செய்

யச் செல்லுதல் தகுதியன்றென அடியாள் உரைத்ததைக் கேட்கமாட்டேன் என்றாயே. தேவர்கள் ஏவலைச்செய்யத் துணிவுகொண்டாயே. உன் தேகம் எரிந்து நீறாகியதைக் கண்டும் நான் எப்படிப் பிழைத்திருப்பேன்? இப்பழி யாரைச்சேரும்? தேவர்கள் சூழ்ச்சிசெய்து உன்னைக் கொல்லாததுபோல் கொன்றார்களே! ஐயோ! யான் என்ன பாவஞ் செய்தேனோ? என்னைப் போன்ற மாதர்களுக்கு நான் என்ன தீங்கு இழைத்தேனோ? ஹா ஹா! வசந்தராஜனே! என்னைத் தனியேவிட்டு நீ செல்லுதல் நியாயமோ? தேவர்கள் விரைந்து வந்து உன்னை யெழுப்ப மாட்டார்களோ? நின் தந்தையாகிய திருமால், மிகுந்த வல்லமையுடையவர் என்று கூறுவார்களே. அவரேனும் வந்து உன்னை யெழுப்பமாட்டாரோ? நம்முடைய இன்பவாழ்க்கையும் பொய்யாகிச் சொப்பனங் கண்ட கதையாயிற்றே? என் பிராணநாயகனே! நானும் கொடுந்துயரத்தினால் வெந்து உன்னிடம் வந்துசேருகிறேன்!" என்று புலம்பிக் கதறினாள்.

மன்மதன் அழிந்ததை நந்தி யெம்பெருமானால் அறிந்த தேவர்கள் தாங்கள் உய்யுநெறி காணாது வருந்தி அத்திருவாயிலிலேயே நின்று எம்பெருமானைத் துதித்து தங்களுக்கு நேர்ந்த கஷ்டங்களை நீக்கி யருளும்படி பிரார்த்தித்தனர். அவர்களது பாவம் முடியுங் காலம் நெருங்கிவிட்டபடியால் எம்பெருமான் அவர்களிடத்துக் கிருபைகூர்ந்து நந்தியெம்பெருமானைச் சிந்தித்து, அவர் தமது திருமுன்னர் வந்ததும் தேவர்களை உள்ளே அழைத்துவரும்படி கட்டளையிட் டருளினார். நந்தியெம்பெருமானும் உடனே சென்று தேவர்களை உள்ளே அழைத்து வந்து எம்பெருமான் திருமுன்னே விட்டனர். தேவர்கள் எம்பெருமானைத் தரிசித்துப் பரமானந்த மடைந்து கண்களில் ஆனந்த பாஷ்பஞ் சொரிய அவரது பாதமலர்களில்வீழ்ந்து நமஸ்கரித்து தத்தம் இஷ்டப்படி துதித்து நிற்க, எம்பெருமான் யாதுமறியாதவர் போல அவர்கள் வேண்டியதென்ன வென்று வினவி யருளினார்.

அப்போது தேவர்கள், "அண்ணலே! அநேகயுங்களாக அடியேங்கள் சூரபதுமனது கொடுங் கோன்மையினால் இடைவிடாமல் துன்புற்றுத் தாழ்வடைந்தோம். அடியேங்களுடைய துன்பத்தை நீக்கவல்லவர் யாருளர்? ஆதலின், கொடிய சூரனைக் கொல்வதற்கு ஒரு புத்திரனை எங்களுக்குத் தந்தருளுவதற்காகத் தேவரீர் இப்போது இமயபர்வதராஜன் புதல்வியாக இமயமலையில் தவஞ்செய்து கொண்டிருக்கும் மாயாகாரணியான பார்வதி தேவியாரைத் திருமணஞ் செய்துகொண் டருளவேண்டும்!" என்று பிரார்த்தித்தார்கள். அப்போது கருணாசாகரமான சிவபெருமான், "தேவர்காள்! நீங்கள் யாவரும் இனி வருந்தாதீர்கள். உங்கள் துயர் நீங்கும் பொருட்டு யாம் பார்வதி தேவியைத் திருமணம் புரிவோம். நீங்கள் இனிச் செல்லலாம்!" என்று திருவாய்மலர்ந்தருளினார். தேவர்கள் விடைபெற்றுச் சென்றபின், இரதிதேவி அதுவே தக்க தருணம் என்று தேர்ந்து எம்பெருமானை யணுகி, "எமதிறைவனே! இது முறையோ! முறையோ! பிரமன் முதலிய தேவர்களது சூழ்ச்சியினால் என் நாயகன் இங்குவந்து தேவரீரால் அழிவடைந்தான். அவன் பிழையைப் பாராட்டாமல் அவனுக்குத் திருவருள்புரியவேண்டும்" என்று பிரார்த்தித்தாள். அப்போது எம்பெருமான், "பெண்ணே! நீ புலம்பாதே! யாம் பார்வதி தேவியைத் திருமணஞ் செய்துகொள்ளுங் காலத்தில் உன் நாயகனைத் தருவோம். நீ போகுதி!" என்று திருவாய்மலர்ந் தருளினார். உடனே இரதிதேவி மிகவும் மகிழ்வுற்று எம்பெருமானை வணங்கி அவ்விடம்விட் டகன்று இமயமலையின் ஒரு பாகத்துக்குச் சென்று அங்கு வசித்திருந்தாள்.

அவள் நீங்கியபின், எம்பெருமான் தம்மிடத்தில் ஞானோபதேசம் பெறவந்த சனகர், சனந்தர், சனாதனர், சனற்குமாரர் என்னும் நான்கு முனிவர்களையும் அருளுடன் நோக்கி, "சிறுவர்களே! ஞானோபதேசம் சொற்களினால் செய்யக்கூடியதன்று. துயரத்தை யொழித்து இவ்வாறு மவுனமோ டிருந்து எம்மைத் தியானித்தலே ஞானமாகும்!" என்று அவர்கள் உணருமாறு போதித்தருளினார். அம்முனிவர்கள் மயக்கம் நீங்கி எம்பெருமானது பாதமலர்களை வணங்கித் துதித்து விடைபெற்று நீங்கி எம்பெருமான் பணித்தருளியபடி பந்தமகற்றி எம்பெருமான் திருவடியை யடைவதற்காக நிஷ்டையிலமர்ந்தனர்.

அவர்கள் சென்றபின், சிவபெருமான் தம்மைநோக்கி அருந்தவ மியற்றிக் கொண்டிருந்த பார்வதி தேவியாருக்குத் தம்மிடத்துள்ள நிகரற்ற அன்பையும் விருப்பத்தையும் யாவர்க்கும் காட்டவேண்டு மெனத் திருவுளங்கொண்டு, காவிவஸ்திர முடுத்தவரும், சிகையுடையவரும், திருநீறணிந்தவரும், பூணூலை யணிந்தவரும், கமண்டலத்தையும் ஓலைக்குடையையும் தாங்கியவரும், பெரிய தண்டத்தை பிடித்தவருமான விருத்த வேதியரைப் போல் வேடந்தரித்துக்கொண்டு இமயமலைக்குச் சென்று, பார்வதிதேவியார் தவமியற்றிக்கொண்டு வந்த தவச்சாலைக்குச் சென்றார். உடனே அக்கன்னிமாடத்திலிருந்து பலமாதர்கள் வந்து, அத்தாயவரது திருவடிகளை வணங்கி அவர் அங்கு வந்த காரணம் யாதென்று வினவ, எம்பெருமான் தாம் பர்வதராஜன் புத்திரி இயற்றுந் தவத்தைக் காணவந்ததாகக் கூறியருளினார். சில மாதர்கள் பார்வதிதேவியாரிடம் சென்று அவ்வேதியர் வரவையும் கருத்தையும் தெரிவிக்க, பார்வதி தேவியார் அவரை உள்ளே அழைத்து வரும்படி கட்டளையிட்டார். அவ்வாறே அம்மாதர்கள் அவ்விருத்தரைப் பார்வதி தேவியாரது திருமுன்னர் அழைத்துவர, அவர் தாம் முன்பு உமாதேவியார் தாக்ஷாயணியாகத் தவமியற்றிக் கொண்டிருந்த விடத்துக்குச் சென்று அத்தேவியாரிடம் சிவபெருமானை நிந்தித்து, தவத்தை விட்டுவிடும்படி கூறியது போலவே, பார்வதி தேவியாரை நோக்கிச் சிவபெருமானைப் பலவாறு நிந்தித்துத் தாம் அத்தேவியாரை மணந்துகொள்ள இச்சித்ததாகச் சொல்ல, அத்தேவியார் கடுஞ்சினங் கொண்டு அவ்விருத்தரை யிகழ்ந்து பேசி அவ்விடம் விட்டுப் போகும்படி அதட்டி, அவர் அகலாததைக் கண்டு தாமே அவ்விடத்தினின்றும் நீங்கி வேறொரு பக்கத்துக்குச் சென்றருளினார். உடனே எம்பெருமான் பிராமண வேடத்தை நீத்து இடபவாகனத்தின்மீது சிவகணங்கள் தம்மைச்சூழ ஆகாயத்தில் திவ்யக்காட்சி தந்தருள, பார்வதி தேவியார் எம்பெருமானைத் தரிசித்துப் பன்முறை வணங்கி அஞ்சலியஸ்தராய் நின்று துதித்து, "அளவற்ற வுணர்ச்சியினால் எட்டிப்பிடிப்பதற்கரிய முதல்வனே! அடியேன் தேவரீரது மாயையை யுணரும் சக்தி யுடையவளன்று: ஆதலினால் அறிவிலேன் தேவரீரை இகழ்ந்து பேசியதைப் பொறுத்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

அப்போது எம்பெருமான், "நல்ல தவத்தை யியற்றிய மாதே! நம்மிடத்துள்ள அன்பினால் தான் நீ அவ்வாறுஎம்மையிகழ்ந்தனை யாதலால், அவைகளனைத்தையும் யாம் துதிமொழிகளாக ஏற்றுக்கொண்டோம். யாம் பொறுத்தருளுவதற்கு யாதொரு குற்றமும் நீ செய்யவில்லை. இனி நீ கொடிய தவத்தினால் வருந்தாதே. நாளைக்கு உன்னை மணஞ் செய்துகொள்ளும் பொருட்டு வருகிறோம்!" என்று கூறி மறைந்தருளினார்.

உடனே சில மாதர்கள் இமயபர்வதராஜனிடம் சென்று சிவபெருமான் எழுந்தருளிப் பார்வதிதேவியாரிடம் கூறியருளியதைத் தெரிவிக்க, அவன் தன் மனச்சஞ்சல மொழித்து, விரைவாகத் தன்தேவியுடன் கன்னிமாடத்துக்குச் சென்று உமாதேவியாரைத் தனது அரண்மனைக்கு அழைத்துவந்தான்.

திருக்கைலாயத்துக்கு எழுந்தருளிய சிவபெருமான் சப்தரிஷிகளை வரவழைத்து, தமக்குப் பார்வதி தேவியாரை மணஞ் செய்து கொடுக்கும்படி கேட்கப் பர்வதராஜனிடம் அனுப்ப, அவர்கள் பர்வதராஜனிடம் சென்று எம்பெருமானது கட்டளையைத் தெரிவித்தார்கள். அதுகேட்ட பர்வதராஜன் சகலவுயிர்களையும் சர்வலோகங்களையும் ஈன்றருளிய கன்னிகையான உமாதேவியாரைச் சிவபெருமானுக்குத் திருக்கலியாணம் செய்துகொடுப்பதாகச் சொல்ல, இருடியர்கள் அவனிடம் விடைபெற்றுச் சென்று எம்பெருமான் திருமுன்னர் அடைந்து பர்வதராஜன் மணஞ்செய்து கொடுக்க இசைந்ததைத் தெரிவித்துச் சென்றனர்.

அம்முனிவர்கள் சென்றபின் இமவான் தனது புதல்வியின் திருமணத்துக்காகத் தன் நகரத்தைஅலங்கரிக்கவேண்டுமென்று கருதி, தேவத்தச்சனை மனத்தினால் நினைத்து வரவழைத்து, தன் நகரத்தைப் பொன்னகரம்போலச் செய்யும்படி அவனை வேண்டினான். உடனே தேவத்தச்சன் தேவர்களெல்லாம் வந்து தங்குமாறு அநேக அற்புதமான மாளிகைகளையும், மிகவும் விசித்திரமான திருக்கலியாண மண்டபத்தையும், மற்றும் ஆடல் பாடல்களுக்காக அநேக சிங்கார மண்டபங்களையும் அமைத்து, அப்பழைய நகரத்தைப் பொன்மயமாக்கிப் பொலி

வுறச் செய்தான். பிறகு இமவான் தேவர்களையும் இருடிகளையும் அவர்களுடைய பத்தினிமார்களுடன் அழைத்துவரும்படி தூதுவர்களை யனுப்ப, அவர்கள் எம்பெருமானுடன் அவரைத் தரிசித்துக்கொண்டே வருவதாகச் சொல்லி யனுப்பினார்கள். சிங்கக்கொடியை யுடைய துர்க்கை, யாமளை, காளிகள், சப்த நதிகள் முதலியோர் இமயமலைக்குச் சென்று பார்வதி தேவியார் திருமுன்னே அடைந்து வணங்கினார்கள். இலக்ஷ்மி, சரஸ்வதி, இந்திராணி முதலிய தேவமாதர்களும் இருடிகளின் பத்தினிமார்களும் தங்கள் தங்கள் புருஷர்களது கட்டளையினால் அவ்விமயமலையை யடைந்து, பார்வதி தேவியாரது திருவடிகளை வணங்கி, பார்வதி தேவியாரைத் திருமணத்துக்காக அலங்கரித்தனர். இமவானும் தன் பந்துக்களுடன் திருக்கைலாயத்துக்கு விரைந்து சென்று, திருநந்தி தேவரால் உள்ளே யழைத்துச் செல்லப்பெற்று, சிவபெருமானது திருவடித் தாமரைகளை வணங்கி, பார்வதி தேவியாரை எம்பெருமான் மணந்து கொள்வதற்குப் பங்குனி மாதத்தில் உத்திர நக்ஷத்திரம் கூடிய அன்றையதினமே சுபதினமாதலால், எம்பெருமான் உடனே திருமணத்துக்காக இமய மலைக்கு எழுந்தருளவேண்டுமெனப் பிரார்த்திக்க, எம்பெருமான் தாம் பின்னே வருவதாகக்கூறி, அவனை முன்னே செல்லும்படி கட்டளையிட்டருளினார்.

பிறகு எம்பெருமான் திருநந்தி தேவரை யழைத்து உருத்திர கணங்களையும் திருமால் முதலிய தேவர்களையும் உடனே திருக்கைலாயத்துக்கு வரவழைக்கும்படி கட்டளையிட, நந்தி யெம்பெருமான் அவர்கள் யாவரும் திருக்கலியாணத்துக்காக உடனே அங்கு வந்து சேரவேண்டுமெனத் தமது திருவுள்ளத்தில் சிந்தித்தருளினார். உடனே அவர்கள் யாவரும் அதை யுணர்ந்து அங்கு வந்தடைந்து எம்பெருமான் திருமுன் சென்று வணங்கி நின்றார்கள். அப்போது பிரமதேவர் மகுடம் முதலிய பல ஆபரணங்களைத் தம் மனத்தினால் சிருஷ்டித்து ஒரு பொற்றட்டின்மீது வைத்து எம்பெருமான் திருமுன் கொண்டு வந்து, "எமதிறைவனே! தேவரீர் விருப்புவெறுப்பில்லாதவரே யெனினும், அடியேங்கள் உய்யும் பொருட்டுப் பார்வதிதேவியாரைத் திருமணஞ் செய்து கொள்ள இசைந்தீராதலின், தேவரீர் அணிந்துள்ள நாகாபரணங்களை யெல்லாம் நீக்கி இவ்வாபரணங்களை அணிந்துகொண்டருள வேண்டும்" எனப் பிரார்த்திக்க, எம்பெருமான் அவைகளைத் தமது திருக்கரத்தினால் தொட்டு, 'நீ அன்புடன் அளித்தமையால், யாம்இவைகளை யணிந்து கொண்டாற் போல மகிழ்வுற்றோம்" என்று புன்னகையுடன் கூறி, தமது சர்ப்பாபரணங்களே திவ்யாபரணங்களாக ஆகத் திருவுளங்கொண்டார். உடனே அவைகள் திவ்யாபரணங்களாக மாறித்துலங்கின. யாவரும் எம்பெருமானது கருணையைப் புகழ்ந்து துதித்தனர். பிறகு எம்பெருமான் சகலரும் தம்மைச் சூழ்ந்துவர இமயமலைக்கு எழுந்தருளி, இமயபர்வதராஜன் அஷ்டமங்கலங்களுடன் அன்புடன் எதிர்கொண்டழைக்கத் திருக்கலியாண மண்டபத்துக்குச் சென்று, இடபத்தினின்று மிறங்கி பிரமதேவரும் திருமாலும் கைலாகு கொடுக்க மெல்ல நடந்து அம்மண்டபத்தின் சிறப்பனைத்தையும் உற்றுப் பார்த்துக்கொண்டே திருக்கலியாணமண்டபத்தினுள் நுழைந்து, நீலரத்தினத்தினாற் செய்த அழகிய ஆசனத்தின்மீது அமர்ந்தருளினார். பிறகு உருத்திரர்களும் திருமால் முதலிய தேவர்களும் தக்க ஆசனங்களில் அமர்ந்தார்கள். அச்சமயத்தில் யாவரும் வந்து வடபாகத்திலுள்ள இமயமலையிற் கூடியதனால் பூமியின் தென்பாகம் உயர்ந்து வடபாகம் தாழ்ந்து, இமயமலை சலிக்கத் தொடங்கிற்று. அப்போது அங்கு கூடியுள்ள தேவர்கள் முதலியோர் வெருவி எம்பெருமானைத் துதிக்க, எம்பெருமான் குறு முனிவராகிய அகத்தியரை அழைத்து, "தவத்திற் சிறந்தவனே! நீ தென்பாகத்திலுள்ள பொதிய மலைக்குச்சென்று அங்கேயே சிலகாலமிருந்து பிறகு எம்மிடத்தில் திரும்பி வரக்கடவாய்! நீ அங்கு சென்றாலல்லது பூமி முன்போல் சமமாகாது. ஆதலின் நீ அங்கு செல்! யாம்அங்கு வந்து உனக்குத் திருமணக் கோலக் காட்சி தந்தருளுவோம்!" என்று கூறி அகத்தியருக்கு விடைகொடுத்தனுப்பி யருள, அகத்தியர் தென்றிசைக்குச் சென்று பொதியமலையில் அமர்ந்தருளினார். உடனே பூமி சமமுற்றது. யாவரும் குறுமுனிவரது பெருமையையுன்னி ஆச்சரிய முற்றனர்.

அப்போது துர்க்கை, இலக்ஷ்மி முதலியோர்

நம்மைப் புடைசூழ்ந்து வர பார்வதிதேவியார் அம்மண்டபத்தினுள் நுழைந்து சிவ பெருமானது திருவடிகளை வணங்க, எம்பெருமான் எமதன்னையைத் தமக்குப் பக்கத்தில் அமரும்படி கூறி யருளினார். உலகமாதாவானவள் எம்பெருமான் பக்கத்தி லமர்ந்தவுடன், பர்வத ராஜன் தன் மனைவி வார்த்த கமண்டல நீரினால் எம்பெருமானது திருவடிகளை விளக்கி, சந்தனம், புஷ்பம் இவைகளினால் அத்திருவடிகளை அலங்கரித்து அருச்சித்து வணங்கிப் பிறகு புவனங்கள் யாவற்றையு மீன்ற தாயின் திருக்கரத்தை பாசம் அணுகாது அகலும் பரஞ்சுடராகிய எந்தையின் திருக்கரத்தில் வைத்து, "எமதிறைவனே! எனது புத்திரியாகிய பார்வதி தேவியாரைத் தேவரீருக்கு அன்புடன் அளித்தேன்!" என்று கூறி வேதமந்திரங்களைக் கூறி தாரைவார்த்துக் கொடுத்தான். பிறகு எம்பெருமான் பிரமாதி தேவர்கள் வேண்டுகோளுக் கியைந்து வேதமுறைப்படி எம தன்னையை விவாகஞ் செய்துகொண்டார். திருமணச் சடங்குகளனைத்தும் முடிந்த பின், அங்கு கூடியிருந்தவர்கள் யாவரும்உலகங்களை யளித்தருளிய தந்தையும் தாயுமான சிவ பெருமானையும் உமா தேவியாரையும் வணங்கித் துதிக்க, பார்வதி பரமேசுவரர்கள் அவர்களுக்குத் திருவருள் புரிந்தனர். அப்போது பர்வத ராஜன் சிவபெருமானது பாததீர்த்தம், சந்தனம், புஷ்பம், நைவேத்தியம் முதலிய சிவப்பிரசாதங்களை யாவர்க்கும் கொடுத்தான். அத்தருணத்தில் இரதிதேவி எம்பெருமானது திருவடிகளை வணங்கி, "ஐயனே! என் துன்பத்தை நீக்கி என்னையும் மகிழ்வுறச் செய்தருளவேண்டும்!" எனப் பிரார்த்திக்க, எம்பெருமான் திருவருள்சுரந்து, "பெண்ணே! நீ வருந்தவேண்டாம்!" என்று கூறி, மன்மதன் வந்து தோன்றும்படி திருவுளத்தில் நினைத்தருளினார். உடனே மன்மதன் தனது கரும்புவில்லுடனும் புஷ்ப பாணங்களுடனும் எம்பெருமான் திருமுன் தோன்றி, அவரது திருவடிகளைவணங்கித் துதித்து, "எம்பெருமானே! அடியேனது பிழை பொறுத்தருளவேண்டும்!" எனப் பிரார்த்தித்தான். அப்போது சிவபெருமான் அவனை அன்புடன் நோக்கி, "குழந்தாய்! உன்மீது எனக்குச் சிறிதும் கோபமே கிடையாது. ஆகையினால் நீ வருந்தாதே! நமது பார்வையினால் நின்னுடல் சாம்பராயிற்றாகையினால், நீ இரதிதேவிக்குமட்டும்உருவமுடையவனாயும் மற்றவர்களுக்கு அரூபியாயும் இருந்துகொண்டு உனதரசாட்சியை நடத்துவாயாக!" எனத் திருவாய்மலர்ந் தருளினார். மன்மதனும் இரதிதேவியும் உலகங்களின் தாய்தந்தையர்களது திருவடிகளை வணங்கி விடைபெற்றுத் தமது நகரத்துக்குச் சென்றனர்.

பிறகு சிவபெருமான் பார்வதிதேவியாருடன் இடபவாகனத்தின்மீது ஆரோகணித்து தேவர்களும்சிவகணங்களும் இமவானும்புடைசூழ்ந்துவர இமயமலையினின்றும் நீங்கித் திருக்கைலாயத்தை யடைந்து விடையினின்றும் இறங்கி யாவர்க்கும் விடைகொடுத்தனுப்பிவிட்டுத் தமது திருக்கோவிலினுட்சென்று தமது சிங்காசனத்தின்மீது உமாதேவியார் வாமபாகத்திலுற அமர்ந்தருளினார். அப்போது உலகத்திற் பொருந்தியுள்ள ஆன்மாக்களனைத்தும் துன்பம்நீங்கி போகத்தை யனுபவித்து இனிமையாக வாழத்தொடங்கின.

சிவபெருமான் பார்வதிதேவியாரைத் திருமணம்புரிந்துகொண்டு பல காலமாகியும், அப்பெருமான் ஒரு புத்திரனை யுதவி, தங்கள் துயரம் நீங்க வழிசெய்யாததைக் கண்ட பிரமாதிதேவர்கள் வருத்தமுற்று, உறவு பகைமையின்றி அவரவர்களது வினைகளுக் கேற்ற பயனைத்தரும் இயல்பினராகிய சிவபெருமானை நொந்துகொள்வது தவறென்றும், நல்ல தவத்தினையியற்றி அவரது அருளைப்பெறாத தம்மைத் தாம் நொந்துகொள்ள வேண்டுமென்றும், ஆயினும் அப்பெருமானது திருவடிகளைத் துதித்துச் சரணமடைந்தால், தீமைகள் நீங்கி நன்மைகளனைத்தும் வந்து சேருமென்றும் தேர்ந்து, திருக்கைலாயத்துக்குச் சென்று எம்பெருமானிடம் தங்கள் குறைகளைக் கூறித் திருவருள் புரியும்படி விண்ணப்பஞ் செய்துகொள்ளவேண்டு மென்று தீர்மானித்து, தாங்கள் அங்கு செல்வதற்குமுன் ஒரு தூதுவனை முன்னே யனுப்பி பரமன் அப்போது என்ன செய்துகொண்டிருந்தாரென்று அறிந்துகொள்வது உசிதமென வெண்ணி வாயுதேவனைத் திருக்கைலாயத்துக்குச் சென்று எம்பெருமானது செயலை அறிந்துவரும்படி கேட்டுக்கொண்டார்கள். முன்னம் மன்மதன் சென்று சாம்பரானதை நினைத்து வாயுதேவன் உள்ள

மும் உடலும் நடுநடுங்க, தன்னால் அக்காரியம் செய்யமுடியாதென்று கூறி மறுத்தான். அப்போது பிரமதேவர் தேவர்கள் துயரம் நீங்குவதற்கு வாயுதேவன் தன்னுயிரைக் கொடுத்தேனும் இப்பேருதவியைச் செய்யவேண்டுமெனப் பலவாறாக வேண்டிக்கொள்ள, வாயுதேவன் உயிருக்குத்துணிந்து திருக்கைலாயத்துக்குச் சென்று அம்மலையினின்றிழியும் ஆற்றில் மூழ்கி அழகிய சோலைகளுக்குள் சென்று நறுமணங்கமழும் மலர்களின் வாசனை பொருந்திய மகரந்தப்பொடிகளை வாரிக்கொண்டு தென்றலாக மெல்ல அசைந்து திருக்கோவிலுக்குட் செல்ல முயன்றான். அத்தருணத்தில் பொற்பிரம்பை யேந்தித் திருவாயிலில் நின்று காவல் செய்துகொண்டிருந்த நந்தியெம்பெருமான் அதனைக் கண்டு மிகவும் கோபித்து அதட்ட, வாயுதேவன் வலிமைகுன்றி நடுங்கிக் கீழே வீழ்ந்து மூர்ச்சையடைந்தான். சிறிது நேரங் கழித்து வாயுதேவன் மூர்ச்சை தெளிந்தெழுந்து, திருநந்தி தேவரது திருவடிகளை வணங்கி, "திருமால், பிரமன் முதலான தேவர்கள் சிவபெருமானைத் தரிசிக்க விருப்பங்கொண்டு, சமயமறிந்துகொண்டு வரும்படி தீவினையேனை யனுப்பினார்கள். நான் எவ்வளவு தூரம் தடுத்துக்கூறியும் அவர்கள் அடியேனை நிர்ப்பந்தித்து அனுப்பினார்கள். பயந்து பயந்து இளந்தென்றலாக வந்த தமியேன் அறிவிலியாதலின் தேவரீரிடம் விடைபெறாது உள்ளே செல்ல முயன்றேன். தேவரீர் அடியேனுடைய குற்றத்தைப் பொறுத்தருளவேண்டும்" எனப் பிரார்த்திக்க, அப்பெருமான் கோபந்தணிந்து, "உனது உயிரைக் கொடுத்தோம். இனி நீ இங்கே நில்லாமற் போகக் கடவாய்!" என்று கூறியருளினார். வாயுதேவன் அவரது திருவடிகளை வணங்கி விடைபெற்று நீங்கி மேருமலையில் தேவர்கள் கூடியிருந்த விடத்துக்குச் சென்று நிகழ்ந்ததைத் தெரிவித்தான்.

அதுகேட்ட தேவர்கள் தாங்கள் அனைவரும் கூடி எம்பெருமானிடம் செல்வதே நலமெனத் தீர்மானித்து மேருமலையை விட்டுத் திருக்கைலாயத்துக்குச் சென்று நந்தி யெம்பெருமானை வணங்கித் தங்களைச் சிவபெருமானிடத்துக்கு அழைத்துப் போகும்படி வேண்டினார்கள். நந்தியெம்பெருமான் தேவர்களை வெளியிலேயே நிறுத்தி, திருக்கோயிலுக்குட் சென்று சிவபெருமானை வணங்கி தேவர்கள் தரிசிக்க வந்ததைத் தெரிவிக்க, எம்பெருமான் அவர்களை உள்ளே அழைத்துவரும்படி கட்டளையிட்டருளினார். உடனே அவர் திருவாயிலுக்கு மீண்டு தேவர்களை உள்ளே அழைத்துக்கொண்டுபோய் எம்பெருமான் திருமுன்னர் சேர்த்தனர். அப்போது தேவர்கள் எம்பெருமானைக் கண்டு பேருவகைகொண்டு 'அவரது திருவடிகளை நமஸ்கரித்தெழுந்து துதிக்க, சிவபெருமான் அத்தேவர்களது முகங்களைக்கருணையுடன் நோக்கி, "தேவர்காள்! நீங்கள் துன்பத்தினால் மிகவும் மனத்தளர்ச்சி யடைந்திருக்கிறீர்கள். நீங்கள் யாது வரம் வேண்டினும் இப்போதே தருவோம். நீங்கள் விரும்பும்வரத்தைக் கேளுங்கள்!" என்று கூறியருளினார். அப்போது தேவர்கள், "ஆதியும் நடுவும் ஈறும் அருவமும் உருவும் ஒப்பும் ஏதுவும் வரவும் போக்கும் இன்பமும் துன்பமும் இன்றி வேதமுங் கடந்துநின்ற விமலனே! தேவரீர்பால் தேவரீரையே நிகர்த்த குமாரனொருவனைத் தந்தருளவேண்டும்!" என வேண்டிக்கொண்டார்கள்.

அப்போது சிவபெருமான் அவர்களைநோக்கி, "நீங்கள் வருந்தாதீர்கள்! இப்போதே நாம் ஒரு குமாரனைத் தந்தருளுவோம்!" என்று கூறியருளி, மெய்ஞ்ஞானிகளால் தியானிக்கப்படும் ஈசானம், தற்புருஷம், வாமனம், அகோரம், சத்தியோஜாதம், அதோமுகம் என்னும் தமது பழைய திருமுகங்கள் ஆறையும் கொண்டருளி, ஆறு திருமுகங்களிலுமுள்ள நெற்றிக் கண்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு தீப்பொறியை யளித்தார். அந்த ஆறு தீப்பொறிகளும், தேவர்களும் தாங்கவொண்ணாத வெப்பத்துடன் உலகமெங்கும் பரவின. உடனே வாயுக்கள் வலிமைகுன்றி வீசாது ஓய்ந்தன; கடல்கள் வற்றின; வடவாமுகாக்கினியும் செருக் கொழிந்தது; பூமி பிளவுபட்டது; பர்வதங்கள் நெகிழ்ந்தன; பூமியைத் தாங்கும் நாகங்கள் உடல்நெளித்து நீங்கின; திக்குக்கஜங்கள் வீரிட்டுத் தியங்கின; ஜீவராசிகளனைத்தும் நடுங்கின! ஆனால் தமக்கோர் காரணமில்லாதவரான சிவபெருமானது நுதற்கண்களினின்றும் வெளிப்பட்ட அத்தீப்பொறிகள் உயிர்களை இரக்ஷிக்கும்பொருட்டு உண்டாயினவாகையால் ஒருயிரையும் அழிக்கவில்லை;

அவைகள் எல்லோரையும் எல்லாவற்றையும் அச்சமுறமட்டுஞ் செய்தன.

சிவபெருமானருகில் வீற்றிருந்த உமாதேவியாரும் அத்தீப் பொறிகளின் வெப்பத்தைக் கண்டு தேகம் வியர்த்து மனங்கலங்கி அச்சமுற்றெழுந்து தமதுதிருவடிகளிலணிந்த பொற்சிலம்புகள் ஒன்றோடொன்று தாக்கும்படி ஓடித் தமது அந்தப்புரத்தை யடைந்தார். திருமால் முதலிய தேவர்களும் அப்பொறிகளின் வெப்பத்தைத் தாங்கமட்டாமல் துன்புற்றுப் பயந்து எம்பெருமான் சந்நிதியினின்றும் ஓடி உலகங்களுக்கெல்லாம் சென்று அலைந்து,எங்கு சென்றாலும் அத்தீப்பொறிகளின் வெப்பம் தம்மைத் தாக்கினது கண்டு, நடு சமுத்திரத்திலுள்ள மரக்கலத்தினின்றும் நீங்கும் காக்கைகள் அம்மரக்கலத்துக்கே திரும்பிவருவதுபோலச் சிவபெருமானது சந்நிதானத்துக்கே மீண்டு சிவபெருமானை வணங்கி, "எம்பெருமானே! அடியேங்கள் அசுரர்களையழிக்க ஒரு புத்திரனைத் தந்தருளும்படி பிரார்த்திக்க, தேவரீர் சகல புவனங்களையும் அடியேங்களையும் அழிக்கத்தக்க கொடியதாயும் எல்லையற்றதாயுமுள்ள அக்கினியைத் தந்தருளினீர். அடியேங்கள் பிழைப்பதெப்படி? எங்களுக்குப் புகலிடம் தேவரீர் திருவடிகளைத்தவிர வேறுண்டோ? ஆதலின் தேவரீர் கருணைகூர்ந்து நிலவுலகத்தையும் விண்ணுலகத்தையும் அழிக்கின்ற அக்கினியை விலக்கி அடியேங்கள் குறைகளை நீக்கியருளவேண்டும்" என்று கூறிப் பிரார்த்தித்தார்கள்.

அப்போது சிவபெருமான் அஞ்சாதேயுங்கள் என்று அவர்களுக்குத் தைரியஞ்சொல்லி, புதிதாகத் தோன்றிய தமது ஐந்து திருமுகங்களையும் மறைத்துக்கொண்டு பண்டுபோல் ஒரே திருமுகத்துடன் அமர்ந்து, தமது நுதற்கண்களினின்றுதோன்றிப் புவனமெங்கும்வியாபித்தஆறுதீப்பொறிகளையும்தமதுதிருமுன்னே வரும்படி நினைத்தருளினர். உடனே அத்தீப்பொறிகள் எம்பெருமான் திருமுன் வந்தடைய, எம்பெருமான் அவைகளை மகிழ்வுடன்நோக்கிப் பின்பு வாயுதேவனையும் அக்கினி தேவனையும் பெருங்கருணையுடன் பார்த்து, "நீங்கள் இருவரும் இத் தீப்பொறிகளைச் சுமந்து சென்று கங்காநதியில் விடுங்கள். அவள் அவைகளைச் சரவணப்பொய்கையிற் சேர்ப்பாள்!" என்று கூறியருளினர். அதுகேட்ட வாயுவும் அக்கினியும் நடுநடுங்கி அவைகளைத் தாங்கிச் செல்வது தங்களால் ஆகாத காரியம் என்று விண்ணப்பித்து மனம்வெதும்பி அங்கம் வியர்த்துநிற்க, எம்பெருமான் அப்பொறிகளைச்சுமந்து சென்று கங்கையிற் சேர்க்கும் ஆற்றலை அவர்களுக்குக் கொடுத்தருள, அவர்கள் எம்பெருமான் பணியைச் செய்யச் சம்மதித்தனர்.

அப்போது சிவபெருமான் தேவர்களை நோக்கி, "இத்தீப்பொறிகள் சரவணப்பொய்கையை யடைந்து ஒரு குழந்தையாக ஆகிச் சூரபதுமனுடைய வமிசத்தை நாசஞ்செய்யும். இனிக் கவலை யொழித்துச் செல்லுங்கள்!" என்று கூறியருளினர். உடனே வாயுதேவன் அத்தீப்பொறிகளை யெடுத்துத் தன் தலைமேற் சுமந்துகொண்டு, அக்கினி தேவன் தன்னைப் பின் தொடர்ந்துவர, கங்கையை நோக்கி நடந்தான். தேவர்கள் எம்பெருமான் கூறியருளியதைக் கேட்டு உளமகிழ்ந்து தாங்களும் சரவணப் பொய்கைக்குச் சென்று தங்களை உய்விக்க வந்த கருணாகரமூர்த்தியைக் காண வேண்டுமென்று ஆவல்கொண்டு வாயுவையும் அக்கினியையும் பின்தொடர்ந்து சென்றார்கள். வாயுதேவன் ஒரு நாழிகை அப்பொறிகளைச் சுமந்து நடந்து, பிறகு அவைகளின் வெப்பத்தைத் தாங்கமாட்டாதவனாய் அவைகளை அக்கினிதேவனிடம் கொடுக்க, அவன் அவைகளை ஒரு நாழிகை சுமந்து சென்று கங்கையிற் சேர்த்தான். உடனே கங்காநதி வற்றிப்போயிற்று. கங்காதேவியானவள் அவைகளைத் தன் சிரமேல் தாங்கிச் சென்று சரவணப்பொய்கையிற் சேர்த்தாள். உடனே கங்காநதி முன்போல் நீர் நிறைந்து ஓட வாரம்பித்தது. எம்பெருமான் நுதற்கண்களினின்றும் தோன்றிய அவ்வாறு தீப்பொறிகளும் அப்பொழுதே மலர்ந்த செந்தாமரை மலர்களைப்போல் அமரவும், அவைகளினின்றும்,

"அருவமு முருவுமாகி யநாதியாய்ப்பலவா யொன்றாய்ப், பிரமமாய் நின்ற சோதிப்பிழம்பதோர்மேனியாகக் கருணை கூர் முகங்களாறும், கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே, யொருதிரு முருகன் வந்தாங் குதித்தன னுலகமுய்ய!"

கருணை பொழியும் ஆறு திருமுகங்களையும் பன்னிரண்டு கரங்களையும் கொண்டு அநாதியாயுள்ள பரம்பொருளானவர் திருமுருகனாக வந்து தோன்றினார். உடனே தேவதுந்துபிகள் முழங்கின; வேதங்களெல்லாம் ஆரவாரித்தன; பிரமதேவர், திருமால், இந்திரன் முதலிய தேவர்கள் மலர்களைத் தூவித் துதித்துத் தம்மை யாட்கொள்ளும்படி பிரார்த்தித்தார்கள். உலகத்திலுள்ள உயிர்த்தொகைகளுக்கெல்லாம் நன்மையைக் காட்டுங் குறிகளும் அசுரர்களுக்கெல்லாம் மரணத்தைக் காட்டும் குறிகளும் தோன்றின.

வேதங்களின் முடிவினாலும் வாக்கினாலும் மனத்தினாலும் அளவிட முடியாதவராய் எங்கும் நிறைந்து வியாபித்திருக்கும் நிமலமூர்த்தியாகிய சிவபெருமானே ஆறு திருமுகங்களையுடைய திருவுருவத்துடன் தோன்றி அருளோடு சரவணப்பொய்கையில் நறுமணங் கமழும் செந்தாமரை மலரின்மீது வீற்றிருந்தருளினார். அப்போது திருமால் முதலிய தேவர்கள் கார்த்திகைப் பெண்கள் அறுபேர்களையும் அழைத்து குமாரக்கடவுளுக்குப் பால் கொடுத்து வளர்த்துவரும்படி கட்டளையிட, அவர்கள் மனமகிழ்ந்து சரவணப்பொய்கையில் குழந்தையாக எழுந்தருளியிருந்த அக்கடவுளை யடைந்து துதிக்க, தம்மை யடைந்தவர்கட்கு வேண்டியவற்றை யுதவும் அப்பெருமான் அவ்வாறு பெண்களும் மகிழ்வுறுமாறு ஆறுகுழந்தைகளின் உருவங்களை யெடுத்துக் கொண்டருளினார். ஆறு கார்த்திகைப் பெண்களும் பேருவகையடைந்து அவ்வாறு குழந்தைகளுக்கும் தங்கள் தனங்களினின்றும் சுரந்த பாலமுதத்தை யூட்டி அன்புடன் வளர்த்துவந்தனர். அப்போது குமாரக் கடவுள் அவர்கள் அளவற்ற ஆனந்தத்தை யனுபவிக்குமாறு பல திருவிளையாடல்களைப் புரிந்தருளினார்.

இனி, அத்தீப்பொறிகள் எம்பெருமான் திருமுன்னரை விட்டு நீங்கியபின் அங்கு நிகழ்ந்தவைகளைக் கூறுவோம். அத்தீப்பொறிகளைக் கண்டு வெருவியோடி அந்தப்புரத்தை யடைந்த உமாதேவியார் தேவர்கள் தடையினால்தான் எம்பெருமான் தம்மிடம் ஒரு புதல்வனைத் தோற்றுவிக்காமல் நுதற்கண்களினின்று தீப்பொறிகளை யுண்டாக்கி ஒரு புதல்வனைத் தந்தருளினாரென்று சினங்கொண்டு திருமால் முதலிய தேவர்களின் பத்தினிமார்களுக்கும் புத்திரசந்தான மில்லாமற் போகும்படி சபித்துப் பிறகு திரும்பி எம்பெருமான் திருமுன்னே யடைந்து தாம் வெருவியோடியதற்குக் காரணத்தை எம்பெருமானுக்குத் தெரிவித்துப் பின்பு அவரது வாமபாகத்தில் எழுந்தருளினார். அப்போது எம்பெருமான் உமாதேவியார் வெருவியோடியபோது அவர் சிலம்புகளினின்றும் தெறித்து விழுந்த நவரத்தினங்களில் அத்தேவியாரது உருவம் பிரதிபலித்ததைக் கண்டு, அவைகள் அவ்வுருவத்தைத் தாங்கிய கன்னியர்களா யாகவேண்டுமெனத் திருவுளங்கொண்டார். உடனே அவைகளினின்றும் நவசக்திகள் உமாதேவியார் உருவத்துடன் தோன்றி எம்பெருமானை வணங்கி அவரிடத்துச் சிந்தையில் விருப்பங் கொள்ளவும், அவர்கள் உடனே கருப்பமுற்றனர். அதுகண்ட தேவியார் மிகுந்த கோபங்கொண்டு,"இங்கு எனக்கு மாறாகிய நீங்கள் இக் கருப்பத்துடன் பலகாலம்இருக்கக்கடவீர்கள்!" என்று சபித்தனர். அதுகேட்ட நவசக்திகள் பயந்து நடுங்க, அவர்கள் தேகங்கள் வியர்த்தன. அவ்வியர்வையினின்றும் எம்பெருமானருளினால் இலக்ஷம் வீரர்கள் செம்பொன்னுடைகளைத் தரித்துக்கொண்டும் கரங்களில் கத்தி கேடயங்களைத் தாங்கிக்கொண்டும் உதித்தனர். அவர்கள் சிவபெருமானது திருவடிகளை வணங்கித் துதிக்க, எம்பெருமான் அவர்களை நோக்கி, "நீங்கள் யாவரும் சூரபதுமனாதியர்களை யழிக்கப் பிறந்துள்ள எமது புதல்வனாகிய குமாரக்கடவுளுக்குப் படைகளாக விருந்து வெற்றிகொள்ளுங்கள்!" என்று திருவாய் மலர்ந்தருள, அவர்கள் மிகவும் அன்புள்ள பரிசனங்களாய்த் திருக் கைலாயத்திலேயே எம்பெருமானுக்குத் தொண்டுபுரிந்துவந்தனர்.

கருப்பமுற்ற நவசக்திகள் உமாதேவியாரது பாதமலர்களைப் பணிந்து அவருக்குப் பல காலம் தொண்டுபுரிந்துவந்தனர். அக்காலத்தில் நந்தி கணத்தவர்கள் அச்சக்திகளின் கருக்களிற் புகுந்து ஒப்பற்ற வாலிபர்களாய் சுகப்பிரும்மரிஷியைப் போல் எம்பெருமானைத் தொழுது தியானித்திருந்தார்கள். அவர்களது பாரத்தைத் தாங்கமாட்டாதவராய் அச்சக்திகள் மிகவும் துன்பமுற்று எம்பெருமாட்டியை வணங்கித் துதிக்க, எம்பெருமாட்டி அவர்களது பிரார்த்தனைக்கு இரங்கியும் எம்பெருமான் அவர்களுக்கு அருள்புரியும்படி தமக்குக் கூறியருளிய கருணைமொழிகளுக் கிணங்கியும்

அவர்கள் புதல்வர்களைப்பெறும்படி அருளிச்
செய்தார். உடனே அச்சக்திகள் வேறோரிடத்
துக்குச்சென்று புதல்வர்களைப் பெற்றார்கள்.
நந்திகணத்தவர்களாகிய அப்புதல்வர்கள் ஸ்ரீ சுந்
தரமூர்த்தி நாயனாரையும் நந்தி யெம்பெரு
மானையும் போலவே சிவபெருமான் முன்பு
தந்தருளிய பெயர்களுடன் பந்தம் நீங்கியே
பிறந்தனர். வீரவாகுதேவர், வீரகேசரி, வீர
மாமகேந்திரர், வீரமாமகேசுவரர், வீரமா
புரந்தரர், வீரராக்கதர், வீரமார்த்தாண்டர்,
வீராந்தகர், வீரதீரர் என்னும் அந்நவ
வீரர்களும் வளர்ந்த அவயவங்களுடன்
பொன்னுடை யணிந்து அந்நவ சக்திகளின்
நாபிகளின் வழியே பிரமதேவரைப் போல்
பிறந்தனர். அவ்வீரர்கள் சென்று உமாதேவி
சமேதரான எம் பெருமான் திருவடிகளை
வணங்க, அவர்களிருவரும் அவ்வீரர்களுக்குத்
திருவருள் புரிந்தனர். பிறகு சிவ பெருமான்
அவர்களொவ்வொருவருக்குமொவ்வொருவாட்
படையை யளித்து, "வியர்வையில் தோன்றிய
இலக்ஷம் வீரர்களுடன் நீங்களும் சேர்ந்து
உங்களுள் முதல்வனாகிய குமார சுவாமியைப்
பிரியாமல் அவனது ஏவல்களைச் செய்து
கொண் டிருங்கள் !" என்று கூறியருள, அவ்
வீரர்களும் இலக்ஷம் வீரர்களுடன் கலந்து
நேயம் பாராட்டித் திருக்கைலாய மலையிலேயே
வசித்துவந்தனர்.

பிறகு சிவபெருமான் உமாதேவியாருடன்
இடப வாகனத்திலேறி சிவகணங்களும், சிவ
சாரூப்பியபதவியை யடைந்த பெரியோர்களும்,
திருமால் முதலிய தேவர்களும் புடைசூழ்ந்து
வரப் புறப்பட்டு சரவணப் பொய்கைக்குச்
சென்று, இடபவாகனத்தினின்றும் இறங்கி,
அப்பொய்கையில் ஆறு கார்த்திகைப் பெண்
களால் அன்புடன் வளர்க்கப்பட்ட ஆறுகுழவி
களாகத் திருவிளையாடல் புரிந்துவந்த தங்கள்
அருமைப் புதல்வனை அழைத்து வரும்படி
கூறியருள, எம்பெருமாட்டி சரவணப் பொய்
கையிற் சென்று தமது திருக்குமாரரது ஆறு
திருவுருவங்களையும் தமது இரண்டு கரங்களி
னாலும் அன்புடன் சேர்த்து அணைத்துக்
கொண்டார். உடனே குமாரக்கடவுள் ஆறு
திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும்
உள்ளஒரு திருவுருவத்தைக் கொண்டருளினார்.
உடனே உமாதேவியார் தமது தனங்களி
னின்றும் சொரிந்த பாலை அக் கந்தவேளுக்கு
ஊட்டியருளி அவரைச் சிவபெருமான் திரு
முன்னே வணங்கச் செய்ய, எம் பெருமான்
அக் குழவியைத் தமது திருக்கரங்களில்
வாங்கித் தம் மார்போ டணைத்துக்கொண்டு,
விடையிலேறி அவரைத் தமது பக்கத்திலிருத்
திப் பிறகு உமாதேவியாருக்குக் கைலாகு
கொடுத்துத் தூக்கித் தமது இடப்பாகத்தில்
அமர்த்தியருளினார். அப்போது சிவபெருமா
னுக்கும் உமாதேவியாருக்கும் மத்தியில் சுப்ர
மண்யக்கடவுள் வீற்றிருந்த சச்சிதானந்த
சொரூபத்தை யாவரும் கண்டு பரமானந்தத்தி
லாழ்ந்தனர். பிறகு எம்பெருமான் யாவருட
னும் திருக்கைலாயத்துக்கு மீண்டனர்.

தம் தம்பியர்களாகிய இலக்ஷத் தொன்பது
வீரர்களுடன் குமாரக்கடவுள் பிரபஞ்சமெங்
கும் உலாவி, அஷ்டகுல பருவதங்களையும் ஓரி
டத்தில் ஒன்றாகக் கூட்டுவார்; பின்பு அப்
பருவதங்களை இட மாறுதலாகப் பூமியில்வைப்
பார்; எல்லாக் கடல்களையும் ஒன்றாகச் சேர்ப்
பார்; பாதாளத்திலுள்ள சர்ப்பங்களையெல்லாம்
பிடித்துக் கொண்டுவந்து பூமியிற் சேர்ப்பார்;
பூமியிலுள்ள மலைகளையெல்லாம் பாதாளத்தில்
அழுத்துவார்; விசும்பிற் செல்லும் விற்களி
ரண்டையும் பிடித்து வளைத்து நக்ஷத்திரங்
களையும் கிரகங்களையும் உருண்டைகளாகக்
கொண்டு தேவர்களது முடி, தலை, மார்பு,
தோள், கழுத்து, முகம் இவைகளின்மீது பிர
யோகித்துத் தமது வில்வித்தைத்திறமையைக்
காட்டுவார். இவ்வாறு மானிடர்களும் தேவர்
களும் அச்சங்கொண்டு மனமும் உடலும்
நடுங்குதலன்றிச் சிறிதும் தீங்குறாவண்ணம்
திருவிளையாடல்களை ஆச்சரியமாகச் செய்
தருளினார். அவரது திருவிளையாடல்களைக்
கண்டு அவரது திருவுருவத்தைக் காணாது
மயங்கி அஞ்சிய திக்குப் பாலகர்கள், சூரிய
சந்திரர்கள் முதலாயினோர் சேர்ந்து மேரு
மலையில் வசித்துக் கொண்டிருந்த இந்தி
ரனை யடைந்து தங்கள் துயரத்தை எடுத்
துக் கூற, இந்திரன் தானும் அவ்வாறே மயங்
கித் துன்புற்றதாகக் கூறி பிரமதேவரிடம் போ
வோம் வாருங்களென்று அவர்களை யழைத்
தான். அப்போது அவர்களுடைய மனமயக்
கத்தை நீக்கத் திருவுளங்கொண்ட ஷண்முகப்
பெருமான் ஒரு திருமுகத்துடன் குழந்தை

முடப்புல் முக்கல நீரைத் தடுக்கும்.

யைப்போல அம்மேருமலையில் அவர்கள் கண்
களுக்குப் புலப்படுமாறு தோன்றி, தாமரைப்
பூவின் இதழ்களைக் கிள்ளியெறிவது போல்
அம்மலையின் சிகரங்களைப் பிடுங்கியெறிய
ஆரம்பித்தார். அதுகண்ட தேவர்கள் நிலவுல
கத்திலும் ஆகாயத்திலும் பொருந்திய பழைய
நிலைமைகளை மாறுபடச் செய்த கொடியவன்
இவனேயென்று கூறி, அவருடன் ஆங்கே
போர்செய்து வெல்லவேண்டுமெனத் தீர்மா
னித்தனர். உடனே இந்திரன் திருவெண்
காட்டில் சிவபெருமானைப் பூசித்துவந்த ஐரா
வத யானையை நினைத்து, அது அங்கே வரவும்
அதன்மே லேறிக்கொண்டு போர்க்கோலங்
கொண்டு தேவர்களுடன்சென்று குமாரக்
கடவுளைச் சூழ்ந்துகொண்டார்கள். கொடும்
போர் நடந்தது. இந்திரனுடைய வஜ்ராயுதம்
பொடியாயிற்று! வெள்ளையானை மடிந்தது;
பிறகு இந்திரன் முதலான அநேக தேவர்கள்
அழிந்தனர்; எஞ்சி நின்ற தேவர்கள் வெருண்
டோடா நின்றனர். இதையுணர்ந்த நாரத முனி
வர் தேவகுருவாகிய பிரகஸ்பதி பகவானுக்கு
இதைத் தெரிவிக்க, பிரகஸ்பதிபகவான் குமா
ரக் கடவுளையடைந்து அவரது திருவடிகளை
வணங்கி, "சூரபதுமன் முதலாயினோரை
அழித்துத் தன் அரசாட்சியை மீண்டும் அடை
யத் தேவரீரையே சரண்புகுந்திருக்கும் இந்தி
ரனும் ஏனைய தேவர்களும் தேவரீரது மாயை
யை யுணரமாட்டாதவராய் பேதைமையினால்
தேவரீருடன் பொருத பெருங்குற்றத்தைப்
பொறுத்தருளவேண்டும்!" என்று கூறிப்
பிரார்த்திக்க, குமாரக்கடவுள் கருணைகூர்ந்து
அத்தேவர்களையும் வெள்ளை யானையையும்
எழுப்பி, அவர்களுடைய மருட்சி முற்றிலும்
நீங்கி அவர்கள் தம்மை நன்கு அறியுமாறு
அவர்களுக்கு விசுவரூபத்தைக் காட்டியருளி
னார்.

பிறகு தேவர்கள் திருக்கைலாயத்துக்கு
அருகிலுள்ள ஒரு பெரிய மலையில் ஓர் அற்பு
தமான திருக்கோவிலைச் சமைத்து அதில் அக்
கடவுளை நவரத்தின கசிதமான செம்பொற்
பீடத்திலமர்த்தி, ஆகாயகங்கையினால் அபிஷே
கஞ்செய்து, பீதாம்பரம் முதலியன சாத்தி, சந்
தனம் பூசி, அழகிய ஆபரணங்களை அணி
வித்து, தேன்பெருகும் மலர்மாலையைச்சூட்டி,
முறைப்படி அருச்சித்து ஆராதித்தனர். அம்
மலை அன்றுமுதல் கந்தவெற்பு என்னுந் திரு
நாமத்தைப் பெற்றது. குமாரக்கடவுள் திருக்
கைலாயத்துக்குச் சென்றருள, யாவரும் தத்
தம் பதிகளுக்கு ஏகினர். குமாரக்கடவுள்
திருக்கைலாயத்தி லிருக்கையில், நாரதமாமுனி
வர் சிறந்த தேவர்களும், முனிவர்களும் சூழ
விருந்து நடத்திய வேள்வியில் யாகாக்கினியி
னின்றும் ஒரு ஆட்டுக்கடாவானது எழும்பி
ஆரவாரித்து உலகத்திலுள்ள உயிர்களையெல்
லாம் அழிக்கத்தொடங்க, அம்முனிவர் மிக
வும் மனம் வருந்தி அவ்வாட்டைத் தொலைக்
கும்படி சிவபெருமானைப் பிரார்த்திக்கவேண்டு
மென்ற நோக்கத்துடன் திருக்கைலாயத்துக்
குச் சென்று வழியில் குமாரக்கடவுளைக் கண்டு
அப்பெருமானையே அவ்வுதவியைப் புரிந்தரு
ளும்படி வேண்டினார். உடனே அப்பெரு
மான் வீரவாகுதேவரை யழைத்து அக்கடா
வைப் பிடித்துக்கொண்டு வரும்படி கட்டளை
யிட, வீரவாகு தேவர் உலகெலாந் திரிந்து
பிரமலோகத்தில் உலாவிக்கொண்டிருந்த அக்
கடாவைப் பிடித்துக் கொண்டுவந்து அப்பெரு
மான் திருமுன்னே விடுத்தனர். அப்போது
குமாரக்கடவுள் நாரதமுனிவரது வேண்டுகோ
ளுக்கியைந்து அக்கடாவைத் தமது வாகனமாக்
கிக் கொண்டு, யாசத்தை முடிப்பதற்குச் செல்
லும்படி அம்முனிவருக்கு விடைகொடுத்தனுப்
பினார். பிறகுஷண்முகக்கடவுள் வேதத்தின் முத
லிலுள்ள பிரணவத்தின் பொருளை யுணராமலே
படைப்புத் தொழில் இயற்றிவந்த வேதனைச்
சிறையிலிட்டுத் தாமே சிருஷ்டித் தொழிலைப்
பல காலம் நடத்திவந்து, பிறகு சிவபெருமான்
பணித்தருளியபடி பிரமனைச் சிறையினின்றும்
விடுவித்து, எம்பெருமான் மிகவும் மனமகி
ழும் வண்ணம் அவருடைய இருசெவிகளிலும்
பிரணவத்தின் பொருளை எடுத்துக் கூறினார்.

அச்சமயத்தில் திருமாலின் புத்திரிகளான
சுந்தரவல்லி அமுதவல்லி என்னும் இரு
கன்னிகைகள் ஷண்முகப்பெருமான் தங்களைத்
திருமணம் புரிந்துகொள்ள வேண்டுமென்
னும் நோக்கத்துடன் சரவணப்பொய்கையில்
அருந்தவ மியற்றிவந்தனர். ஷண்முகப் பெரு
மான் அவர்கள் தவத்துக் குவந்து, அவர்
கள் முன் தோன்றி அவர்களை நோக்கி,
"மூத்தவளாகிய அமுதவல்லியே! நீ இந்திர
னுக்கு மகளாகி வளர்ந்துகொண் டிரு! இளை

முடவனுக்கு நொண்டி சண்டப்பிரசண்டன்.

யவுளாகிய சுந்தரவல்லியே! நீ நிலவுலகத்தில் சாந்த குணத்தினையுடைய சிவ முனிவரது புத்திரியாகப் பிறந்து வேடர் மகளாக வளர்ந்து கொண்டிரு! யாம் வந்து உங்களை மணந்து கொள்வோம்!" என்று கூறி அவர்களுக்கு விடைகொடுத்தனுப்பி, கந்தவெற்புக்குச் சென்று அங்கு பெருங் கருணையுடன் எழுந்தருளி யிருந்தார். சில காலம் சென்றபின் முருகப் பெருமான் அம்மலையைவிட்டுத் திருக்கைலாயத்துக்குச் சென்று, பார்வதி பரமேசுவரர்களை வணங்கி அவர்களுக்கு மத்தியில் அருளுடன் எழுந்தருளியிருந்தார். அப்போது இந்திரன் திருமால் பிரமதேவர் முதலான தேவர்களுடன் திருக்கைலாயத்தை யடைந்து எம்பெருமான் திருமுன்னர் சென்று வணங்கி யேத்தி தன் குறைகளை எம்பெருமான் இன்னும் நீக்கியருளாமல் நீட்டித் திருத்தல் தகுதியோவென முறையிட்டு வருந்திப்புலம்பினன். சிவபெருமான் திருவருள் கூர்ந்து முருகக் கடவுளைப் பார்த்து, "குமரனே! உலகத்தை வருத்தி பல வுயிர்களுக்கும் துன்பத்தைச் செய்து, தேவர்களது பொன்னுலகத்தை நீக்கிளையாக்கி, கொடுமையினையே செய்து கெடாத வலிமையுடன் வாழ்ந்துவரும் சூரபதுமனை அவனுடைய அசுரக் கூட்டங்களுடன் அழித்து, வைதிக மார்க்கத்தை நிலைநிறுத்தி, இந்திரனுக்கு அவனரசை மீண்டு மளித்து, தேவர்களது துன்பத்தை யொழித்து மீண்டு வரக்கடவாய்!" என்று திருவாய்மலர்ந்தருளி, பதினொரு உருத்திரர்களையும் எறியீட்டி, கொடி, வாள், வஜ்ராயுதம், அம்பு, அங்குசம், கண்டாமணி, தாமரைபோன்ற ஓர் ஆயுதம், தண்டம், வில், மழு என்னும் பதினொரு சிறந்த படைக்கலங்களாக்கி ஷண்முகப் பெருமானுக்கு அளித்துப் பிறகு பிரயோகித்தால் புராதனமாயுள்ள அண்டங்களிலுள்ள பஞ்சபூதங்களையும் அழிக்கத் தக்கதும், சகல ஜீவராசிகளையும் ஏககாலத்தில் அழிக்கத் தக்கதும், எவர்மேல் பிரயோகித்தாலும் அவரது திறமையையும் வரங்களையும் அழித்து அவருயிரை உண்ணத் தக்கதும், எல்லாப் படைக்கலங்களுக்கும் முதன்மையாக வுள்ளதுமான ஒரு ஒப்பற்ற வேலாயுதத்தைப் படைத்து குமாரக் கடவுளது திருக்கரத்திற் கொடுத்தருளினர். பிறகு சிவபெருமான் இலக்ஷத் தொன்பது வீரர்களையும், கணத் தலைவர்களையும் இரண்டாயிரம் வெள்ளம் பூதப்படைகளுடன் ஷண்முகக்கடவுளுக்குத் துணையாகச் சென்று அசுரர்களை வென்று அழித்து மீண்டு வரும்படி கூறி அவர்களுக்கு அநேக சிறந்த படைகளைக் கொடுத்தருளி, பஞ்சபூதங்களின் வலிமையையும், அவைகளினிடத்துப் பொருந்தியுள்ள பொருள்களின் வலிமையையும், பிரமன் முதலிய தேவர்களது வலிமையையும் பெற்றுள்ளதும், மகாவேகம் பொருந்திய இலக்ஷம் குதிரைகள் பூட்டப்பெற்றதும், மனத்தினும் அதிக வேகத்துடன் செல்லத் தக்கதுமான ஒரு ஒப்பற்ற தேரைச் சிருஷ்டித்துக் குமாரக் கடவுளுக்குக் கொடுத்தருளினர்.

அவைகளைப் பெற்றுக்கொண்ட குமாரக் கடவுள் தமது தாய்தந்தையர்களது திருவடிகளை வணங்கி விடைபெற்று, இலக்ஷத் தொன்பது துணைவரும், கணத்தலைவர்களும், பூதப்படைகளும், இந்திராதி தேவர்களும் புடைசூழ, வாயுதேவனைச் சாரதியாகவுடைய சிவபெருமான் அளித்த தேரின்மீதேறி, பேராரவாரத்துடன் அசுரர்களை யழிக்கச் சென்றார். வழியில் எதிர்ப்பட்ட தாரகனது மாயாபுரி யென்னும் நகரத்தை யடைந்ததும், தாரகனையும் கிரௌஞ்சமென்னும் மலையையும் அழிக்கும்படி தேவர்கள் வேண்டியதற்கிணங்கி ஷண்முகக்கடவுள் தமது அடுத்த தம்பியாரான வீரவாகு தேவரை யழைத்து தாரகனையும் கிரௌஞ்சத்தையும் அழித்து வரும்படி யனுப்ப, அவர் சேனைகளுடன் சென்று தாரகனைத் தருமமான போரில் பலமுறை வென்று, அவனுடைய அவுணப் படைகளையும் அழித்தருளினர். போரில் புறங்காட்டி யோடிய தாரகாசுரனைப் பிடிப்பதற்காக வீரவாகுதேவர் அவனைத் தொடரவும், அவன் கிரௌஞ்ச பருவதத்திலுள்ள ஒரு குகைக்குள் ஓடி யொளித்தனன். அவனைத் துரத்திச் சென்ற வீரவாகு தேவரும், அவரைக்காணாது வருந்தித் தேடிச்சென்ற இலக்ஷத்தொன்பது வீரர்களும் பூதத்தலைவர்களும் அக்கிரௌஞ்சகிரிக்குள் அகப்பட்டு அதன் மாயையினால் மயங்கிச் சோர்வுற்றனர். அதையறிந்த ஷண்முகப்பெருமான் தமது தேரைப் போர்க்களத்துக்கு செலுத்தச் சொல்லி, அங்கு ஆரவாரித்துக் கொண்டு நின்ற தாரகனை எதிர்த்துப்

போர்செய்து, கடைசியாக அவன் கிரௌஞ்சத்தின் உதவியைக் கொண்டு மாயப்போர் செய்யத் தொடங்கியவுடன், தமது ஒப்பற்ற வேலாயுதத்தை யெடுத்து, தாரகனைக் கொன்று கிரௌஞ்ச மலையைப் பிளந்தழித்து அதனுள் சிறைப்பட்டுள்ள தமது துணைவர்களையும் பூதர்களையும் மீட்டுக்கொண்டு கணப்பொழுதில் மீண்டுவரும்படி கட்டளையிட்டருளினர். ஒப்பற்ற வேலாயுதமானது எம்பெருமானிட்ட பணியைக் கணப்பொழுதுக்குள் செய்து மீண்டது.

பிறகு முருகக்கடவுள் தம் துணைவர்களுடனும் சேனைகளுடனும் தேவர்களுடனும் புறப்பட்டுச் செந்திற்பதியை யடைந்து, ஆங்கு ஒரு திருக்கோயில் உண்டாக்கச் சொல்லி அதனுள் பொற்பீடத்தில் அமர்ந்து, அசுரர்கள் அதுவரையில் தேவர்களுக் கிழைத்த கொடிய துன்பங்களைப் பிரகஸ்பதி பகவான் உரைக்கக் கேட்டுப் பிறகு திருமால் முதலியோரை நோக்கி, "தேவர்களையும் முனிவர்களையும் போலவே அசுரர்களும் எம்பெருமானது புத்திரர்களாயினும், அவர்கள் கொடியவர்களாதலால் அவர்களை யழிப்பது தரும சாஸ்திரங்களிற் கூறிய விதிகளுக்கு இயைந்ததாகும். ஆயினும், சூரபதுமனையும் அவன் கிளைஞர்களையும் எச்சரிக்காமல் அழித்துவிடுவது தருமமன்று. ஆதலின் தேவர்களைச் சிறையினின்றும் விடுவித்து வாழ்வுறச் செய்யும்படி சொல்ல ஒரு தூதனை அவனிடம் அனுப்புவது தகுதியாகும். இங்கிருக்கும் வீரர்களில் யாரைச் சூரபதுமனிடம் தூதுவனாக அனுப்பலாமென்று சொல்லுங்கள்" என்று கூறியருளினர். அதுகேட்ட பிரமதேவர் அங்குசென்று மீளவல்லவர் வீரவாகுதேவரேயன்றி வேறெவருமில்லையென்று கூறியருளினர். உடனே ஷண்முகப் பெருமான் வீரவாகுதேவரை யழைத்துச் "சூரபதுமனிடஞ்சென்று தேவர்களைச் சிறையினின்றும் விடுவித்து அழியாமலுய்ந்துபோகும்படி சொல்லி அவனது கருத்தை யறிந்துகொண்டு விரைவாக மீண்டுவரக்கடவாய்!" என்று பணித்தருள, வீரவாகுதேவர் தம்வாட்படையும் ஷண்முகப் பெருமானது திருவருளுமே துணையாகப்புறப்பட்டு காவலாயுள்ள அசுரர்களை யழித்துக்கொண்டு வீரமகேந்திரபுரியை யடைந்து ஐயந்தனுக்குத் தைரியஞ்சொல்லிப் பிறகு சூரபதுமனது கொலுமண்டபத்துக்குள் திடீரென்று தோன்றி ஷண்முகப்பெருமானருளினால் சூரபதுமனுடைய சிங்காதனத்துக் கெதிரே தோன்றிய திவ்விய சிங்காதனத்தி லமர்ந்து, எம்பெருமான் கூறியதைச் சொல்லி, வீணே அழிந்துபோகவேண்டாமென்று புத்திமதிகூறி, தம்மைப் பிடித்துக் கட்டும்படி சூரபதுமனால் ஏவப்பட்ட ஆயிரம் அவுணவீரர்களது சிகைகளை ஒரு திருக்கரத்தினால் ஒருங்கேபிடித்து அவர்களைத் தரையி லடித்துக் கொன்று சூரபதுமனுக்கு எதிரில் அவர்கள் சடலங்களை எறிந்துவிட்டுச் சபையினின்றும் நீங்கி வீரமகேந்திரபுரியை யழித்து தம்மைத் தொடர்ந்துவந்த அசுரசேனைகளையும் சூரபதுமனுடைய இளைய குமாரனாகிய வச்சிரவாகுவையும் அழித்துத் திருச்செந்திற்பதிக்கு மீண்டு, நிகழ்ந்தவைகளை எம்பெருமானிடம் விண்ணப்பஞ்செய்தார்.

வீரவாகு தேவர் வீரமகேந்திரபுரியை விட்டு அகன்றபின், சூரபதுமன் வேறொரு அண்டத்துப் பிரமதேவரை யழைப்பித்துத் தன் நகரைப் பண்டுபோ லாக்கிக்கொண்டு, தனது அமைச்சர்களுடன் சிவகுமாரனோடு போர் செய்ய வேண்டுவதைப் பற்றி ஆலோசனை செய்யலானான். அப்போது அமைச்சர்கள் ஒருவனொழிய மற்றெல்லோரும் சூரபதுமனது பெருமையையே யெடுத்துப்பேசி, அசுர சேனாதிபதிகளையோ அல்லது அவனது குமாரர்களில் ஒருவரையோ அனுப்பினால் போதுமென்றும், சிறு பாலகனுடன் இராஜாதிராஜனாகிய சூரபதுமன் போர்செய்யச் செல்வது தகாதென்றும் கூறினார்கள். மகிடன் என்னும் மந்திரிமட்டும் விஷ்ணுவை வென்ற தாரகனையும் மாயையில் நிகரற்ற கிரௌஞ்சத்தையும் ஒருங்கே கணப்பொழுதில் அழித்த வீரனைச் சிறு பாலகன் என்று அலக்ஷியமாகக் கூறுதல் அறிவுடையோர்க்கழகல்ல வென்றும் காலதாமதஞ் செய்யாமல் சூரபதுமனே உடனே நேரிற் சென்று போர்செய்யவேண்டு மென்றும் கூறினான். சூரபதுமனது எஞ்சிய தம்பியான சிங்கமுகாசுரன் தன் அண்ணனை நோக்கி தேவர்களைத் துயருறச் செய்தால் அவன் [illegible]பங்களனைத்தும் வேரோடழியுமென்றும், [illegible] கடவுள் தங்களை யழிக்கவந்த சிவசக்தியே யாகும் என்றும், தேவர்களைச் சிறையி

னின்றும் விடுவித்து அப்பெருமான் திருவருளைப்பெறுதலே உய்யுநெறியென்றும் கூறி, அதனால் சூரபதுமன் மகா கோபங்கொண்டு தன்னை இகழ்ந்து வெறுத்ததைக் கண்டு, தான் சொன்னது தவறென்று சொல்லி, சிவகுமாரனைத் தான் எதிர்த்து அழித்து வருவதாகவும் போலிவீரம் பேசினான்.

ஷண்முகப்பெருமான் வீரவாகுதேவர் உரைத்ததைக் கேட்டுப் போருக்கு ஆயத்தமாகி தம் சேனைகளுடன் கடலின் மீது நடந்து சென்று வீரமகேந்திரபுரிக்குச் சமீபத்திற் சென்று, அங்கு ஓர் பாசறை சமைத்துக் கொண்டு, அவ்விடத்துக்கு ஏமகூடமென்று பெயரிட்டருளினார். அவ்வாறு அப்பெருமான் அங்குவந்தடைந்ததைஒற்றுவர்களாலறிந்தசூரபதுமன் பானுகோபனை வரவழைத்து, "சிவன் நம்மைப் பொரும்படி தம் புதல்வனை யனுப்பியிருக்கிறார். ஆதலின் உன்னை யனுப்புவது தான் தகுதி. நீ சென்று அவனைப் பொருதழித்து வெற்றிவீரனாய் மீள்வாயாக!" என்று கூற, பானுகோபன் விடைபெற்றுச் சேனைகளுடன் புறப்பட்டு குமாரக் கடவுளுடன் போருக்குச் சென்றான். சுப்ரமண்யக் கடவுள் பானுகோபனைப் பொருது வென்று வரும்படி வீரவாகுதேவரை ஆயிரம்வெள்ளம் பூதப்படைகளுடன் அனுப்பியருளினார். வீரவாகுதேவரால் தோல்வியடைந்த பானுகோபன் கடைசியில் மோகப்படையை விட வீரவாகுதேவரும் அவர் சேனைகளும் மயக்கமுற்றனர். அதுகண்ட சுப்ரமண்யக் கடவுள் அமோகப்படையை விடுத்து அம்மயக்கத்தை நீக்கியருள, வீரவாகுதேவர் பானுகோபனை யழிப்பதற்காகச் சிவப்படைக்கலத்தை யெடுத்தார். அதுகண்ட பானுகோபன் தன்னிடம் அப்படைக்கல மில்லாததனால், தன்னால் அவரை யெதிர்த்துநிற்க முடியாதென்று தேர்ந்து, மறுநாள் வந்து அவரை வெல்லலாமென்று நிச்சயித்துப் போர்க்களத்தை விட்டுநீங்கினான்.

தன் புத்திரன் சென்று பகைவரை வெல்ல முடியாமல் நகரத்துக்கு மீண்டதை ஒற்றுவர்களாலறிந்த சூரபதுமன் வெகு கோபங்கொண்டு, மறுநாள் தானே போருக்குச்செல்ல வேண்டுமென்று நிச்சயித்து, மறுநாள் பொழுது விடியுமுன் உலகத்தில் பல பக்கங்களில் வைத்திருந்த அவுணச்சேனைகளைத் திரட்டிக் கொண்டுவரச் சொல்லி அச்சேனைகளுடன் போருக்குச் சென்றான். வீரவாகு தேவரால் சிங்கமுகனது மகன் அதிசூரனும் தாரகன் மகன் அசுரேந்திரனும் இறந்தபின், சூரபதுமன் பூதப்படைகளை யழிக்க ஆரம்பித்து, சுப்ரமண்யக் கடவுளால் எதிர்க்கப்பட்டுத் தோல்வியடைந்தான். அப்போதும் சுப்ரமண்யக் கடவுள் அவனிடம் கருணை கூர்ந்து தேவர்களைச் சிறையினின்றும் விடுவித்துப் பிழைத்துப் போகும்படி கூறியருள, சூரபதுமன் தன்னை எவராலும் அழிக்க முடியாதென்று மருண்டு அகந்தையுடன் அப்பெருமான் வார்த்தைக் கிணங்காமல், மறுநாள் இன்னும் அநேக படைக்கலங்களுடன் வந்து அக்கடவுளை யழித்து விடலாமென்று நிச்சயித்து, மாயத்தினால் தன்னுருவத்தை மறைத்துக்கொண்டுபோர்க்களத்தைவிட்டகன்றான். உயிர்க்குயிராய்எங்கும் வியாபித்திருக்கும் சுப்ரமண்யக்கடவுள் அவன் செய்கையைக் கண்டும் அவனுக்கு 'அதன் பிறகாவது மெய்யுணர்ச்சி வந்து அவன் உய்யலாகாதா' வென்ற ஆசையினால் வேற்படையைச் செலுத்தி அவனை யழிக்காது வாளாவிருந்தார்.

போர்க்களத்தைவிட் டகன்ற சூரபதுமனை அன்றிரவு அவன் மகன் பானுகோபன் வந்து கண்டு முதல்நாட் போரில் தனக்கு நேர்ந்ததையுரைத்து,மூன்றாநாட்போருக்கு தான் சென்று சிவகுமாரனையும் அவன் சேனைகளையும் அழித்து வருவதாகச் சொன்னான். அப்போது சூரபதுமன் தன் மகனை நோக்கி சிவ குமாரனை வெல்லத் தன்னால்தான் முடியுமென்றும், அவன் வீரவாகுதேவரை வென்று அழித்தாற் போது மென்றும் கூறினான். பானுகோபன் அவ்விடம் விட்டுத் தன் அரண்மனையை யடைந்ததும், பூதப்படைகள் அந் நகரத்தின் வடக்குப் பக்கத்தையழித்ததாகக் கேள்வியுற்று அசுரத்தச்சனை யழைத்து அதைப் பண்டு போலாக்கச் சொல்லி, அசுரச்சேனைகளை அங்கு காவலாயிருக்க அனுப்பினான்.

மூன்றாம்நாள் சூரியதோயமானவுடன் பானுகோபன் மாயையை நினைத்து, அவள் தோன்றியவுடன் அன்று தான் வீரவாகு தேவரை வெல்லுவதற்குரிய ஒரு மாயப்படைக்கலத்தை அவளிடமிருந்து பெற்றுக்கொண்டு போர்க்களத்துக்குச் சென்று வீரவாகு தேவரைப் போருக்கழைத்தான். வீரவாகுதேவர் போருக்

முடிச்சுப் போனதுமல்லாமல், இனித்தவாய்ப்பட்டமும் கூடக் கிடைத்தது.

குச் செல்லுமுன் ஷண்முகப்பெருமான் திருவடிகளை வணங்கி நிற்க, அப் பெருமான் பானுகோபன் மாயை செய்தால் வேற்படை வந்து அம்மாயையை யகற்றுமெனக் கூறியருளினார். வீரவாகுதேவரால் வெல்லப்பட்ட பானுகோபன்மாயையினால் தன்னை மறைத்துக்கொண்டு, சூரியாஸ்தமனமாகிவிட்டதாகத் தோன்றும்படி செய்தான். வீரவாகுதேவர் முதலியோர் பானுகோபன் பயந்து ஓடினான் என்று நிச்சயித்து, அஸ்தமனமாகிவிட்டபடியால் தமது பாசறைக்கு மீண்டு கந்த பெருமானைத் தரிசிக்கவேண்டு மென்ற எண்ணங் கொண்டார்கள். அன்றைய தினமும் தான் தோற்றோடியதாகப் பிறர் தன்னை யிகழாமலிருக்க வேண்டுமேயென்று நாணமுற்று, மாயை தனக்கு அன்று அளித்த மாயப்படைக்கலத்தை விட அது வீரவாகுதேவர் முதலாயினோர் அறிவை யழித்து அவரைக் கொல்லும் ஆற்றலில்லாமல் அவர்களைக் கட்டி ஆகாயமார்க்கமாக எடுத்துக் கொண்டு போய், ஏழாவது சமுத்திரத்திற் போட்டு விட்டது. உடனே பானுகோபன் சூரபதுமனிடம் சென்று, தான் வீரவாகுதேவரை யழித்ததைக் தெரிவித்தான். அவ்வாறு நினைத்து அவர்கள் களித்திருக்கையில், ஷண்முகப் பெருமானது வேலாயுதம் சென்று மாயையை நீக்கி, வீரர்களையும் சேனைகளையும் திரும்பி வருமாறு கூறி மீண்டது. மீண்ட வீரவாகுதேவர் முதலியோர், பானுகோபனைக் கொல்லாமல் சுப்ரமண்யக் கடவுளிடம் செல்வதில்லை யென்று சபதஞ் செய்துகொண்டு வீரமகேந்திரபுரத்தினுள் நுழைந்து வாயுவையும் அக்கினியையும் அந்நகரை யழிக்கும்படி ஏவி அவுணப்படைகளை அழிக்க ஆரம்பித்தார்கள். அதையறிந்த சூரபதுமன் தன்தேரைக்கொண்டுவரும்படி கட்டளையிட, அவனுடைய குமாரனாகிய இரணியன் அவனை வணங்கி, "சிவகுமாரரோடு போர்புரிதல் தகுதியன்று. அவரை வணங்குதலே உய்யு நெறி" என்று கூற, அவன் வெகுண்டு அவனை யிகழ்ந்துபேசினான். அப்போது இரணியன் தன் பிழையைப்பொறுக்கும்படி வேண்டி, தானே சிவ குமாரனது தூதுவனை வீரவாகுவை யழித்து வருவதாகக் கூறிப் புறப்பட்டுச் சென்று, வெகு திறத்துடன் போர் புரிந்தும் வீரவாகு தேவரால் வெல்லபட்டு,தன் தகப்பனுக்குக் கருமஞ் செய்யத் தான் ஒருவனாவது உயிருடனிருக்க வேண்டுமென் றெண்ணி, மாயையினால் தன் உருவத்தை மறைத்துக் கொண்டு கடலுக்குள் போய் மச்ச வடிவத்துடன் ஒளித்துக் கொண்டான். பிறகு சூரபதுமனுடைய மற்றொரு குமாரனாகிய அக்கினிமுகாசுரனும், மற்றுமுள்ள மூவாயிரங்குமாரர்களும்,மந்திரிகளில் ஒருவனாகிய தருமகோபனும் வீரவாகு தேவரையும் அவர் சேனைகளையும் எதிர்த்துப் பொருது மாய்ந்தனர். அவைகளை யறிந்த பானுகோபன் தன் தந்தையினிடம் சென்று சிவகுமாரனை வெல்வது சாத்தியமன்றென்றும், அவர் கையினால் வீணே மாண்டு போகாமல் தேவர்களைச் சிறையினின்றும் விடுவித்து உய்ந்துபோவது நலமென்றும் கூறி, அவன் அதற்கிணங்காது தன்னை நிந்திக்க ஆரம்பித்ததும் தன்னை மன்னிக்கும்படி வேண்டி விடை பெற்றுப் போருக்குப் புறப்பட்டுச் சென்று மிகுந்த தீரத்துடன் வெகுநேரம் போர்செய்து கடைசியில் வீரவாகுதேவருடைய வாளுக்கு இரையாயினான். அவ்வாறு தங்கள் சபதம் நிறைவேறியபின் வீரவாகு தேவர் தம் சேனைகளுடன் ஏமகூடத்திலுள்ள தங்கள் பாசறைக்குச் சென்று ஷண்முகப்பெருமான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்.

பானுகோபன் இறந்ததையறிந்த சூரபதுமன் தன் தம்பி சிங்கமுகாசுரனை அழைத்து வரும்படி தூதர்களை யனுப்பினான். சிங்கமுகாசுரன் உடனே சேனைகளுடன் வந்து தன் தமயன் பாதங்களை வணங்கி, ஆதியந்தமில்லாத பரம்பொருளாகிய சுப்ரமண்யக்கடவுளைச் சிறு பாலகனென்றெண்ணி மயங்கி அவருடன்போர் செய்ய நினைத்த அவன் அறியாமையை யிகழ்ந்துரைத்து, அவன் அழிவது நிச்சயமென்றும் தான் போருக்குச் சென்று பகைவர்களைக் கொன்று குமாரசுவாமியையும் வென்றாலன்றி போர்க்களத்தினின்றும் மீளுவதில்லையென்றும் உரைத்து, கணப்பொழுதும் அங்கு நிற்காமல் பகைவர்களிருக்குமிடத்துக்குச் சென்று வெகுநேரம் கொடிய போர்செய்து கடைசியில் வீரவாகு தேவரையும் அவர் சேனைகளையும் மாயாபாசம் என்னும் படைக்கலத்தினாற் கட்டி மயக்கி உதயகிரியிற் சேர்ப்பித்தான். அதை யறிந்த சுப்ரமண்யக்கடவுள் வேலேந்தித் தேரின்மீதேறிச்சென்று சிங்கமுகனுடைய

53. முடிமுடியாய் கட்டால், கோட்டை கோட்டையாய் விளையுமா ?

ஆயிரந்தலைகளையும் வெட்டி, அவைகள் திரும்பவும் முளைக்க முளைக்க ஆயிரத்தெட்டுத்தரம் அறுத்து, அவனை யழித்தருளி, ஓர் அம்பைச் செலுத்தித் தன் துணைவர்களையும் சேனைகளையும் கட்டிய மாயாபாசத்தையறுத்து அவர்களை மீட்டுக்கொண் டருளினர்.

சிங்கமுகாசுரன் இறந்தபின், சூரபதுமன் தன் சேனைகளையெல்லாம் திரட்டிக் கொண்டு வந்து கந்தசுவாமியுடன் மாயப்போர் புரிந்தான். அவ்வாறு பொருங்காலையில், அவன் குமாரக் கடவுளுடைய தேரின்மீது பறந்துகொண்டிருந்த கொடியை யறுத்து வெற்றிச் சங்கத்தை முழக்கினன். அப்போது தேவர்கள் யாவருடைய கருத்துக்கு மியைய அக்கினிதேவன் கோழியின் உருவத்துடன் அப்பெருமான் தேரின் உச்சியில் கொடியாக விருந்து ஆரவாரித்தான். ஷண்முகப்பெருமானது பாணங்களினல் அசுரசேனை முழுவதும் அழிந்து, சூரபதுமன் தனியனாய் நின்றான். அப்போது அவன் மாயையை நினைத்து, அவள் வந்துசொன்ன தந்திரத்தைக் கேட்டு மகிழ்ந்து, தன் இந்திரஜாலமென்னும் தேரை யனுப்பி அமுதசீத மந்தர கூடம் (சுதாமந்தர பர்வதம்) என்னும் மலையைக் கொண்டுவரச் செய்ய, அதிலிருந்துவந்த காற்றுப் படுதலும், போர்க்களத்தில் மாய்ந்து கிடந்த அவுணர்களனைவரும் உயிர்பெற்றெழுந்தனர். சிங்கமுகாசுரன், பானுகோபன், அக்கினிமுகாசுரன் முதலியோர் வந்து சூரபதுமனை வணங்கி, பகைவர்களை யழித்து மீள்வதாகச் சொல்லிப் புறப்பட்டு பூதசேனையை வெகு வல்லமையுடன் தாக்கினர். அப்போது சுப்ரமண்யக் கடவுள் பாசுபதப் படைக்கலத்தை விடுத்து அவுணசேனை முழுவதையும் ஏக காலத்தில் அழித்து சூரபதுமனைத் திரும்பவும் தனியனாக்கினர். உடனே சூரபதுமன் தன் இந்திரஜாலத் தேரை ஏவி, சுப்ரமண்யக் கடவுளுடைய சேனைகளனைத்தையும் அண்டத்தினுச்சியிற் சேர்ப்பித்தான். சுப்ரமண்யக் கடவுள் ஒரு பாணத்தினல் அவர்களனைவரையும் மீட்டு, இந்திரஜாலத் தேரைச் சூரபதுமனிடம் செல்லக்கூடாதென்று கட்டளையிட்டருளினர். உடனே சூரபதுமன் சிங்கவாகனத்திலேறிப் போர்செய்ய, குமாரக்கடவுள் அச்சிங்க வாகனத்தை யழித்தருளினர். உடனே அவன் சக்கரவாகப் பக்ஷியின் உருவத்தையெடுத்துக் கொண்டு பூதர்களை யழித்துக் கொண்டு உலகமெல்லாந் திரிய, ஷண்முகப் பெருமான் பக்ஷிவடிவமெடுத்துக்கொண்டு அவனுடன் தேரின்மீதேறிப் பொருவது தருமமன்று என நினைத்து இந்திரனை மயிலாக்கிக் கொண்டு அந்த வாகனத்தின்மீதேறி அவனைத் துரத்திப் பொருது, அவன் பக்ஷியுருவத்தை இருகூறாக வெட்டித் துணித்தார். பிறகு சூரபதுமன் பல வுருவங்களை யெடுத்துக்கொண்டு மாயப்போர் செய்தான். சுப்ரமண்யக் கடவுள் அவன் மாயத்தை யழித்து, அவன் செய்த தவத்திற்காக அவனுக்குத் தம் விசுவரூப தரிசனம் தந்து சிறிதுநேரம் மெய்யுணர்வைக் கொடுத்துப் பிறகு அதை மறைத்தருள, அவன் அகங்கார வடிவத்துடன் பெரும்போர் செய்துபிறகுசமுத்திரத்தின் மத்தியிற்சென்று அண்டமுகட்டை யிடிக்கும் மாமரவுருவத்துடன் நிற்க, ஷண்முகப் பெருமான் தமது வேலாயுதத்தை யேவி அம்மரத்தைப் பிளந்து சங்கரித்தருளினர். உடனே சூரபதுமன் தன் சுயவுருவத்துடன் உடைவாளையுருவிக்கொண்டு போருக்குவர, அப்பெருமான் வேற்படையினல் அவனுடைய தேகத்தை இருகூறாக்கினர். அவ் விருகூறுகளும் சேவலும் மயிலுமாகி அப்பெருமானை எதிர்க்கவர, அப்பெருமான் அவைகளைக்கடைக்கண்ணுற் பார்த்தருளினர். உடனே சூரபதுமன் பகைமைநீங்கி ஞானம்பொருந்திய மனத்தினனாய் நின்றான். அப்போது ஷண்முகப்பெருமான் கொடியாயிருந்த அக்கினிதேவனையும் மயில்வாகனமாயிருந்த இந்திரனையும் அவர்களுடைய பழைய வடிவங்களை யெடுத்துக் கொள்ளும்படி சொல்லி, சூரபதுமனது இரு கூறுகளாலான மயிலை வாகனமாகவும் சேவலைக் கொடியாகவும் கொண்டருளினர். தேவர்கள் அதுகண்டு ஆரவாரித்துப் பேரானந்த மடைந்து சுப்ரமண்யக் கடவுள்மீது புஷ்பமாரி சொரிந்தனர்.

பிறகு ஷண்முகப் பெருமான், முன்பு தாம் திருமாலின் புத்திரிகளுக்குத் தந்தருளிய வரங்களைப் பூர்த்திசெய்யத் திருவுளங்கொண்டு, இந்திரன் மகளாய்ப்பிறந்து வெள்ளையானையினல் வளர்க்கப்பட்டுத் தெய்வயானை யென்னுந் திருநாமம் பூண்டுள்ள அமுத வல்லியையும், தொண்டை நாட்டில் வள்ளிமலையில் சிவ

(இதன் தொடர்ச்சி 419-ம் பக்கம் பார்க்க.)

பார்க்கவன்

அல்லது

பரம ரஹஸ்யம்

(392-ம் பக்கத் தொடர்ச்சி.)

"என்ன? என்ன?" என பார்க்கவன் வினவினன்.

"பார்க்கவ! துல்யம்!"

"ஆ! துல்யத்திற்கென்ன?"

"ஐயோ! நானெப்படிச் சொல்வேன்? யாரோ திருடிக்கொண்டு போய்விட்டார்களே!"

இடிவிழுந்தவன்போல் நடுங்கி, கதவின்மீது சாய்ந்துகொண்டு, "நீ அதைத் தனியே வைத்திருந்தாயா?"

"ஆளை அழைத்துவர ஒரு நிமிஷம் வெளிச் சென்றேன்." "கதவைப்பூட்டிச் சாவியை எடுத்துப்போக மறந்துவிடலாமா?"

"அதுதானே எனக்குப் புலப்படவில்லை. சாவி என்னிடமே யிருந்தது. அதை வெகு பத்திரமாய் வைத்திருந்தேன்."

"அப்படியானல் செடி எங்கே போயிருக்கக் கூடும்?"

"அதுதானே எனக்குந் தெரியவில்லை. கடிதத்தை நம் ஆளிடம் கொடுத்துவிட்டு உடனே ஓடிவந்தேன். கதவு நான் பூட்டினபடியே தான் இருந்தது. உள்ளேயும் எல்லாம் வைத்தது வைத்தபடியேதா னிருந்தன. புஷ்பத்தொட்டியை மாத்திரம் காணேமே—!"

கல்பகத்திற்குப் பேசமுடியவில்லை. தேம்பித் தேம்பி அழலானள். கண்ணீர் தாரைதாரையாய்ச் சொரிந்தது.

"கல்பகம்! அழாதே; நம் துல்யமலர்ச் செடி, போனது போனதுதான். திருடன் இன்னனென்று உனக்குத் தெரியுமா? அந்த யோகநந்தனன்தான் அப்படிச் செய்திருப்பான். நாம் அவனை ஓடிப்பிடிக்கவேண்டும்!"

"பார்க்கவ, நாம் அவனை எப்படிப் பிடிக்கிறது? எனக்கு ஒன்றும் தெரியவில்லையே!"

"கதவை மாத்திரம் திறந்துவிடு. நான் அவனைப்பிடித்து அவன் பண்ணின குற்றத்திற்குத் தகுந்த வண்ணம் சிக்ஷிக்கிறேனு இல்லையா பார்!"

"ஹா, கஷ்டம்! நான் எவ்விதம் கதவைத் திறப்பேன்? சாவி என்னிடம் இல்லையே. இருந்தால் நீர் முன்னமேயே வெளியேறியிருக்கமாட்டீரா?"

"உன் தகப்பனரிடத்தில் இருக்கின்றனவோ யில்லையோ? ஆம், அவனும் அந்த படுபாபிக்கு உதவிசெய்திருப்பான். அவனை உதைக்கிறேன்—பார்—"

"ஹா—அவ்வளவு சப்தம்போடவேண்டா... ..." என்று முடிப்பதற்குள் கிராதன் "ஹூம்!" என்னும் சத்தத்துடன் அவ்விடம் வந்துசேர்ந்தான்.

"யார்? உன் தகப்பனு? அடே, படுபாவி!" இதற்குள் அவ்விடம் வந்துசேர்ந்த கிராதன் கல்பகத்தை பளீரென்று ஓரறை அறைந்தான். "உம்! சாவியா? சாவியையா எடுத்துக்கொள்வாய்?" என்று அவளை நோக்கிக் கூறினன். பார்க்கவனை நோக்கி, "அடே, தோட்டக்காரப் பயலே! நீயா என்னை உதைப்பாய்? என் மகளும் அதற்குத் துணையாகவா வந்திருக்கிருள்?" என்று மகா கோபத்துடன் சொன்னன்.

கல்பகத்துக்கு உண்டான பயத்திற்கும் திகிலுக்கும் அளவில்லை. புலியைக்கண்டு நடுங்கும் மான்போல, படிக்கட்டுவழியாய் நடுங்கி ஓடமெடுத்தாள். கிராதனும் ஏதோமுணுமுணுத்துக் கொண்டு அவள் பின்னலேயே போய்விட்டான்.

இச்சம்பவங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கும் பொழுது யோகநந்தனனும் கருந்துல்யத்தை மறைத்து எடுத்துக்கொண்டு கோட்டைவெளி

(418-ம் பக்கத் தொடர்ச்சி.)

முனிவனுக்குப் புத்திரியாகப்பிறந்து வேடராஜனுகிய நம்பிராஜனல் வளர்க்கப்பட்டு வள்ளியென்னுந் திருநாமம் பெற்றுள்ள சுந்தரவல்லியையும் திருமணம் புரிந்துகொண்டு வள்ளி தெய்வானை மேவல் என்னும் இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி என்னும் மூன்று சக்திகளோடு, ஆன்ம கோடிகளுக்குத் திருவருள் புரியுமாறு ஞானதேசிகனய் கந்தவெற்பில் எழுந்தருளினர்.

ஆறிருதடந்தோள் வாழ்க!
அறுமுகம் வாழ்க!
வெற்பைக் கூறுசெய் தனிவேல் வாழ்க!
குக்குடம் வாழ்க!
செவ்வேள் ஏறிய மஞ்ஞை வாழ்க!
யானைதன் னணங்கு வாழ்க!
மாறிலா வள்ளி வாழ்க!
வாழ்க சீரடி யாரெல்லாம்!!

யே வந்து ஏற்கெனவே தான் ஏற்பாடுசெய்து வைத்திருந்த குதிரைவண்டியிலேறி ஹரிளநகரைநோக்கிச் சென்றான். அந்நகரையடைந்ததும் யாராவது எவ்விதச்சந்தேகமாவது கொள்வார்களோ என்று பயந்தவனாய் செடியை வேறொரு தொட்டியில் பிடுங்கி நட்டுவிட்டு பழையதொட்டியைப் பதினாயிரம் சுக்கலாய் உடைத்து ஓர் பாழுங்கிணற்றில் எறிந்துவிட்டான். இவ்வஞ்சகம் செய்தவுடன் புஷ்பச்சங்கத் தலைவருக்கு, தான் ஒரு கருந்துல்யச் செடியை மலருடன் கொண்டுவந்திருப்பதாகத் தெரிவித்து ஒரு சத்திரத்து விடுதியில் தங்கியிருந்தான்.

பத்தாம் அத்தியாயம்
விசாரணை

பார்க்கவனை விட்டு நீங்கினபிறகு கல்பகம் புஷ்பச்செடியில்லாமல் மறுபடியும் வீடு திரும்புவதில்லையெனத் தீர்மானித்தாள். அவள் தன்னறைக்குச் சென்று பிரயாணத்திற்கு வேண்டியவைகளையெல்லாம் ஒரு மூட்டையாகக் கட்டி, மூன்றும் முளையைத் தனது மடியில் பத்திரமாக வைத்துக்கொண்டு கதவை இரட்டைப் பூட்டால் பூட்டிவிட்டாள். பூட்டுமுன் தன்னிடமிருந்த 30 ரூபாயையும் எடுத்துவைத்துக் கொண்டாள். இரட்டைப்பூட்டால் தன்னறையைப் பூட்டி, வீட்டில் யாரும் தன்னைச் சில காலம் தேடமாட்டார்களென வெண்ணினாள். சிறைச்சாலையை விட்டு நீங்கினபிறகு, கல்பகம் குதிரைவண்டிக்காரனிடம் வண்டிக்குச் சென்றாள். ஆனால் அவன் குதிரைவண்டியில் யோகநந்தனை அனுப்பினதால், குதிரை வண்டி அவனிடமில்லை. அடுத்த வீட்டிலிருந்த வண்டிக்காரன் தான் மாட்டுவண்டியை யோட்டி வருவதாக ஒப்புக்கொள்ள, அவ்வண்டியிலேறி கல்பகம் ஹரிளநகரம் செல்வாளாயினாள். வண்டியை வேகமாக ஓட்ட, கல்பகம் தான் காலையிலனுப்பிய ஆளை, அவன் வழியில் கண்டு அவனைத் திருப்பி அனுப்பிவிட்டாள்.

*   *   *   *

கருந்துல்யத்தை வளர்க்க ஆரம்பித்தது முதல, அவன் கல்பகம் கிராதனை அநேகமாய்க் காண்பதில்லை. ஆனால் இன்றையதினம் அவளுடன் புசிப்பதற்காகப் பன்னிரண்டுமணிவரையில காத்தருந்தும் கல்பகத்தைக் காணோம். சற்றுப்பொறுத்தான். கலபகம்வரவில்லை. சிறிது நேரமாயிற்று. சிறைச்சாலைச் சேவகனொருவனைக் கூப்பிட்டு தன் மகளைத் தேடிவரும்படி கட்டளையிட, அவனும் பலவிடங்களில் தேடி "கல்பகத்தைக் காணோம்" எனக் கூறினான். கிராதன் மனம் திடுக்கிட்டது. தானே புறப்பட்டுத் தன்புத்திரியினறைக்குச்செல்ல, அங்கு கதவு பூட்டியிருந்தது. கூப்பிடக் கூப்பிட பதிலைக்காணோம். உடனே கருமானை யழைப்பித்துப் பூட்டை யுடைத்தெறிந்து உள்ளே நுழைய, கல்பகமில்லை. சிறைச்சாலையிலுள்ள ஒவ்வோரறையையுந் தேடிய பின்னர் யோகநந்தனன் எங்குளன் எனத் தேடியபோது, அவனுங்காணோமெனத் தெரியவந்தது. சரி, உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைக்கும் பாவியாய், தன் சோற்றையுந்தின்று, மகளையுங்கூடத் தனக்குத் தெரியாமல் அழைத்துச் சென்றான் அர்ச்சன ஸன்யாசியாம் யோகநந்தனனென்ற முடிவுக்கு வந்தான்.

*   *   *   *

யோகநந்தனன் ஹரிளநகரம் சேர்ந்ததற்கு நான்குமணிக்கப்பால் கல்பகமும் அங்குபோய்ச் சேர்ந்தாள். புஷ்பச்சங்கத்தலைவர் ஹரிஸேனரின் இருப்பிடம் எதென்று விசாரித்து அங்கு சென்றாள். வெளியிலுள்ள சேவகன் அவளை உள்ளே விடமாட்டேனென மறுத்துவிட்டான். பிறகு கடைசியாக அவள், "ஐயா! கருந்துல்யத்தைப்பற்றி அவரைப்பார்க்க வந்திருப்பதாகத் தயவுசெய்து சொல்லும்" என்றாள்.

"கருந்துல்யம்" என்னும் பதம் கைகண்ட மருந்தாயிற்று. ஏனெனில், சேவகன் உடனே உட்சென்று, சிறிது நேரத்துக்கெல்லாம் "ஹரிஸேனர் தங்களை வரச்சொன்னார் அம்மணீ!" எனக் கூறிஅவளை யழைத்துச் சென்றான்.

சற்று உயர்ந்து தடித்த தேகமுடையவராய் 50 அல்லது 55 வயதுள்ள கருணைவிளங்கும் பெரியவரொருவர் நாற்காலியின்மீ துட்கார்ந்திருந்தார். அவர் அன்புடன் கல்பகத்தை யழைத்து,

"குழந்தாய்! நீ கருந்துல்யத்தைப் பற்றி என்னிடம் பேசவேண்டு மென்றாயாமே?' என, கல்பகம்,

"ஆம் ஐயா! அதைப்பற்றித்தான் நான் உம்மிடம் வந்தேன். அதை என்னிட மிருந்து யாரோ திருடிக் கொண்டுபோய்விட்டார்கள்!"

முட்டற்ற பெண்ணுக்கு இரட்டைப் பரியமா ?

"கருந்துல்யத்தைத் திருடினவர்கள்? யார் தெரியுமா?"

"இன்னாரென்று எனக்குத் தெரியாது. ஆனால் ஒருவர் மீது எனக்குச் சந்தேகமாயிருக்கிறது."

"அப்படித் திருடியிருந்தால் வெகு நேரமாயிராது. கருந்துல்யமலரை இரண்டு மணிக்கு முன்புதான் பார்த்தேன்."

"நீங்கள்—இப்பொழுது—பார்த்தீர்களா?"

"ஏன்? உன் எஜமானனிடந்தான்?"

"என் எஜமானனா?"

"குழந்தாய்! நீ என்ன சொல்கிறாய் என்று உனக்கே தெரியவில்லை போலும்!" கருந்துல்யத்தை இரண்டுமணிக்கு முன்பு ஸ்ரீமான் கருணாகரர் எனக்குக் கொண்டுவந்து காட்டினார். உன்னிடம் கருந்துல்யம் திருடப்பட்டிராது—அவருடையதை நீ திருட, அதை அவர் மறுபடியு மடைந்திருப்பார்."

"இல்லை ஐயா! நீர் யாரைப்பற்றிச் சொல்கிறீரென எனக்குத் தெரியவில்லை. பேரும் புதிதாயிருக்கிறது."

"நான் சொல்வது உண்மையே" என்றார் ஹரிஸேனர்.

"ஆனால்—என்னுடையதைத்—தவிர வேறு—ஏதாவது—கருந்துல்யச் செடியுண்டா?" என்று கல்பகம் நடுக்கத்துடன் கூறினாள்.

"ஆம்."

"அது இங்கேயிருக்கிறதா?"

"இல்லை——சங்கத்துப் பரிசு அளிக்கு முன், செடியையும் மலரையும் பரிசோதிக்கும் பொருட்டு அச்செடி இங்கு கொண்டுவரப்படும்."

"ஐயா! கருணாகரன் என்று நீர் கூறும் இம்மனிதன் மெலிந்த சரீரமும், உள்ளாழ்ந்த கண்களும், கொக்கினதைப் போன்ற கால்களும், கூனுமுடையவரா?"

"நேரில் கண்டதுபோல் சொல்லுகிறாயே?"

"அந்தத் துல்யச்செடி வெண் பீங்கானால் செய்யப்பட்டு, ஓரங்களில் மஞ்சள்நிறமான புஷ்பங்களால் சித்திரிக்கப்பட்ட தொட்டியில் இருந்ததல்லவா?"

"அதை நான் அவ்வளவு நன்றாய்க் கவனிக்கவில்லை. புஷ்பமே அழகாயிருந்ததால் அதையே நோக்கினேன்."

"அது என் துல்யம். என்னிடமிருந்து திருடிக் கொண்டு போகப்பட்ட துல்யததை உம்முடைய கருணையினால் அடையலா மென்றிருக்கிறேன். அச்செடி எனதே."

"உன்னுடையதா?"

"ஆம், நானே, விதை விதைத்து, முளைத்த பின்பு அதை வளர்த்தேன்."

"சரி, அந்த விஷயத்தைப்பற்றிச் சத்திரத்தில் தங்கியிருக்கும் கருணாகரரிடம் பேசிக்கொள். பரிசளிக்கும் பொருட்டு, சங்கத்தாருக்குக் கருந்துல்யம் வந்திருக்கிற தென்று நான் தெரிவிக்கிறேன்" என்று கூறி, "குழந்தாய்! போய்வா?" என்று சொல்லி ஹரிஸேனர் அவளை யனுப்பினார்.

புஷ்பத்தை மறுபடியும் காண்போமென்னும் எண்ணத்தால் சந்தோஷமும், பரிசை இழந்து விட்டோமே என்று விசனமும் அடைந்தவளாய் கல்பகம் அவ்வீட்டைவிட்டுச் சென்றாள். கொஞ்சதூரம் சென்றதும் அவளுக்கு ஓர் எண்ணமுண்டாயிற்று. மறுபடியும் ஹரிஸேனர் அகம் நுழைந்து, கருணாகரர் என்று சொல்லப்பட்டவர் அழைக்கப்படவேண்டுமென்றும், தான் அந்த புஷ்பச் செடியையும் திருடனையுமடையாளங் கண்டுபிடிக்காவிட்டால், அதைப்பற்றி பிறகு வேறொன்றும் பேசுவதில்லை யென்றுங் கூறினாள்.

ஹரிஸேனருக்குக் கல்பகம் சொன்னது உண்மையென்றே தோன்றிற்று. அவர் பதில் கூற வாயெடுக்குமுன் வீட்டுவாயிலில், கரகோஷமும் பெருங்கூச்சலு முண்டாயின.

"என்ன! என்ன! அவர் வந்துவிட்டாரா!" என்று சொல்லிக் கொண்டே, கல்பக மிருந்ததையும் மறந்தவராய் ஹரிஸேனர் வாசற்படிக்கோடினார். வீதியில்பெரும் ஜனக்கூட்டம் கூடியிருந்தது. அக்கூட்டத்திற்குமுன் போர்க்கவசம் பூண்டு, அரச உடைதரித்த ஓர் இளைஞன் ஹரிஸேனர் வீட்டு வாசற்படி யேறினான். அவன்பின்னே இருமெய்க்காப்பாளர் வந்தனர். ஹரிஸேனர் எதிர்கொண்டோடி வந்து, கை கூப்பி,

"அண்ணலே! எங்கள் செல்வ அரசே! தாம் என் வீட்டிற்கு எழுந்தருள என்ன புண்ணியஞ் செய்தேனோ?" என்று வணக்கத்துடன் மொழிந்தார்.

"அன்பர் ஹரிஸேனரே! நான் எத்தேசத்தானென்பது தங்களுக்குத் தெரியாதோ? புஷ்பங்களின் மீது எனக்குள்ள ஆவல் உமக்குத்

முட்டாளுக்குக் கோபம் மூக்கின்மேலே.

தெரியுமே! கருந்துல்யம் மலருடன் தம்மிடம் வந்திருப்பதாகக் கேள்வியுற்று அதைக் காண வந்தேன். அது இங்கே இருக்கின்றதா?" என்று வினவினர் அரசர் குமாரதேவர்.

"அரசே! இப்பொழுதிங்கில்லை. கருணைகரன் என்னும் ஒருவன் அதைப் பயிரிட்டுக்கொண்டு வந்திருக்கிறான். இப்பொழுது இவ்வூர் தன கோடிசத்திரத்தில் தங்கியிருக்கிறான். கொண்டு வரச் சொல்கிறேன்" எனச் சொல்லி, சிலரை அனுப்பிவிட்டு, "கருந்துல்யம் தனது என்றும், அதனை இக்கருணைகரன் திருடினனென்றும் வாதாடும் ஒரு மங்கை என்னறையிலிருக்கிறாள்" என்றார்.

"அவளது என்று எப்படி நிரூபிக்கிறாள் ?"

"அதைத்தான் தாங்கள் வருவதற்குச் சற்று முன் கேட்கலாமென்றிருந்தேன்."

"ஹரிஸேனரே! நன்றாய் அவளை விசாரியும் அரசனும் நீதியதிபனன்றோ ? நானும் வருகிறேன்" எனக்கூறி, இருவரும் கல்பகமிருக்கு மறைக்குச் சென்றனர். காலடிச்சப்தம்கேட்ட கல்பகம் திரும்பிப்பார்த்தாள்.

ஹரிஸேனர்——"குழந்தாய்! கருந்துல்யத்தைப்பற்றி உனக்குத் தெரிந்ததெல்லாம் கூறுவாயா ?"

"அதற்கென்ன ஐயா? எனக்கு வேண்டியதெல்லாம் கருணைகரரும், செடியும் இங்கு வரவேண்டுவதே.—கருணைகரன் யோகநந்தனனென்று நான் கண்டுபிடித்து, செடி எனதென்று அறிந்தவுடன், உடனே நம் மன்னனிடமே முறையிடுவேன்" எனத் தீர்மானமாய் மொழிந்தனள் கல்பகம்.

ஹரிஸேனரும் அரசரும் ஒருவரையொருவர் குறிப்பாய் நோக்கினதைக் கல்பகம் அறியவில்லை.

ஹரி.—"கருந்துல்யம் உனது என்பதற்குச் சாக்ஷி உண்டோ ?"

கல்.—"அதை என்னறையிலேயே நட்டு நான் பயிராக்கியதே !"

ஹரி.—"உன்னறையிலா ? நீ எங்கே வசிக்கிறாய் ?"

கல்.—"லவஸ்தானத்தில்— அங்குள்ள சிறைக்காவலாளர் கிராதரின் புத்திரி."

"புஷ்பங்களின் மீது உனக்குப் பிரியமுண்டா ?"

"ஆமாம், ஐயா !"

"அப்படியானால் புஷ்பச்செடி பயிரிடுவதில் தேர்ந்தவளே!"

கல்பகம் சற்றுப் பின் தங்கினாள். பிறகு அவள் மனம் நிறைந்த குரலில், "புஷ்பச்செடிகள் பயிராக்குவதில் எனக்கு அதிகப் பயிற்சியில்லை. நான் ஓர் தாயற்ற பெண். நாலைந்து மாதங்களுக்கு முன், எனக்கு எழுதப் படிக்கக்கூடத் தெரியாது. கருந்துல்யம் என்னாலன்று—ஓர் கைதியால் பயிராக்கப்பட்டது!"

"ஆ—கைதியாலா ?" என்றான் அரசன்.

"ஆம், இராஜத்துரோகத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்டுச் சிறையிலிருப்பவரால்" என்று அவள் சொல்லக்கேட்ட அரசன், ஹரிஸேனரை மீண்டும் விசாரிக்கச் சைகை செய்தான்.

"சிறைக்காவலாளன் புத்திரியாயிருந்தும், ஓர் குற்றவாளியினிடம் புஷ்பங்களின் பயிற்சியைப்பற்றி நீ மிகவும் விசாரித்ததாய்த் தெரிகிறது."

"நான் தினந்தோறும் அவரைப் பார்ப்பதுண்டு" என்றாள் கல்பகம் நடுக்கத்துடன்.

அரசன் கல்பகத்தின் மனங்கலவரமடைவதை யறிந்து, "நீ சொல்லவேண்டுவது சிறைச்சாலையிலுள்ளவரைப் பற்றியன்று. நமக்கு வேண்டியதெல்லாம் கருந்துல்யத்தைப் பற்றியதுதான். குழந்தாய், அதைப்பற்றி உனக்குத் தெரிந்ததைக்கூறு" என்றார். புதியவர் இவ்விதமாய்த் தன்னைத் தைரியப்படுத்துவதைப்பார்த்த கல்பகம், சென்ற மூன்றுமாதமாக நடந்த விஷயங்களையெல்லாம் சவிஸ்தாரமாகக் கூறினாள். தன் தந்தையின் குரூர நடத்தையையும், முதல் முளை நாசமடைந்ததையும், அதனால் கைதிக்குண்டான துக்கத்தையும், இரண்டாம் முளை வெளிவருவதற்கு எடுத்துக்கொண்ட சாதனங்களையும், சிரமத்தையும்—எல்லாம் முடிந்த பிறகு முளை காணமற் போனதால் உண்டான அடக்க முடியாத துக்கத்தையும் ஒன்றுவிடாமல் சவிஸ்தாரமாகக் கூறினாள்.

இதைக்கேட்ட அரசர், "கிராதனை லவஸ்தானத்திற்கு மாற்றி நான்கு மாதங்கள்கூட ஆகவில்லையே. நீ கைதியை அதிகமாக அறிந்திருக்கமுடியாதே" என்றார்.

"தாங்கள் சொல்வது உண்மையே!"

"அப்படியாயின், கைதியைப் பின்பற்றிச் செல்வதற்காக உன் தகப்பனாரை ஸகேதத்திலிருந்து லவஸ்தானத்திற்கு மாற்றும்படியாக நீ வேண்டியிருக்கவேண்டும்."

கல்பகம் நாணமடைந்தாள். "ஐயனே! உண்மையைக் கூறுகிறேன். கைதியென்று நீர் கூறுபவரை நான் ஸகேதத்திலேயே அறிவேன்!"

இவள் பேசின வுடனே யோகநந்தனனை அழைத்துவருவதற்காகச் சென்றவர்களிலொருவன்வந்து தான் அழைத்துவரச் சென்றவர் வாசலில் இருப்பதாகக் கூறினான். யோகநந்தனனும் புஷ்பத்தொட்டியுடன் உள்ளே நுழைந்து, தொட்டியை மேசையின்மீது வைத்தான். அரசர் அதைப்புகழ்ந்து மௌனமாய் ஓராசனத்தி லமர்ந்தார்.

முகம் வெளுத்து, துக்கத்தினாலும், இளைப்பாலுஞ் சோர்வடைந்திருந்த கல்பகம், யோகநந்தனன் குரல்கேட்டதும் பின் திரும்பினாள்.

"அவனே! அவன்தான்! கருந்துல்யம் எனதே! என்னுடையதே!" எனக் கதறினாள் கல்பகம்.

"கருணைகரரே! இங்கு வாரும்!" என்று அழைத்தார் அரசர்.

யோகநந்தனன் அவசரமாய் அவரிடம்போக, "அரசர்!" என்று கூறிப் பின்னிடைந்தான்.

"அரசரா?" என்று நடுங்கிக்கூறினாள் கல்பகம். இதைக்கேட்ட யோகநந்தனன் திரும்பினான். கல்பகம் அங்கே நிற்கின்றாள்! கள்ளன் உடல் முழுவதும் நடுங்கிற்று. முகம் வெளுத்தது. ஆனால் சிறிது கஷ்டத்துடன் தன்னுள்ளெழுந்த பயத்தை அடக்கி, அரசருக்குப் பதிலளிக்க முயன்றான்.

"கருந்துல்யத்தின் இரகசியத்தை நீர் கண்டுபிடித்திருக்கிறீராமே?"

(கலவரப்பட்டவனாய்) "ஆமாம், மஹாராஜா!"

"இதோ இப்பெண்மணியும் அந்த இரகசியத்தைக் கண்டு பிடித்திருக்கிறதாகக் கூறுகின்றாளே ?"

யோகநந்தனன் அருவருப்பைக் காட்டுகின்ற பாவனையுடன் நிற்கின்றான்.

"இவளை உமக்குத் தெரியுமா ?"

"தெரியாது, மஹாராஜா !"

"குழந்தாய், கருணைகரரை நீ அறிவாயா ?"

"கருணைகரரை அறியேன். ஆனால் எனக்கு யோகநந்தனர் மாத்திரம் தெரியும்."

"என்ன, நீ சொல்லுவது ஒன்றும் விளங்கவில்லையே !"

"இங்கே கருணைகரர் என்னும் பேருடனிருப்பவர் லவஸ்தானத்தில் யோகநந்தனரென்ற பெயருடன் இருந்தார்."

"ஐயா! என்ன சொல்கிறீர் இதற்கு !"

யோகநந்தனன்—— பசபசவென்று விழிக்கிறான்.

"ஆம், நான் லவஸ்தானத்திலிருந்தது உண்மைதான். ஆனால் நான் துல்யத்தைத் திருடவில்லை."

கல்பகம் மகாகோபத்துடன் "என்னறையிலிருந்து நீதான் திருடினாய்!" என்றாள்.

"இல்லவேயில்லை."

"நான் சொல்வதைச் சற்றுக்கேள்: நான் கன்றை நடவேண்டுமென்று பயிர்க்குழி தோண்டின அன்றைக்கு நீ என் பின்னே தோட்டத்திற்கு வரவில்லையா? நான் அதை நடுவதாகப் பாசாங்கு செய்தவன்றைக்கும் நீ என்பின்னாலே வரவில்லையா? தோட்டத்தை விட்டு நான் வெளிச்செல்வதைப்பார்த்து செடியின் முளையைப் பிடுங்கிவிட வேண்டுமென்று பயிர்க்குழியினிடம் ஓடி அந்தப்பயிர்க்குழியைக் கிளறித் தோண்டவில்லையா? நல்லகாலம்; உன் ஜம்பம் சாயவில்லை. நான் உன்னை வேணுமென்றே இப்படிச் சோதித்தேன். இதற்கெல்லாம் பதிற்சொல்."———

யோகநந்தனன் என்னும் கருணைகரனுக்கு மேற்சொன்ன கேள்விகளுக்குச் சரியாய்ப் பதிற் சொல்லத் தெரியவில்லை. அரசனைப் பார்த்து,—

"மஹாராஜா! நான் தார்த்தூரக நகரத்தில் இருபது வருஷகாலமாய் துல்யச் செடியைப் பயிரிட்டுவருகிறேன். என் தொழிலில் எனக்குப் பிரக்கியாதியும் ஏற்பட்டிருக்கிறது. நான் கருந்துல்யம் உற்பத்தி செய்ததை இந்தப் பெண் எப்படியோ அறிந்துகொண்டு லவஸ்தானத்திலுள்ள ஒருவனுடன் மோசக் கருத்தாய் என்னைக் கெடுத்துவிட வழிபண்ணியிருக்கிறாள்.

"நீ சொல்லுகிற அந்த மனுஷன் யார்?"

கல்பகம் தன் இருகைகளாலும் கண்ணை மூடிக்கொண்டு திக்பிரமையுடன் நின்றாள்.

"அவன் பெயர் பார்க்கவன். காரணேசனின் அந்தரங்க சிஷ்யன்."

அரசனுக்கு இன்ன சொல்வதென்று தெரியவில்லை; முகமோ வெளுத்தது.

முதலிலே கெட்டிக்காரன் முடிவிலே சோம்பேறி.

முதலே தாரப்பலே அதிலே கர்ப்பிணி.

"இவனைப் பார்க்கவேண்டுமென்று உன் தகப்பனை லவஸ்தானத்திற்கு மாற்றக் கேட்டுக் கொண்டாய்?

கல்பகம் தலைகுனிந்து நின்றுகொண்டு கண்ணீர் விட்டாள். "ஆம், மஹாராஜா!" என்று மெல்லிய குரலில் சொன்னாள்.

கருணாகரனைப் பார்த்து, "மேலே என்ன சமாசாரம்?" என்றான்.

"மஹாராஜா! மேலே நான் என்ன சொல்ல வேண்டி யிருக்கிறது? எல்லாம் தங்களுக்குத் தெரிந்ததே. எனக்குக் கொஞ்சம் வேலை யிருந்ததனால் லவஸ்தானம் சென்றிருந்தேன். அங்கு கிராதரிருப்பதைப் பார்த்து அவருடன் அறிமுகமானேன். அவருக்கு ஒரு மகள் இருந்ததை யுணர்ந்து அவளை எனக்கு மணஞ் செய்து கொடுக்கும்படி கேட்டேன். நான் மிக்க தனவந்தனல்லன். ஆதலால் எனக்கு இனி வரும் ஆயிரம் பொன்னுக்கு அறிகுறியாக என் கருந்துலிய்த்தைக் காண்பித்தேன். இந்தப் பெண்ணும் அந்தப் பார்க்கவனும் எனக்குக் கெடுதிச்செய்யக் கங்கணம் கட்டிக்கொண்டு விட்டார்கள். என்றையதினம் புஷ்பம் மலருமென்று நினைத்தேனோ அன்றைக்கு முந்தினநாள் மாலையில் இந்தப்பெண் என்னுடைய துலிய்ச்செடியை அபகரித்துக் கொண்டாள்" என்று கதை கட்டினான் அவ்வம்பன்.

"ஹா, என்ன புரளிகள்! எத்தனை மோசம்!!" என்று கண்ணீர் ஆறாய்ப்பெருக அரசன் பாதத்தில் குப்புறவீழ்ந்தாள் கல்பகம்!

"குழந்தாய்! நீ பண்ணினவைகள் எல்லாம் மிகவும் தப்பாயிருக்கின்றனவே! உனக்கு இப்படிப்பட்ட துராலோசனைசொன்ன அந்த மனுஷ்யனுக்குத் தகுந்த தண்டனை விதிக்கப்படும்" என்றார் அரசர். "மஹாராஜா! பார்க்கவன் ஒரு விதத்திலும் தப்புச்செய்யவேயில்லை. முதலிலேயாகட்டும், இப்பொழுது ஆகட்டும்—" என்று கதறினாள் கல்பகம்.

"முதலிலேயா? காரணேசருக்கு உடந்தையாய் சில இராஜத்துரோக நிருபங்களை வைத்திருந்ததனால்தான் பார்க்கவனுக்குத் தண்டனை ஏற்பட்டதென்பது உனக்குத் தெரியாதா?"

"ப்ரபு! அவரிடத்திலிருந்த நிருபங்களின் விஷயங்கள் இன்னவையென்று அவருக்குச் சற்றேனும் தெரியாது."

"அவன் காரணேசரைச் சேர்ந்தவன் என்பதற்கு வேறே ஒரு சாக்ஷியமும் தேவையேயில்லை. தாங்கள் அவனுயிர் வாங்காது மன்னித்துவிட்டிருக்கிறதே போதுமானதே" என்று கூவினான் பயங்கரன்.

"எல்லாம் எனக்கு ஏற்கெனவே தெரியும். இதற்கும் புஷ்பச்சங்கத்திற்கும் யாதொரு சம்பந்தமுங்கிடையாதென்று நான்சொல்லவேண்டியதவசியமில்லை. நீ துலிய்த்தைப்பற்றிக்கவலைப்படவேண்டாம். நியாயப்படியே நாம் நடப்போம்." (கல்பகத்தைப்பார்த்து), "குழந்தாய்! நீ அநியாயமாய் ஒரு குற்றம் செய்யப்போனாய்! அதற்காக உன்னைத் தண்டிக்கப்போகிறதில்லை. உண்மைக் குற்றவாளி எவனோ அவனுக்குத் தகுந்த தண்டனையளிப்போம். ஒருவன் இராஜத்துரோகம்செய்து சதியாலோசனைகள் பண்ணிக் கொண்டிருந்தாலும் இருக்கலாம். களவாடலாகாது என்று உனக்கே தெரியுமல்லவா?"

"கள்ளனா? பார்க்கவன் கள்ளனா? அப்படி ஏதாவது களவுகள் ஏற்பட்டிருக்குமானால் களவாடின பெயர்வழி இவன்தானென்று நான் சத்தியஞ் செய்கிறேன்" என்று கல்பகம் கண்ணீர் வடித்தாள்.

"நீ அதை ருஜுப்படுத்துவாயா?" என்று வெகு சாவதானமாய்க் கேட்டான் யோகநந்தனன்.

"ஆகா, பகவத் அனுக்ரஹத்தால் ருஜுப்படுத்துகிறேன். அதற்கு எத்தனை மூளைகள் உண்டு?" கருணாகரன்—— சற்றுநேரம் யோசித்தான். பிறகு—"மூன்று" என்றான்.

"அவைகள் மூன்றும் எவ்வாறாயின?"

"ஓ, எவ்வாறாயினவா? ஒன்று மூளைக்கவேயில்லை. இரண்டாவது மூளையிலிருந்துதான் செடி பலிதமாயிற்று."

"மூன்றாவது?"

"மூன்றாவதா!"

"ஆம், மூன்றாவது—எங்கே யிருக்கிறது?"

கருணாகரனுக்குக் கலவரமாய் விட்டது. சற்றுப் பொறுத்து தடுமாறிக்கொண்டே "வீ—ட்—டி—ல்" என்றான்.

"வீட்டிலா? எந்த வீட்டில்? லவஸ்தானத்திலா? தார்த்தூரகத்திலா?"

"தார்த்தூரகத்தில்."

"நீ பொய் சொல்லுகிறாய்! ப்ரபு! அம்மூன்று மூளைகளின் உண்மையான விருத்தாந்தத்தை நான் கூறுகிறேன் கேளும்! முதல் மூளையைச் சிறைச்சாலையிலே என் தகப்பனார் நசுக்கிவிட்டார். அது இவனுக்குத் தெரியும். நான் நட்ட இரண்டாவது மூளையிலிருந்து தான் கருந்துலிய்ம் புஷ்பித்திருக்கிறது. மூன்றாவது மூளை இதோ இருக்கிறது!" (மடியிலிருந்து ஒரு காகிதச் சுருளை யெடுத்தாள்.) "இந்தக் காகிதத்திலேயே மற்ற இரண்டு மூளைகளும் சுற்றிவைக்கப் பட்டிருந்தன. மரணதண்டனை யாவதற்குச் சற்று முன்னால் பார்க்கவர் இதை என்னிடம் கொடுத்தார்." கல்பகம் காகிதத்தை விரித்து மூளையை அரசனிடம் கொடுத்தாள்.

கருணாகரன் தடுமாற்றத்துடன் "துலிய்த்தைத் திருடினதுபோல் மூளையையும் இவள் களவாடியிருக்கலாம்" என்றான்.

அரசரோ மூளையைப் பார்த்துக் கொண்டிருந்தார். கல்பகமும் காகிதத்தில் எழுதப்பட்டிருந்த சில வரிகளைக் கவனித்துக்கொண்டிருந்தாள். திடீரென்று அவள் முகத்தில் ஒரு மாறுதல் தோன்றிற்று. எழுதியிருந்ததைத் திரும்பத் திரும்பப் படித்துப் பிறகு,

"ப்ரபு! தாங்கள் இதைப் படிக்கவேண்டும்" என்றாள். அரசர் அதைப் பார்த்ததும் பார்க்காததுமா யிருக்கையிலேயே அவர் கை நடுங்க ஆரம்பித்தது. அக்காகிதமும் கீழே விழுந்தது. அதுதான் காரணேசன், தான் பார்க்கவன்பால் அடைக்கலப்படுத்தியிருந்த சிறு பெட்டியைத் திறவிடும்படி வேண்டிக்கொண்டு மாயாண்டியினிடம் கொடுத்த கடிதம். அது கீதா புத்தகத்தின் முதற்பக்கத்தில் எழுதப்பட்டிருந்ததென முன்னமேயே கூறியுள்ளோமல்லவா! அதைப் படித்த பிறகு மெதுவாக மடித்து, கருணாகரனை நோக்கி தம் மனக்கலக்கத்தைச் சற்று அடக்கிக்கொண்டு "————நீ போகலாம்; நியாயப்படி எல்லாம் நடத்தப்படும்" என்று சொல்லி, புஷ்பச்சங்கத் தலைவனை நோக்கி "ஹரிவேலனாரே! இப்பெண்மணியும் புஷ்பச்செடியும் உம்முடனேயே இருக்கட்டும். நான் போய் வருகிறேன்!" என்றனர்.

அரசர் அவ்விடத்தை விட்டகன்றனர். கருணாகரனும் எண்ணாததெல்லாம் எண்ணி மனநொந்துகொண்டே தன் விடுதியை யடைந்தான்.

பதினோராம் அத்தியாயம்

பார்க்கவன் வெளியேறல்

லவஸ்தானத்தில் காலைக்கதிரவனின் கிரணங்கள் சிறைச்சாலையின் சாளரக்கதவை ஊடுருவிச் செல்கின்றன; பக்ஷி ஜாலங்கள் இனிமையாய்ப் பாடுகின்றன. உலகமே இன்பமுற்றிருக்கிறது. ஆனால் சிறையில் இதுவரையிலும் மிகவும் ஆநந்தமாகக் காலங்கழித்து வந்த ஒருவனுக்குமட்டும் இதுவரையில் தான் அனுபவித்தவைகளெல்லாம் துன்பமாகவே தோன்றுகின்றன. இனி எக்காலமும் இன்பத்தைக் காணப்போகிறதில்லை; துன்ப மேகங்களின் கூட்டம் கருத்துவிட்டதென நினைந்து கண்ணீர்விடுகிறான் அவன். இப்படி அவன் நினைந்துகொண்டிருக்கும் தருணத்தில் கிராதன் நுழைந்தான். அவன் கையில் ஒரு பெருங்குறுந்தடி பிடித்திருக்கிறான். கண்களில் பொறாமை ததும்புகின்றது. முகத்தைச் சிடுசிடுவென்று வைத்துக்கொண்டிருக்கிறான். துர் எண்ணமே அவன் முகத்தில் பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றது.

பார்க்கவன் அவன் வருகிற காலடி சப்தத்தைக்கேட்டான். ஆனால் அவன் சற்றேனும் திரும்பவில்லை. கல்பகம் வரமாட்டாளென்பது அவனுக்கு ஏற்கெனவே தெரியுமல்லவா? கிராதன் பார்க்கவன் பக்கத்திற் சென்று,

"அடே! உன்னை அடக்க எனக்குத் தெரியும். நீ செய்த தப்பை ஒளிக்காமல் சொல்லுகிறாயா, இல்லையா?" என்று தடியை ஓங்கினான்.

பார்க்கவன் அசையவில்லை.

"கிராத! உனக்கென்ன பைத்தியம் பிடித்து விட்டதா?" என்று கேட்டான். இப்படிக் கேட்டது கிராதனுக்குப் பொறுக்கவே இல்லை. தடியடி தலைமேல் விழுவதற்குள் பார்க்கவன் கிராதன்மீது ஒரேதாவாய்த் தாவி தடியைப் பிடுங்கிக்கொண்டான். கிராதனுக்குப் பயமும் கோபமும் ஒருங்கே மூண்டெழுந்தன. திணறுகிறான். சற்று நேரத்திற்குள் தன் இடுப்பிலுள்ள உடையில் கையைவிட்டு,

"அடே அப்படியா!" என்று ஒரு சிறு கத்தியை யெடுத்தான். ஆனாலும் ஒன்றும் செய்யவில்லை. சிறிதுநேரம் இருவரும் ஸ்தம்பம்போல் நின்றார்கள்.

"ஏன் என்னவேண்டுமென்கிறாய்?"

"என்ன வேண்டுமா? என் மகளெங்கே?"

"உன் மகளா?"

"ஆம். என் மகள்தான்" என்று சொல்லி பார்க்கவன் இருக்குமிடத்திற்குக் கத்தியுடன் ஓடினான். அவன் கத்தியை வீசிக்கொண்டேயிருக்கையில், பார்க்கவன் தடியாலோங்கி மண்டையி லடித்தான். கத்தி கீழே விழுந்துவிட்டது. அதன்மேல் காலை வைத்துக்கொண்டு கிராதனை நையப்புடைத்தான். கிராதனுக்குப் பொறுக்கமுடியவில்லை. ஓ வென்றழுதான். விட்டுவிடென்று பல்லைக்காட்டிக் கெஞ்சினான். இந்த நிலைமையில் சிறைச்சாலையிலுள்ள எல்லோரும் வந்து ஒன்றுகூடினார்கள். சிறைக் காவலரை துராகிருதமாய் அடித்து, கொலை செய்ய முயன்றதாகவும், கலகஞ்செய்ய ஆரம்பித்ததாகவும் பார்க்கவன்மீது குற்றஞ்சாட்டி எழுதினார்கள். இத்தகைய குற்றத்திற்குத் தண்டனை எல்லோர் முன்னிலும் நிற்கச்செய்து சுட்டு விடுவதென்று அங்கிருந்த ஒருவன் பார்க்கவனுக்குச் சொன்னான்.

இதைக்கேட்டதும் பார்க்கவனுக்குமனத்தில் ஒருவிதமான கவலையுண்டாயிற்று. இவர்களிப்படிப் பேசிக்கொண்டிருப்பதற்குள் வெளியிலிருந்து, ஓர் உத்தியோகஸ்தன் உள்ளே நுழையவும், சிறைக்காவலாளிகள் அவனுக்கு மரியாதைசெய்து உள்ளே விட்டனர்.

"நீர்தாமா பார்க்கவன்?"

"ஆம்"

"என்பின்னே வாரும்" எனலும், பார்க்கவனும் பின் சென்றான். இருவரும் வெளியே வந்தனர். அங்கு வந்ததும் தன்னை எங்கு சுட்டுவிடுகிறார்களோவென்று பயந்தவனாய் நாலா பக்கங்களிலும் பார்த்துக்கொண்டேயிருந்தான். ஆனபோதிலும் மனோதைரியத்தை விடவில்லை. அங்கு நின்றிருந்த ஒரு குதிரை வண்டியில் இருவரும் ஏறி இரவெல்லாம் பிரயாணஞ்செய்து மறுநாள் காலையில் ஹரிளநகரத்தை யடைந்தார்கள். பார்க்கவனுக்கு ஹரிளநகரத்தில் நடந்தவிஷயங்கள் தெரியாது. கிடக்கட்டும்; காலக்கிரமத்தில் அவனே அறிந்துகொள்ளுகிறவரையில் அவனை விட்டுவிடலாம்.

இதுநிற்க, கல்பகமும் துல்யச் செடியும் அரசனது உத்தரவின்படி ஹரிஸேனரதுவசத்திலேயே தாயற்ற குழந்தைகள்போல விருந்தனர். அன்றையதினம் மாலைவரையில் கல்பகத்துக்கு ஒன்றும்ஏற்படவில்லை. அப்பொழுது ஓர் உத்தியோகஸ்தன் ஹரிஸேனரிடம் வந்து கல்பகத்தை நகர ஸபாமண்டபத்திற்கு வரும்படி அரசர் ஆக்ஞாபித்தாரென்று கூறினான். அவ்விடம் அவள் சென்றபொழுது, மந்திராலோசனை செய்யுமிடத்தில் அரசன் ஏதோ எழுதிக்கொண்டிருப்பதைக் கண்டாள். அங்கே வேறொருவரும் இல்லை. இவள் சென்று நின்றதும், கல்பகத்தைக் கண்ணெடுத்துப்பார்த்து,

"வா! குழந்தாய்! இப்படி உட்காரு," என்று சொல்ல, கல்பகம் உட்கார்ந்தாள். அரசன் எழுதிமுடிந்ததும் கல்பகத்தைப் பார்த்து,

"லவஸ்தானத்தில் உன்னுடைய தகப்பனாரிருக்கிறாரல்லவா?"

"ஆம்."

"உனக்கு அவர்மீது அன்புண்டல்லவா?"

"இல்லவேயில்லை. எவ்வளவு அன்பிருக்க வேண்டுமோ அவ்வளவு கிடையாது. அவர் அநியாயமாய்க் குற்றவாளிகளை மிகவும் ஹிம்ஸிக்கிறார்."

"அப்படி ஏதாவது அவர் ஹிம்ஸித்ததை நீ பார்த்திருக்கிறாயா?"

"ஆகா, பார்த்திருக்கிறேன். பார்க்கவனை—"

என்றதும், அவள் கண்களில் நீர்ததும்பியது.

"ஏன்! என்ன சமாசாரம்?"

கல்பகம் தழுதழுத்த குரலில், "ப்ரபு, நான் தங்களுக்கு ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. பார்க்கவன் நிரபராதி யென்று தங்களுக்கே தெரியும்——" மேல் சொல்ல அவளுக்கு நாவெழவில்லை. அரசன் அறிந்து கொண்டான். தான் எழுதியிருந்த கடிதத்தை மடித்து ஓர் உறையில்போட்டு, உத்தியோகஸ்தனொருவனை யழைத்து,

"இந்நிருபத்தை லவஸ்தானக்கோட்டையதிகாரியிடங் கொண்டுபோய்க் கொடுப்பாய். இதிலிருக்கும் கட்டளைப்பிரகாரம் நடக்கக்கடவீர்கள்" என்றான். உத்தியோகஸ்தன்போய் விட்டான். கல்பகத்தைப் பார்த்து,

"குழந்தாய்! துல்யமலரின் உற்பத்தியைக் கொண்டாடுந்தினம் நாளைய வெள்ளிக்கிழமை. அத்தினமே நீ ஸுதினமாகக் கருதவேண்டும். ஆதலின் நீ ஸர்வாலங்கார பூஷிதையாய் இருக்கக்கடவாய்!" என்றான் அரசன்.—அரசனெழுதிய கடிதமே பார்க்கவனை ஹரிள நகரத்திற்கனுப்பச் செய்தது.

பன்னிரண்டாம் அத்தியாயம்

சந்தோஷ சமாசாரம்

ஆனந்தவருஷம் தைமீ 5உ வெள்ளிக்கிழமை ஹரிளநகரத்தில் எங்கும் ஆனந்தக் கோலமாகவிருந்தது. என்றுமில்லாத வைபவத்தை ஜனங்கள் கொண்டாடினார்கள். வாழை, கமுகு முதலிய மரங்களை வாசல்களில்நாட்டியும், மகர தோரணங்கள் கட்டியும், பூர்ணகும்பங்கள் வைத்தும், மாடமாளிகைகளின்மீது அழகிய கொடிகள் கட்டியும் எங்கும் இந்திரபுரிக்குச் சமானமாக அவ்வூரார் தம் நகரை அலங்கரித்திருந்தனர். இவ்வுத்ஸவத்திற்குக் காரணம், எப்பொழுதும் புஷ்பங்களின் மேல் மிகப்பற்றுள்ள அவ்வூராரின் மனத்திற்குகந்த கருந்துல்யம் பயிர் செய்யப்பட்டு அவ்வூரில் கொண்டுவரப்பட்டதே. தவிரவும், இவ்வுத்ஸவத்தை கௌரவப்படுத்துவதற்காகத் தம்நாட்டரசனும் வந்து விஜயஞ் செய்து, கருந்துல்யத்தை உற்பத்தி செய்தவனுக்குப் பரிசளிப்பதாக வாக்களித்திருந்தான்.

அவ்வூரார் மிகவும் இராஜபக்தியுள்ளவர்களாகையால், அதன் பொருட்டும், தாம் அவரது செங்கோலின்கீழ் குறைவின்றி வாழ்ந்து வருவதைச் சிறப்பிக்கும்பொருட்டும், இந்நாளைத் திருவிழாவாகக் கொண்டாடினார்கள்.

கருந்துல்யம் ஒரு மணிப்பல்லக்கின்மீது வைக்கப்பட்டு, ஹரிளநகரின் வீதிகளின் வழியாக பவனியாகக் கொண்டுவரப்பட்டது. பல்லக்கின் ஒருபக்கத்தில் இனாமாக அளிக்கப்படும் பொற்காசுகளும் பட்டுப்பையில் வைக்கப்பட்டிருந்தன. பல்லக்கின் பின்னால் மிக ஓய்யார நடையுடன் யோகநந்தனெனும் மாறுபெயர்கொண்ட வஞ்சகன் கருணாகரன் வந்தான். சிறிது நேரத்திற் கொருதரம், துல்யச் செடியையும் பணப்பையையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டும் அக்கூட்டத்தில் யாரோ ஒருவரை பார்ப்பதற்கு முயன்றுகொண்டு மிருந்தான். எல்லாரையும்விட ஒரு பெண்மணியின் முகத்தைப்பார்க்கப் பயப்பட்டான். ஆகிலும், கல்பகத்தை யெங்கும் காணவில்லை; சிறிது மகிழ்ச்சியடைந்தான். ஊர்வலம் அரசனை எதிர்கொண் டழைக்கச் சென்று நகரத்திற்கு வெளியே உன்னதமான மரங்கள் சூழ்ந்த ஓரிடத்தில் அமைக்கப்பட்ட சிங்காரப் பந்தலில்வந்து நின்றது. அப்பந்தலின் மத்தியில் அரசன் வீற்றிருப்பதற் கென்று அமைக்கப்பட்ட ஆசனத்தினருகில் ஓர் அகன்றமேடையின்மீது கருந்துல்லியம் வைக்கப்பட்டது. ஹரிளநகரத்துச் சிறுமியர்பலர் கருந்துல்யத்தைச் சுற்றி நின்று பல இனிய கீதங்களைப் பாடினார்கள். அத்துல்யமும் மிகவும் கம்பீரமாய்த் தன்னைச் சுற்றியிருந்த சிறுமியர்களின் ஆநந்தத்தை யனுபவிப்பதுபோல் சிறந்து விளங்கிற்று.

இப்படியிவர்கள் களிப்படைந்துஆநந்தமாய்க் கரகோஷஞ் செய்துகொண்டிருக்கையில் அருகிலுள்ள பாதையில் ஒரு வண்டி வந்துகொண்டிருந்தது. இவ்வண்டியில்தான் தௌர்ப்பாக்கியனான நம் பார்க்கவன் இருந்தான். வண்டியின் ஜன்னலின் வழியாய் எட்டிப்பார்த்தான். பேரிரைச்சலும் ஆனந்தக் கிளர்ச்சியும் இவனுக்கொன்றும் விளங்கவில்லை. தன்னுடன் கூட வந்த வீரனை "இவை யென்ன?" என வினவினான்.

"தெரியவில்லையா! ஒரு விழா நடைபெறுகின்றது."

"ஆ, விழாவா?" என மஹாதீனமான குரலில் சொன்னான் பார்க்கவன்.

"ஆம். கருந்துல்ய விழா"

"கருந்துல்யமா? எங்கே? எங்கே? எங்கே?" என்று கூறி எட்டிப்பார்த்த வண்ணமேயிருந்தான்.

"அதோ தெரியவில்லையா மேடையின்மேல். சரி, சீக்கிரம் போகவேண்டும்" என்று வண்டியை ஓட்டச் சொன்னான்.

"ஓ ஐயனே! கொஞ்சம் என்மீது சற்று இரங்குவீர்! வண்டியை யோட்டவேண்டாம். அதைச் சற்றுப்பார்க்கிறேன். அதுவரையில் சற்றுப் பொறுத்துக்கொள்ளும்! அதோயிருக்கிறதே அதுவா கருந்துல்யம்? கன்னங்கரேலென்று! சற்று இறங்கிக் கிட்டப் போய்ப் பார்த்து வருகிறேன்."

"உமக்கென்ன பைத்தியமா? நீர் அப்படிப் போகமுடியாது"

"உம்மை மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்."

"நீர் கைதியாயிற்றே. அது உம் மனத்திலிருக்கிறதா?"

"ஆம், நான் கைதிதான். ஆனாலும், நான் வார்த்தை மீறமாட்டேன். நான் தப்பி யோட

வில்லையென்று சத்தியம் செய்வேன். புஷ்பத்தை மாத்திரம் நான் பார்த்துவிட்டு வருகிறேன்."

உத்தியோகஸ்தன் பதில் ஒன்றும் சொல்லவில்லை. வண்டிக்காரனை ஓட்டும்படி சைகை செய்தான். பார்க்கவனோ மறுபடியும் வண்டியை நிறுத்தும்படி கெஞ்சுகிறான். "ஐயா! சற்றுப் பொறுத்துக்கொள்ளும். இந்த விஷயத்தில் சிறிது பெரியமனஸு செய்யும். இது என்னுடையதாய்—கல்பகத்தினிடமிருந்து களவு போன துல்யமாயிருக்குமோ? நான் இறங்கவேண்டும்! புஷ்பத்தைப் பார்க்கவேண்டும்! வேண்டுமானால் பிற்பாடு என்னைக் கொலை செய்து விடுங்கள்! முதலில் புஷ்பத்தைப் பார்த்துவிட்டுத்தான் வருவேன்!"

"ஏ, இரைச்சல் போடாதே; பேசாமல் வண்டியினுள் உட்கார்ந்துகொள்; மஹாராஜாவின் பரிவாரங்கள் இதோ நிற்கின்றனர்."

பார்க்கவன் உள்ளே உட்கார்ந்தான். அரை நிமிஷங்கூட அவ்வண்ணம் இருக்கவில்லை. பரிவாரங்கள் முன்னே சென்றபிறகு வண்டிக் கதவின் வழியாய் எட்டிப்பார்த்து கெஞ்சும்பாவனையாக கைகளை ஆட்டினான். இவன் இருப்பதைக்கண்டு பரிவாரங்களுக்கிடையே சென்ற அரசன் அருகில் வந்தான். வண்டியிலிருந்த உத்தியோகஸ்தனைத் தெரிந்துகொண்டதும் வண்டியை நிறுத்தச் சொன்னான். உத்தியோகஸ்தன் வண்டியிலிருந்து குதித்து நிற்க, அரசன் "யார் இவ்வண்டியில்?" என்றான்.

"மஹாராஜா, தங்கள் ஆணையின்படி லவஸ்தானக் கோட்டையிலிருந்து நான் கொண்டு வந்த கைதி இவன். இங்கு சற்றுநேரம் நிறுத்தும்படி மிகவும் கேட்டுக்கொள்ளுகிறான்."

"ஆம், மஹாராஜா! கருந்துல்யத்தைப் பார்க்கவேண்டும் என்கிறேன். அதைப் பார்த்ததும் எனக்கு மரணதண்டனை விதித்தாலும் இறக்கத் தயாராயிருக்கிறேன். அப்படி இறக்கும்போது தங்கள் உதாரகுணத்தையே மனத்திற்கொண்டு தங்களை வாயாரத்துதித்துப் பிராணனை விடுவேன்" என்று கைகூப்பிக் கண்ணீர்ததும்பக் கூறினான்.

இவ்விருவரும் இப்படிப் பேசிக்கொண்டு நின்றிருந்தது ஓர் அதிசயக்காட்சியாய் இருந்தது. பரிவாரங்கள் சூழ்ந்துநிற்க, தன் வண்டியிலிருந்து பேசிக்கொண்டிருக்கும் அரசன் அன்றைய வைபவத்தை கௌரவப்படுத்தப் போகிறான். மற்றவனோ துர்ப்பாக்கியனான ஒரு கைதி. சற்றுநேரத்தில் தூக்குமேடையில் தன் பிராணனை விடப்போவதாக எண்ணியிருக்கிறான்.

அரசன் பார்க்கவனை மிகவும் தீக்ஷண்யமாய்ப் பார்த்து அவனது வேண்டுகோளை வெகு ஆதரவுடன் கேட்டான். பிறகு உத்தியோகஸ்தனைப்பார்த்து, "லவஸ்தானத்தில் சிறைக்காவலனைக் கொலைசெய்ய முயன்ற குற்றவாளி இவன்தானே? அவன் கீழேயிறங்கிக் கருந்துல்யத்தைப் பார்க்கட்டும். அது ஒருமுறையாவது பார்க்கக்கூடியதுதான்!" என்றான்.

பார்க்கவன் பேருவகைக் கடலில் ஆழ்ந்து ஆநந்தநிர்த்தனம் செய்தான். தட்டுத்தடுமாறி வண்டியினின்றும் கீழ் இறங்கினான். அரசனும் ஜனங்களின் ஆரவார கரகோஷங்களுடன் பலவகை வாத்தியங்கள் ஒலி செய்யவும் இவனது வரவைத் தெரிவிக்க வெடிகள் காது செவிடுபடும்படி சப்திக்கவும் துல்ய மலர்ச் செடி வைத்திருந்த மேடைக்கருகாமையில் அமைத்துள்ள ஸிம்ஹாஸனத்தை நோக்கிச் சென்றான். பார்க்கவனும் நான்கு காவலாளர்கள் தன்னைச் சூழ்ந்துவர அஜ்ஜனத்திரளின் மத்தியிலேயே வழியை விலக்கிக்கொண்டு கருந்துல்யத்தினிடம் வந்துகொண்டிருந்தான்.

கடைசியில் அதைக்கண்டான். தான் இன்னும் ஒரே முறைதான் ஆயுளில் காண்போம் என்று நினைத்த அவ்வரியமலரைக் கண்டான். அதைப் பார்க்கப் பார்க்க அவன் மனத்தில் அடக்கவொண்ணாத் துக்கம் உண்டாயிற்று. தனக்குத் தெரிந்த யாராவது அங்கு இருப்பார்களா என்றும், இருந்தால் அவர்களை ஒரே கேள்வி கேட்கவேண்டு மென்றும் திரும்பி நாலா பக்கங்களிலும் பார்த்தான்; ஒருவரும் அகப்படவில்லை. இதற்குள் எல்லோரும் மேடையை நோக்கிய வண்ணம் இருந்தனர்.

அரசரும் தம்மிருக்கையினின்றும் எழுந்து நின்று ஜனத்திரளைத் தம் இருகண்களாலும் பார்வையிட்டுக் கடைசியில் தம் எதிரேயுள்ள மூன்று பேர்களை மாறிமாறிப் பார்த்தனர்.

அவர்களில் ஒருவன் கருணாகரன். அவன் ஆத்திரத்துடன் பதறியவனாய் அரசனையும் கருந்துல்யத்தையும் பரிசுப் பொன்னையும் பார்த்துக்கொண்டே யிருந்தான்.

முழுமணிப் பூணுக்குப் பூண் வேண்டுமோ?

இரண்டாவது மனுஷ்யன் பார்[illegible]வன். அவனுடைய கண்களும், கவனமும், உ[illegible]டலும், ஆவியும், எண்ணமும் எல்லாம் கருந்து[illegible]ல்யத்தினிடமே பதிந்திருந்தன.

மூன்றாவது ஹரிளநகரத்துச் சி[illegible]றுமியர்களின் மத்தியில் சாதாரணமான உடை[illegible]யுடன் அத்தேசத்திற்குரிய சிறுமுகமூடியுடன் [illegible] நின்று கொண்டிருந்த ஓரழகிய பெண்மணி க[illegible]ல்பகம். தன்முகம் வெளுத்து மிகவும் களைப்ப[illegible]டைந்தவளாய்க் காணப்பட்டாள்.

கடைசியில் ஹரிஸேனரால் தயார் [illegible]செய்யப்பட்ட ஒரு பத்திரத்தை மெதுவாய் [illegible]விரித்து, தெளிவாயும் கம்பீரமாயும் பின்[illegible]வருமாறு அரசர் பேசலானார்:—

"ஹே, மஹா ஜனங்களே! நாம் [illegible] இன்று ஒன்று சேர்ந்துள்ளதன் காரணம் எ[illegible]லோருக்கும் தெரிந்ததே......யார் கருந்துல்[illegible]யம் உற்பத்தி செய்கிறார்களோ அவர்களுக்[illegible]குப் பரிசளிப்பதாய் ஏற்பாடாயிருக்கிறது. க[illegible]ருந்துல்யமும் உற்பத்தியாய்விட்டது. ஹரிளநக[illegible]ரப் புஷ்ப சங்கத்தார் ஏற்படுத்தியுள்ள வண்ண[illegible] எல்லா விவரங்களுக்கும் ஏற்றதாய் இதே[illegible] உங்கள் முன்னிலையில் வைக்கப்படிருக்கிறது. [illegible] யாருக்கு இக்கருந்துல்யம் சொந்தமோ அவர்[illegible]கள் அருகில் வரவேண்டியது" என்று எல்லோரையும் சுற்றிப்பார்த்தார்.

கருணாகரன் மேடையை நோக்கி அதி தீவிரமாய் வந்தான். பார்க்கவனோ தன்னையுமறியாமல் அதே பக்கம் நகரலானான். கல்பகமும் அப்படியே கூட்டத்தின் மத்தியில் வந்துகொண்டிருந்தாள். கல்பகத்தைக் கண்டதும் கருணாகரனென்னும் யோகநந்தனன் இடிமுழக்கம் கேட்ட நாகம்போலானான். பார்க்கவன் தனக்குண்டான ஆநந்தத்தினால் சற்று மெய்ம்மறந்தான். இருவரும் "கல்பகம்! கல்பகம்!!" என்று கூவினார்கள்.

"இத்துல்யம் உன்னுடையதல்லவா?" என்றான் அரசன், வந்த நாரீமணியை நோக்கி.

"ஆ—ம், மஹாராஜா!" என்றாள் கல்பகம்.

"இந்தத் துல்யத்தின் பெயர் இதனை உற்பத்தி செய்தவர்களது பெயரையே இனி வஹிக்கும். ஆதலால் இனி புஷ்பவகைகளில் 'கல்பக பார்க்கவ கருந்துல்யம்' எனக் கூறப்படும்" என்றான்.

இதற்குள் கல்பகத்தைக் கண்டதும் கன்றைப்பிரிந்த ஆவைப்போல் ஓடோடியும் பார்க்கவன்அரசன்முன்னிலையில் வந்துசேர்ந்தான். மற்றொருமுறை கல்பகத்தைக் காணும்படியும் தான் வளர்க்கவெண்ணிய கருந்துல்யமே அங்கிருக்கவும் அனுக்கிரஹித்த பெருங்கருணை வள்ளலின் கருணைத்திறத்தை வியந்து கண்ணீர்விட்டான். அரசன் கல்பகம் பார்க்கவன் இவ்விருவர் கைகளையும் பிடித்து ஒன்று சேர்த்து "இருவரும் நீடூழிவாழ்க!" என ஆசீர்வதித்தான். அதேசமயத்தில் இவைகளைக் கவனித்த கருணாகரன் ஆவென்று வாய்திறந்து கீழே விழுந்து மூர்ச்சையடைந்தான். ஒருவரும் அவனைக் கவனித்தவராகக் காணோம். கீழே விழுந்தவன் யோகநந்தனன் என்ற மறுபெயர் பூண்ட தன் அயல்வீட்டுக்காரனே என்பதையறிந்து பார்க்கவன் ஆற்றொணாத் துயரமடைந்தான். இத்தகைய கொடுந்தொழிலைக் கருணாகரன் செய்வானென்று பார்க்கவன் கனவிலும் கருதவில்லை.

பிறகு வாத்தியங்கள் ஒலிக்க, எல்லோரும் நகர ஸபாமண்டபத்தை யடைந்தார்கள். எல்லோரும் அவரவர்கள் இடத்தில் அமர்ந்ததும், அரசன் பொற்காசுகள் நிறைந்த பையைச் சுட்டிக்காட்டி பின்வருமாறு கூறினான்.

"ஹே, பார்க்கவ! இப்பரிசு யாருக்கு உரியது என்று கூறுவது மிகவும் கஷ்டஸாத்யமானது. நீயே கருந்துல்யத்தை உற்பத்தி செய்தபோதிலும் கல்பகமே அதை வளர்த்துப் புஷ்பிக்கச் செய்தாள். ஆகையால் அதைக் கேவலம் அவளுடைய ஸ்ரீதனம் என்று கருதுதல் நியாயமன்று; துல்யத்திற்காக ஹரிளநகரத்தார் அளித்த பரிசாகும் இது".

"ஆகையால் கல்பகத்திற்கு இத்தொகையைப் பரிசாகத் தருகின்றோம்; நல்வழியிலேயே அது அவளுக்குக் கிடைத்திருக்கிறது; அவளும் அதை உனக்குக் கொடுக்கிறாள்; அவளது அளவற்ற அன்பு, வீரம், கண்ணியம் இவைகளுக்கென்றே அவளடைந்த ஸன்மானமாகும் அது. அன்றியும் கல்பகமே நீ நிரபராதி என்பதற்குப் போதுமான சாக்ஷியங்களைக் கொடுத்து உன்னை மீட்டிருக்கிறாள். காரணேசர் எழுதிய நிருபமுள்ள அந்த கீதையின் முதல் தாளை நீயே அடைவாயாக! மூன்றாவது மூளையும் அதிலேதான் சுற்றப்பட்டிருந்தது.

மூப்பதிலே, மூர்க்கம் நாற்பதிலே நாகரீகம்.

"யாதொரு குற்றமும் ஏற்படாமலிருக்க நீ அக்கிரமமாய் அநியாயமாய்ச் இவ்விதம் வைக்கப்பட்டாய் என்று தேறுப்படுகின்றது. ஆகையால் நீ விடுதலை யடைவதுமின்றி உனக்குச் சொந்தமான பூஸ்திதியும் உன் வசமே அளிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். காரணே சரின் சிஷ்யனல்லவா நீ? அவரது தமையன் தேவதத்தர் உனக்கு அந்தரங்க நேசரல்லவா? அவர்கள் பேருக்கும் புகழுக்கும் ஏற்றவனாய் இருந்துவாழ்வாய்! அவர்கள் இருவரும் ஜனங்களின் ஆக்ரோஷ காலத்தில் அநியாயமாய் மாண்டார்கள். அவர்களைப்போன்ற தேசாபிமானிகளைக் காண்பதரிது. நம் நாடு எக்காலத்தும் அவர்களை மறக்காமல் இருக்குமென்று மனப்பூர்வமாய் நம்புகிறோம்!"

இவ்வாறு பேசியபிறகு அரசன் கல்பகம் பார்க்கவன் இருவரையு மழைத்து மறுபடியும் அவர்களை யாசீர்வதித்து உடனே புறப்பட்டுச் சென்றான்.

கல்பகமும் பார்க்கவனும் அன்றையதினமே தார்த்தூரக நகரம் சென்றார்கள். கிராதனுக்குப் பார்க்கவன்மீதுள்ள பகைமையும் கோபமும் இன்னும் தணியவில்லை. அன்றையதினம் தனக்கு விழுந்த அடிகளை இன்னும் மறக்கவில்லை. ஆனாலும் கடைசியில் "அரசனே அவனை மன்னித்திருக்க நமக்குமாத்திரம் என்ன?" என்று எண்ணி பார்க்கவனை மன்னித்து அவனுடன் சமாதானஞ் செய்துகொண்டான்.

வெகுசீக்கிரத்தில் கல்பகத்திற்கும் பார்க்கவனுக்கும் விவாகம் நிறைவேறியது. இருவரும் தம் காலமுழுவதையும் புஷ்பச்செடிகளை வளர்ப்பதிலேயே கழித்துவந்தார்கள்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

நமது சந்தா நேயர்களுக்கு.—நம் சந்தா நேயர் களிற் பலர், தங்கள் சந்தாப் பாக்கியை அனுப்பும்படி பலமுறை எழுதிக்கேட்டும் அனுப்பாது மௌனஞ் சாதிப்பது பத்திரிகையை நன்கு நடத்தப் பெரிய இடையூறாயிருக்கிறது. 14-ம் வருஷத்திய 12 சஞ்சிகைகளையும் மிக்கப் பொருள் நஷ்டத்துடன் நடத்தி வந்திருக்கிறோம். பணசிரமத்தினுல் பத்திரிகையை உரிய காலத்தில் வெளியிட மிக்க கஷ்டமாயிருக்கிறது. சந்தா நேயர்கள் இனியாகிலும் தங்கள் பாக்கியைச் சிறிதும் தாமதியாது அனுப்பி எங்களுக்கு ஊக்கமளித்தால் பத்திரிகையை மிக்கச் சிறப்புடன் வெளியிட சாத்தியமாகும்.

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES.

சங்கீதத்தைப்பற்றிய ஓர் உத்தரவு.—"13-12-1918-தேதி கொண்ட 1599-ம் நம்பர் உத்தரவில் காணப்பட்டிருக்கும் "வாத்தியங்களோடு கூடிய சங்கீதம்" எனின், இனி இந்தியப் பள்ளிக்கூடங்களைப் பொறுத்தமட்டில் பிடில், வீணை இவைகளோடு கூடிய சங்கீதம் என்றே பொருள்படும். ஆதலின் பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர்கள், தங்கள் அதிகாரத்துக்குட்பட்டிருக்கும் பெண்பள்ளிக்கூடத் தலைவர்களுக்கு ஓங்கு சங்கீதத்தைக் கற்பிப்பதற்கு ஹார்மோனியம் தகுந்த கருவியல்லவென்றும், பிடில் அல்லது வீணையே தக்க கருவியென்றும் உத்தரவு செய்வார்களாக" என்ற இந்த உத்தரவு சென்னை கல்வி இலாகா தலைவரால வெளியிடப்பட்டிருப்பதைக் கண்டு மிகவும் சந்தோஷிக்கிறோம்.

***

தபால், ரயில் கட்டணங்கள்.—தபால் கட்டணங்கள் இங்கிலாந்தில் குறைக்கப்பட்டும் இந்தியாவில் அதிகப்படுத்தப்பட்டு மிருக்கின்றன. சமீபத்தில் இங்கிலாந்து வேல்ஸ் இடங்களிலுள்ள ரயில்வே கம்பெனியார் கட்டணங்களை 100-க்கு 25-வீதம் குறைத்துவிட்டனர். இதனால் ஆங்குள்ள வியாபாரிகளுக்கு அதிகமில்லை. உண்டாகு மென்பதற்கு சந்தேகமென்ன! சமீபத்தில் இந்தியாவிலோ, ரயில்வே கட்டணங்கள் மூன்றுமுறையாக உயர்த்தப்பட்டிருக் கின்றன. தபால் கட்டணங்கள் இரண்டுடங்கு அதிகரித்திருக்கின்றன. இவைகளினால் இந்திய வியாபாரிகளும் ஏழைஜனங்களும் மிகுந்த கஷ்டங்களுக் குள்ளாவதை கவர்ன்மெண்டாருக்கு ஜனப் பிரதிநிதிகள் நன்கு எடுத்துக் காட்டவில்லை. என்ன செய்வது! ஆனால் இவ்வித உயர்ந்த கட்டணங்களினால் ரயில்வே கம்பெனியாருக்கு தாங்கள் எதிர்பார்த்த வண்ணம் அதிக வரும்படி ஏற்படாதென்றே நினைக்கிறோம் சீக்கிரமே, இதை ரயில்வே கம்பெனியார்கள் உணர்ந்து பழையபடி ரயில் கட்டணங்களைக் குறைக்கவேண்டும். நமது கவர்ன்மெண்டாரும் தபாற்கட்டணத்தை முன்போல் குறைத்தால் அதிகவருமானம் அடையலாம்.